# 7th ANNUAL RESEARCH SESSION 2025

# PROCEEDINGS

**பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்:**
**கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்**

**Cultural Resilience and Sustainable Future:**
**Arts, Innovation and Social Transformation**

Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka.

7th ANNUAL RESEARCH SESSION

2025

# PROCEEDINGS

## பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்

### கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்

## Cultural Resilience and Sustainable Future

### Arts, Innovation and Social Transformation

FACULTY OF ARTS & CULTURE

EASTERN UNIVERSITY, SRI LANKA.

**Title :** Cultural Resilience and Sustainable Future : Arts, Innovation and Social Transformation

**Editorial Board**

**Chief Editor** : Mr.Paskaran Suman

**Co-editors** : Mr.V.Alagaretnam

Mrs. Vijitha Thivakaran

Mr.M.L. Mohammed Helfan

Mrs. D.Vithukshana

**Edition** : 2025

**Published by** : Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

**ISBN** : 978-624-5731-53-4

# 7th Annual Research Session-2025

# (ARS – 2025)

## Organizing committee

**Chairman** : Dr.V.Gunapalasingam

**Coordinator** : Dr.N.Vaman

**Secretary** : Mrs.G.Luxmykanthan

**Treasurer** : Mr.A.Kanneraj

**Advisory Board** :Prof. V. Gunaretnam
Prof. T. Krishnamohan
Prof. V. Inpamohan
Prof. S. Santhirasegaram
Prof. J. Kennedy
Prof. S. Jeyasankar
Prof. K. Rajendram
Prof. K. Suresh
Prof. P.M. Hamthoon

# Message from the Vice Chancellor

**Prof. P. Peratheepan**

Vice Chancellor,

Eastern University, Sri Lanka.



It gives me great pleasure to extend my heartfelt congratulations and warmest welcome to all participants of the 7th Annual Research Session (ARS - 2025), organized by the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. The theme of the ARS – 2025, "Cultural Resilience and Sustainable Future: Arts, Innovation, and Social Transformation," reflects the deep commitment of the faculty in addressing global challenges through culturally grounded, innovative, and interdisciplinary scholarship.

In an era marked by rapidly Changing world spurred by climate crises, digital revolutions, and socio-political upheavals—the importance of cultural resilience cannot be overstated. Our histories, traditions, and artistic expressions preserve collective memory and serve as powerful tools for adaptation, healing, and sustainable transformation. This ARS provides a timely platform to critically explore how the arts, in all their diverse forms, intersect with innovation and social justice to shape a more inclusive and resilient future.

The Faculty of Arts and Culture has consistently championed the value of interdisciplinary research and community engagement. The 7th Annual Research Session furthers this tradition by inviting dialogue among academics, artists, policymakers, and practitioners. It fosters the exploration of indigenous knowledge systems, creative industries, and digital innovation as drivers of sustainable development and cultural vitality.

I am confident that the scholarly papers and discussions emerging from this session will generate meaningful insights and policy recommendations that enrich our national development discourse. Moreover, it will strengthen networks across disciplines and institutions, catalyzing future collaborations that bridge the gap between tradition and modernity.

I extend my sincere appreciation to the Dean, conference coordinator, organizing committee, keynote speakers, presenters, and all contributors whose dedication has brought this important academic event to fruition. Let this research session inspire new thinking and reaffirm our collective responsibility to build a world that honours cultural heritage while embracing innovation for the benefit of generations to come.

I wish you all a productive, thought-provoking, and inspiring Session.

# பீடாதிபதியின் செய்தி



**கலாநிதி வ.குணபாலசிங்கம்**

பீடாதிபதி, கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளும் ஆய்வுச் செயற்பாடுகளும் பல்கலைக்கழக நிறுவனத்தின் இரு பிரதான முன்னெடுப்புகளாகும். இந்த இரு முன்னெடுப்புகளையும் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடம் வினைத்திறனுடன் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு வெளிப்பாடாக அமைவதே "வருடாந்த ஆய்வு அமர்வு" எனும் தலைப்பில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் ஆய்வு மாநாடு ஆகும். அந்தவகையில், தொடர்ச்சியாக ஆறு மாநாடுகளைக் கலைப்பீடம் நடத்தியுள்ளது. இவ்வருடம் ஏழாவது ஆய்வு மாநாடு "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறுகின்றது. மேற்படி தொனிப்பொருளுடன் தொடர்புடைய பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அக்கட்டுரைகளைத் தாங்கிய மாநாட்டு ஆய்வு மலர் ஒன்று வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. அத்தகைய மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி என்ற வகையில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

பாடசாலைக் கலைத்திட்டத்தில் இருந்தும் கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளில் இருந்தும் பல்கலைக்கழகக் கலைத்திட்டமும் கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளும் வேறுபட்டன. கோட்பாட்டுக் கல்வி – பகுப்பாய்வு – பயிற்சி – கண்டுபிடிப்புகள் – புத்தாக்கம் எனத் தொடரோட்டத்தைக் கொண்டனவாகவே பல்கலைக்கழகக் கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளும் கலைத்திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தச் செயன்முறையின் வெற்றியைப் பரிசீலனை செய்யும் ஒரு களமாகவும் இவ் ஆய்வு மாநாடு விளங்குகிறது. இம்மாநாட்டில் தமது ஆய்வுகளை முன்வைப்போரிற் பலர், தமது பட்டப்படிப்பை முடித்து அண்மையில் வெளியேறிய மாணவர்கள். தாம் மேற்கொண்ட ஆய்வின் சில முடிவுகளை மாநாட்டில் முன்வைக்கவுள்ளனர். இவர்களை இளம் ஆய்வாளர்கள் என அடையாளப்படுத்தலாம். எமது சமூகத்திற்கு நாம் வழங்கியுள்ள புதிய ஆராய்ச்சியாளர்கள் இவர்கள். இந்தக் களத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் அவர்கள் செயலாற்ற வேண்டும் என்பது எமது பெரு விருப்பு.

இன்றைய உலகமயமாதல் சூழலில் "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் தொனிப்பொருள் குறித்து ஆராயவும் விவாதிக்கவும் கலந்துரையாடவும் வேண்டிய தேவை உள்ளது. அதற்கான களத்தை எமது பீடம் இம்மாநாட்டின் வாயிலாக உருவாக்கியுள்ளமை பாராட்டத்தக்கது. ஆய்வாளர்களது ஆய்வளிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டு மீட்சி குறித்தும் பேண்தகு எதிர்காலம் குறித்தும் ஆக்கபூர்வமான விவாதங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அவ்விவாதங்கள் புதிய உத்திகள், சிறந்த நடைமுறைகள், புதிய வாய்ப்புகள் முதலானவற்றை அடையாளம் காண்பதாக அமைய வேண்டும். 'தமிழ்ப் பண்பாடு: இருப்பும் சாவால்களும்' என்ற தலைப்பில் இடம்பெறவிருக்கும் இம்மாநாட்டின் ஆதார சுருதியுரை, தமிழ்ப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய விவாதத்தையே முன்னெடுக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, இந்த மாநாட்டைச் சாத்தியமாக்கிய ஒருங்கிணைப்பாளர், மாநாட்டுக் குழுவினர், ஆதார சுருதியுரையை நிகழ்த்துபவர், ஆய்வுகளை அளிக்கை செய்யும் ஆய்வாளர்கள், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், பதிவாளர், நிதியாளர், பராமரிப்புப் பிரிவினர், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள். அவ்வாறே, ஆய்வுக் கட்டுரைகளை மிகச் சிறந்த முறையிலும் குறிப்பிட்ட கால அளவிற்குள்ளும் மதிப்பிட்டு வழங்கிய மதிப்பீட்டாளர்களுக்கும் எனது நன்றிகள். அத்துடன் அனைத்து வழிகளிலும் உதவிய கலை கலாசார பீடத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒட்டுமொத்தத்தில், ஏழாவது வருடாந்த ஆய்வு அமர்வு சிறப்புற நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

# ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி



**கலாநிதி நா.வாமன்**
இணைப்பாளர், ஏழாவது ஆய்வு மாநாடு,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடம் வளர்ந்துவரும் இளம் ஆய்வாளர்களுக்கான ஆய்வுக் களத்தை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு வருடம்தோறும் ஆய்வு மாநாட்டை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றது. அந்த வகையில், இவ்வருடம் ஏழாவது வருடாந்த ஆய்வு மாநாடு "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் பொருண்மையில் இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

ஆய்வு என்பது அறிவுப் பரம்பலில் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றது. ஆய்வுகளின் மூலமாக வெளிப்படும் புதிய அறிவுத் தேட்டம் சமூகத்தினை காலத்திற்குக் காலம் வலுப்படுத்துகின்றது; வளப்படுத்துகின்றது. ஆய்வுகள் பல்வேறு தேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டாலும் ஆய்வுகளின் அடிப்படை கண்டுபிடிப்புக்களாகும். ஒவ்வொரு ஆய்வாளனும் தான் மேற்கொள்ளும் ஆய்வின் மூலம் உலகிற்கும் அவனைச் சார்ந்த சமூகத்திற்கும் பயனுடைய ஆய்வு முடிவுகளை வழங்குவான். இந்த ஆய்வுகள் உலகைச் சரியான திசையில் வழிப்படுத்துமாயின், அவை உலக மாந்தருக்குப் பயனுடைய ஆய்வுகளாகக் கொள்ளப்படுகின்றன. அந்த வகையில், இவ்வருடம் ஆய்வு மாநாட்டில் இடம்பெறும் ஆய்வுக் கட்டுரைகளும் அத்தகைய நோக்கத்தினை நிறைவேற்றுபவையாக அமையும் என்று நம்புகின்றேன். இவ்வருடம் 66 ஆய்வுக் கட்டுரைகள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 57 ஆய்வுக் கட்டுரைகள் மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றுள்ளும் 50 ஆய்வுக் கட்டுரைகளே குறித்த ஆய்வாளர்களால் பதிவுசெய்யப்பெற்று நூலாக்கம் பெறுகின்றது.

இந்த ஆய்வு மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு அனுமதியையும் ஆதரவையும் வழங்கிய உபவேந்தர் பேராசிரியர் ப.பிரதீபன் அவர்களுக்கு எனது முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்து, இந்த மாநாடு சிறப்பாக அமைவதற்குத் தனது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியதுடன் அனுசரணையாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவிய கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி வ.குணபாலசிங்கம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். மேலும், ஆய்வு ஒழுங்கமைப்புகளுக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டு ஆலோசனைகளை வழங்கிய ஆலோசனைச் சபையினருக்கும் கட்டுரைகளை உரிய வேளைக்கு மதிப்பீடு செய்து தந்த மதிப்பீட்டாளர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன். இம்மாநாட்டிற்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கிய மாநாட்டின் செயலாளர் திருமதி கௌரி லக்சுமிகாந்தன் அவர்களுக்கும் பொருளாளர் அ.கன்னேராஜ் அவர்களுக்கும் பதிப்பாசிரியர் பாஸ்கரன் சுமன் அவர்களுக்கும் ஒழுங்கமைப்புக் குழுவினருக்கும் உளம் கனிந்த நன்றிகள். இம்மாநாடு நடைபெறுவதற்குப் பங்களித்த எமது பல்கலைக்கழக பதிவாளர் அ. பகீரதன், நிதியாளர் எம். எம். பாரிஸ், எமது பீடத்தின் பிரதிப் பதிவாளர் திருமதி மும்தாஜ் சமீம், உதவி நிதியாளர் எஸ். பிரமாகரன் ஆகியோருக்கும் கட்டுரை ஆசிரியர்கள், கலை கலாசார பீட விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு நிதி அனுசரணை வழங்கிய மட்டக்களப்பு

Brandix நிறுவனத்தினருக்கும் இலங்கை வங்கி (கிழக்குப் பல்கலைக்கழகக் கிளை) பிராந்திய முகாமையாளருக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள். இந்த ஆய்வு மாநாட்டுக்குச் சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# பிரதம பதிப்பாசிரியரின் செய்தி



**பாஸ்கரன் சுமன்**
பதிப்பாசிரியர், ஏழாவது ஆய்வு மாநாடு,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடம் வருடாந்தம் ஆய்வு அமர்வு (Annual Research Session – ARS) ஒன்றை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு ஏழாவது ஆய்வு அமர்வு "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறுகிறது. இன்று நாம் பலவிதமான உலகளாவிய சவால்களுக்கு முகம்கொடுக்கும் சூழலில், கலை கலாசார பீடத்தினர் பண்பாட்டு மீட்சி, அதனூடான பேண்தகு எதிர்காலம் என்பனவற்றுக்கான வழிகள், செயற்றிட்டங்கள் முதலானவை குறித்த ஆய்வுவழிப்பட்ட விவாவதங்களுக்கான களமாக இவ் ஆய்வு அமர்வை ஒழுங்கமைத்துள்ளனர். அவ்வகையில், பல்கலைக்கழக நிறுவனம் அறிவார்ந்த தளத்தில் நின்று சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணியின் ஒரு பகுதியை இம்மாநாட்டின் மூலம் நிறைவேற்றியுள்ளது.

இந்த ஆய்வு அமர்வில் ஐம்பது ஆய்வுக் கட்டுரைகள் அளிக்கை செய்யப்படவுள்ளன. அவை மொழி, கலை, இலக்கியம், தமிழர் கல்வி, வரலாறு முதலான துறைகள் சார்ந்த அறிவுத் தேட்டங்களாக அமைகின்றன. அக்கட்டுரைகளை மையப்படுத்திய விவாதங்களும் கலந்துரையாடல்களும் பண்பாட்டு மீட்சிக்கான வரைபுகளை முன்வைப்பதாக அமைய வேண்டும் என விரும்புகின்றோம். இவ் ஆய்வு அமர்வில் தமது ஆய்வுக் கட்டுரைகளை முன்வைப்போரிற் பலர், அண்மையில் பல்கலைக்கழகக் கல்வியை முடித்து வெளியேறியவர்கள். ஆதலால், இவர்கள் ஆய்வுலகிற்குப் புதுவரவுகளாகின்றனர். அவர்களது ஆய்வு அளிக்கைளை மையப்படுத்தி நிகழும் கலந்துரையாடல்களும் விவாதங்களும் அவர்களது ஆய்வறிவினைக் கூர்மைப்படுத்தி, அவர்களைச் சிறந்த ஆய்வாளர்களாக மிளரச் செய்யும் என்பது திண்ணம். அந்தவகையில் நோக்கினால், ஆய்வுலகிற்குப் புதுவரவுகளை நல்கும் பணியையையும் இவ் அமர்வு முன்னெடுத்துள்ளது எனலாம்.

இந்த ஆய்வு அமர்வுக்காக ஆய்வாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகள் துறைசார் ஆளுமைகளால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டன. மதிப்பீட்டாளர்களால் விதந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் மீளவும் எம்மிடம் கையளிக்கப்பட்டன. அவ் ஆய்வுக்கட்டுரைகள் இங்கு நூலாகத் தொகுத்து வழங்கப்படுகிறது. இத்தருணத்தில், இந்நூலாக்கத்தோடு பங்குகொண்டு உழைத்த அனைவருக்கும் பதிப்பாசிரியர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவ்வகையில், நூலாக்கப் பணி குறித்துத் தமது ஆலோசனைகளை வழங்கிய கலை கலாசார பீடப் பீடாதிபதி வ. குணபாலசிங்கம் அவர்களுக்கும் ஆலோசனைச் சபையினருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு, தமது அறிவார்ந்த பங்களிப்பினை ஆய்வின் வழியாக வழங்க முன்வந்த ஆய்வாளர்களுக்கும், ஆய்வுக் கட்டுரைகளைச் சிறப்பான முறையில் மதிப்பீடு செய்து வழங்கிய துறைசார் ஆளுமைகளுக்கும் எமது நன்றி உரித்துடையது. மேலும், ஆய்வுக் கட்டுரைகளைப் பெறுதல் தொடக்கம் நூலாக்கப் பணி வரையிலும் உடனுழைத்த ஏழாவது ஆய்வு அமர்வின் இணைப்பாளர் நா.வாமன், செயலாளர் திருமதி கௌரி லக்சுமிகாந்தன், பொருளாளர் அ.கன்னேராஜ் அவர்களுக்கும் ஒழுங்கமைப்புக் குழுவினருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நூற்பதிப்புக் குழுவினர் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பானது சிறந்த

முறையில் வெளிவர வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் நின்று செயற்பட்டார்கள். அவர்களது தக்க துணை இன்றேல், இந்நூலாக்கப்பணி சாத்தியமாகியிருக்க முடியாது. அவர்களுக்குப் பதிப்பாசிரியர் என்ற வகையில் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, என்மீது நம்பிக்கை கொண்டு இப்பாரிய பொறுப்பினை ஒப்படைத்த கலை கலாசார பீட அவைக்கும் எனது நன்றி உரித்துடையது. இறுதியாக, இந்த ஆய்வு அமர்வின் வெற்றியில் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

# ஆதார சுருதியுரை



**பேராசிரியர் கி.விசாகரூபன்**
சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர்,
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தமிழ்ப் பண்பாடு: இருப்பும் சவால்களும்

### அறிமுகம்

உலகிலுள்ள ஒவ்வொரு இனமும் தனக்கெனத் தனித்துவமான ஒரு பண்பாட்டைக் கொண்டதாகவே உள்ளது. இந்தப் பண்பாட்டில் உள்ளடங்கும் கூறுகளே (Elements) அந்தந்த இனங்களின் தனித்துவமான அடையாளங்களாகவும் (Identity) பார்க்கப்படுகின்றன. இந்தப் பண்பாட்டு அடையாளங்களை அவற்றின் மரபுநிலை மாறாது அடுத்துவரும் சந்ததிகளிடம் கையளிப்பதிலும் அவை மிகுந்த கரிசனை கொண்டனவாக உள்ளன. ஆயினும், கால தேச வர்த்தமானங்கள் காரணமாக உலகில் உள்ள இனங்களின் பண்பாடுகளில் பல்வேறு மாறுதல்களையும் விடுபாடுகளையும் சேர்க்கைகளையும் அவதானிக்க முடிகிறது. ‘உலகமயமாதல்’ (Globalization) இவ்வாறான காரணிகளில் பிரதானமான ஒன்றாகும். இனங்களின் தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களை மறுதலித்து, ஒற்றைப் பண்பாட்டை நோக்கிய ‘அசைவு’ என்பது இன்றைய உலகில் உள்ள இனங்கள் ஒவ்வொன்றும் எதிர்கொள்ளும் பிரதான சவாலாக அடையாளப்படுத்தக்கூடியதாக உள்ளது. தமிழ்ப் பண்பாடும் இதற்கு விதிவிலக்கல்ல. ‘தமிழ்ப் பண்பாடு’ குறித்த புலமைச் சிரத்தை அல்லது கரிசனை என்பது இன்று அதிகரித்துக் காணப்படுகிறது. பண்பாட்டு வேர்களைத் தேடுகின்ற முயற்சிகள் பல திறப்பட்டனவாகக் காணப்படுகின்றன. பல்வேறு தேசங்களில் பல்வேறு இனங்களுடன் வாழ்கின்ற, வாழவேண்டிய சூழல்களில் நாம் யார், நமது பண்பாடு எத்தகையது, அதன் மேன்மைகள் யாவை என்பது முதலான உசாவல்கள் எழுதுவது இயல்பானதேயாகும். இவ்வாறான உசாவல்கள் எமது பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யவும், அதனைச் செழுமையுடன் தக்கவைத்துக் கொள்ளவும், அடுத்த தலைமுறைக்கு அதைனைக் கையளிக்கவும் உதவுபவையாக அமைகின்றன. இந்தப் பின்புலத்தில் இந்த உரையானது தமிழ்ப் பண்பாட்டின் வகைமைக் கூறுகள் சிலவற்றின் இருப்பில் எதிர்கொள்ளப்படும் சவால்களை அடையாளப்படுத்தி, அவற்றை எதிர்கொள்வதற்கான உபாயங்களை முறைப்படுத்த முனைகிறது.

### பண்பாடு

‘பண்பாடு’ (Culture) என்பது பரந்துபட்ட பொருண்மையினைக் கொண்ட ஒரு சொல்லாகும். பண்பாட்டுக்கு ஏறத்தாழ நூற்றுப்பதிற்கும் மேற்பட்ட விளக்கங்களை அகராதிகள் குறிப்பிடுகின்றன. ‘Culture’ என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் ‘பண்பாடு’ என முதன்முதலில் அர்த்தப்படுத்தியவர் டி.கே.சிதம்பரநாத முதலியார் ஆவார். மனிதர்கள் மட்டுமே பண்பாட்டோடு தொடர்புடையவர்கள். இதுவே மனிதர்களை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்துகின்றது எனலாம்.

பண்பாட்டைத் தெளிவாக வரையறுத்தல் என்பது கடினமானது. தலைமுறை தலைமுறையாக மக்கள் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் பழக்கவழக்கங்களும் மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே ‘பண்பாடு’ என்பர். பிறிதொரு வகையில் குறிப்பிடுவதனால், பண்பாடு என்பது ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக்கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகிய யாவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினது தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதிகள் எனலாம்.

‘பண்பாட்டுக் கூறு’ (Cultural Element) என்பது பண்பாடு ஒன்றின் மிகச் சிறிய அலகாகும். பண்பாட்டைப் பொதுவாக பொருள்சார் பண்பாடு (Material Culture), அறிதல்சார் பண்பாடு (Cognitive Culture), நெறியியல் கூறுகள் (Normative Components) என மூன்று வகையாகப் பகுத்து நோக்கலாம். பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் என்பது மக்கள் தங்கள் பண்பாட்டிற்காக ஏற்படுத்திக்கொள்ளும் அனைத்துப் பொருட்களையும் பொதுநிலையில் குறிக்கும். அறிதல்சார் கூறுகள் என்பது மக்களின் அறிதிறன் (Cognition) கூறுகளைக் குறிக்கும். இதனைப் பொதுவாக அறிவு (Knowledge) என்று குறிப்பிடலாம். நெறியியல் கூறுகள் என்பவை மக்களின் தனிப்பட்ட வாழ்வையும் சமுதாய வாழ்வையும் நெறிப்படுத்தும் கூறுகளைக் குறிக்கும். பொருள்சாராப் பண்பாடு (Non – Material Culture) என்பது பொருள்வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளாலும் ஆக்கப்படுபவை. இலக்கியங்கள், இசை, கற்பனை, பாடல்கள், மந்திரங்கள், சடங்குகள், தலைவாரும் முறை முதலான பலவும் இதனுள் அடங்கும்.

தமிழ்ப் பண்பாட்டைப் பொறுத்தவரை மேலே சுட்டியவாறான வகைப்பாடுகள் பலவற்றிலும் அவற்றின் இருப்பில் பல்வேறு வகையான சவால்களை அடையாளப்படுத்த முடியும். அவற்றில் பிரதானமான சவால்களை மட்டும் இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமானதாகும்.

**கையளிப்புக் குறைபாடு**

தமிழ்ப் பண்பாட்டின் பிரதான சவால் என்பது அதன் கையளிப்புக் குறைபாடாகும். கையளிப்புக் குறைபாடு என்னும்போது கையளிப்பு ஊடகம் (Transmission Media), கையளிப்பு மனோபாவம் (Transmission Attitude) ஆகிய இரண்டும் இவ்விடத்தில் பிரதான இடம் பெறுகின்றன. தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்த இப்பண்பாட்டின் கூறுகள் பலவற்றையும் முறையாகக் கையளிப்பதில் எம் முன்னோரில் பலரும் தவறிழைத்துவிட்டதாகவே தோன்றுகிறது. சோதிடம், வைத்தியம், மருத்துவம், கைவினைக் கலைகள், இலக்கியங்கள் மற்றும் கைவினைப் பயில்வுகள் பலவற்றையும் தமது குடும்பச் சொத்தாக நினைத்துத் தமது சொந்தப் பிள்ளைகளுக்குக்கூட இவர்கள் முறைப்படி கையளிக்காது சென்றுள்ளனர். இவ்வாறு முழுமையாகக் கையளித்தால் தமது தனித்துவம் இழக்கப்பட்டுவிடும் என்ற அச்சமும் இதற்கான காரணங்களில் ஒன்றாகலாம். குறிப்பாக சோதிடம், மருத்துவம் சார்ந்த விடயங்கள் இவ்விடத்தில் விசேட கவனம் பெறுவன. முறையான பயிற்சியின்றி சோதிடம், மருத்துவம் தொடர்பான ஏடுகளை அணுகுவது முடியாத காரியம். தவிர, ஏடுகளில் உள்ள வாசகங்கள் பலவும் குறியீட்டு (Cord word) மொழியிலேயே உள்ளமையும் இவ்விடத்தில் நோக்கத்தக்கதாகும். தொடர்ச்சியான பயிற்சியில் வராத எவராலும் இந்த ஏடுகளை அணுகமுடியாது.

**கையளிப்பு ஊடகக் குறைபாடு**

ஐரோப்பியர் தொடர்பால் அச்சுவசதி வருவதற்கு முன்பு எமது இலக்கியம் மற்றும் அறிவுசார் விடயங்களைப் பேணுவதற்கும், பேணி அடுத்த தலைமுறையினரிடம் கையளிப்பதற்கும் நாம் ஏடுகளையே பெரிதும் நம்பியிருந்தோம். இந்த ‘ஏடு’ ஒப்பீட்டு நிலையில் மிகவும் பலவீனமான ஒரு சாதனமாகும்.

இதனை முறைப்படி பராமரித்தால்கூட சுமார் ஐம்பது வருடங்களுக்கே அதனைப் பாதுகாக்க முடியும். இத்தன்மை காரணமாக நாம் பலவற்றை இழந்தோம். ஏடுகளில் நாம் தங்கியிருந்த சமகாலத்தில் உலகின் பல்வேறு இனமக்களும் பல்துறை சார்ந்த தமது விடயங்களைப் பேணிக்கொள்ள மிருகத்தோல், மரப்பட்டை, கல், சிலவகை உலோகங்கள், சுடுமண் பாளங்கள் முதலானவற்றையும் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பதனை இவ்விடத்தில் நாம் மனங்கொள்தல் வேண்டும்.

**பொருள்சார் பண்பாட்டு வினையாளர்களின் தாழ்வுணர்ச்சி**

பொருள்சார் பண்பாட்டின் பொருட்கள் சிலவற்றைப் படைப்போரிடத்துக் காணப்படுகின்ற தாழ்வுணர்ச்சி என்பது பிறிதொரு சவாலாகும். தாழ்வுணர்ச்சி, ஈடுபாடின்மை, மறதி, குழப்பம், தொடர்ச்சியான பயில்வின்மை, பொருளாதாரச் சிக்கல்கள் என்பன இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. பண்பாட்டு வினையாளர்கள் பலரும் தம்மிடையேயுள்ள தனித்துவமான வினைத்திறனை (Skills) உணர்ந்தவர்களாக பலபோது இருப்பதில்லை. குறிப்பாக, இன்றைய இளந்தலைமுறையினரிடம் இந்த வழக்காறுகளைப் படைப்பது குறித்த பயிற்சியின்மை பரவலாகக் காணப்படுகின்றது. பாய் பின்னுதல் (பல்வகைப் பாய்கள், தடுக்கு, பந்திப்பாய், களப்பாய், புற்பாய்……) சுளகு, பெட்டி முடைதல் (மூடல்பெட்டி, நீற்றுப்பெட்டி, பனங்கட்டிக் குட்டான் முதலானவை), பனைமட்டை வரிச்சு, பனையோலை வேய்தல், பனை ஓலை பதப்படுத்துகை (வார்தல், சாயமூட்டுதல்), பட்டை இழைத்தல் (துலாப்பட்டை, பீலிப்பட்டை, கைப்பட்டை) முதலான பொருள்சார் வழக்காறுகளை இவ்விடத்தில் வகைமாதிரியாகச் சுட்டலாம்.

பன்னாட்டுக் கலாசாரப் பின்புலத்தில் இவ்வாறான பொருள்சார் பண்பாட்டு உற்பத்திப் பொருட்களுக்கான தேவை (Demand) மற்றும் சந்தை வாய்ப்புக்கள் (Marketing Facilities) பல்கிப்பெருகியுள்ள. இன்றைய சூழலில், இவற்றைப் படைக்கக்கூடிய வினைவல்லார்களைத் (Skill persons) தேடிப்பிடிப்பது என்பது கடினமான ஒன்றாகவே உள்ளது. தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு முதலான பெருநகரங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்களின் பொருள்சார் உற்பத்திப் பொருட்கள், பாரம்பரியமான உணவுப் பண்டங்கள் குறிப்பாகக் 'கூழ்' முதலான உணவுகளுக்கான விளம்பரங்கள் வெகுகவர்ச்சியாகக் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. கொழும்பின் தொடர்மாடி மனைகளில் வார இறுதி நாட்களில் பாரம்பரியமான கலை ஆற்றுகைகளுடன் கூழ் காய்ச்சிக் குடிக்கும் கலாசாரம் ஒன்று இன்று உருவாகி வருகிறது. இவ்வாறான உணவுகளை அவற்றின் பக்குவத்துடன் வீடுகளில் தயாரிக்கும் ஆற்றலை இன்றைய இளந் தலைமுறை இழந்துள்ளது என்பதே உண்மையாகும்.

பறைமேளம் கொட்டுதல், உடுக்கு அடித்தல், கூத்தாடுதல், பாரம்பரியமான கைவினைப் பொருட்களைத் தயாரித்தல் முதலானவற்றைத் தொடர்ந்து செய்ய முனைந்தால், சமூக அதிகார அடுக்கமைவில் (Social Hiarachchi) தமக்கான இடம் தொடர்ந்தும் பின்தள்ளப்படும் எனப் பலரும் கருதி இவற்றைப் புறக்கணிக்கும் மனோநிலைக்கு வந்துவிட்டனர். இந்த மனோபாவம் (Attitude) செழுமையான ஒரு பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்கு அதன் நுட்பங்களுடன் கையளிப்பதைத் தடுத்து வருகிறது. இவ்வாறான கலை மரபுகளுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் சமூகத்தில் உலாவரும் கூத்தாடிகள், நாடகக்காரர், சின்னமேளம், ஆட்டக்காரிகள் முதலான பட்டப்பெயர்களையும் (Nick Name) இவ்விடத்தில் இணைத்துப்பார்த்தல் வேண்டும்.

**பண்பாடுசார் வழக்காற்றுப் பயில்வின் குறுகிய வட்டம்**

தமிழர் பண்பாட்டில் உள்ள கைவினைக் கலைகள், நிகழ்த்து கலைகள் முதலானவை பலவும் துரதிஷ்டவசமாகச் சிலவகையான சாதிக்குழுமங்களிடையே தலைமுறை தலைமுறையாக அடைக்கலம் கொண்டுள்ளமையானது பிறிதொரு சவாலாக உள்ளது. நிகழ்த்து கலைகளில் இவ்வகைப் பயில்வுக்கான வகைமாதிரியாகக் கூத்தைக் குறிப்பிட முடியும். வழக்காற்றுப் பயில்வுகள் பலவற்றைத் தமது குடும்பச் சொத்தாகவும் சமூகச் சொத்தாகவும் பலரும் கருதிக்கொள்கின்றனர். குறுகிய இந்த வட்டத்திலிருந்து (Narrow Circle) அவற்றைப் பராதீனப்படுத்தவோ அல்லது விடுவிக்கவோ அவர்களில் பலரும் தயாராக இல்லை என்பதே உண்மை. கலைப் பயில்வையும் சமூக விடுதலையையும் ஒன்றாக முடிச்சுப்போடும் இவ்வகை மனோபாவம் இவ்வகைத் தொழில்சார் குழுக்களின் தனித்துவமான அடையாளத்திற்கும் இவ்வகைக் கலைமரபுகளின் இருப்புக்கும் பெரும் சவாலாக உள்ளது.

**நவீன உற்பத்திகளுடன் போட்டி போட முடியாமை**

பொருள்சார் பண்பாட்டு வழக்காறுகளைப் படைக்கும் பலரும் இன்று அவற்றைப் படைக்கும் முயற்சியை வேகமாகக் கைவிட்டுவருகிறார்கள். இதற்குப் பல்வேறு காரணங்களைக் கருதிக்கொள்ள முடியும். நவீன இயந்திரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை உள்வாங்கி மிகவும் கவர்ச்சிகரமாக சந்தைகளில் உலாவரும் நவீன உற்பத்திகளுடன் (Modern Products) பாரம்பரியமான தொழில்நுட்பங்களை உள்வாங்கிவரும் கிராமியப் பண்பாடுசார் உற்பத்தி வகைமைகளால் போட்டிபோட முடியாதுள்ளது. பிளாஸ்ரிக், அலுமினியம், இரும்பு முதலான பல்வேறு வகையான மூலப்பொருட்களால் உருவாக்கப்பட்ட புழங்குபொருட்கள் பலவும் மரபுரீதியான பொருள்கள் படைப்புகளுக்குச் சந்தைவாய்ப்பு நிலையில் பெரும் சவால்களாக உள்ளன. பிளாஸ்ரிக் கதிரை, பிளாஸ்ரிக் பாய், பிளாஸ்ரிக் சட்டிகள், பிளாஸ்ரிக் சுளகு, நவீன வர்ணக் குழம்புகள், நவீன உணவு வகைகள், கொக்கோ கோலா, பெப்சி, பன்டா முதலான நவீன குடிபானங்கள் முதலானவற்றுடன் ஓலைப்பாயும், ஈர்க்குச்சுளகும், கோழிச்சாயமும், புழுக்கொடியல் மாவும், ஒடியல் மாவும், பனாட்டும், மோரும், பழங்கஞ்சியும் போட்டிபோடுவதென்பது இடர்பாடான விடயமாகவே உள்ளது.

**பண்பாடுசார் உற்பத்திச் செயற்பாடுகளில் நவீன கருவிகளின் வருகை**

நவீன கருவிகளின் வரவால் பண்பாடுசார் உற்பத்திச் செயற்பாடுகளில் மட்டுமல்லாது அந்தச் செயற்பாடுகளைச் சார்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட பண்பாட்டின் பிரதான விடயமாகிய வாய்மொழி வழக்காறுகள் (Verbal Literature) பலவும் மருவியும் வழக்கொழிந்தும் வருகின்றன. குறிப்பாக, இன்றைய உற்பத்திசார் முனைவுகளில் ஆண்களும் பெண்களும் கூடி வேலைசெய்கின்ற சூழல் வேகமாகக் குறைந்துவருகின்றது. நவீன இயந்திர வரவிற்கு முன்னர் வயற்களங்களில் வேலைசெய்யும்போது ஆண்கள் பாடும் பாட்டுக்குப் பெண்கள் எதிர்ப்பாட்டுப் பாடுதலும், பழமொழி சொல்லுதலும், விடுகதை போடுவதும் என வயற்களமே கலகலத்திருந்தது.

பலர் சேர்ந்து தோணியைக் கடலினுள் பாய்ச்சும்போதும் அதனை மீண்டும் கரையேற்றும் போதும் மடியை கடலினுள் பாய்ச்சும்போதும் அதனை இழுக்கும் போதும் 'ஏலேலோப் பாட்டு' மற்றும் 'அம்பாப் பாட்டு' முதலானவற்றைப் பாடினர். ஆனால், இன்றைய இயந்திரமயமான தொழில்சார் சூழ்நிலைகள் தமிழ்ப் பண்பாட்டின் பிரதான கூறுகளில் ஒன்றான வாய்மொழி இலக்கிய வடிவங்களின் செழிப்பான இருப்புக்கு உகந்ததாக இல்லை. புராண இதிகாசக் கதைகளையும், நாட்டுப்புறக் கதைகளையும் செவிமடுத்துக்கொண்டு சுருட்டுச்சுற்றவும், பிற கைவினைக் கலைகளை இயற்றவும் முடிந்த சூழலை இன்றைய 'FM' வானொலி முற்றாகத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது. வயல் வேலைகளில்

நீர்ப்பம்பிகளும், உழவு இயந்திரங்களும் செலவுப் (Coast) பின்புலத்தில் முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றன. இவ்வகை இயந்திரங்களின் பல்முனைப் பயன்பாடு (Multiple use) மனித வளத்தின் பயன்பாட்டினைக் கணிசமாகக் குறைத்துள்ளது. நீர் இறைத்தல், அருவிவெட்டுதல், சூடடித்தல், விளைபொருட்களை வீட்டுக்குக் கொண்டுவருதல் என அனைத்து வேலைகளையும் மேற்படி இயந்திரங்களே செய்துவிடுகின்றன. பலர் சேர்ந்து மடியை (வலை) இழுக்கின்ற முயற்சியை விசைப்படகின் இயந்திரம் ஒன்றே சாதித்துவிடுகின்றது. இத்தகைய நவீன முயற்சிகள் சுதேசியப் பொருளாதாரக் கட்டமைப்புக்களோடு சேர்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைகளை மிகவும் நலிவடையச் செய்துள்ளன. பாரம்பரியமான போக்குவரத்துச் சாதனங்களில் ஒன்றான 'மாட்டுவண்டி' எம்மிடமிருந்து விடைபெற்றுவிட்டது. மாட்டைக்கொண்டு உழுவதான செயற்பாட்டைப் புகைப்படத்திலேயே எம்மால் பார்க்க முடியும்.

**பண்பாட்டு வினையாளர்களின் புலப்பெயர்வு**

நாட்டில் நிலவிய அசாதாரணமான சூழ்நிலைகள் பாரம்பரிய தொழில்களைப் புரிவதில் உள்ள அச்சுறுத்தல் மற்றும் பொருளாதாரக் குறைவு முதலான காரணிகளால் கலைஞர்கள் மற்றும் பாரம்பரிய கைவினைக் கலைஞர்கள் உள்ளிட்ட பண்பாட்டு வினையாளர்கள் பலரும் தமது பூர்வீகக் கிராமங்களை விட்டுப் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். பண்பாட்டுப் பாரம்பரியங்களை அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டிய வினையாளர்கள் பலரும் பிறநாடுகளில் நிரந்தரமாக குடியேறிவிட்டார்கள். நாட்டின் பிறபகுதிகள், மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள் முதலாக இப்புலப்பெயர்வும் இடப்பெயர்வும் நிகழ்ந்து வருகிறது. உயிர்ப் பாதுகாப்பை அடிப்படையாகக்கொண்டு தொடங்கிய இப்புலப்பெயர்வு தற்போது சமூக அந்தஸ்து (Social Status), பொருளாதார விருத்தி முதலானவற்றையும் முன்னிறுத்தியதாக மாறியுள்ளது. இவ்வாறான புலப்பெயர்வுகள் பன்னாட்டுக் கலாசாரம், தமிழர் பண்பாட்டில் இலகுவாக ஊடுருவவும் வாய்ப்புத்தருவதாகவும் அமைந்து காணப்படுகின்றது என்பதையும் இவ்விடத்தில் மனங்கொள்தல் வேண்டும்.

**மதமாற்ற முயற்சிகள்**

சமயத்தை மையப்படுத்திய வழிபாட்டு மரபுகள் பலவும் மதமாற்ற முயற்சிகள் காரணமாக வழக்கிழந்து வருகின்றன. குறிப்பாக, சைவசமயத்தை மையப்படுத்திய சிறுதெய்வ வழிபாட்டு மரபில் (Little Tradition) பல்வேறு வகையான கலைப்பயில்வுகளும் அதனோடு தொடர்புடைய கைவினைக் கலைகளும் வழக்கில் இருந்து வந்துள்ளன. சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள் மதம்மாறிப் பிற சமயத்திற்கு உள்ளீர்க்கப்படும்போது அதுவரை தமது வழிபாட்டு மரபுகளோடு பின்னிப்பிணைந்திருந்த கலைமரபுகளை இவர்கள் மறுதலித்தே செல்கின்றனர். ஒப்பீட்டுநிலையில் இது தொடர்பில் அதிக தாக்க விளைவினை ஏற்படுத்திய மதமாகக் கிறிஸ்தவ மதத்தைக் குறிப்பிட முடியும். மதம் மாறியவர்கள் புதிய மத அனுட்டான நடைமுறைகளுக்குப் பழக்கப்படுத்தப்படும்போது தலைமுறை தலைமுறையாகப் பேணிவந்த மத நம்பிக்கைகள், அவை தொடர்பான வழக்கங்கள், வழிபாட்டு மரபுகள், கலைகள் மற்றும் சடங்குகள் முதலானவற்றை இழக்கவேண்டியவர்களாகிறார்கள். இதனால் அதுவரை இம்மரபுகளுடன் இயைந்து வளர்த்தெடுக்கப்பட்ட வழக்காறுகள் கைவிடப்படுகின்றன அல்லது மாற்றங்களுக்கு உட்படுகின்றன. காத்தான் கூத்து, உடுக்கடிப் பாடல், கரகம், காவடி முதலான ஆற்றுகைக் கலைகள் சைவசமயச் சூழலை அண்டியே பயிலப்பட்டு வந்துள்ளன. நேர்த்திக்குக் கூத்துப் போடும் நம்பிக்கை

என்பது யாழ்ப்பாணப் பண்பாட்டில் இன்றும் வழக்கில் உள்ளது. இக்கலைகள் தொடர்பான கைவினைக் கலைகளும் வேண்டுவாரின்றி இயல்பாக மறைந்து வருகின்றன.

மத மாற்றத்தைப் போலவே சமஸ்கிருதமயப்பாடும் (Sanskritization) பண்பாட்டுப் பயில்நிலைக்கான பிறிதொரு சவாலாகும். நாட்டார் பண்பாட்டு மரபில் இருந்த சிறுதெய்வக் கோவில்கள் பலவும் இன்று வேகமாக சமஸ்கிருதமயப்படுத்தப்பட்டு பெரும்பாரம்பரியக் (Great Tradition) கோவில்களாக மாற்றப்பட்டு வருவதனைப் பார்க்க முடிகிறது. ‘விளக்கு வைத்து’ வழிபட்டிருந்த சிறுதெய்வக் கோவில்கள் (Little Tradition) ஆகமநிலைப்படுத்தப்பட்டபோது அதுவரையும் அத்தெய்வங்கள் தொடர்பாக நடைபெற்றுவந்த வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள் முதலானவை உள்ளிட்ட பல்வேறு மரபுகளும் மாற்றம் பெறுகின்றன அல்லது வழக்கிறக்கின்றன எனக் கருதலாம். உயர் மரபுக்குள் (Great Tradition) நாட்டுப்புறத் தெய்வங்கள் கொண்டுவரப்படும்போது ஆண்டவனுக்கும் அடியவனுக்குமான ‘இடைவெளி’ (Space) அதிகரிக்கின்றது. நாட்டார் பண்பாட்டு மரபில் பல்வேறுவிதமான சடங்குகள் மற்றும் வழிபாட்டு மரபுகளினூடாக கடவுளுடன் நேரடித் தொடர்பில் (Direct connection) இருந்த பூசாரியும் மக்களும் அவ்வகையான தொடர்புகளுக்குப் பிராமணன் என்ற ஒரு ஊடகத் தொடர்பாளரை (Mediator) தொடர்புகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடுகிறது.

அண்ணமார், காத்தவராயர், பிடாரி, காளி, முனி, வைரவர், விறுமன், ஐயன், கண்ணகி முதலான நாட்டார் பண்பாட்டுக் கடவுளர்கள் சமஸ்கிருதமயப் பண்பாட்டில் பிள்ளையார், முத்துமாரி, முனீஸ்வரன், ஞானவைரவர், இராஜராஜேஸ்வரி முதலான புதிய பெயர்களைப் பெறுவதுடன், நாட்டார் பண்பாட்டு மரபில் வந்த குளிர்த்தி, பொங்கல், மடைப்பரவல், மாமிசப்படையல் உட்பட கூத்துப்போடுதல், விளக்குவைத்தல், பலியிடல் முதலியனவும் மாற்றம் பெறலாயின. இவ்வாறான மாறுதல்கள் அனைத்தும் இந்த வழிபாட்டு மரபுகளைச் சார்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலை மரபுகளைப் பெரிதும் பாதிப்பவையாகக் காணப்படுகின்றன.

**சாஸ்திரிய நிலைப்பட்ட கலைகள் மீதான மிகைவிருப்பு**

தமிழ் மக்களிடையே செந்நெறி மரபு அல்லது பெரும்பாரம்பரிய மரபு சார்ந்த கலைப் பயில்வு தொடர்பான ஈடுபாடு அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதனைப் பார்க்க முடிகிறது. தமது பிள்ளைகளுக்குப் பரத நாட்டியம், வீணை, கர்நாடக சங்கீதம், மிருதங்கம், வயலின் முதலானவற்றுள் ஒன்றையாவது பயிற்றுவிக்க இம்மக்களில் பலரும் விரும்புகிறார்கள். இக்கலைகளின்மீதான தமது பிள்ளைகளின் ஆட்சியினை (Familier) தமது சமூக அந்தஸ்தின் (Social Status) ஒரு குறியீடாகவும் இம்மக்கள் பார்க்கிறார்கள். இந்த நிலைப்பாடானது கிராமியப் பண்பாடு சார்ந்த கலைப் பயில்வுகளுக்கு சவாலாக அமைந்துள்ளது. குறிப்பாக, நாட்டுப்புறப் பண்பாட்டு நடனங்களான கும்மி, கோலாட்டம், கரகம், காவடி முதலான ஆற்றுகைக் கலைகளைப் பயிலப் பலரும் இன்று முன்வருவதில்லை. இக்கலை வடிவங்களைப் பயிற்றுவிக்கக்கூடிய வினைத்திறன் வாய்ந்த போதிய வளவாளர்களும் இல்லை. தமிழ்த்தினம், பொங்கல் விழா முதலான வைபவங்களில் மட்டும் இவ்வகை ஆடல்களை சம்பிரதாயத்துக்காக நிகழ்த்துகின்ற சூழ்நிலையே இன்று காணப்படுகின்றது. இவ்வாறான கலைப் பயில்வுகளை அவை வழங்கும் இயல்பான சூழலிலிருந்து (Contex) பிரித்தெடுத்து நவீன படச்சட்டக மேடையிலே ஆற்றுகை செய்ய முனையும்போது அவற்றின் உயிர்த்துடிப்பு மற்றும் தனித்துவம் முதலியன இழக்கப்படுதல் பிறிதொரு சவாலாகும்.

## திறந்த பொருளாதாரக் கொள்கை

'திறந்த பொருளாதாரக் கொள்கை' மற்றும் 'உலகமயமாதல்' என்பன பண்பாட்டுப் பேணுகையின் பிரதான சவால்களாகக் காணப்படுகின்றன. அனைவருக்குமான ஒரேவகையான பண்பாடு, பன்னாட்டுப் பண்பாடு ஆகியவற்றை மேற்படி காரணிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் முனைப்புறுத்தி வருகின்றன. திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக எமது பொருளாதாரம் பெரிதும் இறக்குமதிகளிலேயே தங்கியுள்ளதனை அவதானிக்க முடிகிறது. இதனால் சுதேசியப் பண்பாடு சார்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட மரபுசார் தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்திகளுக்கான வாய்ப்புகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இத்தன்மை காரணமாக விவசாயம், கடல் வேளாண்மை, சிறுகைத்தொழில் முனைவுகள், கைவினைக்கலைசார் தொழில்கள் பலவும் பாதிப்படைந்துள்ளதோடு இவ்வாறான தொழில்கள் சார்ந்து வளர்த்தெடுக்கப்படுகின்ற கலைப் பயில்வுகளும் வழக்கொழிந்து வருகின்றன. வகைமாதிரியாக குறிப்பிடுவதானால் மாடுகளின் உதவிகொண்டு நீர் இறைக்கும் சூத்திரக்கிணறுகள், மரப்பலகைகளை இணைத்துக் கட்டப்படும் தோணிகள், வத்தைகள், ஒற்றை மரத்தில் கோதப்படும் தோணிகள், கட்டுமரங்கள் முதலானவற்றையோ அவற்றைப் பராமரிக்கும் மரபுசார்ந்த தொழில்நுட்பங்களையோ இன்று எம்மால் பார்க்க முடியாது. அவற்றை நாம் கைநெகிழவிட்டுள்ளோம். இடியப்ப உரல், பல்வகை அச்சுஉரல்கள், திருகுவலை, புட்டுக்குழல் முதலான பல்வகைப் புழங்குபொருட்களும் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இன்று அலுமினியம், சில்வர், இரும்பு முதலான உலோகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுச் சந்தைக்கு வந்துள்ளன. இந்த நிலைமையானது இத்தொழில்சார் கைவினையாளர்களைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. சிறுபான்மையாக இத்தொழில்களில் ஈடுபட்டுவந்த சிலரும் அவற்றைக் கைவிட்டு வருகின்றனர். இத்தொழில்கள் சார்ந்த நுட்பங்கள் முறையாகப் பேணப்படாது இழக்கப்பட்டு வருவதனை இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும்.

## மொழியில் பிறமொழித் தாக்கம்

தமிழ்ப் பண்பாட்டின் பிரதான அடையாளங்களுள் ஒன்றாக விளங்குவது மொழியாகும். தூய தமிழ்ப் பிரயோகத்திற்குப் பலராலும் உதாணமாக எடுத்துக்காட்டப்படும் இலங்கைத் தமிழ் வழக்கு, இன்று ஆங்கிலம் கலந்தநிலையில் எழுத்திலும் பேச்சிலும் பிரயோகிக்கப்படுகிறது. தென்னிந்திய ஊடக மிகை நுகர்வு குறிப்பாக சினிமா, சின்னத்திரை என்பனவற்றின் செல்வாக்கு இதற்கான பிரதான காரணியாகும். இலங்கைத் தமிழர்களைப் பார்வையாளராகக் கொள்வதற்கு அமைவாகத் தென்னிந்தியத் தொலைக்காட்சிகள் தமது நிகழ்ச்சிகளை வடிவமைக்கின்றன (சுப்பர்சிங்கர், யூனியர் சுப்பர் சிங்கர்). இதனால் விரும்பியோ விரும்பாமலோ இவற்றுக்கு நாம் ஆட்படுகிறோம்.

புலப்பெயர்வு இதற்கான பிறிதொரு காரணியாகும். இலங்கையில் நிலவிய போராட்டச் சூழல் காரணமாக தமிழர்கள் பலரும் ஐரோப்பிய நாடுகள், ஸ்கன்டிநேவிய நாடுகள், அமெரிக்கா முதலான நாடுகளை நோக்கிப் புலம்பெயர்ந்தனர். இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் அந்தந்த நாடுகளின் மொழிகளைக் கற்கவேண்டிய தேவைப்பாடு பல்வேறு நிலைகளிலும் உணரப்பட்டது. ஆயினும், வீட்டு மொழியாகத் தமிழைப் பயன்படுத்தும் வழக்கம் முதலாம் இரண்டாம் தலைமுறைப் புலப்பெயர்வாளர்களிடம் இருந்தது. தாயக உணர்வும் தமிழ்மொழிப் பற்றும் இவர்களிடம் ஒப்பீட்டுநிலையில் அதிகமாக இருந்துள்ளது. ஆயினும், இன்று அந்தநிலை மெல்ல மெல்ல மாறிவருகிறது.

இதனால், தமிழ் எழுத்துத் தெரியாத, தமிழில் பேசமுடியாத, 'தமிழ் இனம்' (Tamil Etheric Group) என்று தம்மை அழைத்துக்கொள்ளும் ஒரு தலைமுறை புதிதாக உருவாகியுள்ளது. இது மிகவும் கவலை தரும் விடயமாகும். ஆங்கிலத்தில் பேசுவதைக் கௌரவமாக நினைக்கும் மனோபாவமே இந்நிலைக்கான பிரதான காரணமாகும். வீட்டுமொழியாகக்கூடத் தமிழை இவர்கள் பயன்படுத்துவதில்லை. தமிழ்மொழியைப் பயிற்றுவிப்பதற்காக ஐரோப்பா, அமெரிக்கா, ஸ்கன்டிநேவிய நாடுகளில் தமிழ்ப்பள்ளிகள் தாராளமாக முளைவிட்டுள்ளன. இவற்றுள் பலவும் பொருளாதாரப் பின்புலத்தில் இயக்கப்படுகின்றன. தமிழில் பேசவும் எழுதவும் தெரியாதவர்களுக்குத் தாயகத்திற்கு வருவதிலும் அவ்வளவு இஷ்டம் இருப்பதில்லை. வந்தாலும் தமது பெற்றோரின் மொழிபெயர்ப்பு உதவியுடனேயே பேரன், பேர்த்தியுடன் உரையாடல் செய்வது என்பது மிகவும் வேதனையான விடயமாகும். புலம்பெயர் தேசங்களில் வாழும் இளைய தலைமுறையினருக்குத் தமிழைப் பயிற்றுவிப்பதில் பொருத்தமான வழிமுறைகள் கண்டடையப்படல் வேண்டும். அதன் முற்படு தேவையாக வீட்டில் பேசும் மொழியாக தமிழைப் பயன்படுத்த வேண்டும்.

**பழைமை போற்றாத மனோபாவம்**

தமிழ்ப் பண்பாட்டின் இருப்பில் எதிர்கொள்ளப்படும் பிறிதொரு சவால், எம்மிடையே காணப்படும் பழைமை போற்றாத மனோபாவமாகும். ஐரோப்பியர் உள்ளிட்ட மேல்நாட்வர்களிடம் இப்பண்பு ஒப்பீட்டு நிலையில் மிகவும் மேலோங்கிக் காணப்படுகிறது. தமிழர்களாகிய எம்மிடம் நவநாகரிகத்தின்பாலான நாட்டம் என்பது பெருவிருப்பாகவே உள்ளது. எமது பண்பாடு, பண்பாடுசார் மரபுச் சின்னங்கள் தொடர்பில் இன்னும் விழிப்புணர்வு தேவைப்படுகிறது. பொருள்சார் பண்பாடு குறித்து எம் முன்னோர்களிடம் புழக்கத்திலிருந்த பல்வேறு விடயங்களையும் இன்று எம்மால் பார்க்க முடியவில்லை. வழக்கங்கள் சார்ந்த நடைமுறைகள் பலவற்றையும் நாம் கைநெகிழவிட்டுள்ளோம்.

**பாடவிதானம்**

தமிழர் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் நடைமுறையிலிருக்கும் கல்விக்கொள்கை மற்றும் பாடவிதானங்களில் குறித்த பிரதேசத்து மக்களின் சுதேசிய பண்பாட்டு வழக்காறுக்கு முக்கியத்துவம் தரப்படாமை பிறிதொரு சவாலாகும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட இப்பிரதேசங்களின் பல்கலைக்கழகங்களில்கூட, தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களைப் பேணிக் காத்துக்கொள்ளக்கூடிய பயில்வுகளைப் போதுமான அளவில் முனைப்புறுத்தவில்லை என்றே சொல்லலாம். இப்பல்கலைக்கழகங்களில் தமிழ் நாட்டார் வழக்காறு (Tamil Folklore) தொடர்பான தனித்துறையை ஸ்தாபிக்கக்கூடிய சூழல் இன்றுவரை கைகூடவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்களைக் கருதிக்கொள்ள முடியும். சந்தைக்கேற்ற கல்வி (Marketable Education) என்ற கொள்கையில் பெரும்பாலும் விழுமியக் கல்வி புறந்தள்ளப்பட்டு, பொருளாதார நலன்களே முதன்மைப்படுத்தப்படுகின்றன. குறிப்பாகச் சொல்வதானால் முதலாளித்துவத்தின் பொருளாதார இலக்கைத் திருப்திப்படுத்துவதாகவே எமது கல்விக் கொள்கைகள் அமைந்துள்ளன. இவ்வாறான ஒரு சூழலில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் தான் சார்ந்திருக்கக்கூடிய பண்பாட்டின் செழுமையினை உணராது அல்லது உணரச் சந்தர்ப்பம் இல்லாது அப்பண்பாட்டின் சுய அடையாளங்களை இழப்பதற்கான வாய்ப்புக்களே பிரகாசமாக உள்ளன.

**முடிவுரை**

தமிழ்ப் பண்பாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் பல்வேறு சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டிய சூழல் ஒன்று உருவாகியுள்ளது. உலகம் இன்று சுருங்கிவிட்டது. முன்னைய சூழ்நிலைபோல இன்றைய சூழ்நிலைகள் இல்லை. பல்லினப் பண்பாட்டுச் சூழலில் வாழவேண்டிய நிர்ப்பந்தமும் எம்மவர்க்குக் காணப்படுகிறது. தாய்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழ்ப் பண்பாட்டைப் பேணுவதில், அதனைத் தக்கவைப்பதில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. இச்சவால்களை நுட்பமாகவும் தூரநோக்குடனும் கையாள்வதிலேதான் எமது பன்பாட்டின் இருப்பின் எதிர்காலம் உள்ளது. பின்னைப் புதுமைகளை ஏற்கின்ற அதேவேளை முன்னைப் பழைமைகளையும் நாம் கைநெகிழவிடக்கூடாது. தமிழர் பண்பாட்டு மரபிலிருந்து வழக்கிறந்துபோன பண்பாட்டு வகைமைகளை இனங்கண்டு அவற்றை நாம் மீட்டுருவாக்கம் செய்தல் வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு ஒன்றை இளைய தலைமுறையிடத்துக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு. இது தொடர்பில் அரும்பொருளகத்தின் நிர்மாணம் முக்கியத்துவம் பெறுகிறது. அத்துடன் இப்பண்பாட்டு மரபுகளையும் சின்னங்களையும் பேணிப் பாதுகாப்பதற்கான சட்டவலு, அரசியல் ஆதரவு என்பனவற்றை இத்துறை சார்ந்து ஈர்த்தல் வேண்டும்.

தமிழ்ப் பண்பாட்டின் செழுமையினைப் பிற இனத்தவரும் பிற நாட்டினரும் அதன் தனித்துவத்தோடு தரிசிப்பதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல் வேண்டும். இத்துறை சார்ந்த கலைஞர்களது மேதமைகள், வரலாறு குறித்த பதிவுகள் மற்றும் ஆராய்ச்சிகள் என்பனவற்றைத் துறைசார் அறிஞர்கள் முன்னெடுக்க வேண்டும்.

**துணைநின்ற நூல்கள்**


இளையதம்பி.பா, 2015, பண்டைத் தமிழர் பண்பாடு – ஒரு புதிய நோக்கு, சுவாமி விபுலாநந்தர் ஆய்வு மையம், ரொறன்ரோ, கனடா.

கலியபெருமாள்.கா, 1997, உலகத் தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம் - பகுதி 2 வாழ்வியல், வள்ளலார் அன்பு நிலையம், மலேசியா.

கிருட்டினன்.அ, 1992, தமிழர் பண்பாட்டியல் (தொகுதி 01), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சண்முகராஜா.சி, (தொ.ஆ) 2022, ஈழத் தமிழர் பண்பாட்டு ஆய்வுகள், பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், வடமாகாணம்.

சிவத்தம்பி.கா, (ப.ஆ) 1980, இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிவசுப்பிரமணியன்.ஆ, 1999, மந்திரமும் சடங்குகளும், மக்கள் வெளியீடு, சென்னை.

சிவசுப்பிரமணியன்.ஆ, 2008, வரலாறும் வழக்காறும், காலச்சுவடு பதிப்பக வெளியீடு, சென்னை.

சுந்தரம்பிள்ளை.செ, 1990, ஈழத்து இசை நாடக வரலாறு, யாழ் இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.

நடராசன்.தி.சு, 2006, தமிழின் பண்பாட்டு வெளிகள், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

நாகராசன்.ச, 2004, உலக நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

புஷ்பரட்ணம்.ப, ஈழத் தமிழர் மரபுரிமை அடையாளங்கள், தமிழ்க் கல்விச் சேவை, சுவிற்சர்லாந்து.

பக்தவச்சலபாரதி.சி, 1999, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பக்தவச்சலபாரதி.சி, 2002, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

பாலசுந்தரம்.இ, 1979, ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

பெருமாள்.ஏ.என், 2003, தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

லூர்து.தே, 1997, நாட்டார் வழக்காற்றியல், மணிவாசகப் பதிப்பகம், சென்னை.

லூர்து.தே, 1997, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

விசாகரூபன்.கி, 2003, நாட்டார் வழக்காற்றியல் - ஓர் அறிமுகம், மலர் பதிப்பகம், கந்தர்மடம்.

Dundes Alan, 1980, Interpreting Folklore, Bloomington, Indiana University Press.

Don Yoder, 1972, Folklore and Folklife – An Introduction. The University of Chicago, U.S.A.

Bhagwat Durga, 1958, An Outline of Indian Folklore, Popular Prakashan, Bombay.

Laksmanan Chettiar S.M.L, 1973, Folklore of Tamilnadu, National Book Trust NewDelhi.

Van Gennep Arnold, 1960, The Rites of Passage, Routledge and Keganpall Limited, London.

Rajasingham.C, 2003, The cultural contribution of the Tamila, B.V.R offset, Chennai.

Raghavan.M.D, Tamil culture in Ceylon – A General Introduction, Ceylon printed limited, Colombo.

## உள்ளடக்கம்


Message from the Vice Chancellor

பீடாதிபதியின் செய்தி

ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி

பிரதம பதிப்பாசிரியரின் செய்தி

ஆதார சுருதியுரை

### Environment and Geography

1. நன்னீர் மீன்பிடி வளவாய்ப்புகளும் சவால்களும்: ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

   **Pavatharani Suntharalingam**

2. வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகள்: வெருகல் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

   **Thurainayagam Pratheepan, V. Pathmanandakumar**

3. அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

   **Nafeel Naafiya, V. Pathmanandakumar**

4. அநுராதபுர மாவட்ட கெகிராவ பிரதேச செயலகப் பிரிவின் நெற்செய்கைப் போக்குகள்

   **Rasik Fathima Rasna, V. Pathmanandakumar**

5. மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென்எருவில்பற்று வரையான கரையோர உருவவியல் மாற்றம் (2006-2025)

   **Saminathan Mangala**

6. முன்மொழியப்பட்ட இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் பற்றிய பொதுமக்களின் கண்ணோட்டம்: மன்னார் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

   **Imam Fathima Ishama, V. Pathmanandakumar**

7. மாத்தளை நகரின் கடந்த இரு தசாப்த கால (2004-2024) நிலப் பயன்பாட்டு மாற்றம்

   **Rajendran Pavithra, S. Vasanthakumary**

8. நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சாய்வுநிலங்களின் நிலப்பயன்பாட்டினை முகாமைசெய்தல் : நிலையான பாதுகாப்பிற்கான வழிமுறைகள்

   **Vijayakumar Vinothani, S. Vasanthakumary**

9. கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே பிரதேச செயலக பிரிவில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் (2003-2023) நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றம்

   **Yoganadhan Baby Shalini, S. Vasanthakumary**

10. அனுராதபுர மாவட்டம் கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகப் பிரிவில் விவசாய நடவடிக்கைகள் மீதான காட்டு விலங்குகளின் தாக்கம்

**Mohammadhu Ansar Aroosiya, V. Pathmanandakumar**

## Political Science & Governance

11. கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் சவால்களும் : திகாமடுல்ல மாவட்டத்தின் 2020, 2024 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**Puspakaran Dilasan, V. Gunaretnam**

12. பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடு: 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**P. Ajitha, A.Kanneraj**

13. பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாக்காளர் நடத்தை : 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Thevarajah Kinsiya Miyomi , N.Pushparajah**

14. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதில் சிவில் சமூகத்தின் வகிபாகம்: ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையை அடிப்படையாகக் கொண்ட விசேட ஆய்வு

**Rajanitharan Thushanthani, A.Kanneraj**

15. இலங்கையில் ஜனநாயக முறைமையைப் பாதுகாத்தல்: ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆய்வு

**Chandramani Jeyanthi**

## Language and Literature

16. அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பதில் உள்ள சவால்கள்: பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) மற்றும் அரபு-தமிழ் ஒலி ஒப்பீடுகளைப் பயன்படுத்திய விளக்க ஆய்வு

**Habeebul Buhary Razeen Riza, I. M. Thalib**

17. அகநானூற்றுச் செய்யுட்கள் சுட்டும் பண்பாட்டுப் பதிவுகள்

**Tharumarasa Jansika**

18. பண்பாட்டுத் தேசிய நோக்கில் பாரதி படைத்த பெண்

**Sivanesh Ranjidha**

19. திருக்குறள் இல்லறவியல் உரைகளில் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடு - ஓர் ஆய்வு

**Balarathnam Saranya**

20. சமூகவியல் நோக்கில் 'கடவுளரும் மனிதரும்' சிறுகதைத் தொகுப்பு

**N. Remsika**

21. மு.தயாளன் நாவல்கள் காட்டும் ஈழத்து யுத்த கால வாழ்வியல் சூழல்

**Mahendran Kovarththana, Dr. Nadira Mariyasandanam**

22. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் - ஓர் ஆய்வு

**Alagaraj Abdha Nishan**

23. சிறுவர் உரிமை விழிப்புணர்வில் இலக்கியங்களின் பங்களிப்பு : 'எனக்கு வயது பதின்மூன்று' சிறுகதையை முன்னிறுத்திய பார்வை

**K.Lohageetha**

## Drama and Theater

24. சடங்காற்றுகையில் சுவை, நறுமணம் மற்றும் தொடுதலின் வகிபங்கு: மட்டக்களப்பு மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு

**K.Atputhan**

25. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் இலக்கியச் செல்வாக்கு

**Suthakaran Suvistan**

26. தலித்திய நோக்கில் கந்தன் கருணை

**K.Nilaxsan**

## History and Culture

27. பட்டிப்பளைப் பிரதேச விவசாயப் பண்பாட்டில் போடிமாரின் வகிபங்கு

**Vijayareththinam Dishani**

28. மட்டக்களப்பு கரைவாகுப்பற்று வன்னியர்களும் சமூகமும்

**Rasanayakam Hariskanth**

29. வன்னிப் பெருநிலப் பரப்பில் தொல்லியல் சின்னங்களில் தமிழர் கலை வெளிப்பாடும் அதன் தாக்கமும்

**Ramakavundar Thevatharshikan**

## Education & Psychology

30. மாணவர்களின் உளவிருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு

    **Niththiyanantham Hakshana**

31. பாடசாலைக் கல்வியின் பண்புத்தர மேம்பாட்டில் பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி என்பனவற்றின் செல்வாக்கு

    **Saththiyeswaran Supisankari**

32. பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில்சார் தீய்வைத் தூண்டும் காரணிகள் : யாழ்ப்பாண மாவட்டத்தில் இடைநிலைப் பாடசாலைகளின் மீதான ஒரு தோற்றப்பாட்டியல் ஆய்வு

    **Brintha Somalojan, V.Vijayabaskar**

33. கல்குடா கல்வி வலய 1AB பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள்

    **Shanmugam Jeyanthiny, Rajendran Thakshaayini**

34. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் வகிபங்கு

    **K. Shayanthini, R. Thakshaayini**

35. சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்களின் தாக்கம் - விமர்சனக் கோட்பாட்டு மெய்யியல் நோக்கு

    **Parameswaran Kunalini**

36. ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்வதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் பங்களிப்பு

    **T. Puviraj, R. Thakshaayini**

37. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு

    **Thujenthan Kalaiksa**

38. விசேட தேவையுடைய மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

    **Abilash.K, Arulmoly.S**

## Religion & Social Harmony

39. நல்லூர் கந்தசுவாமி கோயில் மரபுகளும் மாற்றங்களும்

    **Thevaraja Tharsin, Mr. K. Mathiseelan**

40. இந்துமதம் வலியுறுத்தும் குடும்பக் கட்டமைப்பு: மகாபாரதத்தை மையப்படுத்திய ஆய்வு

    **P.Thaarani, N.Kunasivarupan**

41. இலாவாணை குமாரர் கோயிலின் வழிபாட்டு மரபுகள் - ஓர் ஆய்வு

    **T. Shathursana, V.Gunapalasingam**

42. மட்டக்களப்புத் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமும் அதன் தனித்துவமான வழிபாட்டு முறைகளும்

    **Jayavani Krishnamoorthy**

43. ஒழுக்கக் கோட்பாடு - இந்து, பௌத்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

    **Selvarasa Vijitha, R.Sahayaseelan**

44. இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்துசமய இலக்கியப் பங்களிப்புகள்

    **Thenila Jegatheeswaran**

45. மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடும் மாதா வழிபாடும் : வந்தாறுமூலை கண்ணகி அம்மன் ஆலயத்தையும் தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

    **Anthonystaniskilas Amaliny, R.Sahayaseelan**

46. தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் - ஒரு வரலாற்று நோக்கு

    **Thanista Sathyendra**

47. பகிடிவதையும் பாலியல் வன்முறையும் : கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

    **k.sivavgneshwaralingam chettiyar**

48. உளவளத்துணைச் செயற்பாடுகளும் ஒழுக்கப் பிரயோகங்களும் - ஓர் ஆய்வு

    **T.Nimesha**

49. பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம் : கிழக்குப் பல்கலைக்கழக பெண்கள் விடுதிகளினை அடிப்படையாக் கொண்ட ஆய்வு

**Pranaha Thineswaran, Kanthasami Kajavinthan**

50. ஜைனம் கூறும் இல்லறம்சார் ஒழுக்கச் சிந்தனைகள் - ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு

**S. Aneja**

# Environment and Geography

# நன்னீர் மீன்பிடி வளவாய்ப்புகளும் சவால்களும்: ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

**Pavatharani Suntharalingam**

Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

pavatharanisuntharalingam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நன்னீர் மீன்பிடி வள வாய்ப்புகளும் சவால்களும் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பல பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டது. அப்பிரதேசங்கள் மீன்பிடிக்குச் சாதகமான பல காரணிகளைக் கொண்டுள்ள போதிலும், நன்னீர் மீன்பிடியானது பல சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றது. இவ் ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில் நன்னீர் மீன்பிடிக்குச் சாதகமான காரணங்களையும் நன்னீர் மீன்பிடி எதிர்கொள்ளும் சவால்களையும் இனம்காணல் எனும் ஆய்வு நோக்கத்தை நிறைவுசெய்யும் வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, அத்தரவுகள் அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில், இவ்வாய்விற்காக நேரடி அவதானம், குவியக்குழுக் கலந்துரையாடல், வினாக்கொத்து போன்ற முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளும், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக அறிக்கை, Open Street Map தரவுகள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வின் பெறுபேறுகளாக நன்னீர் மீன்பிடிக்கான குளங்கள் காணப்படுதல், அதிக இலாபம் தரக்கூடிய மீன் இனங்கள் காணப்படுதல், நிரந்தர ஆறுகளைக் கொண்டிருத்தல், உணவுப் பாதுகாப்பிற்கு அவசியமாக அமைதல், வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் வழங்குதல் போன்றன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று மீன்பிடி எதிர்நோக்குகின்ற சவால்களாக மீன்பிடிக் கலங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை, மீன்பிடி வலைகளை வருடாந்தம் புதுப்பித்துக் கொள்ள முடியாமை, முதலைகளின் தாக்குதல்கள் அதிகமாகக் காணப்படுதல், பருவகால மாற்றங்கள், நன்னீர் மீன்பிடிக்கான ஏற்றுமதி வாய்ப்புக் குறைவு, களஞ்சியப்படுத்தல் வசதியின்மை, நீர்த்தாவரங்கள் வளர்தல், அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளும் அதிகப்படியான மீன்பிடி நடவடிக்கைகளும், நீர் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுதல், இளம் தலைமுறையினர் மீன்பிடியில் ஈடுபட விரும்பாமை போன்ற பல பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் 10000 – 15000 வரையான வருமானத்தைப் பெறுகின்ற மீனவர்களே 37.5% மாகக் காணப்படுகின்றனர். இதன் மூலமாக ஏனைய முதலீடுகளை மேற்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், ஆய்வுப் பிரதேசத்தில் 40 வயதிலும் கூடிய மீனவர்களே 75% இனை விட அதிகளவில் மீன்பிடியில் ஆர்வம் காட்டுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *நன்னீர், மீன்பிடி, ஏற்றுமதி, தடைகள், வருமானம்.*

**அறிமுகம்**

இலங்கையின் கிராமப்புற வளர்ச்சியின் ஒரு முக்கிய அங்கமாக நன்னீர் மீன்பிடித்துறை உள்ளது. இது பல்வேறு சமூகங்களுக்கு வாழ்வாதாரம், ஊட்டச்சத்து மற்றும் பொருளாதார வாய்ப்புகளை வழங்குகிறது. மீன்பிடித் தொழிலுக்கும் புவியியலுக்கும் இடையிலான இடைத்தொடர்புகளை இடஞ்சார் ரீதியில் ஆராய்வது மீன்பிடிப் புவியியல் எனப்படுகின்றது. மீன்பிடித் தொழிலானது முதல்நிலைப் பொருளாதார நடவடிக்கைகளுள் ஒன்றாக விளங்குகிறது. புராதன காலத்திலிருந்து மனிதன் தனது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகத் தாம் வாழுகின்ற சூழலில் உள்ள நன்னீர் நிலைகளான ஆறுகள், குளங்கள் மற்றும் உவர் நீர்நிலைகளான கடல், உவர் ஏரிகள் போன்றவற்றிலிருந்தும் மீன்பிடித்தொழிலைச் செய்து வந்துள்ளான். இது அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதாக மாத்திரமே அமைந்தது. ஆனால். தற்பொழுது மீன்பிடியானது பாரிய வருமானத்தை ஈட்டித்தரும் கைத்தொழிலாக மாற்றம் அடைந்து வந்துள்ளது (Aruniya et al, 2024).

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 200 மில்லியன் தொன் மீன் மற்றும் கடல் உணவுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2% ஆன பங்களிப்பினை மீன்பிடித்துறை கொண்டுள்ளது. 2023 இல் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியானது 407,070mt தொன்னாகக் காணப்பட்டது (Annual Performance Report, 2023). நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தி தேசிய மீன்பிடித் துறையில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. குளங்கள், நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற உள்நாட்டு நீர்நிலைகள் பல்வேறு மீன்பிடி நடவடிக்கைகளை ஆதரிக்கின்றன. மீன்வள மற்றும் நீர்வளத்துறையின் (DFAR, 2023) அறிக்கையின்படி, இலங்கை 2022 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 85,350 மெட்ரிக் தொன் நன்னீர் மீன்களை உற்பத்தி செய்தது. இது மொத்தத் தேசிய மீன் உற்பத்தியில் கிட்டத்தட்ட 30% ஆகும்.

இலங்கையானது அதிகளவான உள்நாட்டு நீர்நிலைகளையும் 517000 சதுர கிலோமீற்றர் பிரத்தியேக பொருளாதார வலயத்தையும் கொண்டுள்ள போதிலும், அதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, இலங்கையில் நன்னீர் மீன்பிடிக்கான வளவாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும், அதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற இலாபமானது மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. நன்னீர் மீன்பிடியானது பொதுவாக மீன்பிடி வளங்கள் (ஆறுகள், குளங்கள், கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள்), மீன்கள், மீனவர் 3 பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது (Sarbjeet Kaur & Grishma Tewari, 2023).

பொதுவாக அறுவடை செய்யப்படும் மீன் இனங்களில் திலாப்பியா (ஓரியோக்ரோமிஸ் மோசாம்பிகஸ்), ரோஹு (லேபியோ ரோஹிதா) மற்றும் கேட்லா போன்ற கெண்டை வகைகள் மற்றும் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்ட சில பூர்வீக இனங்கள் அடங்கும். சமீபத்திய ஆண்டுகளில், சமூக அடிப்படையிலான மீன்வள முகாமைத்துவ முயற்சிகள் கிராமப்புற மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் வருமான நிலைகளை மேம்படுத்துவதில் நம்பிக்கைக்குரியதாகத் தொடங்கியுள்ளன. இருப்பினும், விரிவான தரவு

மற்றும் கொள்கைத் திட்டமிடல்கள் இன்னும் காணப்படவில்லை. இந்தப் பிராந்தியத்தில் நன்னீர் மீன்பிடிக்கான சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், பல சவால்கள் காணப்படுகின்றன (Kaur & Tewari, 2023).

இவ்வாறாக ஆய்வுப் பிரதேசமானது நன்னீர் மீன்பிடிக்குச் சாதகமான பல வாய்ப்புக்களை கொண்டுள்ள போதிலும் ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடியானது பல சவால்களையும் கொண்டு காணப்படுவது ஆய்வின் பிரச்சினையாக அமைந்துள்ளது. எனவேதான், ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடிக்குச் சாதகமான காரணங்களையும் நன்னீர் மீன்பிடி எதிர்கொள்ளும் சவால்களையும் இனம்காணல் எனும் ஆய்வு நோக்கத்தை அடிப்படையாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

Kaur & Tewari (2023) ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட Inland fisheries: Challenging issues and management Strategies in Indian context எனும் தலைப்பிலான ஆய்வானது, நன்னீர் மீன்பிடி எதிர்நோக்குகின்ற சவால்களைக் கண்டறிந்து அவற்றுக்காக முகாமைத்துவ வழிகளை முன்வைத்தல் எனும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டுள்ளது. இந்த ஆய்வானது ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக அமைவதோடு சுற்றுச்சூழல் மீதான அழுத்தம், அளவுக்கதிகமான மீன்பிடி, சமமற்ற பால்நிலை பங்கேற்பு, உட்கட்டமைப்புப் பற்றாக்குறை போன்ற பல தாக்கங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஆய்விற்கான தீர்வாக மீன்பிடி சங்கங்களை ஒன்றாக இணைத்தல், விஞ்ஞான அறிவுள்ள முகாமையாளர்களை நியமித்தல் போன்ற பல தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

Lapointe et al., ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட Principles for ensuring healthy and productive freshwater ecosystems that support sustainable fisheries எனும் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடி எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அடையாளப்படுத்தல் எனும் ஆய்வு நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இவ் ஆய்வின் பெறுபேறுகளாக சூழல் மாசடைதல், மீன்வளச் சுரண்டல், காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள் போன்றன அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு இவ் ஆய்வின் பெறுபேறுகளாக புதுமையானதும் சூழலுக்கு நேயமானதுமான மீன்பிடி முறைகளுக்குப் பழக்கப்படுதல் போன்ற தீர்வுகளை முன்வைப்பதாக அமைந்துள்ளன. ஆய்வின் முடிவாக அதிகமான மீனவர்கள் மீன்களை மொத்தமாக விற்பனை செய்கின்றனரே தவிர, பதப்படுத்தலில் ஈடுபடவில்லை என்பது முன்வைக்கப்பட்டுள்ளது.

Prasannath & Prasannath (2015) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட Socio-economic and Marketing Means of fishermen in Batticaloa Lagoon in Sri Lanka எனும் தலைப்பிலான ஆய்வானது, மீனவர்களின் சமூக பொருளாதார நிலையினை அடையாளம் செய்தல் எனும் ஆய்வு நோக்கத்தை அடிப்படையாக கொண்டது. எழுமாற்று மாதிரி எடுப்பு மூலம் 50 மீனவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு இந்த ஆய்வுக்கான தரவுகள்

சேகரிக்கப்பட்டன. இதற்காக பியர்சனின் இணைவுக் குணகப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு விபரணப் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு ஆய்வுப் பிரதேச மீனவர்களின் சராசரி வயது 47 ஆகவும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 4.32 ஆகவும் காணப்படுவதாக கண்டறிந்துள்ளது. மேலும், மாதாந்த சராசரி வருமானம் 15,801 ஆக காணப்படுவதோடு அதிகமான மீனவர்கள் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக காணப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடி தொடர்பான ஆய்வுகள் மிகவும் குறைந்த அளவிலே காணப்படுவதோடு நன்னீர் மீன்பிடி எதிர்நோக்குகின்ற சவால்கள் தொடர்பான கற்கைகள் மேற்கொள்ளப்படாத தன்மையும் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, ஏறாவூர்பற்று பிரதேசமானது மீன்பிடிக்கு வாய்ப்பான பல அம்சங்களைக் கொண்டுள்ள போதிலும், அப்பிரதேசம் தொடர்பான ஆய்வுகள் மிகவும் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு ஏறாவூர்பற்று பிரதேசத்தின் பிரதானமான குளங்களையும் ஆற்றினையும் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் எதிர்வரும் ஆய்வுகள் பிரதேசம் முழுவதையும் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட முடியும்.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வுப் பிரதேசம்**

**படம் 1 : ஆய்வுப் பிரதேசம் - ஏறாவூர்ப்பற்று**




மூலம்: ஆய்வாளர், 2025

மட்டக்களப்பு மாவட்டமானது இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பிரதேசமானது 695$Km^2$ பரப்பளவைக் கொண்டுள்ளது. இம்மாவட்டம் 14 பிரதேச செயலாளர்

பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இவற்றுள் ஆய்வுப் பிரதேசமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப்பெரிய பிரதேச செயலாளர் பிரிவாக காணப்படுகின்றது. இப்பிரதேசம் 39 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இவற்றுள் 208 கிராமங்கள் உள்ளடங்குகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் 35 கிராமங்கள் மீன்பிடிக் கிராமங்களாக காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தின் சனத்தொகையானது மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 13% ஆக காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 84131 ஆகும். இப்பிரதேசத்தில் மீனவர்களின் மொத்த எண்ணிக்கை 1424 ஆக காணப்படுகின்றது. இவற்றுள் 624 பேர் கடல்சார் மீனவர்களாகவும் 800 பேர் நன்னீர் மீனவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆய்வுப் பிரதேசமானது முதலாம்நிலைப் பொருளாதார நடவடிக்கைகளான விவசாயம், மீன்பிடி, விலங்கு வளர்ப்பு போன்றவற்றை அதிகளவில் மேற்கொள்கின்ற பிரதேசமாகக் காணப்படுகின்றது. அந்தவகையில், ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடியானது வாழ்வாதார மார்க்கமாக காணப்படுகிறது.

**ஆய்வு முறை**

இந்த ஆய்வினைப் பூர்த்திசெய்வதற்காக முதலாம் நிலை, இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில், இவ்வாய்விற்காக நேரடி அவதானம், குவியக்குழுக் கலந்துரையாடல், வினாக்கொத்து போன்ற முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளும், ஏறாவூர்பற்று பிரதேச செயலக அறிக்கை, Open Street Map தரவுகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில், Open Street Map தரவுகளானவை மீன்பிடித்தளங்களை அடையாளப்படுத்தவும் அவற்றுக்கான வாய்ப்புக்களை இனங்காணவும் பயன்படுத்தப்பட்டன. கலந்துரையாடல்கள் உரையாடல்களாக எழுதப்பட்டு ஆய்வு வினாவிற்கு ஏற்றவகையில் கருப்பொருள் பகுப்பாய்விற்கு (Thematic coding) உட்படுத்தப்பட்டு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடித்தளங்கள் நேரடியாக பார்வையிடப்பட்டு அத்தளங்களில் வருகை தந்திருந்த மீனவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அந்தவகையில், நேரடி அவதானம் மூலமாக மீன் பிடிக்கப்படும் நேரம், மீனவர்களின் தன்மை, மீன்பிடிச் சாதனங்கள், உற்பத்தியின் அளவு போன்ற பல்வேறு விடயங்கள் அவதானிக்கப்பட்டன. ஆய்வுப் பிரதேச மீனவர்கள் எதிர்நோக்குகின்ற சவால்களை அறிந்துகொள்வதற்காகவும் அவர்களின் சமூக பொருளாதார நிலையினை விளங்கிக்கொள்வதற்காகவும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன.

ஆய்வுப் பிரதேசத்தில் மீனவர்கள் குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் அமைந்து காணப்படாததோடு ஆய்வுப் பிரதேச மீனவர் பரவலாக அமைந்துள்ளமையினாலும் ஆய்வுக்கான வினாக்கொத்துக்கள் எழுமாற்று மாதிரி எடுப்பு மூலமாக வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்துக்களை வழங்குவதற்காக 5% ஆன மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன (Komahan & Sivarajah, 2015). ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த நன்னீர் மீனவர்கள் எண்ணிக்கை 800 ஆகும். எனவே, ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 40 ஆகும். இம்மாதிரிகள் பெரும்பாலும் உறுகாமம், வெலிகாகண்டிய,

கித்துல்வெவ, கரடியன்குளம், முந்தனையாறு போன்றவற்றில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை அடிப்படையாகக் கொண்டே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

800 x 5% = 40 வினாக்கொத்துக்கள்

அட்டவணை 1 : வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்ட விதம்

| இடங்கள் | வினாக்கொத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|
| உறுகாமம் | 14 |
| கரடியன்குளம் | 8 |
| கித்துல்குளம் | 6 |
| வெலிக்காகண்டி | 6 |
| முந்தனையாறு | 6 |
| மொத்தம் | 40 |

மூலம்: ஆய்வாளர், 2025

இவ்வாய்விற்கான படங்களைத் தயாரிப்பதற்காக Arc gis மென்பொருளும், தரவுகளை அளவு ரீதியான பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக Excel மென்பொருளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது கலப்பு முறையிலான ஆய்வாக அமைந்துள்ளது. அந்தவகையில், வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவானது Excel மென்பொருட்கள் மூலம் அளவு ரீதியான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன் இப்பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட பேறுகள் விபரண ரீதியான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்பட்ட ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில் ஆய்வு நோக்கத்தை நிறைவு செய்யும் முகமாக பின்வரும் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடிக்கான வாய்ப்புக்கள்**

ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்பட்ட பிரதேசங்களில் நன்னீர் மீன்பிடியானது பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற குளங்கள், ஆறுகள், ஓடைகள், தோணாக்கள், கால்வாய்கள், கடனீரேரி போன்ற நீர்நிலைகளில் நன்னீர் மீன்பிடியானது மேற்கொள்ளப்படுகின்றது.

அட்டவணை 2 : ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் குளங்கள்

| **இல.** | **குளத்தின் பெயர்** | **பரப்பளவு (ர்ய)** |
|---|---|---|
| 01 | உறுகாமம் | 983 |
| 02 | கித்துல்குளம் | 214 |
| 03 | கரடியன்குளம் | 110 |
| 04 | சின்னப்பூக்குளம் | 36 |
| 05 | இரட்சகல்குளம் | 25 |
| 06 | புளுக்குமன்னோடை | 25 |
| 07 | புத்தம்புரி | 25 |
| 08 | வெலிக்காகண்டி குளம் | 20 |
| 09 | பெரிய புல்லுமலை | 20 |
| 10 | பாலர்சேனை குளம் | 20 |
| 11 | அத்தியண்டமும்மாரி குளம் | 15 |
| 12 | குருகணாமடு குளம் | 15 |
| 13 | மரப்பாலம் | 15 |
| 14 | நவுந்தலியாமடு குளம் | 15 |
| 15 | தரப்பிலாவெளி | 15 |

மூலம்: ஆய்வாளர், 2025

மேற்கூறிய குளங்களான உறுகாமம், கித்துல்குளம், கரடியன்குளம், சின்னப்பூக்குளம், இரட்சகல்குளம், புளுக்குமன்னோடை, புத்தம்புரி, வெலிக்காகண்டிகுளம், பாலர்சேனை குளம், அத்தியண்டமும்மாரி குளம், குருகணாமடு குளம், மரப்பாலம், நவுந்தலியாமடு குளம், தரப்பிலாவெளி போன்ற பல குளங்கள் காணப்படுகின்றன. இவை தவிர இன்னும் பல குளங்களும் பருவ காலக் குளங்களாக காணப்படுகின்றன. இவற்றுள் உறுகாமக்குளமானது ஆய்வுப் பிரதேசத்தின் மிகப்பெரிய குளமாக அமைவதோடு, இதன் வகிபங்கானது மீன்பிடியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது.

படம் 2. ஆய்வுப் பிரதேசத்தின் மீன்பிடிக் குளங்கள்




மூலம்: ஆய்வாளர், 2025

ஆய்வுப் பிரதேசமானது கரையோரத்தில் அமைந்துள்ளதன் காரணமாக உள்நாட்டு நீர்நிலைகள் பலவற்றைக் கொண்டுள்ளது. இதன் காரணமாக நன்னீர் மட்டுமன்றி, சவர்நீரில் வளரக்கூடிய பல மீன்களையும் கொண்டுள்ளது. அந்தவகையில், திலாப்பியா (ஜப்பான்), கணயா, பணையான், கெளுத்தி, கோல்டன், விரால், சுங்கான், மசறி போன்ற அதிகளவான மீன் இனங்கள் காணப்படுவதனால் நன்னீர் மீன்பிடி இலாபத்தைப் பெறக்கூடிய வகையில் காணப்படுகின்றது. கடல்சார் மீன்பிடியுடன் ஒப்பிடும்போது நன்னீர் மீன்பிடிக்கான உற்பத்திச் செலவு குறைவாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக இவ்வகையான மீன்கள் அதிகளவான இலாபத்தைப் பெற்றுத்தருகின்றன. அதிலும் குறிப்பாக விரால், கணயா போன்ற மீனினங்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவையாகக் கருதப்படுகின்ற தன்மையையும் அவதானிக்க முடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டமானது முந்தனையாற்று வடிநிலத்தில் அமைந்துள்ளதன் காரணமாக அவ்வாற்றில் பல கிளையாறுகளும் வருடம் பூராகவும் நீரைக்கொண்டுள்ள தன்மையையும் அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக எந்நேரமும் மீன்பிடியில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

படம் 2. ஆய்வுப் பிரதேசத்தின் ஆறுகளும் கால்வாய்களும்




மூலம்: ஆய்வாளர், 2025

நன்னீர் மீன்கள் ஊட்டச்சத்து வளங்களில் மிகவும் முக்கியமாதாக காணப்படுகின்றது. குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பின்தங்கிய பிரதேசங்களில் ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்திசெய்வதில் மிகவும் அளப்பரிய பங்காற்றுகின்றது. குறிப்பாக, ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவில் காணப்படுகின்ற 39 கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசங்களில் அநேகமான பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாகவே காணப்படுகின்றன. இவ்வாறான பகுதிகளில் ஏனைய விலங்குணவுகளைவிட மிகவும் குறைந்த விலையில் நன்னீர் மீன்கள் கிடைப்பதால் அதிகமானோரால் நுகரக்கூடியதாகவுள்ளது.

இலங்கையில் முதலாம் நிலைப் பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாக மீன்பிடி காணப்படுகின்றது. எனவே, ஆய்வுப் பிரதேசத்தில் வேலையின்மையை நீக்கி வேலை வாய்ப்புக்களை வழங்குவதில் நன்னீர் மீன்பிடி பெரும் பங்கு வகிக்கின்றது. மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டாலும் மீன்பிடி மேற்கொள்ளக்கூடிய வளவாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன. இதன் மூலமாக ஆய்வுப் பிரதேசத்தில் அதிகமான மக்கள் தொழிலைப் பெறக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மீனவர்களின் பிரதானமான வருமான மார்க்கமாக மீன்பிடி காணப்படுவதன் மூலம் குடும்பங்களுக்கிடையிலான வறுமைநிலையை போக்கவும் காரணமாக அமைகின்றது.

**ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடி எதிர்கொள்ளும் சவால்கள்**

ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடியானது எதிர்நோக்கும் சவால்களில் ஒன்றாக மீன்பிடிச் சாதனங்கள் இன்மையினைக் குறிப்பிட முடியும். இங்கு பழமை வாய்ந்த மீன்பிடிக் கலங்களும் மரபு வழியான வலைகளுமே அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்

காரணமாக அதிகளவான மீன்வளம் காணப்படுகின்ற போதிலும் அதனை அறுவடை செய்வதில் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, சிறிய நீர்ப்பாசனக் குளங்களிலும் பாரிய நீர்ப்பாசனக் குளங்களிலும் மீன்பிடியில் ஈடுபடும் வறிய மீன்பிடியாளர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்வதற்காகப் பாதுகாப்பற்ற தெப்பங்கள், மிதவைகள், ரயர்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால், அதிகளவில் முதலைகளினால் ஆபத்துகளுக்கு உள்ளாவதுடன் மிகக் குறைந்த தூரத்தில் மட்டும் தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகின்றனர். இதனால் மிகக் குறைந்த வருமானத்தையே பெற்றுக் கொள்கின்றனர். கடல் தொழில்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தின் அளவுக்கு நன்னீர் மீன்பிடிப் படகுகளை வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களோ அரசோ அதீத அக்கறை காட்டாமையினால் ஆய்வுப் பிரதேசத்தில் எதிர்பார்க்கப்படும் விளைவைப் பெறுவதில் வறிய மீனவர்கள் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

சிறிய படகுகளைப் பெற்றுக்கொண்ட மீனவர்களும்கூட படகுகள் காணாமல் போதல், பொருத்தமான இறங்குதுறை காணப்படாமை போன்ற காரணங்களால் அதனைப் பயன்படுத்தாது உள்ளனர். அதனைவிட நிதி வழங்கும் தொண்டு நிறுவனங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை ஒன்றிணைத்துப் படகுகளை வழங்குவதால் உடைமை பாராட்டுதல், பாராமரிப்புச் செய்தல் போன்றனவற்றில் உள்ள பிரச்சினைகளால் அவை கைவிடப்பட்டுகின்றன.

ஒளிப்படம் 1. ஆய்வுப் பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் மீன்பிடிக்கலங்கள்
(1,4,7 – உறுகாமம், 2,3 – கித்துல், 5,8 – கரடியன்குளம்)




மூலம்: கள ஆய்வு, 2025

நன்னீர் மீன்பிடிக்கெனப் பாவிக்கப்படும் வலைகள் முதலைகளின் தாக்கம், காட்டுத் தடிகளில் சிக்குதல், தவறான வலையிடல் முறை போன்ற காரணங்களால் ஆறு மாத காலத்தினுள் பயன்படுத்த முடியாத நிலையை அடைவதனால் வருடத்தில் இரு தடவை அவற்றை மாற்ற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இந்த முதலீட்டை இடுவதற்கு சாதாரண மீனவர்களுக்கு, சேமிக்கப்பட்ட நிதி எதுவும் கையிருப்பில் இருப்பதில்லை

என்பதனால் வலைகளை இற்றைப்படுத்தும் தேவையை அவர்கள் உரிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதில்லை. அத்துடன் ஒரு தடவை வலைகள் கிடைத்து அது நல்ல நிலையில் காணப்படும் கால அளவு மட்டும் தொழிலில் ஈடுபட்டுப் பின்னர் ஒதுங்கிக் கொள்ளும் போக்கே அதிகளவில் மீனவர்களிடத்தில் காணப்படுவதால் தொடர்ச்சியான வருவாய் ஒன்றை உறுதிசெய்வதற்கு முடியாதுள்ளது. மேலும், சேமிப்புப் பழக்கமற்ற மீனவர்கள் பெருந்தொகை முதலீடு ஒன்றை வலைகளுக்காகச் செய்ய முடியாதுமுள்ளனர். உண்மையில் மீன்பிடிக்கப்படும் காலத்திலேயே வருவாயில் ஒரு பகுதி வலைகளின் முதலீட்டுக்காக ஒதுக்கப்படவில்லையாயின், இந்த பிரச்சினைக்கு நடைமுறைக்கு சாத்தியமான தீர்வை எட்ட முடியாது. ஆதலால், விற்பனை வருமானத்தில் இந்த ஒதுக்கீட்டைப் பிடித்து வைக்கும் முறையினை நிறுவன அல்லது சங்க மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும் (மீனவர்களுடனான கலந்துரையாடல், 2025).

ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடியாளர்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு சவாலாக முதலைகளின் பெருக்கத்தினைக் குறிப்பிடமுடியும். குளங்களிலும் ஆறுகளிலும் காணப்படும் முதலைகள் மீனவர்களைத் தாக்குவதன் காரணமாக உயிரிழப்புக்கள் ஏற்படுவதோடு பொருளாதார ரீதியிலும் நஷ்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும், குளங்களை மையப்படுத்தி ஆயிரக்கணக்கில் நிரம்பல் செய்யப்படும் மீன்குஞ்சுகளும் இறால் குஞ்சுகளும் முதலைகளினால் உரிய வளர்ச்சியை எட்ட முதலே இல்லாமல் ஆக்கப்படுவதுடன் வலைகளில் சிக்கியுள்ள சந்தர்ப்பத்திலும் முதலைகள் அவற்றை உண்பதனால் நன்னீர் மீன்பிடிக்கு முதலைகள் பாரிய சவாலாகவே காணப்படுகின்றன. மேலும், வலைகளில் பிடிபட்ட மீன்களை முதலைகள் உண்ண முட்படும்போது வலைகள் சேதப்படுத்தப்படுவதோடு அவ்வலைகளை மீண்டும் பயன்படுத்த முடியாத சூழல் ஏற்படுகின்றது. அண்மைய நாட்களில் தென்னிலங்கைப் பகுதியிலிருந்து முதலைகள் பிடிக்கப்பட்டு, வடக்கு-கிழக்கு மாகாணக் குளங்களில் விடப்படுவதால் முதலைகளின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, முந்தனையாற்றுப் பகுதியில் முதலைத் தாக்கம் காணப்படுவதனால் தூண்டில் மூலம் மாத்திரமே மீன் பிடிக்கப்படுகின்றது. மேலும், கரடியன்குளத்திலும் முதலைகளினால் வலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன (மீனவருடனான கலந்துரையாடல், 2025).

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் அதிகளவான குளங்கள் பருவகாலக் குளங்களாகக் காணப்படுவதனால் வரட்சிக் காலங்களில் மீன்பிடியினை மேற்கொள்ள முடியாத சூழல் காணப்படுகிறது. அதாவது, இலங்கைக்கு வடகீழ் பருவக்காற்று மூலம் மழை கிடைக்கும் காலங்களான டிசம்பர் - பெப்ரவரி காலங்களைத் தவிர ஏனைய காலங்களில் கிடைக்கப்பெறும் மழைவீழ்ச்சியின் அளவு குறைவாகக் காணப்படுவதனால் இக்காலங்களில் குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்து மீன்கள் இறந்து மிதக்கின்ற நிலமைகள் காணப்படுகின்றன. இக்காலங்களில் மீன்பிடித் தொழிலானது பாரிய நட்டத்தை எதிர்கொள்கின்றது. அது போலவே மழை அதிகமாகக் கிடைக்கின்ற காலங்களில் குளங்களின் நீர்மட்டம் அதிகரிப்பதனால் வான்கதவுகளைத் திறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மீனுக்குச் செல்ல முடியாத சூழல் ஏற்படுவதோடு மீன்களின் இடப்பெயர்வுகளும் அதிகரிக்கின்றன. இதன் காரணமாக எதிர்பார்த்த இலாபத்தைப் பெறமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது.

கரையோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடியுடன் ஒப்பிடும்போது நன்னீர் மீன்பிடிக்கான சந்தை வாய்ப்புக் குறைவாகவே காணப்படுகின்றது. நன்னீர் மீன்கள் அதிகளவான புரதச்சத்து உடையவையாகக் காணப்படுகின்ற போதிலும், உள்ளூர் மக்களால் மாத்திரமே அவை அதிகளவில் நுகரப்படுகின்றன. வெளிநாடுகளுக்கான ஏற்றுமதிகளோ பதனிடல் நடவடிக்கைகளோ இங்கு மேற்கொள்ளப்படாமையின் காரணமாக சந்தை வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகிறது. அத்தோடு நன்னீர் மீன்களில் ஒரு சில வகை மீன்களைத் தவிர ஏனைய மீன்களுக்கான விலைகளும் குறைவாகவே காணப்படுகின்றது. அதுமட்டுமின்றி, இம் மீன்களில் காணப்படும் வேறுபட்ட மணம் மற்றும் சுவையின் காரணமாக நன்னீர் மீன்களை வாங்கும் விருப்பு மக்களிடம் குறைவாகவே காணப்படுகிறது. இவ்வகை மீன்கள் மருந்துப்பொருட்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய வசதி வாய்ப்பினைக் கொண்டு காணப்படுவதனால் ஏற்றுமதிகளுக்கு வழியேற்படுத்திக் கொடுக்க முடியும்.

ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடியைப் பொறுத்தமட்டில் களஞ்சியப்படுத்தல் பாரிய சவாலாக காணப்படுகின்றது. அதாவது, பருவகாலக் குளங்களில் சில பருவங்களில் அதிகளவான மீன்கள் பிடிக்கப்படுகின்ற போதிலும், அதனைக் களஞ்சியப்படுத்தல், குளிரூட்டல் போன்ற வசதிகள் இன்மையினால் குறைந்த விலையிலேயே அவை விற்கப்படுகின்றன. இதன் காரணமாக எதிர்பார்த்த இலாபங்களைப் பெறமுடியாத சூழலை ஏற்படுகிறது. இதனால், பொருளாதார ரீதியில் பாரிய நட்டங்கள் ஏற்படுகின்றது. குறிப்பாக மீன்களின் விலை சந்தையில் 1 கிலோகிராம் 1000 ரூபாவாகக் காணப்படுகின்ற போதிலும் மீன் பிடிக்கப்படுகின்ற இடங்களில் 200 ரூபாவிற்கே வாங்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மீன்களைக் குளிரூட்டுவதற்கான எவ்வித வசதி வாய்ப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை. ஐஸ்கட்டிகளைக் கொள்வனவு செய்வதற்கும் நீண்ட தூரம் செல்லவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதன் மூலம் இரவு வேளைகளில் பிடிக்கப்படுகின்ற மீன்களைக் களஞ்சியப்படுத்துவதில் சிக்கல் தன்மை ஏற்படுகின்றது.

ஒளிப்படம் 2. ஆய்வுப் பிரதேசத்தில் மீன் களஞ்சியசாலை



மூலம்: கள ஆய்வு, 2025

ஆறுகள் மற்றும் குளங்களில் கழிவுகளைக் கொட்டுவதன் காரணமாக நீர் மாசடைந்து அந்நீர் பாவனைக்கு உட்படுத்த முடியாததாக மாற்றமடைவதோடு நற்போசணையாக்கத்திற்கும் உட்படுகின்றது. இதன் காரணமாக நீர்நிலைகளில் ஆற்றுவாழை, ஆகாயத்தாமரை போன்ற நீர் வாழ் தாவரங்களின் பெருக்கம் அதிகரிக்கின்றது. இவ்வாறான தாவரங்களின் காரணமாக மீன்களுக்குச் சுவாசிக்கமுடியாத சூழல் ஏற்படுவதோடு மீன்களின் நிறத்திலும் வேறுபாடு காணப்படுகின்றது. இதனால் மீன்களுக்கான கேள்வி குறைவடைகின்றது. மேலும்,

இத்தாவரங்கள் காரணமாக தோணிகளைச் செலுத்த முடியாத நிலை காணப்படுவதோடு வலைகளும் சேதமடைவதாக மீனவர்களுடனான கலந்துரையாடலின் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. மேலும், இவ்வாறான தாவர வளர்ச்சியினால் முதலைகளின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஒளிப்படம் 3. ஆய்வுப் பிரதேசத்தில் நீர்த்தாவரங்கள் நீரை மூடிக் காணப்படல்




மூலம்: கள ஆய்வு, 2025

குளங்களில் அயல் பிரதேசங்களில் உள்ளவர்களினால் அத்துமீறிய முறையில் இரவு வேளைகளில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதன் காரணமாக இலங்கை மீன்பிடித் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற மீன்குஞ்சுகள் வளர்ந்து வருகின்ற சந்தர்ப்பத்தில் வேறு மீனவர்களால் அவை பிடிக்கப்படுவதனால் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியாத சூழல் ஏற்படுகின்றது. குறிப்பாக, கரடியன்குளப் பகுதியில் இவ்வாறான மீன்பிடிகள் அதிகளவில் இடம்பெறுவதனால் இரவு வேளைகளில் காவல் இருக்க வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால் நேரம் வீணாக்கப்படுகின்றது. அது மாத்திரமன்றி, அளவுக்கதிகமான முறையில் மேற்கொள்ளப்படுகின்ற மீன்பிடிச் செயற்பாடுகளாலும் இலக்கற்ற மீன்பிடி நடவடிக்கைகளின் காரணமாகவும் சிறிய மீன்குஞ்சுகள் முதற்கொண்டு அழிக்கப்படுகின்ற தன்மையும் காணப்படுகின்றது. இதன் காரணமாக உற்பத்தியில் பாரியளவிலான வீழ்ச்சிநிலை உருவாக்கப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற நீர்நிலைகள் மீன்பிடிக்கு மாத்திரமின்றி, வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக குடிநீர் விநியோகம், விவசாயம் போன்ற செயற்பாடுகளுக்காக குளத்துநீர், ஆற்றுநீர் போன்றன பயன்படுத்தப்படுவதன் காரணமாக மீன்களின் இடப்பெயர்வுகள் காணப்படுவதோடு மீன்கள் அழிக்கப்படுகின்ற தன்மையும் காணப்படுவதாக மீனவர்களுடனான கலந்துரையாடல் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. குடிநீருக்காக நீர் சுத்திகரிக்கப்படும்போது மீன் இனங்கள் அழிக்கப்படுகின்றன. விவசாயத்திற்காகக் குளங்கள் திறக்கப்படும்போது மீன்கள் இடம்பெயர்கின்ற தன்மையும் காணப்படுகின்றது. இதன் காரணமாக மீன்களின் பெருக்கமானது கட்டுப்படுத்தப்படுகின்றது.

ஒளிப்படம் 4. கரடியன்குளத்தில் நீர் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படல்



மூலம்: கள ஆய்வு, 2025

ஆய்வுப் பிரதேசத்தில் அதிகளவான மக்கள் வாழ்கின்ற போதிலும் மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, ஆரம்பத்தில் இருந்து மீன்பிடியில் ஈடுபட்டவர்களே மீன்பிடியில் ஈடுபடுகின்றனரே தவிர ஏனையோர் இத்தொழிலில் ஈடுபடாத தன்மை காணப்படுகின்றது. அந்தவகையில், ஆய்வுப் பிரதேசத்தில் 40 வயதிற்கு மேற்பட்டவர்களே அதிகமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். 40 வயதைவிடக் குறைந்த மீனவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக 40 – 55 வயதிற்கு இடைப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை 75% ஆக காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கரடியன்குளத்தை அடிப்படையாகக் கொண்ட மீனவர்களே 20 – 35 வயதிற்கு உட்பட்டவர்களில் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். இப்பிரதேசம் ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பின்தங்கிய பிரதேசமாக அமைந்திருப்பதனால் இளம் சமுதாயத்தினருக்கும் தொழில் வழங்கும் மார்க்கமாக மீன்பிடி அமைகின்றது.

வரைபு 1 : மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் வயதெல்லை




மூலம்: ஆய்வாளர், 2025

ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடி எதிர்நோக்குகின்ற இன்னுமொரு சவாலாக வருமானம் காணப்படுகின்றது. அதாவது, ஆழ்கடல் மீன்பிடிக்குக் காணப்படுகின்ற சந்தை வாய்ப்புக்கள் நன்னீர் மீன்பிடிக்குக் காணப்படுவதில்லை என்பது நன்னீர்சார் மீனவர்களின் ஆதங்கமாக காணப்படுகின்றது. நன்னீர் மீன்களுக்கு உள்ளூரிலேயே கேள்விகள் காணப்படுகின்ற போதிலும், இடைத்தரகர்களினதும் வியாபாரிகளினதும் குறைந்தளவான விலை நிர்ணயம் மூலமாக மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் குறைவான வருமானத்தையே பெற்றுக்கொள்கின்றனர். நன்னீர் மீன்கள் ஊட்டச்சத்துக்களை அதிகமாகக் கொண்டுள்ள போதிலும் வெளியூர்களுக்கோ வெளிநாடுகளுக்கோ அதனது ஏற்றுமதி குறைவாகவே காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி, வெள்ளப்பெருக்கு, வரட்சி போன்றவற்றின் காரணமாக வருடத்தின் எல்லா நாட்களும் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலையும் ஏற்படுகின்றது. இதன் காரணமாகப் பெரும்பாலான மீனவர்கள் 15000 ரூபாவை விடக் குறைவான வருமானம் பெறுபவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது, 10000 – 15000 ரூபா வரையான வருமானத்தைப் பெறுகின்ற மீனவர்களே 37.5% ஆகக் காணப்படுகின்றனர். 20000 ரூபாவை விட அதிகமான வருமானம் பெறுகின்ற மக்கள் 7.5% ஆகவே காணப்படுகின்றனர்.

வரைபு 2 : மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் வருமான நிலை




மூலம்: ஆய்வாளர், 2025

**முடிவுரை**

ஆய்வுப் பிரதேசமானது மீன்பிடித் தொழிலில் ஈடுபடக்கூடிய பௌதிக ரீதியான வாய்ப்புக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. இருப்பினும், நன்னீர் மீன்பிடித் தொழிலானது பல பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றமையை இவ்வாய்வின் மூலம் வெளிக்கொணர முடிந்தது. அந்தவகையில், நன்னீர் மீன்பிடியின் வாய்ப்புக்களாக ஆய்வுப் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடிக்கான குளங்கள் காணப்படுதல், அதிக இலாபம் தரக்கூடிய மீன் இனங்கள் காணப்படுதல், நிரந்தர ஆறுகளைக் கொண்டிருத்தல், உணவுப் பாதுகாப்பிற்கு அவசியமாக அமைதல், வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் வழங்குதல் போன்றன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, மீன்பிடி எதிர்நோக்குகின்ற சவால்களாக மீன்பிடிக் கலங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை, மீன்பிடி வலைகளை வருடாந்தம் புதிப்பித்துக் கொள்ள முடியாமை, முதலைகளின் தாக்குதல்கள் அதிகமாகக் காணப்படுதல், பருவகால மாற்றங்கள், நன்னீர் மீன்பிடிக்கான ஏற்றுமதி வாய்ப்புக் குறைவு, களஞ்சியப்படுத்தல் வசதியின்மை, நீர்த்தாவரங்கள் வளர்தல், அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளும் அதிகப்படியான மீன்பிடி நடவடிக்கைகளும், நீர் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுதல், இளம் தலைமுறையினர் மீன்பிடியில் ஈடுபட விரும்பாமை போன்ற பல பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடியானது நடைமுறை சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்வதனால் நீண்ட கால ரீதியில் தீர்வுகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என இவ் ஆய்வின் பெறுபேறுகள் காட்டுகின்றன.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Aruniya, K., Wickramaratne, I. U., & Thilakarathne, E. P. D. N. (2024). Comparative Study on Current Fishing Status of Paalameenmadu and Kallar Barmouths in Batticaloa District, Sri Lanka. *Asian J. Fish. Aqu. Res*, *26*(4), 38-50.

Calatharan, K. (2007). A participatory approach to fisheries management and ecological-social resilience analysis among coastal communities in Batticaloa, Sri Lanka. *Sri Lanka, unpublished MS Thesis*.

Devadawson, C., Jayasinghe, C., & Sivakanesan, R. (2015). Fish availability and consumer preference in Batticaloa district in Sri Lanka.

Fünfgeld, H. (2007). Fishing in muddy waters: socio-environmental relations under the impact of violence in eastern Sri Lanka. *(No Title)*.

Lynch, A. J., Cooke, S. J., Deines, A. M., Bower, S. D., Bunnell, D. B., Cowx, I. G., ... & Beard Jr, T. D. (2016). The social, economic, and environmental importance of inland fish and fisheries. *Environmental reviews*, *24*(2), 115-121.

Lapointe, N. W., Cooke, S. J., Imhof, J. G., Boisclair, D., Casselman, J. M., Curry, R. A., ... & Tonn, W. M. (2014). Principles for ensuring healthy and productive freshwater ecosystems that support sustainable fisheries. *Environmental Reviews*, *22*(2), 110-134.

Komahan, S., & Sivarajah, P. (2015). Consumption pattern of fish among households in Batticaloa District. *Technical Session-Aquatic Resources Technology*, 17.

Kaur, S., & Tewari, G. (2023). Inland Fisheries: Challenging Issues & Management Strategies in Indian Context. In *UTTAR PRADESH JOURNAL OF ZOOLOGY* (Vol. 44, Issue 17, pp. 67–79). IK Press. https://doi.org/10.56557/upjoz/2023/v44i173594

Prasannath, V., & Prasannath, K. (2015). Socio-economic and Marketing Means of fishermen in Batticaloa Lagoon in Sri Lanka.

Samarayanke, R. A. D. B. (2003). Review of national fisheries situation in Sri Lanka. WorldFish.

Weligamage, P. (2001, November). Irrigation and Inland Fisheries in Sri Lanka0 Mutually Coexisting Systems for Food and Livelihood Options for Local People. In *8th Sri Lanka Studies Conference* (Vol. 7, No. 10).

Chen, J. L., Hsu, K., & Chuang, C. T. (2020). How do fishery resources enhance the development of coastal fishing communities: Lessons learned from a community-based sea farming project in Taiwan. *Ocean & Coastal Management*, *184*, 105015.

Lloret, J., Cowx, I. G., Cabral, H., Castro, M., Font, T., Gonçalves, J. M., ... & Erzini, K. (2018). Small-scale coastal fisheries in European Seas are not what they were: ecological, social and economic changes. *Marine Policy*, *98*, 176-186.

Meri Consi,P., & Anranirayan, A. (2024). cs;Shu; fiuNahu kPd;gpb kw;Wk; fly; ml;ilg; gz;izr; nraw;ghLfSf;F ,ilapyhd Kuz;ghLfSk; rthy;fSk; aho;g;ghzg; girA+u; fpuhkj;ij mbg;gilahf; nfhz;l Ma;T.

Rafeeka Ameerdeen, S., & Hilmiyas, S. (2021). fy;Kid flw;nwhopy; khtl;lj;jpd; fiutiy kPd;gpbj;njhopy; gw;wpa Ma;T.

Rafeeka, S. (2012). mk;ghiw khtl;l fiuNahu kPd;gpbf; ifj;njopYk; mjd; epiyahd mgptpUj;jpAk;.

Stewart, K. R., Lewison, R. L., Dunn, D. C., Bjorkland, R. H., Kelez, S., Halpin, P. N., & Crowder, L. B. (2010). Characterizing fishing effort and spatial extent of coastal fisheries. PloS one, 5(12), e14451.

Thanseem, R. M., Jisna, M. F., Nuskiya, M. H. F., & Fowsul Ameer, M. L. (2022). கடற்றொழில் மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்: சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களை மையப்படுத்திய ஆய்வு.

# வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகள்: வெருகல் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

**Thurainayagam Pratheepan**[1]
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
piratheepan1017@gmail.com

**V. Pathmanandakumar**[2]
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

### ஆய்வுச் சுருக்கம்

ஆய்வுப் பிரதேசத்தில் வறுமையைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட பல்வேறு அரச, அரசசாரா நிறுவனங்கள் இருந்த போதிலும், தொடர்ச்சியாக வறுமையை அப்பிரதேசம் அனுபவித்து வருகின்றது. இதனால் இவ்வாய்வானது வெருகல் பிரதேசத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதார காரணிகளைப் பகுப்பாய்வு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. வெருகல் பிரதேசத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல் ஆய்வின் பிரதான நோக்கமாகும். அசுவெசும திட்டப் பயனாளிகளிடமிருந்து எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையைப் பயன்படுத்தி 70 மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்து, நேரடி அவதானிப்பு, குவியக்குழுக் கலந்துரையாடல், நேர்காணல் போன்ற முறைகளைப் பயன்படுத்திப் பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளும், பிரதேச புள்ளிவிவரக் கையேடுகள், சமுர்த்திக் கிளை அறிக்கைகள், மத்திய வங்கி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்கள அறிக்கைகள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டன. வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS மென்பொருளில் உள்ளீடு செய்யப்பட்டு, விவரண பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, குவியக்குழு கலந்துரையாடலில் இருந்து பெறப்பட்ட தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டன. இப்பிரதேசத்தில் வேலையின்மை, கல்வியின்மை, உட்கட்டமைப்பு விருத்தியின்மை, கடன் வசதிகள் இன்மை, சமூக சமத்துவமின்மை போன்ற காரணிகள் வறுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மக்களும் தொடர்ந்து வறுமையில் இருப்பதால் சலுகைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இப்பிரதேசத்தில் வறுமை தொடர்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *வறுமை, அசுவெசும, சமுர்த்தி, வாழ்வாதாரம், வெருகல்.*

### அறிமுகம்

உலகளாவிய ரீதியில் அபிவிருத்தி நிலைகள், பொருளாதாரம், வளங்களின் பரம்பல், மற்றும் சனத்தொகைப் பரம்பலின் அடிப்படையில், பௌதீக, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலை கலாசார பண்பாட்டைச் சார்ந்த பல்பரிமாண அடிப்படையிலான வறுமை என்பது அனைத்துக் பகுதிகளிலும் பரவலாக காணப்படும் ஒரு முக்கிய பிரச்சினையாகிறது. வறுமை,

பொருளாதாரத்தில் மட்டுமல்லாது, சமூக, பௌதீக மற்றும் மனித வளங்களில் தேய்மானம் மற்றும் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஐக்கிய நாடுகள் சபை, வறுமையை "ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத நிலை" என வரையறுத்துள்ளது (Brian Ames et al., 2001).

சனத்தொகை அதிகரிக்கும்போது, மக்களினுடைய தேவைகளும் அதிகரிக்கின்றன. இத்தகைய நிலையில் மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய வருமானம் குறைவாக இருந்தால், அதற்கான நிலை வறுமை எனப்படும். 1990 இல் உலக வங்கியால் வரையறுக்கப்பட்ட வறுமையின் தாக்கம் மனிதனின் நல்வாழ்விற்குத் தீமையை உண்டாக்குவதாக உள்ளது. வறுமை பற்றிய வரையறைகளும், அளவீடுகளும் நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டு அமைந்தபோதிலும், வறுமையின் பரிமாணங்கள் மட்டும் பரவலடைந்து கொண்டே செல்கிறது. வறுமையானது ஒரு மனிதனை நீண்ட ஆயுள், ஆரோக்கியமான வாழ்க்கை, கௌரவமான வாழ்க்கைத் தரத்தைப் பேணுதல், சுதந்திரம், சுயகௌரவம், ஏனையோர்களால் மதிக்கப்படும் தன்மை என்பனவற்றிலிருந்து பின்னடைவான ஒன்றாகக் காணப்படுகின்றது (அமிர்தலிங்கம், 2008).

வறுமை என்பது பணப்பற்றாக்குறைக்கு மட்டும் அல்ல. இது பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் பங்கேற்க முடியாமை, குழந்தைகளைச் சக நண்பர்களுடன் பயணத்திற்கு அனுப்ப முடியாமை மற்றும் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ளச் செய்ய முடியாமை, தேவையான மருந்துகளுக்குப் பணம் செலுத்த முடியாமை போன்றவற்றையும் உள்ளடக்குகிறது. உணவு மற்றும் தங்குமிடத்தைப் பெற முடியாதவர்கள் இந்தக் கூடுதல் செலவுகளை எதிர்பார்க்க முடியாது. வறுமையை அளவிடுவதிலும் பகுப்பாய்வு செய்வதிலும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் உலக வங்கி, வறுமையின் மற்றப் பரிமாணங்களுக்கான குறிகாட்டிகளைக் கண்டறிய அதிக செயற்பாடுகளைச் செய்து வருகிறது. கல்வி, சுகாதாரம், சேவைகளுக்கான அணுகல், எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலை, சமத்துவமின்மை ஆகியவற்றைக் கண்காணிக்கும் சமூகக் குறிகாட்டிகளை அடையாளம் காண்பது இந்தச் செயற்பாடுகளில் அடங்கும் (Government of New Brunswick, 2010).

வறுமை என்பது பன்முக மற்றும் பரவலான பிரச்சினையாகும். இது உலகளவில் நிலையான வளர்ச்சி முயற்சிகளுக்குச் சவால் விடுக்கிறது. குறிப்பாக பொருளாதார வாய்ப்புகள் குறைவாக உள்ள கிராமப்புறங்களில் சமூக சேவைகள் பெரும்பாலும் போதுமானதாகக் காணப்படுவதில்லை. இலங்கையில், குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள வெருகல் போன்ற பிரதேசங்களில் வறுமை ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. இலங்கையில் நகர வறுமையினைவிட, கிராமிய மட்டங்களிலான வறுமையே அதிகமாக உள்ளது. மேலும் இதன் அளவு அதிகரித்துக் கொண்டு செல்கின்றமையை மத்திய வங்கி ஆண்டறிக்கை வாயிலாக அறியமுடிகிறது.

கிராமப்புறங்களில் வறுமையானது நிலையான அபிவிருத்திக்கான மிக அழுத்தமான சவால்களில் ஒன்றாக காணப்படுகின்றது. மேலும், இது குறிப்பாக வெருகல் பிரசேத்தில் தெளிவாகத் தெரிகிறது. வறுமையைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட ஏராளமான அரசு

மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் தலையீடுகள் இருந்தபோதிலும், வெருகல் பிரதேசம் அதிகளவிலான வறுமையை தொடர்ந்து அனுபவித்து வருகிறது. இங்கு நிலவும் வறுமையானது சிக்கலான மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய சமூக-பொருளாதார காரணிகளை முழுமையாக ஆய்வு செய்யாததைச் சுட்டிக்காட்டுகிறது. இது கல்வி மற்றும் சுகாதாரம், வேலையின்மை, போதிய உட்கட்டமைப்பு, சமூக சமத்துவமின்மை, பொருளாதார தனிமைப்படுத்தல் போன்ற காரணிகளை உள்ளடக்கியிருக்கிறது. கூடுதலாக, பிரதேசத்தில் நிலவிய யுத்தத்தின் நீடித்த விளைவுகள் போன்ற கலாசார மற்றும் வரலாற்றுக் காரணிகளும் வறுமையை நிலைநிறுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன.

இந்தச் சமூகத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதார காரணிகளைப் பற்றிய தெளிவான புரிதல் இன்மையால் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறைய வாய்ப்புள்ளது. எனவே, வெருகல் பிரதேசத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதார காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல் அவசியமாக உள்ளது. இது மிகவும் காத்திரமான வறுமை ஒழிப்பு உத்திகளுக்கு அடித்தளமாக அமையும். எனவே, வெருகல் பிரதேசத்தில் வறுமையை தீர்மானிக்கும் சமூக பொருளாதார காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல் என்பது ஆய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது.

**இலக்கிய மீளாய்வு**

வறுமை என்பது உலகளாவிய அளவில் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக அம்சங்களைக் கடந்த பரந்த பரிமாணமுடைய ஒரு பிரச்சினையாகும். அதன் பன்முகத் தன்மை காரணமாகவே பல்வேறு பிராந்தியங்களில் இதனைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையிலும் வறுமை தொடர்பான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் வருமான அடிப்படையிலான அளவீடுகள், வாழ்வாதாரச் சொத்துகளின் வரைபடம், பன்முக வறுமைக் குறியீடுகள் போன்ற பல்வேறு முறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2007 இல் Gunewardena மேற்கொண்ட ஆய்வில் 1985 முதல் 2002 வரையிலான தரவுகளைப் பயன்படுத்தி வறுமையின் நிலைப்பாடுகள் மற்றும் அதனைத் தீர்மானிக்கும் சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகள் குறித்து அலசப்பட்டுள்ளது. 2007 இல் Seetha Ranathunga மேற்கொண்ட ஆய்வில், குடும்ப வறுமையின் நுண்நிலைக் காரணிகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. கல்வி, வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் ஆகியவை வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன எனவும் கூறப்படுகிறது. 2008 இல் De Silva மேற்கொண்ட ஆய்வில், குடும்பத் தலைவரின் கல்வி, வருமானம், வேலைவாய்ப்பு ஆகியவை வறுமையைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

2009 இல் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு Vijayanathan மற்றும் Svaminathan ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில், வறுமையைத் தூண்டக்கூடிய காரணிகளாக போர், பெற்றோரின் அக்கறையின்மை, வருமான சமமின்மை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஆகியவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. 2010 இல் Romeshun மற்றும் Mayadunne ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நகர்ப்புற வறுமை குறைந்திருப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

2011 இல் Naranpanawa மற்றும் பலர் மேற்கொண்ட ஆய்வுகள் கிராமப்புற வறுமையின் வீழ்ச்சியை பதிவுசெய்கின்றன.

2016 இல் Madduma Bandara மேற்கொண்ட ஆய்வில் சமுர்த்தித் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள், அரசியல் தலையீடுகள் மற்றும் இலக்குத் தவறுதல்களை சுட்டிக்காட்டுகிறார். Kumara மற்றும் Gunewardena என்பவர்களால் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட "Disability and poverty in Sri Lanka: A household level analysis" எனும் ஆய்வு விசேட தேவையுள்ள நபர்களை உடைய குடும்பங்களில் நிதி மற்றும் பல்பரிமாண வறுமை என்பவற்றை மதிப்பிடுகிறது.

சமீப காலங்களில் ஆய்வுகளை மேற்கொண்ட Jayasinghe மற்றும் பலர் (2021), Ravindra மற்றும் பலர் (2022) ஆகியோர் வருமானம் மற்றும் பன்முக வறுமை மதிப்பீடுகளை ஒருங்கிணைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றனர். 2024 இல் Vidanage மற்றும் பலர் வறுமை ஒழிப்பில் ஆடைத்துறையின் பங்களிப்பை ஆய்வு செய்துள்ளனர். மொத்தமாக, இவ் ஆய்வுகள் நாட்டில் உள்ள நகர்ப்புற-கிராமப்புற இடைவெளியைக் குறைக்க சமூக அடிப்படையிலான தலையீடுகள் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன.

இலங்கையின் பல பகுதிகளில் வறுமை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெருகல் பிரதேசத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதார காரணிகள் தொடர்பாக நேரடியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. பல ஆய்வுகள் தேசிய அல்லது மாகாண மட்டத்தைக் குறிவைத்துள்ளன. எனவே, இந்த ஆய்வு வெருகல் பகுதியில் வறுமையின் தனித்துவமான காரணிகளை அடையாளம் காண்பதற்குப் பங்களிக்கின்றது.

## ஆய்வு முறையியல்

### ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டம் அதன் வளமான வரலாறு, பன்முக கலாசாரம் மற்றும் இயற்கை அழகுக்காகப் புகழ் பெற்றது. துறைமுக நகரமான திருகோணமலையை அதன் நிர்வாகத் தலைநகராக கொண்டுள்ளது. மாவட்டம் கிட்டத்தட்ட 2,727 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. மற்றும் கிழக்கே வங்காள விரிகுடாவை எல்லையாகக் கொண்டுள்ளது. திருகோணமலை மாவட்டமானது 11 பிரதேச செயலக பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. இவற்றில் திருகோணமலை நகரிலிருந்து சுமார் 70 கிலோமீற்றர் தூரத்தில் அமையப்பெற்றதே வெருகல் பிரதேசமாகும். இப்பிரதேசமானது வடக்கே மூதூர் பிரதேசத்தினையும், கிழக்கே வங்கக்கடலையும், தெற்கே வாகரைப் பிரதேசத்தையும் மேற்கே சேருநுவர பிரதேசத்தையும் கொண்டுள்ளது. வெருகல் பிரதேசமானது 10 கிராம சேவகர் பிரிவையும் 20 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது. இப்பிரதேசமானது 129.66 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது (**படம்** 1).

படம் 1: ஆய்வுப் பிரதேசம்




மூலம்: ஆய்வாளர், (2024)

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது அளவுசார், பண்புசார் நுட்பமுறைகளைப் பயன்படுத்துவதால் கலப்புமுறை ஆய்வாக அமைகிறது. அந்தவகையில், இந்த ஆய்வு முறையியல் பகுதியானது தரவு, தரவு சேகரிப்பு, தரவுப் பகுப்பாய்வு என்ற அடிப்படையில் நோக்கப்படுகிறது. ஆய்வுப் பிரதேசத்தில் 4732 குடும்பங்களில் 15913 பேர் காணப்படுகின்றனர். இதில் இப்பிரதேசத்தில் உள்ள 2220 அசுவெசும பயனாளிக் குடும்பங்கள் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். மொத்தக் குடித்தொகையில் நோக்கு மாதிரி எடுப்பு நுட்பமுறையினூடாக அசுவெசும திட்டப் பயனாளிக் குடும்பங்கள் இலக்குக் குடித்தொகையாகத் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிலிருந்து எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையினூடாக வினாக்கொத்திற்கான 70 மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன (அட்டவணை: 1).

பின்வரும் (Population Proportion) சூத்திரத்தைப் பயன்படுத்தி மாதிரிகளின் அளவு கணிப்பிடப்பட்டது. கணிப்பிடப்பட்ட மாதிரியின் மொத்த அளவை வைத்து ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் அசுவெசும திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதிரிகளின் அளவு பிரிக்கப்பட்டது.

குறைந்த (90%) துல்லியத்தினை வெளிப்படுத்துவதற்கான சமன்பாடு

$$N = \frac{z^2 \mathrm{P}(1-\mathrm{P})}{d^2} \quad \text{(Cochran, 1977)}$$

N = தேவையான மாதிரியளவு

$Z^2$ = நம்பிக்கையான பெறுமதி

P = மொத்தக் குடித்தொகையில் எதிர்பார்க்கப்படும் அளவு

D= எதிர்பார்க்கப்படும் வழு

செயன்முறை :

$$N = \frac{z^2 \text{P}(1-\text{P})}{d^2}$$

$$N = \frac{(1.645)^2 \times 0.5(0.5)}{(0.1)^2}$$

$$N = \frac{(1.645)^2 \times 0.025}{0.001}$$

$$N = 67.24$$

; N= 70 மாதிரிகள்

அட்டவணை 1 தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளின் அளவு

| கிராம சேவகர் பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை | மாதிரிகள் |
|---|---|---|
| ஈச்சிலம்பற்று | 99 | 3 |
| வெருகல் | 274 | 9 |
| பூநகர் | 218 | 7 |
| இலங்கைத்துறை | 152 | 5 |
| ஆனைத்தீவு | 236 | 7 |
| வெருகல் முகத்துவாரம் | 375 | 12 |
| இலங்கைதுறை முகத்துவாரம் | 275 | 9 |
| கறுக்காமுனை | 242 | 7 |
| பூமரத்தடிச்சேனை | 122 | 4 |
| உப்பூறல் | 227 | 7 |
| மொத்தம் | 2220 | 70 |

மூலம்: ஆய்வாளர், (2024)

இவ்வாய்வினை மேற்கொள்ள முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் 70 வினாக்கொத்து, 1 குவியக்குழுக் கலந்துரையாடல், நேரடி அவதானிப்பு ஆகிய முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வுக்காக ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் மூலமும் இணையவழி மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

வெருகல் பிரதேச செயலகத்தின் வருடாந்த புள்ளிவிபரக் கையேடுகள் மூலம் ஆய்வுப் பிரதேச குடித்தொகை சார்ந்த தகவல்கள் (சனத்தொகை, அடர்த்தி, கல்வி நிலை), நிலப்பயன்பாடு போன்றனவும் அசுவெசும, மாதாந்த உதவித்தொகை, முதியோர் கொடுப்பனவு, பால்மா முத்திரை, விசேட தேவையுடையவர்களுக்கான கொடுப்பனவு விவரங்கள், தனியார் நிறுவனங்களால் வழங்கப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்கள் மற்றும் வெருகல் பிரதேச சமுர்த்திக் கிளையிலிருந்து சமுர்த்திக் கொடுப்பனவு தொடர்பான தரவுகள் என்பனவும் சேகரிக்கப்பட்டன. வறுமை தொடர்பான உலக வங்கியின் அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து ஆவணத் தேடல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டன.

வினாக்கொத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகள் SPSS மென்பொருளில் உள்ளீடு செய்யப்பட்டு விவரணப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நேரடி அவதானிப்பு, குவியக்குழுக் கலந்துரையாடல் போன்றவற்றில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் மையக்கருத்துகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

### பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் 10 கிராம சேவகர் பிரிவுகளிலும் மொத்தமாக 70 வினாக்கொத்துகள், எளிய எழுமாற்று மாதிரி தெரிவு நுட்பமுறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாக்கொத்தில் உள்ள வினாக்களின் மூலம் பிரதேச மக்களின் கல்வி, தொழில், குடும்ப வருமானம், வீட்டின் தரம், குடிநீர் மின்சார வசதிகள், சுகாதார வசதிகள், வேலைவாய்ப்பு நிலை, வசதிகளைப் பெறுவதில் உள்ள சவால்கள் போன்ற தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவை இந்த ஆய்வின் முதலாவது நோக்கமான வெருகல் பிரதேசத்தின் வறுமையைத் தீர்மானிக்கும் முக்கிய சமூக பொருளாதார காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல் என்பதனை அடைவதாக காணப்படுகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட 70 மாதிரிகளில் 37 ஆண்களும் 33 பெண்களும் வினாக்கொத்தில் பதிலளித்தவர்களாக உள்ளனர். அதிக மாதிரி எண்ணிக்கையைக் கொண்ட கிராம சேவகர் பிரிவாக வெருகல முகத்துவாரம் கிராம சேவகர் பிரிவு காணப்படுவதோடு இங்கு 7 ஆண்களும் 5 பெண்களுமாக 12 பேர் வினாக்கொத்துக்குப் பதிலளித்து இருக்கின்றனர். குறைவான மாதிரியைக் கொண்ட ஈச்சிலம்பற்றுக் கிராம சேவகர் பிரிவில் ஓர் ஆணும் 2 பெண்களும் வினாக்கொத்திற்குப் பதிலளித்தவர்களாக உள்ளனர். மேலும், வயது அடிப்படையில் மாதிரிகளை நோக்கும்போது 18 தொடக்கம் 30 மற்றும் 31 தொடக்கம் 50 போன்ற வயதுக் கட்டமைப்புகளில் அதிகளவானோர் பதிலளித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது. இதனைப் **படம் 2** இல் காணமுடியும்.




படம் 2: ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் வயதுக் கட்டமைப்பு

மூலம்: ஆய்வாளர், (2024)

ஒருவருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, பொருளாதார தன்னிறைவை அடைய உதவும் முக்கிய காரணியாக கல்வி காணப்படுகிறது. கல்வி மூலம் திறன்களை வளர்த்துக் கொண்டு, வேலைவாய்ப்புகளைப் பெற்று, தன்னைத் தானே மேம்படுத்திக் கொள்ள முடியும். இது மட்டுமின்றி, சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கலாம். எனவே, வறுமையைத் தீர்மானிக்கும் காரணிகளில் கல்வியும் முக்கியமானதாக காணப்படுகிறது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் இடைநிலைக் கல்வியைக் கற்றவர்கள் 41.4 வீதமாகவும், முறையான கல்வியைக் கற்காதவர்கள் 28.6 வீதமாகவும், ஆரம்பக் கல்வி கற்றவர்கள் 22.9 வீதமாகவும் காணப்படுகின்றனர். அதேவேளை உயர்தரக் கல்வியை கற்றவர்கள் குறைவான (7.1) வீதத்திலேயே காணப்படுகின்றனர். அதேவேளை உயர்நிலை அல்லது பட்டப் படிப்பினை மேற்கொண்டவர்கள் இதில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு பெரும்பான்மையானோர் குறைந்தபட்சம் இரண்டாம் நிலைக் கல்வியையாவது முடித்திருப்பதை ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. இருப்பினும், முறையான கல்வி இல்லாதவர்கள் ஒப்பீட்டளவில் அதிக வீதமாக இருக்கின்றனர். சமூக பொருளாதார வாய்ப்புகளைப் பாதிக்கக்கூடிய கல்வி ஏற்ற தாழ்வுகளை இது எடுத்துக்காட்டுகின்றது. உயர்நிலைக் கல்வியை அடையும் தனிநபர்களின் வீதம் குறைவாக இருப்பது இம்மக்களின் வறுமை நிலையைக் காட்டுகிறது.

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள குடும்பத் தலைவர்களிடையே கல்வி நிலை ஏற்றத் தாழ்வாகக் காணப்படுகின்றது. பெரும்பான்மையானவர்கள் (32.9%) அடிப்படை அல்லது இடைநிலைக் கல்வியை மட்டுமே கற்றுள்ளனர். 27.1 வீதமானவர்கள் முறையான கல்வி இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு இடைநிலைக் கல்வி சற்று மேம்பட்டதாகக் காணப்படுகின்றது குறிப்பாக, 37.1 வீதமான குடும்பத் தலைவர்கள் இடைநிலைக் கல்வியினைப் பயின்றவர்களாக இருக்கின்றனர். அதேபோல் உயர் கல்வியை அடைவது இம்மக்களுக்குப் பாரிய சவாலாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, 2.9 வீதமானோர் மாத்திரமே உயர்தரக் கல்வியினைப் பயின்ற குடும்பத் தலைவர்களாக காணப்படுகின்றனர். மேலும், இங்கு பட்டப் படிப்பினை எந்தவொரு குடும்பத் தலைவரும் பெறவில்லை என்பது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாக உள்ளது (படம் 3).




படம் 3: ஆய்வுப் பிரதேச குடும்பத் தலைவர்களின் கல்வி நிலை

மூலம்: ஆய்வாளர், (2024)

கல்வி வசதிகளைப் பெறுவதில் உங்களுக்குள்ள சவால்கள் என்ன என்ற கேள்விக்கு, 54.3 வீதமானவர்கள் நிதிக் கட்டுப்பாடுகள் என்ற பதிலைக் கூறியவர்களாக உள்ளனர். இது பொருளாதார நெருக்கடிகள் கல்விக்குக் குறிப்பிடத்தக்க தடையாக இருப்பதைக் குறிக்கிறது. இந்த முடிவு ஆய்வுடன் ஒத்துப்போகிறது. குறிப்பாக, பின்தங்கிய பகுதிகளில் வறுமை பெரும்பாலும் கல்விக்கான வாய்ப்பைக் கட்டுப்படுத்துகிறது. 22.9 வீதமான நபர்களால் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது பொதுவான சவாலாக, கல்வி வசதிகள் இல்லாதது என்ற பதில் உள்ளது. இது மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான உட்கட்டமைப்பு மற்றும் வளங்களின் பற்றாக்குறையைப் பிரதிபலிக்கிறது. 10 வீதமான நபர்கள் உள்நாட்டுப் போரின் தாக்கத்தைக் குறிப்பிட்டுள்ளனர். இது இடப்பெயர்வு, வசதிகளை அழித்தல் மற்றும் மாணவர்கள் மற்றும் குடும்பங்கள் மீதான உளவியல் தாக்கங்கள் மூலம் கல்வியை சீர்குலைத்திருக்கலாம்.

பதிலளித்தவர்களில் 11.4 வீதமானவர்கள் கல்வியைப் பெறுவது சவாலானதல்ல என்று சுட்டிக்காட்டினர். இது ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள அனுபவங்களில் மாறுபாட்டைக் குறிக்கிறது. இறுதியாக, பாடசாலையின் தூரம் என்பதனை 1.4 வீதமானவர்கள் மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். இது ஒரு பரவலான பிரச்சினையாக இல்லாவிட்டாலும் அது சில நபர்களுக்குச் சவாலாக உள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் 5 இடைநிலைப் பிரிவுப் பாடசாலைகளும், 2 உயர்தரப் பாடசாலைகளும் மாத்திரமே காணப்பட்டன. தற்சமயம் 3 இடைநிலைப் பாடசாலைகளும், 4 உயர்தரப் பாடசாலைகளும் காணப்படுகின்றன. எனவே, இதுவும் கல்விக்கான வாய்ப்புகளைக் குறைக்கின்றது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் (56%) நிரந்தர வீடுகளில் வசிக்கும் அதேவேளை அடுத்தபடியாக அரை நிரந்தர அல்லது தற்காலிக கட்டமைப்பு வீடுகளில் பெரும்பான்மையானவர்கள் (44%) வாழ்கின்றார்கள் என்றும் ஆய்வு முடிவுகள்

குறிப்பிடுகின்றன. பிரதேசத்தைப் பொறுத்தவரையில் வீட்டின் தரநிலை சீரற்றதாகக் காணப்படுகிறது. இதற்குச் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிக்கும் குறைந்த வளம் மற்றும் குறைந்த உட்கட்டமைப்பு போன்றவை காரணமாக அமைகின்றன (**படம் 4**).




படம் 4 : ஆய்வுப் பிரதேசத்தின் வீட்டு நிலை

மூலம்: ஆய்வாளர், (2024)

வீட்டு நிலைமைகளைப் பாதிக்கும் முதன்மையான காரணியாக வறுமை இருக்கின்றது. வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் இம்மக்கள் நிரந்தர வீடுகளைக் கட்டுவதையோ அல்லது பராமரிப்பதையோ தடுக்கலாம். கூடுதலாக, அரசாங்க வீட்டுத் திட்டங்கள், வேலை வாய்ப்புகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஆகியவை தற்காலிக அல்லது அரை நிரந்தர வீடுகளை நம்பியிருப்பதை மேலும் மோசமாக்கும்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கான வசதிகளைப் பெற்றிருக்கின்றனர். அதேநேரம் 38 வீதமானவர்கள் தங்களுக்கான சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் வசதி இல்லாமல் காணப்படுகின்றனர். சுத்தமான குடிநீரைப் பெறுவது என்பது ஓர் அடிப்படை மனித உரிமை ஆகும். இருப்பினும், அனேகமான குடும்பங்கள் இதனை இழக்கின்றனர். இது வறுமையுடன் பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகிறது. வறுமையில் வாழும் சமூகங்கள் சுத்தமான நீர் உட்பட அடிப்படை வளங்களை அடைவதில் தடைகளை எதிர்நோக்குகின்றனர். இந்தத் தடைகளில் போதிய உட்கட்டமைப்பு, அரசின் புறக்கணிப்பு, அல்லது நீர் சுத்திகரிப்பு வசதிகள் குறைவாக உள்ள அல்லது இல்லாத கிராமப்புற, ஒடுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்வது போன்ற புவியியல் காரணிகளாகவும் இருக்கின்றன. வறுமையானது குடிநீர் நெருக்கடியை அதிகரிக்க செய்கின்றது. ஏனெனில், குறைந்த வருமானம் உள்ளவர்கள் பெரும்பாலும் போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட அமைப்புகளில் இருந்து நீரினை வாங்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர். மேலும், சுத்தமான குடிநீர் இல்லாததால் வறுமையின் சுழற்சியும் நீடித்து

வருகிறது. அசுத்தமான நீர் ஆதாரங்கள் நீரினால் பரவும் நோய்களுக்கு வழிவகுக்கும். இது சுகாதார செலவுகளையும் அதிகரிப்பதோடு உற்பத்தித் திறனைக் குறைத்து அல்லது மட்டுப்படுத்தி நிதி நெருக்கடிகள் மோசமடைவதற்குக் காரணமாகின்றது.

உங்களது வீட்டில் மின்சார வசதி உள்ளதா என்று வினவப்பட்ட கேள்விக்கு 80 வீதமானோர் ஆம் என்றும், 20 வீதமானவர்கள் மின்சார வசதிகள் இல்லை எனவும் பதிலளித்து இருக்கின்றனர். மின்சார வசதி என்பது சமூக பொருளாதார வளர்ச்சியின் ஓர் அடிப்படை அங்கமாகும். இது கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார உற்பத்தித் திறனை நேரடியாகப் பாதிக்கின்றது. அதிகமானவர்களிடம் மின்சார வசதிகள் இருந்தபோதும் மின்சார வசதிகள் இல்லாத மீதமுள்ள மக்கள் வறுமை மற்றும் அமைப்பு ரீதியான சமத்துவமின்மையுடன் வாழ்வதனை எடுத்துக்காட்டுகின்றனர். பல சந்தர்ப்பங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி குறைவாக உள்ள மற்றும் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் மின்சார வசதிகள் பற்றாக்குறையாக உள்ளது.

மின்சாரம் இல்லாதது வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்துவதோடு நவீன தொழில்நுட்பங்களை அடைவதையும் பயன்படுத்துவதையும் கட்டுப்படுத்துகின்றது. அதேபோல் கல்வி அல்லது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் திறனையும் குறைக்கின்றது. இது தொடர்பாக நேர்காணல்களில், *''எங்கட பிள்ளையள் படிக்கிறதுக்கு கரண்ட் இல்ல அதால பெரிசா படிப்பு வரல்ல'', ''கரண்ட் இல்லாம பிள்ளையள் இரவைல படிக்க கஷ்டப்படுறாங்க''* என மின்சார வசதியின்மையைச் சுட்டிக்காட்டினர்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில், ''நீங்கள் எவ்வளவு தூரம் சென்று சுகாதார வசதிகளைப் பெறுகின்றீர்கள்'' என்ற கேள்விக்கு 11.4 வீதமானோர் ஒரு கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்திலும், 58.6 வீதமானோர் 1 தொடக்கம் 5 கிலோமீற்றர் தூரத்திலும், அதேபோல் 28.6 வீதமானோர் 6 முதல் 10 கிலோமீற்றர் தொலைவிலும், 1.4 வீதமானோர் 10 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்திலும் சென்று சுகாதார வசதிகளைப் பெறுவதாகப் பதிலளித்துள்ளனர். இதன் முடிவுகளாக 11.4 வீதமானவர்கள் மாத்திரமே இலகுவில் சுகாதார வசதிகளை அடைவதற்கான தூரத்தில் வசிக்கின்றனர். ஏனைய 88.6 வீதமானவர்கள் தொலைவில் சென்று சுகாதார வசதிகளை அடைய கூடியவர்களாக இருக்கின்றனர் என்பன பெறப்படுகின்றன.

தொலைதூரமானது சரியான நேரத்தில், போதுமான சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்க தடைகளை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக சிறந்த போக்குவரத்து அல்லது பயணங்களை மேற்கொள்வதற்குப் போதியளவு நிதி வசதிகள் இல்லாத மக்களுக்கு இது பெருஞ் சவாலாக அமைகின்றது. இவ் வசதிகள் இல்லாமையானது சுகாதார ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறது. ஏனெனில், தாமதமான சிகிச்சை மற்றும் வரையறுக்கப்பட்ட சுகாதார பராமரிப்பு என்பன மோசமான சுகாதார விளைவுகளுக்கு வழிவகுக்கிறது. மேலும், இந்தச் சவால்கள் வறுமையின் சுழற்சிக்குப் பங்களிக்கின்றன. ஏனெனில், மோசமான ஆரோக்கியம் (ஆரோக்கியமின்மை) உற்பத்தித் திறனைக் குறைப்பதோடு, சுகாதார செலவுகளையும் அதிகரிக்கிறது. எனவே, சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான

தூரமானது இவ் ஆய்வுப் பிரதேசத்தில் வறுமையினைத் தீர்மானிக்கின்ற ஒரு காரணியாகக் காணப்படுகிறது.

“உங்களின் தொழில் என்ன” என்ற வினாவினை அடிப்படையாகக் கொண்ட முடிவுகளின்படி பதிலளித்தவர்களில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர் (48.6%) வேலையில்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தகைய உயர்ந்த வேலையின்மை வீதம் வறுமைக்கான முக்கிய காரணமாக அமைகின்றது. ஏனெனில், நிலையான வருமானம் இல்லாததால் தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதையும் அவர்களின் சமூக பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளில் முதலீடு செய்வதையும் தடுக்கிறது.

மேலும், 22.9 வீதமானவர்கள் விவசாயத்தினை நம்பியுள்ளனர். இது பருவகாலத் தொழில் என்பதனால் சுற்றுச்சூழல் மற்றும் சந்தை ஏற்ற இறக்கங்களால் பாதிக்கப்படக்கூடியது. இதேபோல் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் 4.3 வீதமானவர்களாகக் காணப்படுகின்றனர். பருவகால மாற்றங்கள், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுக்கான அணுகல்கள் போன்ற காரணங்களினால் இவர்கள் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதேபோல் 18.6 வீதமானவர்கள் கூலிவேலை செய்பவர்களாகக் காணப்படுகின்றனர் (**படம் 5**). இவர்கள் அன்றாடம் தொழில் செய்பவர்களாக இருக்கின்ற காரணத்தினால் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு இல்லாதவர்களாக வாழ்கின்றனர். எனவே, வேலையின்மை மற்றும் முதல்நிலைப் பொருளாதார நடவடிக்கைகளான விவசாயம், மீன்பிடி, அன்றாட கூலித்தொழில் ஆகிய நடவடிக்கைகளில் தங்கி இருப்பது இம்மக்களின் வறுமை நிலையைத் தீர்மானிக்கின்றது.




படம் 5 ஆய்வுக்கு உட்பட்டவர்களின் தொழில் நிலை

மூலம்: ஆய்வாளர், (2024)

குடும்பத் தலைவர்களின் தொழில்நிலைகள் தொடர்பாக நோக்கும்பொழுது அதிகமானவர்கள் வேலையில்லாமல் வாழ்கின்றனர். குறிப்பாக, இவர்களில் அதிகளவு பெண்

தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே எந்தவொரு தொழிலும் செய்யாதவர்களாக உள்ளனர். 31.4 வீதமானவர்கள் கூலித்தொழில் செய்பவர்களாகவும், 28.6 வீதமானவர்கள் விவசாயத்தினை மேற்கொள்பவர்களாகவும், 10 வீதமானவர்கள் மீன்பிடியினையும், தனியார் துறையில் வேலை செய்பவர்கள் 1.4 வீதமானவர்களாகவும் காணப்படுகின்றனர். சுற்றுச்சூழல் நிலைமைகள், சந்தை ஏற்ற இறக்கங்கள், நவீன விவசாய கருவிகள் இல்லாமை போன்ற காரணங்களினால் விவசாயத்தில் போதியளவு வருமானம் பெறமுடியாமல் இருப்பதும், காலநிலை மாற்ற சவால்கள், மீன்வளம் குறைவடைதல், வரையறுக்கப்பட்ட சந்தை வாய்ப்புகள் ஆகியவற்றால் மீன்பிடியில் கணிசமான வருமானம் குறைவதும், குறைந்த வேலையும் நிலையற்ற வருமானமும் கூலித்தொழிலைப் பாதிக்கின்ற காரணத்தினாலும் இங்குள்ள குடும்பத் தலைவர்கள் போதியளவு வருமானத்தை ஈட்டுவதில் சவால்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக, ஒரு குடும்பத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் அடிப்படைத் தேவைகளுக்கான வசதிகளை அடைதல், தொலைநோக்கு அபிவிருத்திகள் போன்றன குடும்பத் தலைவரின் வருமானத்துடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. எனவே, ஆய்வுப் பிரதேச குடும்பத் தலைவர்களின் நிலையற்ற அல்லது குறைந்த தொழில்நிலை வறுமையைத் தீர்மானிக்கின்ற காரணமாக அமைகின்றது.

குடும்பத்தில் முதன்மைத் தொழில் செய்பவரின் தொழில் நிலை தொடர்பாகப் பெறப்பட்ட தரவுகளின்படி 27.1 வீதமானவர்கள் வேலை இல்லாதவர்களாகவும், 65.7 வீதமானவர்கள் பகுதிநேர வேலை செய்பவர்களாகவும், 4.3 வீதமானவர்கள் முழுநேர வேலை செய்பவர்களாகவும், 2.9 வீதமானவர்கள் சுயதொழில் செய்பவர்களாகவும் உள்ளனர் (**படம் 6**). ஆய்வு முடிவுகளின்படி குடும்பத்தின் முதன்மைத் தொழிலாளர்கள் அல்லது குடும்பத் தலைவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர். அநேகமானோர் பகுதிநேர வேலை செய்கின்றனர் என்ற முடிவானது, பரவலான குறைந்த வேலை வாய்ப்பைக் குறிக்கின்றது. இங்கு தனி நபர்கள் விரும்பியதைவிட குறைவான மணிநேரம் அல்லது தங்கள் குடும்பத்தினை நடத்திச் செல்வதற்குப் போதுமான வருமானத்தை வழங்காத வேலைகளில் ஈடுபடுகின்றனர் எனவும், மேலும் பலர் வேலையில்லாமல் இருப்பதானது இந்தக் குடும்பங்களுக்கு நிலையான வருமான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதனால் இது வறுமை அபாயத்தினை மேலும் அதிகரிக்கிறது. பகுதிநேர மற்றும் வேலையின்மை ஆகியவை பிரதான தொழில் செய்பவர்களிடம் பெரும்பாலும் வறுமையுடன் தொடர்புடைய கல்வி வசதிகள் இல்லாமை, வேலை வாய்ப்புகள் மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் போன்ற காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன என்ற முடிவிற்கு வரலாம்.

குடும்பத்தின் மாத வருமானம் தொடர்பாக பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 34.3 வீதமான குடும்பங்கள் 10000 ரூபாவிற்கும் குறைவான வருமானத்தையும், 2.9 வீதமான குடும்பங்கள் 10000 முதல் 15000 வரையும், பெரும்பான்மையாக 55.7 வீதமான குடும்பங்கள் 15,000 முதல் 20000 வரையும், 5.7 வீதமான குடும்பங்கள் 20000 முதல் 25000 வரையும், 1.4 வீதமான குடும்பங்கள் 25000க்கு அதிகமான வருமானத்தையும் பெறுகின்றன.




படம் 6: குடும்பத்தில் பிரதான தொழிலாளரின் தொழிலின் தன்மை

மூலம்:-ஆய்வாளர், (2024)

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். மூன்றில் ஒரு பங்கு குடும்பங்கள் மாதத்திற்குப் பத்தாயிரத்திற்கும் குறைவாகவே வருமானத்தினைப் பெறுகின்றன. இது வறுமை அல்லது வறுமைக்கு அருகில் உள்ள நிலைமைகளைக் குறிக்கின்றது. மேலும், பெரும்பான்மையானவர்கள் 15,000 முதல் 20000 வரையிலான வருமானத்தைப் பெறுபவர்களாக இருக்கின்றனர் (**படம்** 7). இது தொகையில் பெரிதாகக் காணப்பட்டாலும் தற்காலத்தில் நிலவும் வாழ்க்கைச் செலவுகளுடன் ஒப்பிடும்போது குறைவான வருமானமாகவே பார்க்கப்படுகிறது. இந்த வருமானக் குறைவிற்கு வேலையின்மை, வாழ்வாதார விவசாயம் அல்லது தினக்கூலி போன்ற துறைகளில் மக்கள் அதிகம் தங்கி இருப்பதும் கல்வி மற்றும் திறன் விருத்தி என்பன குறைவாகக் கிடைப்பதும் போன்றவற்றைக் காரணங்களாகச் சொல்லலாம். பத்தாயிரத்திற்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்கள் உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கு போராடிக்கொண்டிருக்கின்றன. மேலும், இது வறுமையை நிலைநிறுத்துவதாகவும் அமைகிறது.

குடும்பத்தில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவில், 28.6 வீதமான குடும்பங்களில் வேலை செய்பவர்கள் எவரும் இல்லை எனவும், 65.7 வீதமான குடும்பங்கள் ஒருவரின் வருமானத்தை மாத்திரமே நம்பி உள்ளனர் எனவும், 2.7 வீதமான குடும்பங்களில் இருவர் வேலை செய்கின்றார்கள் என்றும், ஆய்வு செய்யப்பட்ட அனைத்துக் குடும்பங்களிலும் இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் வேலை செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது.




படம் 7: ஆய்வுப் பிரதேச குடும்பங்களின் மாத வருமானம்

மூலம்: ஆய்வாளர், (2024)

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், விசேட தேவை உடையவர்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், விபத்துகளில் சிக்கி அல்லது நாட்பட்ட நோய்களினால் உடலளவில் பாதிப்புகளை எதிர்கொண்ட குடும்பத் தலைவர்களை உடைய குடும்பங்களில் பிள்ளைகள் சிறியவர்களாகவும், திருமணம் முடித்து குடும்பத்தைவிட்டு விலகியவர்களாகவும் இருப்பதனால் எவரும் வேலை செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் இந்தக் குடும்பங்கள் நிலையான வருமான ஆதாரங்கள் இல்லாமையினால் மிகவும் வறுமையினை எதிர்நோக்குகின்றன.

இப்பகுதியில் குறைவான வேலை வாய்ப்புகள் நிலவுவதாலும் இவர்கள் குறைந்த முதலீட்டு வளங்களைக் கொண்டிருப்பதாலும் பல குடும்பங்களில் ஒருவர் மாத்திரம் வேலை செய்கின்றார். இதனால் முழுக் குடும்பமும் ஒருவரின் வருமானத்தையே நம்பி இருக்கும் நிலைமை உருவாகின்றது. இதனால் அவர்மீது கடுமையான பொருளாதார அழுத்தங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட அந்த நபர் வேலைசெய்யும் நேரத்தைக் குறைத்தாலோ அல்லது வேலைவாய்ப்பினை இழந்தாலோ முழுக் குடும்பமும் பொருளாதார அழுத்தங்களைச் சந்திக்க வேண்டி நிலை ஏற்படுகின்றது. மேலும், இத்தகைய குடும்பங்கள் தரமான கல்வி, சுகாதார சேவைகள் போன்றவற்றினைப் பெற்றுக்கெள்ளும் அளவிற்குப் பொருளாதாரப் பின்புலம் குறைந்தவர்களாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக பார்க்கப்படுகின்றது.

இங்கு மக்களின் விவசாய காணிகளின் அளவினை ஆராயும்போது 45.7 வீதமானவர்கள் ஒரு ஏக்கருக்கும் குறைவான விவசாயக் காணியும், 44.3 வீதமானவர்கள் 1 தொடக்கம் 3 ஏக்கர் வரையிலான காணிகளும், 8.6 வீதமானவர்கள் 3 தொடக்கம் 5 ஏக்கர் வரையிலும், 1.4 வீதமானவர்கள் ஐந்து ஏக்கருக்கும் அதிகமாகமான விவசாயக் காணிகளையும் வைத்திருக்கின்றனர் என்பதனை முடிவாக பெற முடிந்தது (**படம் 8**). கிட்டத்தட்ட 90 வீதமான மக்கள் மூன்று ஏக்கர் அல்லது அதற்கும் குறைவான விவசாய நிலத்தைக் கொண்டிருப்பதும் அதேபோல் அரைவாசிக் குடும்பங்கள் ஒரு ஏக்கருக்கும் குறைவான நிலங்களைக்

கொண்டிருப்பதாலும் இவை வறுமைக்கான முக்கிய காரணியாக பார்க்கப்படுகிறது. குறைவான நிலங்களை வைத்திருப்பதால் பெரிய அளவிலான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்பதோடு விவசாய உற்பத்திகள் மற்றும் வருமானத்தையும் அதிகளவில் பெறமுடியாமல் வாழ்கின்றனர். குறைவான நிலம் கொண்ட விவசாயிகளுக்கு நவீன விவசாய உத்திகள், உரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்வதற்குத் தேவையான அளவு பொருளாதாரம் இல்லாமையால் உற்பத்தி மற்றும் வருமானம் குறைகின்றது.

இப்பகுதியில் குறைந்த நிலங்களைக் கொண்டவர்கள் பெரும்பாலும் வாழ்வாதார விவசாயத்தையே மேற்கொள்கின்றனர். அதாவது, அவர்களின் விவசாய உற்பத்தியானது வருமானத்தை ஈட்டுவதற்குப் பதிலாக தங்களது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், குறைந்த நிலங்களினால் அவர்கள் எதிர்பார்த்த உற்பத்தியினைப் பெறமுடியாமல் இருக்கின்றனர். இதனால் உணவுக்கான செலவுகள் அதிகமாக காணப்படுகின்றன. மேலும், ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மகாவலி கங்கையின் கிளையாறு பாய்கின்ற காரணத்தினால் அதிக மழைப்பொழிவுக் காலங்களில் விவசாய நிலங்கள் வெள்ளத்தினால் அழிக்கப்படுவதாலும், கோடை காலங்களில் வீட்டுத்தோட்டம், மேட்டுநிலப் பயிர்ச்செய்கை போன்ற விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாலும் எதிர்பார்த்த உற்பத்திகள் கிடைப்பதில்லை என்பதும் இங்கு குறிப்பிட்டு சொல்லக் கூடியதாக உள்ளது.




படம் 8: ஆய்வுப் பிரதேச மக்களின் விவசாய காணியின் அளவு

மூலம்: ஆய்வாளர், (2024)

ஆய்வுப் பிரதேசத்தில் 45.7 வீதமான குடும்பங்கள் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருப்பவர்களாகவும், 54.3 வீதமானவர்கள் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் வாழ்கின்றனர். குறிப்பாக, சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட அல்லது பின்தங்கிய மக்கள் கடன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளை அறியாதவர்களாகவும், பிறரால் கடன்கள் வழங்குவதற்கு

மறுக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர். குடும்பச் செலவுகள், கல்விக்கான தேவைகள், வியாபார அல்லது தொழில் நடவடிக்கைகள் போன்றவற்றுக்கும், அவசர சுகாதார பராமரிப்புச் செலவுகளை நடத்துவதற்கும் நிதிநிலைகள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் கடன் வசதிகளைப் பெற்று இவற்றை நிறைவேற்றும் தன்மைகள் பல சமூகங்களில் சாதாரணமானதாகக் காணப்படும் விடயமாகவுள்ளன. ஆனால், இவ்வாறான நிலைமைகளில் கடன்களைப் பெறுவதற்கான வசதிகள் இல்லாத மக்கள் மேற்கூறிய வாய்ப்புகளை அடைவதில் தடைகளை எதிர்நோக்குகின்றனர். இதனை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் நேர்காணலின் போது, *"எங்கள நம்பி யாரும் கடன் தரமாட்டாங்க" "கடன் எடுத்தா கட்ட ஏலாது"* என ஆய்வுப் பிரதேச மக்களால் அடிக்கடி கூறப்பட்டன.

ஆய்வுப் பிரதேசத்தின் வேலைவாய்ப்பினைப் பற்றி ஆராய்ந்தபோது 73 வீதமானவர்கள் வேலைவாய்ப்புக் குறைவாக உள்ளது என்றும், 27 வீதமானவர்கள் வேலைவாய்ப்பு சராசரியாக உள்ளது என்றும் பதிலளித்திருக்கின்றனர் (படம் 9). இந்தக் கருத்துக்களை வைத்து ஆராயும்போது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சி, தொழில்துறை வளர்ச்சியின்மை, மற்றும் தொழில் உருவாக்கத்தில் போதுமான முதலீடுகள் இன்மை போன்ற அடிப்படைச் சிக்கல்களைப் பிரதிபலிக்கின்றன. இம்மக்கள் வேலைவாய்ப்பின்மையினால் தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யவோ, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவோ நிலையான வருமான ஆதாரங்களைப் பெறமுடியாததால் வறுமையினை எதிர்நோக்க வேண்டியவர்களாக வாழ்கின்றனர். வளர்ச்சி அடையாத உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான போதியளவு வாய்ப்புகள் இல்லாமை போன்ற காரணிகள் வேலைவாய்ப்பினைக் கண்டறிவதற்கு அல்லது உருவாக்கும் திறனைக் கட்டுப்படுத்துகின்றது.




படம் 9: ஆய்வுப் பிரதேச வேலைவாய்ப்பு நிலை

மூலம்: ஆய்வாளர், (2024)

நீங்கள் ஏதேனும் சமூக மட்ட அமைப்புகளில் உறுப்பினராக இருக்கிறீர்களா என்று வினவப்பட்ட கேள்விக்கு 32 வீதமானவர்கள் ஆம் எனவும், 68 வீதமானவர்கள் இல்லை எனவும் பதிலளித்திருக்கின்றனர். குறிப்பாக, சமூக மட்ட அமைப்புகளில் இருப்பதினால் அவர்களிடமிருந்து புதிய அறிவு மற்றும் திறன்கள் என்பன பரிமாற்றப்படுவதோடு முதலீடுகள், கடன் பெறக்கூடிய வசதிகள் போன்றனவும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. அதுமட்டுமின்றி, திறன்களை வளர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளை வழங்கி சமூக, பொருளாதார சவால்களை எதிர்கொள்ள கூட்டு நடவடிக்கைகளையும் வாய்ப்புகளையும் பெறுவதில் தடைகளை எதிர்கொள்கின்றனர். இவ்வாறு சமூக மட்ட அமைப்புகளில் பங்கேற்காமல் இருப்பதனால் மேலும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகி பொருளாதார அல்லது சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.




படம் 10 ஆய்வுப் பிரதேச மக்கள் சமூக அமைப்புக்களில் பங்கேற்கும் நிலை

மூலம்: ஆய்வாளர், (2024)

முடிவாக இவ்வாய்வுப் பிரதேசத்தில் 30.9 வீத வறுமை வேலையின்மையால் ஏற்படுகின்றது. இது வேலைவாய்ப்புகள் இல்லாமை மற்றும் மக்கள் வேலையில் ஈடுபடாமை போன்ற காரணங்களால் உருவாகின்றது. இதனால் குடும்ப வருமானம் குறைவடைவதோடு அடிப்படைத் தேவைகளுக்கான வாய்ப்புகள் கட்டுப்படுத்துகின்றன. 26.8 வீத வறுமைக்குக் கல்வியின்மை காரணமாக அமைகின்றது. தரமான கல்விக்கான வாய்ப்புகள் இல்லாமையானது தனிநபர்கள் நல்ல வருமானம் பெறும் வேலைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கின்றது (படம் 11). 17.3 வீத வறுமைக்கு மின்சாரம், நீர், தொடர்பாடல், வீதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் மோசமாக உள்ளமை காரணமாக அமைகின்றது. போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமையானது வணிக நடவடிக்கைகள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவற்றினை அடைவதில் சவாலை ஏற்படுத்துகின்றது. வறுமையில் சமூக சமத்துவமின்மை 13.6 வீத பங்களிப்பினை வழங்குகிறது. சமூக சமத்துவமின்மையானது ஒதுக்கப்பட்ட மக்களுக்கான வளங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகலைக்

கட்டுப்படுத்துவதன் மூலம் வறுமையை நிலை நிறுத்துகிறது. இதனால் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளில் சமமான பங்கேற்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்துகிறது. அதேபோல் வறுமையில் கடன் பெறும் வசதிகள் இல்லாமை 11.4 வீதத்தில் பங்களிப்பினை ஏற்படுத்துகின்றது. இந்த மக்கள் சிறிய வணிக நடவடிக்கைகளில் முதலீடு செய்வதிலும், அவர்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதிலும் கடன் வசதிகள் இல்லாமை குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றது.




படம் 11 ஆய்வுப் பிரதேசத்தின் வறுமையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகள்

மூலம்: ஆய்வாளர், 2024

**முடிவுரை**

இவ்வாய்வு, திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேசத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக-பொருளாதார காரணிகளை அடையாளம் காணும் நோக்கத்தில் நடத்தப்பட்டது. பத்துக் கிராம சேவகர் பிரிவுகளில் 70 மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு, மக்கள் வாழ்க்கைத் தரம், கல்வி, வேலைவாய்ப்பு, குடிநீர், மின்சாரம், சுகாதார வசதிகள், மற்றும் உட்கட்டமைப்புகள் ஆகியன வறுமையைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சங்களாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. பெரும்பான்மையான மக்கள் குறைந்த வருமானத்துடன், நிலையான வேலை வாய்ப்பின்றி வாழ்வதை அடையாளம் காணமுடிகிறது. குறிப்பாக, குறைந்த கல்வி, பொருளாதார ஆதாரங்களின் பற்றாக்குறை, குறைவான நிலப்பரப்பு, மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகளின் குறைபாடு, கடன் பெறும் வசதிகள் இல்லாமை ஆகியவை இப்பிரதேச மக்களின் வறுமைக்கு முதன்மைக் காரணிகளாக அமைகின்றன. மேலும், சிறிய நிலப்பரப்பில் வாழ்வாதார விவசாயத்தில் ஈடுபடும் மக்கள், பருவநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். பாடசாலை வசதிகளின் போதாமை, சுகாதார சேவைகளுக்குச் செல்லும் தொலைவு, வேலைவாய்ப்புகளின் பற்றாக்குறை, மற்றும் சமூக மட்ட அமைப்புகளில் பங்கேற்பு இல்லாமை ஆகியவை மக்களின்

முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை மேலும் கட்டுப்படுத்துகின்றன. 30.9% வறுமை வேலைவாய்ப்பு இல்லாமையின் விளைவாகும் என்பதுடன், கல்விக்கான வாய்ப்பு இல்லாமை 26.8% வறுமைக்குப் பங்களிக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே, வெருகல் பிரதேசத்தில் வறுமையைக் குறைக்கும் முயற்சிகள் பலதரப்பட்ட தலையீடுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். முக்கியமாக கல்வி வசதிகளை மேம்படுத்தல், ஆடைத் தொழிற்சாலை, சேமிப்புச் சங்கங்கள், பயிற்செய்கைகளை ஊக்கப்படுத்தல், பிரதேசத்திற்கு ஏற்ற வாழ்வாதாரத் திட்டங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம், தரமான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், மின்சார வசதிகள், கடன் ஆதரவுகள், மற்றும் சமூக கூட்டுறவுகள் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டும். இது வெருகல் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வறுமையை நீக்குவதற்குமான ஒரு நிலையான மற்றும் விரிவான அணுகுமுறையை உருவாக்குவதற்கும் அவசியமானதாக அமைகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


Brian Ames, Ward Brown, Shanta Devarajan, & Alejandro Izquierdo. (2001). *Macroeconomic Policy and Poverty Reduction*.

https://www.imf.org/external/pubs/ft/exrp/macropol/eng/

De Silva, I. (2008). Micro-level determinants of poverty reduction in Sri Lanka: A multivariate approach. *International Journal of Social Economics, 35*(3), 140–158. https://doi.org/10.1108/03068290810847833

Government of New Brunswick, C. (2010, October 26). *What is poverty? - Economic and Social Inclusion Corporation*.

https://www2.gnb.ca/content/gnb/en/departments/esic/overview/content/what_is_poverty.html

Jayasinghe, M., Selvanathan, E. A., & Selvanathan, S. (2021). Energy poverty in Sri Lanka. *Energy Economics*, *101*, 105450. https://doi.org/10.1016/j.eneco.2021.105450

Kumara, P. H. T., & Gunewardena, D. N. B. (2017). Disability and poverty in Sri Lanka: A household level analysis. *Sri Lanka Journal of Social Sciences*, *40*(1), 53. https://doi.org/10.4038/sljss.v40i1.7501

Madduma Bandara, N. D. (2016). Causes and Consequences of Poverty Targeting Failures: The Case of the Samurdhi Program in Sri Lanka. *Asian Politics & Policy*, *8*(2), 281–303. https://doi.org/10.1111/aspp.12251

Naranpanawa, A., Bandara, J. S., & Selvanathan, S. (2011). Trade and poverty nexus: A case study of Sri Lanka. *Journal of Policy Modeling*, *33*(2), 328–346. https://doi.org/10.1016/j.jpolmod.2010.08.8

Ravindra Deyshappriya, N. P. (2022). Economic Crisis, Inflation and Poverty in Sri Lanka. *South Asia@LSE*. https://blogs.lse.ac.uk/southasia/2023/01/02/economic-crisis-inflation-and-poverty-in-sri-lanka/

Romeshun, K., & Mayadunne, G. (2011). *Appropriateness of the Sri Lanka poverty line for measuring urban poverty: The case of Colombo*.

Seetha Ranathunga, John Gibson. (2007). Determinants of Household Poverty in the Rural Sector in Sri Lanka: 1990-2010. Economics. Vol. 3, No. 3, 2014, pp. 43-49. doi: 10.11648/j.eco.20140303.11

Vidanage, T. N., Weragoda, L. C., Karunarathna, M., & Athukorala, W. (2024). Achieving Sustainable Development Goals: The Impact of the Apparel and Textile Industry on the Eradication of Poverty in Sri Lanka. In G. M. Ranathunga (Ed.), *Textiles of Sri Lanka: Sustainable Innovations and Practices* (pp. 117–141). Springer Nature. https://doi.org/10.1007/978-981-97-0569-6_5

Vijayanathan, T., & Svaminathan, R. (2009). A study on the factors contributing to poverty in the Jaffna region. Cintanai, 8(1), pp. 17–30

அமிர்தலிங்கம்,கோ. (2008). இலங்கைப் பொருளாதாரம், யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், கொழும்பு. பக்.139-165.

# அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

**Nafeel Naafiya**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
naafiya97@gmail.com

**V. Pathmanandakumar**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள அறுகம்பேவானது உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற அலைச்சறுக்கல் தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. அண்மைக்காலத்தில் அலைச்சறுக்கலில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வந்தாலும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. இந்த ஆய்வானது அறுகம்பேவில் அலைச்சறுக்கலில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளங்காணும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வினை மேற்கொள்வதற்கான மாதிரிநுட்ப முறையாக எளிய எழுமாற்று மாதிரி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு 81 மாதிரிகள் எடுக்கப்பட்டன. அத்துடன் நேர்காணல்கள் அலைச்சறுக்களில் ஈடுபடும் பெண்கள் மற்றும் அலைச்சறுக்கல் பாடசாலைகளை நடத்தக்கூடிய ஆசிரியர்களிடம் மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS எனும் மென்பொருளின் ஊடாக விவரணப் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவை ஒழுங்கு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், நேர்காணல் மேற்கொண்டு அவற்றினை ஒலிப்பதிவு செய்த பின்னர் மீள எழுதி உபபிரிவுகளாகப் பிரித்துத் தரவுகளை ஒழுங்கமைத்துப் பகுபாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது அலைச்சறுக்களில் பங்கேற்கும் பெண்கள் கலாசார எதிர்ப்பு, உடல் மற்றும் உளவியல் பாதுகாப்புப் பற்றாக்குறை, பயிற்சிகளுக்கான நிலையான வசதிகள் இல்லாமை, பாலினப் பாகுபாடு போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதை உறுதிசெய்கின்றது. இதன் அடிப்படையில் பெண் அலைச்சறுக்கர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கத் தேவையான கொள்கைகள், சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகள், பாதுகாப்பான சுற்றுச்சூழல்களின் உருவாக்கம் ஆகியன அவசியம் என இவ்வாய்வானது பரிந்துரைக்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** *அறுகம்பே, பெண் அலைச்சறுக்கர்கள், அலைச்சறுக்கல் சுற்றுலா, பாலின சவால்கள், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி.*

## அறிமுகம்

அலைச்சறுக்கல் சுற்றுலா உலகளாவிய ரீதியில் வேகமாக வளர்ந்து வரும் சாகசமான விளையாட்டுத் துறையாகும். இதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் இயற்கை அழகு மிகுந்த கடற்கரைகள், அலைகள் மற்றும் புத்துணர்ச்சியான வாழ்க்கை முறைகளை அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். ஆஸ்திரேலியா, ஹவாய், தென் ஆப்பிரிக்கா போன்ற உலகளாவிய புகழ் பெற்ற இடங்களைப் போலவே இலங்கையின் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள

அறுகம்பேவும் தனித்துவமான அலைகளினால் அலைச்சறுக்கலுக்கு ஏற்ற இடமாக விளங்குகிறது. 1960களில் ஆரம்பித்த அறுகம்பேவின் அலைச்சறுக்கல் பண்பாடு தற்போது உலகளாவிய சுற்றுலாப் பண்பாடுகளின் ஓர் அங்கமாக மாறியுள்ளது. சுற்றுலா மற்றும் உள்ளூர் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பல்வேறு கட்டமைப்புகள் இங்கு உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஏப்ரல் முதல் அக்டோபர் வரை அலைச்சறுக்கர்களின் வருகை அதிகரிக்கிறது. 2011 இல் 100,000 சுற்றுலாப் பயணிகள் அறுகம்பேவிற்கு வருகை தந்துள்ளதுடன், 2030க்குள் 329,000 பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது (UNWTO, 2013). இந்த விளையாட்டு ஆரம்பத்தில் ஆண்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தபோதிலும் சமீப காலமாக பெண்களின் பங்கேற்பும் அதிகரித்து வருகிறது. எனினும், அறுகம்பே போன்ற பகுதிகளில் உள்ளூர்ப் பெண்கள் அலைச்சறுக்கலில் பங்கேற்க பல்வேறு சமூக, கலாசார மற்றும் பாதுகாப்பு சார்ந்த சவால்களை எதிர்கொள்கின்றனர். சமூக மரபுகள், உடை அணிவது தொடர்பான எதிர்ப்புகள் மற்றும் குடும்பத்தினரின் எதிர்ப்புகள் ஆகியவை பெண்களின் பங்கேற்பைக் கட்டுப்படுத்துகின்றன. மேலும், பெண்களுக்கு ஏற்ற வசதிகள் குறைவு, பாதுகாப்புப் பிரச்சினைகள், மற்றும் பாலினப் பாகுபாடுகள் போன்றவை அவர்களின் அனுபவங்களைப் பாதிக்கின்றன. உலகளாவிய ரீதியில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்தாலும், இலங்கையின் தென்கிழக்கில் உள்ள அறுகம்பேவில் பெண்கள் அலைச்சறுக்கலில் பங்கேற்கும் அனுபவங்களைப் பற்றிய ஆய்வுகள் மிக மிகக் குறைவாக உள்ளன. உள்ளூர் கலாசாரம், பாதுகாப்பு, சமூக எதிர்ப்பு, பாலினப் பாகுபாடு போன்றவை பெண்கள் இந்த விளையாட்டில் ஈடுபடுவதற்கான மிகப்பெரிய தடைகளாக இருக்கின்றன.

இந்த ஆய்வின் பிரதான நோக்கமானது அறுகம்பேவில் அலைச்சறுக்கலில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரதான சவால்களையும் அவை அவர்களின் பங்கேற்பை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் ஆராய்வதுடன், இச்சவால்களைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை முன்மொழிதலுமாகும். இவ் ஆய்வானது, பாலின சமத்துவத்தை மேம்படுத்தும், சுற்றுலா வாய்ப்புகளை விரிவுபடுத்தும், உள்ளூர் சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும் ஒரு பங்களிப்பாக அமையும். மேலும், இவ்வாய்வு உள்ளூர் கலாசாரச் சூழலில் பெண்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்படுகின்றனர், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எந்தளவுக்கு அவர்களது பங்கேற்பையும் நல்வாழ்வையும் பாதிக்கின்றன என்பதற்கான ஆழமான புரிதலை அளிக்க முயல்கின்றது. இது போன்ற ஆய்வுகள் இலங்கை போன்ற நாடுகளில் பாலின சமத்துவம், பெண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் கொள்கைகள் உருவாக வழிவகுக்கும் என்பதுடன் உலகளாவிய கல்வி, சுற்றுலா ஆராய்ச்சித் துறைக்கும் முக்கிய பங்களிப்பாக அமையும்.

**இலக்கிய மீளாய்வு**

பெண்கள் அலைச்சறுக்கல் சுற்றுலாவில் பங்கேற்பது தொடர்பான ஆய்வுகள் சமீப காலங்களில் உலகளாவிய அளவில் அதிகரித்துள்ளன. இவ்வாய்வுகள் அலைச்சறுக்கல் ஒரு ஆணாதிக்க கலாசாரத்தின் கீழ் வளர்ந்திருப்பதை, அதில் பெண்கள் சந்திக்கும் பாலினம் சார்ந்த தடைகளை, சமூக எதிர்ப்புகள் மற்றும் கலாசார எதிர்ப்புகளை முக்கியமாக முன்னிறுத்துகின்றன. Booth (1995) தனது ஆய்வில் ஹவாயில் தோன்றிய அலைச்சறுக்கல்

கலாசாரம், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகளாவிய பொழுதுபோக்கு விளையாட்டாக பரவிய பின்புலத்தை விளக்குகிறார். இதில் மத்திய தர வர்க்கத்தின் ஒழுக்கம்சார்ந்த பார்வைகள் மற்றும் பொதுவான கலாசாரத்தின் தாக்கங்கள் இந்த விளையாட்டின் சுதந்திர உணர்வைக் கட்டுப்படுத்தியுள்ளன என்கிறார்.

Noorbaksu (2008) கலிபோர்னியாவிலுள்ள பெண் அலைச்சறுக்கர்களின் வாழ்க்கை அனுபவங்களை நேர்காணல்களின் மூலம் ஆய்வு செய்துள்ளார். இதில் பெண்கள் தங்கள் முந்தைய அனுபவங்கள், உற்சாகம் மற்றும் சுயத்தை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக அலைச்சறுக்கலை ஏற்கின்றனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல Laura et al, (2011) மற்றும் Laura and Erp (2012) ஆகியோரின் ஆய்வுகள் பெண்கள் சந்திக்கும் சமூக, தனிநபர் மற்றும் நடைமுறைத் தடைகள் குறித்து விளக்குகின்றன. குறிப்பாக, பாதுகாப்புப் பற்றாக்குறை, பொருளாதாரத் தடைகள் மற்றும் பாகுபாடான அணுகுமுறைகள் பெண்களின் பங்கேற்பைக் கட்டுப்படுத்துகின்றன என வலியுறுத்துகின்றன. Hill (2009) தனது ஆய்வில் அலைச்சறுக்கல் சுற்றுச்சூழலுக்கு நட்பான நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டாலும் பொருள்மயமாக்கலால் அது சுற்றுச்சூழலுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் அளவிற்கு மாறியுள்ளது எனக் குறிப்பிடுகிறார். இது சுற்றுலா வளர்ச்சியின் இரு முனைகளையும் விவாதிக்கிறது. ஒரு புறம் அதன் திறன்கள், மறுபுறம் அதனால் உருவாகும் சவால்கள்.

Rebecca (2013), Georgp (2014) மற்றும் Fendt (2015) ஆகியோரின் ஆய்வுகளில் பெண்கள் மாற்று உடல் செயற்பாடுகளில் குறிப்பாக அலைச்சறுக்களில் பங்கேற்கும் சூழ்நிலைகளை நிகழ்வியல் மற்றும் பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்கின்றனர். அவர்களின் ஆய்வுகள் பெண்கள் சமூக ஆதிக்கத்திற்கு எதிராகத் தங்களது இடத்தை உருவாக்கும் முயற்சிகளை, அனுபவங்கள் மற்றும் பேச்சு உத்திகள் மூலமாகச் சுட்டிக்காட்டுகின்றன.

Wheaton (2013) தனது ஆய்வுகளில், விளையாட்டுக் கலாசாரங்களில் பெண்கள் சந்திக்கும் புறக்கணிப்பு மற்றும் சுய அடையாளம் குறித்த சிக்கல்களை விவாதிக்கிறார். அவரது ஆய்வுகள், சாகச விளையாட்டுகளில் பெண்களின் இடம் குறித்துத் தொடர்ச்சியான கலாசார மாற்றங்களையும் தோன்றும் எதிர்ப்புகளையும் விரிவாக பதிவுசெய்கின்றன. Evers (2010) ஆஸ்திரேலியாவின் கடற்கரைச் சூழலில் பெண்கள் அலைச்சறுக்கலில் பங்கேற்கும் பண்பாட்டு மற்றும் புவியியல் தடுக்குகளை எடுத்துரைக்கிறார். அவர் குறிப்பிடுவது போல, வெள்ளை வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களுக்கே பொதுவாக வாய்ப்புகள் வழங்கப்படுவதால், பிற சமூகக் குழுக்களுக்கு வெளிப்படையாக அமைந்த சவால்கள் தீவிரமாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் இலங்கையின் தென்கிழக்குக் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள அறுகம்பே உலகளாவிய அலைச்சறுக்கல் தளங்களில் முக்கிய இடம் பெற்றிருந்தாலும் இங்கு உள்ளூர்ப் பெண்கள் பங்கேற்கும் நிலை குறைவாகவே உள்ளது. Fazeeha (2015) அறுகம்பே சுற்றுலாத் துறையின் வளர்ச்சி, சமூகப் பொருளாதார தாக்கங்கள் மற்றும் அதன் சவால்கள் குறித்து ஆராய்ந்துள்ளார். ஆனால், அந்த ஆய்வுகள் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை மையமாகக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இலக்கியப் பின்னணியில்




படம் 3.1 ஆய்வுப் பிரதேசம்
(மூலம் : ஆய்வாளர், 2024)

இருந்து தெளிவாகப் புரிவது பெண்கள் அலைச்சறுக்கலில் பங்கேற்கும் சிக்கல்கள் காலநிலை, சமூகவியல் மற்றும் கலாசாரப் பிணைப்புகளில் உள்ளடக்கி உள்ளன என்பதாகும். அத்தோடு இலங்கைச் சூழலில் அது தொடர்பான ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. எனவே, அறுகம்பேவின் இடவியல் மற்றும் சமூகச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவது அந்த இடைவெளியை நிரப்பும்.

**ஆய்வுப் பிரதேச அறிமுகம்**

ஆய்வுப் பிரதேசமான அறுகம்பே பகுதி கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ளது. இது நிலப்பரப்பின் அடிப்படையில் இரண்டாவது பெரிய மாகாணமாகும். பரப்பளவு 9361 km கொண்டது. அம்பாறை மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 4415 km ஆகும். இதில் நிலப்பரப்பு 4222 $km^2$. நீர்ப்பரப்பு 193km ஆகும். இவ்வாய்வுப் பிரதேசம் அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 15% பரப்பைக் கொண்டுள்ளது. அதாவது, அம்பாறை மாவட்டத்தின் மொத்தப் பரப்பான 4415 km பரப்பில் 290,41 km பரப்பைப் பொத்துவில் பிரதேசம் கொண்டுள்ளது. இதன்படி பொத்துவில் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பு 265.67km ஆகவும் நீர்ப்பரப்பு 24.74km ஆகவும் காணப்படுகின்றது (பிரதேச செயலகம் பொத்துவில், 2020). தென்கிழக்குக் கரையோரத்தில் பொத்துவில் பிரதேசத்தில் உள்ள ஒரு சிறிய பகுதி அறுகம்பே ஆகும். அறுகம்பே வட அகலாங்கு 6.8386° கிழக்கு நெட்டாங்கு 81.8363° வரை உள்ள பிரதேசமாகும். பொத்துவிலிலிருந்து சுமார் 4 km தொலைவில் வடக்கே அமைந்துள்ளது (The Rough Guide to Srilanka, 2020).

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் என்பது ஆய்வினை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் திட்டமிடப்பட்ட முறையாகும். அந்தவகையில், அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்ந்து அவற்றிற்கான பரிந்துரைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட இவ்வாய்வானது, கலப்பு ஆய்வு முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதாகும். அறுகம்பேவிற்கு வருகை தரும் பெண் அலைச்சறுக்கர்கள் இவ்வாய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆய்வினை மேற்கொள்வதற்கான மாதிரிநுட்ப முறையாக எளிய எழுமாற்று மாதிரி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்குப் பின்வரும் சூத்திரத்தை பயன்படுத்தி $N = \frac{z^2 P(1-P)}{d^2}$ (Cochran, 1977) 81 மாதிரிகள்

எடுக்கப்பட்டன. அந்த வகையில், அறுகம்பேவிக்கு வருகை தந்த பெண் அலைச்சறுக்கர்கள் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆய்வுக்காக அதிகமாக முதலாம் நிலைத் தரவு சேகரிக்கப்பட்டதோடு தேவைக்கு ஏற்ப இரண்டாம் நிலைத் தரவும் சேகரிக்கப்பட்டது. அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய தரவுகள் அங்கு வருகை தந்த பெண் அலைச்சறுக்கர்களிடம் 81 வினாக்கொத்துகள் வழங்கப்பட்டு பெறப்பட்டன. நேர்காணலானது அலைச்சறுக்களில் ஈடுபடும் பெண்கள் மற்றும் அலைச்சறுக்கல் பாடசாலைகளை நடத்தக்கூடிய ஆசிரியர்களிடம் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்விற்கான இரண்டாம் நிலைத் தரவுகளாக அறிக்கைகள், ஆய்வுகள், சஞ்சிகைகள் பயன்படுத்தப்பட்டன. ஆய்விற்குத் தேவையான இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக Google தரவுத் தேடலினைப் பயன்படுத்தி “Surf Tourism, Surf tourism in srilanka, Female surfer, Surf and female, Type of tourism in srilanka” ஆகிய சொற்களைப் பயன்படுத்தி தேடுதல் மேற்கொண்டு பெறப்பட்ட தரவுகள் ஆய்வாளரால் மீள் பரிசீலனை செய்யப்பட்டு, அவற்றுள் ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய ஆவணம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டது. வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS எனும் மென்பொருளின் ஊடாக விவரணப் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவை ஒழுங்கு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் நேர்காணல் மேற்கொண்டு அவற்றினை ஒலிப்பதிவு செய்த பின்னர் மீள எழுதி உபபிரிவுகளாக பிரித்துத் தரவுகளை ஒழுங்கமைத்து பிரவுண் மற்றும் கிளார்க் (Braun & Clarke, 2006) என்பவர்களால் முன்மொழியப்பட்ட கருப்பொருள் பகுப்பாய்வு (Thematic Analysis) முறைப்படி அத்தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

அறுகம்பேவில் அலைச்சறுக்களில் ஈடுபடும் பெண்களின் வயதுக் கட்டமைப்பை நோக்கும்போது 18 வயதிற்குட்பட்டவர்கள் 12.3 சதவீதத்தில் வருகை தந்ததோடு 18-24 வயதிற்குட்பட்டவர்கள் 29.6 சதவீதத்தில் வருகை தந்துள்ளார்கள். அத்துடன் 24-34 வயதிற்குட்பட்டவர்கள் 29.6 சதவீதத்திலும், 35-44 வயதிற்குட்பட்டவர்கள் 23.5 சதவீதத்திலும், 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் 12.1 சதவீதத்திலும் வருகை தந்துள்ளனர். இந்த வரைபடத்தினை அவதானிக்கும்போது 25-34 வயதுக்குட்பட்ட பெண்கள் அலைச்சறுக்களுக்காக அதிகமாக அறுகம்பேவிற்கு வருகை தந்துள்ளனர். 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் குறைவாகவே வருகை தந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குறித்த ஆய்வுக்குட்பட்டவர்களின் நாடுகள் பற்றிய விபரத்தை படம் 1 எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில், அறுகம்பேவிற்கு வருகை தரக்கூடிய பெண் அலைச்சறுக்கர்களில் அதிகமானோர் வெளிநாட்டவர்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆய்வுப் பிரதேசத்திற்கு வருகை தந்த பெண் அலைச்சறுக்கர்களில் 35.8 சதவீதத்தினை அவர்கள் கொண்டுள்ளனர். அத்துடன் 30.9 சதவீதத்தில் அமெரிக்கர்கள் வருகை தந்தனர். எமது அந்நிய நாடான இந்தியாவிலிருந்து 9 சதவீதமான பெண் அலைச்சறுக்கர்கள் வருகை தந்ததோடு எமது நாடான இலங்கையிலிருந்து மிகக் குறைவான பெண் அலைச்சறுக்கர்களே அறுகம்பேவிற்கு

வருகை தந்திருந்தனர். இவர்கள் மொத்த சதவீதத்தில் 2.5 இனைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.




படம் 1: அறுகம்பேவிற்கு வருகை தரும் பெண் அலைச்சறுக்கர்களின் நாடுகள்

(மூலம்: ஆய்வாளர் , 2024)

அலைச்சறுக்கலில் ஈடுபட்ட காலம் குறித்துப் பார்க்கும்போது ஓர் ஆண்டிற்குள் ஈடுபட்டவர்கள் 29.6 சதவீதமாகவும், ஒன்று முதல் மூன்று ஆண்டுகளுக்குள் ஈடுபட்டவர்கள் 53.1 சதவீதமாகவும், நான்கு முதல் ஆறு ஆண்டுகளுக்குள் ஈடுபட்டவர்கள் 4.9 சதவீதமாகவும் மற்றும் ஏழு முதல் பத்து ஆண்டுகளுக்குள் ஈடுபட்டவர்கள் 12.3 சதவீதமாகவும் காணப்படுகின்றனர். வினாக்கொத்தின் அடிப்படையில் ஒன்று முதல் மூன்று ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஈடுபட்டவர்களே அதிகமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.




படம் 2: அலைச்சறுக்களில் ஈடுபட்ட வருடங்கள்

(மூலம்: ஆய்வாளர் , 2024)

படம் 3 இல் காட்டப்பட்டுள்ளவாறு அறுகம்பேவிற்கு வருகை தரும் பெண் அலைச்சறுக்கர்களின் வருகையினை எடுத்துக்கொண்டால், அவர்கள் மாதாந்த அடிப்படையிலேயே அதிகமாக வருகை தரக்கூடியவர்களாக இருக்கின்றனர். இதற்கான காரணம் அலைச்சறுக்கல் விளையாட்டானது குறிப்பிட்ட காலங்களிலேயே இடம்பெறக்கூடியதாகும். அறுகம்பேவில் குறிப்பாக, ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையான காலங்களே அலைச்சறுக்கலுக்குரிய காலங்களாக காணப்படுகின்றன.

அறுகம்பேவிற்கு வருகை தந்த பெண் சுற்றுலாப் பயணிகளில் அதிகமானோர் முதல் முறையாகவே வந்துள்ளனர். இவர்கள் 58 சதவீதமானவர்களாகக் காணப்படுகின்றனர். எப்போதாவது வருகை தந்தவர்களாக 38.3 சதவீதமானவர்களும் வழமையாக வருகை தருபவர்களாக 3.7 சதவீதமானவர்களும் காணப்படுகின்றனர். இதனையே வரைபடம் 4.4 ஆனது குறித்து நிற்கின்றது.




படம் 3 : அலைச்சறுக்களில் ஈடுபடக்கூடிய தடவைகள்

(மூலம்: ஆய்வாளர், 2024)

பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஆய்வுப் பிரதேசத்திற்கு வருகை தரும் பெண்களில் அதிகமானோர் 25 முதல் 34 வயதிற்குட்பட்டவர்களாக காணப்படுகின்றனர். ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த பெண்கள் அதிகமாக வருகை தருவதானது குறிப்பிடத்தக்க விடயமாகும். அறுகம்பேவிற்கு வருகை தரும் பெண் அலைசறுக்கர்களின் அனுபவத்தைப் பொறுத்த வகையில் மேம்பட்ட நிலையினைக் கொண்டவர்களாக காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக இவர்களுள் அதிகமானோர் ஒன்று தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் அலைச்சறுக்கள் அனுபவத்தைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் இவர்களில் அதிகமானோர் மாதாந்த அடிப்படையில் அலைச்சறுக்களில் ஈடுபடுவதோடு ஆய்வுப் பிரதேசத்திற்கு முதன் முறையாக வருகை தந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

**அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள்**

அறுகம்பே சுற்றுலாப் பிரதேசமானது அலைச்சறுக்களுக்கு உலகளாவிய ரீதியில் பெயர் பெற்ற இடமாக காணப்படுகின்றது. அண்மையில் இப்பிரதேசத்திற்கு வருகை தரக்கூடிய பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் அவர்கள் அதிகளவான சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

பெண்களுக்கான அலைச்சறுக்கல் நிலைமைகளின் தரம் குறித்துப் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது 38 சதவீதமானோர் மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும், 42 சதவீதமானோர் குறைவாகக் காணப்படுவதாகவும், 10 சதவீதமானோர் நடுத்தர மற்றும் சிறந்ததாக காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதனையே படம் 4 தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.




படம் 4: அறுகம்பேவில் அலைச்சறுக்கள் நிலமைகளின் தரம்

(மூலம் : ஆய்வாளர் , 2024)

அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்களின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து படம் 5 தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில், ஆய்வுக்காகத் தேர்வுசெய்யப்பட்ட பெண் அலைச்சறுக்கர்களில் 49.4 சதவீதத்தினர் மிகவும் பாதுகாப்பற்றது எனக் குறிப்பிட்டுள்ளனர். 35.8 சதவீதத்தினர் பாதுகாப்பற்றது எனக் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் 8.6 சதவீதத்தினர் நடுநிலையானது எனத் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்ததோடு 3.7 மற்றும் 2.5 சதவீதத்தினர் முறையே பாதுகாப்பானது, மிகவும் பாதுகாப்பானது எனக் குறிப்பிட்டுள்ளனர்.




படம் 5 : அறுகம்பேவில் அலைச்சறுக்கர்களின் பாதுகாப்பு நிலமை

(மூலம் : ஆய்வாளர், 2024)

பாதுகாப்பு மிகவும் குறைவாகக் காணப்படுவதனால் பெண் அலைச்சறுக்கர்கள் அலைச்சறுக்களில் ஈடுபடும்போது துன்புறுத்தல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையினை எதிர்கொள்ள நேரிடும். வாய்மொழி ரீதியாகவோ அல்லது உடலியல் ரீதியாகவோ துன்புறுத்தலை அனுபவிப்பதாக குறிப்பிடுகின்றனர். மேலும், பாதுகாப்பான பாதைகள், தங்குமிடங்கள் மற்றும் வசதிகள் இல்லாததால் பெண்கள் தனியாக பயணம் செய்யும்போது இத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றனர்.

பெண் அலைச்சறுக்கர்கள் மீதான உள்ளூர் சமூகத்தின் அணுகுமுறை தொடர்பாக படம் 6 எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில், பெறப்பட்ட வினாக்கொத்துக்களுக்கு இணங்க உள்ளூர் சமூகத்தின் அணுகுமுறை மிகவும் குறைவாக உள்ளது என்பதனை 28.4 சதவீதத்தினர் குறிப்பிட்டுள்ளனர். ஆதரவற்றது என்பதனை 60.5 சதவீதத்தினர் குறிப்பிட்டுள்ளனர். மேலும், நடுநிலையானது என்ற கருத்தை 8.6 சதவீதத்தினர் குறிப்பிட்டதோடு, 1.2 சதவீதமானோர் ஆதரவானது மற்றும் மிகவும் ஆதரவானது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர்.




படம் 6 : பெண் அலைச்சறுக்கர்கள் மீதான உள்ளூர் சமூகத்தின் அணுகுமுறை

(மூலம் : ஆய்வாளர், 2024)

அறுகம்பேவிற்கு வருகை தரக்கூடிய பெண் அலைச்சறுக்கர்கள் மீதான உள்ளூர் சமூகத்தின் ஆதரவற்ற மனப்பான்மையானது பெரிதும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அத்தகைய சவால்களைப் பின்வருமாறு எடுத்துக்காட்ட முடியும். அந்தவகையில், கலாசார சவால்களை எடுத்துக்கொண்டால், உள்ளூர் சமூகத்தின் மத்தியில் ஆண்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட இந்த அலைச்சறுக்களானது பெண்களுக்குரிய விளையாட்டாகக் கருதப்படுவதில்லை. மேலும், இவ்விளையாட்டில் ஆண்களுக்காக வழங்கப்படுகின்ற நிதி உதவி மற்றும் உபகரணங்களின் சலுகைகள் என்பன சமமாக பெண்களுக்கு ஒரு போதும் வழங்கப்படுவதில்லை. அது மாத்திரம் இன்றி, அலைச்சறுக்களில் ஈடுபடக்கூடிய பெண்கள் சமூகத்தின் உறுப்பினர்களிடம் இருந்து அடிக்கடி எதிர்மறையான கருத்துக்களை எதிர்கொள்கின்றனர். இவர்கள் தங்களுடைய விளையாட்டில் பங்கேற்பதைப் பொருத்தமற்றதாக அல்லது கலாசார விதிமுறைகளுக்கு முரணாக கருதுவது இதற்கான காரணமாக அமைகின்றது. மேலும், பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட ஆதரவு வழங்கப்படுவது இவர்களைத் தனிமை நிலைக்குத் தள்ளுகின்றது. இதன் விளைவால் பெண்கள் அலைச்சறுக்களில் ஈடுபடுவதற்கான நம்பிக்கை குறைவாகவே காணப்படுகின்றது.

அலைச்சறுக்களில் ஈடுபடுவதற்கான உபகரணம் மற்றும் வசதிகள் தொடர்பான நிலையைப் படம் 7 எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில், வசதிகள் மிகக் குறைவாகக் காணப்படுவதாக 45.7 சதவீதத்தினர் குறிப்பிடுகின்றனர். மேலும், குறைவான வசதி காணப்படுவதாக 38 சதவீதத்தினர் குறிப்பிடுகின்றனர். அத்துடன் நடுநிலையான வசதி என 13.6 சதவீதத்தினரும் வசதியானது என 2.5 சதவீதத்தினரும் குறிப்பிடுவதானது குறிப்பிடத்தக்க விடயமாகும்.




படம் 7: அறுகம்பேவில் அலைச்சறுக்கல் உபகரணம் மற்றும் வசதிகள் (மூலம் : ஆய்வாளர், 2024)

அறுகம்பேவில் பெண்களுக்கான அலைச்சறுக்கல் உபகரணங்கள் மற்றும் வசதிகள் குறைவாக இருப்பது அவர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது. அதாவது, பெண்களில் அலைச்சறுக்களில் ஈடுபடுபவர்கள் தங்களின் தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்ட அலைச்சறுக்கல் உபகரணங்களான சிறிய பலகைகள், நீச்சல் உடைகள் என்பவற்றைப்

பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். பொருத்தமான வசதிகள் இல்லாததே பெண்களுக்குப் பெரும் சவால்களை உருவாக்கி அலைச்சறுக்கல் விளையாட்டில் ஈடுபாட்டைக் குறைக்கின்றது. அத்துடன் நிதிக்கட்டுப்பாடுகள் காரணமாக உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வது கடினமாக உள்ளது. உதாரணமாக அறும்பேவிற்கு அருகில் உள்ள வாடகைக் கடைகள் சுற்றுலாப் பயணிகளுக்காக சேவை செய்வதை மையமாகக் கொண்டுள்ளது. அவர்கள் உள்ளூர் அலைச்சறுக்கர்களிடமும் கூடுதலான விலையில் விற்கக்கூடியவர்களாக காணப்படுகின்றனர்.

அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பாக வினாவப்பட்டபோது அவ்வாறு எந்தவிதமான அச்சுறுத்தல் நிலைமைகளும் இல்லை என 1.2 சதவீதமான பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். 4.9 சதவீதமானவர்கள் மிகவும் குறைவாக பாதுகாப்பு அச்சுறுத்தல் இடம்பெறுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். சில நேரங்களில் ஏற்படுவதாக 4.9 சதவீதமானவர் குறிப்பிட்டுள்ளனர். அடிக்கடி இடம்பெறுவதாக 28.4 சதவீதமானோரும் எப்போதுமே இடம்பெறுவதாக 60.5 சதவீதமானோரும் குறிப்பிட்டுள்ளனர். இதனையே அட்டவணை 4.1 எடுத்துகாட்டுகின்றது.

அட்டவணை 1: அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்களின் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல் நிலமைகள்

| பாதுகாப்பு நிலமைகள் | சதவீதம் |
|---|---|
| இல்லை | 1.2 |
| அரிது | 4.9 |
| சில நேரங்களில் | 4.9 |
| அடிக்கடி | 28.4 |
| எப்போதும் | 60.5 |

(மூலம் : ஆய்வாளர், 2024)

அறுகம்பேவில் பெண்கள் அலைச்சறுக்களில் ஈடுபடும்போது மிக அதிகமாக பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். பொதுவாக பெண்களுக்கு எதிராக பல பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இடம்பெறுவதனால் அலைச்சறுக்களில் அவர்கள் ஈடுபடுவதற்கான பங்கேற்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஒரு புகழ்பெற்ற சுற்றுலாத் தளமான அறுகம்பேவில் தொடர்ச்சியாக பெண்கள் மீதான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகமாக இருப்பதன் காரணத்தால் அதன் பெயரிற்குக் களங்கத்தை ஏற்படுத்தி எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் குறைக்க கூடியதாக இருக்கும்.

அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்களுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றது என்பதனை 8 சதவீதமானவர்களும் சில வேளைகளில் ஓரளவு வசதிகள் காணப்படுவதாக 62 சதவீதத்தினரும் சாதாரண வசதியுடன் காணப்படுகின்றது என்பதனை 14 சதவீதத்தினரும் மிகவும் வசதியாக காணப்படுகின்றது என்பதனை 16 சதவீதத்தினரும் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையில் அலைச்சறுக்களுக்குப் பெயர் பெற்ற இடமாகக் காணப்படும் அறுகம்பேவானது பெண்களுக்காகப் பல்வேறு தங்குமிடங்கள் மற்றும் உணவகங்களைக் கொண்டுள்ளது. மேலும், இப்பகுதியில் காணப்படும் விருந்தினர் இல்லங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் ஓய்வு விடுதிகள் என்பன தனிப்பெண் பயணிகளுக்கு என வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தங்கும் இடங்களில் பெரும்பாலும் வசதியான அறைகள், கடற்கரைச் சூழல், யோகா பயிற்சி நிலையங்கள், அலைச்சறுக்கள் பள்ளிகள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு வழங்கும் கடைகள் என்பனவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. இது பெண் அலைச்சறுக்கர்களுக்கான தனிப்பட்ட வசதிகளைக் கொண்டு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆய்வுப் பிரதேசத்திற்கு வருகை தரும் பெண் அலைச்சறுக்கர்கள் பாரம்பரிய விதிமுறைகள், பாலின ஏற்றத்தாழ்வுகள் மற்றும் உள்ளூர் கலாசார அணுகுமுறைகள் போன்றவற்றினால் வடிவமைக்கப்பட்ட பல சமூக கலாசார சவால்களை எதிர்கொள்கின்றனர். அதாவது, பெண் அலைச்சறுக்கர்கள் அவர்களின் உடை மற்றும் நடத்தை என்பவை உள்ளூர் கலாசாரத்துக்கு முரண்பட்டதாகவே காணப்படுகின்றன. மேலும், உள்ளூர் அலைச்சறுக்கர்கள் தங்களது அலைச்சறுக்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் அலைச்சறுக்கல் தொடர்பான வழிகாட்டுதலைப் பெறுவதற்காக அதிக பணத்தினைச் செலவிடுகின்றனர்.

அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் உலாவும்போது எதிர்நோக்கம் பாகுபாட்டுச் சவால்கள் பற்றி குறிப்பிட்ட வேளையில் எப்பொழுதும் பாகுபாட்டுச் சவால்களை எதிர் நோக்குவதாக 61.7 சதவீதமானோர் தெரிவித்துள்ளனர். மேலும், அடிக்கடி பாகுபாட்டுச் சவால்கள் இடம்பெறுவதாக 18.5 சதவீதத்தினர் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் சில நேரங்களில் பாகுபாட்டுச் சவால்களை எதிர்கொள்வதாக 13.6 சதவீதமானவர்கள் குறிப்பிட்டதோடு 6.2 சதவீதமானோர் இத்தகைய பாகுபாட்டுப் பிரச்சினை அரிதாகவே இடம்பெறுகின்றது எனக் குறிப்பிட்டனர்.

அட்டவணை 2: அறுகம்பேவில் உலாவும்போது எதிர்நோக்கும் பாகுபாட்டுப் பிரச்சினை

| **பாகுபாட்டு நிலமைகள்** | **சதவீதம்** |
|---|---|
| அரிதாக | 6.2 |
| சில நேரங்களில் | 13.6 |
| அடிக்கடி | 18.5 |
| எப்போதும் | 61.7 |

(மூலம் : ஆய்வாரள், 2024)

## பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அவர்களின் பங்கேற்பைப் பாதிக்கும் விதம்

அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அவர்களின் மகிழ்ச்சியைப் பாதிக்கும் விதத்தினைப் படம் 8 தெளிவாகக் காட்டுகின்றது. அந்தவகையில், 80 சதவீதமானவர்கள் அவர்களுடைய மகிழ்ச்சியை முழுமையாகப் பாதிப்பதாகக்

குறிப்பிட்டுள்ளனர். மேலும், 15 சதவீதமானவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு இணங்க அவர்களுடைய மகிழ்ச்சி சாதாரணமாக பாதிக்கப்படுகின்றது எனக் குறிப்பிட்டதோடு 5 சதவீதத்தினர் அவர்களுடைய மகிழ்ச்சி பாதிக்கவில்லை எனக் குறிப்பிட்டனர்.




படம் 8: அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அவர்களுடைய மகிழ்ச்சியைப் பாதிக்கும் விதம்

(மூலம் : ஆய்வாளர், 2024)

அறுகம்பேவிற்கு வருகை தந்த பெண் அலைச்சறுக்கர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கு இணங்க, ஆய்வுப் பிரதேசத்தில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான சவால்கள் அவர்களுடைய வருகையைப் பாதிக்கும் விதத்தினைப் படம் 9 காட்டுகின்றது. அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் அவர்களுடைய வருகையினைக் குறித்து குறிப்பிடும்போது மீண்டும் அலைச்சறுக்களுக்காக வேண்டி அறுகம்பேவிற்கு வருவதற்கு மிகவும் விருப்பமுடையவர்களாக 10 சதவீதத்தினரும், சாதாரண விருப்பம் உடையவர்களாக 17 சதவீதத்தினரும், மீண்டும் வருகை தருவதற்கான விருப்பம் அற்றவர்களாக 73 சதவீதமானோரும் காணப்படுகின்றனர். இதன் அடிப்படையில் நோக்கும்போது எதிர்காலத்தில் பெண் அலைச்சறுக்கர்களின் தொடர்ச்சியான வருகை குறைவாகவே காணப்படும்.

அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் காரணமாக எதிர்காலத்தில் அலைச்சறுக்கர்கள் ஏனைய இடங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றன. அறுகம்பே தவிர்ந்த ஏனைய அலைச்சறுக்கல் இடத்திற்குச் செல்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவாக இருப்பதாக முறையே 40.7, 49.4 சதவீதமானவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அறுகம்பேவிற்கு மீண்டும் வறுவதற்கான வாய்ப்பு ஓரளவு உள்ளதாக 4.9 சதவீதமானோர் குறிப்பிட்டதுடன், 2.5 சதவீதத்தினர் அறுகம்பேவிற்கு மீண்டும் வருவதற்கான வாய்ப்பு உள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

**முடிவுரை**

இந்த ஆய்வு அறுகம்பேவில் அலைச்சறுக்கலில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெளிப்படுத்துவதோடு அதன் பின்னணியில் நிலவும் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அமைப்புகளின் தாக்கத்தையும் அடையாளம் காட்டுகிறது. பெண்கள் அலைச்சறுக்கலில் ஈடுபடுவதில் எதிர்நோக்கும் முக்கியமான தடைகளாக பாதுகாப்பின்மை, சமூக எதிர்ப்புகள் மற்றும் பயிற்சி உட்கட்டமைப்புகளின் பற்றாக்குறை என்பன விளங்குகின்றன என விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், பல பெண்கள் இந்தச் சவால்களை மீறி தங்களை நிலைநிறுத்திக்கொள்ளும் முயற்சியில் உள்ள போதிலும், ஒரு நிலையான ஆதரவு அமைப்பு இல்லாததால் அவர்கள் வழிநடத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஆய்வின் முடிவுகளாக பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் சுற்றுலாவில் பாதுகாப்பாகவும், உரிமையோடு பங்கேற்கவும் தேவையான கொள்கை, திட்டமிடல் மற்றும் சமூக மாற்றங்களை மேற்கொள்ளும் அவசியத்தை வலியுறுத்துகின்றன. அறுகம்பே போன்ற பிராந்தியங்களில் பெண் அலைச்சறுக்கர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பது மட்டுமல்லாது அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் குறைக்கும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய பொது மற்றும் தனியார் தரப்புகளின் ஒருங்கிணைந்த பங்களிப்பு அவசியம். இதற்காக, கடற்கரைகளில் பெண்களுக்குப் பாதுகாப்பான இடங்களின் கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு உபகரணங்கள் நிறுவப்பட வேண்டும். உள்ளூர் சமூகத்தில் பெண்களின் விளையாட்டுப் பங்கேற்பைப் பற்றிய புரிதலை ஏற்படுத்தும் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெண்களுக்குத் தனிப்பட்ட பயிற்சி வளாகங்கள், மாற்றறைகள் மற்றும் தேவையான வசதிகள் வழங்கப்படும் வகையில் முதலீடுகள் செய்யப்பட வேண்டும். சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களில் பாலின இணைபிப்பு கட்டாயமாக்கப்பட்டு, பெண்களுக்கான ஆதரவு நடவடிக்கைகள் தொகுக்கப்பட வேண்டும். இப்பரிந்துரைகள், பெண்கள் தங்கள் ஆற்றல்களை வெளிக்கொணர அனுகூலமான சூழல் ஒன்றை உருவாக்கும் நோக்கத்தோடு அமைந்தவை. இத்தகைய முயற்சிகள் அலைச்சறுக்கல் மட்டுமன்றி, பெண்கள் பங்கேற்கும் பிற சாகச சுற்றுலா நடவடிக்கைகளிலும் சிறந்த பாதையை அமைத்துத் தரும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


Ahmad, I. et al. (n.d.). Isolation and identification of LDPE-degrading fungi from municipal solid waste. Academia.edu. Retrieved from https://www.academia.edu/download/95225410/isolation-and-identification-of-ldpe-degrading-fungi-from-municipal-solid-waste.pdf

Bavinck, M. et al. (2020). Between the sea and the land: Small-scale fishers and multiple vulnerabilities in Sri Lanka. ResearchGate. https://www.researchgate.net/publication/343344965_Between_the_sea_and_the_land_small-scale_fishers_and_multiple_vulnerabilities_in_Sri_Lanka

Braun, V., & Clarke, V. (2006). *Using thematic analysis in psychology*. Qualitative Research in Psychology, 3(2), 77–101. doi:10.1191/1478088706qp063oa

EOS Surf Encyclopedia. (n.d.). Booth, Jeff. Retrieved April 24, 2025, from https://www.eos.surf/encyclopedia/booth-jeff

Cochran, W. G. (1977). *Sampling Techniques* (3rd ed.). John Wiley & Sons.

Evers, C. (2010). *Notes for a Young Surfer*. Melbourne: Melbourne University Press.

FOX Sports. (n.d.). Laura Enever sets Guinness World Record for largest wave surfed (paddle-in). Retrieved April 24, 2025, from https://www.foxsports.com.au/surfing/laura-enever-sets-guinness-world-record-for-largest-wave-surfed-paddlein/news-story/4abf46c668f9c8e0c6131b05bf049927

Laura & Erp. (2012). Surf-related content. Retrieved from https://www.google.com/search?q=laura+and+Erp+2012+surf

Rough Guides. (2020). The rough guide to Sri Lanka. Retrieved from https://www.google.com/search?q=The+rough+guide+to+sri+lanka+2020+pdf

Scientific Research Publishing. (n.d.). References list. Retrieved April 24, 2025, from https://www.scirp.org/reference/referencespapers?referenceid=2613760

TennisLive.net. (2013). Rebecca Peterson. Retrieved from https://www.tennislive.net/wta/rebecca-peterson//1000/?su=6&y=2013

United Nations World Tourism Organization. (2013). UNWTI 2013. Retrieved from https://www.google.com/search?q=UNWTI+2013

Wheaton, B. (2013). *The Cultural Politics of Lifestyle Sports*. Routledge.

# அநுராதபுர மாவட்ட கெகிராவ பிரதேச செயலகப் பிரிவின் நெற்செய்கைப் போக்குகள்

**Rasik Fathima Rasna**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
mrrasna8574@gmail.com

**V. Pathmanandakumar**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த ஆய்வு, அநுராதபுர மாவட்டத்தின் கெகிராவ பிரதேசத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் (2015-2024) நெற்செய்கை உற்பத்திப் போக்குகளையும் அவற்றை வடிவமைத்துள்ள சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் காரணிகளையும் ஆராய்கின்றது. இவ்வாய்வில் கெகிராவ பிரதேசத்தின் 10 கிராம சேவகர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு நுட்ப முறையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 100 விவசாயிகளிடம் வினாக்கொத்துக்கள் மற்றும் பனிப்பந்து மாதிரியெடுப்பு நுட்ப முறையில் பெறப்பட்ட தரவுகளும் கெகிராவ கமநல சேவைகள் நிலைய அதிகாரிகள் 05 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளும் முதலாம் நிலை தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கெகிராவ கமநல சேவைகள் நிலையத்திலிருந்து இரண்டாம்நிலைத் தரவுகள் பெறப்பட்டன. அளவுசார் தரவுகள் SPSS 26 மென்பொருளைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின் அடிப்படையில் கெகிராவ பிரதேசத்தில் அதிகளவான நெற்செய்கை நிலப்பரப்புகள் காணப்பட்ட போதிலும், குறைந்தளவான உற்பத்திகளே பெறப்படுகின்றன என்ற முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது. பெரும்போக மற்றும் சிறுபோகங்களில் உற்பத்தி சீராக அதிகரிக்கிறது. ஆனால், நீண்ட கால நிலையான வளர்ச்சி இல்லாமல் தளம்பல் நிலையைக் காட்டுகிறது. குறிப்பாக, 2019 ஆம் ஆண்டில் உற்பத்தி மிகவும் குறைந்திருந்தது, ஆனால், 2024 ஆம் ஆண்டில் உற்பத்தி அதிகரித்தது. இதன் மூலம், இந்த ஆய்வு குறிப்பிட்ட காலத்தில் கெகிராவ பிரதேசத்தில் உற்பத்தி மாறுபாடுகளையும் அதற்கான காரணிகளையும் எடுத்துக்காட்டுகிறது. விவசாயிகள் பெரும்பாலும் பாரம்பரிய முறைகளையே பின்பற்றுகின்றனர். நவீன தொழில்நுட்பங்கள் குறைவாகவே அவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக, நெற்செய்கையின் உற்பத்தித்திறன் குறைகிறது. அரச கொள்கை மாற்றங்களும் விவசாயிகளின் நிலையைப் பாதிக்கின்றன. குறுகிய காலத்திற்கேற்ற நவீன நெல்லினங்கள் விவசாயிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளன. இது மாற்றத்தின் ஓர் ஆரம்பமாகக் கருதப்படலாம். எனினும், முழுமையான செயல்திறன் மேம்பாடு மற்றும் நிலையான உற்பத்தியை அடைய தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் கொள்கை உந்துதல்களும் அவசியமாகின்றன. இந்த ஆய்வு கெகிராவ பிரதேசத்தின் நெற்செய்கையின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால அபிவிருத்தி வாய்ப்புகளை வெளிப்படுத்துகிறது. தொழில்நுட்பம், கல்வி, நீர்ப்பாசன வசதி, அரச கொள்கை ஒத்துழைப்பு ஆகியவை

ஒருங்கிணைந்த முறையில் செயற்பட வேண்டும் என்பதே இந்த ஆய்வின் முக்கிய பரிந்துரையாகும்.

***திறவுச் சொற்கள்** : கெகிராவ, நெற்செய்கை, உற்பத்திப் போக்கு, பாரம்பரிய விவசாயம், விவசாய தொழில்நுட்பம்.*

**அறிமுகம்**

மனிதன் தனது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் நாகரிக வளர்ச்சியின் தொடக்கத்தில் இருந்து நீர்நிலைகளைச் சார்ந்து விவசாயத்தில் ஈடுபட்டான். இதனால் விவசாயம் மனித வாழ்வில் அடிப்படை முக்கியத்துவம் கொண்டது. உலகளவில் 113 நாடுகள் நெற்செய்கையில் ஈடுபடுகின்றன. ஆசியா மட்டும் நெல்லின் உற்பத்தி மற்றும் நுகர்வில் 90% பங்கு வகிக்கிறது (Nasreddine et al., 2018). இலங்கையிலும் நெற்செய்கை ஒரு முக்கியத்துவமிக்க பொருளாதார நடவடிக்கையாகும். இதில் சுமார் 1.5 மில்லியன் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். 1.2 மில்லியன் ஹெக்டேயர் நிலம் இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது (Lokuge et al., 2019; Pahl-Wostl etal., 2020). நெற்செய்கை மாவட்டங்களுள் அநுராதபுரம், பொலனறுவை, குருநாகல் உள்ளிட்டவை முன்னிலை வகிக்கின்றன. இதில் அநுராதபுர மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கு 22 பிரதேச செயலகங்களும் 694 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளன (Rice Research Development Institute, 2020). கெகிராவ பிரதேசத்தில் நெற்செய்கை பல தலைமுறைகளாக உள்ளூர் மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது. இருப்பினும், காலநிலை மாற்றம், பூச்சித் தாக்கம் மற்றும் சந்தைச் சவால்கள் உற்பத்தி மற்றும் வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன (Luca, 2024). இந்நிலையில், கெகிராவ பிரதேசத்தில் நெற்செய்கையின் தற்போதைய போக்கினை ஆராயும் இவ் ஆய்வானது, ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் பரந்த சமூகத்தின் நல்வாழ்வுக்கான நடைமுறைத் தாக்கங்களைக் கொண்ட ஒரு முக்கிய முயற்சியாகும். காலநிலை மாற்றம் மற்றும் விவசாயத்தின் மீதான சந்தைச் செயற்பாடுகள் ஆகியவற்றின் தாக்கங்கள் குறித்துக் கணிசமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், குறிப்பாக கெகிராவ பிரதேச நெற்செய்கையின் பின்னணியில் இக்காரணிகள் தொடர்பான ஆய்வுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இவ்வாய்வானது தற்போதைய போக்குகளை முறையாகப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இவ்விடைவெளியை நிவர்த்தி செய்ய முயற்சித்துள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

இம்மீளாய்வில் குறிப்பாக அநுராதபுர மாவட்டத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்து விவரிக்கின்றன. 1980களின் பின்னரான காலகட்டத்தில் இலங்கை அரசு விவசாயக் கிணறு அபிவிருத்திக்காக மானியங்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்தியது Aheeyar and Aariyabandhu (2002). குருநாகல் மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் விவசாயக் கிணற்றின் பயன்பாடு பரவலாக காணப்படுகிறது. அதேவேளை உற்பத்தித் திறனும் செலவும் குறித்து Thiruchelvam (2005) மேற்கொண்ட ஆய்வில், 1995-2000 காலகட்டத்தில் நெல் உற்பத்தி அதிகரித்திருந்த அதேவேளை

செலவுகளும் உயர்வடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. நெல் விவசாயத்திற்கான நிதிப் பற்றாக்குறை, உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் விவசாயிகளைப் பாதிப்பதாக Kulathunga et.al (2013) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நுண்கடன் வட்டி விகிதம், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் காணப்படும் சிரமம் மற்றும் அதிக நிபந்தனைகள் விவசாயிகளின் நுகர்வுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது என ஓர் ஆய்வு குறிப்பிடுகிறது Jeevandhi et al (2021). Chithranayana and Punyawardhana (2014), Banda (2016), Silva et.al (2019) ஆகியோரின் ஆய்வுகள், மழைவீழ்ச்சி மாற்றங்கள், நீர்பாசனத் தட்டுப்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களை விரிவாக விளக்குகின்றன. காலநிலை மாற்றத்தால் அதிகரித்த உற்பத்தி இழப்புகள் மற்றும் நிலைத்தன்மை குறைவாகும் Dhananjaya and Santha (2023).

பாரம்பரிய நெற்பயிர்கள் உணவுப் பாதுகாப்பிலும் சுகாதாரத்திற்கும் பங்களிப்பதனால், விவசாயிகள் அவற்றை நோக்கிச் செல்லும் போக்கு காணப்படுகிறது Ginigaddara and Disanayake (2018). இயந்திரமயமாக்கல் தொடர்பான Gunathilaka et al. (2018) மற்றும் மென்தொழில்நுட்பங்களின் தேவை பற்றிய ஆய்வுகள் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் விவசாயிகளைப் பாதிக்கின்றன. சந்தை விலை நிர்ணயத்தில் அரசின் பங்கு குறைவாகவே உள்ளது. Chandrasekara and Weerakon (2017) மற்றும் Wijesooriya et al. (2020) ஆகியோரின் ஆய்வுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. நெற்பயிர் மதிப்புச் சங்கிலியில் ஈடுபடும் இடைத்தரகர்கள் விவசாயிகளும் நுகர்வோர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் ஆய்வுகள் சுட்டுகின்றன.

## ஆய்வு முறையியல்

### அமைவிடம்

அநுராதபுர மாவட்டத்தில் 341.6 $km^2$ பரப்பளவைக் கொண்டு அமைந்துள்ள கெகிராவ பிரதேச செயலாளர் பிரிவானது, வடக்கில் ஹரிதபானே பிரதேச செயலாளர் பிரிவு, கிழக்கில் பலுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவு, தெற்கில் தம்புள்ள மற்றும் பலாகல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மேற்கில் இபலோகம பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றை எல்லைகளாக கொண்டுள்ளது. வருடாந்த மழைப்பொழிவு ஆண்டுக்கு 60-80 மி.மீ ஆகக் காணப்படுகிறது. வருடாந்த வெப்பநிலை 80°F ஆகவும் காணப்படுகின்றது.




படம் 1: ஆய்வுப் பிரதேசம் (மூலம்: ஆய்வாளர், 2024)

### தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும்

இவ்வாய்வில் கலப்பு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. கலப்பு முறைமையானது ஆய்வு வினாவிற்குப் பதிலளிக்கும் பொருட்டு அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான ஆய்வு முறைகளை ஒருங்கிணைக்கிறது. இதன் மூலம் இவ்வாய்வின் உறுதித் தன்மை அதிகரிக்கின்றது. கெகிராவ பிரதேச செயலகத்திற்குற்பட்ட பின்வரும் 10 கிராம சேவகர் பிரிவுகள் இவ்வாய்விற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 1: தெரிவு செய்யப்பட்ட 10 கிராம சேவகர் பிரிவுகளின் நெற்செய்கை நிலப்பரப்பு மற்றும் விவசாயிகளின் எண்ணிக்கை

| | **கிராம சேவகர் பிரிவு** | **வயல் பரப்பு (ஹெக்)** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **மாதிரிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 01 | நாவக்குளம் - 605 | 810 | 289 | 289/2096*100 = 14 |
| 02 | மொறகொட - 606 | 671. 4 | 175 | 175/2096*100 = 08 |
| 03 | தீரியகஸ்வெவ – 707 | 482 | 134 | 134/2096 *100 = 07 |
| 04 | மஹ திவுல்லாவ - 608 | 523 | 187 | 187/2096 *100 = 09 |
| 05 | பெதன்னேகம – 634 | 466.72 | 193 | 193/2096 *100 = 09 |
| 06 | கும்புக்வெவ – 635 | 742.33 | 293 | 293/2096 *100 = 14 |
| 07 | ரன்மல்கந்த – 636 | 450 | 254 | 254/2096 *100 = 12 |
| 08 | மஹ கெகிராவ – 637 | 581 | 228 | 228/2096*100 = 11 |
| 09 | ஒலம்பேவ – 638 | 429.58 | 124 | 124/2096 *100 = 06 |
| 10 | கொரஸகல்ல – 639 | 599.57 | 219 | 219/2096*100 = 10 |
| | | **5 755.58** | **2096** | **மொத்தம் 100 மாதிரிகள்** |

(மூலம்: ஆய்வாளர், 2024) (தரவு மூலம்: கெகிராவ கமநல சேவைகள் நிலையம், 2024)

இவ்வாய்வில் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக ஆய்வாளரினால் 100 விவசாயிகளிடம் எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு மூலம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. கலந்துரையாடல்கள் மூலமும் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வுடன் தொடர்புபட்ட உயர் அதிகாரிகள் மற்றும் விவசாயிகள், விவசாய சங்கத் தலைவர்கள் போன்ற 5 நபர்களை நேரடியாகச் சந்தித்து 10–15 நிமிடங்கள் கொண்ட கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் குறிப்பிடும் விடயங்களைத் தொலைபேசியில் குரல் பதிவு செய்தும் எழுத்து மூலமாக குறிப்பெடுத்தும் இவ்வாய்விற்கு தேவையான தகவல்கள் பெறப்பட்டன. நெற்செய்கையில் சில புதிய நுட்ப முறைகளின் பயன்பாடுகள் போன்ற விடயங்களை நேரடியாக அவதானிக்க முடிந்தது. கெகிராவ பிரதேச சபையில் இருந்து பெறப்பட்ட ஆண்டறிக்கை, கெகிராவ கமநல சேவை மையத்தின் அறிக்கைகள், இலங்கை விவசாய திணைக்களத்தின் ஆண்டறிக்கைகள் போன்றவற்றிலிருந்து இவ் ஆய்விற்கான இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன.

இவ் ஆய்வில் பெறப்பட்ட அளவு ரீதியான தரவுகள் விவரணப் பகுப்பாய்விற்கும் பண்பு ரீதியான தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டு ஆய்விற்கான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்காகப் பெறப்பட்ட அளவு ரீதியான தரவுகள் SPSS மென்பாருளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்விற்காகச் சேகரிக்கப்பட்ட பண்பு ரீதியான தரவுகள் அவற்றின் கருப்பொருளுக்கமைய வகைப்படுத்தி அளவை ரீதியான தரவுகளுடன் மேலதிக விளக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

இந்த ஆய்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 மாதிரிகளில், 15.2% பேர் 25–34 வயதினராகவும், 19% பேர் 35–44 வயதினராகவும், 26.7% பேர் 45–54 வயதினராகவும், 34.3% பேர் 55 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் ஏனையோர் 4.7% ஆகவும் உள்ளனர். இதில் 45–54 வயதுப் பிரிவினர் குறிப்பிடத்தக்க சதவீதத்தைக் காண்பிக்கின்றனர். விவசாயிகளில் 86.9% ஆண்கள் மற்றும் 12.4% பெண்கள் ஆக இருக்கின்றனர். ஆண்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்கது. கல்வி நிலை வீதமாக 40.7% பேர் ஆரம்பக் கல்வி, 26.9% பேர் கல்வி கற்றதில்லை, 14.8% பேர் இரண்டாம் நிலைக் கல்வி, 5.6% பேர் மூன்றாம் நிலை மற்றும் 4.6% பேர் பட்டதாரிகள் ஆக இருக்கின்றனர். பெரும்பாலானோர் ஆரம்பக் கல்வி பெற்றவர்கள். இந்த விவசாயிகளின் கல்வித் தகைமையின் அடிப்படையில் அவர்களின் தொழில்கள் மாறுபடுகின்றன. பெரும்பாலானவர்கள் 45 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் நெற்செய்கையில் ஈடுபடுவோராகவும் காணப்படுகின்றனர்.




வரைபு 1: தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளின் கல்வி நிலை

(மூலம்: ஆய்வாளர், 2024)

அதே போன்று இப்பிரதேசத்தின் மொத்த சிறுபோக நெல்லுற்பத்திப் போக்குகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்பட்டதற்கமைய 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் மெதுவான வளர்ச்சிப் போக்கையும் 2019 ஆம் ஆண்டு உற்பத்தி மிகக் குறைந்தளவிலும் பெறப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு இவ்வுற்பத்தி 4805.75 மெட்ரிக் தொன்னாக மிக அதிகளவான உற்பத்தியைக் காட்டுகின்றது. அதனைத் தொடர்ந்து உற்பத்தி குறைந்து செல்லும் போக்கினை வரைபு 2 இல் அவதானிக்க முடிகின்றது.




வரைபு 2: தெரிவுசெய்யப்பட்ட 10 கி.சே.பிரிவுகளின் மொத்தச் சிறுபோக நெல்லுற்பத்தி

(மூலம்: ஆய்வாளர், 2024) (தரவு மூலம்: கெகிராவ கமநல சேவைகள் நிலையம், 2024)

பெறப்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளினதும் மொத்த பெரும்போக நெல்லுற்பத்திப் போக்கானது வரைபு 3 இல் தரப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டில் 8809.42 மெட்ரிக்தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது. 2018 தொடக்கம் 2023 வரை உற்பத்தி சீரான போக்குகளைக் காட்டுகின்றது. மீண்டும் உற்பத்தி 9667.12 மெட்ரிக்தொன்னாக 2024 அதிகரித்துள்ளது.




வரைபு 3: தெரிவுசெய்யப்பட்ட 10 கி.சே.பிரிவுகளின் மொத்தப் பெரும்போக நெல்லுற்பத்தி

(மூலம்: ஆய்வாளர், 2024) (தரவு மூலம்: கெகிராவ கமநல சேவைகள் நிலையம், 2024)

இவ்வாய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளிலும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பெறப்பட்ட மொத்த சிறுபோக மற்றும் பெரும்போக நெல்லுற்பத்தியினை வரைபு 4 எடுத்துக்காட்டுகின்றது. அதற்கமைவாக நெற்செய்கையின் போக்குகளில் கடந்த பத்து வருடங்களில் அதிகுறைவான உற்பத்தியைப் பெற்ற ஆண்டாக 2019 ஆம் ஆண்டும் அது உயர்வான உற்பத்தியைப் பெற்ற ஆண்டாக 2024 ஆம் ஆண்டையும் அவதானிக்க முடிகின்றது. அதேநேரம் இவ்வுற்பத்தியில் சீரான போக்கை அவதானிக்க முடியவில்லை. இங்கு ஒவ்வொரு வருடமும் பெறப்படும் நெல்லுற்பத்திகளின் போக்குகளில் தளம்பல் நிலை காணப்படுகின்றது.




வரைபு 4: தெரிவுசெய்யப்பட்ட 10 கிராம சேவகர் பிரிவுகளின் மொத்த நெல்லுற்பத்திப் போக்கு
(மூலம்: ஆய்வாளர், 2024) (தரவு மூலம்: கெகிராவ கமநல சேவைகள் நிலையம், 2024)




வரைபு 5: தெரிவுசெய்யப்பட்ட 10 கிராம சேவகர் பிரிவுகளினதும் 2015 – 2024 வரையான மொத்த நெல்லுற்பத்தி
(மூலம்: ஆய்வாளர், 2024) (தரவு மூலம்: கெகிராவ கமநல சேவைகள் நிலையம், 2024)

ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளினதும் 2015 தொடக்கம் 2024 வகையான காலப்பகுதியில் பெறப்பட்ட மொத்த நெல்லுற்பத்திகளின் போக்கு பற்றி வரைபு 5 இல் காட்டப்பட்டுள்ளது. அதிகளவான நெல்லுற்பத்தியாக 22747.9 மெட்ரிக்தொன் கும்புக்வெவ பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மஹ கெகிராவ மற்றும் கொரஸகல்ல ஆகிய இரண்டு கிராமசேவகர் பிரிவுகளிலும் முறையே 16935, 16608 மெட்ரிக்தொன் கிடைக்கப் பெற்றுள்ளது. இங்கு பதிவுசெய்யப்பட்ட குறைந்த நெல்லுற்பத்தி ஒலம்பேவ மற்றும் தீரியகஸ்வெவ போன்ற கிராம சேவகர் பிரிவுகளில் பெறப்பட்டுள்ளன. இது தெரிவுசெய்யப்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளினதும் நெல் உற்பத்திகளின் வேறுபாட்டை எடுத்துக்காட்டுகின்றது




படம் 2: கெகிராவ பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளினதும் 2015 – 2024 வரையான மொத்த நெல்லுற்பத்தி (மெ.தொ) பரம்பல் பாங்கு
(மூலம்: ஆய்வாளர், 2024)

இங்கு மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை உற்பத்திகள் தொடர்பான மதிப்பீட்டினடிப்படையில் 12 சதவீதமான விவசாயிகள் சிறந்த உற்பத்தி எனவும், 34.3 சதவீதமானவர்கள் உற்பத்தி சராசரி அளவில் எனவும், 41.7 சதவீதமான விவசாயிகள் உற்பத்தி கடந்த சில காலங்களில் குறைவானது எனவும் 4.6 சதவீதத்தினர் உற்பத்தி மிகக் குறைவு எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதனைப் பின்வரும் வரைபு 6 தெளிவுபடுத்துகின்றது.




வரைபு 6: உற்பத்திப் போக்குகள் பற்றிய விவசாயிகளின் கருத்து

(மூலம்: ஆய்வாளர், 2024)

இங்கு தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளில் பெரும்பாலானோர் உற்பத்தி குறைவானது என்று குறிப்பிட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக உற்பத்திகளில் சிறந்த உற்பத்தி மதிப்பீடுகளை ஒரு சிறிய சதவீதம் மட்டுமே காட்டுகின்றது. இதில் தாக்கம் செலுத்தும் பல்வேறு காரணிகளில் இவ்விவசாயிகள் பயன்படுத்தும் தொழிநுட்பங்களும் குறிப்பிடத்தக்கன.




வரைபு 7: நெற்செய்கையில் பயன்படுத்தப்படும் நுட்பங்கள்
(மூலம்: ஆய்வு, 2024)

நெற்செய்கையில் செயற்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பங்கள் நெற்செய்கைப் போக்குகளில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பது தொடர்பாக ஆராயப்பட்டதன் அடிப்படையில் 59.3 சதவீதமானவர்கள் மேம்படுத்தப்பட்ட விதையினங்களைப் பயன்படுத்துகின்றனர் என்பது தெரியவருகிறது. அதேபோன்று இயந்திரமயமாக்கப்பட்ட உபகரணங்களை 22.2 சதவீதமான விவசாயிகளும், 11.1 சதவீதமானவர்கள் நவீன நீர்ப்பாசன

முறைகளையும் பயன்படுத்துகின்றனர். இதனை வரைபு 7 தெளிவாகக் காட்டுகின்றது. இது தவிர்ந்த சில தொழில்நுட்பங்கள் குறிப்பிட்ட சில இடங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது நாற்றுக்களை நடுகை செய்வதில் குறிப்பிட்ட சில விவசாயிகள் புதிய நுட்பமுறைகளை கையாள்கின்றனர் (ஒளிப்படம் 1).



ஒளிப்படம் 1: ஆய்வுப் பிரதேசத்தில் நெல் நாற்றுகளை உற்பத்தி செய்தல்
(மூலம் : ஆய்வாளர், 2024)

மேலே ஒளிப்படம் 1 இல் காணப்படும் தொழில்நுட்பமானது நெல் நாற்றுக்களை வயல்களில் நடுவதற்காக பாதுகாப்பான முறையில் உற்பத்தி செய்ய பயன்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற நாற்றுக்களை வயல்களில் நடுகை செய்வதற்காக பரசூட் எனப்படும் தட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன (ஒளிப்படம் 2).



ஒளிப்படம் 2: ஆய்வுப் பிரதேசத்தில் பரசூட் தட்டுக்களின் பயன்பாடு
(மூலம்: ஆய்வாளர், 2024)

நெற்செய்கைக்காகத் தயார்செய்யப்பட்ட வயல் நிலங்களில் பரசூட் தட்டுக்களை மண்ணில் புதைத்து அதில் காணப்படும் சிறிய துளைகளுக்குள் இயந்திரம் மூலம் நாற்றுகள் வயல்களில் நடுகை செய்யப்படும். இது தொடர்பாக பெறப்பட்ட ஒளிபடம் 3 பின்வருமாறு.




ஒளிப்படம் 3: ஆய்வுப் பிரதேசத்தில் இயந்திரம் மூலம் நடுகை செய்தல்
(மூலம்: ஆய்வாளர், 2024)

அத்தோடு இவ்விவசாயிகள் தங்கள் நெற்செய்கைக்காகப் பயன்படுத்துகின்ற நீர்ப்பாசனங்களில் நவீன நீர்ப்பாசன முறைகளை ஒப்பீட்டளவில் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றனர். அதேபோன்று நெற்செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் நீர்ப்பாசன முறைகள் தொடர்பிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 83.3 சதவீதமான விவசாயிகள் பாரம்பரிய மழை நீர்ப்பாசனத்தையும் 9.3 சதவீதமானவர்கள் மகாவலி நீர்ப்பாசன முறையையும் 7.4 சதவீதமானவர்கள் ஏனைய நீர்ப்பாசன முறையையும் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர். இதனைப் பின்வரும் வரைபு 8 காட்டுகின்றது.




வரைபு 8: ஆய்வுப் பிரதேசத்தில் நெற்செய்கைக்கான நீர்ப்பாசனம்
(மூலம்: ஆய்வாளர், 2024)

அதேபோன்று இவ்விவசாயிகள் புதிய போக்குகளின் அடிப்படையில் தமது விவசாய நடைமுறைகளை எவ்வாறு புதுப்பிக்கின்றனர் என்பது தொடர்பிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 11.1 சதவீதமானவர்கள் தங்கள் விவசாய நடைமுறைகளை அடிக்கடி புதுப்பிப்பதாகவும் அதேநேரத்தில் 65.7 சதவீதமானவர்கள் தங்கள் நடைமுறைகளை அரிதாக புதுப்பிப்பதாகவும் தெரிவித்தனர். 15.7 சதவீதமானவர்கள் தங்கள் விவசாய நடைமுறைகளைப் புதுப்பிப்பது தொடர்பாக உறுதியாகத் தெரியவில்லை என்றும் 7.5 சதவீதமானவர்கள் ஏனைய பதில்களையும் குறிப்பிட்டுள்ளனர். இதனைப் பின்வரும் வரைபு 9 காட்டுகின்றது.




வரைபு 9: நெற்செய்கை நடுவடிக்கைகளைப் புதுப்பிக்கும் விதம்
(மூலம்: ஆய்வாளர், 2024)

ஒட்டுமொத்த சதவீதத்தில் குறைந்தபட்சமான விவசாயிகளே தங்களது விவசாய நடவடிக்கைகளைப் புதிய நுட்பங்களினடிப்படையில் புதுப்பிக்கின்றனர். அதிகளவான விவசாயிகள் பாரம்பரிய நடைமுறைகளையே தமது நெற்செய்கைளில் பயன்படுத்துபவர்களாக காணப்படுகின்றனர்.

அதே போன்று நெற்செய்கையில் அரச கொள்கை மாற்றங்களின் தாக்கம் தொடர்பாக விவசாயிகளிடம் பல்வேறுட்ட கருத்துக்களை அவதானிக்க முடிகின்றது. இவ்வாய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளில் 42.6 சதவீதமானவர்கள் அரச கொள்கைகள் தங்கள் நெற்செய்கையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், 18.5 சதவீதமான விவசாயிகள் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். 13.9 சதவீதமானவர்கள் தமது நெற்செய்கையில் கொள்கை மாற்றங்கள் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை என்றும், 9.3 சதவீதத்தினர் இந்தக் கொள்கை மாற்றங்கள் பற்றி அறிந்திருக்கவில்லை எனவும் குறிப்பிடுகின்றனர். கொள்கை மாற்றங்களின் விளைவுகள் குறித்து உறுதியாகத் தெரியாதவர்களாக 8.3 சதவீதமான விவசாயிகள் காணப்படுகின்றனர்.

அட்டவணை 2: கொள்கை மாற்றங்கள் பற்றிய விவசாயிகளின் கருத்து

| நெற்செய்கையில் கொள்கை மாற்றங்களின் தாக்கம் | சதவீதம் |
|---|---|
| **நேர்மறையாக** | 18.5% |
| **எதிர்மறையாக** | 42.6% |
| **விளைவு இல்லை** | 13.9% |
| **கொள்கை மாற்றம் பற்றி தெரியாது** | 9.3% |
| **உறுதியாகத் தெரியவில்லை** | 8.3% |
| **ஏனையவை** | 7.4% |

(மூலம்: ஆய்வாளர், 2024)

இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதில்களின் அடிப்படையில் அதிகளவான விவசாயிகள் அரச கொள்கை மாற்றங்கள் தங்கள் விவசாய நடைமுறைகளில் எதிர்மறையாகத் தாக்கம் செலுத்துவதாகக் கருதுகின்றனர். மேலே பகுப்பாய்வு செய்யப்பட்ட கெக்கிராவ பிரதேசத்தின் கடந்த 10 வருடங்களின் நெல்லுற்பத்திகளின் அளவு மற்றும் இங்கு பயன்படுத்தப்படுகின்ற நுட்ப முறைகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்து இப்பிரதேசத்தின் நெற்செய்கையின் போக்குகள் அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய அதன் உற்பத்தித்திறனைப் பாதிக்கும் பல்வேறு காரணிகளால் மிகவும் பாதிக்கப்படுக்கூடியதாகவும் காணப்படுகின்றது. இப்பகுதியில் சாதகமான காலநிலை, நீர்ப்பாசன வசதி மற்றும் பயிர்ச் செய்கை நிலங்கள் என்பன இருந்தபோதிலும் இப்பகுதியின் பாரம்பரிய விவசாய முறைகள் மற்றும் நவீன விவசாய தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப நெற்செய்கை நடவடிக்கைகளைப் புதுப்பித்தலில் காணப்படும் பின்னடைவான சூழ்நிலை, அரச கொள்கை மாற்றங்கள் மற்றும் ஏனைய காரணிகளினால் இப்பிரதேசத்தில் உற்பத்தி குறைவடைந்து செல்லும் போக்கை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாய்வுப் பிரதேசத்தில் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் காணப்படுகின்ற நெற்செய்கை நிலப்பரப்புகள் முழுவதும் பயிரிடப்படுவதில்லை. அதாவது, இங்கு ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் காணப்படுகின்ற நெற்செய்கை நிலங்களில் குறிப்பிட்ட அளவான நிலங்களில் மாத்திரமே நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் நெற்செய்கையின் போக்குகளை மதிப்பீடு செய்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டு விவசாயிகளின் விவசாய நிலப்பரப்புகள் தொடர்பான தரவுகளுக்கமைய 47.2 சதவீதமான விவசாயிகள் 1 தொடுக்கம் 5 ஹெக்டேயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்கின்றனர். அதேபோன்று 25.9 சதவீதமானவர்களின் நெற்செய்கை பரப்பளவு 1 ஹெக்டேயரைவிடவும் குறைவானதாகக் காணப்படுவதோடு 6 முதல் 10 ஹெக்டேயர்களுக்கு இடையில் 19.4 சதவீதமானவர்கள் பயிரிடுகின்றனர். இதனை வரைபு 4.23 காட்டுகின்றது. இவ்வரைபடத்தின்படி தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளின் விவசாய நிலத்தின் பரப்பளவுகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதில் அதிகமான விவசாயிகளுக்கு 1 தொடக்கம் 5 ஹெக்டேயர் வரையான விவசாய நிலங்கள் காணப்படுகின்றன.

ஆய்வுப் பிரதேசத்தின் நெற்செய்கையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட நெல் விதைகளின் பாவனை காரணமாக கடந்த காலங்களில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பினால் பாரம்பரியமான நெல்லினங்களைப் பயன்படுத்தும் தன்மை குறைவடைந்து பல்வேறு புதிய நெல்லினங்களுக்கு மக்கள் பழக்கப்பட்டனர். இதனை ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட விவசாயிகள் தங்களது நெற்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்றனர். பாரம்பரிய நெல் இனங்கள் ஐந்து முதல் ஆறு மாத கால விளைச்சல் திறன் கொண்டவையாகவும் நான்கு முதல் நான்கரை மாதம் மற்றும் மூன்று முதல் மூன்றரை மாதங்களாகவும் காணப்படுகின்றன. இங்கு பயன்படுத்தப்பட்ட கலப்பினமற்ற நெல் வர்க்கங்கள் பொடி வீ A8, பால மாவீ 31009, கலு ஹீனட்டி 39YM3245, வெள்ளைப் பெருமாள் 28724, மொலகுசம்பா 1186, வெள்ளை இளங்கலயன் 28061, பெரிய நெல் 26014, சுது ஹீனட்டி 1 CRP 19, பச்சைப்பெருமாள் 2462/11 மற்றும் முருங்ககாயன் 302 போன்றனவாகும். ஆனால் தற்போது

பயன்படுத்தப்படுகின்ற 2 ½ மாத கால புதிய நெல்லினங்களாக B6 250, B6 251 (Bathala Goda 251) போன்றனவும் 3 மாத கால விதையினமாக B6 304, 3 ½ மாத கால BG 360, BG 307, BG 375 மற்றும் BG 367 போன்ற இனங்களும் இப்பிரதேசத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விவசாயிகள் பயன்படுத்தும் நெல்லினங்கள் தொடர்பான வரைபு 10 பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.




வரைபு 10: ஆய்வுப் பிரதேசத்தில் நெற்செய்கைக்குப் பயன்படும் நெல்லினம்
(மூலம் : ஆய்வாளர், 2024)

இங்கு 45.6 சதவீதமான விவசாயிகள் பயன்படுத்துகின்ற நெல்லினமாக BG 352 காணப்படுகின்றது. அதேபோன்று BG 307 நெல் 24.1 சதவீதமான விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படுவதோடு BG 360 மற்றும் B6 250 என்பன குறைந்தளவிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**முடிவுரை**

இவ்வாய்வு, அநுராதபுர மாவட்டத்தின் கெகிராவ பிரதேசத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் (2015-2024) நிகழ்ந்த நெற்செய்கை உற்பத்திப் போக்குகளையும், அவற்றை வடிவமைத்த சமூக-பொருளாதார மற்றும் தொழில்நுட்ப காரணிகளையும் விரிவாக ஆராய்கின்றது. பெரும்போக மற்றும் சிறுபோக பருவங்களில் உற்பத்திப் போக்குகள் ஏற்றத்தாழ்வினையும் நிலையான வளர்ச்சி இல்லாமல் தளம்பல் நிலையினையும் காண்பித்தன. குறிப்பாக 2019 ஆம் ஆண்டில் உற்பத்தி குறைந்தபோதும், 2024 ஆம் ஆண்டில் உயர்ந்த உற்பத்தி நிலை பதிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதே சமயம், இப்பிரதேச விவசாயிகள் பெரும்பாலும் பாரம்பரிய முறைகளைத் தொடர்கிறார்கள். எனவே, நவீன தொழில்நுட்பங்களைச் சீராக ஏற்காத சூழ்நிலை காணப்படுகிறது. வினாக்கொத்துக்கள் மற்றும் கணக்கெடுப்புத் தரவுகள் அடிப்படையில், 59.3 சதவீதமான விவசாயிகள் மேம்படுத்தப்பட்ட விதையினங்களைப் பயன்படுத்தினாலும், இயந்திரமயமாக்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் நவீன நீர்ப்பாசன முறைகள் குறைவாகவே பயன்படுகின்றன. இது நெற்செய்கையின் செயல்திறனை அடக்கி வைத்த முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மேலும், இளைய தலைமுறையின் பங்கேற்பு மிகக் குறைவாகவும், ஆரம்ப கல்வியைத் தவிர்ந்த உயர்கல்வி பெற்ற விவசாயிகள் குறைவாகவும் காணப்படுகின்றனர். இது நவீன தொழில்நுட்பங்களின் அறிமுகத்திற்கும் புதிய உற்பத்தி முறைகளின் ஏற்றத்திற்கும் தடையாக உள்ளது. அரச கொள்கை மாற்றங்களும் ஒரு

முக்கிய தாக்கம் செலுத்துகின்றது. 42.6 சதவீதமான விவசாயிகள் அரச கொள்கைகள் தங்களது நெற்செய்கையில் எதிர்மறையாகப் பாதித்துள்ளன எனத் தெரிவித்துள்ளனர். இதனிடையே, குறுகிய காலத்துக்கேற்ப வளரக்கூடிய நவீன நெல்லினங்கள்மீது விவசாயிகள் அதிக நம்பிக்கை வைக்கத் தொடங்கியுள்ளதைக் காணலாம். இது ஒரு மாற்றத்தின் ஆரம்பமாகக் கருதப்படலாம். எனினும், முழுமையான செயல்திறன் மேம்பாடு மற்றும் நிலைத்த உற்பத்திக்கான பாதையை நிலைநிறுத்த வேண்டுமெனில், அரச மற்றும் பகுதி நிர்வாக அமைப்புகள் சார்ந்த தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் கொள்கை உந்துதல்களும் அவசியமாகின்றன. கெகிராவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு நெற்செய்கையின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால அபிவிருத்தி வாய்ப்புகளை வெளிப்படுத்துகிறது. தொழில்நுட்பம், கல்வி, நீர்ப்பாசன வசதி, அரச கொள்கை ஒத்துழைப்பு ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்த முறையில் செயல்பட வேண்டியது இப்பிரதேசத்தின் நெற்செய்கைத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான முன்மொழிவாக இருக்கின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Aheeyar, M. M. M., & Ariyabandu, R. D. S. (2002, September). Socio-economic issues pertinent to agro-well farming in Sri Lanka. In *Proceedings of symposium "Use of groundwater for agriculture in Sri Lanka*," Peradeniya, Sri Lanka 30, 119-132.

Banda, H. N. (2016). Climate change and paddy production in Sri Lanka (with reference to Anuradhapura District). Department of Economics. University of Kelaniya. Sri Lanka.

Chandrasekara, R. S., & Weerakoon, K. G. P. K. (2017). The Effect of Land Tenure Practices on Paddy Production in Nuwaragam Palatha East, Anuradhapura District.

Chithranayana, R. D., & Punyawardena, B. V. R. (2014). Adaptation to the vulnerability of paddy cultivation to climate change based on seasonal rainfall characteristics.

Dananjaya, P. K. V. S., Shantha, A. A., Patabendi, K. P. L. N. (2023). Faculty of Social Sciences and Languages, Department of Economics and Statistics, Sabaragamuwa University of Sri Lanka, & Department of Geography and Environmental Management, Sabaragamuwa University of Sri Lanka. (n.d.). Impact of climate variability on paddy cultivation: with special reference to paddy cultivation in rajangana scheme in anuradhapura district. In 1st International Conference on Social Sciences and Languages (ICSSL -2023) (pp. 201–204)

Ginigaddara, G. A. S., & Disanayake, S. P. (2018). Farmers' willingness to cultivate traditional rice in Sri Lanka: A case study in Anuradhapura district. In Rice Crop-Current Developments. IntechOpen.

Gunathilake, W., Gamlath, W., & Chamara, N. Mechanization of Rice Production in Anuradhapura District of Sri Lanka: Current Status and Future Potential. *Applied Bio-Systems Technology*, 23.

Kulathunga, P. S. S. H., Edirisinghe, D. P. D. S., Athauda, A. M. T. P., & Anjalee, G. H. I. (2013). Challenges of microfinance accessibility by paddy farmers. The case of Anuradhapura district. *Sri Lankan Journal of Agriculture and Ecosystems 1 (2).*

Lokuge, M. N., Zivkovic, S., Lange, K., & Chidmi, B. (2019b). Estimation of a censored food demand system and nutrient elasticities: a cross-sectional analysis of Sri Lanka. *The International Food and Agribusiness Management Review*, 22(5), 717–730.

Luca. (2024, February 28). Research and Innovation in Rice Farming - Mundiriso. Mundi Riso.

Nasreddine, L. M., Kassis, A. N., Ayoub, J. J., Naja, F. A., & Hwalla, N. C. (2018). Nutritional status and dietary intakes of children amid the nutrition transition: The case of the Eastern Mediterranean Region. *Nutrition Research*, 57, 12–27.

Pahl-Wostl, C., Gorris, P., Jager, N., Koch, L., Lebel, L., Stein, C., Venghaus, S., & Withanachchi, S. (2020). Scale-related governance challenges in the water–energy–food nexus: toward a diagnostic approach. *Sustainability Science*, 16(2), 615–629.

RRDI. (2020) – Rice Introduction. Department of Agriculture Sri lanka.

Silva, L. G. D., PADAN, A., & Ekanayake, E. M. P. (2019). An Investigation of the Pattern of the Rainfall Occurrence in Anuradhapura District. *Proceeding of the 11th Symposium on Applied Sciences, Business and Industrial reseaches-2019*. Wayamba University of Sri Lanka

Thiruchelvam, S. (2005). Efficiency of rice production and issues relating to cost of production in the districts of Anuradhapura and Polonnaruwa. *Journal of the National Science Foundation of Sri Lanka*, 33(4).

Wijesooriya, N., Champika, P. J., & Kuruppu, V. (2020). The Socio Economic Status, Channel Choice and the Perception of Paddy Farmers' Links to the Public and Private Marketing Channels in Sri Lanka. Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute.

# மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென்எருவில்பற்று வரையான கரையோர உருவவியல் மாற்றம் (2006-2025)

**Saminathan Mangala**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
saminathanmangala@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென்எருவில்பற்று வரையான கரையோர உருவவியல் மாற்றம் (2006-2025) எனும் தலைப்பிலான இவ்வாய்வானது, ஆய்வுப் பிரதேசத்தின் 2006 தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான கரையோர உருவவியல் அம்சங்களை அடையாளப்படுத்துவதோடு, அவற்றின் கால ரீதியான உருவவியல் மற்றங்களைக் கண்டறிவதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. குறித்த ஆய்வை மேற்கொள்வதற்காக முதலாம் நிலைத் தரவுகளாக நேரடி அவதானிப்பு மூலம் பெறப்பட்ட விடயங்களும் குறித்த பிரதேச மக்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையிலான தகவல்களும் பயன்படுத்தப்பட்டதோடு Google Earth மென்பொருளானது பிரதான தரவு மூலமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்புசார் பகுப்பாய்வும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக குறித்த கரையோரத்தில் ஆண்டு ரீதியாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், படமாக்கல் செயன்முறைக்காக Arc GIS 10.4.1 என்னும் மென்பொருளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் பெறுபேறுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான கரையோர நிலவுருவங்களாக மணற்கடற்கரையோரம், தோணா, கஸ்ப் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ் உருவவியல் அம்சங்கள் கடல் மற்றும் ஆறுசார் செயன்முறையினால் விருத்தியடைந்துள்ள உருவவியல் அம்சங்களாகும். இவ் உருவவியல் அம்சங்கள் பரப்பு ரீதியாகக் கணிக்கப்பட்டுள்ளன. இதன்படி குறித்த கரையோரத்தின் பிரதான உருவவியல் அம்சமாக கரையோரம் முழுவதிலும் சிறப்பாக விருத்தியடைந்துள்ள மணற்கரையோரம் காணப்படுகின்றது. இவற்றுடன் கால ரீதியாக விருத்தியடைகின்ற கஸ்ப் மற்றும் தோணாக்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான கரையோர நிலவுருவங்கள் மூன்று காணப்படுகின்றமையை ஆய்வின் பெறுபேறுகளின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென் எருவில்பற்று வரையான கரையோரத்தில் பிரதானமாக மணற்கடற்கரையோரம் மற்றும் கஸ்ப்களின் உருவவியல் மாற்றம் இப்பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக, கஸ்ப் நிலவுருவம் மாற்றத்திற்கு உட்பட்ட பகுதிகளாக குருக்கள்மடம் வடக்கு, வேடர் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு தெற்கு, கிரான்குளம் வடக்கு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி வடக்கு, ஓந்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு, பெரியகல்லாறு போன்ற பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், ஆய்வில் கஸ்ப் நிலவுருவங்களை அதிகளவாகக் கொண்ட கரையோரப் பகுதிகள் அதிகளவு மணற்கடற்கரையோரத்தையும் கொண்டு காணப்படுவதினையும் அறியமுடிகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *கரையோரம், நிலவுருவம், உருவவியல், அரித்தல், படிதல், மாற்றங்கள்.*

**அறிமுகம்**

கடல் என்பது பூமியின் பெரும்பகுதியை உள்ளடக்கிய மிகப்பெரிய நீர்த்தொட்டியாகும். இது உவர்நீரால் நிரம்பியதாகக் காணப்படுவதோடு பல்வேறு உயிரினங்களுக்கான வாழிடமாகவும் திகழ்கின்றது. கடல் புவியின் வானிலை, வாணிபம் மற்றும் உயிரியல் மண்டலத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தவகையில், கடற்கரை என்பது கடலுக்கும் நிலத்துக்கும் இடையிலான எல்லைப் பகுதி ஆகும். இது பொதுவாக மணல் நிறைந்த பகுதியாகக் காணப்படும். கடலின் அலைகள் வந்தடைந்து மீண்டும் பின்செல்வதைக் காணக்கூடிய இடமாக இது திகழ்கின்றது (WADB. Weerasinghe, Amila Chandaruvan Ratnayake, 2022). கடற்கரையிலிருந்து தரையை நோக்கி 300 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசமும், நதி சங்கமிக்கும் இடத்திலிருந்து தரையை நோக்கி 2 கிலோமீற்றர் நீளமும் கடற்கரையோரம் எனப்படுகின்றது (Kaleel, 2012).

நிலத்திற்கும் கடலுக்கும் இடையிலான எல்லையாக கடற்கரையோர தன்மையின் மாற்றங்கள் கடலோர வளர்ச்சியில் இடஞ்சார்ந்த வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்றன (Wu et al., 2014). கரையோர சூழல்தொகுதியின் மாற்றத்தில் மனித நடவடிக்கைகள் எனும்போது சனத்தொகைப் பெருக்கம் காரணமாக ஏற்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், கடற்கரைசார் சுற்றுலாக் கைத்தொழில் நடவடிக்கைகள், மணல் அகழ்வுகள், மீன்பிடி நடவடிக்கைகள், கனிய வளங்களின் அகழ்வு நடவடிக்கைகள், தாவரப் போர்வையை அழித்தல் போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இதனால் கடற்கரையோர சூழல்தொகுதியானது மாற்றியமைக்கப்பட்டு இன்று பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றது. இதனால் கரையோரங்களின் நிலையான விருத்திக்கு இவ்வலயம் உயர்ந்த மட்டத்தில் பாதுகாக்கப்படுவது அவசியமாகும் (Stephenson et al., 2010).

இலங்கை ஒரு தீவு என்ற அடிப்படையில் இலங்கையின் சமூக, கலாசார சூழல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் இலங்கையின் கரையோர வலயம் முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கையின் கரையோரப் பகுதியானது வளைகுடாக்கள் மற்றும் முகத்துவாரங்களின் கரையோரங்கள் தீவினைச் சூழவும் 1700 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட கரையோர வலயத்தைக் கொண்டு அமைந்துள்ளது. இலங்கையின் கரையோரம் 41 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கையின் 25 மாவட்டங்களில் 14 மாவட்டங்கள் கரையோர மாவட்டங்களாகும். இக்கரையோர வலயமானது 74 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் அமையப்பெற்றுள்ளது. அத்துடன் குறித்த வலயமானது 70 சதவீதமான சுற்றுலா விடுதிகளையும் 61 சதவீதமான கைத்தொழில் அலகுகளையும், 64% மீன் உற்பத்திக் கரையோர

மீன்பிடித் தொழிலிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தையும் கொண்டமைந்துள்ள வளமான பல்லுயிர்ப் பகுதியாக உள்ளது (Coastal conservation department, 2018).

இலங்கையின் கிழக்குக் கரையோரம் அகலமான கடற்கரைகள், கூழாங்கன்னாக்குகள், கடற்கரைகளுடன் கூடிய நீர் சிதறி மற்றும் தடுப்புக் கடற்கரைகளையும், கடற்கரை பாறை மற்றும் மணற்றிடல்களையும் கொண்டமைந்துள்ளது. அந்தவகையில், அண்மைக் காலங்களில் இயற்கைக் காரணிகள் மற்றும் மானிட செயற்பாடுகள் காரணமாகவும், குறிப்பாக காலநிலை மாற்றத்தின் காரணமாகவும் உலகளவில் கரையோரம் சார்ந்த தீவு நாடுகள் பாதிப்பிற்குட்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக மனிதனின் முறையற்ற வெப்ப உருவாக்கச் செயற்பாடுகளினால் வெப்பநிலை அதிகரித்து மலைப்பகுதியில் உள்ள பனிக்கட்டி உருகி கடலினை வந்தடையும்போது கடலின் நீர்மட்ட உயர்வின் காரணமாக அதிகளவிலான தரைப்பகுதி நீரில் மூழ்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது (Katupotha, 1988).

இதன் விளைவாக கரையோரம் சார்ந்த நிலவுருவங்கள் அதிகளவு மாற்றத்தை எதிர்கொண்டு வருகின்றன. இதனால் இக்கரையோர மாற்றம் பற்றிய ஆய்வுகள் அவசியமானதாக விளங்குகின்றன. ஆகவே, இவ்வாய்வானது ஆய்வுப் பிரதேசத்தின் 2006 தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான கரையோர உருவவியல் அம்சங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் கால ரீதியான உருவவியல் மாற்றங்களைக் கண்டறிவதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இக்கரையோர நிலவுருவங்கள் எதிர்கொண்டுள்ள மாற்றங்களைக் காலரீதியாக ஆய்வு செய்வதன் மூலம் அவை எதிர்காலத்தில் எதிர்கொள்ளக்கூடிய சவால்களையும் பாதிப்புக்களையும் மதிப்பிட முடியும். மேலும், நாட்டின் கரையோரங்கள் இயற்கைக் காரணிகளால் மட்டுமன்றி மானிடக் காரணிகளாலும் காலரீதியாக அதிகளவு மாற்றங்களை எதிர்கொண்டு வருகின்றன. இத்தகைய மாற்றங்களை RS, GIS நுட்பங்களைக் கொண்டு பகுப்பாய்வு செய்துகொள்ள முடிவதோடு எதிர்காலத்தில் நாட்டின் கரையோர வலயத்தினைச் சிறந்த முறையில் திட்டமிட்டு பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

**இலக்கிய மீளாய்வு**

ஓர் ஆய்வு தொடர்பான தற்கால அணுகுமுறைகளுக்கும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைகள், ஆய்வு முடிவுகள் போன்றவற்றிற்கும் இடையிலான தொடர்புகள் பற்றிப் புதிய கோணத்தில் சிந்தித்து ஆய்வில் ஈடுபடும் ஒரு வாய்ப்பினை இலக்கிய மீளாய்வின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. எனவே, எம்முடைய ஆய்விற்கான தரவுகளையும் ஆய்வு இடைவெளிகளையும் கண்டறிவதாக இவ் இலக்கிய மீளாய்வு அவசியமாகின்றது. அந்தவகையில், கடற்கரையோர நிலவுருவவியல் தொடர்பான ஆய்வுகள் உலகளாவிய ரீதியிலும் தேசிய ரீதியிலும் வெவ்வேறு காலங்களிலும் இடம்பெறுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் 2006 தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான கடற்கரையோர நிலவுருவவியல் மாற்றங்களைக் கண்டறிவதை அடிப்படையாகக் கொண்டு இவ்விலக்கிய மீளாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Amarasinghe என்பவரால் 2020 ஆம் ஆண்டு "Intensity of Coastal Erosion in Sri Lanka: The Case of South Western Coastal Sector" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இலங்கையின் கொழும்பு தொடக்கம் காலி வரை பரவியுள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் ஏற்படுகின்ற அதிகளவான கடலோர அரிப்பை அறியும் நோக்கிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குக் கள ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட தரவுகள், இலக்கியங்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகளின் அடிப்படையில் புள்ளிவிபரவியல் முறைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு வரைபடங்கள், அட்டவணைகள், வடிவங்கள் தயாரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வில் கடலோர அரிப்பின் காரணமாகக் கரையோர உருவவியல் அம்சங்கள் மாறுவதாகவும் கழிமுகத்தின் தரம், கரையோர நீரின் தரம் என்பன மாற்றம் அடைவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. சமூகம், சூழல், பொருளாதாரம் போன்றவற்றின் சமநிலை மாற்றமடையவும் கடலோர அரிப்புக் காரணமாக உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

Balasaraswathi மற்றும் Srinivasalu ஆகியோரால் 2016 ஆம் ஆண்டில் "Change Detection Analysis of Coastal Zone Features in Cuddalore District, Tamilnadu Using Remote Sensing and GIS Techniques" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இந்தியாவின் தமிழ்நாட்டு மாநிலத்தின் கடலூர் மாவட்டத்தின் கரையோர வலயத்தினை மையமாகக் கொண்டுள்ளது. கடலூர் மாவட்டத்தின் கரையோர உருவவியல் மாற்றம் மற்றும் நிலப்பயன்பாட்டு மாற்றம் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடவிளக்கவியல் படங்கள் 1988, 2000 மற்றும் 2016ஆம் ஆண்டுகளுக்கான செய்மதிப் படங்கள் ஆகியவற்றைப் பிரதான தரவு மூலமாகக் கொண்டு விரிவாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. தொலையுணர்வு தொழிநுட்பம் மற்றும் புவியியல் தகவல் ஒழுங்கு தொழில்நுட்பம் போன்றவற்றின் பயன்பாட்டுடன் காலரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அளவுசார் ரீதியிலும் புள்ளிவிபர ரீதியிலும் பகுப்பாய்வுகள் செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகளின்படி உயர் சனத்தொகை வளர்ச்சி, மீன் வளர்ப்புப் பண்ணை நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் பெருக்கமே நிலப்பயன்பாடு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள முக்கிய காரணங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

Kiruparajah என்பவரால் 2018 ஆம் ஆண்டு "Coastal Erosion and Land Degradation –A Study at Navaladi, Batticaloa, Sri Lanka" என்னும் தலைப்பின்கீழ் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் நாவலடிப் பகுதியை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது குறித்த பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டு மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நிலப்பயன்பாடுகளின் மாற்றமானது கரையோர எல்லை வலயங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறி கரையோர எல்லை மாற்ற அளவுகள் மற்றும் நிலப்பயன்பாடுகளின் மாற்ற அளவுகள் ஆகியவற்றை ஒப்பிட்டு நோக்கி விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நேர்காணல், அவதானிப்புக்கள், Google earth செய்மதி விம்பங்கள் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. புவியியல் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டுடன் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு படங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவு பற்றி நோக்கும்போது குறித்த வலயமானது கரையோர அரித்தலுக்கு உட்படும் வலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இங்கு மேற்கொள்ளப்படும் நிலப்பயன்பாடுகள் கரையோர அரிப்பிலிருந்து போதுமானளவு பாதுகாப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளை வேண்டியிருப்பதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையின் 9 மாகாணங்களில் ஒன்றான கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டமானது 25 மாவட்டங்களில் ஒன்றாகும். மட்டக்களப்பு மாவட்டமானது 346 கிராம சேவகர் பிரிவுகளையும், 14 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 2633.1 சதுர கிலோமீற்றர் ஆகும். கடல் மட்டத்திலிருந்து 7.23 மீற்றர் உயரத்தில் அமைந்து காணப்படுவதுடன் 61.41 கிலோமீற்றர் நீளமான கடற்கரையினையும் கொண்டு காணப்படுகிறது. இப்பிரதேசம் 7° 55’ 10” வட அகலாங்கிற்கும் 81° 31’ 53” கிழக்கு நெட்டாங்கிற்கும் இடையில் அமைந்து காணப்படுகின்றது. மேலும், இப்பிரதேசமானது சுற்றுலாத்துறைக்குப் பிரசித்தி பெற்ற பாசிக்குடா கடற்கரையினையும் மீன்பிடிக்குப் புகழ்பெற்ற வாழைச்சேனை கடற்கரை மற்றும் கல்லடி கடற்கரை எனப் பல்வேறு கடற்கரை சூழல்தொகுதிகளைக் கொண்டும் விளங்குகின்றது.

ஆய்வுப் பிரதேசமாக மண்முனைப்பற்று தொடக்கம் மண்முனை தென்எருவில்பற்று வரையான கரையோரப் பகுதி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இக்கடற்கரையோரமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. அத்துடன் பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இப்பிரதேசம் விளங்குகின்றது. ஆய்வுப் பிரதேசமானது 90.74 சதுர கிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது. இப்பிரதேசமானது 72 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதோடு இயற்கை அம்சங்களால் சூழப்பட்ட அழகிய கடற்கரையோரங்களையும் கொண்டமைந்துள்ளது. ஆய்வுப் பிரதேச கடற்கரையோரமானது சுற்றுலாத்துறையின் விருத்திக்கும் முக்கிய பங்காற்றுகின்றது. இதன் மூலம் கடற்கரையோரப் பகுதிகளில் சிறு வியாபாரத்தை நம்பி வாழும் விற்பனையாளர்களின் வாழ்வாதாரமும் செழிப்படைகின்றது. அதுமாத்திரமன்றி, மீன்பிடி சமூகத்தினரின் பொருளாதார செயற்பாடுகளுக்கும் இவ்வாய்வுப் பிரதேசம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் சனத்தொகையானது 107095 ஆகும்.

ஆய்வுப் பிரதேசத்திற்கெனத் தனித்துவமான பௌதிக மற்றும் பண்பாட்டு அம்சங்கள் காணப்படுகின்றன. தரைத்தோற்றம், புவிச்சரிதவியல், மண்வளம், காலநிலை, நீர்வளம், தாவரப்போர்வை, இயற்கை வளங்கள் என்பன மிக முக்கியமான பௌதீக அம்சங்களாக ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் பல்வேறு

வகையான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் நெற்செய்கை, வீட்டத்தோட்டம், இறப்பர் செய்கை, தென்னை செய்கை, மீன்பிடி நடவடிக்கைகள் என்பன முக்கியமானதாகும். ஆய்வுப் பிரதேசத்தில் சமூகப் பின்னணி என்றவகையில் கல்விநிலை, சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவும் குறிப்பிடத்தக்கன.

**படம் 3.1 : ஆய்வுப் பிரதேசம்**




மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2025

**ஆய்வு முறை**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று தொடக்கம் மண்முனை தென் எருவில்பற்று வரையான கரையோர நிலவுருவங்கள் பற்றிய இவ்வாய்வானது கலப்பு முறையியலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒன்றாக உள்ளது. ஆய்வுப் பிரதேசத்தின் குடித்தொகை, பௌதிக அம்சங்கள், சமூகப் பொருளாதார நிலை, கரையோர உருவவியல் அம்சங்கள் மற்றும் கரையோர உருவவியல் அம்சங்களின் பௌதிகப் பண்புகள் தொடர்பான தகவல்கள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டு பண்புசார், அளவுசார் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. பண்புசார் தரவுகளும் அளவுசார் தரவுகளும் பயன்படுத்தபட்டுள்ளமையினால் இவ்வாய்வானது கலப்பு முறையிலமைந்த ஆய்வாக அமைகின்றது. ஆய்வில் முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளாக நேரடி அவதானம், கலந்துரையாடல் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்புக் கருவிகளாக படத்தரவுகள், இணையத்தளங்கள், அறிக்கைகள், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நேரடி அவதானிப்பின்போது ஆய்வுப் பிரதேசத்திற்கு நேரடியாக சென்று நிலவுருவங்கள் காணப்படும் இடங்கள், அந்நிலவுருவங்களின் பண்புகள், கரையோர தரையமைப்பு, பருப்பொருட்களின் தன்மை என்பன அவதானிக்கப்பட்டு உருவவியல் அம்சங்கள் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், கலந்துரையாடல் மூலமாக ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள மக்கள் மற்றும் மீனவர்களிடம் இருந்து உருவவியல் அம்சங்கள் குறித்தான விடயங்கள் கேட்டறியப்பட்டு ஆய்விற்கான தரவுகள் திரட்டப்பட்டன.

இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பின் மூலமாக ஆய்வுப் பிரதேசம் தொடர்பாக மண்முனைப்பற்று மற்றும் மண்முனை தென்னெருவில்பற்று பிரதேச செயலக அறிக்கைகள், மட்டக்களப்பு மாவட்ட வருடாந்த அறிக்கை என்பவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டதுடன் புகைப்படங்கள் மற்றும் இணையத்தள மூலங்களிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டதுடன் ஆய்வு நோக்கத்தினை அடைவதற்குத் தெளிவுத்திறன் மிக்க செய்மதிப்படங்கள் மூலம் கரையோரம் சார்ந்த தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் ஆய்வின் நோக்கத்திற்கமைய அளவுசார், பண்புசார் பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பண்புசார் பகுப்பாய்வானது விபரண முறையாகவும் ஒப்பீட்டு ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவதானிப்பு மற்றும் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட வாய்மொழி மூலமான தரவுகள், ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள விடயங்கள் என்பன தொகுத்தெடுக்கப்பட்டு அவற்றிலிருந்து கரையோர வலயம் சார்ந்த விடயங்கள் ஒழுங்குபடுத்தி ஆராயப்பட்டு விவரண ரீதியாக அவை ஆய்வில் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பண்புரீதியான பகுப்பாய்வுகள் மூலமாக கரையோர வெளியுருவவியல் அம்சங்களின் கால ரீதியான மாற்றம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது முக்கியமாக புவியியல் தகவல் முறைமை GIS தொழினுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வாகக் காணப்படுகின்றது. இதற்கு ARC GIS 10.4.1 மென்பொருள் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறித்த மென்பொருளினூடாக கரையோர வலயத்தின் உருவவியல் அம்சங்கள் இட ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றின் பரம்பல் அளவு என்பன கண்டறியப்பட்டுள்ளன. அத்துடன் கால ரீதியான பகுப்பாய்வுகளின் மூலம் உருவவியல் அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அளவு ரீதியாகக் கண்டறியப்பட்டுள்ளன. இம்மென்பொருளில் உள்ள தரவுகள் Georeferencing செய்யப்பட்டு உருவவியல் அம்சங்கள் Digitizing (எண்ணிலக்கப்படுத்தல்) செய்யப்பட்டு பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உருவவியல் அம்சங்கள் யாவற்றையும் படமாக்குவதற்கும் அவற்றின் பரம்பலைக் கண்டறிவதற்கும் ARC GIS 10.4.1 தளம் ஆய்வில் முக்கியமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கரையோர உருவவியல் அம்சங்கள் அனைத்தும் செய்மதிப் படிமங்களைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சில ஆண்டுகளுக்குரிய தரவுகள் Google Earth Pro மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்டன.

வேறுபட்ட காலத்திலும் அவற்றின் மாற்றங்களைக் கணிப்பிடுவதன் பொருட்டு சில உருவவியல் அம்சங்கள் Digitizing செய்யப்பட்டு பரப்புக்கள் கணிப்பிடப்பட்டுள்ளதுடன் சில உருவவியல் அம்சங்களின் நீள, அகலம் என்பன அளவீட்டுக் கருவியின் (Measurement tool) ஊடாக அளவிடப்பட்டுத் தரவுகள் பெறப்பட்டன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு 2006 தொடக்கம் 2025 வரையிலான காலப்பகுதியில் உருவவியல் அம்சங்களின் விருத்திப் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்காக Google Earth Pro படிமங்கள் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அளவிடப்பட்டுப் பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் அனைத்தும் Microsoft Excel 2013 மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு அவை பின்னர் ஒழுங்குப்படுத்தப்பட்ட அட்டவணைகளாகவும் வரைபடங்களாகவும் பெறப்பட்டன. இதன் மூலம் கரையோர நிலவுருவங்களின் கால ரீதியான மாற்றச் செயன்முறைகள் தொடர்பாக பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

**ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட கடற்கரையோர நிலவுருவங்கள்**

கடற்கரையானது இயங்குத்தன்மை மிக்க பகுதியாகும். அதாவது, எப்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கும் பகுதியைக் குறிக்கும். கடலில் தோன்றுகின்ற அலையானது இடைவிடாது கரையோரத்தில் அரித்தல், கொண்டுசெல்லல், படியவிடல் செயன்முறைகளின் மூலம் கரையோரங்களைப் புறவிசை மாற்றத்திற்கு உள்ளாக்குகின்றன. இதனால் கடற்கரையோரமானது பல்வேறு நிலவுருவங்களைத் தன்னகத்தே தோற்றுவிக்கின்றது. அத்தகைய கடற்கரையோர நிலவுருவங்கள் அரித்தல்சார் நிலவுருவங்கள் மற்றும் படிதல்சார் நிலவுருவங்கள் எனும் இரண்டு பிரதான வகைகளுக்குள் உள்ளடங்குகின்றன. அந்தவகையில்,

ஆய்வுப் பிரதேசமானது பிரதானமாக மூன்று நிலவுருவங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேச கரையோரத்தில் அலைகளின் செயற்பாடு, காற்றின் வேகம் போன்றவற்றின் காரணமாகக் குறித்த நிலவுருவங்கள் கடற்கரையில் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த கடற்கரையோரத்தில் தற்காலிக மற்றும் நிரந்தரமான நிலவுருவங்களும் காணப்படுகின்றன. மேலும், இவ்வாய்வுப் பிரதேசமானது நீண்டகால நிலவுருவங்கள் மற்றும் குறுகியகால நிலவுருவங்கள் அதாவது ஒரு வருட, இரு வருட கால இடைவெளிக்குள் அல்லது அதைவிடக் குறைந்த காலப்பகுதியில் உருவான நிலவுருவங்கள் எனப் பல்வேறு வகைப்பட்ட நிலவுருவங்களைக் கொண்டுள்ளது. குறித்த கடற்கரையில் காணப்படுகின்ற நிலவுருவங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்:

- மணற்கரையோரம்
- தோணா
- கஸ்ப்

இவ்வாறு ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட கரையோர நிலவுருவங்கள் ஒவ்வொன்றும் தமக்கே உரிய தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளன. அந்நிலவுருவங்கள் தொடர்பில் தனித்தனியாக நோக்குவதோடு, அவற்றின் பரம்பல் பற்றியும் விரிவாக ஆராய்வோம்.

**படம் 4.1: ஆய்வுப் பிரதேச கரையோர வெளியுருவவியல் அம்சங்கள்**




மூலம் : Google Earth மூலம் ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2025

**மணற்கரையோரம்**

மணற்கரையோரம் அலையின் படிதல் செயன்முறையினால் தோற்றம்பெறும் நிலவுருவமாகும். கரையோரப்பகுதி சார்ந்து தொடராக மணல் அல்லது சிறிய கற்கள் படிவு செய்யப்படுவதனால் இவை தோற்றமடைகின்றது. கரையோரத்திற்குச் சமாந்தரமாக நகரும் அலைகள் தடைகளுக்கு உள்ளாகும்போது படிவுகளாவதனால் இவை மணற்கடற்கரைகளாக தோற்றமடைகின்றன. மணற்கரைகள் கடற்பக்கமாக தாழ் அலைமட்ட பகுதியிலிருந்து நிலப்பக்கமாக ஓங்கல்கள் மணற்குன்றுகள் அல்லது நிரந்தரமான தாவரப்போர்வை போன்ற புவியியற் அமைப்பு மாற்றமடையும் வலயம்வரை விருத்தியடையும். மணற்கடற்கரைகளின் கால ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதில் அலைகளின் செயற்பாடு மற்றும் அடையல்கள் அல்லது மணல் சார்ந்த பொருட்களின் நகர்வுமே முக்கியமாக தீர்மானிக்கின்றது. இம்மணற்கடற்கரைகளின் செயன்முறையானது இடரீதியான மற்றும் கால ரீதியான அளவுகோள்களின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படவேண்டியதொரு விடயமாகும்.

ஆய்வுப் பிரதேசத்தில் கரையோர நிலவுருவ அம்சங்களில் முதன்மையாகக் காணப்படுவது மணற்கரையோரமாகும். குறித்த பிரதேசத்தில் அலைகளின் செயற்பாட்டினால் நன்கு விருத்தியடைந்த மணற்கரையோரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. குறித்த பிரதேசமானது நீளமான கரையோரத்தைக் கொண்டு காணப்படுவதுடன் இதில் மணற்கரையோரப் பகுதியே பெரும்பாலாகக் காணப்படுகின்றது. குறித்த மணற்கரையோரமானது ஆரையம்பதி கிழக்கு தொடக்கம் பெரியகல்லாறு 03 தெற்கு வரையிலான பகுதிகளில் நன்கு விருத்தியடைந்து காணப்படுகின்றது.

படம் 4.2: ஆய்வுப் பிரதேச மணற்கரையோரம் காணப்படும் இடங்கள்




மூலம்: Google Earth மூலம் ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2025

**தோணா**

தோணாக்கள் எனப்படுவது இயற்கையாக உருவாகிய நிலவுருவங்களாகும். இது கடலின் அருகில் காணப்படும் கரையோர நிலவுருவங்களில் ஒன்றாக விளங்குகின்றது. மானிடக் காரணிகளால் அதிகளவு பாதிப்புக்களை எதிர்நோக்கும் கரையோர நிலவுருவங்களில் தோணா மிக முக்கியமான நிலவுருவமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் தோணாக்கள் பற்றி நோக்கும்போது, கரையோரப் பிரதேசத்தில் 33க்கும் மேற்பட்ட பருவ கால ரீதியாக மாற்றம் பெற்று மீண்டும் மாற்றத்திற்கு உள்ளாகும் தோணாக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை சிறிய குட்டை அமைப்பிலும் பெரிய வால் போன்ற நீண்ட அமைப்பிலும் வெவ்வேறு உருவ அமைப்புக்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறித்த தோணாக்கள் பருவ கால மழையின் காரணமாக உருவாகும் வெள்ளத்தின்போது இயற்கையான செயற்பாட்டின் மூலமாகவோ அல்லது மானிட செயற்பாட்டின் மூலமாகவோ கடலுடன் தொடர்புடையவையாக காணப்படுகின்றன.

படம் 4.3: ஆய்வுப் பிரதேசத்தில் தோணாக்கள் காணப்படும் இடங்கள்




மூலம்: Google Earth மூலம் ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2025

**கஸ்ப்**

அலைகளினுடைய செயன்முறைகளின் விளைவாக மணற்கரைகளின் அலம்பலை வலயம் சார்ந்து விருத்திபெறும் ஓர் உருவவியல் அம்சமே கஸ்ப் ஆகும். இவற்றின் உருவாக்கம் பற்றி நோக்கும்போது, அலம்பலை வலயத்தில் அலையின் கழுவுதல் செயன்முறையினால் பிறையுருவ வடிவத்தில் உருவாக்கப்படும் அடையல்களின் படிவாக்கத்தினால் இவை

விருத்தியடைவதுடன் இவை இரு வகையான பண்புகளைக் கொண்டு காணப்படும். ஒன்று கூறான கொம்புடையவை மற்றொன்று மென் சாய்வுடைய வளைவான கஸ்ப் ஆகும்.

ஆய்வுப் பிரதேசத்தின் பிரதான கரையோர நிலவுருவமாக கஸ்ப் காணப்படுகின்றது. இந்நிலவுருவமானது இங்கு அலைகளின் செயற்பாட்டினால் உருவாகக்கூடிய மிக முக்கியமான கரையோர நிலவுருவமாகக் காணப்படுகின்றது. குறித்த நிலவுருவமானது ஆரையம்பதி கிழக்கு தொடக்கம் பெரியகல்லாறு 03 தெற்கு வரையான கடற்கரையோரங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளில் உருவாக்கம் பெற்றுக் காணப்படுவதினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதில் சிறிய மற்றும் பெரிய அளவுகளில் குறித்த கடற்கரையோரங்களில் அலைகளினால் கஸ்ப் உருவாக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் இந்நிலவுருவம் காணப்படும் இடங்களைக் கீழ்வரும் படத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

படம் 4.4: ஆய்வுப் பிரதேசத்தில் கஸ்ப் காணப்படும் இடங்கள்




மூலம் : Google Earth மூலம் ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2025

**2006-2025 வரையான காலப்பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள உருவவியல் மாற்றம்**

குறித்த காலப்பகுதியில் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட பகுதியிலுள்ள நிலவுருவங்கள் பல்வேறுபட்ட கால ரீதியான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன.

அந்தவகையில், மாற்றங்களுக்கு உள்ளான கஸ்ப் மற்றும் மணற்கடற்கரையோர நிலவுருவங்களின் மாற்றம் பற்றியே குறித்த பகுதியில் ஆராயப்படவுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் கஸ்ப் உருவவியல் அம்சமானது குறுகிய காலத்தில் விருத்திபெற்று மாற்றமடையும் தன்மை கொண்டதாகும். அலைகளினுடைய செயன்முறையின் விளைவாக மணற்கரைகளின் வலயம் சார்ந்து விருத்தியாகும் உருவவியல் அம்சமே கஸ்ப் ஆகும். கரையோரத்தின் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் முக்கியமானதொரு உருவவியல் அம்சமாக கஸ்ப்புகள் காணப்படுகின்றன.

இவை கரையோர எல்லைப் பகுதிகளில் தொடர்ச்சியான அலைவு வடிவங்களை ஏற்படுத்தி கரையோர உருவவியலில் முக்கிய மாற்றத்தினைச் செய்கின்றன. இவற்றின் உருவாக்கத்துடன் பிரதானமாக மூன்று காரணிகள் தொடர்புடையனவாக காணப்படுகின்றன. அவை அலைகளின் செயன்முறை, கரையை அண்மித்த அல்லது கரைவிலகிய மணற்பார்கள் மற்றும் குறித்த கரையோரத்தின் இயல்வு என்பனவாகும். ஆய்வுப் பிரதேசத்தில் கரையோர கஸ்ப் உருவவியல் அம்சங்களை ஆண்டு ரீதியாகப் பல்வேறு காலங்களிலும் வேறுபட்ட இடங்களிலும் காண முடிகின்றது. எனவே, 2006 தொடக்கம் 2025 வரையிலான காலப்பகுதியினுள் கஸ்ப் உருவவியல் அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அடையாளப்படுத்துவதற்கு இவ்வருடங்களில் கால ரீதியாக தோற்றம் பெற்று மாற்றமடைந்துள்ள கஸ்ப் உருவவியல் அம்சத்தின் இட ரீதியான, கால ரீதியான மாற்றங்கள் பற்றி அறிவது அவசியமாகும். இதன் உருவாக்கச் செயன்முறையினைப் பின்வரும் வரைபடம் எடுத்துக்காட்டுகின்றது.

படம் 4.5: கஸ்ப் உருவாக்கச் செயன்முறை




மூலம்: https://images.app.goo.gl/cuGiTayhZVuRtWu6

இந்நிலவுருவமானது ஆய்வுப் பிரதேசத்தில் அதிக பரப்பினைக் கொண்டு காணப்படுவதோடு, முக்கியமாக 09 இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவை குருக்கள்மடம்சார் கயோரம், வேடர்குடியிருப்பு கரையோரம், புதுக்குடியிருப்பு தெற்கு

கரையோரம், கிரான்குளம் வடக்கு கரையோரம், களுதாவளை கரையோரம், களுவாஞ்சிகுடி வடக்கு கரையோரம், ஒந்தாச்சிமடம் கரையோரம், கோட்டைக்கல்லாறு கரையோரம், பெரியகல்லாறு போன்ற கரையோரப் பகுதிகளில் பரம்பியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அரித்தல் மற்றும் படிதல் செயன்முறையினால் விருத்தியடையும் கஸ்ப்களை ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளப்படுத்தக்கூடியதாக உள்ளது. அலைகளின் உயரம் மற்றும் அலையின் நீளம் என்பன அதிகரிப்பதன் மூலமாக கரையோரம் சார்ந்த மணல் பகுதி காணப்படுவதனால் தோன்றும் கரையோர செங்குத்துச்சரிவுகள், அலையின் வேகத்தில் ஏற்படும் வேறுபாடுகளின் விளைவுகளினால் இத்தகைய அலை வடிவிலான உருவவியலினை உருவாக்குகின்றது. இதனை குறித்த கரையோரத்தில் அவதானிக்க முடியும்.

குறித்த நிலவுருவம் பற்றி பெரியகல்லாறு பகுதியில் காணப்பட்ட மீனவர் குழு ஒன்றிடம் வினவியபோது, "குறிப்பிட்ட அப்பிரதேசத்தில் காணப்படுகின்ற இவ்நிலவுருவம் காற்று வீசும் திசைக்கேற்ப மாற்றமடைவதாகக் கூறினார். மேலும், தற்போது கடலின் அரித்தல் செயன்முறை அதிகமாக உள்ளமையினால் நிலவுருவமானது முன்னர் இருந்த அளவைவிட தற்போது அதனுடைய அளவு பெரிதாகி உள்ளதாகவும் குறிப்பிட்டார்" (மீனவர் குழு, 2025). அந்தவகையில், குறித்த ஒன்பது கடற்கரை ஓரங்களிலும் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் காணப்பட்ட கஸ்ப்களின் அளவானது கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.1: கஸ்ப்புகளின் ஆண்டு ரீதியாக வியாபித்துள்ள தூர மாற்றம்

| கடற்கரையோரம் | ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | **2006** | **2015** | **2024** | **2025** |
| குருக்கள்மடம்சார் கரையோரம் (m) | 232 | 0 | 0 | 0 |
| வேடர்குடியிருப்பு கரையோரம் (m) | 0 | 164 | 322 | 325 |
| புதுக்குடியிருப்பு தெற்கு கரையோரம் (m) | 0 | 544 | 283 | 652 |
| கிரான்குளம் வடக்கு கரையோரம் (m) | 0 | 302 | 443 | 373 |
| களுதாவளை கரையோரம் (m) | 0 | 854 | 2726 | 1534 |
| களுவாஞ்சிகுடி வடக்கு (m) | 0 | 111 | 291 | 1294 |
| ஒந்தாச்சிமடம் கரையோரம் (m) | 0 | 385 | 1036 | 1661 |
| கோட்டைக்கல்லாறு (m) | 0 | 367 | 621 | 656 |
| பெரியகல்லாறு (m) | 0 | 800 | 629 | 1771 |

மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2025

குறித்த நிலவுருவமானது ஒவ்வொரு கடற்கரையிலும் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் தோற்றம் பெற்று மீண்டும் சில காலப்பகுதிகளில் அழிவுற்று பின்னர் மீள் உருவாக்கம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில், குருக்கள்மடம்சார் கடற்கரைப் பகுதியை எடுத்து நோக்கும்போது, இப்பிரதேசத்தில் 2006 டிசம்பர் மாதத்திற்குப் பின்னரான

காலப்பகுதியில் குறித்த உருவவியல் அம்சமானது அழிவடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. அதேபோன்று இந்நிலவுருவமானது காலத்திற்கேற்பவும் இடத்திற்கேற்பவும் அதனுடைய வியாபிக்கும் தன்மையானது மாற்றமடைந்துள்ளமையையும் காணக்கூடியதாக உள்ளது.

படம் 4.6: கஸ்ப்களின் விருத்தி




மூலம்: Google Earth, 2006-2025

கஸ்ப் நிலவுருவத்தைப் பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட நான்கு வருடங்களிலும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது. அதாவது, குறிப்பிட்ட சில காலங்களில் அழிவடைந்து மீண்டும் தோற்றம் பெற்றுள்ளமையை அறியமுடிகின்றது. அத்தோடு இந்நிலவுருவம் வியாபித்திருக்கும் தூர அளவுகளிலும் பல்வேறு மாற்றங்கள் காலத்திற்கேற்ப இடம்பெற்றுள்ளது. குறிப்பாக, ஆரையம்பதி கிழக்கு கரையோரத்தில் 2006 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கஸ்ப் நிலவுருவமானது அழிவடைந்து பின்னர் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் மீண்டும் தோற்றம் பெற்றுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மேற்காட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இங்கு ஆண்டு ரீதியான மாற்றங்களை அவதானிக்க்கூடியதாக காணப்பட்டாலும் மாத கால இடைவெளிகளிலே இவற்றினைச் சிறப்பாக அவதானிக்க முடியும். காரணம் கஸ்ப்கள் மாத காலங்களினுள் விருத்தியடைந்து மீண்டும் குறுகிய காலத்தில் மாற்றமடையும் ஓர் உருவவியல் அம்சமாகும். இது கோடை காலத்தில்

விருத்தியடைந்து புயல்காற்றுக் காலங்களில் ஏற்படும் சக்திக்கூடிய அலைகளினால் அழிவடைகின்றன. எனவே, இதில் மாத கால அடிப்படையிலேயே சிறப்பான வேறுபாடுகளைக் காணலாம்.

ஆய்வுப் பிரதேசத்தில் மாற்றத்திற்கு உட்பட்ட மற்றுமொரு முக்கியமான படிதல் நிலவுருவமாக மணற்கடற்கரையோரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தின் கரையோரம் பற்றி நோக்குகின்றபோது, இங்கு கூடுதலாகக் காணப்படுவது மணலான கரையோரப் பகுதியாகும். மணற்கரையோரம் அதிகமாக காணப்படும் பகுதியாக ஆரையம்பதி கிழக்கு கரையோரம், வேடர்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு தெற்கு, கிரான்குளம் வடக்கு, பெரியகல்லாறு போன்ற பகுதிகள் காணப்படுகின்றன. கடற்கரைகளின் சராசரி அகலமானது 30 மீற்றர்களாகக் காணப்படுகின்றது. அகலமான கடற்கரைகள் காணப்படுகின்ற பிரதேசங்களிலே கூடுதலாக கஸ்ப் நிலவுருவம் காணப்படுவதனையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனினும், குறிப்பிட்ட சில இடங்களில் கடற்கரையின் அளவானது 10 மீற்றருக்கும் குறைவானதாகக் காணப்படுகின்ற நிலைமையையும் இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் பின்னர் இப்பகுதியின் கடற்கரையில் பாரிய அளவிலான மாற்றங்கள் இடம்பெற்றிருப்பதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பிட்ட சில இடங்களில் படிதல்சார் செயற்பாடுகளின் காரணமாகவும் காற்றின் செயற்பாட்டினாலும் அதிகளவிலான மணல் படியவிடப்பட்டு மணல் சார்ந்த கரையோரம் அதிகமாக உருவாகியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இக்கடற்கரைப் பகுதிகள் அனைத்திலுமே சுனாமிக்கு முன்னர் அதாவது 2004 நவம்பர் மாதம் காணப்பட்ட மணற்கடற்கரையின் அளவை விடவும் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் காணப்படுகின்ற மணற்கடற்கரையானது சில இடங்களில் அதிகரித்துள்ளமையையும் சில இடங்களில் குறைவடைந்துள்ளமையையும் காணக்கூடியதாக உள்ளது. இருப்பினும், அதிகளவிலான இடங்களில் கரையோரம் அதிகரித்துள்ள நிகழ்வு இடம்பெற்றுள்ளது. எனினும், இது சில ஆண்டுகளில் குறைவடைந்தும் சில ஆண்டுகளில் அதிகளவில் படிவு செய்யப்பட்டிருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய வேறுபாடுகளைக் கண்டறிவதற்கு அதிகளவிலான மணற்கரைகளைக் கொண்ட சில இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் குறித்த ஒரே வருடத்திலான கரையோரத்தின் அளவானது கீழ்வரும் அட்டவணையின் மூலம் காட்டப்படுகின்றது.

அட்டவணை 4.2: குறித்த சில மணற்கடற்கரைகளின் ஆண்டு ரீதியான மாற்றம்

| ஆண்டு | மணற்கடற்கரையின் அகலம் | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆரையம்பதி கிழக்கு (m) | வேடர் குடியிருப்பு (m) | புதுக்குடியிருப்பு தெற்கு (m) | கிரான்குளம் வடக்கு (m) | பெரியகல்லாறு (m) |
| 2006 | 57.4 | 70.2 | 32.1 | 70.1 | 50.7 |
| 2015 | 81.9 | 34.5 | 36.4 | 82.3 | 63.7 |
| 2024 | 93.4 | 14.5 | 60.6 | 102 | 58.8 |
| 2025 | 99.5 | 10.9 | 63.7 | 115 | 74.8 |

மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2025

படம் 4.7: ஆய்வுப் பிரதேச மணற்கடற்கரைகள்




மூலம்: Googe Earth, 2006-2025

இதன் மூலமாக 2004 ஆம் ஆண்டு காணப்பட்ட கடற்கரையின் அளவைவிட 2006 டிசம்பர் மாதம் காணப்பட்ட கடற்கரையின் அளவானது சகல பகுதிகளிலுமே கணிசமானளவு குறைவடைந்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இருப்பினும், 2015 ஆம் ஆண்டு மே மாதம் குறித்த அளவானது மேலும் குறைவடைந்திருப்பதனையும் அவதானிக்க முடிவதுடன் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் குறித்த அளவானது மீண்டும் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அதன் பின்னர் கடற்கரையானது படிப்படியாக அதிகரிக்கும் நிலையை அவதானிக்க முடிகின்றது.

மேலும் மணற்கடற்கரையோரத்தின் அளவானது கரையோர செயன்முறைகளான அரித்தல் மற்றும் படிதலினால் மாறுபாட்டிற்கு உட்படுகின்றது.

குறிப்பாக, ஆரையம்பதி கிழக்கு கரையோரத்தை எடுத்து நோக்குவோமானால் 2006 ஆம் ஆண்டு 57.4 மீற்றர் அகலமுடையதாக காணப்பட்டது. ஆனால், இதனுடைய அகலமானது 2025 ஆம் ஆண்டுகளில் அதிகரித்த போக்கில் செல்வதினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, இப்பிரதேச கடற்கரை அகலமானது 99.5 மீற்றராக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்கு மாறாக வேடர் குடியிருப்பு கடற்கரையோரமானது 2006 ஆம் ஆண்டுகளில் 70.2 மீற்றர் அகலமாக காணப்பட்டதோடு முறையே 2015களில் 34.5 மீற்றராகவும், 2024 ஆம் அண்டுகளில் 14.5 மீற்றராகவும், 2025 ஆம் ஆண்டுகளில் 10.9 மீற்றராகவும் குறைவடைந்து செல்வதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலைமைக்கு மிக முக்கியமான காரணங்களாக கடலோர அரித்தல் மற்றும் தாவரப்போர்வையின் விரிவாக்கம் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்புத் தெற்குப் பகுதியினை எடுத்துநோக்குவோமானால், மணற்கடற்கரையோர அகலமானது சற்று அதிகரித்த போக்கில் செல்வதினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, 2006 ஆம் ஆண்டு 32.1 மீற்றர் அகலமுடையதாக காணப்பட்ட மணற்கடற்கரையோரமானது 2015 ஆம் ஆண்டுகளில் 36.4 மீற்றராகவும், 2024 ஆம் ஆண்டுகளில் 60.6 மீற்றராகவும், 2025 ஆம் ஆண்டுகளில் மீண்டும் குறைவடைந்து 63.7 மீற்றராகவும் காணப்படுகின்றது.

கிரான்குளம் வடக்கு கடற்கரையோரத்தை எடுத்துநோக்குவோமானால், இங்கு மணற்கடற்கரையின் அளவானது அதிகரித்த போக்கில் செல்வதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, 2006 ஆம் ஆண்டுகளில் 70.1 மீற்றராக காணப்பட்ட மணற்கடற்கரையின் அகலமானது 2015 ஆம் ஆண்டுகளில் 82.3 மீற்றராகவும், 2024 ஆம் அண்டுகளில் 102 மீற்றராகவும், 2025 ஆம் ஆண்டுகளில் 115 மீற்றராகவும் உயர்வடைந்து காணப்படுகின்றது. அத்தோடு பெரியகல்லாறு கடற்கரையோரத்தினை எடுத்துநோக்குவோமானால் மணற்கடற்கரையின் அகலமானது சற்று அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. அதாவது, 2006 ஆம் ஆண்டுகளில் 50.7 மீற்றராகவும், 2015 ஆம் ஆண்டுகில் 63.7 மீற்றராகவும், 2024 ஆம் ஆண்டுகளில் 58.8 மீற்றராகவும், 2025 ஆம் ஆண்டுகளில் 74.8 மீற்றராகவும் உயர்வடைந்து காணப்படுகின்ற நிலையினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

மேற்கூறியவற்றைத் தொகுத்துநோக்கும்போது, குறித்த ஆய்வுப் பிரதேச கடற்கரையானது அரித்தல் மற்றும் படிதலுக்கு உட்பட்டிருப்பினும் குறித்த காலப்பகுதியில் அதிகளவு படிதலுக்கு உட்பட்டுள்ளமையை அங்கு விருத்தியடைந்துள்ள நிலவுருவங்கள் மற்றும் மணற்கரையோரத்தின் விருத்தி மூலம் அறியமுடிகின்றது. ஆய்வின் முடிவுகளின்படி குறித்த கரையோரத்தில் அரித்தலை விடவும் படிதல் அதிகமாக இடம்பெற்றுள்ளமையை இதன் மூலமாக அறிய முடிகின்றது. மேலும், ஆய்வுப் பிரதேசத்தில் தாவரப்போர்வையின் அடர்த்தியானது அதிகளவில்

காணப்படுவதோடு மானிட செயற்பாடுகளும் அதிகளவில் இடம்பெறுகின்றமையை நேரடி அவதானிப்பின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

ஒளிப்படம் 4.1: ஆய்வுப் பிரதேச கடற்கரையோரம்





மூலம்: கள ஆய்வு, 2025

**முடிவுரை**

மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென் எருவில்பற்று வரையான கரையோர வலயமானது குறிப்பிட்ட சில உருவவியல் அம்சங்களைக் கொண்டு விருத்தியடைந்துள்ள கரையோரப் பிரதேசமாகும். இவ்வாய்வானது இப்பிரதேசத்தின் கரையோர உருவவியல் அம்சங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் கால ரீதியான உருவவியல் மற்றங்களையும் விரிவாக விபரிக்கின்றது. கடல்மட்ட உயர்வானது கரையோர உருவவியல் மாற்றத்தில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்யும் காரணியாகும். ஆய்வின் பெறுபேறுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான கரையோர நிலவுருவங்களாக மணற்கடற்கரையோரம், தோணா, கஸ்ப் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி குறித்த கரையோரத்தின் பிரதானமான உருவவியல் அம்சமாக கரையோரம் முழுவதிலும் சிறப்பாக விருத்தியடைந்துள்ள மணற்கரையோரம் காணப்படுகின்றது. இவற்றுடன் கால ரீதியாக விருத்தியடைகின்ற கஸ்ப் மற்றும் தோணாக்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென் எருவில் பற்று வரையான கரையோரத்தில் பிரதானமாக மணற்கடற்கரையோரம் மற்றும் கஸ்ப்களின் உருவவியல் மாற்றம் இப்பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Amarasinghe, A.G.(2020). “Indensity of Coastel Erosion in Sri Lanka: The Case of South Western Coastel Sector”. www.ajmrd.com

Balasaraswathi, P., & Srinivasalu, C. (2016). "Change Detection Analysis Of Coastal Zone Features In Cuddalore District, Tamilnadu Using Remote Sensing And GIS Techniques". Https://Pdfs.SemanticscholarOrg/62c9/17b70c17b70c3f60acd8d7f42b6d8146315bf

Cooray, P.G. & Katupotha, J. (1991). “Seminar on Causes of Coastal Erosion in Sri Lanka".Https://Portals.Iuen.Org/Library/Sites/Library/Files/Documents/CES-004.Pdf

Daly, C. J., Floc'h, F., Almeida, L. P. M., Almar, R., & Jaud, M. (2021). Morphodynamic modelling of beach cusp formation: The role of wave forcing and sediment composition. Geomorphology, 389, 107798 https://doi.org/10.1016/j.geomorph.2021.107798

Islam, Md. M., Rahman, Md. S., Kabir, Md. A., Islam, Md. N., & Chowdhury, R. M. (2020). Predictive assessment on landscape and coastal erosion of Bangladesh using geospatial techniques. Remote Sensing Applications: Society and Environment, 17, 100277. https://doi.org/10.1016/j.rsase.2019.100277

Katupotha, J., & Swan, B. (1988). "The Coastal Geomorphology In Sri Lanka Translated By Nwasdeen, F.M, Colombo, Survey Department Of Srilanka.

Lagoons and Estuaries Sriyanie Miththapala Coastal Ecosystems Series (Volume 4). (n.d.). https://portals.iucn.org/library/sites/library/files/documents/CFS-004.pdf

Mathiventhan, T & Jayasingam, T. (2018). "Geomorphological Change Along The East Coast Of Srilanka". Https://Www.Arcjournals.Org/Pdfs/Jjrsb/V6-17/2.Pdf

Shamsul Alam, A. Kabir, U.(2013). "A Study Of Morphological Changes in The Coastal Areas And Offshore Islands Of Bangladesh Using Remote Sensing". Http://Www.Sapub.Org/Global/Showpaperpdf

Zahir, 1. L. M., Madurapperuma, B., Iyoob, A. L., & Nijamir, K. (2021). Exploring the Ever-Changing Seashore Using Geoinformatics Technology. Earth, 2(3), 544-555.https://doi.org/10.3390/earth2030032

# முன்மொழியப்பட்ட இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் பற்றிய பொதுமக்களின் கண்ணோட்டம்: மன்னார் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

**Imam Fathima Ishama**

Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

ishamaimam99@gmail.com

**V. Pathmanandakumar**

Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

pathmanandakumarv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது இந்தியா இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் தொடர்பான மக்களின் கண்ணோட்டத்தை விரிவாக ஆராய்கின்றது. இப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகளைக் கண்டறியும் வகையில் வினாக்கொத்து மற்றும் நேர்காணலின் மூலம் தகவல்கள் பெறப்பட்டுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்தியா-இலங்கை நிலப்பாலம் ஒரு பொது நலத்திட்டமாக மட்டுமல்லாமல் இரு நாடுகளுக்கும் பொருளாதார, சமூக, கலாசார, சூழலியல் அடிப்படையில் பல்வேறு தாக்கங்களை உருவாக்கக்கூடிய மிக முக்கியமான ஒரு முயற்சியாகவும் விளங்குகின்றது. இரு நாட்டு அரசுகளும் மக்களின் தேவைகளைப் புரிந்து சமூக நலன்களையும் சூழல் பாதுகாப்பையும் முன்னிறுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சர்வதேச சட்டங்களுடன் இணைந்த வகையில் முறையான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் மக்களின் நலன்களுக்கு ஏற்ப திட்டத்தை முன்னோக்கி நகர்த்த முடியும். இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தமுடியும் என இவ் ஆய்வு கண்டறிந்துள்ளது. இதனால் இப்பாலம் எதிர்காலத்தில் இலங்கை-இந்தியாவிற்கிடையிலான பரஸ்பர நலன்களுக்கான ஒரு நம்பகமான பாலமாகத் திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***திறவுச் சொற்கள்:*** *நிலப்பாலம், பாரிய உட்கட்டமைப்புத் திட்டம், மக்கள் கண்ணோட்டம், மன்னார், இந்தியா-இலங்கை.*

**அறிமுகம்**

“சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம்’’ (Tamil Surangam, 2024) எனப் பாரதியார் கண்ட கனவு இன்னும் கனவாகவே உள்ளது. பாரதியார் குறிப்பிடும் இப்பாலமானது தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்திற்கும் இலங்கையில் உள்ள மன்னார் தீவிற்கும் இடையே உள்ள சுண்ணாம்புக் கற்களாலான ஆழமற்ற மேடுகளாகும் (Dinamalar, 2019). இது நமது நாகரிகத்தின் மிகப்பழைய பாலமாகும். இதனை இராமர் பாலம் (Rama's Bridge) அல்லது ஆதாமின் பாலம் (Adam's Bridge) என அழைக்கின்றனர்.

சில வருடங்களுக்கு முன் முன்மொழியப்பட்ட இந்தியா-இலங்கை திட்ட முன்னெடுப்புக்கள் மூலம் இந்நிலப்பாலம் இரு நாடுகளின் சமூக, பொருளாதார மற்றும் சூழல்

அம்சங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மிக முக்கியமான பாரிய உட்கட்டமைப்புத் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கம் இந்தியாவையும் இலங்கையையும் பௌதிக ரீதியாக இணைப்பதாகும். இந்தப் பாலம் கடலின் குறுகிய பகுதியை இணைத்து இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், சுற்றுலா மற்றும் கலாசார பரிமாற்றங்களை அதிகரிக்கின்றது. மேலும், இது இந்தியா-இலங்கை உறவுகளை வலுப்படுத்துவதோடு தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பையும் ஊக்குவிக்கிறது (Economic Times, 2020). உலக அரங்கில் இரு நாடுகளின் புவியியல் அரசியல் முக்கியத்துவத்தை மேம்படுத்தவும் இத்திட்டம் வழிவகுக்கிறது. எனவே, இதன் நன்மைகள் பொருளாதாரத்துக்கு அப்பாலும் விரிவடைகின்றன.

இந்நிலப் பாலத்தை இலங்கையின் மன்னார் மாவட்டத்துடன் இணைக்க வாய்ப்புள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. மன்னார் இலங்கையின் வடமேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ஒரு பகுதி ஆகும். இது தெற்காசிய கடல் வர்த்தகத்திற்கும் மூலோபாய ரீதியாக மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது (Perera & Wickramasinghe, 2020). இந்தப் பாலம் மன்னார் மாவட்டத்தை வர்த்தகத்திற்கும் போக்குவரத்திற்குமான ஒரு மையமாக மாற்றுவதோடு, பொருளாதார வாய்ப்புகள், உட்கட்டமைப்பு விருத்திகள் மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியையும் இப்பகுதிக்குக் கொண்டுவருவதாக அமையும் (Fernando, 2022). இத்திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார நன்மைகள் நன்கு அறியப்பட்டிருந்தாலும் அதன் வெற்றி மன்னார் மாவட்ட உள்ளூர் சமூகங்கள் அதை எவ்வாறு ஏற்கின்றனர் என்பதைப் பொறுத்தே அமையும். பாரிய அளவிலான இத்தகைய திட்டங்கள் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம், மரபுகள் மற்றும் சூழல் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. மன்னார் மக்கள் இந்த நிலப் பாலத்தை எவ்வாறு வாய்ப்பாகக் கருதுகிறார்கள் என்பதே இந்தத் திட்டத்தின் நீடித்த வெற்றியை நிர்ணயிக்கும் ஒரு முக்கிய அம்சமாகும். தற்போது முன்மொழியப்பட்ட இந்நிலப் பாலம் பற்றிய வரையறுக்கப்பட்ட ஆய்வுகள் மட்டுமே உள்ளன. இத்திட்டத்தைப் பற்றிய விவாதங்களில் மன்னார் மக்களின் கருத்துக்கள், அச்சங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போதியளவில் பொருட்படுத்தப்படவில்லை. எனவே, இவ் ஆய்வு மன்னார் மக்களின் பார்வையில் இந்தப் பாலத்தால் ஏற்படும் வாய்ப்புகளை ஆராய்கிறது.

இவ் ஆய்வானது சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழல் அம்சங்கள் ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளை மையமாகக் கொண்டுள்ளது. இது வேலைவாய்ப்புகள், வணிகத்திற்கான புதிய வாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்து உள்ளூர் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கிறது. சமூக மற்றும் கலாசார ரீதியில் இந்தியாவுடன் அதிகரித்த தொடர்புகள் மூலம் சமூக ஒருங்கிணைப்பு, கலாசார பரிமாற்றம் மற்றும் உள்ளூர் மரபுகளைப் பாதுகாத்தல் குறித்த சமூகத்தின் கண்ணோட்டங்களையும் ஆய்வு செய்கிறது. மேலும், சூழல் பற்றிய ஆய்வும் இதில் அடங்குகின்றது. இதில் நிலைபேண் தன்மை பற்றிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கருத்துக்களைத் திரட்டுவதன் மூலம் வினைத்திறனான முடிவுகளை எடுக்க உதவுவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இப்பாலம் அதன் இலக்குகளை அடைவதுடன் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதையும் அவசியமாகக் கருதுகிறது. எனவே, மன்னார் மாவட்ட

மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளாமலும் சிறிதேனும் பொருட்படுத்தாமலும் இந்தப் பாலம் போன்ற பாரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது மிகவும் சிரமமானதாக அமையும். முன்மொழியப்பட்ட இந்தியா-இலங்கை நிலப்பாலம் பாரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டமாகும். இது இந்தியாவையும் இலங்கையையும் நேரடியாக இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் பொருளாதார, சமூக மற்றும் கலாசார பரிமாற்றங்கள் இரு நாடுகளுக்கிடையே ஏற்படுகின்றன. இந்தப் பாலம் வர்த்தகம், சுற்றுலா, இருதரப்பு உறவுகள், சந்தைகளுக்கான வாய்ப்புக்கள், வேலைவாய்ப்புகள் மற்றும் பிராந்திய வளர்ச்சியை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இத்திட்டத்தின் முழுமையான வெற்றியானது தொழில்நுட்ப அல்லது நிதி கிடைக்கும் சாத்தியக்கூறுகளில் மட்டுமல்லாமல் மன்னார் மாவட்டம் போன்ற இத்திட்டத்தின் விளைவை நேரடியாக எதிர்நோக்குகின்ற பகுதிகளில் உள்ள மக்கள் இந்தப் பாலத்தை எவ்வாறு கருதுகிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது.

மன்னார் மாவட்டம் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு முக்கிய இடமாகும். மேலும், இந்நிலப்பாலம் இலங்கையின் நுழைவுப் புள்ளியாகவும் கருதப்படுகிறது. இதனால் மன்னார் மாவட்டம் இத்திட்டத்தின் வாய்ப்புகளுக்கு மையமாக உள்ளது. இப்பாலம் அதிக முதலீடு, புதிய வேலைவாய்ப்புகள், மற்றும் சுற்றுலா வளர்ச்சியைக் கொண்டு வரலாம். மன்னார் மாவட்ட மக்கள் இந்நிலப்பாலத்தை எவ்வாறு கருதுகிறார்கள், அதனால் அவர்களுக்கு என்ன வாய்ப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் பற்றி தற்போது முழுமையான தெளிவு இல்லாமல் இருக்கின்றது. இதுபோன்ற பாரிய திட்டங்கள் பற்றிய மக்களின் எதிர்பார்ப்புகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாததால் எதிர்ப்புகள், திட்டத் தாமதங்கள் அல்லது திட்டத் தோல்விகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாகின்றன.

இத்தகைய பாரிய திட்டத்தின் வெற்றியை அதன் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் மட்டுமின்றி, அதில் நேரடியாக பாதிக்கப்படும் மக்களின் பார்வையும் அனுசரணையும்தான் தீர்மானிக்கின்றன. மன்னார் மாவட்ட மக்கள் இத்திட்டத்தை எவ்வாறு உணர்கின்றனர், அவர்களது எதிர்பார்ப்புகள் என்ன என்பதான புரிதல் இத்திட்டத்தின் நீடித்த வெற்றிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தற்போதைய விவாதங்களில் மன்னார் மக்களின் பார்வைகள் பெரிதளவில் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆய்வு அவர்களின் குரல்களை முன்வைத்து, இந்த நிலப்பாலம் அவர்களுக்கு என்னவாகக் காணப்படுகின்றது என்பதை சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழல் அம்சங்களின் அடிப்படையில் ஆராய்கின்றது. எனவே, இவ்வாய்வானது மன்னார் மாவட்ட மக்களின் கண்ணோட்டத்தில் இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்கிறது. இவ் ஆய்வு பல முக்கிய விடயங்களை வெளிக்கொண்டுவரவுள்ளது. இத்தகைய பெரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்கள் வேறு இடங்களில் ஏற்படுத்தும் சமூக மற்றும் அரசியல் விளைவுகளைப் பற்றிய பரந்த விவாதங்களுக்குப் பங்களிப்பதோடு உள்ளூர் மக்களின் கருத்துக்களைக் கேட்டு அவர்களின் கருத்துக்களை மதித்து ஒரு சமமான வளர்ச்சியை உறுதிசெய்ய இவ் ஆய்வு முக்கியமானதாகும்.

**இலக்கிய மீளாய்வு**

இந்தியா மற்றும் இலங்கை இடையே நிலப்பாலம் அமைப்பது பற்றிய விவாதங்கள் கடந்த சில ஆண்டுகளில் முக்கியமானதாக மாறியுள்ளன. இத்திட்டத்தின் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள், அரசியல் சூழ்நிலைகள், சமூக-பொருளாதார விளைவுகள் மற்றும் பொதுமக்களின் கருத்துகள் எனப் பல பரிமாணங்கள் இதனைச் சுற்றிக் காணப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் BBC செய்தி வலைத்தளத்தில், கொழும்புப் பல்கலைக்கழக நிலவியல் துறை முன்னாள் பேராசிரியர் எஸ்.ஏ. நோர்பட் உடன் இடம்பெற்ற நேர்காணலில், இந்தியா-இலங்கை இடையே பாலம் அமைப்பது புவியியல் ரீதியாக சாத்தியமானது என்றும், குறைந்த ஆழமுள்ள பாக் நீரிணையின் அமைப்பு இதற்குக் கைகொடுக்கின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், இதன் பின்னணியில் ஒரு அரசியல் நோக்கமுமுண்டு என்ற விமர்சனமும் இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளது. அதே வருடம் Malaimurasu, (2023) நாளிதழில் எழுதிய கட்டுரையில், இத்திட்டம் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைப்பாடுகளால் சிக்கலாக மாறும் என்கிற விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக, எல்லை தாண்டும் வசதிகள் மற்றும் அகதிகள் தொடர்பான பிரச்சினைகள் மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டதற்கான எடுத்துக்காட்டுகள் மூலம், இந்திய அரசு இந்தத் திட்டத்தை விரும்பாது என்கின்றார்.

2023 இல் Sathsarani மற்றும் Sarvanantha ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்தியா-இலங்கை இடையே பாலம் அமைப்பது பொருளாதார வர்த்தகத்தை மேம்படுத்தும் என்ற அடிப்படையில் அதன் தாக்கங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நேர்மறை விளைவுகள் எதிர்மறைகளைவிட மேலாக இருக்கும் என்ற நிலைப்பாடு இவ்வாய்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதேபோல் 2023 இல் Perera மற்றும் Fernando ஆகியோரின் ஆய்வில், கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தில் பொதுமக்களின் கருத்துகள், எதிர்பார்ப்புகள் மற்றும் அச்சங்களைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் வெற்றிகரமாக அமைய பொதுமக்களின் ஆதரவு முக்கியமானது என்பதை உணர முடிகிறது.

Chakraborty, & Rahman, (2022), மற்றும் Fernando, (2022) ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், எல்லை தாண்டிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் (Cross-Border Infrastructure Projects) உள்ளூர் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் நேரடித் தாக்கங்கள், வேலைவாய்ப்பு, வணிக வளர்ச்சி மற்றும் சமூக மாற்றங்களை விவரிக்கின்றன. குறிப்பாக, பங்களாதேஷ் மற்றும் ஹாங்காங் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை மையமாகக் கொண்டு மக்களின் பங்களிப்பு, சூழல் பாதிப்பு, மற்றும் திட்ட நிதிநிலை ஆகியவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. 2007 இல் Subramanyam Raju எழுதிய ஆய்வில் இந்தியா-இலங்கை உறவுகளின் வரலாற்று மற்றும் கலாசார நெருக்கம், இரு நாடுகளுக்கிடையே காணப்படும் அரசியல் மாறுபாடுகள் என்பன பற்றி விரிவாக விவரிக்கப்படுகின்றது. இந்த வரலாற்றுப் பின்னணி, நிலப்பாலம் திட்டத்தின் நடைமுறையைப் புரிந்துகொள்ள முக்கியமான புலனாய்வு கொடுப்பதாக அமைகின்றது.

Edwards மற்றும் Smith ஆகியோர் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் வெளியிட்ட ஆய்வுகளில், பொதுமக்களின் மனோநிலை, ஆதரவு அல்லது எதிர்ப்பு போன்றவை ஒரு திட்டத்தின் வெற்றியில்

முக்கிய பங்காற்றுகின்றன என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஹாங்காங்-ஜுஹாய்-மக்காவ் பாலம் போன்ற உலகளாவிய எடுத்துக்காட்டுகள் இதனை ஆதரிக்கின்றன. 2007-2023 வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இந்தியா-இலங்கை நிலப்பாலம் மற்றும் உலகளாவிய பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்களைப் பற்றிய புரிதல்களை வழங்குகின்றன. ஆனால், மன்னார் மாவட்ட மக்களின் நேரடிக் கருத்துக்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மெருகேற்றத்திற்குள்ளாகவில்லை. மன்னார் மாவட்ட மக்கள் – இத்திட்டத்தின் நேரடித் தாக்கத்திற்குள்ளாகும் முக்கிய பங்குதாரர்கள் – இவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள், என்ன அச்சங்களை உணர்கிறார்கள் என்பதற்கான ஆய்வுகள் மிகக் குறைவாகவே உள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு, "முன்மொழியப்பட்ட இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் பற்றிய பொதுமக்களின் கண்ணோட்டம்: மன்னார் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு" எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இது, முன்மொழியப்பட்ட நிலப்பாலத் திட்டத்திற்கான சமூக அனுசரணையை நிர்ணயிக்கும் அடிப்படைத் தகவல்களை வழங்கும் முக்கிய இலக்கிய இடைவெளியைப் பூர்த்திசெய்கின்றது.

## ஆய்வுப் பிரதேசமும் முறையியலும்

### ஆய்வுப் பிரதேசம் மற்றும் அமைவிடம்

மன்னார் மாவட்டம் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் புத்தளம் மாவட்டம், தென்கிழக்குப் பகுதியில் அனுராதபுரம் மாவட்டம், கிழக்குப் பகுதியில் வவுனியா மாவட்டம், வடகிழக்குப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டம் வடக்குப் பகுதியில் கிளிநொச்சி மாவட்டம் மற்றும் மேற்குப் பக்கம் நீண்ட கரையோர பகுதியால் சூழப்பட்டுள்ளது. இதன் மொத்த நிலப்பரப்பு 1996 சதுர கிலோமீட்டர் பரப்பளவாகும். இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பின் சுமார் 3.04% ஆகும். 2023ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மன்னார் மாவட்டத்தில் 48,863 குடும்பங்கள் காணப்படுவதோடு அதன் மக்கள் தொகை 162,864 ஆகும் (படம் 1).

### ஆய்வு முறையியல்

இந்நிலப் பாலத்தின் வாய்ப்புகள் தொடர்பாக பொதுமக்களின் கண்ணோட்டங்களை அறிந்துகொள்ளவும் அதற்கான தரவுகளைப் பெற்றுக்கொள்ளவும் இவ்வாய்வில் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினைச் செம்மையாக்கல், பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் வெளிப்படுத்தல் போன்றவற்றிற்கு பல நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளைப் பயன்படுத்தும் கலப்பு ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுத் தேவையான தரவுகள் பெறப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையானது 2022.12.31 கணிப்பின் படி 162,864 ஆகும். மாவட்டத்தில் காணப்படக்கூடிய மொத்தக் குடித்தொகையில் எளிய எழுமாற்று மாதிரி முறையின் மூலம் 80 மாதிரிகள் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தவகையில், இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து முறை மற்றும் நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டன.




படம் 1: ஆய்வுப் பிரதேசம்
(மூலம்: ஆய்வாளர், 2024)

குடித்தொகையில் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளிடம் 80 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, ஆய்விற்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்விற்குத் தேவையான குறைந்தபட்ச மாதிரிகளின் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு $N = \frac{z^2 P(1-P)}{d^2}$ என்ற சமன்பாடு பிரியோகிக்கப்பட்டது (Cochran,1977). இவ்வாய்விற்காக மற்றுமொரு முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையாக நேர்காணல் முறை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு தொடர்பாக தகவல்களைத் திரட்டும் பொருட்டு முக்கிய தகவல்கள் மற்றும் கருத்துக்களை நேரடியாக அப்பகுதியில் உள்ள முக்கிய நபர்களைச் சந்தித்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார் நகரம், மடு, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு என்ற ஐந்து பிரதேச செயலக பிரிவிலிருந்தும் ஐந்து நபர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இங்கு ஐந்து நபர்கள் தெரிவுசெய்யப்பட்டு நேர்காணல் மேற்கொள்ளப்பட்டதுடன் ஒவ்வொருவரிடமும் குறைந்தது 15 நிமிடங்கள் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.

பிரதேச செயலகம் மன்னார் மாவட்டம் - 2023, மன்னார் விரிகுடாவும் அதன் சுற்றுசூழலும் ஆசிரியர்களுக்கான கையேடு போன்றவற்றிலிருந்து இவ்வாய்வின் இரண்டாம் நிலைத் தரவுசேகரிப்பிற்காக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இவ்வாய்விற்கான இரண்டாம் நிலைத் தரவுகள் சில கூகுள் இணையத்தளத்தில் நிலப்பாலம், மக்கள் கண்ணோட்டம், பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் ஆகிய பிரதான சொற்களை பயன்படுத்தி தேடுதல் மேற்கொண்டு பெறப்பட்டன. பெறப்பட்ட ஆவணங்கள் ஆய்வாளரால் சரிபார்க்கப்பட்டு ஆய்வுக்குப்

பொருத்தமான ஆவணங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் ரீதியான தரவுகளைப் பயன்படுத்திச் சராசரி, வீதம் போன்றவற்றைப் பயன்படுத்தி விபரண ரீதியான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், கருதுகோள் பரிசோதனைக்காக Chi-Square Test பயன்படுத்தப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் கருப்பொருள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் மன்னார் மாவட்ட மக்களின் கண்ணோட்டத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை அறிந்துகொள்வதற்காக முதலாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் வினாக்கொத்துக்கள் மற்றும் நேர்காணல்களின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் இவ்வாய்வின் நோக்கங்களைச் சிறப்பாக அடையும் வகையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில், இவ்வாய்வின் பிரதான நோக்கமான இந்தியா-இலங்கை நிலப்பாலத்திற்கான வாய்ப்புகளைக் கண்டறியும் வகையில் பொருளாதார ரீதியிலான வாய்ப்புகள், சமூக கலாசார வாய்ப்புகள் மற்றும் சூழல் ரீதியான நன்மைகள் என்பன ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மக்கள் இந்நிலப்பாலம் தொடர்பாக கொண்டுள்ள எண்ணங்கள் தெளிவாக புலப்படுத்தப்பட்டுள்ளன.

பகுப்பாய்வின் அடிப்படையில் பால் ரீதியாக நோக்கும்போது அதிகளவிளான ஆண்களும் அவர்களைவிடச் சற்று குறைவாக பெண்களும் பதிலளித்துள்ளனர். இதனை வரைபடம் 1 தெளிவுபடுத்துகிறது. இதில் 53.8 வீத ஆண்களும் 46.3 வீத பெண்களும் நிலப்பாலம் தொடர்பான அவர்களது கருத்துக்களைத் தெளிவாக முன்வைத்துள்ளனர்.




வரைபடம் 1: பால்நிலை
(மூலம்: ஆய்வாளர், 2024)

மேலும் குறித்த ஆய்விற்குட்படுத்தப்பட்டவர்களை வயதடிப்படையில் 18-25, 26-35, 36-45, 46-55, 56 மேற்பட்டவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் 18-25 வயதுக்கிடைப்பட்டவர்கள் 12.5 வீதத்தினராகவும் 26-35 மற்றும் 36-45 வயதுக்கிடைப்பட்டவர்கள்

26.3 வீதத்தினராகவும் 46-55 வயதுக்கிடைப்பட்டவர்கள் 12.5 வீதத்தினராகவும் ஏனைய 22.5 வீதமானவர்கள் 56 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். தொழில் ரீதியான நோக்கும் போது அரச ஊழியர்கள் 30 வீதமாகவும் தனியார்துறை ஊழியர்கள் 12.5 வீதமாகவும் சுயதொழில் புரிபவர்கள் 41.3 வீதமாகவும் மாணவர்கள் 10 வீதமாகவும் முறையான தொழிலற்றவர்கள் 6.3 வீதமானவர்களுமாக காணப்படுகின்றனர்.

அடுத்து எழுமாற்றாகத் தகவல் திரட்டப்பட்டவர்களின் கல்விநிலை தொடர்பாக நோக்கும்போது ஆரம்பக் கல்வி கற்றவர்கள் 1.3 வீதமாகவும் இடைநிலைக் கல்வி கற்றவர்கள் 23.8 வீதமாகவும் உயர்நிலைக் கல்வி கற்றவர்கள் 57.5 வீதமாகவும் மூன்றாம் நிலைக் கல்வி கற்றவர்களின் வீதம் 15 ஆகவும் 2.5 வீதம் முறையாக கற்காதவர்களுமாக காணப்படுகின்றனர். அத்துடன் இதில் பதிலளித்த எண்பது நபர்களும் எவ்வளவு காலம் மன்னார் மாவட்டத்தில் வசித்துள்ளனர் எனப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டபோது ஒரு வருடத்திற்குக் குறைவாக எவரும் வசிக்கவில்லை எனவும் 1-5 ஆண்டுகளாக 7.5 வீதமானவர்களும் 6-10 ஆண்டுகளாக 6.3 வீதமானவர்களும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக 86.3 வீதமானவர்களும் வசிக்கின்றனர். மன்னார் மாவட்டத்தில் பொருளாதார வாய்ப்புகள் தொடர்பாக நோக்கும்போது 92.5 வீதமானோர் இதனைச் சாதகமாகவே கருதுகின்றனர். இவர்கள் இந்நிலப்பாலத்தினைப் பொருளாதார ரீதியாக சாதகமாகக் கருதுவதற்கான முக்கிய காரணிகளை வேலை உருவாக்கம், அதிகரித்த வர்த்தகம், உள்ளூர் வணிகங்களுக்கு ஏற்படும் ஊக்கம், உட்கட்டமைப்பு மேம்பாடு, சுற்றுலாத்துறை வளர்ச்சி, கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் என அடுக்கிக் கொண்டு செல்லமுடியும். இவை மன்னார் மாவட்டத்தைப் பலபடி வளர்ச்சிக்கு உட்படுத்துவதோடு முழு இலங்கையையும் பாரிய பொருளாதார வளர்ச்சிக்கு உட்படுத்துவதாகக் கருதுகின்றனர்.




வரைபடம் 2: பொருளாதார வாய்ப்புக்கள் தொடர்பான மக்கள் கண்ணோட்டம்
(மூலம்: ஆய்வாளர், 2024)

இந்நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான மக்கள் கருத்துக்களை வரைபடம் 3 எடுத்துக்காட்டுகின்றது. இதில் 19 வீதமானோர் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று கூறுவதோடு இந்நிலப்பாலத் திட்டமிடல் தொடக்கம் கட்டுமானப் பணிக்காலம் மற்றும் தொடர்ந்து அதற்கு பிற்பட்ட காலம் வரை வேலை வாய்ப்புகள் புதிதாக உருவாக்கப்பட்ட வண்ணமே காணப்படும் என்பதே பெரும்பாலோரின் கருத்தாக அமைகின்றது.

அத்துடன் 17.9 வீதமானோர் வர்த்தகம் மேலும் விரிவடைவதாகக் கருதுகின்றனர். மேலும், 16.8 வீதமானோர் உள்ளூர் வணிகங்களுக்கு அதிகரித்த போட்டி ஏற்படும் எனவும் கூறுகின்றனர். ஏனெனில், வர்த்தகம் விரிவடைய விரிவடைய உள்ளூர் வணிகங்களுக்கு ஊக்கமும் போட்டியும் அதிகரிப்பதாகக் கருதுகின்றனர். இதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரிப்பதாக 13.5 வீதமானோர் கருதுகின்றனர். அத்துடன் நாட்டின் மொத்த வருவாயில் முக்கிய பங்கு வகிக்கும் சுற்றுலாத்துறை வளர்ச்சி பெறும் என 17 வீதமானவர்கள் கூறுகின்றனர். அத்துடன் நின்றுவிடாது தங்களுக்கு முடியாவிட்டாலும் தங்களது குழந்தைகள் மற்றும் எதிர்கால சந்ததி விருத்திக்காக இந்நிலப்பாலத்தின் மூலம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் எனப் 11 வீதமானோர் கருதுகின்றனர். இவை தவிர்ந்த ஏனைய எதிர்பாராத பல வாய்ப்புகள் கிடைக்கும் எனவும் 4.9 வீதமானோர் கருதுகின்றனர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பற்றிப் பேசும்போது ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவருடனான நேர்காணலின்போது "இந்திய வைத்திய நிபுணர்கள், சத்திரமாற்றுச் சிகிச்சை வைத்தியர்கள் இலங்கையின் மன்னாருக்கு வந்து செல்லும் வாய்ப்புகள் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.




வரைபடம் 3: நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார வாய்ப்புகள்
(மூலம்: ஆய்வாளர், 2024)

இவ்வாறான பல பொருளாதார வாய்ப்புகள் இருப்பதாகப் பெரும்பான்மையினர் கருதுகின்றனர். இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இந்நிலப்பாலம் தொடர்பான புதிய வணிகம் அல்லது வேலைவாய்ப்புகளைத் தொடர நீங்கள் தயாராக உள்ளீர்களா என வினவப்பட்ட போது 63.8 வீதமானவர்கள் புதுமாற்றத்திற்குத் தயாராகும் வகையில் ஆம் எனப் பதிலளித்துள்ளனர். எதிர்கால நடவடிக்கைகளை உறுதியாகத் தீர்மானிக்க முடியாது என்ற மனோநிலையில் இருப்பவர்கள் அதாவது 21.3 வீதமானவர்கள் உறுதியாக கூற முடியாது என்று பதில் அளித்துள்ளனர். அத்துடன் குடும்ப சூழ்நிலை மற்றும் சுய விருப்பு வெறுப்பின் அடிப்படையில் மிகக் குறைவான அதாவது 15 வீதத்தினர் இல்லை என்று அவர்களது கண்ணோட்டங்களைத் தெளிவுபடுத்தி உள்ளனர். மேலும், குடிசன ரீதியான விபரங்கள் (வயது, பாலினம், தொழில், கல்வி நிலை, வசிக்கும் கால அளவு) மற்றும் மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார அபிவிருத்தியில் நிலப்பாலத்தின் தாக்கம் தொடர்பாக மக்கள் கருத்திற்குமிடையிலான Chi-Square பகுப்பாய்வை அட்டவணை 1 காட்டுகிறது.

இவ் அட்டவணையானது மன்னார் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட நிலப்பாலத்திற்கானக் குடிசன ரீதியான விபரங்கள் (வயது, பால், கல்வி நிலை, தொழில், வசிக்கின்ற கால அளவு) மற்றும் மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியை இந்த நிலப்பாலம் எவ்வாறு பாதிக்கும் என மக்கள் நினைக்கிறார்கள் என்பதற்கிடையேயான தொடர்பைக் கணிப்பதற்கு Chi-Square பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியில் நிலப்பாலத்தின் தாக்கம் தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படும் கருத்துக்களில் குறித்த பகுதி மக்களின் வயது, பாலினம், தொழில், கல்வி, வசிக்கும் கால அளவு என்பன செல்வாக்குச் செலுத்தவில்லை என்பதனை chi-square பகுப்பாய்வு தெளிவுபடுத்துகிறது. இக்குடிசன ரீதியான விபரங்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார அபிவிருத்தியை நிலப்பாலம் எவ்வாறு பாதிக்கும் என மக்கள் நினைப்பதற்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லை என முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக, வயதிற்கான Chi-Square பெறுமானம் 7.557 (df = 8, p = .478), பால்நிலைக்கான Chi-Square பெறுமானம் 3.524 (df = 2, p = .769), தொழிலிற்கான Chi-Square பெறுமானம் 8.783 (df = 8, p = .361), கல்வி நிலைக்கான Chi-Square பெறுமானம் 8.027 (df = 8, p = .431), வசிக்கின்ற கால அளவின் Chi-Square பெறுமானம் 1.967 (df = 4, p = 1.967) எனக் கணிப்பிடப்பட்டுள்ளன.

இங்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரும்பாலும் P பெறுமானம் 0.05 அளவைவிட அதிகமாகவே உள்ளது. எனவே, இது கருதுகோளை ஏற்றுக்கொள்ள வழிவகுத்துள்ளது. இது குடிசன ரீதியான விபரங்களிற்கும் மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியை நிலப்பாலம் எவ்வாறு பாதிக்கும் என மக்கள் நினைப்பதற்குமிடையே எவ்வித தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. ஆகவே, மன்னார் மாவட்ட மாதிரித் தெரிவில் இக்குடிசன ரீதியான விபரங்கள் மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியை நிலப்பாலம் எவ்வாறு பாதிக்கும் என மக்கள் நினைப்பதற்குமிடையே எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை என இறுதியாக அறியப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலப் பாலம் மன்னார் மாவட்டத்தின் சமூக-கலாசார வாழ்வை எவ்வாறு பாதிக்கின்றது என்ற மக்கள் கண்ணோட்டத்தை நோக்கும்போது, 46.3 வீதமானவர்கள் நேர்மறையாகப் பாதிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் உறுதியாகக் கூற முடியாத நிலையில் 37.5 வீதமானவர்கள் காணப்படுகின்றனர். அத்துடன் 16.3 வீதத்தினரே இதனை எதிர்மறையாகக் கருதுகின்றவர்களாக காணப்படுகின்றார்கள்.

*அட்டவணை 1: Chi-Square பகுப்பாய்வு*

| | Chi-Square பகுப்பாய்வு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வயது, பாலினம் , தொழில் , கல்விநிலை, வசிக்கும் கால அளவு மற்றும் மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார அபிவிருத்தியில் நிலப்பாலத்தின் தாக்கம் தொடர்பாக மக்கள் கருத்து | | | | | |
| | | Chi-Square பெறுமானம் | df | N | p பெறுமானம் | $H_0$ கருதுகோள் |
| மன்னார் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியில் நிலப்பாலத்தின் தாக்கம் தொடர்பாக மக்கள் கருத்து | வயது | 7.557 | 8 | 80 | .478 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | பாலினம் | .524 | 2 | 80 | .769 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | தொழில் | 8.783 | 8 | 80 | .361 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | கல்விநிலை | 8.027 | 8 | 80 | .431 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | வசிக்கும் கால அளவு | 1.967 | 4 | 80 | .742 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |

மூலம்: ஆய்வாளர், 2024




வரைபடம் 4: நிலப்பாலம் மன்னார் மாவட்டத்தின் சமூக-கலாசார வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றம் தொடர்பான கண்ணோட்டம்
(மூலம்: ஆய்வாளர், 2024)

இந்நிலப்பாலம் தொடர்பான சமூக-கலாசார மாற்றங்கள் தொடர்பாக வினவப்பட்ட போது சமூக-கலாசாரம் தொடர்பாக எதிர்மறையாக மற்றும் உறுதியாகக் கூற முடியாத நிலையில் இருந்தவர்கள்கூட இந்நிலப்பாலம் தொடர்பான கலாசார வாய்ப்புகள் காணப்படுகின்றன என்று பதிலளித்துள்ளனர். அந்தவகையில், இந்நிலப் பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய சமூக-கலாசார மாற்றங்களை வரைபடம் 5 ஆனது எடுத்துக்காட்டுகின்றது. இதில் முதன்மை வாய்ப்பாக இந்தியாவுடன் அதிகரித்த கலாசார பரிமாற்றம் காணப்படுவதாக 28 வீதமானவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் மதம் மற்றும் ஆன்மீக பயணங்களை மேற்கொள்ள விரும்புவதாக 18 வீதமானவர்கள் கூறியுள்ளதுடன் சமூக மற்றும் குடும்ப இணைப்புகள் வலுப்படுத்தப்படும் என 20 வீதமானவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதில் ஏனையவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் தேசிய கலைஞர் ஒருவரின் நேர்காணலில் கலாசார விடயங்கள் பரிமாறப்படும் என அவர்

கூறும்போது *"ஆய கலைகள் சிறப்பாக வளருமே அம்மா! அதில் நம் நாட்டவர் சென்று பயின்று வர நல்ல வாய்ப்புகள் உருவாகும்"* எனக் கூறினார்.




வரைபடம் 5: நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய சமூக-கலாசார வாய்ப்புகள்
(மூலம் : ஆய்வாளர், 2024)

இந்தியாவிற்கும் இலங்கையிற்கும் இடையில் கலாசார பரிமாற்றத்தை அதிகரிக்க வழிவகுக்குமா என வினவப்பட்ட சிறப்பு வினா ஒன்றிற்கு 93.8 வீதமானவர்கள் வழிவகுக்குமென கருதுகின்றார்கள். அத்துடன் மன்னார் மாவட்டத்தில் இந்நிலப்பாலமானது சமூக ஒற்றுமையில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்ற மக்களது கண்ணோட்டத்தை அறிந்துகொள்வதற்காக வினாவப்பட்டபோது 79 வீதமானவர்கள் இது சமூக உறவுகளை வலுப்படுத்தும் எனத் தெளிவாக கூறியுள்ளனர். 12 வீதமானவர்கள் மாத்திரமே சமூக உறவுகளைப் பலவீனப்படுத்தும் என்று கருதுகின்றனர். இன்னும் 9 வீதமானவர்கள் சமூக உறவில் எவ்வித மாற்றமும் ஏற்படாது எனக் கருதுகின்றனர். அட்டவணை 2 இல் குடிசன ரீதியான விபரங்கள் (வயது, பாலினம், தொழில், கல்விநிலை, வசிக்கும் கால அளவு) மற்றும் நிலப்பாலத்தினால் ஏற்படும் சமூக, கலாசார தாக்கங்கள் தொடர்பாக மக்களின் கருத்திற்குமிடையிலான Chi-Square பகுப்பாய்வு காட்டப்பட்டுள்ளது.

இந்த அட்டவணையானது மன்னார் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட நிலப்பாலத்திற்கான குடிசன ரீதியான விபரங்கள் (வயது, பால், கல்விநிலை, தொழில், வசிக்கின்ற கால அளவு) மற்றும் முன்மொழியப்பட்ட நிலப்பாலம் மன்னார் மாவட்டத்தின் சமூக, கலாசார வாழ்வை எவ்வாறு பாதிக்கும் என மக்கள் கருதுவதற்குமிடையேயான தொடர்பைக் கணிப்பதற்கு Chi-Square பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்குடிசன ரீதியான விபரங்கள் மற்றும் மன்னார் முன்மொழியப்பட்ட நிலப்பாலத்தின் ஊடாக சூழல் ரீரியான பாதிப்பு ஏற்படுமா என மக்கள் கருதுவதற்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லை (Association) என முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக வயதிற்கான Chi-Square பெறுமானம் 11. 847 (df = 8, p = .158), பால்நிலைக்கான Chi-Square பெறுமானம் 2.697 (df = 2, p = .260), தொழிலிற்கான Chi-Square பெறுமானம் 14.184 (df = 8, p = .077), கல்வி நிலைக்கான Chi-Square பெறுமானம் 26.907 (df = 8, p = .001), வசிக்கின்ற கால அளவின் Chi-Square பெறுமானம் 4.096 (df = 4, p = 393) எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இங்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரும்பாலும் P பெறுமானம் 0.05 அளவைவிட அதிகமாகவே உள்ளது. எனவே, இது கருதுகோளை

ஏற்றுக்கொள்ள வழிவகுத்துள்ளது. இது குடிசன ரீதியான விபரங்களிற்கும் முன்மொழியப்பட்ட நிலப்பாலம் மன்னார் மாவட்டத்தின் சமூக, கலாசார வாழ்வை எவ்வாறு பாதிக்கும் என மக்கள் கருதுவதற்குமிடையேயான எவ்வித தொடர்பும் காணப்படவில்லை என்பதனை விளக்குகிறது.

எனினும், கல்வி நிலைமைகளின் அடிப்படையில் மக்கள் கருத்துகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. கல்வி நிலை அடிப்படையில் சமூக மற்றும் கலாசார வாழ்க்கையில் நிலப்பாலம் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் தொடர்பாக வேறுபாடு காணப்படுகிறது. இந்தப் பகுப்பாய்வு அதன் எதிர்மறை முடிவை வெளிப்படுத்துகிறது. கல்விநிலைக்கான Chi-Square பெறுமானம் 0.05 விடக் குறைவாக உள்ளது (அதாவது $P = 0.001$). எனவே, பூச்சியக் கருதுகோளை நிராகரிக்கலாம். கல்விநிலை அதிகரிக்கும்போது மனிதர்களின் சிந்தனை, பார்வை, மற்றும் கலாசார வாழ்வின் விருத்தி அதிகமாகிறது. இம்முடிவு கல்விநிலையின் உயர்வு சமூக, கலாசார வாழ்க்கையில் நிலப்பாலத்தின் தாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. எனவே, கல்விநிலை தவிர்த்த ஏனைய குடிசன ரீதியான விபரங்கள் முன்மொழியப்பட்ட நிலப்பாலத்தினால் மன்னார் மாவட்டத்தில் சமூக-கலாசார ரீதியாக ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பான கருத்துக்களில் செல்வாக்குச் செலுத்தவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2: Chi-Square பகுப்பாய்வு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Ch i-Square பகுப்பாய்வு** | | | | | |
| | வயது, பாலினம், தொழில், கல்விநிலை, வசிக்கும் கால அளவு மற்றும் நிலப்பாலத்தினால் ஏற்படும் சமூக, கலாசார தாக்கங்கள் தொடர்பாக மக்களின் கருத்துக்கள் | | | | | |
| | | Chi-Square பெறுமானம் | Df | N | P பெறுமானம் | $H_0$ கருதுகோள் |
| நிலப்பாலத்தினால் ஏற்படும் சமூக, கலாசார தாக்கங்கள் தொடர்பாக மக்களின் கருத்துக்கள் | வுயது | 11. 847[a] | 8 | 80 | .158 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | பாலினம் | 2.697[a] | 2 | 80 | .260 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | தொழில் | 14.184 | 8 | 80 | .077 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | கல்வி நிலை | 26.907 | 8 | 80 | .001 | ஏற்றுக்கொள்ளப்படவில்லை |
| | வசிக்கும் கால அளவு | 4.096 | 4 | 80 | .393 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |

மூலம்: ஆய்வாளர், 2024

நிலப்பாலத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் சூழல் ரீதியான நன்மைகள் பற்றி வினவப்பட்ட போது எதிர்காலத்தைக் கற்பனையில் கொண்டபடி மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு, சுற்றுலாவுக்கான வாய்ப்புகள், வளங்களுக்கான சிறந்த பயன்பாடு, பொருளாதார தூண்டல் மற்றும் போக்குவரத்து மாசு குறைப்பு என இலங்கையின் புதியதொரு எதிர்காலத்தைக் கருதுவதாக பதில் அளித்தனர் என்பதை வரைபடம் 6 காட்சிப்படுத்துகிறது.

மேலும், இந்நிலப்பாலம் பாரிய உட்கட்டமைப்புத் திட்டமாகும். அதனை மேற்கொள்வதன் மூலம் இதனைத் தொடர்ந்து மேலும் பல உட்கட்டமைப்பு விருத்திகள் ஏற்படும் என 22.4

வீதமானவர்கள் கருதுகின்றனர். அத்துடன் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கும் இந்தியாவில் இருந்து இலங்கைக்குமான சுற்றுலாவிற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக 24.7 வீதமானவர்கள் குறிப்பிடுகின்றார்கள். மேலும், சிறுதொழில் முதல் பாரிய முதலீடுகள் வரையிலான பொருளாதாரத் தூண்டுதல்கள் காணப்படுவதாக 21.6 வீதமானவர்கள் கருதுவதோடு வளங்களுக்கான சிறந்த பயன்பாடு காணப்படுவதாக 21.2 வீதமானவர்கள் கருதுகின்றனர்.




வரைபடம் 6: நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய சூழல் ரீதியான வாய்ப்புகள்
(மூலம்: ஆய்வாளர், 2024)

எவ்வாறாயினும், இலங்கை முன்னேற்றத்தை எதிர்பார்க்கின்ற போதிலும், இங்கு கொண்டுவரப்படும் இதுபோன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் சூழலைப் பாதிக்க எந்தச் சமூகமும் அனுமதிக்காது என்பதனைத் தெளிவுபடுத்தும் வகையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிக முக்கியமானது என்பதில் 91.3 வீதமானவர்கள் உறுதியாக காணப்படுகின்றார்கள் என்பதை வரைபடம் 7 எடுத்துக்காட்டுத்துகிறது.




வரைபடம் 7: சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் அவசியம் தொடர்பான மக்கள் கண்ணோட்டம்
(மூலம்: ஆய்வாளர், 2024)

அட்டவணை 3 ஆனது குடிசன ரீதியான விபரங்கள் (வயது, பாலினம், தொழில், கல்விநிலை, வசிக்கும் கால அளவு) மற்றும் நிலப்பாலத்தின் சுற்றுச் சூழல் தாக்கங்கள் தொடர்பான மக்களின் கருத்திற்குமிடையிலான Chi-Square பகுப்பாய்வு காட்டுகின்றது.

*அட்டவணை 3: Chi-Square பகுப்பாய்வு*

| | Chi-Square பகுப்பாய்வு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வயது, பாலினம், தொழில், கல்விநிலை, வசிக்கும் கால அளவு மற்றும் நிலப்பாலத்தின் சுற்றுச் சூழல் தாக்கங்கள் தொடர்பான மக்களின் கருத்துக்கள் | | | | | |
| | | Chi-Square பெறுமானம் | df | N | p பெறுமானம் | $H_0$ கருதுகோள் |
| நிலப்பாலத்தின் சுற்றுச்சூழல் தாக்கங்கள் தொடர்பான மக்களின் கருத்துக்கள் | வயது | 5.219 | 8 | 80 | .734 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | பாலினம் | 1.657 | 2 | 80 | .437 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | தொழில் | 8.027 | 8 | 80 | .431 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | கல்விநிலை | 11.292 | 8 | 80 | .186 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| | வசிக்கும் கால அளவு | 5.459 | 4 | 80 | .243 | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |

மூலம் : ஆய்வாளர், 2024

இவ் அட்டவணையானது மன்னார் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட நிலப்பாலத்திற்கான குடிசன ரீதியான விபரங்கள் (வயது, பால், கல்விநிலை, தொழில், வசிக்கின்ற கால அளவு) மற்றும் நிலப்பாலத்தின் சூழல் தாக்கங்கள் தொடர்பான மக்களின் கருத்திற்குமிடையேயான தொடர்பைக் கணிப்பதற்கு Chi-Square பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்குடிசன ரீதியான விபரங்கள் மற்றும் சூழல் தாக்கங்கள் தொடர்பான மக்களின் கருத்திற்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லை என முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக, வயதிற்கான Chi-Square பெறுமானம் 5.219 (df = 8, p = .734), பால்நிலைக்கான Chi-Square பெறுமானம் 1.657 (df = 2, p = .437), தொழிலிற்கான Chi-Square பெறுமானம் 8.027 (df = 8, p = .431), கல்விநிலைக்கான Chi-Square பெறுமானம் 11.292 (df = 8, p = .186), வசிக்கின்ற கால அளவின் Chi-Square பெறுமானம் 5.459 (df = 4, p = 243) எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இங்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரும்பாலும் P பெறுமானம் 0.05 அளவைவிட அதிகமாகவே உள்ளது. எனவே, இது பூச்சிய கருதுகோளை ஏற்றுக்கொள்ள வழிவகுத்துள்ளது. இது குடிசன ரீதியான விபரங்களிற்கும் முன்மொழியப்பட்ட நிலப்பாலத்தின் ஊடாக சூழல் பாதிப்பு ஏற்படுமா என மக்கள் கருதுவதற்குமிடையேயான எவ்வித தொடர்பையும் கொண்டு காணப்படவில்லை. எனவே, முன்மொழியப்பட்ட நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புகள் தொடர்பான மக்கள் கருத்துக்களில் இப்பிரதேச மக்களின் குடிசன ரீதியான விபரங்கள் செல்வாக்குச் செலுத்தவில்லை. இவ்வாறு ஆய்வு நோக்கத்தினை வெற்றிகரமாக அடைவதற்கு வினாக்கொத்து துணை புரிகின்றது. மேலும், பொருளாதார, சமூக கலாசார மற்றும் சூழல்

ரீதியான வாய்ப்புகள் தொடர்பான மக்கள் கண்ணோட்டத்தை இது சிறப்பாக தெளிவுபடுத்துகின்றது.

**முடிவுரை**

மன்னார் மாவட்டத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு இந்தியா-இலங்கைக்கிடையிலான பரிந்துரைக்கப்பட்ட நிலப்பாலத் திட்டம் தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை விரிவாக ஆராய்ந்துள்ளது. தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் இந்தத் திட்டம் மன்னார் மாவட்ட மக்களுக்குப் பலவிதமான பொருளாதார, சமூக மற்றும் கலாசார வாய்ப்புகளை வழங்கக்கூடியதொரு செயற்பாடாக உள்ளதென்பது தெளிவாகத் தெரியவந்துள்ளது. பதிலளித்த பெரும்பாலான மக்கள் இந்தத் திட்டத்தை வரவேற்கும் மனப்பான்மையுடன், வேலைவாய்ப்பு, வர்த்தக விருத்தி, சுற்றுலா வளர்ச்சி, கல்வி வாய்ப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல நன்மைகளை எதிர்பார்க்கின்றனர். இது மட்டுமன்றி, கலாசார பரிமாற்றங்கள் மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றை வலுப்படுத்தும் திட்டமாகவும் பொதுமக்கள் இதனை உணர்கின்றனர். இது இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தும் ஒரு மூலாதாரமாக மாறக்கூடியதெனவும் அவர்கள் நம்புகின்றனர். இதனால் இத்திட்டம் வெற்றிகரமாக அமைய பொதுமக்களின் கருத்துக்களைத் திட்டமிடலில் இணைத்தல், அச்சங்களை விலக்குவதற்கான உரையாடல்கள் மற்றும் சூழல்நேய மற்றும் சமூக சமநிலையைப் பேணும் செயல்திட்டங்கள் அவசியமாகின்றன. இது போன்ற பாரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்களில் சமாந்தரமான வளர்ச்சிக் கோட்பாடு நிகர்வான மற்றும் நீடித்த அபிவிருத்திக்கு வழிகாட்டும். இந்நிலப்பாலத் திட்டம் சரியான திட்டமிடலும் பொதுமக்களின் நம்பிக்கையையும் பங்குபற்றலையும் அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளும் இருந்தால் மன்னார் மாவட்டத்திற்கு மட்டும் அல்லாமல் இலங்கை மற்றும் இந்தியா இரு நாடுகளுக்கும் பெரும் அபிவிருத்தி வாய்ப்பை வழங்கக்கூடியதாக அமையக்கூடும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


BBC News Tamil. (2023, July 23). *Plan to build a bridge between India and Sri Lanka—Will 'Rama's Bridge' be damaged?* [In Tamil]. https://www.bbc.com/tamil/articles/cv2p4v0ngqvo

Chakraborty, S., & Rahman, M. (2022). The effect of cross-border infrastructure on local economies: Evidence from the India-Bangladesh border. *Journal of Borderland Studies, 37*(2), 205–221. https://doi.org/10.1080/08865655.2020.1851101

Cochran, W. G. (1977). *Sampling techniques* (3rd ed.). John Wiley & Sons.

Economic Times. (2020). *India's economy shows signs of recovery*. https://economictimes.indiatimes.com

Edwards, J. R., & Smith, G. L. (2018). *Infrastructure development and economic growth*.

Fernando, S. (2022). Infrastructure development and its impact on regional growth: A case study of Mannar District. *Sri Lanka Economic Review, 10*(2), 123–135.

Malaimurasu. (2023). *Ram Sethu Bridge: Scientific facts, history, and mythological significance*. Retrieved December 14, 2024, from https://www.malaimurasu.com/cover-story/ram-sethu-bridge-scientific-facts-history-and-mythological-significance

Mannar Divisional Secretariat. (2023). *District statistical handbook*.

Perera, A., & Fernando, D. (2023). Public perceptions of the Colombo Port City Project: Lessons for the India-Sri Lanka land bridge. *South Asia Economic Journal*, *24*(3), 314–329. https://doi.org/10.1177/13915614231199256

Perera, H., & Wickramasinghe, A. (2020). The historical significance of Mannar: A study of its role in South Asian maritime trade. *Journal of South Asian Studies*, *15*(3), 45–58.

Sathsarani, G., & Sarvananthan, V. (2023). *Economic rationale for the proposed bridge between India and Sri Lanka: An analytical perspective. Strategic Analysis*. doi:10.1080/09700161.2023.2180703

Subramanyam Raju, A. (Ed.). (2007). *India-Sri Lanka partnership in the 21st century*. Kalpaz Publications.

Tamil Surangam. (2024, December 10). *தேசிய கீதங்கள் - Subramaniya Bharathiyar books* [Patriotic songs]. https://www.tamilsurangam.in/literatures/subramaniya_bharathiyar/patriotic_songs.html?utm_source=chatgpt.com

Dinamalar. (2019, June 10). *ஆதாமின் பாலம்*. *Dinamalar*. Retrieved June 30, 2024, from https://www.dinamalar.com

# மாத்தளை நகரின் கடந்த இரு தசாப்த கால (2004-2024) நிலப் பயன்பாட்டு மாற்றம்

**Rajendran Pavithra**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
p81203833@gmail.com

**S. Vasanthakumary**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vasanthakumarys@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் நகர நிலப் பயன்பாட்டு மாற்றமானது நகரங்களின் நிலையான அபிவிருத்தியில் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளது. இலங்கையின் பிரதான நகரங்களில் ஒன்றாகக் காணப்படும் மாத்தளை நகரில் நிலப் பயன்பாடானது கடந்த சில தசாப்தங்களாக குடித்தொகை அதிகரிப்புடன் இணைந்த வகையில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. எனினும், இத்தகைய நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் தொடர்பிலான புரிதலானது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. அந்தவகையில், மாத்தளை நகர நிலப் பயன்பாட்டில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியினுள் (2004 - 2024) எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என ஆராய்வதனை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்விற்கான தரவுகள் கூகுள் ஏர்த் படங்கள், மாத்தளை நகர நிலப் பயன்பாட்டுப் படம், இடவிளக்கப்படம், மாத்தளை நகர அபிவிருத்தி அதிகார சபை அறிக்கைகள் ஆகிய இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்தும், முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளான நேரடி அவதானிப்பு, பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் ஆகியன மூலமும் பெறப்பட்டுள்ளன. இரு ஆண்டுகளுக்குமான நிலப் பயன்பாட்டுப் படங்கள் தயாரிக்கப்பட்டு நிலப் பயன்பாட்டு மாற்றமானது இனங்காணப்பட்டுள்ளது. பெறுபேறுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான நிலப் பயன்பாட்டு அம்சங்களாக கட்டமைக்கப்பட்ட பகுதி, நெற்பயிர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், காடுகள், நீர்நிலைகள், ஏனையப் பயிர்கள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 2004 - 2024 காலப்பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தின் வனப் பரப்பு, நெற்செய்கை நிலம், வீட்டுத்தோட்டம் மற்றும் ஏனைய பயிர் நிலங்களில் அளவுகளில் வீழ்ச்சி ஏற்பட, கட்டமைக்கப்பட்ட பகுதிகளின் பரப்பில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கட்டமைக்கப்பட்ட பகுதியானது 2004 ஆம் ஆண்டில் 33 சதவீதமாக இருந்து, 2024 ஆம் ஆண்டு 43 சதவீதமாக அதிகரித்துள்ளது. மாறாக, நெற்பயிர்ச்செய்கை நிலமானது 2004 ஆம் ஆண்டில் 5.8 சதவீதத்தில் இருந்து 2024 ஆம் ஆண்டு 3.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இதே போன்று வனப்பரப்பானது 2004 ஆம் ஆண்டில் 9.2. சதவீதத்தில் இருந்து 2024 ஆம் ஆண்டு 5.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. நகர சனத்தொகை அதிகரிப்புடன் இணைந்த வகையில் நகர விரிவாக்கம், பொருளாதார நடவடிக்கைகளின் விருத்தி காரணமாக நகரின் பசுமைப் போர்வையின் அளவானது குறைவடைந்து வருவதுடன், கட்டமைக்கப்பட்ட பரப்பானது

அதிகரித்து வருகின்றது. இத்தகைய மாற்றங்கள் நீண்ட கால நோக்கில், நகரச் சுற்றுச் சூழலியலிலும் சமூகப் பொருளாதார நிலைமைகளிலும் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன. எனவே, நகர வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் போக்கு மற்றும் பாங்கின் அடிப்படையில் நிலப் பயன்பாட்டு மாற்றங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வதும், நிலைபேண் நகர அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டு நகர நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் செயற்பாடுகளை முன்னெக்க வேண்டியதும் அவசியமாகும்.

***திறவுச் சொற்கள்:*** *நகர விரிவாக்கம், குடித்தொகை அதிகரிப்பு, நிலப் பயன்பாட்டு மாற்றம், கட்டமைக்கப்பட்ட பகுதி, விவசாய நிலங்கள்.*

**அறிமுகம்**

நிலமென்பது இயற்கை வளமட்டுமல்லாது, மனித வாழ்விற்கு அடிப்படையான கூறாகவும் காணப்படுகின்றது. அதேவேளை உலகளாவிய ரீதியில் பெருமளவு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது (Sujalavaya et al., 2018). குறிப்பாக, ஏனைய பகுதிகளைவிட நகரப்பகுதி சார்ந்த நிலப் பயன்பாட்டுத் தன்மை, பாங்கு ஆகியன இன்றைய சூழ்நிலையில் பல்வேறு காரணங்களால் வேகமாக மாறிவருகின்றன. இம்மாறுதல்கள், நிலத்தின் இயல்புநிலை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளிலும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன (Rudainalamaya et al., 2011).

கிராமப்புறங்களைப் போலல்லாமல் நகர்ப்புற நிலப் பயன்பாடானது மிகவும் சிக்கலானதாகவும் ஆற்றல் மிக்கதாகவும் விளங்குவதுடன், வேகமாக மாற்றமடைந்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் நகரங்கள் சமூக - பொருளாதார ரீதியாக உயர்ந்த விளைவினைக் கொண்டுள்ளமையினால் நகர நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் முக்கிய விடயமாக மாறி வருகின்றன (United Nations of Economic and Social Affairs, 2018). குறிப்பாக நகர நிலப் பயன்பாடு மற்றும் நில மாற்றத்தில் நகரமயமாக்கல் என்பன முக்கிய உந்து சக்திகளாக காணப்படுகின்றன (Subasinghe et al., 2016). உலக சனத்தொகையில் 66% ஆனோர் 2050களில் நகரங்களில் தங்கியிருப்போர் என ஐ.நா சபை கணித்துள்ளது (United Nation, 2015). இந்நிலையில், சனத்தொகை அதிகரிப்பினால் நகரங்களில் ஏற்படக்கூடிய நிலப் பயன்பாட்டு மாற்றங்களுக்கு உலக நகரங்கள் தயாராக வேண்டிய நிலையில் உள்ளன.

இலங்கையில் நகர நிலப் பயன்பாடானது ஆரம்ப காலம் முதல் இன்றுவரை பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் பொருளாதார விருத்தி உட்பட பல்வேறு காரணங்களினால் நிலப் பயன்பாட்டு மாற்றங்களானவை குறிப்பிட்ட கால ஒழுங்கில் கணிசமான மாற்றத்தை எதிர்கொள்வதைக் காணலாம் (Zubzir, 2006). குறிப்பாக, இலங்கையில் பிரதேசம் மற்றும் அதனோடு தழுவிய பல்வேறு செயல்முறைகளினால் நிலப் பயன்பாடானது இன்று பாரியளவிலான மாற்றத்தை எதிர்நோக்கி உள்ளது (Weerkoon, 2017).

விவசாய நிலங்கள், காடுகளின் அளவில் ஏற்பட்டு வரும் மாற்றம், கைத்தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல் போன்ற மனிதனால் தூண்டப்பட்ட சுற்றுச்சூழல் மாற்றங்கள் என்பன நில வளத்துடன் தொடர்புடைய முகாமையாளர்கள், திட்டமிடலாளர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்குச் சிக்கலானதாக மாறியுள்ளது (Ellwanger et al., 2020). ஏனெனில் நிலப் பயன்பாடு மற்றும் நிலப்போர்வை ஆகியன அரசியல், சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளிலும் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளது (Edirisinghe et al., 2023). நகரங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதியிலிருந்து நில வளங்களைப் பெறுவதன் மூலம் போக்குவரத்து, குடியேற்றம், தொழில் வாய்ப்புக்கள் போன்ற சேவைகளை மேம்படுத்த முயற்சிப்பதனால் நிலப் பயன்பாடு மற்றும் நிலமாற்றங்கள் முக்கிய சிக்கலாக மாறியுள்ளன (Dissanayake et al., 2019). நகர்ப்புறத்தில் திட்டமிடப்படாத நிலப் பயன்பாடு மற்றும் நிலமாற்றங்களால் பல சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்தச் சிக்கல்களில் சில மீள முடியாத நிலைமைகளையும் ஆபத்தான நிலைமைகளையும் எட்டியுள்ளன (Rousta et al., 2018). விவசாய நிலங்களில் வீழ்ச்சி, வாழ்விட அழிவு, காற்று, மண் மற்றும் நீர் மாசுபாடு, மலேரியா மற்றும் டெங்கு போன்ற நோய்களின் அதிகரிப்பு ஆகியவற்றுடன் பசுமையான இடத்தின் அளவில் ஏற்படும் வீழ்ச்சி, நில மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பு ஆகியன இவற்றில் முக்கியமானவையாக விளங்குகின்றன (Myint, 2017).

இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மாத்தளை நகரம் நடுத்தர நகரமாக விளங்கினாலும், கடந்த இருபது ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவில் நிலமாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. நகரத்தின் ஆரம்ப கால வளர்ச்சி நீண்ட வரலாற்றுப் பின்புலத்தினையும், சிறந்த நகரமாக வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பினையும் கொண்டிருந்தாலும், பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்டு வருகின்றது (Vasanthakumary, 2020). அதிகரித்து வரும் சனத்தொகைப் போக்கிற்கு ஏதுவாக நிலமானது அதிகளவில் மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது. குறிப்பாக, திட்டமிடப்படாத நிலப் பயன்பாடு மற்றும் நிலமாற்றங்களில் இந்தச் சிக்கலானது துரிதப்படுத்தப்படுகின்றது. மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன நகரின் நிலப்பரப்புகளின் மாற்றங்களை நேரடியாக பாதித்துள்ளன.

மாத்தளை நகரின் நிலப்பரப்பில் ஏற்படும் விரைவான மாற்றங்கள், இயற்கையான தாவரங்கள் மற்றும் விவசாய நிலங்கள் காணப்பட்ட பகுதிகளைக் கட்டடங்கள், வாகன நிறுத்துமிடங்கள், வீதிகள் மற்றும் பிற கட்டுமானப் பகுதிகளாக மாற்றியமைத்துள்ளன. இதனால் இந்நகர மக்களின் பொருளாதார அடிப்படைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக, விவசாயத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது நகரின் நிலையான நிலப் பயன்பாட்டுப் பாங்கில் பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் குறுங்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் ஏற்படுத்துவதாக அமைகின்றது. இந்நிலையில், நிலப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்வது நகரத் திட்டமிடலுக்குத் தேவையான புரிதலை வழங்கும். எனினும், மாத்தளை நகர நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் தொடர்பிலான ஆய்வுகள் மட்டுப்படுத்தப்பட்டனவாகவே காணப்படுகின்றன.

கொழும்பு போன்ற பெருநகரங்களுடன் ஒப்பிடுகையில், மாத்தளை போன்ற நடுத்தர நகரங்கள் கல்வியியல் மற்றும் திட்டமிடல் ஆராய்ச்சிகளில் போதிய முக்கியத்துவம் பெறவில்லை. இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு கடந்த இரு தசாப்த காலப் பகுதிகளில் (2004 - 2024) மாத்தளை நகர நிலப் பயன்பாட்டில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது பற்றி ஆராய்வதாக இவ் ஆய்வானது அமைகின்றது. நகரின் 2004 மற்றும் 2024 ஆண்டுகளுக்குரிய நிலப் பயன்பாட்டு மாற்றங்களை இனங்கண்டு, அவற்றை விவரிக்கும் வகையில் இவ் ஆய்வானது அமைகின்றது.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வுப் பிரதேச அறிமுகம்**

இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள முக்கியமான மாவட்டங்களுள் ஒன்றாக மாத்தளை மாவட்டம் விளங்குகின்றது. இம்மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கும் மாத்தளை நகரமே ஆய்வுப் பிரதேசம் ஆகும். இம்மாவட்டத்தில் காணப்படும் பெரிய நகரமாகவும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நகரமாகவும் இது விளங்குகின்றது. இது 07 ° 65’ 98” வட அகலக்கோட்டிற்கும், 80 ° 70’ 73” கிழக்கு நெடுங்கோட்டிற்கும் இடையில் அமைந்துள்ளது. மாத்தளை நகரமானது கடல் மட்டத்திலிருந்து 364 மீற்றர் (1,194அடி) உயரத்தில் காணப்படுகிறது.




**படம் 01: ஆய்வுப் பிரதேச அமைவிடம்**

மூலம் : ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

மந்தண்டாவளை, கொங்காவளை, ஒயபகல, களுதாவளை, பொஹகொடுவ, மல்வத்த, விஹார, மாலிகாதென்ன, தியபுபுல, உலங்கமுவ வடக்கு, சிங்கள நகரம், முஸ்லிம் நகரம் ஆகிய பிரிவுகள் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட நகரப்பகுதியின் பிரிவுகளாகும். இப்பிரதேசத்தின் மொத்தக் குடித்தொகையானது 36,462 ஆகக் காணப்படுகிறது. இம்மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக வர்த்தகம், சேவைத்துறை, விவசாயம் என்பன காணப்படுகின்றன. மிளகு, சாதிக்காய், ஏலம், கராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள், நெற்பயிர்ச் செய்கை என்பன விவசாயத்தில் முக்கியமானவையாக விளங்குகின்றன. இந்நகரமானது வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம் மட்டுமல்லாமல் கலாசார நகரமாகவும் விளங்குகிறது.

## ஆய்வு முறையியல்

மாத்தளை நகர நிலப் பயன்பாட்டில் 2004 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைக் கண்டறிவதனை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்வானது பிரதானமாக அளவுசார் ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும், பண்புசார் பெறுபேறுகளை விபரிப்பதற்காக வகைப்படுத்தல், விவரணப் பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்விற்கான தரவுகள் பிரதானமாக இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்தே பெறப்பட்டதுடன், முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு மூலங்களும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நகரின் நிலப் பயன்பாட்டுப் படங்களைத் தயாரிக்கவும், மாற்றங்களைக் கண்டறியவும் Google Earth படங்கள் முக்கியமாக பயன்படுத்தப்பட்டன. Google Earth Pro வின் ஊடாக 2004 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான Google Earth படங்கள் பெறப்பட்டு, அவை ஒவ்வொன்றும் தெளிவான விம்பங்களைக் காட்டுகின்றனவா எனச் சரி பார்க்கப்பட்டு, தனித்தனியாக (வகுக்கப்பட்ட நிலப் பயன்பாட்டு பிரிவுகளுக்கமைய இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு) Digitize செய்யப்பட்டு, ARC GIS 10.8 மென்பொருளின் உதவியுடன் 2004 மற்றும் 2024ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாட்டு படங்களாகத் தயாரிக்கப்பட்டன. நிலப் பயன்பாட்டுப் பாங்கினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கள ஆய்வு, இடவிளக்கப்படம் ஆகியன பயன்படுத்தப்பட்டன.

நிலப் பயன்பாட்டுப் படத்தினை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட பகுதி, காடுகளின் பரப்பு, பயிர்ச்செய்கை நிலத்தினுடைய பரப்பு என அனைத்து வகையான நிலப் பயன்பாட்டு அம்சங்களினதும் பரப்பானது கண்டறியப்பட்டு, இரு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட மாற்றங்கள் இனங்காணப்பட்டன. இவ் ஆய்வில் இடவிளக்கவியல், நீர்வளம், தாவரப்போர்வை போன்ற பௌதிகத் தரவுகளும், சனத்தொகை, நகரக் கட்டடங்கள், வாழ்வாதாரம் மற்றும் சமூக பொருளாதார நிலை போன்ற பண்பாட்டுத் தரவுகளும் சேகரிக்கப்பட்டன. இவ் ஆய்விற்கான தரவுகளைச் சேகரிப்பதற்கு அவதானிப்புப் பட்டியல் மற்றும் நேர்காணல் வழிகாட்டி ஆகிய கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

குறித்த ஆய்வுப் பிரதேசத்திற்குச் சென்று நேரடி அவதானிப்பு, நேர்காணல் என்பவற்றின் ஊடாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தில் Kaludewala, Oya Pahala, Maligathenna, Sinhala Town, Vihara Road, Muslim Town, Bogahakottuwa, Diyabubula போன்ற பகுதிகள் நோக்கமுடைய தேர்வுமுறையினூடாகத் தெரிவுசெய்யப்பட்டு நேரடி அவதானிப்பானது மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் ஆய்வுப் பிரதேசத்தினுடைய தன்மை, நிலப் பயன்பாட்டு அம்சங்கள் தொடர்பான பல விடயங்கள் கண்டறியப்பட்டன.

பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் மூலம் நிலப் பயன்பாடு தொடர்பிலான மேலதிக தரவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆய்வுப் பிரதேச நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் அதிகாரி, பிரதேச செயலக அதிகாரி, நகரத் திட்டமிடல் பிரிவு அதிகாரி போன்றோரிடம் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களிடம் ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடு தொடர்பான விடயம், பிரதான நிலப் பயன்பாட்டு அம்சங்கள், நிலத்தின் தன்மை, நிலத் திட்டமிடல் முறை, விவசாய நடவடிக்கைகள், நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் போன்ற விடயங்கள் தொடர்பாக நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நேர்காணல்கள் ஏறத்தாழ 15 - 20 நிமிடங்களை உள்ளடக்கிய வகையில் இடம்பெற்றன.

மேலும், இரண்டாம் நிலைத் தரவுகள் மாத்தளை மாநகர சபை அறிக்கைகள், நிலப் பயன்பாட்டுத் திணைக்கள அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், செய்மதிப் படங்கள், இணையத்தளங்கள், பிரதேச செயலக அறிக்கைகள், நகர அபிவிருத்தி அதிகார சபை அறிக்கைகள் ஆகியவற்றின் ஊடாக பெறப்பட்டன. ஆய்வுப் பிரதேச மொத்த சனத்தொகை விபரங்கள், குடும்பங்களின் எண்ணிக்கை, பிரதான வணிக மூலோபாயம் தொடர்பான தரவுகள், பண்பாட்டு அம்சங்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் பௌதீக அம்சங்கள் போன்ற பலவகையான தரவுகள் இவற்றின் ஊடாகப் பெறப்பட்டன.

பெறப்பட்ட தரவுகள் நிலப் பயன்பாட்டு மாற்றப் பகுப்பாய்வு, விவரணப் பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நிலப் பயன்பாட்டு வகைகளில் ஏற்படுகின்ற அளவைசார் மாற்றங்கள் கண்டறியப்பட்டு, நிலப் பயன்பாட்டு வகைகளில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் இழப்பு என்பனவும் விபரிக்கப்பட்டுள்ளன. நிலப் பயன்பாட்டு மாற்றப் பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட பெறுபேறுகள் Microsoft Excel மென்பொருளினூடாக வரைபடங்களாகவும் அட்டவணைகளாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன. நேர்காணல், நேரடி அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகள் பதிவுசெய்யப்பட்டு உரை வடிவமாக மாற்றப்பட்டு வகைப்படுத்தல், விவரணப் பகுப்பாய்வு போன்றன மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இத்தரவுகளை விபரிப்பதற்காக விவரணமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### மாத்தளை நகரத்தின் 2004ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாடு

ஆய்வுப் பிரதேசத்தில் 2004 தொடக்கம் 2024ஆம் ஆண்டுகளுக்கிடையில் பல்வேறு வகையான நிலப் பயன்பாட்டு அம்சங்களில் பலவகையான மாற்றங்களை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அந்தவகையில், கட்டமைக்கப்பட்ட பகுதி, நீர்நிலைகள், நெற்செய்கை, ஏனைய பயிர்கள், வீட்டுத்தோட்டம், காடுகள் என்பன நிலப் பயன்பாட்டு அம்சங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மொத்த நிலப்பரப்பில் 649.3 ஹெக்டேயர் நிலமானது மக்களின் தேவைகளுக்கேற்ப பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் 2004ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாட்டுப் படம் கீழே காட்டப்பட்டுள்ளது.




படம் 02: மாத்தளை நகரின் நிலப் பயன்பாடு – 2004

மூலம்: ஆய்விற்காக Google earth pro வினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது - 2024.

ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டுப் படத்தின் அடிப்படையில் 2004ஆம் ஆண்டிற்கான நிலப் பயன்பாட்டு அம்சங்கள் பற்றிய விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தின் 2004ஆம் ஆண்டு மொத்த நிலப்பரப்பில்

நெற்செய்கையானது 37.6 ஹெக்டேயராகவும் கட்டமைக்கப்பட்ட நிலமானது 215.5 ஹெக்டேயர் பரப்பாகவும் காணப்பட்டது.

மேலும், ஆய்வுப் பிரதேசத்தின் மற்றுமொரு நிலப் பயன்பாட்டு அம்சமாகக் காணப்படுவது ஏனைய பயிர்ச்செய்கைப் பகுதியாகும். இது 2004ஆம் ஆண்டு 211.9 ஹெக்டேயர் பரப்பாகக் காணப்பட்டுள்ளது. ஏனைய பயிர்களாக ஏலம், கருவா, தேயிலை, இறப்பர் ஆகிய விலைமதிப்புமிக்க பயிர்களே இதில் உள்ளடங்குகின்றன. 2004ஆம் ஆண்டு வீட்டுத்தோட்டப் பரப்பின் அளவானது 119 ஹெக்டேயர்களாக (மொத்தப்பரப்பில் 18 சதவீதமாக) காணப்பட்டது. மேலும், காட்டுப் பரப்பானது 60.3 ஹெக்டேயர் பரப்பாகக் காணப்பட்டது. இவ்வாறாக, 2004ஆம் ஆண்டில் மாத்தளை நகர நிலப் பயன்பாடானது அமையப்பெற்றிருந்தது.

அட்டவணை 01 : மாத்தளை நகரின் 2004ஆம் ஆண்டிற்கான நிலப் பயன்பாடு

| நிலப்பயன்பாட்டு வகை | பரப்பளவு (Km/ha) | சதவீதம் (%) |
|---|---|---|
| நீர்நிலைகள் | 4.0 Km | 0.6 |
| கட்டமைக்கப்பட்ட பகுதி | 215.5 ha | 33.2 |
| நெற்செய்கை | 37.6 ha | 5.8 |
| ஏனைய பயிர் | 211.9 ha | 32.9 |
| வீட்டுத்தோட்டம் | 119 ha | 18.3 |
| காடுகள் | 60.3 ha | 9.2 |
| மொத்தம் | 649.3 ha | 100 |

மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024




வரைபடம் 01 : மாத்தளை நகரின் 2004ஆம் ஆண்டிற்கான நிலப் பயன்பாடு

மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

### மாத்தளை நகரத்தின் 2024ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாடு

ஆய்வுப் பிரதேசத்தின் 2024ஆம் ஆண்டு நிலப் பயன்பாட்டு அம்சங்களை நோக்கும் போது, பல்வேறுபட்ட மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கட்டமைக்கப்பட்ட பகுதி, நீர்நிலைகள், நெற்செய்கை, ஏனைய பயிர்கள், வீட்டுத்தோட்டம், காட்டுநிலம் என்பன

நிலப் பயன்பாட்டு அம்சங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டுப் படத்தின் அடிப்படையில் 2024ஆம் ஆண்டிற்கான நிலப் பயன்பாட்டு அம்சங்கள் பற்றிய விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டிற்கான நிலப் பயன்பாட்டுப் படத்தினை அவதானிக்கும்போது, கட்டமைக்கப்பட்ட நிலப் பரப்பே அதிகமாகக் காணப்படுகிறது. இது 282.3 ஹெக்டேயர் பரப்பாக (மொத்தப் பரப்பில் 43 சதவீதமாக)க் காணப்படுகிறது.




படம் 03 : மாத்தளை நகரின் நிலப் பயன்பாடு - 2024

மூலம்: ஆய்விற்காக Google earth pro வினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது - 2024.

அட்டவணை 02 : மாத்தளை நகரின் 2024ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாடு

| நிலப் பயன்பாட்டு வகை | பரப்பளவு (km/ha) | சதவீதம் (%) |
|---|---|---|
| நீர்நிலைகள் | 4.0 km | 0.6 |
| கட்டமைக்கப்பட்ட பகுதி | 282.3 ha | 43.5 |
| நெற்செய்கை | 22 ha | 3.4 |
| ஏனைய பயிர் | 197.2 ha | 30.4 |
| வீட்டுத்தோட்டம் | 108.7 ha | 16.7 |
| காடுகள் | 35.1 ha | 5.4 |
| **மொத்தம்** | 649.3 ha | 100 |

மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

மாத்தளை நகரப் பகுதியை நோக்கிய இடப்பெயர்வு மற்றும் இயற்கை அதிகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் விருத்தி என்பவற்றின் அடிப்படையிலும் நகரில் கட்டமைக்கப்பட்ட பகுதி விரிவாக்கம் அடைந்து வருகின்றது (நேர்காணல்: நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் அதிகாரி, 2024). ஆய்வுப் பிரதேசத்தில் ஏனைய பயிர்நிலங்களின் அளவு 197.2 ஹெக்டேயர் பரப்பாக (மொத்தப் பரப்பில் 30.4 சதவீதமாக)க் காணப்படுகின்றது.




வரைபடம் 02 : மாத்தளை நகரின் 2024ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாடு

மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது - 2024.

வீட்டுத்தோட்டம் மற்றும் அதனோடு இணைந்த ஏனைய மரங்களைக் கொண்ட நிலப் பரப்பானது 108.7 ஹெக்டேயர் பரப்பில் காணப்படுகிறது. இது மொத்த நிலப்பரப்பில் 16.7 சதவீதமாகும். நெற்செய்கை நிலப்பரப்பானது 22.7 ஹெக்டேயர் பரப்பில் (3.4 சதவீதமாக) காணப்படுகிறது. காட்டு நிலப்பகுதியை நோக்கின், இது 35.1 ஹெக்டேயர் பரப்பாகக் காணப்படுகிறது. ரத்வத்தை வனப்பகுதி, அலுவெகடை வனப்பகுதி எனச் சிறிய அளவிலே காணப்படுகிறது. இதனோடு ஆய்வுப் பிரதேசத்தில் நீர்நிலைகள் எனும்போது, மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையே பிரதானமாகும்.

**நிலப் பயன்பாட்டு மாற்றம் (2004 – 2024)**

ஆய்வுப் பிரதேசத்தில் 2004 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கிடையிலான நிலப் பயன்பாட்டு மாற்றத்தினை அவதானிக்கும்போது, நீர்நிலைகளைத் தவிர அனைத்து வகையான நிலப் பயன்பாட்டு அம்சங்களுமே கால ரீதியாகப் பல்வேறு மாற்றங்களை எதிர்நோக்கி வந்துள்ளன. அதிலும் குறிப்பாக, ஏனைய பயிர்கள், கட்டமைக்கப்பட்ட பகுதி, நெற்செய்கை நிலம், காட்டு நிலம், வீட்டுத்தோட்டம் போன்ற அம்சங்களில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மாத்தளை நகரில் கட்டமைக்கப்பட்ட பகுதிகளை 2004ஆம் ஆண்டு மற்றும் 2024ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 2004ஆம் ஆண்டிலும் பார்க்க, 2024ஆம் ஆண்டு அதிகரித்ததொரு போக்கே காணப்படுகிறது. 2004ஆம் ஆண்டு 215.5 ஹெக்டேயர் பரப்பாகக் காணப்பட்ட கட்டமைக்கப்பட்ட பகுதி 2024ஆம் ஆண்டு 282.3 ஹெக்டேயர் பரப்பாக அதிகரித்துள்ளது. அதாவது 33.2 சதவீதமாக இருந்து 43.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.



படம் 04 : ஆய்வுப் பிரதேசத்தில் கட்டமைக்கப்பட்ட பகுதிகளில் மாற்றம் 2004-2024

மூலம்: ஆய்விற்காக Google earth pro வினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது - 2024

கட்டமைக்கப்பட்ட பகுதிகள் குறிப்பாக வடகிழக்கு ஓரப்பகுதிகளில் (Kludewala, Oyapahala, Gongawala, Muslim Town) அதிகளவில் விரிவடைந்துள்ளன. இப்பகுதிகள் ஆரம்பத்தில் விவசாயத்திற்கு அல்லது வீட்டுத்தோட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு, தற்போது நகர கட்டடங்களை உருவாக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.




படம் 05 : கட்டமைக்கப்பட்ட பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றம் 2004 – 2024

மூலம்: Google Earth Pro (2004, 2024)

அதிகளவான ஏனைய பயிர் நிலங்கள் மற்றும் வீட்டுத்தோட்ட நிலப்பகுதிகள் கட்டமைக்கப்பட்ட பகுதிகளாக மாறியுள்ளன. மேலும், அதிகரித்த சனத்தொகை, வதிவிடங்களின் தேவை மற்றும் பொருளாதார செயற்பாடுகளின் அதிகரிப்பு என்பன கட்டடங்களின் அதிகரிப்பிற்கு வழிவகுத்துள்ளன. 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகளவான நிலப்பகுதி பயிர்ச்செய்கை நிலமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. காலப்போக்கில் விவசாய நிலப்பரப்பில் கட்டமைக்கப்பட்ட பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் நிலத்தின்

பெறுமதியும் அதிகரித்துள்ளது. மேலும், சுற்றுலா வளர்ச்சிக்காக நகரமானது அதிகளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. மாத்தளை நகரமானது வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம் மாத்திரமல்லாமல், சுற்றுலாவிற்கும் பிரசித்தம் பெற்ற நகரமாக விளங்குவதனால் சுற்றுலாத் தலங்கள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்டப் பகுதி என்பதற்குள் வீட்டுத்தோட்டப் பகுதி, அதனைச் சூழ்ந்து காணப்படுகின்ற மரங்கள் என்பன உள்ளடங்குகின்றன. அதன்படி 2004ஆம் ஆண்டு 119 ஹெக்டேயர் பரப்பாகக் காணப்பட்ட வீட்டுத்தோட்ட நிலப்பரப்பானது 2024ஆம் ஆண்டு 108 ஹெக்டேயர் பரப்பாகக் குறைவடைதுள்ளது. இவை 2004 மற்றும் 2024ஆம் ஆண்டுக்கான சதவீத அடிப்படையில் முறையே 18.3, 16.7 ஆகக் காணப்படுகிறன.

நகரப் பகுதியில் நெற்செய்கையானது 2004ஆம் ஆண்டு 37.6 ஹெக்டேயர் பரப்பாகக் காணப்பட்டு, 2024ஆம் ஆண்டு 22 ஹெக்டேயர் பரப்பாகக் குறைவடைந்துள்ளது. அதாவது, 2004ஆம் ஆண்டில் 5.8 சதவீத நிலப்பரப்பில் காணப்பட்ட நெற்செய்கை நிலம் 2024 இல் 3.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. அதிகளவான நிலப்பகுதியானது வதிவிடங்களை அமைத்தல், ஏனைய தேவைகளுக்காக அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால், நெற்செய்கை நிலப்பரப்பானது குறைவடைந்து செல்லும் போக்கானது இங்கு காணப்படுகிறது (நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் அதிகாரியுடனான நேர்காணல், 2024). ஆய்வுப் பிரதேசத்தில் வடமேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் நெற்செய்கையானது வீழ்ச்சியடைந்துள்ளது. இதனையடுத்து வதிவிட கட்டடங்கள், கடைத்தொகுதிகள் என்பன உருவாகியுள்ளன.




படம் 06 : நெற்செய்கை நிலப்பரப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் 2004 – 2024

மூலம்: ஆய்விற்காக Google earth pro வினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது - 2024

குறித்த ஆய்வுப் பிதேசம் நகரப் பகுதியாக விளங்குவதன் காரணமாக காடுகளின் பரப்பானது பொதுவாகவே குறைவாக காணப்படுகிறது. அந்தவகையில், 2004ஆம் ஆண்டு 60.3 ஹெக்டேயர் பரப்பில் காணப்பட்ட காட்டுநிலப்பரப்பானது 2024ஆம் ஆண்டு 35.1 ஹெக்டேயர் பரப்பாகக் குறைவடைந்துள்ளது. சதவீத அடிப்படையில் நோக்கின், 2004 மற்றும் 2024ஆம் ஆண்டுகள் முறையே 9.2, 5.4 ஆகக் காணப்படுகின்றன. நகர அபிவிருத்திக்காகவும் குடியிருப்பு விரிவாக்கத்திற்காகவும் பயிர்செய்கை நிலத்திற்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. நதியினை

அண்டிய பகுதிகளில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு, அங்கும் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.




படம் 07 : காட்டுநிலப் பரப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் 2004 - 2024
மூலம்: ஆய்விற்காக Google earth pro வினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது - 2024

மாத்தளை நகரில் ஏனைய பயிர்ச் செய்கை நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்து நோக்கின், 2004ஆம் ஆண்டு 211.9 ஹெக்டேயர் பரப்பிலும் 2024ஆம் ஆண்டு 197.2 ஹெக்டேயர் பரப்பிலும் பயிர்ச்செய்கை இடம்பெற்றுள்ளன. அந்த வகையில், வேறு பயிர்செய்கை நிலங்களின் வளர்ச்சிப்போக்கானது 2004 வருடத்திலும் பார்க்க 2024ஆம் வருடத்தில் குறைவடைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.



படம் 08 : ஏனைய பயிர்ச் செய்கை நிலங்களின் மாற்றம் 2024 – 2004
மூலம்: ஆய்விற்காக Google earth pro வினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது - 2024

ஏனைய பயிர்ச்செய்கை மேற்கொண்ட பல பகுதிகளில் வதிவிடங்கள் மற்றும் கடைத்தொகுதிகள் எனப் பல வகையான கட்டமைக்கப்பட்ட பகுதிகள் உருவாகியுள்ளன. சில இடங்களில் இந்நிலப்பரப்புகள் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளாமல் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. 2004, 2024ஆம் ஆண்டுகளில் ஏனைய பயிர்ச்செய்கையின்

சதவீதங்கள் முறையே 32.9 மற்றும் 30.4 ஆகும். அந்தவகையில், மாத்தளை நகரப்பகுதியில் கடந்த 20 ஆண்டுகளில் நிலப் பயன்பாட்டு அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 03 : ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டு மாற்ற ஒப்பீடு 2004 - 2024

| நிலப் பயன்பாட்டு வகை | பரப்பளவு (ha) 2004 | சதவீதம் (%) | பரப்பளவு (ha) | சதவீதம் (%) 2024 | மாற்ற அளவு சதவீதம் (%) 2004 - 2024 |
|---|---|---|---|---|---|
| கட்டமைக்கப்பட்ட பகுதி | 215.5 ha | 33.2 | 282.3 ha | 43.5 | **+10.3** |
| நெற்செய்கை | 37.6 ha | 5.8 | 22 ha | 3.4 | -2.4 |
| ஏனைய பயிர் | 211.9 ha | 32.9 | 197.2 ha | 30.4 | -2.5 |
| வீட்டுத்தோட்டம் | 119 ha | 18.3 | 108.7 ha | 16.7 | -1.6 |
| காடுகள் | 60.3 ha | 9.2 | 35.1 ha | 5.4 | -3.8 |
| மொத்தம் | 649.3 ha | 100 | 649.3 ha | 100 | |

மூலம் : ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

2004 தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரையிலான 20 வருட காலப்பகுதியில் மாத்தளை நகரப் பகுதியில் ஏற்பட்ட நிலப் பயன்பாட்டு மாற்றத்தில் கட்டமைக்கப்பட்ட நிலப்பகுதியே அதிகரித்துள்ளது. மேலும், கட்டமைக்கப்பட்ட பகுதிகளுக்காக ஏனைய நிலப் பயன்பாடுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.




வரைபடம் 03 : ஆய்வுப் பிரதேச நிலப் பயன்பாட்டு மாற்ற ஒப்பீடு 2004 – 2024

மூலம் : ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

2004 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் நிலப் பயன்பாட்டு மாற்ற வீதம் தொடர்பில் அவதானிக்கும்போது, அனைத்து நிலப் பயன்பாட்டு அம்சங்களை விடவும் கட்டமைக்கப்பட்ட பகுதியானது அதிகரித்த போக்கினைக் கொண்டுள்ளது. ஏனைய பயிர்ச்செய்கை மற்றும் வீட்டுத்தோட்டம் என நிலப் பயன்பாட்டு அம்சங்களின் வீழ்ச்சிப் போக்கினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.




வரைபடம் 04 : ஆய்வுப் பிரதேச நிலப்பயன்பாட்டு மாற்ற வீதம் 2004 - 2024

மூலம் : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

நகரப் பகுதியில் சில்லறை வணிகம், ஏனைய வணிகங்களை மேற்கொள்வதனால் விவசாய நிலங்கள் மற்றும் ஏனைய இடங்கள் வணிக மையங்களாக மாற்றப்படுகிறது. மேலும், சுற்றுலா விருத்தியினை மேற்கொள்வதன் பொருட்டாகவும் அதிகளவில் காட்டு நிலப்பகுதி பயன்படுத்தப்படுகிறது. மாத்தளை நகரத்தை ஆரம்ப காலத்தோடு ஒப்பிட்டு நோக்கும்போது, தற்காலத்தில் அதன் அபிவிருத்தியானது வளர்ச்சி பெற்றுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஆய்வுப் பகுதியில் அபிவிருத்தி தொடர்பான பல வகையான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. மேலும், அரச மற்றும் அரச சார்பற்ற பல கட்டடங்கள், வீதியமைப்புகள், கைத்தொழில் நிலையங்கள் எனப் பல வகையான அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையினாலும், நகர நிலப் பயன்பாடு மாற்றமடைந்து வருகின்றது. எனவே, மாத்தளை நகர நிலப் பயன்பாட்டு மாற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளாக குடித்தொகை வளர்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகள், காடழிப்பு, பொருளாதார நடவடிக்கைகள், கட்டமைக்கப்பட்ட பகுதிகளின் விரிவாக்கம் ஆகியன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன (நேர்காணல் நிலப் பயன்பாட்டு அதிகாரி, 2023).

**முடிவுரை**

2004 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையிலான இரண்டு தசாப்த காலப்பகுதியில் மாத்தளை நகரத்தில் ஏற்பட்ட நிலப் பயன்பாட்டு மாற்றங்களை மதிப்பீடு செய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பகுதி என்பது கடந்த இரு தசாப்தங்களில் 66.8 ஹெக்டேயர் (10.3%) அதிகரித்து, நகரத்தின் விரிவினையும், மையப்பகுதியில் இருந்து ஓரப்பகுதிகளுக்கான நகரமயமாதல் வளர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றது. அதே நேரத்தில், நெற்பயிர்ச் செய்கை நிலங்கள், காடுகள், ஏனைய பயிர்நிலங்கள் ஆகியன வீழ்ச்சி கண்டுள்ளன. இம்மாற்றங்கள் சனத்தொகைப் பெருக்கம்,

பொருளாதாரச் செயற்பாடுகளின் விரிவாக்கம் ஆகியவற்றின் விளைவுகளாகக் காணப்படுகின்றன. திட்டமிடப்படாத நகர விரிவாக்கத்தின் விளைவாகவே இவை ஏற்படுவதனால், நகரின் குறுங்கால மற்றும் நீண்ட கால அபிவிருத்தியிலும் இவை குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன. மாத்தளை நகரத்தின் நிலையான வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் சமநிலை என்பவற்றைக் கருதி, பசுமைப் பரப்பு அதிகரிப்பு, திட்டமிடப்பட்ட விரிவாக்கம், வலயப்படுத்தல் முறைமை ஆகியன நகர அபிவிருத்தி சார்ந்த முதன்மைத் திட்டங்களில் ஒன்றிணைக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இவை நகரத் திட்டமிடல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் நிலையான நகர வளர்ச்சிக்கும் முக்கியமானவையாக அமையும். அத்துடன் மாத்தளை நகரத்தின் நிலப் பயன்பாட்டு மாற்றங்களுக்கான காரணங்கள், நிலப் பயன்பாட்டு எதிர்வுகூறல்களை மையப்படுத்திய ஆய்வுகள் என்பன எதிர்கால ஆய்வுகளுக்காக பரிந்துரைக்கப்படுகின்றன.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Dissanayake, D., Morimoto, T., Ranagalage, M., & Murayama, Y. (2019). Land-use/land-cover changes and their impact on surface urban heat islands: Case study of Kandy City, Sri Lanka. Climate, 7(8), 99.

Edirisinghe, S. (2023). An assessment of land use and land cover changes on urban flooding: A case study in Sri Jayewardenepura Kotte. Journal of Urban Planning, 58(4), 456–467.

Ellwabger, A. (2020). Multiscale analysis of land use and land cover changes in Sri Lanka by remote sensing: The impacts of post-war infrastructure development in the last 20 years (2002–2022). Journal of Remote Sensing, 45(3), 234–245.

Myint, S. W. (2017). Characterizing the relationship between land use land cover change and land surface temperature. ISPRS Journal of Photogrammetry and Remote Sensing, 124, 119–132.

Rousta, I. (2018). Land use change and its impacts on land surface temperature in Galle City, Sri Lanka \[Unpublished manuscript].

Rudainalamaya, A., Fernando, T., & Silva, P. (2011). Assessment of land use changes and their environmental impacts in urban Sri Lanka. International Journal of Urban Environmental Studies, 5(2), 145–158.

Subasinghe, S., Estoque, R. C., & Murayama, Y. (2016). Spatiotemporal analysis of urban growth using GIS and remote sensing: A case study of the Colombo Metropolitan Area, Sri Lanka. ISPRS International Journal of Geo-Information, 5(11), 197.

Sujalavaya, P., Fernando, K., & Perera, D. (2018). Land use and land cover changes in urbanizing areas of Sri Lanka: A remote sensing analysis. Journal of Environmental Planning and Management, 62(4), 567–584.

United Nations. (2015). World urbanization prospects: The 2015 revision. United Nations, Department of Economic and Social Affairs, Population Division.

United Nations Department of Economic and Social Affairs. (2018). World urbanization prospects: The 2018 revision. United Nations.

Vasanthakumary,S. (2020). Contemporary Matale city: Challenges and opportunities in urban development. International journal of social science and economic research 5(12).

Weerakoon, P. (2017). Analysis of spatio-temporal urban growth using GIS integrated urban gradient analysis; Colombo District, Sri Lanka. American Journal of Geographic Information Systems, 6(3), 83–89.

Zubair, A. O. (2006). Change detection in land use and land cover using remote sensing data and GIS: A case study of Ilorin and its environs in Kwara State \[Master’s thesis, University of Ibadan].

# நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சாய்வுநிலங்களின் நிலப்பயன்பாட்டினை முகாமைசெய்தல் : நிலையான பாதுகாப்பிற்கான வழிமுறைகள்

**Vijayakumar Vinothani**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vino98685@gmail.com,

**S. Vasanthakumary**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vasanthakumarys@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் மத்திய மலைநாட்டு சாய்வுகள் பல்வேறுபட்ட இயற்கை மற்றும் மானிடக் காரணிகளின் விளைவாக அதிகளவிலான அழுத்தங்களுக்கு உள்ளாகி வருவதுடன் அண்மைய தசாப்த காலமாக சாய்வுகளின் நிலையுறுதித் தன்மை தொடர்பான பல பிரச்சினைகளை இப்பிரதேசம் எதிர்நோக்கி வருகின்றது. இவற்றில் நிலப்பயன்பாட்டுப் பாங்கு மற்றும் சாய்வுகளின் முறையற்ற முகாமைத்துவம் ஆகியன முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன. அவ்வகையில், நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாய்வு நிலங்களின் நிலப்பயன்பாடு மற்றும் சாய்வு முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, நிலையான பாதுகாப்புக்கான வழிமுறைகளை முன்வைப்பதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஆய்வுப் பிரதேச சாய்வு நிலங்களின் தன்மை, நிலப்பயன்பாடு, முகாமைத்துவ செயற்பாடுகள் என்பன தொடர்பில் இங்கு ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது அளவுசார் மற்றும் பண்புசார் முறையியலைப் பயன்படுத்திக் கலப்புமுறை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டாலும், அளவுசார் முறையியலே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக்கான தரவுகள் பிரதானமாக நிலப்பயன்பாட்டுப் படங்கள், தரையுயர மாதிரி, நேரடி அவதானிப்பு, குழுக் கலந்துரையாடல், பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தின் சாய்வுகள், நிலப்பயன்பாட்டுப் பாங்கினைப் படமாக்கல் செய்வதற்காக ArcGIS 10.4.1 பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் நிலப்பயன்பாடானது சாய்வு மற்றும் உயர அடிப்படையில் வேறுபட்டமைகின்றமை ஆய்வில் கண்டறியப்பட்டது. ஆய்வுப் பிரதேசம் 1400m - 2400mக்கு இடைப்பட்ட வகையில் உயர வேறுபாடுகளைக் கொண்டுள்ளதுடன் இதில் 1400m – 1600m வரையான பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கையும், 1800m – 2000m மற்றும் 2200m – 2400m வரையான சமவுயரக் கோட்டுப் பகுதிகளில் அடர்ந்த காடுகளும் பிரதானமாகக் காணப்படுகின்றன. மென்சாய்வான பகுதிகளில் வீட்டுத்தோட்டமும் மரக்கறிப் பயிர்ச்செய்கையும் அதிகம் காணப்படுவதுடன் சாய்வு கூடிய பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கையும் பெருந்தோட்டக் காடுகளும் பிரதானமாக காணப்படுகின்றன. சாய்வுகள் மீதான மானிட அழுத்தங்கள் பரம்பிக் காணப்படும் பகுதிகளாக ஆய்வுப் பிரதேசத்தின் மத்திய, மேற்கு, கிழக்கில் ஒரு சில பகுதிகள் விளங்குகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள

முக்கியமான சாய்வுநில முகாமைத்துவ வழிமுறைகளாக சமவுயரக் கோட்டு விவசாயம், படிமுறைப் பயிர்செய்கை, மூடுபயிர் மற்றும் கற்கட்டடங்கள் ஆகியன இனங்காணப்பட்டதுடன் கேபியன் அணைகள், கொங்றீட் தடுப்புச்சுவர்கள் வீதிகளின் வழியே சாய்வினைப் பேணுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சாய்வுக்கு ஏற்ற வகையில் முறையான நிலப்பயன்பாடின்றி சாய்வுகள் அழுத்தங்களுக்கு உள்ளாகுதல், முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்மை போன்றன காரணமாக சாய்வுகளின் நிலையுறுதித்தன்மை வெகுவாகப் பாதிக்கப்படுவதுடன் மண்ணரிப்பு, நிலச்சரிவு ஆகிய பிரச்சினைகளுக்கும் இது வழிவகுக்கின்றது. இந்நிலையில், ஆய்வுப் பிரதேச சாய்வுகளுக்குப் பொருத்தமான நிலப்பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதோடு, நிலையான பாதுகாப்பிற்கான முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்வது ஆய்வுப் பிரதேசத்தின் சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் நிலைப்பிற்கு அவசியமாகும்.

***திறவுச் சொற்கள்:*** *சாய்வுகள், நிலப்பயன்பாடு, மனித அழுத்தங்கள், சாய்வுநில முகாமைத்துவம், நிலையான பாதுகாப்பு.*

**அறிமுகம்**

புவியின் மேற்பரப்பில் காணப்படும் பல்வேறு நிலவுருவ அமைப்புக்களுள் சாய்வுகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. நீரியல், காலநிலை, உயிர்ச்சூழலியல் மற்றும் பண்பாட்டுச் சூழலியல் எனச் சாய்வுகளின் முக்கியத்துவம் சூழல் நிலைப்பில் இன்றியமையாததாக விளங்குகின்றது. சாய்வு நிலத்தின் தன்மை இடத்துக்கிடம் வேறுபட்டாலும் உலகில் சாய்வு நிலங்கள் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றன. உலகெங்கிலும் உள்ள மலைப்பகுதிகளில் சாய்வுகள் தொடர்பான பிரச்சினைகள் பரவலான ஆபத்தாக மாறிவருகின்றது. சாய்வுகள் உள்ளக மற்றும் வெளிவாரியான காரணிகளின் காரணமாக நிலையுறுதித் தன்மை குறைவான சாய்வுகளாக மாறுவதுடன், சாய்வு இழப்புக்களையும் ஏற்படுத்தவும் வழிவகுக்கின்றன (Razali et al., 2023).

வளரும் நாடுகளில் அதிகரித்து வரும் மக்கள் தொகை அழுத்தம், பொருளாதார வளர்ச்சியுடன் சேர்ந்து, அதிகமான மக்களை நிலையற்ற மலைப்பாங்கான பகுதிகளில் தங்கியிருக்கச் செய்வதனால் சாய்வு நில அபாயமானது உலகளவில் அதிகரித்து வருகின்றது (Vanacker, 2003). பொதுவாக சாய்வு நிலங்களின் தரமிழப்பு மற்றும் பாதிப்புகளில் பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன. செறிவான மழை, சாய்வுகளின் குத்தான சாய்வுத் தன்மை, தாவரப்போர்வை, மண் வகை போன்ற பல்வேறு காரணிகள் சாய்வின் தரமிழப்பிற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன (Digvijay, 2017).

இயற்கை மற்றும் மானிட செயல்முறைகள் காரணமாக, சாய்வு அமைப்புகள் விரிவான நிலப் பயன்பாட்டு மாற்றங்களைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவதுடன் இந்நிலை சாய்வுநில மாற்றங்களுக்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், கடுமையான சுற்றுச்சூழல் தாக்கங்களுடன்

நிலத்தினை மாற்றியமைப்பதற்கும் வழிவகுக்கின்றது (Mugagga et al., 2012). பொதுவாக சாய்வு நிலங்களின் நிலப் பயன்பாடு மற்றும் நிலப்போர்வைச் சாய்வுகளின் கட்டமைப்பிலும் உறுதித்தன்மையிலும் மிக முக்கிய செல்வாக்கினைக் கொண்டுள்ளது. நிலப் பயன்பாட்டு வகைகள், சாய்வு வகை மற்றும் நில முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியன மண்ணின் பௌதீக இரசாயன பண்புகளைக் கணிசமாகப் பாதிக்கின்றன.

புவி வெப்பமடைதல், உயிர்ப்பல்வகைமை இழப்பு, மண்ணரிப்பு, சுற்றுச்சூழல் சேவைகளை மாற்றியமைத்தல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரழிவுகளை அதிகரிப்பது ஆகியவை பெரும்பாலும் நிலப்பயன்பாடு/நிலப்போர்வை மாற்றத்தின் விளைவுகளாகும் (Lambin et al., 2001). இதனால் இத்தகைய மாற்றங்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய அவசியத்தைச் சாய்வு நிலங்கள் மாற்றியுள்ளன (Ayele, 2016). ஏனெனில், சிறந்த சாய்வுநில சுற்றுச்சூழல் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தினை வடிவமைப்பதற்கு நிலப்பயன்பாடு/நிலப்போர்வை மாற்றங்கள் மற்றும் அவற்றிற்குப் பின்புலமாக உள்ள செயல்முறைகள் பற்றிய தகவல்கள் அவசியமாகும். மண்ணின் பௌதீக இரசாயனப் பண்புகளை மேம்படுத்த வெவ்வேறு நிலப்பயன்பாட்டு வகைகள் மற்றும் சாய்வு ஆகியவற்றிற்கான பொருத்தமான மற்றும் ஒருங்கிணைந்த சாய்வு நில நடவடிக்கைகள் அவசியமாகும் (Abebaw, 2021).

இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியில் அண்மைய தசாப்த காலமாக இயற்கைக் காரணிகளினாலும் குடித்தொகை அதிகரிப்புடன் இணைந்த வகையிலும் அதிகரித்து வரும் மானிட செயற்பாடுகளினாலும் சாய்வுகள் மீதான அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் சாய்வுகளின் கட்டமைப்பு மற்றும் நிலையுறுதித் தன்மை வெகுவாக மாற்றமடைந்து வருவதுடன் நிலச்சரிவு மற்றும் மண்தரமிழப்பு போன்ற பாரிய பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. முறையான நிலப்பயன்பாட்டு முகாமைத்துவ நடைமுறைகள் இன்றி நிலச்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் மனித குடியிருப்புக்கள் உட்பட ஏனைய நடவடிக்கைகள் விரிவடைவதால் ஒவ்வொரு ஆண்டும் மனித இழப்புக்களும் பொருளாதார சேதங்களும் பதிவுசெய்யப்படுகின்றன. சில சாய்வுநிலங்களில் ஏற்படும் நிலச்சரிவுகள் அதே நிலப்பரப்பில் கடந்த கால நிலச்சரிவுகள் ஏற்பட்ட பகுதிகளில் மீண்டும் செயல்படுத்துவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் கண்டறியப்பட்டுள்ளது (Karunarathna et al., 2005). இந்நிலையில், ஒரு சாய்வில் உள்ள மண்ணின் பண்புகள் மற்றும் மண் தரமிழப்பு, சாய்வுகளின் முக்கிய பண்புகள், சாய்வுகளின் போக்கு மற்றும் சாய்வுகளின் இடம் சார்ந்த பரம்பல் போன்றவற்றை அறிந்துகொள்ளுதல் அவசிமாகும் (Karunarathna, 2024).

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படும் சாய்வுகள் அண்மைய தசாப்தங்களாக முறையற்ற நிலப்பயன்பாடு, மனித தலையீடுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன. சாய்வுகளில் முறையற்ற நிலப்பயன்பாடுகள் பல்வேறுபட்ட சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவதுடன்

இவை இப்பிரதேச மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியிலும் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன. இப்பகுதிகளில் சாய்வுகளை முகாமை செய்வதற்கென ஒரு சில முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அவற்றின் வினைத்திறன் குறைவானதாகவே காணப்படுகின்றது. இதனால் இப்பிரதேச சாய்வுகள் அவற்றின் நிலையுறுதித் தன்மை தொடர்பிலான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. எனினும், இப்பிரச்சினையை மையப்படுத்திய ஆய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படாமை முக்கிய ஆய்வு இடைவெளியாகக் காணப்படுகின்றது. அத்துடன் ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வு நிலங்களை முகாமை செய்வதற்கான திட்டமிடல் செயன்முறைகளுக்கும் இத்தகைய ஆய்வுகள் அவசியமாகக் காணப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு நுவரெலிய பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சாய்வுகளின் தன்மை, சாய்வுநிலங்களில் நிலப்பயன்பாடுகளின் தன்மை ஆகியன தொடர்பாக ஆராய்வதுடன் சாய்வுகளில் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதனையும் நோக்காகக் கொண்டு இவ் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வுப் பிரதேசம்**

நுவரெலியா மாவட்டமானது வடக்கே கண்டி மாவட்டத்தையும் கிழக்கே பதுளை மாவட்டத்தையும் தெற்கே இரத்தினபுரி மாவட்டத்தையும் மேற்கே கேகாலை மாவட்டத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது. வேறுபட்ட பௌதிக அம்சங்களையும் இயற்கை வளங்களையும் கொண்ட நுவரெலியா மாவட்டமானது கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1500 மீட்டர் தொடக்கம் 1800 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் மொத்தப் பரப்பளவில் 2.7% பரப்பினைக் கொண்டு விளங்கும் இம்மாவட்டத்தில் 10 பிரதேச செயலகப் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் நுவரெலியா மாவட்டத்தில் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவு ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பிரிவானது $6^0$58’14.81”N வட அகலக்கோட்டிற்கும் $80^0$46’58.3”E கிழக்கு நெடுங்கோட்டிற்கும் இடையில் அமைந்துள்ளது.

**படம் 1 : ஆய்வுப் பிரதேச அமைவிடம்**




மூலம் : ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024

**தரவு சேகரிப்பு மற்றும் தரவுப் பகுப்பாய்வு**

“நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சாய்வு நிலங்களில் நிலப்பயன்பாட்டினை முகாமைச்செய்தல்: நிலையான பாதுகாப்பிற்கான வழிமுறைகள்” என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது பல்வேறுபட்ட தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில், ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாடு, சாய்வுகள் மற்றும் சாய்வு முகாமைத்துவம் தொடர்பான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டு, அவை அளவுசார் மற்றும் பண்புசார் முறையியலை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதால் இவ் ஆய்வானது கலப்பு முறை ஆய்வாக அமைகின்றது.

ஆய்வுப் பிரதேச சாய்வு நிலங்களின் தன்மை (சாய்வு கோணம், சாய்வு சமவுயரம், சாய்வு முகம்), சாய்வு நிலங்களில் நிலப்பயன்பாடு, முகாமைத்துவ செயற்பாடுகள், நிலையான பாதுகாப்பிற்கான வழிமுறைகள் போன்றன தொடர்பான தரவுகளைப் பெறுவதன் பொருட்டு நேரடி அவதானம், குழுக் கலந்துரையாடல், நேர்காணல் ஆகிய முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளும், இரண்டாம் நிலைத்தரவு மூலங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன (அட்டவணை 1).

**அட்டவணை 01: ஆய்விற்கான தரவு சேகரிப்பு முறைகள் பற்றிய விபரம்**

| முறை | நோக்கம் | வகை | கருவிகள் |
|---|---|---|---|
| படங்கள் சாய்வுப் படங்கள் Landuse Map of Nuwara Eliya | சாய்வின் பண்புகள், நிலப்பயன்பாடு, நிலத்தோற்றம் | DEM, Maps | USGS Earth Explorer Google Earth Pro Digitizing tools Arc GIS |
| நிறுவன அறிக்கைகள் | நுவரெலிய மாவட்ட, பிரதேச செயலக அதிகாரப் பூர்வமான ஆவணங்கள், அறிக்கைகள், சாய்வு பராமரிப்புப் பதிவுகள், வலயப்படுத்தல் ஆவணங்கள் | அளவுசார், பண்புசார் | அறிக்கைகள், கோப்புக்கள் |
| நேரடி அவதானம் | சாய்வின் பண்புகள், நிலப்பயன்பாடு, சாய்வு முகாமைத்துவ நடவடிக்கைகள், நிலையுறுதித்தன்மை தொடர்பான ஆதாரங்கள், சாய்வின் மீதான மனித அழுத்தங்கள் | காட்சிப் படங்கள் | அவதானிப்புப் பட்டியல் |
| பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் | நிலப்பயன்பாடு மற்றும் சாய்வு முகாமைத்துவம் தொடர்பான நிபுணர் கருத்துக்கள் | பண்புசார் | நேர்காணல் வழிகாட்டி |
| குழுக் கலந்துரையாடல் | விவசாய நடவடிக்கைகள், முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றிய பொதுமக்கள் பார்வை | பண்புசார் | குழுக் கலந்துரையாடல் வழிகாட்டி |

மூலம்: ஆய்வாளர், 2024

இவ் ஆய்வில் 2 பிரதான தகவல் தருனருடனான நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தில் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள், அனுபவங்கள் தொடர்பான விடயங்களை அறிந்துகொள்ளும் வகையிலேயே இந்நேர்காணல்கள் இடம்பெற்றன. இந்நேர்காணல்கள் ஏறத்தாழ 20 – 30 நிமிடங்களை உள்ளடக்கிய வகையில் இடம்பெற்றன. இதன் மூலம் ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வுநிலம் சார்ந்த பிரச்சினைகள், பொறுப்பான காரணங்கள், சாய்வு முகாமைத்துவ வழிமுறைகள், அவற்றின் வினைத்திறன், அரச நிறுவனங்களின் உதவிகள் என்பன பற்றிய தரவுகள் பெறப்பட்டன.

இவற்றுடன் 5 – 8 நபர்களை உள்ளடக்கிய வகையிலான மூன்று குழுக்கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் மக்களுள் சாய்வுகளை அண்டிய மக்கள் மற்றும் பாரியளவிலான விவசாயப் பண்ணையாளர்கள் போன்றோரிடம் இக்குழுக்கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இதன் மூலம் சாய்வுகளில் மேற்கொள்ளப்படும் பயிர்செய்கை நடவடிக்கைகள், சாய்வு முகாமைத்தும் தொடர்பில் விவசாயிகளின் கருத்து மற்றும் அனுபவத்தினை பெறக்கூடியதாக இருந்தது. இவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் குறிப்பேடுகளில் பதிவுசெய்யப்பட்டன.




விளக்கப்படம் 1: ஆய்வுக்கான முறையியல்

Source: Author, 2024

நேரடி அவதானம் மூலம் சாய்வுகளின் தன்மை மற்றும் சாய்வுகளில் நிலப்பயன்பாடு, சாய்வு முகாமைத்துவ முறைகள், சாய்வுகளின் மீதான மனித நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டதுடன் புகைப்படங்களும் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பினை பொறுத்தவரையில் நிலப்பயன்பாட்டுப் படங்கள், Google Earth படங்கள், USGS Earth Explorer படங்கள், நுவரெலியா பிரதேச செயலக நிலப்பயன்பாட்டு படங்கள், ஆண்டறிக்கை, நுவரெலியா பிரதேச அனர்த்த முகாமைத்துவ அறிக்கைகள், இணையத்தளங்கள் ஆகியன முக்கியம் பெறுகின்றன. ஆய்வுக்காகப் பெறப்பட்ட தரவுகள் இடம்சார் மற்றும் இடம்சாரா தரவுப் பகுப்பாய்வு என இரு முறைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. USGS Earth Explorer ஐ பயன்படுத்தி பெறப்பட்ட தரையுயரப் படம் (Digital Elevation Model) ஆய்வுப் பிரதேசத்திற்கான சாய்வுகளின் பண்புகளை வெளிப்படுத்தும் படமாக்கல், வகைப்படுத்தல் என்பவற்றுக்கு அடிப்படையாக பயன்படுத்தப்பட்டது

நிலப் பயன்பாட்டுப் பாங்குகள் சாய்வின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு இட ரீதியான பகுப்பாய்வு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. Arc GIS 10.4.1 மென்பொருளினைப் பயன்படுத்தி சாய்வுகள் உயர அடிப்படையிலும், கோண அடிப்படையிலும் வகைப்படுத்தப்பட்டு

நிலப்பயன்பாடுகளின் அளவீட்டுத் தரவுகள் பெறப்பட்டுப் புள்ளிவிபர முடிவுகளாகவும் படங்களாகவும் காட்டப்பட்டுள்ளன. நேர்காணல், குழுக்கலந்துரையாடல் மற்றும் நேரடி அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகள் பதிவுசெய்யப்பட்டு உரை வடிவமாக மாற்றப்பட்டு, கருப்பொருள் பகுப்பாய்வு மூலம் பிரதான கருப்பொருள்கள் அடையாளப்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் விபரணமுறையினைப் பயன்படுத்தி விபரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சாய்வு முகாமைத்துவம் சிறப்பாகக் காணப்படும் பகுதிகள், சாய்வுகளின் நிலையுறுதித் தன்மை தொடர்பான பிரச்சினைகள் காணப்படும் பகுதிகள் என்பன கண்டறியப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வு நிலங்களின் பண்புகள்

ஆய்வுப் பிரதேசமானது மத்திய மலைநாட்டின் கரடுமுரடான நிலத்தோற்றப் பாங்கினை உடைய பிரதேசமாகவே இது விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் 2000m, 2300m, 2400m உயரத்தில் காணப்படும் பகுதிகள் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. இதனால் அப்பகுதி உயரமான பகுதியாகவே காணப்படுகிறது. இங்கு அதிகமாக உயர் மலைத்தொடர்களும் நதி ஊற்றுக்களும் காணப்படுகின்றன.




**படம் 1, 2 : ஆய்வுப் பிரதேசத்தின் சாய்வுத் தன்மை**

மூலம் : USGS Earth Explorer இனைப் பயன்படுத்தி ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2024

ஆய்வுப் பிரதேசமானது இலங்கையின் மத்தியமலைநாட்டின் மிக உயர்ந்த பகுதியாக காணப்படுவதால் கிட்டத்தட்ட 1200m தொடக்கம் 2500m க்கு இடைப்பட்ட தரையுயர வேறுபாட்டைக் கொண்டு அமைந்துள்ளது. தரையுயர மாதிரியின் அடிப்படையில் நோக்கும்போது,

ஆய்வுப் பிரதேசமானது, 2523m மிக உயர்வான மலைத்தொடர்களைக் கொண்டுள்ளதுடன் இப்பகுதியிலேயே உயர்ந்தளவிலான சாய்வுகளும் காணப்படுகின்றன.

ஆய்வுப் பிரதேச மத்திய பகுதியில் (1763m – 1911m) உயரமான பகுதிகள் காணப்படுகின்றன. இங்கு சாய்வுநிலங்களில் அதிகம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் தாழ்வான பகுதியாகக் காணப்படுவதுடன் சாய்வுகள் குறைவான பகுதியாக அடையாளப்படுத்தப்படுகின்றன. பல்வகைப்பட்ட தரைத்தோற்ற அமைப்புகளைக் கொண்ட ஒரு பகுதியாக இப்பிரதேசம் விளங்குகின்றதுடன் சாய்வின் அடிப்படையில் ஐந்து எல்லைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. 0 - 8 குறைவான சாய்வுடனான நிலப்பரப்பு, 9 - 10 வரை ஓரளவு சாய்வான பகுதிகள், 11 - 20 வரை ஓரளவு செங்குத்தான பகுதிகள், 21 - 30 வரை செங்குத்தான நிலப்பரப்பு, 31 – 70 வரை மிகவும் செங்குத்தான பகுதிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.




படம் 3, 4 : ஆய்வுப் பிரதேசத்தின் தரையுயர மாதிரியும் சாய்வுப் போக்கும்

மூலம் : USGS Earth Explorer இனைப் பயன்படுத்தி ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

**அட்டவணை 2 : ஆய்வுப் பிரதேசத்தின் சாய்வு வகுப்பும் சதவீதமும்**

| சாய்வு வகுப்பு | சதவீதம்% |
|---|---|
| 0 – 8 | 25.8 |
| 9 – 10 | 34.2 |
| 11 – 20 | 24.0 |
| 21 – 30 | 12.2 |
| 30 – 70 | 3.6 |
| **மொத்தம்** | 100 |

மூலம் : ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2024

ஆய்வுப் பிரதேசத்தின் 34.2% மான பகுதி ஓரளவு சாய்வான பகுதிகளாகும். 25.8% பகுதி சாய்வு மிகக் குறைவான பகுதியாகவும் காணப்படுகின்றது. அதனுடன் 24% பரப்பு மிதமான செங்குத்தான பகுதியாகவும், செங்குத்தான நிலப்பரப்பானது 12.2% ஆகவும், மிகவும் செங்குத்தான பரப்பு 3.6% ஆகவும் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வு கோணமானது, $0^0$ : நிலையான அல்லது சமமான மேற்பரப்பாகவும், $1^0 - 5^0$ : மெதுவான சாய்வாகவும், $5^0 - 15^0$ : சராசரி சாய்வாகவும், $15^0 - 30^0$ : கடுமையான சாய்வாகவும், $30^0$ க்கு மேல் மிகக் கடுமையான சாய்வாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சாய்வு திசை அல்லது முகம் என்பது நிலத்தின் சாய்வு எந்தத் திசை நோக்கியதாகக் காணப்படும் என்பதனைக் குறிக்கும். புவியியல் மற்றும் நில அமைப்புகளின் பொருட்டு, சாய்வு திசை ஒரு சாய்வு எப்படிக் காணப்படுகின்றது என்பதை விவரிக்க உதவுகிறது. ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வு திசையானது நீரின் பாய்ச்சல், சூரிய ஒளி பக்கம் மற்றும் மண் தரமிழப்பு போன்ற காரணிகளால் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

**ஆய்வுப் பிரதேசத்தில் சமவுயரக்கோட்டு அடிப்படையில் நிலப்பயன்பாடு**

**A. 1400 - 1600m வரையான சாய்வுகளில் நிலப் பயன்பாடு**

ஆய்வுப் பிரதேசத்தில் 1400 - 1600 m வரையுள்ள பகுதியில் பங்கலாஹுத்த, நானுஓயா, பெரக்கும்புர, சமர்செட், கிடிமிட்டிய, ரத்னகிரிய, சீதாஎலிய, கோரடிஹுல, மீபிலிமான போன்ற பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. சாய்வு குறைவான பிரதேசமாக இது விளங்குவதால் இங்கு மனித தலையீடுகள் பரம்பிக் காணப்படுகின்றன.




படம் 5 : 1400 – 1600m வரையுள்ள சாய்வுப் பகுதியில் நிலப் பயன்பாடு

மூலம் : நுவரெலியா பிரதேச செயலக நிலப் பயன்பாட்டுப் படத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது, 2024

இங்கு தேயிலை, காடுகள், நதிகள், வீட்டுத்தோட்டம், புல்நிலங்கள், மரக்கறிச் செய்கைகள் போன்ற நிலப்பயன்பாடுகள் அதிகமாக காணப்படுகின்றன. தேயிலையே மேற்குப் பகுதியில் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் பெருந்தோட்டக் குடியிருப்புகளும் பெருந்தோட்டப் பயிர்செய்கையின் செல்வாக்கும் அதிகமாக காணப்படுகின்றன. சாய்வுகளில் மனித தலையீடுகள் அதிகமாகக் காணப்படுவதனால் சாய்வு இழப்புகள் 1400 – 1600m சமவுயரக் கோட்டுப் பகுதியில் அதிகமாக நிகழ்கின்றன.

வரைபடம் 1 : 1400m - 1600m வரையான பகுதியில் நிலப் பயன்பாடு




மூலம்: ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

இவ்வாறான பகுதிகள் ஆய்வுப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளிலேயே பரம்பிக் காணப்படுகின்றன. குறிப்பாக, கிழக்கு மற்றும் தென்மேற்குப் பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கை 1386.3 ஹெக்டயர் பரப்பில் மேற்கொள்ளப்படுவதுடன் அதிகளவில் குடியிருப்புகளும் காணப்படுகின்றன. வீட்டுத் தோட்டங்கள் 205.1 ஹெக்டயர் பரப்பில் பரம்பிக் காணப்படுகின்றன. அத்துடன் காடுகள், புல்நிலங்கள், கைவிடப்பட்ட நிலங்கள் என்பனவும் முறையே 110.5, 35.56, 81.1 ஹெக்டயர் பரப்பில் காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் 1400m தொடக்கம் 1600m இடைப்பட்ட பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கையே அதிகமாக காணப்படுவதுடன், இதனையடுத்து வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை ஏறத்தாழ 10 சதவீத அளவில் மேற்கொள்ளப்படுகின்றது. புல்நிலங்களும் கைவிடப்பட்ட நிலங்களும் குறைவாகக் காணப்படுவதுடன் காடுகள் 5.6 சதவீதப் பரப்பில் காணப்படுகின்றன.

## B. 1800 m - 2000m வரையான பகுதிகளில் நிலப் பயன்பாடு

1800 தொடக்கம் 2000 m வரையான பகுதிகளில் சாந்திபுர, பீட்ரோ, கலப்புர, ஹாவலிய, நுவரெலியா, சீதாஎலிய, கெலிகல, விண்டிகோனர், மாகொட, மீபிலிமான, புலுஎல, கந்தபொல போன்ற பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. அதிகளவான நிலப் பயன்பாட்டு அம்சங்கள் பரந்து காணப்படும் பகுதியாக இப்பகுதி காணப்படுகிறது. ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை அதிகளவான நிலப் பயன்பாடுகளுக்கு ஏற்ற சாதகத் தன்மைகள் உள்ள சாய்வு நிலப்பரப்புகளைக் கொண்ட பகுதியாக இது காணப்படுகிறது.




படம் 6 : 1800 m – 2000m வரையுள்ள பகுதியில் நிலப் பயன்பாடு

மூலம் : நுவரெலியா பிரதேச செயலக நிலப் பயன்பாட்டுப் படத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது, 2024

அடர்ந்த காடுகளை இப்பகுதி கொண்டிருப்பதுடன் மரக்கறி பயிர்ச்செய்கை அதிகமாக இடம்பெறும் பகுதியாக இது விளங்குகின்றது. இது தவிர வர்த்தகம், சுற்றுலா, விவசாயப்

பண்ணைகள், வீட்டுத்தோட்டம், குடியிருப்புகள், நகராக்கச் செயற்பாடு அதிகமாகக் காணப்படும் பகுதியாகவும் இது விளங்குகின்றது. இப்பகுதிச் சாய்வுகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதிகளவில் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பகுதியின் 6116.265 ஹெக்டயர் பரப்பளவில் அடர்ந்த காடுகள் பரம்பியுள்ளன. அதனுடன் தேயிலைத் தோட்டங்களும் மரக்கறிச் செய்கை நிலங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. வணிகப் பகுதி, திறந்த வெளி காடுகள், திட்டமிடப்பட்ட காடுகள், புல்வெளிகள், நன்னீர் சதுப்பு நிலங்கள், விளையாட்டு மைதானம், வீட்டுத் தோட்டங்கள், குடியிருப்புகள், கைவிடப்பட்ட நிலங்கள் போன்றனவும் இப்பகுதியில் குறிப்பிட்ட சில பகுதிகளில் பரம்பிக் காணப்படுகின்றன.

அட்டவணை 3 : 1800m - 2000m வரையான பகுதியில் நிலப் பயன்பாடு

| நிலப்பயன்பாடு | சதவீதம்% | நிலப்பயன்பாடு | சதவீதம்% |
|---|---|---|---|
| **விவசாயப் பண்ணைகள்** | 2.5 | புல்வெளிகள் | 0.8 |
| **வணிகப் பகுதி** | 0.2 | நன்னிர் சதுப்பு நிலங்கள் | 1.9 |
| **அடர்ந்த காடு** | 55.9 | வீட்டுத் தோட்டம் | 3.6 |
| **திறந்தவெளி காடுகள்** | 3.4 | விளையாட்டு மைதானம் | 0.6 |
| **திட்டமிடப்பட்ட காடுகள்** | 4.3 | குடியிருப்பு | 2 |
| **கைவிடப்பட்ட நிலங்கள்** | 1.8 | தேயிலை | 10.9 |
| **மரக்கறிப் பயிர்செய்கை** | 12.1 | | |

மூலம் : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

இப்பிரதேசத்தில் காணப்படும் நிலப் பயன்பாடுகளில் அரைப்பகுதி (55.9%) அடர்ந்த காடுகளாகவே உள்ளன. தேயிலை 10.9 சதவீதமும், மரக்கறிப் பயிர்செய்கை 12.1 சதவீதமாகவும் உள்ளதுடன் ஏனைய அனைத்து நிலப் பயன்பாடுகளும் 3 சதவீதத்தைவிடக் குறைவான நிலப்பரப்பிலேயே உள்ளடங்குகின்றது. சாய்வுகளில் தேயிலைப் பயிர்செய்கை மற்றும் படிமுறை விவசாயப் பயிர்செய்கை போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.

### C. 2200 - 2400m வரையான சாய்வுகளில் நிலப் பயன்பாடு

ஆய்வுப் பிரதேசத்தில் மிக உயரமான பகுதியாக அடையாளப்படுத்தப்படும் பகுதியே இப்பகுதியாகும். இங்கு பட்டிப்பொல, பம்பரகல, ஜெயலங்கா, ஹாவலிய வடக்கு போன்ற பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. ஆய்வுப் பிரதேசத்தின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளிலேயே இவ்வாறான உயர்வான பகுதிகள் காணப்படுகின்றன. இது குறைவான நிலப் பயன்பாடுகளைக் கொண்ட பகுதியாகும். உயர்ந்த மலைத் தொடர்களையும் அதிகளவான காடுகளையும் கொண்ட பகுதியாக இப்பகுதி காணப்படுகின்றது.




படம் 7 : 2200 – 2400m வரையுள்ள சாய்வுப் பகுதியில் நிலப் பயன்பாடு

மூலம் : நுவரெலியா பிரதேச செயலக நிலப் பயன்பாட்டு படத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது, 2024

இங்கு குறைவான நிலப் பயன்பாட்டு அம்சம் காணப்படுவதற்குக் காரணம் இப்பகுதியானது காடுகளை அதிகளவில் கொண்டிருப்பதாகும். இங்கு மானிடச் செயற்பாடுகள், குடியிருப்புப் பரம்பல் ஆகியன குறைவாகவே காணப்படுகின்றன. சில பகுதிகளில் விவசாயப் பண்ணைகளும் மரக்கறிப் பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனுடன் கைவிடப்பட்ட நிலங்கள், நன்னீர் சதுப்பு நிலங்கள், வீட்டுத் தோட்டம், புல் நிலங்கள் என்பனவும் காணப்படுகின்றன. இதனடிப்படையில் மனித தலையீடுகளினால் உருவாக்கப்பட்ட சாய்வுகள் இங்கு மிகக் குறைவாகவே உள்ளன.

அட்டவணை 4 : 2200 - 2400m வரையான சாய்வுப் பகுதிகளில் நிலப்பயன்பாடு

| நிலப்பயன்பாடு | பரப்பு(ஹெக்டயர்) | சதவீதம்% |
|---|---|---|
| விவசாயப் பண்ணைகள் | 21.02 | 1.2 |
| அடர்ந்த காடு | 1616.94 | 94.8 |
| புல்நிலங்கள் | 10.60 | 0.6 |
| வீட்டுத்தோட்டம் | 7.35 | 0.4 |
| நன்னீர் சதுப்பு நிலம் | 14.63 | 1 |
| குறுநிலங்கள் | 11.80 | 0.7 |
| மரக்கறிப் பயிர்ச்செய்கை | 22.15 | 1.3 |
| மொத்தம் | 1704.49 | 100 |

மூலம் : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

**ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வுநில முகாமைத்துவமும் பிரச்சினைகளும்**

ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வுகளைப் பாதுகாப்பதற்குப் பல்வேறுபட்ட முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாய்வுநிலத்தின் நிலையுறுதித் தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இவை முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில், சாய்வுநில முகாமைத்துவச் செயற்பாடுகளில் இனங்காணப்பட்ட முகாமைத்துவ வழிமுறைகள் பின்வருமாறு:

- கேபியன் அணைகள்
- கொங்ரீட் சுவர்கள்
- சமவுயரக் கோட்டுப் பயிர்ச்செய்கை
- படிக்கட்டுமுறைப் பயிர்ச்செய்கை
- மூடு பயிர் வளர்த்தல்
- பயிர்த் தெரிவுகள்
- கற்கட்டடங்கள் அமைத்தல்
- முறையான வடிகால் அமைப்புகள்
- காற்றுத் தடைகள்
- பெருந்தோட்ட காடுகள்

விளக்கப் படம் 2 : ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வு முகாமைத்துவ நடவடிக்கைகள்
(மூலம் : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2024)

- **கேபியன் அணைகள் -** ஆய்வுப் பிரதேசத்தின் சில வீதி ஓரங்களில் அவதானிக்கப்பட்ட ஒரு முகாமைத்துவ நடவடிக்கையாக இம்முறை காணப்படுகின்றது. இம்முறையானது கற்கட்டிடங்களை அமைத்து இரும்பு கம்பி வலைகளை அதன் மேல் பொருத்தி அமைக்கப்படும் முறையாகும். இம்முறை மூலம் சிறிய சாய்வுகளில் ஏற்படும் பாதிப்புகள் குறைக்கப்படுகின்றன (நேர்காணல், 2024). ஆய்வுப் பிரதேசத்தில் கலபுர, நானுஓயா, பெரக்கும்புர போன்ற பகுதிகளில் இம்முறை அதிகளவில் அவதானிக்கப்பட்டது.
- **கொங்ரீட் சுவர்கள் -** கொங்ரீட் சுவர்கள் ஆய்வுப் பிரதேசத்தில் சில சாய்வுகளில் அவதானிக்கப்பட்ட மற்றுமொரு முகாமைத்துவ நடவடிக்கையாகும். மத்திய நுவரெலியா பகுதியிலும் நானுஓயா போன்ற சில பகுதிகளிலும் இம்முறை அவதானிக்கப்பட்டது. அதாவது, பாரிய அளவிலான சாய்வுகளில் இருந்து பாதிப்புகளைக் குறைப்பதற்காக இம்முறை பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக பிரதான போக்குவரத்து பகுதிகள், மிகப்பெரிய கட்டிடங்கள் போன்றன காணப்படும் பகுதிகள் சிலவற்றில் இம்முறை அவதானிக்கப்பட்டது. செலவு கூடிய முறையாகக் காணப்படுகின்றமையினால் அரச

நிறுவனங்களினாலேயே பெரும்பாலும் இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது (நேர்காணல், 2024).




ஒளிப்படம் 1 : ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வுப் பாதுகாப்பு முறைகள் - A: ஆய்வுப்பிரதேச கேபியன் அணைகள், B , C: கொங்ரீட் சுவர், D:கற்கட்டடங்கள், E , F: முறையான வடிகால் அமைப்பு (மூலம் : ஆய்வாளர், 2024)

- **வடிகால் அமைப்புகள்** - ஆய்வுப் பிரதேச மலைச் சாய்வுகளில் இயற்கையான வடிகாலமைப்புக்கள் மாற்றியமைக்கப்படுகின்றமை சாய்வுகளில் நிலையுறுதித் தன்மையினைப் பாதிக்கும் மிக முக்கிய காரணியாகும். தேயிலைப் பெருந்தோட்டங்கள் காணப்படும் பகுதிகளில் வடிகால் அமைப்புகள் காணப்படுவதுடன் சாய்வுகளில் நீர் தேங்காமல் சீராகச் செல்வதற்கு இவை வழிவகுக்கின்றன. மாகெஸ்தொட்ட, பம்பரகெல, ஹாவலிய போன்ற இடங்களிலுள்ள தேயிலைப் பயிர்ச்செய்கை நிலங்களில் இத்தகைய வடிகால் அமைப்புகள் காணப்படுகின்றன (நேரடி அவதானம், 2024). எனினும், இவை ஆரம்ப காலங்களில் உருவாக்கப்பட்ட வடிகாலமைப்புக்களாகக் காணப்படுவதனால் பல இடங்களிலும் சீரற்ற நிலையிலேயே காணப்படுகின்றன (குழுக் கலந்துரையாடல், 2024).
- **சாய்வுகளில் கற்கட்டடங்கள் அமைத்தல்** - சாய்வுப் பகுதிகளில் மண்ணரிப்பு, மண்சரிவு போன்றவற்றைத் தடுப்பதற்காக கருங்கற்களைக் கொண்ட கட்டடங்கள் அமைக்கும் முறையும் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் இம்முறை கிடிமிட்டி, நானுஓயா, சமரசெட், கொங்கோடியா போன்ற பிரதேசங்களில் பரவலாக அவதானிக்கப்பட்டது (நேரடி அவதானம், 2024). எனினும், இவற்றுள் பெரும்பாலான கற் கட்டடங்கள் ஆரம்ப காலங்களில் உருவாக்கப்பட்ட கற்கட்டடங்களாக இருப்பதனாலும், முறையான பராமரிப்பின்றி காணப்படுவதனாலும் சீரற்ற நிலையிலேயே காணப்படுகின்றன (குழுக் கலந்துரையாடல், 2024).
- **படிக்கட்டுமுறை பயிர்ச்செய்கை** - சாய்வுகளில் மேற்கொள்ளப்படும் மிக முக்கியமான பயிர்ச்செய்கை முறையாக படிக்கட்டு முறை பயிர்ச்செய்கை காணப்படுகின்றது. ஆய்வுப்

பிரதேசத்தில் மீபிலிமான, களுகெல்ல, மாகொட, கந்தபொல போன்ற இடங்களில் சாய்வுகள் படிக்கட்டு அமைப்பில் மாற்றப்பட்டு அதில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விவசாய நடவடிக்கையானது கடுமையான சாய்வுகளில் நிலத்தைப் படிக்கட்டுகள் அல்லது தளங்களாக வெட்டி அமைக்கப்படுவதன் காரணமாக, நீரின் ஓட்டத்தைக் குறைத்து மண்ணரிப்பைத் தடுக்கின்றன. இதில் நிலத்தை ஒட்டி வளரும் பயிர்கள், கிழங்கு வகை, லீக்ஸ் போன்ற விவசாயப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன. எனினும், இம்முறையினை முறையாகப் பின்பற்றாமையினால் அதிகரித்த மண்ணரிப்பு மற்றும் நிலையுறுதி சார்ந்த பிரச்சினைகள் ஆகியவற்றைச் சாய்வுகள் எதிர்நோக்கி வருகின்றன (நேரடி அவதானம், 2024).




ஒளிப்படம் 2 : ஆய்வுப் பிரதேச சாய்வு முகாமைத்துவம்
A ,B , C: ஆய்வுப் பிரதேசத்தில் படிமுறைப் பயிர்செய்கை முறைமை, D: காற்றுத்தடைகள், E , F: பெருந்தோட்டக் காடுகள் (மூலம் : ஆய்வாளர், 2024)

- **பயிர்த் தெரிவு** - சாய்வுகளில் அமைப்பைப் பொறுத்துச் சில பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், பல பகுதிகளில் முறையற்ற விதத்திலேயே விவசாய செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதாவது, ஒவ்வொரு பயிரும் ஒவ்வொரு விதமான மண் அமைப்பு மற்றும் சாய்வுக் கோணத்திற்குப் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. அந்த வகையில், சாய்வுகளுக்கு உரித்தான பயிர்ச்செய்கை முறை, பயிர்த் தெரிவு என்பன இப்பிரதேசத்தில் ஓரளவு காணப்பட்டாலும், இம்முறைமை எல்லாப் பிரிவுகளிலும் பின்பற்றப்படாமை குறிப்பிடத்தக்கது. அதிகளவிலான மண்ணரிப்பினை ஏற்படுத்தக்கூடிய உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கையினை முறையான விவசாய நடைமுறைகளைப் பின்பற்றாமல் மேற்கொள்வதால் ஏற்படும் சாய்வு சார்ந்த பிரச்சினைகள் இதற்கு முக்கிய உதாரணமாகும் (நேர்காணல், 2024).
- **உயர் நிலங்களில் பெருந்தோட்டக் காடுகள்** - ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வுகளில் பெருந்தோட்டக் காடுகளின் மூலமான சாய்வுப் பாதுகாப்பு என்பது முக்கியமான சுற்றுச்சூழல் நடவடிக்கையாகும். ஆய்வுப் பிரதேசத்தில் பட்டிபொல, டொப்பாஸ் போன்ற பகுதிகளை

இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம் (நேரடி அவதானம், 2024). முக்கியமான விவசாயக் காடாக்க முறைகளில் ஒன்றாகக் காணப்படும் இம்முறைமை உயரமான பகுதிகளில் சூழல்சார் நன்மைகளை அதிகம் ஏற்படுத்தக்கூடிய ஒரு முறையாகவும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குப் பொருளாதார ரீதியான நன்மைகளை வழங்கும் முறையாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாறான முகாமைத்துவ நடைமுறைகள் பின்பற்றப்பட்டாலும் அனைத்து இடங்களிலும் சாய்வுநிலங்களைப் பாதுகாப்பதற்கான முன்னெடுப்புக்கள் முறையாக மேற்கொள்ளப்படாமை, செலவு கூடிய முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் காணப்படும் பொருளாதார ரீதியான தடைகள், சாய்வுகளில் மனித அழுத்தங்களின் அதிகரிப்பு, முறையற்ற நிலப் பயன்பாட்டு முறைகள், சமூக மட்டத்தில் முறையான திட்டமிடல் இன்மை, சாய்வுகளுக்கு முறையான கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு இன்மை, ஆரம்ப காலத்தில் சிறப்பாகக் காணப்பட்ட சாய்வுநில முகாமைத்துவ நடவடிக்கைகளைப் பேணிப் பாதுகாக்காமை, நிறுவன ரீதியிலான பங்களிப்பானது குறிப்பிட்ட சில இடங்களை மையப்படுத்தியதாக காணப்படுகின்றமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் சாய்வுநிலங்களில் முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளாக இவ் ஆய்வில் இனங்காணப்பட்டன (நேர்காணல், குழுக்கலந்துரையாடல், 2024). தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வு நிலங்களின் நிலையுறுதித் தன்மை தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு முகாமைத்துவ வழிமுறைகளுக்கான தேவையினை வலியுறுத்துகின்ற போதிலும் அவற்றின் நடைமுறைப்படுத்தலில் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

முறையான சாய்வுப் பாதுகாப்பு இல்லாத பிரதேசங்களில் இதனால் மண்ணரிப்பு, மற்றும் சாய்வு இழப்புக்கள் என்பன அதிகரித்து வருகின்றன. சாய்வுகளில் ஏற்படும் மண்ணரிப்பானது, விவசாய நிலங்களின் உற்பத்தி திறனை குறைத்து, மண்ணின் திறனையும் பாதிக்கின்றது (நேர்காணல், 2024). ஆய்வுப் பிரதேசத்தில் 15°-30° வரை சாய்வான நிலங்களில் மண் அரிப்பு அதிகமாக இடம்பெறுகின்றது. சாய்வு 30° மற்றும் அதற்கு மேல் காணப்படும் பகுதிகளில் உயர்வான மண் அரிப்பும் இடம்பெறுகின்றது (நேரடி அவதானம், 2024). இதேபோல் ஆய்வுப் பிரதேசத்தின் சாய்வுகளில் நிலையுறுதித் தன்மை பாதிக்கப்படுவதனால் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் காலங்களில் சாய்வு இழப்புக்களும் அதிகரித்து வருகின்றன (நேர்காணல், 2024). ஆய்வுப் பிரதேசத்தின் அருகிலுள்ள கட்டடங்கள், பாதைகள், சொத்துக்களைப் பாதிப்பதுடன் அங்கு வாழும் மக்களின் உயிர்களுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது (குழுக் கலந்துரையாடல், 2024).



ஒளிப்படம் 9 : ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்கப்பட்ட மண்ணரிப்பு, சாய்வு இழப்புக்கள்
மூலம் : ஆய்வாளர், 2024

ஆய்வுப் பிரதேச சாய்வு நிலங்களில் மனித தலையீடுகள் அதிகரித்து வருகின்றமை இவற்றில் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வுகளில் குடியிருப்புகள் பரவலாக அமைப்பதற்கு, பெரும்பாலும் காடுகள் அல்லது பசுமை நிலங்கள் அழிக்கப்படுவதுடன் இயற்கை சாய்வுகள் மாற்றியமைக்கப்படுவதனால் நீரின் ஓட்டம், மண் கட்டமைப்பு என்பனவும் பாதிக்கப்படுகின்றன (நேர்காணல், 2024). சாய்வுகளில் முறையான திட்டமிடல் இன்றி குடியிருப்புக்களை அமைத்தல் சாய்வுகளில் நிலையுறுதித் தன்மையினைப் பாதிக்கும் முக்கிய காரணியாக இனங்காணப்பட்டது.

ஆய்வுப் பிரதேசத்தில் அதிக அளவிலான காடுகளும் உயர்ந்த மலைத் தொடர்களும் காணப்படும் பகுதியில் குறைவான குடியிருப்புப் பரம்பல் காணப்பட்டாலும், ஆய்வுப் பிரதேசத்தின் மத்திய பகுதியில் குடியிருப்பு செறிவாகக் காணப்படுகின்றது. நகரப் பகுதியாகக் காணப்படுவதால் அதிகளவான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளும் இடங்களாக உள்ளமையால் அங்கு சாய்வுகள் மாற்றியமைக்கப்பட்டு நகரங்கள், குடியிருப்புகள், கட்டடங்கள், பொது இடங்கள் எனப் பல குடியிருப்பு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன (நேரடி அவதானம், 2024).

மக்கள் சாய்வுகளில் குடியிருப்புகளை அமைப்பதால், அதனைச் சுற்றியுள்ள இடங்களின் புவியியல் இயல்பு மாற்றம் அடைகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் தென்மேற்குப் பகுதியில் குடியிருப்புகள் விவசாயப் பயிர்களான தேயிலை, வீட்டுத்தோட்டம், மரக்கறி போன்ற சில இடங்களில் தொடர் குடியிருப்புகளாகவும் சில இடங்களில் கொத்தணிக் குடியிருப்புகளாகவும் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையுடன் கூடிய பகுதிகளில் தனித்தனி குடியிருப்புகளாகவும் காணப்படுகின்றன (நேரடி அவதானம், 2024). இவை பல்வேறு இயற்கை நிலைகளை மாற்றி, மக்கள் வாழ்வதற்கான புதிய சூழலை உருவாக்குகின்றன. இருந்தாலும், சில இயற்கை

அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய நிலையும் அதிகம் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்றது.




படம் 9 : ஆய்வுப் பிரதேச குடியிருப்புப் பரம்பல், ஒளிப்படம் 10 : சாய்வுகளில் குடியிருப்புக்கள் - A: ஆய்வுப் பிரதேச குடியிருப்புப் பரம்பல் படம், (மூலம்: UEGS Eearth Explorer, 2024) B, C : சாய்வுகளில் குடியிருப்புப் பரம்பல் (மூலம்: ஆய்வாளர், 2024)

வீதி அபிவிருத்தி, ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள், நகர விரிவாக்கம், குடியிருப்புத் திட்டங்கள், முறையற்ற விவசாய நடைமுறைகள் என இப்பிரதேசத்தில் மானிடச் செயற்பாடுகள் ஒரு புறம் அதிகரித்து வருகின்ற அதேவேளை, சாய்வுகள் முறையாகப் பேணப்படாமை முக்கிய பிரச்சினையாக விளங்குகின்றது. சாய்வுகள் அதிகமாக வெட்டப்படுவதுடன் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள முகாமைத்துவ நடைமுறைகளானது முறையாகப் பேணப்பட்டு வராமையும் முக்கிய பிரச்சினையாக இங்கு அடையாளப்படுத்தப்படுகின்றது. பயிர்செய்கை மேற்கொள்ளும் பகுதிகளில் படிக்கட்டு முறைப் பயிர்செய்கை மேற்கொண்டாலும் அச்சாய்வுகள் முறையாக பாதுகாக்கப்படாமல் காணப்படுவதால் அதிகமாக பயிர்நிலங்கள் நிலச்சரிவுக்கு உள்ளாக்கப்படுகின்றன. அத்துடன் சாய்வுகளில் தாவரப் போர்வையானது பல்வேறு தேவைகளின் பொருட்டு அகற்றப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகள் இப்பிரதேச சாய்வுகளின் நிலையுறுதி தொடர்பிலான கேள்வியினை எழுப்புவதுடன் நீண்ட கால நோக்கில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்துகின்றது.

**முடிவுரை**

“நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாய்வு நிலங்களின் நிலப் பயன்பாட்டினை முகாமைச் செய்தல் : நிலையான பாதுகாப்புக்கான வழிமுறைகள்” என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வில் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள சாய்வு நிலங்களின் அமைப்பு, தன்மை, உயர வேறுபாடுகளின்படி நிலப் பயன்பாடு, சாய்வு நில முகாமைத்துவ

செயற்பாடுகள், என்பன தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. இதில் சாய்வுகளில் மண்ணரிப்பு, சாய்வுகளில் ஏற்படும் நிலச்சரிவு, மனித தலையீடுகளின் அதிகரிப்பு, சாய்வு முகாமைத்துவ செயற்பாடுகளில் காணப்படும் பிரச்சினைகள் என்பன முக்கியமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சாய்வுகளில் நிலத்தோற்ற அமைப்பின் படி பல இடங்களிலும் நிலப் பயன்பாடுகள் காணப்பட்டாலும், சில இடங்களில் சாய்வின் நிலையுறுதித் தன்மையினைப் பாதிக்கும் வகையிலான நிலப் பயன்பாட்டு முறைகள் காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வு நில முகாமைத்துவம் மேலும் மேம்படுத்த வேண்டிய நிலையிலேயே காணப்படுகின்றது. அரச மற்றும் சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாய்வு முகாமைத்துவ முறைகள் குறிப்பிடத்தக்க நன்மைகளை ஆய்வுப் பிரதேசத்தில் கொண்டிருக்கின்ற போதிலும், அவை அவசியமான ஏனைய பகுதிகளுக்கு விரிவாக்கப்பட வேண்டியதும் நடைமுறையில் காணப்படும் முறைகள் வலுப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும்.

**பரிந்துரைகள்**

இவ் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தின் நிலையான சாய்வுப் பாதுகாப்பிற்கான வழிமுறைகளாக பின்வருவனவற்றைப் பரிந்துரை செய்கின்றது:

- நிலப் பயன்பாட்டுப் பிரச்சினை உயர்வாகக் காணப்படும், நலிவுறுநிலைமிக்க சாய்வுகள் காணப்படும் இடங்களில் வலயப்படுத்தல் முறை மூலம் சாய்வுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் (ஆய்வுப் பிரதேசத்தின் மத்திய பகுதி).
- ஆய்வுப் பிரதேச மக்களுக்குச் சாய்வு நிலங்கள் சார்ந்த பராமரிப்பு, பொருத்தமான பயிர்த்தெரிவு, பொருத்தமான விவசாய நடைமுறைகள், முகாமைத்துவ வழிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
- நடைமுறையில் உள்ள சமவுயரக் கோட்டுப் பயிர்ச்செய்கை, படிக்கட்டுமுறைப் பயிர்ச்செய்கை முறைகள் என்பவற்றை வினைத்திறனாக முன்னெடுத்தல் (ஆய்வுப் பிரதேத்தில் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகள்).
- உயர்வான சாய்வு கொண்ட பகுதிகளில் அதிகரித்து வரும் கட்டுமான நடவடிக்கைகளைத் தவிர்த்தல், ஓரளவு சாய்வான பகுதிகளில் பொருத்தமான குடியிருப்பு முறைகளை அமுல்படுத்தல் (ஆய்வுப் பிரதேசத்தின் மத்திய பகுதி).
- ஆய்வுப் பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள முகாமைத்துவ முறைகளைப் பராமரித்தல்.
- விவசாயக் காடாக்க முறையினை ஆய்வுப் பிரதேசத்தின் மென்சாய்வான பகுதிகளில் வினைத்திறனாக மேற்கொள்ளல்.
- சாய்வுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல், சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்படும் சாய்வுப் பாதுகாப்பு முறைகளைப் பொருளாதார உதவியுடன் வலுப்படுத்தல்

**உசாத்துணை நூற்பட்டியல்**

Abebaw, A. (2021). Effect of land use types, slope gradient and land management practices on selected soil physico-chemical properties in Burat watershed, northwestern Ethiopia (Doctoral dissertation).

Ayele, A. W. (2016). Monitoring slope instability due to environmental changes. Journal of Geotechnical Studies, 10(2), 45–58.

Digvijay, A. (2017). Factors influencing soil erosion and landslide susceptibility in mountainous regions. Journal of Environmental Studies, 12(1), 34–47.

Karunarathne, S. B., Weerakkody, W. J. S. K., Rajapakshe, H. A., & Adikari, A. M. K. (2005). Development of a land use management plan for the Maha-Oya mini-catchment of the upper Mahaweli catchment. Mahaweli Authority of Sri Lanka. https://example.org/mahaweli-plan.pdf

Karunarathna, S. (2024). Understanding soil properties and degradation in slope dynamics. Journal of Geotechnical and Environmental Studies, 18(1), 45-60.

Lambin, E.F., Geist, H. J., & Lepers, E. (2001). The causes of land-use and land-cover change: Moving beyond the myths. Global Environmental change.

Mugagga, F., Kakembo, V., & Buyinza, M. (2012). Land use changes on the slopes of Mount Elgon and the implications for the occurrence of landslides. Catena, 90, 39-46.

Razali, I. H., Taib, A. M., Abd Rahman, N., Abang Hasbollah, D. Z., Md Dan, M. F., Ramli, A. B., & Ibrahim, A. (2023). Slope stability analysis of riverbank in Malaysia with the effects of vegetation. ResearchGate. https://www.researchgate.net/publication/366043604_Slope_stability_analysis_of_riverbank_in_Malaysia_with_the_effects_of_vegetation

Vanaker, V., Govers, G., Barros, S., Poesen, J., & Deckers, J.(2003). The effect of short-term socio-economic and demographic change on landuse dynamics and its corresponding geomorphic response with relation to water erosion in a tropical mountainous catchment, Ecuador.

# கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே பிரதேச செயலக பிரிவில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் (2003-2023) நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றம்

**Yoganadhan Baby Shalini**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
anushalini32@gmail.com

**S. Vasanthakumary**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vasanthakumarys@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள பஸ்பாகே பிரதேசம் அண்மைக் காலமாக அதிகளவில் நிலப்பயன்பாட்டு மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. இம்மாற்றங்கள் இப்பிரதேசத்தின் பௌதிகச் சூழலில் மாத்திரமன்றி, இப்பிரதேச மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியிலும் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வின் பிரதான நோக்கம் ஆய்வுப் பிரதேசத்தின் 2003 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட இரு தசாப்த காலப்பகுதியில் நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கண்டறிதலாகும். இரு தசாப்த காலப்பகுதியில் (2003-2023) நிலப்பயன்பாட்டு மாற்றத்தைக் கண்டறிவதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம்நிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, நேர்காணல் மூலமாகவும் இரண்டாம் நிலைத் தரவுகள் 2003, 2023 ஆம் ஆண்டுகளுக்கான செய்மதிப்படங்கள், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - கண்டி (2023), பஸ்பாகே பிரதேச செயலக மூலவளத்திரட்டு (2023) ஆகியவற்றில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. 2003, 2023 ஆம் ஆண்டுக்கான நிலப்பயன்பாட்டு அம்சங்களானவை Google Earth Pro மற்றும் Arc GIS 10.4.1 மென்பொருட்களைப் பயன்படுத்தி படமாக்கல் செய்யப்பட்டு குறித்த காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான நிலப்பயன்பாட்டு அம்சங்களாக காடுகள், கட்டமைக்கப்பட்ட பகுதி, தேயிலை நிலங்கள், நீர்நிலைகள், விவசாய நிலங்கள், தரிசு நிலங்கள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 2003-2023 காலப்பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தின் நீர்நிலைகள் பாரியளவில் மாற்றமின்றிக் காணப்பட தேயிலை நிலங்கள், காட்டுப் பரப்பு, தரிசு நிலங்கள் மற்றும் ஏனைய பயிர்கள் காணப்படும் நிலப்பரப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் இப்பிரிவில் விவசாய நிலங்களின் வீழ்ச்சியுடன் கட்டமைக்கப்பட்ட பகுதியின் பரப்பானது குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றது. கட்டமைக்கப்பட்ட பகுதியானது 2003 இல் 1229.7 ஹெக்டயரிலிருந்து 2023 ஆம் ஆண்டு 4774.8 ஹெக்டயராக அதிகரித்துள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் நிலப்பயன்பாட்டு மாற்றத்திற்கு அடிப்படையாக குடித்தொகை வளர்ச்சி,

அபிவிருத்தி நடவடிக்கைகள், காடழிப்பு, பொருளாதார நடவடிக்கைகள், தேயிலை நிலங்கள் அழிவடைதல் போன்ற காரணிகள் இனங்காணப்பட்டுள்ளன. இந்நிலையில், ஆய்வுப் பிரதேசத்தில் சமூக பொருளாதார மேம்பாட்டினையும் சூழல் நிலைத்திருப்பினையும் பேணும் வகையில் நிலப்பயன்பாட்டுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளை நிலைபேண் தன்மையின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

***திறவுச் சொற்கள்*** *: நிலப்பயன்பாட்டு மாற்றம், கட்டமைக்கப்பட்ட பகுதி, தேயிலைப் பயிர்செய்கை, குடியிருப்பு விரிவாக்கம், காடழிப்பு.*

**அறிமுகம்**

நிலப் பயன்பாட்டு மாற்றம் என்பது ஆகக் குறைந்தது இரண்டு வேறுபட்ட காலப்பகுதிகளில் புவிமேற்பரப்பில் காணப்படும் பல்வேறு நிலப் பயன்பாடுகளின் வேறுபாடுகளைக் குறிக்கின்றது (Serneels et al., 2001). இன்று உலகளாவிய ரீதியில் நிலப் பயன்பாட்டு மாற்றமானது முக்கியமான சுற்றுச் சூழல் பிரச்சினையாக மாறியுள்ளது (Paul and Rashid, 2017). உட்கட்டமைப்பு வசதிகள், விவசாய நடவடிக்கைகள், கைத்தொழில் நடவடிக்கைகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்றவற்றிற்காக காலத்திற்கு காலம் இடத்திற்கு இடம் நிலப் பயன்பாடுகள் மாறிக்கொண்டே செல்கின்றன. குறிப்பாக, விரைவான நகரமயமாக்கல் இன்று உலகம் முழுவதும் பரவலான வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளதுடன் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் திட்டமிடுபவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாக மாறி வருகிறது (Mathanraj et al., 2021).

இலங்கையிலும் நிலப் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் தாக்கங்கள் தொடர்பில் சூழலியலாளர்கள் வலியுறுத்தி வருகின்ற போதிலும், அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது, இது தொடர்பான கவனம் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் நிலப் பயன்பாட்டு மாற்றம் தொடர்பிலான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் நிலப் பயன்பாட்டு மாற்றங்களில் பெருமளவிலான பெருந்தோட்டப் பயிர் நிலங்கள், பசுமையான காட்டு நிலப்பரப்பு ஆகியன குடியிருப்புகளுக்காகவும் மரக்கறிப் பயிர்ச்செய்கைக்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (Kumuthini & Suthakar, 2018).

இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்தில் பத்து வருட காலப் பகுதியில் ஏற்பட்ட நிலப் பயன்பாட்டு மாற்றங்களையும் நிலச்சரிவுகளில் குறிப்பிட்ட நிலப் பயன்பாட்டு மாற்றங்களின் விளைவை மதிப்பீடு செய்வதனையும் நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இறப்பர், தேயிலை மற்றும் வன நிலப் பரப்பு ஆகியவற்றில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது (Gunarathna et al., 2018). இலங்கையின் நீர்கொழும்பு முகத்துவாரத்தின் உற்பத்தித்திறனில் நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்களைக்

கண்காணித்தல் தொடர்பாக Dahanayaka et al. (2012) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது வேகமாக வளர்ந்து வரும் இப்பிரதேசத்தில் நிலப் பயன்பாட்டு மாற்றத்தின் நிலைமையினை வெளிக்கொண்டு வந்தது.

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் பிரதேசத்தில் தற்போதைய காலகட்டத்தில் குடியிருப்பானது எல்லைக் கிராமங்களை நோக்கி நகரத் தொடங்கியதோடு அங்கு நிலப் பயன்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது (Rinos and Rifath, 2019). இலங்கையில் கண்டி மாவட்டத்தில் வேகமாக அதிகரித்து வரும் குடித்தொகைக்கு இணங்க நிலப் பயன்பாட்டுப் பாங்கும் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டு வருகின்றது. கண்டிப் பிரதேச செயலகப் பிரிவில் கட்டப்பட்ட பரப்பு மிக வேகமாக அதிகரித்து வருவதுடன் காடுகள் மற்றும் விவசாய நிலங்கள் உள்ளடங்களாக ஏனைய நிலப் பயன்பாட்டு நிலங்கள் மிக வேகமாகக் குறைந்து வருகின்றன (Withanage, 2017). இலங்கையின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நகராக விளங்கும் கண்டி நகரப் பகுதியில் முதன்மையான நிலப் பயன்பாட்டு மாற்றமாக கட்டப்பட்ட நிலங்களின் கணிசமான அதிகரிப்பும் காடுகள் நிறைந்த நிலங்களின் வீழ்ச்சியும் கண்டறியப்பட்டுள்ளன (Uduporuwa, 2020).

கண்டி நகர்ப்புற வளர்ச்சி வேகமாகக் காணப்படுவதுடன் இதன் விளைவாக நகர நிலப் பயன்பாடு பாரிய மாற்றங்களை எதிர்கொண்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக, கட்டப்பட்ட பகுதியின் வளர்ச்சி 2005 ஆம் ஆண்டில், 16.9 சதவீதமாக இருந்து, 2020 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன் கட்டப்பட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய நிலப் பயன்பாடுகள் 2005 ஆம் ஆண்டில் 81.7 சதவீதமாக இருந்து 2020 இல் 58.8 சதவீதமாகக் குறைந்துள்ளது (Pilapitiya et al., 2024).

கட்டப்பட்ட பரப்பின் கணிசமான அதிகரிப்பிற்கும் ஏனைய நிலப் பயன்பாட்டு மாற்றங்களுக்கும் கண்டி நகரில் அதிகரித்து வரும் குடித்தொகை முக்கிய காரணமாகும் (Uduporuwa, 2020; Pilapitiya et al., 2024). இதனால் நில வளங்களை உகந்த முறையில் பாதுகாப்பதற்கு நிலையான அபிவிருத்தியை நோக்கிய தேசியக் கொள்கை இயற்றப்பட வேண்டியது முக்கிய தேவையாகக் காணப்படுகின்றது (Withanage, 2017).

கண்டி மாவட்டத்தில் காணப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒன்றான பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவிலும் அண்மைய தசாப்த காலமாக நிலப் பயன்பாட்டுப் பாங்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக, கடந்த இரு தசாப்தங்களில் இப்பிரதேசத்தில் ஏற்பட்டு வரும் சமூக-பொருளாதார மாற்றங்கள், சுற்றுச் சூழல் அழுத்தங்கள் காரணமாக நிலப் பயன்பாட்டு முறைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் ஆரம்பத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை நிலங்களும் பசுமையான காடுகளுமே பிரதானமாகக் காணப்பட்டன. இவை அதிகரித்து வரும் குடித்தொகை மற்றும் தொடர்புடைய தேவைகளின் அடிப்படையில் குறிப்பாக, குடியிருப்புக்களுக்காகவும் ஏனைய பயிர்ச்செய்கை நிலங்களுக்காகவும் மாற்றப்பட்டு வருகின்றன.

நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் இப்பிரதேசத்தின் மரபுரீதியான பொருளாதாரத்தில் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளதுடன் சாய்வு நிலங்களின் உறுதித்தன்மையிலும் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளது. இம்மாற்றமானது சூழலுக்கும் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கும் பல்வேறுப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக, நில அபிவிருத்தி, உயிர்ப்பல்வகைமை இழப்பு, உள்ளூர் வளங்கள் மீதான பாதிப்பு எனப் பல விளைவுகளை நிலப் பயன்பாட்டு மாற்றமானது ஏற்படுத்தி வருகின்றது. இவ்வாறு இப்பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் இப்பிரதேசத்தின் சூழல், சமூக-பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ள போதிலும், இது குறித்த ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படாமை முக்கிய இடைவெளியாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான ஆய்வுகள் இப்பிரதேசத்தின் நிலைத்தன்மை மற்றும் திட்டமிடல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு முக்கிய வகிபங்கினைக் கொண்டுள்ளன. நிலப் பயன்பாட்டு மாற்றங்களின் தன்மையினைப் புரிந்துகொள்வது நகரங்களின் வளர்ச்சித் திட்டமிடலுக்கு மிகவும் அவசியமாக இருப்பதுடன், நிலப் பயன்பாட்டு மாற்றத்தினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் குறைத்துக்கொள்ளவும் வழிவகுக்கின்றது (Uduporuwa, 2020). அந்தவகையில், இவ் ஆய்வானது 2003, 2023 காலப் பகுதிகளில் பஸ்பாகே பிரதேச செயலக பிரிவின் நிலப் பயன்பாட்டு மாற்றங்களில் இடம்சார் வேறுபாடுகளையும் போக்குகளையும் பகுப்பாய்வு செய்வதோடு நிலப் பயன்பாட்டு மாற்றத்திற்கான காரணங்களை ஆராய்வதனையும் நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

### ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்டமானது $06^0$ 57’ – $07^0$ 06’ N $80^0$ 21’ - $80^0$ 37’ E என்ற அகல நெடுங்கோடுகளுக்கிடையில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் இருபது பிரதேசப் செயலக பிரிவுகளுள் ஒன்றாக விளங்கும் பஸ்பாகே கோரளைப் பிரதேச செயலகப் பிரிவு மாவட்டத்தின் தென்பகுதியில் அமையப்பெற்றுள்ளது. ஆய்வுப் பிரதேசமானது மலைப்பாங்கான பகுதியாக விளங்குவதுடன் அதிக மழைவீழ்ச்சி, குறைவான வெப்பநிலையைக் கொண்டு விளங்குவதும், இடைப்பருவ மழைவீழ்ச்சியின் மூலம் அதிக மழைவீழ்ச்சியை அனுபவிக்கும் பிரதேசமாகவும் உள்ளது (Pasbage Korale DS Division, 2023).




படம் 1: ஆய்வுப் பிரதேசத்தின் அமைவிடம்

மூலம் : ஆய்வாளர், 2024

ஆய்வுப் பிரதேசத்தில் பிரதேச செயலக புள்ளிவிபர அறிக்கையின்படி (2023) மொத்த சனத்தொகை 77,912 ஆகக் காணப்படுகின்றது. இதில் ஆண்கள் 37,288 பேரும், பெண்கள் 40,624 பேரும் உள்ளடங்குகின்றனர். மேலும், இன அடிப்படையில் நோக்கும்போது, சிங்களவர்கள் 37,210 (48%) ஆகவும், தமிழர்கள் 28,272 (36%) ஆகவும், முஸ்லிம்கள் 11,595 (15%) ஆகவும் ஏனையோர் 436 (1%) ஆகவும் காணப்படுகின்றனர் (Pasbage Korale DS Division, 2023).

**தரவு சேகரிப்பும் தரவுப் பகுப்பாய்வும்**

பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலப் பயன்பாட்டு மாற்றம் பற்றிய இவ் ஆய்வானது கலப்பு முறையியலைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தின் இடவிளக்கவியல், மண் காலநிலை, புவிச்சரிதவியல், நீர்வளம், தாவரப்போர்வை, தரைத்தோற்றம் மற்றும் இயற்கை நிலப் பயன்பாடு தொடர்பான தரவுகள் பௌதிக தரவுகளாகவும் பண்பாட்டுத் தரவுகள் எனும்போது சனத்தொகை, குடியிருப்புக்கள், அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் சமூக பொருளாதார நிலை தொடர்பான தரவுகள் ஆகியன சேகரிக்கப்பட்டுள்ளன.

முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பண்புசார், அளவுசார் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, நேர்காணல், ஆகிய முறைகளைப் பயன்படுத்தி பெறப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்திற்கு நேரடியாகச் சென்று குறித்த இடத்தின் பௌதீக பண்பாட்டு அமைப்பு மற்றும் பண்புகள், செயற்பாடுகள் மற்றும்

இயங்கு தன்மை, நிலப் பயன்பாடுகள், நிலப் பயன்பாடுகளுடன் தொடர்பான பிரச்சினைகள் ஆகியன அவதானிக்கப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன.

ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டு முறைகள், மாற்றத்திற்கான காரணிகள், மாற்றங்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான தரவுகளைத் திரட்டுவதற்கு நேர்காணல் முறையானது ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, ஏற்கனவே சேகரிக்கப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டும், நிறுவன ரீதியான திட்டமிடல் மற்றும் ஏனைய செயற்பாடுகளை அறியும் பொருட்டும், பரிந்துரைகள், ஆலோசனைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டும், தர்க்க ரீதியாக ஆய்வுப் பிரச்சினையை அணுகும் பொருட்டும் நிறுவன ரீதியான அதிகாரிகளுடன் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இதில் நகரத் திட்டமிடல் அதிகாரி, பிரதேச திட்டமிடல் அதிகாரி, நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பினைப் பொறுத்தவரையில் இவ் ஆய்விற்குத் தேவையான இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பானது பிரசுரிக்கப்பட்ட மற்றும் பிரசுரிக்கப்படாத மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவு ஆண்டறிக்கைகள், பதிவேடுகள், முன்னைய ஆய்வுகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள், படத்தரவுகள் போன்றன பெறப்பட்டன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் ஆய்வின் நோக்கத்திற்கமைய அளவுசார், பண்புசார் பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பண்புசார் பகுப்பாய்வானது விபரண முறையாகவும், ஒப்பீட்டு ரீதியாகவும், தரப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்தியும் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு நுட்பமுறைகளுக்கூடாகத் திரட்டப்பட்ட பல்வேறு தரவுகள் எண்சார் மாற்றியமைக்கப்பட்டு தரவுகளாக அவை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பல புள்ளிவிபரவியல் நுட்பமுறைகளினூடாக ஆய்வு நோக்கம் மற்றும் வினாக்களுக்குப் பொருத்தமான வகையில் தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டு, Microsoft Excel 2013 மென்பொருளுக்கூடாக யாவும் பார் வரைபடங்களாகவும், பை மற்றும் கோட்டு வரைபடங்களாகவும் தரவுகள் அளவைசார் முறையில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசம், நிலப் பயன்பாடு, நிலப் பயன்பாடு மாற்றம், சனத்தொகை அடர்த்திப் படம், தரைத்தோற்றப் பாங்குப் படம் போன்றன Arc GIS 10.4 மூலம் படமாக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் Google Earth Pro இனைப் பயன்படுத்தி ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடு, நிலப் பயன்பாட்டு மாற்றம் ஆகியன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றோடு 2003, 2023 ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாட்டுப் படங்கள் உருவாக்கப்பட்டு, இந்நிலப் பயன்பாட்டுப் படங்களுக்கூடாக மாற்றங்கள் இனங்காணப்பட்டன. மேலும், நிலப் பயன்பாட்டு மாற்றப் பகுப்பாய்வினூடாக நிலப் பயன்பாட்டு வகைகளில் ஏற்படுகின்ற அளவைசார் மாற்றங்கள், நிலப் பயன்பாட்டு வகைகளில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் இழப்பு என்பனவும் விபரிக்கப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 1 : ஆய்வுப் பிரதேசத்திற்கான நிலப் பயன்பாட்டு மாற்றத்தினைக் கண்டறிதல்




மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024

**ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

**பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவின் 2003 ஆம் ஆண்டுக்கான நிலப்பயன்பாடு**

பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வகையான நிலப் பயன்பாட்டு அம்சங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆரம்ப காலங்களில் ஆய்வுப் பிரதேசத்தின் பிரதான நிலப் பயன்பாடுகளாக தேயிலை நிலங்களும் வன நிலப்பகுதியும் காணப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பானது 24960.21 ஹெக்டயர்களாகக் காணப்படுகின்றது. இந்நிலமானது பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலப் பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது 2003 ஆம் ஆண்டு தேயிலை நிலங்களே அதிகமாகக் காணப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் தேயிலை நிலங்கள் 15558.85 ஹெக்டயர்களாகக் காணப்படுகின்றது.




படம் 2 : ஆய்வுப் பிரதேசத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாடு

Source: Author's compilation using Google Earth Pro, 2024

ஆய்வுப் பிரதேசத்தில் ஒப்பீட்டளவில் பெரும்பாலான பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கை இடம்பெற்றுள்ளது. இத்தொழில் துறையை விருத்திசெய்வதற்காக 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போதியளவு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் காணப்பட்டமையினால் ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான பொருளாதார நடவடிக்கையாக தேயிலைப் பயிர்ச்செய்கை காணப்பட்டது. குறிப்பாக வெஸ்டோல், கிரீன்வூட், உடரம்புக்பிட்டிய, பலாந்தோட்ட, ஹைட்ரி போன்ற இடங்களில் இது பரம்பிக் காணப்பட்டது.

அட்டவணை 1 : ஆய்வுப் பிரதேசத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான நிலப்பயன்பாடு

| நிலப்பயன்பாட்டு வகை | | பரப்பளவு (Km, Ha) | சதவீதம் (%) |
|---|---|---|---|
| கட்டமைக்கப்பட்ட பகுதி | | 1229.70 ha | 4.92 |
| தரிசு நிலங்கள் | | 188.32 ha | 0.75 |
| காடுகள் | | 7794.84 ha | 31.22 |
| தேயிலை நிலங்கள் | | 15558.85 ha | 62.33 |
| விவசாய நிலங்கள் | | 78.40 ha | 0.31 |
| நீர்நிலைகள் | குளங்கள் | 3.22 ha | 0.01 |
| | ஆறுகள் | 74.69 km | 0.29 |
| பாறைகள் | | 32.18 ha | 0.12 |
| **மொத்தம்** | | **24960.21 ha** | **100** |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024




வரைபடம் 1 : ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடு – 2003
மூலம் : ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024

ஆய்வுப பிரதேசத்தில் 7794.84 ஹெக்டயர் பரப்பில் வனப்பகுதி காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் மற்றுமொரு நிலப் பயன்பாட்டு அம்சமாக கட்டமைக்கப்பட்ட பகுதி 1229.70 ஹெக்டயர்களாகக் காணப்படுகின்றது. தரிசு நிலங்கள் ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 188.32 ஹெக்டயர் பரப்பைக் கொண்டு காணப்படுகின்றது. இங்கு மகாவலி கங்கையின் இரு மருங்கிலும் 78.404 ஹெக்டயர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

**பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவின் 2023 ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாடு**

ஆய்வுப் பிரதேசத்தில் 2023 ஆம் ஆண்டு நிலப் பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது தேயிலை நிலங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் தேயிலை நிலங்கள் 13279.108 ஹெக்டயராக ஆகக் காணப்படுகின்றனது. 6006.401 ஹெக்டயர் பரப்பைக் கொண்டு காடுகள் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் கடியலன்ன, Hydree, பலாந்தேட்ட வடக்கு ஆகிய பகுதிகளில் காடுகள் பரம்பிக் காணப்படுகின்ற அதேவேளை, இப்பகுதிகளில் தேயிலை நிலங்கள் கைவிடப்பட்டு அவை காலப்போக்கில் காடுகளாக மாற்றமடைந்துள்ள தன்மையினையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

**அட்டவணை 2 : ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடு – 2023**

| நிலப்பயன்பாட்டு வகை | | பரப்பளவு (Km, Ha) | சதவீதம் (%) |
|---|---|---|---|
| கட்டமைக்கப்பட்ட பகுதி | | 4774.83 ha | 19.5 |
| தரிசு நிலங்கள் | | 727.91 ha | 2.91 |
| காடுகள் | | 6006.401 ha | 24.06 |
| தேயிலை நிலங்கள் | | 13259.108 ha | 53.20 |
| விவசாய நிலங்கள் | | 65.99 ha | 0.26 |
| நீர்நிலைகள் | குளங்கள் | 3.09 ha | 0.15 |
| | ஆறுகள் | 74.69 km | 0.25 |
| பாறைகள் | | 48.18 ha | 0.168 |
| **மொத்தம்** | | **24960.21 ha** | **100** |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024




படம் 3 : ஆய்வுப் பிரதேசத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான நிலப் பயன்பாடு
Source: Author’s compilation using Google Earth Pro, 2024




வரைபடம் 2 : ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடு – 2024
மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024

ஆய்வுப் பிரதேசத்தின் பிரதான நிலப் பயன்பாட்டு அம்சமாக கட்டமைக்கப்பட்ட பகுதி காணப்படுகின்றது. இது 4774.83 ஹெக்டயராக காணப்படுகின்றது. இந்நிலப் பயன்பாடானது ஆய்வுப் பிரதேசத்தில் நாவலப்பிட்டிய வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, மற்றும் பவ்வகாம பகுதிகளில் செறிவாக அமைந்து காணப்படுவதுடன் முழுப் பிரதேசத்தையும் உள்ளடக்கிய வகையில் விருத்திபெற்றுள்ளது. மேலும், இவ்கட்டமைக்கப்பட்ட பகுதியானது

குடியிருப்புகளாகவும் நகரங்களாகவும் கடைத்தொகுதிகளாகவும் ஆய்வுப் பிரதேசத்தில் விருத்திபெற்றுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. பிரதேசத்தில் குடித்தொகையின் வளர்ச்சியே கட்டமைக்கப்பட்ட பகுதியின் விருத்திக்கு அடிப்படையாக அமைகின்றது. தரிசு நிலங்கள் 2023 ஆம் ஆண்டு 727.91 ஹெக்டயராகக் காணப்பட்டது. தற்காலத்தில் அனேகமான பகுதிகளில் நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. மேலும், ஆய்வுப் பிரதேசத்தில் நிலப் பயன்பாட்டில் 42.18 ஹெக்டயராக Stoning (கல்லுடைத்தல்) காணப்படுவது போன்றே வயல் நிலங்களும் 65.99 ஹெக்டயரும் காணப்படுகின்றது. எனவே, 2023 ஆம் ஆண்டு நிலப் பயன்பாடானது மேற்கூறப்பட்ட அனைத்து நிலப் பயன்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

**ஆய்வுப் பிரதேசத்தில் நிலப் பயன்பாட்டு அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 2003-2023**

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து நிலப் பயன்பாட்டு அம்சங்களுமே கால ரீதியாக பல்வேறு மாற்றங்களை எதிர்நோக்கி வருகின்றது. அதிலும் குறிப்பாக, கீழ்வரும் அம்சங்கள் ஆய்வுப் பிரதேசத்தில் பல்வேறு மாற்றங்களை எதிர்நோக்கி வருகின்றன.

**ஆய்வுப் பிரதேசத்தின் கட்டமைக்கப்பட்ட பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 2003-2023**

பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவில் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் தேவைகளின் அதிகரிப்பு, நகரங்களின் விருத்தி என்பவற்றினால் 20 வருட காலப்பகுதியில் நிலப் பயன்பாட்டு மாற்றத்தில் பாரியளவிலான அதிகரிப்பைக் காட்டிநிற்கும் நிலப்பயன்பாடாகக் கட்டமைக்கப்பட்ட பகுதி விளங்குகின்றது. 2003 இல் 1229.70 ஹெக்டயர் பரப்பிலும், 2023 இல் 4780.83 ஹெக்டயர் பரப்பிலும் இது பரம்பிக் காணப்படுகின்றது. அந்தவகையில், கட்டமைக்கப்பட்ட பகுதிகளின் வளர்ச்சியானது காலரீதியாக அதிகரித்து வருகின்றது. குறிப்பாக நாவலப்பிட்டிய, பவ்வாகம, மாபாகந்த ஆகிய பகுதிகளில் கட்டமைக்கப்பட்ட பகுதி செறிவாகக் காணப்படுகின்றது.




படம் 4 : ஆய்வுப் பிரதேசத்தின் கட்டமைக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
Source: Author’s compilation using Google Earth Pro, 2024

### ஆய்வுப் பிரதேசத்தின் வனப் பரம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 2003-2023

ஆய்வுப் பிரதேசத்தில் காடுகள் 2003 ஆம் ஆண்டு 7794.84 ஹெக்டயர் பரப்பில் பரம்பி காணப்பட்டதுடன் இது மொத்த நிலப்பரப்பில் 31% ஆகக் காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டு காட்டு நிலப்பரப்பு 6006.4 ஹெக்டயராக 24% ஆக குறைவடைந்துள்ளது.




படம் 5 : ஆய்வுப் பிரதேசத்தின் வனப்பரம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
Source: Author’s compilation using Google Earth Pro, 2024

### ஆய்வுப் பிரதேசத்தின் தேயிலை நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 2003-2023

2003 ஆம் ஆண்டு தேயிலை நிலமானது 15558.8 ஹெக்டயராக காணப்பட்டதுடன் இது மொத்த நிலப்பரப்பில் 62 சதவீதமாகும். இது 2023 ஆம் ஆண்டு 13279 குறைவடைந்துள்ளதுடன் இது மொத்த நிலப்பரப்பில் 53 சதவீதமாகும்.




படம் 6 : ஆய்வுப் பிரதேசத்தில் தேயிலை நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
Source: Author’s compilation using Google Earth Pro, 2024

### ஆய்வுப் பிரதேசத்தில் தரிசு நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 2003-2023

ஆய்வுப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில நிலப்பரப்புகள் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. அந்த வகையில், 2003ஆம் ஆண்டு 188.32 ஹெக்டயராகக் காணப்பட்ட தரிசு நிலம் 2023ஆம் ஆண்டு 727.91 ஹெக்டயராக அதிகரித்துள்ளது.




படம் 7 : ஆய்வுப் பிரதேசத்தில் தரிசு நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
Source: Author’s compilation using Google Earth Pro, 2024

### ஆய்வுப் பிரதேசத்தில் விவசாய நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவானது சமவெளியாகக் காணப்படாவிடினும், அதன் தரைத்தோற்ற அமைப்பிற்கு ஏற்ற வகையில் திட்டமிடப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இங்கு குறிப்பிட்ட பகுதியில் மாத்திரமே - மகாவலி கங்கை ஊடறுத்து வரும் பகுதி - நெற்செய்கையை மேற்கொள்ளும் சமவெளிப் பகுதியாக காணப்படுகின்றது. அந்தவகையில், நெற்செய்கை நிலப்பரப்பு 2003ஆம் ஆண்டு 78.40 ஹெக்டயராகவும் மொத்த நிலப் பயன்பாட்டில் 0.31 சதவீதமாகவும் காணப்பட்டது. 2023ஆம் ஆண்டு நெற்செய்கை நிலப்பரப்பு 65.99 ஹெக்டயராக, மொத்த நிலப் பயன்பாட்டில் 0.26 சதவீதமாக குறைவடைந்தே காணப்படுகின்றது.

அட்டவணை 3 : ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடு மாற்றம்

| நிலப்பயன்பாட்டு வகை | | நிலப்பயன்பாடு 2003 | | நிலப்பயன்பாடு 2023 | |
|---|---|---|---|---|---|
| | | மொத்த பரப்பளவு – Ha மற்றும் நீளம் km | சதவீதம் (%) | மொத்த பரப்பளவு – Ha மற்றும் நீளம் km | சதவீதம் (%) |
| கட்டமைக்கப்பட்ட பகுதி | | 1229.70 ha | 4.92 | 4774.83 ha | 19.5 |
| தரிசு நிலங்கள் | | 188.32 ha | 0.75 | 727.91 ha | 2.91 |
| காடுகள் | | 7794.84 ha | 31.22 | 6006.401 ha | 24.06 |
| தேயிலை நிலங்கள் | | 15558.85 ha | 62.33 | 13259.108 ha | 53.20 |
| விவசாய நிலங்கள் | | 78.40 ha | 0.31 | 65.99 ha | 0.26 |
| நீர்நிலைகள் | குளங்கள் | 3.22 ha | 0.01 | 3.09 ha | 0.15 |
| | ஆறுகள் | 74.69 km | 0.29 | 74.69 km | 0.25 |
| பாறைகள் | | 32.18 ha | 0.12 | 48.18 ha | 0.168 |
| **மொத்தம்** | | **24960.21 ha** | **100** | **24960.21 ha** | **100** |

மூலம் : ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024




வரைபடம் 3 : ஆய்வுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டு மாற்றம் 2003 – 2023
மூலம் : ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2024

**பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவில் நிலப் பயன்பாட்டு மாற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்**

ஆய்வுப் பிரதேசத்தில் நிலப் பயன்பாட்டு மாற்றமானது இடரீதியாகவும் காலரீதியாகவும் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்ட வண்ணமே உள்ளது. இப்பகுதியில் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலப் பயன்பாட்டு மாற்றத்தினை ஏற்படுத்திய காரணிகளாக குடித்தொகை வளர்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகள், காடழிப்பு, பொருளாதார நடவடிக்கைகள், கட்டமைக்கப்பட்ட பகுதிகளின் விரிவாக்கம், தேயிலை நிலங்கள் அழிவடைதல், வீடமைப்புத் திட்டங்கள், நகராக்கம், சுற்றுலாத்துறை விருத்தி, நிலச்சரிவு என்பன இனங்காணப்பட்டுள்ளன.

## குடித்தொகை வளர்ச்சி

ஆய்வுப் பிரதேசத்தின் 2002ஆம் ஆண்டில் 56250 ஆகக் காணப்பட்ட சனத்தொகை 2013ஆம் ஆண்டில் 63370 ஆக அதிகரித்து, 2023ஆம் ஆண்டில் 77912 ஆக உயர்வடைந்துள்ளது (பஸ்பாகே பிரதேச செயலக அறிக்கை, 2023). குடித்தொகை வளர்ச்சியுடன் இணைந்த வகையில் குடியிருப்புக்கள், தொழில் நடவடிக்கைகள், வர்த்தகச் செயற்பாடுகள், போக்குவரத்து வசதிகள், பொழுதுபோக்கு வசதிகள் போன்றன அதிகரித்ததன் காரணமாக ஆய்வுப் பிரதேச நிலப் பயன்பாடானது தொடர்ச்சியாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. சனத்தொகை அடர்த்தியில் ஏற்பட்டுள்ள காலரீதியான மாற்றம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.




படம் 8 : ஆய்வுப் பிரதேசத்தின் குடித்தொகை அடர்த்தி 2003, 2023
மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024




வரைபடம் 4 : ஆய்வுப் பிரதேசத்தின் குடித்தொகை வளர்ச்சி
மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2024

**காடழிப்பு**

ஆய்வுப் பிரதேச மக்களின் அதிகரித்து வரும் தேவைகள், நகராக்க விருத்தி மற்றும் குடியிருப்பு விரிவாக்கம், வீட்டுத்தோட்டம் ஆகியவற்றின் விளைவாக ஆய்வுப் பிரதேசத்தில் பல பகுதிகளில் காணப்பட்ட வன நிலப்பரப்பு அழிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நகர அபிவிருத்திச் செயற்பாடுகள் கட்டட விருத்தி போன்றனவே வனப்பகுதி அழிக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாகும் (மூலம்: நேர்காணல் வனப் பாதுகாப்புத் துறை அதிகாரி, 2024).∴

குறிப்பாக, காட்டு ஓரங்களில் மக்களின் குடியிருப்புப் பகுதிகள் காணப்படுவதால் குடியிருப்பு விஸ்தரிப்பு, விறகுத் தேவைக்காகக் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள காடுகளை வனப் பாதுகாப்புத் திணைக்களம் பாதுகாத்து வருகின்ற போதிலும், மக்களின் தேவைகளுக்கேற்ப நேரடியாக, மறைமுகமாக காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைகள் விஸ்தரிக்கப்படுகின்றபோது காட்டு ஓரப்பகுதிகள் அழிக்கப்பட்டு, அவை வீட்டுத்தோட்ட பயிர்நிலமாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் காட்டுநிலம் குறைவடைந்து கொண்டு வருகிறது. குறிப்பாக தண்டுபேதிருப்பா, வெலிகொடவத்த, பெனித்துடுவ, பலந்தோட்ட வடக்கு போன்ற பகுதிகளில் இவ்வாறு காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.




செய்மதிப் படம் 1 , ஒளிப்படம் 1: ஆய்வுப் பிரதேசத்தின் இம்புல்பிட்டிய கிராம சேவகர் பிரிவின் ஏற்படுத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட பகுதி
மூலம் : Google Earth Pro (2003, 2023), ஆய்வாளர், 2024

**நகராக்கம்**

நகராக்கம் காரணமாக பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவில் நிலப் பயன்பாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பவ்வாகம, வெலிகம்பளை போன்ற நகரங்கள் தற்போது விருத்தியடைந்து வரும் நகரங்களாகக் காணப்படுகின்றன. இதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் காடுகள் உட்பட இயற்கைப் போர்வைகளை அழித்து மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வுப் பகுதியானது அதிகளவிலான காட்டுவளத்திளைக் கொண்டுள்ள பகுதியாக விளங்குகின்றமையினால், நகராக்கம் உட்பட அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றபோது அதிகளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆய்வுப் பிரதேசத்தின் கட்டமைக்கப்பட்ட பகுதி நிலப் பயன்பாட்டு மாற்றத்தை 2003ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தற்போது பாரியளவில் மாற்றமடைந்துள்ளதை 2003 மற்றும் 2023ஆம் ஆண்டு

பஸ்பாகே ஆய்வுப் பிரதேச செய்மதிப் படங்களை ஒப்பிட்டு ஆராய்வதினூடாக அறிந்து கொள்ள முடிந்தது. 2003ஆம் ஆண்டு ஆய்வுப் பிரதேசத்தின் நகரங்களினுடைய கட்டமைக்கப்பட்ட பகுதிகள் குறைவான நிலையிலும், 2023ஆம் ஆண்டு நகரங்களினுடைய கட்டமைக்கப்பட்ட பகுதிகளுடைய அடர்த்தியானது செறிவாகவும் காணப்படுகின்றது. மேலும், ஆய்வுப் பிரதேசத்தின் நகராக்க கட்டமைப்பினை நேரடி அவதானத்தின் மூலமாக அறிந்துகொள்ள முடிந்ததோடு, அந்நகர விரிவாக்கத்தின் மூலம் அப்பிரதேசத்தைச் சூழ்ந்து காணப்படும் நிலப் பயன்பாடுகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளமையையும் அறியக்கூடியதாக இருந்தது.




செய்மதிப் படம் 2, ஒளிப்படம் 2 : நகரப்பகுதியின் விரிவாக்கம் (A, B), தற்போதைய நகர ஒளிப்படம் (ஊ) மூலம்: Google Earth Pro (2003, 2023), ஆய்வாளர், 2024

ஆய்வுப் பிரதேசத்தில் நாவலப்பிட்டிய நகரத்தினை அண்மித்த பவ்வாகம பகுதியானது உபநகரமயமாக்கம் அடைந்து வருவதனால் இப்பகுதியின் நாவலப்பிட்டிய தொடக்கம் தலவாக்கலை வரையிலான பிரதான பாதைகளின் இரு மருங்கிலும் காடுகளாக காணப்பட்ட பகுதிகளில் 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் வர்த்தக ரீதியான கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் அதிகரித்து வருகின்றன.

**வீடமைப்புத் திட்டங்கள்**

ஆய்வுப் பிரதேசத்தின் சில பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளமையும் நிலப் பயன்பாட்டுப் பாங்குகளில் மாற்றத்தினை ஏற்படுத்திய காரணிகளுள் ஒன்றாகும். இம்புல்பிட்டிய, வெஸ்டோல், கடியன்னல, வெவேகம, கிறீன்வூட் போன்ற பகுதிகளில் காடுகள் மற்றும் தேயிலை நிலங்கள் அழிக்கப்பட்டு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.



செய்மதிப் படம் 3 : கிறீன்வூட் கிராம சேவகர் பிரிவில் ஏற்படுத்தப்பட் வீடமைப்புத் திட்டம்
மூலம்: Google Earth Pro (2003, 2023), ஆய்வாளர், 2024

**பொருளாதார நடவடிக்கைகளின் மாற்றமும் விரிவாக்கமும்**

இப்பகுதியில் பிரதான பொருளாதார நடவடிக்கையாக தேயிலைப் பயிர்செய்கையும் வர்த்தகமும் மரக்கறிப் பயிர்செய்கைகளும் முக்கிய இடத்தினை பெறுகின்றன. வீட்டுத்தோட்டப் பயிர்செய்கையானது அங்கு வாழும் மக்களின் பகுதி நேரத் தொழிலாகவும் காணப்படுகின்றது. அத்தோடு சிறு ஏற்றுமதிப் பயிர்களும் இங்கு ஓரளவு பயிரிடப்படுகின்றன. இருந்தபோதிலும், தேயிலைப் பயிர்ச்செய்கை பொருளாதாரத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை அடிப்படையாக கொண்டு இரண்டாம் நிலைப் பொருளாதார நடவடிக்கையில் மக்கள் ஆர்வம் காட்டி வருவதனைக் காணலாம். இதனால் வர்த்தகம், கைத்தொழில் பொருளாதார நடவடிக்கைகள் சார்ந்த நிலப் பயன்பாடுகள் ஒப்பீட்டளவு அதிகரித்து வருகின்றன. அதேவேளை தேயிலை சார்ந்த நிலப் பயன்பாடு குறைவடைந்து வருகின்றது. 2003ஆம் ஆண்டு காணப்பட்ட தேயிலை நிலங்களின் பரப்பானது 2023ஆம் படிப்படியாகக் குறைவடைந்து கட்டமைக்கப்பட்ட பகுதிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

**அபிவிருத்திச் செயற்பாடுகள்**

ஆய்வுப் பிரதேசத்தில் 2003ஆம் ஆண்டிற்குப் பிறகு இப்பகுதியில் துரித அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதனால் நிலப் பயன்பாட்டு மாற்றம் ஏற்பட்டுள்ளது. குடியிருப்புகள், கடைதெருக்கள், அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் கட்டடங்கள், கைத்தொழில் நிலையங்கள், வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன அவற்றுள் முக்கியமானவை. மேலும், முன்பிருந்த நிலையைவிட வீதி வலைப்பின்னலில் விருத்தி ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை சார்ந்த வீதிகள், கடைகள், விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை பிரதேச நிலப் பயன்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. 2003ஆம் ஆண்டு பெரும்பளவிலான பசுமைப் போர்வைகளை அதிமாகக் கொண்டிருந்த ஆய்வுப் பிரதேசம் கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை அடைந்துள்ளது.

**முடிவுரை**

பஸ்பாகே பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்திய நிலப் பயன்பாட்டு மாற்றம் பற்றிய இவ் ஆய்வில் 2003, 2023 ஆகிய காலப்பகுதிகளுக்குரிய நிலப்பயன்பாட்டு படங்கள் தயாரிக்கப்பட்டு பிரதான நிலப் பயன்பாட்டு வகையில் இட மற்றும் கால ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில், ஆய்வுப் பிரதேசத்தில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியினுள் பிரதான நிலப் பயன்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கட்டமைக்கப்பட்ட பகுதிகள் அதிகரித்துள்ளதுடன் காடுகளின் பரப்பானது குறைவடைந்துள்ளது. தேயிலை நிலங்களின் பரப்பானது வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இங்கு நிலப் பயன்பாட்டு மாற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளாக குடித்தொகை வளர்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகள் காடழிப்பு, பொருளாதார நடவடிக்கைகள், கட்டமைக்கப்பட்ட பகுதிகளின் விரிவாக்கம், தேயிலை நிலங்கள் அழிவடைதல் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, ஆய்வுப் பிரதேசத்தில் நிலப் பயன்பாட்டு மாற்றப் போக்கிற்கு இணங்க நிலப் பயன்பாட்டுத் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டியது அவசியமாவதுடன் சமூக, பொருளாதார அபிவிருத்தியுடன் சூழல் நிலைபேண் தன்மையினையும் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Anderson, J. R. (2001). A land use and cover classification system for use with remote sensor data. U.S. Government Printing Office.

Dahanayaka, D. D. G. L., Tonooka, H., Wijeyaratne, M. J. S., Minato, A., & Ozawa, S. (2012). Monitoring land use changes and their impacts on the productivity of Negombo Estuary, Sri Lanka, using time series satellite data. Asian Fisheries Science, 25, 97-212.

Dissanayake, D. M. S. L. B. (2020). Land use change and its impacts on land surface temperature in Galle City, Sri Lanka. Climate, 8(5), 65. https://doi.org/10.3390/cli8050065

Gunarathna, B. W. G. I. D., Jayasinghe, A. B., Abenayake, C. C., & Mahanama, P. K. S. (2018). Assessing the impact of land use on triggering landslides: A case of Sabaragamuwa Province, Sri Lanka. Bhumi, The Planning Research Journal, 6(2), 15-28.

Harshani, E. V. G. I., Gunasena, C. P., & Rupasinghe, C. P. (2011). *Identification and mapping land use changes in cinnamon cultivation in the part of Southern Province*. In Proceedings of the Joint National Conference on Information Technology in Agriculture - 2011. University of Moratuwa, Sri Lanka.

Kumuthini, T., & Suthakar, K. (2018). Land use changes in Nuwara Eliya divisional secretary division: 8th International Symposium 2018 on “Innovative Multidisciplinary Research for Green

Development". 17th - 18th December, 2018. South Eastern University of Sri Lanka, University Park, Oluvil, Sri Lanka. pp. 1067-1077.

Mathanraj, S., Ratnayake, R. M. K., & Rajendram, K. (2019). Temporal changes of land use pattern in Batticaloa Municipal Council, Sri Lanka.

Mohamed Rinos, M. H., & Mohamed Rifath, R. (2019). தோப்பூர் பிரதேசத்தின் போருக்குப் பின்னரான நிலப்பயன்பாட்டு மாற்றங்களும் அதன் விளைவுகளும் Proceedings of the International Arts Research Symposium -2019, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil, Sri Lanka

Paul, B. K., & Rashid, H. (2017). Land use change and coastal management. In B. K. Paul (Ed.), Climatic hazards in coastal Bangladesh (pp. 89–108). Elsevier. https://doi.org/10.1016/B978-0-12-805276-1.00006-5

Pilapitiya, P. G. D., Uduporuwa, R. J. M., & Subasinghe, S. (2024). Detecting Land-Use Changes in Greater Kandy Development Area. Sri Lanka Journal of Social Sciences and Humanities, 4(1).

Serneels, S., Said, M. Y., & Lambin, E. F. (2001). Land use/cover changes around a major East African wildlife reserve marine ecosystem (Kenya). International Journal of Remote Sensing, 22, 3997-3420.

Suthakar, K., & Bui, E. N. (2008). Land use/cover changes in the war-ravaged Jaffna Peninsula, Sri Lanka, 1984–early 2004. Singapore Journal of Tropical Geography, 29(2), 205-220. https://doi.org/10.

Uduporuwa, R. J. M. (2020). Spatial and temporal dynamics of land use/land cover in Kandy City, Sri Lanka: An analytical investigation with geospatial techniques. American Scientific Research Journal for Engineering, Technology, and Sciences, 69, 149-166.

Withanage, W. K. N. C. (2017). Monitoring of Land Use Changes Using Remote Sensing and GIS, A Case Study in Kandy Divisional Secretariat. Faculty of Computing and Technology, University of Kelaniya, Sri Lanka.

# அனுராதபுர மாவட்டம் கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகப் பிரிவில் விவசாய நடவடிக்கைகள் மீதான காட்டு விலங்குகளின் தாக்கம்

**Mohammadhu Ansar Aroosiya**

Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
aroosiya2019@gmail.com

**V. Pathmanandakumar**

Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

pathmanandakumarv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இவ் ஆய்வானது அனுராதபுர மாவட்டத்தின் கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகப் பிரிவில் காட்டு விலங்குகளின் ஊடுருவல் விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராய்கிறது. கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள், நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல்களின் மூலமாக 98 விவசாயக் குடும்பங்களில் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட முடிவுகள் காட்டு யானைகள் விவசாயத்தைப் பாதிக்கும் முக்கியமான விலங்குகளாக இருக்கின்றன என்பதை வெளிக்கொணர்கின்றன. இவை பயிர்களை மேய்தல், சேதப்படுத்துதல், நீர்ப்பாசன வசதிகளை அழித்தல் மற்றும் பழ மரங்களை முறித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் அதிக சேதங்களை ஏற்படுத்துகின்றன. சிறுபோக மற்றும் பெரும்போக காலங்களில் குறிப்பாக அறுவடை நேரங்களில் பெரும்பாலான விவசாயிகள் முற்றிலும் பயிர்ச்சேதத்தைச் சந்தித்துள்ளனர். இதனால் விவசாய முறைகளை மாற்றும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மின்வேலிகள் மற்றும் பயமுறுத்தும் சாதனங்கள் போன்ற தடுப்பு நடவடிக்கைகளுக்காகக் கூடுதல் செலவுகள் ஏற்படுகின்றன. வருமான இழப்பு, கடன்சுமை அதிகரித்தல், உணவுப் பற்றாக்குறை போன்ற பொருளாதாரப் பாதிப்புகள் சிறு நிலப்பரப்பைக் கொண்ட விவசாயிகளிடம் அதிகமாகக் காணப்படுகின்றன. அரசு வழங்கும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் போதுமானவையாகவும் சமனிலையாகவும் வழங்கப்படுவதில்லை. எனவே, மனித - வனவிலங்கு மோதலைக் குறைக்கும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மற்றும் பிராந்திய அடிப்படையிலான கொள்கைத் தலையீடுகள் அவசியம் என இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

***திறவுச் சொற்கள்***: *மனித - வனவிலங்கு மோதல், விவசாய சேதம், காட்டு யானைகள், கிராமப்புற வாழ்வாதாரம், கெபிதிகொள்ளேவ.*

**அறிமுகம்**

இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள கெபித்திகொள்ளேவ பிரதேச செயலகப் பிரிவு, விவசாயத்தைப் பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள ஒரு கிராமமாகும். பரந்த விளைநிலங்கள், சீரான பருவநிலை மற்றும் நீர்ப்பாசன வசதிகளால் இப்பகுதியானது நீண்ட காலமாக நெல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. எனினும், அண்மைக் காலங்களில் காட்டுவிலங்குகளின் பரவலான

அத்துமீறல்கள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் விவசாய சமூகத்தின் வாழ்வாதாரத்தில் பெரும் சவால்களை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக யானைகள், காட்டுப்பன்றிகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகள் பயிர்நிலங்களுக்குள் நுழைந்து பெரும் அளவில் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இச்செயற்பாடுகளானவை விலங்குகளின் உணவுத் தேடல் செயற்பாடு, நீர்ப் பற்றாக்குறை, காடழிப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற சுற்றுச்சூழல் காரணிகளால் தீவிரமடைந்துள்ளன. இவ் அத்துமீறல்களின் நேரடி விளைவாக, பயிர்கள் அழிவதோடு, உடைமைகள் சேதமடைகின்றன. மேலும், சில சந்தர்ப்பங்களில் மனித உயிர்களுக்கும் நேரடி அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன. விவசாயத்தில் ஈடுபடும் மக்களிடம் பயம், மன அழுத்தம் மற்றும் நம்பிக்கையிழப்பு ஆகியவற்றுடன் கூடிய ஒரு நிலை நிலவி வருகிறது. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விவசாயிகள் அதிக செலவுகளை மேற்கொள்கின்றனர். இரவுக் காவலர்கள், மின்சார வேலிகள் மற்றும் அகழிகள் போன்ற உத்திகள் அத்தியாவசியமாக இருந்தாலும், அவை நிலையான தீர்வாக அமையாததோடு, விவசாயிகளுக்குத் தீவிரமான நிதிச்சுமையையும் ஏற்படுத்துகின்றன. காட்டு விலங்குகளின் தாக்கம், நிலையான விவசாய உற்பத்தியை மட்டுமன்றி, சமூக ஒற்றுமை, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாரம்பரிய வாழ்க்கைமுறைகளையும் பாதிக்கும் வகையில் உள்ளது. பல விவசாயிகள் தங்கள் பயிர் நிலங்களைக் கைவிடும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது, நாட்டின் உணவுத் தன்னிறைவைத் தூண்டும் முயற்சிகளுக்கு எதிராகக் காணப்படுகிறது. இவ்வாய்வானது, கெபித்திகொள்ளேவ பிரதேசத்தில் ஏற்படும் காட்டுவிலங்கு மோதல்களின் தன்மை, அதற்கான அடிப்படைக் காரணிகள் மற்றும் அதன் விளைவுகளை முழுமையாக ஆய்வு செய்யும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையான தீர்வுகளையும் சுட்டிக்காட்டுகிறது. மேலும், இது இலங்கையில் அதிகரித்து வரும் மனித – வனவிலங்கு மோதல்கள் பற்றிய தேசிய மற்றும் சர்வதேச முயற்சிகளில் ஒரு கருத்துப்பூர்வ பங்களிப்பாகவும் அமையும்.

**இலக்கிய மீளாய்வு**

மனிதர் மற்றும் காட்டுவிலங்குகள் இடையே நிலவும் மோதல்கள் உலகளவில், குறிப்பாக வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில், உணவுப் பாதுகாப்பு, நிலைத்த வாழ்வாதாரம் மற்றும் பசுமைச் சூழலுக்கு இடையூறாக உருவாகியுள்ளது (Ponniah et al., 2022). இலங்கையிலும் இதுபோன்ற மோதல்கள், குறிப்பாக யானைகள், காட்டுப்பன்றிகள் மற்றும் குரங்குகள் உள்ளிட்ட விலங்குகள் மூலம் ஏற்படும் பயிர்ச்சேதம், விவசாய நிலப் பயன்பாட்டை நேரடியாகப் பாதித்து வருகிறது (Jayawardene & Wickramasinghe, 2021).

விவசாய நிலங்களில் காட்டுவிலங்குகளால் ஏற்படும் தாக்கங்களை ஆய்வாளர்கள் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்துள்ளனர். Ulman & Singh (2023) மேற்கொண்ட ஆய்வில், கிராமப்புறங்களில் தாக்கங்களைத் தணிக்கத் திட்டமிடப்பட்ட சமூக பங்கேற்பு நுட்பங்களைப் பரிந்துரைத்துள்ளார். தணிப்பு உத்திகள் நடைமுறைக்கு ஏற்ற வகையில் பிரதேசத்திற்கேற்ப தேர்வுசெய்யப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்துகிறார். ஆபிரிக்கா மற்றும் ஆசியா நாடுகளிலுள்ள மனித–யானை மோதல் பற்றிய ஆய்வுகளில் (Sitati & Waipole, 2006) பாரம்பரிய

முறைகளுடன் மிளகாய் சாணம், அமைப்புசார் மின்வேலிகள், மற்றும் சமூகக் கண்காணிப்புப் போன்ற நவீன உத்திகள் ஒன்றிணைந்து பயன்படுத்தப்படுகின்றன. இவை ஒரு சில இடங்களில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தினாலும், அவை நிலையான தீர்வுகளாக மாற்றப்படவில்லை என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கை சார்ந்த ஆய்வுகளில், Santiapillai et al., (2010) மேற்கொண்ட ஆய்வில், நாட்டின் ஐந்து மாகாணங்களில் 100 கிராமங்களில் யானை மூலம் ஏற்படும் பயிரச் சேதம் மற்றும் மனித உயிரிழப்புக்கள் பற்றிய தரவுகள் தொகுக்கப்பட்டன. ஆய்வில், 65% விவசாயிகள் இளம் யானைகளால் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. நெல், வாழை, தக்காளி போன்ற பயிர்கள் மிக அதிகம் பாதிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

Gunawardhana & Herath, (2018) ஆகியோர் அனுராதபுர மாவட்டத்தில் மேற்கொண்ட ஆய்வில், 159 யானைகள் மற்றும் 51 மனித உயிரிழப்புகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவாகியுள்ளன. இது வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும் மனித பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் இடையிலான சமநிலையின்மையை வெளிப்படுத்துகிறது. GIS தொழில்நுட்பம் மூலம் இம்மோதல்கள் இடம்பெறும் முக்கிய இடங்கள் வரைபடமாக்கப்பட்டுள்ளன. Gemeda & Meles, (2018) ஆகியோரின் ஆய்வில், சமூக உளவியல் தாக்கங்களும் கணக்கிடப்பட்டுள்ளன. மோதல்களின் பயம், நிலைதடுமாற்றம், விவசாய நடவடிக்கைகளின் கைவினை ஆகியவை இழப்புகளின் நேரடி அல்லது மறைமுக விளைவுகள் எனக் கூறப்படுகிறது.

பாரம்பரிய நிலப் பயன்பாட்டு முறைகள் மற்றும் புதிய கொள்கைத் திட்டங்கள் தொடர்பாக Anuradha Jayaweera (2019) "இலங்கையில் யானைகளின் வாழ்விடக் குறைவு மற்றும் மனித - யானை மோதலில் விவசாய நிலப் பயன்பாட்டு முறை இயக்கவியலின் பங்கு" என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் நுட்பங்களைப் பயன்படுத்தி யானைகளை முன்கூட்டியே கண்டறிந்து, மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்கலாம் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. Mohamed Fazil, (2019) அனுராதபுர மகாவலி ஆறு பகுதிகளில் மனித - யானை மோதல் முகாமைத்துவத்திற்கான நடைமுறைகளை ஆய்வு செய்துள்ளார். ஹக்கா பட்டாஸ் (தாடை வெடிப்பு), சுடப்படல், மின்சார தாக்குதல் ஆகியவையே யானை மரணங்களுக்கான முக்கிய காரணங்களாக உள்ளன. Rudran et al., (2021) இலங்கையில் மனித - குரங்கு மோதல்கள் தொடர்பான தரவுகளை சமீபத்திய போக்குகளில் அளித்துள்ளனர். இலங்கை யுத்த காலத்தில் வனவிலங்குகளால் ஆக்கிரமிக்கப்பட்ட வீடுகள் மீதான மக்களின் எதிர்வினைகள் ஆராயப்பட்டுள்ளன.

Ashok Kumar (2021) மற்றும் Kaleel (2021) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், யாலா மற்றும் கஹல்லே பகுதிகளில் மனித - யானை மோதலின் தன்மையை ஒப்பிடுகின்றன. பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடியிருப்புகள் இடையே சமநிலை இல்லை என்பதே பிரதான சிக்கலாகக் கூறப்படுகின்றது. முல்லைத்தீவு, பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் மேற்கொண்ட சமீபத்திய ஆய்வுகள் மோதலின் தீவிரத்தன்மை மற்றும் அதற்கான அடிப்படை நிலப் பயன்பாட்டு மாற்றங்களை விளக்குகின்றன. பெரும்பாலான இடங்களில், மனித மற்றும் விலங்குகளுக்கிடையிலான நிலமாக எல்லைகள் இல்லை என்பதே

இந்த மோதல்களுக்கு முக்கிய தூண்டுதலாகக் காணப்படுகிறது (Ponnaiah, 2022; kaleel, 2021). அத்துடன் Mekonen (2022) என்பவர்களின் ஆய்வுகள், வரலாற்று நோக்கில் இலங்கையில் மனித - யானை மோதல்களின் மேம்பாடுகள் மற்றும் தற்போதைய செயற்திறன் குறைபாடுகளை விவரிக்கின்றன.

மேலே விவரிக்கப்பட்ட ஆய்வுகள், மனித - வனவிலங்கு மோதலின் பன்முகப்படியான தாக்கங்களை விளக்கும் ஒரு ஆழமான அடித்தளத்தை வழங்குகின்றன. இருப்பினும், கெபித்திகொள்ளேவ பிரதேச செயலகம் சார்ந்த ஆய்வுகள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. இந்த இடைவெளியை நிரப்புவதே தற்போதைய ஆய்வின் முக்கிய பங்களிப்பாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் கெபித்திகொள்ளேவ பிரதேச செயலகப் பகுதியில் காட்டுவிலங்குகளால் ஏற்படும் விவசாயப் பாதிப்புக்களை ஆய்வு செய்வதற்காகக் கலப்பு ஆய்வு (mixed method) அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரதேசம்**

அனுராதபுர மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து தூரம் 81m 266(அடி) உயரத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் மொத்தப் பரப்பளவில் 4.1% இடத்தை இம்மாவட்டம் கொண்டுள்ளது. அதனுடன் 22 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கியுள்ளது. இதில் அனுராதபுர மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகமே ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பரப்பாகும் இது 8.6409° N, வட அகலக் கோட்டிற்கும் 80.6697° E கிழக்கு நெடுங்கோட்டுக்கும் இடையில் அமைந்துள்ளது (Ponnaiah, 2022; kaleel, 2021).




படம் 1: ஆய்வுப் பிரதேசம்

மூலம்: ஆய்வாளர் (2024)

**தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும்**

கெபிதிகொள்ளேவ பிரதேசத்தில் அதிகமான விவசாயிகளைக் கொண்ட கிராம சேவகர் பிரிவுகளையும் விவசாயம் அதிகமாக இடம்பெறும் பகுதிகளையும் விவசாயத்தில் அதிகமான வனவிலங்குகளின் தாக்கம் இடம்பெறும் பகுதிகளையும் மையமாகக் கொண்ட மக்கள் வாழும் பகுதிகளை இனங்கண்டு வினாக்கொத்து முறையில் தரவு சேகரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், இவ்வாய்விற்காக கெபிதிகொள்ளேவ பிரதேசத்தின் நான்கு கிராம சேவகர் பிரிவுகளான குருளுகம, கிரிகெட்டுவெவ, தித்தகொனேவ, பண்டார உல்பத்த ஆகிய பகுதிகளில் காணப்படும் விவசாயிகள் மற்றும் விவசாய நிலப் பகுதிகள் மாதிரிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட இடங்களாகும். இதற்காக எளிய எழுமாற்று மாதிரி நுட்ப முறையினைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட கிராமசேவகர் பிரிவிலுள்ள 98 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதில் அவர்களின் வயது, தொழில் அனுபவம், பாதிக்கப்பட்ட நில அளவு, விலங்கு வகைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டன. மேலும், ஆய்வின் துல்லியத்தன்மையை அதிகரிப்பதற்காக பிரதேச விவசாயம் தொடர்பான வனவிலங்கு அதிகாரிகளுடனான 3 நேர்காணல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்கான இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுத் தலைப்பிற்கமைய கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளின் விவசாய நிலப்பரப்புகளின் ஹெக்டெயர் அளவு, வனவிலங்குகளினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலப்பரப்புகள், அதனால் இழக்கப்பட்ட உற்பத்திகள், வனப்பகுதிகளின் அமைவிடப் படம் வனவிலங்குகளின் உயிர் இழப்பு எண்ணிக்கை, சனத்தொகை, பண்பாட்டம்சங்கள் தொடர்பான தரவுகள் என்பன பெறப்பட்டுள்ளன. இதற்காக அறிக்கைகள், ஆய்வுகள், சஞ்சிகைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்காகப் பெறப்பட்ட முதலாம் இரண்டாம் நிலைத் தரவுகள் அனைத்தும் அளவு சார், பண்புசார் தரவு என்ற அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS மென்பொருள் ஊடாகவும் அளவு சார் விவரணப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை ஒலிப்பதிவு செய்து பின்னர் மீள எழுதி கருப்பொருள் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட மாதிரி**

| கிராம சேவகர் பிரிவு | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கிரிக்கெட்டுவெவ | 22 |
| குருளுகம | 31 |
| பண்டார உல்பத்த | 18 |
| தித்தகொனேவ | 27 |
| மொத்தம் | 98 |

**மூலம்: ஆய்வாளர், (2024**

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

கெபித்திக்கொள்ளேவ பிரதேசத்தில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாக மேற்கொள்கின்றனர். ஆய்வுக்குரிய தரவுகளின் அடிப்படையில், 76.5% மக்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாக மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். 11.2% வணிக உரிமையாளர்களாகவும், 12.2% அரச ஊழியர்களாகவும் செயற்படுகின்றனர். இது, இப்பகுதி மக்கள் ஒரு பெரும் விவசாயம் சார்ந்த சமூகமாக உள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

மேலும், விவசாய அனுபவத்தைக் கொண்டு மக்கள் நிலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 33.7% 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடையவர்களாகவும், 25.5% 11–20 ஆண்டுகள், 22.4% 6–10 ஆண்டுகள் அனுபவமுடையவர்களாகவும் உள்ளனர். குறைந்த அனுபவம் (1–5 ஆண்டுகள்) 13.3% மற்றும் 1 ஆண்டிற்கும் குறைவான அனுபவம் 5.1% எனவும் காணப்படுகிறது. இது, இப்பகுதியில் விவசாயம் பாரம்பரியத் தொழிலாக மேற்கொள்ளப்படுகிறது என்பதையும், மக்கள் பெரும்பாலும் நீண்ட அனுபவமுடையவர்களாக இருப்பதால் அவர்கள் சவால்களை நன்கு உணரக்கூடியவர்கள் என்பதையும் காட்டுகின்றது. விவசாய நிலங்களை வைத்திருப்பவர்களில் 48% 1–3 ஏக்கர், 36.7% 4–10 ஏக்கர் நிலத்தையும் கொண்டுள்ளனர். இது, பெரும்பாலானோர் ஓரளவான நிலங்களை வைத்து விவசாயம் செய்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. மேலும், 12.2% ஒரு ஏக்கருக்கும் குறைவான வீட்டுத் தோட்டங்களில் விவசாயம் செய்கின்றனர். 11–20 ஏக்கர் நிலம் கொண்டோர் 3.1% மட்டுமானவராவர். இவர்கள் வணிக ரீதியான விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். மொத்தமாக, 1–10 ஏக்கர் நிலமே இப்பகுதியில் விவசாயப் பயன்பாட்டிற்கு அடிப்படையாக உள்ளது. இப்பகுதியில் முக்கிய பயிர்களாக தானியங்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர்கள் காணப்படுகின்றன. இதில் 64.3% ஆனோர் நெல், சோளம் போன்ற தானியப் பயிர்களில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் தானியங்கள் இப்பகுதியில் முக்கிய உணவுப் பாதுகாப்புக்கான பயிர்களாக உள்ளன என்பது தெளிவாகிறது.




படம் 2: ஆய்வுப் பிரதேசத்தில் பயிரிடப்படும் பயிர்கள்
மூலம்: ஆய்வாளர் (2024)

**காட்டுவிலங்குகளின் அத்துமீறல்கள் மற்றும் அதன் தாக்கங்கள்**

ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய நிலங்களில் 63.3% விவசாயிகள் தினசரி அல்லது அடிக்கடி காட்டுவிலங்கு அத்துமீறல்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். இது, இப்பிரதேசத்தில் காட்டுவிலங்குத் தாக்கம் ஒரு பொதுவான நிலையாகவே உருவெடுத்துள்ளதைக் காட்டுகிறது. மேலும், இது அப்பகுதியில் விவசாய நடைமுறைகள், பயிர் விளைச்சல் மற்றும் நில முகாமைத்துவத்தின் மீதும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகக் கலந்துரையாடல்கள் ஊடாகவும் உறுதிப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 26.5% விவசாயிகள் வாரந்தோறும் காட்டுவிலங்குகள் வருவதாகவும், 9.2% அவ்வப்போது மட்டுமே எதிர்கொள்கிறதாகவும், 1.0% மாதாந்த அடிப்படையில் மட்டுமே காட்டுவிலங்கு வருகையை அனுபவிக்கின்றனர் எனத் தரவுகள் காட்டுகின்றன. எனவே, பெரும்பாலான விவசாயிகள் குறைந்தபட்சம் வாரந்தோறும் இந்தச் சவால்களை எதிர்கொள்கின்றனர் எனலாம். நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களில், குறிப்பாக தினசரி காட்டுவிலங்குத் தாக்கங்களைச் சந்திக்கும் விவசாயிகள், அவர்களின் பயிர்கள், கால்நடைப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத்தரத்தில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இது அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதிக்கிறது. வாரந்தோறும் தாக்கங்களை எதிர்கொள்கின்றவர்கள் அவர்களுடைய நிலங்கள் மற்ற விவசாய நிலங்களால் சூழப்பட்டுள்ளனதாகவும் கலந்துரையாடல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

கெபித்திகொள்ளேவ பிரதேசத்தில் விவசாயிகளுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தும் காட்டுவிலங்குகள் யானைகள் (35.7%), குரங்குகள் (27.9%), காட்டுப்பன்றிகள் (23.4%), மான்கள் (11.2%) மற்றும் வேறு சில விலங்குகள் (1.9%) என வகைப்படுத்தப்பட்டன. பெரும்பாலான விவசாயிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட விலங்கினங்களால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவித்தனர். குறிப்பாக, யானைகள் தானியப்பயிர்களான நெல் மற்றும் சோளத்திற்குப் பெரிய அளவில் சேதம் விளைவிப்பதாகவும், குரங்குகள் மற்றும் காட்டுப்பன்றிகள் பயிர் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் தாக்கம் செய்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.




படம் 3: விவசாய நிலங்களுக்கு காட்டுவிலங்குகளின் வருகை

மூலம்: ஆய்வாளர் (2024)

நேரடி அவதானிப்புகளிலும், விவசாயிகளுடனான கலந்துரையாடல்களிலும், காடழிப்பு மற்றும் பயிர்ச்செய்கைக்காக நிலப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களால் விலங்குகள் வாழ்விடங்களை இழந்து விவசாய நிலங்களுக்குள் நுழைவது முக்கிய காரணமாகக் காணப்பட்டது. மேலும், பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் - பாதுகாப்பு வேலிகள், வலைகள், கிணறுகள், நஞ்சுகள் - பல நேரங்களில் விலங்குகளின் உயிரிழப்புக்குக் காரணமாகின்றன. குறிப்பாக, பாதுகாப்பின்றி உள்ள கிணறுகளில் யானைகள் தவறிவீழ்ந்து உயிரிழப்பதும், வலைகளில் சிக்கிக் குரங்குகள், காட்டுப்பன்றிகள் போன்ற விலங்குகள் இறப்பதும் பதிவாகியுள்ளன. இதனுடன், சோளப்பயிர் சேதங்களைத் தடுக்கும் முயற்சியில் நஞ்சு கலந்த உணவுப் பொருட்கள் வைக்கப்படும் நடைமுறைகள் உயிரிச்சங்கிலி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன. 2024ஆம் ஆண்டில் கிரிகெட்டுவெள பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில், பாதுகாப்பற்ற கிணற்றில் இரண்டு யானைகள் விழுந்து இறந்ததைக் குறிப்பிட்ட விவசாயிகள், இத்தகைய பாதிப்புகள் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தனர்.




படம் 4: பயிர்களுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தும் காட்டுவிலங்குகள்

மூலம்: ஆய்வாளர் (2024)

ஆய்வுப் பிரதேசத்தில் பெரும்பாலான விவசாயிகள் (27.2%) காட்டுவிலங்குகளின் மேய்ச்சலினால் தங்கள் பயிர்கள் சேதமடைவதாகத் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, 24.7% பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்பதன் மூலமும், 23.4% விவசாயிகள் விலங்குகளின் மிதித்தல் மூலமும் பயிர் சேதம் ஏற்படுகிறது எனத் தெரிவித்துள்ளனர். நேரடிக் கள அவதானிப்புகளின் அடிப்படையில், மேய்ச்சலுக்கும் உணவுப்பயிர்ச் சேதங்களுக்கும் ஒப்பாக, மிதித்தலால் ஏற்படும் சேதமானது மீளச் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு இல்லாததாகவும் காணப்பட்டது.

மேலும், 14.9% விவசாயிகள் காட்டுவிலங்குகள் நீர்ப்பாசன உபகரணங்களைச் சேதப்படுத்துவதால் விவசாய உற்பத்தி குறைவடைவதாகக் குறிப்பிடுகின்றனர். இதனூடாக, நீர்ப்பாசன அமைப்புக்கள் – பம்புகள், குழாய்கள், மற்றும் தொட்டிகள் ஆகியவைகள் சேதமடைந்து, விவசாயப் பொருளாதாரத்தில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்துவதைத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. 9.8% காட்டுவிலங்குகள் மரங்களை முறிக்கும் காரணத்தால் விவசாய நிலங்களுக்குக் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டனர். குறிப்பாக, நேர்காணல்களின்போது சில விவசாயிகள், யானைகள் தென்னை மரங்களை முறிப்பதனால் மரம் மீண்டும் வளர முடியாது என விளக்கியுள்ளனர்.

அட்வணை 2 : ஆய்வுப் பிரதேசத்தில் உயிரிழந்த வனவிலங்குகளின் எண்ணிக்கை

| உயிரிழந்த வனவிலங்குகளின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடம் | யானை | காட்டுப்பன்றி | குரங்கு | மான் | உயிரிழப்புக்கள் இடம்பெற்ற விதம் |
| 2020 | 08 | 14 | 25 | 9 | ✓ கட்டப்படாத வீட்டுத்தோட்டக் கிணறுகளில் யானைகள் சருக்கி விழுதல்<br>✓ யானைகள் கால் சறுக்கி பள்ளத்தில் கூட்டமாக விழுதல்<br>✓ கட்டு வெடி படுதல்.<br>✓ மின்சார வேலிகளில் பட்டு இறத்தல்.<br>✓ விவசாயிகள் குரங்குகளுக்கு நஞ்சு வைத்துக் கொல்லல்<br>✓ குரங்குகள், மான், காட்டுப்பன்றிகள் என்பன வலைகளில் சிக்கி இறத்தல்.<br>✓ விவசாயிகளுக்கு வழங்கப்படும் தற்பாதுகாகப்புத் துப்பாக்கிகளால் காட்டுப்பன்றிகள், மான் முதலானவை தாக்கப்படுதல் |
| 2021 | 05 | 16 | 19 | 08 | |
| 2022 | 03 | 12 | 23 | 05 | |
| 2023 | 06 | 16 | 30 | 12 | |

மூலம்: வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்,ஹொரவப்பொத்தானை(2024)
ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது (2024)



படம் 5: 2024 இல் குரங்குகளின் மேய்ச்சலினால், யானையினால் மிதித்தலினால் சேதமாக்கப்பட்ட பயிர் நிலம்

மூலம்: ஆய்வாளர் (2024)

அதிகளவான நிலத்தினைக் கொண்டிருக்கும் விவசாயிகள், மேய்ச்சல், மிதித்தல் மற்றும் விளைபொருட்கள் அழிதல் போன்ற கூட்டுச் சேதங்களை எதிர்கொள்கின்றனர். இவை, உரம், கிருமிநாசினி, நீர்ப்பாசன வசதிகள் மற்றும் மண் முகாமைத்துவம் ஆகியவற்றிற்காகப் பெற்றுக்கொள்ளப்படும் கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையை உருவாக்குவதுடன், நிலையான வருமானத்தையும் பாதிக்கின்றன. இத்தகவல்கள், நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மற்றும் அவதானிப்புகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டில் வனவிலங்குகளின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக ஆய்வுப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட மாதிரித் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. பெரும்பான்மையானோர் (66.3%) வனவிலங்குகளின் ஆக்கிரமிப்பு தாக்கம் முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளதாகவும், 18.4% ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். அத்துடன் 4.1% தாக்கம் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.




படம் 6: 2023 இல் வனவிலங்குகளின் அத்துமீறலின் எண்ணிக்கை
மூலம்: ஆய்வாளர் (2024)

இத்தாக்கம் அதிகரிக்கக் காரணங்களாக, தற்போதைய சட்ட நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளால் வேட்டையாடல் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதும், அதன் காரணமாக ஏற்பட்ட விலங்குகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பும் குறிப்பிடப்படுகின்றன. இது வனவிலங்குகள் மற்றும் மனிதர்கள் இடையே மோதல்களை அதிகரிக்கச் செய்கின்றது என்பது நேர்காணல் மற்றும் கலந்துரையாடல்களால் தெளிவாகியது. மேலும், ஆய்வுப் பிரதேசத்தில் 2,900 ஏக்கர் பரப்பளவிலான பாதுகாக்கப்பட்ட காடுகள் உள்ளதுடன், அவற்றுள் 1,900 ஏக்கர் மட்டுமே மின்சார வேலிகளால் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள பகுதிகளில் வேலிகள் இல்லாத காரணத்தால் யானைகள் மற்றும் பிற வனவிலங்குகள் விவசாய நிலங்களுக்குள் நுழைந்து சேதம் ஏற்படுத்துகின்றன எனவும் வனஜீவன அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் யானைகளால் சிறுபோகப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, குறைந்தளவு நீர்வளத்தைக் கொண்டு (கிணறு, குளம்) மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளில் யானைகள் பல ஏக்கர் பயிர்நிலங்களை அழித்துள்ளதால், விவசாயிகள் அவர்களுடைய வாழ்வாதாரத்தில் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளனர். இதனால் உள்ளூர் சந்தை விற்பனை, உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமிய பொருளாதார நிலைமை என்பன பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், காட்டுவிலங்குகளின் அச்சம் காரணமாகப் பலர் சிறுபோகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதையே தவிர்க்கின்றனர். எனவே, இது விவசாய நடவடிக்கைகள் குறைவதற்கும் விவசாய நிலங்களைப் பயன்படுத்தாமலிருப்பதற்கும் வழிவகுக்கின்றது.




படம் 7: 2023 இல் சிறுபோகப் பயிர்ச்செய்கையின்போது யானையினால் சேதமாக்கப்பட்ட விவசாய நிலங்கள்

மூலம்: (பிரதேச சபை, அனுராதபுரம் - 2023)

ஆய்வுப் பிரதேசத்தில் பெரும்போகப் பயிர்ச்செய்கையில் நெல் உற்பத்தியில் யானையினால் சேதமாக்கப்பட்ட பயிர்நிலங்களின் பரப்புக்கள் அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளது. இப்பயிர்ச்செய்கையானது பருவப்பெயர்ச்சியின் போதான மழைவீழ்ச்சிக் காலங்களில் பெரும்பான்மையானவர்களால் பிரதேசத்தின் காட்டை அண்மித்த பகுதி மற்றும் ஏனைய பகுதிகள் முதலான எல்லாப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுவதால் காட்டு விலங்குகள் நேரடியாக விவசாயத்தைத் தாக்குவதற்கு வாய்ப்பாக அமைகிறது. மேலும், பெரும்போகப் பயிர்ச்செய்கையின்போது, யானையினால் 294.14 ஏக்கர் விவசாய நிலப்பரப்புக்கள் அழிவடைந்து பிரதேசத்தின் பொருளாதாரத்தை மிகவும் தீவிரமாகச் சரிவடையச் செய்துள்ளது.

அட்டவணை 3: 2023ஆம் ஆண்டுக்கான மாத அடிப்படையிலான யானையினால் பாதிக்கப்பட்ட பெரும்போகப் பயிர்ச்செய்கை (நெற்பயிர்ச்செய்கை)

| 2023ம் ஆண்டில் யானையினால் சேதமாக்கப்பட்ட பயிர் நிலங்கள் | | |
|---|---|---|
| நெல் பயிரிடப்பட்ட திகதி | யானையினால் தாக்கப்பட்ட திகதி | யானையினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் (acre பரப்பு) |
| 2023-10-03 முதல் 2023-10-30 வரையில் | 2023-11-26 முதல் 2024-01-30 வரை | 213.33 |
| 2023-11-02 முதல் 2023-11-23 வரை | 2024-01-05 முதல் 2024-02-16 வரை | 80.81 |
| மொத்தம் | | 294.14 |

தரவு மூலம்: (பிரதேச சபை, அனுராதபுரம் -2023)

ஆய்வுப் பிரதேசத்தில் வனவிலங்குகளின் வருகையானது இரவில் அதிகம் என்று பெரும்பான்மையானவர்கள் (75.5%) குறிப்பிட்டுள்ளனர். மேலும், 14.3 வீதத்தினர் மாலை நேரத்தில் காட்டு விலங்குகளின் வருகை காணப்படுவதாகவும், அதிகாலை மற்றும் பிற்பகல் நேரங்களில் 5.1% ஆனோர் காட்டு விலங்குகளின் வருகையை எதிர்கொள்கின்றனர். மாலை மற்றும் இரவு நேரங்களில் காட்டு விலங்குகளின் நடமாட்டத்தினை அதிகமாக அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக அதிகமானோர் குறிப்பிடுகின்றனர்.




படம் 8: காட்டு விலங்குகளின் ஒரு நாளைக்கான வருகை வீதம்
மூலம்: ஆய்வாளர் (2024)

ஆய்வுப் பிரதேசத்தில் விவசாயத்தை மேற்கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தில் வனவிலங்குத் தாக்கத்தை அடிக்கடி அனுபவிப்பது தெளிவாகிறது. குறிப்பாக, 63.3% தினமும் வனவிலங்குகளை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளனர். அதேபோன்று மிதித்தல், மேய்ச்சல் ஊடாக அதிக சேதம் ஏற்படுவதாகவும் இரவு மற்றும் மாலை நேரங்களில் கூடுதலான சேதம் ஏற்படுவதாகவும் 89.8 வீதமானவர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் கடந்த

வருடங்களைவிட தற்காலங்களில் வனவிலங்குகளின் எண்ணிக்கையானது கணிசமாக அதிகரித்தள்ளதாகவும் பெரும்பான்மையான விவசாயிகளின் விவசாய நிலங்களுக்குள்ளும் யானை, காட்டுப்பன்றி, குரங்கு முதலான அனைத்து விலங்குகளும் அதிகமாக வந்து சேதப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

**ஆய்வுப் பிரதேசத்தின் உள்ளூர் விவசாயிகளின் பொருளாதார நிலைமையில் காட்டுவிலங்குகளின் தாக்கம்**

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளின் பொருளாதார நிலைமையில் காட்டு விலங்குகளின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாகும். பெரும்பான்மையான விவசாயிகள் (42.9%) பயிர் விளைச்சலில் நேரடி இழப்பைச் சந்தித்துள்ளதாகவும், 39.8% முழுமையான இழப்பை அனுபவித்துள்ளதாகவும் கூறினர். இத்தாக்கம், பயிர் நாசம், மேலதிக செலவுகள், விவசாய நடைமுறைகளில் மாற்றம், மற்றும் கடன்சுமையின் அதிகரிப்பு என்பனவாக மாறியுள்ளது. 2023 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 66.25 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல் நிலங்களில் 23.75 ஏக்கர் யானைகளால் சேதமாக்கப்பட்டு ரூ. 4,100,000 இழப்பாகப் பதிவாகியுள்ளது. பெரும்போகத்தில் கூட, குருளுகம மற்றும் தித்தகொனேவ போன்ற பகுதிகளில் முழுமையான விளைச்சல் பாதிப்படைந்து ரூ. 39,285,000 இழப்பாகியது( *Divisional secretariat in Anuradhapura 2023*).




படம் 9 : பயிர் விளைச்சலில் காட்டு விலங்குகளின் தாக்கம்

மூலம்: ஆய்வாளர் (2024)

தடுப்பு நடவடிக்கைகளுக்காக விவசாயிகள் முள்வேலி அமைத்தல், மின்சார வேலி அமைத்தல் (ஒரு போகத்திற்கு ‘ரூ. 40,000 செலவிடுதல்), பயமுறுத்தும் சாதனங்கள், தொழிலாளர் செலவுகள் உள்ளிட்டவற்றுக்குக் கூடுதலான பொருளாதாரச் செலவுகளை எதிர்கொள்கின்றனர். 32.7% வேலி திருத்தும் செலவுகளையும், 13.3% இழப்பீட்டுச் செலவுகளையும் குறிப்பிடுகின்றனர். யானை வெடிகள் பெறுவதற்கான அரசாங்க நடைமுறைகள் மற்றும் அதன் செலவினம் பற்றியும் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனை நேரடி அவதானிப்பு, விவசாயிகளுடனான நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களின் ஊடாகவும்

உறுதிப்படுத்தலாம். இந்தத் தாக்கங்கள், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் உள்ளூர் சந்தைகளின் நிலையான தன்மையையும் குலைக்கும் விதமாக அமைகின்றன.




படம் 10 : காட்டு விலங்குகளின் சேதத்தினால் ஏற்படும் செலவுகள்
மூலம்: ஆய்வாளர் (2024)

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள 48.0% விவசாயிகள் காட்டு விலங்குகளின் தாக்கம் காரணமாக தங்களின் விவசாய முறைகளில் ஓரளவு மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தேவையுள்ளதாகவும், 30.6% முழுமையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இருப்பினும், முழுமையான மாற்றங்களை மேற்கொள்வதில் நிதி மற்றும் முதலீட்டு வரம்புகள், பயிர்மாற்றம் தொடர்பான செலவினம் அதிகம் என்பதால், சிலர் மாற்றங்களைத் தவிர்க்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். பெரும்பான்மையான விவசாயிகள் (46.9%) காட்டு விலங்குகளால் அவர்களது உற்பத்தியில் மிகவும் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அதேவேளை, 5.1% விவசாயிகள் மாத்திரம் சாதகமான தாக்கம் இருந்ததாகத் தெரிவித்துள்ளனர் (அதாவது, பெரிய விலங்குகளால் சேதம் ஏற்படாமல் இருத்தலும் மயில்,மான் முதலான சிறுவிலங்குகளின் தாக்கம் குறைவாக ஏற்படலும்).




படம் 11: காட்டு விலங்குகளின் தாக்கத்தினை உணருதல்
மூலம்: ஆய்வாளர் (2024)

பயிர்களின் சேதம், மண்ணின் சிதைவு, மற்றும் வனவிலங்கு தாக்கத்தைத் தணிக்கத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான அதிகரித்த செலவுகள் போன்றவை விவசாய உற்பத்தியை மட்டுமன்றி, விவசாயிகளின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதிக்கின்றன. கலந்துரையாடல்களின் அடிப்படையில், பல குடும்பங்களில் ஒரு வருடத்திற்குத் தேவையான நெல் உற்பத்தித் தடைப்பட்டு, மூன்று வேளை சோற்றை உணவாகக் கொண்ட மக்களுக்கு அரிசி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், கால மாற்றங்களைக் கடந்து வந்தாலும் பொருளாதார முன்னேற்றம் இல்லாத நிலை தொடர்கின்றதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

கெபித்திக்கொள்ளேவ பிரதேசத்தில் காட்டு விலங்குகளால் விவசாய நடவடிக்கைகளில் பெரும்பாலான பாதிப்புக்கள் அறுவடைக் கட்டத்தில் ஏற்படுவதாக 33.3% தெரிவித்துள்ளனர். கலந்துரையாடல் மற்றும் நேர்காணல்களில், அறுவடையின்போது அதிக கவனம் செலுத்தப்படுவதால், விலங்குகளின் உணவு தேடுதல் நடவடிக்கைகள் அதிக சேதங்களை ஏற்படுத்துகின்றன எனவும், இதனால் விவசாயிகள் மிகுந்த பொருளாதார இழப்புக்களைச் சந்திக்கின்றனர் எனவும் குறிப்பிடப்படுகிறது. மேலும், பயிர் பராமரிப்புக் கட்டத்தில் ஏற்பட்ட சேதங்கள் உரம், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழிலாளர் செலவுகளை அதிகரிக்கச் செய்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுபோக மற்றும் பெரும்போகப் பருவங்களில் இது குறிப்பிடத்தக்க அளவில் தொடர்கின்றதாகவும், அரசாங்கத்தால் வழங்கப்படும் நட்ட ஈட்டுத் தொகைகள் அறுவடைக் காலத்திற்குப் பிந்திய சேதங்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதால், விதைத்தல் மற்றும் பராமரிப்புக் கட்டங்களில் ஏற்படும் சேதங்களை ஈடு செய்ய முடியாமல் விவசாயிகள் பொருளாதார சிக்கல்களுக்கு உள்ளாகுகின்றனர்.

**முடிவுரை**

கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு, காட்டு விலங்குகளின் அத்துமீறல் விவசாய நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் தாக்கங்களை விரிவாக வெளிக்கொணர்கிறது. ஆய்வு முடிவுகள், காட்டு யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள், பயிர்களை மேய்தல், மிதித்தல், நீர்ப்பாசன வசதிகளைச் சேதப்படுத்தல், மரங்களை முறிக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றின் ஊடாக விவசாய உற்பத்தியைப் பல்வேறு கட்டங்களில் பாதிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. குறிப்பாக, அறுவடைக் கட்டத்தில் ஏற்படும் சேதங்கள் பெரும்பாலான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முற்றிலுமாகச் சீர்குலைப்பதாகவும், பயிர் இழப்புகள் மற்றும் கூடுதல் செலவுகள் ஆகியவை விவசாயிகளின் கடன்சுமையை அதிகரித்து பொருளாதார சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விவசாய முறைகளை மாற்றவோ அல்லது ஒத்திவைக்கவோ கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அரசாங்கத்தினால் வழங்கப்படும் நட்ட ஈட்டுத் தொகைகள் எல்லையற்ற சேதங்களை ஈடுசெய்யும் வகையில் இல்லாமையினால், இந்தப் பிரச்சினை இன்னும் மோசமாகிறது. இவ்வகையான காட்டுவிலங்கு அத்துமீறல்கள், மனித செயற்பாடுகளுக்கும் வனவிலங்குகளுக்குமான இடைவெளியைக் குறைக்கும் வகையில் மனித – வனவிலங்கு மோதல்களை அதிகரிக்கின்றன என்பதும் இவ் ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

பயிர் நிலங்களைச்சுற்றி வலைகளை உயரமாகக் கட்டுவதன் மூலமும் கயிறுகளைச் சுற்றிக் கட்டுவதன் மூலமும் இப்பகுதிகளிலுள்ள உயரமான மரங்களில் பரண் (குடில் ) அமைத்து விவசாயிகள் ஒருங்கிணைந்து பயிர் நிலங்களைப் பாதுகாப்பதன் மூலமும் தொலை உணர்வுகள் பொருத்தப்பட்ட தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி அவதானிப்பதன் மூலமும் வேலிகளோடு ஒட்டிய பகுதியில் எள்ளு போன்ற மாற்றுப்பயிர்களையும் பயிரிடுவதன் மூலமும் இப்பகுதிகளில் உள்ள பயிரிழப்புக்களைக் காட்டு விலங்குகளில் இருந்து பாதுகாக்கலாம் எனவும் பரிந்துரைக்கலாம் (Gunawardhana, A., & Herath, S.). மேலும், வனவிலங்கு - மனித மோதல்களைக் குறைக்கும் வகையில் உள்ளூர் புவியியல் தோற்றப்பாடுகள், சமூக, பொருளாதார சூழலுக்கு ஏற்ற, அறிவியல் மற்றும் சமூக அடிப்படையிலான தணிப்பு உத்திகள் இம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இது போன்ற சவால்களுக்கு எதிராக ஒரு நிலையான மற்றும் ஒருங்கிணைந்த நிர்வாகக் கொள்கை வடிவமைக்கப்பட வேண்டியது இவ்வாய்வின் முக்கிய பரிந்துரையாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Gemeda, D., & Meles, S. K. (2018). Impacts of human-wildlife conflict in developing countries. *Journal of Applied Sciences and Environmental Management*, *22*, 1233. https://doi.org/10.4314/jasem.v22i8.14

Gunawardhana, A., & Herath, S. (2018, October 17). Analysis of causes, impacts and mitigation strategies for human-elephant conflict: A case study in Anuradhapura District of Sri Lanka. Journal of Tropical Forestry and Environment.

Jayawardene, J., & Wickramasinghe, D. (2021). Wildlife Management and Agricultural Sustainability in Sri Lanka: Strategies for Mitigation. Conservation Biology, 35(2), 220-229.

Jayaweera, A. (2019). The role of agricultural land use pattern dynamics on elephant habitat depletion and human-elephant conflict in Sri Lanka. *Journal of Agricultural and Environmental Sciences, 9*(2), 125-140. https://doi.org/10.1007/s10980-019-00855-0

Mekonen, S. (2020). Coexistence between human and wildlife: The nature, causes, and mitigations of human-wildlife conflict around Bale Mountains National Park, Southeast Ethiopia. BMC Ecology

Mohamed Fazil, & Mohamed Firdhous, M. (2019). Lot-enabled smart elephant detection system for combating human-elephant conflict. *International Journal of Engineering and Technology, 8*(6), 2527-2533. https://doi.org/10.14419/ijet.v8i6.30115

Ponnaiah, B., Wijeymohan, Suthakar, K., & Surendran, S. (2022). Vulnerability of Land Use/Cover Associated with Human-Wildlife Conflicts in Mullaitivu District, Sri Lanka. *Geocarto International*, *37,* 1–13. https://doi.org/10.1080/10106049.2022.2097480

Rudran, R., Cabral-de Mel, S., Sumanapala, A., de Mel, R., & Mahindarathna, K. (2021). An Ethnoprimatological Approach to Mitigating Sri Lanka's Human-Monkey Conflicts. *Primate Conservation*, *35*, 189–198.

Santiapillai, C., Wijeyamohan, S., Bandara, G., Athurupana, R., Dissanayake, N., & Read, B. (2010). An assessment of the human-elephant conflict in Sri Lanka. *J. Sci. (Bio. Sci.), 39*, 21–33. https://doi.org/10.4038/cjsbs.v39i1.2350

Sitati, N., & Waipole, M. (2006). Assessing farm-based measures for mitigating human-elephant conflict in Transmara District, Kenya. *Human Dimensions of Wildlife*, 11(4), 269-279. https://doi.org/10.1080/10871200600832044

# Political Science & Governance

# கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் சவால்களும் : திகாமடுல்ல மாவட்டத்தின் 2020, 2024 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**Puspakaran Dilasan**
Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
dilasn201@gmail.com

**V. Gunaretnam**
Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
gunaretnam@esn.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பானது மக்களின் இறைமையினூடாக நாட்டில் சட்டத்தை ஆக்குவதற்கான தத்துவத்தினையும் அதனை நடைமுறைப்படுத்தல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்குரிய அதிகாரத்தைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. ஒரு நாட்டில் பாராளுமன்றத் தேர்தலினூடாக மக்கள் இறைமை அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் முறையாக ஒப்படைக்கின்றனர். ஜனநாயக வரம்பினுள் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் எனப் பெரும்பாலான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டுப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் மூவினம் இணைந்து வாழ்கின்ற போதிலும், தமிழ்ப் பிரதிநிதிகள் குறைவான அளவிலேயே ஒவ்வொரு தேர்தலிலும் தெரிவுசெய்யப்படுகின்றனர். இம்மாகாணத்தில் தமிழர்களுடைய வாக்களிப்பு முறையானது ஏனைய இனத்தவர்களைவிடக் குறைவானதாகவும் சிதறுகின்றனவாகவும் காணப்படுகிறது. குறிப்பாக, திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போய்விட்டது. ஆனால், 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் சொற்ப (88) வாக்குகளினால் பிரதிநிதித்துவமானது கிடைத்துள்ளது. இதனால் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது பல சவால்களினை எதிர்நோக்குகின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக கரிசனை கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்றும் பாதுகாக்கப்படலாம். தமிழ் வேட்பாளர்கள் மக்களுடனான தொடர்பினைச் சிறந்த வகையில் பேணுவதுடன் சரியான தேர்தல் விஞ்ஞாபனங்களையும் முன்வைக்க வேண்டும். தமிழ்ப் பிரதிநிதியின்மையினால் தமிழ் மக்களுக்கான சேவைகள், அபிவிருத்திகள் குறைந்த வண்ணம் கிடைக்கின்றன. தமிழ் மக்கள் பாரிய சவால்களைத் தொடர்ந்தும் எதிர்நோக்கிய நிலையில் திகாமடுல்ல மாவட்டத்தில் காணப்படுகின்றனர்.

***திறவுச் சொற்கள் :*** *தமிழ் மக்கள், மக்கள் பிரதிநிதிகள், திகாமடுல்ல மாவட்டம், பாராளுமன்ற தேர்தல்.*

## அறிமுகம்

ஜனநாயகம் என்பது மக்கள் விருப்பு எனும் எண்ணக்கருவுடன் தொடர்புடையது. ஆட்சியாளர்கள் அரசாள்வதற்கான அதிகாரத்தை மக்கள் விருப்பம் மற்றும் அனுமதியுடன் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என்பதே இதன் பொருளாகும். மக்கள்

ஆட்சியாளர்களுக்குத் தமது அதிகாரத்தை வழங்கும் பொறிமுறை சுதந்திரமான தேர்தல்களாகும். இதனூடாகவே மக்கள் ஆட்சியாளருக்கு அதிகாரத்தை ஒப்படைக்கின்றனர்.

இன்றைய இலங்கையில் நல்லாட்சியானது பெயரளவிலேயே காணப்படுகிறது. பெரும்பான்மையின மக்களால் சிறுபான்மையினங்கள் பல இன்னல்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் எதிர்கொள்ளும் போக்குக் காணப்படுகிறது. அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தின் திகாமடுல்ல, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மூவின மக்கள் குவிந்து வாழ்கின்றார்கள். இங்கு முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் நாட்டமே அரசியலில் அதிகம் காணப்படுகிறது.

இதேவேளை பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் பிரதிநிதிகளில் அதிகமானோர் முஸ்லிம், சிங்கள இனத்தவர்களாகவே காணப்படுகின்றனர். தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்துக்கான பிரதிநிதிகளின் முன்னேற்றம் குறைந்துகொண்டே வருகின்றது. இதனால் தமிழ் மக்கள் பாராபட்சம் பார்க்கப்பட்டு பின்தள்ளப்படும் போக்குக் காணப்படுகிறது. இவ்வகையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பிரதிநிதிகளுக்கான ஆசனங்கள் குறைவாகக் கிடைப்பதற்கான காரணங்கள் மற்றும் பிரதிநிதிகள் தெரிவு தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் எவ்வாறு கொண்டு செல்வது போன்ற தமிழ் மக்களது சவாலினைக் கண்டறிவது தொடர்பாக ஆய்வு செய்யப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வினை மேற்கொள்வதற்கு முதல் ஆய்வு தொடர்பாக ஏற்கனவே எழுதப்பட்டுள்ள ஆய்வுகள், கட்டுரைகள் போன்றவற்றை ஆராய்ந்து அறிவது இன்றியமையாததாகும். ஏனெனில், ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையில் ஆய்வினைச் சிறப்பானதாக மேற்கொள்வதற்கும் ஆய்வின் தனித்தன்மையைப் பேணிக்கொள்வதற்கும் இன்றியமையாததாக காணப்படுகின்றது. அந்தவகையில், இவ்வாய்வுடன் தொடர்புபட்டதாகப் பின்வரும் நூல்கள் காணப்படுகின்றன.

பிராங் ஜோணி, பி (தமிழாக்கம் சந்திரசேகரம், ரோ., தனராஜ், கருணாநிதி,மா. - 1994) ‘‘ஜனநாயகம் என்றால் என்ன’’ எனும் நூலில் ஜனநாயகத்தின் உயிர்நாடியான பிரதிநிதித்துவம் பற்றியும் தேர்தல்கள் பற்றியும் குறிப்பிட்டிருப்பதுடன், ஜனநாயகத் தேர்தல்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தேர்தல்களின்போது வாக்காளரது நடவடிக்கைகள், தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது மக்களது நடவடிக்கைகள் என்பன பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் பிரசாரங்களைக் கட்சிகள் எவ்வாறு நடாத்துகின்றதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீலம் திருச்செல்வத்தின் (1996) ‘‘ஜனநாயகமும் மனித உரிமைகளும்’’ எனும் நூலில் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாக பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது என்ற அடிப்படையில் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் பிரதிநிதித்துவ முறைமையின் நன்மைகள் மற்றும் தீமைகள் என்பனவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மேலும், இலங்கையில் தேர்தல்

முறைமை எவ்வாறுள்ளது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. க.இரகுநாதனின் (2008) "தேர்தல் முறைகளும் அவற்றின் பரிமாணங்களும்" எனும் நூலில் தேர்தல் முறைகள் மற்றும் அவற்றின் ஊடாக முன்னெடுக்கப்படும் பிரதிநிதித்துவ முறைகள், மக்கள் தொடர்பு போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

குணரெத்தினம், வே. (2009) "அரசறிவியல்" எனும் நூலில் பிரதிநிதித்துவக் கோட்பாட்டின் தெளிவான விளக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இப்பிரதிநிநித்துவக் கோட்பாட்டின் வகைகள், அதன் ஆரம்பம், இக்கோட்பாட்டின் தற்கால நிலைப்பாடு என்பன பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரசாத், சி (2016) "இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு 1978" எனும் நூலில் இலங்கை ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசு நாடு என்ற வகையில் இலங்கையில் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வதற்காக மக்கள் பயன்படுத்துகின்ற தேர்தல் முறைமை, அதன் நடைமுறைச் சிக்கல்கள், அதன் நன்மையான அம்சங்கள் என்பன தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Mohamed Saleem, A (2023). "The Political Of Representation- The Rise Of Muslim Democarts In As Non Violent Resistance To The Ethnic Conflict" எனும் ஆய்வு கட்டுரையில் 1986 இல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) நாட்டின் முதலாவது முஸ்லிம் அரசியல் கட்சியாக ஆரம்பிக்கப்பட்டது, இது முன்னர் பிரதான அரசியல் கட்சிகளுடன் இணைந்திருந்த பாரம்பரிய முஸ்லிம் அரசியல் உயரடுக்கினரிடமிருந்து விலகுவதைக் குறிக்கிறது. முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவத்தில் இந்த ஒழுங்கின்மை ஒரு தனி முஸ்லிம் அரசியல் கட்சியின் அடிப்படையில், முஸ்லிம் ஜனநாயகத்தின் ஆரம்ப முன்மாதிரிகளில் ஒன்றாக எவ்வாறு விளக்கப்படலாம் என்பதை இவ்வாய்வு முன்னிலைப்படுத்துகின்றது. ஆனால், கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஆய்வு செய்யப்படவில்லை என்ற இடைவெளியினைப் பூர்த்தி செய்வதற்காக இவ்வாய்வுக் கட்டுரையானது பயன்படுத்தப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

பல இன, மத, மொழி சார்ந்தவர்கள் வாழ்கின்ற நாட்டில் தங்களது நலன்சார்ந்த விடயங்களினையும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளினையும் காண்பதற்கு அவர்கள் சார்ந்த பிரதிநிதித்துவம் என்பது மிக மிக அவசியமானதாகும். கிழக்கு மாகாணத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் குறைவாகக் காணப்படுகின்ற அதே நேரத்தில் குறிப்பாக, திகாமடுல்ல மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போய்விட்டது. ஆனால், 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் சொற்ப (88) வாக்குகளினால் பிரதிநிதித்துவமானது கிடைத்துள்ளது. இதனால் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது பல சவால்களினை எதிர்நோக்குகின்ற விடயமாகக் காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாகக் கரிசனை கொள்வதன் மூலம் எதிகாலத்தில் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்றும் பாதுகாக்கப்படலாம்.

**ஆய்வு வினாக்கள்**

1. கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் எவ்வாறு காணப்படுகிறது?
2. திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழரின் அரசியல் பிரதிநிதித்துவத்தினைத் தக்கவைப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்?
3. திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் யாவை?
4. கிழக்கு மாகாணத் தமிழர்களின் பாராளுமன்றப் பிரவேசம் தொடர்பாக அரசியல் தலைமைகள், மக்களினுடைய கருத்துக்கள் எவ்வாறுள்ளன?

**ஆய்வின் நோக்கம்**

- பாராளுமன்றத் தேர்தல்களில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான விடயங்களினைக் கண்டறிதல்.
- திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனமைக்கான காரணங்களினையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளினையும் கண்டறிதல்.
- திகாமடுல்ல மாவட்டத்தில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் சொற்ப வாக்குகளினால் வெற்றி ஈட்டியமையும் அதற்கான பின்னணிகளினையும் கண்டறிதல்.
- திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளினைக கண்டறிந்து ஆலோசனைகளினை முன்வைத்தல்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு ஒன்றினை நேரிய வழியில் நெறிப்படுத்திச் செல்வதற்கு நன்கு வடிவமைக்கப்பட்ட ஆய்வு முறையியல் தேவைப்படுகிறது. அந்தவகையில், இது கள ஆய்வாக வடிவமைக்கப்படுகிறது. இவ்வாய்வு முறையானது உய்த்தறி முறையினை அடிப்படையாக கொண்டுள்ளது. சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்குப் பலதரப்பட்ட ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பண்பு ரீதியான, ஒப்பீட்டு ரீதியான, எண் ரீதியான ஆய்வு முறையியல்களாகும். இவ்வாய்வுக்குக் கலப்பு ரீதியான முறையியலே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல் மற்றும் வினாக்கொத்துக்கள் மூலமான தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதற்காகப் பாராளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டவர், கிராமசேவகர், பொதுமக்களிடம் நேர்காணல் மூலமும், கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் பால் மற்றும் இன அடிப்படையில் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டவர்களிடம் 175 வினாக்கொத்துக்கள் கொடுக்கப்பட்டும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

அட்டவணை : தரவு சேகரிக்கப்பட்ட முறைமை

| தரவு சேகரிப்புக்கு உட்படுத்தப்பட்டவர்கள் | திகாமடுல்ல | மட்டக்களப்பு | திருகோணமலை |
|---|---|---|---|
| பொதுமக்கள் | 35 | 25 | 25 |
| அரசியல்வாதிகள் | 5 | 4 | 2 |
| அரசாங்க உத்தியோகத்தர்கள் | 20 | 10 | 10 |
| மதத் தலைவர்கள் | 8 | 6 | 8 |
| அரசசார்பற்ற நிறுவனங்கள் | 7 | 5 | 5 |
| மொத்த எண்ணிக்கை | 75 | 50 | 50 |

ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் அரசாங்க உத்தியோகத்தர்கள், விவசாயிகள், வீட்டுப் பெண்கள், பாராளுமன்ற வேட்பாளர்களுடன் இணைந்து செயற்பட்டவர்கள், சாதாரண குடிமகன், வயோதிபர்கள் எனப் பலதரப்பட்டவர்களிடம் வினாக்கொத்துக்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதன்படி மாவட்ட அடிப்படையில் திகாமடுல்ல 75, மட்டக்களப்பு 50, திருகோணமலை 50 என்றவகையில் 62% ஆண்களும், 38% பெண்களும் என்ற வகையிலும், இன அடிப்படையில் 71% தமிழ், 27% முஸ்லிம், 2% சிங்களம் என்றவகையிலும் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இத்தரவுகள் Excel கணினிச் செயலி ஊடாக புள்ளிவிபரத் தரவுகளாக மாற்றப்பட்டு, ஆய்விற்கான முதனிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள, இணையம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

**2020ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கான காரணம்**

இலங்கையில் பல்லின சமூக கட்டமைப்பினைக் கொண்ட திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் பெரும்பான்மை இனமாக சிங்களவர்களும், முஸ்லிம்களும் காணப்படுகின்றனர். சிறுபான்மையினராகத் தமிழர்கள் காணப்படுகின்றார்கள். கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பிரதிநிதித்துவம் இழக்கப்படப் பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

வரைபடம் : 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கான காரணங்கள்




மூலம் : ஆய்வாளரால் தாயாரிக்கப்பட்டது (2024)

### பேரினவாத தலைமைகளின் திட்டமிட்ட செயல்

2020ஆம் ஆண்டுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் ஆளும் கட்சி அரசியல் தலைமைத்துவங்களினால் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட கொள்கைத் திட்டங்களில் முதன்மையான ஒன்றாக தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாது ஒழிக்க வேண்டும் என்ற கொள்கை நிலவியது. இதற்காகத் திகாமடுல்ல மாவட்டத்தின் விநாயகமூர்த்தி முரளிதரன் என்கின்ற கருணா அம்மான் அவர்கள் களமிறங்கி மக்களின் வாக்குகளைத் திட்டமிட்டுப் பிரித்துப் பிரதிநிதித்துவத்தினை இழக்க செய்தமை 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கான பிரதான காரணமாக அமைகின்றது. இது தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 26 வீதமானோர் பேரினவாத தலைமைகளின் திட்டமிட்ட செயல் எனும் காரணி 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கான பிரதான காரணி என வெளிப்படுத்துகின்றனர்.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்பட்ட திருப்தியற்ற நிலை

கடந்த 2015ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டணியில் களம் இறக்கப்பட்டு வெற்றி பெற்றது. இதனால் நாட்டின் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தினைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றது. நாட்டில் எதிர்க்கட்சியாக இருந்து தமிழ் மக்களுக்கு என்ன செய்தது என்ற வினா தமிழ் மக்கள் மத்தியில் எப்போதும் இருந்த வண்ணமே உள்ளது. தமிழர்களுக்கு என்று ஏராளமான பிரச்சனைகள் உள்ளன. உரிமைக் குரல், அதிகளவு கட்டுப்பாடுகள், அபிவிருத்தி இன்மை என்று அநேகமான பிரச்சனைகளைப் பொறுப்பெடுக்காமல் அரசாங்கத்தினைக் காப்பாற்றியது. இதனால் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றிய திருப்பியற்ற நிலை இருந்தது. இது 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமைமைக்கான மற்றொரு காரணமாக அமைகின்றது. இது தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 17 வீதமானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்பட்ட

திருப்தியற்ற நிலை 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கான மற்றொரு காரணி என வெளிப்படுத்துகின்றனர்.

**தமிழ் மக்கள் வாக்களிப்பில் விருப்பமின்மை**

2020ஆம் ஆண்டுத் தேர்தலில் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமைமைக்கான மற்றொரு காரணமாக தமிழ் மக்களின் வாக்களிப்பில் விருப்பம் காட்டாமை என்பதனைக் குறிப்பிடலாம். வாக்களிக்கும் மக்களுக்கு என்ன கிடைக்கின்றது. நாங்கள் ஒவ்வொரு தேர்தலிலும் வாக்காளர்களாக மாத்திரம்தான் இருக்கின்றோம். அபிவிருத்தி என்பது இடம்பெறுவதில்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. நாம் வாக்களித்து என்ன நடக்கப் போகிறது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இதனால் பெரும்பாலான மக்கள் வாக்களிக்க விரும்புவதில்லை என்ற காரணம் பிரதிநிதித்துவத்தினை இழக்கச் செய்தது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இது தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 25 வீதமானோர் தமிழ் மக்கள் வாக்களிப்பில் விருப்பம் காட்டாமை 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கான பிரிதொரு காரணி என வெளிப்படுத்துகின்றனர்.

**இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு என்ற மாயையில் இளைஞர்களின் வாக்குகளைச் சிதைவடைத்தமை**

2020ஆம் ஆண்டுத் தேர்தலில் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமைக்கான பிரிதொரு காரணியாக இளைஞர்களின் வாக்குகளின் சிதைவடையும் தன்மையினை கூறலாம். ஆளுங்கட்சியினூடாக களம் இறக்கப்பட்ட கருணா அம்மானும் தேர்தல் பிரசாரங்களில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு அதிகளவு வழங்குவோம் என்னும் போலியான பிரசாரங்கள் செய்யப்பட்டு இளைஞர்களைத் தமது பக்கம் ஈர்த்துகொண்டார். இதனால் தமிழ் இளைஞர்களின் வாக்கு ஆளுங்கட்சிக்கும் கருணா அம்மானுக்கும் கிடைத்தது. ஆனால், தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைக்கவில்லை என்பதன் ஊடாக இளைஞர்களின் வாக்குச் சிதறடிக்கப்பட்டுத் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாது ஒழிக்கப்பட்டது என்ற காரணத்தையும் சுட்டிக்காட்டுகின்றனர். இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 32 வீதமானோர் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு என்ற மாயையில் இளைஞர்களின் வாக்குகளைச் சிதைவடைத்தமை 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கான பிறிதொரு காரணி என வெளிப்படுத்துகின்றனர்.

**திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இன்மையினால் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள்**

2020 தொடக்கம் 2024 வரையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் தமிழ் மக்களுக்கு இல்லாததால் பல்வேறுபட்ட இன்னல்களுக்கும் பிரச்சனைகளுக்கும் திகாமடுல்ல மாவட்டத் தமிழ் மக்கள் முகம் கொடுத்து வந்தனர். தனித்துத் தமிழர்களைக் கொண்ட மாவட்டம் இல்லை. சிங்களவர்கள் முஸ்லிம்கள் பெரும்பான்மை இனத்தவராக இருக்க, சிறுபான்மையிலும் சிறுபான்மையினமாகத் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். இதனால் பல்வேறு வகையான அடக்குமுறையுடன் கூடிய பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.

வரைபடம் : திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இன்மையினால் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள்




**மூலம் : ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது (2024)**

### அரசியல் அநாதைகளாக்கப்பட்டமை

தமக்கெனப் பிரதிநிதித்துவமின்றித் தம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் பெரும்பான்மையின அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி அரசியலில் அநாதைகள் ஆக்கப்படுகின்றனர். பல கட்சிகளாகப் பிரிந்து வாக்களிப்பதனால் தன் சமூகத்திற்கு ஒரு பிரச்சினை வரும்போது யாரிடம் சென்று முறையிட்டுத் தீர்த்துக்கொள்வதென்று தெரியாது உள்ளனர். அச்சந்தர்ப்பத்தில் அனைத்து அரசியல்வாதிகளாலும் புறக்கணிக்கப்படுகின்றனர். இம்மாவட்டத் தமிழ் மக்கள் தம் பிரதேசம்சார் சிங்களவர்களுடன் உள்ள நட்பினால் தம் இனத்திற்கு வாக்களிப்பதற்கு முன்வராமல் சிங்கள அரசியல்வாதிகளுக்கு வேலை செய்கின்றனர். அதாவது, தம் கிராமங்களுக்குச் சிங்கள வேட்பாளர்களை அழைத்து வருவது, பிரசாரங்களை மேற்கொள்வது, தம் இன மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொடுப்பது போன்றனவாகும். இவ்வாறு பெரும்பான்மை அரசியல் தலைவர்களுக்காகப் பாடுபட்டு வெற்றிபெறச் செய்வதும் காணப்படுகின்றது. இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது வீதமானோர் அரசியல் அநாதைகளாக்கப்பட்டமை எனும் பிரச்சினை திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இன்மையினால் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளுள் பிரதான பிரச்சினையாகும் என்பதனைக் கூறியிருந்தனர்.

### தமிழர் என்ற இன அடையாளத்தை இழத்தல்

திகாமடுல்ல மாவட்டத் தமிழர்களைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையினத்தில் தங்கி வாழ்பவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது, தம் இனம் சார்பில் ஒரு வேட்பாளர் வந்தாலும் அவரை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் சில தமிழர்களுக்கு இருந்தாலும், சிலர் இவர் தமிழர்களது வாக்கினால் மட்டும் வெற்றிபெற முடியுமா, இவருக்கு வாக்களிப்பதைவிடப் பெரும்பான்மையினரானாலும் சரி அவர்களுக்கு உதவியாக வாக்களித்து வெற்றிபெறச் செய்தால் பின்னர் அரசியல் செல்வாக்கில் அவரின் உதவியோடு குறைந்தது

தனக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ தொழில் வாய்ப்புக்களைப் பெற உதவியாக இருக்கும் என நினைக்கின்றனர்.

பெரும்பான்மையினர் அதிகம் உள்ளமையினால் தொழில் பெறுவது, உயர்பதவிகளை அடைவது, இடமாற்றங்கள் பெறுவது என்பது சிறுபான்மையினருக்குப் பெரும் சிரமமே. போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்தால் போதாது. அரசியல் பின்புலம் வேண்டும் என்பதை அரசாங்கம் எதிர்பார்க்கிறது. தகமைக்கு முன்னுரிமையில்லை. அதிகார வர்க்கத்திற்கே செல்வாக்குக் காணப்படுகிறது. இதனால் ஏனைய இனத் தலைவர்களுக்கே வாக்களிக்கின்றனர். தமிழர்கள் விழிப்புணர்வற்றுப் பல கட்சிகளுக்குத் தங்கள் வாக்குகளை வழங்குகின்றனர். இம்மாவட்டத்தில் தமிழர்களுக்கெனப் பாடுபட தமிழ்க் கட்சிகளின் செல்வாக்குக் காணப்படுகின்ற போதிலும், தமிழர்கள் சார்பாக பல தமிழ்க் கட்சிகள் போட்டியிடுவதால் தமிழ் வாக்குகள் சிதறுவதன் காரணமாக தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும் தெரிவுசெய்யப்படாத நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 25 வீதமானோர் தமிழர் என்ற இன அடையாளத்தை இழத்தல் எனும் பிரச்சினை திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இன்மையினால் மக்கள் எதிர்நோக்கிய பிறிதொரு பிரச்சினையாகும் என்பதனைக் கூறியிருந்தனர்.

**மக்களின் பிரச்சினைகள் அரசியல் தீர்வின்றி இருந்தமை**

பல்லின சமூகம் வாழும் பிரதேசங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுவது சகஜமாகும். திகாமடுல்ல மாவட்டத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்கள், சிங்களவர்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதியாகும். வளர்ச்சியடையாத கிராமங்களைக் கொண்ட பகுதிகளுக்குப் பெரும்பான்மையின் அரசியல்வாதிகளின் கவனயீனம் அதிகம் காணப்படுகிறது. அதாவது, தேர்தல் காலங்களில் மட்டுமே அப்பிரதேசங்களுக்குச் செல்கின்றனர். வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் பெரும்பான்மையின மக்கள் வாழும் பகுதிகளில் பாதை புனரமைப்பு, குடிநீர் வசதி, சுகாதார நலத்திட்டங்கள், கமநெகும என்பன அபிவிருத்தி செய்கையில், இவைகள் அனைத்தும் தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுவது குறைவாக காணப்படுகிறது.

அவ்வாறு கொண்டு செல்லப்படினும், ஏனைய பெரும்பான்மையின மக்கள் பகுதிகளுக்குச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கமும் சரி, அரசியல் தலைவர்களும் சரி எடுக்கும் பிரயத்தனம் சிறுபான்மையின தமிழர்கள் வாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதில்லை. இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டாலும், இங்கு மறைமுக இனவாரிப் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. இனத்தில் வேறுபட்ட தமிழர்கள், சிங்கள, முஸ்லிம் தலைவரிடத்தில் சென்று தங்கள் பிரச்சினைகளை முன்வைத்தாலும் அவை பொடுபோக்காகவும் அதில் தன் செல்வத்தைப் பெருக்கவுமே முயற்சிக்கின்றனர். இவை ஊழல் நிலையினைச் சுட்டிக்காட்டுகிறது. இதன்பொருட்டு ஊழல் இருக்கும் மட்டும் மக்கள் நலன் கேள்விக்குறியே.

காணிப் பிரச்சினையானது தமிழ் மக்களுடைய முக்கிய பிரச்சினையாக இன்றுவரை நீடித்து வரும் ஒன்றாக காணப்படுகிறது. இதுவே பெரும்பாலான தமிழர்களின் முதல் பிரச்சினையாகும். தொல்பொருள் அகழ்வு எனும் பெயரில் சிங்கள இனத்தவர்கள் தமிழர்களின்

காணிகளை அபகரித்தல் (பொத்துவில் பிரதேசம்), பேரினவாதிகளின் காணி அபகரிப்புச் செயற்பாடுகள் (ஊறணி), மேய்ச்சல் நிலம் வழங்கப்படாமை (வட்டமடு), திருக்கோவில் பிரதேச பிரிவின்கீழ் அம்பாறை மாவட்ட மூவினங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் வகையில் மேய்ச்சல்தரை வட்டமடுவில் வழங்கப்பட்ட போதிலும் முஸ்லிம் இனத்தவர்கள் அதற்கு இணங்காமை போன்ற பிரச்சினைகளுடன், அதிக கிராமங்கள் யானைகள் வந்து செல்லும் சரணாலயங்களாகவே காணப்படுகின்றன (வளத்தாப்பிட்டி, தங்கவேலாயுதபுரம், தாண்டியடி). இங்கு வருடம் தோறும் ஏதோ ஒரு வகையில் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. பாமர மக்களின் விவசாய நிலங்கள் யானைகளால் அழிக்கப்படுகின்றன.

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத ஏழைகளாகவே தொடர்ந்தும் வாழ்கின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கென வழங்கப்படும் நிவாரணங்கள் மக்களுக்குச் சரியான முறையில் சென்றடைவதில்லை. இதற்காக யானைகளிடம் இருந்து மக்களையும், தங்கள் வாழ்வாதார விவசாயத்தினையும் பாதுகாத்துக் கொள்ள பல அரசியல் வாதிகளிடம் சென்று முறையிட்டாலும் இன்றுவரை அது தீர்க்கப்படதா ஒன்றாகவே காணப்படுகின்றது. இதனால் வெறுப்புற்ற மக்கள் அரசியல்வாதிகள்மீது நம்பிக்கையற்றுள்ளனர். மத ரீதியிலான சொந்தப் பாரம்பரிய கலாசார விடயங்கள் பெரும்பான்மையினரால் பாதிக்கப்படும்போது அவற்றைச் சீர் செய்யப் பெரும்பான்மைத் தலைவர்களிடமே கொண்டு செல்வது பயனற்றது. இவ்வாறு தமது சமூகத்திற்கெனப் பிரதிநிதித்துவம் குறைந்த பட்சத்திலும், இல்லாத பட்சத்திலும் இம்மாவட்டத் தமிழ் மக்களது பிரச்சினைகள் அரசியல் அரங்கிற்குக் கொண்டு செல்லப்படுவதில்லை. இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 29 வீதமானோர் மக்களின் பிரச்சினைகள் அரசியல் தீர்வின்றி இருந்தமை எனும் பிரச்சனை திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இன்மையினால் மக்கள் எதிர்நோக்கிய பிறிதொரு பிரச்சனையாகும் என்பதனை கூறியிருந்தனர்.

**2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகள்**

2024ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் திகாமாடுல்ல மாவட்டத் தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் ஒன்று கிடைக்க பெற்றுள்ளது. திகாமடுல்ல மாவட்டத் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்வதற்காக பல்வேறுபட்ட சதித்திட்ட வேலைகள் தமிழ் மக்களின் வாக்குகளை சிதைப்பதற்காக இடம்பெற்றுள்ளன என்பதனைக் குறிப்பிடலாம். தமிழர் தரப்பில் இலங்கைத் தமிழரசு கட்சி, ஜனநாயகத் தேசிய கூட்டணி என்ற இரு கட்சிகள் போட்டியிட்டன. இதில் மக்கள் தெளிவாக இருந்தனர். கடந்த 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் விட்ட தவறினை நாங்கள் இவ்வருடத் தேர்தலில் விடக்கூடாது என்று உணர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அதிகளவு வாக்கினை வழங்கினார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 33,632 வாக்குகளும், ஜனநாயகத் தேசிய கூட்டணிக்கு 7,727 வாக்குகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக, 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் 25,255 வாக்குகளைப் பெற்றுக்கொண்ட தமிழரசுக் கட்சி 2024ஆம் ஆண்டுத் தேர்தலில் 8,377 வாக்குகளைப் பெற்று ஒட்டுமொத்தமாக 33,632 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தினைப் பெற்றுக்கொண்டது.

அட்டவணை : பொதுத் தேர்தல் முடிவுகள் - 2024 (திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்)

| Party name | Vote | Percentage | Seats |
|---|---|---|---|
| NPP | 146,133 | 40.32% | 4 |
| SLMC | 46,899 | 12.92% | 1 |
| ACMC | 33,911 | 09.34% | 1 |
| ITAK | 33,632 | 09.27% | 1 |
| NDP | 33,544 | 09.24% | 0 |
| SJB | 32,320 | 08.91% | 0 |

Source: Parliamentary General Election (2024)

இவ்வாறு 88 வாக்குகளின் வித்தியாசத்தில்தான் தமிழர் பிரதிநிதித்துவமானது இன்று பாதுகாக்கப்பட்டுள்ளது. 88 வாக்குகளை பெற்றுக்கொள்ளவில்லையாயின் இவ்வருடமும் திகாமடுல்ல மாவட்டத் தமிழ் மக்கள் அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்ட மக்களாக காணப்பட்டிருப்பர். நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் வெளியாகியுள்ளன. திகாமடுல்ல மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட வசந்த பியதிஸ்ஸ அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு 04 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன (வசந்த பியதிஸ்ஸ - 71.120, மஞ்சுள ரத்நாயக்க - 50.838, பிரியந்த விஜேரத்ன - 41.313, முத்துமெனிக்கே ரத்வத்தே 32.145). அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் எம். எம். தாஹிர் - 14.511 அவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மீராஹிபு உதுமாலெப்பே - 13.016 அவர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கவீந்திரன் கோடீஸ்வரன் - 11.962 அவர்களும் தெரிவாகினர். இதன் அடிப்படையில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேரும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பாராளுமன்றம் சென்றுள்ளனர்.

**தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைத்தமைக்கான காரணங்கள்**

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 2024ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைப்பதில் செல்வாக்கு செலுத்திய காரணங்களாக பல காரணங்களைக் குறிப்பிடலாம். குறிப்பாக, திகாமடுல்ல மாவட்டத் தமிழ் மக்கள் 2020 தொடக்கம் 2024 வரையான நான்கு ஆண்டு காலப்பகுதியில் அரசியல் தலைமைத்துவம் இல்லாத மக்களாகத்தான் காணப்பட்டார்கள். இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்ற சிந்தனை திகாமடுல்ல மாவட்டத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணின் வயிற்றில் இருந்து பிறந்த

தமிழருக்கு இருக்கின்றது. அவ்வாறு செல்வாக்குச் செலுத்திய காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

வரைபடம் : திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைத்தமைக்கான காரணங்கள்




மூலம் : ஆய்வாளரால் தாயாரிக்கப்பட்டது (2024)

**மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டமை**

கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமையினால் ஏற்பட்ட அவலங்கள், துன்பங்கள், துயரங்கள் பற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் பிரசாரம் செய்தனர். மேலும், ஏனைய அரசியல் கட்சிகள் எங்களது பிரதிநிதித்துவத்தினை இல்லாமல் செய்வதற்காக எமது தமிழ் மக்கள் மத்தியில் வாக்குக் கேட்டு வருகின்றார்கள் என்ற தெளிவான விளக்கத்தினையும் அவர்கள் மக்களுக்கு வழங்கினார்கள். இதனால் மக்களுடைய சிந்தனையானது உணர்வுபூர்வமான சிந்தனையாகக் காணப்பட்டது. அது மட்டுமல்லாமல் ஏனைய கட்சிகளுக்குத் தேசிய பட்டியல் கிடைக்க வேண்டும் என்பதற்காக எமது மாவட்ட மக்களின் வாக்குகளினைத் தேடுகின்றனர் என்ற தெளிவூட்டல் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் மக்கள் சிந்தித்து இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்துப் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொண்டனர். இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 33 வீதமானோர் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டமை எனும் காரணம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைத்தமைக்கான பிரதான காரணமாகும் எனக் கருத்துக்களினைக் கூறியிருந்தனர்.

**பிரச்சினைகளை எடுத்துக் கூறியமை**

திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு சமூகம் சார்ந்த பிரச்சினை, இன ரீதியான அடக்குமுறை, கல்வி ரீதியான அடக்குமுறைகள், நிர்வாக அடுக்கு முறைகள், அபிவிருத்தி இன்மை போன்ற ஏராளமான பிரச்சினைகள் தமிழ் மக்கள் ஆகிய எங்களுக்கு இருக்கின்றது.

இதனைச் சரியான முறையில் தீர்த்துத் தமிழ் மக்களினைப் காப்பாற்றச் சிறந்த ஆளுமை மிக்க பிரதிநிதித்துவம் எமது திகாமடுல்ல மாவட்டத் தமிழ் மக்களில் இருந்து தெரிவுசெய்யப்பட வேண்டும் என்றனர். இதனால் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்துப் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொண்டார்கள். இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 17 வீதமானோர் பிரச்சினைகளை எடுத்துக் கூறியமை எனும் காரணம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைத்தமைக்கான முக்கியமான காரணமாகும் என்று கருத்துக்களினைக் கூறியிருந்தனர்.

**எதிர்காலத் தமிழரின் இருப்புப் பற்றிய கேள்வியினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியமை**

இவ்வருடத் தேர்தலில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்ளவில்லையாயின் ஐந்து வருடம் அல்ல 50 வருடம் அல்ல 500 வருடங்கள் ஆனாலும் எங்களுக்கான பிரதிநிதித்துவம் கிடைக்காது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் மேடைகளில் கருத்துக்களைத் தெரிவித்துப் பிரசாரங்களில் ஈடுபட்டனர். திகாமடுல்ல மாவட்டத் தமிழரின் எதிர்கால இருப்புப் பற்றிய கேள்வியினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி மக்களை உணர்வுபூர்வமாகச் சிந்திக்க வைத்தார்கள். அவ்வாறு சிந்தித்ததன் பெறுபேறாகத்தான் திகாமடுல்ல மாவட்டத் தமிழ் மக்கள் இலங்கை தமிழர் கட்சிக்கு வாக்களித்து பிரதிநிதித்துவத்தினை பெற்றுக் கொண்டார்கள். இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 28 வீதமானோர் எதிர்காலத் தமிழரின் இருப்புப் பற்றிய கேள்வியினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியமை எனும் காரணம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைத்தமைக்கான முக்கியமான காரணமாகும் என்று கருத்துக்களினைக் கூறியிருந்தனர்.

**சமூக செல்வாக்கு மிக்க நபர்களைக் களம் இறக்கியமை**

இலங்கைத் தமிழரசுக் கட்சியானது சமூக செல்வாக்கு மிக்கவர்களை வேட்பாளர்களாகக் களம் இறக்கியது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள், கல்விமான்கள் என்று மக்களின் அபிமானங்களை வென்ற ஆளுமை மிக்க தலைமைத்துவங்களை தெரிவுசெய்து வேட்பாளராக களம் இறக்கியது. மேலும், ஏனைய கட்சிகளினுடைய வேட்பாளர்களை எடுத்து நோக்குகையில் அவர்கள் காலத்திற்குக் காலம் முளைக்கின்ற காளானை போல அரசியல் காலத்தில் கட்சி விட்டுக் கட்சி தாவி மக்களுடைய வாக்குகளைச் சிதைப்பவர்கள். இவர்கள் ஒரு நிரந்தரமான அரசியல் கொள்கை இல்லாதவர்கள் என்று பிரசாரங்களைச் செய்து மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி உயர்ந்த ஸ்தானத்தினைப் பெற்று அதிகூடிய வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தினைப் பெற்றுக்கொண்டது. இது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் வினவியபோது 22 வீதமானோர் சமூக செல்வாக்கு மிக்க நபர்களை களம் இறக்கியமை எனும் காரணம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைத்தமைக்கான முக்கியமான காரணமாகும் என்று கருத்துக்களினைக் கூறியிருந்தனர்.

**முடிவுரை**

இலங்கை நாட்டினைப் பொறுத்தவரையில் இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு, சகல சமூகத்தினரும் அரசியல் அரங்கில் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதோடு அச்சமூக மக்களாகிய நாட்டு மக்கள் அனைவரும் தமது நலங்களைப் பெற வேண்டும் என்பதற்காக 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் மூலம் விகிதாசார தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுச் சிறுபான்மையினர் மக்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இவ்வகையில், பல்லின சமூகம் வாழும் மாகாணமாகக் கிழக்கு மாகாணம் காணப்படுகிறது. கிழக்கு மாகாண தமிழரின் பிரதிநிதித்துவத்தையும் அதன் தன்மையினையும் நோக்குகையில் பெரும் சவாலுக்கு உட்பட்ட வகையிலேயே அது காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம்தான் தமிழர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். ஏனைய திகாமடுல்ல, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழர்கள் சிறுபான்மையினராக உள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

திகாமடுல்ல மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதித்துவமானது இழக்கப்பட்டமையினால் தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி என்பது இடம்பெறவில்லை. ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வருடா வருடம் வரவு செலவுத் திட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியானது வழங்கப்படும். கடந்த 2020 தொடக்கம் 2024 வரையான 4 வருட காலப் பகுதிக்குள் அபிவிருத்தியின் தன்மை என்பது திகாமடுல்ல மாவட்டத் தமிழ்ப் பிரதேசங்களில் குறைவாகவே இடம்பெற்றது. இதனால் தமிழ் மக்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்கி இருந்தனர். திகாமடுல்ல மாவட்டத்தில் சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கு இடையிலான தொடர்பாடல் என்பது உயர்மட்டத்தில் காணப்படுகின்றது. காரணம் முஸ்லிம் மக்கள் மொழி ரீதியிலான தேர்ச்சியினைப் பெற்றவர்கள். ஆனால், தமிழ் மக்களிடத்தில் சிங்கள மொழி ரீதியிலான தேர்ச்சி என்பது குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. தொடர்பாடலில் இருக்கின்ற மொழிப் பிரச்சினையால் வேலை வாய்ப்பு, குறைந்த வளப்பகிர்வு, நிர்வாக ரீதியிலான கட்டுப்பாடுகள், அபிவிருத்தித் தன்மையினுடைய குறைவு, அரசியல் அனாதைகளாக்கப்பட்டமை, அபிவிருத்தி இடம்பெறாமை, இன ரீதியான அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டமை, வளங்கள் சுரண்டப்பட்டமை, உரிமைக்காகக் குரல் கொடுக்க முடியாத நிலைமை போன்ற பல்வேறுபட்ட துர்ப்பாக்கிய நிலையில் திகாமடுல்ல மாவட்ட தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்பதனை குறிப்பிட்டுக் காட்டலாம்.

விசேடமாக 2024ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்டு அடக்குமுறைக்கு உட்படுத்தப்படும் சமூகத்தினராக திகாமடுல்ல மாவட்டத் தமிழ் மக்கள் இருப்பார்கள் என்பதனை உணர்ந்து சிந்தித்து வாக்களித்து, இழக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தினை மீண்டும் பெற்றுக்கொண்டார்கள். குறிப்பாக, 88 வாக்குகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி பெறவில்லை ஆயின், இவ்வருடமும் தமிழருக்கான பிரதிநிதித்துவமானது திகாமடுல்ல மாவட்டத்தில் இழக்கப்பட்டிருக்கும் என்ற விடயத்தினைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். மேலும், 102000 தமிழ் மக்கள் அனைவரும்

சிந்தித்து வாக்களித்தால் இரண்டு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் தொகுத்து நோக்கும்போது விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், கிழக்கு மாகாணத் தமிழரின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினைச் சிதைப்பதற்காகப் பல்வேறுபட்ட காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. குறிப்பாக, பாராளுமன்றப் பிரதிநிதித்துவமானது ஒரு சமூகத்திற்கு இழக்கப்பட்டால் அந்தச் சமூகமானது அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி, கலாசாரம், அபிவிருத்தி என்று பல்வேறு துறைகளிலும் பின்தள்ளப்பட்ட ஒரு சமூகமாக மாற்றமடையும். ஆகவே, எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அதிக அளவு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு இனி வருகின்ற தேர்தலில் அரசியலில் ஈடுபடுகின்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கட்டமைப்பின் கீழ் தேர்தலில் களம் இறங்கிப் போட்டியிடுமாயின், அதிக அளவு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளும். இவ்வாறு அதிகளவு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதினால் தமிழ் மக்களின் உரிமையினை வென்றெடுப்பதோடு, அபிவிருத்தியினையும் சிறப்பான முறையில் செய்ய முடியும். அரசியல் தலைமைகளும் ஐக்கியப்பட்டுச் சமூக ஒற்றுமையோடு பாகுபாடு இன்றி செயல்படுவதனால் மாத்திரம் இந்தக் கைங்கரியமானது சாத்தியமடையும் என்பதனை குறிப்பிட்டு கொள்ளலாம்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

### தமிழ் நூல்கள்


அசோக்குமார், மு. (2010). உள்ளூராட்சி முறையும் மக்கள் பங்குபற்றுதலும், எஜானம்ஸ் பதிப்பகம்.

அரசரெத்தினம், எஸ். (2004). இலங்கை அரசியல் வரலாறும் பதின்மூன்றாவது பொதுத்தேர்தலும், கல்முனை, குட்வின் ஒப்செற் அச்சகம்.

அருணாச்சலம், கு. (2012). இலங்கை அரசியல் வரலாறு, மகாவலி வெளியீட்டகம்.

ஆலிப்,எஸ்.எம். (2015). சமகாலத் தேர்தல் முறைமைகள், கண்டி: குறிஞ்சி வெளியீடு.

குணரத்தினம், வே. (2009). அரசறிவியல், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சமீம், மு. (1997). ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள், சென்னை, குமரன் வெளியீட்டகம்.


### இணையத்தளங்கள்


"Department of census and statics Sri Lanka,census population and housing. 2020”, URL Available on, https://www.statistics.gov.lk

"District Election office Ampara" URL Available on, https://www.satstistics.gov.lk/DistrictsatHBook,asp?District Ampara& year2020

டென்சியா, எ. (2016), "பிரதிநிதித்துவமுறை". URL Available on https://www.astan.lk/al-virtualclassroom/ta/-/

"Parliamentary Election 2020" Daily Mirror (Colombo,Sri Lanka). URL Available on https://ta.m.wikipedia.org/wiki/

விடிவெள்ளி, (2024.11.07), "அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் – ஒரு நோக்கு", URL Available in https://www.vidivelli.lk/article/18055

Sathangani, (2024), "அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவ விவகாரம் ,முபறியில்...! விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள்", URL Available in https://ibctamil.com/article/amparai-tamil-representation-issue-in-dispute-1728444218

# பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடு: 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**P. Ajitha**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
Pushparajahajitha36@gmail.com

**A.Kanneraj**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
kanneraja@esn.ac.lk

**ஆய்வு சுருக்கம்**

பொதுத்துறை நிர்வாகமானது கோட்பாட்டடிப்படையில் அரசியலில் அதன் பணிகளில் சுதந்திரமான தன்மையுடன் செயற்பட வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. எனினும், நடைமுறையில் பொதுத்துறை நிர்வாகம் அதன் செயற்பாடுகளின்போது அரசியல் தலையீடுகளுக்கு உட்படுவது உலகளவில் குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் அம்சமாக உள்ளது. இதன்படி இலங்கையிலும் இத்தகைய போக்கின் நடைமுறைத் தன்மையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அந்தவகையில், இலங்கையில் பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீட்டின் செல்வாக்கு மற்றும் தாக்கத்தின் அளவினை இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்த ஏற்பாடுகள் ஊடாக கண்டறிந்து ஒப்பீட்டுப் பகுப்பாய்வு செய்வதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது. இவ்வாய்வு இத்தகைய சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் சுதந்திரத்திற்கும் செயல்திறமைக்கும் எவ்வகையிலான சவால்களை ஏற்படுத்தக் கூடும் என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டுள்ளது. பொதுத்துறை நிர்வாகத்தின் வினைத்திறன் மற்றும் தரத்தினை அதிகரித்து, அரசியல் தலையீட்டினைக் குறைக்க எவ்வகையான சீர்திருத்தங்கள் முன்மொழியப்படலாம் என்பதைப் பரிந்துரைக்கும் முகமாகவும் இவ்வாய்வு முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு பண்பு ரீதியான விபரணப் பகுப்பாய்வாகக் காணப்படுவதுடன் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான நூல்கள், இணையதளம், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஆராய்வதன் மூலம் இச்சீர்த்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தினைச் சுதந்திரமான அமைப்பாக மாற்றுவதில் அரசியல் தலையீட்டினை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளமை கண்டறியப்பட்டது. இருந்தாலும், அவை சீராக அமுல்படுத்தப்படாததினால் நடைமுறையில் தோல்வி அடைந்துள்ளது. இந்நிலையில், எதிர்கால பரிந்துரைகளை இவ்வாய்வு முன்வைக்கிறது.

***திறவுச் சொற்கள்:*** *இலங்கை, பொதுத்துறை நிர்வாகம், அரசியல் தலையீடு, அரசியல் யாப்புத் திருத்தங்கள், ஜனாதிபதி.*

**அறிமுகம்**

நிர்வாகத்தின் ஒரு பிரிவே பொதுத்துறை நிர்வாகம் ஆகும். நடைமுறையில் பொதுத்துறை நிர்வாகம் என்பது அரச நிர்வாகத்தினையே குறித்து நிற்கின்றது. அரசு தன்வசமுள்ள வளங்களைச் சிக்கனமாகவும் இலாபகரமான வகையிலும் பயன்படுத்த வேண்டிய தேவையிருப்பதனால் அவற்றினைப் பொது நிர்வாகப் பிரிவினூடாக மேற்கொள்கின்றது (அமீர்தீன், வி., 2001). இதனால் அரசின் தொழில் அந்தமாகவும் பொதுத்துறை நிர்வாகம் விளங்குகின்றது. தற்காலத்தில் பொதுத்துறை நிர்வாகத்திற்கான இயந்திரம் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் எனும் நிறுவனங்கள் ஊடாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இவ்வாறான நிறுவனங்கள் மூலம் பொதுத்துறை நிர்வாகம் கட்டமைக்கப்பட்டாலும், இவற்றில் அரசியல் தலையீடுகள் என்பது தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகவே மாறிவிட்டது. ஒவ்வொரு திணைக்களத்தினதும் நிர்வாகம் சீராக இயங்க வேண்டுமானால் அங்கே அநாவசிய அரசியல் தலையீடுகள் இருத்தல் கூடாது. அவ்வாறு அரசியல் செல்வாக்கு ரீதியில் தேவையற்ற நெருக்குதல்கள் எதிர்நோக்கப்படுமானால் நேர்மையான அதிகாரிகளால் நிர்வாகத்தைச் சீராக முன்னெடுக்க முடியாத நிலைமை தோன்றி விடும் (அஷோக்பரன்.என்.கே., 2021).

எமது நாட்டின் நீண்ட கால வரலாற்றில் அதிகார மட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் இவ்வாறுதான் அரசாங்க நிர்வாகக் கட்டமைப்புக்குள் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தினர். தங்களது விருப்பு வெறுப்புகளுக்கு அடிபணிய மறுக்கின்ற அதிகாரிகளை இடமாற்றம் செய்தல் அல்லது அவர்களது கடமைப் பொறுப்புகளைப் பறித்தெடுத்தல், ஆளணி எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஊழியர் நியமனங்களை மேற்கொள்ளுதல், அரசியல் ரீதியில் அதிகாரிகளைப் பழிவாங்கல் போன்ற முறையற்ற தலையீடுகளை அதிகாரம் மிக்க அரசியல்வாதிகள் மேற்கொள்வது வழக்கமாக இருந்து வந்தது (அஷோக்பரன்.என்.கே., 2021). இவை போன்ற நேர்மையற்ற செயற்பாடுகளின் விளைவாக நேர்மையான அதிகாரிகள் பாதிக்கப்பட்டு மனவிரக்திக்கு உள்ளாக நேரிடுகின்றது. அரசியல் தலையீடுகளை எதிர்நோக்குகின்ற திணைக்களங்களினால் வினைத்திறனுள்ள பணிகளை மேற்கொள்ள முடியாமல் போகின்றது. மொத்தத்தில் அத்திணைக்களங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. பொதுத்துறை நிர்வாகத்தின் தரத்தை மேம்படுத்தவும், நிறுவனங்களை மிகவும் வெளிப்படையானதாகவும் மக்களுக்குப் பொறுப்பேற்கக்கூடியதாகவும், ஊழலுக்கு ஆளாகாததாகவும் மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் சீர்திருத்தங்கள் முன்வைத்தன. ஆயினும், பொதுத்துறை நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் நடைமுறையில் ஒருபோதும் உணரப்படவில்லை, இறுதியில், அவை ஊழல், பாரபட்சம் மற்றும் அரசியல் தலையீடுகள் ஆகியவற்றுக்கான ஆதாரமாக மாறியன (Ramasamy, R. 2020).

சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் தோற்றம் பெற்ற சுதேச யாப்புக்களில் தற்போது வரை நடைமுறையில் காணப்படும் அரசியல் யாப்பாக 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட

இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு உள்ளது. இவ்யாப்பில் பல்வேறு திருத்தங்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப ஜனரஞ்சக நோக்கிலும் ஒரு சில ஆட்சியாளர்களின் சுயநலப் போக்கின் நிமித்தமும் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது. 1978 அரசியலமைப்பு அரசியல்மயமாக்கப்படாமல் பொதுச் சேவையின் சுதந்திரத்திற்கான பல்வேறு விதிகளை அறிமுகப்படுத்தியது. ஆனால், நடைமுறையில் இன்றும் அதன் சுதந்திரத்தை நாம் காணவில்லை (Bandara, A., 2013). 17ஆம், 18ஆம், 19ஆம், 20ஆம் மற்றும் 21ஆம் ஆகிய அரசியலமைப்புகள் முக்கியத்துவம் வாய்ந்ததுடன், இதன் மூலம் இலங்கையின் பொதுத்துறை நிர்வாகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டதுடன் அரசியல் தலையீடுகள் என்பதும் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகவே காணப்படுகின்றது எனலாம். இதன்படி இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீட்டினை அதிகரிப்பதில் அல்லது குறைப்பதில் எவ்வாறு தாக்கம்புரிகின்றன என்பதையும் இத்தகைய சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் சுதந்திரத்திற்கும் செயல்திறமைக்கும் எந்த வகையிலான சவால்களை ஏற்படுத்துகிறது என்பதையும் கண்டறிவதை இவ்வாய்வு நோக்ககாகக் கொண்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

Tamara Nilmini Senarathna. K.A, (2023), The Future of Public administration in Srilanka. என்னும் ஆய்வுக் கட்டுரையானது இலங்கையின் பொதுத்துறை நிர்வாகத்தின் எதிர்காலம் தொடர்பாக ஆராய்வதை முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, இலங்கையில் பொதுத்துறை நிர்வாகத்தின் வரலாற்றுச் சூழல், காலனித்துவ ஆட்சி மற்றும் சுதந்திரத்திற்குப் பின்னைய சீர்த்திருத்தங்களின் செல்வாக்கு, கொள்கை வழிகாட்டுதல்களில் துணைத் தேசிய அரசாங்கங்களின் தலையீடு குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட சீர்த்திருத்தங்கள் இலங்கையின் பொதுத்துறை நிர்வாகத்தில் எவ்வாறான தாக்கத்தினையும் சவாலினையும் ஏற்படுத்துகின்றன என்பது குறித்து விசேடமாக கவனம் செலுத்தப்படவில்லை.

Ramasamy. R. (2020). Governance and administration in Sri Lanka: trends, tensions and prospects. தற்போதைய நெருக்கடிகளின் வெளிச்சத்தில் இலங்கையின் ஆட்சி மற்றும் நிர்வாகத்தின் நிலை மற்றும் நிர்வாகத்தின் தரத்தில் ஏற்படும் தாக்கத்தை ஆராய்வதே இந்த ஆய்வறிக்கையின் நோக்கமாகும். இக்கட்டுரை இலங்கையின் ஆட்சி மற்றும் நிர்வாகத்தின் சமகாலப் பிரச்சினைகளை ஆராய்கிறது. இது தற்போதைய போக்குகள் மற்றும் நிர்வாகத்தில் உள்ள நெருக்கடிகள் மற்றும் நிறுவன தரத்தில் அதன் தாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. ஆனால், 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட சீர்த்திருத்தங்கள் இலங்கை பொதுத்துறை நிர்வாகத்தில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்படவில்லை.

Ramanie. S, (2014), New Public Management: Challenge for Sri Lanka. இந்தக் கட்டுரை இலங்கையில் பொதுத்துறைச் சீர்திருத்தங்களின் வரலாற்றை மதிப்பாய்வு செய்கிறது. அத்தோடு புதிய பொது முகாமைத்துவம் உடனான இலங்கையின் சமீபத்திய சவால்களை ஆராய்கிறது. இவ்வாய்வுக் கட்டுரையில் இலங்கையில் பொதுத்துறை நிர்வாகம் தொடர்பாக கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் தொடர்பில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அவை இலங்கையின் பொதுத்துறை நிர்வாகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவில்லை.

Jayasundera. W.A, (2021), Effectiveness of Administrative Reforms on public service Delivery in Sri lanka. இவ்வாய்வுக் கட்டுரையானது 1948 முதல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பொது நிர்வாகச் சீர்திருத்தங்கள் பற்றிய வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்கின்றது. எனினும், இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப் பொதுத்துறை நிறுவனங்களுக்குள் செயல்படுத்துவதில் உள்ள தாக்கங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவில்லை.

Entwistle. T, 2021, Public Management. இந்த ஆய்வுக் கட்டுரையில் அதிகாரத்துவம் மற்றும் பொது நிர்வாகம் தன்னாட்சி மற்றும் பொது நிர்வாகம் ஆகியன தொடர்பான விடயங்கள் ஒப்பிட்டு ரீதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகள் மற்றும் யாப்புச் சீர்திருத்தத்தின் மூலம் அவற்றின் மீதான தாக்கங்கள் குறித்து ஆராயப்படவில்லை.

Nawaratne. S. (2011). Public Administration and Governance in Sri Lanka: Challenges and Prospects. இலங்கையில் பொதுத்துறை நிர்வாகத்தின் கட்டமைப்பு, செயற்பாடுகள் மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நாட்டின் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களை இவ் ஆய்வானது உள்ளடக்கி உள்ளது. இலங்கையின் தனித்துவமான சமூக அரசியல் நிலப்பரப்புக்கு ஏற்றவாறு உள்ளடக்கிய தன்மை, வினைத்திறன் மற்றும் நிலைத்தன்மை போன்ற நல்லாட்சிக் கொள்கைகளை அடைவதற்கான நுண்ணறிவுகளை இது வழங்குகிறது. ஆனால், இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் மூலமாக பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகள் குறித்து ஆராயப்படவில்லை.

Welikala. A. (2015). The 17th Amendment and the Principle of Independent Commissions in Sri Lanka. வெளிப்படைத்தன்மை, நியாயம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகளுக்குச் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் பங்கை இந்தக் கட்டுரை ஆராய்கிறது. 17ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் எழுந்த கோட்பாட்டு அடிப்படைகள் மற்றும் நடைமுறைச் சவால்கள் இரண்டையும் விவாதித்து, சுயாதீன

ஆணைக்குழுக்களை அறிமுகப்படுத்தும் இலங்கையின் முயற்சியின் வாக்குறுதிகள் மற்றும் சவால்களைப் பிரதிபலிப்பதாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

பொதுத்துறை நிர்வாகம் மீதான அரசியல் தலையீடு தவிர்க்க முடியாத ஒரு விடயமாக இலங்கை நிர்வாக வரலாற்றில் காணப்படுவதுடன், அது சுதந்திரமான நிர்வாக நடவடிக்கைகள், சேவை வழங்கல் என்பவற்றுக்குச் சவாலாக அமைந்துள்ளது. 1978 இரண்டாம் குடியரசு யாப்பானது அரசியல் மத்தியமயமாக்கல் செயற்பாட்டை நிறைவேற்று ஜனாதிபதி முறை மூலம் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தது (Bandare. N., 2013). 17ஆம் மற்றும் 19ஆம், 21ஆவது திருத்தங்கள் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டினை ஓரளவுக்கேனும் குறைத்து சுதந்திரமான அமைப்பாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தபோதும், அது சீராக அமுல்படுத்தப்படவில்லை. இம்முயற்சி நடைமுறையில் தோல்வியடைந்துள்ளது என்றே கூறலாம். 18, 20ஆவது திருத்தங்கள் பொதுத்துறை நிர்வாகம் மீதான அரசியல் தலையீட்டை அதிகரிக்கும் வகையில் ஜனாதிபதிக்குப் பூரண அதிகாரம் அளித்து அரசியலமைப்புப் பேரவைக்குப் பதிலாக பாராளுமன்றப் பேரவை அறிமுகப்படுத்தப்பட்டமையினால் எந்தவொரு நியமனத்தையும் ஜனாதிபதி நேரடியாக வழங்க முடியும் (Ramesh. R., 2024).

எனவே, 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பு சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டில் எந்தளவு தாக்கம் செலுத்துகின்றன மற்றும் இத்தகைய சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் சுதந்திரத்திற்கும், செயல்திறமைக்கும் எந்த வகையிலான சவால்களை ஏற்படுத்துகிறது என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு நோக்கப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**

- பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீட்டின் செல்வாக்கு மற்றும் தாக்கத்தின் அளவினை இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்த ஏற்பாடுகள் ஊடாக ஒப்பீட்டு ஆராய்தல்.
- பொது நிர்வாகத்தில் அரசியல் தலையீட்டை எளிதாக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளைப் பகுப்பாய்வு செய்தல்.
- தேவையற்ற அரசியல் தலையீட்டைக் குறைப்பதற்கும் இலங்கையில் பொதுத்துறை நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை முன்மொழிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு வடிவமாக காணப்படுகின்றது. ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் ஆய்வு தொடர்பான ஆய்வேடுகள், நூல்கள், பத்திரிகைகள்,

சஞ்சிகைகள், கையேடுகள் என்பவற்றின் மூலமாக தரவுகள் பெறப்பட்டன. இவ்வகையில், இவ்வாய்வுக்காக இரண்டாம் நிலைத் தரவுகளாக இலங்கைப் பொதுத்துறை நிர்வாகம் தொடர்பான நூல்கள், ஆய்வு அறிக்கைகள் என்பனவும், 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இலங்கைப் பொதுத்துறை நிர்வாக மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பாக வெளிவந்த சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள் போன்றனவும் பெறப்பட்டுள்ளன. இதனைவிட இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்தில் ஆய்வாளர்களின் ஆய்வுகளுக்கான தகவல்களை வழங்குவதில் முக்கியத்துவம் மிக்கதாக விளங்கும் இணையத்தளங்களில் இருந்தும் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டுள்ளன.

### தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

### 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புத் திருத்த ஏற்பாடுகளும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீடும்

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு பல புதிய அம்சங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை நடைமுறையிலுள்ளது. 1978 இரண்டாம் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டு முந்தைய யாப்பின் விடயங்களை மாற்றியதுடன் பொதுத்துறை நிர்வாகக் கட்டமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்தியபோதும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் கட்டுப்பாடுகளில் பெரியளவான மாற்றம் எதையும் கொண்டுவரவில்லை என்றே சொல்லலாம் (Gunawardene, 1989). 1972 அரசியலமைப்பு ஆரம்பித்து வைத்த அரசியல் மத்தியமயமாக்கல் செயற்பாட்டை நிறைவேற்று ஜனாதிபதி முறை மூலம் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தது (Bandare, 2013). முதலாம் குடியரசு யாப்பில் காணப்பட்ட இரு ஆலோசனை சபை முறைமை நீக்கப்பட்டு, புதிய பொதுச் சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்ட போதும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையில் தொடர்ந்தும் பணியகவமைப்பிலான அரசியல்மயமாக்கத்திற்கான அரசியல் ஏற்பாடுகள் இன்னும் காணப்படத்தான் செய்தன (சிவகுமார். என். 2009). பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீட்டினைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டாலும் அவை நடைமுறையில் வலுவிழந்ததாகவும் அதற்கு மாறாக அரசியல் தலையீட்டினை அதிகரிக்கும் வகையில் இலங்கை நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தை வலுவடையச் செய்கின்ற தன்மைகள் கொண்டதாகவும் இச்சீர்திருத்தங்கள் காணப்படுகின்றன (Ramesh. R., 2024).

இதன் அடிப்படையில் நோக்கும்போது, 17ஆம் மற்றும் 19ஆம், 21ஆவது திருத்தங்கள் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டினை ஓரளவுக்கேனும் குறைத்துச் சுதந்திரமான அமைப்பாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தபோதும், அது சீராக அமுல்படுத்தப்படவில்லை. இம்முயற்சி நடைமுறையில் தோல்வியடைந்துள்ளது என்றே கூறலாம். 18, 20ஆவது திருத்தங்கள் பொதுத்துறை நிர்வாகம் மீதான அரசியல் தலையீட்டை

அதிகரிக்கும் வகையில் ஜனாதிபதிக்குப் பூரண அதிகாரம் அளித்து அரசியலமைப்புப் பேரவைக்குப் பதிலாக பாராளுமன்றப் பேரவை அறிமுகப்படுத்தப்பட்டமையினால், எந்தவொரு நியமனத்தையும் ஜனாதிபதி நேரடியாக வழங்க முடியும் (Ramesh. R., 2024). எனவே, 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டில் எந்தளவு தாக்கம் செலுத்துகின்றன மற்றும் இத்தகைய சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் சுதந்திரத்திற்கும் செயல்திறமைக்கும் எந்த வகையிலான சவால்களை ஏற்படுத்துகின்றன என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**17ஆம், 19ஆம் மற்றும் 21ஆம் அரசியல் அமைப்புத் திருத்தங்களும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீடும்**

17ஆவது திருத்தத்திற்கு முன்னர், இலங்கையின் பொதுத்துறை நிர்வாகம் மிகவும் அரசியல்மயப்படுத்தப்பட்டதுடன் நிர்வாகக் கிளை, குறிப்பாக ஜனாதிபதி, நீதித்துறை, காவல்துறை மற்றும் பிற நிர்வாகத் துறைகள் உட்பட பொது அலுவலகங்களுக்கான நியமனங்கள்மீது பரந்த அளவிலான அதிகாரங்களைக் கொண்டிருந்தது (Bandare, 2013). 17ஆவது திருத்தம் இந்தச் சவால்களுக்கு விடையிறுக்கும் வகையில் ஊழல், திறமையின்மை மற்றும் அரச நிறுவனங்களின் மீதான அரசியல் கட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு நிர்வாக சீர்திருத்தங்கள் தேவை என்ற பரவலான கோரிக்கைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டது (சிவகுமார். என்., 2009). இதன் அடிப்படையில் இவ் யாப்புத் திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டினை ஓரளவுக்கேனும் குறைக்கும் விதத்தில் காணப்படுகின்றன. அதேபோன்று 19ஆவது திருத்தத்திலும் அரசியல் தலையீட்டினைக் கட்டுப்படுத்தி, தனிப்பட்ட அதிகார மையத்திலிருந்து அதிகாரங்களை விலக்கி, சுதந்திரமான நிர்வாகத்திற்கான சூழலை உருவாக்கி பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டினைக் குறைக்கும் வகையில் பல முக்கிய ஏற்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், 21 ஆவது திருத்தத்தின் சட்ட ஏற்பாடுகளும் அரச துறையில் அரசியல் தலையீடுகளைக் குறைப்பதில் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

**ஜனாதிபதியின் அதிகாரங்களின் மட்டுப்பாடும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டின் கட்டுபாடும்**

2001இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தம், பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீட்டைக் குறைப்பதற்காக, குறிப்பாக பொதுத்துறை நியமனங்களில், ஜனாதிபதியின் விருப்பு அதிகாரங்களை மட்டுப்படுத்த முயன்றது எனலாம். ஏனெனில், 17ஆவது திருத்தத்திற்கு முன்னர், முக்கியமான பொது அலுவலகங்களுக்கு ஒருதலைப்பட்சமான நியமனங்களை வழங்குவதற்கு இலங்கையின் ஜனாதிபதி விரிவான அதிகாரங்களைப் பயன்படுத்தினார். இந்த நியமனங்கள் பெரும்பாலும் அரசியல் உள்நோக்கம் கொண்டதாகக் கருதப்பட்டது. இது இந்த நிறுவனங்களின் சுதந்திரத்தைக் குறைமதிப்பிற்கும்

உட்படுத்தியது (எதிரிசின்ஹா, 2001). இது பொதுத்துறை நிறுவனங்களில் அதிகாரத்துவம், திறமையின்மை மற்றும் ஊழல் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளைத் தடுக்கலாம் (ஜெயசூரியா, 2014). ஆனால், 17ஆவது சீர்திருத்தம் ஜனாதிபதியின் நியமன அதிகாரத்தைக் குறைத்து உயர் அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனங்களில் அரசியலமைப்புப் பேரவையின் (Constitutional Council) ஒப்புதலும் பங்கும் அவசியமாகும் என்ற ஏற்பாட்டின் மூலம் அரசியலமைப்புப் பேரவை ஒரு சுயாதீன அமைப்பாக செயல்பட்டு, முக்கிய பொது நிர்வாக நியமனங்களைப் பரிந்துரை செய்யும் அதிகாரம் பெற்றிருந்தது எனலாம் (இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 17ஆவது யாப்புத் திருத்தம்). இந்த ஏற்பாட்டின் மூலம் ஜனாதிபதி தனிப்பட்ட முடிவுகளை எடுப்பதற்கு இங்கு ஒரு தடை ஏற்படுத்தப்பட்டது என்பது புலனாகின்றது.

மேலும், 19ஆவது அரசியல் அமைப்புக்கு முன்னர், ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் (Executive Powers) வழங்கப்பட்டிருந்தது. இவ்விதமான அதிகாரம் பொதுத்துறை நிர்வாகத்தின்மீது நேரடியாகக் குடியேறி, அரசியல் தலையீட்டுக்கு வழிவகுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பார்க்கப்பட்டது. எனினும், 19ஆவது திருத்தம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்ததுடன், பல சந்தர்ப்பங்களில் பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்ற விதியினையும் முன்வைத்தது. அதிகாரத்தின் இந்த மறுபகிர்வு நிர்வாக மற்றும் சட்டமன்றக் கிளைகளுக்கு இடையே ஒரு சமநிலையை உறுதிசெய்வதற்கான ஒரு வழிமுறையாகவும், பொது நிர்வாகத்தின் மீது ஒருதலைப்பட்ச அரசியல் செல்வாக்கின் சாத்தியத்தைக் குறைப்பதற்கான ஓர் ஏற்பாடாகவும் இது அமையலாம். மேலும், பொதுத்துறை செயல்பாடுகள் நிர்வாகத்தின் அரசியல் நலன்களால் ஆதிக்கம் செலுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான அடித்தளமாகவும் இது அமையக் கூடும்.

21ஆவது திருத்தம் குறிப்பாக அரச சேவை நியமனங்கள் மற்றும் நிர்வாகத் தீர்மானங்கள் மீதான நிறைவேற்றுக் கட்டுப்பாட்டின் பின்னணியில் ஜனாதிபதியின் பரந்த அதிகாரங்களைக் குறைத்துள்ளது. இத்திருத்தத்திற்கு முன்னர், பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் ஒருதலைப்பட்சமாக அதிகாரிகளை நியமிப்பதற்கும் ஜனாதிபதியின் அதிகாரம் அரசியல் அனுசரணை மற்றும் பொதுச் சேவையின் செயல்பாட்டில் தலையீடு செய்ததற்காக அடிக்கடி விமர்சிக்கப்பட்டது. ஆனால், 21ஆவது சீர்த்திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துதல், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல் மற்றும் தகுதி அடிப்படையிலான நியமனங்களை உறுதிசெய்தல் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் இச்சீர்திருத்தமானது மிகவும் தொழில்முறை, நெறிமுறை மற்றும் திறமையான பொது நிர்வாகத்திற்கான களத்தை அமைத்துள்ளது (விஜேசிங்க. ரூ., 2022).

எனவே, 19ஆவது திருத்தமும் அதன் முன்னோடியான 17 ஆவது திருத்தமும் அதீத அதிகார வல்லமை கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையொன்றுக்கு எதிரான சமூக நகர்வின் விளைவானவை ஆகும். இதன் மூலம் அரசாங்க சேவை உட்பட நிறுவனங்கள் பக்கச்சார்பான

முறையில் அரசியல் மயப்படுத்தப்படுவதைத் திருத்தியமைப்பதை அந்தத் திருத்தங்கள் முக்கியமான நோக்கமாகக் கொண்டிருந்தன. 1978 மூல யாப்பில் உள்ளபடி ஜனாதிபதி சில உயர் பதவிகளுக்கான ஆட்களையும் குறிப்பிட்ட ஆணைக்குழு உறுப்பினர்களையும் தன் இஷ்டப்படி நியமிக்கலாம். இருப்பினும், 17ஆம், 19ஆம் திருத்தம் இஷ்டப்படி செய்ய முடியாது என வரையறை விதித்திருந்தது (கிருஷ்ணமோகன். த. 2023). எனினும், 18ஆம், 20ஆம் திருத்தங்கள் இஷ்டப்படி நியமிக்கலாம் என குறிப்பிடப்பட்டிருந்தமை ஜனரஞ்சகமான விடயமன்று. அதாவது, நியமனங்கள் மேற்கொள்ளும் போது ஜனாதிபதி பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்பைப் பெற வேண்டுமாயினும், அதன் முடிவுக்குக் கட்டுப்படத் தேவையில்லை என 20ஆவது யாப்புத் திருத்தம் கூறுகின்றது. 18இலும் இவ்வாறே காணப்படுகின்றது.

**அரசியல் தலையீடற்ற பொதுத்துறை நிர்வாகத்தை உறுதிசெய்வதற்காக அரசியல் அமைப்புப் பேரவையின் உருவாக்கம்**

17ஆவது திருத்தம் அரசியலமைப்புப் பேரவையை (CC) நிறுவியதன் மூலம் முக்கிய பொது அலுவலகங்களுக்கான நியமனங்களில் ஜனாதிபதியின் சரிபார்க்கப்படாத அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது (De Silva, 2001). பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியலற்றமயமாக்கலை உறுதி செய்வதற்காக 17ஆவது சீர்திருத்தம் அரசியலமைப்புப் பேரவையை அறிமுகப்படுத்தியதன் மூலம் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டினைக் குறைப்பது அதன் நோக்கங்களில் ஒன்றாகக் காணப்பட்டது என்பது தெளிவாகின்றது (வெலிகல, 2008). இதன்படி ஜனாதிபதியிடமிருந்து முக்கிய நியமனங்களின் அதிகாரத்தைச் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு மாற்றுவதன் மூலம் பொதுத்துறை நிர்வாகத்தினை அரசியலற்றமயமாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஏற்பாடாக அரசியலமைப்புப் பேரவை அடையாளப்படுத்தப்படுகின்றது.

அதேபோன்று, 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசியலமைப்புப் பேரவையின் உருவாக்கமானது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட ஒரு காத்திரமான முயற்சியாகும். ஏனெனில், அரசியலமைப்புப் பேரவையானது பொதுத்துறையில் உயர்மட்ட நியமனங்களை மேற்பார்வையிடுவதற்கும் அங்கீகரிப்பதற்கும் ஒரு சுயாதீனமான அமைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த முடிவுகளை எடுப்பதில் நிறைவேற்று அதிகாரத்தின் விருப்புரிமையைக் கட்டுப்படுத்துகிறது (DeVotta, 2016). இந்த நியமனங்களில் ஜனாதிபதியின் விருப்புரிமையை மட்டுப்படுத்துவதன் மூலம், பொது நிறுவனங்களின் செயல்பாட்டில் அரசியல் நடிகர்களின் செல்வாக்கை இத்திருத்தம் குறைக்கிறது என்று கூறலாம். எனவே, அரசியல் அமைப்புப் பேரவையினை மீண்டும் அறிமுப்படுத்தி, அதன் பங்கை வலுப்படுத்தல் மூலம் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டினைக் கட்டுப்படுத்துவதில் 19ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் முக்கியம் பெறுகின்றன.

அரசியலமைப்புப் பேரவையானது அதிக பிரதிநிதித்துவம் கொண்டதாகவும், நிர்வாகக் கையாளுதலுக்குக் குறைந்த வாய்ப்புள்ளதாகவும் இருப்பதை 21ஆவது திருத்தம் உறுதிசெய்கிறது. அரசியலமைப்புப் பேரவையானது அதிக சுதந்திரத்துடன் செயற்பட்டு, அரசியல் கட்டுப்பாட்டைக் குறைத்து, அதிக நிறுவன சுயாட்சியை ஊக்குவிக்க வேண்டும் என்பது இத்திருத்தத்தின் நோக்கமாகும் (பிள்ளையான் ரூ விஜேசிங்க, 2022). இது அதிகாரங்களைப் பிரிப்பதை வலுப்படுத்துகிறது மற்றும் நீதித்துறை, காவல்துறை மற்றும் பொதுச் சேவை உள்ளிட்ட அரசியலமைப்பு அமைப்புகளால் எடுக்கப்பட்ட முடிவுகளின் பக்கச்சார்பற்ற தன்மையை அதிகரிக்கிறது.

**நிறுவன சுதந்திரத்தை வலுப்படுத்தும் வகையில் சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழுவின் உருவாக்கம்**

17ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சுதந்திர ஆணைக்குழுவான பொதுச் சேவை ஆணைக்குழு மூலம் அரசின் அதிகாரிகள் நியமனம், பணி உறுதிப்பாடு, பணிநீக்கம், பதவி உயர்வு போன்றவை அரசியல்சாரா நடைமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு நடவடிக்கைகள் செய்யப்பட்டது (பாலகிருஷ்ணன். என். 2001). இதன்மூலம், அரசியல் உறவுகளின் அடிப்படையில் பணி நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகளை வழங்கும் நடைமுறையைத் தவிர்க்க முயற்சி செய்யப்பட்டது (Uyangoda, 2011). இது பொதுச்சேவையை அரசியலமைப்பின் கீழ் சுதந்திரமாக செயல்பட வைக்கும் அடிப்படையாக அமைந்தது.

அதேபோன்று, பொதுச் சேவையில் அரசியல் தலையீடுகளுக்கான வாய்ப்பைக் குறைப்பதன் மூலம் இலங்கையின் ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்துவதில் 19ஆவது திருத்தத்தின் கீழ் பொதுச்சேவை ஆணைக்குழுவின் மீள்வருகை ஒரு முக்கியமான படியாகும். சரத்து 55 பிரிவு (1) இன் பிரகாரம் பொதுச்சேவை உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான அதிகாரம் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது. நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் சுயாதீனமாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதன் மூலம், முந்தைய யாப்பில் இருந்ததனைவிட 19ஆவது திருத்தத்தின் கீழ் பொதுச்சேவை ஆணைக்குழு மிகவும் வெளிப்படையான மற்றும் பொறுப்பு வாய்ந்த பொது நிர்வாக அமைப்புக்குப் பங்களித்தது என்பது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், 21ஆவது சீர்த்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறையில் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் பணிநீக்கங்கள் நிறுவப்பட்ட அளவுகோல்கள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்திருப்பதை உறுதிசெய்வதன் மூலம் இந்தத் திருத்தம் அரசியல் சார்பு ஆதாயத்தைக் குறைக்கிறது. 21ஆவது திருத்தத்திற்கு முன்னர், அரசியல் அழுத்தங்களால், குறிப்பாக ஜனாதிபதியிடமிருந்து, பொதுச் சேவை ஆணைக்குழுவின் அதிகாரம் குறைமதிப்பிற்கு உட்பட்டது என்ற கவலைகள் இருந்தன. அரச ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் வெளிப்படையான, தகுதி அடிப்படையிலான

செயல்முறையின் மூலம் நடத்தப்பட வேண்டும் என்று திருத்தம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இது அரசியல் அனுசரணையைக் குறைத்தது மட்டுமன்றி, பொது நிர்வாக நடைமுறைகளை நல்லாட்சிக்கான உலகளாவிய தரநிலைகளுடன் சீரமைத்தது (பிள்ளையான் ரூ விஜேசிங்க, 2022). இதன் விளைவாக, அரசியல் விசுவாசத்தைக் காட்டிலும் அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் அரச ஊழியர்கள் பொறுப்புக் கூறப்படுவதை உறுதிப்படுத்தும் ஆணை இப்போது பொதுச் சேவை ஆணைக்குழுக்கு உள்ளது.

**17ஆம், 19ஆம் மற்றும் 21ஆம் அரசியல் அமைப்புத் திருத்தங்களின் பலவீனங்கள்**

17ஆவது திருத்தம் பொதுத்துறையில் அரசியல் தலையீட்டை முற்றிலும் அகற்றவில்லை. ஆனால், அதனைக் குறைக்கும் முயற்சியாக இருந்தது. எவ்வாறாயினும், 17ஆவது திருத்தச் சட்டம் எந்தளவிற்கு இலங்கையில் நடைமுறை ரீதியாக தொழிற்பட்டது என்பது கேள்வியாகும். ஏனெனில், இத்திருத்தம் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. இம்முயற்சி நடைமுறையில் தோல்வி அடைந்துள்ளது என்றே கூறலாம். இதற்குச் சில காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. அதாவது, அரசியலமைப்புச் சபையானது அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக அதன் உருவாக்கத்தில் தாமதங்களை அடிக்கடி சந்தித்தது, அதன் செயல்திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது (Wickramaratne, 2002). பொதுத்துறை நியமனங்கள் மீதான கட்டுப்பாட்டைக் கைவிடுவதை அரசியல்வாதிகள் எதிர்த்தனர். இது திருத்தத்தின் விதிகளைத் தவிர்க்க அல்லது பலவீனப்படுத்த வழிவகுத்தது.

மேலும், 17ஆவது திருத்தம், பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டைக் குறைக்கும் வழியில் ஒரு முக்கியமான படியாக இருந்தாலும் 18ஆவது திருத்தம் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் 17ஆவது திருத்தத்தின் பல அம்சங்களைத் தடுமாறச் செய்தன. அதனால், 17ஆவது திருத்தத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை என்றே கூறலாம். இத்திருத்தம் அரசியல் தலையீட்டிற்கு எதிரான ஒரு முயற்சியாக இருந்தாலும், அதன் செயல்பாட்டில் உள்ள பலவீனங்கள் அதன் நோக்கங்களை முழுமையாக அடைய முடியாமல் செய்தன. அவற்றை நிவர்த்தி செய்ய வருங்கால அரசியல் சீர்திருத்தங்களில் கடினமான நடைமுறைகள் மற்றும் அரசியலிலிருந்து நிர்வாகத்தைப் பிரிக்கும் திறமையான அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அதன் தொடர்ச்சியான அமலாக்கமே அதன் வெற்றியைத் தீர்மானிக்கிறது. 17ஆவது திருத்தச் சட்டத்தின் நடைமுறை வெற்றி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுவதில் தங்கியுள்ளது. ஆனால், அதற்கான கலாசாரம் இதுவரை இலங்கையில் கட்டிவளர்க்கப்படவில்லை.

19ஆவது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதன் மூலமும், நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதன் மூலமும், அரசியலமைப்புச் சபை போன்ற பொறிமுறைகள் மூலம் பொறுப்புக்கூறலை வளர்ப்பதன் மூலமும், இது வெளிப்படைத்தன்மை, தொழில்முறை மற்றும் நிர்வாகத்தில் நேர்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. எனினும், சில

சவால்களையும் குறைபாடுகளையும் இத்திருத்தம் எதிர்நோக்கின. இந்தத் திருத்தம் பல பகுதிகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், அதன் விதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலும், அரசியல் தலையீடுகள் பொதுத்துறையில் இருந்து முற்றாக அகற்றப்படுவதை உறுதிசெய்வதிலும் சவால்கள் இருந்தன. நடைமுறைச் சவால்கள், அரசியல் எதிர்ப்புகள் மற்றும் அடுத்தடுத்த அரசியலமைப்பு மாற்றங்கள் ஆகியவற்றால் திருத்தத்தின் தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டது. அதாவது, அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் நேரடி அரசியல் தலையீட்டைக் குறைத்தாலும், மறைமுக செல்வாக்கு குறித்த கவலைகள் நீடித்தன. மேலும், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் (2020) 19ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பல சீர்திருத்தங்களைக் தலைகீழாக மாற்றியது. ஒருதலைப்பட்ச நியமனங்களைச் செய்வதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்தியது. இந்தப் பின்னடைவு நிறுவன சுதந்திரத்தை நோக்கிய முன்னேற்றத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. 20ஆவது திருத்தம் போன்ற அடுத்தடுத்த திருத்தங்கள் இந்த விதிகளில் சிலவற்றை நீர்த்துப்போகச் செய்தாலும், 19ஆவது திருத்தம் இலங்கையில் ஜனநாயக ஆட்சிக்கான தேடலில் ஒரு அடித்தளமாக உள்ளது.

நிர்வாகத்தின் சரிபார்க்கப்படாத அதிகாரங்களைக் குறைப்பதன் மூலமும், சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்குவதன் மூலமும், இந்தச் சீர்திருத்தங்கள் பொது நிர்வாகத்தில் அதிக பொறுப்புணர்வை ஏற்படுத்த முயன்றன. இந்தத் திருத்தங்கள் தகுதி அடிப்படையிலான மற்றும் பக்கச்சார்பற்ற பொதுத்துறைக்கான அடித்தளத்தை அமைத்தன எனலாம். 17ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்கள் இலங்கையின் பொதுத்துறையில் அரசியல் தலையீட்டைக் குறைப்பதில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன. 17ஆம் திருத்தம் ஒரு அடித்தளத்தை அமைத்த நிலையில், 19ஆம் திருத்தம் அதனை மேலும் வலுப்படுத்தியது. எனினும், அரசியல் ஒத்துழைப்பு மற்றும் நடைமுறை ரீதியான சவால்களை எதிர்கொள்வது தொடர்ந்ததால், இந்தத் திருத்தங்கள் முழுமையான வெற்றியைப் பெற முடியவில்லை. இருப்பினும், இவை நாட்டின் நிர்வாக சுதந்திரத்தை நோக்கி முன்னேற்றமான நகர்வுகளை உருவாக்கியது.

## 18ஆம் மற்றும் 20ஆம் அரசியல் அமைப்புத் திருத்தங்களும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீடுகளும்

18ஆவது சீர்திருத்தம் இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. 17ஆவது திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனப் பாதுகாப்புகளை பலவீனப்படுத்தியதன் மூலம், நிறைவேற்று அதிகாரத்தை ஒருங்கிணைக்க உதவியது மற்றும் செயல்படும் ஜனநாயகத்திற்கு இன்றியமையாத முக்கிய பொது அமைப்புகளின் சுதந்திரத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது (Uyangoda, 2011). பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டினை அதிகரிக்கும் வகையிலான ஏற்பாடுகளையே தன்னகத்தேக் கொண்டு காணப்பட்டது. மேலும், 20ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் 19ஆவது சீர்திருத்தத்தின் சில முக்கியமான வரம்புகளை நீக்கியது. குறிப்பாகக் கூறப் போனால், ஜனாதிபதியின் அதிகாரங்கள்

மீண்டும் அதிகரிக்கப்பட்டதுடன், இந்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீட்டை அதிகரிக்கச் செய்ததுடன், ஆட்சியின் சமநிலையைப் பாதித்தது என்ற விமர்சனங்களும் அதிகமாக முன்வைக்கப்பட்டன.

**ஜனாதிபதியின் அதிகாரங்களின் அதிகரிப்பும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீடும்**

பொது நிர்வாகத்தில் நியமனங்களை மையப்படுத்துதல், சுயாதீன ஆணைக்குழுக்கள் மீதான கட்டுப்பாடு ஆகிய விடயங்களில் ஜனாதிபதிக்கு அளவு கடந்த அதிகாரங்களை வழங்கி, அதன் மூலம் பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் ரீதியாக தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்த ஏற்பாடுகளாக 18ஆம் மற்றும் 19ஆம் சீர்திருத்தங்களின் கீழ் ஜனாதிபதியின் தன்னிச்சையான அதிகாரம் காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. ஏனெனில், ஆணைக்குழு உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரை அல்லது அங்கீகாரம் இன்றி ஜனாதிபதி நியமிக்கலாகாது” என்ற 17ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்பட்ட ஏற்பாட்டை நீக்கி, இவர்கள் அனைவரையும் ஜனாதிபதி நியமிக்க முடியும் என்றே அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தத்தின் மூலம் இது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய தலையீடுகள் நிர்வாகத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும், பொது நிறுவனங்களின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதாகவும், ஊழல் மற்றும் திறமையின்மையை வளர்ப்பதாகவும் விமர்சிக்கப்பட்டது (Uyangoda, 2011).

மேலும், 20ஆவது சீர்த்திருத்தத்தின் கீழ் பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் அதிகாரியான ஜனாதிபதியின் அதிகப்படியான அதிகாரத்தின் செல்வாக்கு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், பதிலளிக்கக்கூடிய தன்மை ஆகியவற்றை வலியுறுத்தும் நல்லாட்சியின் கொள்கைகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு ஏற்பாடாகவே கருதப்படுகின்றது. இதனால் 20ஆவது சீர்திருத்தத்தின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களின் அதிகரிப்பானது பொதுத்துறை நிர்வாகத்தின் மேல் அரசியல் தலையீட்டை மேலும் வலுப்படுத்தியது எனலாம். மேலும், மையப்படுத்தப்பட்ட அதிகாரமானது, நீண்ட காலத் தேசிய நலன்களைவிட அரசியல் நிகழ்ச்சி நிரல்களுடன் ஒத்துப்போகும் கொள்கை மாற்றங்களுக்கு வழிவகுப்பதோடு, நிறுவன ஆலோசனையை மீறுவதற்கு ஜனாதிபதியை அனுமதிக்கிற ஒன்றாகவும் அமைந்துவிடக் கூடும் (ஜெயசேகர, 2021).

**பாராளுமன்றப் பேரவையும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீடும்**

18ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதியின் கைகளில் ஒருங்கிணைத்து, அதன் மூலம் ஆட்சியில் பாராளுமன்றத்தின் பங்கை பலவீனப்படுத்தியது (மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், 2010). இதன் மூலம் அரசியலமைப்புப் பாதுகாப்புகளை நீக்கி, ஆட்சிக் கட்டமைப்பை மாற்றியமைப்பதன் மூலம், 18ஆவது திருத்தம், ஒரு சுதந்திர அமைப்பாக செயல்படும் பாராளுமன்றத்தின் திறனை ஓரங்கட்டி, நிறைவேற்று அதிகாரத்தில்

அதிகாரத்தைக் குவிப்பதற்குப் பங்களித்தது எனலாம். இது பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அதிக அரசியல் கட்டுப்பாட்டிற்கு வழிவகுத்து. 18ஆவது சீர்திருத்தத்தின் கீழ் அரசியலமைப்புப் பேரவை அகற்றப்பட்டதன் அர்த்தம், ஜனாதிபதியின் முடிவுகள் மீதான பாராளுமன்றத்தின் கண்காணிப்பு குறைக்கப்பட்டு, ஜனாதிபதியின் அதிகாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பது இதன் நோக்கமாகக் காணப்பட்டது என்றே கூற முடியும். ஏனெனில், 18ஆவது திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பாராளுமன்றப் பேரவையின் பரிந்துரைகள் கட்டுப்பாடற்றதாக இருந்ததால், நிர்வாக முடிவுகளில் ஜனாதிபதிக்கு அதிக அனுமதி வழங்குவதாக இது காணப்படுகின்றது எனலாம்.

அதேபோன்று 20ஆவது திருத்தத்தின் கீழ் பாராளுமன்றப் பேரவைக்குச் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் உரிமையும் நீக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஜனாதிபதியினால் பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ள ஆட்களும் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படுகின்ற ஆட்களும் தொடர்பான அவதானங்களைக் கோருகின்ற பொழுது அதற்கான அவதானங்களைச் சமர்ப்பிப்பது மாத்திரமே அதன் அதிகாரம் ஆகும். குறித்த அவதானங்கள் ஒரு வார காலத்தினுள் சமர்ப்பிக்கப்படவில்லையானால் ஜனாதிபதி நியமனத்தினை மேற்கொள்ளலாம். இதனை அடிப்படையாக வைத்து நோக்கும்போது 20ஆவது திருத்தத்தின் கீழ் இலங்கையின் பொதுச் சேவையின் சுதந்திரத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் பாராளுமன்றப் பேரவையானது அரசியல் சூழ்ச்சிக்கு ஆட்படக்கூடிய ஒன்றாக காணப்பட்டது எனலாம்.

**பொதுச்சேவை ஆணைக்குழுவும் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீடும்**

சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழுவானது, அரசியல் தலைவர்களின் தேவையற்ற அழுத்தங்கள் இல்லாமல், பாரபட்சமற்ற, தொழில்முறை மற்றும் பொது நலனுக்காக சேவை செய்வதை நோக்கமாகக் கொண்ட நிர்வாகத்தை வளர்க்கும் வகையில், அரச ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய முடியும் என்பதை உறுதிப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ள ஓர் ஏற்பாடாகவே நோக்கப்படுகின்றது. ஆயினும், 18ஆவது சீர்திருத்தத்தின் கீழ் பொதுச் சேவை ஆணைக்குழுவானது சுயாதீனமாகச் செயல்படும் ஆணைககுழுவாக அல்லாமல் அரசியல் ரீதியாக மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் ஏற்பாடாகவே கருதப்படுகிறது (Jayasuriya & De Silva, 2013). ஏனெனில், பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதிக்கு விரிவான அதிகாரங்களை இவ்யாப்புத் திருத்தமானது வழங்கியது. இந்த மாற்றம், பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் மற்றும் நீக்கம் ஆகியவற்றில் நேரடியாக செல்வாக்குச் செலுத்துவதற்கு ஜனாதிபதியை அனுமதித்ததுடன் அவர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் முந்தைய யாப்பு ரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தவிர்த்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோன்று, 20ஆவது திருத்தம் அரசியல் அதிகாரத்திற்கும் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டிற்கும் இடையே பிரிவினையை உறுதிசெய்ய வடிவமைக்கப்பட்ட

பல சுயாதீன ஆணைக்குழுக்களை ஒழித்தது அல்லது நீர்த்துப்போகச் செய்தது எனலாம். ஏனெனில், 19ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சுதந்திர ஆணைக்குழுக்கள் இத்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது. இதன் விளைவு ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர் நியமனங்களை ஜனாதிபதி நேரடியாக முடிவு செய்யக்கூடிய வகையில் மாற்றம் செய்யப்பட்டதால், இந்த ஆணைக்குழுக்களின் சுதந்திரம் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உருவாகும் (DeVotta, 2016). இதனால் சுதந்திரமான ஆணைக்குழுக்கள் அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில் தளர்ந்துவிடப்படுவதற்கான சந்தர்ப்பத்தினை அமைத்துக் கொடுத்தது எனலாம்.

**முடிவுரை**

இலங்கையின் அரசியலில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. 17ஆம், 18ஆம், 19ஆம், 20ஆம் மற்றும் 21ஆம் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டைக் குறைப்பதிலும் அதிகரிப்பதிலும் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. 1978 இரண்டாம் குடியரசு யாப்பு பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் மத்தியமயமாக்கல் செயற்பாட்டை நிறைவேற்று ஜனாதிபதி முறை மூலம் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தது எனலாம். ஏனெனில், முக்கிய நியமனங்களில் ஜனாதிபதி அதிகாரமுடையவராகக் காணப்பட்டார். இந்த நிலைப்பாட்டினைக் கருத்தில் கொண்டு பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீட்டை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் 17ஆவது திருத்தம் பொதுத்துறை நிர்வாகத்தினைச் சுதந்திரமான அமைப்பாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தபோதும், அது சீராக அமுல்படுத்தப்படவில்லை. இம்முயற்சி நடைமுறையில் தோல்வியடைந்துள்ளது என்றே கூறலாம்.

ஆயினும், முக்கிய நியமனங்கள் தொடர்பான அதிகாரம் தொடர்ந்தும் ஜனாதிபதி வசம் இருப்பதன் மூலமும் பாராளுமன்றப் பேரவையை உருவாக்கியதன் மூலமும் 18ஆவது சீர்திருத்தமானது பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது எனலாம். 20ஆவது சீர்திருத்தத்திலும் இத்தகைய ஏற்பாடுகளே பொதுத்துறை நிர்வாகம் தொடர்பாகப் பின்பற்றப்பட்டமையானது இத்திருத்தத்தின் மூலமும் பொதுத்துறை நிர்வாகமானது அரசியல் தலையிட்டுக்கு உள்ளாகும் வகையில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம். ஆயினும், 19ஆவது சீர்திருத்தமானது பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் தலையீட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 17 சீர்திருத்தத்தினை மீள்கொண்டு வரும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை முழுமையாக வெற்றி அளிக்கவில்லை. மேலும் 21ஆவது திருத்தமானது 19 திருத்த ஏற்பாடுகளை முழுமையாக மீண்டும் கொண்டு வரும் வகையில் உறுதியளிக்கப்பட்டு இருந்தாலும், 19ஆவது திருத்தத்தின் முக்கியமான ஏற்பாடுகள் 20ஆவது திருத்த வரைவில்

கைவிடப்பட்டிருந்தமையானது பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீடுகள் மீண்டும் செலுத்தப்படுவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே இது நோக்கப்படுகின்றது.

எனவே, 17ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்கள் நல்லாட்சி மற்றும் பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியலை நீக்குவதற்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த ஏற்பாடுகளைக் கொண்டிருந்தாலும், இலங்கையில் இத்திருத்தங்கள் நடைமுறை ரீதியாக எந்த அளவுக்குத் தொழிற்பட்டது என்பது கேள்விக்குறியாக இருக்கின்ற வேளையில், பொதுத்துறை நிர்வாகத்தில் நேரடியாகவே அரசியல் தலையீட்டினை அதிகரிக்கும் வகையில் ஏற்பாடுகளைக் கொண்டிருந்த 18ஆம் மற்றும் 20ஆம் சீர்த்திருத்தங்கள் எந்த அளவுக்கு பொதுத்துறை நிர்வாகத்தின்மீது தாக்கம் செலுத்தி அதன் வெளிப்படைத்தன்மை, சுயாதீனத் தன்மை, நிர்வாக செயல்திறன் மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் ஆகிய விடயங்களின்மீது எதிர்மறையான பாதிப்பினை ஏற்படுத்தும் என்பது இதன் மூலம் புலனாகின்றது. ஆகவே, இலங்கையில் பொது மக்களின் தேவைகளினைப் பூர்த்திசெய்வதும், அரச இயந்திரத்தின் செயற்பாட்டினை இலகுபடுத்துவதுமான ஒரு பாரிய அமைப்பாக வளர்ச்சியடைந்துள்ள பொது நிர்வாகத்தில் அரசியல் தலையீடு என்பது தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற ஒன்றாகவே கருத முடியும்.

17ஆம் திருத்தத்தை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இலகுவில் முழுமையாக ஒதுக்கிச் செயற்படக் கூடியதாகவிருந்தமை (இருக்கின்றமை) இலங்கையை அரசியலமைப்பு ஜனநாயகமாக கருதலாமா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கை வெறுமனே ஒரு தேர்தல் ஜனநாயகம் என்ற முடிவுக்கு இட்டுச் செல்கின்றன. இலங்கையின் பொதுத்துறையின் மீதான பொது நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வூட்டக்கூடிய நிர்வாகம் இன்றியமையாததாகும். சீர்திருத்தங்கள் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் பொது ஈடுபாட்டிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். நிலையான சீர்திருத்தத்தை அடைவதற்கு அரசியல் பொறுப்புக்கூறலை நிர்வாக சுயாட்சியுடன் இணைக்கும் சமநிலையான அணுகுமுறை தேவைப்படுகிறது. உலகளாவிய அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலமும், உள்ளூர் சவால்களை எதிர்கொள்வதன் மூலமும், இலங்கை தனது குடிமக்களின் தேவைகளுக்குத் திறமையான மற்றும் பதிலளிக்கக்கூடிய ஒரு பொதுத்துறையைக் கட்டியெழுப்ப முடியும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

கிருஷ்ணமோகன், த. (2023). பொது நிர்வாகத்தில் மனிதவள முகாமைத்துவம் முன்னணி நாடுகளின் சிவில் சேவை மாதிரிகள். குமரன் புத்தக இல்லம்.

பாலகிருஷ்ணன், என். (2001). இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்கள் 1977க்குப் பின்னான காலம். இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் கொழும்பு.

De Silva, K. M. (2020). Political interference and its impact on public policy in Sri Lanka. *Journal of South Asian Studies*, 45(2), 123-140.

Nanayakara, V.K. (2015). Sri Lanka administrative service (1963-2013): a fifty year. *Journal of SriLanka Institute of Development Administration, Vol. 5*.

Ramasamy, R. (2020). "Governance and administration in Sri Lanka: trends, tensions, and prospects." *Public Administration and Policy: An Asia-Pacific Journal*, *Vol. 23 No. 2*.

Rathnayake, N. (2022). Political Interference in the Public Sector: The Effects of the 20th Amendment on Sri Lankan Governance. *Journal of South Asian Politics*, 7(4), 112- 127.

Jayasinghe, K., & Wickramasinghe, D. (2020). Corruption and governance in Sri Lanka: The role of political interference. *Public Management Review, 19(2), 301-317.*

Uyangoda, J. (2020). A constitutional solution to the impeding constitutional crises. Colombo telegraph. Retrieved From: https://www.colombotelegraph.com/index.php/a- constitutional-solution-to-the-impending-constitutional-crisis/

# பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாக்காளர் நடத்தை : 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Thevarajah Kinsiya Miyomi**

Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University of , Sri Lanka.

kinsiya45679@gmail.com

**N.Pushparajah**

Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University of , Sri Lanka.

pushparajahn@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

பிரதிநிதித்துவ ஜனநாயக சூழலில் வாக்காளர் நடத்தை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அதன்படி வாக்காளர் நடத்தை தொடர்பாக விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமானதாக அமைகின்றது. இலங்கையில் 2019 – 2024 காலப்பகுதியில் இடம்பெற்ற கொரோனா பெருந்தொற்று, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன அக்காலத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் வாக்காளர் நடத்தையில் பல மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தன. வாக்காளர்களின் வாக்களிப்புச் செயற்பாடும் வீழ்ச்சி நிலையில் காணப்பட்டது. இந்நிலையில், 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பில் முழு ஆர்வத்துடன் செயற்படுவதற்குப் பல காரணிகள் தடையாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. அந்தவகையில், 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களில் இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு தேர்தல் தொகுதியான பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையையும் வாக்களிக்கும் செயன்முறை குறைவடைந்துள்ளமையையும் இவ்வாய்வின் மூலம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாய்வின் மூலம் மாற்றங்களின் பிரதிபலிப்புகள் 2019 மற்றும் 2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஊடாக வெளிக்காட்டக் கூடியதாக அமைகின்றது. அந்தவகையில், இவ்வாய்வானது ஆய்வுப் பிதேசத்தில் உள்ள தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தை குறைந்து கொண்டு செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வுக்காகச் சேகரிக்கப்பட்ட தரவுகள் பொருத்தமான பண்புசார் பகுப்பாய்வு மற்றும் அளவுசார் பகுப்பாய்வு முறையில் அமைந்த கலப்புமுறை பகுப்பாய்வு (Mixed Method) முறை மூலம் சீரற்ற நோக்க மாதிரியின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுப் பொருத்தமான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு எதிர்கால வாக்குரிமையின் பிரயோகத்தினைப் பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்கள் மத்தியில் முக்கியத்துவம் அடையச்செய்யும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

***திறவுச் சொற்கள்*** *: பட்டிருப்புத் தேர்தல் தொகுதி, தமிழ் மக்கள், வாக்களிப்பு நடத்தை, ஜனாதிபதித் தேர்தல்.*

**அறிமுகம்**

ஒரு ஜனநாயக சமுதாயத்தில் அரசியல் நடத்தை குடிமக்கள் தங்கள் அரசியல் அரங்கில் ஈடுபடும் மற்றும் பங்கேற்கும் பல்வேறு வழிகளை உள்ளடக்கியது. இது பொதுமக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துகிறது. வாக்களிப்பது, அரசியல் பதவிகளுக்குப் போட்டியிடுதல், மனுக்கள், போராட்டங்கள், அரசியல் கட்சிகளை உருவாக்குதல், அரசியல் பிரசாரங்களில் ஈடுபடுதல், தேர்தலின்போது விருப்பமுள்ளவர்கள் அல்லது அரசியல் கட்சிகள் எந்தெந்தத் தேர்வுகளுக்கு வாக்களிக்க வேண்டும் மற்றும் பதவிகளைத் தேர்ந்தெடுப்பது போன்ற செயல்களில் இது தெளிவாகத் தெரிகிறது (Katsounides, 2013). இதனடிப்படையில் அரசியல் நடத்தை தனிநபர்கள் அல்லது தனிநபர் குழுவின் நடத்தையை முதன்மை அலகாக அடையாளப்படுத்துகிறது. இது சட்டமன்றம், நிறைவேற்று மற்றும் நீதித்துறை போன்ற நிறுவனங்களின் பண்புகளைவிட, தனிநபர்களின் நடத்தை, செயல்கள் மற்றும் செயல்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

அரசியல் நடத்தையின் மிக அடிப்படையான வடிவங்களில் ஒன்று வாக்களிப்பது. வழக்கமான தேர்தல் மூலம் தங்கள் பிரதிநிதிகளையும் தலைவர்களையும் தேர்ந்தெடுக்க குடிமக்களுக்கு உரிமை உண்டு. இந்தச் செயல்முறை யார் அவர்களை ஆளுகின்றார்கள், என்ன கொள்கைகள் செயல்படுத்தப்படுகின்றன என்பதில் மக்கள் கருத்துக் கூற அனுமதிக்கிறது. குறிப்பாக ஜனநாயக நாடுகளில், வாக்காளர்களின் அரசியல் நடத்தை ஒரு அரசியல் செயல்முறைக்கு அடிப்படையாக உள்ளது (Dalton & Russell 2007). தற்கால பிரதிநிதித்துவ ஜனநாயக சூழலில் வாக்காளர் நடத்தை என்ற விடயம் முக்கியமானதொரு விடயமாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே வாக்காளர் நடத்தை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதிநிதித்துவ முறையில் வாக்காளர் நடத்தையானது பாரிய செல்வாக்குச் செலுத்துகின்ற விடயமாகக் காணப்படுகின்றது.

இவ் ஆய்வானது வாக்காளர் நடத்தை தொடர்பாக விளங்கிக்கொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் தமிழ் மக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் 2019 – 2024 வரையிலான காலப்பகுதியில் பல்வேறு அசம்பாவிதமான செயற்பாடுகள் தமிழ் மக்களின் அரசியல் நடத்தையில் இடம்பெற்றமையை அவதானிக்கலாம். இரு வேறுபட்ட சூழலில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில், தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பல்வேறு மாற்றங்களை வெளிப்படுத்தியுள்ளன. இதனை 2019 – 2024 காலப்பகுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்கள் வெளிக்காட்டி நிற்கின்றன.

ஒரு நாட்டில் ஜனநாயக சூழலானது வாக்காளர் நடத்தையினைத் தீர்மானிக்கின்ற ஒரு அம்சமாக விளங்குகின்றது. வாக்காளர் நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அரசியல் ரீதியாகவும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது. இதன் மூலமாக வாக்காளர் நடத்தையானது பிரதிநிதிகள் தெரிவையும் தீர்மானிக்கின்ற ஒரு அம்சமாக விளங்குகின்றது. இதனை வாக்காளர் நடத்தை என்பது மக்கள் தேர்தல்களில் வாக்களிக்கும் முறைகளையும், எதற்காகவும் எப்படி முடிவெடுக்கிறார்கள் என்பதையும் குறிக்கின்றது. இது மக்கள்

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது, சட்டங்களுக்கு ஆதரவளிப்பது அல்லது கருத்துக் கணிப்புகளில் பங்கேற்பது போன்ற செயல்களை உள்ளடக்குகிறது (Lazarsfeld, Berelson, & Gaudet, 1948) என்பதிலிருந்து அறிய முடிகிறது. இவ்வாறு ஜனநாயக நாடுகளில் காணப்படுகின்ற ஜனநாயகத்தின் உறுதித்தன்மையானது அந்நாடுகளில் வாக்காளர் நடத்தையில் அதிகளவாக தாக்கத்தைச் செலுத்துகின்றது. இதனைப் போன்று தேர்தல் காலங்களில் வாக்காளர்மீது செலுத்தப்படும் விரும்பத்தகாத செல்வாக்குகள், அழுத்தங்கள், கட்டுப்பாடுகள் என்பன வாக்காளர் நடத்தையில் மாற்றத்தினை ஏற்படுத்துவனவாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் 2019 – 2024 காலப்பகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளை நோக்குகின்றபோது இத்தேர்தல் முடிவுகள் பல்வேறு வெளிப்பாடுகளை வெளிக்காட்டி நிற்கின்றன. இவ் ஆய்வானது பட்டிருப்புத் தேர்தல் தொகுதியிலுள்ள வாக்காளர் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளைக் கண்டறிதல் என்ற பிரதான நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தையில் இக்காலப் பகுதியில் தேர்தல் தொடர்பாக ஏற்பட்டுள்ள மாற்றங்களை அடையாளங்காணும் வகையில் இவ் ஆய்வானது 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்டு நகர்ந்து செல்கின்றது.

**இலக்கிய மீளாய்வு**

வாக்காளர்களின் வாக்களிப்பு நடத்தையில் அரசியல் கட்சிகளின் பங்கு, வாக்களிப்பு நடத்தை தனிநபர்களின் தொடர்புகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும் விதம் போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது பிரதானமாக வாக்காளர் நடத்தையில் அரசியல் கட்சிகள் எவ்வாறாக செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது தொடர்பாக அதிகளவில் கவனம் செலுத்துகிறது. இங்கு ஏனைய காரணிகள் முன்வைக்கப்படவில்லை என்பதுடன் தேர்தல்களுடன் தொடர்புபடுத்தி வாக்காளர் நடத்தை ஆராயப்படவில்லை (Arnab Chatterjee, Marija Mitrovic, Santo Fortunate, 2013).

வாக்காளர் நடத்தையில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறம் என்பன காட்டும் வேறுபட்ட வெளிப்பாடு மற்றும் 1982-2005 காலப் பகுதிகளில் வாக்காளர் நடத்தையில் சிங்கள தேசியவாதத்தின் தாக்கம் என்பன ஆய்வு செய்யப்பட்டிருந்தாலும் வாக்காளர் நடத்தையில் சிங்கள தேசியவாதத்தின் தாக்கத்தினை முதன்மைப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை வாக்காளர் நடத்தையில் தாக்கம் செலுத்தும் ஏனைய காரணிகள் மற்றும் சமீப காலத்தில் இடம்பெற்ற தேர்தல்கள் மற்றும் வாக்காளரின் வெளிப்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை (Yajni Warnapala, 2008).

உள்நாட்டுப் போர் முழுவதும் தேர்தலுக்கும் மோதலுக்கும் இடையிலான உள்ளார்ந்த தொடர்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டு போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற தேர்தலும் அத்தேர்தல்கள் மூலமாக வாக்காளர் நடத்தையின் வெளிப்பாடு தொடர்பாகவும்

குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, யுத்தத்திற்குப் பின்னரான காலத்தில் வாக்காளர் நடத்தையின் நிலை தொடர்பாக குறிப்பிடப்படவில்லை (Yu Wang, Chenbo Yang, 2018).

இலங்கையில் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சமூக ஊடகங்களின் செயற்பாடுகள் இளம் வாக்காளர்களின் வாக்களிக்கும் நடத்தையில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இளம் தலைமுறையினரின் வாக்களிப்பு நடத்தை, வாக்காளர் நடத்தையில் சமூக ஊடகங்களை மாத்திரம் முதன்மைப்படுத்தி நோக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய காரணிகள் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை. அதேவேளை, இளம் தலைமுறையினர் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளனர். ஏனையோர் கவனத்தில் கொள்ளப்படவில்லை (ஹஸன் ரத்நாயக்க, 2019).

வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளான இனம், மதம், குடும்பம், சாதி என்பனவற்றின் நவீன செல்லுபடி ஆகும் தன்மையினையும், இனக்காரணிகளில் சிங்களம், மதக் காரணிகளில் பௌத்தம், குடும்பக் காரணிகளில் சேனநாயக்கா-பண்டாரநாயக்க மற்றும் மஹிந்த ராஜபக்ச குடும்பம் தற்காலம் வரை வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் விதம் என்பன ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன், வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை, இங்கு சிங்களப் பெரும்பான்மையோரின் வாக்காளர் நடத்தையே குறிப்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மாறாக, வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய காரணிகள் தொடர்பாகவும், ஏனைய இனத்தவரை உள்ளடக்கிய வகையிலும் ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை (Thameera Manju, Arunkumar, Ferdous Azam, S.M, 2023).

உளவியல் காரணிகள் பாகிஸ்தானின் கிராமப்புற பஞ்சாபில் வாக்களிக்கும் நடத்தையைப் பாதிக்கும் விதம் ஆராயப்பட்டுள்ளதுடன் இக்காரணிகள் வாக்களிப்பு நடத்தையைப் பாதிக்கும் விதம் தொடர்பாக மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சமூக, உளவியல் காரணிகளைக் கடந்து பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும், அது தொடர்பாக குறிப்பிடப்படவில்லை (Ahmad, A., Bhatti.M.I, Yousaf, F.N, 2020).

பொய்யான செய்திகள் வாக்காளர் நடத்தையைப் பாதிக்கின்ற விதம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில், உண்மைக்குப் புறம்பான செய்திகள் வாக்காளர் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி வாக்களிப்பிலும் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. எனினும், வாக்காளர் நடத்தையில் பாதிப்புச் செலுத்தும் ஏனைய காரணிகள் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை (Cantarella, M., Fraccaroli, N., Volpe, R, 2023).

**ஆய்வுப் பிரச்சினை**

பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் 2019 – 2024 காலப் பகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்களிப்பில் 25% க்கும் அதிகமானோர் வாக்களிக்காமையினை அவதானிக்கலாம். அதாவது, 2019 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குப் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர் எண்ணிக்கை 91105 ஆகவும்,

வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கை 65183 ஆகவும் காணப்படுகின்றது. இது 71.62% ஆக அடையாளப்படுத்துகிறது (Wikipedia, 2019). அதேபோல 2024 ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்குப் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் 101023 ஆகவும், வாக்களித்த வாக்காளர்கள் 67375 ஆகவும், இது வெறுமனே 66.67% ஆகவும் காணப்படுகின்றது (Wikipedia, 2024). இதன் பிரகாரம் ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசியற் செயற்பாடுகளில் ஆர்வமில்லாமல் இருத்தல், அரசியல் அறிவின்மை, அரசியல் விழிப்புணர்வின்மை, அரசியல் பங்கு பற்றுதலில் காட்டும் அசமந்தப் போக்கு போன்ற நிலை காணப்படுகின்றதை அவதானிக்க முடிகிறது. இப்பகுதியில் உள்ள மக்களிற் சிலர் இக்காரணிகளின் அழுத்தம், நம்பகமற்ற தன்மை, போலி வாக்குறுதிகள் என்பவற்றின் அனுபவத்தின் அடிப்படையில் வாக்களிப்பில் ஈடுபடாமலுமுள்ளனர். எனவே, பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் அரசியல் நடத்தையில் ஜனாதிபதித் தேர்தல்களில் வாக்களிப்பு வீதம் குறைவாக காணப்படுவதே ஆய்வின் பிரச்சினையாக உள்ளது. மேலும், பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மக்களின் அரசியல் நடத்தை குறைவாக காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளும் ஆய்வின் பிரச்சினையாக நோக்கப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**

ஆய்வின் பிரதான நோக்கம் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தை குறைவாக காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதாகும்.

**துணை நோக்கம்**

- வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், வாக்காளர் எண்ணிக்கை மற்றும் வாக்காளர் தெரிவுகளை எந்த அளவிற்குப் பாதித்துள்ளன என்பதனை ஆராய்தல்.
- 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் இம்மக்களின் வாக்குரிமையின் பிரயோகத்தை அறிந்துகொள்ளல்.
- 2019 – 2024 காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் நடத்தையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிதல்.

**ஆய்வுக் கருதுகோள்**

‘‘பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தையானது அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளின் தலையீடுகளுக்கும் ஆதிக்கத்திற்கும் உள்ளாகுவதனால்’’ தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தை வீதம் குறைவாகக் காணப்படுகின்றது என்பது இவ்வாய்வின் கருதுகோளாக உள்ளது.

## ஆய்வு முறையியல்

ஆய்வுக்காகச் சேகரிக்கப்பட்ட தரவுகள் பொருத்தமான பண்புசார் பகுப்பாய்வு மற்றும் அளவுசார் பகுப்பாய்வு முறையில் அமைந்த கலப்புமுறைப் பகுப்பாய்வு (Mixed Method ) முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுப் பொருத்தமான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. முதலாம்நிலைத் தரவுகளில் பண்புசார் தகவல்களைச் சேகரிப்பதற்காக நேர்காணல், வினாக்கொத்துக்கள் மூலம் நேரடியாக மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. 90 வினாக்கொத்துக்கள் சீரற்ற நோக்க மாதிரியின் அடிப்படையில் அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள் சார்பிலும், ஏனையவை மக்கள் சார்பிலும் பகிர்ந்தளிக்கப்பட்டு அளவு ரீதியான தகவல்கள் பெறப்பட்டன. பட்டிருப்புத் தேர்தல் தொகுதியிலுள்ள மூன்று பிரதேச செயலகங்களிலிருந்தும் 30 பேர் என்ற அடிப்படையில் 90 தமிழ் வாக்காளர்கள் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்துகளினூடாக தகவல்கள் பெறப்பட்டுள்ளன. எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் ஏனைய தகவல் பெறுநர்கள் தெரிவுச்செய்யப்பட்டு நேர்காணல் மூலமும் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளக் குறிப்புக்கள், வெளியிட்டப்பட்ட அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள் மூலம் பெறப்பட்ட தரவுகள், தகவல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமையவுள்ளது.

## தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

### 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களும் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தையினைத் தீரமானித்த காரணிகளும்

அரசியல் அரங்கில் தேர்தலானது ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. சர்வஜன வாக்குரிமையைப் பெற்ற முதலாவது தெற்காசிய நாடு இலங்கையே ஆகும். அந்தவகையில், ஜனநாயக நாடொன்றில் மக்களின் அரசியல் நடத்தை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இன்று இலங்கையில் நடைமுறையில் இருக்கும் விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறை காரணமாக சிறுபான்மையினரின் வாக்குகளின் முக்கியத்துவம் அனைவராலும் உணரப்பட்டு வருகின்றது. பட்டிருப்புத் தேர்தல் தொகுதியானது இலங்கையின் சிறுபான்மை இனமான தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள தேர்தல் தொகுதி ஆகும். இங்குள்ள மக்களின் வாக்குகள் அரசாங்கத்தினைத் தீர்மானிப்பதில் பங்களிப்புச் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

பட்டிருப்புத் தேர்தல் தொகுதி வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல், சமூக, பொருளாதார காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. தமது சமூக அபிவிருத்தியினைக் கருத்திற் கொண்டும் இம்மக்கள் வாக்களிப்பில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக, இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலினைப் பார்க்கிலும் ஜனாதிபதி தேர்தலிலே பட்டிருப்புத் தேர்தல் தொகுதி மக்களின் வாக்காளர் நடத்தை குறைவான நிலையில் காணப்படுவதனை அவதானிக்கலாம். இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முறைமை அறிவிக்கப்பட்ட ஆண்டு முதல் இதுவரை எட்டு ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், இத்தேர்தல் தொகுதி மக்களிடையே ஜனாதிபதித் தேர்தல் குறித்த எண்ணப்பாடும், அத்தேர்தலில் அவர்களின் வாக்காளர் நடத்தையைத் தீர்மானிக்கும் காரணிகளின் தாக்கமுமே இதற்கு

அடிப்படையாக அமைகிறது. இதனடிப்படையில் இக்கட்டுரையானது ஜனாதிபதித் தேர்தலில் பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தை குறைவாக காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதற்காக 2019 மற்றும் 2024 ஜனாதிபதித் தேர்தல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

வரைபடம் : அரசியல் நடைத்தையைத் தீர்மானிக்கும் காரணிகள்




(ஆதாரம் : கள ஆய்வு - 2024)

### அரசியல் காரணிகள்

2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் அரசியல் ரீதியான காரணிகளும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன.

### உள்நாட்டு யுத்தத்தின் தாக்கம்

பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழர்கள் எப்போதுமே தமிழ்த் தேசியத்தின்மீது பற்றுக் கொண்டவர்கள். தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்காகப் பல்லாயிரம் உயிர்களைத் தியாகம் செய்தவர்கள். கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த உடைமைகளையும் சொத்துக்களையும் இழந்தவர்கள். போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தேசிய உணர்வு அவர்கள் மத்தியில் இன்னும் அழிந்துபோகவில்லை என்பது தெளிவாகிறது. தரவுப் பெறுபேற்றின் அடிப்படையில் பார்க்கும்போது உள்நாட்டு யுத்தத்தின் தாக்கம் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடிந்தது. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின்படி 66 வீதமான மக்கள் மத்தியில் உள்நாட்டு யுத்தத்தின் தாக்கம் இன்றுவரை காணப்படுகின்றது என்ற பதிலை பெறக்கூடியதாக இருந்தது. 20 வீதமான மக்கள் மத்தியில் ஓரளவுக்கு உள்நாட்டு யுத்தத்தின் தாக்கம் இருக்கின்றது எனவும், எஞ்சிய 14 வீதமான மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கான முன்னேற்றம் தேவை என்ற அடிப்படையில் இவற்றில் நம்பிக்கையற்ற நிலைப்பாடு காணப்படுகின்றது என்பதையும் அறிய முடிந்தது.

**முன்னாள் ஜனாதிபதிகள் மீதான வெறுப்புணர்வும் நம்பிக்கையற்ற தன்மையும்**

முன்னாள் ஜனாதிபதிகளில் ஜனாதிபதி சந்திரிகாவின் 1994ஆம் ஆண்டு முதலாவது ஜனாதிபதி தேர்தல் மற்றும் ஜனாதிபதி மைத்திரியின் 2015ஆம் ஆண்டுத் தேர்தல் இவை இரண்டும் குறிப்பிடத்தக்க தேர்தல்களாகும். இவர்களை நம்பித் தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களித்திருந்தனர். ஆனால், இவர்களிடம் இருந்து தமிழ் மக்கள் பிரதியுபகாரமாகப் பெற்றுக்கொண்டவை போதியளவு திருப்தியளிக்கவில்லை என்றே கூற வேண்டும். இதன் அடிப்படையில்தான் ஜனாதிபதிகள் மீதான வெறுப்புணர்வும் நம்பிக்கையற்ற தன்மையும் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் தமிழ் மக்களின் 2019 2024 ஜனாதிபதித் தேர்தல்களில் வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. பெற்றுக்கொண்ட தரவுகளின் அடிப்படையில் 81 வீதமான மக்கள் இந்த நிலைப்பாட்டிற்கு ஆம் என்றும், 14 வீதமான மக்கள் ஓரளவான தாக்கம் எனவும், எஞ்சிய 5 வீதமான மக்கள் எந்தப் பதிலும் இல்லை என்ற பதிலையும் அளித்திருந்தமையை அதானிக்க முடிகின்றது.

**அரசியல் கட்சிகள் மீதான விசுவாசம்**

பட்டிருப்புத் தேர்தல் தொகுதி மக்களின் வாக்களிப்பு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் மற்றுமொரு விடயம் அரசியல் கட்சிகள் மீதான விசுவாசமாகும். இப்பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கினைக் காணலாம். 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது சஜித் பிரேமதாசவிற்கே தமது ஆதரவினைத் தெரிவித்திருந்தமையைக் காணலாம். குறிப்பாக, 2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் களமிறங்கியபோதும் கட்சியின் மத்திய குழு தனது முடிவில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை. இதனடிப்படையில் 2019, 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் அரசியல் கட்சிகள் மீதான விசுவாசம் செல்வாக்குச் செலுத்தியிருந்தது என்பதனை 73 வீதமான மக்கள் தெரிவித்திருந்ததோடு, 12 வீதமான மக்கள் ஓரளவிற்கு எனவும், 10 வீதமான மக்கள் முற்றுமுழுதாக நமது சுய விருப்பத்தின்படி வாக்களித்ததாகவும் கூறினர்.

**தேர்தல் விஞ்ஞாபனங்களின் தாக்கம்**

தேர்தல் காலங்களில் மட்டுமே ஜனாதிபதி வேட்பாளர்கள் சிறுபான்மை சமூகத்தை நோக்கி நகர்வதனையும், அதன்பின்னர் அதுபற்றிய எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதிருப்பதனையும் காணலாம். பெறுபேற்றின் அடிப்படையில் பார்க்கும்போது பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மக்களின் குறிப்பிட்ட பகுதியினர் வாக்களிப்புச் செயற்பாட்டில் தேர்தல் விஞ்ஞாபனங்களின் தாக்கமும் செல்வாக்குச் செலுத்தியது என்பதற்கு ஆம் என்று 67 வீதமான மக்களும், ஓரளவிற்குத் தாக்கம் செலுத்தியது என 21 வீதமான மக்களும், இப்பகுதி மக்கள் வாக்களிக்காமலிருப்பதில் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஒரு காரணமாக இல்லை என 22 வீதமான மக்களும் கருத்துக்களைக் கூறியுள்ளமையைக் காணலாம்.

**தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் தாக்கம்**

தேர்தல் காலங்களில் மக்களின் வாக்களிப்புச் செயற்பாட்டில் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கியமான விடயமாக தேர்தல் பிரசாரச் செயற்பாடுகள் காணப்படுகின்றது. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றமையினால் அவர்களின் வாக்கு வங்கிக்காக பிரசார உத்திகளில் இனவாதத்தையும் மதவாதத்தையும் இணைத்துக்கொள்ளும் தன்மையினைக் காணலாம். இது தொடர்பாக பட்டிருப்புத் தேர்தல் தொகுயில் 2019 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்தியது என்ற கணிப்பில், 78 வீதமானோரின் கருத்துக்கள் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்கள் தாக்கம் செலுத்தியமையை வெளிக்காட்டி இருந்தனர். இதற்கான காரணங்கள் வினவப்பட்டபோது ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தல்களிலும் பிரசார நடவடிக்கைகளில் இன மற்றும் மத ரீதியாக சிறுபான்மைச் சமூகங்கள் மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஓரங்கட்டப்படலுக்கு ஆளாவதாகவும் அறிந்துகொள்ள முடிந்தது.

**பொருளாதாரக் காரணிகள்**

பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல் காரணிகள் போன்று பொருளாதாரக் காரணிகளும் காணப்படுகின்றன. இவர்கள் தமது பொருளாதாரத்தில் ஏற்படும் விருத்தியை அல்லது ஸ்திரதன்மையை எப்போதும் விரும்பக்கூடிய நிலையே உள்ளனர். இதன் காரணமாகத் தமது வாக்களிப்பின்போது பொருளாதார ரீதியான காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர்.

**பொருளாதார நெருக்கடியின் தாக்கம்**

2022-2023ஆம் ஆண்டுகளில் இலங்கை மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. இந்நிலையிலே, அரசாங்கத்தின்மேல் மக்களின் நம்பிக்கை பெரிதும் குறைந்தது. இந்த நெருக்கடி மக்கள் தங்கள் அன்றாட வாழ்வாதாரத்தை மையப்படுத்தி, வாக்களிக்கும்போது இந்நிலையை மாற்றக்கூடிய ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க முயன்றனர். 2024 ஜனாதிபதித் தேர்தலில் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் பொருளாதார நெருக்கடி செல்வாக்குச் செலுத்தியிருந்தது என்பதனை 80 வீதமான மக்கள் தெரிவித்திருந்ததன் மூலம் அறிய முடிந்தது.

**வரிச்சுமை**

கடந்த 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியால் பாரிய வரிச்சுமை ஏற்பட்டது. நாட்டின் கடன்நிலையைக் குறைக்க வேண்டுமானால், மக்களிடமிருந்து அறவிடப்படும் வரியின் மூலமே அது சாத்தியமாகும் என்பதனால் வரிவிதிப்புக்களை அதிகரித்தனர். இதனால் சாதாரண மக்களிலிருந்து அரச உத்தியோகத்தர் வரை அனைவரும் இதனை ஈடுகொள்ள முடியாமல் சிக்கித்தவித்தனர். இதனால் தமது வாழ்க்கைச் சுமையை ஈடுகொள்ளக்கூடிய வகையில் செயற்படக்கூடிய வகையிலான வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் வரிச்சுமை செல்வாக்குச் செலுத்தியிருந்தமையை இவ் ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இது

தொடர்பாக வரிச்சுமையின் தாக்கத்தால் வாக்களிப்புத் தீர்மானிக்கப்பட்டது என்பதற்கு 75 வீதமான மக்கள் ஆம் என்று கூறியிருந்தனர். ஓரளவிற்குத் தாக்கம் செலுத்தியது என்று 15 வீதமானோரும், எந்த வேட்பாளர் ஆட்சிக்கு வந்தாலும் இந்நிலை மாறப்போவதில்லை என 10 வீதமானோரும் கூறியுள்ளமையைக் காணலாம்.

**தொழில் வாய்ப்புக்கள்**

பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தையில் தொழில் வாய்ப்புக்கள் தாக்கம் செலுத்துகிறதா என வினவப்பட்ட வினாவிற்கு 90 வீதமானவர்கள் ஆம் என்று கூறியிருந்தனர். இவர்களில் அநேகமானவர்கள் வேலையற்ற பட்டதாரிகளாகவும், அவர்களின் குடும்ப உறவினர்களாகவும் இருந்தனர். இவர்கள் மத்தியில் தொழில் வாய்ப்பை எவ்வாறாயினும் பெற்றுவிட வேண்டும் என்ற நிலைப்பாடு காணப்பட்டதை அறியலாம். குறிப்பாக, பொருளாதார நெருக்கடியின்போது பதவியேற்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பாக பதவி வகித்த காலங்களில் கருத்துத் தெரிவித்தபோது, தனியார் துறையும் அரச துறையும் ஒன்றுதான். நீங்கள் எங்கு சென்றாலும் வேலை செய்யலாம் எனக் கூறியதாவது பட்டதாரிகளின் கல்வித் தகைமையைக் கீழ்நோக்கித் தள்ளியிருந்தது. இதனால் அவர்கள் மத்தியில் இவர் குறித்த வெறுப்புணர்வுகள் அதிகரித்தமையாலே ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலே தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற நோக்கில் வாக்களித்திருந்தமையை இங்கு அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**பொருளாதார நலத் திட்டங்களின் தாக்கம்**

வரைபடம் : பொருளாதார நலத் திட்டங்களின் தாக்கம்




(ஆதாரம் : கள ஆய்வு - 2024)

பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்களின் வாக்களிக்கும் செயற்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்று பொருளாதார நலத்திட்டங்கள் ஆகும். மக்கள் தங்களின் அன்றாட வாழ்வில் அரசாங்கத்தின் பொருளாதார நலத் திட்டங்களின் தாக்கத்தை நேரடியாக உணர்வதால், இத்திட்டங்கள் அரசியல் முடிவுகளில் பெரிதும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. பின்தங்கிய குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் மானிய விகிதத்தில் வழங்கப்பட்டன. அத்துடன் 2023 இல் அஸ்வெஸ்ம (Aswesuma) என்ற நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இது வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு நிதி உதவி

வழங்கும் திட்டமாகும். இது வறுமைக்கோட்டிற்குட்பட்ட சமூகங்களுக்கு இது உதவியாக இருந்தாலும், இதனைச் சுற்றி நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தோன்றின. இதன் காரணமாக இப்பகுதி மக்கள் ஜனாதிபதி தேர்தலின்போது, வாக்காளர்கள் அரசு வழங்கும் பொருளாதார நலத் திட்டங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து, தங்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொள்ளும் வகையில் வாக்களித்திருந்தமையைக் காணலாம்.

**சமூகக் காரணிகள்**

பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் சமூக ரீதியான காரணிகளும் காணப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இப்பிரதேசத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருவதால் இவர்கள் தமது சமூக ரீதியான இருப்பை மேம்படுத்தி நிலைநிறுத்திக்கொள்ளும் சிந்தனை கொண்டவர்களாகவே விளங்குகின்றனர்.

**இன, மத ரீதியான ஓரங்கட்டலின் தாக்கம்**

இலங்கையில் தேர்தல் காலங்களில் மட்டுமன்றி, பொதுவாகவே இன, மத ரீதியான ஓரங்கட்டல் இடம்பெற்ற வண்ணமுள்ளது. பெற்றுக்கொண்ட தகவல்களின்படி 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் இன, மதக் காரணிகள் தாக்கம் செலுத்தியது என்பதற்கு ஆம் என்று 68 வீதமானோர் தெரிவித்திருந்தனர். குறிப்பாக, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களிடம் தமக்கான ஆதரவு கிடைக்காது என்பதை அறிந்த கோட்டாபாய ராஜபக்ச, தான் வெற்றி பெறுவதாயின் சிங்கள மக்களின் வாக்குகளினால் மட்டுமே சாத்தியமாகும் என்பதால் இனவாத பிரசாரத்தைக் கையிலெடுத்தார். இவ்வாறான சிறுபான்மைத் தமிழ் இனத்துக்கு எதிரான செயற்பாடுகளால், பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் வாழும் தமிழ் மக்களிடையே அவர் தொடர்பில் காணப்பட்ட வெறுப்புணர்வு அதிகரிக்கலாயிற்று. இவ் இனவாத தாக்கமானது அவர்களின் வாக்களிப்பு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தியதைக் காணலாம். அதேபோன்று 2024 ஆம் ஜனாதிபதித் தேர்தலில் பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசலிற்கு ஆதரவாக செயற்பட்டாலும் அவரால் அப்பகுதியில் முழுமையான ஆதரவினைப் பெறமுடியாது போனதற்குக் காரணம் அவருடைய விஞ்ஞாபனத்தில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதன் தாக்கமேயாகும் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது (நேர்காணல் 04).

**முடிவுரை**

பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் 2019 – 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் மக்களின் வாக்களிப்பு நடத்தையினைத் தீர்மானிப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருப்பதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக, இத்தமிழ்ச் சமூகம் ஓர் ஆட்சி மாற்றத்தினூடாக காலாகாலமாக எதிர்பார்க்கும் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் முடிவுக்கு வராதா என்ற எதிர்பார்ப்புடன் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும், சில வாக்காளர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும்போது தேர்தல்கள்மீது நம்பிக்கையின்றியும், வாக்களிப்பதில் அக்கறையின்றியும் காணப்படுகின்றமையையும் அறியமுடிகின்றது. இது தொடர்பாக ஒரு வாக்காளர் கூறும்போது "எந்த வேட்பாளருக்கு வாக்களித்தாலும் எமது வாழ்க்கை நிலையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. எனவே, எனக்கு வாக்களிப்பில் நம்பிக்கையில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும், பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்கள் பெரும்பாலானோர் மத்தியில் தேர்தல் மற்றும் வாக்குரிமை தொடர்பாக பூரணமான தெளிவின்மையையும் காணக்கூடியதாக உள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்தவகையில், ஜனநாயக உரிமைகளில் மிகவும் மேலானதாக வாக்குரிமை விளங்குகின்றது. அதாவது, நாட்டிலுள்ள சகல மக்களும் தேர்தலில் பங்குபற்றுவதில்லை. ஆனால், ஒவ்வொரு காலத்திலும் நடைபெறும் தேர்தல்களின்மூலம் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்காக வாக்குரிமையைப் பயன்படுத்துகின்றனர். இந்தவகையில், மக்கள் இறைமை என்பது அர்த்தமுடையதாக இருப்பதற்கு வாக்குரிமை அவசியமானதாகும். மேலும், இவ்வாக்குரிமையானது மக்களை அரசியல் அறிவூட்டும் ஓர் மார்க்கமாகவும், நாட்டின் அரசியலில் அவர்களை ஈடுபட வைப்பதற்கான பிரதானமானதோர் தூண்டுதலாகவும் இருக்கின்றது. அத்துடன் ஒவ்வொரு வாக்காளரும், வாக்களிக்கின்றபோது தாம் இந்த நாட்டின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கின்றவர்களாக இருக்கின்றோம் எனப் பெருமைகொள்ளக் கூடியதாக இருக்கின்றது என்பதனை உணர்ந்து வாக்களிக்க முன்வர வேண்டும்.

இவ்வாய்வின் கண்டுபிடிப்புக்களாக பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தை குறைவாகக் காணப்படுவதில் அரசியல் காரணிகளே அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றதை அறிய முடிகின்றது. இவர்களின் வாக்களிப்பானது அவர்களின் தேவைகளின் நிமித்தம் மாறுபடுவதையும் அறியக்கூடியதாக இருந்தது. இத்தகைய தாக்கத்தினால் மக்கள் மத்தியில் அவர்களின் அரசியல் நடத்தையில் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதையும் ஆய்வுப் பிரதேசத்தில் அறிந்துகொள்ள்கூடியதாக இருந்தது. மேலும், இவ்வாய்வின் பரிந்துரைகளில் பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமையின் அவசியத்தை உணர்த்துவது முக்கியமானதாகும். ஜனாதிபதித் தேர்தலும் முக்கியத்துவமானது என்பதனைத் தெளிவுபடுத்த வேண்டும். தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பது தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும். அரசியல் தலைமைகள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தை குறைவாக இருப்பதில் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகிறது. இவற்றில் முக்கியமாக அரசியல் காரணிகள் 55% தாக்கம் செலுத்துகிறது. இதனாலேயே மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டத்திலுள்ள ஏனைய தொகுதிகளைவிட இங்கு வாக்களிப்பு நடத்தை குறைவாகக் காணப்படுகிறது. குறிப்பாக, பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் 2019 – 2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்காளிப்பில் 25% க்கும் அதிகமானோர் வாக்களிக்காமையினையும் அவதானிக்கலாம். அதாவது, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குப் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர் எண்ணிக்கை 91105

ஆகவும், வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கை 65183 ஆகவும் காணப்படுகின்றது. இது 71.62% ஆக அடையாளப்படுத்துகிறது (Wikipedia, 2019). அதேபோல 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குப் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் 101023 ஆகவும், வாக்களித்த வாக்காளர்கள் 67375 ஆகவும், இது வெறுமனே 66.67% ஆகவும் காணப்படுகின்றது (Wikipedia, 2024). எனவே, இக்காரணிகள் தங்களது வாக்களிப்பில் செல்வாக்கைச் செலுத்தினாலும், உண்மையான மாற்றம் தமது பொறுப்பான முடிவிலேயே தங்கியுள்ளது என்பதனை இம்மக்கள் அறிந்து செயற்பட வேண்டும் என்பதும் இதன் மூலம் அறிய முடிகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


Kaur, H. (2011). *Voting Behaviour in India and its Determinants. International Journal of Current Engineering and Scientific Research, 5(2), 116-120.*

Perera, H. U. a. D. (2020). *Social media and political participation in Sri Lanka. Journal of Media and Communication Studies, 12(4), 80-90.*

Sheikh, Y. A. (2014). *Determinants of voting behaviour in India: Theoretical perspective. Public Policy and Administration Research, 4(8),104-108.*

Verba, S. (1963). *Political Culture and Political Development. Princeton University Press.*

Kumari, H. a. I.C. (2016). *Key factors influencing the voting behaviour of the civilians in semi-urban areas (with relevance to Naiwala North and Pahala Udugampola Grama Niladari divisions of Minuwangoda electorate), repository.kin.ac.lk.*

http://repository.kln.ac.lk/handle/123456789/14738.

Manju, T., Tarofder, A.K. and Azam, S.M.F. (2023). *Modern Validity of Historical Factors on Voter Intention and Its Basic Patterns in Sri Lanka. International Journal of Social Science Research and Review*. https://doi.org/10.47814/ijssrr.v6i4.1075 .

Warnapala, Y. And Yehiya, Z. (2008). *Polarization of the Sri Lankan Polity: An Analysis of Presidential Elections (1982 2005). Arts & Sciences Faculty Publications. Available at: https://docs.rwu.edu/fcas fp/8/ [Accessed 23 Sep 2023).*

# உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதில் சிவில் சமூகத்தின் வகிபாகம்: ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையை அடிப்படையாகக் கொண்ட விசேட ஆய்வு

**Rajanitharan Thushanthani**

Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.

rjthushanthani2024@gmail.com

**A.Kanneraj**

Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.

kanneraja@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

ஜனநாயக அரசுகளில் அரசியல் பிரதிநிதித்துவத்தில் பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்துதல் என்ற விடயம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமானது பின்தங்கிய நிலையில் இருப்பதனால், ஜனநாயகமும் குறைமதிப்பீட்டிற்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில், உள்ளூர் மட்டத்தில் இருந்து ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நோக்கில் நிறுவப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துதல் என்பது முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதற்கான சாதகமான வாய்ப்பாக சிவில் சமூக செயற்பாடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. ஆகவே, பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஏற்படுத்துவதில் சிவில் சமூக செயற்பாடுகளின் வகிபாகம் எத்தகையது என்பதனை ஆராய வேண்டிய தேவையுள்ளது. அதனடிப்படையில் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வினூடாக இப்பிரதேசத்திற்குள் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதற்கான நேரடியான வழிமுறைகள் சிவில் சமூக அமைப்புக்களினால் கையாளப்படுவது குறைவாக இருப்பினும், பெண்களின் திறனை மேம்படுத்தல் என்பதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்கின்ற செயற்பாடுகளின் மூலமாக பெண்களின் அரசியல் திறனையும் ஊக்குவிக்கின்றன என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்து நேரடியாக செயற்படுகின்ற அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு இப்பிரதேசத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் காணப்படுகின்ற தடைகள் சவால்களை ஏற்படுத்துகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *பால்நிலை சமத்துவம், அரசியல் பிரதிநிதித்துவம், திறன் மேம்பாடு, குடும்பச் சூழல்.*

## அறிமுகம்

ஜனநாயக அரசுகளில் மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கின்ற பிரதிநிதித்துவ முறைமையே நடைமுறையில் இருந்து வருகின்றது. மக்களினால் தெரிவுசெய்யப்படுகின்ற பிரதிநிதிகள் மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் தீர்மானமெடுக்கும் செய்முறையில் பங்கெடுக்கச் செய்வதே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின்

அடிப்படைப் பண்பாகும் (பௌசர், 2019). அந்தவகையில், பெண்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் அரசியல் தீர்மானமெடுக்கின்ற சகல மட்டங்களிலும் பங்கெடுக்கச் செய்ய வேண்டும் என்பதே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான ஆய்வுகளின் முக்கிய விடயமாக அமைந்துள்ளது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்கின்ற வகையில், அரசியல் பிரதிநிதித்துவத்தில் பாலின சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில், இலங்கையின் மொத்த சனத்தொகையில் பெண்கள் 51.61 வீதமானவர்களாகக் காணப்படுகின்றனர் (*Department of Census and Statics-Sri Lanka. 2024*). ஆனால், இலங்கையில் தேசிய மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவமானது 10 வீதமாகவே உள்ளது (*Parliament of Sri Lanka-Lady Members. 2015*). 52 சதவீதமான பெண்களின் பிரதிநிதிகளாக 10 வீதமான பெண்கள் இருப்பது இலங்கையின் ஜனநாயகத்தினைக் குறைமதிப்பீட்டிற்கு உள்ளாக்குகிறது.

ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ளூராட்சி அரசியல் நிறுவனங்கள் முக்கியம் பெறுகின்றன. அடிமட்டத்தில் இருந்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதனூடாக ஜனநாயகத்தின் நிலைத்திருக்கும் தன்மையைப் பேணுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் அவசியமாகும். அடிமட்ட ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் சம பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துதல் அவசியமாகும். 25 சதவீத ஒதுக்கீட்டு முறைமை கொண்டு வரப்பட்டும் அதனால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியவில்லை (பௌசர், 2019).

உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் சம பிரதிநிதித்துவத்தை ஊக்குவிக்கின்ற சாதகமான வாய்ப்பாக சிவில் சமூக அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. இலங்கையில் ஜனநாயகம், நல்லாட்சி, சமாதானம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூகம் பிரதான இடத்தைப் பெறுகின்றது. அரசியல் பங்கேற்பினை ஊக்குவிப்பதனூடாக ஜனநாயகத்தை வழிநடாத்தும் முகவர்களில் சிவில் சமூகமும் ஒன்றாகும். இதனடிப்படையிலேயே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் சிவில் சமூகம் கொண்டுள்ள வகிபாகம் என்பது ஆராயப்பட்டு வருகின்றது.

பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாகவும் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூகத்தின் வகிபாகம் தொடர்பாகவும் பல்வேறுபட்ட ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறான ஆய்வுகளில் இவ்விடயம் சார்ந்து மேலதிக ஆய்வுகளுக்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு மட்டக்களப்பினை மையமாகக் கொண்டு பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் சிவில் சமூகத்தின் வகிபாகம் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் மிகவும் குறைவானதாகும். இந்த ஆய்வு இடைவெளியை நிரப்பும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதில் சிவில் சமூகத்தின் வகிபாகத்தினை ஏறாவூர்பற்று பிரதேச சபையினை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதில் சிவில் சமூகத்தின் வகிபாகமும் அவை எதிர்நோக்குகின்ற சவால்களும் ஆய்விற்குரிய விடயமாகவுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

கமலா லியனகே (2012), இலங்கைப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கான அவசியம், அதிகரிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்கின்றபோது எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிக்கொள்வதற்கான வழிகள் என்பனவற்றைப் பற்றி ஆய்வு செய்துள்ளார். ஆனால், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்குத் தடையாகவுள்ள சூழல் மற்றும் சாதகமான வாய்ப்புக்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபடும். அவற்றில் விசேட கவனம் செலுத்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது. அந்தவகையில், இவ்வாய்வானது ஒட்டுமொத்த நாட்டிலுள்ள பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்கின்றது.

இலங்கையில் பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடானது, இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் பெண்களின் பிரதிநிதித்துவத்தை முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகப்படுத்துவதனூடாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துள்ளதா என்பது குறித்து கண்ணேராஜ் (2023) ஆய்வு மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்துவற்காகக் கொண்டுவரப்பட்ட ஒதுக்கீட்டு முறைமையானது உள்ளூராட்சி மன்றங்களில் பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியுள்ளதே தவிர, எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்படவில்லை என்பதனை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆய்வானது இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்துவதற்கான அல்லது ஊக்கப்படுத்துவதற்கான வாய்ப்புக்களில் ஒன்றான ஒதுக்கீட்டு முறைமையையும் அதிலுள்ள சவால்களையும் மாத்திரமே ஆராய்ந்துள்ளதே தவிர, இலங்கையில் உள்ள ஏனைய வாய்ப்புக்கள் குறித்தும் அவற்றிலுள்ள தடைகள் மற்றும் சவால்கள் குறித்தும் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

கிஷாசாலி பின்ரோ ஜெயவர்த்தன மற்றும் சூலனி கொடிக்கார (2003), இலங்கையானது அரசியலில் பால்நிலை சமத்துவத்திற்கான சாதகமான வாய்ப்புக்களைச் சட்ட ரீதியாக கொண்டிருந்தபோதிலும், ஆண்களுக்குச் சமமான பங்குபற்றல் என்பது பெண்களுக்குக் குறைவாகவே உள்ளது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். அத்தோடு, இவ்வாய்வு அரசியலில் பிரதிநிதித்துவம் பெறுவதற்குள்ள பெண்களுக்கான தடைகள், அரசியலில் பிரதிநிதித்துவம் பெற்ற பெண்களின் நிலை, அரசியல் கட்சிகளில் பெண்களின் நிலைப்பாடு, பெண்களுக்கான ஒதுக்கீடுகள் என்பனவற்றிலும் கவனம் செலுத்தியுள்ளது. இந்த ஆய்வில், இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகப்படுத்துவதற்கான சாதகமான வாய்ப்புக்கள் எடுத்துக்காட்டப்பட்டு, அவற்றில் உள்ள குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

பௌசர் (2019), பிரதேச மட்டத்திலிருந்து பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிக்கவும் பெண்களை வலுப்படுத்தவும் இலங்கை அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் 25 சதவீத ஒதுக்கீட்டுச் சட்டம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் எவ்வாறான அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றிக் கவனம் செலுத்தியுள்ளார். 25 சதவீத ஒதுக்கீட்டுச் சட்டம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை முன்னேற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டபோதிலும், இச்சட்டமானது திருப்தியளிக்கக்கூடிய

மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாய்வில் ஒதுக்கீட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் கட்சிகளின் தலையீடு பற்றி மட்டுமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்காகச் செயற்படுகின்ற சிவில் சமூக அமைப்புக்களின் வகிபாகம் குறித்தும் அவை எதிர்நோக்குகின்ற சவால்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படவில்லை.

மூன்றாம் மண்டல நாடுகளில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் சிவில் சமூகம் அடைந்துள்ள தோல்வியையும் பலவீனத்தையும் இலங்கையில் நல்லாட்சியை அடைவதிலுள்ள தடைகளையும் அத்தடைகள் சிவில் சமூகத்தில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் எவ்வாறான சிக்கல்களை ஏற்படுத்துகின்றது என்பது பற்றியும் Aliff & Sarjoon (2010) ஆகியோர் உள்வாங்கியுள்ளனர். இவ்வாய்வில் இலங்கையின் ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் பாதிக்கின்ற முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான பால்நிலை சமத்துவமின்மையை நிவர்த்தி செய்வதில் சிவில் சமூகத்தின் வகிபாகம் என்னவென்பது குறித்துக் கவனம் செலுத்தப்படவில்லை.

Hewamanne (2013), உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த முஸ்லிம் பெண்களின் இடப்பெயர்வு தொடர்பான அனுபவத்திற்கும் புதிய அபிவிருத்தி பற்றிய அவர்களின் கருத்துகளுக்கும் இடையிலான பால்நிலை இடைவெளியையும் முஸ்லிம் சமூகத்தில் உள்ள பெண்களின் பிரச்சினைகளையும் அடையாளங்கண்டுள்ளார். மேலும், இவ்வாய்வு முஸ்லிம் பெண்கள் முஸ்லிம் சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்ற வித்தியாசமான பாத்திரத்தை ஏற்றுள்ளமையினால் ஏற்பட்ட விளைவுகளிலும் கவனம் செலுத்தியுள்ளது. ஆனால், இடம்பெயர்ந்த பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை முன்னேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை.

Maithree & Chulani (2012), இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் அதிகரிப்பை ஏற்படுத்துவதென்பது அவசியம் பற்றி விசேடமாக கவனம் செலுத்தியுள்ளனர். பெண்களின் பிரச்சினைகளை அரசியல் மட்டத்தில் கொண்டு செல்வதற்கும் இலங்கையின் குடியரசு அரசியல் யாப்பிற்கும் நடைமுறைத் தன்மைக்குமிடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதற்கும் பெண்களின் பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டும் என இவ்வாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பெண்கள் பாலின சமத்துவத்தை அரசியலில் ஏற்படுத்துதல் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பினும், அதனை அடைவதற்கு அவர்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவில்லை.

Oakley (2011), இலங்கையில் பெண்களின் குறைந்த பிரதிநிதித்துவத்திற்கான காரணங்கள் மற்றும் அதற்கெதிரான தடைகள் பற்றி ஆய்வு செய்துள்ளார். மேலும், பெண்கள் மற்றும் பெண்கள் அமைப்புகளின் பங்கேற்பு அதிகரிக்க இந்தத் தடைகளைக் கையாளும் திறனை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்பது பற்றியும் சிவில் சமூகத்தில் பெண்களின் பார்வைகளை உள்ளடக்கிய பங்கேற்பு அணுகுமுறையானது சமூக ஒற்றுமையை

உருவாக்குவதற்கும் அதன் விளைவாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் முயற்சிகளை எளிதாக்குவதற்கும் எவ்வாறு பயன்படுகிறது என்பது பற்றியும் இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது. இவ்வாய்வில் சிவில் சமூகத்தின் செயற்பாடுகளில் பெண்கள் பற்றிய நிகழ்ச்சி நிரல்கள் இடம்பெறுவதன் அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், அவை எதிர்நோக்குகின்ற சவால்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவில்லை.

Pujika (2017), தீர்மானமெடுப்பதில் பால்நிலை சமத்துவத்தையும் உணர்திறனையும் உறுதிப்படுத்தவும் அரசியல் பிரதிநிதித்துவத்தில் பெண்களின் திறன்களின் அணுகுமுறையை மாற்றவும் மற்றும் மோதலுக்குப் பிந்தைய நல்லிணக்க செயல்முறைக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கவும் பெண்களின் அரசியல் பங்கேற்பு அவசியம் என்பதனையும் அரசியலமைப்புகளிலும் தேர்தல் பொறிமுறைகளிலும் பாலின உணர்திறன் கொள்கைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்துவதனைச் சிவில் சமூகம் பொருட்படுத்த வேண்டும் என்பதனையும் குறிப்பிட்டுள்ளார். சிவில் சமூகத்தின் வகிபாகத்தின் அவசியம் பற்றி இவ்வாய்வு பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், அதுபற்றிய விசேட கவனம் செலுத்தப்படவில்லை.

Rameez (2018), இலங்கையில் சனத்தொகையிலும் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளிலும் பெண்கள் அதிகமாக பங்கேற்க, உள்ளூர் நிர்வாகத்தில் அவர்களது பங்கேற்பு ஏன் குறைவாக உள்ளது என்பது பற்றி ஆய்வு செய்துள்ளார். மேலும், இவ்வாய்வில் பெண்களின் குறைந்தளவிலான அரசியல் பங்களிப்புக்கு உயிரியல், பொருளாதார உளவியல், மதம் மற்றும் அரசியல் காரணிகளின் செல்வாக்குகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிப்பட்டுள்ளது. பெண்களின் அரசியல் பங்கேற்பைப் பாதிக்கும் காரணிகள் பற்றியே முழு ஆய்வும் கவனம் செலுத்தியிருக்கிறது.

Sarah Child & Mona Lena Knook (2008), பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை விளக்கும் கோட்பாடுகளை அரசியல் சூழல், பாலின அடையாளம், பெண்களின் பிரச்சினைகள் போன்ற அம்சங்களுடன் தொடர்புபடுத்தி விவாதிக்கிறார்கள். பெண்களுக்காக பெண்கள் தீர்மானமெடுப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்ற அரசியல் சூழலினைப் பாதிக்கின்ற காரணிகள், பெண் சட்டமன்றப் பிரதிநிதிகள் பெண்களின் பிரச்சினைகளைச் சட்டமன்றத்தில் வெளிப்படுத்தும் விதம், பெண்களுக்காக பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் செயற்படும் விதம் என்பனப் பற்றி அவதானம் செலுத்தும் ஆய்வுகளும் சட்டமன்றத்திற்குள்ளேயும் அதற்கப்பாலும் அரசியல் பிரதிநிதித்துவத்தின் இயங்கியல் தன்மையை ஆய்வு செய்கின்ற ஆய்வுகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை இவ்வாய்வு குறிப்பிடுகின்றது. இவ்வாய்வில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கின்ற காரணிகள் குறித்து ஆய்வு செய்யப்படுகின்றதே தவிர, பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிக்கின்ற வாய்ப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாகவும் இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் எதிர்நோக்குகின்ற சவால்கள் குறித்தும் அதற்கான தீர்வுகளைக் கண்டறிதல் குறித்தும் பெரும்பாலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் யுத்தத்தின் பின்னரான இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சிவில்

சமூகத்தின் வகிபாகம் குறித்துப் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்கப்படுத்துவதில் சிவில் சமூகத்தின் வகிபாகம் குறித்து மட்டக்களப்பு மாவட்டத்தை, குறிப்பாக ஏறாவூர்பற்றுப் பிரதேசத்தை விசேடமாக கவனம் செலுத்துகின்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. சில ஆய்வுகள் இவ்வாய்வுப் பரப்பு தொடர்பான மேலதிக ஆய்வுகளை பரிந்துரை செய்துள்ளன (கண்ணேராஜ். 2017; Sarah & Mona. 2008). இந்த ஆய்வு இடைவெளியை நிரப்பும் வகையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது கலப்பு ஆய்வு முறையினை (அளவுசார் மற்றும் பண்புசார்) அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்புசார் தரவுகளுக்காக நேர்காணல் செய்யப்பட்டது. மேலும், இவ்வாய்விற்காக ஏறாவூர்பற்று பிரதேச சபைப் பிரிவிற்குள் காணப்படுகின்ற மொத்த 18 வட்டாரங்களில் சனத்தொகை, பிரதான வீதிப் பிரிவுகள் என்றடிப்படையில் 10 வட்டாரங்கள் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டு, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 10 வினாக்கொத்துக்கள் வீதம் வழங்கப்பட்டன. இவ்வினாக்கொத்துக்கள் ஒவ்வொரு வட்டாரத்திற்குள்ளேயும் வசிக்கின்ற 18 வயதிற்கு மேற்பட்ட இரு பாலினத்தவர்களையும் உள்ளடக்கிய வகையில் இல்லத்தரசிகள், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறைகளில் பணிபுரிபவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. இதனூடாக பெறப்பட்ட தரவுகள் வகைப்படுத்தப்பட்டு புள்ளிவிபரப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் மேலதிகமாக குடிசன மதிப்பீடு, ஏறாவூர்பற்று பிரதேசம் பற்றிய அளவு ரீதியான தரவுகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

முதலாம் நிலைத் தரவு மூலகங்களினூடாகப் பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. ஏறாவூர்பற்று பிரதேசத்திற்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாகப் பதிவுசெய்தவர்கள், ஏறாவூர்பற்றுப் பிரதேச சபைப் பெண் உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக நிறுவன உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுடன் நேர்காணல் செய்யப்பட்ட தரவுகளும் 100 வினாக்கொத்துக்களின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகளும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

**இப்பிரதேசத்திற்குள் பிரதிநிதித்துவத்தில் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தலின் அவசியம்**

**வரைபடம் 1.4.1**




**(மூலம்: வினாக்கொத்து 2023)**

பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான அபிப்பிராயங்களில் பாலின வேறுபாடு செல்வாக்குச் செலுத்துகின்றது என்ற அடிப்படையில் இவ்வினா வினாவப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஏறாவூர்பற்றுப் பிரதேசத்தில் 10 வட்டாரங்களுக்கும் வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துக்களின் அடிப்படையில் 53 வீதமான பெண்களும் 47 வீதமான ஆண்களும் தங்களது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆகவே, இப்பிரதேசத்தில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகவுள்ளனர் என்ற முடிவிற்கு வரமுடியும்.

பிரதேசத்திற்குள் செயற்படுகின்ற சிவில் சமூக நிறுவனங்கள்

**வரைபடம் 1.4.2**




இப்பிரதேசத்திற்குள் செயற்படுகின்ற சிவில் சமூக நிறுவனங்கள் பற்றி மக்கள் எந்தளவிற்கு அறிந்து வைத்திருக்கின்றனர் என்பதனைக் கண்டறிவதற்கு இவ்வினா கேட்கப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. இவ்வரைபடத்தின்படி, இப்பிரதேசத்திற்குள் அதிகமான மக்கள் சிவில் சமூக நிறுவனங்கள் பற்றி அதிகம் அறிந்து வைத்துள்ளனர். அவற்றிலும் மாதர்

சங்கங்கள் குறித்து அதிகமான மக்கள் அறிந்துகொண்டுள்ளனர். மாதர் சங்கங்களுடன் ஒப்பிடுகின்றபொழுது ஏனைய நிறுவனங்கள் குறைவான எண்ணிக்கையைக் கொண்டிருக்கின்றபோதிலும், அவற்றின் பணிகளினூடாக மக்கள் நன்மையடைந்துள்ளனர் என்பதனை இதனூடாக அறிந்துகொள்ள முடிகின்றது (*நேர்காணல் 7).* பெண்களின் முன்னேற்றம் தொடர்பாகச் செயற்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்ற வாய்ப்புக்களும் இப்பிரதேசத்தில் உள்ள பெண்களுக்குக் கிடைத்துள்ளன. இவ்வாறான நிறுவனங்களில் உறுப்பினராக இருப்பதற்கான வாய்ப்புக்களும் கிடைத்துள்ளன. Caritas Ehed, மாதர் சங்கம் போன்ற அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றிய சந்தர்ப்பங்களும் உண்டு (*நேர்காணல் 1*). மாதர் சங்கம் போன்ற நிறுவனங்களில் தலைவர்களாகச் செயற்படுகின்ற சந்தர்ப்பங்களையும் இப்பிரதேசத்திற்குள் பெண்கள் பெற்றுள்ளனர் (*நேர்காணல் 5*).

**பெண்களின் முன்னேற்றம் தொடர்பாக சிவில் சமூக நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகள்**

**வரைபடம் 1.4.3**




**(மூலம்: வினாக்கொத்து 2023)**

இவ்வரைபடம், சிவில் சமூக நிறுவனங்கள் பெண்களின் உரிமைகள் தொடர்பாகவே அதிக செயற்பாடுகளைச் செய்து வருகின்றன என்பதனை காட்டுகின்றது. ஒப்பீட்டளவில் ஏனைய பணிகள் தொடர்பாக நிறுவனங்கள் குறைந்தளவில் கவனம் செலுத்தியிருப்பினும், ஒவ்வொரு பணிக்கும் இடையில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கின்றது என்றவகையில் சிவில் சமூக நிறுவனங்கள் பெண்களின் முன்னேற்றத்திற்கு அதிக பங்காற்றி வருகின்றன என்பதனை இதனூடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

**சிவில் சமூக நிறுவனங்கள் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதற்காகக் கையாள்கின்ற வழிமுறைகள்**

**வரைபடம் 1.4.4**




**(மூலம்: வினாக்கொத்து 2023)**

இவ்வரைபடம் மக்களின் அரசியல் அறிவினை வளர்ப்பதற்குக் கையாள்கின்ற வழிமுறைகளையே இந்நிறுவனங்களும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதற்கும் கையாண்டு வருகின்றன என்பதைக் காட்டுகின்றது.

இவ்வமைப்புக்கள் தலைமைத்துவ பயிற்சிகள், குழுச் செயற்பாடுகள் என்பனவற்றின் ஊடாக பெண்களின் தலைமைத்துவ திறன், குழச் செயற்பாட்டுத் திறன் போன்ற திறன் மேம்பாட்டுப் பணிகளைச் சிவில் சமூக நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன. இது மக்களின் பிரதிநிதியாக முன்னின்று செயற்படுவதற்கு உதவியாக இருந்துள்ளது (*நேர்காணல் 1*). மாதர் சங்கத் தலைவியாகச் செயற்படுவதனூடாக இதில் பெண்கள் தங்களது பொதுத் தேவைகளை அடையாளங்கண்டு, அவற்றினை நிறைவேற்றுவதற்கான தீர்மானங்களை எடுத்தல் தொடர்பான அனுபவ பயிற்சிகள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளன (*நேர்காணல் 6*).

பெண்களின் பிரச்சினைகளை அடையாளங்காண்பதற்கும், அவற்றினைத் தீர்த்து வைப்பதற்கும், அவற்றிற்குத் தீர்வுகாண்பதற்கான பங்குதாரர்களை இனங்கண்டு கொள்வதற்குமான திறன் சார்ந்த பயிற்சிகளும் இவ்வமைப்புக்களினால் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, விழுது எனும் அமைப்பானது பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் அவர்களது திறன் தொடர்பாக அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களில் தற்போது NED திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டம் கிராம மட்டத்தில் பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றில் பொதுப் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, அதற்குத் தீர்வு காண்பதற்கான திறன் பயிற்சி மற்றும் வழிகாட்டல்கள் என்பனவற்றை வழங்கி வைப்பதனை இலக்காகக் கொண்டுள்ளது. அத்துடன் Reflection Learning (RL) என்பதனூடாக பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்குரிய பங்குதாரர்களை அடையாளப்படுத்துதலும் இதனுள் அடங்குகின்றது. இது தவிர பெண்களுக்கிடையே மத, இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தினையும் அமைப்பு மேற்கொண்டு வருகின்றது (*நேர்காணல் 3*).

மேலும், இவ்வமைப்புக்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வருகின்ற பெண்களைப் பயிற்றுவித்தல், அவர்களுக்கான பிரசாரத்திற்கான விளம்பரப்படுத்தல் உதவிகளை வழங்குதல், வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் என்ற அமைப்பில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான செயற்றிட்டங்கள் அமைப்பின் நிகழ்ச்சி நிரல்களில் உள்வாங்கப்படவில்லையாயினும், வாக்களித்தல், தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வருகின்ற பெண்களுக்கு வழிகாட்டுதல், வேட்புமனு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் சுவரொட்டிகள், பிரசார விளம்பரங்களுக்கான நிதி உதவிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன (*நேர்காணல் 4*).

அத்துடன் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான ஆய்வுகளை வெளியிடுதல் மற்றும் ஆய்வுகளை வெளியிடுவதற்கான பயிற்சிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. விழுது அமைப்பினால் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான ஆய்வுகளும் இளையோர் குழாத்தினர்களினூடாக நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 'கிழக்கே நகர்' என்ற குழு இயங்கி வருகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் அதிகம் பங்கேற்றுள்ளனர் (*நேர்காணல் 3*). மேலும், பெண்களுக்கு யாப்புக்களில் உள்ள ஏற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல்களையும் அமைப்பு மேற்கொண்டு வருகின்றது (*நேர்காணல் 3*).

இவற்றினூடாக அரசியல் குறித்துப் பெண்களுக்குள்ள தயக்கத்தினை விலக்கி, பெண்களினால்தான் பெண்களின் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகளைக் கொண்டு வரமுடியும் என்ற விழிப்புணர்வைப் பெண்கள் மத்தியில் ஏற்படுத்திப் பெண்களைத் தானாகவே முன்வந்து தேர்தல்களில் போட்டியிடச் செய்வதே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் சார்ந்து செயற்படுகின்ற அமைப்புக்களின் குறிக்கோளாகும். இதற்கு முன்னுதாரணமாக விளங்கும் வகையில் 2010ஆம் ஆண்டு விழுது அமைப்பின் உயரதிகாரி (பெண்) தேர்தலில் போட்டியிட்டிருந்தார். அதுபோன்று அமைப்பினால் பயிற்சியளிக்கப்பட்ட முஸ்லிம் பெண் ஒருவர் தானாக முன்வந்து மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டார். அவரால் வெற்றி பெற முடியவில்லையாயினும், முஸ்லிம் சமூகத்தில் உள்ள பெண்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். உள்ளூராட்சி மன்றங்களில் இன்று பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுவதில் அமைப்பு வெற்றி கண்டுள்ளது (*நேர்காணல் 3*).

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாக இப்பிரதேசத்திற்குள் நேரடியாக தனித்துச் செயற்படுகின்ற அமைப்புக்கள் மிகவும் குறைவாக உள்ளதென்பதனை இதனூடாக காணமுடிகின்றது. ஏனைய அமைப்புக்களில் பெண்கள் தங்களது தலைமைத்துவத் திறன்களை வளர்த்துக்கொள்ளுதல் என்பது பெண் பிரதிநிதியாகச் செயற்படுவதற்கான திறனையும் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளது.

**பெண்களின் அரசியல் பங்கேற்பு**

**வரைபடம் 1.4.5**




**(மூலம்: வினாக்கொத்து 2023)**

இப்பிரதேசத்திற்குள் பெண்களின் அரசியல் பங்கேற்பு குறித்துப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. இவ்வரைபடத்தின்படி, அதிகமானவர்கள் பெண்கள் வாக்களிப்புச் செயற்பாடுகளிலேயே அதிகம் ஈடுபடுகின்றனர் என்பதனைப் பதிவுசெய்துள்ளனர். ஏனைய செயற்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு குறைவாக உள்ளமையையும் இதனூடாக அறிய முடிகின்றது.

**பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு எதிராகவுள்ள தடைகள்**

**வரைபடம் 4.8**




(மூலம்: வினாக்கொத்து 2023)

இவ்வரைபடத்தின்படி, இப்பிரதேசத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் மேற்கூறப்பட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. பிரதேசத்திற்குள் பெண்கள் அரசியலில் இருந்து ஒதுங்குவதற்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்று அரசியலில் அவர்களுக்குள்ள குறைந்த ஈடுபாடு. ஏனெனில், பெண்களுக்கு அரசியல் குறித்த சில மாற்றுக் கருத்துக்கள் உள்ளன. அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களின்மீது கட்டவிழ்க்கப்படுகின்ற வன்முறைகள், அரசியலில் ஈடுபடுகின்ற பெண்கள் மீதான தவறான பரப்புரைகள் போன்றன பெண்கள் அரசியலில் இருந்து விலகிச் செல்வதற்கும் அரசியல்மீது குறைந்த ஈடுபாட்டினைக் காட்டுவதற்கும் தடையாகவுள்ளன (*நேர்காணல் 1*).

அத்துடன் குடும்பமும் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணியாக இப்பிரதேசத்திற்குள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் பெரும்பாலான பெண்களுக்குக் குடும்ப ஆதரவு கிடைப்பதில்லை (*நேர்காணல் 1*). இது தவிர கலாசாரமும் தடையாகவுள்ளது. பெண்கள் அரசியலிற்குள் நுழைவது ஒழுக்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எண்ணுகின்றார்கள் (*நேர்காணல் 2*).

கட்சிகளின் மூலமாகத் தெரிவுசெய்யப்படுகின்ற பெண்கள் குறைவாக இருப்பதனால் தீர்மானமெடுக்கின்ற செயன்முறைகளில் ஆண்களின் கருத்துக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. "ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையில் மொத்த 30 உறுப்பினர்களில் 7 பேர் மாத்திரமே பெண் உறுப்பினர்களாக இருந்துள்ளனர். அவர்களும் கட்சி உறுப்பினர்களாக இருந்தனர். ஒரு கட்சியில் 8 உறுப்பினர்களில் 1 பெண் மாத்திரமே இருந்துள்ளார். ஆண்களின் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் மட்டுமே கூட்டத் தொடர்களில் செவிமடுக்கப்பட்டன. பெரும் போராட்டங்களுக்கு மத்தியில் பெண் உறுப்பினர்களும் கூட்டத்தில் உரையாடுவதற்கான நேரத்தைப் பெற்றிருந்தோம்" (*நேர்காணல் 1*).

### பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பது தொடர்பாக சிவில் சமூக நிறுவனங்கள் எதிர்நோக்கும் சவால்கள்

பெண்களின் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிக்கின்றபோது அமைப்புக்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல் தொடர்பாக இவ்வினா நேர்காணலில் கேட்கப்பட்டபோது, பெறப்பட்ட பண்புசார் தரவுகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

- **பெண்களின் ஈடுபாடு குறைவு**

நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளில் எல்லாப் பெண்களும் கலந்துகொள்வதற்கு ஆர்வமாக முன்வருவதாக இல்லை. நிறுவனங்களில் கருத்தரங்குகள் அல்லது பயிற்சிப் பட்டறைகள் இடம்பெற்றால் இறுதியில் பின்னூட்டல்கள், வினைத்திறன் குறித்துக் கேள்விகள் கேட்கப்படும். ஆனால், சில பெண்களைத் தவிர பலர் முன்வந்து கருத்துக்களைத் தெரிவிப்பதற்குத் தயங்குகிறார்கள். சிற்றுண்டி, போக்குவரத்துச் செலவு என்பனவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். அதேநேரம் அரசியலில் பிரவேசிப்பதற்கு ஆர்வமாக முன்வருகின்ற பெண்களுக்குத் தான் நிறுவனங்களால் உதவி

செய்ய முடியும். முன்வராத பெண்களை நிர்ப்பந்தித்து அவர்களை அரசியலிற்குள் திணிக்க முடியாது (*நேர்காணல் 1 & நேர்காணல் 2*).

- **அரசியல் தலையீடு**

பிரதானமாக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதில் சிவில் சமூக அமைப்புக்கள் எதிர்நோக்குகின்ற சவால்களில் அரசியல்வாதிகளின் தலையீடு காணப்படுகின்றது. சபையில் தங்களது பங்குபற்றல் (எண்ணிக்கை) குறைந்து விடும் என்ற எண்ணத்தில் பெண்கள் அரசியலில் நுழைவதில் குறைந்தளவிலான ஆர்வத்தைக் காட்டுகின்றனர். பெண்களின் பிரதிநிதித்துவத்தில் கட்சிகள் காட்டுகின்ற குறைந்தளவிலான ஈடுபாடும் இவ்வமைப்புக்களுக்குச் சவால்களை ஏற்படுத்துகின்றன. 25 சதவீத ஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டு வந்த பின்னர் அமைப்பினூடாக பயிற்சி பெற்ற பெண்களைத் தாங்களாகவே முன்வந்து அமைப்பிடம் கேட்கின்றனர். இருந்தாலும் அதனை கட்டாயத்தின் பேரிலேயே செய்கின்றனர் (*நேர்காணல் 3*).

- **குடும்ப ஆதரவுமின்மை**

குடும்பத்தின் தலையீடு அதிகமாகவுள்ளது. குடும்பத்தின் ஆதரவு அல்லது ஒத்துழைப்பு பெண்களுக்குக் குறைவாகவே உள்ளது (*நேர்காணல் 3*).

- **நிதி ஒத்துழைப்புத் திறன் குறைவு**

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வருகின்ற பெண்களுக்கு அமைப்பினால் இயலுமான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், கட்சிகளின் நிதி ஒத்துழைப்புக்கள் சரிவர கிடைக்காமையினால், தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பெண்களால் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போகின்றது. அடுத்த தேர்தல்களில் அவர்கள் மீண்டும் போட்டியிட்டாலும் மக்கள் மத்தியில் அவர்கள் மீதிருந்த நம்பிக்கை இழக்கப்படுவதால், மீண்டும் அவர்கள் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பும் மிகக் குறைவு. இது பெண்களுக்கு அரசியல் மீதிருந்த ஆர்வத்தைக் குறைவடையச் செய்கிறது (*நேர்காணல் 4*).

**உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் சமமான பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள்**

சிவில் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அப்பால் பெண்கள் அரசியலிற்குள் நுழைவதற்கு முன்வர வேண்டும். நிறுவனங்களுக்குப் பெண்கள் ஒத்துழைத்து அவற்றின் செயற்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புக்களை வழங்க வேண்டும். பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்வதோடு மாத்திரம் நின்று விடாது, தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வர வேண்டும் *(நேர்காணல் 1*).

மக்களின் ஒத்துழைப்புக்கள் மிகவும் அவசியம். பெண் பிரதிநிதிகளை ஏற்றுக்கொள்வதற்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும். ஆண் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதற்குத் தயாராக இருப்பதைப் போன்று பெண் வேட்பாளர்களையும் நம்பி அவர்களுக்கு வாக்களிப்பதற்கும் தயாராக இருத்தல் வேண்டும் (*நேர்காணல் 3*).

அடுத்து அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் ஆகும். சம பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதற்கு நிறுவனங்களோடு அரசியல் கட்சிகள் இணைந்து பயணிப்பதனூடாக பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் முன்னேற்றத்தைக் காணமுடியும். சிவில் சமூக நிறுவனங்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான யாப்பு ரீதியான மாற்றங்களைச் சாத்தியமாக்க முடியும். ஏனெனில், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டதன் விளைவாக தேசிய விதவைகள் பட்டியலைச் சாத்தியமாக்குவதற்கு முடிந்தது (*நேர்காணல் 3*).

கட்சிகள் பெண் வேட்பாளர்களுக்கும் நிதி உதவிகளை வழங்க வேண்டும். இப்பிரதேசப் பெண்கள் பெரும்பாலும் பெரியளவிலான நிதிகளுக்கு ஆண்களையே தங்கியுள்ளனர். குடும்பத்தின் ஆதரவில்லாத சூழலில் கட்சிகள் இந்நிதி உதவிகளை வழங்குவதற்கு முன்வருதல் வேண்டும் (*நேர்காணல் 4*).

**முடிவுரை**

இவ்வாய்வானது "உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதில் சிவில் சமூகத்தின் வகிபாகம்: ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையை அடிப்படையாகக் கொண்ட விசேட ஆய்வு" என்ற தலைப்பின் கீழ் ஏறாவூர்பற்று பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதில் சிவில் சமூகங்களின் வகிபாகத்தினையும் அது எதிர்நோக்குகின்ற சவால்களையும் கண்டறிவதனையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தில் நேரடியாகவே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிக்கின்ற சிவில் சமூக நிறுவனங்கள் குறைவாக இருப்பினும், பெண்களின் வாழ்வாதாரம், திறன் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி போன்றவற்றை இலக்காகக் கொண்டு செயற்படுகின்ற நிறுவனங்களினூடாக பெண்கள் தங்களது பிரச்சினைகளையும் தீர்வுகளையும் அடையாளங்காண்பதற்கான திறன்கள் வளர்க்கப்படுகின்றன. பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாக நேரடியாகவே இயங்குகின்ற நிறுவனங்கள் அரசியல்மீது பெண்கள் கொண்டுள்ள தப்பபிப்பிராயம், குடும்ப ஆதரவு குறைவு, அரசியல் தலையீடு, பெண் பிரதிநிதிகள்மீது மக்களுக்குள்ள நம்பிக்கையின்மை மற்றும் குறைவான நிதி திறன் போன்ற காரணிகளினால் பெரும் சவால்களைச் சந்தித்து வருகின்றன.

சிவில் சமூகத்தினால் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் முன்னேற்றமடைந்துள்ளன. இவற்றுடன் இந்நிறுவனங்கள் எதிர்பார்க்கின்ற ஒத்துழைப்புக்களும் கிடைக்கப்பெறும் பட்சத்தில் இவற்றினால் அரசியலில் ஏற்பட்டுள்ள பாலின இடைவெளியைக் குறைக்க முடியும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

கமலா லியனகே, (2012). இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் : சவால்களும் எதிர்ப்பார்ப்புக்களும், Available at URL: https://library.fes.de/pdf-files/bueros/sri_lanka/10039.pdf PDF

கிஷாசாலி பின்ரோ ஜெயவர்த்தன மற்றும் சூலனி கொடிக்கார, (2003). இலங்கையில் பெண்களும் ஆட்சிமுறையும், இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், கொழும்பு.

சரவணன், என், (2001). இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும். மூன்றாவது மனிதன் பதிப்பகம். கொழும்பு.

கண்ணேராஜ், அ, (2023), இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு: சவால்களும் சந்தர்ப்பங்களும், Available at: https://www.irjtsjournal.org/

பௌசர்.எம்.ஏ.எம், (2019), *இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: 2018ம் ஆண்டைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மையப்படுத்திய ஆய்வு*, Available at: https://www.researchgate.net/profile/Mohamed_Anifa_Fowsar/publication/346337101_Political_Representation_of_Women_in_Local_Government_in_Sri_Lanka_A_Study_based_on_the_Local_Government_Elections_of_2018.pdf PDF

வேலுப்பிள்ளை குணரெத்தினம், (2015), *மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் பங்குபற்றுதலில் பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளும் சவால்களும்*, Available at: https://www.seu.ac.lk/researchandpublications/symposium_fia/ PDF

Aliff. S & Sarjoon. A, (2010), *The Role of Civil Society in Democratic Governance: State-Civil Society Relations in Democratization : Special Focus on Contemporary Sri Lanka* Available at: http://ir.lib.seu.ac.lk/123456789/424

Election Commision . உள்ளூர் அதிகார சபைகளின் பெயர்ப்பட்டியல், Available at:https://elections.gov.lk/web/wp-content/uploads/pdf/local_authority/Local%20Athorities_T.pdf PDF [Accessed 6 Jul. 2023].

Election Commission of Sri Lanka, (2011), Local Authorities Election Results 2011, Available at: https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/local-authorities-elections/local-authorities-2011.pdf PDF [Accessed 6 Jul. 2023].

Election Commission of Sri Lanka. (2018). *Registered Number of Electors according to the polling division 2007-2018* . https://elections.gov.lk/web/wp-content/uploads/openData/reg-electors-2007-2018.pdf PDF

Hewamanne. S, (2013), *Gendering the Internally Displaced: Problems Bodies, Fluid Boundaries and Politics of Civil Society Participation in Sri Lanka* URL: https://vc.bridgew.edu/jiws/vol11/iss1/11

Oakley. E. R, (2011), *Analyzing Women's Participation in Local Government: Examining the Role of Brokers in Post-war Eastern Sri Lanka*, URL: https://studenttheses.uu.nl/handle/20.500.12932/8413

Anon, *Breaking the Bias: Increasing Women's Political Participation in Sri Lanka*, Available at: https://www.ips.lk/talkingeconomics/2022/03/08/breaking-the-bias-increasing-womens-political-participation-in-sri-lanka/.

*According to the UN Women - IPU 'Women in Politics 2023' Map: Women's participation in politics is still far from equality, United Nations in Türkiye*, Available at: https://turkiye.un.org/en/224322-according-un-women-ipu-women-politics-2023-map-womens-participation-politics-still-far#:~:text=Data%20reveals%20wide%20global%20inequalities [Accessed 18 Jul. 2023].

IFES, (2022), *Women's Political Representation in Sri Lanka: Electoral System Analysis and Recommendations*, Available at: https://www.ifes.org/publications/womens-political-representation-sri-lanka-electoral-system-analysis-and.

Parliament, (2015), *Parliament of Sri Lanka - Lady Members*, Available at: https://www.parliament.lk/lady-members.

# இலங்கையில் ஜனநாயக முறைமையைப் பாதுகாத்தல்: ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆய்வு

**Chandramani Jeyanthi**

Department of Social Sciences, Political Sciences, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

chandramanijeyanthi@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

1978 ஆம் ஆண்டு இலங்கையின் அரசியல் யாப்பில் செய்யப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமையின் மூலம் ஜனாதிபதிக்கு முக்கிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே சமயம் நாடாளுமன்றத் தலைமையிலான ஜனநாயக கட்டமைப்பும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அரசின் வினைத்திறனான செயற்பாடு, அரசியல் நிலையாக்கம் மற்றும் ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளை உறுதிப்படுத்தல் என்பதற்காக நிறைவேற்று ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது. அரசாங்கத்தின் நிலைமை மற்றும் தொடர் நிறைவேற்று அதிகாரத்தை உறுதிசெய்வதில் முக்கிய பங்கு ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது. இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பு மற்றும் ஜனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்த முன்னேற்றமாக அமைந்தாலும், மக்கள் நலனில் மையமாக்கப்பட்ட ஜனநாயக சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. இந்த ஆய்வு, இலங்கையின் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிர்வாகம், சட்டம், பாதுகாப்பு சார்ந்த விசாலமான அதிகாரங்கள் ஜனநாயகத்தின் நிலைத்தன்மையையும் செயற்பாடுகளையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்கிறது. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிறகு உருவான ஜனாதிபதி முறைமை, வலுவான தலைமையை உருவாக்கியுள்ளதுடன், அதிகாரப் பிரிப்பு, பொறுப்பாளர் துறைகள், மற்றும் குடிமக்களின் உரிமைகள் மீதான பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆய்வில் அரசியலமைப்பு ஆவணங்கள், நாடாளுமன்ற விவாதங்கள், முந்தைய ஆய்வுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis) மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் நிர்வாக அதிகாரங்களுக்குத் தெளிவான வரம்புகள் மற்றும் அமைப்புச் சீர்திருத்தங்கள் அவசியம் என்பதே இந்த ஆய்வின் பரிந்துரை ஆகும்.

***திறவுச் சொற்கள்:*** *நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி, ஜனநாயகத்தன்மை, அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்கள்.*

## அறிமுகம்

ஒரு நாட்டில் ஜனநாயக முறை என்பது இன்றியமையாத ஒரு விடயமாகும். ஜனநாயகம் என்பது மக்களாட்சியைக் குறிக்கின்றது. ஜனநாயக முறைமை மக்கள் இறைமை, சமத்துவம், சுயாட்சி ஆகிய மூன்று கருத்துக்களைச் சுற்றி நிற்கின்றது. மக்கள் இறைமை என்பதும்

ஜனநாயக அரசியல் முறை என்பதும் மக்கள் தமக்குள்ள அதிகாரத்தை தம்மைத் தாமே ஆளுமளவுக்குச் செயல்படுத்தாது தம்மை ஆளுவோரை மாற்றி அமைக்கும் அளவுக்குச் செயல்படுத்துகின்றனர் என்பதாகும் (சிவராஜா, 2008). இன்று பெரும்பாலான நாடுகளில் ஜனநாயகம் என்பது காணப்படுகின்றது. இலங்கையை பொறுத்தவரை ஜனநாயக முறைமை என்பது இலங்கையில் ஆட்சி அமைப்பைப் பொறுத்துக் காணப்படுவதை நோக்கலாம். அதாவது, இன்றைய நவீன அரசியல் உலகில் பல்வேறு ஆட்சி முறைகள் காணப்பட்டாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை என்பது பிரதான ஆட்சி முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையில் நிறைவேற்றுத் துறையானது டொனமூர் அரசியல் அமைப்பில் நிர்வாகக் குழுமுறையூடாக ஆரம்பமானது (சிவராஜா,2006). அதனைத் தொடர்ந்து பிற்பட்ட காலத்தில் நிறைவேற்றுத்துறை வலுவற்ற நிலையை அடைந்தது. 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பு நிறைவேற்றுத் துறைக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஜனாதிபதி முறைமையை உருவாக்கியது.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ முறையின் நிலை தற்போதைய அரசியலமைப்பின்படி தீர்மானிக்கப்படுகின்றது. எனவே, அரசியலமைப்பு திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையைப் பாதிக்கலாம். 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் கீழ் இதுவரை 22 திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சில அரசியலமைப்புத் திருத்தங்கள் ஜனாதிபதியின் ஜனநாயக முறையைப் பாதுகாக்கும் நோக்கில் ஜனாதிபதியின் அதிகாரங்கள், செயல்பாடுகள் தொடர்பில் பல்வேறு விடயங்களைக் குறிப்பிடுகின்றன. இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை ஆராய்தல், ஜனநாயகத்திற்கான அவற்றின் தாக்கங்களை மதிப்பீடு செய்தல், ஜனநாயக மீறல்களுக்கு எதிராகப் பாதுகாக்கக்கூடிய சட்டங்களை அடையாளம் காணுதல் ஆகியவற்றை இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது. அத்தோடு, நடைமுறையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் ஜனநாயக முறையை எவ்வாறு பாதுகாக்கின்றன என்பது தொடர்பாகவும் இவ்வாய்வானது கவனம்கொள்கின்றது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாக அடையாளம் காணப்பட்டாலும், அதன் ஆட்சி முறையின் நிலைத்தன்மை மற்றும் நியாயமான அதிகாரப் பகிர்வு குறித்த சிக்கல்கள் நீண்டகாலமாக விவாதிக்கப்படுகின்றன. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் அமையப்பெற்ற நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, நாட்டின் நிர்வாகம், சட்டத்துறைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்மீது பெரும் செல்வாக்கைக் கொண்டுள்ளது. இந்த வகையான அதிகார மையப்படுத்தல், ஒரு புறம் வலுவான நிர்வாகத் தலைமைத்துவத்தை வழங்கினாலும், மற்றொரு புறம் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களான அதிகாரப் பிரிப்பு, பொறுப்பியல், குடிமக்களின் பங்கேற்பு ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய அபாயத்தை ஏற்படுத்துகிறது. இந்த ஆய்வு, ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் அவர் மேற்கொள்ளும் முக்கிய தொழிற்பாடுகள் இலங்கையின் ஜனநாயக நடைமுறைகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை பகுப்பாய்வு

செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. இதில் அரசியலமைப்புச் சட்டங்கள், அரசியல் வரலாறு, தற்போதைய செயல் நடைமுறைகள் ஆகியவை முக்கிய ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுகின்றன.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பு பல நாடுகளைப் போலவே, சுதந்திரமான நீதித்துறையையும் நீதி நிர்வாகத்தின் அடிப்படையையும் குறிப்பிடுகிறது. இலங்கைச் சூழலில் நீதித்துறையின் சுதந்திரத்தில் ஜனாதிபதியின் தலையீட்டைச் சுற்றியுள்ள நுணுக்கமான இயக்கவியல் ஆராயப்படுகின்றது. நீதித்துறை அமைப்பின் ஒருமைப்பாடு மற்றும் ஜனநாயகக் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதில் அதன் முக்கிய பங்கு மற்றும் சட்டத்தின் ஆட்சி இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தில் ஜனாதிபதியின் தலையீட்டின் தாக்கம் தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன (L.Sanduruwan and W.M.Piyumali,2015).

இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் எவ்வாறு உள்ளன என்பதைப் பகுப்பாய்வு செய்வதோடு அரசியலமைப்பின் மூலம் உயர் நீதிமன்றங்கள், நீதித்துறையில் ஜனாதிபதியின் தலையீடும் ஆராயப்படுகின்றது. நீதிமன்றமானது ஜனாதிபதியின் அதிகாரங்களை வடிவமைத்துள்ளது. நீதி விளக்கச் செயல்முறை, நீதித்துறையைப் பகுப்பாய்வு செய்வதில் பல்வேறு தலைவர்களின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பாகவும், இலங்கை நீதித்துறையின் போக்குகளைப் பகுப்பாய்வு செய்கின்றது (S.Dias, 2013).

1978இல் இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மற்றும் அதன் விளைவுகள் காணப்பட்டுள்ளன. பரந்தளவிலான ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பாகக் குறிப்பிடுவதோடு, இலங்கையின் வரலாறு மற்றும் அரசியல் பற்றிய ஒரு தசாப்த கால ஆராய்ச்சி பற்றியும் விரிவாகக் கூறுகின்றது. மேலும், ஜனநாயகத்தின் அடிப்படையையும் விளக்கி நிற்பதோடு நிறைவேற்று ஜனாதிபதி முறையானது மிகவும் நிலையான, மையப்படுத்தப்பட்ட விடயமாகவும் ஜனாதிபதி முறைமையின் விளைவுகளை வெளிப்படுத்துகின்றது (Rajesh Venugopal, 2014).

ஜனாதிபதி பதவி மற்றும் தேசியத்தைத் தீர்மானிப்பது தொடர்பாகவும் ஆழமாகப் பிளவுபட்ட சமூகங்களுக்கான அரசியலமைப்பு வடிவமைப்புத் தனித்துவமான துணைப்பகுதியாக மாறிவிட்டது. ஒப்பீட்டு அரசியலமைப்பு இன, பன்னாட்டு, பல்தேச ஜனநாயகங்கள் மூலம் வடிவமைக்க முடியும் என்ற வகையில் அமைகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறை அரசாங்கத்தின் ஒரு வடிவம் என்ற நோக்கத்துடன் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே, 1978 இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதி முறை, ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றியும் சமகால இலங்கைக்கு அவற்றின் பொருத்தப்பாடு தொடர்பாகவும் வெளிப்படுத்துகின்றது (Kumaravadivel Guruparan, 1891).

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை நாடு பல தசாப்தங்களாக விவாதித்து வருகின்றது. கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இந்த விடயத்தில் மீண்டும் கவனம் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும், இந்த

அதிகாரத்தைக் கைவிடத் தயாராக இருக்கும் ஒரு தலைவரை இலங்கை இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்ற வகையில் ஜனாதிபதியின் அதிகாரமும் செயற்பாடும் விமர்சிக்கப்படுகின்றது (மீரா சீனிவாசன், 2023).

1978ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அப்படியே வைத்திருக்க வேண்டுமா, சீர்திருத்த வேண்டுமா அல்லது இல்லாதொழிக்க வேண்டுமா என்ற விவாதம் பற்றியும், இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி பதவியின் தன்மை மற்றும் மிகச் சமீபத்திய அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயல்முறை பற்றியும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நிபந்தனையின்றி விமர்சிக்கவும், அதனை இல்லாதொழிப்பதற்கான சாத்தியக் கூறுகள் மட்டுமன்றி, இலங்கையில் பிரதமர் முறைமையின் சாத்தியக் கூறுகள் குறித்தும் மிகவும் யதார்த்தமாக விளக்கமளிக்கப்படுகின்றது. ஆனால், ஏன் ஜனாதிபதி முறை இலங்கைக்குத் தேவையில்லை அதற்கான காரணங்கள் பற்றிய கருத்துக்கள் குறிப்பிடப்படவில்லை (Kalana Senaratne,2019).

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கையின் ஜனநாயகம் மற்றும் ஆட்சிமுறையில் ஏற்பட்ட எண்ணற்ற தாக்கங்கள், ஜனாதிபதி முறையானது மிக மோசமாகவும் அரசியலமைப்பிற்குள் சிதைக்கப்பட்ட ஒரு முறையாகவும், இலங்கையின் அரசியல் அமைப்பின் ஜனநாயகக் கூறுகளைப் பலவீனப்படுத்திய காரணிகள் என்பன ஆராயப்படுகின்றன. மேலும், இலங்கையின் பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்று ஜனாதிபதி முறையைச் சீர்திருத்துவதற்கான அதன் தாக்கங்கள் குறித்தும் ஆய்வுசெய்யப்படுகின்றது (அஞ்சலி நடராஜன், 2022).

இலங்கையில் ஜனாதிபதி முறைமையின் அறிமுகமானது, இலங்கையின் அரசியலில் நிறைவேற்று அதிகாரத்திற்குக் கணிசமான அதிகாரங்களை வழங்கும் ஜனாதிபதி முறைமையால் வகைப்படுத்தப்படுகிறது. இந்த அதிகாரங்களுக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் இடையிலான சமநிலையைப் புரிந்துகொள்வது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு முக்கியமானதாகும். மேலும், அரசியலமைப்புக் கட்டமைப்பு, ஜனாதிபதி அதிகாரங்களின் வரலாற்றுப் பரிணாமம் மற்றும் ஜனநாயக நிர்வாகத்திற்கான அவற்றின் தாக்கங்களும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன (Gunaratne, 2019).

அரசியலமைப்புக் கட்டமைப்பு மற்றும் 1978 அரசியலமைப்பானது, அதிகாரத்தை மையப்படுத்திய ஒரு நிறைவேற்று ஜனாதிபதி முறையை நோக்கி குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் சாத்தியமான சர்வாதிகாரத்தையும் செயல்படுத்துகிறது. 19ஆவது திருத்தச் சட்டம் ஜனாதிபதி அதிகாரங்களை மாற்றியமைக்க முயற்சித்தது, இது பொறுப்புக்கூறலுக்கான பொதுக் கோரிக்கையைப் பிரதிபலிக்கிறது. இவ்வாறு பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டாலும், 19ஆம் திருத்தச் சட்டத்தின் தோற்றத்திற்கான விளைவுகள் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை (டி.சில்வா, 2018).

**ஆய்வு பிரச்சினை**

1978 ஆம் ஆண்டு இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நிறுவப்பட்டது. இந்த அமைப்பு திறமையான நிர்வாகத்திற்காக வடிவமைக்கப்பட்டிருந்தாலும், ஜனநாயக அமைப்புக்களையும் பொறுப்புக்களையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாக விமர்சிக்கப்படுகின்றது. இலங்கையின் 1978 அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள விசாலமான நிர்வாக மற்றும் சட்டவியல் அதிகாரங்கள், ஜனநாயக முறைமையின் சமநிலையைப் பாதிக்கும் வகையில் செயல்படுகின்றனவா என்பது இந்த ஆய்வின் பிரதான பிரச்சினையாகும். அதாவது, ஜனநாயகத்தின் அடிப்படையான குணாதிசயங்களான அதிகாரப் பிரிப்பு, பொறுப்பியல், குடிமக்களின் உரிமைகள் ஆகியவற்றை ஜனாதிபதி முறைமை எவ்வாறு தடுக்கின்றது என்பதையே இக்கட்டுரை ஆராய்கிறது. இவ் ஜனாதிபதி ஆட்சி முறையானது தேசிய நலனைப் பாதுகாத்தல் என்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டதோடு, இம்முறையானது நாட்டினுடைய ஜனநாயகத்தை வலுப்படுத்தும் எனவும் கூறப்பட்டது. எனவே, தேசிய நலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், ஜனநாயக முறையைப் பாதுகாப்பதற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் இலங்கையில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. மேலும், இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை, நடைமுறை ரீதியாக தற்போதைய சூழலில் ஜனாதிபதி பெற்ற அதிகாரம் மற்றும் செயல்பாடுகளின் ஊடாக இராணுவ ஆட்சி அல்லது சர்வதிகார ஆட்சி உருவாகக்கூடும் என்ற அச்சம், தற்போதைய அரசியலமைப்பு கட்டமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட குறிப்பிட்ட அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் என்ன, இந்த அதிகாரங்கள் எவ்வாறு நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றன என்பனவும் இவ்வாய்வின் பிரச்சினைகளாக உள்ளன.

**ஆய்வு நோக்கம்**

இலங்கையின் ஜனநாயக முறைமையைப் பாதுகாத்தல் மற்றும் சவால்களின் பின்னணியில், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள், ஜனநாயகத்தின் நிலைத்தன்மை, பொறுப்பியல் மற்றும் அதிகாரப் பிரிப்பு ஆகியவைகளுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராய்வதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**துணை நோக்கம்**

- நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக இலங்கை ஜனாதிபதியின் அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான அதிகாரங்களைப் பகுப்பாய்வு செய்தல்.
- ஜனாதிபதியின் அதிகாரத்திற்கும் ஜனநாயக நெறிமுறைகளைப் பாதுகாப்பதற்குமான நேர்கணியத் தொடர்புகளைக் கண்டறிதல்.
- ஜனாதிபதியின் அதிகாரங்களைச் சட்டத்துறை மற்றும் நீதித்துறைகள் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதனைக் கண்டறிதல்.

- ஜனநாயக கட்டமைப்பைப் பலப்படுத்த செய்யப்படும் சீர்திருத்தங்களையும் அதனூடாக ஜனநாயகம் பாதுகாக்கப்படுவதையும் மதிப்பீடு செய்தல்.
- நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதன் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வழிமுறைகளைச் சிபாரிசு செய்தல்.

**ஆய்வின் கருதுகோள்**

ஜனாதிபதியின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஜனநாயகத்தை பலப்படுத்தல் என்பது இவ்வாய்வின் கருதுகோளாக அமைகிறது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு வடிவமாகக் காணப்படுகிறது. இவ்வாய்வு வடிவம், சொற்கள், கருத்துக்கள், எண்ணங்கள், சொற்றொடர்கள் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்யப்படும் ஆய்வினைக் குறிக்கிறது. ஆய்வு தொடர்பான தரவு சேகரிப்பு முறையானது இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையாகும். இவ்வகையில், இவ்வாய்வுக்காக இரண்டாம் நிலை தரவுகள் இலங்கை அரசியலமைப்பு தொடர்பான நூல்கள், ஆய்வு அறிக்கைகள் என்பனவற்றில் இருந்தும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ்கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இலங்கை ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பான சீர்திருத்தங்கள் வெளிவந்த சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள் என்பனவற்றில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. இதனைவிட இன்றைய நவீன தொழில்நுட்ப மூலத்தில் ஆய்வாளர்களின் ஆய்வுகளுக்கான தகவல்களை வழங்குவதில் முக்கியத்துவம் மிக்கதாக விளங்கும் இணையத்தளங்களில் இருந்தும் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் பல்வேறு திருத்தங்கள் காலத்தின் தேவைக்கு ஏற்பவும் ஜனரஞ்சக நோக்கிலும் ஒரு சில ஆட்சியாளர்களின் சுயநலப் போக்கின் நிமித்தமும் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது. அந்தவகையில், ஜனாதிபதியின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு இக்கட்டுரை நோக்கப்படுகிறது.

வளர்ச்சியடைத்து வருகின்ற அரசியல் கலாசாரத்தைக் கொண்டு காணப்படுகின்ற தெற்காசிய நாடுகளில் இன, மத, மொழி, கலாசார ரீதியாக பல்வேறு சவால்களையும் பிரச்சினைகளையும் இலங்கை போன்ற நாடுகள் நாளாந்தம் எதிர்கொள்கின்றன. சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளின் அனுமதியுடன் வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து ஜனாதிபதியிடம் காணப்படுகின்ற அதிகாரங்களே இதற்குத் துணையாக அமைந்துள்ளன. இவை போன்ற பல காரணிகளின் நிமித்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்குக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டும். பொலிஸ், நீதி, தேர்தல் பகிரங்க சேவை என்பன அரசியல் தலையீடுகளின்றி சுதந்திரமாக இயங்குதல் வேண்டும். இதற்கேற்ப அரசியல் யாப்பில்

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற இலங்கை மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளின் பயனாகவே இத்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இருப்பினும், அரசியல் தலைமைகளின் சுயநலப்போக்கின் காரணமாக இவற்றில் மாற்றங்களும் புதிய திருத்தங்களும் கொண்டுவரப்படுகின்றமை யாவரும் அறிந்த விடயமேயாகும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் ஊடாக இலங்கையில் பாராளுமன்ற முறை நீக்கப்பட்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை கொண்டுவரப்பட்டது. எனவே, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட 17, 18, 19, 20, 21 திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் ஜனநாயகத்தை எவ்வாறு பாதுகாக்குகின்றது மற்றும் ஜனாதிபதி முறை எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக இக்கட்டுரை கவனம்கொள்கிறது. இவ்வாறான நிலை இலங்கை நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தை வலுவடையச் செய்கின்ற தன்மைகள் காணப்படுகின்றன.

**யாப்புத் திருத்தங்கள் தொடர்பான பகுப்பாய்வு**

இலங்கையின் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தம், குறிப்பாக சட்டமியற்றும் மற்றும் நிர்வாகப் பணிகளில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் உட்பட நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்தும் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தியது. இந்த அரசியலமைப்புத் திருத்தம் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துவதையும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதையும் நிர்வாகக் கிளையின் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளைக் குறைப்பதனையும் நோக்கமாக கொண்டது. அந்த வகையில், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய ஏற்பாடுகளை இத்திருத்தச் சட்டம் மேற்கொண்டுள்ளது. அவற்றில் பிரதான விடயமாக அரசியலமைப்புப் பேரவையை நிறுவியது. இது உயர் பதவியில் உள்ள பொது அலுவலகங்களுக்கான நியமனங்களை மேற்பார்வையிடும் ஒரு சுயாதீன அமைப்பாகும். தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு (இலங்கை அரசியலமைப்பு, 17ஆவது திருத்தம்) போன்ற ஆணைக்குழுக்களுக்கு நியமனங்களைச் செய்யும்போது, அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய ஜனாதிபதி செயற்பட வேண்டும். இந்த ஏற்பாடு, ஒருதலைப்பட்சமாக தனிநபர்களை இந்தப் பதவிகளுக்கு நியமிக்கும் ஜனாதிபதியின் திறனைக் குறைத்தது. இதன் மூலம் முக்கியமான அரச நிறுவனங்களின் மீதான நிர்வாகத்தின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துகிறது.

ஆனால், அடுத்து வந்த 18ஆவது திருத்தமானது அரசியலமைப்புச் சபைக்குப் பதிலாக பாராளுமன்ற சபையாக மாற்றப்பட்டது, இது முக்கிய நிறுவனங்களுக்கான நியமனங்களின் சுதந்திரத்தைக் குறைத்தது. பேரவை மேற்பார்வையை வழங்குவதற்கு நோக்கம் கொண்டிருந்தாலும், அது பெரும்பாலும் ஜனாதிபதியின் செல்வாக்கின் கீழ் ஒரு ஆலோசனைக் குழுவாகச் செயல்பட்டது. இதன் மூலம் நிறைவேற்று அதிகாரத்தின் சட்டமன்ற

நடவடிக்கைகளைச் சரிபார்ப்பதில் அதன் செயல்திறனைக் கட்டுப்படுத்துகிறது. இதன் ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஜனநாயகத்திற்கு எதிராகவே காணப்பட்டன.

இலங்கையின் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம், ஜனாதிபதியின் சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது. 1978 அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட விரிவான அதிகாரங்களைக் குறைப்பதற்கான பரந்த சீர்திருத்தமாக அறிமுகப்படுத்தப்பட்டது. 19ஆவது திருத்தத்தில் உள்ள சட்டவாக்க விதிகள் மற்றும் ஜனாதிபதியின் சட்டமியற்றும் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதில் அடிப்படையாக இருந்தது. மேலும், பாராளுமன்ற அதிகாரத்தை மீட்டெடுத்து ஜனாதிபதி அதிகாரம் மீதான பல கட்டுப்பாடுகளை மீண்டும் நிலைநாட்டி பாராளுமன்றத்தின் பங்கைப் பலப்படுத்தியது. ஒருதலைப்பட்சமாக முடிவெடுப்பதைக் குறைத்து, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிரதமர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின்படி ஜனாதிபதி செயல்பட வேண்டும் என்கிறது. இந்த மாற்றம் பாராளுமன்ற மேற்பார்வையின்றி ஜனாதிபதியால் சட்டமியற்றும் செயல்முறைகளில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதை உறுதிப்படுத்தியது.

1978 அரசியலமைப்பின் கீழ், ஒரு வருடத்தின் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தது. விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர்த்து (பிரிவு 70) 19ஆவது திருத்தம் இந்த்த காலத்தை நான்கரை ஆண்டுகளாக நீட்டித்தது. இந்த விதியானது, சட்டமியற்றும் கிளையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்த அல்லது கையாள்வதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தும் ஜனாதிபதியின் திறனைக் குறைத்தது. இத்திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகவும் இருந்தது. ஆனாலும், அடுத்து வந்த திருத்தச் சட்டம் அதனைத் தலைகீழாக மாற்றியது.

20ஆவது திருத்தம் 19ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பல சீர்திருத்தங்களைத் தலைகீழாக மாற்றி, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கணிசமாக விரிவுபடுத்தியது. ஜனாதிபதியின் சட்டமியற்றும் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்குப் பதிலாக ஜனாதிபதியின் அதிகாரத்தை மேம்படுத்தியது. முன்பு நிறுவப்பட்ட அதிகார பகிர்வை குறைத்தது. பாராளுமன்றத்தைத் தேர்தல் முடிந்து ஒரு வருடத்திற்குப் பிறகு கலைக்கும் ஜனாதிபதியின் திறனை மீண்டும் இத்திருத்தம் நிலைநாட்டியது (பிரிவு 70). இந்த மாற்றம் ஜனாதிபதிக்குச் சட்டவாக்கக் கிளையின்மீது அதிக செல்வாக்குச் செலுத்த அனுமதித்தது. இந்த ஏற்பாடு பாராளுமன்றத்தின் சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தியது. சட்டமியற்றும் செயல்முறைகளில் ஜனாதிபதியின் மேலாதிக்கப் பங்கை மீண்டும் நிறுவியது.

19ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தில் அமைச்சர்களை நியமிப்பதில் பிரதமரின் ஆலோசனை முக்கியம் என்பதை அவதானிக்கலாம். இருப்பினும், மூல யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று 20ஆவது திருத்தம் ஊடாக ஜனாதிபதி அமைச்சர்களைச் சுயவிருப்பில் நியமிக்கலாம். இவற்றின் ஊடாக தன்னிச்சையான செயல்பாடுகள் அதிகரிக்கவும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. எனவே, 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில்

உள்ளது போன்று இருபதாவது திருத்தம் மூலம் ஜனாதிபதி விரும்பியபோது பிரதமரைப் பதவி நீக்க முடியும். இது ஜனநாயகத்தின் மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. எனினும், 19ஆவது திருத்தத்தில் முடியாத நிலையே காணப்பட்டது.

இலங்கையின் அரசியலமைப்பின் தற்போது நடைமுறையில் உள்ள 21ஆவது திருத்தமானது, ஜனாதிபதியின் சட்டமியற்றும் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதன் மூலமும், முன்னர் இல்லாமல் செய்யப்பட்ட ஜனநாயகத் தடைகள் சமநிலைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலமும் நிர்வாகக் கட்டமைப்பை மறுவடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. 20ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி பதவிக்கு வழங்கப்பட்ட விரிவான அதிகாரங்களை இரத்து செய்ய முற்பட்டது. பாராளுமன்ற இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியதோடு முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தியது.

17ஆவது திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழு போன்றவை நிறைவேற்று அதிகாரத்தின் தலையீடு இன்றி, தன்னாட்சியுடன் செயற்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதிசெய்வதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் தேர்தல் செயல்முறைகளில் ஜனாதிபதியின் செல்வாக்கின் சாத்தியம் குறைகிறது (இலங்கை அரசியலமைப்பு, 17ஆவது திருத்தம்).

பல முக்கிய நியமனங்களுக்கு அரசியலமைப்புப் பேரவையை ஜனாதிபதி ஆலோசிக்க வேண்டியதன் மூலம், 17ஆவது திருத்தம் அதிகாரப் பகிர்வு மற்றும் இருப்புமுறையை அறிமுகப்படுத்தியது. இது அரசியல் விடயங்களுக்கு எதிரான ஜனாதிபதியின் திறனை மட்டுப்படுத்தியது மற்றும் பொது நியமனங்களைத் தகுதி மற்றும் பக்கச்சார்பற்ற தன்மையுடன் சீரமைத்தது. எனவே, இவ்விடயம் ஜனாதிபதியின் அதிகாரங்களைச் சமநிலைபடுத்தி ஜனநாயகத்தை வலுப்படுத்தியது. சில நிபந்தனைகளின் கீழ் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி தக்க வைத்துக் கொண்டாலும், சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவியதன் மூலம், அதன் செயற்பாடுகளை ஆதரிக்கும் நிறுவனங்கள் ஜனாதிபதியின் செல்வாக்கிற்குக் குறைவாக இருப்பதை உறுதிசெய்ததன் மூலம் பாராளுமன்றத்தின் சுயாட்சியை மறைமுகமாக பலப்படுத்தியது.

1978 ஆம் ஆண்டு மூல யாப்பினை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி சில பதவிகளுக்கான ஆட்களையும், குறிப்பிட்ட ஆணைக்குழு உறுப்பினர்களையும் தன் விருப்பப்படி நியமிக்கலாம். இருப்பினும், 17ஆம் 19ஆம் திருத்தம் விருப்பப்படி நியமிக்க முடியாது என வரையறை விதித்திருந்தது. எனினும், 18ஆம் 20ஆம் திருத்தங்கள் விருப்பப்படி நியமிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை ஜனரஞ்சகமான விடயம் அன்று. அதாவது, நியமனங்கள் மேற்கொள்ளும் போது ஜனாதிபதி பாராளுமன்ற பேரவையின் அவதானிப்பைப் பெற வேண்டுமாயின் அதன் முடிவுக்குக் கட்டுப்படத் தேவையில்லை என 20ஆவது யாப்புத் திருத்தம்

கூறுகின்றது. 18இலும் இவ்வாறே காணப்படுகின்றது. 17ஆம் 19ஆம் அரசியலமைப்புப் பேரவை முடிவுக்கு ஜனாதிபதி கட்டுப்பட வேண்டும் என்ற நிலைமை காணப்படுகின்றது. இரண்டாம் குடியரசு அரசியலமைப்புப் பேரவை, பாராளுமன்றப் பேரவை பற்றி ஆரம்பத்தில் குறிப்பிடப்படவில்லை. 17ஆம் 19ஆம் யாப்புத் திருத்தங்களில் அரசியலமைப்புப் பேரவை காணப்பட்டது. மேலும், 18ஆம் 20ஆம் திருத்தங்களில் பாராளுமன்றப் பேரவை காணப்பட்டது.

1978ஆம் ஆண்டு யாப்பில் பாதுகாப்பு அனர்த்தம் தொடர்பான கட்டுப்பாடுகள் இல்லை. எனினும், பிற்பட்ட காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக பயங்கரவாதச் சட்டம், அவசர காலச் சட்டங்கள் பிறப்பிக்கப்படும் நிலை காணப்பட்டது. 19ஆவது திருத்தத்தில் அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டு இருந்தது. எனினும், இருபதாவது திருத்தச் சட்டம் ஊடாக ஜனாதிபதிக்கு நாட்டின் பாதுகாப்பு அனர்த்தங்களின் தாக்கத்தினால் மீண்டும் பயங்கர வாத, அவசர கால சட்டங்கள் பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி பதவியானது பிரான்சிய அமெரிக்க ஜனாதிபதிக்கு நிகரான அதிகாரங்களைப் பெறும் நோக்கில் இரண்டாம் குடியரசு யாப்பு தோற்றம் பெற்றது. இதன் காரணமாக ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத தாக்கல் செய்ய முடியாது என்ற ஏற்பாடு மூல யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், 19ஆவது யாப்பு திருத்தம் இவ்வாறான ஏற்பாட்டைத் தவிர்த்து இருந்தது. எனினும், இருபதாவது திருத்தம் மீண்டும் ஜனாதிபதி பதவியைப் பலமடையச் செய்துள்ளது. ஜனாதிபதி விரும்பிய அமைச்சுக்களை வைத்திருக்கலாம். இவ்வாறான நிலை மூலயாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, 17ஆம் 19ஆம் திருத்தங்கள் இந்நிலையை நீக்கி இருந்தன. இருப்பினும், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிக்கு மாத்திரம் குறித்த மூன்று அமைச்சுக்களை வைத்திருக்க யாப்பு அனுமதித்திருந்தது.

18ஆம் 20ஆம் திருத்தங்கள் மீண்டும் ஜனாதிபதிக்கு அமைச்சுகள் தொடர்பான அனுமதியினை வழங்கியிருந்தன. ஜனாதிபதி மூல யாப்பின் பிரகாரம் பாராளுமன்றச் சட்டம் மூலம் ஒரு வாரத்தின் முன்னர் வருத்தமானியில் வெளியிடப்பட வேண்டும். இதனை 19ஆவது திருத்தம் இரண்டு வாரங்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது 20ஆவது திருத்தம் மீண்டும் ஒரு வாரமாக மட்டுப்படுத்தியுள்ளது. இரண்டாம் குடியரசு யாப்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வயதில்லை 30 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 19ஆவது திருத்தம் அதனை 35 என வரையறை செய்திருந்தது. பின்னர் 20ஆவது திருத்தம் அதனை மீண்டும் 30 என்ற வயதிலே கொண்டு வந்தமை அவதானிக்க முடிகின்றது.

நாடாளுமன்றம் நிராகரித்த சட்ட மூலத்தை ஜனாதிபதி மக்கள் தீர்ப்பில் சட்டமாக்கலாம். இம்முறைமை கௌரவ ஜே.ஆர். யாப்பில் ஆரம்பத்தில் காணப்பட்ட விடயமாகும். இதன் மூலம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது யாவரும் அறிந்த விடயமாகும். பின்னர் இதனை 19ஆவது திருத்தம் நீக்கிய போதும் மீண்டும் கௌரவ கோத்தாபாய ராஜபக்ஷ தனது பதவியை உறுதியாக்கக் கொண்டு வந்ததாக கூறப்பட்டது.

ஜனாதிபதியின் கடமைகள் தொடர்பாகப் பார்க்கும்போது, பத்தொன்பதாவது திருத்தத்தில் நான்கு வகையான கடமைகள் அறிமுகம் செய்யப்பட்டன. அவற்றில் இருபதாவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கான நான்கு கடமைகளில் மூன்று நீக்கப்பட்டு, நீதி நியாயமான தேர்தலை நடத்தும் கடமை ஜனாதிபதிக்கு உள்ளது எனக் குறிப்பிடுகின்றது. இவற்றோடு இருபதாவது திருத்தத்தில் நீக்கப்படாத 19ஆவது திருத்தத்தின் அம்சங்கள் தேர்தல்களை நீதி நியாயமாக நடத்த ஜனாதிபதி பொறுப்பானவர் என்கிறது. மேலும், ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகவே இருபதாவது திருத்தத்தில் காணப்படுகின்றது.

ஜனாதிபதி இரண்டு தடவைகள் மாத்திரமே போட்டியிடலாம் என்பது 18ஆவது திருத்தத்தில் நீக்கப்பட்டு, 19ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்பட்டு மீண்டும் இருபதாவது திருத்தத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும், அமைச்சரவை தொடர்பான கட்டுப்பாடுகள் மூல யாப்பில் குறிப்பிடப்படாதபோதும், அமைச்சரவை அமைச்சர்கள் 30 ஏனைய அமைச்சர்கள் 40 என 19ஆவது யாப்புத் திருத்தத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறான ஏற்பாடும் அவ்வாறே இருபதாவது திருத்தத்திலும் உள்ளது. மக்களின் உரிமைகளில் ஒன்றாகக் காணப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19ஆவது திருத்தத்தில் அறிமுகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

21ஆவது திருத்தம் முந்தைய 19ஆவது திருத்தத்தின் விதிகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது. குறிப்பாக, ஜனாதிபதியின் ஒருதலைப்பட்ச அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. (இலங்கை அரசியலமைப்பு, 2022) ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான முக்கிய நியமனங்களை அங்கீகரிப்பதில் பாராளுமன்றத்தின் பங்கை இந்தத் திருத்தம் வலுப்படுத்துகிறது. மேலும், பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவதற்குள் ஒருதலைப்பட்சமாக பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டதோடு பாராளுமன்ற ஒப்புதலுக்கான தேவையை மீண்டும் நிலைநிறுத்தியது.

இந்தத் திருத்தமானது, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களைப் பரிந்துரைக்கும் அதிகாரம் கொண்ட அரசியலமைப்புச் சபையை மீட்டெடுக்கிறது, இந்த அமைப்புகள் நிறைவேற்று அதிகாரத்தின் விருப்பங்களுக்கு உட்பட்டவை அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறது. 21ஆவது திருத்தம் முன்னர் ஜனாதிபதி பதவியில் குவிக்கப்பட்டிருந்த சட்டமியற்றும் அதிகாரங்களைக் குறைக்கிறது. சில நடவடிக்கைகளுக்குப் பாராளுமன்ற ஒப்புதல் தேவைப்படுவதன் மூலம், நிறைவேற்று அதிகாரத்திற்கும் சட்டமன்றத்திற்கும் இடையிலான அதிகார சமநிலையை இத்திருத்தம் மீட்டெடுக்கிறது. சட்டமியற்றும் செயல்முறைகளில் ஜனாதிபதியின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது. சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் நிறுவுவது, முக்கிய நிர்வாக செயல்பாடுகள் அரசியல் தலையீட்டில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்கிறது. பொறுப்புக்கூறல் ஜனாதிபதியின் அதிகாரங்கள் இப்போது அரசியலமைப்புச் சபையின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகிறது.

இதனை அடிப்படையாக வைத்து நோக்கும்போது, ஜனாதிபதியின் தன்னிச்சையான அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் 17ஆம் 19ஆம் திருத்தங்கள் மைல்கல்லாக காணப்படுகின்றன. ஆனால், அதற்கு எதிர் மாறாக ஜனாதிபதிக்கு அளவு கடந்த அதிகாரங்களை வலுப்படுத்தும் வகையில் 18ஆம் 20ஆம் சீர்திருத்தங்கள் காணப்படுவதோடு, ஜனநாயகத்திற்கு எதிராகவும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் செயற்பாடுகள் காணப்படுகின்றன. எனவே, நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு இதுவரை 22 தடவைகள் சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதில் 17ஆம் 19ஆம் சீர்திருத்தங்கள் ஜனாதிபதியின் சட்டம் இயற்றும் நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்துவதன் மூலம் இலங்கையில் ஆட்சிக் கட்டமைப்பை ஜனநாயகபடுத்துவதற்கான ஒரு முக்கிய முயற்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியதாக இருந்தாலும், அதற்கு எதிர்மறையாக ஜனாதிபதிக்கு அளவு கடந்த அதிகாரங்களை கொடுத்து, அரசியல் தலையீட்டினை அதிகரிப்பதில் 18ஆம் 20ஆம் திருத்தங்கள் முக்கிய பங்கு வகித்தன. எனவே, இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின்படி தற்போது நடைமுறையில் இருக்கும் 21ஆவது திருத்தம் ஜனாதிபதியின் சட்டமியற்றும் அதிகாரங்களை மட்டுப்படுத்தி ஜனநாயக அதிகாரப் பகிர்வை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டத்தைக் குறிக்கிறது. இது மிகவும் சமநிலையான மற்றும் பொறுப்பான நிர்வாகக் கட்டமைப்பை நோக்கிய மாற்றத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இருப்பினும், அதன் வெற்றியானது அரசியல் நிர்வாகத்தில் பயனுள்ள அமுலாக்கம் மற்றும் கலாசார மாற்றங்களைப் பொறுத்தே காணப்படும் என நோக்கலாம்.

**முடிவுரை**

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் கீழ் அறிமுகமாகியதைத் தொடர்ந்து, நாட்டின் ஆட்சிமுறை மற்றும் அரசியல் நிலைமைகளில் முக்கிய பங்காற்றி வருகிறது. ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகமான அதிகாரங்கள், நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள், தேசிய பாதுகாப்பு, அரசியல் தீர்மானங்களில் ஒரு சக்திவாய்ந்த தலையீட்டை வழங்குகின்றன. இந்நிலையில், இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பைப் பொறுத்தவரை ஆட்சி அதிகாரத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் விடயமாக இருப்பது நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதிப் பதவியாகும். இப்பதவி உருவாக்கப்பட்டதன் பின்னர் இந்நாட்டில் ஓரளவிற்கு நிலையான அரசாங்கங்கள் மாறி மாறி பதவிக்கு வந்திருந்தன. இதன் மூலம் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை ஓரளவிற்குப் பேணப்பட்டாலும், அண்மைக்காலம் வரை நாட்டில் நிலவிய இனப்பிரச்சினையால் ஏற்பட்ட ஆயுத மோதலின் காரணமாக அரசியலின் ஸ்திரத்தன்மையின் ஊடாக இலகுவில் எட்டக்கூடியதான அபிவிருத்தி மற்றும் பிற நன்மைகளை அடைந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. ஆனாலும், நிறைவேற்று அதிகாரம் காரணமாகவே இலங்கையில் காலத்துக்குக் காலம் ஓரளவிற்கேனும் நிலையான அரசாங்கங்கள் பதவியில் இருந்துள்ளன என்பதையும் மறுக்கவியலாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் சிறப்பிற்குக் கூறப்படும் இன்னொரு காரணம் ஜனாதிபதி தேசியத் தலைவராக விளங்குகின்றமையாகும். தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் முறையின்படி ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுபவர் முழு நாட்டு மக்களாலும் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுகின்றார். அவர் வேட்பாளராக நிற்பதும் தேசிய மட்டத்தில் ஆகும். எனவே, தேசிய மட்டத்தில் தமக்கு விருப்பமான ஒரு தலைவரைத் தெரிவுசெய்யும் பரவலான வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்படுகின்றது என்ற வகையில் இம்முறை முக்கியத்துவம் உடையதாகின்றது. இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதித்துவ முறையானது சிறுபான்மை இனங்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நன்மையானது என்ற கருத்துநிலையும் பரவலாக நிலவுகின்றது. ஏனெனில், சிறுபான்மையினங்கள் தமக்கு விருப்பமான தலைவரைத் தேசிய ரீதியாகத் தெரிவுசெய்யும் வாய்ப்பை இம்முறை வழங்குகின்றது.

நாட்டின் உயர் தலைமைப் பதவிக்காகப் போட்டியிடுபவர் சிறுபான்மையினங்களை அனுசரித்துச் செல்லவேண்டும் என்ற சிறந்த மூலோபாயமும் இங்கு காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இலங்கையின் அரசியல் நிலவரத்தைப் பொறுத்தவரை சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு தனிநபர் ஜனாதிபதியாக வருவதற்கான எவ்விதமான சாத்தியப்பாடுகளும் நிலவாத நிலையில், ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுபவரைத் தெரிவுசெய்வதில் காத்திரமான பங்கு வகிப்பதன் மூலமாகச் சிறுபான்மை இனங்கள் தமது நலன்களைப் பூர்த்திசெய்ய முடியும் எனவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியபோது இம்முறை தேசிய ரீதியிலான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் எனக் கூறப்பட்டது. இதன்படி, இலங்கையின் உள்ளக ரீதியான இனமுரண்பாட்டுப் பிரச்சினைகளைக் கைக்கொள்ளுவதற்கும், ஓரளவு ஜனநாயகத்தையாவது நடைமுறைப்படுத்துவதற்கும், இலங்கைத் தேசியத்தை உலக நாடுகளுக்குச் சமாந்தரமாகச் சுதந்திரமான ரீதியில் கொண்டு சென்று மக்களாட்சியை மேற்கொள்வதற்கும் இந்நிறைவேற்று ஜனாதிபதி முறை பயன்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. இலங்கையின் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின்படி இறைமையே பிரதானமானதாகும். மக்களின் இறைமையை அமுலப்படுத்தும் பிரதான தரப்பாக இலங்கை ஜனாதிபதி சிருஷ்க்கப்பட்டுள்ளார். இந்நிறைவேற்று அதிகாரங்கள் காரணமாக இந்த ஜனாதிபதி முறை சர்வாதிகாரப் போக்கினை உடையது எனப் பல தரப்புக்கள் விமர்சித்தாலும் அதனை மறுதலித்து இம்முறையை ஆதரிக்கும் தரப்பினரால் பல நியாயங்களும் முன்வைக்கப்பட்டன.

இரண்டாம் குடியரசு யாப்பின்படி ஜனாதிபதிக்கு நிறைவேற்றுத் தத்துவங்கள் வழங்கப்பட்டு உள்ள போதிலும், அவர் சர்வாதிகாரியாகச் செயற்படாது இருக்கும் வகையில் யாப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இவ்வாட்சி முறையை ஆதரிக்கும் தரப்பினர் கூறப்படுகின்றர். அதாவது, அரசியல் யாப்பின் 42ஆவது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதி அரசியல் யாப்பின் கீழாகத் தனது அதிகாரங்களை, கடமைகளை, பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றபோது அல்லது பொது மக்கள் பாதுகாப்புடன் தொடர்புடைய சட்டங்கள்

உட்பட ஏனைய எழுதப்பட்ட எந்தவொரு சட்டத்தையும் அமுல்செய்கின்றபோது, அவர் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறவேண்டியவராகின்றார் எனக் கூறுகின்றனர்.

இலங்கையின் இரண்டாம் குடியரசு யாப்பை உருவாக்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா "ஒரு ஆணைப் பெண்ணாக்குவதும் ஒரு பெண்ணை ஆணாக்குவதும் தவிர, மற்ற அனைத்தையும் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி மூலம் செய்யலாம்" எனக் கூறியிருந்தார். இதற்கமையவே அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன எனப் பலராலும் விமர்சிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி மேற்குறிப்பிட்ட விமர்சனங்களுக்கு உள்ளாகி இருந்ததன் காரணத்தினால் அதனை மாற்றி அமைக்க வேண்டும் அல்லது ஒழிக்க வேண்டும் என்ற கருத்து காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதன்படி இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி மிகுந்த முக்கியத்துவமுடையதாகவும், நாட்டின் சகல விடயங்களிலும் தாக்கம் செலுத்தக் கூடியதாகவும் விளங்குகின்றது. ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதியுச்ச அதிகாரங்கள் நாட்டில் அனைத்தாண்மை ஆட்சியைக் கொண்டு நடாத்தக்கூடிய வகையில் அவரை ஒரு யாப்பு சர்வாதிகாரி என்ற நிலையில் அமர்த்தியுள்ளதாக விமர்சிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாகத் தொகுத்து நோக்கும்போது, மக்களாட்சி மற்றும் சட்டத்தின் மேலாதிக்கம் என்பன ஜனநாயக முறையின் முக்கிய விடயங்களாகும். இதனை நடைமுறைபடுத்தும் பொருட்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் சட்டரீதியான தளங்களுக்குள் இருப்பதை உறுதிப்படுத்தி ஜனாதிபதி அரசின் சட்டங்களை மீறாமல் செயல்படும் நிலைமை ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும், மக்கள் நலனுக்குப் பிரதான முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, சமூக நீதியை முன்னிறுத்தும் நடவடிக்கைகள் உறுதியாக இருக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரங்கள், நாடாளுமன்றத்தால் மற்றும் நீதித்துறை அமைப்பால் சரியாக கண்காணிக்கப்படுவதன் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமைச் சூழலில், ஜனநாயகத்திற்கும் ஆளுமைத்திறனுக்கும் இடையிலான சமநிலையை நிலைநிறுத்துவது அவசியமானது. ஆகவே, இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள், செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் நாட்டின் தேசிய நலனைப் பாதுகாக்கும் வகையிலும் அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களை நடைமுறைபடுத்தி ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் என்பது நாட்டின் சிறந்த தலைவனின் பொறுப்பாகும். இவற்றினைச் சிறப்பாகக் கொண்டு நடாத்துவதற்கு அரசியலமைப்புத் திருத்தங்கள் ஒரு நாட்டிற்கு மிக முக்கியமானவையாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Amarasuriya, H. (2015). Governance and Democracy in Sri Lanka. Colombo: Social Scientists' Association.

Balasubramaniam, S. R. A. (2021). Civil society and democratic accountability in Sri Lanka. Colombo: Institute for Policy Studies.

Dahl, R. A. (2000). On democracy. Yale University Press.

de Mel, N., Gunatilleke, G., & Chaaminda, S. (2015). Maintaining Democratic Space in the Public Sphere: A Strategy for Sri Lanka Civil Society.

De Silva, C. R. (1979). The Constitution of the Second Republic of Sri Lanka (1978) and its significance. Journal of Commonwealth & Comparative Politics, 17(2), 192-209.

De Silva, K. M. (2020). Constitutional Reforms and Governance in Sri Lanka. Journal of South Asian Studies, 45(3), 345-370.

DeVotta, N. (2010). Politics and governance in post-independence Sri Lanka. In Routledge Handbook of South Asian Politics (pp. 118-130). Routledge.

Edrisinha, R. (2015). Constitutionalism and Sri Lanka's Gaullist Presidential System. Reforming Presidentialism: Provenance, Problems and Prospects, Asange Welikale (ed.) Centre for Policy Alternatives, Colombo, 931-951.

Gunaratne, M. D. J. (2019). Public trust in governance: A case study of Sri Lanka. Political Science Review, 67(4), 345-367.

Krishnamohan, D. T. (2015). Eighteenth Amendment and the Empowering of the President in Sri Lanka. The Sri Lankan Journal of South Asian Studies, 1(01), 2386-1956.

DEVOLUTION UNDER THE THIRTEENTH AMENDMENT: EXTENT, LIMITS, AND AVENUES FOR REFORM. (2016). In CPA Working Papers on Constitutional Reform. http://constitutionalreforms.org/wp-content/uploads/2016/06/WorkingPape10.pdf

Dunham, D., Jayasuriya, S., & The Institute of Social Studies. (2001). LIBERALISATION AND POLITICAL DECAY: SRI LANKA'S OURNEY FROM WELFARE STATE TO a BRUTALISED SOCIETY. https://repub.eur.nl/pub/19097/wp352.pdf

# Language and Literature

# அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பதில் உள்ள சவால்கள்: பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) மற்றும் அரபு-தமிழ் ஒலி ஒப்பீடுகளைப் பயன்படுத்திய விளக்க ஆய்வு

**Habeebul Buhary Razeen Riza**

Department of Arabic, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

razeenbuhary2019@gmail.com

**I. M. Thalib**

Department of Arabic, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

thalibm@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

அரபி மற்றும் தமிழ் மொழிகள் மொழியியல் ரீதியாக வேறுபட்ட மூலங்களைக் கொண்டவை. அரபி மொழி செமித்திய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. இது 300 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் மொழிகளின் குடும்பமாகும். இக்குடும்பத்தில் இன்று அதிகமாகப் பேசப்படும் மொழியாக அரபி மொழி திகழ்கிறது. சுமார் 270 மில்லியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். மறுபுறம், தமிழ் மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாகும். இம்மொழிக்குடும்பத்தினைச் சேர்ந்த மொழிகளை 215 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பேசுகின்றனர். தமிழ் மொழியை மட்டும் உலகம் முழுவதிலும் சுமார் 80 மில்லியன் மக்கள் பேசுகின்றனர். இவ்வாறு இரு மொழிகளும் வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவையாக இருப்பதால், அவற்றின் எழுத்து அமைப்பு, ஒலிப்பியல் கட்டமைப்பு மற்றும் எழுத்து நடைமுறைகளில் அடிப்படையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள், குறிப்பாக ஒலியியல் அடிப்படையில், அரபி மொழியிலிருந்து தமிழ் மொழிக்குப் பெயர்களை ஒலிபெயர்ப்பதில் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன. இவ்வாய்வு, அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பதில் உள்ள ஒலியியல் சவால்களை ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (International Phonetic Alphabet - IPA) என்ற நுணுக்கமான ஒலிப்பியல் குறியீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது. இம்முறை, இரு மொழிகளின் ஒலியியல் அமைப்புகளை ஒப்பீடு செய்து, அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் துல்லியமாக எழுதுவதற்கான வழிமுறைகளை முன்வைக்க உதவுகிறது. இந்த ஆய்வின் முக்கியமான அம்சம், அரபி மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளின் உயிரொலிகள் மற்றும் மெய்யொலிகளை IPA வழியாக ஒப்பீடு செய்வதில் இருக்கிறது. குறிப்பாக, அரபி மொழியில் உள்ள சில ஒலிகளுக்குத் தமிழில் நேரடி ஒலி நிகர்கள் இல்லாத சூழலில், அவற்றைத் தமிழில் எவ்வாறு துல்லியமாக ஒலிபெயர்க்கலாம் என்பதற்கான மாற்று வழிகளை முன்மொழிகிறது. ஆய்வின் முடிவுகள், அரபி-தமிழ் ஒலியியல் ஒப்பீடு அட்டவணைகளை வழங்குவதுடன், ஒலி நிகர்களை அடையாளம் காண்பதிலும், நேரடி ஒப்பீடுகள் இல்லாத ஒலிகளுக்கான மாற்று அணுகுமுறைகளையும் பரிந்துரைக்கின்றன. மேலும், தற்போதைய ஒலிபெயர்ப்பு நடைமுறைகளில் காணப்படும் பிழைகளைக் குறைத்து,

மொழிபெயர்ப்பாளர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் நடைமுறை வழிகாட்டியாகவும் பயன்படுகிறது. மொத்தத்தில் இவ்வாய்வு ஒலியியல் மற்றும் ஒப்பீட்டு மொழியியல் துறைகளில் புதியதொரு பங்களிப்பைச் செய்யும் வகையில் அமைகிறது. மேலும், அரபி மற்றும் தமிழ் மொழிகள் இடையிலான மொழிச் செலாவணி மற்றும் கலாசாரப் பரிமாற்றத்தையும் வலுப்படுத்தும் வகையில் முக்கிய பங்காற்றும்.

***திறவுச் சொற்கள்:*** *பெயர்களின் ஒலிபெயர்ப்பு, தமிழ் மொழி, அரபு மொழி, உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA).*

## அறிமுகம்

மொழி என்பது மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் முக்கிய அடையாளமாகும். ஒவ்வொரு மொழியும் தனித்துவமான ஒலியியல் மற்றும் எழுத்தியல் அமைப்பைக் கொண்டிருக்கிறது. இந்த ஆய்வு, அரபு மொழியிலிருந்து தமிழுக்குப் பெயர்களை நகர்த்தும் ஒலிபெயர்ப்புச் (Transliteration) செயல்முறையில் தோன்றும் ஒலியியல் (Phonology) சவால்களை முன்வைக்கிறது. இது சாதாரண மொழிபெயர்ப்புச் செயல்முறை அல்ல. மாறாக, இரு மொழிகளுக்கிடையிலான அடிப்படை ஒலியியல் மற்றும் எழுத்தியல் வேறுபாடுகளை எதிர்கொள்ளும் கடினமான செயற்பாடு ஆகும்.

தமிழ் மொழி 12 உயிரெழுத்துகள், 18 மெய்யெழுத்துகளைக் கொண்டுள்ளது. அரபு மொழி 28 மெய்யெழுத்துகளைக் கொண்டதுடன், உயிரெழுத்துகளைக் குறியீடுகளாகப் பயன்படுத்துகிறது. இந்த ஒலிகளைத் தமிழில் பிரதிபலிக்கக்கூடிய நேர்மையான ஒலிப்படிகைகள் இல்லாதபோது, பெயர் நகர்த்தலில் பிழைகள் ஏற்படுகின்றன. இது அதிகாரபூர்வ ஆவணங்களில் குழப்பங்களை உருவாக்குவதுடன், ஒரே பெயர் பலவாறு எழுதப்படுவதற்கும் வழிவகுக்கிறது.

இந்தச் சவால்களுக்குத் தீர்வாக, பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) ஒரு விஞ்ஞான ரீதியான கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இது ஒவ்வொரு ஒலியையும் துல்லியமாகக் குறிக்கும் திறனைக் கொண்டதால், அரபு மொழியின் ஒலிகளைத் தமிழ் எழுத்துக்களில் எவ்வாறு பிரதிபலிக்கலாம் என்பதை ஆராய்வதற்கான துல்லியமான அடிப்படையாக அமைகிறது. இந்தக் காரணங்களால், இந்த ஆய்வு கீழ்க்கண்ட ஆய்வுவினாக்களை முன்வைக்கிறது:

1. அரபு மற்றும் தமிழ் மொழிகளின் ஒலியியல் அமைப்புகளில் உள்ள முக்கிய வேறுபாடுகள் எவை? இவை பெயர் நகர்த்தலில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகின்றன?

2. பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) முறையைப் பயன்படுத்தி, அரபு ஒலிகளைத் தமிழில் எவ்வாறு துல்லியமாகப் பிரதிபலிக்கலாம்?

3. ஒலிபெயர்ப்புப் பிழைகளைக் குறைத்து, அரபுப் பெயர்களைத் தமிழில் துல்லியமாக எழுதுவதற்கான நடைமுறைகளை எவ்வாறு முன்வைக்கலாம்?

இந்த ஆய்வு, IPA கருவியைக் கொண்டு அரபுப் பெயர்களைத் தமிழில் துல்லியமாக எழுதுவதற்கான நடைமுறைகளை ஆய்வு செய்வதோடு, மொழி அடையாளம் மற்றும் ஒலியியல் நுணுக்கங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கண்டறிய முனைகிறது.

**இலக்கிய மீளாய்வு**

அரபு மற்றும் தமிழ் மொழிக்கு இடையிலான ஒப்பீட்டு ஆய்வுகள் முன்னர் பல்வேறு கோணங்களில் நடத்தப்பட்டுள்ளன. அவ் ஆய்வுகளில் ஒலியியல் வேறுபாடுகள், மொழிபெயர்ப்பு சவால்கள் மற்றும் ஒலிபெயர்ப்புப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுகளில் கவனம் செலுத்துகின்றது. இந்த இலக்கிய மீளாய்வு முந்தைய ஆய்வுகளின் பங்களிப்புகளை மதிப்பீடு செய்வதுடன், அவை விட்டுச்சென்ற ஆய்வு இடைவெளிகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

M.C.S. Shathifa (2020), அரபி மற்றும் தமிழ் மொழியின் ஒலியமைப்புகளுக்கு இடையேயான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் பற்றி ஆய்வு செய்தார். அவர் தனது ஆய்வில் இரு மொழிகளின் ஒலியமைப்புகளில் உள்ள அடிப்படை வேறுபாடுகளை முறையாக வகைப்படுத்துகிறார். இந்த ஆய்வில் அரபு உயிரொலிகளுக்கு நேரடியான தமிழ் உயிரொலி இணைகள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. மேலும், 28 அரபு மெய்யொலிகளில் 9 மெய்யொலிகளுக்கு நேரடி தமிழ் மெய்யொலி இணைகள் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இந்த ஆய்வில் தமிழில் நேரடி ஒலி இணைகள் இல்லாத அரபு மெய்யொலிகளுக்கான மாற்று ஒலியமைப்பு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படவில்லை.

MCS. Shathifa, SMM. Mazahir, MASF. Saadiyya (2015) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில், அரபி ஒலிகளுக்கான தமிழ் வரிக் குறியீடுகளை உருவாக்கியுள்ளனர். எனினும், வழக்கமாக எழுதப்படும் பெயர்களின் ஒலிபெயர்ப்புகளை IPA ஐ பயன்படுத்தி செய்யப்பட்ட ஒலிப் பகுப்பாய்வுகளின் முடிவுகளுடன் ஒப்பிட்டு முன்வைக்கவில்லை. இந்த ஆய்விலும், M.C.S.Shathifa (2020) ஆய்விலும் அரபு மற்றும் தமிழ் ஒலிகளுக்குப் பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) பயன்படுத்தும்போது குறிப்பிட்ட சில பிழைகள் நிகழ்ந்துள்ளன. மேலும், அரபு ஒலிகளுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் ஒலி இணைகளைச் சில இடங்களில் அதிக துல்லியத்துடன் வழங்கலாம்.

M.S. Zunoomyஇ M.C.S. Shathifa (2021) ஆகியோர் அரபு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் தமிழ் மொழி பேசும் மாணவர்கள் மொழிபெயர்ப்புச் சூழல்களில் எதிர்கொள்ளும் சிரமங்களை ஆய்வு செய்து, இலக்கணக் கூறுகளில் மொழிபெயர்ப்புச் சிக்கல்களை அடையாளம் கண்டனர். எனினும், அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பதன் குறிப்பிட்ட பிரச்சினைகளை ஆராயவில்லை.

M.S.Zunoomy, M.C.S. Shathifa (2021) ஆகியோர் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட மற்றொரு ஆய்வில், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இலங்கை மாணவர்களிடம் அரபு வாக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது

இரு மொழிகளின் இலக்கண மற்றும் சொல்லாக்க விதிகளைப் பற்றிய போதுமான புரிதல் இல்லாமையே மொழிபெயர்ப்பின்போது உண்டாகும் சிக்கல்களுக்கு முக்கிய காரணம் என அடையாளம் காட்டினர். எனினும், இந்த ஆய்வில் அரபுப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்புச் செய்வதில் இரு மொழிகளின் ஒலியியல் கட்டமைப்பைச் சரியாகப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தவில்லை.

முந்தைய ஆய்வுகள் அரபி-தமிழ் மொழியியலின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்திருந்தாலும், அரபிப் பெயர்களின் தமிழ் ஒலிபெயர்ப்பில் பின்வரும் முக்கிய இடைவெளிகள் நிரப்பப்படாமல் உள்ளன:

1. பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடியை அடிப்படையாகக் கொண்ட ஒலியியல் ரீதியாக துல்லியமான ஒலிபெயர்ப்பு முறை

2. தமிழில் நேரடி நிகர்கள் இல்லாத அரபு ஒலிகளுக்கான தரப்படுத்தப்பட்ட ஒலிபெயர்ப்பு வழிகாட்டுதல்கள்

3. பொதுவாகப் பயன்படுத்தப்படும் அரபு பெயர்களின் தமிழ் ஒலிபெயர்ப்பில் உள்ள தற்போதைய பிழைகளின் பகுப்பாய்வு

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வு அரபுப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பதிலுள்ள ஒலியியல் சவால்களை ஆய்வு செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, விவரணப் பகுப்பாய்வு முறையைப் (Descriptive) பின்பற்றுகிறது. இம்முறை, இரண்டு மொழிகளின் ஒலியியல் அமைப்புகளை அறிவியல் அடிப்படையில் ஒப்பீடு செய்து, ஒலிபெயர்ப்பில் உள்ள பிழைகளை விளக்கவும் சரியான நடைமுறைகளைப் பரிந்துரைக்கவும் பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடியை முதன்மையான கருவியாகப் பயன்படுத்துகிறது. இதன் மூலமாக, ஒவ்வொரு அரபு ஒலிக்கும் தமிழில் உள்ள ஒலி நிகர்களைக் கண்டறிவது சாத்தியமாகிறது.

இந்த ஆய்வுக்காக, முஸ்லிம் சமூகத்தினரால் பரவலாகப் பயன்படுத்தப்படும் 20 அரபுப் பெயர்களின் எழுத்துருக்கள் இலக்கிய நூல்கள், பிறப்புச் சான்றிதழ்கள், கடவுச்சீட்டுகள் போன்ற ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆய்வின் முக்கிய மாறிகளாக அரபு மொழியின் 28 மெய்யெழுத்துகள், ஆறு உயிரொலிகள் மற்றும் தமிழ் மொழியின் 12 உயிரெழுத்துகள், 18 மெய்யெழுத்துக்கள் கருதப்படுகின்றன. இவற்றுடன் ஒலிபெயர்ப்புத் துல்லியம் மற்றும் தவறுகள் ஆகியவையும் ஒப்பீட்டு மாறிகளாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

பகுப்பாய்வு முறைகளில் அரபு ஒலிகளை IPA மூலம் குறியாக்கம் செய்தல், ஒவ்வொரு ஒலிக்கும் தமிழில் உள்ள ஒலி நிகர்களைத் தேடுதல், ஒப்பீட்டு அட்டவணைகள் தயாரித்தல், தமிழில் எழுதப்படும் பெயர்களில் உள்ள பிழைகளை அடையாளம் காணுதல் மற்றும் தற்போதைய ஒலிபெயர்ப்பு நடைமுறைகளின் துல்லியம் மற்றும் பொருத்தத்தைக் கணித்தல் ஆகியவை அடங்கும்.

இந்த ஆய்வின் எதிர்பார்க்கப்படும் விளைவுகளாக அரபு மற்றும் தமிழ் ஒலிகளுக்கிடையேயான ஒப்பீட்டு அட்டவணைகள், ஒலி நிகரற்ற அரபு எழுத்துக்களுக்கு மாற்றுத் தீர்வுகள், ஒலிப்பெயர்ப்புப் பிழைகளைத் தவிர்க்க வழிகாட்டிகள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கான நடைமுறைப் பரிந்துரைகள் ஆகியவை அடங்கும். இவ்வாய்வு அரபு-தமிழ் ஒலிபெயர்ப்பில் உள்ள குறிப்பிட்ட சவால்களுக்குத் தீர்வுகளை முன்வைப்பதோடு, தமிழ் மொழிபெயர்ப்பாளர்களுக்கு அரபுப் பெயர்களைத் துல்லியமாக மொழிபெயர்ப்பதற்கான நடைமுறை வழிகாட்டியாகவும் அமையும்.

### முடிவுகளும் பரிந்துரைகளும்

### மொழியும் மொழியாய்வும்

மொழி என்பது மனிதனை மற்ற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்தும் முக்கியமான சிறப்பம்சமாகும். இது மனித சிந்தனையை வெளிப்படுத்தும் ஊடகமாகவும், அறிவுப் பரிமாற்றத்திற்கான கருவியாகவும் செயல்படுகிறது. மனித சமூகத்தில் உள்ள அனைத்துப் பரிமாற்றங்களும், கலாசார பரிமாற்றம் முதல் அறிவியல் வளர்ச்சி வரையிலான அனைத்தும் மொழியின் ஊடாகவே நிகழ்கின்றன. பண்டைய காலம் முதல் இன்று வரை பல்வேறு அறிஞர்கள் மொழியின் தன்மை, இயல்பு மற்றும் பயன்பாடுகளை ஆய்வு செய்து வருகின்றனர். இந்த ஆய்வுகள் மொழியியல் (Linguistics) எனப்படும் தனித் துறையாக உருவெடுத்துள்ளன. மொழியியல் ஆய்வில், மொழியைப் பல்வேறு நிலைகளாகப் பிரித்து ஆழமாக ஆராய்கிறார்கள்.

1. ஒலியியல் நிலை (Phonetics & Phonology)
2. உருபனியல் நிலை (Morphology)
3. தொடரணியல் நிலை (Syntax)
4. பொருளணியல் நிலை (Semantics)

இந்த நான்கு நிலைகளும் மொழியின் ஆழத்தைக் குறிக்கும். அவற்றில், ஒலியியல் நிலை மொழியின் தொடக்கப் புரிதலுக்கும், மொழிக் கற்றல், மொழி கற்பித்தல், மொழிப் பயிற்சி, மொழிபெயர்ப்பு, பெயர் எழுத்து மாற்றம் போன்ற செயல்களில் தெளிவை ஏற்படுத்துவதற்கும் அடிப்படை அம்சமாக விளங்குகிறது. எனவே, இந்த நிலை குறித்து விரிவான புரிதல் ஒரு மொழியறிஞருக்குத் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

### மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும்

மொழிபெயர்ப்பு என்பது ஒரு சிக்கலான செயல்முறையாகும். அது மொழிகளுக்கிடையே கருத்துக்களை, உணர்வுகளைப் பாதுகாத்துப் பரிமாற்றம் செய்கிறது. மொழிபெயர்ப்பு என்பது வெறும் சொற்களை மாற்றுவது மட்டுமல்ல. அது ஒரு படைப்பாற்றல் மிக்க செயல்முறையாகும். ஒலிபெயர்ப்பு என்பது மொழிபெயர்ப்பின் ஒரு சிறப்பு வகையாகும். இது ஒலிகளை வெவ்வேறு எழுத்து முறைகளுக்கிடையே துல்லியமாக மாற்றுகிறது. ஒலிபெயர்ப்புப் பெயர்கள் மற்றும் சொற்களை மாற்றுவதில் முக்கியமானது. இது கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கிறது. பன்மொழிப் புரிதலை மேம்படுத்துகிறது. கலாசாரங்களுக்கிடையே பாலங்களை

உருவாக்குகிறது. ஒலிபெயர்ப்பின் சவால்கள் மொழிகளின் ஒலி அமைப்புகள் வேறுபடுவதால் ஏற்படுகின்றன.

அரபியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும்போது எழுத்துக்களின் வேறுபாட்டால் ஏற்படும் சவால்கள் மிகப் பெரியவை. அரபு மொழியில் 28 மெய் எழுத்துக்கள் உள்ளன, ஆனால், தமிழில் வெறும் 18 மெய் எழுத்துக்களே உள்ளன. இந்த வேறுபாடு காரணமாக அரபு மொழியின் பல ஒலிகளைத் தமிழில் துல்லியமாக வெளிப்படுத்த முடியாத நிலை உள்ளது. குறிப்பாக, அரபு மொழியின் குரல்வளை ஒலிகள் மற்றும் பல்வேறு தடித்த ஒலிகள் தமிழில் இல்லாததால், இவற்றைத் தமிழில் ஒலிப்பெயர்க்கும்போது சரியான ஒலியை உருவாக்க இயலாது. உதாரணமாக, அரபியில் உள்ள "خ" (கா), "ق" (கா்.ப்), "ع" (ஐன்) போன்ற எழுத்துக்களுக்குத் தமிழில் நேரடி ஒலி சமமான எழுத்துக்கள் இல்லை. இதனால் அரபுச் சொற்களைத் தமிழில் ஒலிபெயர்க்கும்போது, அந்த ஒலிக்கு மிக நெருக்கமான தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்துவது அல்லது புதிய குறியீடுகளை உருவாக்குவது போன்ற தீர்வுகளைத் தேட வேண்டியுள்ளது. இதனால் ஒரே அரபுச் சொல்லுக்குத் தமிழில் பல வேறுபட்ட ஒலிபெயர்ப்பு வடிவங்கள் உருவாகின்றன. இது குழப்பத்தையும் தவறான புரிதலையும் ஏற்படுத்தக்கூடும். உதாரணமாக, "முஹம்மத்" என்ற பெயர் தமிழில் "முகம்மது" அல்லது "முகமது" அல்லது "மொஹமட்" எனப் பல வடிவங்களில் ஒலிபெயர்க்கப்படலாம்.

இந்த ஒலி வேறுபாடுகளைச் சமாளிக்க, சில அரபு-தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் சிறப்புக் குறியீடுகள் அல்லது கூடுதல் அடையாளக் குறிகளைப் பயன்படுத்துகின்றனர். இருப்பினும், இத்தகைய முறைகளில் தரநிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை இல்லாததால், பல்வேறு மொழிபெயர்ப்பாளர்கள் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றுகின்றனர். இது மேலும் சிக்கலை அதிகரிக்கிறது.

## பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA)

மொழியியல் ஆய்வுகளில் பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி ஒரு அடிப்படைக் கருவியாக விளங்குகிறது. இலத்தீன் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, 1886 இல் பன்னாட்டு ஒலிப்பியல் குழுமத்தால் நிறுவப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் உலகின் அனைத்து மொழிகளிலும் காணப்படும் ஒலிப்புகளை ஒரே தரநிலையில் குறிப்பிடுவதற்கான வழிமுறையை வழங்குவதாகும். தற்போதைய நிலையில் IPA யில் 100 க்கும் மேற்பட்ட எழுத்துக்களும், 50க்கும் மேற்பட்ட குறியீடுகளும் உள்ளன, இவற்றின் மூலம் உலகின் பல்வேறு மொழிகளின் ஒலிப்புகளைத் துல்லியமாகக் குறிக்க முடிகிறது. இந்த ஆய்வில், அரபுப் பெயர்களைத் தமிழுக்கு ஒலிபெயர்ப்புச் செய்யும்போது எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்க IPA ஓர் அறிவியல் வழிமுறையாகப் பயன்படுகிறது.

- இரு மொழிகளிலும் உள்ள ஒலிகளை IPA குறியீடுகளைக் கொண்டு துல்லியமாக அடையாளம் காணுதல்.

- மொழியில் (அரபு) உள்ள ஒலிக்கு நெருக்கமான ஒலியை இலக்கு மொழியில் (தமிழ்) அடையாளம் காணுதல்.
- தமிழில் இல்லாத அரபு ஒலிகளுக்கு மாற்று ஒலிகளை உருவாக்குதல்.

1. அரபு மொழியின் மூன்று குறில் உயிரொலிகளுக்குத் (Short Vowels) தமிழ் மொழியின் மூன்று குறில் உயிரொலிகள் ஒத்திருக்கின்றன.

2. அரபு மொழியின் மூன்று நெடில் உயிரொலிகளுக்குத் (Long Vowels) தமிழ் மொழியின் மூன்று நெடில் உயிரொலிகள் ஒத்திருக்கின்றன.

3. இரு மொழிகளிலும் ஒரே மாதிரியான ஒலிப்பு, பிறப்பிடம் மற்றும் குறியீடுகளைக் கொண்ட பொதுவான 4 மெய்யெழுத்துக்கள் உள்ளன.

4. இரு மொழிகளிலும் ஒலிப்பில் மட்டும் ஒத்திருக்கும், ஆனால் பிறப்பிடங்களிலும் குறியீடுகளிலும் வேறுபடும் 5 மெய்யெழுத்துக்கள் உள்ளன.

5. அரபு மொழியில் உள்ள 19 மெய்யெழுத்துக்களுக்குத் தமிழில் மாற்று ஒலிகள் இல்லை.

அரபி மொழியில் உள்ள சில ஒலிகளுக்குத் தமிழ் ஒலி அமைப்பில் இணையான ஒலிகள் இல்லாதது பெரும் சவாலாக உள்ளது என்பதை முடிவுகள் காட்டுகின்றன. இந்தச் சவால்களில் குறிப்பாக ح (ஹா), خ (கா), ص (ஸாத்), மற்றும் ض (ளாத்) போன்ற தடித்த அல்லது தொண்டை ஒலிகள் அடங்கும். IPA ஐப் பயன்படுத்தி ஒப்பிடும்போது அரபி மற்றும் தமிழ் மொழியின் ஒலியியல் கட்டமைப்பில் அடிப்படை வேறுபாடுகள் உள்ளன. குறிப்பாக, ث (தா) மற்றும் ظ (ழா) போன்ற அடிப்படையான சில ஒலிகள் தமிழ் அமைப்பில் இல்லை.

அரபு மொழியில் உள்ள ‘‘ظ’’ என்ற எழுத்துத் தமிழில் ‘‘ழ’’ என்றுதான் பெயர்க்கப்படுகிறது. உதாரணமாக, ‘‘ظهر’’ என்பது ‘‘ழுஹ்ர்’’ என்றும், ‘‘ظلال’’ என்பது ‘‘ழிலால்’’ (பீ ழிலாலில் குர்ஆன் என்பதில் உள்ளது போல்) என்றும் பெயர்க்கப்படுகிறது. அவ்வாறே ‘‘ض’’ என்ற எழுத்து தமிழில் ‘‘ள’’ என்று பெயர்க்கப்படுகிறது. உதாரணமாக, ‘‘حضرموت’’ என்பது ‘‘ஹளரமௌத்’’ (யமனில் உள்ள ஒரு பகுதி) என்றும், ‘‘مضر’’ என்பது ‘‘முளர்’’ (அரபு குலப் பெயர்) என்றும் பெயர்க்கப்படுகிறது. தமிழில் உள்ள ‘‘ழகரம்’’ அரபு மொழியின் ‘‘ظ’’ ஒலிப்பிற்கும், ‘‘ளகரம்’’ அரபு மொழியின் ‘‘ض’’ ஒலிப்பிற்கும் நெருங்கி ஒலிக்கின்றன. இரு மொழிகளிலும் காணப்படும் இந்த ஒலிகள் முற்றிலும் ஒத்திருக்காவிட்டாலும், ஒலிப்பியல் ரீதியாக இவை நெருக்கமாக உள்ளன. அரபு மொழியில் ض (ளாத்) ஒலி அதன் தனித்துவமான உச்சரிப்பால் சிறப்புப்பெற்று, அரபு மொழியை ‘‘لغة الضاد’’ (லுகதுள் ளாத் அல்லது ழாத் மொழி) என்று அழைக்கக் காரணமாக அமைந்துள்ளது.

IPA ஐ பயன்படுத்தி இரு மொழிகளுக்கும் இடையேயான ஒலி நிகர்களை அடையாளம் காட்டும் மற்றும் நேரடி ஒப்பீடுகள் இல்லாத ஒலிகளுக்கான மாற்று அணுகுமுறைகளைப் பரிந்துரைக்கும் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

| உயிரொலிகள் ஒப்பீடு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் | | | | | | | அரபி | | |
| ஒலிபெயர்ப்பு | | | | | | | உயிரொலிகள் (6) | | |
| பயன்பாடு | | தெரிவு | IPA | மாற்றுகள் | நேரடி<br>ஒலிப்பு மற்றும் குறியீட்டில் ஒற்றுமை | | IPA | நெடில் அகர இகர உகர ஒலிகள் (3) | குறுகிய அகர இகர உகர ஒலிகள் (3) |
| அதீ∴ப் | عطيف | அ | /a/ | | | அ | /a/ | | ∴பத்ஹா َ |
| ஆதில் | عادل | ஆ | /aː/ | | ஆ | | /aː/ | அலி∴ப் ا | |
| இக்ரிமா | عكرمة | இ | /i/ | | | இ | /i/ | | கஸ்ரா ِ |
| ஈஸா | عيسى | ஈ | /iː/ | | ஈ | | /iː/ | யா ي | |
| ஊமர் | عمر | உ | /u/ | | | உ | /u/ | | ளம்மா ُ |
| ஸுஊத் | سعود | ஊ | /uː/ | | ஊ | | /uː/ | வாவ் و | |

| மெய்யெழுத்துக்கள் ஒப்பீடு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் | | | | | | | அரபி | | | |
| ஒலிபெயர்ப்பு | | | | | | | மெய்யெழுத்துக்கள் (28) | | | |
| பயன்பாடு | | தெரிவு | IPA | மாற்றுகள் | நேரடி<br>ஒலிப்பில் ஒற்றுமை | ஒலிப்பு, பிறப்பிடம், குறியீடு ஒற்றுமை | IPA | 3 ஆம் வகை (19) | 2 ஆம் வகை (5) | 1 ஆம் வகை (4) |
| அஸ்ஹர் | أزهر | அ | /a/ | அ | இல்லை | | /ʔ/ | ء | | |
| பிலால் | بلال | ப | /p/ | ப | | | /b/ | ب | | |
| தமீம் | تميم | த | /t̪/ | | த | | /t/ | | ت | |
| ஸமரா | ثمرة | ஸ | /t̪/ | த | இல்லை | | /θ/ | ث | | |
| | | | /s/ | ஸ | | | | | | |
| ஜமால் | جمال | ஜ | /d͡ʒ/ | ஜ | | | /d͡ʒ/ | ج | | |
| ஹா∴பிழ் | حافظ | ஹ | /h/ | ஹ | | | /ħ/ | ح | | |
| காலித் | خالد | க | /k/ | க | | | /x/ | خ | | |
| தாவூத் | داود | த | /t/ | ட | | | /d/ | د | | |
| | | | /t̪/ | த | | | | | | |
| தாகிர் | ذاكر | த | /t̪/ | த | | | /ð/ | ذ | | |
| ரஷீத் | رشيد | ர | /ɾ̪/ | | ர | | /r/ | | ر | |
| | | | /r/ | ற | | | | | | |
| ஜைத் | زيد | ஜ | /tʃ/ | ச | இல்லை | | /z/ | ز | | |
| | | | /dʒ/ | ஜ | | | | | | |
| | | | /s/ | ஸ | | | | | | |
| ஸஈத் | سعيد | ஸ | /s/ | | | ஸ | /s/ | | | س |
| | | | /tʃ/ | ச | இல்லை | | | | | |
| ஷரீ∴ப் | شريف | ஷ | /ʂ/ | ஷ | | | /ʃ/ | ش | | |
| ஸாலிஹ் | صالح | ஸ | /tʃ/ | ச | | | /sˤ/ | ص | | |
| | | | /s/ | ஸ | | | | | | |
| ரமளான் | رمضان | ள | /t/ | ட | | | /dˤ/ | ض | | |
| | | | /t̪/ | த | | | | | | |
| | | | /ɭ/ | ள | | | | | | |
| தாரிக் | طارق | த | /t/ | ட | | | /tˤ/ | ط | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | /t̪/ | த | | | | | | |
| ழா.ஃ.பிர் | ظافر | ழ | /ɻ/ | ழ | | | /ðˁ/ | ظ | | |
| அம்ர் | عمرو | அ | /a/ | அ | | | /ʕ/ | ع | | |
| கஜால் | غزال | க | /k/ | க | | | /ɣ/ | غ | | |
| ஃ.பாதிமா | فاطمة | ப | /p/ | ப | | | /f/ | ف | | |
| காஸிம் | قاسم | க | /k/ | க | | | /q/ | ق | | |
| கரீம் | كريم | க | /k/ | | | க | /k/ | | | ك |
| லைலா | ليلى | ல | /l̪/ | | ல | | /l/ | | ل | |
| முஹம்மத் | محمد | ம | /m/ | | | ம | /m/ | | | م |
| நூர் | نور | ந | /n̪/ | | ந | | /n/ | | ن | |
| | | | /n̠/ | ன | | | | | | |
| ஹாதீ | هادي | ஹ | /h/ | ஹ | இல்லை | | /h/ | هـ | | |
| வலீத் | وليد | வ | /ʋ/ | | வ | | /w/ | | و | |
| யாஸிர் | ياسر | ய | /j/ | | | ய | /j/ | | | ي |

பொதுவாகப் பயன்படுத்தப்படும் 20 அரபுப் பெயர்களையும், அவை ஆவணங்களில் எழுதப்பட்டுள்ள பிழையான வடிவங்களையும், IPA பயன்படுத்திச் சரியாக எழுதப்பட வேண்டிய வடிவங்களையும் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

| பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) பயன்படுத்தி சரியான எழுத்து வடிவம் | | பிழையான எழுத்து வடிவம் | அரபுப் பெயர் |
|---|---|---|---|
| சரியான எழுத்து வடிவம் | IPA | | |
| ஹபீப் | /ħaˈbiːb/ | கபீபு | حبيب |
| மஹ்மூத் | /maħˈmuːd/ | மகுமுது | محمود |
| ஸதகதுல்லாஹ் | /sˁaˈdaqatʊ‿ʔalˈlaːh/ | சதக்கத்துல்லா | صدقة الله |
| ஷம்ஸுத்தீன் | /ʃams‿adˈdiːn/ | சம்சுதீன் | شمس الدين |
| ஜுபைர் | /zuˈbajr/ | சுபைர் | زبير |
| அபூ உபைதா | /ʔaˈbuː‿ʕuˈbajda/ | அபு உபைதா | أبو عبيدة |
| அப்துர்ரஹ்மான் | /ʕabd‿ar.raħˈmaːn/ | அப்து ரஹ்மான் | عبد الرحمان |
| அப்துல்லாஹ் | /ʕabd‿alˈlaːh/ | அப்துள்ளாஹ்<br>அப்துழ்ழாஹ் | عبد الله |
| ஷரீ.ஃ.ப் | /ʃaˈriːf/ | செரிப் | شريف |
| அலாஉத்தீன் | /ʕaˈlaːʔ‿adˈdiːn/ | அலாவுதீன் | علاء الدين |
| யூனுஸ் | /ˈjuːnus/ | ஜுனூஸ் | يونس |
| உஸ்மான் | /ʕʊθˈmaːn/ | ஒஸ்மன் | عثمان |
| நஈம் | /naˈʕiːm/ | நைம் | نعيم |
| ஷஹீத் | /ʃaˈhiːd/ | சஹிட் | شهيد |
| ஹயா | /ħaˈjaːh/ | கயாத்து | حياة |
| முஹ்யியுத்தீன் | /muħˈjji‿adˈdiːn/ | முகையதீன் | محيي الدين |
| காலிதீன் | /ˈxaːlidiːn/ | ஹாலிதீன் | خالدين |
| ஹநீ.ஃ.பா | /ħaˈniːfa/ | அனிபா | حنيفة |
| ஸதக் | /sˁiˈdq/ | சதக்கு | صدق |
| ஜய்னுல்ஆபிதீன் | /zajn‿al‿ʕaːbiˈdiːn/ | ஜெயினுலாப்தீன்<br>செயினுலாப்தீன்<br>செயினுல் ஆப்தீன் | زين العابدين |

இந்த அட்டவணை அரபுப் பெயர்களைத் தமிழில் எழுதும்போது ஏற்படும் பொதுவான பிழைகளைக் காட்டுகிறது. IPA உதவியுடன் சரியான உச்சரிப்பைக் குறிப்பிட்டு, தமிழில் அதை எப்படித் துல்லியமாக எழுத வேண்டும் என்பதை விளக்குகிறது. இதில் அரபு ஒலிகளின் தனித்துவமான பண்புகள், குறிப்பாக ح (ħ), ع (ʕ), ص (sˤ) போன்ற தமிழில் நேரடியாக இல்லாத ஒலிகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதைக் காணலாம்.

**முடிவுகள்**

- ஆய்வின்படி, பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி அரபி மற்றும் தமிழ் மொழிக்கு இடையேயான ஒலியியல் வேறுபாடுகளை ஆய்வுசெய்வதற்கு ஒரு சிறந்த கருவியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவி துல்லியமான ஒலிகளை அடையாளம் காண்பதற்கும், அரபிப் பெயர்களைத் தமிழில் எழுதும்போது ஏற்படும் பிழைகளைக் குறைப்பதற்கும் உதவியுள்ளது.
- அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் எழுதும்போது ஏற்படும் பொதுவான பிழைகள் பெரும்பாலும் உயிரொலிகள் (vowels) மற்றும் மெய்யொலிகள் (consonants) இடையேயான வேறுபாடுகளைக் கவனிக்காததால் எழுகின்றன. மேலும், ஒலிப்பியல் விதிகளைச் சரியாகப் பின்பற்றாததும் இதற்குக் காரணமாகும்.

**பரிந்துரைகள்**

- அரபு மற்றும் தமிழ் மொழிக்கு இடையேயான மொழிபெயர்ப்பு மற்றும் ஒலிபெயர்ப்புச் செயல்முறைகளில் ஒலிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் நிலையான கருவியாக IPA முறையைப் பயன்படுத்துதல்.
- அரபுப் பெயர்களைத் தமிழில் சரியாக ஒலிபெயர்ப்புச் செய்வதற்கான விதிகள், குறிப்புகள் மற்றும் உதாரணங்களைக் கொண்ட அகராதி, தரவுத்தளம், மின்னணுக் கருவிகள், செயலிகள் மற்றும் நடைமுறை வழிகாட்டியை உருவாக்குதல்.
- தமிழில் குர்ஆன் உரைகளின் மொழிபெயர்ப்புகளை ஆழமாக ஆய்வு செய்து, எழுத்துக்கள் மற்றும் பெயர்களின் பிரதிநிதித்துவத்தில் குறைபாடுகள் மற்றும் துல்லியத்தை அடையாளம் காணுதல்.
- அரபு மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் விரிவான ஒலியியல் ஆய்வுகளைச் சேர்த்தல்.
- இலங்கையின் முஸ்லிம் சமூகங்களில் பெயர்களைத் தவறாக எழுதுவதால் தனிநபர்களின் கலாசார அடையாளத்தில் ஏற்படும் தாக்கத்தை ஆராய்ந்து, மொழி அடையாளத்தைப் பாதுகாக்க நடைமுறைத் தீர்வுகளை வழங்குதல்.
- ‘அப்துல்லாஹ்’ மற்றும் ‘நூருத்தீன்’ போன்ற கூட்டுப்பெயர்களைத் தமிழில் எழுதுவதில் உள்ள தனித்துவமான சவால்களைக் கையாளும் வகையிலான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

இந்தப் பரிந்துரைகள் அரபு மற்றும் தமிழ் மொழிக்கு இடையேயான மொழியியல் சவால்களைப் புரிந்துகொள்ள உதவும். அத்தோடு கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் இந்த இரு மொழிகளுக்கிடையேயான உறவை மேம்படுத்தும்.

**முடிவுரை**

இந்த ஆய்வில், அரபு மொழியிலிருந்து தமிழுக்குப் பெயர்களை நகர்த்தும்போது ஏற்படும் ஒலியியல் மற்றும் எழுத்தியல் சவால்கள் தெளிவாக ஆய்வு செய்யப்பட்டன. குறிப்பாக, அரபு மொழியின் 19 மெய் எழுத்துக்கள் தமிழில் நேரடி ஒத்த ஒலியுடன் இல்லாமை ஒலிபெயர்ப்புச் செயலில் பல்வேறு பிழைகள் ஏற்படக் காரணமாகின்றது என்பது ஆராயப்பட்டது. இறுதியில் பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) முறையின் மூலம், அரபு ஒலிகளைத் தமிழில் துல்லியமாக பிரதிபலிக்க முடியும் என்பதும், இது ஒலிப் பிழைகளைக் குறைத்து, ஒரே பெயர் பலவாறு எழுதப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது என்பதும் கூறப்பட்டது. ஒலிபெயர்ப்புப் பிழைகள் சமூக, நிர்வாக சிக்கல்களுக்கே வழிவகுக்கும் என்பதை இது நம் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

இந்த ஆய்வு மொழியியல் துறைக்கு முக்கியமான பங்களிப்பாக அமைகிறது. இது, ஒலிபெயர்ப்பு முறைகளை ஒலியியல் அடிப்படையில் மதிப்பீடு செய்வதன் மூலம், மொழிகள் இடையேயான புரிதலை மேம்படுத்தும் வழியை முன்வைக்கிறது. இது போன்ற ஆய்வுகள், மொழி மற்றும் பண்பாடு சம்பந்தப்பட்ட அடையாளங்களைக் காத்துக்கொள்ளும் முயற்சிக்கு ஆதரவளிக்கக்கூடியவை.

**உசாத்துணை நூற்பட்டியல்**


أحمد محمد قدور. (2008). *مبادئ اللسانيات* (الطبعة الثالثة، مزيدة ومنقحة). دمشق: دار الفكر.

ابن جني، أبو الفتح عثمان. (1990). *الخصائص*. تحقيق محمد علي النجار، دار الهدى.

بشر، ك. (2000). *علم الأصوات*. القاهرة: دار غريب.

تمام حسان. (1994). *اللغة العربية معناها ومبناها*. الدار البيضاء: دار الثقافة.

غانم قدوري الحمد. (2004). *المدخل إلى علم أصوات العربية*. عمان: دار عمار.

محمد جواد النووي. (1996). *علم الأصوات العربية*. منشورات جامعة القدس المفتوحة.

محمد حسن يوسف. (1997). *كيف تترجم*. شركة معاهد التدريب والتعلم الأهلي.

محمود فهمي حجازي. (1997). *مدخل إلى علم اللغة*. القاهرة: دار قباء.

حاتم صالح الضامن. (1989). *علم اللغة*. كلية الآداب، جامعة بغداد، وزارة التعليم العالي والبحث العلمي.

International Phonetic Association (IPA). (n.d.). *IPA Chart*. Retrieved December 23, 2024, from https://www.internationalphoneticassociation.org

Nuhman, M. A. (2006). *Adippatai Tamil Ilakkanam*. Kalmunai: Readers Society.

Paramasivam, K. (2016). *Ikkala Mozhiyiyal Arimukam: An Introduction to Contemporary Linguistics in Tamil*. Adaiyaalam.

Shanmugam Pillai, M. (1977). *Ikkala Moziyiyal* (2nd Ed.). Madurai: Madurai Publishing House.

Shathifa, M. C. S. (2020, November). *أوجه التشابه والتناحر ما بين اللغتين العربية والتاملية على مستوى الأصوات*. *Indonesian Journal of Arabic Studies*, 2(2), 148–161. http://www.syekhnurjati.ac.id/jurnal/index.php/ijas/index

Shathifa, M. C. S., Mazahir, S. M. M., & Saadiyya, M. A. S. F. (2015). *அறபு ஒலிகளுக்கான தமிழ் வரிக்குறியீடுகளை உருவாக்குதல்*. *Second International Symposium 2015, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka*, 128–133. http://ir.lib.seu.ac.lk/xmlui/handle/123456789/903?show=full

Sheriff, M. C. M. (2011). *Suvadukal – Pakam-1*. Astra Printers.

Wikipedia. (n.d.). *Arabic Phonology*. Retrieved December 23, 2024, from https://en.wikipedia.org/wiki/Arabic_phonology

Wikipedia. (n.d.). *International Phonetic Alphabet*. Retrieved December 23, 2024, from https://ar.wikipedia.org/wiki/ألفبائية_صوتية_دولية

Wikipedia. (n.d.). *Tamil language*. Retrieved December 23, 2024, from https://en.wikipedia.org/wiki/Tamil_language

Wikipedia contributors. (n.d.). *Tamil Phonology*. Retrieved December 23, 2024, from https://en.wikipedia.org/wiki/Tamil_phonology

Zunoomy, M. S., & Shathifa, M. C. S. (2020, May). *الصعوبات التي يواجهها دارسو اللغة العربية كلغة أجنبية عند ترجمة الجمل التاملية إلى اللغة العربية*. *Indonesian Journal of Arabic Studies*, 3(1), 70–95. https://pdfs.semanticscholar.org/343b/5c89adabd1a0c0a2d33e88370d79b0248019.pdf

Zunoomy, M. S., & Shathifa, M. C. S. (2021). تحديات ترجمة الجمل العربية إلى اللغة التاميلية لدى دارسي اللغة العربية كلغة ثانية في جامعة جنوب شرق سريلانكا. *Journal of Translation*, 8(1), 84–103. https://www.researchgate.net/publication/360105555_thdyat_trjmt_aljml_alrbyt_aly_allght_altamlyt_ldy_darsy_allght_alrbyt_lght_thanyt_fy_jamt_jnwb_shrq_srylanka_The_Challenges_of_Translating_Arabic_Sentences_into_Tamil_language_among_Second_Language_Le

# அகநானூற்றுச் செய்யுட்கள் சுட்டும் பண்பாட்டுப் பதிவுகள்

**Tharumarasa Jansika**
Postgraduate student, University of Peradeniya.
jansikatharmarasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வாழ்க்கையில் மனிதன் முழுநிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயன்களின் வெளிப்பாடுகளில் ஒன்றாகப் 'பண்பாடு' காணப்படுகின்றது. இது மனிதகுல நன்மையை முதன்மைப்படுத்துகின்றது. சங்ககாலம் தொடக்கம் தமிழ்ப் பண்பாடு மானிட மேம்பாட்டைக் கருத்தில் கொண்டதாகவே வளர்ச்சியடைகின்றது. சங்க இலக்கியம் முதலான தமிழ் இலக்கியங்களில் பழந்தமிழ் நாட்டின் பண்பாடு, சமூகம் பற்றிய பல செய்திகள் பொதிந்துள்ளன. பண்டைத் தமிழ் மக்களின் நம்பிக்கை வழி உருவான சடங்குகள் பற்றியும் வழிபாட்டு மரபுகள் பற்றியும் பல தகவல்களைச் சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. அத்துடன், அம்மக்களின் உணவு, உடை, தொழில் முதலான விடயங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தெய்வங்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கக்கூடாது என்பதற்காகவும், நோய் நொடிகள், குறைகள், துன்பங்கள், அச்சுறுத்தல்கள் என்பன விலக்கப்படல் வேண்டும் என்பதற்காகவும், விருப்பங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதற்காகவும் பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. அந்தவகையில், அகநானூற்றுச் செய்யுட்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பண்பாட்டம்சங்களையும் அவற்றின் சமகாலப் போக்குகளையும் ஆராய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். எஸ். சிவலிங்கராஜா பதிப்பித்த அகநானூறு களிற்றியானை நிரை வித்துவசிரோமணி சி. கணேசையர் உரை என்ற உரைப்பனுவலையும், ந.சி. கந்தையா பதிப்பித்த உரைப் பனுவலையும் முதன்மை ஆதாரமாகக் கொண்டு, பண்புசார் ஆய்வாக இது அமைகின்றது. சங்ககால மக்களிடத்துச் சடங்கு சார்ந்ததாகவும் சமயம் சார்ந்ததாகவும் வாழ்வியல் சார்ந்ததாகவும் அமைந்துள்ள நம்பிக்கைகள் அகநானூற்றுச் செய்யுள்களில் பொதிந்துள்ளவாற்றினை அவதானிக்க முடிகின்றது. பெண்கள் இயற்கையாக அமைந்த அழகோடு மேலதிகமான சில ஒப்பனை முயற்சிகளை மேற்கொண்டிருந்தமையினையும் அகநானூறு இலக்கியம் பதிவுசெய்துள்ளது. பண்டைத் தமிழர்களிடம் வழக்கிலிருந்த குறிகேட்டல் அல்லது பலன் கேட்டல் இன்றுவரை நிலைகொண்டுள்ள ஒரு வழக்கு. தெய்வம் இறங்கி வந்து பேசும் உடல்களின்மீது மனிதருக்கு இன்றளவும் பெரும் மதிப்புள்ளது. அந்த ஆற்றுகைக்குள் நீண்ட மரபின் தொடர்ச்சி உள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *அகநானூறு, பண்பாடு, செய்யுள், பண்டைத் தமிழர்.*

**ஆய்வு அறிமுகம்**

பண்டைத் தமிழ் மக்களின் நம்பிக்கை வழி உருவான சடங்குகள் பற்றியும் வழிபாட்டு மரபுகள் பற்றியும் பல தகவல்களைச் சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. அத்துடன், அம்மக்களின் உணவு, உடை, தொழில் முதலான விடயங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தெய்வங்கள் தமக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது என்பதற்காகவும், நோய்நொடிகள், குறைகள், துன்பங்கள், அச்சுறுத்தல்கள் என்பன விலக்கப்படல் வேண்டும் என்பதற்காகவும், விருப்பங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதற்காகவும் பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது.

உலக நிகழ்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்பட்ட இல்லற வாழ்வில் தலைவனும் தலைவியும் '**ஓருயிர்ப் புள்ளியின் இருதலை'** போன்று ஒற்றுமைப்பட்டு ஒழுகற்குரிய விழுமியப் பேரன்பின் பயனாகிய இன்பப் பகுதியை நன்கு விளக்கும் நானூறு அகவற்பாக்களை உடையதோர் அகத்திணை நூலாக அகநானூறு விளங்குகின்றது. அகநானூற்றுச் செய்யுள்களுக்கு இடைக்காலம் தொடக்கம் தற்காலம் வரையில் முழுமையாகவும் பகுதியளவிலும் உரைகள் எழுதப்பட்டுள்ளன. இவ்வுரைகளைத் தனித்தும் பொதுவிலும் ஆராயும் போக்குக் காணப்படுகின்றது. மூலநூலைச் சமகால நோக்கில் வாசிக்கும் முறையியலை அவற்றுக்கெழுந்த உரைகள் ஏற்படுத்திவிடுகின்றன. அந்தவகையில், அகநானூற்றுச் செய்யுட்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பண்பாட்டம்சங்களை ஆராய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். பழந்தமிழ் நாட்டு மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டு மரபுகள், கலாசார அம்சங்கள் என்ற அடிப்படையில், அகநானூறு சுட்டும் பண்பாட்டுக் கோலங்களை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரையானது அமையவுள்ளது.

**பண்பாட்டுப் பதிவுகள்**

வாழ்க்கையில் மனிதன் முழுநிறைவை அடைவதற்காக மேற்கொளளும் முயற்சியின் பயன்களின் வெளிப்பாடுகளில் ஒன்றாகப் 'பண்பாடு' காணப்படுகின்றது. இது மனித குல நன்மையை முதன்மைப்படுத்துகின்றது. சங்ககாலம் தொடக்கம் தமிழ்ப் பண்பாடு என்பது மானிட மேம்பாட்டைக் கருத்தில் கொண்டதாகவே வளர்ச்சியடைகின்றது. சங்க இலக்கியம் முதலான தமிழ் இலக்கியங்களில் பழந்தமிழ் நாட்டின் பண்பாடு, சமூகம் பற்றிய பல செய்திகள் பொதிந்துள்ளன. பண்டைத் தமிழ் மக்களின் நம்பிக்கை வழி உருவான சடங்குகள் பற்றியும் வழிபாட்டு மரபுகள் பற்றியும் பல தகவல்களை அகநானூறு பதிவுசெய்துள்ளது. அத்துடன், அம்மக்களின் உணவு, உடை, தொழில் முதலான விடயங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**சடங்குகள் பற்றிய செய்திகள்**

சடங்கு என்பது சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சில செயன்முறைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது எனலாம். குறியீட்டுத் தன்மைகள் இதில் அதிகளவு முக்கியம் பெறுகின்றன. இக்குறியீட்டுச் செயற்பாடுகள் மனிதனின் அல்லது சமூகத்தின் நலனை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பிறப்பு முதல் இறப்பு வரை மக்களின் சமய, சமூக வாழ்வியலில் பின்னிப் பிணைந்தவையாக இச்சடங்குகள் காணப்படுகின்றன.

தெய்வங்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது என்பதற்காகவும், நோய் நொடிகள், குறைகள், துன்பங்கள், அச்சுறுத்தல்கள் என்பன விலக்கப்படல் வேண்டும் என்பதற்காகவும், விருப்பங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதற்காகவும் பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. அகநானூறு சுட்டுகின்ற சடங்குகள் தொடர்பான செய்திகளை அதன் உரையாசிரியர்களில்

ஒருவரான கணேசையர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, சங்கச் செய்யுட்களின் வழி அறியப்படும் 'வெறியாட்டு' தொடர்பான விடயங்களைப் பதிவுசெய்துள்ளார். அகநானூறு இருபத்திரண்டாவது (22) செய்யுளுரையிலே வெறியாட்டு தொடர்பான செய்திகளைக் குறிப்பிடுகின்றார்.

> "படியோர்த் தேய்த்த பல புகழ்த் தடக்கை நெடுவேள் பேண இவன் தணிகுவன் என அது முதுவாய்ப் பெண்டிர் வாய் கூற (தன்னை) வணங்காதாரை (பகைவரை) அழித்த பல வகைப் புகழ்களைக் கொண்ட பெரிய கையினையுடைய பெருமை பொருந்திய முருகக் கடவுளை வழிபட இவள் (இந்நோய்) தணியப் பெறுவாள் என்று அதனை அறிவு வாய்ந்த பெண்கள் மெய்யாகக் கூற களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி – (எம்மனோர்) வெறியாடு களத்தை நன்கு அமைத்து (வேலிற்கு) மாலை சூட்டி, வளம் நகர் சிலம்பப் பாடிப் பலி கொடுத்து வளம் பொருந்திய கோயிலினிடமெல்லாம் சென்று ஒலிக்கும் படிபாடி (வெள் ஆட்டுப்) பலி கொடுத்து. உருவச் செந்தினை குருதியொடு தூய் - அழகிய செந்தினையரிசியை (அந்த ஆட்டின்) இரத்தத்தோடு (கலந்து) தூவி, முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடு நாள் - (வேலன்) முருகக் கடவுளை ஆற்றுப்படுத்த…" (சிவலிங்கராஜா, எஸ். (ப.ஆ), 2021, பக். 81,82).

தலைவி மெலிந்து வாடி வருந்தும்பொழுது, வெறியாட்டு என்னும் சடங்குமுறை தலைவன் வரைவு கடாதலுக்குக் களம் அமைத்துக் கொடுக்கின்றது என்று கூறுவதன்மூலம் சங்ககால மக்களின் அகத்திணைப் பண்பாட்டின் கூறாக இச்சடங்கு அமைந்திருக்கின்றது என்பதனைக் கணேசையர் புலப்படுத்தி நிற்கின்றார் எனலாம்.

வடமொழி யாகம், தமிழில் வேள்வி எனப்படுகிறது. தீ வளர்த்து நெய் சொரிந்து விலங்கு பலியிட்டு தெய்வத்தை வணங்கும் வடநூலார் முறையைத் தமிழர்கள் ஏற்றுப் பின்பற்றியுள்ளனர். இவற்றைச் செய்வதன் மூலம், தாம் விரும்பியதை அடையலாம் என்ற நம்பிக்கை குடிகொண்டுள்ளது. இந்த நம்பிக்கை தமிழரிடமும் இருந்தது என்பதைக் கணேசையர் தமது விரிவுரையிலே குறிப்பிட்டுள்ளார். அகம் பதின்மூன்றாவது (13) செய்யுளுரையிலே தமிழரிடம் காணப்பட்ட வேள்வி பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றார்.

> "வள்வாய் அம்பின் கோடைப் பொருநன் - கூரிய வாயினையுடைய அம்புகளைக் கொண்ட கோட்டூர்க்குத் தலைவனுமாகிய, பண்ணி தைஇய பயங்கெழு வேள்வியின் - பண்ணி என்பான் செய்த பயன்மிக்க வேள்வியைப் போல. விழுமிது நிகழ்வது ஆயினும் - (நீர் தேடிவரும் பொருளாற்) சிறந்த அறங்கள் நிகழுமாயினும், …" (சிவலிங்கராஜா, எஸ். (ப.ஆ), 2021, பக். 53).

இவ்வாறாக அகநானூறுச் செய்யுள்கள் சுட்டும் பண்டைத் தமிழர் வாழ்வியற் சடங்குகள் பற்றிய குறிப்புகளை நோக்கமுடிகின்றது.

**நம்பிக்கைகள் தொடர்பான குறிப்புக்கள்**

நம்பிக்கைகள் சமுதாயத் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவைகளாகும். அச்சுறுத்தல்களை விலக்கவும், விருப்பங்களைப் பூர்த்திசெய்யும் வகையிலும், நோய்,

துன்பங்கள், குறைகள் என்பன நீங்க வேண்டும் எனும் வகையிலும் அக்கால மக்களின் நம்பிக்கைகள் நிலவின. சங்ககால மக்களிடத்து சடங்கு சார்ந்ததாகவும், சமயம் சார்ந்ததாகவும், வாழ்வியல் சார்ந்ததாகவும் அமைந்துள்ள நம்பிக்கைகள் அகநானூற்றுச் செய்யுள்களில் பொதிந்துள்ளவாற்றினை அவதானிக்கமுடிகின்றது.

பண்டைத் தமிழ் மக்கள் நம்பிக்கைகளின்வழி பல வழக்காறுகளைப் பின்பற்றி வந்துள்ளனர். அவ்வகையில், நம்பிக்கைகள் பற்றிய விடயங்களை உரையின் பல்வேறிடங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது. எடுத்துக்காட்டாக, 'பல்லியும் பலனும்' பற்றிய குறிப்பை முன்வைக்கலாம். அகம் ஒன்பதாவது (9) செள்யுளுரையிலே பல்லியும் பலனும் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> "பல்மாண் ஓங்கிய நல் இல் - பல கட்டுக்களால் மாட்சிமை பொருந்த உயர்ந்த நல்ல இல்லின் (வீட்டில்), கன்று புகு மாலை ஒரு சிறை நிலைஇ (ஆன்) கன்றுகள் புகுகின்ற மாலைக் காலத்தே இவ்விடத்தே நின்று, பாங்கர் பல்லி படுதொறும் பரவி நின்றோ ளெய்திக் குறுகி – (நன்மை தரும்) பக்கத்தே பல்லி ஒலிக்குந் (சொல்லுந்) தோறும் அதனைப் போற்றி நின்றவளை…" (சிவலிங்கராஜா, எஸ். (ப.ஆ), 2021, பக். 39).

பல்லியும் பலனும்' என்ற நம்பிக்கை இன்றும் தமிழரிடம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். திருமணத்திற்கு நல்ல நாட் குறிக்கும் வழக்கம் பற்றிய குறிப்புக்களையும் கணேசையர் தமது உரையிலே விளக்கிச் செல்லுகின்றார். அகநானூற்றின் எண்பத்தாறாவது (86) செய்யுளுரையிலே திருமணத்திற்கு நாட ˙குறிக்கும் வழக்கம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> "கோள் கால் நீங்கிய – தீய கிரகங்களின் தொடர்பு நீங்கப்பெற்ற கொடுவெண் திங்கள் கேடு இல் விழுப்புகழ் நாள் தலை வந்தென – வளைவான வெள்ளிய சந்திரனைக் கெடுதலில்லாத சிறந்த புகழையுடைய உரோகணி என்னும் நாண்மீன் (நட்சத்திரம்) கூடியதாக, கனை இருள் அகன்ற கவின்பெறு காலை – செறிந்த இருள் நீங்கிய அழகு பெற்ற காலத்தில், உச்சிக் குடத்தார் புது அகல் மண்டையர் - உச்சியில் கொண்ட குடத்தினரும் புதிய அகன்ற மண்டை என்னும் கலத்தினைக் கையிற் கொண்டவருமாகிய, பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர் - பொதுவான மங்கல காரியத்தைச் செய்து வைக்கும் ஆரவாரத்தையுடைய முதுமையமைந்த செவ்விய மங்கல மகளிர்…" (சிவலிங்கராஜா, எஸ். (ப.ஆ), 2021, பக். 261).

இவ்வாறாக அகநானூற்றுச் செய்யுள்கள் சுட்டும் பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள் பற்றிய குறிப்புக்களை அவதானிக்க முடிகின்றது.

**விழாக்கள் தொடர்பான குறிப்புக்கள்**

பழந்தமிழ் மக்களின் விழாக்கள், கொண்டாட்டங்கள் பற்றிய விபரங்களையும் அகநாநூற்றுச் செய்யுட்களினூடாக அறியமுடிகின்றது. பழங்காலத் தமிழ் மக்கள் கார்த்திகைத் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடினர். கார்த்திகை நாளிலே வீதியிலே விளக்கேற்றி

வைப்பார்கள். மலர் மாலைகளைத் தொங்க விடுவார்கள் பலரும் கூடிப் பார்த்து மகிழ்ச்சி அடைவர். சிறிய முயலாகிய களங்கம் தன் மார்பிலே விளங்கும்படி முழுமதி தோன்றும். ரோகிணி சந்திரனுடன் சேர்ந்திருக்கும் இத்தகைய கார்த்திகை நாள் இரவில் வீதியிலே விளக்கேற்றி வைப்பர். மலர் மாலைகளைத் தொங்க விடுவர். பழமையான சிறந்த ஊர்களிலே மக்கள் பலரும் கூடி விழாக் கொண்டாடுவர் என்பதனை,

> ‘‘குறுமுயல் மறுநிறம் கிளர மதி நிறைந்து
> அறுமீன் சேறும்அகல் இருள் நடு நாள்
> மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
> பமவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
> விழவுஉடன் அயர வருகதில் அம்ம’’ (அகம்-141)

என்ற அகநானூற்றுச் செய்யுளடிகளால் அறியலாம். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் விளக்குகளை எங்கும் ஏற்றிக் கொண்டாடல் இன்றும் உலகில் நடைபெறுகின்றது. கார்த்திகைத் தீபத்தினை ஈழநாட்டார் இன்றும் விளக்கீடு என்றே அழைக்கின்றனர்.

‘வேங்கட விழா’ பற்றிய விடயங்களையும் கணேசையர் தமது உரையிலே குறிப்பிட்டுள்ளார். அகநானூற்றின் அறுபத்தொராவது (61) செய்யுளுரையிலே ‘வேங்கட விழா’ பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> ‘‘விழவு உடை விழுச்சீர் வேங்கடம் பெறினும் - விழாவை (கொண்டாடப்படுதலை) யுடைய விழுமிய சிறப்பைக் கொண்ட வேங்கட மலையை பெறினும்…’’ (சிவலிங்கராஜா, எஸ். (ப.ஆ), 2021, பக். 195).

இவ்வாறாக கணேசையர், அகநானூற்று களிற்றியானைநிரை செய்யுள்கள் சுட்டும் பண்டைத் தமிழர் விழாக்கள், கொண்டாட்டங்கள் பற்றிய குறிப்புக்களைத் தமது உரையில் பதிவு செய்திருப்பதினைக் காணலாம்.

### வழிபாடுகள் தொடர்பான செய்திகள்

பழந்தமிழ் மக்களின் பண்பாட்டு மரபில் அவர்களின் வழக்காறுகளை மையமாகக் கொண்ட வழிபாட்டு அம்சங்களுக்கும் முக்கிய இடமுண்டு. தெய்வங்களை மையப்படுத்திய சடங்கு முறைகளும் வழிபாட்டு முறைகளும் பழந்தமிழ்ப் பண்பாட்டின் முக்கிய கூறுகளாய் அமைந்துள்ளன. அவ்வகையில், பழந்தமிழ் மக்களின் வழிபாட்டு மரபுகள் தொடர்பான பதிவுகளையும் அகநானூற்றுச் செய்யுட்களிலே காணமுடிகின்றது. பழந்தமிழர் வழிபாடுகளில் குறிப்பிடத்தக்கதான ‘நடுகல் வழிபாடு’ பற்றிக் குறிப்பிட்டுள்ளவாற்றினைச் சான்றாக காட்டலாம். அகநானூற்றின் அறுபத்தேழாவது (67) செய்யுளுரையிலே நடுகல் வழிபாடு பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> ‘‘நெல்லி நீள் இடை எல்லி மண்டி – நெல்லி மரங்களையுடைய நீண்ட இடங்களில் விரைந்து சென்று, அரம்போழ் நுதியவாளி அம்பின் - அரத்தால் அராவப்பட்ட நுதியையுடைய அலகம்பினையும், நிரம்பா நோக்கின் - (நிரம்பாத) இடுக்கிக்

குறிபார்க்கும் பார்வையுடையவராய், நிரைகொண்மார் - தம் பசு நிரைகளை மீட்கும்படி, நல்லமர்க் கடந்த நாண் உடை மறவர் - அபிமானத்தையுடைய (கரந்தை) வீரர்களது, பெயரும் பீடும் எழுதி – பெயரினையும் பெருமையையும் எழுதி, அதர்தொறும் பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல் - வழிகடோறும் மயிற் பீலியை அணிந்த விளங்கு நிலைமையையுடைய நடப்பட்ட கல் (வழிகடோறும் நடப்பட்ட கல் என்க.) வேல் ஊன்று பலகை – அவ்வவ் வீரர்களது வேலை ஊன்றி அதனோடு சார்த்திய பலகையை (பரிசையை)க் கொண்டதாய்…" (சிவலிங்கராஜா, எஸ். (ப.ஆ), 2021, பக். 212).

பழந்தமிழர்களின் தாய்த்தெய்வமாகிய கொற்றவை வழிபாடு பற்றிய விடயங்களையும் அகநானூற்றுச் செய்யுள்களிலே காணமுடிகின்றது. பழந்தமிழர்கள் தங்கள் வாழ்க்கையில் தோன்றும் சங்கடங்களைப் போக்க வேலனை நாடினார்கள். அந்தக் காலத்தில் பெண்கள் குகைகளிலும் குடிசைகளிலும் வாழ்ந்துவந்தனர். அக்காலத்தில் அவர்கள் பயிர் செய்யத் தொடங்கினர். தொழிலில் பங்குகொண்ட மக்கள் ஆண்களைவிட உயர்வு பெற்றனர். பெண்ணாதிக்கச் சமுதாயம் தோன்றி வளர்ந்த முற்காலத்தில் பெண்தெய்வங்கள் தோன்றின. அவள் பழையோள் ஆனாள். நிலமோ பெண், பெண் செழிப்பை தருபவள். ஆதற்காகப் பாவை நோன்பு இருந்திருக்கிறார்கள்.

"கடம்பு கொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல ஒருதூக்கு இன்னியம்
காடுகெழு நெடுவேட் பாடுகொளைக்கு ஏற்ப
அணங்கயர் வியன்களம் பொலியப் பையத்" (அகம்.:382)

இங்கு, காடுகெழு நெடுவேளின் தாய் காடுகெழு செல்வியாகக் கொள்ளப்பட்டிருக்கின்றமையினை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இவ்வாறாக அகநானூற்றுச் செய்யுள்கள் சுட்டும் சங்ககால மக்களின் பண்பாட்டம்சங்களை, அவதானிக்க முடிகிறது.

**பெண்களின் ஒப்பனை தொடர்பான செய்திகள்**

சங்ககால மகளிர் தங்களை அழகுபடுத்துவதற்குச் சில ஒப்பனை முறைகளைக் கையாண்டுள்ளனர். பெண்கள் இயற்கையாக அமைந்த அழகோடு மேலதிகமான சில ஒப்பனை முயற்சிகளை மேற்கொண்டிருந்தமையினை அகநானூறு இலக்கியம் பதிவுசெய்துள்ளது. பண்டைத் தமிழ்ப் பெண்கள் குளிர்ந்த நீரில் நீராடுவதில் பெருவிருப்பு உடையவர்களாக இருந்துள்ளனர். பெண்கள் நீண்ட கூந்தலுக்கு மணமிக்க சந்தனத்தைத் தேய்த்து முழுகுவது வழக்கம் எனத் தெரிகிறது. "உரைத்த சாந்தின் ஊரலிருங்கதுப்பு" (அகம்.:102) என்ற செய்யுளடி இதனைத் தெரிவிக்கின்றது.

சங்ககாலப் பெண்கள் தமது கூந்தலை நீண்ட நேரம் ஒப்பனை செய்து கொண்டுள்ளனர். கூந்தல் வாசனை கமழும் பொருட்டு நறுமணப் புகையூட்டினர். பலவகையான தலையலங்காரங்கள் அக்காலத்தில் நிலவியுள்ளதைச் செய்யுட்கள் தெரியப்படுத்துகின்றன.

குழவி, அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என ஐந்து வகையாகத் (ஐம்பால்) தலைக்கோலம் செய்துகொண்டனர்.

"ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்" (அகம்.:225)

"பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தல்" (அகம்.:158)

பலவகையாக அலங்கரிக்கப்பட்ட கூந்தலில் பலவகை வண்ண மலர்களையும் சூடி அழகுபெற வைத்தனர்.

"போது அவிழ் நறுந்தாது அணிந்த கூந்தல்" (அகம்.:296)

"போது ஆர் கூந்தல்" (அகம்.:246)

விரித்தும் தொகுத்தும் வகுத்தும் வாரியும் கோதியும் நறுமணப் புகையூட்டியும் வண்ண மலர்களைச் சூடியும் பெண்கள் கூந்தல் ஒப்பனையைச் செய்துள்ளமையை மேற்குறிப்பிட்ட அகநானூற்றுச் செய்யுளடிகளால் அறியமுடிகின்றது. புதிய தழைகளையும் பூக்களையும் இணைத்துத் தளையாடைகள் செய்து சங்ககாலப் பெண்கள் அணிந்தனர் என்பதை, "அண்டர் மகளிர் தண்டளை உடீஇயர்" (அகம்.: 59) என்ற செய்யுளடி எடுத்துக்காட்டுகின்றது.

பெண்கள் துகில் என்னும் ஆடை வகையை அணிந்த செய்திகளும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. வேலைப்பாடு நிறைந்த துகிலைக் குறிப்பதற்குப் 'பூந்துகில்' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. இதனை, "பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்" (அகம்.:387) என்ற செய்யுளடி எடுத்துக்காட்டுகின்றது. பழந்தமிழ்ப் பெண்கள் அணிகளை அணிந்துகொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருந்துள்ளனர். "குழை மாண் ஒள்ளிழை" (அகம்.: 6) என்ற செய்யுளடி சங்ககாலப் பெண்கள் காதில் அழகிய குழையை அணிந்திருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது. சங்ககாலப் பெண்கள் கால்களில் பொன்னால் செய்யப்பட்டுப் பரல்கள் செய்யப்பட்ட சிலம்பினை அணிந்து மகிழ்ந்துள்ளனர் என்பதனை,

"அரிபெய் சிலம்பின் ஆம்பலந் தொடலை" (அகம்.:6)

"சிலம்பு ஆர் சீரடி" (அகம்.:17)

என்ற செய்யுளடிகள் உணர்த்துகின்றன.

பல்வேறு மாலை வகைகளையும் சங்ககாலப் பெண்கள் அணிந்த செய்திகள் அகநானூற்றுச் செய்யுள்களிலே இடம்பெற்றுள்ளன. ஆரம், பிணையல் போன்ற மாலை வகைகளை அணிந்துள்ளனர் என்பதனை,

"ஆரம் தாங்கிய அல் முலை ஆகம்" (அகம்.:74)

"கருங்கால் வேங்கை செம்பூம் பிணையல்
ஐது ஏந்து அல்குல் யாம் அணிந்து உவக்கும்" (அகம்.:345)

என்னும் செய்யுளடிகள் உணர்த்துகின்றன.

பெண்கள் வாசப் பொருட்களையும் வண்ணங்களையும் தம் உடலில் பூசிக் கொள்வதை அகநானூற்றுச் செய்யுட்கள் தெரிவிக்கின்றன. தமது கூந்தலுக்கு சந்தனம், நறுமணப்புகை

போன்றனவற்றால் வாசனையூட்டினர். இத்தகைய சாந்துகள் வாசம் மிகுந்ததாக இருப்பதனால் அணிபவர் மேனியும் வாசனை மிக்கதாக விளங்கியது என்பதனை,

“நறுஞ் சாந்து அணிகுவம்” (அகம்.:340)

“தண்கமழ் சாந்தம் நுண்துகள் அணிய” (அகம்.:354)

என்ற செய்யுளடிகளால் அறியலாம்.

சங்ககாலப் பெண்கள் நெற்றியிலே திலகம் இட்டுக் கொள்ளுவதை, “தேங்கமழ் திருநுதற் றிலகம் தைஇயும்” (அகம்.:389) என்ற செய்யுளடி புலப்படுத்துகின்றது. சங்க காலத்தில் நடைபெற்ற திருமணத்தின்போது மணமகளுக்கெனச் சிறப்பான ஒப்பனைகள் செய்யப்பட்டன. பெண்களுக்கான ஆடை, அணிகலன்கள் தனித்துவமாக அமைந்திருந்தன. “வதுவை நாள் அணி” (அகம்.:56) என்னும் அகநானூற்றுப் பாடலடி மணமகளுக்கான ஆடை அணிகலன்கள் பற்றிப் பதிவுசெய்கின்றது.

**விளையாட்டுக்கள் தொடர்பான செய்திகள்**

பண்டைத் தமிழர்கள், இயற்கையில் கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டே விளையாட்டுப் பொருட்களைத் தயார்செய்திருக்கின்றார்கள். இக்கால விளையாட்டுக்கள் பலவற்றின் ஆரம்பம் சங்ககாலத்தில் காணப்பட்டுள்ளதை அகநானூற்றுச் செய்யுட்களினூடாக அறிய முடிகின்றது. வட்டை நாக்குப் போன்ற தடியால் அடிக்கும் விளையாட்டு ‘வட்டுநா விளையாட்டு’ எனப்பட்டது. ‘வட்டு நா’ விளையாட்டில் நெல்லிக்காய், ஈங்கைப் பூவின் மொட்டுப் போன்றன வட்டாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த விளையாட்டு சங்க காலத்தில் விளையாடப்பட்டமையினை,

“வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலம் காட்டுப்
பளிங்கத்தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டு வட்டு ஏய்ப்ப
உதிர்வன படுஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றி” (அகம்-5)

என்ற செய்யுளடிகள் பதிவுசெய்கின்றன.

புனலாடுதல் என்பது, நீராடி மகிழ்தல் ஆகும். தோழியருடனும் தன் தலைவனுடனும் சென்று தலைவி புனலாடி மகிழ்கின்றாள். தலைவன் பிரிந்திருக்கையில் பிரிவுத் துன்பத்தைப் போக்கும் வகையில் அத்துன்பத்தை மறந்து விளையாட்டில் மூழ்கி மகிழ்ச்சி பெறுகின்றாள். தலைவனும் தலைவியும் சுனையில் நீராடி மகிழ்ந்தனர் என்பதை,

“பிரசவப் பல்கிளை ஆர்ப்பக், கல்லென
வரைஇழி அருவி ஆரம் தீண்டித்
தண்என நனைக்கும் நனிர்மலைச் சிலம்பில்
கண்என மலர்ந்த மாஇதழ்க் குவளைக்

கல்முகை நெடுஞ்சுனை நம்மொடு ஆடிப்'' (அகம்-228)
என்ற செய்யுளடிகள் பதிவுசெய்கின்றன.

சங்க காலத்தில் விளையாட்டு, மக்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருப்பதை அகநானூற்றுச் செய்யுளடிகளினூடாக உணர முடிகின்றது. விளையாட்டுக்களில் மனிதநேயப் பண்பு மேலோங்கிக் காணப்படுகின்றது. பண்டைத் தமிழர்களிடம் வழக்கிலிருந்த குறிகேட்டல் அல்லது பலன் கேட்டல் இன்றுவரை இந்த மண்ணில் நிலைகொண்டுள்ள ஒரு வழக்கு. தெய்வம் இறங்கி வந்து பேசும் உடல்களின்மீது மனிதருக்கு இன்றளவும் பெரும் மதிப்புள்ளது. அந்த ஆற்றுகைக்குள் நீண்ட மரபின் தொடர்ச்சி உள்ளது.

**அகநானூறு குறிப்பிடும் பண்பாட்டு அம்சங்கள் பற்றிய மதிப்பீடு**

லநூலைச் சமகால நோக்கில் வாசிக்கும் முறையியலை அவற்றுக்கெழுந்த உரைகள் ஏற்படுத்திவிடுகின்றன. அகநானூற்றுச் செய்யுட்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பழந்தமிழ் நாட்டு மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டு மரபுகள், கலாசார அம்சங்கள் முதலான பண்பாட்டம்சங்கள் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களினால் பேணப்பட்டு வருவதோடு அவற்றிலே மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. 'பல்லியும் பலனும்' என்ற நம்பிக்கை இன்றும் தமிழரிடம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் விளக்குகளை எங்கும் ஏற்றிக் கொண்டாடல் இன்றும் உலகில் நடைபெறுகின்றன. கார்த்திகைத் தீபத்தினை ஈழநாட்டார் இன்றும் விளக்கீடு என்றே அழைக்கின்றனர்.

பண்டைத் தமிழர்கள், இயற்கையோடு இணைந்து வாழ்ந்த காலம் என்பதால் இயற்கையில் கிடைக்கின்ற பொருட்களே ஒப்பனைக்காகப் பயன்படுத்தப்பட்டன. இன்றைய காலத்தில் பெண்கள் செய்யும் ஒப்பனையின் மூலக்கூறுகளைச் சங்க இலக்கியங்களில் அறிய முடிகின்றது. ஒப்பனையில் அதிகம் ஈடுபாடு உடையவர்களாக இக்காலப் பெண்கள் விளங்கினர். பூப்புச் சடங்கிலும் திருமணச் சடங்கிலும் மணப்பெண்ணுக்குச் சிறப்பான அலங்காரம் மேற்கொள்ளப்படுகின்றது. இன்றைய காலத்தில் விழாக்களின்போது, ஒப்பனை தொடர்பாகப் பயிற்சி பெற்ற ஒப்பனைக் கலைஞர்கள் அலங்கார வேலைகளை மேற்கொள்வதற்கு வருகை தருகின்றனர். இன்றைய காலகட்டத்தில் நாளாந்த வாழ்க்கையிலும் ஒப்பனையுடன் கூடிய அழகைப் பெண்கள் விரும்புகின்றனர். மேலைத்தேசத்தவரின் பண்பாட்டுத் தாக்கத்தால் தமிழர்கள் மத்தியில் ஒப்பனையில் மாற்றங்கள் ஏற்றப்பட்டுள்ளன.

பண்டைத் தமிழர்கள், இயற்கையில் கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டே விளையாட்டுப் பொருட்களைத் தயார்செய்திருக்கின்றார்கள். இக்கால விளையாட்டுக்கள் பலவற்றின் ஆரம்பம் சங்ககாலத்தில் காணப்பட்டுள்ளதை அகநானூற்றுச் செய்யுட்களினூடாக அறியமுடிகின்றது. வட்டை நாக்குப் போன்ற தடியால் அடிக்கும் விளையாட்டு 'வட்டுநா விளையாட்டு' எனப்பட்டது. வட்டு நா விளையாட்டில் நெல்லிக்காய், ஈங்கைப் பூவின் மொட்டுப் போன்றன வட்டாகப் பயன்படுத்தப்பட்டன. இக்காலத்தில் செயற்கைப் பந்து பயன்படுத்தப்படுகின்றது. சங்க காலத்தில் விளையாடப்பட்ட 'வட்டு நா' விளையாட்டு இன்றைய காலத்தில் விளையாடப்படும் 'கோல்ப்- பந்து' விளையாட்டாகக் காணப்படுகின்றது. பண்டைத்

தமிழர்களிடையே வழங்கிய மரபான அம்சங்களை அகநானூற்றுச் செய்யுள்களின் ஊடாக உணர முடியும். மேலும், மனிதனின் பல் பண்பாட்டுத் தளத்தை அகநானூற்றுச் செய்யுட்கள் தந்துள்ளன என்பதனையும் அறிய முடிகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


கந்தையா, ந, சி. (2003), அகநானூறு, சென்னை: அமிழ்தம் பதிப்பகம்.

கைலாசபதி, க. (1966), பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை: மக்கள் வெளியீடு.

சிவலிங்கராஜா, எஸ். (2004), ஈழத்துத் தமிழ் உரை மரபு, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சிவலிங்கராஜா, எஸ். (ப.ஆ), (2021) அகநானூறு களிற்றியானைநிரை, கொழும்பு: குமரன் அச்சகம்.

சுப்பிரமணியன், ஏ,வி. (1983), புதிய கோணங்களில் சங்க இலக்கியம், சென்னை: வானதி பதிப்பகம்.

ஞானசம்பந்தன், அ,ச. (1971), அகமும் புறமும், சென்னை: கழக வெளியீடு.

தட்சிணாமூர்த்தி, அ. (1994), தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு.

வித்தியானந்தன், சு. (1954), தமிழர் சால்பு, கண்டி, தமிழ் மன்றம்.

# பண்பாட்டுத் தேசிய நோக்கில் பாரதி படைத்த பெண்

**Sivanesh Ranjidha**

Visiting lecturer, Department of linguistics, University of Kelaniya.

sranj201@kln.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

குடியேற்ற நாடுகளில் தேசியத்தை விதைத்து அனைவரையும் ஒன்றாக இணைத்து ஆட்சிபுரியும் நோக்கில் தேசியம் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், ஆங்கிலேயரை நாட்டைவிட்டு விரட்டி சுதந்திரத்தைப் பெற சுதேசிகள் தேசியத்தைச் சுதேசப் பண்பாட்டுக் கருத்தியலோடு இணைத்து நோக்கினர். பாரதியின் கவிதைகள் அடிப்படையில் இந்தப் பண்பாட்டுக் கருத்தியல் தளத்திலேயே இயங்கியன. பாரதி தம் கவிதைகளில் கட்டமைத்த பண்பாட்டுத் தேசியம் என்பது இந்தியப் பண்பாட்டின், அதன் தொன்மங்களின் வழியாகப் பிறந்தவை. இந்தியாவுக்கே உரிய கருத்தியல்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்றதோடு மட்டுமல்லாமல் மரபின்வழி சமூகத்தில் இழையோடிப்போன பெண்ணடிமை, மூடநம்பிக்கை ஆகியவற்றைத் திரைவிலக்கி பெண்ணுரிமை, பெண் கல்வி, ஆண் - பெண் சமநீதி, பெண்ணைப் பாரத மாதாவாக உருவகித்துத் தேசிய உணர்வை நிலைநாட்டல் ஆகிய முயற்சியில் பாரதி முன்னின்றான். இந்திய தேசம் இனம், மதம், மொழி, பிரதேசம் எனப் பிளவுபடாது ஒரு தேசத்தின் மக்களாக அவர்கள் வாழ வேண்டும் என்னும் எண்ணத்தில் ஏற்றத்தாழ்வுகளும் அடிமையுணர்வும் உள்ள நாட்டில் தேசியம் வெற்றியளிக்காது என்பதை உணர்ந்த பாரதி, அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களைப் பாரத மாதாவாக உருவகித்து அவர்தம் விடுதலையையும் நாட்டு விடுதலையையும் இரண்டறக் கலந்து பண்பாட்டை ஒரு மூலதனமாகக் கொண்டு கவிதைகளைப் படைத்துள்ளான். இவ் ஆய்வானது பாரதியின் கவிதைகளில் பெண் பற்றிய கருத்துநிலை பண்பாட்டுத் தேசியம் மூலம் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஆராய்கின்றது. விபரணப் பகுப்பாய்வு முறையியல், பெண்ணியத் திறனாய்வு முறையியல் ஆகியன இவ் ஆய்வுக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது பாரதியின் கவிதைகளை முதன்மை மூலமாகக் கொள்வதோடு, ஆய்வு தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளைத் துணை மூலங்களாகவும் கொள்கிறது.

***திறவுச் சொற்கள் :*** *பண்பாட்டுத் தேசியம், கருத்துநிலை, பெண்ணியம், தொன்மம், காலனியம்.*

## அறிமுகம்

தேசம் என்னும் புவியியல் பரப்பிற்குள் தேசியம் என்னும் உணர்வைக் காலனிய ஆதிக்கத்தில் புகுத்தியவர்கள், ஆங்கிலேயர்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கீழைத்தேசங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த ஆங்கிலேய அரசாங்கம் பிரதேசவாரியாக பிளவுப்பட்டு வாழ்ந்த தமிழ் மக்களை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்து நிர்வகிப்பதற்காகத் தேசியம் என்னும் அரசியல் கருத்துநிலையை அறிமுகப்படுத்தினர். இந்தக் கருத்துநிலை காலப்போக்கில் அடிமைப்பட்டிருந்த இந்திய தேசத்தை ஆங்கிலேயரிடமிருந்து

மீட்டெடுப்பதற்காகச் சுதேசிகளால் பண்பாட்டுத் தேசியமாக மாற்றப்பட்டது. ஆசியாவில் தேசியம், அந்நியரான ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்கு எதிராகத் தோற்றம் பெற்றது. அந்நிய ஆதிக்க சக்திகள் போட்டுக்கொடுத்த சமூக, பூகோள அடித்தளத்தை ஆதாரமாகக் கொண்டுதான் ஆசியத் தேசிய இயக்கங்கள் எழுந்தன. அதேவேளை, அதன் துரதிஸ்ரவசமான பக்கம் என்னவெனில், ஆசியத் தலைவர்கள் தேசியத்தைப் பழமைக்குள் புகுத்திட்டனர் (திருநாவுக்கரசு,மு. 2010:18). தேசியம் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப எவ்வாறு மாற்றமடைந்து தன்னைப் பண்பாட்டுத் தமிழ்த் தேசியமாகத் தக்கவைத்துக்கொண்டது.

பாரதியின் கவிதைகள் பண்பாட்டுத் தேசியம் என்னும் கருத்துநிலையில் படைக்கப்பட்டதும் இப்படியொரு பின்னணியிலேயே ஆகும். தமிழில் நவீன கவிதை தோன்றி வளர்வதற்கு மகாகவி பாரதியின் கவிதைகளின் உருவம், உள்ளடக்கம் ஆகியன அடிப்படைக் காரணமாக அமைந்தமையைத் தமிழ்க் கவிதை வரலாறு உணர்த்துகிறது. பன்மைத்தன்மை வாய்ந்த பாரதியின் கவிதைகளில் தேசிய உணர்வு, விடுதலைக் குரல், பெண் விடுதலை ஆகிய உள்ளடக்கங்கள் வெளிப்படுகின்றன. ஆங்கிலேயரிடம் இருந்து பாரதநாட்டை விடுதலைப் பெறச்செய்யும் நோக்கில் பாரதி பாடிய கவிதைகள் அடிப்படையில் பாரதப் பண்பாட்டுத் தளத்தில் உருவானவை. பெண் குறித்துப் பாரதி தன்னுடைய கவிதைகளில் கட்டமைக்கும் பண்பாடுசார் விடயங்களும் பெண் குறித்த விடுதலைப் பார்வையும் தனி ஆய்விற்குரியது. பாரதி தன்னுடைய கவிதைகளில் படைத்த பெண் பற்றிய கருத்துநிலைகள் எவ்வாறு ஒரு நாட்டைப் பண்பாட்டுத் தளத்தில் வைத்துத் தேசியம் என்னும் உணர்வை பாரத மக்களுக்கு ஊட்டியுள்ளது என்பதைப் பிரதான நோக்கமாக இந்த ஆய்வு கொண்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

பாரதியின் கவிதைகளில் பண்பாடு சார்ந்த, பெண்கள் குறித்த ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. ‘‘பாரதப் பண்பாட்டுத் தளத்தில் பாரதி’’, ‘‘பாரதியின் தேசியம்’’ ஆகிய தலைப்புகளில் வெளிவந்த அ.சீனிவாசனின் நூல்கள் இவ் ஆய்வுக்கட்டுரையின் தலைப்புடன் தொடர்புடையதாக இருக்கின்றன. இவ்விரு நூல்களிலும் பாரதியின் அனைத்துக் கவிதைகளும் பண்பாடு, தத்துவம், தேசியம் என்னும் நோக்கில் ஆராயப்படுள்ளன. இவைதவிர, பா.சிவானந்தவல்லி எழுதிய ‘‘பாரதியும் பெண் விடுதலையும்’’, மா.தியாகராசன் எழுதிய ‘‘பாரதியின் சமூகப் பார்வை’’, சித்திரலேகா மௌனகுரு எழுதிய ‘‘பாரதியின் பெண் விடுதலை’’ ஆகிய கட்டுரைகளும் பாரதியின் பெண் பற்றிய கருத்துநிலையை விளக்குவனவாக உள்ளன. மேற்படி கட்டுரைகளும் ஆய்வு நூல்களும் உதிரியாக பாரதியின் பெண் பற்றியும், பண்பாடு குறித்த கருத்துநிலை பற்றியும், தேசியம் குறித்தும் ஆராய்கின்றன. இவற்றை வைத்துக்கொண்டு பாரதியின் கவிதைகளில் பண்பாட்டுத் தேசியம் குறித்த கருத்துநிலையை இணைத்து பார்க்கமுடியாது இருப்பினும், முற்றுமுழுதாக பண்பாட்டுத் தேசிய நோக்கில் பெண்கள் குறித்த சிந்தனைகள் இல்லை எனச் சுட்ட முடியாது. அவ்வகையில், இவ் ஆய்வானது ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளின் வழி நின்று அவற்றின் தொடர்ச்சியாக நிகழ்த்தப்படுகின்றது.

**ஆய்வு முறையியலும் ஆய்வு மூலங்களும்**

இவ் ஆய்வு விபரண முறையியல், பகுப்பாய்வு முறையியல் ஆககிய முறையியல்களையும் பண்பாட்டுத் தேசியம் என்ற கோட்பாட்டு அணுகுமுறையையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பாரதியின் கவிதைகள் ஆய்விற்குரிய முதன்மை மூலமாகவும் ஆய்வுடன் தொடர்புடைய கட்டுரைகள், நூல்கள், இணையத்தளக் கட்டுரைகள் ஆகியன துணை மூலங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும் பிரதான கண்டறிதல்களும்**

பாரதியின் பண்பாட்டுத் தளம் என்பது பாரதப் பண்பாட்டினூடாக வெளிப்படும் கலாசாரம், மரபு, வரலாற்றுப் பாரம்பரியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. பழமை விரும்பியாக மட்டுமன்றி, பழமையுடன் புதுமையையும் இணைத்துப் பாரத தேசத்தை ஒன்றிணைக்க முயற்சி செய்தவன், பாரதி. இதனைப் பாரதியின் பெண் சார்ந்த கருத்துநிலைகளின் வழி காணலாம். பாரத நாடு காலனிய ஆதிக்கத்தில் அடிமைப்பட்டிருக்கும்போது பண்பாட்டுத் தேசியத்தை வெறுமனே பேசாது அனைவருக்கும் சமவுரிமை வழங்கி ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து வாழ்வதன் மூலமே ஒரே தேசத்தவர் என்னும் உணர்வு உயிர்பெறும் எனப் பாரதி சிந்தித்தான். பாரதி அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களுக்குத் தமது கவிதைகளில் அளித்த முன்னுரிமையும் அது சார்ந்த கருத்துநிலைகளும் இதனை உறுதிசெய்கின்றன. பாரதி படைத்த பெண் சார்ந்த கருத்துநிலைகளைக் கீழ்வரும் பகுப்புகளின் மூலம் பகுத்து ஆராயலாம்.

1. பாரத நாட்டைப் பெண்ணாகப் பார்த்தமை
2. பாரத நாட்டு மொழிகளைத் தாயாகப் போற்றியமை
3. பெண்ணைக் கடவுள் நிலையில் வழிபட்டமை
4. நவீன கருத்துநிலையின் மூலமாக பெண் சுதந்திரத்தை வலியுறுத்தியமை
5. இல்லறப் பண்பாட்டில் பெண்ணின் வகிபாகத்தை முதன்மைப்படுத்தியமை

**பாரத நாட்டைப் பெண்ணாகப் பார்த்தமை**

பாரதியின் பண்பாட்டுத் தேசியம் ஓர் அம்சமாக பாரத நாட்டைப் பெண்ணாக உருவகப்படுத்தி அதன் தொன்மம், சிறப்பு ஆகியவற்றைப் பாரத மக்களுக்கு வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இதனை, ‘‘எங்கள் தாய்’’, ‘‘பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி’’, ‘‘பாரத மாதா’’, ‘‘வெறிகொண்ட தாய்’’, ‘‘தாயின் மணிக்கொடி’’, ‘‘பாரத மாதா நவரத்தின மாலை’’, ‘‘பாரத தேவியின் திருத்தசாங்கம்’’ ஆகிய தலைப்புகளில் இடம்பெறும் கவிதைகளில் காணலாம். இந்தியப் பண்பாட்டில் பெண்கள் தாய்மைநிலையில் வைத்துப் போற்றப்படுகின்றனர். இதனை உணர்ந்த பாரதி பாரதநாட்டின் பெருமைகள், பண்பாட்டு அடையாளங்கள், தொன்மங்கள் என அனைத்தையும் பாரத மாதாவாக உருவகித்துள்ளான். ‘‘எங்கள் தாய்’’ என்னும் கவிதையில் முப்பது கோடி பாரத ஜனங்களைப் பாரதத் தாயின் முகமாகக் காண்கிறான். இதனை, ‘‘முப்பது கோடி முகமுடையாள்’’ என்கிறான், பாரதி.

பதினெட்டு மொழிகளைக் கொண்டவள், நாவினில் வேதமுடையவள், யோகத்தில் நிகரற்றவள் என இந்தியத் தத்துவங்களையும் பெண்ணாகப் பாரதி உருவகித்துள்ளான். கோடி கோடி தடக்கைகளால் அறங்கள் நடத்துபவளாகவும், தன்னை எதிர்த்து வருபவர்களைத் தூளாக்குபவளாகவும் காணப்படுகின்றாள். பூமியைக் காட்டிலும் பொறுமை உடையவளாகவும், பெரும் புண்ணிய நெஞ்சுடையவளாகவும் இருக்கிறாள். எனினும், தீங்கிழைப்பவள் முன் கொடும் துர்க்கையாகவும் காட்சியளிக்கின்றாள் (சீனிவாசன், அ. 2004:38).

“பாரத மாதா” என்னும் கவிதையில் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் கூறப்படும் தொன்மங்களைச் சுட்டிக்காட்டி, அவை அனைத்தும் பாரத மாதாவே எனப் பெண்ணின் பெருமை பேசுகின்றான், பாரதி.

“முன்னை யிலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடைய வில்? – எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின்வில்…”
(பாரதியார் கவிதைகள்,பக்.131)

என்னும் கவிதையில் இலங்கை அரக்கர் அழிய முடித்த வில் பாரததேவியின் வில், இந்திர சித்தன் இரண்டு துண்டாக எடுத்த வில் பாரத தேவியின் வில், காண்டிபம் ஏந்தி உலகினை வென்ற கல்லொத்த தோள் பாரத தேவியினுடையது, போர்க்களத்தில் பகவத்கீதை உரைத்தது பாரத தேவியின் வாய், சாகும்போது இரு செவிக்குண்டலம் தந்த கொடைக் கை பாரத தேவியினுடையது எனப் பாரத தேசத்தின் தொன்மங்கள் அனைத்தும் பெண்ணிற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டு அதன் பழம் பெருமையினூடாகப் பண்பாட்டுத் தேசியத்தைக் கட்டமைக்கின்றான், பாரதி. “பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி” என்னும் கவிதையில் பாரத நாட்டின் விடுதலையைப் பாடி பாரத மாதாவைத் துயில் எழுப்புகின்றான். அவ்வாறு துயில் எழுப்பும்போது அந்தணர் வேதம் ஓதுகின்றமை, அனைவரும் ஒன்று கூடி பாரதத் தாயின் விடுதலைக்குக் காத்திருக்கின்றமை, சங்கு ஊதப்படுகின்றமை ஆகிய அனைத்தும் பாரத நாட்டின் தேசியத்தை அதன் பண்பாட்டம்சங்களோடு வெளிப்படுத்துகின்றன. பிள்ளைகள் துயில் எழுப்ப தாய் உறங்குவதா என வினா எழுப்பி நாட்டு விடுதலையைப் பெண்ணோடு இணைத்து அந்த நாட்டிற்குத் தாய்மை அந்தஸ்தைப் பாரதி வழங்குகின்றான். “பாரத மாதா நவரத்தின மாலை” என்னும் கவிதையில் பாரத நாட்டின் தத்துவ நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் அனைத்தையும் தந்தவள் எனப் பாரதி பெண்ணைப் புகழ்கின்றான்.

**பாரத நாட்டு மொழியைத் தாயாகப் போற்றியமை**

ஒரு நாட்டின் தேசிய அடையாளமாகவும் அந்நாட்டு மக்களின் உணர்வாகவும் வெளிப்படுவது அந்நாட்டு மக்களால் பேசப்படும் மொழி. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தில் ஆங்கில மொழி முதன்மைப்படுத்தப்பட்டு, சுதேச மொழிகள் புறந்தள்ளப்பட்டமையைப் பாரதி கண்டித்துத் தன்னுடைய கவிதைகளில் அவற்றைப் பதிவுசெய்துள்ளான். “விதமுறும் நின்மொழி பதினெட்டும் கூறி வேண்டியவாறு உன்னைப் பாடுதுங் காணாய்”, “செப்பும் மொழி

பதினெட்டுடையாள்'' எனப் பாரத நாட்டின் பதினெட்டு மொழிகளையும் பெண்ணிற்கு ஒப்பிடும் பாரதி ''தமிழ்த்தாய்'' என்னும் கவிதையில் தமிழ் மொழியைத் தாய்க்கு நிகராக வைத்துப் போற்றுகின்றான். ஆதிசிவன் பெற்றதாக, அகத்தியர் இலக்கணஞ் செய்ததாக, மூவேந்தர்கள் வளர்த்ததாகப் பாரத மாதவாவே தன்னைப் பற்றிப் பேசும் பாங்கில் இக்கவிதை முழுவதும் படைக்கப்பட்டுள்ளது.

''ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்''
''கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு – பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்''
(பாரதியார் கவிதைகள், பக்.152)

மொழியுணர்வை விதைக்க வந்த பாரதி, பண்பாட்டுத் தேசியத்தைப் பாரத மக்கள் மத்தியில் விதைக்க அதனை பெண்ணிற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளான். இக்கவிதையில் வளமுடன் வாழ்ந்த பாரத மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி அழியும் நிலைக்கு உள்ளானதைப் பாரதி பதிவுசெய்கின்றான்.

**பெண்ணை கடவுள் நிலையில் வழிபட்டமை**

பாரதப் பண்பாட்டின் இன்னும் ஓர் அம்சம் பெண்களைத் தெய்வங்களாக வழிபடுவது. பெண்ணைச் சக்தியாக, நதிகளாக, நிலமாக எனப் பல்வேறு வழிகளில் வழிபடும் தன்மை பாரத மக்களின் பண்பாடுசார் அடையாளங்களில் ஒன்று. பாரதப் பண்பாட்டின் சாக்த வழிபாடு இதனைத் தெளிவுபடுத்துகின்றது. பெண், தாய்மையின் அடையாளமாக மட்டுமன்றி, எதையும் தாங்கும் சக்தியாகவும் கருணையின் வடிவமாகவும் பாரத மக்களால் வணங்கப்பட்டாள். இந்தச் சக்தி வழிபாடு உலகைக் காப்பவள் பெண் என்னும் பழம்பெரும் பாரதத்தின் நம்பிக்கைகளில் ஒன்றாகும். இதனைத் தெளிந்த பாரதி, ''சிவசக்தி'', ''பராசக்தி'', ''மகாசக்தி'', ''ஓம் சக்தி'', ''சக்திக்கூத்து'', ''சக்தி'', ''காளி'', ''மகாகாளி'', ''முத்துமாரி'', ''தேசமுத்துமாரி'', ''கோமதி'', ''திருமகள்'', ''கலைமகள்'', ''நவராத்திரி'' ஆகிய தலைப்புகளில் கவிதைகள் படைத்ப்து பெண்ணைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தினான். வேதங்களிலும் புராணங்களிலும் பேசப்படும் பெண்ணின் தெய்வீகத் தொன்மத்தைப் பாரதி தேச விடுதலைக்காகவும் தேசிய உணர்வை மக்களிடத்தில் பரப்புவதற்காகவும் கையாண்டுள்ளான். ''சக்தி விளக்கம்'' என்னும் கவிதையில்,

''காலையிள வெயிலின் காட்சி – அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி
நீல விசும்பினிடை யிரவிற் - சுடர்

நேமி யனைத்துமவ ளாட்சி''

(பாரதி கவிதைகள். பக்.78)

இந்த உலகத்தின் இயக்கத்திற்குச் சக்தியே காரணம் எனப் பெண்மையைக் கொண்டாடுகின்றான், பாரதி. ஆன்மிக உணர்வின் வழியாகச் சக்தியை அடையும் வழி பற்றியும் அதனால் கிடைக்கும் முக்திப்பேறு பற்றியும் பாரதி குறிப்பிடுவது, இந்தியத் தத்துவத்தைப் பெண்ணோடு இணைத்து அவளை மதித்துப் பாரத தேசத்தின் விடுதலைக்கு வழிகாட்டுவதாக அமைகின்றது. சக்தி என்னும் கவிதையின் ஒரு பகுதியில் பாரதி, பாரத மாதாவை நோக்கி வாழ்வு பெருக்கும் மதியாக, மாநிலம் காக்கும் வலிமையாக, தாழ்வைத் தடுப்பவளாக, ஊழ்வினை நீக்குபவளாக எனப் ஆன்மிகத்தோடு இணைத்துப் போற்றுகின்றான். பாரதத்தின் தர்மம் ஆண் - பெண் பேதம் அற்றது. அறிவு, ஆற்றல், இயக்கம், இயற்கை என அனைத்தையும் பெண் வடிவாகக் காணும் பெருமை கொண்டது. ஆலய வழிபாட்டிலும் அம்பிகையை, தாயாரை வணங்கிய பின்னரே நாம் இறைவனை வணங்கச் செல்கின்றோம். அதேபோல இல்லத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் தாய்க்குத்தான் முதல் மரியாதையும் வணக்கமும் உரியதாகும் (செய்தித்தாள் கட்டுரை, தேர்வு பெட்டகம், 2023). பாரதி பெண்ணிற்குத் தெய்வநிலையை மட்டும் அளித்திடாமல் இந்த உலகில் பரந்து வாழும் மகாசக்தியாக, அனைத்துமாகி நின்றவளாகக் காண்கிறான். இதனை,

''யாது மாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
பூத மைந்தும் மானாய் - காளி
பொறிக ளைந்து மானாய்
..........................
அன்பளித்து விட்டாய் - காளி
ஆண்மை தந்து விட்டாய்!''

(பா.க:பக்.60)

எனக் காளியை அனைத்தையும் வகுக்கும் சக்தியாக பாரதி காட்டுவது, அவனது பண்பாட்டுத் தேசியத்தின் கருத்துநிலையாகும்.

**நவீன கருத்துநிலையின் மூலமாகப் பெண் சுதந்திரத்தை வலியுறுத்தியமை**

மிகப் பண்டைய காலத்தில் பெண்ணிற்குச் சமுதாயத்தில் பெருமையும் மேன்மையும் தலைமையும் இருந்தது. தாய்வழிச் சமுதாயமே மனித குலத்தின் தொடக்கமாகும். பாரத மக்கள் பெண்ணிற்குத் தெய்வீகத்தன்மையைக் கொடுத்துக் கொண்டாடினர். சமுதாயத்தின் இரு கண்களாக பெண்ணும் ஆணும் கருதப்பட்டனர். இடைக்காலத்தில் ஆதிக்கத்தில் இருந்தவர்கள் பெண்ணைத் தாழ்த்திவிட்டனர். பெண் அடிமை போல் ஆக்கப்பட்டாள். பெண்களும் சூத்திரர்களும் வேதங்களையும் நூல்களையும் படிக்கலாகாது என்று சில பொய்மைச் சாத்திரங்களில் எழுதிவைத்தார்கள். பிற்காலத்தில் பெண்கள் மேலும் அடிமைப்படுத்தப்பட்டுப் பிற்படுத்தப்பட்டனர்; பின்னுக்குத்தள்ளப்பட்டனர். தற்காலத்தில் பெண் குலத்தில் பெரிய அளவில் எழுச்சி ஏற்பட்டு வருகின்றது. பெண்ணுரிமை இயக்கம், புதுமைப் பெண் இயக்கம் முதலியன பெருகி வருகின்றன. சகல துறைகளிலும் பெண்களுக்குச் சமவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட

வேண்டும் என்னும் உணர்வுநிலை, விழிப்புணர்வு பெருகி வருகிறது. புதுமைப் பெண் இயக்கத்தின் முன்னோடியாக பாரதி விளங்குகின்றார் (சீனிவாசன், அ., 1999:26).

பாரதியின் பண்பாட்டுத் தேசியம் என்பது பாரத நாட்டை முழுமையாக ஒன்றிணைப்பது. அவ்வாறு ஒன்றிணைக்கப்படும் நாட்டு மக்கள் தமக்குள் ஏற்றத்தாழ்வுகளுடன் இருந்தால் உண்மையான விடுதலையைப் பெறமுடியாது என்பதை உணர்ந்தே நவீன கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டு அவற்றைப் பெண் விடுதலைக்குப் பயன்படுத்தினான். துருக்கியத் தேசியவாதத்தின் தத்துவவாதி என்று கூறப்படுபவரும் பிரபல எழுத்தாளருமான ஷியா கொகல்ப் பெண்களின் திருமண, மறுமண உரிமை, சொத்துரிமை என்பவற்றை ஆதரித்து எழுதினார். பெண்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்படுதல் சமூகத்தின் பிற்போக்குத்தனத்திற்கு ஒரு தெளிவான உதாரணமாகும் என்று இச்சீர்திருத்தவாதிகள் கருதினர். பெண்களைக் கௌரவிக்காத எந்த நாடும் வளர்ச்சியடைய முடியாது என ஷியா கொகல்ப் கூறினார். துருக்கியத் தேசியவாதிகளின் தலைவர் எனப்படும் முஸ்தபா கமாலின் நவீனத்துவம் பற்றிய கருத்துக்களுடன் பெண்விடுதலைக் கருத்துக்களும் இணைந்திருந்தன. பெண்களது முன்னேற்றம் பற்றிய ஊக்கமின்மையே துருக்கியின் கடந்த காலத் தோல்விக்கு எல்லாம் காரணம் என அவர் கூறினார் (சித்திரலேகா மௌனகுரு, 1996:பக்.13). பாரதியினுடைய எழுத்துகளிலும் துருக்கிய தேசியவாதத்தின் கருத்துகள் வெளிப்பட்டதாக சித்திரலேகா மௌனகுரு குறிப்பிட்டுள்ளார். இந்த அடிப்படையில் நின்று பார்க்கும்போது பாரதி நாட்டு விடுதலையைப் பேச பெண்களின் விடுதலை அவசியம் என்பதைத் தன்னடைய கவிதைகளில் பதிவுசெய்துள்ளான். ''வேண்டுவன'' என்னும் தலைப்பில் வரும் கவிதையில்,

''கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்''
(பாரதியார் கவிதைகள், பக்.58)

எனப் பெண் விடுதலையைப் பாரதி வேண்டுகின்றான். ''பெண் விடுதலை'', ''பெண்கள் விடுதலைக் கும்மி'', ''புதுமைப்பெண்'', ''பாஞ்சாலி சபதம்'' ஆகிய படைப்புகளில் பாரதி நவீன கருத்துநிலைகளை விதைத்துப் பெண் சுதந்திரத்தைப் பேசியுள்ளான்.

''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்
அமிழ்ந்து பேரிளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ!''
(பாரதியார் கவிதைகள் - பக்.443)

எனப் ''புதுமை பெண்'' கவிதையில் பாரதி பெண்களை நோக்கி மற்றவருக்கு அஞ்சாமல் துணிந்து வாழும் வழியைக் காட்டுகின்றான். அறியாமையில் மூழ்கி கல்வி அறிவின்றி பயந்து வாழும் மடமையை நீக்க வேண்டும் எனச் சிந்திக்கின்றான். பெண்கள் விடுதலைக் கும்மியிலும் பெண் பற்றிய புதிய கருத்துநிலைகளை முன்வைத்து அவர்தம் விடுதலையைப் பேச வந்த பாரதி பெண்கல்வி உரிமை, பெண் திருமணம், பெண் அடிமை ஒழிப்பு, தேசத்தைப் பெண் ஆட்சி புரிய வேண்டும் என்னும் கருத்துக்களைக் குறிப்பிடுகின்றான். அதுவரை காலமும் கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் உரியது என்ற பாரபட்சத்தை உடைத்தெறிந்து, ''கற்பு நிலையென்று சொல்ல வந்தார் அதனை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்'' எனப் பாரதி கூறுகின்றான். தமிழர் பண்பாட்டு மரபில் கற்பு என்பது ஆண் - பெண் ஒழுக்கம் சார்ந்தது. மேலைநாடுகளில் இல்லாத வழக்கங்களில் ஒன்று. புதுமையைப் புகுத்திய பாரதி கற்பு தேவையற்றது என உதறித்தள்ளாமல் அதனை ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் எனச் சொல்லி அந்தப் பண்பாட்டைக் காவல் செய்கின்றான். இது பாரதியின் பண்பாட்டுத் தேசியத் தளத்தின் இன்னுமொரு பக்கம் ஆகும். உண்மையில் பாரதியின் தேசிய உணர்வு என்பது அனைவரையும் சம அந்தஸ்து வழங்கி ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்வதாகும். பெண் விடுதலையினூடாக, அவர்கள் சார்ந்த கருத்தியலினூடாக பாரதி கட்டமைத்தது பண்பாட்டுத் தேசியமே. ''பெண் விடுதலை'' என்னும் தலைப்பில் பாடிய கவிதையில், ''சிறுமை தீரநந் தாய்திருநாட்டைத் திரும்ப வெல்வதிற் சேர்ந்திங் குழைப்போம்'' எனப் பெண்களை நாட்டு விடுதலைக்காகக் குரல் கொடுக்க அழைப்பு விடுக்கின்றான், பாரதி. பாரத தேசத்தின் வீரப்பெண்களாகக் கல்வி அறிவு படைத்தவர்களாக, வீரம்பொருந்தியவர்களாகப் பாரதி பெண்களைப் படைத்துள்ளான். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக ஜான்சிராணி நடத்திய வரலாற்றுப் போர் குறித்த சிந்தனைகள் பாரதியிடம் இருந்திருப்பதால் அந்த ஜான்சிராணிக்குச் சமமாக பாரதப் பெண்களை வீரம்பொருந்தியவர்களாகப் பாரதி காட்டவிழைந்துள்ளான் என எண்ணத்தோன்றுகின்றது.

பெண் விடுதலை பேசும் பாரதி, பண்பாட்டு ரீதியாகப் பெண் பிறழ்ந்துவிடக்கூடாது என்பதையும் கற்பு என்பது பாரதத்தின் அடையாளம் என்பதையும் நன்கு உணர்ந்துள்ளான். அதனாலேயே மேலை நாடுகளில் நிலவுவது காதல் விடுதலையே தவிர, பெண் விடுதலை அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகின்றான். இதனை,

காதலிலே விடுதலை யென்றாங்கோர் கொள்கை
கடுகிவளர்ந்திரும் என்பார் யூரோப்பாவில்
மாதரெல்லாம் தம்முடைய விருப்பின் வண்ணம்
மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர்
பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போல
பிரியம் வந்தால் கலந்து அன்பு பிரிந்துவிட்டால்
வேதனையொன்றில்லாதே பிரிந்து சென்று
வேறொருவனைக்கூட வேண்டுமென்பார்
வீரமிலா மனிதர் சொலும் வார்த்தைகண்டீர்
விடுதலையாம் காதலெனில் பொய்மைக் காதல்

(பாரதியார் கவிதைகள், பக்.31)

எனப் பாடும் பாரதி, மிகவும் தெளிவாக பாரதப் பண்பாடு பேசும் ஒருத்தனுக்கு ஒருத்தி என்னும் பண்பாடுசார் விழுமியத்தைப் பேணுவதில் தெளிவாக இருக்கின்றான்.

பாரதி படைத்த ''பாஞ்சாலி சபதம்'' மகாபாரத தொன்மத்தைக் கையாண்டு பாரத நாட்டின் விடுதலைக்காக ஓர் பெண் குரல் கொடுக்கும் பாணியில் புதிய நோக்கில் படைக்கப்பட்டுள்ளது. விடுதலை வேட்கை, பெண்ணியம், சமநிலைச் சமுதாயத்தைப் படைத்தல் என்னும் நோக்கில் பாரதி தொன்மத்தைப் புதிய பாடுபொருளில் நோக்கியுள்ளான். நாடகக் கலைஞர்கள் பாஞ்சாலி சபதத்தைத் திரௌபதி வஸ்திராப அரணம் என்கின்றனர். ஆனால், பாரதியாரோ அப்பகுதிக்குப் பாஞ்சாலி சபதம் எனப் பெயரிடுகிறார். கொடுங்கோலர் அவையிலே நின்று சபதம் செய்த பாஞ்சாலியின் வீரத்தை, அடிமைப்பட்டு அடங்கி வாழும் பாரத மக்களுக்கு நினைவூட்டி, அவர்களையெல்லாம் விடுதலைக்குப் போராடும் வீரர்களாக மாற்றும் நோக்கத்துடன், தம் குறுங்காப்பியத்திற்குப் பாரதி பெயர் வைத்தார் என்கிறார் மா.பொ.சி (கோவிந்தராஜு,ம. முதலியோர், 2023:76).

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சூதாட்டத்தில் பாஞ்சாலியை வைத்து ஆடி அவளை அவமானப்படுத்தியபோது அடங்கிப் போய்விடாது கொதித்து எழும்பிய ஒரு புரட்சிப் பெண் பாத்திரமாக பாரதி பாஞ்சாலியைக் காட்டுகின்றான். ஆரம்பத்தில் அனைவரிடமும் நீதி கேட்கும் பாஞ்சாலி அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, வேதச் சுடர்முன் வலம் வந்து பாண்டவரைத் திருமணம் செய்ததையும் சுட்டிக்காட்டி பாதகர் முன் பரிசளித்து வேடிக்கை பார்ப்பதாகப் பாஞ்சாலியின் துயரத்தை வெளிப்படுத்துகின்றான், பாரதி. இவ்விடத்தில் பாரதப் பண்பாட்டின் திருமணப் பெருமை பாரதியால் பண்பாட்டின் ஓர் அடையாளமாக பாஞ்சாலியை முன்னிறுத்திக் காட்டப்படுகின்றது. ஆனால், பெண் என்பவள் எல்லா நேரங்களிலும் தன் கற்பிற்கு அவமானம் நேரும்பொழுது பொறுமையாக இருக்கமாட்டாள் என்பதைப் பின்வரும் கவிதையில் பாரதி சுட்டுகின்றான்:

''தேவி திரௌபதி சொல்வாள் - ஓம்
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்
பாவிதுச்சாதனன் செந்நீர் - அந்தப்
பாழ்த்துரியோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து - சூழல்
மீதினிற் பூசியே நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான் - இது''
(பாரதியார் கவிதைகள், பக்.390)

இங்கு ஒரு பெண்ணை அவமானப்படுத்திய ஆணை கண்டு வெகுண்டு பெரும் துணிச்சலோடு அவனை அழிக்கச் சபதம் எடுக்கும் புரட்சிப் பெண்ணைப் பாரதி படைத்துள்ளான். பெண் வணக்கத்திற்குரியவள் என்பதையும் அவள் அவமானப்படுத்தப்படுவதையும் பாரத நாடு ஏற்றுக்கொள்ளாது என்னும் பண்பாட்டுக் கருத்துநிலையையே பாரதி இங்கு ஆவணப்படுத்தியுள்ளான். பெண் கடவுளுக்குச் சமமாக வைத்துப் போற்றத்தக்கவள் என்னும் கருத்து பாரத நாட்டிலும் பாரதியின் கவிதைகளிலும் வெளிப்படுகின்றது. அதனாலேயே

பாஞ்சாலி சபதத்தில் துரியோதனன் துகில் உரியும்போது கண்ணபிரான் அருளால் புதிய புதிய பட்டுச்சேலைகள் வளர்ந்தன என்றும் துரியோதனன் பாஞ்சாலியை அவமானப்படுத்தும் நோக்கத்தில் தோல்வி கண்டான் என்பதையும் பாரதி இங்கு குறிப்பிட்டுள்ளான்.

கண்ணபிரான் அருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம் - அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே!
………………………………………
துன்னிய துகிற்கூட்டங் - கண்டு
தொழும்பத்துச் சாதனன் வீழ்ந்திட்டான்
தேவர்கள் பூச்சொரிந்தார் - ஓம்
ஜெயஜெய பாரத சக்தி யென்றே
(பா.க: பக்.390)

என்னும் பாஞ்சாலி சபதப் பகுதியில் பாரதி குறிப்பிடுகின்றான். பெண்ணடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்பும் பாஞ்சாலி, பாரதப் பண்பாட்டின் அடையாளமாகவும் அந்தப் பாரதம் போற்றும் தெய்வமாகவும் இங்கே காட்டப்படுகின்றாள். இது பாரதி பெண் பற்றிய நவீன கருத்துநிலையைக் கட்டமைத்து, அதனைப் பாரதப் பண்பாட்டுத் தேசியத்தின் சின்னமாகக் கொண்டு வருவதைக் காணலாம்.

**இல்லறப் பண்பாட்டில் பெண்ணின் வகிபாகம்**

பாரதப் பண்பாட்டில் குடும்பம் என்னும் அலகிற்கு இன்றியமையாத ஓர் இடம் உண்டு. அந்தக் குடும்பப் பெருமையைக் கட்டமைப்பதிலும் பாதுகாப்பதிலும் பெண்ணிற்குப் பெரும் பங்கு இருப்பதாக பாரதி தன்னுடைய கவிதைகளில் குறிப்பிடுகின்றான். பாரத நாடு ஒரு பெண்ணைத் தாயாக, மனைவியாக, குலத்தெய்வமாக, சகோதரியாக, மகளாக எனப் பல்வேறு நிலைகளில் வைத்துப் போற்றுகின்றது. இதனை “பாரதி அறுபத்தாறு” என்னும் கவிதையில்,

“தாய்க்கு மேல் இங்கேயோர் தெய்வமுண்டோ
தாய் பெண்ணேயல்லளோ? தமக்கை தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணேயன்றோ?
மனைவியொருத்தியை அடிமைப்படுத்தவேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப்படுத்தலாமோ?
தாயைப் போலே பிள்ளை யென்று முன்னோர்
வாக்குளதன்றோ? பெண்மை அடிரைமயுற்றால்
மக்கள் எல்லாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ?”
(பாரதியார் கவிதைகள், பக்.221)

எனப் பெண்மையை, அவளது குலப்பெருமையைப் பாரதி குறிப்பிடுவதோடு, அந்தப் பெண்ணை அடிமைப்படுத்துவது ஒட்டுமொத்த பெண் குலத்திற்கும் இழைக்கும் அநீதி என்கிறான், பாரதி.

பாரதி பெண் பற்றிய கருத்துநிலைகளில் எந்தவொரு இடத்திலும் ஆணை எதிர்த்துத் தனியாக வாழ வேண்டும் எனக் கூறாது, "காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவிலும் கை கொடுத்து" வாழ வேண்டும் எனப் பெண்ணைக் குடும்ப வாழ்வில் இணைந்து சமவுரிமையுடன் வாழவே வழிகாட்டுகின்றான். இதுவே பாரதப் பண்பாடும் ஆகும்.

பாரதப் பண்பாட்டின் தேசியத்தைக் கட்டமைக்கும் பாரதி, பெண்களை இல்லறம் காத்து நல்லறம் புரியும் பெருமையையும் தன் கவிதைகளில் சொல்கின்றான். "நாட்டு வணக்கம்" என்னும் கவிதையில் மங்கையர் இல்லறம் வளர்த்தது, தங்க மதலைகள் பெற்றெடுத்து வளர்த்தது, கன்னிப் பருவத்தில் நீராடி மகிழ்ந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தது பற்றிப் பேசுகிறான், பாரதி. பெண் என்பவளைப் பாரதப் பண்பாட்டின் முக்கியமான ஓர் அங்கமாக பாரதப் பண்பாட்டோடு இணைத்துப் பாரதி பேசுகின்றான். இவை தவிர, கண்ணனைத் தாயாக நினைத்துப் பாடும் கவிதைகள், கண்ணம்மாவைக் குல தெய்வமாக உயர்த்திப் போற்றும் பண்புகள் பாரதியின் பெண் பற்றிய கருத்துநிலையை வெளிப்படுத்துகின்றது.

"பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று
மிடிமையும் மச்சமும் மேவியென் னெஞ்சிற்
குடிமை புகுந்தன, கொன்றவை போக்கென்று
……………………………………………
நல்லது தீயது நாமறியோ மன்னன்
நல்லது நாட்டுக! தீமையை யோட்டுக!"
(பாரதியார் கவிதைகள், பக்.221)

கண்ணம்மாவை நோக்கி பாரதி வேண்டிநிற்கும் இக்கவிதையில் தன்னுடைய துன்பத்தை, பயத்தை நீக்கி எப்பொருளிலும் நாட்டம் ஏற்படாத வண்ணம் அருள்புரிய தன்னுடைய குலத்தெய்வத்தை வழிபடுகின்றான்.

**முடிவுரை**

பாரத நாட்டின் தேசியத்தைக் கவிதைகளில் கட்டமைக்க விழைந்த பாரதி, அதனை இந்தியப் பண்பாட்டு மரபுகளுக்கு ஏற்பப் படைத்தளித்துள்ளான். ஆங்கிலேயர்களை இந்திய தேசத்தைவிட்டு நீக்குவதற்கு, தான் படைத்த கவிதைகள் ஒவ்வொன்றிலும் பண்பாட்டை ஓர் மூலதனமாகக் கட்டமைத்துள்ளான். பாரதி கண்ட பாரத தேசம் என்பது வெறுமனே புவியியல் சார்ந்த நிலப் பரப்பு அல்ல. அது வரலாறு மற்றும் பண்பாட்டின் இருப்பு. குறிப்பாக, பாரதி பேசிய பண்பாட்டுத் தேசியத்தில் பெண் பற்றி சித்திரிப்பு என்பது, பெண்ணைப் பாரத நாடாகவும் தெய்வமாகவும் பாரத மக்களின் குல தெய்வமாகவும் புலப்படுத்துகிறது. பாரத நாட்டின் தொன்மங்களையும் தத்துவங்களையும் மாத்திரம் பேணும் பழமை விரும்பியாக மட்டுமல்லாது பழமையோடு புதுமை படைக்கும் பெண்களையும், துணிச்சல் மிக்க வீரமங்கைகளையும் படைத்துப் பாரத நாடு எவ்வாறு பெண்களைப் போற்றிக் காத்தது என்னும் நாட்டின்

பெருமையைப் பதிவுசெய்கிறான். பண்பாட்டு நோக்கில் பாரதி படைத்த பெண் அடிப்படையில் இந்தியப் பண்பாட்டில் அனைத்துத் தளங்களிலும் வியாபகமானவள்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

சித்திரலேகா, மௌனகுரு. (1996), பாரதியின் பெண் விடுதலை, மட்டக்களப்பு, விபுலம் வெளியீடு.

சீனிவாசன், அ. (1999), பாரதப் பண்பாட்டுத் தளத்தில் பாரதி, சென்னை, சாலி கிராமம்.

சீனிவாசன், அ. (2004), பாரதியின் தேசியம், சென்னை, மிருகம்பாக்கம்.

கோவிந்தராஜு,ம., இராசேந்திரன்,மு., சில்லாழி கந்தசாமி, (2023), பாஞ்சாலி சபதத்தில் பெண்ணியத் திறனாய்வு, சென்னை, தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்.

திருநாவுக்கரசு, மு. (2010), தேசியமும் ஜனநாயகமும், லண்டன், ஒருங்கிசைந்த ஆய்வுக்கான தமிழ் நடுவம்.

பாரதியார் கவிதைகள். (2008), சென்னை, உமா பதிப்பகம்.

மீரா (2006), பாரதியம், தஞ்சாவூர், அகரம்.

# திருக்குறள் இல்லறவியல் உரைகளில் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடு - ஓர் ஆய்வு

**Balarathnam Saranya**

Postgraduate student, University of Peradeniya.

balarathnamsaranya2@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் ஆய்வுப் பரப்பில் திருக்குறளுக்கு முக்கிய இடமுண்டு. பொதுமறையான திருக்குறள் குறித்துப் பல கோணங்களில் பல்வேறுவிதமான ஆய்வு முயற்சிகள் இன்றளவிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்குறள் இல்லறவியல் உரைகளில் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடு - ஓர் ஆய்வு எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது, திருக்குறளின் இல்லறவியலை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் வெளிப்படும் ஆணாதிக்கச் சிந்தனையை ஆராய்கின்றது. தமிழில் தோற்றம் பெற்ற அற இலக்கியங்களுக்குத் தலைமைப் பீடமாக அமையப்பெற்றது திருக்குறளாகும். திருக்குறளில் வெளிப்படும் கருத்துக்கள், அதன் அமைப்பு முறை, அதன் உரைகள் மற்றும் உரையாசிரியர் குறித்த ஆய்வு, திருக்குறளில் பெண், திருக்குறள் கூறும் இல்லறம், துறவறம் என்பன குறித்த எண்ணிலடங்கா பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருவள்ளுவர் கூறிய குறள்களுக்கும் அவற்றுக்கு எழுதப்பட்ட உரைகளுக்கும் இடையிலேயே சில வேறுபாடுகள் கண்டறியப்பட்டன. இந்நிலையில், திருக்குறளுக்கு எழுதப்பட்ட முக்கிய உரையான பரிமேலழகர் உரையோடு மணக்குடவர் உரை, பழைய உரை, புலியூர்க்கேசிகன் உரை முதலிய உரைகளை மையமாகக் கொண்டு திருக்குறளின் இல்லறவியலில் வெளிப்படுகின்ற ஆணாதிக்கச் சிந்தனையை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காகத் திருக்குறளின் அறத்துப்பாலின் இல்லறவியல் பகுதி மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. திருக்குறள் அறத்துப்பாலின் இல்லறவியல் பகுதி முதலாம்நிலைத் தரவாகவும் திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகள், திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. திருக்குறளின் இல்லறவியலில் வெளிப்படும் ஆணாதிக்கச் சிந்தனையை ஆராய்தல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

***திறவுச் சொற்கள்*** *: திருக்குறள், ஆணாதிக்கம், இல்லாள், கற்பு, மக்கட்பேறு.*

**அறிமுகம்**

தமிழில் தோன்றிய அற இலக்கியங்களில் திருக்குறளுக்குத் தனியிடமுண்டு. திருக்குறள் குறித்த பல்வேறு ஆய்வுகள் தமிழிலக்கிய ஆய்வுச் சூழலில் இன்றளவும் வலம்வந்து கொண்டிருக்கின்ற நிலையில், பல்வேறு நிலைப்பட்ட ஆய்வு நிலைகளில் திருக்குறள் தனித்த இடத்தைப் பிடித்துக்கொண்டது. திருக்குறளுக்கும் அதற்கு எழுதப்பட்ட உரைகளுக்கும் இடையே நீண்டகால இடைவெளி காணப்படுகின்றது. இவ்விடைவெளியில் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் ஏற்பட்ட மாற்றத்தைத் தமிழ்ச் சூழலும் ஏற்றிருக்கும். இந்நிலையில், அவற்றிற்கு எழுதப்பட்ட உரைகளுக்கும் திருக்குறளுக்கும் இடையில் சில வேறுபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. இவை ஒருபுறமிருக்க, திருக்குறளுக்குப் பழங்காலமாக உரைகள் எழுதப்பட்டு வருகின்றன. இவ்வுரைகளுக்கிடையேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை எழுதப்பட்ட காலச் சூழலுக்கும் எழுதியோரின் புலமைக்கும் ஏற்றவகையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. இவை இரண்டிலும் எழுதப்பட்ட காலச் சூழல் பொதுமை பெறுவதைக் காணலாம். ஆகவே, காலச் சூழல் எழுதப்படுகின்ற இலக்கியங்களில் வெளிப்படுகின்றது என்பது நிதர்சனம். இந்நிலையில், திருக்குறளுக்கு உரை எழுதியோரும் அதற்கு விதிவிலக்கல்ல. அவ்வகையில், இக்கட்டுரை அவர்கள் எழுதிய உரைகளின் வழி திருக்குறளின் இல்லறவியலில் வெளிப்படுகின்ற ஆணாதிக்கச் சிந்தனையை ஆராய்கின்றது.

**ஆய்வு நோக்கம்**

திருக்குறளுக்கு எழுதபட்ட முக்கிய உரைகளை மையமாகக் கொண்டு திருக்குறளின் இல்லறவியலில் வெளிப்படுகின்ற ஆணாதிக்கச் சிந்தனையை வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

பொதுவாக, குறித்த இலக்கியம் அதன் காலத்து சமூக, பண்பாட்டு அசைவியக்கத்திற்கு ஏற்ப அமையும் என்பது நாமறிந்ததொன்றே. அவ்வசைவியக்கம் இலக்கியத்தின் உள்ளடக்கத்தையும் வடிவத்தையும் தீர்மானிக்கும். இன்றுவரை நாம் அசைப்போட்டுக்கொண்டிருக்கும் ‘பெண் இலக்கணம்’ வானிலிருந்து வீழ்ந்ததோ, நேற்று முன்தினம் துளிர்த்ததோ அல்ல. காலங்காலமாகத் திணிக்கப்படுமொன்று. இவை பண்டைய இலக்கியங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன.

சில இலக்கியங்கள் நேரடியான ஆணாதிக்க வெளிப்பாட்டில் இயற்றப்பட்டிருக்கும். சில இலக்கியங்கள் காலச் சூழலால் ஆணாதிக்க வெளிப்பாட்டிற்கு வசப்பட்டிருக்கும். சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்களில் தங்களுடைய மனவுணர்வுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாத பெண்களின் நிலையை வெளிப்படுத்துகின்றது. கற்பின் அடியாகப் போற்றப்படுகின்ற சிலப்பதிகாரம் உண்மையில் பெண்களைக் கற்பெனும் நெறிக்குள் அடைக்கின்றது. இவ்வாறு சங்க காலத்தின் தொடர்ச்சியாய் பண்டைய தமிழ் நூல்கள் பல தமிழ்ச் சமுதாயத்தை

அடையாளப்படுத்தி நிற்கின்றன. அவற்றுள் திருக்குறளுக்குத் தனியிடம் உண்டு. ஆகவே, அப்போதைய தமிழ்ச் சூழலில் வெளிப்பட்டு நின்ற ஆணாதிக்கப் போக்கு திருக்குறளுக்கு எழுந்த உரைகளிலும் வெளிப்பட்டிருக்கும். அதனடிப்படையில் திருக்குறளுக்கு எழுந்த உரைகள் அவற்றைக் கொண்டுள்ளனவா என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

திருக்குறள் குறித்துப் பல ஆய்வு நூல்களும் விளக்க நூல்களும் தெளிவுரை நூல்கள் பலவும் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் திருக்குறளில் பெண் குறித்த பல ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. செ. கணேசலிங்கன் 'பெண்ணியப் பார்வையில் திருக்குறள்' எனும் நூலில் திருக்குறளில் பெண் என்ற தலைப்பில் திருக்குறளில் பெண்ணினம் எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பதை ஆராய்ந்து எழுதியுள்ளார். திருக்குறள் கூறும் பெண்ணினத்தை ஆணின் வாழ்க்கைத் துணையாக (அறம்), மனைவியாக (பொருள்), பொது மகளிராக (பொருள்), காதலியாக (காமம்) எனும் நான்கு நிலைகளில் பிரித்து ஆராய்ந்துள்ளார்.

**ஆய்வு வரையறை**

திருக்குறளுக்கு எழுதப்பட்ட முக்கிய உரையான பரிமேலழகர் உரையோடு மணக்குடவர் உரை, பழைய உரை, புலியூர்க் கேசிகன் உரை முதலிய உரைகளை மையமாகக் கொண்டுள்ளது. திருக்குறளின் இல்லறவியல் பகுதி மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. திருக்குறளின் மூலமும் உரைகளும் ஆய்வில் கவனத்தில் கொள்ளப்படுகினறன. எனினும், உரைகளை முதன்மைப்படுத்தியே ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்காகத் திருக்குறளின் இல்லறவியல் முதலாம் நிலைத் தரவாகவும் திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகள், திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**திருக்குறள் அறிமுகம்**

திருவள்ளுவர் இயற்றிய உலகப் பொதுமறை என்னும் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அறத்துப்பாலிலே பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல் என்ற சிறு பிரிவுகள் அடங்கியுள்ளன. பொருட்பாலிலே அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்ற சிறு பிரிவுகள்

அடங்கியுள்ளன. காமத்துப்பாலில் களவியல், கற்பியல் என்ற இரண்டு இயல்கள் உள்ளன. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களுமாக மொத்தம் 133 அதிகாரங்கள் திருக்குறளில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்களாக மொத்தமாக 1330 குறட்பாக்கள் காணப்படுகின்றன.

“தினையவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால”

எனப் புலவர் கபிலர் வியந்து போற்றும் திருக்குறள், குறிப்பிட்ட மதத்தை அல்லது மார்க்கத்தை வழிகாட்டும் நூலாக இல்லாமல், பொதுவான வாழ்க்கை நெறியை வகுக்கும் நூலாகத் திகழ்கின்றது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு திருவள்ளுவர் எழுதிய இந்நூலில் அறம் எதுவென உரைத்து வழிப்படுத்துகின்றார்.

இல்லற வாழ்க்கையின் நன்மையையும் துறவற வாழ்க்கை எவ்வாறிருந்தால் சிறப்பாக அமையும் என்பதையும் வாழ்க்கையில் பெறவேண்டியவை யாவை, தவிர்க்க வேண்டியவை யாவை என்பதையும் கூறியிருக்கிறார். முடியரசு ஆட்சிக்குச் சொல்லப்பட்ட அறிவுரைகள் குடியரசு காலத்துக்கும் பொருந்தும் என்று சொல்லுமளவிற்கு அரசியல் கோட்பாடுகளையும் உலக உயிர்களின் இயற்கை உணர்வான காம உணர்வினை அன்பினை அடிப்படையாகக் கொண்டும் படைத்துள்ளார். முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை ஆகியன திருக்குறளின் வேறுபெயர்கள் ஆகும்.

**அறத்துப்பாலில் இல்லறவியல்**

திருக்குறளின் முப்பால்களில் முதற் ‘பால்’ அறத்துப்பாலாகும். அறம் என்பது நல்வழி, ஒழுங்கு, தர்மம் போன்ற கருத்துக்களைப் பெறும். அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் எனும் சிறு பிரிவுகளாக அமைந்துள்ளது. பாயிரவியலில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் முதலிய நான்கு அதிகாரங்கள் காணப்படுகின்றன. இல்லறவியலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில்விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெ஺.காமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் ஆகிய 20 அதிகாரங்கள் காணப்படுகின்றன.

துறவறவியலில் அருளுடைமை, புலான்மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் ஆகிய 13 அதிகாரங்கள் காணப்படுகின்றன. ஊழியலில் ஊழ் எனும் அதிகாரம் காணப்படுகின்றது. பொதுவாக மனித வாழ்வில் இல்லறம், துறவறம் எனும் இரு நிலைகள் காணப்படுகின்றன. இவ்விரு நிலைகளையும் அறத்துப்பால் உரைக்கின்றது. இல்லறவியல் என்பது இல்லறத்திற்கான அறத்தை உரைப்பதாக அமையப்பெற்றுள்ளது. கணவன் மனைவி

ஆகியோர் கொண்டிருக்க வேண்டிய குணநலன்களையும் அவர்களின் கடமைகளையும் இல்லறவியல் கூறுகின்றது. சிறப்பான இல்லற வாழ்க்கைக்குத் தேவையானதாகக் கருதப்படும் அறம் இதனில் வலியுறுத்தப்படுகின்றது.

**ஆணாதிக்க நிலை வெளிப்பாடு**

உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் தன் சுயத்தை வெளிப்படுத்துவதற்கான சம உரிமை உண்டு. ஓர் இனம் இன்னொரு இனத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவதென்பது முரணானது. உலக உயிர்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை. ஒன்றின் இருப்பில் இன்னொன்றின் அவசியம் உணரப்படுகின்றது. இது மனித உயிர்களுக்கும் பொருந்தும். ஆணுலகமும் பெண்ணுலகமும் வேறுவேறாக அமைந்துவிட்டது. அதனில் எழுந்த ஆதிக்க உணர்வே ஆணாதிக்கத்திற்கு மூலவிதையானது.

பெண்ணியம் என்பது பல நூற்றாண்டுகளாக ஆணாதிக்கத்திற்குள் முடங்கிக்கிடந்த பெண்ணினத்தின் விடுதலையை வேண்டுகின்றது. திருக்குறள் எழுதப்பட்ட காலத்திற்கும் இன்றைய காலத்திற்கும் இடையில் பல வருட கால நீண்ட இடைவெளி உண்டு. இக்கால இடைவெளியில் பல்வேறான சமூக, அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இம்மாற்றங்கள் பெண் பற்றிய சிந்தனையிலும் நடத்தையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. பெண்ணினம் தனக்கான நிலையை, தன் சுயத்தை உணர்ந்து பயணப்பட்டுக் கொண்டிருக்கின்ற இப்பொழுதிலும் காலத்தின் தொடர்ச்சியாய், பண்பாட்டின் தொடர்ச்சியாய் சில ஆணாதிக்கச் சிந்தனைகள் கடமைகள், பொறுப்புக்கள், மரபுகள் என்றடிப்படையில் திணிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இத்தகைய மரபுகள் எங்கிருந்து தோற்றம் பெற்றன, இதனை வழிவழியாகக் கொண்டுவந்தோர் இன்று காரணமின்றியே அதனை வழக்கமாக்கி வாழ்வதன் அர்த்தம், இதன் உண்மைப் பொருள் என்ன, இன்றைய நிலையில் அதன் பொருத்தப்பாடு எத்தகையது, அன்று அத்தகைய மரபு பின்பற்றப்பட்டதன் காரணம் முதலிய விடயங்கள் இன்றைய பெண்நிலைப் பற்றிய ஆய்வில் அவசியமாகின்றது. இக்கட்டுரையின் வழி திருவள்ளுவர் கூறும் இல்லறத்தில் ஆணாதிக்கச் சிந்தனை எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை அறியலாம்.

**இல்லாள் அறம்**

இல்லற வாழ்வில் கணவனது துணைவியாக இல்லாள் கருதப்படுகின்றாள். இல்லாள் என்பதற்கு மனையாள், துணைவி, மனைவி, கொண்டவள் என்பவை வேறு பெயர்கள். அன்று தொட்டுக் குடும்ப வாழ்வில் பெண்ணை இன்றியமையாதவளாக சமூகம் கருதுகின்றது. இல்லறம் பேணுவதென்பது பெண்ணின் தலையாய கடமையெனப் பல அறநூல்கள் வலியுறுத்துகின்றன. திருக்குறளும் இல்லறவியலில் அதனை வலியுறுத்தத் தவறவில்லை. இல்லறம் நல்லறமாக அமைய பெண் என்பவளே மையம் என்றடிப்படையில் திருக்குறள் இல்லறத்திற்கான அறத்தை வலியுறுத்துகின்றது. அத்தகைய பெண்ணிற்கான இலக்கண அறத்தில் ஆணாதிக்கப் போக்கு

மிகுந்திருப்பதனைக் காணலாம். இல்லாள் அறம் என்ற பெயரில் அவளின் சிறப்பையும் கடமையையும் இல்லத்துள் அடைத்த ஆணாதிக்கப் போக்கினைக் காணலாம்.

இல்லறம் எனும்போது அதனில் நல்லறம் காப்பவளாக ஏன் பெண்ணை மட்டும் அடையாளப்படுத்த வேண்டும். இல்லறம் காப்பதில் பெண்ணுக்குக் கூறப்பட்ட அற இலக்கணம் ஏன் ஆண்களுக்கு வகுக்கப்படவில்லை. இல்லறம் காப்பதில் ஏன் சமமான பங்கு இருவருக்கும் வழங்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட ஆணாதிக்கப் போக்கு எவ்வாறு வெளிப்படுகின்றது என்பனவற்றைக் கீழ்வரும் தலைப்புகளின் வழி ஆராய்வோம்.

பெண்ணை வாழ்க்கைத் துணையாக, இல்லற வாழ்வின் துணையாகக் கொண்டு அறத்தை வலியுறுத்துகையில் அவற்றைப் பின்பற்றும் பெண்ணைச் சிறப்பெனப் போற்றியும் அவற்றைப் பெண்களின் கடமையென வலியுறுத்தியும் ஆணாதிக்கச் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

**சிறப்பெனப் போற்றுதல்**

பொதுவாக, திருக்குறளில் பெண்ணிற்கான அறத்தை வலியுறுத்துகையில் குறித்த சமூகம் எதிர்பார்க்கும் குணநலன்களையும் பண்புகளையும் பெற்றவளாயின் அவளை போற்றுதலுக்குரியவளாகக் கருதுகின்றது. பெண் என்பவள் இல்லறத்திற்குரியவளாகவும் இல்லற வாழ்விற்கான சிறப்புக்களைப் பெற்றவளாகவும் கருதப்படுகின்றாள். இல்லறவியலில் வாழ்க்கைத் துணைநலம் எனும் அதிகாரத்தில் இல்லாள் என்பவள் இல்லற வாழ்வுக்கான சிறந்த பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். கணவனின் வருவாய்க்குத் தகுந்தபடி நடப்பவளாக இருக்க வேண்டும். மனைவியிடத்தில் இல்லற வாழ்க்கைக்கான சிறப்புக்கள் இல்லையென்றால் அது வாழ்வே ஆகாது. இல்லற வாழ்க்கையில் இல்லாள் சிறந்தவளானால் அவ்வாழ்க்கையில் இல்லாதது ஏது, அதினில் எல்லாம் நிறைந்திருக்கும். இல்லாள் சிறந்தவளாக இல்லாதபோது அங்கு இருப்பது ஒன்றுமில்லை. மகளிர் 'நிறை' என்னும் பண்பைக் காப்பதே சிறப்பானதாகும் என்று பலவாறாகக் கூறுவதானது, இல்லற வாழ்க்கையில் பெண்ணைப் போற்றிப் புகழ்வதன் வழியாக பெண் இல்லற வாழ்க்கைக்குரியவள் என்கின்ற ஆதிக்கப் போக்கு வெளிப்படுவதைக் காணலாம். இல்லற வாழ்க்கையில் அவளின் இருப்பைச் சிறப்பெனப் போற்றி அதனை அறமென வலியுறுத்துகின்றனர். இல்லற வாழ்க்கையில் அவளின் இருப்பிற்கான அறம் கூறப்பட்ட அதேவேளை அவளின் சுயத்திற்கான அறம் வலியுறுத்தப்படவில்லை.

இல்லற வாழ்க்கை சிறக்க பெண்ணிடத்தில் மேற்குறித்த குணநலன்கள் ஓங்க வேண்டும் என்கின்ற பாராட்டு பெண்ணை இல்லறத்திற்குள் கட்டிப்போடும் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடே ஆகும். இல்லற வாழ்க்கையில் அவர்களின் இருப்பை நிலைப்படுத்த அவர்களை இல்லறத்தைப் பேணுபவர்களாகச் சிறப்பிக்கின்றனர். இல்லற வாழ்க்கை தன்னில் இல்லாளின் சிறப்பு மட்டுமன்றி, கணவனின் சிறப்பும் இன்றியமையாமையும் முக்கியமானது எனும்போது இல்லறவியலில் இல்லறத் தலைவனது அறம் வலியுறுத்தப்படும்போது இல்லாளுக்கு

அவசியமென வலியுறுத்தப்படும் அறமும் அவளைக் கொண்டவனுக்கும் வலியுறுத்தப்பட வேண்டும்.

“மனை த்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை” (குறள்: 51)

எனும் குறளிற்கு ‘இல்லற வாழ்வுக்கான சிறந்த பண்புகளை உடையவளாய் தனது கணவனின் வருவாய்க்குத் தகுந்தபடி நடப்பவளே சிறந்த வாழ்க்கைத் துணைவியாவாள்’ என்று புலியூர்க்கேசிகனின் உரை குறிப்பிடுகின்றது. மணக்குடவர் உரையானது ‘தான் பிறந்த குடிக்குத் தக்க ஒழுக்கத்தையுடையவளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க செலவினையுடையவள் இல்லற வாழ்க்கைக்குத் துணையாவாள்’ என்று குறிப்பிடுகின்றது. இவற்றிலிருந்து வேறுபட்டுப் பரிமேலழகரது உரையானது சிறந்த பண்பினையுடையாள் என்பதற்கு சிறு விளக்கமும் அளித்துள்ளது. ‘மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளையுடையவளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை உடையாள் அதற்குத் துணை’ என்கிறார் பரிமேலழகர். மேலும், இதனில் ‘நற்குணங்களாவன துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின’ என்கிறார். பெண் என்பவள் துறவிகளைப் பேணுவதாலும், விருந்தளிப்பதாலும், வறியாரிடத்து இரக்கம் கொள்வதாலும் நற்குணம் பெற்றவளாகப் போற்றப்படுவதுடன் அவள் இல்லறத்துக்குரியவள் என்றும் வலியுறுத்தப்படுகின்றாள். இல்லறம் என்பது கணவன் மனைவி இருவருக்கும் உரியது. இல்லறத்திற்கான நற்குணங்கள் வலியுறுத்தப்படுகையில் அவை இருவருக்குமானதாக அமையப்பெற்றிருக்கலாம்.

**கடமையென வலிறுத்துதல்**

இல்லறவியலில் இல்லாளுக்கான கடமைகளும் வலியுறுத்தப்படுகின்றன. வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில் ஐம்பத்தெட்டாவது குறள் இல்லாள் கணவரைப் போற்றித் தம் கடமைகளைச் செய்வாரானால் பெரும் சிறப்புடைய தேவர்கள் வாழும் உலகினைப் பெறுவார்கள் என்று குறிப்பிடுகின்றது. இப்பேருலகில் மனித சிந்தனையைத் தாண்டிய பல சக்திகள் உணரப்படுகின்றன. அவற்றைச் சிலர் கடவுளாகவும் சிலர் அறிவியலாகவும் பார்க்கின்றனர். மனிதனை மீறிய சக்தியைக் கடவுளாகப் பாரக்கின்ற நிலையில், மனித குலத்தின் ஆண், பெண் எனும் இரு இனங்களில் ஆண் இனம் தன்னைக் கணவனாக உயர்த்தி, பெண் இனத்தைத் தன்னைக் கொண்டவாளாகத் தாழ்த்தி, தன்னைப் போற்றி வணங்கித் தன் கடமைகள் செய்தல் என்பது முற்றுமுழுதாக ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாட்டை அப்படியே பிரதிபலிக்கின்றது.

மேலும், அவ்வாறு தன் கடமைகளை இல்லாள் செய்கையில், தேவர்கள் வாழும் உலகைப் பெறுவார்கள் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. ஒரு பெண் தன் வாழ்வில் தன்னுடைய சுயத்தை வெளிப்படுத்தாத நிலையில், வாழ்வதானது அவளுக்குத் தேவர்கள் வாழும் உலகு கிடைத்தாலும் பயனற்றதே. அங்கும் அவள் தன் சுயத்தை இழந்தவளாகவே வாழ்வாள். அவள்

அவளின் சுயத்தை அறிந்திருக்கமாட்டாள். சுயத்தை இழந்த வாழ்க்கை எனும்போது தேவருலகமும் பூவுலகமும் ஒன்றே. மேலும்,

“புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை” (குறள்: 59)

எனும் குறளிற்குப் பரிமேலழகர், ‘புகழை விரும்பிய இல்லாளையில்லாதார்க்கு தம்மையிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்க ஏறுபோல நடக்கும் பெருமிதநடை இல்லை’ என்று குறிப்பிடுகின்றார். மணக்குடவர், ‘புகழ்பொருந்தின மனையாளை இல்லாதார்க்கு இல்லையாம் தம்மை இகழ்ந்துரைப்பார்முன் ஏறுபோல நடக்கும் மேம்பட்ட நடை’ என்கிறார். பழையார் உரை, ‘இன்னாள் பதிவிரதை என்று சொல்லுஞ் சொல் பெறாத மடவாரை மனையாளாகவும் உடையான், தன்னை வேண்டார் முன்னே இன்னார் ரிஷபம் போலே திரிகின்றான் என்று ஏசுதற்கு இடமாவான்’ என்கிறது. மேலும், புலியூர்க்கேசிகனின் உரையானது புகழைக் காப்பாற்ற விரும்பும் மனைவி இல்லாதவர்க்கு, இகழ்ச்சியாகப் பேசுபவர் முன்னே ஏறுபோல் நடக்கும் பெருமித நடையும் இல்லை என்று கூறுகின்றது.

மேற்குறித்த குறளுக்கான உரைகளைப் பார்க்கும்போது, கணவனின் கண்ணியத்தைக் காக்கும் கடமை பெண்ணிடத்தில் வலியுறுத்தப்படுவதைக் காணலாம். கணவனின் கௌரவம் பெண்ணின் நடத்தையில் அவளின் புகழில் தங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. கணவன் இகழ்வோர் மத்தியிலும் தலைநிமிர்ந்து நடப்பதற்கு இல்லாள் தன் புகழைப் பேணி - பெண்ணிற்கான இலக்கணம் பேணி – நடக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. அப்புகழை அவள் விரும்பி ஏற்று இல்லறம் பேணுகையில் கணவனின் கௌரவம் காக்கப்படும் என்று இல்லாளின் அறம் வலியுறுத்தப்படுவதானது ஆணாதிக்கமே. அவரவர்களின் சுயமே அவரவர்களுக்குக் கௌரவம். ஆணின் கௌரவத்தைப் பெண்ணின் கடமையாக்கி, அதனை அறமாக வலியுறுத்தல் ஆணாதிக்கச் சிந்தனையே.

**கற்பு**

நெடுங்காலமாக ஆதிக்கமிக்க ஆண்களால் உருவாக்கப் பெற்ற கற்பு எனும் பொய் அணிகலன் பெண்ணுக்கு அணிவிக்கப்பட்டு வருகின்றது. பெண் விரும்பியோ விரும்பாமலோ அதை அணிந்தாக வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் நிலவுகின்றது. எம் சான்றோர் வலியுறுத்திய கற்புக்கும் தற்போது வலியுறுத்தப்படும் கற்புக்குமிடையில் பல வேறுபாடுகள் நிலவுகின்றன. அது ஒரு பக்கமிருக்க. உண்மையில் கற்பென்பது மனவுறுதி. அது அவளின் சுயத்தில் தங்கியுள்ளது. பெண்ணின் மனவுறுதி என்பது ஆதிக்க ஆணுலகம் அணுவிக்கும் பொய் அணிகலன் அல்ல. அது அவனது அடையாளம். அவளின் கௌரவத்தைக் கற்பெனும் படிக்கல்லைக் கொண்டு நிர்ணயிக்கும் ஆணாதிக்கம் மிகவும் கண்டிக்கத்தக்கது.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"(குறள்: 54)

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"(குறள்: 55)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"(குறள்: 56)

திருக்குறளின் அறத்துப்பாலில் வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில் மேற்குறித்த குறள்களில் கற்பு குறித்த விடயங்கள் பேசப்பட்டுள்ளன. கற்பு எனும் மனவுறுதி இல்லாளிடம் இருந்தால், அந்தப் பெண்ணைவிடப் பெருமைமிக்கவை உலகில் ஒன்றுமில்லை என்று கூறப்படுகின்றது. பெண்ணிடத்தில் பெருமைமிக்கவையாக கருதக்கூடிய குணநலன்களும் ஆற்றுல்களுமிருக்க கற்பெனும் மனவுறுதியால் மாத்திரம் பெருமைக்கொள்ளல் ஆகாது. 'பெண்பிறப்பு தெய்வப் பிறப்பாம். அது எப்படி எனில், பெண்ணிடத்தில் பதிவிரதா பாவனையுண்டாகில்' (குறள்: 54) என்று பழைய உரை கூறுகின்றது.

மேலும், பரிமேலழகர் 'பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழுது துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்' என்று உரை கூற, புலியூர்க்கேசிகன் 'தெய்வத்தைத் தொழாதவளாய் தன் கணவனைத் தொழுது துயிலெழுகின்ற கற்புடையவள் பெய் என்றால் மழை பெய்யும்' என்கிறார். கற்பென்னும் மனவுறுதியைப் பெற்றவள் என்றால், அவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்பது கற்பெனும் நிலையில் உளவியல் ரீதியாக அவளைக் கட்டுப்படுத்தி வைக்கும் ஓர் ஆணாதிக்கப் போக்கே ஆகும்.

குறள் 56இல் பெண்ணுக்கான இலக்கணத்தை, பெண் என்பவள் யார் என்பதைப் புலப்படுத்த கற்புநிலையில் நின்று விளக்கம் தருவது ஆணாதிக்க நிலையைப் பறைசாற்றுகின்றது. பெண்ணின் சுயத்தை, அடையாளத்தைக் கற்பென்னும் அறத்தைக் கொண்டு அரண் அமைப்பது என்பது ஆணாதிக்க மன உணர்வை வெளிப்படுத்துகின்றது. பரிமேலழகர், 'கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி இருவர்மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காத்து, மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினுங் கடைப்பிடி யுடையாளே பெண்ணாவாள்' என்றும், மணக்குடவர், 'தன்னையுங் காத்துத் தன்னைக்கொண்ட கணவனையும் பேணி, நன்மையமைந்த புகழ்களையும் படைத்துச் சோர்வின்மையுடையவளே பெண் என்று சொல்லப்படுபவள்' என்றும், பழைய உரைக்காரர், 'தன் கற்பையுங் காத்துத் தன் பதிவிரதாபாவத்தால் பத்தாவின் குணத்தையுங் உலக பதிவிரதை என்று சொல்லும் சொல்லையும் காத்து அசைவில்லாத கற்பினள் வாழ்க்கைத்துணை' என்றும் பெண்களில் சிறந்தவர்க்குக் கூறும் இலக்கணமானது கற்பெனும் அடிநாளத்தைக் கொண்டமைந்துள்ளது.

கற்புநிலை நின்று தன் கற்பையும் தன் கணவனையும் காத்துப் புகழைப் பெறுபவளே பெண் என்று அடையாளப்படுத்துவதானது ஆணாதிக்க மன உணர்வாகும். ஆதிக்க உணர்வில் கற்பெனும் விதியை வைத்துப் பெண்ணிற்கு இலக்கணம் கூறுவது தவறாகும். பெண் தன் சுயத்தை உணரும் போதே பெண்ணாகின்றாள். கற்பென்பது பெண்ணுக்கு மாத்திரம் உரியதன்று. முதல் கூறப்பட்டது போன்றே கற்பென்பது மன உறுதி. இல்லற வாழ்வில் இணையும் ஆண், பெண் இருவருக்கும் அது உரித்தானது. ஆண்களுக்கும் கற்புண்டு. இல்லற அறத்தில் பெண்களுக்குக் கற்பு போதிக்கப்படும் அதேவேளை, ஆண்களுக்கும் போதிக்கப்பட வேண்டும். பாரதியின் கவி வரிகள் இதற்கு இன்னும் வலுச்சேர்க்கும்.

> ‘‘கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு
> கட்சிக்கும் அ.்.து பொதுவில் வைப்போம்’’
> (பெண்கள் விடுதலைக் கும்மி)

**மக்கட்பேறு**

இல்லறவியலில் பெண்மீதான ஆதிக்கநிலையை இரு நிலைகளில் காணலாம். ஒன்று, பெண்ணை இல்லாளாகக் கொண்டு திணிக்கப்படுகின்ற மேலாதிக்கம். மற்றையது, பெண்குழந்தை அல்லது பெண்பிள்ளை என்ற ரீதியில் திணிக்கப்படுகின்ற மேலாதிக்கம். பெண்குழந்தைமீதான ஆதிக்கச் செல்வாக்கு காலங்காலமாக இருந்து வருகின்றதொன்று. அதன் பிரதிபலிப்பை ஆணாதிக்கத்தில் நன்குணரலாம்.

பெண்ணை இல்லாளாகக் கொண்டு திணிக்கப்டுகின்ற மேலாதிக்கம் என்பதும் ஆணுலகம் வகுத்த குணநலன்களையும் சிறப்புக்களையும் கடமைகளையும் கற்புடன் காத்து அவற்றைப் பெண்ணின் இலக்கணமாக, அறமாகப் போற்ற வலியுறுத்துவதாகும். இல்லாள் மேற்கூறிய வகையில் குணநலன்களைக் கொண்டு கற்பை உடையவளாய் கணவனைப் பேணி இல்லறம் காக்கும் அதேவேளை, இல்லறத்தில் முழுமை பெறவேண்டும் எனின் குழந்தைப்பேற்றைப் பெற்றவளாயும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

> “மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
> நன்கலம் நன்மக்கட்பேறு”(குறள்: 60)

மனைவியின் சிறந்த பண்பே இல்வாழ்வுக்கு மங்கலம். நல்ல மக்கட்பேறும் உடையதாய் இருத்தல் அதற்கு நல்ல அணிகலன் ஆகும் என்று புலியூர்க்கேசிகன் குறிப்பிடுகின்றார். இவர்கள் குறிப்பிடும் நற்குணங்களைப் பெற்று, அறத்தைப் போற்றி, கற்புடையவாளாக இருக்கும் அதேவேளை, மக்கட்பேறும் இல்லாளுக்கு அவசியம் என்று வலியுறுத்தப்படுகின்றது. இல்வாழ்வைப் பேணுவது பெண்ணுக்குச் சிறப்பும் கடமையுமாகி அதனை அழகுப்படுத்துவதற்கான நல்ல அணிகலனாக மக்கட்பேறு வலியுறுத்தப்படுகின்றது. இல்லற வாழ்வில் மக்கட்பேறு என்பது மிக முக்கியமானது. அடுத்த தலைமுறையை உருவாக்குதல் எம் கடமை. எனினும், இல்லறத்தில் அதனை இல்லாளின் அணிகலனாக அணிவிப்பது என்பது

ஏற்றுக்கொள்ள முடியாது. இல்லற வாழ்வு தன்னில் மக்கட்பேறு என்பது இல்லறத்தார் இருவருக்கும் பொதுவில் வைக்கப்பட வேண்டும். ஒரு பெண்ணின் வாழ்வின் முழுமையை அவளது சுயமே அடையாளப்படுத்த வேண்டும்.

திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைநலத்தின் இறுதிக் குறட்பாவில் மக்கட்பேறு பற்றிக் கூறியதைத் தொடர்ந்து, பெறுகின்ற செல்வங்களில் அறிவறிந்த மக்களைப் பெறுவதைக் காட்டிலும் பிற எதையும் சிறந்ததாகக் கருதுவதில்லை. பழிச்சொல் ஏற்படாத நற்பண்பினையுடைய மக்களைப் பெற்றிருந்தால் ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் தீவினைப் பயன்களாகிய துன்பங்கள் சேராது. தம் பொருள் என்று போற்றுதற்குரியவர் தம் மக்களேயாவர். தம்முடைய மக்களின் சின்னஞ்சிறு கைகளால் அளாவப்பெற்ற கூழாயினும் அமிழ்தத்தினும் இனிமையாக இருக்கும் என்றுரைக்கிறார். மேலும், தம் மக்கள் உடலைத் தொடுதல் உடலுக்கு இன்பமாகும் என்றும் அவர்களின் மழலைச் சொல் கேட்டல் செவிக்கு இன்பமாகும் என்றும் மக்கட்பேறு எனும் தனியதிகாரத்திலும் இது குறித்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார் திருவள்ளுவர். பெறுகின்ற குழந்தை எத்தகைய அறத்தைப் பெற்றதாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. மக்கட்பேறு அதிகாரத்தின்,

“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற” (குறள்: 60)

எனும் முதல் குறளுக்கு வழங்கப்பட்ட உரைகள் நோக்கத்தக்கன. மணக்குடவர், ‘ஒருவன் பெறும் பொருள்களுள் அறிவுடைய மக்களைப் பெறுதல் பயன்படுவது ஒழிந்த பொருள்களெல்லாம் அவற்றினும் சிறந்தவனாக யாம் கண்டறிவதில்லை’ என்றும், பழைய உரைகாரர், ‘உலகத்தில் பிறந்தார் பெறும்பேற்றுக்குள் புதல்வரைப் பெறுதலைப் போலப் பேறில்லை’ என்றும் குறளுக்கு விளக்கம் கூறுகின்றனர். எனினும், இக்குறளுக்குப் பரிமேலழகரோ, ‘ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிறபேறுகளை யாம் மதிப்பதில்லை’ என்றும் அதனை விளக்குமிடத்து ‘அறிவறிந்த என்றதனான் மக்களென்னும் பெயர் பெண்ணெழித்து, இதனில் புதல்வர்ப்பேற்றினது சிறப்பு கூறப்படுகின்றது’ என்றும் உரைப்பதானது ஆணாதிக்க மனவுணர்வை வெளிப்படுத்துகின்றது.

அறிவறிந்த மக்கள் எனும்போது, பெண்ணைத் தவிர்த்துப் பார்ப்பதானது ஆணை மட்டும் அறிவார்ந்த சமூகமாக பார்க்கின்ற ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துகின்றது. அறிவார்ந்த குழந்தைகள் எனும்போது பெண்களை அறிவார்ந்தவர்களாகப் பார்க்காத மேலாதிக்க மனவுணர்வைப் பரிமேலழகரின் மேற்குறித்த உரை பிரதிபலிக்கின்றது. அறிவுநிலையில் பெண்ணை இரண்டாம் நிலைப்படுத்திப் பார்க்கின்ற நிலை பழங்காலமாக வழக்கில் இருந்தமைக்கு இது சான்றாகும். அறிவு, கல்வி என்பது ஆணுக்கானது என்று ஆணுலகம் அறம் வகுத்துக் கொண்டது.

அறிவென்பது பொதுப்படையானது, அதற்கு ஆண், பெண் என்கின்ற வேறுபாடு கிடையாது. அறிவார்ந்த குழந்தை எனும்போது அதற்குள் பெண்ணை தவிர்த்துப்பார்த்தல் என்பது ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துகின்றது. அக்காலச் சூழலில் பெண் கல்வி வலியுறுத்தப்படாமல் இருந்தமையால் இவ்வாறு கூறியிருக்கலாம் என்றாலும், சமமான கல்வி உரிமையை வழங்காமையும் ஆதிக்க உணர்வின் வெளிப்பாடே ஆகும். பின்வரும் குறள்களையும் அதற்கான உரைகளையும் நோக்கலாம்.

"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (குறள்: 67)

பரிமேலழகர் உரை: தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது கற்றாரவையின் கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வியுடையனாக்குதல் (தந்தையின் கடமை வலியுறுத்தப்படுகின்றது).

மணக்குடவர் உரை: தந்தை **மகனுக்குச்** செய்யும் உபகாரம் அவையின் கண்ணே முந்தியிருக்குமாறு கல்வியுண்டாக்குதல்.

புலியூர்க்கேசிகன் உரை: ஒரு தந்தை தன் **மகனுக்குச்** செய்யும் நல்ல உதவி, அவனைக் கற்றோர் அவையிலே முதன்மைபெற்றவனாக இருக்கச்செய்தலே ஆகும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள்: 69)

பரிமேலழகர் உரை: தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும் தன் **மகனைக்** கல்வி கேள்விகளான் நிறைந்தான் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய்.

மணக்குடவர் உரை: தான் பெற்றக் காலத்தினும் மிக மகிழும் தன் **மகனைச்** சான்றோனென்று கேட்டகாலத்துத் தாய்.

புலியூர்க்கேசிகன் உரை: தன் **மகனைச்** சான்றாளான் என்று பலரும் போற்றுவதைக் கேள்வியுற்ற தாய் அவனைப் பெற்றபொழுதிலும் பெரிதாக மகிழ்வாள்.

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்" (குறள்: 70)

பரிமேலழகர் உரை: கல்வியுடையோனாக்கிய தந்தைக்கு **மகன்** செய்யுங் கைம்மாறாவது தன்னறிவும் ஒழுக்கமுங் கண்டார் இவன் தந்தை இவனைப்பெறுதற்கு என்ன தவஞ் செய்தான்கொல்லோ என்று சொல்லுஞ்சொல்லை நிகழ்த்துதல்.

மணக்குடவர் உரை: **மகன்** தந்தைக்குச் செய்யும் உபகாரம் இவன் தந்தை என்ன தவம் செய்தான் என்று உலகத்தார் சொல்லுஞ் சொல்லைப் படைத்தல்.

புலியூர்க்கேசிகன் உரை: **மகன்** தந்தைக்குச் செய்யும் உதவி இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன நோன்பு செய்தானோ? என்னும் புகழ்ச் சொல்லே ஆகும்.

மேற்குறித்த குறள்களுக்கான உரைகளை ஆராயுமிடத்து, ஆண்களின் மேலாதிக்கத்தை நன்குணரலாம். வழங்கப்பட்ட உரைகளில் ஆண்மகன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. மகனுக்குச் சிறந்த கல்வியை வழங்கல் தந்தையின் கடமையென்றும், கற்றிந்தோரால் போற்றப்படும் மகனால் தாய் ஈன்ற பொழுதைக் காட்டிலும் பெரும் மகிழ்ச்சி கொள்வதாகவும், அத்தகைய மகனைப் பெற என்ன தவம் செய்தாரோ என்ற புகழ்சொல்லை ஏற்படுத்துதல் மகனின் கடமையென்றும் வலியுறுத்தப்படுகின்றது. இங்கு கல்வி கற்பது, சான்றோர் அவையில் முன்னிற்பது, பெற்றோர்க்குப் புகழ்ச்சியை ஏற்படுத்துவது என்பன ஆண்மகனின் கடமையென வலியுறுத்தப்பட்டிருப்பது ஆதிக்க வெளிப்பாடே ஆகும். கல்வி கற்பதற்கும், சான்றோர் அவையில் முன்னிற்பதற்கும், பெற்றோர்க்குப் புகழ்ச்சியை ஏற்படுத்துவதற்கும் பெண்ணிற்கு இடம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது உரைகளின் வழி அறியக்கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

திருக்குறள் எழுதப்பட்ட காலத்திற்கும், அதற்கு உரைகள் எழுதப்பட்ட காலத்திற்கும், தற்காலத்திற்கும் இடையில் பல நூற்றாண்டு கால இடைவெளி உண்டு. காலமாற்றத்தின் விளைவால், நவீனத்துவத்தின் பாதிப்பால் பெண்ணியம் எனும் கருத்தியல் இலக்கிய உலகில் வலுப்பெற்றுக் கொண்டது. ஒன்றின் ஆதிக்கத்திலிருந்தே இன்னொன்றின் விடுதலை பெறப்படுகின்றது. ஆணாதிக்கச் சிந்தனையிலிருந்தே பெண் விடுதலைக்கான பெண்ணியம் எனும் கருத்தியலும் தோற்றம் பெற்றது. பெண்கள் தமக்கான சுயத்தை உணரத் தலைப்பட்டபோதே அவர்கள் தங்கள்மீதான ஆணாதிக்கத்தை உணர்ந்தார்கள். மரபுகள், வழக்காறுகள், நியதிகள் என்ற அடிப்படையில் கட்டுண்ட பெண் இனம் தன் சுயத்தைக் கண்டறிந்து அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் தனக்கான சம உரிமையைப் பெற முன்வந்தது.

இலக்கியம் அதன் தோற்றக் காலத்து சமூக சூழலைப் பிரதிபலிக்கும். அவ்வகையில், திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகள் தோற்றம் பெற்ற காலத்தின் தமிழ்ச் சூழலமைவு அவ்வுரைகளில் வெளிப்படுவது இயல்பே. எழுதியவர்கள் ஆண்கள் என்பதாலும், அவர்களுடைய காலப்பகுதி மேலாதிக்க உணர்வுமிக்க காலப்பகுதி என்பதாலும், பெண்கள் தங்களின் சுயத்தை அறிந்திராத காலப்பகுதி என்பதாலும், சமூக பண்பாட்டு அசைவியக்கத்தின் வெளிப்பாடாக இலக்கியம் அமையும் என்ற அடிப்படையில் இவர்களின் உரைகளில் ஆணாதிக்க உணர்வு வெளிப்பட்டிருக்கலாம். இல்லையென்றால், இவர்கள்கூட காலச் சூழலால் ஆணாதிக்கமிக்கவர்களாக இருந்திருக்கலாம்.

திருக்குறள் இல்லறவியல் உரைகளின் வழி மனையாள் அறத்தைப் போற்றல், கற்பைப் பேணல், குழந்தைப் பேறு என்ற அடிப்படையில் பெண்ணிற்கான இலக்கணங்கள் வகுக்கப்பட்டு, ஆணாதிக்கம் மேலோங்கி நிற்பதனைக் காணலாம். உரைகளின் வழியாக இவை ஆராய்ந்து

கூறப்பட்டாலும், அவை திருவள்ளுவர் எழுதிய திருக்குறளின் அடியிலிருந்து தோன்றியதாகையால், திருக்குறளிலும் ஆணாதிக்கம் மேலோங்கியிருப்பதை அறியலாம். இல்லறத்தில் பெண்ணுக்கான அறம் தேவையில்லை என்பது வாதம் அல்ல. இல்லறத்தில் பெண்ணுக்கென வகுக்கப்பட்ட வரன்முறைகளில் அல்லது அறத்தில் ஆணாதிக்கமின்றி ஆண்களுக்கான அறமும் வலியுறுத்தப்பட்டிருந்தால் சிறப்பானதாக இருந்திருக்கும் அல்லது அவற்றை இருவருக்கும் பொதுவில் வைத்திருந்திருக்கலாம். இதன் அடியாகவே இன்றளவும் ஆணுலகத்தையும் பெண்ணுலகத்தையும் பிரித்துவைத்திருக்கின்ற எல்லைக் கோட்டை முழுவதுமாக நீக்கமுடியாதுள்ளது. அழகு, அமைதி, நற்குணம், நாணம், அடங்கிய பாலியல், பதிவிரதா தர்மம் என்று போற்றப்படுகின்ற பெண் இலக்கணம் பெண்ணை அடக்குவதற்கான அடக்குமுறையே ஆகும். ஆண் என்பவன் அறிவு, செல்வம், தானம், தருமம், வீரம், பொருள் ஈட்டல் முதலியவற்றிற்குச் சொந்தமானவனாக வலியுறுத்தப்படுவது ஆதிக்கப் போக்கின் வெளிப்பாடாகும்.

மேற்குறித்த விடயங்களால் தமிழ்ச் சமூகத்தில் பெண் நீண்ட காலமாக ஆண் அதிகாரத்தின்கீழ் இரண்டாம் நிலைப்பட்ட நிலையில் தன் சுயத்தை உணராதவளாய் அறியப்பட்டிருக்கின்றாள். இத்தகைய போக்கினைப் பழங்கால அற இலக்கியமான திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகளிலும் காணலாம் என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. மேலும், திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகளின் வழி வெளிப்படுகின்ற ஆணாதிக்கப் போக்கை ஆராயுமிடத்து, திருவள்ளுவர் எழுதிய குறள்களுக்கே உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர். இல்லறவியல் எனும் அதிகாரமைப்பிலேயே ஆணாதிக்க வெளிப்பாட்டினைக் காணக்கூடியதாக உள்ளது. இல்லறவியலில் கற்பு நெறியில் நின்று இல்லறத்தை நல்லறமாகப் பெண் பேண வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது அன்றி பெண்கல்வி, பெண்ணால் பெற்றோர்களும் புகழ்ச்சியைப் பெறக்கூடும், பெண்ணை ஆணுக்குச் சமமாகப் பார்க்கும் பார்வை முதலியவற்றை அவருடைய குறள்களின் வழி காணக்கூடியதாக இல்லை. திருவள்ளுவரும் காலத்தால் கட்டுண்டவாராக இருந்திருக்கலாம்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

நாமக்கல் கவிஞர், 1959. திருவள்ளுவரும் பரிமேழலகரும். சென்னை, இன்ப நிலைய வெளியீடு.

கணேசலிங்கம்.செ., 2000. பெண்ணியப் பார்வையில் திருக்குறள். சென்னை, குமரன் வெளியீடு.

கணேசலிங்கம்.செ., 2010. குறள் கூறும் பாலியல் கோட்பாடு. சென்னை, குமரன் வெளியீடு.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). 2010. திருக்குறள் புதிய உரை. சென்னை, பூம்புகார் பதிப்பகம்.

கிருஷ்ணமூர்த்தி.ச., (ப.ஆ.). 1993. திருக்குறள் பழைய உரை. சென்னை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.

முனிசாமி.வீ., 1988. திருக்குறள் அதிகார விளக்கம். சென்னை, வானதி பதிப்பகம்.

மயிலை சிவமுத்து. 1989. திருக்குறள் இனிய எளிய உரை (அறம்-பொருள்). சென்னை, மாணவர் மன்றம்.

தண்டபாணி தேசிகர்.ச., (தொ.ஆ.), 1950. திருக்குறள் - உரைவளம். தருமபுர ஆதீன வெளியீடு.

மாணிக்கனார். வ.சுப., 2006. திருக்குறள் தெளிவுரை. சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

# சமூகவியல் நோக்கில் 'கடவுளரும் மனிதரும்' சிறுகதைத் தொகுப்பு

**N. Remsika**

Department of Tamil, Faculty of Arts, University of Peradeniya.

rpiraveen0@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

படைப்பாளிகள் சமூகத்திற்குக் கூறவிழைகின்ற விடயங்களைத் தனது ஆற்றலுக்கும் கருத்துநிலைக்கும் ஏற்றவகையில் படைப்பினூடாக வெளிப்படுத்திச் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முனைகின்றார்கள். அவ்வாறு சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்ற கருவியாக சிறுகதை இலக்கிய வடிவமும் காணப்படுகிறது. ஈழத்துச் சிறுகதை உலகில் முக்கியத்துவம் மிக்க பெண் படைப்பாளிகளில் ஒருவராக பவானி ஆழ்வாப்பிள்ளை திகழுகின்றார். இவரது சிறுகதைகளில் பெண்கள் சார்ந்த விடயங்கள் மற்றும் அவர்கள் சார்ந்த சமூக நடைமுறைகள் பல பரிமாணங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பெண்சார் விடயங்கள் சமூகப் பண்பாட்டோடு எதிர்காலத்துக்குமாக கட்டமைக்கப்படுவன. அதாவது, ஒரு சமுதாயத்திலிருந்து இன்னொரு சமுதாயத்தினருக்குக் கடத்தப்பட்டு வருகின்ற பண்பாடாகக் காணப்படுகின்றது. பவானி ஆழ்வாப்பிள்ளையின் 'கடவுளரும் மனிதரும்' சிறுகதைத் தொகுப்புக் குறித்து பதிவுகள் ஆங்காங்கே இடம்பெற்றாலும் அதில் இடம்பெற்றுள்ள கதைகள் ஒவ்வொன்றினதும் சமூகத்தின் மீதான நோக்கு, பார்வை முதலான விடயங்கள் விரிவாகவும் ஆழமாகவும் ஆராயப்படவில்லை. இதனையே இவ்வாய்வு ஆய்வு இடைவெளியாகக் கொண்டுள்ளது. அருண்மொழிவர்மனின், ஈழத்தின் முதல் தலைமுறைப் பெண் படைப்பாளி பவானி ஆழ்வாப்பிள்ளை (2017), கே.எஸ்.சிவகுமாரின் ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் (2008), கார்த்திகேசு ருத்ரமூர்த்தியின் யுத்தகால வன்னியின் வாழ்வியல் கோலங்கள் (2019) போன்றவற்றில் பவானி ஆழ்வாப்பிள்ளையின் சிறுகதைப் பொருண்மைகள் பற்றியே அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அவை சமூகவியல் சார்ந்த தனிமனித உணர்வுத் தளத்தில் நோக்கப்படாதது ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. இதன்பொருட்டு பவானி ஆழ்வாப்பிள்ளையின் 'கடவுளரும் மனிதரும்' என்கின்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பிலுள்ள மன்னிப்பாரா, சந்திப்பு, பிரார்த்தனை, அன்பின் விலை முதலான கதைகள் சமூகவியல் அணுகுமுறையில் விபரிப்பு மற்றும் விளக்க ஆய்வு முறைகளினூடாக ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவாக பெண் படைப்பாளியான பவானி ஆழ்வாப்பிள்ளையின் சிறுகதைகளில் பேசப்பட்ட சமூக நடைமுறைகள், சமூகம் பற்றிய பதிவுகள், சமூக மாற்றங்கள், பண்பாட்டு நீட்சிகள் என்பன தனிமனித உணர்வுடன் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளன என்பன தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *: சமூகவியல், பண்பாட்டு நீட்சி, பெண்ணியம்.*

**அறிமுகம்**

இலக்கியங்கள் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டே எழுகின்றன. இதன் மூலம் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு வெளிப்படுத்தப்படுகின்றது. இலக்கியங்கள் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை மக்களின் தனி மனித உணர்வுகளையும் அனுபவங்களையும் எடுத்துக்காட்டும் அதேவேளை, சமூகத்தில் உள்ள நடைமுறைகளையும் வாழ்வியல் சிக்கல்களையும் பதிவுசெய்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈழத்தில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுத்திய சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்கள், ஜனநாயக மயப்படுத்தப்பட்ட நவீன கல்வி, ஆங்கிலக் கல்வி வாயிலாக நவீன இலக்கியங்கள்மீதான ஆர்வம் ஈழத்தில் தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்திற்கு வழிவகுத்தன.

ஈழத்தில் 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக பொருளாதாரப் பண்பாட்டு மாற்றங்களையும் தமிழ்ச் சிறுகதையின் போக்கையும் உள்வாங்கிக் கொண்டு, 1930களிலேயே பிரக்ஞையுடன்கூடிய சிறுகதைகள் உதயமாகின. அந்தவகையில், 1960, 1970களில் சிறுகதைப் படைப்புகளில் ஈடுபட்டவர்களாக பெனடிக் பாலன், செ.யோகநாதன், செங்கையாழியான், செம்பியன் செல்வன், தெணியான், மருதூர்க்கொத்தன், பவானி, எஸ்.எஸ்.எம். ஹனிபா, குந்தவை ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் தங்களது கதைகளின் ஊடாக முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களது பெரும்பாலான சிறுகதைகள் முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டனவாகவும் காலத்தின் குரலாகவும் அமைந்தன. அக்காலத்தில் பெண்கள் சார்ந்த பதிவுகளை ஆண், பெண் படைப்பாளிகள் இருவருமே பதிவுசெய்துள்ளனர். எனினும், ஒரு பெண்ணின் மனோதத்துவங்களை ஒரு பெண்ணாலேயே உணர்ந்து கொண்டு சரியாகப் பிரதி விம்பப்படுத்த முடியும் என்பது பலரும் அறிந்ததொன்றே. அந்தவகையில், ஈழத்துச் சிறுகதைப் பாரம்பரியத்தில் மூத்த பெண் படைப்பாளி என்ற பட்டியலில் பவானியும் ஒருவராகத் திகழ்கின்றார். இப்பெண் படைப்பாளியின் ஆரம்ப காலச் சிறுகதைகள் அடங்கிய கடவுளரும் மனிதரும் என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள மன்னிப்பாரா, சந்திப்பு, பிரார்த்தனை, அன்பின் விலை முதலான கதைகளைச் சமூகவியல் நோக்கில் பார்ப்பது, ஈழத்துச் சிறுகதை வரலாற்றுக்குப் புதிய திருப்புமுனையாகவும் சமூகத்தில் இழையோடியிருந்த பெண்களின் உளவியல் ரீதியான மனோதத்துவங்களைப் பண்பாட்டு மீட்சியாக்கி எதிர்காலத்துக்கு ஏற்றவாறு நோக்குவதாகவும் அமையும் எனலாம்.

**சமுதாய வாழ்க்கையும் தனிமனித உணர்வுகளும்**

மனித வரலாற்றில் குடும்பம், முதல் சமூக நிறுவனமாகத் திகழ்கிறது. சமூகத்தில் உள்ள ஏனைய குழுக்களைக் காட்டிலும் அதன் அங்கத்தினருடன் தொடர்ச்சியான மற்றும் மிகவும் நெருக்கம் வாய்ந்தது குடும்பமாகும். பிறப்புத் தொடக்கம் இறப்புவரை மனித வாழ்வில் எல்லா நிலைகளிலும் குடும்பம் மாறாத சக்தியாக இருக்கின்றது. குடும்பத்தில் இருந்தே வாழ்க்கையின் முதற் கட்ட அனுபவத்தைப் பெற்றுக்கொள்கின்றோம். ‘‘குடும்பம் என்பது திருமணம், இரத்த உறவு அல்லது தத்தெடுத்தல் போன்ற உறவுகளால் ஐக்கியமான பலர் ஒரு இடத்தை அமைத்து கணவன், மனைவி, தாய், தந்தை, மகன், மகள், சகோதரன், சகோதரி என்ற முறையில் அவரவர்

சமூகப் பங்கிற்கு ஏற்றவாறு செயலெதிர்ச் செயலிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் ஈடுபட்டுப் பொதுவான பண்பாட்டைத் தோற்றுவித்து அதைப் பராமரித்து வரும் ஒரு குழு''( அன்னி தாமசு, 2000 : x ) என்று பர்ஸெர்லாக் (burcer lock) வரையறுத்துள்ளார்.

தனிமனித உணர்வு என்பது ஒவ்வொரு மனிதனதும் மனதின் உள்ளார்ந்த உணர்வுகளையும், வாழ்வின் உள் போராட்டங்களையும் வெளிப்படுத்தும் உணர்ச்சி நிலை. தனிமனித உணர்வு என்றால், ஒரு தனி மனிதனின் உள் சிந்தனைகள், மனக்கவலைகள், தனிமை உணர்வுகள், ஆசைகள், ஏமாற்றங்கள், வாழ்க்கை குறித்த சுயநினைவுகள் அனைத்தையும் உள்ளடக்கிய மனப்பான்மையாகும். இது ஒருவரின் தனிப்பட்ட அனுபவங்களை மையமாகக் கொண்டது. ''என் வாழ்க்கை என் பொறுப்பு'', ''என் உணர்வுகளின் சொந்தம் நான் தான்'' என்பதற்கான வெளிப்பாடே தனிமனித உணர்வு. சிறுகதையில் தனிமனித உணர்வின் வெளிப்பாடு என நோக்கும்போது, சிறுகதை என்பது சுருக்கமானதும் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்துமான இலக்கிய வடிவம். இதில் தனிமனித உணர்வு கீழ்க்கண்ட அம்சங்களான உளவியல் ஆழம், தனிமை உணர்வு, உணர்ச்சிக் குழப்பங்கள், வாழ்க்கைப் போராட்டங்கள், அந்தரங்க சிந்தனைகள் என்பனவற்றை வெளிப்படுத்தப்படுகின்றன. தனிமனித உணர்வு என்பது தமிழ்ச் சிறுகதைகளில் ஒரு முக்கியமான கூறாக விளங்குகிறது. இது மனித மனத்தின் ஆழங்களை வெளிக்கொணரும் உளவியல் கருவியாகும். ஒவ்வொரு சிறுகதையிலும் மனித உணர்வுகளின் சுய வெளிப்பாடும், வாழ்க்கை எதிரொலியும், வாழ்க்கையின் உண்மை நிலைகளும் நம் கண்முன்னே விரிகின்றன. சமூகத்தில் காணப்படுகின்ற குறிப்பாக, தனிமனித உணர்வு, உளவியல் சார்ந்த பிரச்சினை, சமூக அந்தஸ்து சார்ந்த பிரச்சினை முதலான விடயங்கள் பவானியின், மன்னிப்பாரா, சந்திப்பு, பிரார்த்தனை, அன்பின் விலை ஆகிய சிறுகதைகளில் எவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றது என்பதனைச் சமூகவியல் கண்ணோட்டத்தில் விரிவாக நோக்குவோம்.

**பொது எதிர்ப்புக்கிடையில் தனிமனித மனவெளிகள்**

மன்னிப்பாரா கதை சாதியின் வரண்முறைக்குள் கட்டுண்ட அணுக முடியாத இலட்சியமான இரு காதலர்களின் மன உணர்வினைச் சாராம்சமாகக் கொண்டது. இக்கதையின் முக்கிய கதாபாத்திரங்களான மூர்த்தி, சுசீலா ஆகிய இருவரும் இளமையிலே தமது சாதி வரம்புகளை மறந்து காதலித்தனர். மூர்த்தி சாதியில் உயர்ந்தவன் என்பதால் சுசீலா ஆரம்பத்திலேயே மூர்த்தியிடம் இதைப்பற்றி வினாவியிருக்கிறாள். சுசீலாவின் குணத்திலே குறையில்லை என்றாலும் சமூக அந்தஸ்தில் அவள் குலம் மூர்த்தியைவிடக் குறைவானது. தன் பெற்றோர்கள் சம்மதிக்கமாட்டார்களென்று தெரிந்தும் மூர்த்தி தன் உள்ளத்தைக் காதலில் நெகிழவிட்டான். அவளுக்கு அளித்த உறுதியான முடிவைப் பின்பற்றிச் செல்லவேண்டிய தருணத்தில் துணிவு இழந்த கோழையாகி நின்றான்.

இக்கதையில் வெளிப்பட்டுள்ள தனிமனித உணர்வு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள தன்மையைக் காணமுடிகிறது. மூர்த்தி தனக்கான கடமையுணர்வால் தனது பெற்றோரின் சமூக அந்தஸ்துக்காக சுசீலாவை மறந்துவிடுவதாகக் கூறினான். இதுபற்றிச் சுசீலா முன்னரே கேட்டபோது நிதானமாகச் சிந்தித்து பதில் கூறியிருந்தால் இன்று கேள்விக்குறியாக்கப்பட்ட

சுசீலாவின் காதல் வாழ்க்கைக்கு அன்றே பதில் தெரிந்திருக்கும். அவன் கூறிய நம்பிக்கை வார்த்தைகள் அவள் மனதை நெருடலுக்கு உட்படுத்தியிருக்காது. கடமை உணர்வில் அகப்பட்டுக் காதல் உணர்வைப் புறந்தள்ளிய தன்மையை இங்கு நோக்கமுடிகின்றது. எடுத்துக்காட்டாக,

> ''நான் துணிந்துவிட்டேன் சுசீ. உலகம் வேகமாக முன்னேறுகிறது. அந்த முன்னேற்றப் பாதையில் சாதி வரம்புகள் நிலைத்து நிற்க முடியாது. நாளைய உலகம் நம்மைத்தான் ஆதரிக்கும். இதில் சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது'' (பவானி, 1994, கடவுளரும் மனிதரும், ப.66).

என்ற கூற்றினைக் குறிப்பிடலாம். இந்த நம்பிக்கை வார்த்தைகளும் மூர்த்திமீது கொண்ட காதலும் அவளுக்கு இன்னொருவருடன் திருமணமாகிப் போகும் தருவாயில் அவளின் மனதை இறுகப் பற்றியது. இதனால் திருமணத்திற்கு முதல் நாள் மூர்த்தியிடம் சென்று தன் மன உணர்வை வார்த்தைகளால் கொட்டித் தஞ்சமடைந்தாள். இதனை,

> ''மூர்த்தி நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றதும் ஆச்சரியப்பட்டீர்களா? என் தாயின் திருப்திக்காகவும் இந்தச் சமூகத்தின் நிர்ப்பந்தத்திற்காவும் திருமணம் செய்துகொள்ள உடன்பட்டேன்…… என் உள்ளத்தையும் உணர்வையும் உங்கள் ஒருவரால் தான் தொடமுடியும். நான் உங்களுக்கு உரியவள். என் உள்ளமும் உணர்வும் உடலும் உங்களுக்கு உரியவை. என் வாழ்வு உங்களோடு ஆரம்பித்து உங்களோடு முடிவதொன்று. உங்களுக்குள்ளே அது என்றென்றைக்குமாய் ஒன்றி விடட்டும்'' ( மேலது., ப.70).

இவ்வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இவ் உரையாடல் வெளியிலிருந்து பார்ப்போருக்கு மானசீகமாக இருப்பது இயல்பு. ஏனெனில், மீளாக் காதலில் திளைத்திருந்தாலும் இன்னொருவருக்குச் சொந்தமாக ஒப்புக்கொண்ட பின் காதலனுடன் இரவில் தனிமையில் சந்திப்பதும், இத்தகைய வார்த்தைகளும் கற்பொழுக்கத்திற்கு மாறானது.

இக்கதையில் வரும் கதாபாத்திரங்களான மூர்த்தி மற்றும் அவனது ஐந்து நண்பர்கள் காதலித்தனர். அவர்களுள் ஒருவனே தனது காதலில் வெற்றி கண்டான். அதற்குக் காரணம் அவன் காதலித்தவள் அவனுக்குச் சமமான அந்தஸ்து உள்ளவள் என்பதாகும். மூர்த்தியின் காதலுக்கு அவனது தாய், தகப்பன் வெறுப்புத் தெரிவித்தமைக்குச் சுசீலா அந்தஸ்தில் குறைந்தவள் என்பதுவே பிரதான காரணமாக இருந்தது. இதனை, ''இதயம் வெடித்து நான் இறக்க வேண்டும் என்றால் அந்தக் குலம் கெட்டவளை மனம் குளிர மணந்துகொள்'' (மேலது., ப.65) என்ற மூர்த்தியின் தாயின் உருக்கமான வார்த்தைகள் மூலம் அறியமுடிகிறது. கதாசிரியரும் இதனை விரக்தி மனப்பாங்குடன் வெளிப்படுத்தியுள்ளார். இதனை, ''பிச்சையைக் கூட பாத்திரம் அறிந்து தான் இடச் சொல்லிவிட்டார்கள் பெரியவர்கள். காதலையும் அப்படித்தான் இடமறிந்து மதிப்பிட்டுக் கொடுக்க வேண்டுமோ''[5] (மேலது., ப.65) என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

தமிழ்ச் சமூகம் சாதி மற்றும் சமயப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இயற்கையின் படைப்புக்கும் சாதிப் பிரிவுகளுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. இருப்பினும், மனித இனத்தைப் பல்வேறு சாதிகளாகப் பிரித்து ஏற்றத்தாழ்வுகளைச் சமூகம் கற்பித்துள்ளது.

உணர்விலும் உடலமைப்பிலும் ஒரே மாதிரியாக விளங்கும் மனிதன் பண்பாட்டிலும் பழக்கவழக்கங்களிலும் வேறுபட்டுக் காணப்படுவதற்கு முக்கிய காரணமாக விளங்குவது சாதிப் பிரிவினை ஆகும். அந்தவகையில், சம அந்தஸ்து உள்ளவர்களே ஒருவரை ஒருவர் காதலிக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாடு ஊடுருவியுள்ளதை ஆசிரியர் இக்கதை மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். அன்று முதல் இன்று வரை சில பெண்களுடைய திருமண வாழ்விற்கும் கனவுகளுக்கும் சாதிப் பிரிவினை தடையாக இருந்து வருகின்றது. இதனால் சமூகத்தின் பல்வேறுபட்ட சுரண்டல்களுக்கு ஆளாகின்றனர். எனவே, எதிர்காலத்தில் சாதிப் பிரிவினையைத் தகர்த்துப் பெண்கள் தமது கனவுகள் மெய்ப்பட தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு புத்துருவாக்கம் பெற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

**சமூக உளவியல் மற்றும் மறுவாழ்வு**

சந்திப்பு சிறுகதையானது, மனதளவில் ஒருவரைக் காயப்படுத்தினால் மீண்டும் அவர்களது சந்திப்பு சுமையாகக் கூடும் என்பதைச் சாராம்சமாகக் கொண்டது. இக்கதையில் வருகின்ற கதாபாத்திரமான சண்முகம் தனது மனைவி கோமதியை தீர விசாரிக்காது கண்ணால் கண்ட செயலை மாத்திரமே நம்பி அவள் தனது நண்பனுடன் தவறான உறவில் இருந்தாள் என எண்ணி அவளை விபச்சாரி என்ற பெயர் சூட்டி வீட்டை விட்டு விரட்டுகிறான். ஐந்து வருடங்கள் கழித்துத் தனது தவறினை உணர்ந்து மீண்டும் தனது மனைவி என்ற உரிமையோடும் குற்ற உணர்வோடும் அவளை பார்க்கச் சென்றான். அங்கு அவன் சந்தித்தது அவனால் விரட்டப்பட்டு வாழ்விழந்து விபச்சாரியாக மாறியிருந்த காலத்தில் உண்மையான அன்பைக் கொடுத்து ஏற்றுக்கொண்ட ஏகாம்பரத்தினுடைய மனைவியாக வாழும் கோமதியை ஆகும்.

இச்சிறுகதையிலே கோமதி என்ற பெண்ணின் உணர்வுகள் ஆற்றிலே அடித்துச் சென்று கரை ஒதுங்கிய ஒரு கந்தல் துணிக்கு நிகராக காணப்படுகின்றன. ஒரு பெண் தனது திருமண வாழ்வினை நினைத்துப் பல இலட்சியங்களோடும் ஆசைகளோடும் குடும்பப் பெண்ணாக வந்தபோது கணவனுடைய தவறான புரிதலினால் அவள் சமூகத்தின் விளிம்புநிலை விபச்சாரியாக மாற்றப்பட்டு இறுதியில் இன்னொருவருக்கு இரண்டாம்தார மனைவியாக வாழுகின்றாள். இங்கு அப்பெண்ணினுடைய உள்ளமானது ஆசை, ஏமாற்றம், கவலை, காதல், பரிசுத்தம், மனவடு போன்ற பல்வேறு தனிமனித உணர்வுகளால் இழையோடியிருப்பதைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, ‘‘அன்று ஒரு குற்றமும் அறியாத என்னை விபச்சாரி என்று சொல்லித் தெருவில் தள்ளிவிட்டீர்கள். ஆனால், இன்று தான் நான் உண்மையில் விபச்சாரி..’’ (மேலது., ப.76) என்ற வரியினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

தமிழ்ச் சமூகத்தில் ஆண்கள் எத்தகைய தவறிழைத்தாலும் பெரும்பாலும் மனைவி அவரை ஏற்றுக்கொள்ளும் பண்பாடு இருந்துள்ளது. சான்றாக, சிலப்பதிகாரத்தில் வருகின்ற கோவலன் கண்ணகி வாழ்வை சுட்டிக்காட்ட முடியும். ஆனால், அச்சமூகத்திலேயே பெண்கள் தவறு செய்தாலோ அல்லது பெண்கள் தவறிழைத்துவிட்டனர் என்ற தவறான புரிதல் ஏற்பட்டாலோ அவர்களை இழிவு நிலைக்குட்படுத்தும் தன்மை காணப்படுகின்றது. இதற்குச் சான்றாக, பவானியின் ‘சந்திப்பு’ என்ற சிறுகதை காணப்படுகின்றது. ஏதோ ஒரு காரணத்தினால் குடும்பங்களால் கைவிடப்பட்ட அல்லது விரட்டப்பட்ட பெண்கள் வாழ வழியின்றி

விபச்சாரிகளாக மாறுவதும், வாழ்வை வெறுத்துத் தற்கொலை செய்வதும் காலா காலமாக நிகழ்கின்ற ஒன்றாகிவிட்டது.

இக்கதையில் வரும் கோமதி எனும் பாத்திரத்தின் வாழ்வினை நோக்கும்போது, அவள் நம்பி வந்த உறவு கைவிட்டபோது விபச்சாரியாக மாறினாலும், சமூகத்தின் கேலிக்கு உள்வாங்கப்பட்டாலும் அவளது மனத்தூய்மையின் மூலம் அவளது வாழ்வில் மறுவாழ்வு என்ற புரட்சி நிகழ்த்தப்பட்டது. ஒரு பெண் சமூகத்தில் உடற்தூய்மையுடன் இருப்பதைக் காட்டிலும், மனத்தூய்மையுடன் இருப்பதே கற்பு என்ற கருத்து தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டில் புத்துருவாக்கம் பெற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

**சமூக கட்டாயங்களுக்கெதிரான பெண்மையின் மனத்துயரம்**

பிரார்த்தனை சிறுகதையானது, இல்லறம் சிறப்புற அமைய கணவன் மனைவி இருவரிடத்திலும் காணப்படும் அன்பு முக்கியமானது. அவ்வாறில்லையேல் அவ்வாழ்வு கானல்நீர் போன்றதாகிவிடும் என்பதனை வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது. இக்கதையில் வரும் கதாபாத்திரமான ராமசாமியின் எட்டுக் குழந்தைகளுள் முதற் பிள்ளை சுமதி. ராமசாமி தனது மூன்று பிள்ளைகளை ஓரளவாவது படிக்கவைக்க வேண்டும் என்பதனால் சுமதியையும் மற்றைய தங்கைகளையும் பள்ளிக்கூடம் அனுப்பவில்லை. சுமதிக்குப் பதினெட்டு வயது ஆனதும் அவளை வீட்டோடு வைத்திருந்தால் ஊரவரின் புறப்பேச்சுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்பதற்காக அவளின் விருப்பைக் கேட்காமல் அவளைவிட அதிக வயது மூப்பான ஒருவரை நிச்சயம் முடித்துவிட்டுப் பின்னரே வீட்டாருக்கும் சுமதிக்கும் கூறினார். அதற்குச் சுமதி எதிர்ப்புத் தெரிவித்தபோது ராமசாமி அவளைக் கன்னத்தில் அறைந்தார். அவள் அழுது கண்ணீர் வடித்துக் கதறினாலும் பலன் ஒன்றுமில்லை. திருமணம் முடித்துப் பத்து வருடம் கழித்தும் சுமதியின் மனதில் வடுவாகவே இருந்தது பொருந்தா மணம். தனது கணவரான சபாபதி மரணப் படுக்கையில் இருக்கும் தருவாயில் திருமணம் முடித்த இதுவரை காலமும் கடவுளிடம் எதையும் வேண்டாத சுமதி தனது கணவன் சாக வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறாள். இதனை, "கடவுளே அவர் சாகட்டும்…… கடவுளே அவர் சாகட்டும்……." (மேலது., ப.48) என்ற கதை முடிவிலான வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

இச்சிறுகதையிலே ஒரு பெண்ணிற்கு விருப்பமில்லாது ஒருவரைத் திருமணம் செய்து வைக்கின்றபோது அப்பெண்ணிற்குள் இருக்கின்ற தனிமனித உணர்வு ஒரு புதிய தளத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதாவது, சுமதி தனக்கு விருப்பமில்லாத, பொருத்தமில்லாத திருமணம் நிகழ்ந்ததனால் பத்து வருடமாகியும் கணவன்மீது அன்பு கொள்ளாது அவரிடமிருந்து விலகி இருக்கின்றாள். மரணப் படுக்கையில் இருக்கும் தருவாயிலும் அவர் சாகவேண்டும் என்றே கடவுளை வேண்டுகின்றாள். மேலும் ராமசாமி, சமூகத்தின் பழிச்சொல்லுக்குப் பயந்தும் வறுமை காரணமாகவும் சுமதியின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது அவளின் விருப்பைக் கேட்காமலும் திருமணத்தை நடாத்திமுடித்தார். ஆனால், ராமசாமியின் அச்செயலால் கேள்விக்குறியாகியிருப்பது ஒரு பெண்ணின் வாழ்வும் அவள் உணர்வுகளும் ஆகும்.

திருமணம் என்பது வெறுமனே சமூக அந்தஸ்துக்கான பிணைப்பாக அன்றி, இரு மனங்களின் இணைவாக அமைதல் வேண்டும். பெற்றோரின் கட்டாயத்திலோ அல்லது வேறு

தனிப்பட்ட நலன் கருதியோ அன்பில்லாது ஒருவருடன் திருமண பந்நத்தில் இணையும்போது அந்த வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும். தமிழ்ப் பண்பாட்டில் பண்டைய காலம் தொட்டுப் பால்ய திருமணங்களும் பெண்களுக்கு விருப்பமற்ற கட்டாயத் திருமணங்களும் நடந்தேறி வந்துள்ளன. ஆங்கிலேயர் வருகையின் பின்பு உருவான படித்த மத்திய தர வர்க்கத்தினர் மத்தியிலும் இம்மரபின் தொடர்ச்சி காணப்பட்டது. இவ்வாறான திருமணங்களால் உள்வாங்கப்படும் பெண்கள் இதுதான் வாழ்க்கை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு வாழ்ந்தாலும், அவர்களுக்குள்ளான உணர்வுகள் அவர்களைக் குரூர சிந்தனையில் சிந்திக்கச் செய்கிறது. அத்தகைய குரூர சிந்தனை கொண்ட பெண்ணாகவே ஆசிரியர் பிரார்த்தனை என்கின்ற சிறுகதையில் சுமதி என்கின்ற பாத்திரத்தைப் படைத்துள்ளார்.

தமிழ் மரபில் பெண்கள் பதுமை, பொறுமை, அன்பு போன்ற பண்புடையவர்களாக காணப்பட்ட போதிலும், அவர்களது தனி மனித உணர்வுகள் அவர்களை வேறொரு தளத்தில் சிந்திக்கச் செய்யும். எனவே, பெண்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் விருப்பத்தின் வழி அவர்களது வாழ்வை அமைத்துக்கொடுத்தலின் மூலமும் எதிர்கால சமூகத்தில் இத்தகைய குரூர மனப்பான்மையைப் பெண்கள் மனதிலிருந்து நீக்கிவிட முடியும் என்ற உளவியல் கோட்பாடு இங்கு பண்பாட்டு மீட்சியாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

**அன்பின் விலையில் மனிதவியல்**

அன்பின் விலை சிறுகதை அன்பு என்ற மனித மன உணர்வினைச் சமூகப் பார்வையில் கேள்விக்குள்ளாக்கும் ஒரு ஆழமான படைப்பாகும். இக்கதையில் வரும் கதாபாத்திரமான ஆறுமுகம், கருணாகரன் சிறுவயதில் இருக்கும்போதே மனைவியைப் பிரிந்து கருணாகரனையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்றுவிட்டார். கருணாகரனை நன்றாகப் படிப்பித்து டாக்டர் ஆக்கி ஆறுமுகம் இறை எய்தினார். கருணாகரனுக்குக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வேலை கிடைத்தது. ஒரு நாள் ஒரு பெண் தனது தாயை நினைவு தப்பிய நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தாள். துரதிஷ்டவசமாக அவர் இறந்துவிட்டார். அவள்மேல் இனம் புரியாத அன்புகொண்ட கருணாகரன் அவளைப் பற்றி விசாரித்தார். பின்னர் இருவரும் காதல் கொண்டு இறைவனைச் சாட்சியாக வைத்துக் கருணாகரன் சரோக்குத் தாலி கட்டினார். மகிழ்ச்சியாகக் கடந்த அவர்களது வாழ்க்கையில் இடியாய் விழுந்தது அவர்களது கடந்த கால வாழ்வின் இரகசியம். கருணாகரனும் சரோவும் தாம் இருவரும் சகோதரர்கள் என்பது அப்போதுதான் தெரிந்தது. நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த சரோ பிரசவத்தில் பெண் பிள்ளையைப் பெற்றெடுத்தாள். அவ்விடயம் தெரிந்ததிலிருந்து அவளது மனம் வடுவால் சூழ்ந்தது. இந்தச் சமூகமும் தமது உறவில் படிந்த அன்பின் கறையாகவே இதனைப் பார்க்கும். அந்தக் கறை நம் குழந்தை மேல் படியவிடாது அவளை வளர்த்துவிடுங்கள் எனக் கூறி உலக வாழ்வைத் துறந்தாள். ஆனால், அந்தக் கறையின் நிழல் நீண்ட காலத்தின் பின்னர் அவர்களின் மகளான இரத்னாவின்மேல் பட்டது.

மேலும், சரோ இறப்பதற்கு முன் எழுதிய கடிதத்தில் கருணாகரனுடன் வாழ ஆசைப்படுவதாகவும் சமூகத்திற்குப் பயப்பட்டுத் தவறான முடிவு எடுத்ததும் வெளிப்படுகின்றது. இதனை,

> “அத்தான் உங்களோடு வாழத் துடிக்கிறது என் இதயம். ஆனால் இந்தச் சமூகத்திலே, உலகிலே நாம் வாழ வழி இல்லை. நான் சாகத் துணிந்துவிட்டேன். எனக்கு வேற வழி தெரியவில்லை” (மேலது., ப.35)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

மனிதனின் ஆழ்மனதில் அகம் சார்ந்து வெளிப்படுகின்ற விருப்பு மற்றும் வெறுப்பு அக உணர்வு எனப்படுகின்றது. காதல், பரிவு, துக்கம், மகிழ்ச்சி, ஆசை, கோபம், பாலியல் உணர்ச்சி போன்றவற்றை அக உணர்வுகளாகக் குறிப்பிடலாம். பொதுவாகப் பெண்களிடமே அக உணர்வு அதிகமாக வெளிப்படுகின்றன. அவர்கள் அகத்தின் ஊடாக தங்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி இருக்கின்றனர். இக்கதையினூடாக, கருணாகரனையும் சரோவையும் பிறர் குற்றம் கூறினாலும், இவர்கள் ஒருவருக்கு ஒருவர் அன்பு வைத்ததைத் தவிர வேறு எந்தக் குற்றமும் இழைக்கவில்லை. இருவரும் தாம் அண்ணன் தங்கை என்று தெரிந்த பின்னர் மண வாழ்க்கையில் இணைந்திருந்தால் அவர்களைக் குறை கூறுவது தமிழர் பண்பாட்டில் சமூக நீதிக்குச் சரியென ஒப்புக்கொள்ளலாம். ஆனால், அவர்களின் தாய் தந்தை பிரிந்து தொலைவில் வாழ்ந்ததால் ஒருவரை ஒருவர் யார் என அறியாமலேயே மனதில் மலர்ந்த காதலால் மண வாழ்க்கையில் இணைந்தனர். எனவே, இதில் மன உணர்வுக்குப் பதிலளித்து வாழ்க்கை பற்றிய முடிவெடுக்க வேண்டியவர்கள் கருணாகரன், சரோ மற்றும் ஸ்ரீதர், இரத்தினா மட்டுமல்ல நாம் அனைவருமே என்ற புது வேதாந்தத்தைத் தமிழ்ப் பண்பாட்டில் புகுத்துகின்றது.

**முடிவுரை**

பெண், பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை உள்ளடக்கிய சிறுகதைகள் பெண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்தும் சிறுகதைகள் ஆகும். இறைவனது படைப்புகளில் மேலான படைப்பாக மனித இனம் காணப்படுகிறது. இது ஆண் - பெண் என இரு பாலமைப்புகளைக் கொண்டுள்ளது. சமூகம் ஆணை ஆளும் சக்தியாகவும் பெண்ணை அடிமையாகவும் பார்க்கின்றது. இப்பின்னணியிலே பெண்ணியம் என்ற கோஷம் ஆரம்பித்தது. இன்று சமூகத்தில் பெண்கள் பெற்றோர்களாலும் கணவன்மார்களாலும் சுரண்டப்படுகின்றனர். அவற்றை எதிர்த்துப் பல பெண்கள் கோஷம் எழுப்பினாலும், சிலர் அம்முயற்சிகளில் தோல்வி அடைகின்றனர்.

மனித சமூகத்தின் மன உணர்வுகளைப் பல நிலைகளிலும் படம் பிடித்துக் காட்டக்கூடியவனாகச் சிறுகதைகள் இருக்கின்றன. தனிமனித உணர்வு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படக்கூடிய உளவியல் உணர்வுகளைக் குறிக்கும். அந்தவகையில், பெண்களின் மன உணர்வுகளை மையமாகக் கொண்டதாகவே பவானியின் பெரும்பாலான கதைகள் அமையப்பெற்றுள்ளன. அதாவது, காதல் உணர்வு, விருப்பமற்ற வாழ்வும் விரக்தியும், மன உளைச்சல், தியாகம், மனிதநேயம் போன்ற தனிமனித உணர்வுப் போராட்டங்களையும் அவலங்களையும் தமிழ்ப் பண்பாட்டோடு தனது கதைகளின் ஊடாக எதிர்கால சந்ததியினருக்குக் கடத்தி, சமூகத்தில் பெண்கள் சார்பாக புதிய சித்தாந்தத்தைப் படைக்க முயன்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது

இக்கதைகளின் மூலமாக பெண்களின் மன உணர்வுகளுக்கு மதிப்புத் தரப்பட வேண்டும், சமூக மரபுகளும் பழக்கங்களும் மாற்றம் பெற வேண்டும், சாதி, பொருளாதார அந்தஸ்து, சமய விதிகள் போன்ற காரணங்களால் பெண்களின் வாழ்வைச் சீர்குலைக்கக் கூடாது என்பன

திட்டவட்டமாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இதன் வழியாக, தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் உரிமைகள், மன அழுத்தங்கள், உளவியல் வலிகள், சமூக நீதியின் தேவை ஆகியவை மீதான விழிப்புணர்வும், புதிய சமூக அடையாளக் கட்டமைப்புகளின் தேவை பற்றிய அறிவும் பவானியின் கதைகளின் நுண்ணறிவு வெளிப்பாட்டாகத் திகழ்கின்றன. முடிவில், இத்தகைய சமூக விமர்சனக் கதைகள் வெறுமனே புனைகதைகள் அல்லாமல் எதிர்கால தமிழ்ச் சமூகத்திற்கு மாற்றத்தையும் விழிப்புணர்வையும் பெண்களின் வாழ்வுரிமை மீதான புரிதலையும் கொண்டு வரும் சமூகவியல் ஆவணமாக இருப்பது உறுதிசெய்யப்படுகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


அரங்க மல்லிகா, (2002), தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

அன்னி தாமசு, (2000), தமிழர் சமூகவியல் சில பார்வைகள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பவானி. ஆ., (1994), கடவுளரும் மனிதரும், கொழும்பு, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.

மங்கை. அ., (2005), பெண்ணிய அரசியல், சென்னை, கங்கு வெளியீடு.

றமீஸ்.எம்.ஏ., (2016), தமிழ் இலக்கிய அறிமுகமும் இலக்கிய நயப்பும், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், வெளிவாரி பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்.

# மு.தயாளன் நாவல்கள் காட்டும் ஈழத்து யுத்த கால வாழ்வியல் சூழல்

**Mahendran Kovarththana**
Department of Tamil Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
tharshkishania@gmail.com

**Nadira Mariyasandanam**
Department of Tamil Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
nadiraeusl@yahoo.co.in

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்தில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டம் காரணமாக அனேகமானோர் தங்களது சொந்த மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் இலக்கிய ஆர்வம் உடையவர்கள் பலர் ஆக்கங்களைப் படைத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளனர். இத்தகையோர் வரிசையில் மு.தயாளனும் ஒருவராக விளங்குகிறார். 1952ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கரவெட்டியில் பிறந்த மு.தயாளன் ஈழத்தில் இடம்பெற்ற இனப் போர் காரணமாக 1984ஆம் ஆண்டு லண்டனுக்குப் புலம்பெயர்ந்தார். இலக்கியத்தில் நாட்டம் கொண்ட மு.தயாளன் நாவல், குறுநாவல், சிறுகதை, கவிதை எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட இலக்கியங்களைப் படைத்து ஈழத்து மற்றும் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றி உள்ளார். அவரது படைப்புகளில் நாவல்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அவரது நாவல்கள் ஈழ மண்ணில் இடம்பெற்ற யுத்தத்தினால் மக்கள் உயிரிழந்தமை, அவர்களது உடைமைகள் எரிக்கப்பட்டமை, தங்களுடைய சொந்த நிலத்தினைப் பிரிந்து வேறு தேசத்தில் தஞ்சம் புகுந்தமை போன்ற நிகழ்வுகளைப் பேசுகின்றன. இவ் ஆய்வு பகுப்பாய்வு மற்றும் விபரண ஆய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்*** *: தயாளன், புலம்பெயர் இலக்கியம், யுத்தம், ஈழம்.*

**அறிமுகம்**

இந்த ஆய்வானது புலம்பெயர் இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தினை வகுத்துக் கொண்ட மு.தயாளனின் நாவல்களை ஆய்வு மூலங்களாகக் கொண்டது. தற்பொழுது லண்டனில் வசித்து வரும் மு.தயாளன் தனது ஆக்கங்கள் மூலம் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்கும் பங்காற்றியவராவார். இவர் ஆரம்ப காலங்களில் 'கரவைக் கவி' எனும் பெயரில் ஆக்கங்களை எழுதி, தற்பொழுது கரவை மு.தயாளன் எனும் பெயருடன் இலக்கியங்களை எழுதுகின்றார். மு.தயாளனின் முதல் ஆக்கமான 'கண்ணீரிலெழுத்து' என்ற சிறுகதை 1970ஆம் ஆண்டு 'இடி முழக்கம்' என்னும் சஞ்சிகையில் வெளியாகியது. அதனைத் தொடர்ந்து இவர் நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

இவர் எழுதிய நாவல்களுள் ஒரு சில நாவல்கள் ஈழத்தின் யுத்த காலத்தில் மக்களின் வாழ்க்கைநிலை எவ்வாறு காணப்பட்டது என்பதனைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அதாவது,

மக்கள் எத்தகைய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார்கள், எவ்வாறான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பவற்றை எல்லாம் இந்நாவல்கள் யதார்த்தமான முறையில் வெளிக்காட்டி நிற்கின்றன. இவ் ஆய்வானது தயாளனின் நாவல்களில் காட்டப்படும் ஈழத்து யுத்த காலத்தின் வாழ்வியல் சூழ்நிலைகளைப் பற்றிப் பேசுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வானது மு.தயாளனின் நாவல்கள் ஈழத்தில் இடம்பெற்ற யுத்த நிலைமைகளையும், அதனால் மக்கள் அடைந்த துயரங்களையும் யதார்த்தமாக வெளிக்கொண்டு வருவன என்பதனை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

புலம்பெயர் எழுத்தாளரான தயாளன் சிறந்த நாவல்களைப் படைத்துள்ள அதே வேளை, இவரது நாவல்களின் முக்கிய பேசுபொருளான ஈழத்தில் இடம்பெற்ற யுத்தம் பற்றி புலம்பெயர் தேசத்திலோ ஈழத்திலோ இதுவரை எந்த ஒரு விரிவான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இக்குறையினை நிவர்த்தி செய்யும் முகமாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**கருதுகோள்**

தயாளனின் நாவல்கள் ஆயுதப் போராட்டத்தினால் மக்கள் எதிர்கொண்ட துயரங்களையும், எதிர்நோக்கிய சவால்களையும், யுத்த சூழ்நிலையால் ஏற்பட்ட இழப்புக்களையும் யதார்த்தமாக எளிமையான மொழிநடையில் வெளிப்படுத்துவன என்பதனை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வு வரையறை**

தயாளனின் படைப்புகளில் இருந்து மூன்று நாவல்கள் இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவ்வகையில், சில மனிதர்களும் சில நியாயங்களும் (2015), கடல் கடந்து போனவர்கள் (2011), கரும்பலகை (2024) ஆகிய நாவல்கள் எடுத்தாளப்படுகின்றன.

**ஆய்வு மூலங்கள்**

இவ் ஆய்விற்கு முதல் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதல் நிலைத் தரவுகள் : தயாளனின மூன்று நாவல்கள் முதல் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- கரும்பலகை (2024)
- சில மனிதர்களும் சில நியாயங்களும் (2015)
- கடல் கடந்து போனவர்கள் (2011)

இரண்டாம் நிலைத் தரவுகள் : தயாளன் பற்றி இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட தகவல்கள்

**இலக்கிய மீளாய்வு**

மு.தயாளனின் நாவல்கள் குறித்து இதுவரை எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. இவரது நாவல்களை ஆராயும் முதல் ஆய்வாக இவ்வாய்வு அமையப்பெறுகின்றது.

**மு.தயாளன் நாவல்கள் காட்டும் ஈழத்து யுத்த கால வாழ்வியல் சூழல்**

சிங்கள, தமிழ் இன உறவுகளில் 1980கள் தீர்க்கமான ஒரு வரலாற்றுக் கட்டத்தை அடையாளப்படுத்தி நிற்கின்றன. முப்பது வருடங்களாக இடம்பெற்ற யுத்தமானது பல மாற்றங்களையும் இழப்புகளையும் மக்கள் வாழ்க்கையில் கொண்டு வந்தது. தமிழ் சிங்களமாகிய இரு இனங்களுக்கும் இடையே ஏற்பட்ட இனப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாகப் பரிணமிக்கத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் வாழ்விலும் சிந்தனையிலும் எதிர்காலம் குறித்த விசாரத்திலும் எண்பதுகளின் பின் பாரதூரமான மாற்றங்கள் நடந்தேறின. தயாளனின் நாவல்களில் போர்க் கால நிலைமைகளை அறிந்துகொள்ள முடிகின்றது. இதனை யுத்தத்தின் ஆரம்ப கட்ட நிலைப்பாடுகள், மக்களின் அவலம், புலம்பெயர்வு என்ற அடிப்படையில் பார்க்கலாம்.

**யுத்தத்தின் ஆரம்ப கட்ட நிலைப்பாடுகள்**

தயாளன் ஈழத்தின் யுத்தத்திற்கான ஆரம்ப கட்ட நிலைப்பாடுகளைத் தனது நாவல்களில் கூறியுள்ளார். போரின் ஆரம்ப கட்டமாக யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை, மக்களின் பதற்ற நிலை என்பன இவரது நாவல்களில் காட்டப்பட்டுள்ளன. அந்தவகையில், ‘கரும்பலகை’ நாவலின் கதைக்களமானது யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் பின்னணியாகக் கொண்டு நகர்கிறது. இனப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தினைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகள் இந்நாவலில் கூறப்பட்டுள்ளன. இனப் போராட்டத்திற்கு அடித்தளம் போட்ட காரணிகளில் ஒன்றான யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில் இந்நாவலின் கதை நகர்வதாக எழுதப்பட்டுள்ளது. இந்த நாவலின் கதாநாயகன் கபிலன் தனது நண்பனுடன் உரையாடும் சந்தர்ப்பம் ஒன்றினை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

> சிறிது நேரத்தில் வெளியே சென்றிருந்த சுந்தரேசன் வந்திருந்தான். கபிலனும் வகுப்பை முடித்துவிட்டு போவதற்குத் தயாராகினான்.
>
> சுந்தரேசன் கொஞ்சம் பதட்டமாக இருந்தான்.
>
> “என்ன மச்சான் பதட்டமாக இருக்கிறாய்”
>
> “யாழ்ப்பாணத்திலை லைபிறறியை எரிச்சுப் போட்டாங்களாம்”
>
> கபிலனுக்கு நெஞ்சு அதிர்ந்தது. ஆசியாவிலேயே மிகச் சிறந்த வாசிகசாலை. கபிலன் பல தடவை அந்த வாசிகசாலைக்குச் சென்று இருந்தான் (2024:49).

‘கரும்பலகை’ நாவலில் கொழும்பில் பணிபுரியும் கபிலனுக்கு அவனது நண்பன் சுந்தரேசன் யாழ்ப்பாணத்தில் இருந்து கடிதம் எழுதுகிறான். அவன் அக்கடிதத்தில் குறிப்பிடும் சில விடயங்கள் யுத்த காலத்தினைப் பிரதிபலிப்பதாகவும், மக்கள் அடைந்திருந்த பயத்தினைப்

பிரதிபலிப்பதாகவும் காணப்படுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணச் சமூகத்தில் இருந்து சுயநிர்ணயப் போராட்ட உந்துதலில் இயக்கங்களை நாடி இளைஞர்களும் பெண் பிள்ளைகளும் சென்றது குறித்த செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

> ''இவ்விடம் பல பிரச்சினைகள் தொடங்கியுள்ளன. இன விடுதலைப் போர் எனும் பெயரில் பிரச்சினைகள் தொடங்கியுள்ளன. வர்க்க ரீதியான பார்வைகள் மறைந்து இன ரீதியான பார்வைகள் முன்னுக்கு வந்துள்ளன. உனக்கு அரசியலில் ஈடுபாடு இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் நாட்டு நடப்பைச் சொல்ல வேண்டியது என் கடமை என்பதால் சொல்லுகிறேன். தங்கனைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அவன் ஒரு மாக்சீய சிந்தனையாளன் என்பதும் உனக்குத் தெரியும். அவன் இப்போ ஒரு இயக்கத்தில் சேர்ந்து விட்டான்''

> ''முதலில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்பே வர்க்கப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கூறுகின்றான்'' (2024 : 63).

இனப் போராட்டம் ஆரம்பமான காலகட்டங்களில் மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறு காணப்பட்டதென்பதனைத் தயாளன் தனது நாவல்களின் வாயிலாகக் கூறுகின்றார். யுத்த காலங்களில் தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மக்களின் சுதந்திர உணர்வைத் தூண்டும் வகையில் உரையாடி, அவர்களைத் தம்பக்கம் ஈர்த்துக் கொண்டனர். இதனால் பலர் யாரிடமும் சொல்லாமல் தங்களின் சுய விருப்பத்தின்படி போராட்டத்திற்கு ஆதரவளித்து ஆயுதப் பயிற்சிக்காகக் கடல்கடந்து சென்றனர். மேலும், பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் திடீரெனக் காணமற் போகும் நிலைமைகளையும் தயாளன் தனது நாவல்களில் யதார்த்தமான முறையில் கூறி, அன்றைய சூழ்நிலையை எம் கண்முன் கொண்டு வந்துள்ளார். இதற்குக் கரும்பலகை நாவலில் கபிலனுக்குச் சுந்தரேசன் எழுதிய கடிதத்தில் வரும் விடயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

> ''நாம் நினைப்பது போல் நம் பிரதேசங்கள் இப்போது இல்லை. எந்த நேரமும் பயத்தோடு தான் வீதிகளில் நடக்க வேண்டியுள்ளது. எங்களது நண்பன் தங்கனைத் திடீரென்று காணவில்லை. இங்கு இதுதான் இப்போதைய நிலைமை. அவனுடைய அம்மா இதைச் சொல்லி அழுதா. அந்த அம்மா பாவம். தங்கன் ஒருவன் தானே பிள்ளை''….. (2024: 69).

> ''நான் சொல்ல மறந்துவிட்டேன். இவ்விடம் பெண்பிள்ளைகளும் திடீர் திடீரென்று காணாமல் போகிறார்கள். அபிராமியின் நண்பிகள் அறுவரைக் காணவில்லை. இதுதான் இன்றைய நம் பிரதேச அரசியல். கொலையைப் பற்றித்தான் எப்போதும் கதைக்கின்றார்கள்…. (.2024: 70).

**மக்களின் அவல நிலை**

இனப் போராட்டத்தின் காரணமாக இரு இனத்தையும் சேர்ந்த மக்கள் ரத்தமும் சதையுமாகக் கிடந்த நிகழ்வுகளை யதார்த்தமான முறையில் தனது நாவல்களில் சித்திரித்துக்காட்டுகிறார். நடமாடுவதற்கு அஞ்சி நடுங்கி வீட்டுக்குள்ளேயே பொழுதைப் போக்கிய மக்களின் நிலையையும் அக்கால சூழ்நிலையையும் இவரது நாவல்களில் காணலாம். வீடுகளை விட்டு இளைஞர்களும் பெண்களும் வெளியேறினார்கள். பாடசாலைகளை விட்டும் தொழிலகங்களை விட்டும் விலகினார்கள். தலைமறைவு வாழ்க்கையே இளைஞர்களின் சாதாரண வாழ்க்கையாகிவிட்டது. மரணம் வாசக்கதவுகளைத் தட்டியது. சாவின் நிழல் எங்கும் கவிந்தது. தமிழர்கள் உயிர் வாழ்வதற்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை என்ற நிலை அக்கால கட்டத்தில் காணப்பட்டது. ஈழத்து மக்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் பயத்துடனும் ரணத்துடனும் கடந்து வந்த பாதையினை மு.தயாளன் தனது நாவல்களின் நிகழ்வுகளாக்கியுள்ளார்.

இனப் போராட்டத்தில் தெரிந்தோ தெரியாமலோ பல அப்பாவி மக்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். இது குறித்த செய்திகளைக் கரும்பலகை நாவலில் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக, கபிலனும் சுந்தரேசனும் உரையாடும் பொழுது, சுந்தரேசன் தனது தாயார் இறந்த செய்தியினைப் பின்வருமாறு கூறுகின்றான்:

> "ஓம்…..அம்மா சந்தைக்குப் போனவவாம். சந்தையிலை ஆமிக்காரன் சுற்றிவளைக்க அதுக்குள்ளை ஆரோ போராளிப் பொடியன் நிண்டவனாம். அவன் தப்பியோட முயற்சிக்க ஆமிகாரன் கண்ணை மூடிக்கொண்டு சுட்டிருக்கிறான். அதிலே நின்ற பத்துப் பேருக்கு மேலை சரியாம். அதிலை அம்மாவும் ஒரு ஆள்" (2024 : 138).

இனத்துவ அரசியல் எழுச்சி பெற்றதன் காரணமாக தமிழ்ப் பொதுமக்கள் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இம்மக்களை ராணுவம் அடித்தும் தாக்கியும் இம்சை செய்யும் அட்டூழியம் யாழ்ப்பாணத்தில் நாளுக்குநாள் அதிகர்த்துக் கொண்டே சென்றது. இதனை மு.தயாளன் 'கடல் கடந்து போனவர்கள்' என்னும் நாவலில் காட்டியுள்ளார். இந்நாவலில் வரும் மகாலிங்கம் என்பவர் ஓர் ஆசிரியராவார். இவர் பாடசாலையில் இருந்து வரும் வழியில் ஏன் எதற்கு என்ற காரணம் தெரியாமல் இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு ஆளாகின்றார். இதன் மூலம் அக்கால கட்டத்தில் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

> லாவண்யா என்று கூப்பிடும் குரல் கேட்டு, வெளியில் வந்து பார்த்தாள். பக்கத்து வீட்டு வேலியருகில் பவள மக்கா நின்றுகொண்டிருந்தாள்.
>
> "லாவண்யா கொப்பரை ஆமீக்காரங்கள் பிடிச்சுக் கொண்டு போட்டாங்களாம்"
>
> திரும்பவும் வேலியருகில் சத்தம் கேட்டது. பவளமக்கா தான் நின்றிருந்தாள். "கொப்பரைக் கொண்டு போகயில்லையாம். தபாற்கந்தோருக்கு முன்னாலை அடிச்சுப் போட்டிட்டு போட்டாங்களாம்…" (2011 : 6).

யுத்த காலத்தில் பிரயாணம் செய்பவர்களைப் பல்வேறு இடங்களில் வழிமறித்து இராணுவத்திற்கெதிரான பொருட்கள் ஏதேனும் வைத்துள்ளார்களா எனப் பரிசோதிப்பதும் வீடுகளைப் பரிசோதிப்பதும் வழக்கமாகக் காணப்பட்டுள்ளது. இதனைக் கடல் கடந்து போனவர்கள் எனும் நாவலில் காணலாம்.

> ‘‘இஞ்சை சரியான பிரச்சினை போல வாற வழியிலை எத்தனை இடத்தில் செக்கிங்’’ (2011:35). பக்கத்து வீட்டு பவளமக்கா லாவண்யாவைக் கூப்பிட்டாள். ‘‘லாவண்யா சந்தியிலை ஆமீக்காரன்களடி போறபோற எல்லாருக்கும் அடிக்கிறார்கள். ஒவ்வொரு வீடாய் செக் பண்ணப் போறாங்களாம்’’ (2011 : 40).

இனப் போராட்டத்திற்காக ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் வலுக்கட்டாயமாக ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் இழுத்துச் சென்று அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து ஆயுதப் போராட்டத்திற்குத் தயார்செய்யும் நிலை அக்கால கட்டத்தில் தீவிரமடைந்திருந்தது. யுத்தத்தின்போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும் எனத் தவித்த தவிப்புக்களையும் அடைந்த மனக் கஷ்டங்களையும் நாவலாசிரியர் யதார்த்தமான முறையில் கடல் கடந்து போனவர்கள் என்னும் நாவலில் விளக்கியுள்ளார்.

> பவளமக்கா அந்தச் செய்தியைக் கூறியவுடன் லாவண்யாவுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. ஓடி வந்து தகப்பனுக்கும் தமையனுக்கும் விடயத்தைக் கூறினாள். ‘‘மகாலிங்கத்தாருக்கு திக்கென்றது. இந்த நேரம் பார்த்துச் சடகோபனும் வீட்டில் நின்றானே! இக்கட்டான சூழ்நிலை வந்தால் சடகோபனையும் கொண்டு போய் விடுவார்கள். லாவண்யாவைக் கண்டால் அந்தப் பிணம்தின்னிக் கழுகுகள் விடமாட்டுதுகள். சுதந்திரனைக் கொண்டு போய் உரிச்சிப் போடுவாங்கள் என மனதுக்குள் புலம்பினார்.’’

> திரும்பவும் வேலியருகே பவளமக்கா லாவண்யா ஓடினாள். ‘‘ஒவ்வொரு வீடாய் உள்ளட்டு ஆண் பெண் என்றில்லாமல் எல்லாரையும் அந்திரான் முருகன் கோயிலடிக்கு கொண்டு போறாங்களாம். லாவண்யாவின் இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கி இருந்தது. அவள் தன்னைக் காப்பாற்றுவதைவிடச் சுதந்திரனையும் சடகோபனையும் எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும் எனத் துடித்தாள்’’ (2011 : 48,49).

மக்கள் இராணுவத்திற்குப் பயந்து ஓடி ஒழிப்பதும் விடுதலைப் புலிகள் போராட்டத்திற்காக ஒவ்வொரு வீட்டில் இருந்தும் போராளிகளைத் தர வேண்டும் என வற்புறுத்துவதும் இந்த நாவலில் எதார்த்தமான முறையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

> ‘‘அடுத்த முறை வரேக்கை மகனைத் தரோணும் விளங்குதா?’’ என்று கூறிவிட்டுத் திரும்பினார்கள். இரை கிடைக்கவில்லையே என்ற கோபம் ஒருவனுக்கு! பூட்ஸ் காலால் ஒரு மிதி மிதித்தான் தூரத்தில் போய் விழுந்தார். இடுப்பு விண்ணென்று

> வலித்தது. மெல்ல மெல்ல எழும்பி அவர்கள் போய்விட்டதை உறுதிசெய்து கொண்டு கிணற்றுப் பக்கம் சென்று பிள்ளைகளைக் கூப்பிட்டார்" (2011 : 50).

> "கன பெடியளை சந்தியிலை வச்சுப் பிடிச்சுக் கொண்டு போறான்கள். இரண்டு போலீஸ்காரரை இயக்கப் பொடியள் முடிச்சு போட்டான்கள். நான் வளவுக்குள்ளாலை ஓடிவாறன். என்ன நடக்கப் போகுதோ தெரியாது" (2011 : 94).

இனப் போராட்டத்தில் இராணுவத்தினர் தேசிய விடுதலை இயக்கத்தினைச் சேர்ந்தவர்களையும் பொது மக்களையும் கொலை செய்து, அவர்களது உடைமைகளை இல்லாதொழித்தனர். பதிலுக்குத் தேசிய விடுதலை இயக்கத்தினைச் சேர்ந்தவர்களும் இராணுவத்தினர்மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். மு.தயாளன் தமிழ்ச் சமுதாயம் ரத்தமும் சதையுமாகக் கிடந்த சூழ்நிலையை வாசகர் மனதில் பதியும்படி அழகான முறையில் எழுதியுள்ளார். இதனைக் கடல் கடந்து போனவர்கள் என்னும் நாவலில் காணலாம். யாழ்ப்பாணப் பிரதேசம் யுத்த கால கட்டத்தில் எவ்வாறு காணப்பட்டது என்பதனையும் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் இரக்கமற்ற முறையில் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதையும் இந்த நாவல் வெளிக்கொண்டு வருகின்றது.

> "அன்று யாழ்ப்பாண நகரமே அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது. ஒரே கன்னிவெடியில் பதின்மூன்று ராணுவத்தினர் விழுங்கப்பட்டிருந்தனர். ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு முதன்முதலில் பத்துக்கு மேற்பட்ட ராணுவத்தினர் பலிகொடுக்கப்பட்ட நிகழ்ச்சி இது. நிகழ்ச்சி நடந்து அரை மணி நேரத்தில் எல்லா ராணுவ நிலையத்திலிருந்தும் புற்றீசல்கள் போல் ராணுவம் வெறி கொண்டு புறப்பட்டிருந்தது. வெறிநாய்கள் போல் அலைந்து கொண்டிருந்தனர். கண்ணில் பட்டவர்களையெல்லாம் சுட்டுத்தள்ளினர். யாருக்கும் எதுவும் புரியவில்லை. வீடுகளுக்குள் நுழைந்து இருப்பவர்களை எல்லாம் இழுத்துப் போட்டுச் சுட்டனர்.

> சிறுவர் பெரியவர் ஆண் பெண் என்ற பேதம் இல்லை. அங்கு யார் உயிருடன் இருந்தார்களோ அவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. வீடுகள் கொளுத்தப்பட்டன. பல வீடுகள் போட்டிபோட்டு எரிந்துகொண்டிருந்தன. பல உயிர்கள் ஏன் ஏது? என்று கேட்க முன் பரலோகம் சென்றுவிட்டனர்...." (2011 : 113).

யுத்த காலகட்டத்தில் மக்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அரும்பாடுபட்டதனைக் கடல் கடந்து போனவர்கள் எனும் நாவலில் வரும் தினகரன் எனும் கதாபாத்திரத்தின் ஊடாக ஆசிரியர் நம் கண்முன் கொண்டு வந்துள்ளார்.

> "மகாலிங்கத்தாரின் எச்சரிக்கையையும் மீறி ஏதோ அலுவலாக யாழ்ப்பாணம் வந்த தினகரன் இந்த நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டான். தினகரன்

தலைதெறிக்க ஓடினான். அன்றைக்கு யாராவது ஓட்டப் போட்டி வைத்திருந்தால் அவன் தான் முதலாவது. ஓடும்போது முன்னம் வருவது மதிலானாலும் வேலியானாலும் பாய்ந்து பாய்ந்து ஓடினான். சிலவேளை பறவை போல் பறந்தான். பறக்கும் போது சில சமயம் விழுந்தான். விழுந்தால் நோக வேண்டும். ஆனால் இன்று அவனுக்கு நோகவில்லை. நோகுதென்று படுத்தால் உயிர் போய்விடுமே. எழும்பி எழும்பி ஓடினான். முன்னாள் ஒரு வீடு தெரிந்தது. வீட்டு வாசலை நோக்கி ஓடினான். கதவு பூட்டப்பட்டிருந்தது. தட்டு தட்டென்று தட்டினான் யாரும் திறக்கவில்லை. மரண பயம் அவனைத் துரத்தியது. மீண்டும் பாய்ச்சல். யாருடைய வீட்டுக் கதவும் அவனுக்காகத் திறக்கவில்லை. யார் தான் கதவைத் திறப்பார்கள். எல்லோரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் போது இவனுக்காகக் கதவைத் திறந்து காப்பாற்ற வேண்டிய நிலை யாருக்குத்தான் வரும். இனி ஓட முடியாத நிலை. தினகரனுக்கு மூச்சிறைத்தது. இதயம் படபடவென்று அடித்தது. ஆபத்பாந்தன் போல் முன்னால் ஒரு புளியமரம் மளமளவென்று ஏறிவிட்டான். என்ன துணிவு என்ன லாவகம். என்ன வேகம். மேலே ஏறி ஒரு கிளையில் அமர்ந்த பின்பு தான் இதயம் மெதுவாக அடிக்க ஆரம்பித்தது'' (2011 : 114).

இனப்போராட்டத்தின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும்பிலும் காணப்பட்டது. தமிழர்கள் எங்கெல்லாம் காணப்பட்டார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கெதிரான சதி வேலைகள் அரங்கேறிய வண்ணமே இருந்தன. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயத்தினை கடல் கடந்து போனவர்கள் என்னும் நாவலில் காணலாம். இதனைப் பெர்னாண்டோ மற்றும் அவரது மனைவியின் உரையாடலின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

''வெளியிலை சரியான பிரச்சனை. எல்லாத் தமிழ்க் கடையும் எரிஞ்சிட்டுது. கன தமிழ் ஆக்கள் ரோட்டிலை செத்து கிடைக்கினம்'' என்றாள்.

''பொலிஸ் இல்லையோ? பொலிசும் சேர்ந்து தான் செய்யுதாம்''

பெர்னாண்டோ கவலையுடன் சுதந்திரனைப் பார்த்தார் (2011 : 132).

''தமிழ் ஆக்களின்ரை ஒரு கடைகூட மிச்சமில்லை. கன தமிழ் ஆக்களின்ரை பிரேதங்கள் ரோட்டிலை கிடக்குதாம். அரசாங்கத்தின்ரை கட்டுப்பாட்டில் படைகள் இல்லையாம்.

சுதந்திரனின் முகம் கருத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு லொறியிலை புத்த பிக்குகளின் பிரேதங்கள் வருகுதெண்டு கதைக்கிறாங்கள்….'' (2011 : 139).

யுத்தத்தினால் உடமை மற்றும் உறவுகளை இழந்து தவித்தவர்கள் அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். சிறுவர், பெண்கள், பெரியவர்கள் என அனைவரும் பசியால் தவித்த நிலையினைக் கடல் கடந்து போனவர்கள் என்னும் நாவலில் காணலாம்.

> "கலங்கிக் கனத்த முகங்களுடன் மனித கூட்டம் ஒன்று அங்கிருந்தது. அடி வாங்கியவர்கள், தப்பி வந்தவர்கள், பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் என்று பல ரகமாக இருந்தார்கள். இவர்களோடு ஒரு ரகமாக சுதந்திரனும் சுமனாவும் சேர்ந்து கொண்டனர். குறைந்தது சுமார் 500 பேர் இருப்பார்கள். இன்று காலை தான் அந்த அகதிமுகாம் திறந்துவைக்கப்பட்டிருந்தது. இன்னும் உணவு சம்பந்தமான விடயங்கள் ஒழுங்கு செய்யப்படவில்லை. குழந்தைகள் பசியால் அழுதன. பெரியவர்கள் பசியால் பசியை விழுங்கிக் கொண்டு இருந்தார்கள். சோகமயமான அந்தச் சூழலுக்குள் வந்த சுமனாவும் சுதந்திரனும் ஒரு மூலையில் ஒதுங்கினர்……" (2011 : 141).

யுத்த காலங்களில் சந்தேகத்தின் பெயரில் மக்களைப் பொலிசார் அடித்துத் துன்புறுத்தினர். குற்றம் செய்யாமலே தமிழ் மக்கள் தண்டிக்கப்பட்டனர். இதனைக் கடல் கடந்து போனவர்கள் என்னும் நாவலில் காணலாம். சுந்தரம் என்னும் கதாபாத்திரத்தின்மீது சுமத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டினைக் காரணமாக வைத்துக் கொண்டு அவனைக் காவல்துறையினர் அடித்துத் துன்புறுத்துவதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

> "வெளியில் பொலிசார் நின்றிருந்தனர். அவன் என்னவென்று விசாரிக்க முன்பே அவனை வளைத்துப் பிடித்துக் குப்புறப் படுத்திக் கைகளைப் பின்னுக்குக் வைத்துக் கட்டினர். அறையின் மூலை முடுக்கெல்லாம் அக்குவேறு ஆணி வேறாகச் சோதிக்கப்பட்டது. யாரோ ஒரு பொலிஸ்காரன் சுவாமிப் படத்தை எறியப் போனபோது, ஏய் அது சுவாமிப்படம் என்று சுத்தினான் சுதந்திரன். சுதந்திரன் கத்தி வாய் மூட முன்னம் அருகில் நின்ற பொலிஸ்காரன் பூட்ஸ் காலால் அவன் வாயில் மிதித்தான். சுதந்திரன் சுருண்டான். சுதந்திரனைத் தள்ளிக்கொண்டு ஜீப்பில் ஏற்றினர். "தெமில் பண்டி" என்று சிங்களத்தில் திட்டினார்கள். கொட்டியாகே யாலுவா (புலியின் நண்பன்) என்றான் ஒருவன். காதுக்குள் நாராசமாக விழுந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கொண்டு பேசாமலிருந்தான் சுதந்திரன். பத்து நிமிடம் ஓடியபின் ஜீப் நின்றது. ஜீப்பில் இருந்து அவனை ஒரு மிருகத்தை இழுப்பது போல் இழுத்து வந்து ஸ்ரேசனுக்குள் தள்ளினர். அங்கிருந்த பொலிஸ்காரரும் அவனைத் தட்டிப் பதம் பார்த்துக் கொண்டனர். சுதந்திரனுக்கு மூட்டெல்லாம் வலித்தது. கடைவாயில் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அந்த ஸ்ரேசனின் இன்ஸ்பெக்டர் வந்தான்….." (2011 : 84).

**புலம்பெயர்தல்**

இன விடுதலைப் போரின் காரணமாக மக்கள் தங்களது இருப்பிடங்களை விடுத்து விரும்பியோ விரும்பாமலோ புலம்பெயர்ந்தனர். இவ்வாறு புலம்பெயர்ந்து செல்லும்

நிகழ்வுகளைத் தயாளனின் நாவல்களில் காணலாம். மு.தயாளனின் நாவல்களுள் ஒன்றான 'சில மனிதர்களும் சில நியாயங்களும்' என்னும் நாவலின் மூலம் யுத்த காலத்தையும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் நிலையினையும் அறிந்துகொள்ளலாம். மக்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தங்களது சொந்த வாழ்விடத்தைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முடிவெடுத்தமையினை இந்நாவல் கூறுகின்றது.

> "திடீரென்று வெடிச்சத்தம். எங்கள் வீட்டின் ஒரு பகுதி பற்றி எரிய ஆரம்பித்தது. குய்யோ முறையோ என்று ஓடினோம். அவரும் தான் ஓடினார். தெய்வாதீனமாக உயிர் தப்பினோமே ஒழிய அந்த உயிர் பயம் எம்மை விட்டு அகலவே இல்லை. அதற்குப் பின் தானே நாட்டை விட்டு வெளியேறுவது என்று முடிவெடுத்தோம்…." (2015: 56).

மு. தயாளன் சில மனிதர்களும் சில நியாயங்களும் எனும் நாவலில் ஆரணியின் சிந்தனையின் ஊடாக ஈழநாட்டில் இடம்பெற்ற பிரச்சினையின் தாக்கங்களை வெளிக்கொண்டு வந்துள்ளார்.

> "நாட்டிலே எவ்வளவு பிரச்சினை? திடீர் திடீரென்று கண்ணிவெடிகள் வெடிக்கும். பல இராணுவத்தினர் மாள்வார்கள். அதைத் தொடர்ந்து எதுவுமே அறியாத அப்பாவி மக்களை இராணுவத்தினர் கொல்வார்கள். இறக்கிற மக்களுக்கு நாங்கள் ஏன் இறக்கிறோம் என்பதே தெரியாமல் இருக்கும். கண்ணிவெடிகள் வைத்தவர்களைக் காண முடியாது. இதுதான் அன்றைய நாடு. நாங்களும் இந்த நெருக்கடிக்குள் தான் வாழ்ந்தோம். நாங்கள் உயிரைப் பிடித்துக்கொண்டு எத்தனை நாள் இருந்திருப்போம்……." (2015 : 87).

ஈழத்தில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னும் நாட்டில் சீரான நிலைமை காணப்படவில்லை. மக்களை விசாரணை என்ற பெயரில் இராணுவத்தினர் பல மாதங்கள் சிறையில் அடைத்துத் துன்பப்படுத்தினர். இதனை சில மனிதர்களும் சில நியாயங்களும் என்னும் நாவலில் காணலாம். இதில் வரும் மகேந்திரன் என்னும் கதாபாத்திரம் ஒரு நீதிபதியாவார். இவர் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டு பின் அவரது செல்வாக்கினைப் பயன்படுத்தி வெளியில் வருகின்றார். ஆனால், அனேகமான தமிழ் மக்கள் விசாரணை முடிந்த பின்னும் விடுவிக்கப்படாமல் சிறையில் இருப்பதனை ஆசிரியர் கூற்றாக வரும் பகுதியில் காணலாம்.

> இதிலே என்னவென்றால் மகேந்திரத்தார் என்றவுடன் இவ்வளவு தடபுடலாக விசயங்கள் நடப்பது போல் சாதாரண தமிழனுக்கும் இப்படி நடக்குமா என்பது கேள்விக்குறியே!!!
>
> இப்படிக் கைதுசெய்யப்பட்ட எத்தனையோ இளைஞர்களும், நடுத்தர வயது கொண்டவர்களும் மாதக் கணக்காகச் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களைப் பற்றி யாருமே அக்கறைப்படுவதில்லை. இவர்கள் வெளியில் வருவதற்கான சாத்தியங்களும் இல்லை. எந்தவித குற்றங்களும் செய்யாமல் கேட்போர் கூறுவதைக் கேட்டுக்கொண்டு பாட்டில் இருந்த சும்மா இளைஞர்களை

அழைத்துப் போய் சித்திரவதை செய்து வேடிக்கை பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றது அரசாங்கம் (2015 : 115).

இந்நாவலில் நாட்டு நிலைமை குறித்து ஆதித்யாவும் மகேந்திரமும் உரையாடும் பொழுது, யுத்தம் முடிந்ததன் பின்னும் நாட்டின் நிலவரம் எவ்வாறு காணப்பட்டதென்பதனை அறிய முடிகின்றது.

> "இன்றைய நாட்டு நிலைமையும் ஒரு காரணம். போர் நடந்த காலத்தை விட இன்றைக்கு உயிருக்கு உத்தரவாதம் கொஞ்சமும் இல்லை. எந்த நேரம் என்ன நடக்குதெண்டு தெரியெல்லை. சட்டம் கொஞ்சமும் இல்லை. ஜனநாயகம் கொஞ்சமும் இல்லை. வெளியிலை போனால் திரும்ப வருவோம் எண்டதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை….. " (2015 : 142).

**முடிவுரை**

ஈழத்தில் இடம்பெற்ற இனப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர். அரசுக்கும் தமிழ் மிதவாத தலைவர்களின் தலைமையில் உருவாகிய இயக்கத்திற்கும் இடையில் காணப்பட்ட அதிகாரப் போட்டியின் காரணமாக அறப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்தது. இதனைத் தயாளன் தனது நாவல்களில் வெளிக்கொண்டு வந்துள்ளார். தமிழ் மக்கள் தங்களது சொத்துக்கள், சொந்தங்கள் என்பவற்றை இழந்து தவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதோடு, சொந்த நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இனப்போரின் காரணமாக தமிழ்ச் சமுதாயம் அனுபவித்த கொடுமைகளைத் தயாளனின் நாவல்களில் காணக்கூடயவாறு உள்ளது. மக்கள் நடமாடுவதற்குப் பயந்தொடுங்கி அல்லல்பட்டதையும், தவறு செய்யாமல் தண்டனை அனுபவித்ததையும், இராணுவத்தினரின் கொடுமைகளுக்கு உள்ளானதையும் மு.தயாளன் தனது நாவல்களில் யதார்த்தமான முறையில் வெளிப்படுத்தியுள்ளார்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

தயாளன், மு., (2011), கடல் கடந்து போனவர்கள், மகுடம் பதிப்பகம், மட்டக்களப்பு.

தயாளன், மு., (2015), சில மனிதர்களும் சில நியாயங்களும், மகுடம் பதிப்பகம், மட்டக்களப்பு.

தயாளன், மு., (2024), கரும்பலகை, மகுடம் பதிப்பகம், மட்டக்களப்பு.

# தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் - ஓர் ஆய்வு

**Alagaraj Abdha Nishan**

Department of Tamil Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

abdhannishan991@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

1960களுக்குப் பின் ஈழத்து இலக்கியப் பரப்பில் அறியப்பட்ட மலையகப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவராக தெளிவத்தை ஜோசப் விளங்குகிறார். தெளிவத்தை ஜோசப்பின் படைப்புகளில் அவரது சிறுகதைகளுக்குத் தனியானதொரு இடமுண்டு. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட இவ் ஆய்வானது, தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் - ஓர் ஆய்வு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவரது சிறுகதைகளை மையமாக வைத்துப் பல ஆய்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. எனினும், அவை மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் குறித்து ஆழமாக ஆய்வு செய்யவில்லை. இந்நிலையில், ஜோசப்பின் சிறுகதைகள் வெளிப்படுத்தும் மலையக மக்கள் வாழ்வியல் அம்சங்களை இவ்வாய்வு வெளிக்கொணர முயல்கிறது. இவ்வாய்வானது விமர்சன அணுகுமுறை, விளக்கமுறை அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை ஆகிய ஆய்வு முறையியல்களைக் கைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் முதலாம் நிலைத்தரவுகளாகவும் இவருடைய சிறுகதைகள் பற்றி வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என்பனவும் மலையகச் சிறுகதை வரலாறு குறித்து வெளிவந்த ஆய்வுகள், விமர்சனங்கள் என்பனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *: மலையகத் தோட்டப்புற மக்கள், கவ்வாத்து, லயம், கணக்கப்பிள்ளை, தோட்டத்துரை.*

**அறிமுகம்**

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மலையக இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள் இன்று அதிகளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய ஆய்வுகளில் தெளிவத்தை ஜோசப்பின் படைப்புக்கள் பற்றிய ஆய்வுகளும் முக்கியமானவையாகும். ஜோசப்பின் சிறுகதைகள் மலையகத் தோட்டப்புற மக்களின் வாழ்வியலை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துகின்றன. மலையகத் தோட்டப்புற மக்களின் தொழில், இருப்பிடம், கொண்டாட்டங்கள், தோட்டத்து நிர்வாகத்தால் ஒடுக்கப்படுகின்ற அடிமை வாழ்வு போன்றனவற்றை, தன் வாழ்வின் அனுபவத்தின் வெளிப்பாடாக கதைகளாகப் பதிவுசெய்திருக்கின்றார். மலையக மக்களின் வாழ்வியலை, ஜோசப் கதையோட்டத்தில் அடையாளப்படுத்துகிறார் என்பதை இவ்வாய்வு ஆராய்கிறது.

**ஆய்வு நோக்கம்**

தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களைக் கதையோட்டத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**இலக்கிய மீளாய்வு**

தெளிவத்தை ஜோசப் 1950களிலிருந்து படைப்புக்களை எழுதிக்கொண்டிருக்கின்றார். இவர் மலையக மக்களின் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு எழுதிய சிறுகதைகளைப் பற்றிப் பலர் அறிமுகம் செய்திருக்கின்றனர். அதேவேளை, ஜோசப்பினுடைய சிறுகதைகள் பற்றிய ஒருசில ஆய்வுகளும் வெளிவந்துள்ளன.

2007 ஆம் ஆண்டு வெளிவந்த "மலையக இலக்கிய கர்த்தாக்கள்" என்ற நூலில் "மலையக மனிதர்கள் : தெளிவத்தை ஜோசப்" என்ற தலைப்பில் தெளிவத்தையின் படைப்புக்கள் பற்றி என். செல்வராஜா பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார். மலையக மக்களின் வாழ்வியலை இலக்கியமாக்கி தமிழ் உலகில் மலையக இலக்கியம் என்றொரு ஈழத்து இலக்கியப் பரப்பினை உருவாக்கிய மண்ணின் மைந்தர்களுள் தெளிவத்தை ஜோசப் முக்கியமானவர். ஜோசப்பின் படைப்புக்களை ஆராய்ந்த இந்நூலாசிரியர், இவரின் படைப்புக்கள் மலையக மக்களின் வாழ்வியலை பிரதிபலித்திருக்கின்றது என்றார்.

கலை இலக்கிய சஞ்சிகையான ஞானம் சஞ்சிகை, 2010 ஆம் ஆண்டு மே மாதம் "தெளிவத்தை ஜோசப் பவளமலர்" என்ற சிறப்பிதழை வெளியிட்டது. இவ்விதழில் ஜோசப் பற்றியும் அவரின் படைப்புக்கள் பற்றியும் பல கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றன. "தெளிவத்தை ஜோசப் எனும் படைப்பாளி" என்ற தலைப்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஜோசப்பின் படைப்புக்கள் குறித்துக் குறிப்பிடும் பின்வரும் கருத்து குறிப்பிடத்தக்கது. "தெளிவத்தை ஜோசப்பின் எழுத்துக்கள் இல்லையேல் மலையகத்து மக்களின் வாழ்க்கை பற்றிய எமது அறிவு குறைவுபட்டதாகவேயிருக்கும். உண்மையில் தெளிவத்தை ஜோசப்பின் மிக முக்கியமான சாதனை சராசரி மலையகத் தமிழன் ஒருவரின் உளப்பாங்கையும் கண்ணோட்டத்தையும் சித்திரிப்பதாகும்."

2014 ஆம் ஆண்டு மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தினால் "தெளிவத்தை ஜோசப் அமுத விழாச் சிறப்பிதழ்" வெளியிடப்பட்டது. இதழில் "வயது நீட்சியினும் குறைந்து செல்லும் விதியைச் சந்திக்காதவர்" என்ற தலைப்பில், ஒடுக்குமுறையின் குறியீடாக அமையும் லயன் வாழ்வின் அனுபவச் சிதறல்களின் நுண் அலகுகளையும் சமூக மாற்றத்தின் அழுத்த துணிக்கைகளைப் புனைவாகவும், புனைவுவழி ஈட்டிகளாகவும் தருவதில் ஜோசப் தனித்துவமானவர் என இவரின் படைப்புக்கள் பற்றி பேராசிரியர் சபா ஜெயராசா குறிப்பிட்டிருக்கின்றார். மேற்சொன்ன இதழில் "மலையகத்தின் இமயம்" என்கின்ற தலைப்பில், தெளிவத்தை ஜோசப் போன்ற மலையக எழுத்தாளர்கள் மலையக வாழ்க்கைச் சூழலில் நிகழும்

அவலங்களை மறைத்து வைத்திருக்கும் மூடுதிரையினைக் கிழித்தெறிந்துவிட்டு அப்பிரச்சினைகளைத் தங்கள் படைப்புக்களினூடாக வெளிக்கொணர்ந்திருக்கின்றனர் என சுப்பையா கமலதாஸ் குறிப்பிட்டிருக்கின்றார்.

தெளிவத்தை ஜோசப்பின் படைப்புக்களை நன்கு ஆராய்ந்த ஆய்வாளர்களின் கருத்துக்களாகவே மேற்சொன்ன கருத்துக்கள் காணப்படுகின்றன. ஜோசப்பின் படைப்புக்கள் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன என்பதைக் குறிப்பதான மேலோட்டமான ஆய்வு முடிவுகள் வெளிவந்திருக்கின்றனவே ஒழிய, இவருடைய சிறுகதைகளை அடிப்டையாகக் கொண்டு மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் பற்றிய தனியான ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டாக இவ்வாய்வு இடம்பெறுகிறது.

இவர் எழுத ஆரம்பித்ததிலிருந்து இன்று 75 ஆண்டுகள் கடந்துவிட்டன. சமூகமானது காலத்திற்கு காலம் பல மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டே வளர்ந்து வருகின்றது. மலையக சமூகமும் அதற்கு விதிவிலக்கல்ல. ஜோசப் தன்னுடைய காலத்தில் மலையகத்தில் காணப்பட்ட வாழ்வியல் அம்சங்களில் கண்டவற்றையும் அக்காலத்தல் தான் அனுபவித்தவற்றையும் யதார்த்த பூர்வமாக சிறுகதைகளில் வெளிப்படுத்தினார். காலம் மாற மாற அவ்வாழ்வியல் அம்சங்களில் ஒருசில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவர் குறிப்பிட்ட சில வாழ்வியல் அம்சங்கள் இன்று மறைந்தும் போய்விட்டன. மறைந்துபோன வாழ்வியல் அம்சங்களையும் மறைந்துகொண்டிருக்கின்ற வாழ்வியல் அம்சங்களையும் பதிவுசெய்ய வேண்டியது ஆய்வாளரின் கடமையாகும். இவர் மலையக மக்களின் நடைமுறை வாழ்விலுள்ள தனித்துவமான ஒருசில வாழ்வியல் அம்சங்கள் இழையோட கதைசொல்லியிருக்கின்றார். இதனை ஆய்வு செய்கின்ற வகையிலான எவ்வித ஆழமான ஆய்வுகளும் இதுவரை மேற்கொள்ளப்படாததால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

பகுப்பாய்வு மற்றும் விளக்கமுறை அணுகுமுறை அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்காக முதனிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன ஆய்வு மூலங்களாக பயன்படுத்தப்படுகின்றன. முதனிலைத் தரவுகளாக மீன்கள், தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலைத் தரவுகளாக தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் பற்றிச் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்த கட்டுரைகளும் மலையக மக்களின் வாழ்வியல், மலையகச் சிறுகதை வரலாறு குறித்து வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

**தெளிவத்தை ஜோசப் - ஓர் அறிமுகம்**

மலையகப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவர் தெளிவத்தை ஜோசப். தெளிவத்தை ஜோசப்பின் இயர்பெயர் சந்தனசாமி ஜோசப். இலங்கையின் மலையகப் பகுதியைச் சேர்ந்த பதுளை மாவட்டம் ஊவாக்கட்டவளை என்ற ஊரில் 1934 பெப்ரவரி 16 ஆம் திகதி ஜோசப் பிறந்தார். கும்பகோணம் லிட்டில் பிளவர் உயர்நிலைப் பள்ளியில் மூன்று ஆண்டுகள் படித்தார். பின்னர் இலங்கை திரும்பி பதுளை சென்பீட்டர்ஸ் கல்லூரியால் கல்வியைத் தொடர்ந்தார்.

ஜோசப் முதலில் தெளிவத்தை என்னும் தோட்டத்திலுள்ள பாடசாலையில் ஆசிரியராகவும், தெளிவத்தைத் தோட்டத்க் காரியாலயத்தில் எழுதுவினைஞராகவும் பணியாற்றினார். தெளிவத்தைத் தோட்டத்தில் முதன் முதலில் பணியாற்றியதால் அத்தோட்டத்தின் பற்றுக் காரணமாக தெளிவத்தை என்ற பெயரை தனக்கு அடைமொழியாக்கிக் கொண்டார். தெளிவத்தை என்பது ஆயிரம் ஏக்கருக்கு மேல் பரப்புள்ள ஒரு தோட்டத்தின் பெயர்.

தெளிவத்தை ஜோசப் 50களின் தொடக்கத்திலிருந்து புனைகதைகளையும் கட்டுரைகளையும் எழுதிவந்தாலும், 1960 களுக்குப் பின்தான் இலக்கிய உலகில் அறியப்பட்டார். ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதினார். பிற்பட்ட காலங்களில் குறுநாவல், நாவல், விமர்சனம், ஆய்வுக் கட்டுரைகள், தொலைக்காட்சி வானொலி நாடகம், திரைப்படக் கதை எனப் பல தளங்களில் தடம்பதித்தார். இலங்கையின் மலையகம் பற்றி அறிய வேண்டுமென்றால் இவரது படைப்புக்களைப் படித்தால் போதும் என்கின்ற அளவுக்கு அந்த மக்களின் சமூக அரசியல், பொருளாதார நிலைகளை இவரது படைப்புக்கள் எடுத்துக்கூறுகின்றன.

ஜோசப், விமர்சனம், ஆய்வுக் கட்டுரைகள், நாடகங்கள் போன்றவற்றை எழுதியிருந்தாலும், இலக்கிய உலகில் தமது புனைகதைகளின் மூலமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றார். 1960களில் இலக்கியப் பயணத்தை தொடங்கிய இவர், 66 சிறுகதைகள் உட்பட சில நாவல்களையும் எழுதியுள்ளார். காலங்கள் காவதில்லை (1974 - நாவல்), நாமிருக்கும் நாடே (1979 - சிறுகதைத் தொகுப்பு), பாலாயி (1997 - மூன்று குறுநாவல்கள்), குடைநிழல் (2010 - நாவல்), மீன்கள் (2013 - சிறுகதைத் தொகுப்பு) ஆகியவையே அவருடைய படைப்புக்களாகும்.

தெளிவத்தை ஜோசப்பின் 'மீன்கள்', 'தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள்' ஆகிய சிறுகதைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகிறது.

**மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள்**

ஒரு சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களில் தொழில் என்பது முக்கியமானது. தொழிலானது சமுதாயத்தின் அனைத்தையும் தீர்மானிக்கும் ஒரு கருவியாக அமைகிறது. மலையக மக்களின் பிரதான தொழிலாக கொழுந்து பறித்தலும், அத்தொழிலோடு கூடிய கவ்வாத்து வெட்டுதல், கான் வெட்டுதல், தேயிலைச் செடிகளுக்கு மருந்து தெளித்தல் போன்ற

தொழில்களும் காணப்படுகின்றன. வெயில், மழை என்று எதையும் பொருட்படுத்தாது தேயிலைசார் தொழில்களை மிகவும் கஷ்டப்பட்டுச் செய்து வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை மலையக மக்களுக்கு உண்டு.

தேயிலைசார் தொழில்களில் கவ்வாத்து வெட்டுதல் என்பது பிரதானமானதொரு தொழில். கவ்வாத்து வெட்டும் தொழிலைப் பெரும்பாலும் ஆண்களே செய்வார்கள். ஆண்கள் தமது சகல பலத்தையும் கொடுத்து இத்தொழிலைச் செய்வர். ஆண்கள் வெயில், மழை என்று பாராது கவ்வாத்து வெட்ட வேண்டும். தெளிவத்தை ஜோசப் 'ஒரு புதிய உயிர்' என்ற கதையை மூக்கையா என்ற கதாப்பாத்திரம் கவ்வாத்து வெட்டும் தொழிலைச் செய்து கொண்டிருக்கும் வகையில் ஆரம்பிக்கின்றார்.

வெட்டி இழுத்த தேயிலை வாது கையில் இருக்கவே கீழே பார்த்தான் மூக்கையா.

வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. தலையை நிமிர்த்தி சூரியனைப் பார்த்தான். ஒரு வினாடி வானவில்லாய் வர்ணம் காட்டிய சூரிய கதிர்களிடமிருந்து பார்வையை ஒதுக்கிக் கொண்டான்.

மணி பதினொன்றுக்கு கொஞ்சம் கூடக்குறைய இருக்கலாம்.

ஏறு வெயில்..! வெட்டுவது கவ்வாத்து... வியர்த்துக் கொட்டியது.

கருந்தேகத்தின் வியர்வை பிசுக்கில் பட்டுத் தெரிப்பது போலவே வலது கை பிடித்திருந்த கத்தியின் கூர்மையிலும் பட்டு தெறிக்கிறது சூரியக்கதிர், இரண்டுமே இரும்புதான்.

................................

பாதையில் நடக்கும் போதே 'சொர்ரென்று' ஊற்றும் தண்ணீரின் ஓசை குளிர்ச்சியுடன் ஓடிவந்து காதில் பாய்கிறது.

வாங்கியில் குத்தி வைத்திருந்த இரண்டு பெரிய தேயிலை இலை! இலைதுணியுள் 'சர்ரென்று' ஊற்றிய நீர் பளிங்குபோல் மின்னியது. நாலுகை நிரப்பிக் குடித்தவன். இரண்டு கை நிரப்பி தோளுக்கு மேலாக முதுகில் விசிறிக் கொண்டான். பிறகும் குடித்தான்.

நீரொழுகும் முகத்துடன் நிறையில் வந்து நின்றவனுக்கு புதிதாக ஒரு தெம்பு வந்திருந்தது.

கடும் வெயிலின் தாக்கத்திலும், அதனையும் தாங்கிக் கொண்டு, வியர்வை கொட்ட தாகத்தை மட்டும் போக்கிக்கொண்டு கத்தியைப் பிடித்து ஆண்கள் தேயிலை மலையில் கவ்வாத்து வெட்டுதலென்பது பிரதானமானதொரு தொழில்சார் அம்சம். இதனையே ஜோசப் ஒரு புதிய உயிர் என்ற கதையில் மூக்கையா என்னும் கதாப்பாத்திரத்தைக் கொண்டு எடுத்துக்காட்டியிருக்கிறார்.

தேயிலை பறித்தல் தொழிலில் அதிகம் ஈடுபடுபவர்கள் பெண்களேயாவர். குடும்பச்சுமை, வாழ்வாதார நெருக்கடி போன்றவற்றையும் கடந்து பெண்கள் தேயிலை பறிக்கும் தொழிலைச் செய்து வருகின்றனர். ஆண்களும் தேயிலை பறித்தாலும், எண்ணிக்கையல் அதிகமாக பெண்களே தேயிலை பறிக்கின்றனர். காலங்காலமாக பெண்களே கொழுந்து பறித்து வருவதால் அது பெண்களின் தொழிலாகிவிட்டது. குமரிப் பெண்கள் தொடங்கி கிழவிகள் வரை அனைவரும் கொழுந்துபறிப்பர். வெயில், மழை என்று பாராது இவர்கள் வேலையை செய்ய வேண்டும். கட்டாயத்தின் பேரில் இவர்கள் நெருக்கடிகளையும் தாங்கிக்கொண்டு வேலை செய்ய வேண்டிய நிலையே அன்றுமுதல் இன்றுவரை காணப்படுகின்றது. தேயிலைத் தோட்ட நிர்வாகிகளால் (தோட்டத்துத்துரை, கணக்குப்பிள்ளை, கங்காணி) இவர்கள் அடிமைப்படுத்தப்பட்டும், உரிமைகள் மறுக்கப்பட்டும் தொழில் செய்கின்றனர். தொழில் சார்ந்த வகையில் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் அவர்களின் வாழ்வியல் அம்சங்களாக பிரதிபலிக்கின்றன.

தெளிவத்தை ஜோசப் தனது சிறுகதைகளில் தேயிலைத் தொழில் சார்ந்து மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை அவர்களின் வாழ்வியல் அம்சங்களாக எடுத்துக்காட்ட முயன்றிருக்கின்றார். ‘கத்தியின்றி இரத்தமின்றி’ என்ற சிறுகதையில் ஓர் பிரச்சினையை எடுத்துக்காட்டியுள்ளார்.

> வானம் பொத்துக் கொண்டு விட்டதோ என்று ஐயுறும் அளவுக்கு அடைமழை பெய்தது. நோவா காலத்து நாற்பது நாள் மழையும் ஒரே நாளில் பெய்து முடித்துவிட வேண்டும் என்கின்ற வகையில் மழை பெய்தது. கூடையும் தலையுமாக கொழுந்தெடுக்க மலையேறியவர்கள் குன்னிப்போய் மரத்தடிக்கு மரத்தடி நிற்கின்றனர். தேயிலை மலைகளுக்கு இடையில் காணப்படும் சவுக்கு மரங்களிலிருந்து கிளைகள் முறிந்து விழுகின்றன. இதனைக் கண்ட கங்கானி “ஏய் புள்ளங்களா ஒருத்தரும் மரத்தடியில் நிக்காதிங்க, வாதேதும் புண்டு விழுந்தாலும் விழும் என்றார்.”
>
> கையை நீட்டி கொழுந்தெடுக்க முடியாவிட்டாலும் பெயருக்குக்கூட மலையில் நிற்க முடியவில்லை. ஊன்றி நிற்கும் கால்களும், ஊஞ்சலாடித் தொங்கும் கைகளும் உணர்விழந்து சுரணை கெட்டுப்போகும் அளவிற்கு மழை பெய்துகொண்டிருந்தது.

மழை பெய்து கொண்டிருக்கின்ற வேளையில், தோட்டத்துத் தலைவர் துரையை சந்திக்கச் செல்கின்றார். துரை, தனக்கான அறையில் கம்பளிச்சட்டை அணிந்து கதகதப்புடன் உட்கார்ந்திருக்கின்றார். அடைமழை பெய்வதால் இன்று வேலை செய்ய முடியாது. அதனால் வேலையை விடவேண்டுமென்று தோட்டத்து தலைவர் துரையை கேட்டுக் கொண்டார். அப்போது சம்பளம் பற்றிப் பேசுகிறார். இன்று வேலையை விட்டால் இன்றைய சம்பளத்துக்கு என்ன செய்வதென்று துரை கேட்க “முழுச்சம்பளம் குடுக்கனுங்க. தோட்டத்துக்கே உழச்ச ஆளுங்கதானே. மழை இப்படி பேயாட்டி முழு நேரம் வேலை செஞ்சுருப்பாங்கதானே...” என்று தலைவர் பதில் கொடுத்தார். துரையும் அரைமணி நேரம் பார்த்துவிட்டு மழை விடாவிட்டால்

கொழுந்தை நிறுத்திட்டு வேலையை விடச்சொல்கிறார். இவ்வாறு தலைவரிடம் துரை ஒருவாரு சொல்ல கணக்குப்பிள்ளையிடம் வேறுவிதமாகச் சொல்லுகிறார்.

இப்போதே வேலையை நிறுத்தி முழுப்பேர் கேட்கிறார்கள், நீ எப்படியாவது பன்னிரண்டு மணி வரை கொழுந்தெடுக்கப்பார், அப்போதுதான் பாதிக்குப் பாதியாவது தேறும் என்று கணக்குப்பிள்ளையிடம் கூறுகிறார் துரை. இவ்வாறு துரை கணக்குப்பிள்ளையிடமும், தோட்டத்துத் தலைவரிடமும் ஒவ்வொரு விதமாகக் கூற இருவருக்குமிடையில் வாக்குவாதம் நடைபெறுகிறது.

"வேலை செய்யுற ஆளுகளை மலையில் இருந்து இறங்கச் சொல்ல நீ யார்...? தொரையே சொல்லிருந்தாலும்கூட நீ வந்து என்கிட்டதான் சொல்லிருக்கணும்." என்று கணக்குப்பிள்ளை தோட்டத்து தலைவரிடம் வாக்குவாதம் செய்கின்றார். தொடர்ந்து தோட்டத்துத் தலைவர் "இங்க பாருங்கையா ஒரு பெண் காலை காட்டுகிறாள். நாட்டியக்காரி சலங்கை கட்டியது போல் விரல் பருமனில் ரத்தம் குடித்த அட்டைகள் தொங்கிக் கொண்டிந்தன. தலைவர் மக்களுக்குச் சார்பாக பேசியும் அதனை கணக்குப்பிள்ளை கண்டுகொள்ளவில்லை. அனைத்து நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையில் சுயமாக முடிவு எடுக்க முடியாமல் நிற்பவர்கள் தோட்டத்தொழிலாளிகலே. அடை மழையிலும், அட்டைக் கடியிலும் துன்பத்தை அனுபவித்து உயிர் போனாலும் வேலை செய்ய வேண்டிய நிலை. இவர்களின் உரிமை பறிக்கப்படுகிறது. இதுவரைக் காலமும் மலையகத் தோட்டத் தொழிலாளிகள் தோட்ட அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டே இருக்க வேண்டிய வாழ்வியல் நிலைதான் காணப்படுகிறது. இவ்வாறு அடிமைப்படுத்தப்பட்டுக் கட்டாயத்தின் பேரில் தோட்டத் தொழிலைச் செய்ய வேண்டியது மலையகத் தோட்டத் தொழிலாளிகளின் வாழ்வியலில் முக்கியமான அம்சமாக காணப்படுகின்றது. தோட்டத்திலுள்ள தோட்டத்துத் தலைவர்கள் எப்போதுமே தொழிலாளிகளுக்குச் சார்பாகத்தான் இருப்பார்கள் அல்லது குரல் கொடுப்பார்கள். அதைப் போலவேதான் தோட்டத் தொழிலாளர்ளும் தோட்டத்துத் தலைவரையே நம்பியிருப்பார்கள். இவ்வாறு, தோட்டத்துத் தலைவருக்கும், தோட்டத் தொழிலாளிகளுக்கும் இடையிலான ஐக்கியமான உறவையும் இக்கதையில் எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

தோட்டத் தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும்போது, ஒரு சில தொழிலாளர்களின் வீடுகளிலிருந்து தேநீர் இடைவேளைகளிலும் மதிய உணவு வேளைகளிலும் சாப்பாடும், தேநீரும் தத்தமது வீடுகளிலுள்ள பிள்ளைகள் கொண்டு வந்து கொடுப்பது வழக்கமாயிருந்தது. காலையில் அரக்கப் பறக்க வேலைக்கு ஓடும் அவசர நேரங்களில் தோட்டத் தொழிலாளிகளால் உணவு எடுத்துக்கொண்டு செல்வது கடினம். இதனால் தமது வீடுகளிலிருக்கும் பிள்ளைகளிடம் சாப்பாட்டு வேளைகளிலும், தேநீர் இடைவேளையிலும் சாப்பாடு அல்லது தேநீர் கொண்டுவருமாறு சொல்லிவிட்டு சென்று விடுவர். பிள்ளைகளும் நேரத்திற்கு சாப்பாடு, தேநீர் கொண்டு செல்வர். இது இவர்களின் தோட்ட தொழிலில் ஓர் அம்சமாக இருந்தது.

'ஒரு புதிய உயிர்' என்ற கதையில் மூக்கையா என்ற கதாப்பாத்திரம் (தந்தை) தேயிலை மலையில் கவ்வாத்து வேலை செய்வதும், அவரின் 'சிங்காரம்' என்ற பிள்ளை தேயிலை மலைக்கு மூக்கையாவுக்குத் தேநீர் இடைவேளையில் தேநீர் கொடுக்கப் போவதற்குத் தயாராவதும் சிங்காரத்திற்கு காலில் போத்தலோடு குத்தியதால் அன்று அவனால் தேநீர் கொண்டு செல்ல முடியாமற் போவதுமாக கதை அமைகிறது. சிங்காரத்திற்குப் போத்தலோடு குத்திய சங்கதி மூக்கையாவுக்குத் தெரியாது. ஆகையால், அவன் தேநீர் இடைவேளையில் தேநீருக்காகக் காத்துக்கொண்டு தாகத்தோடு கவ்வாத்து வெட்டுகின்ற வேளையில் மற்ற சிறுவர்கள் தத்தமது வீட்டிலுள்ளோருக்குத் தேநீர் கொண்டு வருகிறார்கள். சிங்காரம் மட்டும் வரவில்லை. மூக்கையா தேநீருக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றான்.

> முட்டையுடன் ஊரும் சிற்றெரும்புக் கூட்டம்போல் தண்ணீர்ப் பையுடன் ஏறிக்கொண்டிருந்தனர் சிறுவர்கள்.
>
> மூக்கையாவின் மூத்தவன் சிங்காரமும் அவர்களுடன் ஏறிக்கொண்டிருப்பான்… போத்தலில் தேத்தண்ணீருடன்.
>
> தேனீர் தேவையில்லை. வெறும் பச்சைத் தண்ணீர் கிடைத்தாலே போதும். அந்த நேரத்துக்கு சுவர்க்கம் போலிருக்கும்.
>
> மலைமேல் நிற்பதால் சூரியனுக்கு அருகில் வந்துவிட்டதைப் போல் சுட்டுப் பொசுக்குகிறது வெயில்.
>
> நாவின் வரட்சியும், வேலையின் களைப்பும் அவனை மாறி மாறி சோர்வடையச் செய்தாலும், "சிங்காரம் தண்ணீருடன் வருவான்" என்னும் நினைவின் துணிவில் இன்னும் நாலு மரம் வெட்டி விட்டான்.
>
> "இன்னுமா ஏறி வர்றான்…" என்னும் சந்தேகத்துடன் மீண்டும் ஒரு முறை கீழே பார்த்தான்.
>
> மலைக்குத் தண்ணீர் கொண்டு வந்த பையன்கள் திரும்பிப் போய்க்கொண்டிருந்தனர்.

மேற்சொன்ன பகுதியைப் பார்க்கையில் தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகள், தமது பெற்றோருக்குத் தேநீர் அல்லது உணவு கொண்டு செல்வது வழக்கமாயிருந்தது என்பதை அறிகின்றோம். இன்றைய காலகட்டத்தில் சிறுவர்கள் மலையில் வேலை செய்யும் தமது பெற்றோருக்கு இவ்வாறு உணவு, தேநீர் கொண்டு செல்லும் வழக்கம் குறைந்துவிட்டது. ஒருசில வீடுகளில் மட்டுமே இந்த அம்சம் காணப்படுகின்றது.

மலையக மக்களின் வாழ்க்கையில் அவர்களின் வாழ்விடம் முக்கியமானது. மலையக மக்கள் இலங்கைக்கு வந்ததிலிருந்து லயன் குடியிருப்புக்களிலே வாழ்ந்து வந்தனர். லயத்து வாழ்க்கை ஆரம்ப காலங்களில் நன்றாக இருந்தாலும் காலம் மாற மாற அவ்வாழ்க்கை சிரமத்தையே தந்தது. சிறுபிள்கைகள் வளர வளர வீட்டில் இடமில்லாத பிரச்சினை ஏற்படுகின்றது. மழைக்காலங்களில் பாரிய பாதிப்புக்களும் ஏற்படும். பெண்பிள்ளைகள்

வளர்ந்தால் குமர்ப் பருவத்தில் வீடுகளில் தனியுரிமை (Praivacy) இன்றி அல்லற்படும் தன்மையும் காணப்படுகிறது.

மலையகத்தில் ஒவ்வொரு லயத்துக்கும் காம்பிராக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பெயரும் காணப்படுகின்றன. பன்னண்டாம் காம்பிரா லயம், ஆறு காம்பிரா லயம், நாற்பதாங் காம்பிரா லயம், எட்டாம் காம்பிரா லயம் என்கின்ற வகையில் லயங்களுக்குப் பெயர் வைக்கும் மரபும் மலையகத்தில் காணப்படுகின்றது. 'மீன்கள்' என்னும் கதையில் லயத்து வாழ்க்கையின் வாழ்வியல் முறையைக் கூற முயல்கிறார், ஜோசப். மீன்கள் கதையில் ஆறு காம்பிரா லயம் என்னும் பெயரில் அமைந்த லயம் பற்றிக்கூறி, லயத்தில் வாழும் ஓர் சாதாரண குடும்பத்தின் வாழ்வியல் முறையைக் காட்டுகிறார்.

மீன்கள் சிறுகதையில் வரும் பிரதான கதைமாந்தர் ஆறுகாம்பிரா லயத்துக்கு வந்து இருபது வருடங்கள். ஆரம்பத்தில் அவரது மூன்று பிள்ளைகளும், மனைவியுமாக ஐந்து பேர். பிள்ளைகள் சிறுவர்கள் ஆகையினால் ஆரம்பத்தில் லயத்துக் காம்பிராக்கள் போதுமானதாக இருந்தது. பிள்ளைகள் வளர வளர அவ்வாழ்க்கை சிரமத்தையே தந்தது. இரண்டு பெண்பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு ஒரு குடும்பத் தலைவர் படும் வேதனையையும் குழப்பத்தையும் இச்சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

> அந்த ஆறு காம்பிரா லயத்தின் மூன்றாவது காம்பிராவுக்குள் அவன் பிரவேசம் செய்து ஏறத்தாழ இருபது வருடம் இருக்கும். அப்போது அவனுடைய மனைவியும் மூன்று பிள்ளைகளுமாக ஐந்து பேர்களுக்கு அந்த ஒரு காம்பிரா போதுமானதாக இருந்தது.
>
> நான்கு சுவர் உள்ள அந்தச் சதுரத்துக்குள் அடுப்பைப் போட்டு 'இது குசினி' என்று ஒரு பகுதியை ஒதுக்கிவிட்டு மிஞ்சியிருக்கும் முக்கால் அறைக்குள் மூன்று பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு அவைகள் கண்டும் காணாமலும் சம்சாரம் பண்ணி இன்னும் மூன்றைப் பெற்றுக்கொண்டது வரை எல்லாம் அந்த ஒரே காம்பிராதான்.
>
> அவனும் எத்தனையோ தடவை ஆபீசுக்குப்போய் துரையிடம் காலில் விழாக்குறையாகக் கெஞ்சியும் சண்டை போட்டும் பார்த்துவிட்டான், தனக்கு இன்னொரு காம்பிரா வேண்டுமென்று.
>
> பகல் வேளைகளில் வீடு இருக்கிறதா இல்லையா என்ற பிரச்சனையே கிடையாது. எல்லாத் தொல்லைகளும் இரவில் தான். அத்தனையையும் படுக்கவைத்தாக வேண்டுமே! கைகால் முளைத்துவிட்ட பிள்ளைகள் என்றாலும், இட நெருக்கடி என்று வெளியே எங்கேயாவது போய் சுருட்டிக்கொள்ளும். முளைக்கும் மீசையை நாசுக்காக நீவிவிட்டபடி படுக்கையும் தானுமாக நடந்துவிடுகிறானே மூத்த பையன், நண்பனுடன் படுத்துக் கொள்ளுகிறேன் என்று. அதேபோல் இந்தச் சின்னஞ் சிறுசுகள் எங்கே போகும்?
>
> வீடு வளரவில்லை என்பதற்காகப் பிள்ளைகளும் வளராமல் இருந்துவிடுவார்களா? அதுவும் பெண் பிள்ளைகள்!

“பெண் வளர்ச்சி பேய் வளர்ச்சி என்பார்கள்” பார்த்துக் கொண்டிருக்கும்போதே வளர்ந்துவிடுவார்கள்.

இவன் வீட்டிலும் இரண்டு வளர்ந்துபோய் இருக்கின்றதே. அது எங்கே போய் படுத்துக்கொள்ளும்.

மூத்த பையனைத் தவிர மற்றது அத்தனையும் அந்த முக்கால் அறைக்குள் “ஒண்ணடிமண்ணடியாக” உருள வேண்டியதுதான். இந்த லயப் பிரச்சனை பெரும் தலை வேதனையாக உருமாறிக்கொண்டு வருகிறது என்று கண்டவுடன் துரை நைசாக நழுவிக்கொண்டார்.

மலையக மக்கள் பெருங் கொண்டாட்டமாக கொண்டாடும் பண்டிகை தீபாவளிப் பண்டிகையாகும். இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட, மலையகத்தில் வெகு விமர்சையாக தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும். மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களில் தீபாவளிப் பண்டிகையானது சிறப்பானதும் தவிர்க்க முடியாததுமாய் காணப்படுகின்றது. மலையகத்தின் லயத்தில் வசிக்கும் மக்கள் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகையை ‘மனிதர்கள் நல்லவர்கள்’ என்ற கதையில் கதையோட்டத்தில், சுருக்கமாக விபரித்துள்ளார் தெளிவத்தை ஜோசப். கதையாசியர் விபரித்திருக்கும் தன்ப் பார்த்தாலே மலையக லயன் குடியருப்பு வாசிகளின் கொண்டாட்டம் எவ்வாறு அமையுமென்பதை அறிந்துக்கொள்ளலாம்.

இன்று தீபாவளி.

கிழக்கு வெளுக்கும் முன்பதாகவே தோட்டம் வெளுத்துத் கொள்கிறது. லயங்கள் வெளிச்சம் காட்டுகின்றன. விடியும் முன் குளித்துவிட வேண்டும் என்னும் வேகம் தலையில் தன்னீரை அள்ளி ஊற்றிக்கொள்ளும் அவசரத்தில் தெரிகின்றது.

லயத்தின் ஒவ்வொரு காம்பிராவுக்கு முன்னும் ஒவ்வொருவர் அல்லது இரண்டுபேர் குளித்துக்கொண்டிருக்கின்றனர்.

குளிருக்குப் பயந்தவர்கள் அல்லது வாளி வாளியாகத் தண்ணீரைச் சூடாக்கிக் கொள்ளப் போதுமான அளவிற்கு விறகு வைத்திருக்க வசதியுள்ளோர் தவிர்த்த மற்றவர்கள் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டு வேக வேகமாகத் தண்ணீரை மொண்டு ஊற்றிக்கொள்கின்றனர்.

சுட்டு வைத்த பலகாரம், வாங்கி வைத்த பட்டாசுக்கட்டு ஆகியவைகளை நாளைக்கு நாளைக்கு என்று நேற்றுவரை எதிர்ப்பார்த்த சிறுசுகளுக்குத் தூக்கமா வரும்.

தட்டித்தட்டி எழுப்பினாலும் சுருண்டு சுருண்டு படுப்பவர்கள் இன்று வெளிச்சம் வரும் முன்பே எழுந்துவிட்டனர்.

ஆளொன்றும், கொள்ளிக்கட்டை ஒன்றும் பட்டாசுக்கட்டு ஒன்றுமாக வெளியே வந்து "லைசன்" கல்லில் அமர்கின்றனர்.

பெற்றவர்கள் குளித்து முடிந்து பிள்ளைகளை ஏசிப்பேசி இழுத்துக் குளிப்பாட்டி முடிப்பதற்குள் நன்றாக விடிந்து விடுகின்றது.

புதுப்புது சட்டைகள், அழகழகான பூப்போட்ட கவுன்கள், பாவாடைகள், தலை அலங்காரங்கள் இத்தியாதிகளுடன் சின்னஞ் சிறுசுகள் பட்டுப் பூச்சிகளாய் திரிகின்றனர்.

ஒரு கடி கடித்துவிட்டு பனியாராங்கள் வீசப்படுகின்றன. லயத்து நாய்கள் படு வேட்டைதான்.

மலையகத் தோட்டத்து லயத்துவாசிகளின் தீபாவளிக் கொண்டாட்டம் எவ்வாறு இருக்குமென்பதைக் கதையாசிரியர் மேற்சொன்னவாறு விவரித்துள்ளார். தீபாவளிக் கொண்டாட்டம் மலையக மக்களின் வாழ்வியலோடு இணைந்தது. இந்த வாழ்வியலை மலையக லயத்து மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர் என்பதை லயத்துவாசிகளின் வாழ்வியலாக காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மலையகத்தின் லயங்களுக்குத் திருவிழாக் காலங்களிலும் ஏனைய சிறப்புக் காலங்களிலும் வெள்ளையடிப்பது வழக்கம். தோட்டத்து நிர்வாகத்தால் லயங்களுக்கு வருடத்திற்கொருமுறை அல்லது விசேட காலங்களில் வெள்ளையடிக்கப்படும். சுண்ணாம்பு, அதனைப் பூசுவதற்கான ஆட்கள் அனைத்தும் தோட்ட நிர்வாகத்தாலேயே கொடுக்கப்படும். இவ்வாறு தோட்டத்து நிர்வாகத்தால் லயங்களுக்கு வெள்ளையடிக்கும் முறை இவர்களிடம் காணப்பட்டதை ஜோசப்பின் சிறுகதையில் காணலாம். தெளிவத்தை ஜோசப்பின் 'சிலுவை' என்ற சிறுகதையில் "ஆடிப் பூசை நேரத்துல லயக்காட்டுக்கு வெள்ளை அடிக்கயிலதான் அடிக்கணும்." என்றவாறு வரும் வரிகளின் மூலம் இந்த அம்சத்தைக் காணலாம். இது தோட்ட நிர்வாகத்தால் இவர்களுக்குக் கிடைக்கும் சலுகையாகும்.

மலையக மக்கள் தங்கள் வீட்டின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் வெள்ளைமண் பூசி, மெழுகுவது மற்றுமோர் வாழ்வியல் அம்சமாகும். தோட்டத்து வாங்கிகளிலே இந்த வெள்ளைமண் காணப்படும். எல்லா வாங்கிகளிலுமன்றி, குறிப்பிட்ட சில வாங்கிகளிலேதான் வெள்ளைமண் காணப்படும். வெள்ளை மண்ணைக் கொண்டுவந்து வீட்டின் முன் தரைகளுக்கும் மண் சுவர்களுக்கும் பூசி மெழுகுவர். குறிப்பிட்ட வெள்ளைமண் இருக்கும் இடத்தை அறிந்துக்கொண்ட வீட்டின் பெண்கள் அந்த இடத்தைக் குகைபோலக் குடைந்து ஒவ்வொரு முறையும் வெள்ளை மண் எடுப்பர். இவ்வாறு வாங்கிகளைக் குடைந்து மண் எடுப்பதால் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயங்களும் அதிகம் காணப்படுகின்றது. இதனால் சில தோட்டத்து நிர்வாகங்கள் மண்ணைத் தோண்டக்கூடாது என மக்களுக்கு உத்தரவும் இடும். மக்கள் அந்த உத்தரவைப் பொருட்படுத்தாது வெள்ளை மண் எடுத்து வீட்டை மெழுகுவர். தெளிவத்தை ஜோசப் தனது

சிலுவை என்ற கதையில் இதைப்பற்றிய குறிப்புகளையும் கதையோட்டத்தில் தந்து சென்றுள்ளார்.

> அவனுடைய காம்பிராவும் வெள்ளை வெளேரென்று கிடந்தது.
>
> வெள்ளை மண் வாங்கியிலருந்து யாருக்கும் தெரியாமல் இரண்டு வாளி முண் கொணர்ந்து கரைத்து பூசி வெளுக்க வைத்திருக்கிறான் அவள் மனைவி.
>
> 'வீடு தீத்துறேன் வீடு தீத்துறேன்' என்று தோட்டத்து ஆட்கள் அத்தனை பேரும் தோண்டித் தோண்டி வெள்ளை மண் வாங்கி பொந்து பொந்தாய்க் கிடக்கிறது. வாங்கி ஓரத்தில் வரிசையாக நிற்கும் ஒரு பத்துப் பதினைந்து தேயிலைகள் இப்ப விழுவேனா, இன்னும் சற்றுப் பொறுத்து விழுவேனா என்று ஆட்டம் கண்டுபோய் நிற்பதால் யாரும் தொண்டக் கூடாது என்பது துரையின் உத்தரவு.

'சிலுவை' என்ற சிறுகதையின் மேலுள்ள பகுதியைப் பார்க்கும்போது மலையகத்தில் வெள்ளைமண் பூசி வீட்டை வெளிர வைப்பதும், வெள்ளை மண் வாங்கியைக் குடைவது ஆபத்தை தரும் என்று நிர்வாகத்தால் உத்தரவு தந்தும், அதனைப் பொருட்படுத்தாது வெள்ளை மண் தோண்டி வருவதும் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களைப் புரிந்துகொள்ளலாம். இன்றைய காலகட்டத்தில் மலையகத்தில் வீடுகள் நவீன முறையில் கட்டப்படுகின்றன. லயன் வீடுகளிலும் சீமெந்துத் தரைகளே காணப்படுகின்றன. வீட்டின் சுவர்களுக்கு வர்ணப்பூச்சிகளே பூசப்படுகின்றன. இதனால் சமகாலத்தில் ஒருசிலரே வெள்ளைமண் எடுத்து வீட்டின் அடுப்பங்கரை போன்ற ஒருசில இடங்களை மெழுகுகின்றனர். இந்த வாழ்வியல் இன்று ஒருசில தோட்டப்புற வீடுகளிலே காணப்படுகின்றது.

மலையகத் தோட்டங்களில் கிறிஸ்தவர்களும் வசிக்கின்றனர். மலையகக் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் குறைவானவர்களே ஆவர். இதனால் மலையகத் தோட்டங்களில் கிறிஸ்தவத் தேவாலயங்கள், ஆரம்ப காலங்களில் இருக்கவில்லை. கிறிஸ்தவர்கள் தரிசிக்க வேண்டுமானால் நகரங்களுக்குச் செல்ல வேண்டும். நகரங்களுக்கு அடிக்கடி செல்ல ஆரம்ப காலங்களில் வாகன வசதிகளும் இருக்கவில்லை. வருடத்திற்கு ஒருமுறை வரும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கே மலையகத் தோட்டப்புறக் கிறிஸ்தவர்கள் தேவாலயம் செல்வர். இதில் மற்றுமொரு அம்சம் தோட்டமானது அல்லது தோட்ட நிர்வாகம் கிறிஸ்துமஸ் காலங்களில் தேவாலயம் செல்லத் தோட்டத்துத் தேயிலை லொறியை ஏற்பாடு செய்து கொடுக்கும். தோட்டத்து லொறிகளில் இவர்கள் தேவாலயங்களுக்குச் சென்று வருவதும் முக்கியமான வாழ்வியல் அம்சமாகும்.

தோட்டத்திலிருக்கும் கிறிஸ்தவர்கள் லொறிகளில் ஏறித் தூரத்திலுள்ள தேவாலயத்திற்கு நள்ளிரவில் சென்று கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டோடுகின்ற அம்சங்களைத் தெளிவத்தை ஜோசப் 'சிலுவை' என்ற சிறுகதையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

தோட்டத்திலிருப்பவர்கள் சாமப் பூஜைக்குப் போவது சிரமம். குழந்தை ஏசு பிறக்கும் அந்த நடு இரவுப் பூஜைக்குப் போகாவிட்டாலும் கிறிஸ்துமஸ் நாளின் பயன்...!

கொட்டும் மழையிலும், குளிரிலும், அந்தப் பன்னிரண்டு மணி இருளில் பத்து மைலுக்கப்பாலுள்ள கோவிலுக்குப் போய், சாம பூஜை காணுவதென்பது மிகவும் சிரமமான ஒரு காரியம்.

பெரிய கிளார்க், சின்ன டீமேக்கர், ஒரு சூப்பர்வைசர் குடும்பத்துடன் சிலுவையின் குடும்பத்தையும் சேர்த்தால் ஒரு பதினைந்துபேர் கிறிஸ்தவர்கள் இருப்பார்கள்.

பெரியவர், தானும் கிறிஸ்தவராக இருப்பதாலோ என்னவோ துரையிடம் பேசி லொறியைக் கொண்டு போக உத்தரவு வாங்கி விடுவார். இரவு பத்து மணி போல் எல்லோரும் பெரியய்யா பங்களாவுக்கு வந்துவிட வேண்டியது லொறி தயாராய் நிற்கும். உள்ளே நாற்காலி போட்டு வைத்திருப்பார்கள் உட்காருவதற்கும் விழுவதற்கும்.

இந்த முறையும் லொறிக்கு உத்தரவு வாங்கியாகி விட்டது.

அடிப்படையில் தெளிவத்தை ஜோசப் கிறிஸ்தவர் என்பதால் இந்த வாழ்வியல் முறை அவருக்குப் பழக்கப்பட்டதாய் இருந்திருக்கின்றது. இதனாலேயே உணர்வுபூர்வமாக இச்சம்பவத்தை விவரித்திருக்கின்றார்.

மலையகத் தோட்ட நிர்வாகங்களில் பெரிய கணக்குப்பிள்ளை, சிறிய கணக்குபிள்ளை, கங்காணி, தோட்டத் தலைவர் போன்ற நிர்வாகப் பதவிகள் உண்டு. ஆரம்பத்தில் வெள்ளைக்காரர்களும், அதன் வழி வந்தவர்களுமே இத்தொழில்களைச் செய்து வந்தனர். காலப்போக்கில் தோட்டத்தில் கொஞ்சம் படித்தவர்கள் அந்தத் தொழில்களைச் செய்ய ஆரம்பித்தனர். இதனால் தங்களுக்குள்ளே போட்டிகளும் பொறாமைகளும் நிறைந்து காணப்பட்டன. தெளிவத்தை ஜோசப்பின் 'எக்சீமா' என்ற சிறுகதையில் சின்னக் கணக்குப்பிள்ளை என்றொருவர் இருக்கின்றார். இவரே கதையின் பிரதான கதைமாந்தர். இவர் அறைகுறையாகப் படித்து சின்ன கணக்குப்பிள்ளையாக வேலை செய்தாலும், இவர் வாசல் கூட்டி சாதியை சேர்ந்தவர் என்பதால் தனக்கு மேலுள்ள அதிகாரிகளின் மத்தியில் தாழ்த்தப்பட்டுகின்றார்.

சின்னவரோ!

வாசல் கூட்டி வைரவனின் வயிற்றில் பிறந்து ஏதோ அரை குறையாகப் படித்து எப்படியோ சின்னக் கணக்குப்பிள்ளையாகி லயத்தில் இருந்து வெளியேறி இன்று ஸ்டாப் குவாட்டஸ்க்குள் குடி நுழைந்தவர்.

மேற்சொன்ன வகையில் சின்னவர் அல்லது சின்னக் கணக்குப்பிள்ளை வாசல் கூட்டி என்பதன் மூலம் அவர் சாதியில் குறைந்தவர் என்பதை கதையாசிரியர் எடுத்துக்காட்டிவிடுகிறார். சின்னவருக்குக் காலில் எக்சீமா என்ற நோய் வந்துவிட்டது. சுத்தம் போதாமையால் காலின்

தோல்கள் வெடித்து நீர் கசியும் தன்மையையே எக்சீமா நோய் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்த எக்சீமா நோயால் பாதிக்கப்பட்ட சின்னவர் தோட்டத்து லயத்தைப் பார்க்க வரும் 'டிஸ்பென்சரிடம்' காலைக் காட்டுகிறார். டிஸ்பென்சர் என்பவர், ஆரம்ப கால மலையகப் பிரதேசத்தில் தோட்டத்து லயங்களுக்கு வீடுவீடாகச் சென்று மருந்து வழங்குபவர். மருந்தாளர் என்பதன் ஆங்கில வடிவமே டிஸ்பென்சர். கிட்டத்தட்ட மருத்துவர்களுக்குச் சமமாக மலையக மக்களால் பார்க்கப்பட்டவரே டிய்பென்சர். ஆனால், இவர் வைத்தியர் இல்லை. உயர்ந்த மற்றும் மேட்டுக்குடியினரே. ஆழமாகச் சொன்னால் மலையகத்துக்கும் இவர்களுக்கும் எவ்வித சம்மதமும் இல்லாத உயர்குடியினரே இந்த டிஸ்பென்சர் வேலையைச் செய்தனர். டிஸ்பென்சர் சின்னவரின் காலைப்பார்த்து "காலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதெல்லாம் கவனிக்காததால் தான் இது போன்ற தோல் வியாதிகள் 'உங்களுக்கு' வருகின்றன." இதில் 'உங்களுக்கு' என்றது சின்னக் கணக்குப்பிள்ளைக்குத் தனியாக உபயோகித்த மரியாதைப் பதம் அல்ல. "எந்தச் சமூகத்தைப் பார்த்து வயிறு வளர்க்கின்றாரோ அந்தச் சமூகத்தையே அப்படிக் கிண்டலாகக் குறிக்கின்றார் என்பது..." என்றவாறு கதையாசிரியான ஜோசப் விளக்கம் தருகின்றார்.

தோட்டப்புறத்திலே பிறந்து படித்து, தோட்டப்புறம் சார்ந்த நிர்வாகப் பதவிகளை வகித்தாலும் மலையகத்தைக் கடந்த வர்க்கத்தினரால் தோட்டப்புற நிர்வாகிகள் ஏளனப்படுத்தப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. மலையகத் தோட்டங்களிலே பிறந்து, அங்கேயே நிர்வாக வேலை செய்யும் தோட்டப்புற நிர்வாகிகளின் வாழ்வியல் அம்சத்தை இது காட்டுகின்றது. தெளிவத்தை ஜோசப்பின் காலத்தில் மலையகத் தோட்டப்புறங்களின் நிர்வாகப் பதவிகளை மலையகத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களே செய்கிறார்கள் என்பதைக் கண்டிருக்கின்றோம். கணக்குப்பிள்ளை, கங்காணி, தோட்டத்துத் தலைவர் போன்ற சிறு பதவிகளையே இவர்கள் வகித்தனர். இதற்கும் மேலுள்ள தோட்டத்துரை போன்ற உத்தியோகங்களை வகித்தவர்கள் தோட்டப்புறத்தின் வெளியிலுள்ள குடியினராவர். இந்தச் சிறு பதவிகளை வகிக்கும் நிர்வாகிகள் தனக்கு மேலுள்ள துரை போன்ற உத்தியோகஸ்தர்களைக் காணவிடாது ஒருவருக்கொருவர் போட்டியுடனும் பொறாமையுடனும் காணப்படுகின்றனர். இவர்கள் மலையகத்தவர்கள். அத்துடன் ஒரே தோட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். இதனால் ஒருவரைவிட ஒருவர் மேலே போய்விடக் கூடாது என்ற எண்ணம் கொண்டிருந்தனர். இதனை 'எக்சீமா', 'கத்தியின்றி ரத்தமின்றி' போன்ற சிறுகதைகளில் ஜோசப் நேரடியாகவே குறிப்பிடுகிறார்.

எக்சீமா என்ற கதையில் வரும் எக்சீமா என்ற நோயினால் பாதிக்கப்பட்ட சின்ன கணக்குப்பிள்ளை பெரிய கணக்குப்பிள்ளையிடம் தனக்குக் காலில் ஏற்பட்டுள்ள நோயைக் காட்டி சப்பாத்து போடலாமா என்று கேட்க, பெரிய கணக்குப்பிள்ளை அதற்கு இரக்கமில்லாத வார்த்தைகளை கூறுகின்றார். இருவருக்குமிடையே நிகழும் உரையாடலைக் கீழே காண்போம்.

“பாத்தீங்களா..! இந்த எளவுக்காகத்தான் ஒரு சப்பாத்தை மாட்டிக்கிறேன்னு உங்ககிட்ட கேட்டுகிட்டே இருக்கேன்!” என்பார் அழாத குறையாக.

இதற்குப் பெரியவர் பின்வருமாறு பதிலளிக்கின்றார். “என் காலைப் பாருங்க.. எத்தனை காயம்... எத்தனை கீறல்... எனக்கு சப்பாத்து போட்டுக்குற தெரியாதா? தொரை ஒரு மாதிரியா பாப்பானே... “என்ன இன்னைக்கு சப்பாத்தோட வர்றாரு!. நாளைக்கு கார்ல வருவாரோ! ரன்னு கருவிப்புட்டான்னா... நாம அவ்வளவுதான்!”

அதற்கு மேல் பெரியவரிடம் கெஞ்சியும் பலனில்லை வாதாடியும் பலனில்லை என்பது சின்னவருக்குத் தெரியும்.

நேராகத் துரையிடம் போய்க் கேட்டுவிடவும் முடியாது. “இவனும் திங்க மாட்டான் திங்கிறவனையும் விடமாட்டான். வைக்கப் போருல படுத்துக்கிட்ட வைக்கப்போருல படுத்துக்கிட்ட நாய் மாதிரி” என்று முனங்கிய படி நடந்து விடுவார்.

மேற்சொன்ன உரைப்பகுதியை ஆழமாக நோக்கும்போது ஒரே தோட்டத்தில் பிறந்து வளர்ந்து நிர்வாக வேலை செய்யும் ஒரே சமூகத்தைச் சேர்ந்த இருவருக்குள் இருக்கும் பொறாமைத் தன்மையைக் காணமுடியும். தோட்டப்புறத்திலே பிறந்து அங்கேயே படித்து, கொழுந்து பறித்தல் முதலிய வேலைகளைச் செய்து தோட்டத்தின் சிறிய பதவிகளை வகிக்கும் நிர்வாகிகளின் வாழ்வியல் முறையினையே ஜோசப் காட்ட முயன்றிருக்கின்றார்.

**முடிவுரை**

ஈழத்து மலையக புனைகதை எழுத்தாளர்கள் தங்களது படைப்புக்களில் மலையக மக்கள் பற்றியும் அவர்களின் வாழ்வியல் பற்றியும் எழுதியிருக்கின்றனர். மலையகம் பற்றியும் மலையக மக்களின் வாழ்வியல் பற்றியும் பலர் எழுதியிருந்த போதிலும், மலையக மக்களின் வாழ்வியலை நுணுக்கமாகவும் மிக யதார்த்தமாகவும் அனுபவ ரீதியாக எடுத்துக்காட்டியவர் தெளிவத்தை ஜோசப். மலையகம் சார்ந்து இவர் எழுதிய ஒவ்வொரு சிறுகதையும் ஏதோவொரு வகையில் மலையக மக்களின் வாழ்வியலில் ஏதாவதொரு அம்சத்தை வெளிப்படுத்தியே செல்கின்றது.

தெளிவத்தை ஜோசப் தான் வாழ்ந்த காலத்து மலையகத்தின் வாழ்வியல் அம்சங்களைத் தனது சிறுகதைகளில் பிரதிபலித்தார். அவர் காலத்து வாழ்வியல் அம்சங்கள் இன்று காலமாற்றங்களை உள்வாங்கி மாற்றமடைந்து மறைந்துள்ளன. சில மாறிக் கொண்டும் வருகின்றன. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை வாசிக்கும் அடுத்த சந்ததியினருக்கு ஒருசில வாழ்வியல் அம்சங்கள் புதியதாக இருக்கக்கூடும். அவ்வாறான பிரச்சினையை நீக்கும் பொருட்டாகவும் இவ்வாய்வு அமைந்திருக்கின்றது. மலையக மக்களின் அனைத்து வாழ்வியல் அம்சங்களையும் தெளிவத்தை ஜோசப் சிறுகதைகளில் பிரதிபலித்துள்ளாரென்று கூறமுடியாது. குறிப்பிட்ட சில தனித்துவமான வாழ்வியல் அம்சங்களை யதார்த்தமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். அவ்வாறு அவர் தமது சிறுகதைகளில் எடுத்துக்காட்டிய சில

தனித்துவமான மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைப்பதாக இவ்வாய்வு அமைந்திருக்கின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


அருணாசலம், க. (1994). இலங்கையின் மலையகத் தமிழ் இலக்கியம். தமிழ் மன்றம் : ராஜகிரிய.

அருணாசலம், க. (2010 மே). படைப்பாற்றல் மிக்கதோர் அற்புதக் கலைஞன். ஞானம் சஞ்சிகை (தெளிவத்தை ஜோசப் பவளமலர்).

கமலதாசன், சு. (2014. 02. 16). மலையகத்தின் இமயம். தெளிவத்தை ஜோசப் அமுத விழாச் சிறப்பிதழ். மலைநாட்டு எழுத்தாளர் சங்கம்.

சிவத்தம்பி, கா. (2010 மே). தேளிவத்தை ஜோசப் என்னும் படைப்பாளி. ஞானம் (தெளிவத்தை ஜோசப் பவளமலர்). மலைநாட்டு எழுத்தாளர் சங்கம்.

செல்வராஜா, என். (2007). மலையக இலக்கிய கர்த்தாக்கள். சுடரொளி வெளியீட்டுக் கழகம் : லண்டன்.

தெளிவத்தை ஜோசப். (2000). மலையக சிறுகதை வரலாறு. துரைவி வெளியீடு : கொழும்பு.

தெளிவத்தை ஜோசப். (2013). மீன்கள். நற்றிணைப் பதிப்பகம் : தமிழ்நாடு.

தெளிவத்தை ஜோசப். (2014). தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள். பாக்யா வெளியீடு : ஹட்டன்.

# சிறுவர் உரிமை விழிப்புணர்வில் இலக்கியங்களின் பங்களிப்பு : எனக்கு வயது பதின்மூன்று சிறுகதையை முன்னிறுத்திய பார்வை

**K.Lohageetha**

Lecturer, Department of Tamil Language, National Institute of Education, Sri Lanka,
klgeeth@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியங்கள் அவை எழுதப்படும் காலத்தின் தேவை கருதியவையாயிருப்பதோடு மனித வாழ்வியலை வளம்படுத்துபவையாக, வாசகனுக்கு வழிகாட்டுபவையாக இருத்தல் வேண்டும். சமூகத்திடம் கொண்டுசேர்க்க வேண்டும் என்ற எழுத்தாளனின் எதிர்பார்ப்பு, வாசகனின் மனதில் ஆழப்பதியக்கூடியதாக அமையவேண்டும் என்ற ஆவல் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாக்கமாக வெளிவருகிறது. நவீன இலக்கியப் படைப்புகளான சிறுகதை, கவிதை, நாவல் போன்ற படைப்புகள் சமூகத்திற்குத் தேவையான ஆரோக்கியமான பல விடயங்களைக் கொண்டுசேர்க்கும் ஊடகங்களாக விளங்குகின்றன. சாதாரண கல்வி அறிவுடைய மக்களும் பயின்று நயந்து, பின்பற்றக்கூடிய தன்மையில் எழுதப்படுவதே நவீன இலக்கியங்களின் பிரதான பண்பு. அவ்வாறு எழுதப்படும் இலக்கியங்களே சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தனவாகும். இப்பின்னணியில் மனித வாழ்வின் முக்கிய பராயமாகிய சிறுவர் பராயத்தில் அவர்களுக்கெனத் தனித்து உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பாக படைப்பிலக்கியங்கள் பல கவனத்திற் கொண்டுள்ளன. அவ்வகையில், எழுத்தாளர் ஸம்ஸ் குறிப்பிடத்தகவர். தனியே பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் சிறுகதைகளை எழுதாது தனது படைப்பூடாக மக்களிடத்தில் எத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்பதில் பொறுப்பு வாய்ந்த ஒரு சமூகப் போராளியாகவும் விளங்கியுள்ளார். விழிப்புணர்வுக் கருத்துக்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ வாசகரிடத்தில் கொண்டு சேர்ப்பதில் எழுத்தாளர் ஸம்ஸ் வெற்றிபெற்றிருப்பதை அவர் எழுதிய எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதை புலப்படுத்தி நிற்கிறது.

***திறவுச் சொற்கள்*** *: சிறுவர், உரிமை, விழிப்புணர்வு, எனக்கு வயது பதின்மூன்று.*

**அறிமுகம்**

இலக்கியங்கள் அவை எழுதப்படும் காலத்தின் தேவை கருதியவையாயிருப்பதோடு மனித வாழ்வியலை வளம்படுத்துபவையாக, வாசகனுக்கு வழிகாட்டுபவையாக இருத்தல் வேண்டும். சமூகத்திடம் கொண்டுசேர்க்க வேண்டும் என்ற எழுத்தாளனின் எதிர்பார்ப்பு வாசகனின் மனதில் ஆழப்பதியக்கூடியதாக அமைய வேண்டும் என்ற ஆவல் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாக்கமாக வெளிவருகிறது. நவீன இலக்கியப் படைப்புகளான சிறுகதை, கவிதை, நாவல் போன்ற படைப்புகள் சமூகத்திற்குத் தேவையான ஆரோக்கியமான பல விடயங்களைக் கொண்டுசேர்க்கும் ஊடகமாக விளங்குகின்றன. சாதாரண கல்வி அறிவுடைய மக்களும் பயின்று நயந்து, பின்பற்றக்கூடிய தன்மையில் எழுதப்படுவதே நவீன இலக்கியங்களின் பிரதான இலக்கு. அவ்வாறு எழுதப்படும் இலக்கியங்களே சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்ததாகும். எனவே, மனித வாழ்வின் முக்கிய பராயமாகிய சிறுவர் பராயத்தில்

அவர்களுக்கெனத் தனித்து உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பாக படைப்பிலக்கியங்கள் எவ்வாறு கவனத்திற்கொண்டுள்ளன. படைப்பாளன் தனியே பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் சிறுகதைகளை எழுதாது தனது படைப்பூடாக மக்களிடத்தில் எத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்பதில் பொறுப்பு வாய்ந்த ஒரு சமூகப் போராளியாகவும் அவரது படைப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையில், நேரடியாகவோ மறைமுகமாகவோ தமது கருத்துக்களை வாசகரிடத்தில் கொண்டு சேர்ப்பதில் எழுத்தாளர் ஸம்ஸ் அவர்கள் வெற்றிபெற்றிருப்பதை அவர் எழுதிய எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதை விளங்குகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஆரோக்கியமான சமூதாயத்தைக் கட்டியெழுப்பி அதனை எதிர்கால பிரஜைகளுக்கும் கையளிப்பது ஒவ்வொருவரதும் பாரிய பொறுப்பாகும். தமது சுயபாதுகாப்பு, சுதந்திரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதோடு சமூகத்தின் ஒவ்வொரு பிரஜை குறித்த சிந்தனையும் முக்கியமானது. அந்தவகையில், க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் தமிழ்ப் பாடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 'எனக்கு வயது பதின்மூன்று' என்ற சிறுகதை சிறுவர்களின் பாதுகாப்பு, உரிமைகள் பற்றிச் சிந்திப்பதாக அமைந்துள்ளது. இலங்கையில் வீட்டுப்பணிக்காக அமர்த்தப்பட்ட பெண்பிள்ளைகள் பல்வேறு துன்பங்களை அனுபவித்தமை, தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றமை என்பன பதிவாகியுள்ளன. இவற்றுக்கெதிரான குரல் எவ்வாறு சிறுகதைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளன. அவை எவ்வாறு இளம் சமூகத்திற்குக் கொண்டுசேர்க்கப்பட்டன என்பன ஆய்வுப் பிரச்சினையாகக் காணப்படுகின்றன.

**ஆய்வு நோக்கம்**

மனித வாழ்வியலின் மிகமுக்கிய பருவமாகிய சிறுவர் பராயம் பற்றிய முக்கியத்துவம், சிறுவர் உரிமைகள் தொடர்பாக யாவரும் அறிந்திருத்தல் அவசியம். இலங்கையில் சிறுவர் உரிமைகளை மக்களிடத்தில் கொண்டுசென்று அவற்றினூடாக விழிப்புணர்வு ஏற்படுவதற்குப் படைப்புகள் பெறும் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்தலைப் பிரதான நோக்கமாகவும் படைப்புகள் ஊடாக ஏற்படுத்தும் அத்தகைய விழிப்புணர்வானது இளையோரிடத்தில் மேலும் வலுப்பெறுவதற்கும் எதிர்காலத்தில் நிலைபேறுகொள்ளச் செய்வதிலும் சிறுகதைகளின் முக்கியத்துவத்தை அடையாளங்காணுதல் துணை நோக்கமாகவும் விளங்குகின்றன.

**ஆய்வு முறை**

எனக்கு வயது பதின்மூன்று சிறுகதையூடாக சிறுவர் உரிமைகள் முன்னிறுத்தப்பட்டிருப்பதனை விவரண ஆய்வு, வரலாற்று முறை ஆகிய ஆய்வு முறைகளை அடிப்படையாகக்கொண்டு இக்கட்டுரை ஆராய்கின்றது.

**ஆய்வு வரையறை**

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள், மக்களிடத்தில் போதுமான அறிவுத்தெளிவூட்டலை வழுங்கவேண்டியவையாகவும் விளங்குகின்றன. இத்தேவையை முன்னிலைப்படுத்தி காலத்திற்குக் காலம் சிறுகதைகள் படைக்கப்பட்டு வருகின்றமையைக் காலநீரோட்டத்தில் அவதானிக்கமுடிகின்றது. அந்தவகையில், ஆய்வின் வரையறை கருதி அப்துல் ஸமட் அவர்கள் எழுதிய எனக்கு வயது பதின்மூன்று சிறுகதை மாதிரியாக எடுக்கப்பட்டு, அதில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் தொடர்பில் நோக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கதைச்சுருக்கம்**

சல்மா எனும் சிறுமி பதின்மூன்று வயது நிரம்பியவள். வீட்டுப் பணிப்பெண்ணாக எட்டு வயதில் வேலைக்கமர்த்தப்பட்டவள் ஐந்து வருடங்களாக பணிப்பெண்ணாக வேலை செய்கிறாள். அங்கு அவள் தனது வயதுக்கு மீறிய வேலைகளில் ஈடுபடுவதும் அதனால் அவள் பெறும் மன உழைச்சல் மற்றும் அங்கு அவள் எதிர்கொள்ளும் சவால்கள் என்பவற்றைக் கடந்து அவள் தனக்கெனத் தொழில் கற்றுக கொள்வதற்காக நெசவுநிலையத்துக்குப் புறப்புடுவதாக கதை நிறைவு பெறுகிறது. இக்கதை சிறுவர்களுக்கான உரிமைகள் மீறப்படுவதையும் தமக்குரிய உரிமைகள் தொடர்பில் சிறுவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல விடயங்களையும் எடுத்துரைக்கின்றது.

**எனக்கு வயது பதின்மூன்று சிறுகதையூடாக முன்னிறுத்தப்படும் சிறுவர் உரிமைகள்**

மனிதனாகப் பிறந்த அனைவரும் உயிர்வாழும் உரிமை படைத்தவர்கள். இவர்களுள் சிறுவர்கள் தமக்குரிய உரிமைகள் தொடர்பாகவும் பெரியோர்கள் சிறுவர்களுக்கு வழுங்கப்பட வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் அறிந்திருத்தல் அவசியம். பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளனர். சிறுவர்களுக்கான உரிமைகள் மிகவும் அழுத்தமாகக் கடைப்பிடிக்கப்படுபவை. அதனால்தான் சிறுவர்களது உரிமைகள் பற்றி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை முக்கிய கவனம் எடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி சிறுவர் உரிமைகள்மீதான சமவாயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வளர்முக நாட்டிலும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காகச் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை ஏற்று 57 உறுப்புரைகள் ஊடாக அவர்களுக்கான உரிமைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் தமக்குரிய உரிமைகள் தொடர்பாகவும் பெரியவர்கள் தம் சமூகத்தில் வாழும் சிறுவர்களுக்குரிய உரிமைகள் தொடர்பாகவும் அறியவேண்டிய விடயங்களை மிக இலகுவாக வாசகர்களிடம் கொண்டுசேர்க்கிறார் கதாசிரியர். சிறுவர் சமவாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளுள் மிக முக்கியமான உரிமைகள் எனக்கு வயது பதின்மூன்று சிறுகதையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக,

– கல்வி கற்கும் உரிமை
– கருத்துச் சுதந்திரம்
– சிறுவர் நலன்
– கூடும் சுதந்திரம்
– சிறுவர் உய்வும் மேம்பாடும்
– சிந்தனை, மனச்சாட்சி, மதச் சுதந்திரம்
– சித்திரவதை
– பாகுபாடு காட்டாமை
– சமூகப் பாதுகாப்பு
– பெற்றோர் பொறுப்பு
– தனித்துவத்தைப் பேணுதல்

ஆகிய சிறுவர் உரிமைகள் இச்சிறுகதையில் பின்னப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

**கல்வி கற்கும் உரிமை**

பிள்ளையின் ஆளுமை, திறமை, உடல் மற்றும் உள ஆற்றல்கள் ஆகியவற்றை முழுமையாக விருத்திசெய்வதே கல்வியின் நோக்கம். சுதந்திரமான சமுதாயத்தில் பொறுப்புடனும், அமைதியுடனும் வாழ்வதற்கும் அடிப்படை மனித உரிமைகள், தமது சொந்தக் கலாசார, தேசிய ஆசாரங்களை மட்டுமல்லாமல் பிறரின் விழுமியங்களையும் கனம் பண்ணுவதற்கும் கல்வி சிறுவரைத் தயார் செய்தல் வேண்டும்.

கதையின் பிரதான பாத்திரமாகிய சிறுமி சல்மா பதின்ம வயதுச் சிறுமிக்குரிய அடிப்படை உரிமையாகிய கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டு பணிப்பெண்ணாக அமர்த்தப்பட்டுள்ளாள். அவள் தனது குடும்பத்திற்காகத் தனது உரிமைகளை விட்டுக்கொடுத்து செல்வந்தக் குடும்பத்தில் பணிக்கமர்த்தப்பட்டதன் மூலம் அவளது உரிமை மறுக்கப்பட்டிருப்பதனை கதையில் அவதானிக்க முடிகின்றது. சிறுவர்களது கல்வி கற்கும் உரிமையை அவளது குடும்பத்தவர்களோ அவள் பணி புரியும் செல்வந்த குடும்பத்தவர்களோ வழங்கமறுத்துள்ளமையை அவதானிக்கலாம்.

சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் உறுப்புரை 28இல் ‘‘கல்வி பயிலும் உரிமை எல்லாப் பிள்ளைகளுக்கும் உண்டு. அரசாங்கத்தின் கடமை, ஆரம்பக் கல்வியாவது கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைப்பதை உறுதிப்படுத்துதல் ஆகும்’’ என முன்வைக்கின்றது. இவ்வுரிமை குறித்த சிறுகதையில் பேணப்படுவதனையும் மறுக்கப்படுவதனையும் அவதானிக்கலாம். ‘‘சிக்கந்தர் போடியாருக்கு என்னைவிட இரு வயது மூத்த பெண்பிள்ளை ஒன்று இருக்கா. ஸரீனா என்று பெயர். உள்ளூர் மகா வித்தியாலயத்தில் பத்தாம் வகுப்புப் படிக்கா.’’ என்ற சிறுமி ஸல்மாவின் கூற்று கல்வி கற்கும் உரிமையானது ஸரீனாவுக்கு வழங்கப்படுவதையும் ஸல்மாவின் வறுமை காரணமாக அதே உரிமை மறுக்கப்பட்டிருப்பதையும் ஆசிரியர் தத்ரூபமாக எடுத்துக்காட்டுகிறார்.

**பாகுபாடு காட்டாமை**

வயது, பால், ஆற்றல், நிறம், இனம், மொழி அல்லது சமயம் என்பன சமமாகக் கருதப்பட்டு எல்லா உரிமைகளும் எல்லாச் சிறுவர் சிறுமியருக்கும் உரியன. சிறுவர்களை எல்லா வகையான பாகுபாடுகளிலிருந்து காப்பதும் கட்டாயமானதாகும் என உறுப்புரை 2இல் கூறப்பட்டுள்ளது. ஆனால், சிறுமி ஸல்மா வீட்டுப்பணிப்பெண்ணாக நடாத்தப்படுதல், அவள் உணவு, உடை போன்ற விடயங்களால் பாகுபாட்டுடன் நடாத்தப்படுகின்றமை என்பன சிறுவர்களுக்கான உரிமை மீறலை எடுத்துக்காட்டுகின்றன. இதனை,

> ''போன ஹஜ்ஜுப் பெருநாளைக்கு கூப்பன் கடையில சீத்தை வாங்கி எனக்கி ஒரு நீட்டுப் பாவாடையும், போளைக் கைச் சட்டையும் தச்சிக் குடுத்தாங்க, அதப் போட்டுக்கிட்டு கண்ணாடியின் முன் நின்று பார்த்தேனே, என்ர அல்லாவே என்ன அலங்கோலம்! என்ர கண்ணால தண்ணீரே வந்து விடும் போலிருந்தது. அவங்கட புள்ளயப்போல நானும் ஒரு குமர்தான்''.

> ''ஆண்டவன் தான் எங்கள இப்பிடி வித்தியாசம் வித்தியாசமாகப் படைச்சிற்றானா? அல்ல இப்படியான அந்தஸ்து பாகுபாடுகளை நாங்கள் தான் உண்டாக்கிக்கொண்டோமா? எனக்கு ஒன்றும் விளங்குதில்லை''

எனச் சிறுமி மனக்கிடக்கையை வெளிப்படுத்துவதன் மூலம் அவளுக்கு மறுக்கப்பட்டுள்ள உரிமையை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

**பெற்றோருடன் வாழுதல் மற்றும் பாதுகாப்பு**

சிறுவர் உரிமைக்கான சமவாயத்தின் உறுப்புரை 9இல் எந்தவொரு சிறுவன் அல்லது சிறுமியும் (இம்சை, புறக்கணிப்பு முதலியன காரணமாக) குழந்தையின் நலனுக்கு அவசியம் என்று கருதப்பட்டாலன்றி, மற்றும்படி தன் பெற்றோருடன் வாழும் உரிமை குழந்தைக்கு உண்டு. தாய் அல்லது தந்தையரிடமிருந்து பிரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இருவருடனும் உறவைப் பேணும் உரிமை பிள்ளைக்கு உண்டு என எடுத்துரைக்கின்றது. அவ்வாறே உறுப்புரை 5இல் பெற்றோரின் வழிநடத்துதலும் குழந்தையின் வளர்ச்சியும் குழந்தைக்கு அதன் பரிணாம வளர்ச்சிக்கு இசைவான முறையில் வழிகாட்டும் பொறுப்பு பெற்றோருக்கும், குடும்ப வட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உண்டு என அவர்களது வளர்ச்சி, பாதுகாப்பு தொடர்பில் முன்வைக்கின்றது.

எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதையூடாக இவ்வுரிமை எத்தகைய நிலையில் ஸல்மாவுக்குக் கிடைக்கின்றது என்பதை, அவள் சிறுமியாக இருந்தபோதே பெற்ற தாயைப் பிரிந்தமை, தாய் அவள் பணி புரியும் வீட்டிற்கு வருகை தரும்போது தாய்ப் பாசத்திற்கு ஏங்குபவளாகவும் தாயின் உறவு நிலையை ஆரோக்கியமாகப் பேண முடியாதவளாகவும் காணப்படுகின்றமை அவளுக்கு மேற்குறிப்பிட்ட உரிமை மறுக்கப்படுகின்றமையை எடுத்துக்காட்டுகின்றது.

> ''நான் வாறன் மகள்! என்று கூறிக்கொண்டு உம்மா போய்விடுவா. உம்மா இப்படி ஒரு வார்த்தை சொல்வதில் எனக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை. அவ

> சொல்லாமல் போய்விட்டாற்கூட எனக்கு எவ்வித கவலையும் இல்லை. சிலவேளை இவதான் என்னைப் பெத்தவவா? ஒரு தாய் ஒரு மகள் மீது செலுத்தும் பாசம் இவ்வளவுதானா? என்ற வினாக்கள்கூட என் மனத்தில் எழும்.''

எனச் சிறுமி முன்வைக்கும் கூற்று அவளுக்கு இழைக்கப்படும் அநீதி ஆகும். மேலும், இது பிள்ளைகள் தாய்ப்பாசத்திற்கு ஏங்குவதனையும் அவர்களுக்கு உரிய வயதில் கிடைக்க வேண்டிய அன்பு, அரவணைப்பு ஒருங்கே மறுக்கப்படுவதனையும் இதன் மூலம் அறியமுடிகின்றது.

**சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுதல்**

சிறுவர் உரிமை சமவாயத்தின் 32ஆவது உறுப்புரையானது சிறுவர்கள் பொருளாதாரச் சுரண்டலில் இருந்தும் ஆபத்து விளைவிக்கக்கூடிய ஏதேனும் வேலையைப் புரிவதிலிருந்தும் அல்லது பிள்ளையின் கல்வியில் குறுக்கிடக்கூடிய ஏதேனும் வேலையைப் புரிவதிலிருந்தும் அல்லது பிள்ளையின் ஆரோக்கியத்துக்கு அல்லது அதன் உடல், உள, ஆன்மீக, ஒழுக்க, சமூக ரீதியான அபிவிருத்திக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய ஏதேனும் வேலையைப் புரிவதிலிருந்தும் பாதுகாக்கப்படுதல் வேண்டும் எனப் பரிந்துரைப்பதோடு, 'அ' பகுதியானது ஊழியத்தில் அமர்த்தப்படுவதற்கான ஆகக்குறைந்த வயதொன்றை அல்லது ஆகக்குறைந்த வயதுகளை நிர்ணயிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும் எனவும் 'ஆ' பகுதியில் பொருத்தமான வேலை நேரங்களையும் ஊழியர் நிபந்தனைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்துடன் 'இ' பகுதியில் அவ்வுறுப்புரை பயனுறுமாறு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்குப் பொருத்தமான தண்டங்களுக்கு அல்லது தடைகளுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் எனவும் பரிந்துரைக்கிறது. மேற்குறிப்பிட்ட உறுப்ரையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் செயற்பாட்டினை மையமாகக் கொண்டதாகவே எனக்கு வயது பதின்மூன்று சிறுகதை அமைந்துள்ளது. சிறுமியின் கல்வி, பாதுகாப்பு, வயதுக்கு மீறிய வேலைத்திணிப்பு என்பன சிறுமி ஸல்மாமீது சுமத்தப்பட்டுள்ளமையைக் கதை முழுவதும் காணலாம்.

> ''அதிகாலை சுபஹுக்கு எழுந்து தேயிலைக்குத் தண்ணி வைத்திற்று, வீடு வாசலைக் கூட்டத் தொடங்கினா, அப்புறம் இரவு ரேடியோவில் பாட்டெல்லாம் முடிந்த பொறகுதான் படுக்கையில் கொண்டு விழுவேன். என்னேரமும் சுழன்று சுழன்று வேலை செய்வது எனக்குப் பழகிப்போயிற்று.''

> ''நானும் இந்த பூமியில் பொறந்த ராசி, மறு வருஷமே என் வாப்பா மவுத்தாகிப் போக உம்மா கைம்பொண் ஆயிற்றா. உள்ள பிள்ளைகளை வளர்த்துக்க வக்கில்லாமல் அவைகளை இப்படி ஆரார் வீட்டுக்கோ தாளம் பண்ணி வயிறு வளர்க்கிறா, மூத்தவ பருவ வயதாயிற்றா, எப்பவோ கலியாணம் ஆகி இருக்க வேணும். என் உம்மா தினசரி நெல் குத்திவிப்பா, மாதம் முடிந்ததும் என் சம்பளம் பதனைந்து ரூபாயும், காக்காட சம்பளம் இருபது ரூபாவும் கைக்கு வரும்''

என அவர்களின் குடும்பச் சூழ்நிலை மூலம் நியாயப்படுத்தப்பட்டாலும் சிறுமியைப் பணிக்கு அமர்த்தியதன் மூலம் மேற்குறிப்பிட்ட உரிமை மீறப்பட்டுள்ளதனையும் சிறுமிக்கு வயதிற்கு மீறிய வேலை வழங்கப்பட்டமையையும் காணலாம். இதன் மூலம் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படும் நிலை மாற்றப்படவேண்டும் அல்லது பாடசாலைக் கல்வியோடு உரிய பாதுகாப்புடன் பகுதியளவில் ஏதேனும் பொருத்தமான ஊழியம் பார்ப்பதற்கு பரிந்துரைக்கலாம் என்ற எண்ணப்பாங்கையும் ஆசிரியர் தோற்றுவிக்கிறார்.

**பாலியல் மற்றும் ஏனைய இம்சைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுதல்**

எந்தவொரு நபரையும் அவரது அனுமதியின்றி பிறர் பாலியல் ரீதியாக இம்சைப்படுத்துதல் மனித உரிமை மீறலாகும். இது சிறுவர்களுக்கு மேலும் இறுக்கத்தன்மையுடன் சிறுவர் உரிமை சமவாயத்தின் உறுப்புரை 34இன் ‘அ’ பகுதியானது, ஏதேனும் சட்ட விரோதமான பாலியல் செயற்பாட்டில் பிள்ளை ஈடுபடுவதற்குப் பிள்ளை ஒன்று தூண்டப்படுவதிலிருந்தும் அல்லது பலவந்தமாகக் கீழ்ப்படிய வைக்கப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்படுதல் வேண்டும். எனப் பரிந்துரைக்கின்றது. அவ்வாறே உறுப்புரை 36இல் சிறுவர் நலனில் எந்த அம்சத்துக்காவது பங்கம் விளைவிக்கின்ற எல்லா வேறுவிதமான துஷ்பிரயோகங்கள், சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என வலியுறுத்துகின்றது, சிறுவர்களை பாலியல் ரீதியான செயற்பாடுகளுக்குத் தூண்டும் வகையில் செயற்படுவதும் அவர்களுக்கான உரிமை மறுக்கப்படுவதையே எடுத்துரைக்கின்றது. மேலே சமவாயத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பாலியல் ரீதியான செயற்பாடுகளுக்குத் தூண்டும் செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பளிக்கப்படல் வேண்டும் என்ற உரிமை செல்வந்தக் குடும்பத்தின் மகன் தாஹாவினால் மீறப்படுவதனையும் அது ஆரம்ப கட்டத்திலேயே எஜமானியால் அவதானிக்கப்பட்டு தடுக்கப்படுவதனையும் அவதானிக்கலாம். இது பாலியல் ரீதியான சுரண்டலோ அல்லது அதற்குச் சிறுமி ஸல்மா உட்பட்டுவிடாதவகையில் பாதுகாக்கப்படுவதனை எடுத்துக்காட்டலாம். இதன் மூலம் சிறுவர் பாலியல் ரீதியான சுரண்டலுக்குச் சாதகமாக அமையும் சூழலையும் அது உரிய நேரத்தில் பாலியல் இம்சைக்கு தூண்டுபவரையும் தூண்டப்படுபவரையும் அதிலிருந்து பாதுகாப்புப்பெற வைப்பதனையும் ஒரு சிறிய காட்சிப்படுத்தல் மூலமாக ஆசிரியர் மிக இலகுவாக சமூகத்திற்குக்கொண்டு செல்கிறார்.

> “நான் அவரை மிக மரியாதையாகக் காக்கா எண்டுதான் கூப்பிடுவேன். ஆனால் ஒருநாள் அவர் தான் என்னைக் கையில பிடித்து இழுத்து என் கன்னத்தில் செல்லமாக அடித்தார். இத நான் யாரிடமும் சொல்லவில்லை.”

> “இந்தச் சம்பவம் ஒன்றும் போடியார் பெண்சாதிக்குப் பிடிக்காது. ‘வளந்த ஆண் பிள்ளையோட கணக்காகப் பழகணும்டி’ என்று என்னைக் கண்டித்துப் பேசுவா. இதுக்கு நான் என்ன செய்வேன்”

என்ற கூற்றுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

**ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகளில் பங்கேற்றல்**

சிறுவர்கள் தாம் விரும்பிய பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுவதற்கும் தமது பண்பாடு, கலாசாரம் சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கும் உரித்துடையவர்கள் என 31ஆவது உறுப்புரை சிறுவர்களின் உரிமையை உறுதிப்படுத்துகின்றது. ஆனால், செல்வந்த வீட்டில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றும் சிறுமி வேலைக்காரி என்ற அடையாளத்துடன் வீட்டு வேலைகளில் மட்டுமே ஈடுபடுத்தப்படுவதனையும் அவள் விரும்பிய நிகழ்வுகளில் பங்கேற்க முடியாத வகையில் அவளுக்கு வேலைப்பளு சுமத்தப்பட்டிருப்பதையும் அவள் தான் விரும்பிய வகையில் ஆடை அணிந்து சுதந்திரமாகச் செல்ல முடியாதவளாகவும் வாழ்கின்றமையை கதையில் பரவலாக ஆசிரியர் முன்வைக்கிறார்.

**கருத்துச் சுதந்திரம் மற்றும் வாழ்க்கைத் தரம் தொடர்பான உரிமை**

சிறுவர் உரிமை தொடர்பான சமவாயத்தின் 13 மற்றும் 27ஆவது உறுப்புரையில் சிறுவர்களுக்கான கருத்துச் சுதந்திரம் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை அவர்கள் பாதுகாப்பான முறையில் உயர்த்திக்கொள்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதற்கமைய, பிறரின் உரிமைகளை மீறினாலன்றி மற்றும்படி தனது எண்ணங்களைத் தங்கு தடையின்றி வெளியிடவும் தகவல்கள் பெறவும், தன்கருத்தை அல்லது தகவலைத் தெரியப்படுத்தவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு எனவும் ஒவ்வொரு பிள்ளையும் இசைவான வாழ்க்கைத் தரத்தைப் பெறும் உரிமை உடையதாகும். பிள்ளை தகுந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதை உறுதிப்படுத்தும் தலையாய பொறுப்பு பெற்றோரைச் சாரும் எனவும் எடுத்துரைக்கின்றது. இத்தகைய விழிப்புணர்வு தான் வாழும் சமூகத்திலும் ஏற்படுத்தப்பட்டு ஸல்மா போன்ற பணிப்பெண்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படாதிருப்பதற்கு பொறுப்பு வாய்ந்த பிரசையாக தனது எழுத்தின் மூலம் ஆசிரியர் அழுத்திச் சொல்லி தன் சமூகத்திற்கும் அறைகூவல் விடுக்கின்றார். கதையில் சிறுமி ஸல்மா தான் வேலையிலிருந்து நீங்கும் சுதந்திரத்தைத் தெரிவித்தல், அது செல்வந்த குடும்பத்தவரால் ஏற்றுக்கொளப்படுதல், ஸல்மா தான் விரும்பியவாறு தனது வாழ்க்கை மேம்பாடு கருதி நெசவுத் தொழில் பயிலப் புறப்படுதல் ஆகிய சம்பவங்கள் மூலம் கருத்துச் சுதந்திரம், சிறுவரின் வாழ்க்கை மேம்பாடு ஆகிய உரிமைகள் பேணப்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது. சிறுமி ஸல்மாவின் வாழ்க்கையில் மட்டுல்ல சமூகத்தின் ஒவ்வொரு சிறுவரும் அவர்களுக்குப் பொறுப்புக்கூறும் பெரியோரும் உரிமைகளை மதித்து அவர்களுக்கான நல்வாழ்க்கைக்கு வழிகோலுதல் அவசியம் என்பதை ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றமையானது ஓர் இலக்கியப் படைப்பு சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றம், அதனைப் படைப்பதில் எழுத்தாளனுக்குரிய பொறுப்பு மற்றும் வாசகர்கள் பெற வேண்டிய விழிப்புணர்வு என அனைத்தும் ஒரு முனையில் நிலைபெற்றுள்ளமையை அவதானிக்கலாம்.

> "தெருவில் ஒரு நெசவு நிலையம் இருக்கிறது. குமர்ப்பிள்ளைகளெல்லாம் அங்குபோய் தொழில் பழகுதுகள். அதன் விருப்பம்போல உடுத்திக்கொண்டு சந்தோசமாகக் கதைத்துக் கொண்டு போகுதுகள். எனக்கு என்ன தொழில் தெரியும்? இந்த வீட்டுக்கு வந்து என்னத்தப் படிச்சுக் கொண்டேன்! ஸல்மாவின் சிந்தனை எதிர்நீச்சல் அடிக்கத் தொடங்கிற்று அதனைத் திருப்பி எடுப்பது இனி இயலாத காரியம்."

> “பாய் களிச்சான், கௌன், மார்பகத்தில தாவணி இத்தனையும் அணிந்துகொண்டு, எடுப்பான அழகுத் தோற்றத்தோடு, கையில் குறிப்புக் கொப்பியுடன் நெசவு நிலையம் நோக்கி நடந்து செல்லும் புதுப்பிள்ளை வேறு யாருமில்லை! அந்தப் பதின்மூன்று வயது வேலைக்காரி ஸல்மாதான்”

என ஒரு சிறுமி தன் வாழ்க்கை மேம்பாடு தரம் பற்றிச் சிந்தித்து விழிப்புணர்வு பெறுவதைக் காட்சிப்படுத்துகின்றார், ஆசிரியர் ஸமது.

**முடிவுரை**

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள், பெண் உரிமை, தொழிலாளர் பிரச்சினைகள் எனக் காலத்தின் தேவை கருதிப் படைக்கப்பட்டாலும் அவை சர்வதேசம் வரை தேவையான விடயத்தை எடுத்துரைக்கும் முக்கிய ஆவணமாகப் பேணப்பட வேண்டியவை. அந்தவகையில், சிறுவர் உரிமை பற்றித் தனியே எழுத்துக்களில் மட்டும் எழுதிச் செல்லாது ஒவ்வொரு தனி மனிதனும் அவற்றின் தன்மை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டியவர்களாகிறோம். அதற்குத் தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் மதித்து ஏனையவர்களுக்கும் அவர்களுக்குரிய உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது சிறந்தது.

சகமனிதர்களும் அடிப்படை மனித உரிமைகளுடன் வாழவேண்டியவர்கள். சிறுவர்கள் அவர்களுக்குரிய உரிமைகளை அவர்கள் பெற வேண்டும். அவ்வுரிமைகள் மீறப்படும் பட்சத்தில் சமூகம் எதிர்கொள்ளும் நிலை போன்ற விடயங்களை பாடநூல்கள் எடுத்துரைக்கும்போது சிறுவயதிலிருந்தே பிள்ளைகள் மனித உரிமைகள் அதன் முக்கியத்துவம் உணர்ந்தோராக வாழப்பழகுவார்கள். மேலும், இத்தகைய வழிப்புணர்வு தனியே கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய பிரிவுகளிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் படைப்புகள் ஊடாக வழங்குவது சிறந்தது. இதனைச் சிறுகதைகள் மூலம் சாத்தியப்படுத்துவது இலகுவானதும்கூட. சமூகப் பொறுப்புடன் ஆரோக்கியமான சமூகக் கட்டுமானத்திற்கு அவசியமான சிறுவர் உரிமைகள் பற்றி ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் எடுத்துக்காட்டுவதோடு எழுத்தாளர்களது சமூகப் பொறுப்புணர்வு என்பனவும் புலப்படுகின்றமை தெளிவு.

**உசாத்துணை நூற்பட்டியல்**

சிறுவர்களின் உரிமைகள் பற்றிய சமவாயம், மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம்

சுகந்தா.வெ, தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள், முருகேசன்.க, தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள், 2017, கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறை மற்றும் முனைவர் மா.ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்.

ஜெகதீசன், 2008, இலக்கியங்களில் மனித உரிமைக் கோட்பாடுகள், தாமரை பப்ளிக்கேசன்.

**http://eelaththusirukathaikal.blogspot.com/2011/02/blog-post_03.html?m=1**

**convention-rights-child-text-child-friendly-version.pdf**

# Drama and Theater

# சடங்காற்றுகையில் சுவை, நறுமணம் மற்றும் தொடுதலின் வகிபங்கு: மட்டக்களப்பு மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு

**K.Atputhan**

Visiting Lecturer, Department of Fine Arts, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

atputhan1902@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய சூழலில் பாரம்பரிய சடங்குகள் பண்பாட்டின் வெளிப்பாடாகவும் அதன் மீட்சியாகவும் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் ஆண்டுதோறும் வழிபாட்டினூடாக நிகழ்த்தப்படுகின்ற சடங்குகள் தன்னகத்தே பண்பாட்டு அம்சங்களான நம்பிக்கை, கலை, நெறிமுறை, பழக்கவழக்கங்கள், அறிவு, மனப்பான்மை, ஒலி, ஒளி, பொருட்கள், காண்பியங்கள், அமைப்புக்கள், உணவுமுறை, அழகியல் போன்ற பலவற்றினைக் கொண்டுள்ளன. இவற்றுள் சுவை, மணம் மற்றும் தொடுதலின் பங்கு மிக முக்கியமானதாகவும் தனித்துவமானதாகவும் காணப்படுகின்றது. இவ்வாய்வானது மட்டக்களப்பின் சடங்காற்றுகைகளில் சுவை, மணம், தொடுதல் ஆகியவற்றின் வகிபங்கு மற்றும் அதன் அணுகுமுறைகளை ஆய்வு செய்கிறது. சடங்காற்றுகையில் நிகழ்த்துவோர், பார்ப்போர், காண்பியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றபோதிலும் சுவை, மணம் மற்றும் தொடுதல் போன்ற உணர்வுரீதியான அம்சங்கள் ஆற்றுகைகளுக்கு வலுச்சேர்ப்பது மாத்திரமின்றி, சடங்கு வெளியில் தனித்துவமான அனுபவத்தினையும் ஏற்படுத்துகின்றன. இவ்வாய்வு சுவை, மணம் மற்றும் தொடுதல் போன்ற அம்சங்கள் சடங்கு வெளி, சாமியாடுபவர்கள், பக்தர்கள், பங்குகொள்வோர், சடங்குப்பாடல்கள், மந்திரங்கள், வர்ணக்கலவைகள், ஒலி, காண்பியங்கள் போன்றவற்றில் எவ்வாறு தாக்கம் செலுத்துத்துகின்றன என்பதனை ஆய்வு செய்கிறது. இவ்வாய்வின் முதலாம் நிலைத்தரவு மூலங்களாக பங்குபற்றல், அவதானம், நேர்காணல் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக இணையம், சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் என்பனவும் விளங்குகின்றன.

***திறவுச் சொற்கள்*** *: சடங்கு, வெளி, சுவை, நறுமணம், தொடுகை.*

**அறிமுகம்**

மட்டக்களப்பில் பாரம்பரிய சடங்காற்றுகைகளானது வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. பன்முகத்தன்மை கொண்ட இச்சடங்கு வழிபாடனது சமூகத்தினுடைய பண்பாட்டு விழுமியங்களின் வெளிப்படாகவும் சமகால மனிதர்களை மற்றும் சமூகத்தினை ஒன்றிணைக்கும் ஓர் ஊடகமாகவும் காணப்படுகின்றது. எட்வார்ட் டைலர் பண்பாட்டை வரைவிலக்கணப்படுத்தும்போது, பண்பாடு என்பது நம்பிக்கை, கலை, நெறிமுறை, கூட்டம், பழக்கவழக்கங்கள் இவையெல்லாம் சேர்ந்தவை எனக் குறிப்பிடுகின்றார். அதேபோன்று மாலினோஸ்கி மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ மனிதத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்கள், சாதனங்கள், பழக்கவழக்கங்கள் இவற்றின் ஒன்று சேர்க்கையே பண்பாடு என்கின்றார். ஜூபர் பண்பாடு பற்றிக் குறிப்பிடும்போது அறிவு, மனப்பான்மை,

பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கியதெனவும் இவையெல்லாம் தலைமுறை தலைமுறையாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டுவருவது எனவும் கூறுகின்றார் (தில்லைநாதன். எஸ், 2008, ப.10-12). மேற்கூறப்பட்டவர்களின் கருத்துக்களின்படி பழக்கவழக்கங்கள், உணவுமுறைகள், புலன் உணர்வுகள் என்பவற்றைப் பண்பாட்டின் கூறாக கொள்கின்றனர். எனவே, இவற்றிடையே சுவை, மணம், தொடுகை போன்றவை அந்தந்தச் சமூகத்தின் வாழ்க்கை முறையில் முக்கியம் பெறுவதுடன் நிகழ்த்துகின்ற சடங்கிலும் தாக்கம் செலுத்துகின்றன. ஆகவே, சடங்கில் சுவை, மணம், தொடுகை சடங்குக் கூறுகளாகவே அமைகின்றது.

சடங்கானது தெய்வங்களுக்கு வழங்கல் (Offering), குணப்படுத்தல் (Healing ceremonies), மழை வேண்டுதல், விவசாயத்தைப் பாதுகாத்தல் (Seasonal agricultural rites), விழா போன்ற பல தேவைகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் நிகழ்த்தப்படுகின்றன. மட்டக்களப்புச் சடங்குகள் பெரும்பாலும் ஐம்புலன்களுக்கும் விருந்தளிப்பதுடன் ஆழ்மன கிளர்ச்சியைத் தூண்டும் ஓர் வெளியினைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. இவ்வகைச் சடங்குகள் சமூகத்தோடு பிணைந்த வடிவம் மாத்திமன்றி, சமூக வாழ்கையில் ஓர் அங்கமாகவும் காணப்படுகின்றன. சடங்கு ஆன்மிகத்தன்மையை மாத்திரம் கொண்டதல்ல. அது உயர் உணர்வு ரீதியான நிகழ்வாகும். சடங்கில் பார்த்தல், கேட்டல், தொடுதல், சுவைத்தல், நுகர்தல் போன்றவற்றினூடாக அனுபவத்தினைப் பெற முடிகின்றது. இந்த அனுபவத்தினைப் வேறு நிகழ்வுகளில், ஆற்றுகைகளில் உணர்வு ரீதியாக முற்றுமுழுதாகப் பெற்றுவிட முடியாது. எனவே, இந்த ஆய்வானது தொடுதல், சுவைத்தல், நுகர்தல் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டதாகும். சடங்கு என்பது சிறப்புக்குரிய வாழ்வியல் குறியீட்டு அளவில் பொருத்தமான நடத்தை முறைகளுடன் தன்னார்வமாக நிகழ்த்தும் ஒரு நிகழ்வாகும். சடங்கானது செயல்பாடுகளையும் தன்மைகளையும் முன்வைக்கும் முதல்வகையானது அனுபவ வழியில் அறிவது. இதனால் ஒவ்வொரு சடங்குக்கும் ஒரு தனித்த பங்கு, பண்பு, செயல், காரண காரியம் உண்டு என்பதுடன் ஒவ்வொரு சடங்கும் தனித்த தன்மையினைக் கொண்டது.

மட்டக்களப்புச் சடங்குகளைப் பொறுத்தவரையில் பெண், ஆண் தெய்வங்களுக்குரிய வழிபாடாக காணப்படுகின்றது. மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் இச்சடங்குகள் ஆண்டுதோறும் நிகழ்த்தப்படுகின்றன. ஐந்து தொடக்கம் இருபது நாட்கள் இடம்பெறும் இச்சடங்குகளில் அதிகாலை, மதியம், இரவு எனச் சடங்குப் பூசைகள் இடம்பெறுகின்றன. இதில் சடங்குப் படையலுக்கு/ மடைக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. கண்ணகி அம்மன், காளி அம்மன், வைரவர், பேச்சி அம்மன், திரௌபதை அம்மன், மாரி அம்மன், காத்தான், நாகதம்பிரான் முதலான பல தெய்வங்களுக்குத் தனித்துவமான முறையில் சடங்குகள் இடம்பெறுகின்றன. இங்கு சுவை, மணம், தொடுகை தனித்துவமானதாகவும் முக்கியமானதாகவும் காணப்படுகின்றன. இந்த ஆய்வில் புன்னைச்சோலை காளியம்மன் (2024), செட்டிபாளையம் கண்ணகியம்மன் (2024), களுமந்தன்வெளி மாரியம்மன் (2024), பண்டாரியாவெளி நாகதம்பிரன் சடங்குகள் ஆய்வு செய்யப்படுகின்றன. சடங்கானது அதன் வழிபாட்டு முறையிலும் நிகழ்த்துகை முறையிலும் பல்வேறு ஆற்றுகை அம்சங்களையும் அழகியல் அம்சங்களையும் தனித்துவமாகக் கொண்டுள்ளது. இதற்குச் சான்றாக மட்டக்களப்பில் நிகழ்த்தப்படும் அனைத்து மதம் சார்ந்த,

மதம் சாரா தமிழ்ச் சடங்குகளையும் குறிப்பிடலாம். இருந்தும் தற்கால வளர்ச்சிற்கு ஏற்ப சடங்கிலும் மாற்றங்கள் நிகழ்வதனைக் காணமுடிகின்றது.

சடங்கானது ஒரு சமூகத்தினுடைய பிரதிபலிப்பாகும். சமூகமே நிகழ்த்துபவர்களாகவும், பார்போராகவும், ஆற்றுகையாளர்களாகவும், வடிவமைப்பாளர்களாகவும் காணப்படுவர். சடங்கில் காட்சியமைப்பானது ஆற்றுகையாளர்களுக்கு மாத்திரம் இன்றி, பார்வையாளர்கள், பக்தர்கள் உணர்வுகளோடு தொடர்புபட்டு அதனூடாக முற்றிலும் புனித இடமாக அந்த வெளி உணரப்படுகின்ற தன்மையினைக் காண முடிகின்றது. அதுமாத்திரமன்றி, சடங்கில் இடம்பெறும் காண்பிய உரையாடல் தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. ஒரு வெறுமை வெளியானது செயற்பாட்டு வெளியாக மாறுவதற்குக் காட்சியமைப்பு சடங்கில் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. சடங்கில் நிகழ்வுகள் தொடங்குவதற்கு முன்பே உள உடல் ரீதியான மாற்றத்தினை ஏற்படுத்தும் தன்மையினைச் சடங்கக் காட்சியமைப்புக்கள் கொண்டுள்ளன. இதற்கு உணர்வுரீதியாக வலுக்சேர்க்கும் சுவை, மணம் மற்றும் தொடுகை என்பன முக்கியமானவையாகும். இங்கு பொருட்கள் (Set & Materials), ஒளி (lights), உடையமைப்பு (Costumes), கைப்பொருட்கள் (props), முக அலங்காரம் (masks), சொற்கள் (text), சத்தம் (sound), இசை (music), நறுமணம் (smell), காண்பியம், சுவை, தொடுகை போன்ற பல தொட்டு உணரக்கூடிய, தொட்டு உணர முடியாத அம்சங்கள் மட்டக்களப்புச் சடங்கில் தனித்துவமாக வெளிப்படுவதனைக் காணமுடியும். இவ் ஆய்வானது சுவை, மணம், தொடுகை அம்சங்கள் சடங்க காண்பியங்கள், அழகியல், கலை, ஆற்றுகைகள், சூழல், பங்குகொள்வோர், பண்பாட்டில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனையும் ஆய்வு செய்கின்றது.

**சடங்கில் சுவை, மணம், தொடுதலை விளங்கிக் கொள்ளல்**

சடங்கில் உணர்வுகளைத் தூண்டும் பல செயற்பாடுகள் நிகழ்கின்றன. அவை பார்த்தல், கேட்டல் போன்றவற்றோடு மட்டுப்படாமல் தொடுதல், நுகர்தல், சுவைத்தல் போன்ற உணர்வுகளைத் தூண்டும் தன்மை மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை சடங்கில் பாரிய பங்களிப்பினைச் செய்கின்றன. சடங்கில் பார்த்தல், கேட்டலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றபோது, இவற்றுக்கு வலுச்சேர்க்கும் அம்சங்களாக தொடுதல், நுகர்தல், சுவைத்தல் ஆகியன அங்கம் வகிக்கின்றன. மட்டக்களப்புச் சடங்குகளில் தொடுகை அல்லது தொட்டு உணர்தல் என்பது மிகவும் முக்கியம் பெறுகின்றது. இத்தொட்டுணர்தல் பல்வேறு வடிவங்களில் செயற்படுவதுடன் குறியீடு, ஆன்மிகம், உளவியல் ரீதியான உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தர்கள் பாதணி இன்றி (Walk barefoot) புனிதமான சடங்கு வெளியில் (Sacred space) செல்வது தொடக்கம் கால், கை, முகம் கழுவுதல், சடங்கு புனித காட்சிப் பொருட்களூடான உறவாடல், திருநீறு, சந்தனம், குங்குமம் நெற்றியில் வைத்தல், பிரசாதம் பெறுதல், தீர்த்தம் பெறுதல் வரை உடல் ரீதியான தொடுகை உணர்வினை உண்டாக்குகின்ற நிகழ்வுகளாக காணப்படுகின்றன.

பங்குகொள்வோர் சடங்கப் பொருட்களை (Sacred objects) கையாளுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனூடாக குளிர்ச்சி, சூடு, உலோகம் சார்ந்த விடயங்கள் பங்குகொள்வோரை சடங்கச் சூழலுடன் தொடர்புபடுத்துகின்றமையினைக் காணமுடிகின்றது.

இத்தொடுகை உணர்வு ஆற்றலைத் தூண்டுதல், பரிமாற்றம் செய்தல், நம்பிக்கையூட்டல், ஆன்மிக சமநிலையை மீட்டெடுத்தல் போன்ற சடங்கோடு தொடர்புடைய பல நெருக்கமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. தொடுகையோடு தொடர்புடைய செயன்முறைகள் சடங்க வெளியில் ஒருவருடைய இருப்பையும் அவருடைய ஆன்மிக திருப்தியையும் பூர்த்திசெய்வதாக உணர முடிகின்றது.

மணத்தோடு தொடர்புடைய அம்சங்கள் சடங்கில் இரண்டு விதமாகச் செயற்படுகின்றன. அவை உணர்வினைத் தூண்டுவதாகவும் பண்பாட்டின் குறியீடாகவும் விளங்குகின்றன. சடங்கில் தொழிற்படும் நறுமனம் என்பது சடங்க சூழலிலிருந்து பிரிக்க முடியாதவையாகக் காணப்படுகின்றன. இது பழைய நினைவுகளைத் தூண்டுபவையாக, மனநிலையினை மாற்றுபவையாக, புனிதத்தின் இருப்பைக் குறிப்பவையாகக் காணப்படுகின்றன. இங்கு சம்பிராணி, மணகுச்சி (Incense sticks), கற்பூரம், பண்ணீர், சந்தனம், குங்குமம், பழங்கள் போன்றவற்றின் மணங்கள் சடங்கவெளியில் நிரம்பி, பங்குகொள்வோரை இன்னொரு உலகிற்குக் கொண்டு செல்வதனைக் காணலாம். இவ்வாறான அனுபவம் சடங்க வெளியில் மாத்திரமே சாத்தியம் எனலாம். சதாரண வெளி சடங்க வெளியாக மாறும் தன்மையானது ஆழ்ந்த உணர்வுபூர்வமான, ஆன்மிகச் சூழலை உருவாக்கின்றது. பக்தர்கள் பார்வை, ஒலிக்கு அப்பால் மணங்கள் ஊடாக சடங்கினைப் புரிந்துகொள்கின்ற தன்மையினைக் காணலாம். தெய்வங்களுக்குப் படைக்கின்ற, சாத்துகின்ற அல்லது கொடுக்கின்ற (Offerings) பூக்கள், பூமாலைகள், துளசி, சந்தனம் போன்றவை வலு மிகுந்த இனிமையான நறுமணங்கள் சடங்குச் சூழலைப் பங்குகொள்வோரோடு உணர்வுபூர்வமாக இணைப்பதுடன் நேர்மறையான ஆன்மிக ஈர்ப்பையும் இருப்பையும் உறுதிசெய்கின்றன.

மணங்கள் கடந்த கால நினைவுகளைத் தூண்டி மீட்கின்ற செயற்பாட்டினை மேற்கொள்கின்றன. அதாவது, சிறுவயது அனுபவங்களையும் குறிப்பிடலாம். இவ்வாறான மணங்களின் இணைவு தனிமனித, சமூக உணர்ச்சிவசப்படுகின்ற முதலீடுகளை மேற்கொள்கின்றன. நறுமணங்கள் அழகியலுக்கு (Aesthetic) வலுச்சேர்ப்பது மாத்திரமன்றி, உலகியலுக்கும் (Temporal) நங்கூரமாகச் செயற்படுகின்றன.

சுவை ஒரு நேரடி மற்றும் உள்மயமாக்கல் உணர்வினைத் தூண்டும் (Internalizing sensory act) செயற்பாடாகும். மட்டக்களப்புச் சடங்கச் சூழலில் படையல், காணிக்கை செய்தல் (Food offerings and consumption), உண்ணுதல் என்பன முக்கியமான செயற்பாடுகளாகக் காணப்படுகின்றன. பிரசாதம் தெய்வங்களுக்குப் படைக்கப்பட்டு பின்னர் பக்தர்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக சீனிப் பொங்கல், நீர், பால்சோறு, பழங்கள், உள்ளமுது, பாணக்கம், குழைசாதம், வேப்பிலை பக்தர்களுக்கு வழங்கப்படுவதும் உட்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமன்றி, சடங்கில் அன்னதானம் வழங்குகின்ற நிகழ்வும் இடம்பெறுகின்றமையைக் காணலாம். இவை சடங்கில் புனித நிகழ்வாக, கூட்டு நிகழ்வாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. சடங்கில் வழங்கப்படுகின்ற உண்ணக்கூடிய (Sacred food) பொருட்கள் பாரம்பரிய முறைப்படி, பாரம்பரியமாக உண்ணுகின்ற பொருட்களைக் கொண்டு பரம்பரையாக செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட சுவை சார்ந்த

உணவுகள் குறிப்பிட்ட சமூகத்தினுடைய பண்பாட்டினை அடையாளப்படுத்தி நிற்கின்றன. அதுமாத்திரமன்றி, ஒரு பிரதேசத்தினுடைய நினைவுகளை இவற்றினூடாக வைத்துக்கொள்ளவும் வழிவகுக்கின்றது. இவ்வகை சுவை உணவுகளைத் தயார்செய்கின்றமை, சுவைத்தன்மை என்பன அடையாளத்தினை, பண்பாட்டினைப் பாதுகாக்கும் செயற்பாடாகவும் காணப்படுகின்றன. சடங்கில் சுவை, மணம், தொடுகை அம்சங்கள் காட்சி, கேட்டலோடு பின்னிப்பிணைந்ததாகவே காணப்படுகின்றன. இவை வலுவான, சிறந்த, ஈர்க்கக்கூடிய சடங்கச் சூழலை உருவாக்கின்றன.

**இலக்கிய மீளாய்வு**

மடலினா டயகொனு (2006) அவர்கள் சுவை, மணம், தொடுகை போன்றவற்றின் அழகியல் பிரதிபலிப்பு கூறுவதாவது “கேட்டல், பார்தல் ஊடாக அழகியலை விளங்கிக் கொள்ள முயற்சி செய்கின்றபோதும் சுவை, மணம், தொடுகை ஊடாக அழகியலை விளங்கிக்கொள்வதற்கான தெளிவுத்தன்மை குறைவாகவே காணப்படுகின்றது” ( மடலினா டயகொனு, 2006, 01). மடலினா டயகொனுவின் கருத்துப்படி சுவை, மணம், தொடுகை அழகியல் வெளிப்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவை அழகியல் உணர்வினைத் தூண்டுவதற்கான ஊக்குவிப்பினைச் செய்கின்றன. மனிதனின் உடல் (Body), உணர்ச்சி (Emotion) அவனைச் சுற்றியுள்ள சூழலைச் சார்ந்தே இசைவாக்கமாகக் காணப்படுவதுடன் சுவை, மணம், தொடுகை பண்பாட்டுக் குறியீடுகளாகவும் காணப்படுகின்றன.

சுவை, வாசனை உடனடி அழகியல் அனுபவத்தினை வலுவாகத் தரக்கூடியவை மட்டுமன்றி, உணர்வினை உடனடித் தூண்டலுக்குக் கொண்டு செல்கின்றது. புலன் மற்றும் உணர்ச்சி சார்ந்த மதிப்பீடுகளாக அழகியல் மதிப்பீடுகள் உள்ளன. உணர் திறன் அல்லது புலன்களின் வாயிலாக உணரும் திறன் (லீஸ், அவ்னர் - 1984) என அழகியலுக்கு விளக்கம் தருகின்றார். அழகியல் என்னும்போது கலைக்கும் அழகியலுக்கும் உள்ள தொடர்பினைப் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். கிரிஸ்டினா டைரர் சோவர் (2019) தன்னுடைய கலையில் வாசனை, சுவை என்ற ஆய்வில் கலை அழகியலை வாசனை, சுவை ஊடாக வெளிப்படுத்துகின்றார். குறிப்பிட்ட வெளியை வாசனை, சுவை கட்டுப்படுத்தித் தன் இருப்பிற்குள் கொண்டு செல்கின்றது. அதுபோன்று ஒரு குறிப்பிட்ட விடயத்தினைத் தனித்துக்காட்டுவதில் வாசனை, சுவை முக்கிய பங்கு வகிக்கின்றன. கிரிஸ்டினா டைரர் சோவர் (2019) கருத்துப்படி, வாசனை, சுவை விபரித்தல் மற்றும் பிரதிநிதுத்துவப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன என்கிறார். சுவை, மணம், தொடுகையானது ஞாபகங்கள், உள்மன உருவம், போன்றவற்றைத் தூண்டுவதுடன் வெளி மற்றும் சூழலை வலுவாகக் காட்ட உதவிபுரிகின்றது.

சிந்தனையாளர் ரிச்சர்ட் ஷெஷ்னரின் கருத்துக்களின் அடிப்படையில் பாரம்பரிய ஆற்றுககள் பெரும்பாலும் பார்வையும் சத்தமும் மட்டுமல்லாது மணம், சுவை, தொடுதல் மற்ற உணர்வுகளையும் தீவிரமாகக் கொண்டிருக்கும். இந்த மூன்று உணர்வுகள் வழிபாட்டு நிகழ்வுகளில் உடலை முழுமையாக பங்கேற்கச் செய்கின்றன. மணம் நினைவுகளையும் உணர்ச்சிகளையும் தூண்டும் ஆழமான உணர்வு. சடங்கில் பயன்படுகின்ற மணங்கள் புனிதச் சூழலை உருவாக்குகின்றன. ஷெஷ்னர் இதனை உடலின் மூலம் நிகழும் அனுபவமாக விவரிக்கின்றார். “மணங்கள் அனைத்தையும் சூழவைக்கும், தவிர்க்க முடியாதவை…

ஆற்றுகையில் இது மிகுந்த நெருக்கமான உணர்சிகளுக்கு வழிவகுக்கும்'' (Schechner, 2003, 227). சடங்கில் புனிதமான பொருட்களில் உணவுப் பகிர்வு மூலமாக ஆன்மிக பங்கெடுத்தல் நிகழ்கின்றது. பூசையில் உணவைச் சாப்பிடுவது உடல் மாற்றத்தினையும் உளமாற்றத்தினையும் உருவாக்கும் என்கிறார். தொடுதல் மிகவும் தனிப்பட்ட மற்றும் உடனடி உணர்வு. ஷெஷ்னர் அதனைப் புனிதமானதும் உடலுக்கும் நேரடி அனுபவமாகவும் விவரிக்கிறார். தொடுதல் ஆற்றுகையின் உண்மையைக் கொண்டுவருகின்றது.

தமிழ் மந்திரங்களால் உடுக்கு, தவில் வாத்தியங்கள் ஒலிக்க பூசை செய்து உருக்கொள்வோர்மீது தேவதைகளை ஏற்றி ஆடச்செய்து, அதாவது தெய்வமாடுவோர் ஆவேசம் கொண்டு ஆடத்தக்கதான சூழ்நிலையினை மந்திரங்களினதும் காவியப் பாடல்களாலும் உடுக்கை முதலியவற்றாலும் உண்டாக்கி வைப்பர் (கந்தையா.வி.சி, 1983, ப.137). தெய்வமாடுவோர் ஆவேசம் கொண்டு ஆடத்தக்கதான சூழ்நிலையினை உண்டாக்கி வைப்பர் எனும்போது, இங்கு சடங்கினை நிகழ்த்துவதற்கான சூழல் பல வழிகளில் உருவாக்கப்படுகின்றது என்பது புலனாகின்றது. இதில் சடங்குச் சூழலை உருவாக்கும் முதன்மை அம்சங்களாக சுவை, மணம், தொடுகை போன்றவற்றினை உணர முடிகின்றது.

சடங்கு என்பது வாழ்வியல் குறியீட்டு அம்சங்கள், பொருத்தமான நடத்தை முறைகள் ஊடாக தன்னார்வமாக சமூகங்களால் நிகழ்த்தப்படும் ஆத்மீகமான செயல்வடிவமாகும். சடங்கானது செயற்பாடுகளை அனுபவ வழியில் அறிவது. இதனால் ஒவ்வொரு சடங்குக்கும் ஒரு தனித்த பங்கு, பண்பு, செயல், காரண காரியம் உண்டு எனும் வகையில் ஒவ்வொரு சடங்கும் தனித்த தன்மையினைக் கொண்டது. ''புராதன வெறியாட்டு வழிபாடுகள் இன்றும் உயிர்த்துடிப்புடன் நடத்தப்படுகின்றன'' (மௌனகுரு. சி, 2014, ப.28) என்கிறார். இதனூடாக இன்றும் தனிச்சிறப்புடனும் பாரம்பரியத்துடனும் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன எனக் கருத முடியும். இவை சுவை, மணம், தொடுகையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாமேலா கோவட் கூறும்போது வெளி, உரையாடல், ஆய்வு, கலை, ஆற்றுகையாளர், பார்ப்போர் இவற்றின் உண்மைத்தன்மை காட்சி உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்கின்றார். சடங்கானது கிராம மக்களினால் நிகழ்த்தப்படுவது. இங்கு நிகழ்த்துகையாளர்கள், ஆற்றுகையாளர்கள், பார்போர் எனப் பலர் மறைமுகமாக சடங்குச் சூழலை உருவாக்கின்றனர். இதனால் சுவை, மணம், தொடுகைக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

திருமலை சுந்தாவின் கருத்திற்கமைய ''எல்லாச் சடங்குகளுக்கும் அவற்றிக்கென தனித்தனியே பல சமயச் சடங்குகள் இருப்பதனை நாம் அறிவோம் (திருமலை சுந்தா, 2007, ப.321) இத்தனித்தன்மை சடங்கின் வெளியிலும் அமைப்பிலும் தாக்கம் செலுத்துகின்றது. சடங்கில் புலக்காட்சி மாத்திரமின்றி, புல உணர்வுகளாலும் உணரக்கூடிய தன்மை முக்கியமானதாகும். இங்கு சுவை, மணம், தொடுகை முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. நிகழ்த்துவோர், ஆற்றுவோர், பார்ப்போர் சம வெளித்தளத்திலே சுவை, மணம், தொடுகை அனுபவத்தினைப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

நறுமண நுகர்வு சடங்கோடு பிணைந்த புதிய அனுபவத்தினைத் தருவதோடு தண்ணீர் தெளித்தல், தீர்த்தம் குடித்தல், பொட்டு, சந்தனம், குங்குமம் வைத்தல், பிரசாதம் உண்ணல்

போன்ற பல செயற்பாடுகள், அலகு குத்துதல், காவடி, முள்ளு பாய்ச்சல், கற்பூரச்சட்டி, பிரசாதம் போன்றவை சுவை, மணம், தொடுகையில் உள்ளடக்கப்படுகின்றன. இது மாத்திரமின்றி, ஆற்றுகையாளர்களின் பணிகளைப் பக்தர்களான பார்ப்போர் இணைந்து நிகழ்த்துவதும் சிறப்பிற்குரியது. உதாரணமாக, தீப்பாய்தல், சாட்டை அடித்தல், ஊர் சுற்றல், தீர்த்தம் ஆடுதல் போன்ற பலவற்றைக் கூறமுடியும். இவை தொடுதலின் ஒரு பகுதியாகவே சடங்கில் காணப்படுகின்றன.

**ஆய்வுப் பிரச்சினை/ஆய்வு வினா**

பாரம்பரியமான வழிபாட்டு முறைகளோடு தொடர்புடைய மட்டக்களப்புச் சடங்குகள் பற்றி நுணுக்கமான ஆய்வுகள் இடம்பெற்றபோதிலும், சடங்குச் சூழலையும் உணர்வினையும் உண்மைத்தன்மையில் உருவாக்கம் கொடுக்கும் சுவை, மணம், தொடுகை பற்றிய நுணுக்கமான ஆய்வுகள் இடம்பெறாமை ஆய்விற்கான இடைவெளியாக காணப்படுகின்றது. சடங்கின் சுவை, மணம், தொடுகை உணர்வுகள் தனித்துவமானவை. இவை எவ்வாறு தனித்துவமாக சடங்குச் சூழலையும் ஆற்றுகையையும் வலுப்படுத்துகின்றது என்பதுடன் இவற்றின் வகிபங்கு எவ்வாறானதாகக் காணப்படுகின்றது என்பதனை ஆய்வு வினாவாகக் கொள்ளமுடியும். சடங்காற்றுகையில் சுவை, மணம், தொடுகை ஏற்படுத்தும் தாக்கங்கள், அதன் இருப்பு என்பன ஆராயப்படுகின்றன. சடங்குகளில் பார்வை மற்றும் ஒலி முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால், சுவை, மணம், தொடுகை போன்ற உணர்வுகள் குறைவாகவே கவனிக்கப்பட்டுள்ளன. இவை சடங்குகளின் முழுமையான அனுபவத்தை உருவாக்குவதில் எவ்வாறான பங்கு வகிக்கின்றன என்பது இந்த ஆய்வின் முக்கிய வினாவாகும்.

முக்கிய வினாவாக மட்டக்களப்பின் சடங்குச் செயற்பாடுகளில் தொடுகை, மணம் மற்றும் சுவை எவ்வாறு செயற்படுகின்றன, அவை ஆன்மிக சமூக மாற்றங்களை எவ்வாறு ஊக்குவிக்கின்றன என்பன உள்ளன.

**கருதுகோள்**

சடங்குகளின் முழுமையான அனுபவத்தை உருவாக்குவதில் சுவை, மணம், தொடுகை போன்ற உணர்வுகள் பாரிய பங்குவகிக்கின்றன.

**ஆய்வு முறையியல்**

விளக்கமுறையியல் (Exploratory method) இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative research design) எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்படுகிறது. நேர்காணலும் (Unstructured Interview) குறிப்பிட்ட குழுவினருடனான கலந்துரையாடலும் (Group discussion) ஆய்வுக்கான கருவிகளாகப் (Research tools) பயன்படுத்தப்படுகின்றன. பண்புசார் அடிப்படையில் தகவல்கள் ஆராயப்படுகின்றன. பண்புசார் ஆய்வின் அடிப்படையில் பரிந்துரைகளும் முடிவுகளும் பெற்றுக்கொள்ளப்படும். இவ்வாய்வின் முதலாம் நிலைத் தரவாக பங்குபற்றல், அவதானம், நேர்காணல் என்பனவும் இணையம், வெளியீடுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டாம் நிலைத் தரவாகவும் அமைகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

- சடங்கின் சுவை, மணம், தொடுகை போன்ற அம்சங்களை விளங்கிக்கொள்ளல்.
- சடங்கின் சுவை, மணம், தொடுகை போன்ற உணர்வுகளின் பங்கினை அடையாளப்படுத்துதல்.
- சடங்கின் சுவை, மணம், தொடுகை போன்ற உணர்வுகள் கையாளப்படும் விதத்தினை ஆராய்தல்.
- சடங்குச் சூழலில் சுவை, மணம், தொடுகை போன்ற உணர்வுகளின் முக்கியத்துவத்தினைத் தற்காலத்தில் வழங்குதல்.
- சடங்கின் சுவை, மணம், தொடுகை போன்ற உணர்வுகளில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளத் தூண்டுதல்.

**கலந்துரையாடலும் முடிவும்**

சடங்கானது தனக்காக சூழலைத் தனித்துமாகக் கொண்டுள்ளதுடன் அதனூடாக வழிபாடுகளை முன்னெடுக்கவும் வலுப்படுத்தவும் முனைகின்றது. அந்தவகையில், சடங்கின் ஆற்றுகைக்குப் பல்வேறு அம்சங்கள் துணைபுரிகின்றன. சடங்கில் பயன்படுத்தப்படும் சடங்கோடு தொடர்புடைய காட்சிப்பொருட்கள், தெய்வமாடுபவர்கள், பங்குகொள்வோர், கைப்பொருட்கள், உடை, ஒப்பனை, ஒலி, ஒளி, வர்ணங்கள் போன்ற பார்த்தல், கேட்டல் கூறுகள் சடங்காற்றுகைக்கு உயிர்கொடுக்கின்றன. இருந்தும் இவைகளுக்கு அப்பால் சுவை, மணம், தொடுகை போன்ற அம்சங்கள் சடங்கு வெளியில் கண்களுக்கு மற்றும் காதுகளுக்குப் புலப்படாமல் பாரிய பங்களிப்பினைச் செய்கின்றன. அந்தவகையில், சடங்கில் சுவை, மணம், தொடுகைதான் காட்சிப்பொருட்கள், தெய்வமாடுபவர்கள், பங்குகொள்வோர், கைப்பொருட்கள், உடை, ஒப்பனை, ஒலி, ஒளி, வர்ணங்கள் போன்றவைகளுக்கு உயிர் கொடுக்கின்றன.

சடங்கின் சுவை, மணம், தொடுகை ஆற்றுகைக்காக மாத்திரமின்றி, அதைத்தாண்டி அச்சூழலை இவற்றின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தன்மை கொண்டது. இங்கு சுவை, மணம், தொடுகை ஆற்றுகையோடு மாத்திரம் நின்றுவிடுவதல்ல. பிராதன ஆற்றுகை இல்லாத போதும் அதனுடைய வகிபங்கினைச் சடங்கு வெளியில் நிறைவேற்றிக் கொண்டே இருக்கின்றன. அதாவது, பிரதான சடங்கில் மாத்திரமின்றி, பூசைகள் முடிந்த பிற்பாடும் பார்போர் அல்லது பக்தர்களுக்குச் சடங்குச் சூழலினை (Ritual environment) ஏற்படுத்திக்கொண்டே இருப்பதனைக் காணலாம். சடங்குச் சூழலையும் பங்குகொள்வோரையும் இணைக்கும் முக்கிய செயற்பாட்டில் சுவை, மணம், தொடுகை அம்சங்கள் செயற்படுகின்றன.

சடங்கின் சுவை, மணம், தொடுகை அம்சங்களை ஒரு வரையறைக்குள் கொண்டுவருவது கடினமாகும். மக்கள் அல்லது சமூகம் தங்களுக்கான சொந்தச் செயன்முறைகளூடாக சுவை, மணம், தொடுகை அம்சங்களை வெளிப்படுத்துகின்றனர். வாழ்கையின் சில பிரசன்னத்தைச் சடங்கின் சுவை, மணம், தொடுகை ஊடாகக் கொண்டுவருவதும் சடங்கின் கருவையும் சூழலையும் பண்பினையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனைச் சடங்குகளில் காணலாம். இவை சடங்கு அழகியலுக்கு வலுச்சேர்ப்பவை மாத்திரமின்றி, அழகியலை ஈர்ப்பதற்கான தூண்டுதலை

மேற்கொள்கின்றன. சுவை, மணம், தொடுகை போன்றவை பங்குகொள்வோரின் உள் உணர்வைத் தூண்டி சடங்குச் சூழலோடும் ஆற்றுகையோடும் இரண்டறக் கலக்கின்ற தன்மையினைக் காணலாம். ஒரு சமூகத்தின் பண்பாட்டு முறையினையும் அழகியலையும் புரிந்துகொள்ளச் சடங்கு முக்கிய ஓர் அம்சமாகக் காணப்படுகின்றது. அங்கு உண்மையான வாழ்கைத்தன்மையினைப் பிரதிபலிக்க முயற்சிக்கின்றது. உண்மைத்தன்மை நடத்தையூடாக அல்லது செயற்பாட்டினூடாக கட்டியெழுப்பப்படுகின்றது. இது பார்ப்போர் அல்லது பக்தர்களுக்கு நம்பும் உணர்வைக் கொடுக்கின்றது. இதில் சுவை, மணம், தொடுகை போன்றவற்றின் வகிபாகம் முக்கியமானதாகும்.

சடங்கின் சுவை, மணம், தொடுகை குறியீட்டு அம்சங்களாகவும் செயற்படுகின்றமையினைக் காணமுடிகின்றது. இது குறியீடுகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுதாகும். முக்கியமான அம்சங்களைத் தேர்ந்தெடுத்து சடங்கு வெளியை உருவாக்கப் பயன்படுத்துகின்றன. இத்தன்மை சடங்கில் காணப்படுகின்றது. இந்த அணுகுமுறையூடாக மெய்மை சார்ந்த தன்மைகளைக் குறியீடாக வெளிப்படுத்துவதனைக் காணலாம்.

சடங்கின் சுவை, மணம், தொடுகையில் பரந்துபட்ட சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. தனது பங்கினை முற்று முழுதாகப் பார்வையாளர்களின் சுவை, உணர்விற்கு ஏற்ப அளிக்கின்ற தன்மையினைக் காணலாம். இங்கு வெளிப்படைத் தன்மையினைக் காணமுடிவதுடன் சடங்கில் உணர்வைக் கடந்து ஆழ்மனதில் கற்பனை உலகத்தை ஆராயும் தன்மை கொண்டது. அதாவது, உணர்விற்கு அப்பால் (Unconscious mind) தோன்றும் கற்பனைத்தன்மை உள்மனதுாடாக ஒன்றைப் புரிந்துகொள்ளும் தன்மையினைக் குறிப்பிடலாம். இதனைச் சடங்கு சுவை, மணம், தொடுகை மூலம் உணர முடிகின்றது. இது பார்ப்போருக்கு மாத்திரமின்றி, ஆற்றுகையாளர்களுக்கும் பொருந்தக்கூடியது. சுவை, மணம், தொடுகை சடங்கில் ஆன்மிக உந்துதலையும் உடல் அனுபவத்தின் வழியாக உள்ளார்ந்த மாற்றத்தினையும் ஏற்படுத்துவது மாத்திரமின்றி, மக்கள் வாழ்வில் ஆழமாகவும் பதிந்துள்ளன. தொடுதல் ஆன்மிக அனுபவத்தின் ஒரு நேரடி உடல் செயற்பாடாகும். மணம் உணர்ச்சிகளைத் தூண்டும் மற்றும் நினைவுகளைப் பற்றும் திறமையுடைய உணர்வாகும். சுவை உடலில் நேரடியாக அனுபவிக்கப்படும் உணர்வு. இவை சடங்காற்றுகையினை மேலும் நீட்டிக்கவும் செய்கின்றன.

சடங்கின் சுவை, மணம், தொடுகை ஆற்றுப்படுத்தலை மேற்கொள்கின்றது. இவை பார்வை, ஒலி சார்ந்த புரிதலைவிட ஓர் ஆழமான, தனிப்பட்ட அனுபவத்தினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு இம்மூன்று அம்சங்களான சுவை, மணம், தொடுகை சடங்குகளின் முழுமையை உருவாக்கும் முக்கிய கருவிகள் என இந்த ஆய்வு உறுதிசெய்கிறது. இவ்வாய்வின் ஊடாக சடங்கின் சுவை, மணம், தொடுகை போன்றவற்றினை நோக்கும்போது, தனித்துவமானதும் உணர்வு ரீதியாகவும் அழகியல் ரீதியாகவும் தனது சொந்த அணுகுமுறையினைக் கொண்டும் காணப்படுகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


கந்தையா,வி,சி. (1983). மட்டக்களப்பு இந்து ஆலயங்கள் 1, இந்து சமய திணைக்களம்.

சுகந்தி சுப்பிரமணியம். (2006). மட்டக்களப்பு மாவட்டக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், இலண்டன் தமிழ் இந்து மன்றம்.

திருமலை சுந்தா. (2007). சடங்கு, அம்மன் பதிப்பகம்.

தில்லைநாதன், எஸ். (2008). மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும், எழுத்தாளர் ஊக்கிவிப்பு மையம், மட்டக்களப்பு

நடராசா. F,X,C.(1980). மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்கையும், இந்து வாலிப முன்னணி, மட்டக்களப்பு.

மௌனகுரு,சி. (2014). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், குமரன் பதிப்பகம், கொழும்பு – சென்னை.

Christian Dieter sauer. (2019). Smell and Taste in Arts: Suggestions towards a Systematic Approach, Caththolic University of Eichstatt- Ingolstant, Eichstatt, Germany.

Madalina Diaconu. (2006). Reflections on an Aesthetics of Touch, Smell and Taste, University of Vienna.

Richrd Schechner. (2003). performance theoty, Routledy

Tomaz Toporisic. (2021). Performing Touch and Smell: The liminality, University of Ljubljrana.

# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் இலக்கியச் செல்வாக்கு

**Suthakaran Suvistan**
Postgraduate student, University of Peradeniya.
suthakaransuvistan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஆற்றுகை வடிவமாகவும் இலக்கியப் பிரதியாகவும் விளங்கும் நாடகம், பிற இலக்கிய வகைமைகளின் கூறுகளையும் உள்வாங்கி வளம்பெற்றுள்ளது. ஆற்றுகைக்கென ஆக்கப்படும் நாடகங்களிலும் வாசிப்புக்கென ஆக்கப்படும் இலக்கிய நாடகங்களிலும் பிற பிரதித் தொடர்புகள் மிகுந்துள்ளன. செவ்வியல் மரபிலும் வாய்மொழி மரபிலும் நிலைபெற்றுள்ள தொன்மங்கள், இலக்கியச் செய்திகள், இலக்கியப் பாத்திரங்கள் முதலானவை நாடகங்களாக்கப்பட்டுள்ளதுடன் நாடக உத்திகளுள் ஒன்றாக நாடகங்களுக்குள் தொன்மச் செய்திகள், இலக்கியத் தகவல்கள் முதலானவற்றை இணைத்தலும் இடம்பெறுகின்றன. ஆற்றல்மிக்க நாடக ஆசிரியர்கள் பிற இலக்கிய வளத்தின் கூறுகளைத் தம் நாடகங்களில் வெற்றிகரமாகக் கையாண்டு, நாடகக்கலையைச் செழுமைப்படுத்தியுள்ளனர். அத்தகைய நாடக ஆளுமைகளுள் குழந்தை ம. சண்முகலிங்கம் முக்கியம் பெற்றவராகத் திகழ்கிறார். அவருடைய நாடகப் பிரதிகளில் வெளிப்படையாகவும் குறியீடுகளாகவும் தொன்மங்களும் இலக்கியச் செய்திகள், இலக்கிய மாந்தர்கள் முதலானவையும் இடம்பெற்றுள்ளன. அவை அவருடைய நாடகங்களின் பொருண்மை வெளிப்பாட்டுக் கருவியாகவும் அழகியல் கூறாகவும் விளங்குகின்றன. அவருடைய நாடகங்கள் குறித்துக் கணிசமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஸ்ரீ. கணேசன் (1997), சோ. பத்மநாதன் (1997), சோமசுந்தரம் (1997), அ.யேசுராசா (1997) பா.மோகனதாஸ் (2016) முதலானோரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. இக்கட்டுரைகளில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடக ஆக்கத்தில் இடம்பெறும் இலக்கியச் செய்திகள் பற்றிய பதிவுகள் உள்ள போதிலும், அந்த இலக்கியச் செய்திகளை அவர் ஏன் கையாண்டுள்ளார், நாடகத்தின் பொருண்மை வெளிப்பாட்டுக்கும் அழகியல் முழுமைக்கும் அவை எத்தகைய பங்கினை வழங்கியுள்ளன முதலானவை விரிவாக ஆராயப்படவில்லை. அவற்றை ஆய்வுப் பிரச்சினைகளாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் அன்னையிட்ட தீ (1990), எந்தையும் தாயும் (1992), வேள்வித் தீ (1994) ஆகிய நாடகப் பிரதிகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இந்த ஆய்வு, இந்நாடகங்களில் இடம்பெறும் இலக்கியச் செய்திகளையும் அச்செய்திகள் நாடகத்தின் பொருண்மை வெளிப்பாட்டுக்கும் அழகியல் முழுமைக்கும் ஆற்றியுள்ள பங்களிப்பினையும் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்புசார் ஆய்வாக அமைந்துள்ள இக்கட்டுரை, உள்ளடக்கப் பகுப்பாய்வின்கீழ் விளக்கமுறைத் திறனாய்வு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்*** *: அரங்கு, ஆற்றுகை, இலக்கியச் செய்திகள், பொருண்மை.*

**அறிமுகம்**

வாசிப்புக்கென எழுதப்படும் நாடகங்களிலும் ஆற்றுகைக்கென உருவாக்கப்படும் நாடகப் பிரதிகளிலும் இலக்கியச் செய்திகள் பொருண்மையாகவும் உத்தியாகவும் கையாளப்பட்டுள்ளன. தொன்மங்களையும் இலக்கியச் செய்திகளையும் இலக்கிய மாந்தர்களின் வாழ்வியலையும் நாடகமாக்குதல் எனும் செயற்பாடு நீண்ட காலமாக இடம்பெற்று வருகிறது. அதேவேளை, நாடகங்களின் பொருண்மை வெளிப்பாட்டுக்கும் அழகியலுக்கும் தொன்மச் செய்திகள், இலக்கியத் தகவல்கள் முதலானவை உத்தியாகக் கைகொள்ளப்பட்டு வருகின்றன. பண்டைய தொன்மங்களை மறுவாசிப்புச் செய்தல், தொன்மப் பாத்திரங்களைச் சாமான்ய மனிதராக்குதல், இலக்கியச் செய்திகளைத் தம் தேவைக்கு ஏற்ப விரித்துரைத்தல் முதலான பல உத்திகளை நாடக ஆசிரியர்கள் பின்பற்றி வருகின்றனர். தொன்மச் செய்திகள், இலக்கியத் தகவல்கள் ஊடாக சமகால வாழ்வைப் படைப்பாக்கும் முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன.

ஈழத்தில் மத்திய தர வர்க்கத்தின் தோற்றத்திற்குப் பின்னரே நாடக இலக்கியம் வலுவான கலையாக உருப்பெற்றுள்ளது. மத்தியதர வர்க்கத்திலிருந்து மேற்கிளம்பிய நாடக ஆர்வலர்களே நாடகத்தின் பண்பையும் பயனையும் விளக்கி நாடகத்தைச் சமூகப் பெறுமானம் மிக்க கலைவடிவமாக்கினர். ஈழத்தில் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் சமயங்களுக்கு இடையிலான போட்டியும் சமூக, அரசியல் சீர்கேடுகளும் வலுப்பெற்று இருந்தன. அக்காலத்தவர் நாடகத்தை ஒரு பிரசார சாதனமாகவும் அறப் போதனைக்கான வாயிலாகவுமே கருதினர். இலக்கியங்களில் கூறப்படும் சமயக் கருத்துக்களையும் அறப் போதனைகளையும் நாடகத்திற்குள் புகுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமையினால் நாடகங்களில் இலக்கியச் செல்வாக்கு உயர்நிலை பெற்றது. ஈழத்து நாடக முன்னோடிகள் பலரும் ஏனைய இலக்கிய வடிவங்களின் கூறுகளையும் வளத்தையும் உள்வாங்கிக் கொண்டு நாடகவாக்க முயற்சிகளில் ஈடுபட்டனர். மேலும், இவர்கள் பிற இலக்கியங்களையும் பிற இலக்கிய மாந்தர்களையும் நாடகமாகப் படைத்திருப்பதோடு தங்களுடைய நாடகங்களில் இலக்கியங்களில் வரும் செய்யுள்களை அவ்வாறே புகுத்தியும் தங்கள் தேவைகளுக்கேற்ப இலக்கிய மாந்தர்களை மாற்றி அமைத்தும் நாடகங்களைப் படைத்துள்ளனர். அவர்களுள் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் முயற்சிகள் தனித்துவம் மிக்கனவாக விளங்குகின்றன. அவருடைய நாடகப் பிரதிகளில் வெளிப்படையாகவும் குறியீடுகளாகவும் தொன்மங்களும் இலக்கியச் செய்திகள், இலக்கிய மாந்தர்களின் வாழ்க்கை நிகழ்சிகள் முதலானவையும் இடம்பெற்றுள்ளன. அவை அவருடைய நாடகங்களின் பொருண்மை வெளிப்பாட்டுக் கருவியாகவும் அழகியல் கூறாகவும் விளங்குகின்றன. அந்த இலக்கியச் செய்திகள் நாடகத்தின் பொருண்மை வெளிப்பாட்டுக்கும் அழகியல் முழுமைக்கும் எத்தகைய பங்கினை வழங்கியுள்ளன என்பதைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் அன்னையிட்ட தீ (1990), எந்தையும் தாயும் (1992), வேள்வித்தீ (1994) ஆகிய நாடகப் பிரதிகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இந்த ஆய்வு, உள்ளடக்கப் பகுப்பாய்வின்கீழ் விளக்கமுறைத் திறனாய்வு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**நாடகத்தின் பொருண்மைகள்**

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பழுத்த அனுபவ அறிவிலும் ஆழ்ந்த புலமையிலும் கூர்மையான பார்வையிலும் புடம் போடப்பட்டு உருவான நாடகப் பிரதிகள் ஈழத் தமிழின் வரலாற்றுத் திருப்புமுனைக் காலகட்டமாக விளங்கிய இக்காலகட்டத்தினைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக அமைந்துள்ளன. இதற்குப் பிரதான காரணம் அவர் தெரிவுசெய்து கொண்ட நாடகப் பொருண்மைகளே ஆகும். இவர் தனது நாடகங்களில் சமகால அடக்குமுறைகள், அடிமைத்தனங்கள், சிந்தனைப் பிறழ்வுகள், மூடப்பழக்கங்கள், நம்பிக்கைகள், அகங்கார ஆட்சியதிகாரங்கள், அதனால் பிறந்த அவலங்கள், யுத்த வன்கொடுமைகள், அதனால் உண்டான உடல் உளத் தாக்கங்கள், பெண்ணடிமைத்தனங்கள், பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டுத் தனிமையில் வாழும் முதியவர்களின் அவலம், பிள்ளைகளின் கல்விச் செயற்பாடு மீதான பெற்றோர்களின் திணிப்புகள் முதலான உள்ளடக்கங்களை நாடகப் பொருண்மைகளாக்கினார்.

**அன்னையிட்ட தீ** : போர்ச்சூழலில் வாழ்ந்த மக்களின் உளப் பாதிப்பைப் பற்றி இந்த நாடகம் பேசுகின்றது. நாம் சாதாரணமாக வாழ்வதைப் போல் தோன்றினாலும் நம் உள்ளே, வெளியே பேசப்படாமல் எத்தனையோ மனத் தாக்கங்கள் அடக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கான பரிகாரத்தினை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என்பதே இந்நாடகத்தின் கருப்பொருளாக அமைகின்றது.

**வேள்வித் தீ** : இந்த நாடகம் போர்க் காலச் சூழலில் இராணுவச் சிப்பாய் ஒருவனால் பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்ணின் துன்பநிலையைப் பேசுகின்றது. இத்தகு வன்செயலுக்கு உள்ளான பெண் ஓர் உள ஆலோசகராக இருந்தும்கூட, சமூக மரபுகள் அவளை உளச்சிக்கலுக்கு உள்ளாக்குவதனை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

**எந்தையும் தாயும்** : பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு இங்கு தனித்து வாடும் பெற்றோரின் நிலை இந்நாடகத்தின் கருப்பொருளாக அமைந்துள்ளது. மூன்று குடும்ப உறுப்பினர்களை வைத்துக்கொண்டு இந்தநாடகத்தின் கதைப்பின்னல் உருவாக்கப்பட்டுள்ளது.

**தமிழ் இலக்கியச் செல்வாக்கு**

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் தமிழ் இலக்கியச் செல்வாக்கினை அதிகம் காணலாம். நாடகத்தின் கருப்பொருள், சம்பவங்கள் என்பனவற்றுக்குப் பொருத்தமான முறையில் அவர் தமிழ் இலக்கிய படிமங்களை நாடகங்களில் பயன்படுத்தி உள்ளார். சண்முகலிங்கத்தின் நாடகவாக்க பலம் அவர் பழந்தமிழ் இலக்கியங்களைப் பயன்படுத்தும் முறையாகும். அவருடைய நாடகங்களின் தலைப்புக்களே இந்த உண்மையைக் காட்டுகின்றன.

- எந்தையும் தாயும் - பாரதியார் பாடல்
- அன்னை இட்ட தீ - பட்டினத்தார் பாடல்

தமிழ் இலக்கியங்களை, குறிப்பாக பக்தி இலக்கியங்களை இவர் தனது நாடகங்களில் அதிகம் கையாண்டார். பக்தி இலக்கியப் பாடல்களை தான் கூற வரும் கருத்துக்களில் இருத்தித் தான் கூற வந்த கருத்தின் குறிப்புரையாக்கும் பண்பு இவரிடத்தில் உண்டு. இந்தப் பண்பு சண்முகலிங்கம் அவர்கள் பழைய வேர்களின் அறவாத் தொடர்ச்சியாக நின்று அவற்றை நவீனத்தோடு தொடர்புபடுத்தி நாடகங்களை உருவாக்குகின்ற தன்மையினை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

> "எனது நாடகங்களில் கவிதைகள், நாட்டார் பாடல்கள், தேவார திருவாசகங்கள், பாரதி பாடல்கள், வேறு பலரின் பாடல்களைச் சேர்த்துக்கொள்வது எனது முறையாக உள்ளது. பாடல் வந்தால் அழகாக இருக்கும் என்பதற்காக நான் அவற்றைச் சேர்த்துக் கொள்வதில்லை. இந்நாடகத்தில் திருவாசகம், பட்டினத்தார் பாடல், பாரதி பாடல் ஆகியன இடம்பெறுகின்றன. இவற்றில் நான் தெய்வத்தைக் காண முன்வருவதில்லை. மனித உணர்வுகளும் மனித அவலங்களுமே எனக்கு வெளிப்படுகின்றன. எமது பண்பாட்டின் அடியாக நின்று மனிதனது பாடுகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த இவை எனக்குப் பெரிதும் துணை நிற்கின்றன. எனது பெரும்பாலான நாடகங்களின் பெயர்களும் இந்த அடித்தளத்தில் இருந்து எழுந்தவையே. அன்னை இட்ட தீ என்ற பெயர் இந்நாடகம் சொல்லமுனையும் செய்திகளை எமக்கு மிகத் தெளிவுறச் சொல்லி நிற்கின்றது. பட்டினத்தடிகளின் இப்பாடலின் ஏனைய அடிகள் ஒவ்வொன்றும் நான் கூற முற்படுவதை மிகவும் பொருள் பொதிந்த நிலையில் நின்று அழகுபட வெளிப்படுத்துவனவாக எனக்குத் தெரிகின்றன" (சண்முகலிங்கம், (1997) : 12).

என சண்முகலிங்கம் அன்னை இட்ட தீ நாடக நூலிற்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகின்றார். அன்னை இட்ட தீ நாடகம் சிவபுராணப் பாடலுடன் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இந்நாடக மாந்தர்கள் கோயிலில் வழிபாட்டில் பங்கேற்பர். அம்மாந்தர்களுள் சிலர் அழுகையராகவும் தொழுகையாராகவும் பக்திப் பரவசத்தால் திழைப்பவராகவும் காணப்படுவர். இந்த வகையில், பாத்திரங்களின் செயல்களையும் சம்பவத்தினையும் குறியீடாக மேலும் தெளிவுபடுத்தும் வகையில் இங்கு சிவபுராணம் கையாளப்பட்டு இருப்பதனை நாம் காண முடிகிறது.

இச்சம்பவத்தினைத் தொடர்ந்து அன்னையிட்ட தீ நாடகத்தில் பாடகர் ஒருவர் மேடையின் முன் வந்து,

> பேசாப் பொருளை பேச நான் துணிந்தேன் !
> கேட்கா வரத்தை கேட்க நான் துணிந்தேன்
> மண் மீதுள்ள மக்கள், பறவைகள்,
> விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டுகள், மரங்கள்

யாவும் என் வினையால் இடும்பை தீர்த்தே,
இன்புற்றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா!
ஞானசாகரத்து நடுவே நின்று நான்
பூ மண்டலத்தில் அன்பும், பொறையும்
விளங்குக துன்பமும், பிடிமையும், நோவும்
காவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிர் எல்லாம்
இன்புற்று வாழ்க என்பேன் இதை நீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
“ஆங்கனே ஆகுக” என்பாய் ஐயனே!

என்ற பாடலைப் பாடுவார். இப்பாடல், முன்னர் ஒருவரும் கூறி இருக்காத கருப்பொருளைக் கூற விழைவதனையும் அதில் மக்களின் அவலம் எத்தகையது என்பதனையும் குறியீடாக வெளிப்படுத்துகின்றது. இந்நாடகத்தில் தமிழ் மக்கள் யுத்தத்தினால் பல்வேறு இழப்புகளைச் சந்தித்தனர். அவர்கள் உயிர் மட்டுமல்லாமல், அவர்களது உடைமைகள், இயற்கை வளங்கள் முதலியன பலவும் அழிக்கப்பட்டன. அவர்களுடைய வாழ்வு மிகவும் துன்பத்துக்குரிய ஒன்றாக இருந்தது. இத்தகைய அவலம் இந்நாடகத்தில் ஓர் படிமமாக மேற்குறிப்பிட்ட பாடல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அன்னையிட்ட தீ நாடகத்தில் ஆண்டாளின் நாச்சியார் திருமொழிப் பாடலும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்துப் பாடலும் பார்த்தீபன், ஜானகி ஆகியோரின் திருமண நிகழ்வை எடுத்துக் கூறும் விதமாகக் கையாளப்பட்டுள்ளன.

வாரணம் ஆயிரம் சூழவலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்ற னென்நெதிர்
பூரண பொற்குடம் வைத்து புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

என்ற ஆண்டாளின் பாடலின் ஊடாக ஜானகியின் மனதில் திருமணம் தொடர்பான எண்ணங்கள் எழுவதனை எடுத்துக்காட்டுகின்றார். “முரவியம்பின முருடதிர்த்தன முறையெழுந்தன” என்ற இளங்கோவடிகளின் சிலப்பதிகார பாடலின் ஊடாக திருமண வைபவக் காட்சியினையும் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், அறத்தின்பால் நின்ற கண்ணகி கலங்கி நின்றது போல், ஜானகி தன் கணவனான பார்த்தீபனை இழக்கப் போகின்றாள் என்பதனையும் மறைமுகமாகப் புலப்படுத்தி உள்ளார். திருவாசகப் பாடல்களும் பட்டினத்தார் பாடல்களும் இந்நாடகத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மங்கை தனது இரண்டாவது மகளைக் குண்டுவீச்சில்

பறிகொடுக்கின்றாள். அவளது இறப்பின் ஊடாக தமிழினத்தின்மீதான பேரழிவை, துயர நிலையை இந்நாடகம் கண்முன்னே கொண்டு வருகின்றது. அந்நியரின் கோரத் தீ தமிழர் பிரதேசங்களைத் தீக்கிரையாக்கியதை இந்தச் சம்பவம் வெளிப்படுத்தி நிற்கின்றது. மங்கையின் இரண்டாவது மகள் கெங்காவின் உடலை அடக்கம் செய்யும் காட்சியில் பட்டினத்தாரின் பின்வரும் பாடல் பாடப்படுகிறது:

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்
அன்னையிட்ட தீ அடி வயிற்றிலே
யானுமிட்ட தீ மூழ்க மூழ்கவே

தவநாதனின் இளைய மகன் பகீர் ஹெலிகொப்டர் சூட்டுச் சம்பவத்தில் சிக்குப்பட்டிருக்கும் வேளையில்,

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொடு வித்திக்குருபர என வோதும்

எனும் பாடல் இடம்பெறுகின்றது. இவ்வாறு அன்னையிட்ட தீ நாடகத்தில் பல இலக்கியப் பாடல்கள் உத்தியாகப் பயன்படுத்தப்பட்டு கதை நகர்த்தப்பட்டுள்ளது.

வேள்வித் தீ என்ற நாடகத்தில் குழந்தை ம.சண்முகலிங்கம் திருவாசகப் பாடல்களையும், பாரதியார் பாடல்களையும் நாடகத்தின் கதை ஓட்டத்திற்கு ஏற்ப, பொருத்தமான இடங்களில் கையாண்டுள்ளார். இத்தகு நாடக உருவாக்க முறையானது குழந்தை ம. சண்முகலிங்கத்திற்கு இருக்கும் தமிழ் இலக்கிய பரிச்சயத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இந்நாடகம் போர்க் கால யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு வரலாற்றுப் பதிவாகும். யுத்தத்தின்போது ஏற்பட்ட பல்வேறு அவலங்களை வெளிப்படுத்தும் இவரது நாடகங்களுள் இதுவும் ஒன்று. இந்நாடகம் இராணுவத்தால் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்ட ஒரு குடும்பப் பெண்ணின் கதையைப் பேசுகிறது. இத்தகைய வன்முறையைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டவர்களையும் சமூகம் குற்றவாளியாகத்தான் நோக்குகிறது. என்ற சமூகத்தின் மனநிலையைக் கட்டுடைக்கிறார் குழந்தை ம.சண்முகலிங்கம்.

இந்நாடகத்தின் அவல நாயகியான வாசுகி கொழும்புக்குச் சென்ற தனது கணவனை நினைத்து வீணையை மீட்டிப் பாடுகின்றாள். இந்நாடகத்தின் ஆரம்பப் பகுதியில் வரும் அப்பாடல்,

பச்சைமால் வரை போல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
ஆச்சுதா அமரரேறே
ஆயர்தம் கொழுந்தே தேனே

இச்சுவை தவிர யான்போய்
இந்திரலோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்க மாரருளானே

என்ற ஆழ்வார் பாசுரம் ஆகும். ஊரடங்கு உத்தரவு நேரத்தில் தனித்திருந்த வாசுகியின் வீட்டைச் சோதனை செய்ய வந்த இராணுவ வீரன் அங்கிருந்த வீணையைக் கையில் எடுத்து குலுக்கிப் பார்க்கின்றான். இதனால் வாசுகி அவனிடமிருந்து வீணையைப் பறித்துப் பீடத்தில் வைத்து மூடிவிடுகின்றாள். இந்தச் செயலால் ஆத்திரமடைந்த வீரன் அவளைப் பலாத்காரத்துக்கு உட்படுத்தி வன்செயல் புரிகின்றான். இந்நிலையில், இன்னொருவன் வந்து வீணையைத் தாறுமாறாகத் தட்டிச் சத்தம் எழுப்புகிறான். இவ்வேளை பின்வரும் பாரதியார் பாடல் இசைக்கப்படுகிறது:

“திக்குகள் எட்டும் சிதறி-தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து - வெள்ளம்
பாயுது பாயுது பாயுது - தாம் தரிகிட
தக்கத் தரிந்கிட தித்தோம் -அண்டம்
சாயுது சாயுது சாயுது - பேய் கொண்டு
தக்கை யடிக்குது காற்று - தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட”

இப்பாடல் இடம்பெற்ற வன்செயலை வெளிப்படுத்துவதாகவும் அநீதிக்கு எதிரான புரட்சிக்குரலாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கணவனைப் பிரிந்து வருந்தும் வாசுகியின் நிலையினை எடுத்துக்காட்டப் பின்வருமாறு அமைகின்ற திருவாசகப் பாடலைக் கையாள்கிறார்.

“இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து
நினைப் பிரிந்த
விரிதலை யேனை விடு கண்டாய்
வியன் மூவுலகுக்கு
ஒரு தலைவா மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
பொருதலை மூவிலைவேல்
வலன் ஏந்திப் பொலிபவனே”.
பொருதலை மூவிலைவேல்
வலன் ஏந்திப் பொலிபவனே”

வாசுகியின் துன்பநிலையைக் கண்டு சாகித்தியா, நளாயினி ஆகியோர் ஆறுதல் கூறுகின்றனர். உமது கணவர் ஸ்ரீரங்கன் நல்லுள்ளம் கொண்டவர். எனவே, நீர் இதற்கு வருந்தத் தேவையில்லை. இத்தகு சூழ்நிலையை நன்கு புரிந்துகொள்ளக் கூடியவர். அவரைக் கணவனாய் பெற்றது உம்முடைய பாக்கியம் என்கின்றனர். இந்நேரத்தில் வாசுகிக்குக் கணவனின் நினைப்பு எழுகிறது. இச்சந்தர்ப்பத்தில்,

''காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை என்றால்
பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே
கண்டு மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன் அன்று முதற்கொண்டு
நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்கு
பற்று மிகுந்து வரல் பாக்கிறேன் கண்ணனால்
பெற்றுவரும் நன்மையெல்லாம் பேசி முடியாது
கண்ணை இமையிரண்டும் காப்பது போல் என்குடும்பம்
வண்ணமுறக் காண்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்
நண்பனாய் மந்திரியாய், நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்
இங்கிவனை நான்பெறவே என்ன தவம் செய்தவிட்டேன்
கண்ணன்! கண்ணன்! கண்ணன்!

என்ற பாரதியின் பாடல் இடம்பெறுகிறது. இப்பாடலானது கணவனைப் பிரிந்திருக்கும் வாசுகியின் பிரிவுத்துயரையும் ஸ்ரீரங்கனின் சிறப்பினையும் மறைமுகமாக எடுத்தியம்புகின்றது. இவ்வாறாக வேள்வித் தீ நாடகத்தின் பல இடங்களில் பொருத்தமான முறையில் திருவாசகம், பாரதியார் பாடல் ஆகியவற்றை கையாண்டு நாடகக் கதையை உருவாக்கியுள்ளார். இவ்வுதாரணங்களினுடாக குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் இடம்பெறும் தமிழிலக்கியச் செல்வாக்கினை கண்டுகொள்ள முடிகிறது.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகமானது,

எந்தையும் தாயும் மகிழ்ந்து
குலாவி இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
மடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
வந்தனை கூறி மனதில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனா - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம் என்று
வணங்கேனோ ?

என்ற பாடலோடு ஆரம்பமாகின்றது. இந்நாடகத்தின் கருப்பொருளோடு இப்பாடல் மிகவும் ஒன்றி விடுகின்றது. பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு தனித்திருக்கும் பெற்றோரின் துன்பநிலை இந்த நாடகத்தில் பேசப்பட்டுள்ளது. எனவே, இந்த நாடகத்தின் கருவின் ஒரு முன் குறியீடாக அமைகின்றது. நாடகத்தின் இறுதியிலும் இப்பாடல் மீண்டும் பாடப்படுகின்றது. இந்நாடகத்தின் கருப்பாடலாக இப்பாடல் அமைகின்றது. "இப்பாடல் நாடகத்தில் மீண்டும் பாடப்பட்டபோது அநேகர் இதனை உணர்ந்ததை அவதானிக்க முடிகின்றது. கவிஞர் சோ.பத்மநாதன், ஏ.ஜே.கனகரட்னா, பேராசிரியர் கா. சிவத்தம்பி இதை தமது அபிப்பிராயத்தில் குறிப்பிட்டு இருந்தனர்" (சண்முகலிங்கம், 2008: 44).

"கடைசிப் பாடல் எந்தையும் தாயும் என்கின்ற நாடகத் தலைப்பைத் தெளிவுபடுத்தியது என்பதை க.சிவத்தம்பி குறிப்பிட்டார். பாட்டு கட்டாயம் பாடப்பட வேண்டுமா எனக் கோகிலா மகேந்திரன் கேட்டபோது (13.04.92) ஏ.ஜே.கனகரத்னா அது தீம் சோங் தானே இயல்பானதாகவும் தேவையானதாக இருக்கிறது" (சண்முகலிங்கம், (2008) : 44) எனக் கூறியதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இவ்வகையில், சண்முகலிங்கம் நாடக கருவுக்குப் பொருத்தமான இலக்கிய படிமத்தினைக் கையாண்டுள்ளதனை இங்கு நாம் கண்டுகொள்ள முடிகிறது.

**முடிவுரை**

தமிழர் பண்பாட்டின் கலை வடிவமாகவும், இலக்கிய வடிவமாகவும் விளங்கும் நாடகம் தமிழ் இலக்கிய வரலாற்றுத் தொடக்க காலமாகக் கொள்ளப்படும் சங்க காலம் முதல் தற்காலம் வரை வரலாற்று நீட்சியாக பல மாறுதல்களை உள்வாங்கி வளர்ந்து வந்துள்ளது. மேலும், தமிழர் பண்பாட்டினைக் காத்து நிற்கும் வரலாற்று மூலாதாரமாகவும் கலைப் படைப்பாகவும் திகழ்கிறது. இவ்வாறு திகழ நாடகங்களில் கையாளப்படும் தொன்மங்கள், இலக்கியச் செய்திகள், இலக்கியப் பாத்திரங்கள் முதலானவை பெரிதும் துணை புரிகின்றன. அந்த வகையில், பிற இலக்கிய வளத்தின் கூறுகளைத் தனது நாடகங்களில் வெற்றிகரமாகக் கையாண்டு ஈழத்தில் நாடகக் கலையை செழுமைப்படுத்தியவராக குழந்தை ம. சண்முகலிங்கம் விளங்குகிறார். ஆண்டாளின் நாச்சியார் திருமொழி, சிலப்பதிகாரம், திருவாசகம், பட்டினத்தார் பாடல், பாரதியார் பாடல்கள் எனத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றின் கூறுகளைக் கையாண்டு அன்னையிட்ட தீ, எந்தையும் தாயும், வேள்வித் தீ ஆகிய நாடகங்களினைக் காத்திரமான படைப்புகளாகப் படைத்திருப்பதோடு நாடகத்தின் இலக்கிய தரத்தினையும் நாடகப் பொருண்மையையும் கனதியாக்கியுள்ளார்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

சண்முகலிங்கம். ம., (2008), எந்தையும் தாயும், யாழ்ப்பாணம்.

சண்முகலிங்கம். ம., (1997), அன்னையிட்ட தீ, கலை இலக்கியப் பேரவை, கொழும்பு.

அகிலன். பா., (2021), குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்கள் ஐந்து, புத்தகக் கூடம், யாழ்ப்பாணம்.

சொக்கலிங்கம். க., (1977), ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

மௌனகுரு. சி., நாடகம் - அரங்கியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

# தலித்திய நோக்கில் கந்தன் கருணை

**K.Nilaxsan**

Department of Tamil, Faculty of Arts, University of Peradeniya.

knnilax5@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அம்பேத்கர் நூற்றாண்டு எழுச்சிக்குப்பின் ஏற்பட்ட எதிர்ப்பு அரசியலின் ஒரு வடிவமாகவே தலித் அரங்கு இந்தியாவில் வளர்ச்சி பெற்றது. தலித் அரங்கானது நாடகச் சூழலிலுள்ள ஏனைய அரங்குகளிலிருந்து மாறுபட்ட தன்மை உடையது. இந்த அரங்கானது இந்தியாவில் வளர்ச்சி பெற்றுப் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியபோதும் இலங்கையில் தலித் அரங்கு என்ற தனித்தொரு தன்மையான வளர்ச்சியில் முனைப்புப் பெறவில்லை. ஆனால், சமூக மாற்றத்திற்கான அரங்கு என்ற தன்மையில் தலித் அரங்களுடனும் ஒத்துப்போகக்கூடிய கூறுகளுடன் அரங்கச் செயற்பாடுகளை நிகழ்த்தி வருகின்றது. சமூக மாற்றத்திற்கான அரங்கு பேசும் முக்கிய பொருண்மைகளாக இன விடுதலை, சாதிய விடுதலை, பாலின விடுதலை போன்றன காணப்படுகின்றன. இப்பொருண்மையில் எழுந்த ஈழத்தின் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் தலித்திய நோக்கில் வெளிவந்தபோதும் ஈழத்தில் நாடகங்கள் கணிசமாக வெளிவரவில்லை. இலங்கையில் மக்களுடைய விடுதலைக் கருத்தியலை அடியொட்டி படைப்பு இலக்கியத் தளத்திலும் விமர்சனத் தளத்திலும் இயங்கிய ஆளுமைகளுள் என்.கே.ரகுநாதன் முக்கியமானவர். இவருடைய கந்தன் கருணை நாடகத்தினை நெல்லியடி அம்பலத்தாடிகள் குழு சார்பில் இளைய பத்மநாதன் காத்தான் கூத்துப் பாணியில் மேடையேற்றினார். கந்தன் கருணையின் எழுத்துரு மற்றும் ஆற்றுகை பற்றிக் கைலாசபதி, சி.மௌனகுரு (1992), இளைய பத்மநாதன் (1999), இ.முருகையன் (2002), சி.கா.செந்தில்வேல் (2003) போன்றோர் ஆய்வு மனப்பாங்கில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இந்த ஆய்வுகளில் பெரும்பான்மையானவை சமூகவியல் நோக்கில் கந்தன் கருணையின் உள்ளடக்கம் குறித்து வெளிவந்துள்ளதே தவிர, தலித்திய நோக்கில் வெளிவரவில்லை. இதனையே ஆய்வு இடைவெளியாக இவ்வாய்வு கொண்டுள்ளது. கந்தன் கருணை குறித்து வெளிவந்த எழுத்துக்களான க.கைலாசபதியின் நாடகத்திற்கு ஓர் அறிமுகம், இளைய பத்மநாதனின் புதுவசந்தம், சி.மௌனகுருவின் பழையதும் புதியதும் போன்றன தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியல் சார்ந்த கருத்தை வெளிப்படுத்தி இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை பிம்பமாக இருக்கின்ற தலித்திய நோக்கில் அவை அணுகவில்லை. எனவே, கந்தன் கருணை நாடகமானது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான கருத்துகளை எவ்வாறு வெளிப்படுத்தி உள்ளது என்பது இங்கு ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. தலித்திய விமர்சன முறையில் ஆராயப்பட்டுள்ள இந்த ஆய்வு சமூகவியல் அணுகுமுறையின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. கந்தன் கருணை நாடகமானது தலித்திய மக்களின் வாழ்வையும் விடுதலைக்கான கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளதோடு சாதிய விடுதலை மற்றும் பொருளாதார சமத்துவம் ஆகியவையே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலையாக அமையும் என்பதை இந்நாடகம் அழுத்தமாக வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள் :*** *தலித் அரங்கு, கந்தன் கருணை, சாதியம், ஒடுக்கப்பட்ட மக்கள்.*

**அறிமுகம்**

தலித் என்பது ஓர் அரசியல் உணர்வு. தலித் என்ற மராட்டியச் சொல் ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட, நசுக்கப்பட்ட வருணப்பாகுபாட்டின் அடிப்படையில் சாதிய ஒடுக்குமுறைக்குள்ளான மக்களைக் குறிக்கும் பொதுமையான சொல்லாகத் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தலித் அரங்கு என்பது ஆதிக்கச் சக்திகள் நிறம், வர்க்கம், தேசியம், பால், சாதி, மதம், பெரும்பான்மை ஆகிய எந்த வடிவில் வெளிப்பட்டாலும் அவற்றுக்கு எதிரான கலக மனப்பான்மையினைக் கட்டமைக்க முயல்கிற ஒரு கருத்தாயுதம் என க.பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றார். தலித் அரங்கு சாதிய ஒழிப்பை முன்னிறுத்திச் சமத்துவம் என்ற தத்துவத்தை உள்ளீடாகக் கொண்டு, சாதி ஆதிக்கத்திற்கு எதிரான கலகத்தை மூட்டிவிடுகிற மற்றும் தலித் மக்களைச் சாதிப் பிடியிலிருந்து விடுவிக்கிற விடுதலை அரங்காகும். தலித் மக்களின் வாழ்க்கையிலிருந்து உருவாகும் அரங்கு சமத்துவம், சுதந்திரம், தன்மானம், சமூக அங்கீகாரம் ஆகியவற்றை நோக்கி நகர்வதோடு ஆதிக்கச் சாதி மரபு, வேதாந்த மரபுகளைக் கேள்விக்குள்ளாக்குவது, சாதியத்தை அழிப்பது, புதிய பண்பாட்டுத் தளங்களைக் கட்டமைப்பது, விடுதலைக்கான விதைகளை விதைப்பது என்பதான இலக்குகளைக் கொண்டிருக்கிறது.

தலித் மக்கள் இந்தியாவில் சாதியப் படிநிலைக் கட்டமைப்பில் அடித்தள மக்கள் என்று பொதுவாக அடையாளப்படுத்தப்படுவார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள், நசுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்டோர், தீண்டத்தகாதவர்கள், பஞ்சமர்கள் என்றும் தலித்துக்கள் குறிப்பிடப்படுவதுண்டு. தலித் மக்களினை அம்பேத்கர் தனது எழுத்திலும் பேச்சிலும் வரலாற்றுப் பின்னணியுடன் விளக்கினார். அவர் ஆரம்பித்து வைத்த விடுதலைச் சிந்தனையை, அவரது நூற்றாண்டு விழாவிற்குப் பின் (1991) தலித் சிந்தனையாளர்களும் தலித் தலைவர்களும் முழு வீச்சோடு முன்னெடுத்துச் செல்ல தலித் இலக்கியம் தோற்றம் பெற்றது. இலக்கியப் பண்பாட்டு எழுச்சிகளின் காரணமாகத் தலித் அரங்கியல் உருப்பெற்றிருக்கிறதுஎனக் கூறலாம்.

தலித் அரங்கு அம்பேத்கர் நூற்றாண்டுக்கு முன் தோற்றம் பெறவில்லை என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் "அறிஞர் அம்பேத்கர் நூற்றாண்டுக்கு முன் புதுதில்லி தேசிய நாடகப் பள்ளி திண்டுக்கல் காந்தி கிராமத்தில் 1978 இல் நடத்திய பத்து வார கால நாடகப் பயிற்சிக்குப் பிறகு நவீன நாடக அரங்கச் செயற்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டன. வெ.மு.சாசகான், கனியின் புகை (1978), பரட்டையின் விடாது சிவப்பு (1979), மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் பெல்ச்சி (1979), மு. இராமசுவாமியின் நியாயங்கள் (1980), கிளேரின் யார் அந்த மாய உருவம் (1992), இந்திரா பார்த்தசாரதியின் நந்தன் கதை (1986), பிரளயனின் மாநகர் (1998), நெம்புகோல் அமைப்பின் இட ஒதுக்கீட்டுப் போர் (1989), கடிதம் (1989), சென்னைப் பல்கலை அரங்கத்தின் கண்களுக்கு அப்பால் (1989), அறிவர் அம்பேத்கர் நூற்றாண்டுக்கு முன் பரவலாக நிகழ்த்தப்பட்டன. பெரும்பாலான இந்நாடகங்கள் தலித்துகளின் வாழ்வு, பண்பாடு, அரசியல், வன்கொடுமைகள், மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தின" (சின்னப்பன், 2023: 21) .

ஈழத்திலும் தீண்டாமைக்கெதிரான போரில், பொதுவுடைமை இயக்கங்களும் கலை இலக்கியங்களும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளன. இலங்கையின் நாடக வரலாற்றில் ஐம்பதுகளின் பின்னர் ஏற்பட்ட தேசிய எழுச்சி காரணமாக பேராசிரியர் சரச்சந்திராவினால்

மரபுகளின் ஊற்றின் அடியாக சிங்கள நாடக அரங்கு புத்தாக்கம் பெற்றது. இதன் தாக்கம் தமிழ் நாடக அரங்கிலும் எதிரொலித்தது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் மரபுவழிப்பட்ட வடமோடி, தென்மோடிக் கூத்துக்களை நகரப் பார்வையாளர்களுக்காக படச்சட்ட மேடையில் குறுகிய நேரத்துக்கெனத் தயாரித்து அளித்தார்.

அறுபதுகளின் பின்னர் சமூக மாற்றத்திற்கான அரங்கு முனைப்புப் பெற்றது. சமூக மாற்றப்பணியில் மக்களை ஒருங்குதிரட்டுவதற்கும், ஒருங்குதிரட்டி அவர்தம் பிரச்சினைகளையும் அவர்களிடத்திலிருந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆற்றல்களையும் உணரப்பண்ணுவதற்கும் கலைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கலை நிலைப்பாடு ஆகும். ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் இக்கலை நடவடிக்கையின் மூலம் அந்த மக்கள் தமது வாழ்வினைப் பாதிக்கின்ற சமூக-பண்பாட்டு யதார்த்தம் பற்றியதும், அந்த யதார்த்தத்தை மாற்றுவதற்கான தமது ஆற்றல் பற்றியதுமான ஆழ்ந்த பிரக்ஞையைப் பெறுவார்கள். அது மக்களுக்குத் தன்னைத்தானே அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒழுங்குபடுத்திக் கொள்வது போலவே பண்பாட்டு ரீதியாகவும் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்வது அவசியமாகும்.

அறுபதுகளின் பின்னர் கூர்மையடைந்த சாதிப் போராட்டம் பரவலடைந்தது. ஈழத்தில் தீண்டாமைக்கு எதிரான போரில் முக்கியமாக கந்தன் கருணை (1969), சங்காரம் (1980), குடிநிலம், கோபுரவாசல் (1969), கோடை (1966) ஆகிய நாடகங்களின் மூலம் தமது பங்களிப்பைச் செலுத்தின. மேற்குறிப்பட்ட நாடகங்கள் சமூக மாற்றத்துக்கான அரங்கு என்ற தொனிப்பொருளில் ஈழத்து நாடகச் சூழலில் செயல்பட்டு வந்தாலும், அவை இந்தியாவின் தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற தலித் அரங்குடன் ஒத்துப்போகின்ற தன்மையைக் காணமுடிகின்றது. எனவே, கந்தன் கருணை நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு தலித் அரங்கக் கூறுகள் ஈழத்து நாடகச் சூழலில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பது இங்கு ஆய்வு செய்யப்படவுள்ளது.

**கருத்துரை**

இலங்கையில் வடபகுதியில் நிலவுடைமைச் சமுதாயத்தின் சாதிய முறையும் தீண்டாமைக் கொடுமைகளும் நிலவி வந்த வண்ணமே உள்ளன. குறிப்பாக, யாழ்ப்பாணத்தின் சாதிப் படிநிலையில் தமிழ் நாட்டினைப் போல உயர் அந்தஸ்தில் பிராமணர்கள் கருதப்படுவதில்லை. மாறாக, வெள்ளாளர்களே கருதப்படுவர். வெள்ளாளர்களின் கோயில் தொண்டுழியப் பூசகர்களாகவே பிராமணர்கள் இருக்கிறார்கள். “இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் பொருளாதாரம், கல்வி, ஆன்முகத்தனம் ஆகியவற்றுடன் அரசியல் அதிகாரம் உள்ளிட்ட அனைத்திலும் வெள்ளாளரே மிக உயரிய இடத்தினை தக்கவைத்து வருகின்றனர்” (இரவீந்திரன், 2014 : 24).

வெள்ளாளர்கள் தமது சர்வாதிகாரக் கட்டமைப்பில் நீண்ட காலமாக சாதிய அடக்குமுறைகளையும் தீண்டாமைக் கொடுமைகளையும் நிகழ்த்தி வருகின்றனர். இந்த அவலத்திற்கு எதிராக ஈழத்தில் தனிமனிதனாலோ, அமைப்புகளினாலோ, வேறு சாதியினராலோ எதிர்ப்புகளும் கிளர்சிகளும் இடம்பெற்று வருகின்றன. அறுபதுகளின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வெள்ளாளர்களினால் மிகவும் உச்சகட்ட நிலையில் சாதி ரீதியாக மக்கள்

ஒடுக்கப்பட்டார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் சாதி வெறியர்களையும் பிற்போக்குவாதிகளையும் எதிர்த்துப் பல போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சாதி ரீதியான அடக்குமுறையின் உச்சகட்ட செயற்பாடாக யாழ்ப்பாணத்தில் ஆலயப் பிரவேசம் குறித்துச் சாதி வெறியர்களினால் பல நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. குறிப்பாக மாவிட்டபுரம், பன்றிதலைச்சி, செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்களுக்கான பிரவேசம் குறிப்பிட்ட சாதியினருக்குத் தடைசெய்யப்பட்டபோது, போராட்டம் பல இடங்களில் வெடித்தன. இப்பின்னணியில் 1969 ஆம் ஆண்டு என்.கே.இரகுநாதன் அவர்களினால் எழுதப்பட்ட சமூக மாற்றத்திற்கான நாடகமே 'கந்தன் கருணை' ஆகும்.

இந்நாடகம் எழுந்த காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தீண்டாமை உச்சம் பெற்று காணப்பட்டது. இந்நாடகம் ஆலயத்திற்குள் செல்ல விடாது தாழ்த்தப்பட்ட மக்கள் வழி மறிக்கப்படுவதும், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆலய வாசலில் நின்று முருகனின் நாமத்தையும் பஜனைகளையும் பாடித் துதிக்க, முருகனும் நாரதரும் மாறு வடிவம் கொண்டு நிகழ்கால சூரனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு இறுதியிலே சாதி வெறியர்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் கையில் தனது வேலைக் கொடுத்துத் தீண்டாமையை அழிக்க ஆயுதத்தை கையில் எடுக்கச் சொல்லித் தூண்டுவதாக அமைகின்றது.

இந்நாடகத்தின் ஆற்றுகை முதலில், நெல்லியடி அம்பலத்தாடிகள் சார்பில் இளைய பத்மநாதன் இதனைக் காத்தான் கூத்துப்பாணியில் உருவமைத்து வடபுலத்தின் பல பகுதிகளிலும் மேடையேற்றினார். நாடகம் நூலாகவும் வெளியிடப்பட்டது. பேராசிரியர் சி.மௌனகுரு, அ.தார்சீசியஸ், குழந்தை ம.சண்முகலிங்கம் மற்றும் பல முன்னணி நாடகக் கலைஞர்கள் ஒன்றிணைந்து, நாடகத்தை மோடியுற்ற வடிவில் நெறிப்படுத்தி, பேராதனைப் பல்கலைகழகம், கொழும்பு சரஸ்வதி மண்டபம் உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் மேடையேற்றினர். சமகாலப் பிரச்சினையொன்றை முன்னெடுத்து அதனை மக்கள் மத்தியில் பரப்பியதன் மூலம், அந்தப் பிரச்சினையை வென்றெடுக்கச் சகல மக்களையும் அணி திரட்டிய சிறப்பு இந்நாடகத்துக்குரியது.

**தலித்திய நோக்கில் கந்தன் கருணை**

நாடகக்கலை என்பது பொழுதுபோக்கு, கருத்து, காட்சிப்படுத்துதல் என்ற தளங்களில் இயங்கினாலும் சமூகச்சிந்தனைகள், சமூக மாற்றங்கள், பண்பாட்டுத் தளங்கள், அறிவியல் வளர்ச்சி இவற்றிற்கு ஏற்பச் சொல்லப்படும் பொருண்மை, வெளிப்படுத்தும் முறைமை, அதற்கான இடம், நடிகர், ஆசிரியர் என ஒவ்வொன்றிலும் படிப்படியாகக் காலந்தோறும் மாற்றம் அடைந்து வந்திருக்கக் காணமுடிகிறது. மாற்றம் அடைந்து வந்தாலும், பண்பாட்டின் மீட்சியாக நாடகக் கலையில் புத்தாக்கம் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில், தலித் அரங்கானது பாட்டாளி வர்க்க அரங்கிலிருந்தும் தெருவெளி அரங்கிலிருந்தும் ஜனரஞ்சக அரங்கிலிருந்தும் மூன்றாம் வகை அரங்கிலிருந்தும் நாட்டுப்புற அரங்கிலிருந்தும் அபத்த அரங்கிலிருந்தும் பெண்ணிய அரங்கிலிருந்தும் தனக்கான கூறுகளை எடுத்துக்கொண்டு நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்குமாக இயங்குகிறது. இத்தன்மைகளுடன் ஈழத்தின் சமூக மாற்றத்திற்கான அரங்கு என்ற தொனிப்பொருளில் மேடையேறிய கந்தன் கருணை நாடகம் எவ்வாறு ஒத்துப் போகின்றது என்பது இங்கு நோக்கப்படவுள்ளது.

**நாடகத்தின் பொருண்மை மற்றும் தலித் விடுதலை**

தலித் அரங்கானது, கதைகூறல் முறையிலும் வட்டார மொழியைக் கையாளும் முறையிலும் மேடையின் ஒழுங்கமைவு முறையிலும் பிற அரங்கிலிருந்து வேறுபட்டு அமைகிறது. எனினும், தலித் நாடகங்கள் பிற நாடகங்களிலிருந்து வேறுபடுவது உள்ளடக்கத்தில்தான். தலித் நாடகங்களுக்கான கருக்கள் வெளிப்படையானவை. அவை ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை உள்ளடக்கங்களாக கொண்டிருக்கும். எனவே, தலித் நாடகங்கள் என்பது, சாதியமைப்பைக் கேள்விக்குள்ளாக்கி, நீயும் நானும் மனிதர்கள் என்ற கருத்தினை வலியுறுத்துவது, சுயமரியாதையைப் பிறர் உணரச் செய்வது, மனசாட்சியைத் தட்டி எழுப்புவது, வரலாற்றை மீண்டும் கட்டமைப்பது, மறுக்கப்பட்ட தலித் அடையாளத்தை மீட்டுருவாக்கம் செய்வது, பொருளாதாரச் சமத்துவமும் உற்பத்தியில் பங்கீடும் கோருவது, ஒடுக்குதலுக்கு எதிரான அரசியல் விடுதலை மற்றும் தலித் தலைமையை முன்வைப்பது முதலிய கருத்துக்களை முன்வைக்கின்றது எனலாம்.

கந்தன் கருணை நாடகத்தின் உள்ளடக்கமானது ஒடுக்கப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேசத்தை மூர்க்கத்தனமாக எதிர்த்து, சாதி வெறியர்களும் பிற்போக்கு வாதிகளும் கடவுளின் பெயரில் ஆலயத்தின் முன் வியூகம் அமைத்து நின்றபோது, அந்தக் கடவுளே வந்து எல்லோரும் சமம் என்ற தத்துவ அடிப்படையில் சமகால சூரனுடன் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமையைக் கோருகிறார். அவர்களுக்கு மறுக்கப்பட்ட ஆலய பிரவேசத்தைத் தட்டி கேட்கிறார். இதனை,

சூரன் : தட்டாமல் வெளியே போடா நளவா. நீயும் தட்டாமல் வெளியே போடா.

பக்தர் : கோயிலுக்குள் வணங்க வந்தோம். கதவு தாண்டிக் கோயிலுக்குள் சென்றிடுவோம்.

கந்தன் : தந்துவிட்டேன் இன்றே தந்துவிட்டேன்-எந்தன்
தந்தை தந்த சக்தியைத் தந்துவிட்டேன்.
சங்கரன் தான் தந்த சக்தி வேலை-இன்றே சமத்துவம்
காண்பதற்கே தத்துவிட்டேன்.

என்ற வரிகளினூடாக அறியலாம். இங்கு “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்கின்ற சங்ககால சமத்துவக் கொள்கைக்கு ஏற்ப, பழந்தமிழர்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் கட்டமைக்க முயற்சி செய்கிறார். இவ்வாறு தலித் அரங்கு பேசுகின்ற உள்ளடக்கப் பகுதியைக் கந்தன் கருணை நாடகமும் தெளிவாகக் கொண்டிருப்பது இங்கு உறுதி செய்யப்படுகிறது.

**வெளி**

சாதியப் படிநிலையில் தீண்டத்தகாதவர்களென ஒதுக்கப்பட்ட தலித்துகள், தங்களுக்கான வெளியைக் (space) கண்டடைவதற்கும், அந்த வெளியில் அவர்கள் இயங்கவும், தம் சிக்கல்களை வெளிப்படுத்தித் துணிந்து செயல்படவும், தங்களுடைய மொழியை ஒழிவு மறைவின்றிப் பேசவும் தலித் அரங்கவெளி ஒரு களமாக உள்ளது. தலித் அரங்கக் கலைஞர்கள்

தங்கள் வாழ்வோடு இயைந்து விளங்கும் இசைக்கருவிகளின் துணையோடு சுதந்திரமாக இயங்குவதற்கு ஏதுவாகத் தலித் அரங்கவெளி இறுக்கத் தன்மையிலிருந்து விடுபட்டதாக அமைகிறது.

கந்தன் கருணை நாடகத்தின் ஆற்றுகை ஒடுக்கப்பட்டவர்களுக்கான வெளியை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்நாடகத்தின் ஆற்றுகை பாரம்பரியக் கூத்து மரபில், அதாவது காத்தான் கூத்துப்பாணியில் நிகழ்த்தப்பட்டது. இந்த ஆற்றுகை - பார்வையாளர் அனுபவம் பற்றி இளைய பத்மநாதன் குறிப்பிடுகையில்,

"நாடகம் ஆரம்பிக்கும் முன் அண்ணாவியார் காத்தவராயன் கூத்துப் பாடல்கள் சிலவற்றைக் கூத்துக்களை கட்டுவதற்காகப் பாடுவார்.

காவி உடுத்தல்லவோ ஆதிசிவனாரும் - ஒரு
காரணமாய் வேசம்கொண்டார் மாயசிவனாரும்
புலித்தோல் உடுத்தல்லவோ மாயசிவனாரும் - ஒரு
பூரணமாய் வேசம் கொண்டார் மாயசிவனாரும்…..

அப்போது நான் சில நண்பர்களுடன் பேசிக்கொண்டு பார்வையாளர்களுடன் இருக்கிறேன். எமக்கு முன்னாலிருந்த கிழவர், "என்ன இது கந்தன் கருணை எண்டாங்கள். காத்தவராயன் பாட்டுப் பாடுறாங்கள். காத்தவராயன் எங்கட கூத்து, இவையள் என்ன செய்யினம் பாப்பம்" என்று சற்று உரக்கவே கூறுகிறார். அவர் குரலில் ஓர் உரிமைக் கோரிக்கை இருந்ததை உணர முடிந்தது. நாடகம் ஆரம்பிக்கிறது. நாரதர் தோன்றி யாழ்ப்பாணத்திலுள்ள தீண்டாமைக் கொடுமை பற்றி விளக்கிப் பாடுகிறார்.

பள்ளன் என்றும் பறையன் நளவனென்றும் - சாதிகள்
பண்பின்றிப் பலவுண்டு தேவியரே
பள்ளன் என்றால் கிழ்சாதி என்கிறாரே - அவர்
பனையேறும் தொழிலாளி தேவியரே
தமிழர்கள் வகுத்த முறையிதுவே - செய்யும்
தொழிலாலே சாதி கண்டார் தேவியரே

கிழவர் நிமிர்ந்து உட்காருகிறார். "காத்தவராயன் கூத்தில எங்கட பிரச்சினை பேசுறாங்கள்." கிழவர் நாடகத்தில் முழுமையாக மூழ்கிப் போகிறார். நாடகம் கூறும் செய்தியில் மட்டுமல்ல, அதன் உருவத்திலும் அவர் தன்னை அடையாளம் காண்கிறார். "எங்கட கூத்து, எங்கட பிரச்சினை, எங்கள் வாழ்க்கை, எங்கள் அரங்கம், எங்கள் உள்ளடக்கம், எங்கள் உருவம்" என்ற ஒரு நாடகத்தின் முழுமையை இங்குதான் காண்கிறேன். பார்வையாளர்கள் நாடகத்தின் உள்ளடக்கத்தில் மட்டுமல்ல, அதன் அரங்க வடிவத்திலும் தம்மை அடையாளம் கண்டுணர வேண்டும்" (இளைய பத்மநாதன், புது வசந்தம், ப.25)

கூத்தானது ஈழத்தில் அறுபதுகளின் பிற்பகுதியில் தாழ்த்தப்பட்டோரால் ஆற்றுகை செய்யப்படுவது என்ற கருத்து நிலவி அழிவுநிலைக்குத் தள்ளப்பட்டது. ஒடுக்கப்பட்ட

மக்களினுடைய கலை வடிவமான கூத்துப் பாணியில் ஒடுக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினையை மையமாகக் கொண்டு கந்தன் கருணை நாடகமானது நிகழ்த்தப்பட்டதன் மூலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரங்க வடிவமும் அவர்களுக்கான வெளியும் இணங்காட்டப்பட்டுள்ளன.

**பனுவல்**

தலித் நாடகப் படைப்பாளிகள் சாதித் தீண்டாமைக் கொடுமையினால் தங்கள்மீது திணிக்கப்பட்டிருக்கின்ற அவமானங்களைக் களைந்தெறியும் வகையில் தலித் நாடகப் பனுவலை உருவாக்குகின்றனர். ஆதிக்கச் சாதியினர் உருவாக்கும் நாடகப் பனுவல்களோ சாதியையும் சாதியைப் பாதுகாக்கும் கூறுகளையும் போற்றுவதாக இருக்கிறது. இது தலித் நாடகப் பனுவலுக்கும் பிற நாடகப் பனுவலுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடாகும். நாடகம் முடிகிற இடத்தில் பார்வையாளனின் சிந்தனை தூண்டப்படுகிறது. இதனால் தலித் அரங்கில் செய்தியைப் பெறுபவர் எதிர்வினை புரிகிறார். தலித் நாடகப் பனுவல்களினைப் போலவே கந்தன் கருணை நாடகப் பிரதி உருவாக்கம் அமைந்து காணப்படுகிறது. இந்நாடகத்தின் மூலக் கதையை எழுதியவர், உயர்சாதியினரால் ஆலய பிரவேசம் மறுக்கப்பட்டு அதன் தாக்கத்தால் இந்நாடகத்தை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

> "1960ம் ஆண்டு உண்மையில் அந்தக்காலப் பகுதியில்தான் மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டம் நடைபெற்றது. எஸ்.ஜே.நாகரட்ணம், தங்கவடிவேல் மாஸ்ரர், டானியல், நான் எல்லாரும் சேர்த்து நடாத்தியதுதான் அந்தப் போராட்டம். அவன்தான் சுந்தரலிங்கம் பொலிசையும் கூப்பிட்டுவைத்துக் கொண்டு கோயிலுக்குள் எங்களைப் போகவிடாமல் வாசலை மறித்துக்கொண்டு நின்றார். நாங்கள் கொஞ்சம் தள்ளியிருந்து ஆர்ப்பாட்டமில்லாமல் பஜனை செய்து கொண்டிருந்தோம். நாங்கள் கோயில் பிரவேசப் போராட்டம் செய்ததினால் அவர்களுக்கு அந்த வருடம் தேர்த் திருவிழாவோ சர்ப்பரத் திருவிழவோ செய்யமுடியவில்லை. கோயில் குருமாரும் ஐந்தாறு பொலிசுக்காரரும் சும்மா கோயிலைச் சுற்றிவந்து கொண்டிருந்தார்கள். பல எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் போராட்டம் நிகழ்ந்தது'' (ரகுநாதன், 2011 : 16).

ஒடுக்கப்பட்டவர்களுடைய மனநிலையின் வெளிப்பாடாக நாடகங்கள் உருவாகும்போது, அத்தகைய ஒடுக்குமுறைக்குள் உள்ளான பார்வையாளருடன் நெருங்கிய தொடர்பாடலை ஏற்படுத்திச் சிந்திக்கவும், அவனைத் தன் உரிமைகளுக்காகப் போராடவும் தூண்டுகின்றது. இந்நாடகமும் இதன் தூண்டுதலான "ஆலயப் பிரவேசப் போராட்டங்களும் பிற்போக்குவாதியை, தனது வர்க்க சுபாவத்தின்படி உடனடியாக அடிபணியாவிட்டாலும், மீசையில் மண் ஓட்டாத கதையாக, அடுத்த ஆண்டுகளில் அவன், "சமாதானமாக" ஆலயக் கதவுகளைச் சகல மக்களின் வழிபாட்டுக்கும் திறந்துவிட்டமை, ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்" (ரகுநாதன்., 2003 : 41).

**உடல் மொழி**

தலித் அரங்கம் உடல்மொழியினூடாகச் செய்திகளை வெளிப்படுத்துகிறது. அதிகாரத்திற்கும் சாதிய கூறான ஒடுக்குமுறைக்கும் உட்பட்ட தலித்துகள் அந்த ஒடுக்கப்பட்ட

நிலையைத் தூக்கி எறிவதற்கு உடல்மொழியை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். இந்தியச் சமூகத்தில் சாதியம் உருவெடுக்கும்போது, சாதி அடுக்கின் கீழ்நிலையில் இருக்குமாறு நிர்பந்திக்கப்பட்ட தலித்துகளின் உடல்களின்மேல் ஒடுக்குமுறை ஏவிவிடப்பட்டுள்ளது. தலித்துகளின் நடமாடும் வெளியை வரையறுத்தல், மொழியாடும் வாயைப் பொத்திக் குனிந்து வளைந்து நிற்கவைத்தல், மரத்தில் கட்டிச் சாட்டையடி கொடுத்தல், சாணிப்பாலைக் கரைத்துக் (ஊற்றுதல்) குடிக்கவைத்தல், உடலுக்குப் பக்கபலமாகக் கூடுதலான வலுவைச் சேர்க்கும் ஆயுதங்கள் எதையும் வைத்துக் கொள்ளவிடாமல் பறித்தலெனப் பலமுறையினைப் பயன்படுத்தித் தலித்துகளை ஒடுக்கியுள்ளனர். இவ்வாறு, ஆதிக்க உணர்வுகளின் பல்வேறு தள நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு வந்தவைகளாகத் தலித் உடல்கள் இருந்துள்ளன.

அம்பலத்தாடிகளினால் ஆற்றுகை செய்யப்பட்ட கந்தன் கருணையில் ஈழத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிராக சுடுகாட்டில் சாதி பாரத்தல், தேநீர்க் கடையில் பேணிகளைப் பிரித்து வைத்தல், பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைப் பிரித்து வைத்தல், தண்ணீர்க் கிணறுகளைப் பிரித்து வைத்தல் போன்ற ஒடுக்குமுறைகள் நிகழ்ந்ததைச் சுட்டிக்காட்டியது. அதிலும் ஆலயப் பிரவேசப் பிரச்சினையில் வழிபடச் சென்ற ஒடுக்கப்பட்ட மக்களான அடியவர்களை வேளாளர்கள் தடிகொண்டு அடித்தமை, தீப்பந்தத்தினால் சுட்டமை போன்ற உடல் ரீதியான தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனை,

"…தடி கொண்டே அடித்தாரையோ வேலவா கேளும்
தீயோர்கள் கோயில் முன்னே வேலவா கேளும்
தீப்பந்தத்தாலே சுட்டாரையோ வேலவா கேளும்"

என்ற வரிகள் உணர்த்துகின்றன. காத்தவராயன் கூத்துப் பாணியில் அமையப்பெற்ற கந்தன் கருணை நாடகத்தின் மூன்றாம் காட்சியிலே தலித் கலை வடிவமான கரகாட்டமும் தமிழரின் பாரம்பரிய ஆடலான காவடியாட்டமும் அரங்கேறுகின்றன.

- காவடி ஆட்டம்

"மயிலிற் காவடியாம் முருகனுக்கு - மயிலிற் காவடியாம்
மக்கள் குறை தீர்க்க மனங் கொண்டாடும்
மயிலிற் காவடியாம் - முருகனுக்கு மயிலிற் காவடியாம்….."

- கரகஆட்டம்

"தேடுகினம் தேடுகினம் மாரி தேவி - அம்மா
தேடுகினம் தேடுகினம் தேவி தேவி - அம்மா…….."

இவ்வாறான காவடி ஆட்டம், கரக ஆட்டம் ஒடுக்கப்பட்ட மக்களினுடைய உடல் மொழி கொண்டவையாக சித்திரிக்கப்பட்டுள்ளன. தலித் விடுதலை என்பது, தலித் உடல்சார்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. தலித் கலைகளான பறையாட்டம், கரகாட்டம் முதலியன பெரிதும் உடல்மொழி கொண்டவைகளாக விளங்குகின்றன. எனவேதான், தலித் அரங்கில் உடல்மொழி முதன்மையான இடத்தை வகிக்கிறது.

**இசை**

தமிழ் மக்களின் பண்பாட்டு வாழ்வானது இசையோடு இணைந்தது. தலித்துகளின் வாழ்வும் ஆட்டத்தோடும் பாட்டோடும் நகர்கிறது. தலித்துகளின் வாழ்வில், பிறப்பு முதல் இறப்பு வரை இசை சிறப்பிடம் வகிக்கிறது. அந்த வகையில், தலித் நாடகங்களில் இசை முக்கிய இடத்தை வகிக்கிறது. அடிமைத்தனத்தின் குறியீடாக இருந்த பறை தலித் நாடகத்தில் வீரம், கோபம் என்பவற்றின் எழுச்சியின் குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது. பாத்திரங்களின் மனநிலைகளையும் குணநலன்களையும் பார்வையாளருக்கு உணர்த்த தலித்துகளின் பாரம்பரியக் கலைகளின் ஆட்ட முறைகளுடன் தலித் இசை பயன்படுத்தப்படுகின்றது.

ஈழத்தில் ஆடலும் பாடலும் இணைந்த பாரம்பரியக் கலை வடிவமாக கூத்து காணப்படுகின்றது. கரகம், காவடி, கும்மி, தாலாட்டு, கப்பற் பாட்டு, ஒப்பாரி ஆகிவை ஒடுக்கப்பட்ட மக்களின் கலை வடிவமாக மாற்றம் பெற்றன. இவற்றின் எல்லா மெட்டுக்களையும் சேர்த்துதான் காத்தவராயன் கூத்து பாடல்கள் காணப்பட்டன. இக்கூத்தின் பிரதான வாத்தியங்களாக உடுக்கை, மத்தளம், சல்லாரி என்பன காணப்பட்டன. கந்தன் கருணை நாடகம் காத்தவராயன் கூத்துப் பாணியில் மேடையேற்றம் செய்யப்பட்டபோது, பாடப்பட்ட பாடல்கள் ஒடுக்கப்பட்ட மக்களினை ஒரு மையத்திற்குள் கொண்டு வந்து அவர்களது பிரச்சினையை நினைவுபடுத்தியது. மேலும், உடுக்கு அடியும் மத்தள அடியும் ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளிருந்த கோபத்தையும் உணர்வையும் தூண்டி, தமது பிரச்சினைகளுக்காகத் தாமே போராட வேண்டும் என்ற குணத்தை விதைத்தது.

**தொகுப்பும் மதிப்பீடும்**

அதிகாரமானது மக்கள் கூட்டத்தை ஆயுதங்கள் மூலமும் அழகியல் மூலமும் உளவியல் ரீதியாகவும் ஒடுக்குகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் மனிதனின்மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறைகள், தடைகள், விலக்குதல்கள், ஊக்குவிப்புகள் தண்டனைகள் ஆகியவற்றின் உளவியல் களத்தையே அழகியல் என நாம் காண்கிறோம். ஏற்கனவே இருக்கிற ஆதிக்க அழகியலை மறுத்து, மாற்று அழகியலைக் கட்டமைத்தலே தலித் அழகியலாகும். இத்தகைய மாற்று அழகியல் தன்மையுடனே தலித் நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. தலித் அரங்கு, உண்மை நிகழ்வுகளையும் வரலாறுகளையும் கலாசாரப் பெருமைகளையும் அழகியல் தன்மையுடன் நிகழ்த்திக்காட்டுகிறது. இது போலவே ஈழத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சமூக மாற்றத்துக்கான அரங்கு செயற்பட்டு வருகின்றது.

தலித் அரங்கும் சமூக மாற்றத்துக்கான அரங்கும் சாதிய ஒழிப்பே சமூக விடுதலை என்னும் பண்பாட்டு விழிப்புணர்வின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. இவை சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகும். அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான விடுதலை அரசியலைப் பேசும் இந்த அரங்குகள் ஒடுக்கப்பட்ட மக்கள் அல்லாதவர்களிடம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துக்கான மாற்றுச் சிந்தனைகளை விதைக்கின்றன. தமிழ் நாட்டை போல ஒடுக்கப்பட்ட மக்களுக்கென ஈழத்தில் தலித் என்ற பொதுமையான சொற் பயன்பாடு இல்லாவிட்டாலும், தலித் மக்கள் அனுபவிக்கின்ற பிரச்சனைகளைப் போலவே ஈழத்திலும் ஒடுக்குமுறைக்கு மக்கள் உள்வாங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

கந்தன் கருணை நாடகத்தின் உள்ளடக்கம் தலித்திய வாழ்வின் உள்ளோட்டத்தையும் கதையினுடைய யதார்த்தத்தையும் குன்றாமல் வெளிப்படுத்தி நிற்கின்றது. மக்களின் விடுதலைக் கருத்தியலையும் உள்ளடக்கமாக பொதிந்தும் தந்துள்ளது. விடுதலை உணர்வை உள்வாங்கிய பொருண்மை, வெளி, பனுவல், உடல் மொழி, இசை, அழகியல் ஆகியன அனைத்தையும் தலித்திய மக்களின் வாழ்வின் விடுதலைக்கான கருத்தியல் கூறுகளாக வெளிப்படுத்துகின்றது. மேலும், சாதிய விடுதலை மற்றும் பொருளாதாரச் சமத்துவம் ஆகியவையே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலையாக அமையும் என்பதையும் இந்நாடகம் அழுத்தமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

இப்பின்னணியில் அமைந்த சமூகமாற்ற அரங்கிற்கான கந்தன் கருணை நாடகம் தலித் அரங்கக் கூறுகளுடன் இணைந்து சென்று நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்குமாக செயற்பட்டது. கந்தன் கருணை நாடகம் ஒரு வெறும் நாடகமாக இருந்திருந்தால், அது மறக்கப்பட்டிருக்கும். நாடகம் என்பது வெறும் பொழுதுபோக்கில்லாமல் பண்பாட்டு மீட்சியில் சமுதாயச் சீர்திருத்தத்திற்கான ஓர் ஆயுதம் என்பதை உணர்த்தி நின்றபடியால், மக்கள் எந்த வழியில் செல்லவேண்டும் என்பதற்குக் கந்தன் கருணை ஒரு வழிகாட்டியாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

அம்பலத்தாடிகள், (1972), கந்தன் கருணை (காத்தவராயன் கூத்துப்பாணி இசை நாடகம்), சீறி பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.

இரவீந்திரன்.ந., (2014), சாதி தேசம் பண்பாடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சிதம்பரநாதன்.க., (1994), சமூக மற்றத்திற்கான அரங்கு, சூர்யா அச்சகம், சென்னை.

சின்னப்பன் கு., (2023), தமிழில் தலித் இலக்கியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தேசிய கலை இலக்கியப் பேரவை, (2003), கந்தன் கருணை, கௌரி அச்சகம், யாழ்ப்பானம்.

தேசிய கலை இலக்கியப் பேரவை, (1999), புது வசந்தம், ஒன்லைன் பப்பிளிசேர்ஸ், வவுனியா.

வடு (இதழ் 17), (2011), அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை.

# History and Culture

# பட்டிப்பளைப் பிரதேச விவசாயப் பண்பாட்டில் போடிமாரின் வகிபங்கு

**Vijayareththinam Dishani**

Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

Vdishani14@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தற்கால ஆய்வாளர்கள் மத்தியில் பிரதேசங்களின் வரலாற்றை வெளிக்கொண்டு வருவதற்கு அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் வரலாற்றை அடிப்படையானதாகக் கொள்கின்ற கோட்பாடு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில், பட்டிப்பளைப் பிரதேசத்தில் வாழ்ந்த போடிமாரினுடைய வரலாற்றினையும் பண்பாடுகளையும் ஆழமாக நோக்குவதன் மூலம் அப்பிரதேசத்தினுடைய வரலாற்றை வெளிக்கொண்டுவருவதற்கான முயற்சியாக இவ் ஆய்வு அமைகிறது. எனவேதான், பட்டிப்பளைப் பிரதேசத்தில் வாழ்ந்த போடிமாரின் வரலாறுகளையும் பண்பாடுகளையும் வெளிப்படுத்துவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகிறது. இப்பிரதேசத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த போடிமார் அவர்களின் ஆட்சியை எதிர்த்துள்ளார்கள். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அவர்களிடம் அதிகாரம் பெற்றவர்களான அறுமக்குட்டிப்போடி, கந்தப்போடி, மண்முனைப்போடி, கதிராமப்போடி முதலானோரும் அரசியல் அதிகாரம் பெறாத போடிமார் பலரும் இங்கு வாழ்ந்துள்ளார்கள். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் குஞ்சிலயாப்போடியார், கதிரமலைப்போடியார், வீரபத்திரப்போடியார், வீமாப்போடியார் முதலான போடிமார் வாழ்ந்துள்ளார்கள். இப்போடிமாரில் பெரும்பாலானவர்கள் அம்பிளாந்துறைக் கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள். அதேபோன்று அரசடித்தீவு, பண்டாரியாவெளி, மகிழடித்தீவு, முதலைக்குடா போன்ற கிராமங்களிலெல்லாம் இன்றுவரை பெயர் குறிப்பிடக்கூடியளவு சிறப்பாக வாழ்ந்த போடிமாரின் வரலாறுகள் ஆதாரபூர்வமாக இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் அவர்களின் அரசியல் நிர்வாகச் செயற்பாடுகள், சமூகப் பணிகள், பொருளாதார நடவடிக்கைகள், சமய ரீதியில் அவர்கள் அக்கறையுடன் செயற்பட்டு ஆலயங்களை அமைத்ததுடன் பண்பாட்டு விருத்திக்கு அவர்கள் ஆற்றிய பணிகள் என்பனவும் போடிமாரது வாழ்வியலுடன் இணைந்திருந்த அவர்களது விவசாயப் பண்பாடு, கலைப் பண்பாடு, உணவு முறைகள், ஆடை அணிகலன்கள் போன்ற பண்பாட்டம்சங்களும் ஆய்வுசெய்யப்பட்டுள்ளன. அவை வரலாற்றுத் தகவல்கள், இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்களூடாக உறுதிப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *போடிமார், பண்பாடு, கண்டம், குலவிருது, பட்டி.*

**அறிமுகம்**

இலங்கையினுடைய வரலாறானது விவசாய பாரம்பரியத்துடன் வளர்ச்சியடைந்துள்ளது. அதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டமானது புராதன காலம் தொடக்கம் மரபு ரீதியான பண்பாடுகளையும் வரலாற்றையும் கொண்டுள்ளது. அதிலும் குறிப்பாக, பட்டிப்பளைப் பிரதேசத்திலே நிலமும் வேளாண்மையும் அப்பிரதேச மக்களின் வாழ்வியலுக்கு ஆதாரமாயுள்ளன. புராதன காலம் தொடக்கம் நிலவுடமையாளர்களாகவிருந்த போடிமார் பட்டிப்பளைப் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக மிகுந்த செல்வாக்குச்

செலுத்தியுள்ளனர். அதனுடைய வரலாற்றைப் புராதன இலங்கையில் வளர்ச்சியடைந்திருந்த நிலவுடமையாளர்களுடன் ஒப்பிட்டு ஆராய முடியும். அந்த வகையில், ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் கிராமத் தலைவர்களாக இருந்த கமிக முறைமைக்கும் போடியார் முறைமைக்குமிடையில் நெருக்கமான தொடர்புகள் காணப்படுகின்றன.

பல ஏக்கர் பரப்புடைய வேளாண்மை செய்யக்கூடிய காணிச் சொந்தக்காரர்களை 'போடியார்' என்பர். இதைவிட நிலச் சுவான்தர்கள் எனவும் இவர்களை அழைப்பர். அந்த வகையில், இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்தபோது, இங்கு வேளாண்மைச் சமூகமாயிருந்த முக்குக சமூகத்தின் போடிமாரே இப்பிரதேசத்தின் பெருமளவு நிலபுலன்களைத் தம்வசம் வைத்திருந்ததாக அமெரிக்க பிரிஞ்ரன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி மார்க் விற்றாகர் குறிப்பிட்டுள்ளார் (சிவசண்முகம்,ஞா., 2000, 16).

பட்டிப்பளைப் பிரதேச போடிமாரின் வரலாறானது தொன்மை வாய்ந்ததாகும். இலங்கையை காலனித்துவ ஆட்சியாளர்கள் தங்களின் ஆதிக்கத்திற்குட்படுத்திய காலகட்டங்களிலெல்லாம் காலனித்துவவாதிகளுக்கு எதிராக மட்டக்களப்பில் போராடியவர்கள் போடிமாராவர். போடிமார் பொருளாதார நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபட்டிருக்காமல், இவ்வாறான செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். அத்தோடு கிராமங்களின் தலைவர்களாகவும், ஆலய வண்ணக்கர்களாகவும், பிரதேசத் தலைவர்களாகவும், குற்றங்களை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் நீதிபதிகளாகவும், வட்ட விதானையாளர்களாகவும் பல்வேறு பொறுப்புக்களை நிறைவேற்றுபவர்களாக இந்தப் போடிமாரின் பணிகள் காணப்படுகின்றன. அத்தகைய போடிமாரின் வரலாறுகள் இன்றுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இன்றுவரை அவர்களது அடிச்சுவடுகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அந்தளவிற்குப் போடிமாரினுடைய செல்வாக்கிற்குட்பட்டதாக இப்பிரதேசம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. அதுவே ஒரு பண்பாடாகவும் இருந்து வந்துள்ளது. ஆனால், அவர்களின் ஆரம்பம், அவர்களது வரலாறுகள் இதுவரை முழுமையாக வெளிப்படுத்தப்படாமை பெரும் குறைபாடாக இருந்து வருகின்றது.

பண்பாடு என்பது வாழும் முறையைக் குறிக்கும். அந்த வகையில், போடிமாரின் வாழ்க்கை முறையில் அவர்களது உணவுப் பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், அவர்களின் வழிபாட்டு முறைகள், விவசாய நடவடிக்கைகள், அத்தோடு அவர்கள் சார்ந்த சமூகத்தின் பண்பாடுகள் என்பன தற்காலத்தில் மனிதர்களின் பல்வேறுபட்ட தேவை கருதி வழக்கொழிந்து செல்கின்றன. அவற்றை மீள கொண்டுவராவிட்டாலும், அப்பாண்பாடுகளை மறந்துவிடாமல் ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

கிழக்கிலங்கையின் பட்டிப்பளைப் பிரதேச வரலாற்றில் போடிமாரைப் பற்றிய வரலாறுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. காரணம், இப்பிரதேசம் முழுமையாக விவசாய பண்பாட்டுப் பிரதேசம். ஆகவே, இவ்வாய்வின் மூலமாக பட்டிப்பளைப் பிரதேச வரலாற்றில் வெளிக் கொண்டுவரப்படாமலிருந்த போடிமாரின் வரலாறும் பண்பாடுகளும் வெளிக்கொண்டுவரப்பட்டு, பட்டிப்பளைப் பிரதேசத்தின் வரலாற்றிற்கு இவ்வாய்வு மிக்க பயனுள்ளதாக அமைவதுடன். அப்போடிமார்களது வரலாறுகளையும் அக்காலச் சமூகத்தில் அவர்களூடாக வெளிப்படுத்தப்பட்ட பண்பாட்டு அம்சங்களையும் ஆய்வு செய்வதனூடாக பட்டிப்பளைப் பிரதேசத்தின் வரலாறு

தொடர்பான புதிய பல விடயங்களை வெளிக்கொண்டு வருவதற்கு இந்த ஆய்வு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

மக்கள் மத்தியில் ஆரம்ப காலப் பண்பாடுகளும் வழக்கங்களும் குறைந்து செல்கின்ற இன்றைய கால கட்டத்தில், முற்பட்ட காலங்களில் வழக்கிலிருந்த விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட போடிமார் சமூகத்தின் வரலாறு, அவர்களின் வழிவந்த பண்பாடுகள் என்பன வழக்கொழிந்து சென்றுகொண்டிருக்கின்றன. ஆகையால், அத்தகைய போடிமாரின் வரலாறுகளையும் பண்பாடுகளையும் தேடி ஆராய்ந்து ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வது இவ் ஆய்வின் முக்கியத்துவமாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

**பிரதான நோக்கம்**

பட்டிப்பளைப் பிரதேச போடிமாரின் வரலாற்றையும் அவர்களின் விவசாயப் பண்பாட்டம்சங்களையும் வெளிக்கொணர்வது இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**உப நோக்கம்**

பட்டிப்பளைப் பிரதேச வாழ்வியல், பண்பாட்டம்சங்களை ஆராய்வது இவ் ஆய்வு உப நோக்கங்களாக உள்ளன.

**ஆய்வு வரையறை**

இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பட்டிப்பளைப் பிரதேசத்தினை மையப்படுத்தியதாக அமைகின்றது. இப்பிரதேசத்திலுள்ள முதலைக்குடா, முனைக்காடு, மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, பட்டிப்பளை, அரசடித்தீவு, பண்டாரியாவெளி, அம்பிளாந்துறை, பனிச்சையடிமுன்மாரி ஆகிய கிராமங்களில் இருந்த போடிமாரின் வரலாற்றையும் அவர்களது பண்பாடுகளையும் ஆய்வு செய்வதை அடிப்படையாகக் கொண்டது.

**ஆய்வின் கருதுகோள்**

மட்டக்களப்பு வரலாற்றிலும் பண்பாட்டிலும் பட்டிப்பளைப் பிரதேச போடிமாரின் வரலாறும் பண்பாடும் தனித்துவமானது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வானது விவரண ஆய்வு அணுகுமுறையில், வரலாற்று ஆய்வு நுட்பங்களைப் பின்பற்றிச் செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

மட்டகக்களப்பு வரலாற்றில் பட்டிப்பளைப் பிரதேச போடிமரின் வரலாறும் அவர்களின் விவசாயப் பண்பாடும் முக்கியமானவை. அவை மட்டக்களப்பு வரலாற்றில் முழுமையாக வெளிக்கொண்டுவரப்படாமை ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வு மூலங்கள்**

இவ் ஆய்வின் முதல் நிலைத் தரவுகளாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், நேர்காணல்கள் என்பன விளங்குகின்றன. போடிமாரின் வரலாற்றுத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான இலக்கிய மற்றும் தொல்லியல் சான்றுகள். போடிமார் பற்றி வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை மற்றும் இணையத்தளங்களில் வெளியாகிய கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்விற்கு இலக்கிய மீளாய்வு மிக முக்கியமானதொன்றாகும். அந்தவகையில், ஆய்வாளரினால் இந்த ஆய்விற்கு எடுத்தாராயப்பட்ட நூல்கள் நோக்கத்தின் அடிப்படையில் போடிமாரைப் பற்றி ஆய்வு செய்த நூல்கள் தமது ஆய்விற்காக ஒரு சில போடிமாரைப் பற்றி ஆய்விற்கு பயன்படுத்தி எழுதப்பட்ட நூல்கள் என இரண்டாகப்பிரித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன.போடிமாரை மையப்படுத்தியதாக எந்தவொரு ஆய்வுகளும் வெளிவரவில்லை. ஆகவே, போடிமாரைப் பற்றிய வரலாற்று நூல்கள் இல்லை. நூலாசிரியரின் தேவை கருதி ஒரு சில போடிமாரை ஆய்விற்குப் பயன்படுத்தி எழுதப்பட்ட நூல்களை இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

கோபாலசிங்கம்.எஸ், அவர்கள் எழுதியுள்ள (2005) மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் என்ற நூலில் மட்டக்களப்பு வரலாற்றில் ஒரு பகுதியாக போடிமாரின் வரலாற்றைக் கூறியுள்ளார். எனினும், அதிலே அரசியல் நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்த போடிமாரின் வரலாறுகளையே சுருக்கமாக அவர் ஆராய்ந்துள்ளார். அதில் ஒரு சிலரைப் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

கமலநாதன்.இ.சா. அவர்களின் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற நூலில் அறுமக்குட்டிப் போடியாரினதும், கந்தப்போடியாரினதும் வரலாற்றுக் கதை மாத்திரம் கூறப்பட்டுள்ளது. அத்தோடு அவர்களைப் பற்றிய தகவல்களும் விரிவாக கூறப்படவில்லை. அதில் இவ் இரண்டு போமாரும் இராஜசிங்க மன்னனின் முடிசூட்டு விழாவில் கலந்துகொண்ட கதையினையே கூறுகின்றது.

சின்னத்தம்பி சந்திரசேகரம் அவர்கள் (2020) வெளியிட்ட இலங்கை தமிழ் நாட்டார் கதைகள் என்ற நூலில் போடிமார் பற்றிய வரலாற்றுக் கதைகள் கூறப்பட்டுள்ளது. அதிலே அறுமக்குட்டிப் போடியாரிக் கதையும், மண்முனைப் போடியாரின் கதையும் வில்லுக்குளம் அமைத்த கதையும் எடுத்தாராயப்பட்டுள்ளது. அத்தோடு, இந்த நூலில் வரலாற்றுத் தகவல்கள் ஆதாரபூர்வமாக சான்றுகளுடன் ஆரயப்படவில்லை. அவ்வாறு ஆராயப்பட்டிருந்தால் பல வரலாறுகள் வெளிக்கொண்டுவரப்பட்டிருக்கும்.

முருகு தயாநிதி அவர்களால் எழுதப்பட்ட (2016) அம்பிளாந்துறை என்கின்ற நூலில் அம்பிளாந்துறையில் வசித்து வந்த போடிமாரின் வாழ்க்கை வரலாறுகள் கூறப்பட்டுள்ளது. இந்த நூலானது அம்பிளாந்துறைக் கிராமத்தை மாத்திரம் மையப்படுத்தி எழுதப்பட்டமையால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. பல அரிய தகவல்களை ஆசிரியர் இந்தநூலில் சேர்த்துள்ளார்.

நடராசா.F.X.C அவர்கள் எழுதிய மட்டக்களப்பு மக்களின் வளமும் வாழ்க்கையும் என்ற நூலில் பண்பாடுகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. அதிலே போடிமாரின் பண்பாடுகள் பற்றி விரிவாக கூறவில்லை.

**மண்முனை தென்மேற்கு பட்டிப்பளைப் பிரதேச போடிமார்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டடக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வாவிக்கு அப்பால் படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேசமே மண்முனை தென்மேற்குப் பட்டிப்பளைப் பிரதேசமாகும். புவியியல் அமைப்பை அடிப்படையாக வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தை எழுவான்கரை, படுவான்கரை என இரு பெரும் பிரதேச கூறுகளாக அடையாளப்படுத்தியுள்ளனர். குறிப்பாக, மண்முனை வாவியினை அடிப்படையாக வைத்து வாவிக்குக் கிழக்கே உள்ள பகுதி எழுவான்கரையாகவும் மேற்குப் பகுதி படுவான்கரையாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. கிராமங்களையும், வயல்வெளிகளையும், காடுகளையும், மலைகளையும், குளங்களையும், ஆறுகளையும், மேய்ச்சல் நிலங்களையும் தன்னகத்தே கொண்ட வளமிக்க பிரதேசமாக இப்பிரதேசம் உள்ளது.

இப்பிரதேசத்திற்கு மக்களின் குடியேற்றம் கி.பி. 398 உலகநாச்சியின் வருகையுடனே (கமலநாதன்,இ., 2005, 30) இடம்பெற்றதாக மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் சான்று பகர்கின்றது. ஆரம்பத்தில் மண்முனையிலும் அதன் பின்பு தங்களது தொழில் நிமித்தமாக கால்நடைகளை மேய்த்தல், விவசாயம் செய்தல் போன்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மண்முனை வாவிக்கு அப்பால் இப்பிரதேசத்திற்கு மக்கள் குடியேறிக் கொண்டனர். இவ்வாறு குடியேறியவர்கள் முக்குகர்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயமும் அதனோடு இணைந்த பொருளாதார முறைகளும் காணப்பட்டன. அதனூடாகவே அவர்களது பண்பாடுகளும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

பட்டிப்பளைப் பிரதேச மக்களின் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களை நோக்கும்போது, இவர்கள் தமிழகத்தின் சேர நாட்டு (இப்பொழுது கேரளம் என்று அழைக்கப்படுகிறது) மக்களைப் போன்ற வாழ்வு முறைகளைக் கடைப்பிடிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில் விவசாயம். அதன்வழி சைவசமய வழிபாட்டு முறைகளின்பால் கொண்ட ஈடுபாடும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலய மரபுகளின் அடிப்படையான பண்பாட்டம்சங்களையும் கொண்டு கட்டமைக்கப்பட்ட விவசாயப் பண்பாடே இப்பிரதேச மக்களிடம் வழக்கத்திலுள்ளது.

கிழக்கு மாகாணத்திலே நிலமும் வேளாண்மையும் முக்குகரின் வாழ்க்கைக்கு ஆதாரமாகியுள்ளன. முக்குகரே மட்டக்களப்பில் நில உடமையாளர்களாக இருந்து ஆதிக்கம் செலுத்தியமை அவர்களது வாழ்வு முறைகளையும் வழமைகளையும் மேம்படுத்தி அவைகளையே ஏனையோரும் பின்பற்றுவதற்கு வழிவகுத்துத. இதனால் முக்குகர் சாதியமைப்பு மட்டக்களப்பில் தனித்துவமாக விளங்கியது. இதனுடன் இணைந்த அரசியல், பொருளாதார, சமூக ஆதிக்கம் இவர்களை முதன்மைப்படுத்தியிருந்தது" எனச் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார்.

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளைப் பிரதேசத்தின் முற்குக சமூகத்தினர் தலைமைக் குடிகளாக விளங்கியமையாலும், அவர்கள் அரசு ஆதிக்கம் கொண்டிருந்தமையாலும் நிலவுடமையின் தனித்துவமான முறையான போடியார் என்ற நிலப்பிரபுத்துவ அமைப்பிற்கு வழிவகுத்தது. அத்தகைய போடிமாரின் தலைமையின் கீழ் வன்னிமைகளை உருவாக்கி

அப்பிரதேசங்களை நிர்வகித்ததுடன். அவர்கள் வாழ்ந்த கிராமம் சார்ந்து சமூகப் பண்பாட்டுப் பணிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

ஆ.வேலுப்பிள்ளையின் கருத்துப்படி, போடி என்பது மலையாளத்திலிருந்து மட்டக்களப்பிற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு முறையாகும். நிலச்சொந்தக்காரர், உடமையாளர், அனுபவிப்பவர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது என்கிறார். மலையாள நாட்டில் முக்குகர்களின் தலைவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. பட்டிப்பளைப் பிரதேசத்தில் இப்பட்டத்தைக் கொண்டோர் அதிக நிலபுலன்களையும் மந்தைகளையும் வைத்திருந்தனர். மட்டக்களப்புப் போடிகளாக அடையாளப்படுத்தப்படும் பல போடிமார்களும் பட்டிப்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த போடிமார்களேயாவர். அவர்கள் அதிக செல்வாக்குடன் இப்பிரதேசத்தில் வாழ்ந்துள்ளனர். இலங்கையில் ஐரோப்பியராதிக்கம் ஏற்பட்ட காலங்களிலெல்லாம் இங்கு வாழ்ந்த போடிமார் அவர்களுக்கெதிராக வீரத்துடன் செயற்பட்டுள்ளனர். பிற்பட்ட காலங்களில் ஐரோப்பியர்களால் போடிமார் அச்சுறுத்தப்பட்டதுடன் அவர்களது பிரதேசங்களில் இருந்த அதிகாரங்களும் வீழ்ச்சியடைந்துது.

ஆங்கிலேயர் 1796ஆம் ஆண்டு இலங்கையினைக் கைப்பற்றினர். இவர்கள் மட்டக்களப்புக்கு வந்தபோது, அவர்களுக்கும் மட்டக்களப்புப் போடிகளுக்குமிடையே போர் இடம்பெற்றிருக்கின்றது. இப்போருக்குத் தலைமை தாங்கியவர்கள் பட்டிப்பளைப் பிரதேசப் போடிமாரே. அம்பிளாந்துறையில் வசித்த குஞ்சிளையாப் போடி வன்னியன் அதில் முக்கியமானவர். போடிகள் ஆங்கிலேயரை விரட்டியடித்து புளியந்தீவுப் பகுதிக்குள் மட்டுப்படுத்தியிருந்தனர். மூன்று மாதம் வரையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் போடிகளுக்குள்ளே காட்டிக்கொடுக்கும் போக்கு ஊடுருவியதால் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதில் பல சிரமங்களைச் சந்தித்தனர். பின்னர் இவர்கள் 1802ஆம் ஆண்டு பின்வாங்கி கண்டிக்குச் சென்றிருக்கின்றனர். அவர்களுள் பலர் ஆங்கிலேய படைகளினால் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஆங்கிலேயர்களுக்கு ஒத்துழைத்த போடிகளுக்குப் பல பதவிகளும் சன்மானங்களும் வழங்கப்பட்டன.

இவ்வாறாக, பட்டிப்பளைப் பிரதேசத்தில் அரசியல் ரீதியாக செல்வாக்குப் பெற்ற போடிமாரும், பிரதேசத்தை நிர்வகிக்கின்ற, கிராமத்தை நிர்வகிக்கின்ற போடிமாரும் வாழ்ந்துள்ளனர். அவர்களில் அம்பிளாந்துறையில் வாழ்ந்த அறுமக்குட்டிப்போடி, கந்தப்போடி, குஞ்சிளையாப்போடி, நி.சி.வ.வீமாப்போடி உடையார், இ.வ.வி.வீரபத்திரப்போடி உடையார், தம்பிமுத்து உடையார். கந்தப்போடி உடையார் போன்றவர்களும் மகிழடித்தீவுக் கிராமத்தில் வாழ்ந்த பொன்னம்பலம் போடியார், பெரியதம்பிப்போடி, குமரப்போடியார், பாலிப்போடியார், குமாரசிங்கம் மற்றும் பொன்னம்பலம், கனகசபை, அரசடித்தீவில் வாழ்ந்த மயிலிப்போடியார், முதலைக்குடாவில் வாழ்ந்த பொன்னம்பலம், பண்டாரியாவெளியில் வாழ்ந்த சின்னத்தம்பி, பனிச்சையடிமுன்மாரியில் வாழ்ந்த கண்ணாயுதப்போடி போன்ற போடிமார் முக்கியமானவர்களாவர். அந்தவகையில், அவர்களின் வரலாற்றை ஆய்வு செய்வதன் மூலமாக பட்டிப்பளைப் பிரதேசத்தில் போடிமார் கொண்டிருந்த செல்வாக்கினையும் கட்டமைப்பினையும் வெளிக் கொண்டுவர முடியும்.

**அம்பிளாந்துறைக் கிராமத்தில் வாழ்ந்த போடிமார்**

**அறுமக்குட்டிப்போடி**

அறுமக்குட்டிப்போடி பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் பின்வருமாறு விளக்கம் தருகின்றது. இவன் பராகிகிரமசாலி, தருமத்தில் விருப்பங்கொண்டவன், கல்வியில் சிறந்தவன், ஆடவருக்குரிய இலட்சணங் கொண்டவன், பூரண ஆயுள் உடையவன், பல்லக்கில் ஊர்வலம் வந்தவன், அரசர்களால் நற்பெயர் பூண்டவன், முக்குகர் லோ உண்டாக்கியவன், கலிங்க குலமானபடியால் சிறைத்தள தாபர அதிகாரத்தில் முழுமைபெற்றவன், ஆலயங்களைச் செழிப்புறச் செய்தவன், மட்டக்களப்பில் மாடுகளுக்கு குலவிருதுக்குறி ஏற்படுத்தியவன் என்கின்றது. இவருடைய தகப்பன் பாணகையைச் சேர்ந்தவர். இவருடைய தாய் சத்துருவண்டன். அறுமக்குட்டிப்போடிக்கு ஏழுபேர் மனைவியாக இருந்திருக்கின்றனர் (திரு.துரையப்பா, வயது – 76 – தொழில் - விவசாயம் - பனிச்சையடிமுன்மாரி). முதல் மனைவி பானகையைச் சேர்ந்தவரென்றும், ஏனைய மனைவியர் மண்முனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கொள்ளப்படுகின்றது (கமலநாதன்,இ., 2005, 50). போடி கல்வெட்டுப் பாடலிலும் இவரை ஒல்லாந்தர் நிலமைப் போடியாக நியமித்த தகவல் கூறப்பட்டுள்ளது.

**வயல்**

அம்பிளாந்துறையில் பல ஏக்கர் நெற்காணிகள் அறுமக்குட்டிப்போடி வசம் இருந்திருக்கின்றது. அக்காணிகள் 1111 ஏக்கர் என்பர் (முருகுதயாநிதி., 2016, 77). இவற்றினைத் தவிர, மட்டக்களப்பின் பல இடங்களிலும் அவருக்குச் சொந்தமான காணிகள் இருந்துள்ளன. இக்காலத்தில் அம்பிளாந்துறையில் இருந்த கதிர்காமப்போடி வன்னியனுக்கு 127 ஏக்கர் காணி இருந்திருக்கின்றது. ஆங்கிலேயர் காலத்தில் அவர் மகன் குஞ்சிலாப்போடி வன்னியனார் பெயரிலும், பின்னர் இவர் மகன் கதிர்காமப்போடி வன்னியனார் பெயரிலும் இருந்திருக்கின்றது. இவர்களுக்கு கன்னன்வெளி, பொன்னன்வெளி, கரவாகுவட்டை ஆகிய இடங்களிலும் பெரியபெரிய கண்டங்கள் இருந்துள்ளன.

**குலவிருது**

அறுமக்குட்டிப்போடி பட்டி மாடுகளுக்குக் குலவிருது வகுத்தவர் எனக் கூறப்பட்ட போதிலும், அதிலே சரியான வரலாற்றுத் தெளிவு இல்லாமல் இருக்கின்றது. மாடுகளை இனங்காண்பதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம். அதனைக் கருத்தில்கொண்ட அறுமக்குட்டிப்போடி இந்தக் குலவிருதினை ஏற்படுத்தியிருக்கின்றார்.

**இராஜாதி இராஜசிங்கனின் முடிசூட்டு விழாவிற்குச் சென்ற அறுமக்குட்டிப் போடியார்**

ஒல்லாந்தர் மட்டக்களப்பைக் கைப்பற்றித் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததும் பிரதேச நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பில் இருந்த ஒல்லாந்தருக்குச் சார்பான போடிமார்களை நிலைமைப் போடிகளாக நியமித்தனர். அந்த வகையில், அறுமக்குட்டிப் போடியார் எருவில், போர்முனை நாடு, மண்முனை, ஏறாவூர், கோறளை ஆகிய பகுதிகளுக்கும், கந்தப் போடியார் கரவாகு, சம்மாந்துறை, பாணமை, உன்னரசுகிரி ஆகிய பகுதிகளுக்கும்

போடிகளாக இருந்தனர். இந்த நிலையில்தான், கண்டியரசராகவிருந்த இராஜாதி இராஜசிங்கனின் (கி.பி.1782 - கி.பி.1798) முடிசூட்டு விழாவிற்குச் சென்று அறுமக்குட்டிப் போடி வைரமாலையையும், கந்தப்போடியார் வராகன் மாலையையும் அரசனுக்கு அணிவித்ததோடு ஏனைய முக்குகர் குல திக்கதிபர்களும் முத்துக்கள், பொன்னரிசி, தங்கத்தட்டங்கள் போன்ற பல பரிசுப் பொருட்களை மன்னனுக்கு அளித்தனர் என மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறுகின்றது (கமலநாதன்,இ., 2005, 50).

### கந்தப்போடியார்

மட்டக்களப்பின் தென்பகுதிக்கு நிலமையாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். தெய்வநாயகம் பாராளுமன்ற உறுப்பினருடைய அப்பா கணபதிப்பிள்ளை உடையாரின் அம்மாவின் தங்கையைத் திருமணம் செய்தவர்தான் இவர். இவரும் அம்பிலாந்துறையில் உள்ள கிட்டங்கி வளவிலேயே இருந்துள்ளார். இவருக்கும் பங்குடாவெளிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இவருக்கு ஐந்து ஆண்களும் இரண்டு பெண்களும் இருந்துள்ளனர். ஆண்கள் சத்துருக்கொண்டான் பங்குடாவெளி, முனைக்காடு, ஏறாவூர், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்கங்களில் திருமணம் செய்துள்ளனர். இவருக்குப் பானகையிலும் ஒரு வீடு இருந்திருக்கின்றது. இவர் பாணகை தொடக்கம் கதிரவெளி வரையும் நிருவாக பரிபாலனத்திலும் இருந்துள்ளார் (முருகு தயாநிதி, 2016, 80).

### மண்முனைப் போடியார்

அறுமக்குட்டிப்போடியின் மகனான மண்முனைப்போடி சிறந்த வீரன் மட்டுமன்றி, பக்தியில் துறைபோனவன், பூசாரி. தகப்பனின் மறைவிற்குப் பிறகு சொத்துக்கள் யாவும் இவனிடமே இருந்தன. மண்முனைப் பகுதியில் பெரும் சொத்துடையவராக இவர் இருந்தமையினால் அது குஞ்சிலயாப்போடி வன்னியனாருக்குப் பெரும் நடைமுறைச் சிக்கலை உண்டுபண்ணியது (திரு.வே.கணபதிப்பிள்ளை, வயது – 96- தொழில் - பூசகர் - அம்பிளாந்துறை).

மண்முனைப்போடியார் பட்டிப்பளைப் பிரதேசத்தில் பரந்த நிலச் சொந்தக்காரராக இருந்தமை உண்மையாகும். தற்காலத்தில் வேறு நபர்களுக்குச் சொந்தமாக இருக்கும் பண்டாரியாவெளிக் கண்டத்திலுள்ள மற்றும் படையாண்டகுளக் கண்டத்திலுள்ள வயல்களும் மண்முனைப்போடிக்குச் சொந்தமாக இருந்துள்ளது.

### குஞ்சிலயாப்போடி வன்னியனார்

வன்னியர் பரம்பரையில் வந்த இவர், பெரும் செல்வந்தர். ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் கிழக்கு மாகாணத்துக்கென்று குளங்களை நிருவாகம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கின்றார். மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் 1111 ஏக்கர் 1 ரூட் 11 பேர்ச் நெற்காணிகள் இருந்துள்ளன. அத்தோடு ஆற்றிலும் ஒரு சங்கிலி என்று இவர்களுடைய நில விஸ்தீரனம் இருந்திருக்கின்றது (மகேஸ்வரலிங்கம்,க., 2008, 193).

**முதலைக்குடா கிராமத்து போடிமார்**

**கறுத்தாப்போடி வைரமுத்து (பால்குடிப் போடியார்)**

இவருக்கு ஓதியங்குடா கண்டம், பஞ்சேனை கண்டம், தம்பையா பங்கு, அத்துக்குட்டித்திடல், வம்மிக்கண்டடிச் சேனை, ஐயர்குளம், வாகையடிப் பங்கு, காதர் குளம், பனையறுப்பான், ஆத்துவாடி, சொரியன் கரச்சை போன்ற இடங்களில் மொத்தமாக 152 ஏக்கர் வயல்கள் சொந்தமாக இருந்தன.

**மகிழடித்தீவு கிராமத்தில் வசித்த போடிமார்கள்**

**தில்லையம்பலம் பொன்னம்பலம் போடியார்**

தில்லையம்பலப்போடி பொன்னம்பலம் அவர்கள் மகிழடித்தீவில் வாழ்ந்த போடிமார்களுள் முக்கியமானவர். கி.பி. 1928ஆம் ஆண்டு பிறந்த இவர், 1988.4.03 ஆம் திகதி மரணமடைந்தார். அறுபது ஆண்டுகளுக்கு மேல் இங்கு வாழ்ந்துள்ளார். புத்தக அறிவுடன் நல்ல அனுபவம் படைத்தவர். விவசாயத்தோடு கிராமம் சார்ந்து பல பணிகளையும் மேற்கொண்டுள்ளார். இவர் 200 ஏக்கருக்கு மேற்பட்ட வயலுக்குச் சொந்தக்காரராக இருந்துள்ளார். ஆகையால், வட்டவிதானையாகவும் இருந்து செயற்பட்டுள்ளார்.

**நல்லதம்பி கனகசபை**

மகிழடித்தீவுக் கிராமத்தில் வாழ்ந்த போடிமாரில் நல்லதம்பி கனகசபையும் ஒருவராவார். இவர் கி.பி. 1911ஆம் ஆண்டு பிறந்துள்ளார். இவருடைய மனைவி பெயர் ஞானம்மா. அவர்களுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். கிளாக்கொடிச்சேனை, படையாண்டவெளி கண்டம் ஆகிய கண்டங்களில் மொத்தமாக 70 ஏக்கர் வைத்திருந்தார்.

**பட்டிப்பளைப் பிரதேச போடிமாரின் பண்பாட்டம்சங்கள்**

பண்பாடு என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும், அத்தகைய செயற்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் குறிக்கின்றது. பண்பாட்டிற்குப் பல நிலைகளில் வரையறைகள் உண்டு. ஒரு நிலையில் பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவுப் பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக் கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில் சார் தெரிவுகள், கருவிகள் போன்றவையும் பண்பாட்டுக்குள் அடங்கும்.

மண்முனை தென்மேற்குப் பட்டிப்பளைப் பிரதேசத்தில் போடிமார் வாழ்ந்த காலம் ஒரு உன்னதமான சமூகக் கட்டமைப்புடன் இருந்த காலம் எனப் பலர் அக்கால சமூக பண்பாடுகளை ஆய்வுக்காக நேர்காணலில் ஈடுட்ட பொழுது மகிழ்ச்சி ததும்பக் குறிப்படுகின்றனர். போடியாரின் கருத்துக்கு மதிப்பளித்து மக்கள் கட்டுக்கோப்பாக, பண்பாடாக வாழ்ந்த காலம் அது. அது போன்ற காலம் இனிமேல் வரப்போவதுமில்லை. அப்பண்பாடுகள் மீண்டும் பின்பற்றப்படப் போவதுமில்லை. அந்தளவிற்கு இன்றைய சமூகம் சீர்கெட்டுவிட்டது. ஆகவே, அப்பண்பாடுகளை ஆவணப்படுத்துவதன் மூலம் அவை காலவோட்டத்தில் வரலாறாகப் பேணப்படும் என்பதில் ஐயமில்லை.

**விவசாயப் பண்பாடு**

விவசாயம் தொழிலாக இருந்தாலும், அது இப்பிரதேச வாழ்வியலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. அதிலே பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் பண்பாடாகவே நோக்கப்படுகின்றன. அதனடிப்படையில், பஞ்சாங்கம் பார்த்து ஏர்நாளில் உழுது, விதைப்பு நாள் பார்த்து விதைத்து, விதைக்கும்போது வைரவருக்கும், காளியம்மனுக்கும் சாராயம், ரொட்டி, பொங்கல் படைத்து வழிபட்டு விவசாயத்தை ஆரம்பித்து, அறுவடை செய்து நெல்லினைப் போடியார் வீட்டில் கொண்டு பட்டறையில் சேமிக்கும் வரைக்கும் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாட்டையும் விவசாயப் பண்பாடாகவே நோக்க வேண்டும்.

**படி கொடுத்தல்**

போடியாரின் பங்குகளுக்குரிய ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டதும், வருடத்தில் தமிழ் ஆவணி மாதத்தில், பஞ்சாங்கத்தில் உள்ளபடியான ஒரு சுப தினத்தில் எல்லா வேளாண்மைக்காரர்களுக்கும் படிநெல் கொடுக்கப்படும். அன்று சுப நேரத்திற்கு முன் போடியார் வீட்டு அறை ஒன்று நன்றாகத் துப்புரவு செய்யப்பட்டு, விளக்கேற்றி நிறைமுட்டி வைத்து, வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை, மலர்கள் கொண்டு மடை வைக்கப்படும். அத்துடன் பொங்கல் செய்து, மடைக்கு முன் படைக்கப்பட்டு கடவுள் வணக்கம் செய்யப்பட்ட பின், போடியாரின் பட்டறையில் இருந்து நெல் எடுக்கப்பட்டு, வீட்டு மண்டபத்தினுள் குவியலாக்கப்படும். போடியார் தலைப்பாகை அணிந்தவராக பயபக்தியுடன் மரைக்காலால் நெல்லை அளந்து ஒவ்வொருவருக்கும் (முல்லைக்காரனுக்கு முன் என்ற வரிசைப்படி) படி கொடுப்பார். போடியார் ஒவ்வொருவருக்கும் ஒரு மரைக்கால் வீதம் கொடுத்த பின், மிகுதி நெல் முல்லைக்காரன் ஒருவரால் அளந்து கொடுக்கப்படும். இன்றுவரை பல கிராமங்களிலே இவ்வழக்கம் பின்பற்றப்பட்டு வருகின்றது.

**நாளுக்கு நெல் கொத்தும் நிகழ்ச்சி**

போடியார் படிகொடுத்து மேற்கூறியவை நடந்துகொண்டிருக்கும்போது, ஒரு சுபநேரத்தில் நாளுக்கு நெல் கொத்துதல் நடைபெறும். ஒரு காணியில் சூட்டுக்களம் வைக்கும் வரவை 'களவெட்டி' வரவையென்று அழைப்பதே வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. அப்படியான ஒரு வரவைக்குள் பொங்கல் பொங்கி வரவையின் வடகிழக்கு மூலைக்குள் படைத்து கடவுள் வழிபாடு நடைபெறும். இந்த மூலையில் ஒரு சிறு மண்பாத்தி போல் அமைத்து, அதன்மீது போடியார் வீட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட விதை நெல் பாத்தியில் இரு கைகளாலும் தூவப்பட்டு (விதைத்து), மண்வெட்டியால் கொத்தி நெல், தானியங்கள் மண்ணிற்குள் மூடப்படும். நெல் தூவுதலை முதலில் போடியார் செய்வார். சிறுபெட்டியில் எடுத்துவரப்படும் நெல் தானியத்துடன் காசு, சிறு தங்கம், நவதானியங்கள் வைக்கப்பட்டிருப்பதும் வழக்கமாகும். விதை நெல்லைத் தலையில் வைத்தவாறே இரு கைகளாலும் எடுத்து நெல் பாத்தியில் தூவப்படுதலே வழக்கமாகக் கைக்கொள்ளும் முறையாகும்.

**நெல் விதைத்தல்**

தமிழ்ப் புரட்டாதி மாதத்தில் நெல் விதைப்பு ஆரம்பமாகும். விதைப்பு நாளன்று போடியார் வீட்டில் விருந்துபசாரம் நடைபெறும். அதிகாலையில் முல்லைக்காரன் போடியார் வீட்டிற்கு வந்து

விதைப்புக்குரிய வேலைகளை ஆரம்பிப்பார். பின்னர் மாட்டு வண்டிலில் நெல்லை ஏற்றிச் சென்று விதைப்பு வேலைகளைச் செய்வர். முதலில் நாலரை மாத இனமான வாணன் நெல் விதைப்பதே வழக்கமாக இருந்தது. உழுவோர் மாடுகளுக்கு ‘வரம்போரம்’ (வரம்போரம் போகும்படி), ‘செவ்வை’ (நேராகப் போகப் பணித்தல்), ‘வளைந்து வா’ போன்ற வார்த்தைகளைப் பல பக்கங்களில் இருந்தும் உரக்கக் கூறுவார்கள்.

**முடிப்புக் கட்டுதல்**

இந்த நிகழ்வு போடியாரினால் மேற்கொள்ளப்படும். வேளாண்மை வளர்ந்து முதற்கதிர்கள் பறித்ததும் (வெளிவரும் காலத்திலேயே) இந்த முடிப்புக் கட்டுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். வயலில் உள்ள களவெட்டி வரவையில் இது செய்யப்படும். முன்பெல்லாம் ஒரு குறிப்பிட்ட வரவைக்குள் இது நடைபெற்றதால், அருகாமையில் வைரவ சுவாமிக்குப் பந்தலிட்டு பழம், பாக்கு, வெற்றிலை, பூக்கள் கொண்டு மடை வைத்து ரொட்டி, பலகார வகைகளும் சுட்டுப் பந்தலில் வைத்து வணக்கம் செலுத்தப்படுதல் கடைப்பிடிக்கப்பட்டது.

**புதிரெடுத்தல்**

புதிதாக வயலில் விளைந்துள்ள நெல்லைப் போடியார் தமது வீட்டுக்கு முதல் தடவையாக எடுத்துச் செல்லுதலே புதிரெடுத்தல் என்று கூறப்படுவதாகும். பஞ்சாங்கத்தின்படி ஒரு சுபதினத்தில் சுபநேரத்தில் வயலில் இருந்து பிடிகளாக எடுக்கப்பட்ட நெற்கதிர்கள் சொந்தக்காரரது வீட்டுக்குள் கொண்டு செல்லப்படும். சுபநேரம் வருவதற்கு முன் நெற்கதிர்கள் வயலில் இருந்து கையால் அறுத்தெடுக்கப்பட்டு, வீட்டு வாயிலில் கொண்டு வைக்கப்படும். சுபநேரம் தொடங்கியதும் வீட்டிற்குள் விளக்கேற்றி, நிறைகுடம் வைத்து, சிறிய ஓலைப் பெட்டிகளில் வீட்டில் இருக்கும் பழைய நெல்லை நிரப்பி, அதனுள் வெற்றிலை, பாக்கு, பழம் முதலியன வைக்கப்படும். அத்துடன் பொன், தங்கம், வெள்ளி முதலியனவும் சில்லறைக்காசும் வைக்கப்பட்டு, ஒரு வெள்ளைத்துணியினால் மூடிக் கணவன் தலைப்பாகை கட்டியவாறு மனைவியுடன் பெட்டிகளைக் வாயிலுக்கு எடுத்துச் செல்வார். அங்கு பெட்டிக்குள் கதிர்ப்பிடிகள் வைக்கப்பட்டு மூடப்பட்டவாறு தலையில் வைக்கப்பட்டு நெற்கதிர்கள் வீட்டிற்குள் கொண்டு வைக்கப்படும். அங்கு கற்பூரம் கொளுத்தி, இறைவனை வணங்கி, என்றும் குறைவில்லாது நெல்லால் நிறைவிடமாக வீடு இருக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதுடன் இந்நிகழ்ச்சி நிறைவுபெறும்.

**வேளாண்மை வெட்டுதலும் சூடு வைத்தலும்**

வயலில் கதிர்கள் முற்றி, வேளாண்மை மாசி மாதப் பிற்பகுதியிலேயே வெட்டுவதற்குரிய நிலையை அடையும். விளைந்த வேளாண்மையை வெட்டுவதற்காக, வயலில் இருக்கும் நீரை வெளியேற்ற வேண்டும். இம்மாதத்தில் வரும் சிவராத்திரி நிகழ்வு நடந்து ஏழாமிருத்தை முடிந்தபின் (ஏழு நாட்கள் சென்ற பின்) தண்ணீரை வெளியேற்றுவதே முன்பெல்லாம் வழக்கத்தில் இருந்தது. இதன் பின் வரும் காலம் பருவ மழை குறைந்த காலமாக இருப்பதால், வெட்டு வேலைக்கு வசதியானதாக இருக்கும்.

சுமார் நாற்பது ஆண்டுகளின் முன்பெல்லாம் போடியாரின் வயல்கள் வெட்டும் வேலை, பல கூட்டத்தைச் சேர்ந்த வெட்டுக்காரரால் செய்யப்படும். இவர்கள் அதிகமாக மட்டக்களப்பின் பட்டிப்பளைப் பிரசேத்தவர்களாகவும், தென்பிரதேசம் (அம்பாறை மாவட்டம்). எழுவான்கரைப் பிரதேசம் போன்றவற்றில் இருந்தே வெட்டு வேலைக்காக வருகின்றவர்களுமாக காணப்படுவார்கள். வெட்டிய உப்பட்டிகள் நன்றாகக் காய்ந்த பின், மூன்றாவது நாள், போடியாரின் வெட்டுக்கூட்டத்தினர் ஒன்று சேர்ந்து உப்பட்டிகளைக் கட்டி எடுத்துச் சென்று களத்திலே சூடு வைப்பார்கள். வெட்டு ஆரம்பித்தல், சூடு வைத்தல் என்பன சுபநேரத்திலேயே தொடங்கப்படும்.

**சூடடித்தல்**

வெட்டு முடிந்து, சூடுகள் வைக்கப்பட்டு, நிலம் ஈரம் காய்ந்து உறுதியான பின்பே சூடடிப்பு வேலை ஆரம்பமாவதே முந்திய கால வழக்கமாகும். சித்திரை மாதம் கழித்து வரும் அக்கினி நாட்கள் கழிந்த பின்னரே சூடடித்தலை ஆரம்பிப்பது எல்லாப் போடிகளாலும் மற்றும் குத்தகைப் போடிகளாலும் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இது சூடுமிதித்தல் என்றும் வழங்கப்பட்டது. இவ்வேலை சித்திரை வருடப் பிறப்பு முடித்து சில நாட்களின் பின்பே, ஒரு சுபதினத்தில் இதனை ஆரம்பிப்பதே போடிகளின் வழக்கமாகவும் இருந்து வந்தது.

**களத்தில் போரேற்றுதல்**

அரக்குத் தாட்ட பின் போடியாரின் முல்லைக்காரன் அல்லது செய்கைக்காரன் சூட்டில் ஏறி கடவுளை நினைத்துத் தேங்காய்யொன்றை சூடுதள்ளும் வேலைக்காரன் கம்பினால் அடித்து உடைப்பான். தொடர்ந்து உப்பட்டிகளைக் கீழே தள்ளிவிட, சூடு போடும் வேலையைச் செய்யும் ஐவரும் (6 பேரே முன்பு சூடு அடித்தலைச் செய்வது வழக்கமாக இருந்தது) உப்பட்டிகளை வேலைக்காரன் கம்பினால் தூக்கி களத்தின் மையப்பகுதியில் உயரமாக குவிப்பர். இது 'போரேற்றுதல்' என்று கூறப்படும்.

**காவற்பண்ணிச் சூடு போடுதல்**

முன்பெல்லாம் காவற்பண்ணி சூடு போடும் முறையும் அதிகமாக வழக்கத்தில் இருந்தது. ஒரு களம் சூடு போடத் தொடங்கும்போது, குறிப்பிட்ட வயலின் முல்லைக்காரன் முழுகித் தோய்ந்த வேட்டி கட்டித் தம்மை ஆயத்தம் செய்துகொள்வார். அரக்குத் தாக்கும் முன் களத்தைச் சுற்றிக் கம்புகள் நாட்டி சூடுகளையும் சேர்த்து வைக்கோல் புரி கட்டி, புரியில் வேப்பிலைகள் கட்டி தொங்கவிடப்படும். களத்தினைச் சுற்றி பட்டை நீக்கப்பட்ட முதிரைக் கம்புகளை ஒன்றோடு ஒன்று படுமாறு வைத்து முதிரைக் கவரினைக் (கெப்பு) கொண்டு நிலத்தில் அடித்து ஏற்றி கம்புகள் அசையா வண்ணம் வைப்பதும், துட்ட தேவதைகளைக் களத்தினுள் செல்லாது தடுக்கும் ஒரு வழியாக கருதப்பட்டது. களம் இருக்கும் வரவையின் நான்கு பக்க வரம்புகளிலும் இருக்கும் வக்கடைகளுக்கு வைக்கோல் போட்டு அடைக்கப்படும். இது பொலியினை அள்ளும் பூதங்கள் களத்தினுள் வராமல் இருப்பதற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளாக கருதப்பட்டது (திரு.பா.பேரின்பம், வயது – 77 – தொழில் - விவசாயம் - கொக்கட்டிச்சோலை).

**பட்டறையில் நெல் கட்டல்**

முன்பெல்லாம் சாக்கில் நெல்லைச் சேமித்து வைக்கும் பழக்கம் இருக்கவில்லை. வைக்கோலால் அமைக்கப்படும் பட்டறையிலேயே நெல் கட்டப்படும். ஒரு சுபநேரத்தில், போடியார் வீட்டில் கூடும் முல்லைக்காரர்கள், செய்கைக்காரர்கள் பட்டறை அடிப்பாகத்தைத் தயாரிப்பார்கள். இது 'அடிப்படுத்தல்' என்று அழைக்கப்படும். பின் சாக்குகளில் உள்ள நெல் அதற்குள் கொட்டப்பட்டு பட்டறையாகக் கட்டி அழகாக வேய்ந்து தண்ணீர் உட்செல்லாதவாறு அமைக்கப்படும். விதைநெல், ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொன்றும், மற்றைய நெல்லின் தொகைக்கு ஏற்பவும் பட்டறைகள் அமைக்கப்படும். பட்டறைகள் கட்டுப்பவர்களுக்குப் போடியார் அன்று விருந்துச் சாப்பாடு வழங்குவார்.

**உணவுமுறைகள்**

பட்டிப்பளைப் பிரதேசத்தில் வாழ்ந்த போடிமாரின் உணவு முறையினை நோக்குகின்றபோது, அவர்கள் இயற்கையான ஆரோக்கியமான உணவுப் பண்பாட்டு முறைகளைப் பேணியுள்ளனர். இரசாயனப் பசளைகள் பயன்படுத்தாது விளைந்த அரிசி சோறு, தமது தோட்டங்களில் விளைந்த மரக்கறிகளான சுரக்காய், பயற்றங்காய், வாழைக்காய், கத்தரிக்காய், நாடங்காய், புடலங்காய் போன்றவைகளை நாளாந்த கறிக்கு எடுத்துக்கொண்டதுடன் கீரை, குப்பைக்கீரை, அகத்திக் கீரை, எலிச்சொவி, சுரைக் கொழுந்து, குறிஞ்சா இலை போன்றவைகளைச் சுண்டலுக்கும் எடுத்துக் கொண்டனர். ஆற்று மீன், குளத்து மீன் போன்றவைகளையும் நாட்டுக்கோழி, மான், மரை, ஆடு போன்றவற்றின் இறைச்சிகளையும் உணவுக்கு எடுத்தக்கொண்டதுடன் இறைச்சிகளையும் மீனினையும் காயவைத்துக் கருவாடாக்கி வைத்து நீண்ட நாட்களுக்கு பயன்படுத்தியுள்ளனர். அத்தோடு, முட்டைகளையும் தமது உணவில் சேர்த்துக்கொண்டனர். பயறு, எள்ளு, தினை, சோளம், நிலக்கடலை போன்ற தானியங்களையும் விளைவித்து தமது உணவில் சேர்த்துக்கொண்டனர் (திரு.செ.சற்குணம், வயது – 77 – தொழில் - விவசாயம் - அரசடித்தீவு).

பால், தயிர், நெய் என்பவற்றுக்குத் தட்டுப்பாடே இருக்கவில்லை. எந்த நேரமும் போடியார் வீட்டில் தயிர் இருக்கும். போடிமார் தயிரினை நன்கு விரும்பி உண்பார்கள். காலை உணவிற்குத் தயிரும் சீனியும் அல்லது வாழைப்பழம் சேர்த்து உண்பது வழக்கமாகும். தயிர் அதிகளவு நோய் எதிர்ப்புச் சக்தி கொண்ட உணவாக இருந்ததுடன், உடலுக்குக் குளிர்ச்சியை வழங்கியது. ஆகவே, அவர்கள் தயிரினை அதிகம் விரும்பி உட்கொண்டனர். வீட்டிற்கு யார் சென்றாலும் அவர்களுக்கு நல்ல உணவு கொடுத்து அனுப்புவது இவர்களின் பண்பாடு. மட்டக்களப்பில் உணவுப் பாரம்பரியத்தில் சிறப்பான உபசரிப்பினை இன்றும் காணமுடியும்.

**ஆடை அணிகலன்கள்**

போடிமார் எப்பொழுதும் வெள்ளை வேட்டியையும், வெள்ளைச் சேட்டினையும் அதன் மேல் சால்வையையும் அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் அதிகளவு சைவசமய நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தமையால், எப்பொழுதும் நெற்றியில் திருநீறு அணிந்து கொள்வார்கள். போடியார் வீட்டில் விறாந்தையில் திருநீற்றுக் குடுவையில் எப்பொழுதும் திருநீறு வைக்கப்பட்டிருக்கும். அத்தோடு போடிமார் வெளியிடங்களுக்குச் செல்லும்

பொழுது கையில் பெரிய கறுத்தக் குடை வைத்திருப்பார்கள். போடியாரின் மனைவி, பிள்ளைகள் போன்றோர் சேலை மற்றும் ஏனைய ஆடைகளை அணியும் பழக்கவழக்கத்தினைக் கொண்டிருந்தனர்.

**முடிவுரை**

ஒவ்வொரு பிராந்தியத்தின் வரலாறுகளும் பண்பாடுகளும் அந்தந்தப் பிராந்தியங்களில் வாழ்கின்ற மக்களின் தொழில்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைகிறது. அதனடிப்படையில் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட விவசாய சமூகங்களினுடைய பண்பாட்டில் போடிமார் எனப்படுகின்ற நிலப்பிரபுத்துவ வகுப்பினரின் செல்வாக்கு முதன்மையானதாக அமைந்திருக்கின்றது. அத்தகைய போடிமாருடைய பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் அவர்கள் வாழ்ந்த சமூகத்தில் தற்காலத்தில் பின்பற்றப்படாத போதிலும், பேசுபொருளாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றுவரை மரபுகளையும் பண்பாடுகளையும் பேணி வருகின்ற பிரதேசமாக அனைவராலும் பேசப்படுகின்ற மண்முனை தென்மேற்கு பட்டிப்பளைப் பிரதேசத்தின் போடிமாரின் வரலாறுகளையும் பண்பாடுகளையும் ஆய்வு செய்வதன் மூலமாக அவர்களது வரலாறுகள் மற்றும் பணிகள், அவர்கள் பின்பற்றிய பண்பாடுகள் என்பன இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**உசாத்துணை நூற்பட்டியல்**


கந்தையா.வீ.சி. (1964), மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி யாழ்ப்பாணம்.

கமலநாதன்.சா, (2005), மட்டக்களப்பு பூர்வசரித்திரம், குமரன் புத்தக இல்லம் கொழும்பு.

கனகசபை,த, (2012), ஈழத் தமிழரின் வரலாறும் வாழ்வியலும், காயத்திரி பப்ளிக்கேசன், இலங்கை.

கிருஸ்ணராசா.செ, (1999), இலங்கை வரலாறு பாகம் -01, வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

குணராசா.க., (2008), இலங்கைச் சுருக்க வரலாறு, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

கொறின்ரன்.எச்.டபிள்யு.. (1960), இலங்கை சுருக்க வரலாறு, அரசாங்க அச்சகம்.

கோபாலசிங்கம்.சி., (2019), வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும், முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை, வெல்லாவெளி.

கோபாலசிங்கம்.சி, (2011), மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம், மனுவேதா பப்ளிகேசன், மட்டக்களப்பு.

சிவசண்முகம் ஞா., (2000), மட்டக்களப்பு குகன் குல முற்குகரின் மரபும் வழக்காறும், விபுலம் வெளியீடு.

சிவத்தம்பி.கா., (1980), இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், தமிழ்த்துறை வெளியீடு, யாழ். பல்கலைக்கழகம்.

சுகந்தி.க. (2006), மட்டக்களப்பு மாவட்டத்து கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், இலண்டன் தமிழ் இந்து மன்றம்.

**நேர்காணல்கள்**

திரு.தெய்வநாயகம், வயது - 79 – தொழில் - விவசாயம் - பண்டாரியாவெளி.

திரு.துரையப்பா, வயது – 76 – தொழில் - விவசாயம் - பனிச்சையடிமுன்மாரி.

திரு.செ.சற்குணம், வயது – 77 – தொழில் - விவசாயம் - அரசடித்தீவு.

திரு.பா.பேரின்பம், வயது – 77 – தொழில் - விவசாயம் - கொக்கட்டிச்சோலை.

திரு.சிவானந்தம், வயது – 73 – தொழில் - விவசாயம் - படையாண்டவெளி.

திரு.வே.கணபதிப்பிள்ளை, வயது – 96 - தொழில் - பூசகர் - அம்பிளாந்துறை.

திரு.க.சுப்ரமணியம், வயது – 97 – தொழில் - விவசாயம் - அம்பிளாந்துறை.

# மட்டக்களப்பு கரைவாகுப்பற்று வன்னியர்களும் சமூகமும்

**Rasanayakam Hariskanth**
Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
Hariskanth488@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இடைக்கால மட்டக்களப்பு வரலாற்றில் கரைவாகுப்பற்று வன்னியர்களுக்கு முக்கிய பங்குண்டு. இவர்கள் மட்டக்களப்பு அரசியல் முறைகளிலும் சமூக வழமைகளிலும் பெற்றிருந்த முக்கியத்துவம், அது சார்ந்து அவர்களது அதிகாரத்தினுடைய தன்மை எவ்வாறு இருந்துள்ளது என்பதனைக் கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது கரைவாகுப்பற்று வன்னிச் சிற்றரசர்கள் தொடர்பாகக் கிடைக்கின்ற ஆவணங்கள், நேர்காணல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய கால மட்டக்களப்பிலே கரைவாகுப்பற்று வன்னிமைகள் அரசியல் முறைகளிலும் சமூக வழமைகளிலும் முதன்மையானதொரு இடத்தினையே பெற்றிருந்தனர். கரைவாகுப்பற்று வன்னிமைகள் மிகுந்த அதிகாரம் கொண்டவர்களாகக் காணப்பட்டபோதிலும் அவர்களது ஆட்சியானது எதேச்சதிகாரமாக இல்லாது வரையறுக்கப்பட்டதாகவே காணப்பட்டுள்ளது. மேலாதிக்கம் செலுத்தக்கூடிய அரசின் (ஐரோப்பியர்கள்) கீழ் கரைவாகுப்பற்று வன்னிமைகள் சில காலம் இருந்தாலும் தங்களது ஆட்சிப் பகுதியில் சுதந்திரமான ஆட்சியினையே செலுத்தியுள்ளனர். மட்டக்களப்பில் காலனித்துவ ஆட்சியின் ஆரம்ப காலகட்டங்களில் கரைவாகுப்பற்று வன்னிமைகள் பெற்றிருந்த ஆட்சியதிகாரத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தாலும், சமூக வழமைகள் மற்றும் பொருளாதாரரீதியில் வன்னிமைகள் முக்கியத்துவம் பெற்றவர்களாகவே இருந்துள்ளனர். காலப்போக்கில் பிரித்தானியர்களது ஆட்சியிலே வன்னியர்களது அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் அவர்களாலேயே கரைவாகுப்பற்றுக்கு வன்னிமைகள் நியமிக்கப்பட்டு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் நீதிமன்றங்களில் வழக்குகளை விசாரித்துத் தண்டனை வழங்கும் அதிகாரம் உடையவர்களாகவும் ஆலயங்களுக்குத் தலைமை தாங்கி நிர்வாகங்களைத் திறன்பட நடத்துபவர்களாகவும் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்பவர்களாகவும் காணப்பட்டனர். நாடு சுதந்திரம் அடைந்ததை அடுத்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் கரைவாகுப்பற்று வன்னியர்கள் பெற்றிருந்த சமூகரீதியிலான முக்கியத்துவங்களும் குறைவடைந்தது. குறிப்பாக, சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தங்களின்போது ஆலய நிர்வாகத்தின் தலைமைப் பதவிகள் வன்னியர் பரம்பரையைச் சேர்ந்த வேறு குடிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. தற்காலத்தில் கரைவாகுப்பற்று வன்னியர்கள் ஆலய நிர்வாகங்களில் தலைமைப் பதவியில் இருப்பவர்களாக மாத்திரம் காணப்படுகின்றனர். கரைவாகுப்பற்றுப் பகுதியில் இருந்த வன்னியர்களுடைய ஆட்சி மட்டக்களப்பில் இருந்த அரசுகளில் இருந்து முக்கியமானதொரு ஆட்சியாகக் காணப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *வன்னியர்கள், பற்றுக்கள், மத்திய காலம், கரைவாகு, காலனித்துவம்.*

## அறிமுகம்

இலங்கையில் ஆட்சி புரிந்த குறுநில ஆட்சியாளர்களாக வன்னியர்கள் காணப்படுகின்றனர். நாடு சுதந்திரம் அடையும்வரை இலங்கையின் வரலாற்றிலும் நிர்வாக முறையிலும் வன்னியர்கள் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்துள்ளனர். வன்னியர்கள் பொலன்னறுவைக் காலத்திலும் அதன் பின்னரும் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்தவர்கள் எனச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. காலப்போக்கில் இலங்கையில் தமிழர் வாழும் அனேகமான பிரதேசங்கள் வன்னியர்களின் ஆட்சியின் கீழ் காணப்பட்டன.

இலங்கையின் மத்திய காலத்தினைப் பொறுத்தவரையில் இந்த வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சியானது மகாவன்னி, அடங்காப்பற்று வன்னிமைகள், திருகோணமலை வன்னிமைகள், புத்தளம் வன்னிமைகள், மட்டக்களப்பு வன்னிமைகள் என்ற ஐந்து பிரிவுகளில் நடைபெற்றுள்ளது (பத்மநாதன், 2003: 71). இவை பெயர்களில் வேறுபட்டிருந்தாலும், அவை ஈழத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கிய ஒரே தொடர் வனப்பிரதேசமாகவும், ஈழத்தின் பூர்வீக மக்களின் பாரம்பரிய வாழிடங்களாகவும் இருந்தன. அனைத்து பிரதேசங்களிலும் வன்னியர்கள் ஆட்சிக்கு வந்த வரலாறுகள் ஒரே மாதிரியானதாகக் காணப்படுகின்றன. எனினும், இவை அரசியல் முறை, சமுதாய நிலைமை, பொருளாதார அமைப்பு போன்றவற்றில் ஒன்றுக்கொன்று அதீத வேறுபாடுகள் உடையனவாக காணப்படுகின்றன.

இந்த ஆட்சிப் பிரிவுகளில் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சியானது ஏழு வன்னிப்பற்றுக்களைக் கொண்டதாகக் காணப்பட்டுள்ளது. மட்டக்களப்புப் பிரதேசத்து வன்னிப்பற்றுக்களில் ஒரு பற்றான கரைவாகுப்பற்று வன்னிமைகள் குறிப்பிடத்தக்க அளவில் சுயாட்சி உரிமைகளை அனுபவித்துள்ளனர் (கோபாலசிங்கம், 2005:87). ஐரோப்பியர்களான ஒல்லாந்தரும் பிரித்தானியரும் இலங்கையின் நிர்வாக அமைப்புகளில் ஏற்படுத்திய மாற்றங்களினாலேயே வன்னியர்களின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைவடைந்தன. பல சவால்களுக்கு மத்தியிலேயே மட்டக்களப்பில் வன்னியர்களின் ஆட்சியானது நிலைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மட்டக்களப்பில் வன்னியர்களின் வருகையிலிருந்து அவர்கள் சமூக வழமைகளில் அதிகாரம் பெற்று, அதன் பின்னர் ஐரோப்பியர்களின் ஆட்சிக் காலத்தில் அதிகாரங்களை இழக்கும் வரையிலான அவர்களுடைய ஆட்சி முறையினை கரைவாகுப்பற்று வன்னியர்களை மையப்படுத்தி வரலாற்றாதாரங்களின் அடிப்படையில் வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வின் நோக்கம்

மட்டக்களப்புப் பிரதேசத்து வன்னிப்பற்றுக்களில் ஒரு பற்றாகக் காணப்படும் கரைவாகுப்பற்றுப் பிராந்தியத்தினை மையமாகக் கொண்டு நடைபெற்ற வன்னிச் சிற்றரசுகள் ஆட்சியில் அவர்கள் சமூக வழமைகளில் பெற்றிருந்த அதிகாரத்தின் தன்மையானது ஐரோப்பியர் காலத்திற்குப் பின்னர் எவ்வாறு மாற்றமடைந்திருந்தது என்பதை வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு வரையறை**

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தினை ஆய்வுப் பிரதேசமாகவும் பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் ஐரோப்பியர்களின் ஆட்சி வரையிலான காலப்பகுதியை ஆய்வின் கால வரையறையாகக் கொண்டும் மட்டக்களப்பில் நிலைபெற்றிருந்த கரைவாகுப்பற்று வன்னிமைகளை மையப்படுத்தியதாக இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாக அமைகின்றது. வரலாற்று ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையில் முதலாம் தர மற்றும் இரண்டாந் தர மூலாதாரங்களைப் பயன்படுத்தி, அவற்றைப் பகுப்பாய்வு செய்து ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வினாக்கள்**

மட்டக்களப்பில் வன்னிமைகளுடைய அரசியல், சமூக வழமைகளில் அவர்ளுடைய அதிகாரங்கள் எந்தளவுக்கு முக்கியத்தும் பெற்றிருந்தது, ஐரோப்பியர் காலத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் அரசியல், சமூக வழமைகளில் அவர்ளுடைய அதிகாரத்தின் தன்மை என்ன, சமகாலத்தில் அவர்களது நிலை போன்றவை இவ்வாய்வின் வினாக்களாகும்.

**ஆய்வு மூலங்கள்**

**முதனிலைத் தரவுகள்**

மட்டக்களப்பு வன்னியர்களின் ஆட்சி பற்றி அறிய உதவுகின்ற தொல்லியற் சான்றுகள், மத்திய கால இலக்கியங்கள், சமகால வெளிநாட்டார் குறிப்புக்கள், ஐரோப்பியர் காலச் சான்றுகளான நீலப்புத்தகம், நிர்வாக அறிக்கைகள், கோயில்களின் நடைமுறை ஆவணங்கள், வன்னியர் பரம்பரையினரிடமிருந்து பெற்ற ஆவணங்கள், அவர்களுடனான நேர்காணல்கள் என்பன முதனிலைத் தரவுகளாகக் காணப்படுகின்றன.

**இரண்டாம் நிலைத் தரவுகள்**

மட்டக்களப்பு வன்னிமைகள், நற்பிட்டிமுனை வன்னிமைகள் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைக் குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

பத்மநாதன், சி. (1970), ‘வன்னியர்’ என்ற நூலில் வன்னியர்கள் பற்றி இலக்கியங்களில் காணப்படும் குறிப்புக்கள், தமிழகத்தில் வன்னியர்களின் வளர்ச்சி, இலங்கையில் வன்னியர்களின் வளர்ச்சி பற்றிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக மட்டக்களப்பில் வன்னியர்களின் ஏழு பிரிவுகள் பற்றியும், அதில் காணப்பட்ட வன்னிமைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. ஆயினும், ஐரோப்பியர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு வன்னியர்களின் அதிகாரங்கள் எவ்வாறு காணப்பட்டன என்பது பற்றி விளக்கமாக இந்நூலில் கூறப்படவில்லை.

பத்மநாதன், சி. (2002), ‘இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்’ என்ற நூலில், மட்டக்களப்புத் தேசம், வன்னிமைகளின் வரலாற்று அம்சங்கள், மாகோனும்

வன்னிமைகளும், கண்டி இராசதானியும் வன்னிமங்களும், ஐரோப்பியர் ஆட்சியில் வன்னிமைப் பதவி, வன்னிமைகளின் ஊடாக அக்காலத்தில் உயர் நிலையிலிருந்த குடிப்பிரிவுகள் எனப் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

பத்மநாதன்,சி. (2003), 'இலங்கையில் வன்னியர்கள்' என்ற நூலில் தமிழகத்தில் வன்னியர்களுடைய தோற்றமும் வளர்ச்சியும், வன்னியர்களின் இலங்கை வருகை, தமிழகத்தில் வேளைக்காரப் படைகள், இலங்கையில் வேளைக்காரப் படைகள், இலங்கையில் வன்னியர்களின் வளர்ச்சியும் பரவலும், இலங்கையில் மத்திய காலத்தில் அமைந்திருந்த ஐந்து வன்னிப்பிரிவுகளின் தோற்றம் என்பன கூறப்பட்டுள்ளன.

தங்கேஸ்வரி,க. (2005), 'கிழக்கிலங்கைப் பூரவீக வரலாறு' என்ற நூலில் குளக்கோட்டன் தரிசனம் திருக்கோயில் தொடர்புகள், கல்வெட்டுச் சான்றுகள் (திருக்கோயில்), மாகோன் தொடர்பும் திருக்கோயில் கல்வெட்டுக்களும், மாகோன் வரவு தொடர்பான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

கோபாலசிங்கம்,சீ. (2005), மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் என்ற நூலில், மட்டக்களப்பில் பூர்வீக குடிகள் மற்றும் குடியேற்றங்கள் தொடர்பாகவும், மட்டக்களப்புப் பிரதேசத்தின் ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களது செயற்பாடுகள் தொடர்பாகவும், மட்டக்களப்பில் வன்னியர்கள் வருகை கலிங்கமாகன் வகுத்த வன்னிப்பற்றுகள் தொடர்பாகவும், கண்டிய அரசுக்கும் மட்டக்களப்பு வன்னியர்களுக்கும் இடையிலான தொடர்புகள், ஐரோப்பியர் வருகையினால் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் மற்றும் போடிகள் பதவி நியமனம் தொடர்பாகவும், முற்குக தேசவழமைச் சட்டம், மட்டக்களப்புச் சமூகங்கள் மற்றும் அவற்றின் விரிவாக்கம் தொடர்பாகவும், பண்டைய சமூகநிலை தோற்றம். சமூகப் பிரிவுகளின் உருவாக்கம் போன்ற செய்திகள் தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளன.

சிவசண்முகம். ஞா. (2000), மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் என்ற நூலில், முற்குகர் வருகை குடியேற்றம் பற்றியும், முற்குக வன்னியர்கள் மற்றும் சிற்றரசர்கள் தொடர்பாகவும், முற்குகச் சட்டம், அவர்கள் மரபுகள் பற்றியும், முற்குகர் குல போடிகள் மற்றும் பிற்காலப் போடிகளும் வன்னிமைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

லோகிதராஜா கமலாம்பிகை. (2002), பத்தும் பதியமும் என்ற நூலில், மாணிக்க பிள்ளையார் கோயில் மற்றும் திரௌபதி அம்மன் ஆலயத்தின் தோற்றம். தாதன் கல்வெட்டில் குறிப்பிடப்படும் விடயங்கள், இந்த ஆலயங்களுக்கும் கரைவாகுப்பற்று வன்னியர்களுக்கும் இடையிலான தொடர்புகள், நற்பிட்டிமுனை வன்னிப்பங்களுடனான கோயில் நிர்வாகம், வழக்காறுகள் தொடர்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

கமலநாதன்,இ. (2005), மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற நூலில், சேனன் வகுத்த கிராமங்கள், நற்பிட்டிமுனைக் கிராமத்தின் உடைய தோற்றம், மாகன் வகுத்த குலங்கள், தாதன் வரவும் பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் கோயில் வரலாறும், ஒல்லாந்தர் காலத்தில் மட்டக்களப்பு நிலமைப்போடி வகுத்தமை, போடிக் கல்வெட்டு, தாதன் கல்வெட்டு, முற்குவர் மரபு என்பன கூறப்பட்டுள்ளன.

சிவகுருநாதன், எஸ். (2022), வரலாறு கூறும் நற்பிட்டிமுனை என்ற நூலில், நற்பிட்டிமுனைக் கிராமத்தின் தோற்றம், நற்பிட்டிமுனைக் கிராமத்திற்குப் பெயர் வரக் காரணம், நற்பிட்டிமுனை வன்னிமை ஆட்சி அதிகாரம் தொடர்பான விடயங்கள், அவர்கள் நிர்வகித்த கோயில்கள் பற்றிய குறிப்புகள், நற்பிட்டிமுனையில் இருந்த கிராம நீதிமன்றம் தொடர்பான விடயங்கள், அதில் அதிகாரம் செலுத்திய வன்னிமைகள் என பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

கணபதிப்பிள்ளை, சீ. (1979), பூர்வீக சப்த ஸ்தலங்கள் என்ற நூலில், திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் தோற்றம், கோவிலுக்கும் இலங்கையில் ஆட்சி செலுத்திய சில மன்னர்களுக்கும் இடையிலான தொடர்புகள், வன்னிமைகளின் நிர்வாகக் கடமைகள், கோயிலுக்குச் சொந்தமான காணிகள் என்பன பற்றிய பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

இந்நூல்களில் மட்டக்களப்பு வன்னிமையின் உருவாக்கம், அதன் நிர்வாகப் பிரிவுகளில் ஒன்றான கரைவாகுப்பற்று வன்னிமையின் தோற்றம் என்பன கூறப்பட்டுள்ளனவே தவிர, கரைவாகுப்பற்றுப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்திய வன்னிமைகளுடைய விபரம், அவர்கள் சமூக நிலைமைகளில் பெற்றிருந்த முக்கியத்துவம், தற்காலத்தில் கரைவாகுப்பற்றுப் வன்னிபங்களினுடைய நிலை போன்ற விடயங்கள் இந்நூல்களில் குறிப்பிடப்படவில்லை. எனவே, கரைவாகுப்பற்று வன்னிமைகளின் விபரம், அவர்கள் அக்காலத்தில் ஆட்சி செலுத்திய விதம், அவர்கள் சமூகத்தில் பெற்றிருந்த முக்கியத்துவம், அவர்களது தற்கால நிலை என்பவற்றைப் பூர்த்தி செய்வதாகவே இவ்வாய்வு கட்டமைக்கப்படுகின்றது.

### வன்னியர்களும் சமூகமும்

### ஆரம்ப காலம்

கரைவாகுப்பற்றுக்கு பணிக்கர் குல மரபில் (பணிக்கர் குடி, பணிக்கனார்குடி) வந்தவர்களே வன்னிமைகளாக நியமிக்கப்பட்டனர். பண்டைய சேர நாட்டின் பணிக்கர் சமூகத்தினரான இம்மக்கள், கி.பி. 2ஆம் நூற்றாண்டு முதல் இங்கு வாழ்ந்ததாகச் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் எனக் கோபாலசிங்கம் தனது மட்டக்களப்பு ஓர் அறிமுகம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இது கி.மு. 236-214 காலப் பகுதியாகும். இதில் கூத்திகன் மட்டக்களப்பில் (சம்மாந்துறையில்) தனக்கென ஒரு சுற்றுலா மாளிகையினை அமைத்ததோடு மக்களையும் அங்கு குடியமர்த்தியதாக மட்டக்களப்பு பூர்வீக சரித்திரக் குறிப்புகளும் அப்பிரதேசத் தடயங்களும் வெளிப்படுத்துகின்றன. அக்காலத்தே சேரத்தில் பெரும் வீரர்களாக விளங்கிய பணிக்கர்கள் இங்கு வந்து நிலைபெற வாய்ப்புக்கள் அதிகம் என்றே கொள்ள வேண்டும். கேரளா ஆய்வாளர் கிருஸ்ண ஐயரும் அக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார் (கோபாலசிங்கம், 2005:145). சேரன்தீவு குறித்து அவர் விளக்குகையில் இக்கருத்துக்கு உடன்படவே செய்கின்றார். இன்றைய கேரளத்துப் பணிக்கர்களது நடைமுறைகளும் செயல்பாடும் இம்மக்களை ஒத்திருப்பதை அவதானிக்க முடியும். மட்டக்களப்பு மலையர் குகநாடு என அழைக்கப்படவும் இவர்கள் காரணமாயினர். மட்டக்களப்பில் காணப்படும் சேர நாட்டுக் கலாசாரங்கள், உணவு பழக்கவழக்கங்கள், மாந்திரிக முறைகள், பேச்சு ஒலி வடிவங்கள் என்பவற்றிற்கும் இவர்களே மூலவர். சேரநாட்டிற்குரித்தான தாய் வழி மரபுப் பேணுகையை மட்டக்களப்பில் நிலைநிறுத்திய பெருமையும் இவர்களையே சாரும் (கமலநாதன், 2005:44). மட்டக்களப்புப் பிரதேசத்தில் இம்மக்கள் பரவலாகவும் ஆதிக்கம் மிக்கவர்களாகவும்

வாழ்ந்தவர்கள். தாய்வழிப் பணிக்கர் குலத்தவனான எதிர்மன்னசிங்க வன்னியன் ஆட்சிக்குப் பின் மட்டக்களப்பின் தென்பகுதி முன்னீடுகள் அனைத்தும் பணிகனார் குடியினரையே பற்றியிருந்தது.

இக்காலத்திலே கரைவாகுப்பற்று வன்னிமைகள் பல அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். வன்னிமைகளிடம் ஆட்சி அதிகாரம், நீதி சார்ந்த அதிகாரம், தண்டனை வழங்கும் அதிகாரம் என்பன இருந்துள்ளன. இதன் அடிப்படையில் நோக்குகையில், ஆட்சி அதிகாரத்திலே வன்னிமைகள் உயர்ந்ததொரு இடத்திலேயே இருந்துள்ளனர் என்பது புலனாகிறது. சமுதாய வழமைகளிலும் வன்னிமைகள் மதிப்பும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டியவர்களாகவே காணப்பட்டுள்ளனர். சமூக வழமைகளில் நடைபெறும் வைபவங்களின்போது, வன்னிமைகளுக்குரிய மரியாதை வழங்கப்பட்டது. மேலும், கோயில் தொடர்பான விடயங்களிலும் முதன்மையதிகாரம் வன்னிமைகளிடமே இருந்துள்ளது. கரைவாகுப்பற்று வன்னிமைகளிடம் இறைவனுடைய சன்னிதியில் முன்நின்று காப்பணிந்து திருவிழாக்களை நடத்தும் உரிமை காணப்பட்டது. கோயிலில் நடைபெற்ற கூட்டமொன்றிற்கு கரைவாகுப்பற்று வன்னிபமான வன்னியனாரை அழைத்துச் செல்ல வந்தவர்கள் அவரை மரியாதையுடன் அழைத்து வந்துள்ளனர். கோயிலை அடைந்ததும் அங்கிருந்தவர்கள் அவரை வரவேற்று வன்னிபத்திற்குச் சமமான வரிசைகளை வழங்கினர். பரம்பரையாக புகழ் பெற்றவர்களாக வன்னிமைகள் இருந்துள்ளனர். இவற்றின் மூலமாக சமூக வழமைகளில் வன்னிமைகள் மதிப்புடன் இருந்துள்ளனர் என்பதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

**ஐரோப்பியர் காலம்**

ஐரோப்பியர்களான போர்த்துகேயரும் ஒல்லாந்தரும் பிரித்தானியரும் இலங்கையின் நிர்வாக அமைப்புகளில் ஏற்படுத்திய மாற்றங்களினாலேயே வன்னியர்களின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைவடைந்தன. பல சவால்களுக்கு மத்தியிலேயே மட்டக்களப்பில் வன்னியர்களின் ஆட்சியானது நிலைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கி.பி. 1622 இல் போர்த்துக்கேயர் காலத்தில் வன்னிமைகள் அதிகாரம் உடையவர்களாக விளங்கினர். இக்காலத்தே மட்டக்களப்பின் நிலமைப் பதவிகளை மட்டக்களப்பின் ஆட்சி அதிகாரநிலை வழிவந்த முற்குக சமூகத்தினருக்கு அவர்கள் வழங்கினர். கலிங்கர், பணிக்கர், படையாட்சியர் குலத் தலைவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டன. இது ஆங்கிலேயர் ஆட்சிவரை தொடர்ந்திருந்தமை தெரிகின்றது (கோபாலசிங்கம், 2005: 77). நிலைமைகளை பெரிய வன்னியனார் என்றும், உப நிலைமைகளை சின்ன வன்னியனார் (உடையார்) எனவும் மக்கள் அழைக்கலாயினர்.

ஒல்லாந்தரால் தலைமைப்போடி நியமனம் பெற்ற கந்தப்போடி, ஆங்கிலேயர் காலத்து எதிர்மன்னசிங்க வன்னியன், சத்துருகப்போடி வன்னியன் மற்றும் செல்லையா வன்னியன் போன்றோரும் இக்குடி மரபினரே. அக்கரைப்பற்று கரைவாகுப்பற்றுப் பகுதிகளின் ஊர்ப்போடிகளாக இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் கடமைபுரிந்துள்ளனர். திருக்கோவில், கோவில்போரதீவு திருப்படை ஆலயங்களினதும் பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலயத்தினதும் தலைமைப் பொறுப்பினையும் இவர்களே ஏற்று நெறிப்படுத்தினர். பெரியநீலாவணை தொடக்கம் பாணமையீறான தென் பிரதேசத்தில் முதன்மை பெற்றே

உள்ளனர். இவர்களிடையே அக்கரைப்பற்று வயிற்றுவார், காரைதீவு வயிற்றுவார், கரைவாகு வயிற்றுவார், நீலாவணை வயிற்றுவார், மகிளூர் வயிற்றுவார், எருவில் வயிற்றுவார், போரதீவு வயிற்றுவார், புதுக்குடியிருப்பு வயிற்றுவார் என வயிற்றுவார் பிரிவுகள் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களது குலவிருதாக மத்துவளையம் குறிப்பிடப்படுகின்றது (கோபாலசிங்கம், 2005:145). இதனை அடிப்படையாகக் கொண்டே சேர மன்னர்களின் ஆட்சிக்காலப் பகுதியில் கொண்டுவரப்பட்ட இந்தக் குடி மரபு தற்காலம்வரை கரைவாகுப்பற்றுப் பிரதேச வன்னிமைகளின் வம்சத்தவர்களால் தாய்வழி முறையாக பின்பற்றப்படுவதை நாம் காணமுடியும்.

ஆங்கிலேயர் காலத்தில் கரைவாகுப்பற்று வன்னிமையாக சத்துருகப்போடி வன்னியன் மற்றும் செல்லையா வன்னியன் போன்றோர் நியமிக்கப்பட்டு இருந்தனர் (கோபாலசிங்கம், 2005:101). அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் பணிக்கனார் குடியைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். இவர்கள் அக்காலத்தில் ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்டது பற்றிய தக்க சான்றுகள் மற்றும் பட்டயங்கள் இன்றும் வன்னியர் பரம்பரையைச் சேர்ந்த அவர்களது குடும்பத்தவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்காலத்திலே கரைவாகுப்பற்று வன்னிமைகள் பல அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். வன்னிமைகளிடம் ஆட்சி அதிகாரம், நீதி சார்ந்த அதிகாரம், தண்டனை வழங்கும் அதிகாரம் என்பன இருந்துள்ளன (கோபாலசிங்கம், 2005:101). இதன் அடிப்படையில் நோக்குகையில் ஆட்சி அதிகாரத்திலே வன்னிமைகள் உயர்ந்ததொரு இடத்திலேயே இருந்துள்ளனர்.

தற்போது இருக்கும் பிரதேச செயலாளர்கள் (முன்பு பிரிவுக் காரியதிகாரிகள்) முறை 1946 இல் அமுலுக்கு வரும்வரை இந்த வன்னிமைகளே கடமையாற்றினார்கள். ஆனால், வன்னிமைகளின் கீழ் ஆட்சி அதிகாரங்கள் இருந்த காலப் பகுதிகளில், எந்தவிதமான நவீனமயப்படுத்தப்பட்ட ஆட்சி அதிகாரங்களும் இல்லாத காலப் பகுதிகளில் மக்களைத் திறன்பட வழிநடத்தித் தங்களுடைய ஆட்சியை திறன்பட செய்திருக்கிறார்கள். அத்தோடு இன்றைய பிரதேச செயலகம் எவ்வாறு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தினை நிர்வகித்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்குகின்றதோ, அதேபோல அக்காலத்தில் வன்னிமைகளின் தலைமையின் கீழ் கரைவாகுப்பற்று முழுவதுமாக வன்னிமைகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டுச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டுப் பிரச்சினைகளுக்கான முடிவுகள் இனங்காணப்பட்டுள்ளன. கரைவாகுப்பற்று வன்னிமைகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலப் பகுதிகளில் குதிரை கட்டிய வண்டியில் வன்னிமைகளின் பயணம் தொடரும். அந்தக் காலப்பகுதிகளில் கடிகாரங்கள் இல்லாததால் சூரிய உதயத்தைப் பார்த்துக் காலை, மதியம், அந்திப் பொழுது, முன் பின்னிரவு, நடுச்சாமம் என்று வகுத்திருக்கின்றார்கள். காலைசூரியன் உதயத்தில் இருந்து மனித நிழல் நிலத்தில்பட்டு தலை வரையான அளவு வரும் வரைக்கும் ஒவ்வொரு ஊருக்குமான ஊர்ப்போடியார் என்பவர் ஒரு நாளைக்கு ஒருவரைத் தெரிவுசெய்திருப்பார். அவர்கள் தங்கள் படலையடியில் (வீதியோர வாயில்) அதாவது, பிரதான வீதியில் வந்து நிற்பார்கள். அவர்கள் நெற்றியில் விபூதி, தோளில் துணி (சால்வை) போட்டிருப்பார்கள். அவர்கள் அவ்வூர் ஆலயமுன்றலில் வைத்து விசாரிக்கப்படுவார்கள். உதாரணமாக (கிழமையைச் சொல்லி) இன்று நடக்கும் இன்ன கோயிலிலான, இன்ன பூசைக்கு, அல்லது இன்ன ஊரில் நடக்க இருக்கும் ஊர்க் கூட்டத்தில் வன்னியனார் வந்து விசாரிப்பாராம் அல்லது பதில் சொல்வாராம். தகவல்

பரிமாற்றம் போல் அதற்கான கேள்வியும் பதிலும் வன்னியனாருக்கும் போய்ச்சேருமாம். அப்படித்தான் இல்லத்தில் இருந்து கொண்டு மேற்படி ஊர்களின் செய்திகளுக்கு வன்னியனார் தீர்ப்பெழுதி இருக்கின்றார் (சிவகுருநாதன், 2022:22). எனவே, குறிப்பிட்ட தினங்களில் மட்டும் வன்னியனார் குறிப்பிட்ட ஊர்களுக்குச் சென்று தனது நிர்வாகக் கடமைகளைச் சிறப்புற நடத்தி இருக்கிறார்.

அக்காலத்தில் மக்களுக்குக் குடியிருக்க நிலபுலங்கள் இல்லாத பட்சத்தில், அவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாது, பாடசாலைகள், ஆலயங்கள், மருத்துவமனைகள், வேலைவாய்ப்புகள் எனப் பல விடயங்கள் வன்னிமைகளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, இன்று நற்பிட்டிமுனையில் காணப்படும் பாடசாலை, வன்னிமையினால் நிலம் வழங்கப்பட்டுக் கட்டப்பட்டதாகும் (நேர்காணல் மூலம் பெறப்பட்டது). அதுமட்டுமல்லாது, கரைவாகுப்பற்றுப் பிரதேசத்தில் காணப்படும் ஆலயங்கள் ஒவ்வொன்றும் பல ஏக்கர் கணக்கான வயற் காணிகளைக் கொண்டுள்ளன. அவை அன்றிருந்து இன்று வரை குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு வேளாண்மை செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் கரைவாகுப்பற்று வன்னிமைகள் சமுதாய வழமைகளிலும் மதிப்பும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டியவர்களாகவே காணப்பட்டுள்ளனர் என்பது புலனாகிறது. கரைவாகுப்பற்றுச் சமூகத்தில் இடம்பெறும் சடங்கு, சம்பிரதாயங்கள், விழாக்கள் மற்றும் ஏனைய சமூக வழமைகளில் வன்னிமைகளுக்குரிய மரியாதை வழங்கப்பட்டது. மேலும், சமூகத்தில் நீதி சார்ந்த அதிகாரம், தண்டனை வழங்கும் அதிகாரம் என்பன இருந்துள்ளன இதன் அடிப்படையில் நோக்குகையில் தொடக்கத்தில் மட்டக்களப்பிலும், பின்னர் கி.பி. 1871 இல் கரைவாகுப்பற்றிலும் இந்நீதிமன்றங்கள் வன்னியனார் தலைமையில் செயல்படத் தொடங்கின (கோபாலசிங்கம், 2005: 101). இக்காலத்தே சத்துருக்கப்போடி வன்னியன் மேற்கொண்ட நீதி விசாரனைகள் குறித்த தகவல்கள் அவரது ஒப்பமிட்ட அறிக்கையாக நமக்குக் கிடைக்கின்றன. இதில் குடியியல் தொடர்பில் 1470 வழக்குகளுக்கும் குற்றவியல் தொடர்பில் 248 வழக்குகளுக்கும் தீர்வு காணப்பட்டிருப்பது தெரிகின்றது. இதே காலப்பகுதியில் மாவட்ட நீதிமன்றம் 146 குற்றவியல் வழக்குகளுக்குத் தீர்வு கண்டுள்ளது (கோபாலசிங்கம், 2005: 118). குற்றங்களுக்கு ஏற்ப தண்டனைகள் வழங்கி, நீதி தவறாத முறையில் நீதி பரிபாலத்தை மேற்கொண்டு ஆட்சி செலுத்தும் அதிகாரம் வன்னியர்களுக்கு உரியதாக காணப்பட்டுள்ளது. நீதிமன்றுக்கு விசாரணைக்கென வந்தவர்களில் குற்றவாளி என இனம் காணப்பட்டால் அவர்கள் சிறை செய்யப்படுவார்கள். இதனைக் நோக்குமிடத்து, ஆட்சியதிகாரத்தினைப் பொறுத்தவரையில் வன்னிபங்கள் உயர்ந்த நிலையிலேயே இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்புப் பகுதி பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்த சந்தர்ப்பத்தில், கரைவாகுப்பற்று ஒரு பிரிவாக உருவாக்கம் பெற்றுக் காணப்பட்டது. இந்தக் கரைவாகுப்பற்று வன்னிமைகளால் ஆளப்பட்ட சந்தர்ப்பத்தில், இவர்கள் பல ஆலயங்களைத் தமது ஆட்சிக்கு உட்படுத்தி நிர்வகித்து வந்துள்ளனர். இவற்றில் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயில், நற்பிட்டிமுனை பிள்ளையார் கோயில், சேனைக்குடியிருப்புப் பத்திரகாளியம்மன் கோயில், பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் கோயில், மாணிக்கப் பிள்ளையார் கோயில் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றிற்குப் பணிக்கர் குடியைச் சேர்ந்த வன்னிமைகளே தலைவர்களாகக் கடமைபுரிந்தனர். அத்தோடு, இன்றுவரை அதே வன்னிமை பரம்பரையில்

வந்தவர்களாலே தாய்வழி முறை மாறாது ஆலயங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. கரைவாகுப்பற்று வன்னிமைகளிடம் இறைவனுடைய சன்னிதியில் முன்நின்று காப்பணிந்து திருவிழாக்களை நடத்தும் உரிமை காணப்பட்டது. கோயில் நடைபெற்ற கூட்டமொன்றிற்குக் கரைவாகுப்பற்று வன்னிபமான சத்துருக்கப்போடி வன்னியனாரை அழைத்துச் செல்ல வந்தவர்கள் அவரை மரியாதையுடன் அழைத்துச் சென்றுள்ளனர். கோயிலை அடைந்ததும் அங்கிருந்தவர்கள் அவரை வரவேற்று வன்னிபத்திற்குச் சமமான வரிசைகளை வழங்கினர். பரம்பரையாக புகழ் பெற்றவர்களாக வன்னிமைகள் இருந்துள்ளனர். இவற்றின் மூலமாக சமூக வழமைகளில் வன்னிமைகள் மதிப்புடன் இருந்துள்ளனர் என்பதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

**சமகாலம்**

இலங்கை சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளிலே வன்னிமைகளின் அதிகாரங்கள் படிப்படியாக குறைய ஆரம்பித்தன. தற்போது இருக்கும் பிரதேச செயலாளர்கள் (முன்பு பிரிவுக் காரியதிகாரிகள்) முறை 1946இல் அமுலுக்கு வரும்வரை இந்த வன்னிமைகளே கடமையாற்றினார்கள் (சிவசண்முகம், 2000:48). குறிப்பாக, கரைவாகுப்பற்று செல்லையா வன்னியனார் ஆட்சிக்குப் பின்னர் உள்நாட்டுப் பிரச்சினைகளின் காரணமாக இங்கு சில குழப்பங்கள் ஏற்பட்டன. அதனால் கரைவாகுப்பற்று வன்னிமைகள் பெற்றிருந்த அரசியல் அதிகாரமம், சமூகத்தில் அவர்களுக்கு இருந்த ஏனைய அதிகாரங்கள் இல்லாது செய்யப்பட்டது. இதனால், வன்னிமைகள் என்போர் ஆலயங்களில் தலைமைப் பதவியை பெற்று ஆலயம் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களை மேற்பார்வை செய்பவர்களாக மாத்திரம் இன்று காணப்படுகிறார்கள்.

**முடிவுரை**

ஆரம்ப காலங்களில் கரைவாகுப்பற்று வன்னிமைகள் பல அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். வன்னிமைகளிடம் ஆட்சி அதிகாரம், நீதி சார்ந்த அதிகாரம், தண்டனை வழங்கும் அதிகாரம் என்பன இருந்துள்ளன. இதன் அடிப்படையில் நோக்குகையில், ஆட்சி அதிகாரத்திலே வன்னிமைகள் உயர்ந்ததொரு இடத்திலேயே இருந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. சமுதாய வழமைகளிலும் வன்னிமைகள் மதிப்பும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டியவர்களாகவே காணப்பட்டனர். பரம்பரையாக புகழ் பெற்றவர்களாக வன்னிமைகள் இருந்துள்ளனர். இவற்றின் மூலமாக சமூக வழமைகளில் வன்னிமைகள் மதிப்புடன் இருந்துள்ளனர் என்பதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

கரைவாகுப்பற்று வன்னிமைகள் ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையால் அவர்களுடைய அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட சில காலங்களில் மீண்டும் பரம்பரை வழியாக வந்த வன்னிமைகளுக்கு, ஆரம்ப காலத்தில் எவ்வாறான அதிகாரங்களைப் பெற்றிருந்தார்களோ அந்த அனைத்து அதிகாரங்களும் ஆங்கிலேயர்களால் பட்டையங்கள் மூலம் அவர்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டன. அவர்கள் சமூகத்தில் உயர்நிலையிலும் மதிப்பு மிக்கவர்களாகவும் காணப்பட்டார்கள். இலங்கை சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளிலே வன்னிமைகளின அதிகாரங்கள் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட நிர்வாக

மாற்றங்களினால் வன்னிமைகளுக்கு இருந்த அதிகாரங்கள் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. இதன்காரணமாக கரைவாகுப்பற்று வன்னிமைகள் அரசியல், சமூக, பொருளாதாரத்தில் பெற்றிருந்த அதிகாரங்கள் இல்லாது செய்யப்பட்டு, வன்னிமைகள் என்போர் ஆலயங்களில் தலைமைப் பதவியைப் பெற்று ஆலயம் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களை மேற்பார்வை செய்பவர்களாக மாத்திரம் இன்று காணப்படுகிறார்கள்.

கரைவாகுப்பற்று வன்னிமைகளின் அதிகாரம் வரையறுக்கப்பட்ட வகையிலேயே இருந்துள்ளது. பதினான்காம் நூற்றாண்டு காலப்பகுதியில் சற்றுச் சுதந்திரமான முறையில் கட்டுப்பாடுகளற்ற வகையிலேயே செயற்பட்டிருந்துள்ளனர். ஆயினும், ஏதேச்சாதிகாரம் செலுத்தி இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சில காலப்பகுதிகளில் சில ஆட்சியாளர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தாலும், தங்களது பற்றுக்களில் சுதந்திரமான ஆட்சியையே நடத்தினர். காலனித்துவ காலத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இவர்கள் வரி செலுத்தியே வந்துள்ளனர். மேலும், ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டினுள்ளே வன்னிப் பற்றுக்கள் இருந்துள்ளன. ஆட்சியதிகாரத்திலும் சமூக வழமைகளிலும் வன்னிமைகள் பெற்றிருந்த முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்துகொண்டே போயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

கமலநாதன், சா. (ப.ஆ)., (2005), மட்டக்களப்பு பூர்வசரித்திரம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கோபாலசிங்கம்,சீ. (2005), மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம். மநுவேதா வெளியீடு, மட்டக்களப்பு.

சிவகுருநாதர்,எஸ். (2022). வரலாறு கூறும் நற்பிட்டிமுனை, எஸ்.சிவகுருநாதர் வெளியீடு, கல்முனை.

சிவசண்முகம், நா. (2000), மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

கமலாம்பிகை லோகிதராஜா. (2012), பத்தும் பத்தியமும். டிசைன்வேல்ட் பிறிண்டர்ஸ், சாய்ந்தமருது.

கணபதிபிள்ளை. சி, (1979), பூர்விக ஸப்த ஸ்தலங்கள், விபுலானந்தர் அச்சகம், யாழ்ப்பாணம்.

குணசிங்கம்,மு. (2008), இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு, எம்லி வெளியீடு, தென் ஆசியவியல் மையம், சிட்னி.

கோபாலசிங்கம்,சீ. (2003), தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும், தமிழச்சு வெளியீடு, மட்டக்களப்பு.

தங்கேஸ்வரி,க. (2007), கிழக்கிலங்கைப் பூரவீக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

பத்மநாதன்,சி. (1970), வன்னியர், பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடு, கண்டி.

பத்மநாதன்,சி. (2002), இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளுமம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு -சென்னை.

பத்மநாதன்,சி. (2003), இலங்கையில் வன்னியர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு சென்னை.

பத்மநாதன்,சி. (2004), ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு சென்னை.

நேர்காணல்கள்

த. ரவிராஜ், வயது – 68, தொழில் - சேனைக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலய மற்றும் நற்பிட்டிமுனை கணேசர் ஆலயத் தலைவர்.

சு. சுரேஸ், திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத் தலைவர்.

சு. சிவகுருநாதன், தொழில் - ஓய்வு பெற்ற பலநோக்குக் கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்.

குலேந்திரன், தொழில் - கணேசர் ஆலய உறுப்பினர்.

# வன்னிப் பெருநிலப் பரப்பில் தொல்லியல் சின்னங்களில் தமிழர் கலை வெளிப்பாடும் அதன் தாக்கமும்

**Ramakavundar Thevatharshikan**
Department of Visual & Technological arts, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern university, Sri Lanka.
tharsikantheva97@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வன்னிப் பெருநிலப்பரப்பில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் போன்றவை பல இடங்களில் கண்டெடுக்கப்படுகின்றன. இச்சின்னங்கள் வன்னியின் பழமை வாய்ந்த வரலாற்றினை வெளிப்படுத்துவதோடு, அனுராதபுரம், பொலனறுவை, கண்டி போன்ற பௌத்த மையங்களுடன் தொடர்பற்ற தனித்துவத்தைக் காட்டுகின்றன. சந்திர வட்டக்கற்கள் சில இடங்களில் அலங்கார வேலைப்பாடுகளுடனும் காணப்படுகின்றது. குருந்தூர் மலை, முதலியார் குளம், மருக்காரம்பளை, மன்னாகண்டல் மலை போன்ற இடங்களில் இவை உள்ளன. கைப்பிடி வரிசைகள் அனைத்தும் யானைத் தும்பிக்கை அமைப்பில் காணப்படுவதுடன், கோயில், மாளிகை, அரண்கள் தொடர்பான இடங்களில் உள்ளன. மன்னாகண்டல் மலை, பாண்டியன் குளம், மடுகந்தை, ஆலங்குளம் போன்ற இடங்களில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. காவற்கற்கள் பெரும்பாலும் நாகர் உருவங்களுடன் காணப்படுகின்றன. சில காவற்கற்கள் அலங்காரமின்றி உள்ளன. இவை இயக்கர்கள், நாகர்கள் வாழ்ந்ததற்கான தடங்களை வெளிக்கொணர்கின்றன. நெளுக்குளம், சின்னத்தம்பனை, சமனங்குளம் போன்ற இடங்களில் இவை காணப்படுகின்றன. இச்சின்னங்கள் பௌத்தமயமாக்கப்பட்டுப் பாதுகாப்பின்றி கைவிடப்பட்டுள்ளன. கிராம மக்கள் இவற்றைச் சிறு தெய்வ வழிபாடுகளுக்குப் பயன்படுத்துகின்றனர். கைப்பிடி வரிசை, சந்திர வட்டக்கற்கள் ஆகியவை ஆலயங்களிலும் வேறு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை பௌத்தக் கலாசாரத்துடன் ஒத்துப்போகாமல், தென்னிந்திய தமிழ்க் கட்டடக்கலையின் ஒத்துழைப்பைக் காட்டுகின்றன. இருந்தபோதிலும், இத்தொல்லியல் சின்னங்களைப் பௌத்த அடையாளங்களாக விளங்கச்செய்யும் முயற்சிகள் வன்னி நிலப்பரப்பில் அரசால் மேற்கொள்ளப்படுவதைக் கவலைக்குரிய விடயமாகக் கருதலாம்.

***திறவுச் சொற்கள்** : தொல்லியல் சின்னங்கள், சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள்.*

**அறிமுகம்**

வன்னிப் பெருநிலப்பரப்பில் காணப்படும் சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் போன்ற தொல்லியல் சின்னங்கள், அப்பகுதியின் தொன்மையான வரலாற்றை வெளிப்படுத்துகின்றன. இவை பௌத்த கலாசாரத்தோடு தொடர்பு இல்லாமல், தென்னிந்தியத் தமிழர் கட்டடக் கலை அம்சங்களோடு ஒத்திருக்கின்றன. இருப்பினும், இலங்கையில்

இத்தொல்லியல் சின்னங்கள் பௌத்தமயமாக்கப்படுவதும் வரலாற்று உண்மைகள் மறுக்கப்படுவதும் கவலைக்குரிய விடயமாக உள்ளன. இவ்வாய்வு, வன்னிப் பிரதேசத்தின் தொல்லியல் சின்னங்கள் பௌத்தமயமாதலின் தாக்கங்களை ஆராய்வதோடு, அவை வன்னித் தமிழர்களின் மரபு, கலாசாரம், அடையாளம் ஆகியவற்றோடு உள்ள தொடர்புகளையும் விளக்க முற்படுகிறது.

**ஆய்வின் நோக்கம்**

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள தொல்லியல் சின்னங்கள் (சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள்) வன்னித் தமிழர்களின் வரலாறு, கலாசாரம், மத வழிபாடு ஆகியவற்றோடு தொடர்புடையவையாக உள்ளனவா, பௌத்தமயமாக்கப்பட்டவையா என்பதைக் கண்டறிதல். இத்தொல்லியல் சின்னங்கள் தென்னிந்திய கட்டடக் கலையோடு உள்ள ஒற்றுமைகளை ஆய்வுசெய்து, பௌத்த ஆக்கிரமிப்பு மற்றும் அதன் விளைவுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

**கருதுகோள்**

வன்னிப் பெருநிலப்பரப்பில் காணப்படும் தொல்லியல் சின்னங்கள் (சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள்) பௌத்தமயமாக்கப்பட்டவையல்ல. அவை வன்னித் தமிழர்களின் தொன்மைச் சமூகங்கள், அவர்களின் கலாசாரம், மத வழிபாடு மற்றும் தென்னிந்திய கட்டடக்கலை அம்சங்களைப் பிரதிபலிக்கும் நினைவுச் சின்னங்களாகவே காணப்படுகின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

வன்னிப் பெருநிலப்பரப்பில் காணப்படும் சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் போன்ற தொல்லியல் சின்னங்கள் வன்னித் தமிழர்களின் வரலாற்று அடையாளமா, பௌத்தமயமாக்கப்பட்ட உருவாக்கங்களா என்பதே ஆய்வு பிரச்சினையாகும். இவற்றின் உண்மையான வரலாற்றுச் சிறப்பும் பௌத்தமயமாக்கல் காரணமாக அவை எதிர்கொள்ளும் ஆக்கிரமிப்பும் ஆய்விற்குரிய முக்கிய கேள்விகள் ஆகும்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது விவரிப்பு முறையியல் மற்றும் ஒப்பீட்டாய்வு முறையியல் என்பவற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

இத்தொல்லியல் சின்னங்கள் பௌத்த மையங்களோடு ஒத்துப்போகாமல் உள்ளமை தொடர்பாகவும், இவற்றை அரசியல் நோக்கில் பௌத்தமயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையும் Gombrich & Obeyesekere (1988) "Buddhism Transformed: Religious Change in Sri Lanka" மற்றும் K.M. de Silva (1981) "A History of Sri Lanka" ஆகிய நூல்கள் ஆராய்கின்றன. இதனுடன் தமிழறிஞர்கள் பொன்முடி சுந்தரமூர்த்தி (2005),

கணபதிப்பிள்ளை (1998), மற்றும் சாந்தகுமார் (2010) ஆகியோரின் தமிழ்மொழியிலான ஆய்வுகள், இச்சின்னங்கள் வன்னி நிலப்பரப்பில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை எடுத்துரைக்கும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன எனக் குறிப்பிடுகின்றன. இவ்வாறாக சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் போன்ற தொல்லியல் சின்னங்கள் வன்னியின் தமிழ்க் கலாசாரத்துடனான உறவை வெளிப்படுத்தும் முக்கியத்துவம் வாய்ந்தவை என மேற்கண்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

**வன்னியின் வரலாறு**

இந்தியா - இலங்கை இடையிலான பனியுகக் காலப் புவியியல் இணைப்பும், பின்னர் கி.மு. 7000 இல் இலங்கை தீவாகப் பிரிந்ததற்கான புவியியல் சான்றுகளும் (கருங் கற்கள், ஆறுகள், குளங்கள், நீர்நிலைகள்) வன்னி நிலத்தின் தனித்துவத்தை விளக்கும் அடிப்படையாக அமைகின்றன. வன்னி எனப்படும் இப்பெருநிலம் 4,200 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்து அடர்ந்த காடுகள் மற்றும் பல்வேறு புவியியல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. மேலும், இந்நிலத்தில் கி.மு. 1250 முதல் கி.மு. 1200 வரை பழைய, இடை மற்றும் புதிய கற்காலங்களில் நாடோடிகளாகவும், வேட்டையாடி வாழ்ந்தோர்களாகவும், பின்னர் விவசாயத்திற்கு இடம்பெயர்ந்தோர்களாகவும் வாழ்ந்த மக்கள் குடியமர்ந்ததற்கான தொல்லியற் சான்றுகள் - இரணைமடு, தேரிமணற் குன்றுகள், பூநகரி, மாந்தை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கற்களாலான உபகரணங்கள், குருணி கற்கள், குடியிருப்புத் தடயங்கள் போன்றவை - இப்பகுதியின் தொடக்க கால நாகரிக வரலாற்றை விளக்குகின்றன. கி.மு. 3380 இல் தொடங்கிய ஆதி இரும்புக் காலத்தில் பெருங்கற்காலப் பண்பாடு வன்னி நிலத்தில் வேரூன்றியது. அதில் நீர்ப்பாசனக் குளங்கள், நெல் வயல்கள், குடியிருப்புகள், பெருங்கற் கல்லறைகள், இரும்பு உபகரணங்கள், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் ஆகியவற்றுடன் தாழிப் புதையல் முறைகளும் (பெரிய பானைகளில் சடலங்களை உட்கார்ந்த நிலையில் புதைக்கும் பழக்கம்) காணப்பட்டு, வன்னிப் பெருநிலத்தின் தொல்லியல் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன. தென்னிந்தியாவில் தோன்றிய இப்பெருங்கற் காலப் பண்பாடு இலங்கையில் பரவி தமிழ், சிங்களப் பண்பாடுகளுக்குத் தாயாக மாறியமைவதும், இதன் வரலாற்று முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாகும். எனவே, இவை அனைத்தும் வன்னிப் பெருநிலப் பரப்பை மட்டும் அல்லாமல், அதன் தொல்லியல், புவியியல், பண்பாட்டு அடையாளங்களையும் விரிவாகக் கூறும் முக்கிய ஆதாரங்களாக அமைகின்றன (புஸ்பரத்தினம் ப., 1993, ப.14, தியாகராஜா சிவா., 2011, ப.12, தெரணியகல எஸ்.யு., 2013, ப.511, தெரணியகல எஸ்.யு., 1996, ப.ப.277-285, கூனாதிலகே சுசந்தா., 1981, ப.124, ரியா அலெக்ஸாண்ட்ரியர்., 1915, ப.213).

**தொல்லியல் சின்னங்களும் வரலாற்றுப் பார்வையும்**

வன்னிப் பெருநிலப் பரப்பு இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் பரந்து விரிந்த ஒரு பண்டைய நாகரிகப் பூமியாகக் கருதப்படுகிறது. இப்பகுதி தமிழர் வரலாற்றின் முக்கிய

பகுதியாக விளங்கும் நிலையில், அதில் காணப்படும் தொல்லியல் சின்னங்கள் பல புரிந்துகொள்ள வேண்டிய அடுக்குகளைக் கொண்டுள்ளன. பண்டைய நாகர்கள் வசித்துப் புகழ்பெற்ற இப்பகுதி, இன்றைய அரசியல் சூழ்நிலைகளால் மாற்றம் அடைந்துகொண்டிருப்பதைக் கவனிக்க முடிகின்றது. குறிப்பாக, பௌத்தமயமாக்கல் என்ற அரசியல் நோக்கத்தால், இப்பகுதியின் பண்டைய அடையாளங்கள் திசைமாறக்கூடிய வகையில் விளக்கப்படுகின்றன.

வன்னிப் பகுதியில் பல தொல்லியல் சின்னங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சந்திரவட்டக் கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் போன்றவை இவற்றில் முக்கியமானவை. இவை பெரும்பாலும் வன்னிப் பெருநிலப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றின் கால வரையறைகள் தெளிவாக நிரூபிக்கப்படாமையாலும், தென்கிழக்குப் பகுதியின் பௌத்த சின்னங்களுடன் ஒப்பிடப்பட்டு அவை பௌத்த அடையாளங்கள் எனக் கூறப்படுவதாலும், இப்பகுதிகளில் விகாரைகள் அமைக்கப்பட்டு நிலங்கள் அரசால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, பண்டைய நாகர் சமுதாயத்தின் பண்பாட்டு அடையாளங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

நெளுக்குளம், சாலமன் குளம், தண்ணீர் முறிப்பு, மதகு வைத்த குளம், முதலியார் குளம், குருந்தூர், சப்புமல்கஸ்கோட, மரக்காரம்பனை, மன்னாளங்கண்டல் மலை போன்ற பல இடங்களில் இத்தகைய தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன. இங்கு நாக உருவங்கள் பொறிக்கப்பட்ட சிலைகள், பாம்பு வடிவங்கள் மற்றும் சைவ மரபின் சின்னங்கள் என்பன பெருமளவில் காணப்படுகின்றன. மகாவம்சம் போன்ற பௌத்த வரலாற்று இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் வடபகுதியில் உள்ள நாகர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளுடன் இவை ஒத்துப் போகின்றன. இவை நாகர் சமூகத்தின் சமய, கலாசார அடையாளங்களைத் தெரிவிக்கின்றன.

**அலங்காரம் அற்ற தொல்லியல் சின்னங்கள்**

தொல்லியல் சின்னங்களில் சந்திர வட்டக் கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் என்பன எந்தவித அலங்காரங்களும் இல்லாமல் தட்டையாக பொழியப்பட்டவாறு காணப்படுகின்றன. இவ்வாறான அமைப்புக்கள் அனுராதபுரத்தின் ஆரம்ப கால கட்டத்தினை அல்லது அனுராதபுத்தின் முற்பட்ட காலத்தினைக் குறிக்கின்றவையாக காணப்படுகின்றன. அந்த வகையில், வன்னிப் பெருநிலப் பரப்பில் காணப்படும் இவ்வாறான தொல்லியல் சின்னங்கள் எந்தக் காலத்திற்கு உரியது என்று முழுமையான கருத முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறான அலங்காரமற்ற தொல்லியல் சின்னங்கள் முதலியார் குளம், கல்லுமலை, சப்புமல்கஸ்கோட, தட்டயமலை, மண்கிண்டி (மேற்கு மூலை), மன்னாகண்டல், மருக்காரம்பளை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

கைப்பிடி வரிசைகள்





தட்டயமலை

மண்கிண்டி (மேற்கு மூலை)

மருக்காரம்பளை





மன்னாகண்டல்

முதலியார் குளம் கல்லுமலை

சப்புமல்கஸ்கோட

காவற்கற்கள்





முதலியார் குளம் கல்லுமலை

சப்புமல்கஸ்கோட

சந்திரவட்டக் கற்கள்



முதலியார் குளம் கல்லுமலை



சப்புமல்கஸ்கோட

**வன்னியில் காணப்படும் அலங்காரம் உள்ள தொல்லியல் சின்னங்கள்**

வன்னிப் பெருநிலப் பரப்பில் காணப்படும் தொல்லியல் சின்னங்களில், சந்திரவட்டக் கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் என்பன கணிசமான கலாசார, கலைப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இவற்றில் பல இலகுவான அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன.

**காவற்கற்கள்**

வன்னியில் கண்டெடுக்கப்பட்ட காவற்கற்கள் பல்வேறு சிற்ப வடிவங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவையாக ஐந்து தலைப் பாம்பு, குள்ளர் உருவம், துவாரபாலகர் சிற்பம், கலசம் என்பன விளங்குகின்றன. இவ்வாறான காவற்கல் காணப்படும் இடங்களாக நெளுக்குளம், தட்டயமலை, சின்னத்தம்பனை, மதகுவைச்சகுளம், தண்ணிமுறிப்பு, பாவற்குளம், சமளங்குளம் ஆகியன உள்ளன.

வன்னி நிலத்தில் காணப்படும் நாகர் சிலைகள், பெரும்பாலும் காவல் தெய்வ வடிவங்களாக செதுக்கப்பட்டுள்ளன. இவை செதுக்கப்பட்ட இடங்கள் பெரும்பாலும் கோயில்கள், நீர்நிலைகள் மற்றும் மரபு வழிபாட்டு மையங்களாக அமைந்துள்ளன. நாகம் தமிழர் பழங்குடி இனமாகக் கருதப்படும் நாகர் சமூகத்துடன் தொடர்புடையது. நாகர் இனம் இலங்கையின் தொன்ம வரலாற்றில் முதன்மை பெற்ற வேளாண்மைக் கூட்டுச் சமுதாயமாகக் கருதப்பட்டு, தங்களது தெய்வங்களை நிலம் மற்றும் நீர் வளங்களைக் காக்கும் காவல் சக்திகளாக வழிபட்டது (உஷா ரௌபாசிங், 2016, பக்.128 ). அதனாலே, நாகச் சிலைகள் காவற்களாக - குறிப்பாக நிலகம காவல், நீர்வழிப் பாதுகாப்பு, மற்றும் புனித எல்லைகள் குறிக்கும் வகையில் - அமைக்கப்பட்டன. இந்தச் சிலைகள் அவர்கள் இன அடையாளத்தையும் தெய்வ வழிபாட்டு மரபையும் பிரதிபலிக்கின்றன (இந்திரபாலா. கே, 2005, பக். 68-70).





நெளுக்குளம் நாக சிலை தட்டயமலை நாகர் சிலை சின்னத்தம்பனை நாக சிலை




சமளங்குளம் நாகசிலை குரவில் நாகசிலை

துவாரபாலகர் சிற்பம் தமிழ் மற்றும் தென்னிந்தியக் கோயில்களில் காணப்படும் ஒரு முக்கியமான சிற்ப வகையாகும். ‘துவாரம்’ என்றால் கதவு, ‘பாலகர்’ என்றால் காப்பவர். எனவே, துவாரபாலகர் என்பது கோயிலின் உள்ளே நுழைவதற்கு முன் கதவுகளின் இருபுறமும் நிற்கும் காவல் தேவர்களின் சிற்பம் ஆகும் (கோபிநாதா. டி. ஏ, 1997, பக். 75- 78). இவ்வாறான சிற்பங்கள் மடுக்கந்தை, மன்னார்கண்டல் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. மன்னாகண்டலில் காணப்படும் துவாரபாலகர் சிற்பமானது ஒரு சிலை வடிவில் கைப்பிடி வரிசைகளுக்கு இரு அருகிலும் வைக்கப்பட்டுள்ளது. இது தற்போது பாதி உடைந்த நிலையில் காட்சியளிக்கின்றது.

மடுக்கந்தையில் காணப்படும் துவாரபாலகர் சிற்பமானது மடுக்கந்தை விகாரையில் காணப்படுகின்ற காவற்சிலையின் துவாரபாலகர் உருவத்துடன் காணப்படுகின்றன. இங்குள்ள காவல் சிலை திருவங்க நிலையில் அமைந்த துவாரபாலர் உருவம். தலையின் பின்புறம் பாம்பு

உருவத்துடன் கொண்ட திருவாசியும் உள்ளது. ஒரு கையில் தென்னம்பூவும் மறுகையில் கலசமும் கொண்டு காணப்படுகின்றது. இந்த சிற்பங்கள் பாதுகாப்பையும் ஆன்மிகத்தையும் பிரதிபலிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.



மன்னாகண்டல் துவாரபாலகர்



மடுக்கந்தை விகாரை துவாரபாலகர்

**கைப்பிடி வரிசைகள்**

குறுந்தூர், மடுக்கந்தை போன்ற இடங்களில் காணப்படும் கைப்பிடி வரிசைகள் சிறந்த அலங்காரத் தன்மை கொண்டவையாக காணப்படுகின்றன. அந்தவகையில், மகரத்தின் வாயிலிருந்து விரிந்து செல்லும் கொடி அலங்காரத்துடன் கூடியதாகக் காணப்படுகின்றது. அந்தக் கொடி முடி வரையும் இடத்தில் மேல் நோக்கி சுருள் அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளது. மகரத்தின் வடிவம் நேர்த்தியான செதுக்கத்துடன் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கைப்பிடி வடிவமைப்புகள் அனுராதபுர அரச மாளிகையிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இது வன்னி மற்றும் அனுராதபுரத்தின் கலாசார பரிமாற்றத்தையும் நெருக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.



குருந்தூர் கைப்பிடி வரிசை



மடுக்கந்தை கைப்பிடி வரிசை

**சந்திரவட்டக் கற்கள்**

சந்திரவட்டக் கற்கள் வன்னி முழுவதும் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. ஆனால், குறுந்தூர், மரக்காரம்பளை போன்ற இடங்களில் அவை நுணுக்கமான அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன.

குறுந்தூர்: சந்திரவட்டக் கற்களின் அரைவட்டத்தின் மத்திய பகுதியில் அரைத் தாமரை அலங்காரம், அதனைத் தொடர்ந்து தீச்சுவாளை வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.

மருக்காரம்பளை : அரைத் தாமரை அலங்காரத்திற்குப் பிறகு, யானைகள் சிவலிங்கத்திற்கு மலர் தூவும் காட்சி சிற்பமாக அமைந்துள்ளது.

இவ்வாறான நுட்ப சிற்ப வேலைப்பாடுகள் வன்னி நாகரிகத்தின் உயர்ந்த கலைநயம் மற்றும் ஆன்மீக மரபுகளை வெளிப்படுத்துகின்றன.



குருந்தூர் சந்திரவட்டக்கல்



மருக்காரம்பளை சந்திரவட்டக்கல்

சோழர் ஆட்சிக் காலத்தில் (9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை) அமைக்கப்பட்ட கோயில்கள், சிற்பக் கலையின் பரிபூரண வடிவங்களை வெளிப்படுத்தும் அற்புதக் கட்டடங்கள் ஆகும். இக்காலக் கோயில்களின் வாயில்களில் அமைக்கப்பட்டுள்ள துவாரபாலகர் சிலைகள், சமயச் சிந்தனையுடன்கூடிய பாதுகாப்புக் கருத்தினை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, இவை பெரிதும் வடிவமைக்கப்பட்டும், பெரும்பாலும் சிவபெருமானை வழிபடும் சூழலில் அமைக்கப்பட்டும் இருப்பது அவதானிக்கத்தக்கது (கைமல், மியூனிஷா ,1996, பக்.389- 390).

அதேபோல், கைப்பிடி வரிசைகள் படிக்கட்டுகளின் ஓரங்களில் காணப்படும் யானையின் தும்பிக்கையை மேலே சுருண்டுவதாகக் காணப்படும் சிற்ப வடிவங்கள் ஆகும். இது வளம் மற்றும் ஆன்மிக எழுச்சியின் ஒரு வடிவக் குறியீடாகக் கருதப்படுகிறது (மிசல், ஜோர்ஜ், 1988, பக். 105). தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் வாயிலருகே இவ்வகை கைப்பிடி வரிசை மிகப் பிரம்மாண்டமாகவும் அழகாகவும் செதுக்கப்பட்டுள்ளது. மேலும், காவற்கள் எனப்படும் சிற்பங்கள் தென்னிந்திய மற்றும் இலங்கைக் கோயில்களின் வாசலில் காணப்படுகின்றன. இவை

காவலுக்கான தெய்வீகப் படிவங்களாகக் கருதப்படுவதுடன், சாமானியர்களின் அணுகலை நிர்ணயிக்கும் புனித எல்லைகளாகவும் அமைகின்றன (ஸ்பிங்க், வால்டர் எம், 1971, பக். 54-55). இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் காணப்படும் சந்திரவட்டக்கல் (moonstone) சிற்ப வடிவம், முதலில் பௌத்தச் சூழலில் தோன்றியதாயினும், பின்னர் சோழர் கட்டடக்கலையின் கீழ் சைவ மற்றும் வைணவ கோயில்களிலும் இடம்பெற்றிருக்கும் சாத்தியங்கள் உள்ளன (பண்டாரநாயக்க, ஸெனரத், 1974, பக். 121-123). அதில் காணப்படும் விலங்குகளின் சுற்றி வளைவான அணிவகுப்பு மற்றும் கலசம் நோக்கி இட்டிசையும் வடிவமைப்புகள், சோழர் கோயில்களில் இடம்பெற்ற சுழலும் வாழ்க்கைச் சுழற்சிக்கான திருக்குறிப்பு போன்ற மெய்ஞானக் கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கலாம் (தேஹேஜியா, வித்யா, 1997, பக். 112-115). இதன் வடிவியல் ஒத்திசைவை, குறிப்பாக அனுராதபுரத் தமிழ்க் குடியிருப்புகள் கொண்ட வன்னிப் பகுதிகளிலும் காணக்கிடைப்பதால், சோழர் கலையின் தாக்கம் தமிழ்ச் சமூகத்தின் வெளிப்பாடாகத் தொடர்ந்திருப்பதைக் காணலாம்.

### தொல்லியல் சின்னங்கள் பௌத்தமயமாக்கப்படுதல்

வன்னிப் பெரு நிலப்பரப்பில் காணப்படுகின்ற தொல்லியல் சின்னங்களால் பெரும்பாலானவற்றைப் பௌத்தமயமாக்கும் முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. 30 வருட யுத்தத்தின் பின், வன்னி நிலத்தில் உள்ள தமிழருடைய அடையாளச் சின்னங்களை - தொல்லியல் அச்சங்களை - அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் சிங்கள அரசாங்கம் பௌத்தமயமாக்க வருவது பெரும் கவலைக்குரிய விடயமாகும். இலங்கையின் வடக்குப் பிரதேசத்தின் பல்வேறு இடங்களில் பௌத்த சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் வவுனியாவில் மடுக்கந்தை, சப்புமல்கஸ்கோட தொல்லியல் சிதைவுகளில் பௌத்த சிதைவுகளின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வவுனியா மடுக்கந்தையில் கண்டெடுக்கப்பட்ட பௌத்த சிதைவுகளில் அங்கு விகாரைகளின் சிதைவுகளும் அதனுடன் சார்ந்த கலை வெளிப்பாடுகளும் காணப்படுகின்றன. அந்த வகையில், இலங்கைக்குப் புனித தந்ததாதுவை ஹேமமாலா, நந்தகுமார அவர்கள் கோகண்ண துறைமுகத்தினுடாக அனுராதபுரத்திற்குக் கொண்டு சென்றபோது, சப்புமல்கஸ்கோட மற்றும் மடுக்கந்தை விகாரையில் தங்கி இரவுப் பொழுதினைக் கழித்துவிட்டு சென்றதாக குறிப்பிடப்படுகின்றது. அதன் பின்பு மடுக்கந்தை விகாரை அமைப்பதற்கு நந்திவர்மன் நன்கொடை வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (https://www.sundayobserver.lk/2023/12/10/news-features/11724/looking-back-at-a-glorious-past/ )

வன்னிப் பிராந்தியங்களில் கண்டெடுக்கப்பட்ட சிங்கள பௌத்தச் சின்னங்கள் தொடர்பில் கூறப்பட்டு வரும் கதைகள் நம்பகத்தன்மை அற்றநிலையில் காணப்படுகிறன. அந்தவகையில், கோகண்ண துறைமுகத்தில் இறங்கிய ஹேமமாலா, நந்தகுமார ஆகியோர் புனித தந்ததாதுவுடன் வடக்கு நோக்கி வந்து சப்புமல்கஸ்கோடவில் தங்கி, பின்பு மடுக்கந்தையிலும் தங்கி, வட

மத்தியில் உள்ள அநுராதபுரத்திற்குச் சென்றதாகக் குறிப்பிடுகின்றார். கிழக்குக் கோகண்ண துறைமுத்திலிருந்து அநுராதபுரத்திற்கு நேராகவே வந்திருக்கலாம். இவர்கள் வடபிராந்தியங்களில் காணப்படும் தொல்லியல் சின்னங்களை பௌத்தமயமாக்கும் பெயரில் புனித தந்ததாதுவை இவ்வாறு இடங்களில் வைத்துச் சென்றதாகக் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் காணப்படும் சந்திரவட்டக் கற்கள், காவற்கற்கள், கைப்பிடி வரிசைகள் போன்ற சிற்ப வடிவங்கள் பல்வேறு பௌத்த வழிபாட்டுத் தலங்களில் இருப்பினும், அவை பௌத்தத்தின் தனித்துவ சின்னங்களாக ஏற்கப்படுவது முற்றிலும் கேள்விக்குரியதாகும். ஏனெனில், இலங்கையில் பௌத்தம் வட இந்தியாவிலிருந்து பரவியதாக மஹாவம்சம் (Geiger, 1912) குறிப்பிடுகின்றது. ஆனால், அங்கு காணப்படும் மௌரிய அல்லது குப்தக் கலை மரபுகளில் இவ்வாறான சிற்ப வடிவங்கள் காணப்படுவதில்லை. மாறாக, தென்னிந்தியாவின் பல்லவர், சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலை மரபுகளில், குறிப்பாக கோயில்களின் வாசல்களில் சந்திரவட்டக் கற்கள், காவற்கற்கள், கைப்பிடி வரிசைகள் ஆகியவை பொதுவாக காணப்படுகின்றன (அருணாசலம். மு, 2001, பக்கம் 84 - 89). இந்தக் கலைவடிவங்கள் தென்னிந்திய மரபிலிருந்தே இலங்கைக்குப் பரவியிருக்க வாய்ப்புண்டென்பதையும், குறிப்பாக தமிழர் கட்டடக் கலையின் தாக்கம் இவற்றில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றதையும் இக்கூற்று காட்டுகிறது. ஆகவே, இவற்றைப் பௌத்தத்தின் தனித்துவ சின்னமாக குறிப்பிடுவது வெறும் சமயத்தின் பெயரால் வரலாற்று உண்மைகளை மறைக்கும் முயற்சியாகவே விளங்குகிறது.

இதனைவிட, இவை தமிழர் சமூகத்தின் நீடித்த கலையுணர்வுக்கும், இலங்கையின் பழமையான திராவிடக் கட்டட மரபுக்கும் சான்றாக அமையும் தனித்துவக் கலைச்சின்னங்களாக அல்லது ஈழத்துக்குரிய பாரம்பரிய அடையாளங்களாக மதிக்கப்பட வேண்டும் (முத்தையா. ஆ, 2006, பக்கம் 112-117, நாகரத்தினம். இரா, 1998, பக்கம் 131). குருந்தூர் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட சந்திர வட்டக் கற்களில் பெரும்பாலும் அனுராதபுர, பொலனறுவை, கண்டிக் காலங்களுடன் ஒத்தவாறான அமைப்புக்கள் காணப்படவில்லை. மாறாக, தனித்துவமான அடையாளங்களை வெளிப்படுத்துவனவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக, தாமரை அலங்காரம், தீச்சுவாலை மாத்திரமே அமைக்கப்பட்டுள்ளன. அனுராதபுர, பொலனறுவை, கண்டிக் காலங்களில் இவ்வாறான வரிசை அமைப்பு அலங்கரிக்கப்படவில்லை.

மேலும், மருக்காரம்பளையில் கண்டெடுக்கப்பட்ட சந்திர வட்டக் கல்லில் அரைத் தாமரை அலங்காரம், அதை அடுத்து யானை வரிசைகள் சிவலிங்கத்திற்கு மலர் தூவும் அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செதுக்களைத் தமிழர்கள் கால்மிதியாகப் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். மாறாக, ஆலயங்களின் விக்கிரகங்களுக்குப் பின்னால் அலங்கரிப்பதற்காக அரை வடிவிலான அலங்கார அமைப்பினைச் செதுக்கி இருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஆகையால், வன்னியில் கண்டெடுக்கப்பட்ட சந்தர வட்டக் கற்களைத் தமிழர்களின் தனித்துவ அடையாளத்தில் ஒன்றாகவும் தனித்துவ சின்னமாகவும் குறிப்பிடலாம். தற்போது குறுந்தூர் மலையில் விகாரைகள் அமைத்து, மிகப் பெரிய புத்தர் சிலைகளையும் அமைத்து, ஒரு பௌத்த

புனித தலமாக மாற்றுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் வன்னிப் பெருநிலப் பரப்பில் பெரும்பாலான இடங்களில் நடைபெற்று வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இன்றைய சிங்கள அரசாங்கமும் தொல்லியல் திணைக்கமும் தமிழர் வாழும் பிரதேசங்களை அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் பௌத்தமயமாக்குவதற்குக் குருந்தூர் மிகச்சிறந்த உதாரணமாக விளங்குகின்றது.

**முடிவுரை**

வன்னிப் பகுதியின் தொல்லியியல் சின்னங்கள், குறிப்பாக சந்திரவட்டக் கற்கள், காவற்கற்கள், கைப்பிடி வரிசைகள், தமிழர் கலாசாரப் பரம்பரையின் மிக முக்கியமான பாகங்களை வெளிப்படுத்துகின்றன. இவை பௌத்த சாஸனத்துக்குப் பிறகு பௌத்த அறிஞர்களாலும், பௌத்தத் தத்துவங்களாலும் பின்பற்றப்பட்ட வித்தியாசமான, வன்முறையின்றி அமைதியாக நிலைநிறுத்தப்பட்ட அனுபவங்களின் சின்னங்களாக இருக்கின்றன. இந்தச் சின்னங்களின் இடையே உள்ள தொல்லியல் மற்றும் கலாசார உறவுகளைக் கருதும்போது, அவை கட்டடக்கலை, மத வழிபாடு, சமூக அமைப்புகளைப் பிரதிபலிப்பதாகத் தோன்றுகின்றன. குறிப்பாக, இவை பௌத்த நம்பிக்கைகளுடன் போராட்டம் செய்வதற்கான ஒரு ஊக்கமாகவும், தமிழர் பாரம்பரியங்களைத் தற்காலிகமாக மறைக்கப்படாமல் காத்துகொள்வதற்கான ஒரு உள்கட்டமைப்பாகவும் இருப்பதாக நம்பிக்கை நிலைத்திருக்கின்றது.

வன்னிப் பகுதித் தமிழரின் பண்டைய சமூகங்களைத் தெரிந்துகொள்ளும் ஒரு அற்புதமான இடமாகவும், பௌத்த அறிஞர்கள் அவர்களின் சாஸனத்தை நிலைப்படுத்த முயற்சித்தபோதும், இந்தச் சின்னங்கள் எவ்வாறு அதன் எதிர்ப்புகளை வெற்றிகரமாகப் பதிவு செய்தன என்பதையும் அறிய உதவுகின்றது. இவை தமிழர்களின் ஆரோக்கியமான எதிர்ப்பின் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. மற்றும் அவற்றின் மூலக் கொள்கைகள், கொள்கை மாற்றத்திலும், சாத்தியமான பின்னணிகளில் அதன் தாக்கங்களை உருவாக்கியுள்ளன.

இந்தத் தொல்லியல் சின்னங்களின் ஆய்வு, தமிழர் வரலாற்றின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் ஒரு வேறு கோணத்தில் பார்வையை வழங்குகிறது. அதே நேரத்தில், பௌத்த மதத்தின் மீண்டும் மதிப்பிடப்பட்ட அடையாளங்களை முற்றிலும் மறைக்கும் முறையில் இவை ஒரு வடிவமைப்பாக இருந்தன. இந்தச் சின்னங்கள் தமிழர் எதிர்ப்புப் பாரம்பரியத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றை எளிதில் மறுக்கமுடியாததாகவும், இந்திய நிலப்பரப்பில் மறுபடியும் வாழும் ஓர் ஆதாரமாகவும் நாம் அணுக முடியும்.

இவை தமிழர் மறுவாழ்வின் நினைவாகவும் தமிழ் இனக்கோணி மீள்புரிதல் மற்றும் மரபுக்களின் புனரமைப்புக் காரணிகளாகவும் பார்க்கப்படுகின்றன. இதன் மூலம், நாம் சித்தாந்த, கலை, மதம், வரலாறு ஆகிய முக்கியமான பாகங்களைப் புரிந்துகொண்டு, தமிழ்ப் பாரம்பரியத்தை மறுபடியும் நிலைநாட்டுவதற்கான ஒரு புதிய வாய்ப்பை உருவாக்குகின்றோம்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


அருணாசலம். மு, 2001, தமிழர் கலை மரபுகள், தமிழ்நாடு அரசுப் பதிப்பகம்.

இந்திரபாலா. கே, 2005, ஒரு இன அடையாளத்தின் பரிணாமம்: இலங்கையின் தமிழர் வரலாற்று ஆய்வு, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

உஷா ரௌபாசிங், 2016, சின்னங்கள், சந்ததிகள், சாயல்கள்: தமிழர் கலைவழிப் பயணம், சென்னை: உஷா பதிப்பகம்.

குணதிலகே, சுசந்தா., 1981, இலங்கைக் கலாசாரத்தின் உருவாக்கம், பண்டைய சிலோன்.

கைமல், மியூனிஷா, 1996, “நடராஜர் சிவன்: ஒரு சின்னத்தின் மாற்றம் பெற்ற அர்த்தங்கள்” The Art Bulletin, தொகுதி 78.

தியாகராஜா, சிவா., 2011, ஆரம்ப கால இலங்கையின் மக்கள் மற்றும் கலாசாரங்கள், தமிழ் தகவல் மையம், லண்டன்.

தெரணியகல, எஸ்.யு., 1996, ஆசியா மற்றும் ஓசியானியாவின் வரலாற்றுக்கு முந்தைய தொகுதி.5, தொல்லியல் துறை, கொழும்பு.

தேஹேஜியா, வித்யா, 1997, “இந்தியக் கலை”, Phaidon Press.

நாகரத்தினம். இரா, 1998, யாழ்ப்பாணம் தொல்காப்பியச் சுடர், கலைச்செழியன் பதிப்பகம்.

பண்டாரநாயக்க, ஸெனரத், 1974, “சிங்கள மடக் கட்டிடக்கலை”, Brill Academic Publishers.

புஷ்பரட்ணம், ப., 1993, பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழக வெளியீடு.

மிசல், ஜோர்ஜ், 1988, “இந்துக் கோயில்: அதன் அர்த்தங்கள் மற்றும் வடிவங்களுக்கான அறிமுகம்”, University of Chicago Press.

முத்தையா. ஆ, 2006, இலங்கைத் தமிழர் வரலாறு, நக்கியா பதிப்பகம்.

ராவ், கோபிநாதா. டி. ஏ, 1997, இந்துத் திருவுருவக் கலை மூலத்தொகுப்பு (முதல் தொகுதி, பகுதி ஒன்று), டெல்லி, மோட்டிலால் பனாரஸிதாஸ்.

ரியா, அலெக்சாண்டர் ., 1915, ஆதிச்சநல்லூர் மற்றும் பெரும்பியாரின் வரலாற்றுக்கு முந்தைய தொல்பொருட்களின் பட்டியல், அரசு பப்ளிகேஷன்ஸ், மெட்ராஸ்.

ஸ்பிங்க், வால்டர் எம், 1971, “பல்லவர் கட்டிடக்கலை”, Artibus Asiae, தொகுதி 33. https://www.sundayobserver.lk/2023/12/10/news-features/11724/looking-back-at-a-glorious-past/

# Education & Psychology

# மாணவர்களின் உளவிருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு

**Niththiyanantham Hakshana**
Department of Education and ChildCare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka,
nhakshana@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மாணவர்களின் உளத்தைச் சிறந்த முறையில் பேணுவதற்குச் சுற்றறிக்கை இலக்கம் 39/ 2022இன் அடிப்படையில் கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது 2022.12.12இல் அறிமுகப்படுத்தப்பட்டது. போரதீவுப்பற்றுக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களிடத்தில் உளம் சார்ந்த விருத்தியை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக ஏற்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. எனவே, இவ் ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து மாணவர்களின் உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு எனும் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில், போரதீவுப்பற்றுக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது, அதனை முன்னெடுத்துச் செல்வதில் எவ்வாறான சவால்கள் காணப்படுகின்றன என்பவற்றைக் கண்டறியும் விதமாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவ் ஆய்விற்கு போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 50 வீதமான பாடசாலைகள் ஒதுக்கீட்டு மாதிரியின் ஊடாக தெரிவுசெய்யப்பட்டதுடன் பத்துப் பாடசாலைகளில் உள்ள பத்து அதிபர்களும், பத்து ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும், ஆலோசனை வழிகாட்டல் ஆலோசகரும், Slovin மாதிரி முறையைப் பயன்படுத்தி 87 மாணவர்களும், 50% ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் 67 ஆசிரியர்களும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து நேர்காணல், குவியக்குழுக் கலந்துரையாடல் மூலமாக பண்புசார் தரவுகளும், வினாக்கொத்து மூலமாக அளவு ரீதியான தரவுகளும் பெறப்பட்டன. பண்புசார் தரவுகளைப் பயன்படுத்தி விபரணப் பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது. அளவுசார் தரவுகள் SPSS இல் உட்செலுத்தப்பட்டு அதன் மூலம் எண்சதவீதம் பெறப்பட்டு Excelஇல் சலாகை வரைபுகள் மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த போதிய விளக்கம் மற்றும் தெளிவின்மை, ஒத்துழைப்புக் குறைவாக காணப்படுகின்றமை என்பன ஆய்வு முடிவுகள் மூலம் கண்டறியப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டத்தைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்குரிய வழிமுறைகளும் விதப்புரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *: பாடசாலை, சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள், உள விருத்தி, உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்.*

**அறிமுகம்**

பாடசாலையொன்றில் கல்வி கற்கும் சகல பிள்ளைகளினதும் அவர்களது பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு, "ஒரு பிள்ளையை நல்ல ஆளுமைகளுடன் சமுகமயப்படுத்தி உருவாக்கி விடுவதாகும்." அவர்களின் அத்தகைய கனவுகளை எவ்வாறாயினும் நனவாக்க வேண்டும் என்பதே பாடசாலையின் நோக்கமாகும் (கல்வி அமைச்சு, 2022).

இன்றைய உலகில் சிக்கலாகவும் வேகமாகவும் இயங்கி வருகின்ற சமூகத்திற்கு முகம் கொடுத்து மாணவர்கள் தமது உளத்தை விருத்திசெய்து கொள்வதற்குத் தேவையான அனுபவத்தைப் பாடசாலையிலே வழங்கி, அவர்களிடத்தில் நேரான நடத்தைகளை உருவாக்கும் விதத்தில் கல்வி அமைச்சினால் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது (கல்வி அமைச்சு, 2022).

உள விழிப்புணர்வுத் நிகழ்ச்சித் திட்டம் என்பது இலங்கைப் பாடசாலைப் பிள்ளைகளுடன் உள விழிப்புணர்வைப் பகிர்ந்துகொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஆகும். "தற்போது நிகழ்கின்ற கணப்பொழுதின்மீதும் கணத்திற்குக் கணம் உருவாகி வெளிப்படுகின்ற அனுபவங்களின்மீதும் தீர்ப்பு ஏதும் இன்றி, நோக்கத்துடன் கூடிய அவதானத்தைச் செலுத்துவதன் மூலம் ஏற்படுகின்ற அறிதல்" என உள விழிப்புணர்வு வரையறை செய்யப்படுகின்றது (உள விழிப்புணர்வுப் பாடசாலை, 2018).

மேற்கு உலகில் இந்தப் பயிற்சியைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்துவதனால் ஏற்படும் குறிப்பிடத்தக்க அனுகூலங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இலங்கையின் கல்வியமைப்பு இந்த விடயத்தில் இதுவரையும் எதுவிதமான அனுபவ வெளிக்காட்டுதலையும் கொண்டிருக்கவில்லை. இத்தகைய பின்னணியிலே உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த முக்கியத்துவம் உணரப்பட்டு, இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 39/2022 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக உள விழிப்புணர்வுடன் இருத்தல், உள விழிப்புணர்வுடன் நடத்தல், உள விழிப்புணர்வுடன் செயற்படல் போன்ற உள விழிப்புணர்வுப் பயிற்சிகள் மற்றும் தியானம், யோகா, சுவாசப் பயிற்சி போன்ற பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலமாக அவர்களது உளத்தை விருத்திசெய்து சிறந்த கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்க முடிகின்றமை குறிப்பிடத்தக்கது (உள விழிப்புணர்வுப் பாடசாலை, 2018).

ஆளுமையுடன் கூடிய ஞாபக சக்தி, சகிப்புத்தன்மையுடன் கனிவான மற்றும் மென்மையான நபராக செயல்படும் திறனை வழங்குவதால் இந்தச் செயற்றிட்டம் மிகவும் முக்கியமானதாகும். சுய விழிப்புணர்வு, மனக்கிளர்ச்சிளைக் கட்டுப்படுத்தும் திறன், கவனம் மற்றும் நினைவாற்றலின் வளர்ச்சி, சவால்களைச் சமாளிக்கும் திறன் அதிகரித்தல், பொறுமை, இரக்கம், கருணை மற்றும் சகிப்புத்தன்மை மேம்பாடு, கல்வியில் கவனத்தைச் செலுத்தல், விளையாட்டு நடவடிக்கைகளில் பரஸ்பர கௌரவத்தைப் பாதுகாத்து வெற்றி - தோல்வி இரண்டையும் சமமாகத் தாங்கிக்கொள்ளும் திறனின் வளர்ச்சி, அன்றாட வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் உறவுகளைப் பேணுதல், பிற செயற்பாடுகளை நட்பாகவும் மென்மையாகவும்

கையாளும் திறன் என்பன இச்செயற்றிட்டத்தால் மாணவர்களிடத்தில் உருவாகின்றன (கல்வி அமைச்சு, 2022). எனவே, ஆய்வுப் பிரதேசமாகிய போரதீவுப் பற்றுக் கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் இந்நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் விதம், இந்நிகழ்ச்சித் திட்டத்தைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதில் காணப்படுகின்ற சவால்கள் என்பவை பற்றி ஆராய்வதாக இவ் ஆய்வு அமையப்பெறுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது கல்வி அமைச்சின் மூலமாக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டதன் பிரகாரம் அந்நிகழ்ச்சித் திட்டம் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அந்நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தன்மை குறைவாகக் காணப்படுவதன் காரணமாக மாணவர்களிடத்தில் உளம் சார்ந்த விருத்தியை ஏற்படுத்த முடியாதுள்ளது.

பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அணுகுமுறை காரணமாக கல்வியின் இறுதிக் கற்பித்தல் இலக்கான “நற்பிரசைகளை உருவாக்குவது” எனும் நோக்கத்தை அடைய இன்று பிரச்சினை மிகுந்த நெருக்கடியான ஒரு சூழல் தோற்றம் பெற்றுள்ளது. தற்போதைய மாணவ சமூகத்தினரிடம் அதிதீவிர சுயநலம், பிறர் மீதான பச்சாதாபமின்மை, சமூக விரோத நடத்தைக் கோலம், மனித நேயமின்மை, பிறர் கண்ணியத்திற்கு அவமரியாதை செய்தல், உளநலக் கோளாறுகள், ஒத்துழைப்பின்மை மற்றும் மோசமான சமூக நடத்தைக் கோலங்கள் போன்ற ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் காணப்படுகின்றன என்பதைப் பல ஆய்வுகள் மூலம் அறிய முடிகின்றது (கல்வி அமைச்சு, 2022).

கல்வி அமைச்சினால் 2016இல் வெளியிடப்பட்ட “இலங்கையில் தேசிய பொதுக் கல்விக் கொள்கைக்கான முன்மொழிவுகள்” எனும் நூலில் குறிப்பிட்டுள்ளதன்படி, தரம் 1 முதல் தரம் 13 வரையான அனைத்து இலங்கைச் சிறார்க்கும் கல்வியறிவூட்டும் அளவுசார் திறனைத் தற்போதைய பொதுக் கல்வி முறைமை தன்னகத்தே கொண்டுள்ளதை ஆணைக்குழு கருத்திற் கொள்கிறது. எனினும், ஞானமிகு ஒழுக்க, சமூக விழுமியங்கள் கொண்ட நீண்ட கல்வி மரபுடைய ஒரு தேசத்தின் ஆவல்கட்குப் பொருந்துமாறு கல்வித் தரம் சில முக்கிய அம்சங்களில் தேசிய எதிர்பார்ப்புகளின் நிறைவாக்கத்துக்கு அமைவாக உயரவில்லை என்பதை ஆணைக்குழு வருத்தத்துடன் குறிப்பிடுகிறது. இக்காலகட்டக் கல்வி, மாணவர்கள் எதிர்மறையான எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெல்வதற்கான குறிப்பான அர்ப்பணிப்புடைய பயிற்றலைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் உணர்ச்சிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவும் அவற்றின் பாதகமான விளைவுகளைத் தணிக்கவும் ஏற்றதான உள-விருத்திக்குரிய அறிவுரை, ஆலோசனை, வழிகாட்டல் என்பவற்றைக் கல்வி கட்டாயமாக உள்ளடக்க வேண்டும் (கல்வி அமைச்சு, 2016).

இலங்கையின் கல்விச் செயற்பாடுகளிலும் கலைத்திட்டத்திலும் பல்வேறு போதாமைகளும் மட்டுப்பாடுகளும் கண்டறியப்பட்டுள்ளன. நாளாந்த வாழ்க்கையில் எழும்

நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் அறைகூவல்களுக்கும் முகம்கொடுக்கும் திறன் கல்விச் செயல்முறையால் வளர்த்தெடுக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. கற்றவர்கள் தாம் யாரென்பதை அறியமுடியாதிருக்கின்றனர். தமது ஆற்றல்களை இனங்கண்டு வெளிப்படுத்த முடியாதிருக்கின்றனர். சுருக்கமாகக் கூறுவதானால், ஒருவரது சுய அறிதகவும் தற்பெருமிதமும் கல்விச் செயல்முறையால் வெளிக்கொண்டு வரப்பட முடியாதிருக்கும் நிலை கவன ஈர்ப்பைப் பெறுகின்றது. கல்விச் செயன்முறையினால் உருவாக்கப்படுபவர்கள் பரீட்சை எழுதுவதற்குரிய மனிதர்களாகத் தயாரிக்கப்படுகின்றார்களே தவிர, வாழ்க்கை அறிதகவு கொண்ட மனிதர்களாக உருவாக்கப்படவில்லை (ஜெயராசா, 2006).

வழிகாட்டல் ஆலோசகர்கள் மாணவர்களின் மனநலத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மனநல விழிப்புணர்வு சார்ந்த திட்டங்களை உருவாக்குவதற்கான பொறுப்பை இவர்கள் கொண்டிருக்க வேண்டும். இருப்பினும், வழிகாட்டல் ஆலோசகர்களின் பற்றாக்குறையானது மனநிறைவுத் திட்டங்களைத் திறம்பட முன்னெடுத்துச் செல்வதில் தடையாக உள்ளது. இதனால் மாணவர் தொகையில் பெரும்பாலான பகுதியினர் போதுமான உளம் சார்ந்த விருத்தி நிலைமைகளை அடையவில்லை என நிக்கோலா (2023) என்ற ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில், ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளிலும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவப் பெறுவதோடு கல்வித் தகுதியும் குறைவாகவே காணப்படுகின்றது.

குறிப்பாக, இந்நிகழ்ச்சித் திட்டத்தைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்புகள் அதிபர் மற்றும் ஆலோசனை வழிகாட்டல் ஆலோசகர், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் போன்றோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், இக்கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் இதற்கான செயற்பாடுகள் ஒழுங்கான முறையில் முன்னெடுக்கப்படாத நிலை காணப்படுகின்றது. பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோரிடம் காணப்படுகின்ற மன அழுத்தங்களைக் குறைத்துச் சிறப்பான கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்கும் விதத்தில் இத்தகைய நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டாலும், போரதீவுப்பற்றுக் கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் இதனை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றமையால், சிரேஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் உளம் சார்ந்த விருத்தியை ஏற்படுத்தி அம்மாணவர்களுடைய கற்றலையும் மேம்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, இவ் ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்தே ஆய்வாளரால் இவ் ஆய்வுத் தலைப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

போரதீவுப் பற்றுக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் உள்ள சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களிடத்தில் காணப்படுகின்ற உளம்சார்ந்த பிரச்சினைகளை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாகக் குறைத்து உளவிருத்தியை ஏற்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

## ஆய்வின் நோக்கம்

### பொது நோக்கம்

சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் உளத்தை விருத்தி செய்வதில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கை இனங்காண்பது இவ் ஆய்வின் பொது நோக்கமாகும்.

### சிறப்பு நோக்கங்கள்

1. சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்.
2. சிரேஸ்ட இடைநிலை மாணவர்களுடைய உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைகளைக் கண்டறிதல்.
3. சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் உள விருத்திக்காக உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாடசாலையில் காணப்படுகின்ற சவால்களைக் கண்டறிதல்.
4. உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாடசாலையில் காணப்படுகின்ற சவால்களை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்.

## இலக்கிய மீளாய்வு

அகஸ் மற்றும் பலர் (2021) ''இந்தோனேசியாவில் மாணவர்களின் ஆக்ரோஷமான நடத்தைக்கு எதிர்மறையான அமைதியின் விளைவு'' எனும் தலைப்பில் இந்தோனேசியாவின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளிலிருந்து மொத்தம் 1263 மாணவர்களை இலகு எழுமாற்று மாதிரியெடுப்பு முறை அடிப்படையில் தேர்ந்தெடுத்து, மேற்கொண்ட ஆய்வில் மாணவர்களின் எதிர்மறையான மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் 62.9% நேர்மறையான விளைவை மன அமைதி ஏற்படுத்துவதாகக் கண்டறிந்துள்ளனர். எதிர் நடத்தைகளைக் குறைப்பதற்கு அமைதியான சிந்தனைப் பயிற்சித் திட்டங்களை உருவாக்கி வழங்க வேண்டும் என இவ் ஆய்வின் முடிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மெட் (2016) என்பவரால் ''குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தில் மனநலப் பிரச்சினைகள்'' எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், (10-20%) குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்குச் சில வகையான மனநலப் பிரச்சினைகள் உள்ளன. கவனக்குறைவுகள், அறிவாற்றல் குறைபாடுகள், உந்துதல் இல்லாமை மற்றும் எதிர்மறை மனநிலை போன்ற வெளிப்பாடுகள் அனைத்தும் கல்வி வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கின்றன. பாடசாலையுடன் தொடர்புடைய காரணிகள் குழந்தைகளின் மன வளர்ச்சியைப் பாதிக்கின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. மனநலப் பிரச்சினைகள் மாணவர்களிடத்தில் இடைநிறுத்தம் மற்றும் பாடசாலையை விட்டு வெளியேறும் அபாயத்தை அதிகரிக்கின்றன. பாடசாலைச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான மனநிறைவுத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மனநலப் பிரச்சினைகள் உருவாகும் அபாயத்தைக் குறைக்கலாம் என்று ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நார்டன் (2020) என்பவர் ''பாடசாலைகளில் விழிப்புணர்வு அடிப்படையிலான திட்டங்களை வழங்குவதன் தாக்கம்'' எனும் தலைப்பில் பிரித்தானியாவில் மேற்கொண்ட ஆய்வில், பாடசாலைகளில் விழிப்புணர்வு அடிப்படையிலான திட்டங்களை வழங்குவதில் ஆர்வம் இருந்தாலும், இதனை முன்னெடுப்பதற்கும் செயல்படுத்துவதற்குமான அனுபவங்கள் குறைவாகக் காணப்படுகின்றன. விழிப்புணர்வு அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலைகளில் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்றால், அவற்றின் செயலாக்கம் கவனிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தலைமைத்துவ ஆதரவு மற்றும் ஆசிரியர் ஈடுபாடு என்பன குறைவாக இருப்பதாக ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டன. பாடசாலையிலுள்ள வளங்கள், பாடசாலைகளில் இத்திட்டம் ஏன் அறிமுகப்படுத்தப்படுகின்றது மற்றும் உளவிழிப்புணர்வைப் பற்றிய பொதுவான புரிதல் இல்லாமை என்பன இத்திட்டத்தை நிகழ்த்திச் செல்வதற்குத் தடையாக அமைவதாக கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலைகளில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பத்தில் தலைமைத்துவ ஈடுபாடு இருந்தபோதிலும், பின்னர் அந்த ஈடுபாடு குறைந்ததாகவும் ஆசிரியர்களிடத்தில் இதனை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆர்வம் இல்லாமலிருந்தமையும் ஆய்வின் முடிவுகளில் கண்டறியப்பட்டன. குறிப்பாக, தலமையாசிரியர்களிடம் எந்த ஈடுபாடும் இல்லாததனால் செயல்படுத்தும் நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன. எனவே, ஆய்விற்குத் தெரிவுசெய்துள்ள பிரதேசத்திலும் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் சவால்கள் காணப்படுகின்றமையின் காரணமாக அத்தகைய சவால்களைக் கண்டறிவதற்கு ஆய்வுத் தலைப்புடன் பொருந்திய இவ் இலக்கிய மீளாய்வு பயன்படுவதாக அமைகின்றது.

**ஆய்வு முறையியல்**

''மாணவர்களின் உளவிருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு'' எனும் தலைப்பிலமைந்த இவ் ஆய்வானது, பட்டிருப்புக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட போரதீவுப்பற்றுக் கோட்டப் பாடசாலைகளில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு தரம் 10, 11 மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனநலப் பிரச்சினைகள் இளம் பருவத்தினருக்கு (15– 16 வயதுடையவர்கள்) அதிகமாக இருப்பதால் ஆய்வின் மாதிரியை இவ் வயதினருக்கு வரையறுப்பதாக போர் என்ற ஆய்வாளர் 2014இல் மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். கட்டிளமைப் பருவத்திற்குட்பட்ட காலப்பகுதியில் பல்வேறு உடல், உள ரீதியான மாற்றங்கள் ஏற்படுவதன் காரணமாகவும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கின்ற காலகட்டம் என்பதனாலும் தரம் 10, 11 மாணவர்களை மாதிரியாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில், போரதீவுப் பற்றுக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து ஆய்வு மாதிரியாக பத்துப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டதுடன், அப் பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள், தரம் 10, 11 மாணவர்களுக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், தரம் 10, 11 மாணவர்கள், ஆலோசனை வழிகாட்டல் ஆலோசகர் போன்றோர் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வு முறைமை சிறப்பானதாக காணப்படும்போதே அதற்கான தீர்வுகள் நம்பகத்தன்மை உடையதாகக் காணப்படும். ஆய்வின் தலைப்பிற்குப் பொருந்தும் வகையில் இவ்வாய்வில் அளவைநிலை ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், இவ்வாய்வில் எண் ரீதியான, பண்பு ரீதியான முறைமையியல் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியிலான முறைமையியலினுள் எண்கள், புள்ளிவிபரங்கள், அட்டவணைகள், விகிதாசாரங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இதன் மூலமாக புறவயத்தன்மையாக ஆய்வானது முன்கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறே பண்பு ரீதியான முறைமையியலினுள் மனப்பாங்கு சார்பான விடயங்கள் உள்ளடங்குகின்றன. மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆலோசனை வழிகாட்டல் ஆலோசகரிடமிருந்து நேர்காணல் மூலமாகவும், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள், தரம் 10, 11 மாணவர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமாகவும், தரம் 10, 11இற்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்களிடமிருந்து குவியக்குழுக் கலந்துரையாடல் மூலமாகவும் தகவல்கள், தரவுகள் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மாதிரித் தெரிவு**

ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கு ஆய்வுப் பிரதேசம் தெரிவுசெய்யப்பட்ட பின்பு குடித்தொகை இனங்காணப்பட்டு, மாதிரித் தெரிவு இடம்பெறுகின்றது. இவ் ஆய்விற்காகத் தரவுகளைத் திரட்டும் நோக்கில் முழுக் குடித்தொகையினையும் ஆய்வுக்குட்படுத்த முடியாமை காரணமாக குடித்தொகையின் தன்மை, ஆய்வின் தன்மை, மாதிரி எடுத்தல் உபாயங்கள் போன்ற பல விடயங்களைக் கருத்தில் கொண்டு ஒதுக்கீட்டு மாதிரி, Slovin மாதிரியெடுப்பு முறை போன்ற மாதிரித் தெரிவுமுறைகள் தரவுசேகரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் மொத்தமாக 33 பாடசாலைகள் காணப்படுகின்றன. இதில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களை மையப்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதனால், வகை III பாடசாலைகள் 13 இனையும் ஆய்விற்கு உள்ளெடுக்கவில்லை. ஆய்விற்கான காலப் பகுதியைக் கருத்தில்கொண்டு ஏனைய பாடசாலைகள் 50% ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவ்வகையில், இரண்டு 1AB பாடசாலைகளிலிருந்து ஒரு 1AB பாடசாலையும், பத்து 1C பாடசாலைகளிலிருந்து ஐந்து 1C பாடசாலைகளும், எட்டு வகை II பாடசாலைகளிலிருந்து நான்கு வகை II பாடசாலைகளும் என மொத்தம் பத்துப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, ஆய்வின் தலைப்பிற்கேற்ப தரவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் கருதி, பத்துப் பாடசாலைகளிலுள்ள பத்து அதிபர்களும், பத்து ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சிரேஸ்ட இடைநிலைப் பிரிவிலுள்ள தரம் 10, 11 மாணவர்களை அடிப்படையாக வைத்து இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுவதனால், இவ்வகுப்பில் கல்வி கற்கின்ற மாணவர்களும், இம்மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவ்வகையில், தரம் 10இல் இருந்து 345 மாணவர்கள், தரம் 11இல் இருந்து 348 மாணவர்கள் என மொத்தம் 693 மாணவர்களும், தரம் 10, 11இற்குக் கற்பிக்கின்ற 139 ஆசிரியர்களும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இத்தரவுகள் அட்டவணை 3.1இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1: தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகள், அதிபர்கள், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள், தரம் 10, 11 மாணவர்கள், அவர்களுக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பற்றிய விபரம்

| இல. | பாடசாலை வகை | பாடசாலையின் குறியீடு | அதிபர்கள் | ஆ.வ ஆசிரியர்கள் | தரம் 10 மாணவர்கள் | | | | | | தரம் 11 மாணவர்கள் | | | | | | ஆசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண் | | | பெண் | | | ஆண் | | | பெண் | | | ஆண் | பெண் |
| | | | | | A | B | C | A | B | C | A | B | C | A | B | C | | |
| 1 | 1AB | A | 1 | 1 | 21 | 19 | 15 | 18 | 17 | 18 | 16 | 18 | 21 | 15 | 13 | 17 | 10 | 16 |
| 2 | 1C | B | 1 | 1 | 8 | | | 8 | | | 12 | | | 15 | | | 4 | 7 |
| 3 | 1C | C | 1 | 1 | 11 | 12 | | 13 | 11 | | 13 | 10 | | 11 | 12 | | 7 | 12 |
| 4 | 1C | D | 1 | 1 | 14 | | | 16 | | | 12 | | | 10 | | | 8 | 6 |
| 5 | 1C | E | 1 | 1 | 11 | | | 14 | | | 16 | | | 15 | | | 7 | 7 |
| 6 | 1C | F | 1 | 1 | 12 | | | 13 | | | 9 | | | 9 | | | 2 | 12 |
| 7 | வகை II | G | 1 | 1 | 10 | 10 | | 10 | 10 | | 9 | 9 | | 11 | 12 | | 4 | 8 |
| 8 | வகை II | H | 1 | 1 | 4 | | | 11 | | | 11 | | | 11 | | | 6 | 4 |
| 9 | வகை II | I | 1 | 1 | 7 | | | 10 | | | 5 | | | 8 | | | 4 | 7 |
| 10 | வகை II | J | 1 | 1 | 8 | | | 14 | | | 12 | | | 16 | | | 6 | 2 |
| மொத்தம் | | | 10 | 10 | 345 | | | | | | 348 | | | | | | 58 | 81 |
| | | | | | 693 | | | | | | | | | | | | 139 | |

மூலம் : பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம், களுவாஞ்சிக்குடி (2024).

அட்டவணை 3.2 : இறுதி மாதிரியெடுத்தல் பருமனில் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள் பற்றிய விபரம்

| இல | பாடசாலை வகை | பாடசாலையின் குறியீடு | அதிபர்கள் | ஆ.வ ஆசிரியர்கள் | Slovin மாதிரியெடுப்பு முறை (10% Error Tolerance level) | | | | ஒதுக்கீட்டு மாதிரி (50%) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தரம் 10 மாணவர்கள் | | தரம் 11 மாணவர்கள் | | ஆசிரியர்கள் | |
| | | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1 | 1AB | A | 1 | 1 | A 3, B 2, C 2 | A 2, B 2, C 2 | A 2, B 2, C 3 | A 2, B 2, C 2 | 5 | 8 |
| 2 | 1C | B | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | 3 |
| 3 | 1C | C | 1 | 1 | 1, 2 | 2, 1 | 2, 1 | 1, 2 | 3 | 6 |
| 4 | 1C | D | 1 | 1 | 2 | 2 | 2 | 1 | 4 | 3 |
| 5 | 1C | E | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | 3 | 3 |
| 6 | 1C | F | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 6 |
| 7 | வகை ‖ | G | 1 | 1 | 1, 1 | 1, 1 | 1, 1 | 1, 2 | 2 | 4 |
| 8 | வகை ‖ | H | 1 | 1 | . | 1 | 1 | 1 | 3 | 2 |
| 9 | வகை ‖ | I | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 3 |
| 10 | வகை ‖ | J | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | 3 | 1 |
| மொத்தம் | | | 10 | 10 | 20 | 22 | 23 | 22 | 28 | 39 |
| | | | | | 42 | | 45 | | 67 | |
| | | | 174 | | | | | | | |

மூலம் : ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

இறுதி மாதிரியெடுத்தல் பருமனானது அட்டவணை 3.2இல் காட்டப்பட்டுள்ளது. அவ்வகையில், ஆய்விற்கான தரவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் கருதி, தெரிவுசெய்யப்பட்ட பத்துப் பாடசாலைகளிலும் உள்ள பத்து அதிபர்கள் மற்றும் பத்து

ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும், ஆலோசனை வழிகாட்டல் ஆலோசகரும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தரம் 10 மற்றும் 11இல் கற்கின்ற மாணவர்கள் ஆண், பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, 10% Error இன் அடிப்படையில் Slovin மாதிரிமுறையைப் பயன்படுத்தித் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். மாணவர் தொகை அதிகமாகக் காணப்படுவதனால் 10% Error பயன்படுத்தப்பட்டது. அவ்வகையில், தரம் 10இல் இருந்து 20 ஆண் மாணவர்களும், 22 பெண் மாணவர்களும், தரம் 11இல் இருந்து 23 ஆண் மாணவர்களும், 22 பெண் மாணவர்களும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். தரம் 10, 11இற்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் ஆண், பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, 50% ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மொத்த மாணவர்களில் இருந்து மாதிரி தெரிவுசெய்யப்பட்ட முறை

$$n = \frac{N}{1 + Ne^2}$$

$$n = \frac{693}{1 + 693(0.10)^2}$$

$$n = \frac{693}{1 + 693 \times 0.01}$$

$$n = \frac{693}{7.93}$$

$$n = 87$$

$n = 87$ மாணவர்கள்

n = மாதிரிகளின் எண்ணிக்கை

N =மொத்தக் குடியின் எண்ணிக்கை

e = error tolerance(level)

**தெரிவுசெய்யப்பட்ட A பாடசாலைக்கான மாதிரி அளவு எடுத்துக்காட்டாக,**

$$\frac{RPS}{N} * n$$

$$A = \frac{21}{693} \times 87$$

$A = 2.6$

$A = 3$ மாணவர்கள்

n = மாதிரிகளின் எண்ணிக்கை

N =மொத்தக் குடியின் எண்ணிக்கை

$RPS = Respondant$ Sample Size

மூலம் : ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

## தரவுப் பகுப்பாய்வு

**சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்**




உரு 4.1 : பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவம்

மாணவர்களின் உளத்தை விருத்திசெய்வதில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது பற்றிய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களினது துலங்கல்களை உரு 4.1 வெளிப்படுத்தி நிற்கின்றது. அவ்வகையில், மாணவர்களின் மன அழுத்தங்களைக் குறைப்பதற்கும், கற்றல் செயற்பாட்டில் கவனம் மற்றும் மன ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்கும், எதிர்மறையான மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் முக்கியத்துவமுடையதாக விளங்குவதாக முடிவுகள் பெறப்பட்டன.

மேலும், பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவம் சார்ந்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினவியபோது, மாணவர்களிடத்தில் காணப்படுகின்ற எதிரான மனவெழுச்சிகள், எதிரான நடத்தைகள், எதிர்மறையான சிந்தனைகள், முரண்பாட்டு எண்ணங்கள் போன்றவற்றை நீக்கி, சிறந்த நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உள விழிப்புணர்வுச் செயற்பாடுகள் உதவியாக அமைவதாகக் குறிப்பிட்டனர். மாணவர்களுக்கு சுவாசப் பயிற்சி, தியானம், தளர்வுப் பயிற்சி, யோகா போன்ற செயற்பாடுகளை வழங்குவதன் மூலமாக உடல், உளம் சார்ந்த ஆரோக்கியத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த முடிவதுடன் சிறந்த ஆலோசனைகள் மூலமாக நேரான நடத்தையை மாணவர்களிடத்தில் உருவாக்க முடியும் எனவும் பதிலளித்தனர்.

**சிரேஸ்ட இடைநிலை மாணவர்களுடைய உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைகளைக் கண்டறிதல்**




உரு 4.2 : பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைகள்

உரு 4.2 இல் மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ள துலங்கல்களின் அடிப்படையில் உள விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற தன்மை குறைவாகக் காணப்படுகின்றமையை அறிந்துகொள்ள முடிகின்றது. மாணவர்களுக்கான உள விழிப்புணர்வு சார்ந்த பயிற்சிகள், ஆலோசனைகள் வழங்கப்படுகின்ற தன்மை குறைவாகக் காணப்படுவதுடன், ஆடியோப் பயன்பாடு, அதிபரின் மேற்பார்வை, கண்காணிப்பு என்பன குறைவாகக் காணப்படுவதனையும் மாணவர்கள் வெளிப்படுத்திய துலங்கல்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

**சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் உள விருத்திக்காக உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாடசாலையில் காணப்படுகின்ற சவால்களைக் கண்டறிதல்**




உரு 4.3 : உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள சவால்கள்

உரு 4.3இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு சவால்கள் பாடசாலைகளில் நிலவப்பெறுகின்றன என்பதை ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களினது துலங்கல்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அவ்வகையில், ஆலோசனை வழிகாட்டலுக்கென்று நியமனம் பெற்ற ஆசிரியர்கள் இன்மை, ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களிடத்தில் போதுமான திறன்கள், பயிற்சிகள் இன்மை, அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்புக் குறைவாகக் காணப்படுகின்றமை போன்றவை இங்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாடசாலையில் காணப்படுகின்ற சவால்களை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்**

அட்டவணை 4.1 : பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படுகின்ற சவால்களை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை அறிதல்

| கூற்று இலக்கம் | கூற்றுக்கள் | ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களின் துலங்கல்கள் சதவீதத்தில் | மாணவர்களின் துலங்கல்கள் சதவீதத்தில் |
|---|---|---|---|
| D.1 | பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த புரிதலும் அதனுடைய முக்கியத்துவமும் பாடசாலை மட்டத்தில் உணர்த்தப்பட வேண்டும். | 90% | 87.4% |
| D.2 | பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏற்றவாறு பௌதீக வளங்கள் மற்றும் நேர வளம் என்பன முறையாகப் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். | 80% | 81.6% |
| D.3 | ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்குப் போதுமான பயிற்சிகள், கருத்தரங்குகள் என்பன வழங்கப்பட வேண்டும். | 80% | 78.2% |
| D.4 | ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவத்தை விருத்திசெய்து கொள்ள வேண்டும். | 70% | 73.6% |
| D.5 | பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியருடன் இணைந்து உள விழிப்புணர்வு சார்ந்த பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான செயற்பாடுகளை அதிபர் ஒழுங்கமைத்துக் கொடுத்தல் வேண்டும். | 90% | 75.9% |
| D.6 | அதிபர் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான முழு ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்க வேண்டும். | 80% | 81.6% |
| D.7 | உள்ளக மற்றும் வெளியக மேற்பார்வைச் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும். | 80% | 83.9% |
| D.8 | உள விழிப்புணர்வுப் பயிற்சிகளுக்கான ஆடியோப் பதிவுகளைக் கல்வி அமைச்சின் வலைத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து மாணவர்களுக்கான உள விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க வேண்டும். | 90% | 82.8% |

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுக்கு ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெளிப்படுத்திய துலங்கல்கள் வரைபடத்தின் மூலம் காட்டப்படுகின்றது.




உரு 4.4 : பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான வழிமுறைகள்

மேற்குறிப்பிட்ட வழிமுறைகளுக்கு ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அதிகளவில் துலங்கல்களை வெளிப்படுத்தி உள்ளமையால் குறித்த வழிமுறைகள் அனைத்தும் பெரும்பான்மையான ஒப்புதலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், போதுமான இடவசதியைப் பெற்றுக்கொடுத்தல், தொழில்நுட்ப சாதனங்களைப் பெற்றுக்கொள்ளல், ஆலோ்சனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்குப் போதுமான திறன்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல், உளவளத்துணை ஆலோசகர்களைக் கொண்டு மாணவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்குதல், வெளியக மேற்பார்வைச் செயற்பாட்டை முறையாக மேற்கொள்ளல், ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களும் முன்வைக்கப்பட்டன.

**ஆய்வு முடிவுகளும் விதப்புரைகளும்**

**சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்**

**முடிவுகள்**

- சிரேஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் தோன்றக்கூடிய எதிர்மறையான மனவெழுச்சிகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்துவதற்கு உள விழிப்புணர்வு சார்ந்த பயிற்சிகள் முறையாக வழங்கப்பட வேண்டும். இதனை 100% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும், 87.3% ஆன மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- சிரேஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் காணப்படக்கூடிய மன அழுத்தங்களைக் குறைப்பதற்கு உளவிழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். இதனை 100% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும் 86.2% ஆன மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- வகுப்பறைக் கற்றல் செயற்பாட்டில் கூடிய கவனத்துடனும், மன ஒருமைப்பாட்டுடனும் ஈடுபடுவதற்கு உள விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். இதனை 100% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும் 89.7% ஆன மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- மாணவர்களிடத்தில் காணப்படக்கூடிய மன அழுத்தங்களைக் குறைக்கும் விதமாகவும் நேர்மறையான பாடசாலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் விதமாகவும் சுவரோவியங்கள் வரைதல், வர்ணம் பூசுதல், பூந்தோட்டங்கள் அமைத்தல் போன்ற செயற்பாடுகளை பாடசாலையில் மேற்கொள்ள வேண்டும். கோல் சூசன் (2014) ''பாதுகாப்பான மற்றும் ஆதரவான பாடசாலைச் சூழலை உருவாக்குவதற்கான உத்திகளைச் செயல்படுத்துதல்'' எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் மாணவர்களிடத்தில் நேர்மறையான மனவெழுச்சிகளை உருவாக்குவதற்கும், அவர்களின் உணர்ச்சிகள் மற்றும் நடத்தைகளை அமைதிப்படுத்துவதற்கும், கவனம் செலுத்தும் திறனை மேம்படுத்துவதற்கும் மாணவர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் ஆதரவான பாடசாலை சூழல் தேவை. இதன் மூலம் அவர்கள் பாடசாலையில் கற்று வெற்றிபெற முடியும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், பாடசாலை மற்றும் வகுப்பறைச் சூழலை கவின்நிலைப்படுத்தக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- பாடசாலையில் உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முறையாக முன்னெடுத்துச் செல்வதனால் கிடைக்கக்கூடிய நன்மைகள் தொடர்பாக உளவளத்துணை ஆலோசகர்களைக் கொண்டு பாடசாலைச் சமூகத்திற்கு தெரியப்படுத்துவதுடன், இந்நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விளக்கத்தையும் அதனுடைய முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கும் விதமாக கருத்தரங்குகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஆசிரியர் கட்டிளமைப் பருவ மாணவர்களுக்குப் பாலியல் விடயங்கள் சார்ந்து ஆலோசனைகள் வழங்குவதுடன் போதைப்பொருள் பாவனை மற்றும் நெறிபிறழ்வான நடத்தைகளின் மூலம் ஏற்படும் விளைவுகள் தொடர்பான காணொளிகளைக் காண்பித்து மாணவர்களிடத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

**சிரேஸ்ட இடைநிலை மாணவர்களுடைய உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைகளைக் கண்டறிதல்**

**முடிவுகள்**

- பாடசாலையில் ஒவ்வொரு வாரத்திற்குமான உள விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மாணவர்களுக்கு வழங்கப்படும் தன்மையானது குறைவாக உள்ளது. இதனை 66.4% ஆன மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- பாடசாலைகளில் உள விழிப்புணர்வுப் பயிற்சிகளின்போது ஆடியோப் பதிவுகள் பயன்படுத்தப்படும் தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. இதனை 70% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும் 60.9% ஆன மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- மாணவர்களிடத்தில் காணப்படுகின்ற உள ரீதியான பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவர்களுக்கான ஆலோசனைகளும் உள விழிப்புணர்வுப் பயிற்சிகளும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியரினால் வழங்கப்படும் தன்மை குறைவாக உள்ளது. இதனை 71.2% ஆன மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- பாடசாலை உள விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அதிபரால் மேற்பார்வை செய்யப்படுகின்ற தன்மை குறைவாக உள்ளது. இதனை 58.6% ஆன மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- பாடசாலையில் உள விழிப்புணர்வுச் செயற்பாடுகளை ஒழுங்காக முன்னெடுத்துச் செல்லும் முகமாக அதிபர் ஒரு குழுவினை உருவாக்கி அதற்கான பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலம் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.
- உள விழிப்புணர்வுச் செயற்பாடுகள் சார்ந்த ஆடியோப் பதிவுகள் உள்ளடக்கிய DVDகளை வலயக் கல்வி அலுவலகத்தினூடாக ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்குவதோடு, உரிய காலத்திற்குள் அவை பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெறுவதை ஆலோசனை வழிகாட்டல் ஆலோசகர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகள், அவை வழங்கப்படும் நேரம், மாணவர்களிடத்தில் ஏற்படுகின்ற நடத்தை மாற்றம் என்பவை சார்ந்த அறிக்கைப்படுத்தல்களை இற்றைப்படுத்தி வெளியக மேற்பார்வைக்கு கையளிக்கின்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் எதிர்மறையான நடத்தைகள் மற்றும் எதிர்மறையான மனவெழுச்சிகளை அதிகமாக வெளிப்படுத்துகின்ற மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்குத் தனியான ஆலோசனைகள் மற்றும் உள விழிப்புணர்வு சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

**சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் உள விருத்திக்காக உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாடசாலையில் காணப்படுகின்ற சவால்களைக் கண்டறிதல்**

**முடிவுகள்**

- ஆய்விற்குட்படுத்தப்பட்ட பத்துப் பாடசாலைகளில் ஆறு பாடசாலைகளில் மாத்திரமே ஆலோசனை வழிகாட்டலுக்கென நியமனம் பெற்ற ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். நான்கு பாடசாலைகளில் நியமனம் சாரா ஆசிரியர்களே உள்ளனர்.
- உள விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கேற்றவாறு போதுமான திறன்கள், பயிற்சிகள் என்பன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களிடத்தில் காணப்படவில்லை. இதனை 78.1%ஆன மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- பாடசாலை உள விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் அதிபர் தமது முழுமையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கவில்லை. இதனை 65.4% ஆன மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- பாடசாலை உள விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கவில்லை. இதனை 70% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும், 74.6% ஆன மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- ஆலோசனை வழிகாட்டலுக்கென்று நியமனம் பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
- ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பன நடத்தப்படுதல் வேண்டும்.
- பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுப்பதன் மூலமாக கிடைக்கப்பெறுகின்ற நன்மைகள் தொடர்பாகவும், அதனுடைய முக்கியத்துவம் தொடர்பாகவும் அதிபர்களுக்குக் கருத்தரங்குகளை வழங்குவதன் மூலமாக அதிபரின் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பாக Agih (2015), "Effective School Management and Supervision: Imperative for Quality Education Service Delivery" எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில், பாடசாலை நிர்வாகிகள் சிறந்த முறையில் செயல்படத் தேவையான தகுதி மற்றும் அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். மாநாடுகள், கருத்தரங்குகளில் கலந்து கொண்டு பாடசாலை முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையில் தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக அதிபர் பாடசாலை மட்டத்தில் குழுவினை உருவாக்கி ஆசிரியர்களின் செயற்பாட்டைக் கண்காணித்தல் வேண்டும்.

**உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாடசாலையில் காணப்படுகின்ற சவால்களை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்**

**முடிவுகள்**

- பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த புரிதலும் அதனுடைய முக்கியத்துவமும் பாடசாலை மட்டத்தில் உணர்த்தப்பட வேண்டும். இதனை 87.4% ஆன மாணவர்களும், 90% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்குப் போதுமான பயிற்சிகள், கருத்தரங்குகள் என்பன வழங்கப்பட வேண்டும். இதனை 80% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் மற்றும் 78.2% ஆன மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
- ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவத்தை விருத்திசெய்துகொள்ள வேண்டும். இதனை 70% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் மற்றும் 73.6% ஆன மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
- உள்ளக மற்றும் வெளியக மேற்பார்வைச் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை 80% ஆன ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் மற்றும் 83.9% ஆன மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- நார்டன் (2020), ‘‘பாடசாலைகளில் விழிப்புணர்வு அடிப்படையிலான திட்டங்களை வழங்குவதன் தாக்கம்’’ எனும் தலைப்பில் பிரித்தானியாவில் மேற்கொண்ட ஆய்வில், பாடசாலைகளில் விழிப்புணர்வு அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலைகளில் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்றால், அவற்றின் செயலாக்கம் கவனிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில், உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த மேற்பார்வைச் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.
- உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்குப் புள்ளி வழங்கும் முறையைக் கொண்டு வருவதன் மூலமாக இந்நிகழ்ச்சித் திட்டம் பாடசாலையில் ஒழுங்காக முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்க முடியும்.
- உள விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மாணவர்களுக்கு வழங்குவதனை உறுதிப்படுத்தும் முகமாக புகைப்படங்கள், காணொளிகள், எழுத்தாவணங்கள் போன்றவற்றை வெளியக மேற்பார்வைக்கு ஆதாரமாகக் கையளிக்கின்ற செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

**சாராம்சம்**

‘‘மாணவர்களின் உளவிருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு’’ எனும் தலைப்பிலான மேற்படி ஆய்விற்கு ஊக்கமளிப்பதற்காகவும், அது தொடர்பான

ஆழமான விடயங்களை ஆராய்வதற்காகவும் கடந்த பத்து வருட காலத்திற்கு உட்பட்ட ஆய்வு முடிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் நூல்கள், சஞ்சிகைகள், இணையம் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் மாணவர்களின் உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவத்தினையே பிரதானமாகக் குறித்து நிற்கின்றன. கட்டிளமைப் பருத்திற்குட்பட்ட மாணவர்கள் பல்வேறு உடல், உள ரீதியான மாற்றங்களுக்கு உள்ளாவதுடன் இக்காலப் பகுதியில் பல்வேறு மன உளைச்சல்கள் மற்றும் மன அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே, இவ்வாறான சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு சுய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முறையாக வழங்குவதன் மூலமாக மாணவர்களிடத்தில் சிறந்த உடல், உள ஆரோக்கியத்தைப் பேண முடிவதோடு சிறந்த கற்றல் சூழலையும் உருவாக்கிக் கொடுக்க முடியும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

இலங்கையில் தேசிய பொதுக் கல்விக் கொள்கைக்கான முன்மொழிவுகள், (2016). தேசிய கல்வி ஆணைக்குழு, நுகெகொட, இலங்கை.

உள விழிப்புணர்வுப் பாடசாலை, (2018). உள விழிப்புணர்வுப் பாடசாலை மன்றம், குவாலிட்டி பிரின்டர்ஸ், கன்கொடவில, நுகேகொட.

கல்வி அமைச்சு, (2022). சுற்றறிக்கை இலக்கம் 39/2022, நாடளாவிய ரீதியில் செயல்படுத்தப்படும் விழிப்புணர்வு பாடசாலைச் செயற்றிட்டம், இசுருபாய, பத்தரமுல்ல, இலங்கை.

சமூக மனவெழுச்சிப் பிரவேசத் திறன்கள் (2022). கல்வி அமைச்சு, இலங்கை.

Apa.org. (2024). *APA PsycNet*. [online] Available at https://psycnet.apa.org/buy/2013-08376-002 [Accessed 18 Sep. 2024].

Agih, A. (2015). Effective School Management and Supervision: Imperative for Quality Education Service Delivery. *African Research Review*, 9(3), p.62. doi: https://doi.org/10.4314/afrrev.v9i3.6. [Accessed 18 Sep. 2024].

Cole, S. (2014). Implementing Legal Strategies for Creating Safe and Supportive School Environments. *Journal of Applied Research on Children*, [online] 5(2). Available at: https://eric.ed.gov/?id=EJ1188518. [Accessed 12 Nov. 2024].

Norton, K.R. and Griffith, G.M. (2020). The Impact of Delivering Mindfulness-Based Programmes in Schools: a Qualitative Study. *Journal of Child and Family Studies*, [online] 29(9), pp.2623–2636. doi: https://doi.org/10.1007/s10826-020-01717-1. [Accessed 23 Sep. 2024].

# பாடசாலைக் கல்வியின் பண்புத்தர மேம்பாட்டில் பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி என்பனவற்றின் செல்வாக்கு

**Saththiyeswaran Supisankari**

Department of Education and ChildCare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka,

ssubi4651@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பாடசாலைக் கல்விப் பண்புத்தரமானது சிறப்பாக அமைய கல்விப் பண்புத்தரச் சுட்டிகளின் மதிப்பெண்களானது உயர்வாகக் காணப்பட வேண்டும். இருப்பினும், மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளின் மதிப்பெண்களானது குறைவாகக் காணப்படுகின்றது. இப்பின்னணியிலே இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் 50% ஒதுக்கீட்டு மாதிரியூடாக ஐந்து பாடசாலைகளும் அதன் ஐந்து அதிபர்களும் 25 ஆசிரியர்களும் slovin மாதிரி தெரிவினூடாக 85 சிரேஸ்ட இடைநிலை மாணவர்களும், அம்மாணவர்களின் 85 பெற்றோர்களும் தெரிவுசெய்யப்பட்டுத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு வலயக்கல்வி அதிகாரிகள் இருவருடனான நேர்காணல், அவதானம் மற்றும் குவியக்குழுக் கலந்துரையாடல் மூலமாக சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலைகளில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகள் எந்நிலையில் உள்ளன என அறிதல், பாடசாலை மதிப்பீட்டுச் செயன்முறைகளில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளின் முக்கியத்துவத்தினை இனங்காணல், பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளினை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல், பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளை மேம்படுத்தும்போது ஏற்படும் சவால்களினை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் போன்ற சிறப்பு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்நோக்கங்களை அடையும் பொருட்டு, பெறப்பட்ட அளவு மற்றும் பண்பு ரீதியான தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. வினாக்கொத்து மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் SPSS மென்பொருளின் ஊடாக இடை, இடையம் கணிக்கப்பட்டு MS Excel மென்பொருளைப் பயன்படுத்தி அட்டவணையாக்கம், சலாகை வரைவுகள் செய்யப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் அடிப்படையில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி போன்றவை குறைந்த நிலையில் காணப்படல், மாணவர்களுக்கான நலன்புரிச் செயற்பாடுகள் பெயரளவிலே காணப்படல், வளப்பற்றாக்குறை, முறையற்ற மேற்பார்வை என்பவற்றால் அவை சவால்களை அடைவது போன்ற விடயங்கள் கண்டறியப்பட்டன. இவற்றை இழிவளவாக்கப் பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்பு, அதிகளவான சமூக விருத்திச் செயற்பாடுகளை உள்வாங்கல், வளங்களை வினைத்திறனாக்குதல், நாளாந்தம்

முறையான விதத்தில் தகவல்களை இற்றைப்படுத்தல், பாடசாலை மாணவர் பாதுகாப்புத் தொடர்பான திட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படல், சிறப்பான மேற்பார்வை இடம்பெறல் போன்ற பல்வேறு விதப்புரைகளும் இவ்வாய்வில் வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *கல்விப் பண்புத்தரம், சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள், பண்புத்தரச் சுட்டிகள், பாடசாலை.*

**அறிமுகம்**

நிலைபெற்ற கல்விச் சமூகத்தினைக் கட்டியெழுப்புபவர்கள் மாணவர்களே. பாடசாலை என்ற கட்டமைப்புக்குள் ஒரு தொடர் மதிப்பீட்டுச் செயற்பாடு மிக அவசியம் என்று உணரப்பட்டுள்ளது. உள்ளீடுகள் எவ்வளவுதான் கல்விக்காகக் கொடுக்கப்பட்டாலும், அதற்குரிய வெளியீட்டினைப் பெற மதிப்பீட்டுச் செயற்திட்டம் முக்கியமானதொன்றாகும். காலத்திற்குக் காலம் இது தொடர்பான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படினும், அவை காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்தே வந்துள்ளன.

பாடசாலைகளின் பண்புத் தரச் சுட்டிகளினை மதிப்பீடு செய்வதற்கு நாடளாவிய ரீதியில் எட்டு மதிப்பீட்டுத் துறைகள் காணப்படுகின்றன. இதற்கமைய காணப்படும் 8 மதிப்பீட்டுத் துறைக்கும் 10 பொருத்தமான பண்புத் தரங்கள், அவற்றை அடைவதற்கான 30 தேவைப்பாடுகள், 60 மதிப்பீட்டு நியதிகள், 210 சுட்டிகள், 40 பண்புரீதியான வினாக்கள் உள்ளடங்கலாக புதிய மதிப்பீட்டு வேலைத்திட்டம் 31/2014 ஆம் இலக்கச் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பாடசாலையின் மதிப்பீட்டுச் செயன்முறைகள் குறித்த தவணைகளுக்குள் இடம்பெற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது (உயர்கல்வி அமைச்சு, 2014). அந்தவகையில், மட்டக்களப்பு மேற்கு வலயம் இந்த நியதிகளினைப் பின்பற்றியே பண்புத் தரச் சுட்டிகளின் மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றது. இருப்பினும், கடந்த ஐந்து வருடங்களுக்கான பாடசாலை பண்புத் தரச் சுட்டிகளின் மதிப்பெண்களை ஒப்பிடும்போது, மண்முனை தென்மேற்குக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளின் மதிப்பெண்கள் குறைந்த நிலையிலே காணப்படுவதனால், அக்கோட்டத்திலுள்ள பாடசாலைகள் பல்வேறு பிரச்சினைகளை இன்றும் எதிர்நோக்கி வருகின்ற காரணத்தினால், விசேடமாக இரு துறைகளுமே ஆய்விற்காக வரையறுக்கப்பட்டுள்ளன (மட்டக்களப்பு மேற்கு வலய வருடாந்த அறிக்கை, 2023).

மண்முனை தென்மேற்கு கோட்டத்திலுள்ள குறித்த பாடசாலைகளில் ஆய்வாளரால் இனங்காணப்பட்டு வரையறை செய்யப்பட்ட மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு ஆகிய இரு துறைகளையும் நோக்குமிடத்து, செயன்முறை நியதிகளில் முறையான தெளிவு காணப்படாமையினால் இதன் செயற்திறன்களை மதிப்பீடு செய்வதில் சிக்கல்கள் பல காணப்படுவதாக மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் ஆதாரப்படுத்துகின்றன. எனவே, ஆய்வு பிரதேசமான மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர் நலன்புரி மற்றும் பாடசாலை சமூகத் தொடர்புகள் போன்றவற்றில் காணப்படும் பல பிரச்சினைகளைக்

கண்டறிவதாகவும், அவற்றால் அப்பாடசாலைகள் எதிர்கொள்கின்ற சவால்கள், அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து ஆலோசனை வழங்குவதாகவும் ஆய்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இதனை அடிப்படையாகக் கொண்டு "பாடசாலைக் கல்வியின் பண்புத் தர மேம்பாட்டில் பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி என்பவற்றின் செல்வாக்கு" எனும் தலைப்பில் சிரேஸ்ட இடைநிலை தரம் 10, 11 மாணவர்களை உள்ளடக்கி, ஆய்வுப் பிரதேச பாடசாலைகளில் மாணவர் நலன்புரி மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு போன்ற மதிப்பீட்டுத் துறைகளின் கடந்த ஐந்து வருடங்களுக்கான மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு (2019, 2020, 2021, 2022, 2023) மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்திற்குட்பட்ட மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வரையறை**

பாடசாலைகளின் பண்புத் தரத்தினை உறுதிசெய்வதில் எட்டு மதிப்பீட்டுத் துறைகள் பிரதான இடம்பெறுகின்ற அதேவேளை, ஆய்வில் மட்டக்களப்பு மேற்கு மண்முனை தென்மேற்கு ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளின் கடந்த ஐந்து வருடங்களுக்கான பண்புத் தரச் சுட்டி மதிப்பெண்கள் குறைவாகக் காணப்படுவதனால், ஆய்வு வரையறையாக பிரதான இவ்விரு மதிப்பீட்டுத் துறைகளும் அமைகின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

இன்று சிக்கலாகவும் வேகமாகவும் இயங்கி வருகின்ற கல்வி உலகிற்கேற்ப ஒவ்வொரு பாடசாலைச் சமூகத்தினையும் தரமானதாகவும் வலுவானதாகவும் மேம்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சினால் எட்டு மதிப்பீட்டுத் துறைகள் உள்ளடக்கப்பட்டு, பாடசாலை பண்புத் தரச் சுட்டிகள் எனும் ஒரு செயற்திட்டமானது நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலைகளின் பண்புசார் விருத்தியை வளப்படுத்தும் நோக்கின் அடிப்படையில், புதிய மதிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றினை நிறுவும் நோக்கில் 2014/31 ஆம் இலக்கச் சுற்று நிரூபம் ஒன்றினை 2014 இல் கல்வியமைச்சின் முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளை வெளியிட்டது. 2015 ஆம் ஆண்டிலிருந்து இது அமுல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஐந்து வருடங்களுக்கான பாடசாலை பண்புத் தரச் சுட்டிகளின் மதிப்பெண்களை ஒப்பிடும்போது, ஆய்வுப் பிரதேசப் பாடசாலையில் பாடசாலை சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளின் செயற்பாடுகளுக்குக் கிடைக்கப்பெறுகின்ற மதிப்பெண்கள் குறைாகவே காணப்படுகின்றன. இதனை மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் கோவைப்படுத்தப்பட்ட பாடசாலை பண்புத் தரச் சுட்டிகளின் மதிப்பெண்கள் அடங்கிய அட்டவணையிலிருந்து பெறப்பட்ட விடயங்கள் (உரு 1.1, உரு 1.2) எடுத்துக்காட்டுகின்றன.




உரு1.1: ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் மாணவர் நலன்புரி மற்றும் பாடசாலை சமூக தொடர்பு போன்ற மதிப்பீட்டுத் துறைகளின் கடந்த ஐந்து வருடங்களுக்கான மதிப்பெண்கள்




உரு1.2: ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளின் எட்டு மதிப்பீட்டுத் துறைகளில் ஏனைய ஆறு மதிப்பீட்டுத் துறைகளின் கடந்த ஐந்து வருடங்களுக்கான மதிப்பெண்கள்

மேற்காட்டப்பட்டுள்ள உரு 1.1 இல் ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் மாணவர் நலன்புரி மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு போன்ற மதிப்பீட்டுத் துறைகளில் ஐந்து வருட காலங்களாக தொடர்ச்சியாக 26.6% குறைந்த மதிப்பெண்ணாகக் காணப்படுகின்றதுடன், இதற்கு மேல் அதிகளவான பண்புத் தரச் சுட்டிகளுக்கான மதிப்பெண்களைப் பாடசாலைகள் பெறவில்லை. அதேவேளை உரு 1.2 இல் மாணவர் நலன்புரி மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு போன்ற மதிப்பீட்டுத் துறைகளினை அடுத்துக் காணப்படுகின்ற மீதி ஆறு மதிப்பீட்டுத் துறைகளின் மதிப்பெண்கள் 87.8% வரை அதிகமாகவே காணப்படுகின்றது. இவ்விடயம் 2023, மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற தரவின்படி

உறுதிசெய்யப்படுகின்றது. இதில் 2021 ஆம் ஆண்டு மாத்திரம் கொரோனாத் தொற்றுநோய் காரணமாக மதிப்பீட்டுச் செயன்முறைகள் எவையும் நடத்தப்படவில்லை. இருப்பினும், ஏனைய ஆண்டுகளிலும் மதிப்பெண்கள் குறைந்த வீதத்திலே காணப்படுகின்றன. இதனை அடிப்படையில், இவ்வாய்வுப் பிரதேசத்தில் இவ்வாய்வு செய்யப்பட வேண்டிய தேவையுள்ளதன் காரணமாக ஆய்வாளரால் இவ் ஆய்வுப் பிரதேசம் தெரிவுசெய்யப்படுகின்றது.

மட்டக்களப்பு மேற்கு வலய, மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் பண்புத் தரங்களை உறுதிசெய்வதில் மாணவர் நலன்புரி மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பானது குறைவான காணப்படுவதாலும், பண்புத் தர நிலை எட்டப்படாமல் இருப்பதனாலும் அக்கோட்டத்திலுள்ள பாடசாலைகள் பல்வேறு பிரச்சினைகளை இன்றும் எதிர்நோக்கி வருகின்ற காரணத்தினால் ஆய்வாளரால் விசேடமாக இவ்விரு துறைகளுமே ஆய்விற்காக வரையறுக்கப்பட்டுள்ளன. மண்முனை தென்மேற்கு கோட்டத்திலுள்ள குறித்த பாடசாலைகளில் கீழ்மட்டத்திலுள்ளதென ஆய்வாளரால் வரையறை செய்யப்பட்ட இரு மதிப்பீட்டுத் துறைகளையும் நோக்குமிடத்து செயன்முறை நியதிகளில் முறையான தெளிவு காணப்படாமையினால் இதன் செயற்திறன்களை மதிப்பீடு செய்வதில் சிக்கல்கள் பல காணப்படுவதாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் ஆதாரப்படுத்துகின்றன.

குறித்த பாடசாலைகளில் பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரிகளினூடாக பண்புத் தரத்தினை உறுதிசெய்வதில் முறையான செயன்முறைகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படாமையினால் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு வருடமும் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றபோதும், மதிப்பிடப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கையிலும், கிடைக்கக்கூடிய உச்சப் புள்ளிகளிலும் அதிக வித்தியாசங்கள் காணப்படுதல் போன்ற பிரச்சினைகளைக் கொண்டு காணப்படுகின்றமை குறிப்பானதாகும். எனவே, இத்தகைய ஆய்வுப் பிரச்சினைகள் ஆய்வாளரினால் ஆய்வுப் பிரதேசத்துடன் தொடர்புபடுவதுடன் ஆய்விற்கான பின்னணியை சார்ந்து உள்ளது.

சுற்றறிக்கை இலக்கம் 2015/35 இல் பாடசாலை மாணவர் நலன்புரிச் செயன்முறையில் 'பாடசாலைக்குள் ஆரோக்கியமான உணவகத்தினை நடத்திச் செல்லல் பற்றியும் சரியான ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கத்தினைக் கொண்ட மாணவர் சமுதாயத்தினை உருவாக்குவதிலும், கற்றல் செயற்பாடுகளிலும் துரித அபிவிருத்தியினையும் ஏற்படுத்தும் நோக்கில் பாடசாலை உணவகமானது நடத்தப்படல் வேண்டும்' எனக் கூறப்படுகின்றது (கல்வி அமைச்சு, 2009). எனினும், இக்கோட்டத்தில் காணப்படுகின்ற பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகள் உரிய சுற்றுநிருபத்திற்கேற்ப முறையாக அமைக்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்படாமை முக்கிய பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது.

சுற்றறிக்கை இலக்கம் 2019/02 இல் "பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்" தொடர்பிலும், மலசலகூடங்கள் போதியளவு காணப்படல் மற்றும் அவற்றின் சுத்தம் கைக்கொள்ளப்படுவதனால், சுகாதாரப் பழக்கத்தினை கடைப்பிடிக்கும் மாணவர் சமுதாயத்தினை உருவாக்கிக் கொள்வதுடன், மாணவர்களின் சுகாதார தரம், போசணைத் தரம் தொடர்பில்

மதிப்பீடு செய்து கொள்ளமுடியும் எனக் கூறப்படுகின்றது. இருப்பினும், இக்கோட்டத்தில் காணப்படும் பாரிய பிரச்சினையாக மலசலகூட வசதிகள் போதாமை, கழிவகற்றல் தொடர்பான பல பிரச்சினைகள் காணப்படுகின்றமை ஆகியன முக்கிய விடயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே, இத்தகைய ஆய்வுப் பிரச்சினைகள் ஆய்வுப் பிரதேசத்துடன் தொடர்புபடுகின்றள.

இனங்காணப்பட்ட பிரச்சினைகளில் அடைவுமட்டச் செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் பண்புத் தரச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் குறைவாக வழங்குதல், உள்வாரி மதிப்பீடுகளை நடத்தாதிருத்தல், உண்மைத் தன்மை இன்றி நடத்துதல், செயற்பாடுகள் நடைபெறுகின்ற போதும் அதற்கான ஆவணங்கள் கோவைப்படுத்தப்படாமை, ஆவணங்கள் இற்றைப்படுத்தப்படாமை, குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பினும் அக்குழுக்கள் செயற்பாடுகளில் தெளிவுதன்மை காணப்படாமை, மதிப்பீட்டின்போது மதிப்பீட்டாளரின் அகவயத்தன்மை செல்வாக்குச் செலுத்துதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆய்வாளரால் இனங்காணக்கூடியதாக இருந்தது. மேலும், மூன்று வருடங்களின் தரவின் அடிப்படையில் இக்கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கிடையில் பண்புத் தரச் சுட்டிகளின் புள்ளிகளிடையே மாறுதல் அதிகம் உள்ளமையினையும் கண்டுகொள்ள முடிந்தது. பாடசாலைக் கல்வியின் பாடசாலை – சமூகத் தொடர்பு, மாணவர் நலன்புரி பண்புத் தரச் சுட்டிகளை உறுதிசெய்வதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதுடன், குறித்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் பல சவால்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன. எனவே, இவ் ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்தே ஆய்வாளரால் இவ் ஆய்வுத் தலைப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

கடந்த ஐந்து வருடங்களாக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் பண்புத் தரச் சுட்டிகளின் மதிப்பெண்களை ஒப்பிடும்போது, மண்முனை தென்மேற்கு கோட்டப் பாடசாலைகளில் மாணவர் நலன்புரி மற்றும் பாடசாலை – சமூகத் தொடர்பு ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளுக்கும் கிடைக்கப் பெறுகின்ற மதிப்பெண்கள் குறைந்த நிலையில் காணப்படுகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

**பொது நோக்கம்**

பாடசாலைக் கல்வியின் பண்புத்தர மேம்பாட்டில் பாடசாலை – சமூகத்தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி என்பவற்றின் செல்வாக்கினை இனங்காணல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகள் பாடசாலைகளில் எந்நிலையில் உள்ளன என்பதனை அறிதல்.
2. பாடசாலை மதிப்பீட்டுச் செயன்முறைகளில் பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளின் பங்களிப்பினை இனங்காணல்.

3. பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளின் மேம்பாட்டிற்குத் தடையாகக் காணப்படும் சவால்களினைக் கண்டறிதல்.
4. பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளினை மேம்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்களை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

ஐரோப்பாவை மையப்படுத்தி Perieshis Sargi (2019) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட "தரமான கல்வியின் பண்புகள்" என்ற தலைப்பிலான ஆய்வானது, அங்கு காணப்படும் பதின்மூன்று கல்வி நிறுவனங்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வில், ஆரோக்கியமாக கற்பவர்கள் உற்சாகமாகக் கற்றல் செயற்பாடுகளிலும் ஏனைய பண்புகளைப் பெற்றுக்கொள்வதில் ஈடுபடுவதற்குமான சந்தர்ப்பங்கள் காணப்படுவதும், கற்றல் சூழல், கவின்நிலை, கற்றலின் கற்றற்பேறு அனைத்தும் தரமானதாக விளங்குதல் அவசியமானதாகும் போன்ற முடிவுகள் கிடைக்கப்பெற்றன.

கொலிவூடியா எனும் ஆய்வுப் பிரதேசத்தில் Gudlaug Erlendsdottir (2021) என்பவர் பிள்ளைகளின் பெற்றோர்களை மாதிரிகளாகக் கொண்டு "கல்வியில் பெற்றோரின் பங்களிப்பினால் ஏற்படும் தாக்கங்கள்" எனும் தலைப்பில் கூடுதலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி விருத்தியில் அக்கறை செலுத்துகின்றனர். பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கான ஒவ்வொரு விடயத்திலும் அதிகளவான எதிர்பார்ப்புக்களுடன் காணப்படுகின்றனர். பெற்றோரின் பங்களிப்பு மாணவர்களில் நேர்மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. திறமைகளை வெளிக்காட்டும் பிள்ளைகள் நல்ல போசாக்குள்ள, ஆதரவு உள்ள குடும்பங்களிலிருந்து வருபவர்களாகக் காணப்படுகின்றனர் என முடிவுகள் கிடைக்கப் பெற்றன.

பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் Nermeen,E, (2021) "ஆரம்பப் பாடசாலைகளின் சிறுவர்களுடைய கல்வி, சமூக அபிவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு" எனும் தலைப்பில் பெற்றோர், சிறுவர்களுடைய கல்வி, சமூக அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கொண்டுள்ளனர். பெற்றோர்களின் நடத்தைகள் சிறுவர்களின் நடத்தைகளில் கூடுதல் பங்காற்றுகின்றன. பிள்ளைகளின் சமூக, நடத்தைசார் அபிவிருத்தியில் பெற்றோரும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டும். கொள்கைகளை அறிவதற்கும் புதிய விடயங்களை அறிவதற்கும் பாடசாலையுடனான பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகின்றது என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் Vanping hong (2020) என்பவரால் கிராமப்புற 150 பெற்றோர்களை மாதிரிகளாகக் கொண்டு "Analysis of students nutritional staus of in the nutritional important programme for rural compulsory education students" எனும் தலைப்பில் சீனாவில் கட்டாய கல்வி கிராமபுறப் பாடசாலை மாணவர்களின் நலன்புரிகளில் பிரதானமான போசாக்குக் குறைபாட்டை நிவர்த்திசெய்வதற்காக பாடசாலை மட்ட வேலைத்திட்டத்தின் தரத்தை

அறிந்துகொள்வதற்காக செய்யப்பட்ட ஆய்வு, போசாக்குத் திட்டத்தை நடைமுறைபடுத்திய பின்பு மாணவர்களின் போசாக்கு மட்டம் அதிகரித்துள்ளதை எடுத்துகாட்டுகின்றது.

Vipul Upadhyay (2021) பலர் இணைந்து "Primary School Children: Acces To Toillets" என்ற தலைப்பில் ஆத்லாந்தில் உள்ள ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் கழிப்பறைகளை ஆய்வுக்குட்படுத்தி ஆய்வு மாணவர்களின் நலன்புரித் திட்டங்களில் பாடசாலைக் கழிப்பறைகள் பிள்ளைகளின் ஆரம்பக் கல்விப் பாடசாலையில் ஆரோக்கியமான சூழலில் ஏற்படுகின்றதா என்பதை உறுதிசெய்வதை அடிப்படையாகக் கொண்டு, ஆய்வினூடாக பாடசாலைகளின் கழிவறை தொடர்பான வரையறைகள் கட்டமைப்புச் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் மாணவர் நலன்புரிகள் வளமான பங்களிப்பைச் செலுத்தி மாணவர்களை ஆரோக்கியமானவர்களாக மாற்றும் என்பதையும் முன்வைத்திருந்தது. எனவே, ஆய்விற்குத் தெரிவுசெய்துள்ள பிரதேசத்திலும் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் சவால்கள் காணப்படுகின்றமையின் காரணமாக அத்தகைய சவால்களைக் கண்டறிவதற்கு ஆய்வுத் தலைப்புடன் பொருந்திய இவ் இலக்கிய மீளாய்வு பயன்படுவதாக அமைகின்றது.

**ஆய்வு முறையியல்**

‘‘பாடசாலைகளின் கல்விப் பண்புத் தரத்தினை உறுதி செய்வதில் கல்விப் பண்புத் தரச் சுட்டிகளின் செல்வாக்கு’’ எனும் தலைப்பிலமைந்த இவ்வாய்வானது, மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்திற்குட்பட்ட மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு தரம் 10, 11 மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து ஆய்வு மாதிரியாக, தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், வலயக் கல்வி அலுவலகர்கள், தரம் 10, 11 மாணவர்களுக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், தரம் 10, 11 மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோரை மையமாக வைத்து இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

ஆய்வு முறைமை சிறப்பானதாகக் காணப்படும்போதே, அதற்கான தீர்வுகள் நம்பகத்தன்மை உடையதாகக் காணப்படும். ஆய்வின் தலைப்பிற்குப் பொருந்தும் வகையில் இவ்வாய்வில் அளவைநிலை ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், இவ்வாய்வில் எண் ரீதியான, பண்பு ரீதியான முறைமையியல் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண்ரீதியிலான முறைமையியலினுள் எண்கள், புள்ளிவிபரங்கள், அட்டவணைகள், விகிதாசாரங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இதன் மூலமாக புறவயத்தன்மையாக ஆய்வானது முன்கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறே பண்பு ரீதியான முறைமையியலினுள் மனப்பாங்கு சார்பான விடயங்கள் உள்ளடங்குகின்றன.

மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், வலயக் கல்வி அலுவலகத்தில் எட்டுத் துறைகளுக்கும் பொறுப்பானவர்களில் பாடசாலை சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளுக்கும் பொறுப்பாகக் காணப்படும் வலயக் கல்வி அலுவலகர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகவும், ஆசிரியர்கள், தரம் 10, 11 மாணவர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமாகவும், தரம் 10, 11 மாணவர்களின்

பெற்றோர்களிடமிருந்து குவியக் குழுக் கலந்துரையாடல் மூலமாகவும் தகவல்கள், தரவுகள் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மாதிரித் தெரிவு**

ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டத்தில் காணப்படும் 21 பாடசாலைகளையும் ஆய்வுக்குட்படுத்துவது கடினம் என்பதனாலும், அதிக காலம் தேவைப்படும் என்பதனாலும், அப்பாடசாலைகள் அனைத்திற்கும் செல்வதற்கான போக்குவரத்து வசதி குறைவு என்பதனாலும் ஆய்வின் பொருத்தப்பாடு கருதி மட்டக்களப்பு மேற்கு மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டத்திலுள்ள சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களை மையப்படுத்தி, இவ்வாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதனால் வகை III பாடசாலைகள் ஒன்பது பாடசாலைகளையும் ஆய்விற்கு உள்ளெடுக்கப்படவில்லை. ஏனைய பாடசாலைகள் 50% ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் ஒரு 1AB பாடசாலை, ஒரு 1C பாடசாலை, மூன்று வகை II பாடசாலைகள் என மொத்தம் ஐந்து பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மேலும், பாடசாலைகளின் அனைத்து விதமான செயற்பாடுகளுக்கும் அதிபர் பொறுப்பானவர் ஆகையால் ஆய்வுக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளிலும் 5 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் குறித்த பண்புத் தரத்தினை மேற்பார்வை செய்து, அதற்குரிய வழிகாட்டல்களை வழங்குபவர்களாக வலயக் கல்வி அலுவலகர்கள் காணப்படுகின்றனர். இதனால், வலயக் கல்வி அலுவலகத்தில் எட்டுத் துறைகளுக்கும் பொறுப்பானவர்களில் பாடசாலை சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளுக்கும் பொறுப்பாகக் காணப்படும் வலயக் கல்வி அலுவலகர்கள் எவ்வித மாதிரியெடுப்பு முறையையும் பயன்படுத்தாது, இருவர் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் கல்விப் பண்புத் தரத்திலும், அது குறித்த அறிவினைப் பாடசாலையில் பெரிதும் பெற்றவர்களாக ஆரம்ப நிலை, கனிஸ்ட இடைநிலை மாணவர்களைவிட சிரேஸ்ட இடைநிலை மாணவர்களே காணப்படுவர். இதனை அடிப்படையாகக் கொண்டு தரம் 10, 11 மாணவர்களைக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டதால் க.பொ.த. சாதாரண தரத்தை உள்ளடக்கிய பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டன. அவ்வகையில், தெரிவுசெய்யப்பட்ட 5 பாடசாலைகளிலும் தரம் 10, 11 இல் காணப்படுகின்ற 275 மாணவர்கள் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டு, பின் ஆண், பெண் எனப் படையாக்கப்பட்டு, நியமப்படுத்தப்பட்ட Slovin மாதிரித் தெரிவின் அடிப்படையில் 9% Error Tolerance (level) அடிப்படையில் 36 ஆண் மாணவர்கள், 49 பெண் மாணவர்கள் என மொத்தம் 85 மாணவர்கள் ஆய்விற்குத் தெரிவுசெய்யப்பட்டனர். மாதிரியாகத் தெரிவு செய்த 85 மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு 85 மாணவர்களின் பெற்றோர்களும் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டனர். அதாவது, மாணவர்களின் கற்றல் விருத்தியிலும் பாடசாலையின் கல்விப் பண்புத் தர அபிவிருத்தியிலும் பெற்றோர்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாக உள்ளதனால், ஆய்விற்கு 85 பெற்றோர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அத்தோடு தரம் 10, 11

வகுப்புகளுக்குக் கற்பிக்கின்ற 126 ஆசிரியர்கள் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டு, பின் ஆசிரியர்கள் ஆண், பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, 20% இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 25 ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

**தரவுப் பகுப்பாய்வு**

**பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகள் பாடசாலைகளில் காணப்படும் நிலை**




உரு 4.1: பாடசாலை - சமூகத் தொடர்பு எனும் மதிப்பீட்டுத்துறை பாடசாலைகளில் குறைவாக உள்ளது என்பது பற்றிய ஆசிரியர், மாணவர்களின் துலங்கல்கள்

உரு 4.1 இல் பாடசாலை சமூகத் தொடர்பு எனும் மதிப்பீட்டுத்துறை பாடசாலைகளில் எந்நிலையில் உள்ளது என்பது குறித்துப் பாடசாலைக்கும் பெற்றோர்க்குமான தொடர்பு, பழைய மாணவர் சங்கத் தொடர்பு, பாடசாலைக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடனான தொடர்பு என்பன பாடசாலைகளில் குறைவாக உள்ளன என்பது புலப்படுத்தப்படுகின்றது.




உரு 4:2 மாணவர் நலன்புரி எனும் மதிப்பீட்டுத்துறை பாடசாலைகளில் குறைவாக உள்ளது என்பது பற்றிய ஆசிரியர், மாணவர்களின் துலங்கல்கள்

உரு 4.2 மாணவர் நலன்புரி எனும் மதிப்பீட்டுத்துறை பாடசாலைகளில் எந்நிலையில் உள்ளது என்பது தொடர்பில், பாடசாலைகளில் மாணவர்களுக்கான சிற்றுண்டிச்சாலை வசதிகள், மாணவர்களுக்கான காப்புறுதி வசதிகள், மாணவர்கள், ஆசிரியர்களுக்கான கழிப்பறை வசதிகள், மாணவர்களுக்கான போதியளவு வசதிகளையுடைய விடுதி வசதிகள் என்பன பாடசாலைகளில் குறைவாக உள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

**பாடசாலை மதிப்பீட்டுச் செயன்முறைகளில் பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளின் பங்களிப்பு**

பாடசாலை பண்புத் தரச் சுட்டிகள் பாடசாலை கல்விப் பண்புத் தரத்தில் செலுத்தும் செல்வாக்கு பற்றி மேலும் அறிந்துகொள்ளும் நோக்கில் அதிபர்களின் நேர்காணலின்போது பாடசாலை சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய மதிப்பீட்டுத் துறைகளுக்கான மதிப்பீட்டுச் செயன்முறைகளினால் பாடசாலைகளில் ஏற்படுத்தகூடிய முன்னேற்றங்கள் எவையென நீர் கருதுகின்றீர்கள்? என்ற வினாவை வினவியபோது, சிறப்பான பாடசாலை சமூகத் தொடர்பைக் கட்டியெழுப்புவதால் மாத்திரமே சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும். அத்தோடு அப்பாடசாலையில் முறையாகக் கொண்டு செல்லப்படுகின்ற மாணவர்களுக்குரிய நலநோம்பல் வேலைத் திட்டங்களின் விளைவுகளே மாணவர்களின் கல்வித் தரத்தில் தாக்கம் செலுத்துகின்றது. மாணவர்கள் சிறந்த கல்வியினைப் பெற்றுக்கொள்ள நலநோன்பு திட்டங்கள் முக்கியமானதாகும் போன்ற கருத்துக்களை வழங்கியிருந்தனர்.




உரு 4.2.1 இல் பாடசாலை மதிப்பீட்டுச் செயன்முறைகளில் பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளின் முக்கியத்துவம் குறித்து ஆசிரியர்களின் துலங்கல்கள் காட்டப்பட்டுள்ளது. இதில் பாடசாலைகளின் மதிப்பீட்டுச் செயன்முறைகளின்போது, பாடசாலை சமூகத் தொடர்புகளின் முக்கியத்துவம் எனும்போது மாணவர்களின் சிறந்த கற்றல் அடைவுகளைப் பெறல், பாடசாலைப் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெறல், கல்வி அபிவிருத்திகளை முன்னெடுத்துச் செல்ல இவை முக்கியத்துவம் பெறுகின்றதென பெரும்பாலான ஆசிரியர்கள் தங்கள் துலங்கலினையும், மாணவர்களின் உடல், உள விருத்தியைப் பேணவும், சுகாதாரமான சூழலாக பாடசாலையைப் பேணவும் மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றதென அதிகளவான ஆசிரியர்கள் தங்கள் துலங்கலினை வெளிப்படுத்தியிருந்தனர்.

**பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளினை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்கள்**




உரு 4.3: பாடசாலை – சமூகத் தொடர்பு எனும் மதிப்பீட்டுத் துறைகளினை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்கள் பற்றிய ஆசிரியர்கள், மாணவர்களின் துலங்கல்கள்

பாடசாலை – சமூகத் தொடர்பு எனும் மதிப்பீட்டுத் துறைகளை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்கள் எவையென வினவப்பட்டபோது, பாடசாலையின் சமூக பங்களிப்பு குறைவு, வெளியிடப்படும் தகவல் குறைவு, பெற்றோர்களின் பங்களிப்பு குறைவு, பழைய மாணவர் சங்கத்தினரின் ஆதரவு குறைவு என்பன தடையாகக் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டனர்.




உரு 4.3.1: மாணவர் நலன்புரி எனும் மதிப்பீட்டுத் துறைகயினை நடைமுறைப்படுத்தும்போது, எதிர்நோக்கும் சவால்கள் பற்றிய ஆசிரியர்கள், மாணவர்களின் துலங்கல்கள்

பாடசாலை – சமூகத் தொடர்பு எனும் மதிப்பீட்டுத் துறைகளினை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்கள் எவையென வினவப்பட்டபோது, எண்ணிக்கைக்கேற்ற கழிவறை வசதிகள் காணப்படாமை, அனர்த்த முகாமைத்துவம் பற்றிய தகவல் குறைவாக வழங்கப்படல், முறையான உளவிழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் இடம்பெறாமை, முதலுதவிக் குழுக்கள் முறையாக உருவாக்கப்படாமை போன்ற சவால்களை மாணவர் நலன்புரி எனும் மதிப்பீட்டுத் துறையினை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்குவதாக குறிப்பிட்டனர்.

**பாடசாலை - சமூகத்தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளினை மேம்படுத்தும்போது ஏற்படும் சவால்களை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகள்**




**உரு 4.1: ஆலோசனைகளை அறிதல்**

இதன்படி ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளில் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்ள நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் யாதெனக் கருதுகின்றீர்கள் என வினவப்பட்டது. அதற்கு மேலே உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பதில்கள் வழங்கப்பட்டன. மேலும், பெற்றோர்களில் 96% ஆனவர்கள் சமூகப் பொது வேலைகளுக்குப் பாடசாலையின் உதவிகள் கிடைக்கப்பெறுதல் என்பதனையும், 92% ஆனவர்கள் மாணவர்களுக்கான நலன்புரிச் செயற்பாடுகள் முறையாக முன்னெடுத்துச் செல்லல் வேண்டும் எனவும், 98% ஆனவர்கள் மாணவர்களின் நேயமிக்க இடமாக பாடசாலையை மாற்றுதல் போன்ற பதில்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிணங்க பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளினை மேம்படுத்தும்போது, ஏற்படும் சவால்களை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

## முடிவுகளும் விதப்புரைகளும்

### பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகள் பாடசாலைகளில் காணப்படும் நிலை

### முடிவுகள்

- பாடசாலைகளில் பெற்றோர்களின் பங்களிப்பானது குறைவானதாகவே காணப்படுகின்றது. இதனை 62 சதவீதமான ஆசிரியர்களும் 5 அதிபர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.
- 10/2017 ஆம் இலக்க சுற்றுநிருப அறிக்கையின்படி பாடசாலைக்குள் ஆரோக்கியமான உணவகத்தினை நடத்திச் செல்லும் விதம் குறைவாக உள்ளதனை 80% ஆசிரியர்களும், 77% மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஐந்து பாடசாலைகளில் ஒரு பாடசாலையில் மாத்திரமே சிற்றுண்டிச்சாலை நடைமுறை காணப்படுகின்றது.

- நான்கு பாடசாலைகளில் நாளாந்த போசணை அடிப்படையில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை.

**விதப்புரைகள்**

- அதிபர் பெற்றோர் கல்வியை வழங்க நிபுணத்துவமான வளவாளர்களைப் பெற்றுச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

- பாடசாலைகளில் பெற்றோர்களின் தொடர்பினை அதிகரிக்க ஆசிரியர்-பெற்றோர் தொடர்பாடல் புத்தகம், குறுந்தகவல் சேவைகள் என்பவற்றில் பெற்றோர்களை இணைத்தல் வேண்டும்.

- பிள்ளைகளின் கல்வி அடைவுகளில் பெற்றோர்களின் ஈடுபாட்டினை மையப்படுத்தி புதிய புள்ளி வழங்கும் திட்டம் முறை ஒன்றினை மதிப்பீட்டுச் செயன்முறைகளில் கொண்டு வருதல் வேண்டும்.

- ஆய்வாளரின் ஆய்வுப் பிரதேசத்தில் பாடசாலைக்கும் சமூகத்திற்குமான இடைவெளியினைக் குறைத்து, வலுவானதும் நீடிக்கக்கூடியதுமான தொடர்பினைப் பேணும் செயற்திட்டங்களினை பாடசாலையில் மேற்கொள்ளல் வேண்டும். இதன்மூலம் பெற்றோர்களை உள்வாங்கல்களுக்கான சந்தர்ப்பங்களினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். இதற்காக அடிப்படை விடயங்களில் பாடசாலைகளின் பார்வை பெற்றோர்களைச் சார்ந்து காணப்படல் வேண்டும். இதனை Ingun Studsrd (2022) என்பவரால் ‘‘பாடசாலை கல்வி அபிவிருத்தியில் பெற்றோர்களின் பங்களிப்பினை உறுதிசெய்தல்’’ எனும் தலைப்பிலான ஆய்வில் பாடசாலை தொடர்பினை பெற்றோர்கள் சிறப்பாக பேணவேண்டும் என்று ஆய்வு முடிவானது பெறப்பட்டது.

- நவீன போக்குகளுக்கான செயற்திட்டம், மதிப்பீட்டுச் சுற்றுநிரூங்கள் தொடர்பான விடயங்களைப் பெற்றோர்களுக்கு முறையாக வழங்க வேண்டும்.

- தற்போது உணவகத்தில் அதிகளவில் காணப்படுகின்ற உடன் உணவுகள், காபனேற்றப்பட்ட பானங்களுக்குப் பதிலாக இலங்கை தேசிய போசாக்குக் கொள்கைகளுக்கு அமைய ஒவ்வொரு நபரும் சரியான போசணைத் தேவையை நிறைவுசெய்யும் வகையில் அளவிலும், தரத்திலும் உரிய உணவு கிடைப்பதனை அதிபர் நடைமுறைப்படுத்த வேண்டும். இதனை Leng Huat Foo (2021) என்பவர் இடைநிலை பாடசாலைகளை மாதிரியாகக் கொண்டு மலேசியாவின் கிளந்தனில் “Assessment of Food Quality In School Canteens: A Comparative Quantitative Study Between Primary And Secondary Schools In Malaysia" ஆய்வு மேற்கொண்டனர். அதில் மலேசியாவின் கிளந்தனில் உள்ள பொது ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களின் வகை மற்றும் தரத்தை மதிப்பிட்டனர். இருந்தபோதிலும், அதிக எண்ணிக்கையிலான ஆரோக்கியமற்ற உணவுப்பொருட்கள் பாடசாலை

சிற்றுண்டிச்சாலைகளில விற்கப்படுகின்றன என்பதை இந்தக் கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

- தற்போது உணவகத்தில் இலங்கை தேசிய போசாக்குக் கொள்கைகளுக்கு அமைய ஒவ்வொரு நபரும் சரியான போசணையுடன் கூடிய உணவு கிடைப்பதனை அதிபர் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**பாடசாலை மதிப்பீட்டுச் செயன்முறைகளில் பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளின் முக்கியத்துவம்**

**முடிவுகள்**

- பாடசாலைகளில் வெற்றிகரமான கல்விசார் அபிவிருத்திகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு வெளிச் சமூகத்தினரின் பங்களிப்பு அவசியமானதாகும். இதனை 84% ஆசிரியர்களும், 100% அதிபர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

- பாடசாலைகளின் சுகாதாரமான சூழலை உருவாக்குவதற்குச் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள் அவசியமாகும். இதனை 84% ஆசிரியர்களும், 100% அதிபர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- பாடசாலையானது சமூகத்தின் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனைப்பெட்டி, வினாக்கொத்து, அதிதிகள் குறிப்புப் புத்தகம், நாளேடு எனப் பல முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.
- வெளிச் சமூகத்தினருக்கான கல்விசார் பணிப்பகிர்வு செயற்பாட்டு முறையினைப் பாடசாலையில் முறையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- பாடசாலைக் கல்விச் செயற்பாட்டினைப் பெறும் வகையில் வெளிச் சமூகத்தினருக்குத் தொழில் அபிவிருத்தி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.
- வெளிச்சமூகத்தின் வாழ்க்கைக் தரத்தினை உயர்த்துவதற்காக கைத்தொழில்களை அறிமுகப்படுத்துதல், சுயதொழில் பாடநெறிகள் எனப் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- வளநபர் பங்களிப்பினைப் பெற்று மாணவர்களுக்குத் தெளிவூட்டல் மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைதிட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- காலை ஒன்று கூடலில் மாணவர்களின் தலைமுடி சுத்தம், நக சுத்தம், ஆடைச் சுத்தம் மற்றும் வெளிச்சம் என்பன கண்காணிக்கப்பட்டு பாராட்டுக்களும் தண்டனைகளும் வழங்கும் நடைமுறையினைக் கொண்டு வருதல் வேண்டும். அடிப்படைக் கல்வியின் பிரதான இலக்கு பிள்ளைகளின் உடல், உள அபிவிருத்தியினை மேம்படுத்துவதாகும். இந்த இலக்கினை

அடைவதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும் என "Carbon and Pangrazi (2020) என்பவர் மேற்கொண்ட ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

- ஒழுக்க் குழு, சுகாதாரக் கழகங்கள், சுற்றாடல் முன்னோடி குழு, பாடசாலை சுகாதாரப் படையணி என்பவற்றின் மூலம் பாடசாலைச் சூழலின் சுத்தமும் ஏனையவர்களின் உடல் ஒழுக்கம், சுத்தமும் கண்காணிக்கப்பட்டு முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- பாடசாலையினுள் கழிவு முகாமைத்துவம் செய்வதற்காக நிறக்கொள்கலன்களை பயன்படுத்துதல், ஹோம்போர்ட் உரம் தயாரித்தல் போன்ற முறையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- சுகாதாரம் உடற்கல்விப் பாட ஆசிரியருக்கு பாடத்துறை சார்ந்த செய்முறைப் பயிற்சிகள் வழங்குவதோடு, சுகாதார உடற்கல்விப் பாடத்தின் கலைத்திட்டத்தினைப் போதியளவு புதிய உள்ளடக்கங்களுடன் வடிவமைத்தல் அவசியமாகும்.

**பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளினை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்கள்**

**முடிவுகள்**

- சமூகத்தினுடைய அபிவிருத்திக்காகப் பாடசாலையின்மூலம் ஒத்துழைப்புக்கள் குறைவாகவே கிடைக்கப்பெறுகின்றன. இதனை 92 சதவீதமான ஆசிரியர்களும், 85.3 சதவீதமான மாணவர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

- பாடசாலைகளில் மாணவர்களுக்கான உள விழிப்புணர்வு, உளவளச் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படுவதில்லை என்பதனை 80 சதவீதமான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- சமூகக் கல்வியினைப் பெற்றுக்கொடுக்கும் எழுத்தறிவு வேலைத் திட்டங்களையும் சமூகத்திற்காக வழங்குதல் வேண்டும்.

- சமூகக் கல்வியினைப் பெற்றுக்கொடுக்கும் ஏற்பாடுகளை வழங்குவதுடன், எழுத்தறிவு வேலைத்திட்டங்களையும் சமூகத்திற்காக வழங்குதல் வேண்டும்.

- பாடசாலைகளில் திட்டமிடல் சந்தர்ப்பங்களின்போது சமூகத்திற்கும் பிரதான இடத்தினை ஒதுக்குதல் வேண்டும்.

- வாராந்தம் மாணவர்களுக்கான உளவிழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக அதிபர் பாடசாலை மட்டத்தில் குழுவினை உருவாக்கி, ஆசிரியர்களின் செயற்பாட்டைக் கண்காணித்தல் வேண்டும்.

- உள விழிப்புணர்வுச் செயற்பாடுகள் சார்ந்த ஆடியோப் பதிவுகளை உள்ளடக்கிய DVD, கேசட்களை வலயக் கல்வி அலுவகத்தினூடாக ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்குவதோடு,

உரிய காலத்திற்கு அவை பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

- உள விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முறையாக முன்னெடுப்பதற்குரிய ஆலோசனை வழிகாட்டல் கைந்நூல் இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, இதனை வழங்குவதனூடாக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் சிறப்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக அதிபர் பாடசாலை மட்டத்தில் குழுவினை உருவாக்கி ஆசிரியர்களின் செயற்பாட்டைக் கண்காணித்தல் வேண்டும்.
- உள விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்குப் புள்ளி வழங்கும் முறை, வலய மட்ட மேற்பார்வை, தேவையான வசதிகளை மேற்கொள்வதனூடாக இதன் செயற்பாடுகளைப் பாடசாலைகளில் திறம்பட மேற்கொள்ள முடியும்.
- ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பன நடத்தப்படல் வேண்டும்.

**பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளை மேம்படுத்தும்போது ஏற்படும் சவால்களை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகள்**

**ஆலோசனைகள்**

- பாடசாலையில் முக்கியம் பெறும் பண்புத் தரச் சுட்டிகள் பற்றிய அறிவினைச் சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்பதனை 96 சதவீதமான ஆசிரியர்களும், 98.8 சதவீதமான மாணவர்களும் உறுதிப்படுத்தி உள்ளார்கள்.
- பாடசாலைகளில் திடீர் விபத்துக்களைத் தவிர்க்கும், பாதுகாப்பினை வழங்கும் முதலுதவி வசதிகள் முறையாக அமைக்கப்படல் வேண்டும் என 97 சதவீதமான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- அறிக்கைகளையும் கல்விப் பண்புத் தரச் சுட்டியையும் தயாரிப்பதுடன், கண்காணிப்புக் குறிப்புப் புத்தகத்தினை வெளிச் சமூகத்தினரும் பார்வையிடும் வழிமுறைகளைப் பேணல் வேண்டும்.
- பண்புத் தரச் சுட்டிகளில் காணப்படும் ஒவ்வொரு மதிப்பீட்டுத் துறைக்கும் குழுக்களை நியமித்து, அதனை முறையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- 31/2014 இலக்க சுற்றுநிருபத்திற்கேற்ப பாடசாலையின் உள்ளக மதிப்பீட்டுச் செயன்முறையில் பிரதான விடயமான ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் உள்ளக மதிப்பீட்டுத் திட்டத்தினைத் தயாரித்து அது குறித்துச் சமூகமும் அறியும்படி செயற்படுத்தல் வேண்டும். ஹுலைத்துன்னிஸா (2021) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட "கல்விப் பண்புத்

தரத்தில் பண்புத் தரச் சுட்டிகளின் செல்வாக்கு தொடர்பான மதிப்பீடு” என்ற ஆய்வு மிக முக்கியமானதாகும். தென்குடானை மையப்படுத்தியதாக 27 இடைநிலைப் பாடசாலைகளை மாதிரிகளாகக் கொண்டு கல்வி நிறுவனத்தின் இலக்குகளை நோக்கி நகர்த்துவதில் பண்புத் தர உறுதிப்படுத்தலின் அவசியம் பற்றியும், எதிர்காலத்திற்கான திட்டமிடல்களை மேற்கொள்வதற்கும் உதவும் எனவும் கூறப்பட்டுள்ளது.

- முதலுதவி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குரிய பயிற்சிகள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். மேலும், இது போன்ற பயிற்சிகள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும் என Samera (2020) என்பவர் “School As A Place For Learning First Aid” எனும் தலைப்பில் பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளும் இதனையே பரிந்துரைக்கின்றது.

- இதற்காக அதிபரானவர் பாடசாலைகளில் முதலுதவி வழங்குதல் தொடர்பாக பயிற்சி பெற்ற குழுவினரை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

- பாடசாலைக்கு அண்மையில் பொலிஸ் நிலையம், வைத்தியசாலை, நோயாளர் வண்டி போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை முறையாகப் பேணுதல் வேண்டும்.

- ஒவ்வொரு பாடசாலையும் சுகாதார மற்றும் தேசிய சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவினூடாக வெளியிடப்பட்டுள்ள முதலுதவி சார்ந்த கைந்நூலைப் பின்பற்றிச் செயற்படல் வேண்டும்.

**சாராம்சம்**

“பாடசாலைக் கல்வியின் பண்புத்தர மேம்பாட்டில் பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி என்பவற்றின் செல்வாக்கு” எனும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்ட மேற்படி ஆய்விற்கு ஊக்கமளிப்பதற்காகவும், அது தொடர்பான ஆழமான விடயங்களை ஆராய்வதற்காகவும் கடந்த பத்து வருட காலத்திற்குட்பட்ட ஆய்வு முடிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் நூல்கள், சஞ்சிகைகள், இணையம் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் பாடசாலைகளின் பண்புத் தரத்தினை மேம்படுத்துவதில் பண்புத் தரச்சுட்டிகளின் முக்கியத்துவத்தினையே பிரதானமாகக் குறித்து நிற்கின்றன. பாடசாலைகள் உள்ளக மதிப்பீடுகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருவதோடு, வெளியக மதிப்பீடுகளுக்கும் உட்படுத்தப்பட்டு வருவதும் கல்வியின் உயர் இலக்கினை அடைவதற்கும், பாடசாலையின் கல்வித் தரத்திற்கும் சிறந்த முன்னெடுப்புக்களாக பாடசாலை கல்விப் பண்புத் தரச் சுட்டிகள் காணப்படுகின்றது. இவ்வாறு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான துறைகளை இனங்கண்டு, இவை அனைத்தும் ஒன்றாக சேர்ந்து முழுமை பெறுகின்றபோதே பூரணத்துவமான ஒரு மாணவர் கல்விச் சமூகத்தை உருவாக்கிக் கொடுக்க முடியும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

கல்வி அமைச்சு, (2022). சுற்றறிக்கை இலக்கம் 31/2014 "பாடசாலைக் கல்விப் பண்புத்˙தை உறுதிசெய்யும் வகையிலான புதிய மதிப்பீட்டு கண்காணிப்பு வேலைத்திட்டம்" Dec 2014, Colombo.

சின்னத்தம்பி.மா, (2008), "பாடசாலையும் சமூகமும்", குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

பாடசாலையின் பண்புத் தர மதிப்பீட்டு அறிக்கை, (2014), "பாடசாலையின் பண்புத் தர உள்ளக மதிப்பீடுப் பதிவுகள்", தோரகொடுவ முஸ்லிம் வித்தியாலம், குளியாப்பிடிய.

லோகேஸ்வரன்.ற, (2008), "மாணவர்களின் கற்றல் தேவைகளை ஒழுங்கமைப்பதில் ஆசிரியரின் பங்கு," அகவிழி வெளியீடு, கொழும்பு.

Norton, K.R. and Griffith, G.M. (2020). The Impact of Delivering Mindfulness-Based Programmers in Schools: A Qualitative Study. *Journal of Child and Family Studies*, [online] 29(9), pp.2623–2636. doi: https://doi.org/10.1007/s10826-020-01717-1. [Accessed 14 Mar. 2025].

Akih, A. (2015). Effective School Management and Supervision: Imperative for Quality Education Service Delivery. *African Research Review*, 9(3), p.62.doi: https://doi.org/10.4314/afrrev.v9i3.6. [Accessed 18 Apil. 2025].

# பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில்சார் தீய்வைத் தூண்டும் காரணிகள் : யாழ்ப்பாண மாவட்டத்தில் இடைநிலைப் பாடசாலைகளின் மீதான ஒரு தோற்றப்பாட்டியல் ஆய்வு


**Brintha Somalojan[1]**
Graduate student of M;Phil in Education, Faculty of Graduate Studies, University of Jaffna.
brinthas123@gmail.com

**V.Vijayabaskar[2]**
Senior Lecturer, Department of Education, Faculty of Arts, University of Jaffna.
vvbaskar@univ.jfn.ac.lk


**ஆய்வுச் சுருக்கம்**


தொழில்சார் மன அழுத்தம் சில நேரங்களில் பயனுள்ள, அவசியமான உள, உடலியல் பிரதிபலிப்பாக இருந்தாலும், அதிக அளவிலான தொழில்சார் மன அழுத்தத்திற்குத் தொடர்ச்சியாக உட்படுதல் தொழில்சார் தீய்வைத் தூண்டக்கூடும். தொழில்சார் தீய்வு என்பது மனவெழுச்சிச் சோர்வு, தொழில்சார் தன்வயமிழத்தல் மற்றும் குறைந்த தொழில்சார் சுயநிறைவு ஆகிய பண்புகளால் வகைப்படுத்தப்படும் ஓர் எதிர்மறை உளச் சமூகத் தோற்றப்பாடாகும். கடுமையான பணிநிலைச் சவால்கள் ஆசிரியர்களிடையே பல்வேறு உளவியற் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை பொருத்தமானவகையில் கையாளப்படாதவிடத்து தொழில்சார் தீய்தலுக்கு வழிவகுக்கக்கூடியனவாகும். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்பிக்கும் பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில் வாண்மைத்தீய்வு எந்தமட்டத்தில் உள்ளது என்பதையும் தொழில்சார் தீய்வில் தாக்கம் செலுத்தும் காரணிகளை இனங்காண்பதனையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதையும் ஆராய்வதனை அடிப்படையாகக்கொண்டு தோற்றப்பாட்டியல் ஆய்வு அணுகுமுறைக்கூடாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருபத்தாறு ஆசிரியர்களுடன் அரைக் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் நடத்தப்பட்டன. கருப்பொருட் பகுப்பாய்வின் மூலமாக ஆய்வுத் தோற்றப்பாடு, அதன் வியாபகம் பற்றிய கண்டறிதலைப் பெற்று அதனூடாக பங்குபற்றுநர்களின் வாழ்தேறிய அனுபவங்களைக் கொண்டு (lived experiences) தொழிற்தீய்வு பற்றிய தோற்றப்பாட்டின் வியாக்கியானம் முன்வைக்கப்படுகிறது. பரதநாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தொழில் திருப்திநிலை குறைவாகவுள்ளது. மனவெழுச்சிச் சோர்வு, தொழில்சார் தன்வயமிழத்தல் மற்றும் தொழில்சார் சுயநிறைவு மிகக் குறைவாக இருப்பது ஆசிரியர்களில் தொழில் வாண்மைத்தீய்வு அவதானிக்கக்கூடிய மட்டத்தில் உள்ளமைமையை வெளிப்படுத்துகிறது. ஆசிரியர்களின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள், பாடசாலைச் சூழமைவு, வகுப்பறை, மாணவர் தரப்புப் பண்புகள் சவாலான தொழில்சார் மன அழுத்தத்திற்குத் தொடர்ச்சியாக உட்படுத்தக்கூடிய சூழலைத் தோற்றுவிக்கின்றன.



***திறவுச் சொற்கள்:*** *தொழில்சார் தீய்வு, தொழில்சார் மன அழுத்தம், மனவெழுச்சிச் சோர்வு, சுயநிறைவு.*

**அறிமுகம்**

தொழில்சார் மனநலம் என்பது, ஒருவரால் தனது தொழில் சூழலில் ஏற்படும் உளச்சமூகச் சூழல் மற்றும் உடல்ரீதியான சவால்கள் ஆகியவற்றின் காரணமாக எழும் உளநெருக்கீடுகளை தனிநபர்கள் எவ்வளவு சிறப்பாக கையாள முடியும் என்பதைப் பொறுத்ததாகும். தொழில்சார் மன அழுத்தம் சில நேரங்களில் பயனுள்ள ஒரு அவசியமான உள, உடலியல் பிரதிபலிப்பாக இருந்தாலும், அதிக அளவிலான தொழில்சார் மன அழுத்தத்திற்குத் தொடர்ச்சியாக உட்படுதல் தொழில்சார் தீய்வைத் தூண்டக்கூடும் (Psyhältö et al,2011).

தொழில்சார் தீய்வு என்பது மனவெழுச்சிச் சோர்வு, தொழில்சார் தன்வயமிழத்தல் மற்றும் குறைந்த தொழில்சார் சுயநிறைவு ஆகிய பண்புகளால் வகைப்படுத்தப்படும் ஒரு உளச்சமூக தோற்றப்பாடாகும் (Maslach & Leiter,2015). ஆசிரியர்களின் ஊக்கப்படுதல் மற்றும் தொழிற் திருப்தியை பாதிக்கும் கடுமையான தொழில்முறை பிரச்சினையாக ஆசிரியர்களின் தொழில்சார் தீய்வு அடையாளங்காணப்பட்டுள்ளது (Pietarinen et al, 2015., Steiner et al., 2022).

இதன் விளைவுகள் மாணவர்களின் கற்றல் மற்றும் நடத்தைவிருத்திக்கான வகுப்பறைச் செயன்முறையில் ஆசிரியர்களின் ஈடுபாட்டில் மட்டுமல்லாது, பாடசாலை ஒழுங்கமைப்பில் அவர்கள் ஆற்றுகின்ற பல்வேறு வகையான வகிபாகங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தவல்லன. ஏனைய தொழில்களுடன் ஒப்பிடுகையில், கற்பித்தல் உயர்ந்த அளவிலான மன அழுத்தத்தைக் கொண்ட தொழில்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது ( Aronsson et al,2017).

ஒரு தொழில்முறைச் சூழலாக ஒரு பாடசாலை பல சிக்கலான பின்புலச் சூழ்நிலைகளால் கட்டமைக்கப்படுகிறது. அவை பாடசாலைகளிடையே வேறுபடும் பல்வகையான பின்புலக் காரணிகளால் உருவாக்கப்படுகின்றன. இதனால் பாடசாலைகளுக்கிடையே ஆசிரியர்கள் அனுபவிக்கக்கூடிய மனவெழுச்சிச் சோர்வும் வேறுபடக்கூடும். பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு இருக்கும் தீவிர உள மற்றும் அறிவாற்றல் தேவைகளை வகைப்படுத்த உதவும் பல மாறிகளை முன்னைய ஆய்வுகள் அடையாளம் கண்டுள்ளன. ஆசிரியர்களின் தொழில்சார் தீய்வுடன் தொடர்புடைய மாறிகள் தனியாள் சார்ந்தவை, நிறுவன ஒழுங்கமைப்பு சார்ந்தவை மற்றும் வகுப்பறை சார்ந்தவை ஆகிய மூன்று முக்கிய பரிமாணங்களில் மதிப்பீடு செய்யப்படும்போது, நன்கு புரிந்துகொள்ள முடியும் என்று முந்தைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Mota et al,2021).

ஹெர்பர்ட் பிராய்டன்பெர்கர் (Herbert Freudenberger, 1974) ஊழியர்களின் தொழில்சார் தீய்வு என்பது பற்றி முதன்முதலில் ஆராய்ந்தார். இவரது ஆய்வு தொழில்சார் தீய்வு ஏற்படும்போது, ஏற்படும் உடல் அறிகுறிகள் மற்றும் நடத்தைக் குறிகாட்டிகளை எடுத்துக்காட்டுகிறது. பிராய்டன்பெர்கரின் படைப்புகளில் கோடிட்டுக் காட்டப்பட்ட கண்டுபிடிப்புகள் மாஸ்லாக்கின் தொழில்சார் தீய்வு மதிப்பீட்டுப் படிவத்தில் (Maslach's Burnout Inventory) உள்ள அளவுச் சட்டங்களுக்கு ஒரு அடித்தளமாகவும் செயல்பட்டன. இந்த் தொழில்சார் தீய்வு மதிப்பீட்டுப் படிவம் இன்று பெரும்பாலும் தொழில்சார் தீய்வு அளவை அளவிடப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாக ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படுகிறது.

தொழில்சார் தீய்வைப் பார்க்கும்போது, அது அதிக மன அழுத்த வேலைச் சூழலில் உள்ள ஊழியர்களுடன் தொடர்புடையதாகத் தெரிகிறது. எனவே, தொழில்சார் தீய்வு பொதுவாக மன அழுத்தத்துடன் தொடங்குகிறது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். நாட்பட்ட மன அழுத்தம் நம் உடலிலும் வாழ்க்கையிலும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். அதிகளவு நாட்பட்ட மன அழுத்தம் ஆசிரியர்கள் தொழில்சார் தீய்வுப் பிரச்சினையை அனுபவிக்க வழிவகுக்கும் (Maslach, Schaufeli, & Lieter, 2001). தொழில்சார் தீய்வு என்பதுபற்றி ''மனவெழுச்சிச் சோர்வு, தன்வயமிழத்தல் மற்றும் ஒருவரின் தொழிலிற் சாதனைச் சுயநிறைவுத் திருப்தியுணர்வு குறைவடைதல் ஆகிய குணங்குறிகளால் வெளிப்படுத்தப்படும் ஒரு உளத்தாக்கநிலை'' என வரையறுக்கின்றனர்.

இலங்கையின் பாடசாலைக் கல்விப் பாடவிதானத்தில் அழகியற் கல்வி முக்கியமானதோர் இடத்தினை வகிக்கின்றது. அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஆற்றுகைக் கலைகளில் ஒன்றான பரதநாட்டியம் இன்று உலகெங்கும் காணக்கூடிய ஓர் அரும் பெரும் கலையாக இன, மத. மொழி, பேதங்களுக்கு அப்பாற்பட்டதாக பல்லின மக்களாலும் பயிலப்பட்டு வருகின்ற கலை வடிவமாகும். இன்றைய கால கட்டத்தில் அழகியல் கல்வி அறிவிற்காகக் கற்பதற்கும் அப்பால், இளம் சமூதாயத்தினரைக் கட்டுப்பாட்டுடனும் சமூக ஒருமைப்பாட்டுடனும் வாழவைப்பதற்காகவும் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றில் இளம் சந்ததியினர் ஈடுபாட்டுடனும் விழிப்புணர்வுடனும் செயற்படவும் அவர்களை வழிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளது. இது அறிமுறை, செய்முறை ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டத்தினுள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஓர் அரங்காற்றுகைக் கலை என்பதனால் உணர்வு வெளிப்பாட்டுடன் ஆசிரியர்களால் கற்பிக்கப்படவேண்டிய கலைப்பாடங்களில் ஒன்றான பரதநாட்டியம் உள்ளது. பரதநாட்டியம் வெறும் உடலசைவுகளுடன் மட்டும் தொடர்புபட்ட கலை வடிவமன்று. அது உள்ளத்துடனும் தொடர்புடைய ஆன்மிகக் கலையாகும். உள்ளத்தின் உணர்வு வெளிப்பாட்டினை உடல் உறுப்புக்களின் மூலம் வெளிக்காட்டும் கலையாக பரதநாட்டியம் காணப்படுகின்றது. எனவே, அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தம்மை மனவெழுச்சி ரீதியாகவும் தயார்ப்படுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

தற்காலச் சூழ்நிலையில் பாடசாலைகளில் கற்பித்தற் தொழில் வெவ்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ளும் தொழில்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பரதநாட்டியம் கற்பித்தலில் வெற்றிபெறுவதற்கு ஆசிரியர்களுக்கு விடயவிதான நிபுணத்துவ அறிவு, போதனா திறன்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக ஆரோக்கியமான உடல், மனவெழுச்சி மற்றும் தொழில்சார் அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது. இவ்வாறான கற்பித்தல் தகைமைகளில் பரதநாட்டிய ஆசிரியர்கள் ஒரு தனித்துவமான நிலையை வகிக்கிறார்கள். குறிப்பாக இலங்கையில், யாழ்ப்பாண மாவட்டம் போன்ற பிராந்தியங்களில், பாரம்பரியக் கலைகள் கலாசார, கல்வி, சமூக அடையாளத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளன.

பரத நாட்டியம், ஒரு பாரம்பரிய தென்னிந்திய ஆற்றுகைக் கலை வடிவமாகும். அது ஒரு செயல்திறன்மிகு கலை மட்டுமல்ல, கலாசார பாதுகாப்பு மற்றும் பரிமாற்றத்தின் ஊடகமாகும். இதனால் பரத நாட்டிய ஆசிரியர்கள் பிராந்தியத்தின் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் மாணவர்களின் கலை வளர்ச்சியை உறுதிசெய்வது எனும் இரட்டைப் பொறுப்பைக் கொண்டுள்ளனர். இருப்பினும், பல்வேறுபட்ட எதிர்மறையான பின்புலச் சூழ்நிலைகளால் பரதநாட்டிய ஆசிரியர்கள் தமது பணிசார்ந்த பல சவால்களை எதிர்கொள்கின்றனர். கடுமையான பணிநிலைச் சவால்கள் ஆசிரியர்களிடையே பல்வேறு உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். இவை பொருத்தமான வகையில் கையாளப்படாதவிடத்து தொழில்சார் தீய்தலுக்கு வழிவகுக்கக்கூடுமென முன்னைய ஆய்வுகள் விபரிக்கின்றன Herman, Hickmon-Rosa., & Reinke, (2018). இவ்வகையில், இது அறிவார்ந்த ஓர் ஆய்வுக்கான கவனத்தைக் கோரும் ஒரு முக்கியமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

பரதநாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்கள் குறித்து முன்னைய ஆய்வுகளில் அதிக கவனஞ்செலுத்தப்படவில்லை. பரதநாட்டிய ஆசிரியர்களின் தொழிற் தீய்விற்கான காரணங்களை மையப்படுத்திய ஆய்வு இடைவெளியை நிரப்புவதற்கு இந்த ஆய்வு முயல்கின்றது. பொதுப் பாடங்களின் கற்பித்தலைவிட பரதநாட்டியக் கற்பித்தல் இயல்பாகவே தனித்துவமானது. வகுப்பறைப் போதனைக்கும் பயிற்சிக்கும் அப்பால், ஆசிரியர்கள் நடன அமைப்பு, ஒத்திகை, ஆடை வடிவமைப்பு மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதில் குறிப்பிடத்தக்க முயற்சியைச் செய்யவேண்டியதுடன், அவற்றில் சவால்களையும் எதிர்கொள்கிறார்கள். பல தனித்துவமான சமூக மற்றும் பொருளாதார இயங்குவிசைகளுக்குட்பட்ட யாழ்ப்பாண மாவட்ட கல்விப் புலத்தில், பரத நடன ஆசிரியர்கள் பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட வளங்கள், சமூக அழுத்தங்கள் ஆகிய சவால்களுடன் பாடசாலை முகாமைத்துவ ஆதரவைப் பெறமுடியாத சூழலையும் எதிர்கொள்கின்றனர். பாடசாலைகளில் கவின்கலைக் கல்வி “குறைந்த முன்னுரிமைப்” பாடமாக கணிக்கப்படுகின்றமை அவர்களின் மன அழுத்தத்தை மேலும் அதிகரிக்கிறது. இத்தகைய சவால்கள் அவர்களின் தொழில்சார் நல்வாழ்வு மற்றும் தொழில்முறை செயல்திறனை மோசமாகப் பாதிக்கக்கூடும்.

இந்நிலை ஆசிரியர்களிடையே தொழில்சார் திருப்தி குறைவதற்கு வழிவகுக்கிறது. மறுபுறத்தில் மாணவர்களைப் பொறுத்தவரை, ஆசிரியர்களின் செயற்திறன் குறைவடைவது அவர்களின் பயிற்றுகைத் தரக் குறைவுக்கு இட்டுச்செல்கிறது. அதன் விளைவாகப் பரத நடனத்தில் மாணவர்களின் ஆர்வம் மற்றும் செயல்திறன் குறைந்து வருகிறது. இதனால் அவர்களது செயலாற்றுகை எதிர்பார்த்த தரத்தை எட்டாதுவிடுகிறது. இது ஆசிரியர்களின் தொழில்சார் அழுத்தத்தை மேலும் தூண்டுகிறது. வேலையில் ஏற்படும் அழுத்தம் அநேக ஆசிரியர்களை அதிக சோர்வை நோக்கி இட்டுச்செல்கின்றது. அதிகரித்த அதிருப்தி தரும் எதிர்மறையான மனநிலையை உண்டுபண்ணுகின்றது. இதனால் இத்தகைய தாக்கங்கள் வேலையில் ஏற்படும் வாண்மைத் தீய்வு நிலையாக தோற்றம் பெற்றுத் தொடர்ந்திருக்கக் கூடியதாகவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

வாண்மைத் தீய்தலுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்கள் அறியப்படுவது அவசியமாகும். அத்துடன் அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகளை அடையாளம்கண்டு வெளிப்படுத்துவது முக்கியமாகும். பரத நடன ஆசிரியர்களால் பயன்படுத்தப்படும் தொழில்சார் அழுத்தங்களை எதிர்கொள்ளும் வழிமுறைகளைப் புரிந்துகொள்வதன் மூலமாக பாடசாலை அதிபர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இந்த ஆசிரியர்களுக்கு எவ்வாறு சிறப்பாக வசதியளிக்க முடியும் என்பதற்கான வழிகாட்டல்களை வழங்க முடியும்.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்பிக்கும் பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வு எந்த மட்டத்தில் உள்ளது என்பதை அடையாளங்காண்பதையும், தொழிற் தீய்வில் தாக்கம் செலுத்தும் காரணிகளை இனங்காண்பதனையும், அதனால் ஏற்படும் பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதையும் ஆராய்வதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆராயப்படாத பகுதியில் கவனம் செலுத்துவதன் மூலம், பரத நாட்டிய ஆசிரியர் தொழில் நல்வாழ்வு குறித்த பரந்த அறிவுக்குப் பங்களிக்கவும், பாடசாலைகளில் பரதநாட்டியக் கல்வியின் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட தலையீடுகளுக்கு வாய்ப்பளிக்கவும் முடியும்.

**இலக்கிய மீளாய்வு**

தொழில்சார் தீய்தல் என்ற கருத்து குறிப்பாக வாடிக்கையாளர்களுடன் பணிபுரியும் துறைகளில் ஏற்படக்கூடிய ஓர் உளவியல் அபாயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது ((Loonstra, Browers, & Tomic, 2009; Maslach & Leiter, 2016). இது “வேலையில் நாள்பட்ட ஆளிடை அழுத்தங்களால் நீண்ட காலத்தில் வெளிப்படும் ஓர் உளவியல் பாதிப்பு அறிகுறியாகும்” என்று வரையறுக்கப்பட்டுள்ளது (Maslach & Leiter, 2016). தொழில் விரும்பத்தகாததாகவும் நிறைவேறாததாகவும் பலனளிக்காததாகவும் இருக்கும்போது, தொழில்சார் தீய்தல் படிப்படியாக உருவாகிறது. தொழில்சார் தீய்தல் என்ற கருத்துப் பொதுவாக மூன்று பரிமாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது: தொழில் உளச் சோர்வு, தொழிற் சாதனையில் பற்றுக் குறைவு, வேலையினை வெறுத்தல் மற்றும் ஈடுபாடற்ற உணர்வுகள (Maslach, Schaufeli, & Leiter, 2001). இந்த மூன்று பரிமாணங்களில், மனச்சோர்வு அல்லது உணர்ச்சி ரீதியாக வலுவிழத்தல் மற்றும் தேய்ந்துபோகும் ஊக்க உணர்வு, தொழில்சார் தீய்தல் என்ற முழு எண்ணக்கரு கட்டமைப்பின் மைய அம்சமாக அடையாளம் காணப்படுகிறது (Maslach & Leiter, 2016).

ஆசிரியர்களிடையே தொழில்சார் தீய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய காரணிகளைப் புரிந்துகொள்வது இன்று ஆய்வாளரிடையே கணிசமான கவனத்தை ஈர்த்துள்ளது (Kyriacou, 2001). ஆசிரியர்களின் தொழில்சார் தீய்தல் அவர்களின் சுயமதிப்பிற்குரிய ஆரோக்கியத்தின் அடிப்படையில் ஆசிரியர்களின் நல்வாழ்வுக்கு எதிராக மட்டுமல்லாமல், குறிப்பிடத்தக்க எதிர்மறையான வேறு தாக்கங்களையும் கொண்டிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது

(Hakanen, Bakker, & Schaufeli, 2006). அவை மன ஆரோக்கியம் (Schonfeld & Bianchi, 2016) மற்றும் வேலை திருப்தி (Klassen, Usher, & Bong, 2010; Robinson, Bridges, Rollins, & Schumacker, 2019; Skaalvik & Skaalvik, 2009; 2011) என்பவற்றுடன் மாணவர் சாதனை (Herman, Hickmon-Rosa, & Reinke, 2018; Klusmann, Richter, & Lüdtke, 2016) மற்றும் இயைபாக்கம் செய்தல் (Jennings & Greenberg, 2009; Oberle & Schonert-Reichl, 2016) என்பவற்றிலும் எதிர்மறைத் தாக்கமுடையது. ஆசிரியர்களிடையே அதிக வரவீனம், ஓய்வு மற்றும் தொழில் விலகல் விகிதங்கள் என்பவற்றை அதிகரிப்பதுடன் (Ingersoll & May 2012; Schonfeld, 2001) தரமான வேலைச் செயல்திறன் வீழ்ச்சி (Klusmann, Kunter, Trautwein, Lüdtke, & Baumert, 2008) ஆகியவற்றுடன் தொடர்புடையது.

**ஆசிரியர்களின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள்**

ஆசிரியர்களின் மனவெழுச்சித் தேர்ச்சிகள் மற்றும் சமாளிக்கும் உத்திகள் போன்ற தனிப்பட்ட ஆற்றல்கள் தொழில்சார் தீய்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் தங்கள் தொழிலில் தோன்றும் அன்றாட சவால்கள் மற்றும் கோரிக்கைகளை உணர்ந்து பதிலளிக்கும் விதத்தில் அவை செல்வாக்குச் செலுத்துகின்றன (Fiorilli et al,2017., Pinto et al., 2005). இதேபோல், ஆசிரியர்கள் தொழிற் சோர்வடைவதற்கு ஆசிரியர்களிடம் பாடசாலைகள் மற்றும் மாணவர் குடும்பங்கள் கோரும் எண்ணற்ற பணிகளை அவர்களால் நிர்வகிக்க இயலாமை, அதற்குரிய பன்முகத்தன்மை இன்மை (Arvidsson et al., 2019) என்பனவும் காரணங்களாகும் என்று முன்னைய ஆய்வுகள் அறிந்துள்ளன.

**பாடசாலைச் சூழமைவுப் பண்புகள்**

கல்வி முறைமை, பாடசாலைச் சூழலுடன் தொடர்புடைய பல விடயங்கள் தொழில்சார் தீய்வில் வலுவான பங்கு வகிப்பதாகத் தெரிகிறது. பாடசாலைகள் பல்வேறு பங்குதாரர் தரப்புக்களைக் கொண்ட சிக்கலான உறவுத்தொடர்புகளால் வழிநடத்தப்படும் சமூக முறைமைகளாகும். அதிகப்படியான பணிச்சுமை, பணிகளின் பெருக்கம் மற்றும் அதிகாரத்துவ மையமான முகாமைத்துவம், வரையறுக்கப்பட்ட மேம்பாட்டு வாய்ப்புகள், நேர அழுத்தம், சம்பளம், அதிபர்கள் ஆசிரியர்களுக்கிடையேயான ஆளிடை உறவுகளின் தன்மை போன்ற பல காரணிகள் பாடசாலைகளுக்கிடையே வேறுபட்டவையாகவும், அவை ஆசிரியர்களில் தொழில் அழுத்தத்தை உருவாக்குவனவாகவும் தொழிற்திருப்தியைப் பாதிப்பனவாகவும் உள்ளன.

வகுப்பறைச் சூழலில், மாணவர் நடத்தை, ஊக்கம், செயல்திறன் மற்றும் கற்றல்திறன்களில் மாணவர் பன்முகத்தன்மை, வகுப்பின் பருமன் அளவு, பெற்றோர் ஒத்துழைப்பு என்பன முக்கியமான ஆசிரியர்களின் தொழிற் திருப்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகக் கருதப்படுகிறன (Stoeber & Rennert, 2008).

இந்த ஆய்வில், ஆசிரியர்களில் தொழில்ரீதியான தீய்வு என்பது ஒரு அகநிலை அனுபவமாக கருதப்படுகிறது. அது தனிநபர்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள சூழலின் அகவய

அனுபவம் மற்றும் சுய மதிப்பீடு என்பவற்றால் தோற்றுவிக்கப்படுகிறது. ஒரு தனிநபரின் மன அழுத்தம் மற்றும் தீய்வு அந்நபரின் சூழ்நிலைகள் மற்றும் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட சவால்கள் மற்றும் அவர்களிடம் உள்ள அறிவாற்றல், கிடைக்கக்கூடிய வளங்கள் பற்றிய மதிப்பீட்டால் தீர்மானிக்கப்படுகிறது. அடையாளம் காணப்பட்ட மாறிகளின் தொகுப்பு எவ்வாறு என்பதை தற்போதைய ஆய்வு ஆராய்கிறது. பரத நாட்டிய ஆசிரியர்களில் தொழில்ரீதியான தீய்வினை யாழ்ப்பாண மாவட்டக் கல்விச் சூழலுடன் தொடர்புடைய தனிப்பட்ட, நிறுவன மற்றும் வகுப்பறை பரிமாணங்களின் ஒப்பீட்டு முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வின் குறிக்கோள்கள்**

1. யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் பரத நாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தொழில் திருப்தி நிலையினை ஆராய்தல்.
2. பரத நாட்டிய ஆசிரியர்களில் தொழில்ரீதியான தீய்வின் வியாபகத்தை அடையாளங்காணுதல்.
3. பரத நாட்டிய ஆசிரியர்களின் தொழில்ரீதியான தீய்விற்கான அடிப்படைக் காரணிகளை அடையாளம் காணுதல்.
4. ஆசிரியர்களின் தொழில்ரீதியான தீய்ந்தழிவு ஆசிரியர்களின் தொழில் வாண்மையில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை ஆராய்தல்.

**ஆய்வின் எண்ணக்கரு மாதிரிகை**




**ஆய்வு வினாக்கள்**

1. யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் பரத நாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தொழில் திருப்திநிலை எந்தளவிற்கு உள்ளது?

2. பரத நாட்டிய ஆசிரியர்களில் தொழில்ரீதியான தீய்வின் குணங்குறிப் பரிமாணங்கள் எந்நிலையில் உள்ளன?
3. பரத நாட்டிய ஆசிரியர்களின் தொழில்ரீதியான தீய்வினைத் தோற்றுவிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?
4. ஆசிரியர்களின் தொழில்ரீதியான தீய்ந்தழிவு காரணமாக ஆசிரியர்களின் தொழில் வாண்மை எவ்வாறு பாதிக்கப்படுகின்றது?

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்விற்குத் தோற்றப்பட்டியல் ஆய்வு வடிவமைப்பைக் கொண்ட பண்பறி ஆய்வு அணுகுமுறை (Qualitative approach) பயன்படுத்தப்படுகிறது (Creswell & Plano, 2011). பரத நாட்டிய ஆசிரியர்களின் தொழில்ரீதியான தீய்வினை ஆழமாக ஆராய்வதற்காகத் தெரிவுசெய்யப்படும் மாதிரிகளிடம் ஆழ்நேர்காணல் செய்யப்படுகிறது. இதன் மூலமாக ஆய்வுத் தோற்றப்பாடு, அதன் வியாபகம் பற்றிய கண்டறிதலைப் பெற்று, அதனூடாக உருவாக்கப்படும் பங்குபற்றுனர்களின் வாழ்தேறிய அனுபவங்களைக் கொண்டு (lived experiences), தொழிற் தீய்வு பற்றிய தோற்றப்பாட்டின் வியாக்கியானம் முன்வைக்கப்படுவதற்கு இந்த ஆய்வு ஒரு தேற்றப்பாட்டியல் ஆய்வு முறையைபட பொருத்தமாகப் பயன்படுத்துகிறது.

**தரவு சேகரித்தல்**

நோக்குடை மாதிரித் தெரிவின் மூலமாக தெரிவுசெய்யப்படும் 26 பதிலிறுப்போரிடம் ஆழ்நேர்காணல் செய்யப்படுகிறது. பரதநாட்டிய ஆசிரியர்கள் (பதிலிறுப்போர்) ஆய்வுக் குடித்தொகையில் உள்ள அங்கத்துவத்தின் பல்வகைமையை அங்கீகரிப்பதை அடிப்படையாகக் கொண்டு மாதிரித˙ தெரிவில் நோக்குடைய உச்ச உருத்திரிபு மாதிரியெடுப்பு (Maximum Variant Sampling) அடிப்படை கையாளப்பட்டது (Creswell & Plano Clark, 2011). பங்குபற்றல் அவதானிப்புக்களின்போது, ஆய்வாளரால் விரிவான அவதானிப்புக் குறிப்புக்கள் வரையப்பட்டன. நேர்காணல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டதுடன் துணைக்குறிப்புக்களும் வரையப்பட்டன. ஒலிப்பதிவுகள் சுவடியாக்கம் செய்யப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகளில் வடிவங்களை அடையாளங்காண்பதன் மூலம் கருப்பொருள் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செயல்முறையில் தரவைக் குறியிடுதல், ஒத்த குறியீடுகளை வகைப்படுத்துதல் மூலமாகவும் தரவுப் பகுப்பாய்வின் ஒரு பகுதியாக உபவகைப்பாடு, வகைப்பாடு (sub categories and categories) என்பவற்றின் மீடிறன் எண்ணிக்கையும் முடிவுகளின் விளக்கத்தை ஆதரிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஆசிரியர்களின் நேர்காணல்களில் பெற்ற தரவுகளில் விரிவான புரிதலைப் பெறுவதை நோக்காகக் கொண்டு மீள்வாசிப்புகளினூடாக கருப்பொருள்கள் உருவாக்கப்பட்டன. அவற்றைப் பயன்படுத்திக் கீழ்வரும் பெறுபேற்று விபரிப்பு வரையப்படுகிறது.

**தரவுப் பகுப்பாய்வுப் பெறுபேறுகள்**

இந்த ஆய்வு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்பிக்கும் பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வு எந்த மட்டத்தில் உள்ளது என்பதையும், தீய்வில் தாக்கம் செலுத்தும் காரணிகளை இனங்காண்பதனையும், அதனால் ஏற்படும்

பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதை அடையளங்காணவும் மேற்கொள்ளப்பட்டது.

**வகைப்பாடுகள் மற்றும் கருப்பொருள்களின் தொகுப்பு**

கருப்பொருள் பகுப்பாய்வு மொத்தம் பத்துக் கருப்பொருள்களையும் நாற்பத்துமூன்று வகைப்பாடுகளையும் உருவாக்கியது. அனைத்து வகைப்பாடுகளும் பரஸ்பரம் பிரத்தியேகமானவையாக அமைந்தன. ஆசிரியரின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள் பரிமாணத்தில் உறவுத் தொடர்புகளின் கையாளுகை, சூழ்நிலைகளுக்கு இயைவுபடுதல், சுயதிறன்கள் என்பன வெளிப்பட்டன. இவை தனியாள் உள்ளார்ந்த புலக்காட்சிகளும் மனப்பாங்குகளும் எனும் கருப்பொருளாக்கத்திற்கு உட்பட்டது. வாண்மைத்துவ அங்கீகாரம், சுய நிறைவு, தொழில்சார் சமூகத் தராதரம் என்பவை தொழில் வாண்மைத்துவ சுயஎண்ணக்கருவும் வாண்மைத்துவ உறவு வட்டமும் எனும் கருப்பொருளாக்கத்திற்கு உட்பட்டது. பாடசாலைச் சூழமைவுப் பண்புகள் பரிமாணத்தில் 13 வகைப்பாடுகள் அடையாளங்காணப்பட்டன. வகுப்பறை, மாணவர் தரப்பு மாறிகள் பரிமாணத்தில் 12 வகைப்பாடுகள் அடையாளங்காணப்பட்டன.

அட்டவணை1: ஆசிரியரின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகளின் பரிமாணத்தில் வகைப்பாடுகள் மற்றும் கருப்பொருள்களின் தொகுப்பு (N=26)

| கருப்பொருள் (themes) | வகைப்பாடுகள் (categories ) | வகைப்பாடுகளின் வரையறைகள் (definition of categories ) |
|---|---|---|
| 1. தனியாள் உள்ளார்ந்த புலக்காட்சிகளும் மனப்பாங்குகளும் | 1. உறவுத் தொடர்புகளின் கையாளுகை<br>2. சூழ்நிலைகளுக் இயைவுபடுதல்<br>3. சுயதிறன்கள் | தொழிற் சவால்களுக்கு மத்தியில் தனியாள் சமூக உறவுகளைப் பேணமுடியாமை<br>தொழில்சார் நெருக்கீடுகளுக்கு இயைபாக்கமடையாமை<br>தொழிற் சூழலுக்கமைந்த அறிகை, இயக்க, மனவெழுச்சிப் புலக்காட்சிகளை உருவாக்க முடியாமை. |
| 2. தொழில் வாண்மைத்துவ சுயஎண்ணக்கருவும் வாண்மைத்துவ உறவு வட்டமும் | 1. வாண்மைத்துவ அங்கீகாரம்<br>2. சுய நிறைவு<br>3. தொழில்சார் சமூகத் தராதரம் | பாடசாலை உள்ளக, வெளியக சமூகங்களால் நடன ஆசிரியர்களுக்குரிய வகிபாகத்திற்கு மதிப்பும் அங்கீகாரமும் வழங்கப்படாமை.<br>தொழில்சார் திருப்தியினால் சுயநிறைவு ஏற்படாமை<br>சமூகத்தில் ஏனைய தொழில் மட்டங்களில் உள்ளவர்களுடன் ஒப்பிடுகையில் உணரக்கூடிய தரநிலைக் குறைவு |

அட்டவணை2: பாடசாலைச் சூழமைவுப் பண்புகள் பரிமாணத்தில் வகைப்பாடுகள் மற்றும் கருப்பொருள்களின் தொகுப்பு (N=26)

| கருப்பொருள் (themes) | வகைப்பாடுகள் (categories ) | வகைப்பாடுகளின் வரையறைகள் (definition of categories ) |
|---|---|---|
| பாடசாலையின் ஒழுங்கமைப்பு முறைமை | 1. பாடசாலையின் நிகழ்சித் திட்டங்கள் | பாடசாலையின் நிகச்ழ்சித் திட்டங்களுக்கும் அவற்றை நிறைவேற்றுவதற்கான நேர, வள பயன்பாட்டிற்கும் இணக்கமின்மையிருப்பதாக உணர்தல் |
| | 2. ஆசிரியர் வேலைப் பளு | நேரத்திற்குள் பூர்த்திசெய்ய முடியாதளவுக்கு வேலைப்பொறுப்புகள் வழங்கப்படல் |
| | 3. பாடசாலையின் அதிகாரப் படிவரிசை | வலுவிழப்பையும் சோர்வையும் உணரக்கூடிய வகையில் பதவிப் படிநிலைக் கட்டமைப்பு அதிகமாக இருத்தல் |
| | 4. ஆசிரியர் கண்காணிப்பும் கற்பித்தல் மதிப்பீடும் | உள்வாரி, வெளிவாரி மதிப்பீடுகளால் ஏற்படும் அழுத்தங்கள் |
| பாடசாலையின் சூழமைவின் பண்புகள் | 1. நேர அட்டவணைகளின் அமுலாக்கம் | நேர ஒதுக்கீடு, அமுலாக்கத்தால் நெருக்கீடுகளை எதிர்கொள்ளல் |
| | 2. கற்பித்தலுக்குப் புறம்பான பணிகள் | கற்பித்தலுக்குப் புறம்பான கடமைகள் வழங்கப்படுதல் |
| | 3. பாடசாலையின் வள வசதிகள் | பௌதிக, நிதி மற்றும் மனித வளங்கள் போதாமை |
| பாடசாலைச் சூழமைவில் உணரப்படும் உறவுகள் | 1. நீதியற்ற ஒழுங்கமைப்பு | அநீதியாக நடத்தப்படுவதாக உணர்தல் |
| | 2. சகபாடிகளுடன் எதிர்மறையான உறவு | சகபாடி நல்லுறவை ஏற்படுத்த முடியாமை |
| | 3. அதிபருடன் எதிர்மறையான உறவு | அதிபருடன் நல்லுறவை ஏற்படுத்த முடியாமை |
| செயலாற்றுகையில் வரையறைகளை உணர்தல் | 1. விசேட நிகழ்ச்சிகள் | விசேட தயாரிப்புக்களை செய்யமுடியாமை |
| | 2. சுதந்திரமின்மை | சுய தீர்மானங்களை எடுக்கமுடியாமை |
| | 3. புறக்கணிப்பு | தயாரிப்புக்களுக்கு நிதி, நேரம் என்பவற்றை வழங்குவதில் முன்னுரிமை காட்டாமை |

அட்டவணை 3: வகுப்பறை, மாணவர் தரப்பு பண்புகள் பரிமாணத்தில் வகைப்பாடுகள் மற்றும் கருப்பொருள்களின் தொகுப்பு (N=26)

| கருப்பொருள் (themes) | வகைப்பாடுகள் (categories ) | வகைப்பாடுகளின் வரையறைகள் (definition of categories ) |
|---|---|---|
| வகுப்பறைச் சூழமைவும் மாணவர் பண்புகளும் | 1. நடத்தைகள்<br>2. வுகுப்பறை முகாமை<br>3. குறுக்கீடுகள்<br>4. வகுப்பறைக் கவின்நிலை | மாணவர் கீழ்ப்படிவின்மையும், ஒழுக்கக் குறைவும்<br>வகுப்பறை முகாமைக்கான தடைகள்<br>தலையீடுகளால் விரயமாகும் கற்றலிற்கான நேரம்<br>ஆசிரியர் மாணவர் நல்லுறவுக்கூடாக<br>கல்விநிலையை ஏற்படுத்தமுடியாமை |
| மாணவரின் தனியாள் குடும்பப் பண்புகள் | 1. குடும்பக் கட்டமைப்பு<br>2. மாணவர்முன்னேற்றம்<br>3. மாணவர் ஆர்வம் | குடும்பக் கட்டமைவும் பொருளாதார பலவீனங்களும்<br>மாணவர் கல்வி முன்னேற்றமின்மை<br>மாணவர் ஊக்கம் மற்றும் கவனம் போதாமை |
| பெற்றார் பண்புகள் | 1. பெற்றார் ஆதரவு<br>2. தலையீடுகள்<br>3. ஈடுபாடு | ஆசிரியர் பெற்றோர் உறவுக் குறைவு<br>ஆசிரியர், அதிபர்மீது பெற்றோரின் செல்வாக்கு<br>மாணவர் பங்குபற்றலில் பெற்றோரின் அர்ப்பணிப்புக் குறைவு |
| மாணவர் சமூகப் பண்புகள் | 1. விழுமியங்கள்<br>2. கல்விபற்றிய தொலைநோக்கு | சமூகத்தில் ஒழுக்கமதிப்புக் குறைவு பற்றிய புலக்காட்சிகள்<br>பாடசாலை தொலைநோக்கிலிருந்து விலகுதலை உணர்தல் |

அட்டவணை 4: பரிமாணங்களின்படி கிடைக்கப்பெற்ற பதில்களின் வீதம்

| பரிமாணம் | மொத்த மாதிரி ஆசிரியர்கள் (n = 26) | 1AB பாடசாலை (n = 4) | 1C பாடசாலை (n = 5) | Type II பாடசாலை (n = 17) |
|---|---|---|---|---|
| | AF | AF | AF | AF |
| தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள் | 23.6% | 22.9% | 24.7% | 23.6% |
| பாடசாலைச் சூழமைவு | 39.1% | 33.6% | 34.3% | 41.6% |
| வகுப்பறை, மாணவர் தரப்புப் பண்புகள் | 37.3% | 43.5% | 41% | 34.8% |

பரிமாணங்களின் வெளிப்பாட்டுப் பிரதிநிதித்துவத்தைப் விளங்கிக்கொள்ள வகைப்பாடுகளின் மீடிறன் பகுப்பாய்வுகள் நடத்தப்பட்டன. ஒட்டுமொத்தமாக, பாடசாலைச் சூழமைவு பரிமாணம் ஆசிரியர்களால் (39.1%) அடிக்கடி குறிப்பிடப்பட்டது. அதைத் தொடர்ந்து வகுப்பறை மாணவர் தரப்புப் பண்புகள் (37.3%) மற்றும் ஆசிரியர்களின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள் (23.6%) என்ற அடிப்படையில் வகைப்பாடுகளின் எண்ணிக்கை காணப்பட்டது. வெவ்வேறு பாடசாலை வகைகளைக் கருத்தில்கொள்ளும்போது, வகுப்பறை, மாணவர் தரப்புப் பண்புகள் 1AB பாடசாலைகளில் (43.5%) ஆகவும் 1C பாடசாலைகளில் (41%) ஆகவும் Type II பாடசாலைகளில் (34.8%) ஆகவும் உள்ளன.

**ஆசிரியரின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள்**

ஆசிரியரின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகளின் பரிமாணத்தில் தனியாள் உள்ளார்ந்த புலக்காட்சிகளும் மனப்பாங்குகளும் மிக அடிக்கடி குறிப்பிடப்பட்டன. பங்கேற்பாளர்கள் தங்கள் மனவெழுச்சி எல்லைகளுக்கு நெருக்கமாகச் சென்றிருப்பதை உணர்ந்தனர் பங்-04: "நான் சண்டையிடுவேன். எல்லாருடனும்'', ''எண்ணங்கள் என் மூளையில் மங்கிப் போய்விட்டன. முன்னைய ஆற்றல் இப்போதில்லை''. இப்பதில்கள் ஆசிரியர்கள் தங்கள் தொழிற்சவால்களுடன் தமது வெவ்வேறு வாழ்க்கைப் பாத்திரங்களை இணைப்பது எவ்வளவு கடினம் என்பதைக் காட்டுகிறது. பங்-01: "பயிற்சிகள் எப்போதும் பாடசாலை நேரத்திற்கு வெளியே மட்டுமே அனுமதிக்கப்படும். ஆனால், ஆசிரியருக்கும் ஒரு குடும்பம் உள்ளது." 1C பாடசாலை ஆசிரியர்களுக்குச் சூழ்நிலைகளுக் இயைவுபடுதல் தொடர்பான நெருக்கீட்டு உணர்வுகள் உள்ளன.

சூழ்நிலைகளுக்கு இயைவுபடுதல் வழிமுறைகள் குறிப்பிட்டளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றியது. பங்-05: "நான் மருந்து உட்கொள்வதால் அதைக் கையாளுகிறேன்!" தொழில்முறை அடையாளம் என்ற பிரிவில், அங்கீகாரமின்மை மற்றும் அந்தஸ்து இழப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க துணைப்பிரிவுகளாக இருந்தன. இந்தத் துணைப்பிரிவுகள் முதல் பார்வையில் ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், அங்கீகாரத்தின் அர்த்தத்தை ஆசிரியர்கள் கௌரவத்துடன் இணைத்தனர். பங் - 02: "வகுப்பறையில் ஓர் ஆசிரியராக நான் செய்யும் வேலை ஆர்வமாக இல்லை, அது அங்கீகரிக்கப்படவில்லை அல்லது மதிக்கப்படவில்லை!" இதனால் "நான் என்னை ஒரு மலிவான தொழிலாளியாகக் கருதுகிறேன்!"

**பாடசாலைச் சூழமைவுப் பண்புகள்**

பாடசாலைச் சூழமைவுப் பண்புகள் மிகவும் அதிகமாக அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்ட பரிமாணமாக இருந்தது. குறிப்பாக, பாடசாலையின் அதிகாரப் படிவரிசை மற்றும் ஒட்டுமொத்த அதிகாரத்துவ துணைப்பிரிவுகள், நீதியற்ற ஒழுங்கமைப்புகள் அதிகாரத்துவத்தின் மீதான விரக்தியை ஏற்படுத்துகின்றன. இது அதிகாரப் படிவரிசையின் அளவால் மட்டுமல்ல, அதன் பயன்படாத தன்மையின் உணர்வாலும் வெளிப்படுத்தப்படுகிறது. பங்குபற்றுநர்-05: "நாம் எப்போதும் செயற்பாடுகளை அறிக்கையிடும் ஆவணங்களை வைத்துக்கொண்டிருக்க வேண்டும்! முன்பைவிட இப்போதெல்லாம் எங்களின்மீது அதிக அதிகாரம் மேலதிகாரிகள் எல்லோராலும் பயன்படுத்தப்படுகிறது. அது எந்த நோக்கத்திற்கும் உதவாது!''. .இதேபோல், ஆசிரியர் கண்காணிப்பும் கற்பித்தல் மதிப்பீடும் எதிர்மறையான தாக்கத்தை உருவாக்குகிறது. நேர அட்டவணைகளின் அமுலாக்கம் நடன பாட ஆசிரியர்களின் செயற்பாடுகள் புறக்கணிக்கப்படுவதற்கு ஏற்றவாறு இடம்பெறுகிறது. பங்குபற்றுநர்-19: "நாங்கள் ஆண்டைத் தொடங்கி மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை வழங்குகிறோம். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்த எமக்கு நேரம் போதவில்லை. ஏனைய நிகழ்வுகளுக்காக எமது பாடவேளைகளே பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இது முதல் தடவையல்ல!"

சக ஆசிரியர்களுடன் எதிர்மறையான உறவு ஆதரவற்ற நிலையைத் தோற்றுவிக்கிறது. பங்குபற்றுநர்-12: ‘‘இந்த ஆண்டு நாங்கள் இப்பாடசாலையில் இருக்கிறோம். அடுத்த ஆண்டு நாங்கள் வேறு பாடசாலையில் இருப்போம். நாம் ஒரு புதிய பாடசாலைக்கு இடம்மாறி, புதிய சூழல் மற்றும் சகாக்களுடன் பழகுவதற்குள் இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிடும்!” நடனத் தயாரிப்புக்களுக்கு நிதி, நேரம் என்பவற்றை வழங்குவதில் பாடசாலைகளின் முகாமைத்துவம் முன்னுரிமை காட்டாமை மிகவும் பரவலாக இருந்த முறைப்பாடாகும்.

**வகுப்பறை, மாணவர் தரப்பு மாறிகள்**

வகுப்பறையையும் மாணவர்களின் சீர்குலைவான நடத்தையையும் அவற்றை நிர்வகிப்பதற்கான ஆசிரியர்களின் உத்திகள் வலுவற்றதாக தோன்றுவதால் ஆசிரியர்கள் அதிக நெருக்கீடுகளை அடிக்கடி எதிர்கொள்கின்றனர். இந்த இரண்டு துணைப்பிரிவுகளும் நெருக்கமாகத் தொடர்புடையவை. பங்குபற்றுநர்-02 ‘‘நான் வகுப்பறையிலிருந்து தண்டனை வெளியேற்றங்களைச் செய்கிறேன்”, ‘‘அனைவரும் அக்கறையோடு இருந்திருந்தால் ஒழுக்கமின்மையைக் குறைக்க முடியும்.’’ ஆசிரியரைப் பாதுகாக்கப் பாடசாலையில் போதுமான ஆதரவு இல்லை. வகுப்பறைக்குள் நடப்பவற்றைக்கூட சில வேளைகளில் தண்டிக்கும் அதிகாரம் என்னிடம் இல்லை. பங்குபற்றுநர்-12 ‘‘எனக்குள் பயம் இருப்பதை நான் நன்றாக உணர்கிறேன்’’. பங்-16 ‘‘நான் எனது பாடசாலை வகுப்பறைக் கட்டுப்பாடு தொடர்பாக பிரச்சினைகள் வரும்போது என்னைப் பாதுகாக்கமாட்டாது என்பதை உணர்கிறேன்’’. பங்குபற்றுனர்-24 ‘‘பல மாணவர்களின் பிரச்சினைகளின் பின்னணி வகுப்பறைக்கு அப்பாற்பட்டது என் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது! பங்குபற்றுநர்- 14 ‘‘மாணவர்கள் தங்களால் எதையும் செய்ய முடியும் என்று கருதுகிறார்கள். நாங்கள் இதைப் பற்றி எதுவும் செய்ய முடியாது!”

மாணவர்களின் ஆர்வமின்மை ஆசிரியர்களால் அதிகம் குறிப்பிடப்பட்ட துணைப்பிரிவாகும். பங்குபற்றுநர்-05: ‘‘மாணவர்களின் ஆர்வம் வேறு விடயங்களில் உள்ளது!” பெற்றோருடனான தொடர்பு எதிர்மறையாகத் தோன்றினாலும், ஆசிரியர்கள் மீதுள்ள அழுத்தத்தை ஆசிரியர்கள் பெற்றோர்கள் இருவரும் நேரடியாக உணர்கிறார்கள். ஆயினும், பெற்றோர் ஆதரவு போதாதுள்ளதாக அதிக புலக்காட்சிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பங்குபற்றுநர்-03, 14: ‘‘பெற்றோர்கள் பொறுப்பேற்காத வரை அந்த வேலையை நாங்கள் இங்கே வகுப்பறையில் செய்ய முடியாது. அது சாத்தியமற்றது!”

இந்த ஆய்வில் அடையாளம் காணப்பட்ட ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வைத் தோற்றுவிக்கும் மாறிகளான ஆசிரிய தொழில் வாழ்க்கைச் சமநிலை பேணுதல், ஆசிரிய வகிபாகங்கள், பாடசாலை முகாமைத்துவத்தின் பாங்குகள், மேலதிக நேரக் கற்பித்தல் செயற்பாடுகளால் ஏற்படும் நெருக்கீடுகள், சக ஆசிரியர்களின் ஆதரவின்மை, மாணவர் நடத்தையால் எதிர்கொள்ளும் சவால்கள், வள வசதிகள் போதாமை, அங்கீகாரமின்மை பற்றிய புலக்காட்சிகள் பிரதான பொதுக் கருப்பொருட்களாக வெளிப்பட்டன. இவை ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வை ஏற்படுத்தும் காரணிகளாக முந்தைய ஆய்வுகளிலும் உறுதிப்படுத்துகின்றன (Rajendran & Watt, 2020).

## முடிவுகளும் விதப்புரையும்

இந்த ஆய்வு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்பிக்கும் பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வு பற்றிய தகவல்களை வழங்குகிறது. யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் பரத நாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தொழில் திருப்தி நிலை குறைந்த மட்டத்திலுள்ளது. பரத நாட்டிய ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வு அவதானிக்கக்கூடிய உயர்வான மட்டத்தில் உள்ளது. ஆய்வின் முடிவுகள் ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. கருப்பொருட் பகுப்பாய்வு வெளியீடுகள் இவற்றை மூன்று பிரதான பரிமாணங்களில் அடையாளங்காண உதவுகின்றன. அவை ஆசிரியரின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள், பாடசாலைச் சூழமைவுப் பண்புகள், மற்றும் வகுப்பறை, மாணவர் தரப்புப் பண்புகள் என்பனவாகும். இவற்றின் எதிர்மறை இயங்குநிலைகளே ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வைத் தோற்றுவிக்கும் காரணங்களாக அமைகின்றன. ஒவ்வொரு பரிமாணத்திலும் பல பண்பு வகைப்பாடுகள் அடையாளங்காணப்பட்டன.

இவற்றுள் ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வைத் தோற்றுவிக்கும் வீரியம்மிக்க காரணங்களாக பாடசாலைச் சூழமைவுப் பண்புகள் பரிமாணத்தின் கூறுகள் அமைகின்றன. ஆசிரியர் தொழில் வாழ்க்கைச் சமநிலை பேணுதலில் காணப்படும் சவால்கள், ஆசிரியர்களிடம் வழங்கப்படும் பன்முகப்பட்ட கடமைக் கூறுகள், பாடசாலை முகாமைத்துவத்தின் எதிரமறையான பாங்குகள், மேலதிக நேக் ரகற்பித்தல் செயற்பாடுகளால் ஏற்படும் நெருக்கீடுகள், சக ஆசிரியர்களின் ஆதரவின்மை, மாணவர் நடத்தையால் எதிர்கொள்ளும் சவால்கள், பாடசாலைகளின் வள வசதிகள் போதாமை, முகாமைத்துவ மட்டத்திலும் சக ஆசிரியர்களிடையேயும் அடைவுச் சாதனைகளுக்கான அங்கீகாரமின்மை என்பன பாடசாலைச் சூழமைவுப் பரிமாணத்திலிருந்து அதிக தொழிலசார் மன அழுத்தத்தை வழங்குகின்றன. பாடசாலைச் சூழமைவுசார்நத காரணிகளே முதன்மையான தொழிற் தீய்வுத் தூண்டியாக உள்ளன.

ஆசிரியரின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகளின் காரணமாகவும் ஆசிரியர்கள் தொழில்சார் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். தொழிற் சவால்களுக்கு மத்தியில் தனியாள் சமூக உறவுகளைப் பேணமுடியாமை பெரும்பாலான ஆசிரியர்களால் உணரப்பட்டுள்ளது. தொழில்சார் நெருக்கீடுகளுக்கு இயைபாக்கமடையாமையை ஆசிரியர்கள் தமது தொழில் திருப்தியின்மைக்கான பிரதானமான காரணமாகக் கருதுகின்றனர். தொழிற் சூழலுக்கமைந்த ஆறிகை, இயக்க, மனவெழுச்சிப் புலக்காட்சிகளை உருவாக்ககூடிய வகையில் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவில்லை.

மாணவர் தரப்பு மாறிகள் ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வை ஏற்படுத்துகின்றன. மாணவர் கீழ்ப்படிவின்மையும் ஒழுக்ககுறைவும், வகுப்பறை முகாமைக்கான தடைகள், தலையீடுகளால் விரயமாகும் கற்றலிற்கான நேரம், ஆசிரியர் மாணவர் நல்லுறவுக்கூடாக கவிநிலையை ஏற்படுத்தமுடியாமை என்பன ஆசிரியர்களால் அடிக்கடி எதிர்கொள்ளப்படும் சவால்களாக உள்ளன. மாணவர்களின் குடும்பக் கட்டமைவும் பொருளாதார பலவீனங்களும் அவர்களது ஈடுபாட்டைப் பாதிக்கின்றன. இதனால் மாணவர் கல்வி

முன்னேற்றமின்மை, மாணவர் ஊக்கம் மற்றும் கவனம் போதாமை போன்ற எதிர்விளைவுகளை ஆசிரியர்கள் சந்திக்க வேண்டியுள்ளது.

இந்த ஆய்வின் முடிவுகள் கற்பித்தல் தொழிலில் தீய்வு பற்றிய புரிதலுக்குப் பங்களிக்கின்றன. அவற்றை ஆசிரியர்களின் தனிப்பட்ட அனுபவத்தைப் பிரதிபலிக்கும் ஒரு தோற்றப்பாட்டியல் ஆய்வினூடாக அடையாளங்காணக்கூடியதாக உள்ளது. ஆய்வின் கண்டறிதல்களின் அடிப்படையில் சில விதப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன.

பரத நாட்டிய ஆசிரியர்களில் தொழில் வாண்மைத் தீய்வை ஏற்படுத்தும் பிரதான காரணிகள் பாடசாலைச் சூழமைவுடன் தொடர்புபட்டவையாக உள்ளன. எனவே, பாடசாலை மட்டத்தில் இவை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவது பரத நாட்டிய ஆசிரியர்களின் தொழில் வாண்மைத் தீய்வைக் குறைப்பதுடன் ஆசிரியர்களின் தொழிற் திருப்தியை மேம்படுத்தும். அதன் மூலமாக ஆசிரியர்களின் சுமுகமான ஒத்துழைப்பினைப் பாடசாலை அதிபர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


Aronsson, G., Theorell, T., Grape, T., Hammarström, A., Hogstedt, C., Marteinsdottir, I., Skoog, I., Träskman-Bendz, L., & Hall, C. (2017). A systematic review including meta-analysis of work environment and burnout symptoms. BMC Public Health, 17(1). https://doi.org/10.1186/s12889-017-4153-7

Arvidsson, I., Leo, U., Larsson, A., Håkansson, C., Persson, R., & Björk, J. (2019). Burnout among school teachers: quantitative and qualitative results from a follow-up study in southern Sweden. BMC Public Health, 19(1). https://doi.org/10.1186/s12889-019-6972-1

Fiorilli, C., Albanese, O., Gabola, P. and Pepe, A. (2016) Teachers Emotional Competence and Social Support Assessing the Mediating Role of Teacher Burnout. Scandinavian Journal of Educational Research, 61, 127-138. - References - Scientific Research Publishing. (n.d.). https://www.scirp.org/reference/referencespapers?referenceid=3897899

Demerouti, E., Bakker, A. B., Nachreiner, F., & Schaufeli, W. B. (2001). The job demands-resources model of burnout. The Journal of applied psychology, 86(3), 499–512.

Marqués Pinto, A., Lima, M. L., & Lopes Da Silva, A. (2005). Fuentes de estrés, burnout y estrategias de coping en profesores portugueses [Article]. Revista De Psicología Del Trabajo Y De Las Organizaciones, 21–21(1–2), 125–143.

https://www.redalyc.org/pdf/2313/231317039008.pdf

Maslach, C., & Jackson, S. E. (1986). Maslach burnout inventory manual (2nd ed.). Palo Alto, CA Consulting Psychologists Press. - References - Scientific Research Publishing. (n.d.). https://www.scirp.org/reference/referencespapers?referenceid=757447

Maslach, C., & Leiter, M. P. (2017). New Insights into Burnout and Health Care Strategies for Improving Civility and Alleviating Burnout. Medical Teacher, 39, 160-163. - References - Scientific Research Publishing. (n.d.).

https://www.scirp.org/reference/referencespapers?referenceid=3326538

Maslach, C., & Leiter, M. (2015, January 1). It's time to take action on burnout. Figshare. https://dro.deakin.edu.au/articles/journal_contribution/It_s_time_to_take_action_on_burnout/20869444

Maslach, C., Schaufeli, W. B., & Leiter, M. P. (2001). Job Burnout. Annual Review of Psychology, 52, 397-422. - References - Scientific Research Publishing. (n.d.). https://www.scirp.org/reference/referencespapers?referenceid=2039200

Mota, A. I., Lopes, J., & Oliveira, C. (2021). Burnout in Portuguese teachers: a systematic review. European Journal of Educational Research, volume–10–2021(volume–10–issue–2–april–2021), 693–703. https://doi.org/10.12973/eu-jer.10.2.693

Pietarinen, J., Pyhlt, K., Soini, T. and Salmela-Aro, K. (2013) Reducing Teacher Burnout A Socio-Contextual Approach. Teaching and Teacher Education, 35, 62-72. - References - Scientific Research Publishing. (n.d.).

https://www.scirp.org/reference/referencespapers?referenceid=3985508

Pyhlt, K., Pietarinen, J., & Salmela-Aro, K. (2011). Teacher-working environment fit as a framework for burnout experienced by Finnish teachers. Teaching and Teacher Education, 27, 1101-1111. doi10.1016/j.tate.2011.05.006 - References - Scientific Research Publishing. (n.d.). https://www.scirp.org/reference/referencespapers?referenceid=691646

Rajendran, N., Watt, H. M. G., & Richardson, P. W. (n.d.). Teacher burnout and turnover intent. https://eric.ed.gov/?id=EJ1256765

Skaalvik, E.M. and Skaalvik, S. (2020) Teacher Burnout Relations between Dimensions of Burnout, Perceived School Context, Job Satisfaction and Motivation for Teaching. A Longitudinal Study. Teachers and Teaching, 26, 602-616. - References - Scientific Research Publishing. (n.d.). https://www.scirp.org/reference/referencespapers?referenceid=3545438

Steiner, E. D., Doan, S., Woo, A., Gittens, A. D., Lawrence, R. A., Berdie, L., Wolfe, R. L., Greer, L., & Schwartz, H. L. (2022, June 14). Restoring Teacher and Principal Well-Being Is an Essential Step for Rebuilding Schools: Findings from the State of the American Teacher and State of the American Principal Surveys. RAND.

https://www.rand.org/pubs/research_reports/RRA1108-4.html

Sterling, P. (2011). Allostasis: A model of predictive regulation. *Physiology & Behavior*, *106*(1), 5–15. https://doi.org/10.1016/j.physbeh.2011.06.004

Stoeber, J., & Rennert, D. (2008). Perfectionism in School Teachers Relations with Stress Appraisals, Coping Styles, and Burnout. Anxiety, Stress & Coping, 21, 37-53. - References - Scientific Research Publishing. (n.d.).

https://www.scirp.org/reference/referencespapers?referenceid=1850048

# கல்குடா கல்வி வலய 1AB பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள்

Shanmugam Jeyanthiny [1], Rajendran Thakshaayini [2]

Department of Education and Childcare [1,2]

Faculty of Arts and culture [1,2]

Eastern University, Sri Lanka [1,2]

vithujeyanthi4@gmail.com [1]

thakshaayinir@esn.ac.lk [2]

## ஆய்வுச் சுருக்கம்

STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக பாடசாலைகளில் ஒன்றிணைந்த கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களது திறன்களை வளர்ச்சியடையச் செய்வதில் அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்வி வலயத்திலுள்ள 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களையும் அவற்றைத் தீர்ப்பதற்காக பாடசாலைகள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளையும் கண்டறியும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக கல்குடா கல்வி வலயத்தில் காணப்படும் 09 1AB பாடசாலைகளுள் க.பொ.த. உயர்தரத்தில் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய 06 பாடசாலைகள் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதற்கமைய தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் 06 அதிபர்களும், உயர்தரத்திற்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் 129 பேரும் ஆண் - பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, 50 சதவீத அடிப்படையில் எளிய இலகு எழுமாற்று முறையில் 68 ஆசிரியர்களும், க.பொ.த. உயர்தர மாணவர்கள் 1262 பேரும் ஆண் - பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, 10 சதவீத அடிப்படையில் எளிய இலகு எழுமாற்று முறையில் 132 மாணவர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளரும் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்விற்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வினாக்கொத்துப் பயன்படுத்தப்பட்டது. அதேவேளை பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு நேர்காணல் முறையும் பயன்படுத்தப்பட்டது. பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் SPSS மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு இடை கணிக்கப்பட்டதுடன் பெறப்பட்ட முடிவுகள் Microsoft Excel மூலம் அட்டவணைகள் மற்றும் சலாகை வரைபுகளினூடாக விபரணப்படுத்தப்பட்டு இலக்கிய மீளாய்வுகளுடன் தொடர்புபடுத்தி வியாக்கியானம் செய்யப்பட்டு முடிவுகளும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டத்திற்கமைய கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவது குறைவாகவே காணப்படுகிறது. STEAM கல்வித் திட்டம் தொடர்பாக ஆசிரியர்கள்,

அதிபர்களுக்குப் போதியளவு விளக்கமின்மை, STEAM கல்வித் திட்டத்திற்கமைய அதிபர், ஆசிரியர்களுக்குப் பயிற்சியின்மை போன்ற பிரச்சினைகள் இவ்வாய்வு முடிவுகளாகப் பெறப்பட்டுள்ளன. இதனடிப்படையில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான கருத்தரங்குகளைப் பாடசாலைகளில் மேற்கொள்ளல், ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ளத்தக்க வகையில் பயிற்சிகளை வழங்குதல் போன்றன விதப்புரைகளாக முன்மொழியப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள் :*** *STEAM கல்வித் திட்டம், ஒன்றிணைந்த கல்வி, தொழிநுட்பம்.*

**அறிமுகம்**

STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுப்படுத்துவதிலுள்ள சவால்கள் எனும் ஆய்வு தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வானது, மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டது. STEAM கல்வித் திட்டமானது எதிர்காலத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கான தீர்வினை வழங்கக்கூடிய ஓர் கல்வி முறையாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கல்வித் திட்டத்தின் விரிவாக்கம் S = Science, T = Technology, E = Engineering, A = Arts, M = Mathematics ஆகும். இது விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகியவற்றின் தனித்துவமான கலவையாகும். STEAM கல்வித் திட்டமானது 2023 மார்ச் 31 அன்று இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தினைக் கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து நடைமுறைப்படுத்துகின்றது (National Science Foundation, 2023).

தற்போது காணப்படும் கல்வித் திட்டங்கள் மாணவர்களுக்குத் திறன்களை வளர்ப்பதிலேயே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இதனால் மாணவர்களிடையே கலை மற்றும் மனித நேயத்திலும், ஏனைய பாடங்களிலும் ஈடுபாடு குறைந்து வருகின்றது. இதன் காரணத்தால் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட STEM கல்வித் திட்டத்துடன் கலைத்துறையினை இணைத்து இலங்கையில் உள்ள 1AB பாடசாலைகளில் STEAM கல்வித்திட்டமானது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில், மேல் மாகாணத்தில் முதற்கட்டமாக இக்கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை உட்பட 96 உலக நாடுகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது (கல்வி அமைச்சு, 2023).

STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், இக்கல்வித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் தொடர்பாகவும், அதற்கான பரிந்துரைகள் பற்றியும் முன்மொழிவதாக இந்த ஆய்வு அமைகின்றது.

**ஆய்வுப் பின்னணி**

ஆய்வாளனரால் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆய்வுப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படுவதன் பின்புலத்தில் சில காரணங்கள் காணப்படுகின்றன. அதாவது, கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட 1AB பாடசாலைகளில் உயர்தரத்தில் STEAM கல்வித் திட்டத்தினுள் உள்ளடங்கும் பாடங்களை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைகள் 06 காணப்படுகின்றன. குறித்த பாடசாலைகளில் 2024 ஆம் ஆண்டு 2025 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம், உயிர்முறைத் தொழிநுட்பம், பொறியியல் தொழிநுட்பம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளைத் தெரிவுசெய்துள்ளனர்.

STEAM கல்வித் திட்டமானது பாடங்களை ஒருங்கிணைப்பதனை முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால், குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் STEAM கல்வித் திட்டத்தினுள் உள்ளடங்கும் பாடங்களை மாணவர்கள் தெரிவுசெய்வதில் பாரியளவிலான வேறுபாடு காணப்படுகின்றது. இது ஆய்வாளரின் ஆய்வுப் பிரச்சினைக்குப் பின்புலமாக அமைகின்றது. மேலும், குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் STEAM கல்வித் திட்டத்தினுள் காணப்படும் பாடங்களை மாணவர்கள் வேறுபட்ட வகையில் தெரிவுசெய்கின்றனர். அதில் கூடுதலாக கலைத்துறையினையே தெரிவுசெய்துள்ளனர். இதுவே ஆய்வாளர் குறித்த ஆய்வினை மேற்கொள்ளப் பின்புலமாக உள்ளது.

உரு 1.1: 2024 & 2025 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தர மாணவர்களின் பாடத்துறைத் தெரிவு




(மூலம் : திட்டமிடல் பிரிவு, கல்குடா கல்வி வலயம், 2024)

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள IAB படசாலைகளில் STEAM கல்வித் திட்டத்தினுள் உள்ளடங்கும் பாடங்களுக்கமைய 2023 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தர மாணவர்களில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர்கள் குறைவாகவே உள்ளனர். மேற்படி விடயங்கள் ஆய்வாளனின் ஆய்வுப் பிரச்சினையின் பின்புலமாக காணப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஆய்வு பிரதேசத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் STEAM கல்வித்திட்ட நடைமுறை தொடர்பான விடயமானது, அண்மைக் காலத்தில் (2023ஆம் ஆண்டு) அறிமுகம் செய்யப்பட்டதோர் திட்டமாகக் காணப்படுகின்றது. மேலும், குறித்த திட்டம் தொடர்பான போதிய விளக்கம் அதிபர், ஆசிரியர்களுக்கு இல்லை. இதுவே இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சவாலாக காணப்படுகின்றது. STEAM கல்வித் திட்டத்தினுள் உள்ளடங்கும் பாடங்கள் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. குறித்த பாடங்களில் சித்தியடையும் வீதமும் குறைவாகவே காணப்படுகின்றது.

உரு 1.2: 2023 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரத்தில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர்கள்




(மூலம் : திட்டமிடல் பிரிவு, கல்குடா கல்வி வலயம், 2023)

STEM கல்வித் திட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும், அதில் குறைபாடுகள் காணப்படுகின்றன. குறித்த துறையில் பாடங்களைத் தெரிவுசெய்யும் விகிதமும் குறைவாகவே காணப்படுகின்றது. அதிகமான மாணவர்கள் கலைப் பிரிவையே தெரிவுசெய்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழகம் செல்லும் வீதத்திலும் கலைப் பிரிவில் செல்லும் வீதமே அதிகமாக காணப்படுகின்றது. 99,353 மாணவர்களில் 64,333 மாணவர்கள் கலைப் பிரிவில் பல்கலைக்கழகம் செல்கின்றார்கள் (Annual School Census of Sri Lanka summary Report, 2022).

அத்துடன் இத்துறைகள் தொடர்பாகவும் அவற்றினூடாகப் பெறக்கூடிய திறன்கள் தொடர்பாகவும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அறிந்துகொள்ளாமையே இத்திட்டத்தினை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தி ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. STEAM கல்வித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் மேற்படி பிரச்சினைகள் ஆய்வாளரின் ஆய்வுப் பிரச்சினைக் கூற்றுக்கான ஆதாரங்களாகவும் அமையப்பெறுகின்றன.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

கல்குடா கல்வி வலய IAB பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுத்து ஒன்றிணைந்த கல்வினூடாக உயர்தர மாணவர்களின் அடைவினை அதிகரிப்பதில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**ஆய்வு நோக்கம்**

**பொது நோக்கம்**

STEAM கல்வித் திட்ட நடைமுறைகளையும் அதனை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைத்தல் இந்த ஆய்வின் பொது நோக்கமாகும்.

**சிறப்பு நோக்கம்**

1. STEAM கல்வித் திட்ட நடைமுறைகள் எவ்வாறு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பகின்றன என்பதை இனம்கண்டுகொள்ளல்.
2. STEAM கல்வித் திட்ட நடைமுறை தொடர்பாக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெற்றுள்ள விளக்கத்தினைக் கண்டறிதல்.
3. STEAM கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்தல்.
4. STEAM கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளை முன்வைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

1. STEAM கல்வித் திட்ட நடைமுறைகள் எவ்வாறு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பகின்றன?
2. STEAM கல்வித் திட்ட நடைமுறை தொடர்பாக பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் நிலைப்பாடு யாது?
3. STEAM கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?
4. STEAM கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் யாவை?

**இலக்கிய மீளாய்வு**

Riley என்பவரால் 2020 ஆம் ஆண்டு What is STEAM education? A comprehensive guide for K-12 schools என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையில், STEAM கல்வி என்பது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகியவற்றை ஒன்றிணைத்து

மாணவர்களுக்கு நிஜ உலகப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கற்றுக்கொடுக்கும் கல்வி முறையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

STEM கல்வி முறையுடன் கலைத்துறையினை இணைத்து STEAM நடைமுறைச் சொற்கள் தொடர்பான கற்றல் முறைகளில் கவனம் செலுத்துகின்றது. STEAM கல்வித் திட்டமானது 2023 மார்ச் 31 அன்று இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது. இக்கல்வித் திட்டத்தின் விரிவாக்கம் S = Science, T = Technology, E = Engineering, A = Arts, M = Mathematics ஆகும். இது விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகியவற்றின் தனித்துவமான கலவையாகும். இத்திட்டத்தினைக் கல்வி அமைச்சு, தேசிய அறிவியல் அறக்கட்டளை மற்றும் தேசிய கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து நடைமுறைப்படுத்துகின்றது. பாடசாலைப் பாடத்திட்டத்தில் STEAM ஐ ஒன்றிணைப்பதன் முக்கியத்துவத்தைப் பின்பற்றக் கூடிய வகையில் இக்கல்வித் திட்டம் அமையப்பெற்றுள்ளது (National Science Foundation, 2023).

Steam.lk. 2024. STEAM Education | Largest STEAM Network in Sri Lanka என்பதில் இலங்கையில் உள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் STEAM கல்வி சிறந்த அனுபவத்தை வழங்க வேண்டும். ஒருங்கிணைந்த கல்வியை வழங்க STEAMஆல் முடியும். மாணவர்களை மையமாகக் கொண்ட STEAM அடிப்படையிலான கல்வியை ஊக்குவிப்பதன் மூலம், எதிர்கால சவால்களை நம்பிக்கையுடனும் படைப்பாற்றலுடனும் எதிர்கொள்ளக்கூடிய புதுமைமிக்கவர்களையும் மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் தலைமுறையையும் உருவாக்க முடியும் (https://steam.lk/).

An என்பவரால் 2020 ஆம் ஆண்டு The impact of STEAM integration on preservice teachers disposition and knowledge என்ற தலைப்பில் 462 மாணவர்களை மாதிரியாகக் கொண்டு Califormia State University, USA இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், STEAM ஒருங்கிணைப்பின் உற்பத்தித் தன்மை மீதான விளைவுகள் முடிவுகளாக சுட்டிக்காட்டுகின்றன. STEAM ஒருங்கிணைப்பின் மூலம் அர்த்தமுள்ள கற்றலில் ஆசிரியர்களின் மனநிலை மாறும். அவர்களின் கற்றல் மற்றும் STEAM பணிகளை மேம்படுத்தி ஆசிரியர்களைப் பாதுகாக்கும் என இந்த ஆய்வு மூலம் கூறப்படுகின்றது.

Rasika Karunarathne என்பவரால் 2022 ஆம் ஆண்டு STEM/STEAM Education in Sri Lanka General Education System என்ற தலைப்பில் 800 பேரை மாதிரியாகக் கொண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு STEAM பற்றிய விழிப்புணர்வு மற்றும் தொழில்முறைப் பயிற்சி ஆசிரியர்களிடையே இல்லாததை உறுதிப்படுத்தியது. தொழில்நுட்பம், தேவையான பௌதீக வளங்கள் மற்றும் கிடைக்கக்கூடிய பௌதீக வளங்கள் என்பன ஆசிரியர்களின் கற்பித்தலில் STEM/STEAM தாக்கம் செலுத்துகின்றன. பாலினம், கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிகள் மற்றும் ஒரு நேர்மறையான தொடர்பு கற்பித்தல் அனுபவம்

என்பனவும் தாக்கம் செலுத்துகின்றன. எனவே, பயிற்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், செயலாக்கங்களுக்கான வழிகாட்டுதல், அறிவு புதுப்பித்தல், ஆசிரியர்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் என்பன அவசியமாகும் எனக் கூறப்படுகின்றது.

Esty Setyo Utaminingsih, Ellianawati Ellianawati and Sri Sumartiningsih and Maria Ayu Puspita என்போரால் 2023 ஆம் ஆண்டு STEAM Education என்ற தலைப்பில் பல்வேறு ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு Indonesia இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் STEAM 21 ஆம் நூற்றாண்டில் வியக்க வைக்கும் புதுமைகளுக்கு வழிவகுத்தது. STEAM கல்வியில் Silo, Embedded மற்றும் Integration உட்பட மூன்று அணுகுமுறைகள் பயன்படுத்தப்படலாம். இதனூடாக STEAM ஒன்றிணைந்த கல்வியை வழங்குகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

Azizah Sarwi and Ellianawati என்போரால் 2020 ஆம் ஆண்டு Implementation of Project-Based Learning Model Using STEAM-Based Approach in Elementary Schools என்ற தலைப்பில் 80 பேரை மாதிரியாகக் கொண்டு Indonesia இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, கற்றல் நடவடிக்கைகளில் கலைக் கூறுகளைச் சேர்த்தலைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. அதற்கு STEAM முறையினூடாக ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

**குடித்தொகை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் கல்குடா கல்வி வலயமே ஆய்வாளரின் ஆய்வுப் பிரதேசமாகும். இக்கல்வி வலயம் மொத்தமாக 85 பாடசாலைகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் 09 1AB பாடசாலைகளும், 11 1C பாடசாலைகளும், 25 Type II பாடசாலைகளும், 40Type III பாடசாலைகளும் காணப்படுகின்றன. இப்பாடசாலைகளில் 1227 ஆசிரியர்களும், 24458 மாணவர்களும் காணப்படுகின்றனர் (கல்குடா கல்வி வலயம், திட்டமிடல் பிரிவு, 2024).

**மாதிரித் தெரிவு**

ஆய்விற்கான மாதிரி என்ற அடிப்படையில் STEAM கல்வித் திட்ட நடைமுறையில் உள்ள 1AB பாடசாலைகள் 06 உம் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அப்பாடசாலைகளின் அதிபர்கள் 06 பேரும் மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் கற்பித்தல் பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் 129 பேரும் பாடத் துறையின் அடிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு, ஆண் பெண் என்ற பால் நிலையின் அடிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு, இலகு எழுமாற்று மாதிரியின் ஊடாக 50 சதவீதத்தின் அடிப்படையில் 68 ஆசிரியர்கள் இறுதி மாதிரித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மாணவர்கள் 1262 பேரும் பாடத்துறையின் அடிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு, ஆண்

பெண் என்ற பால்நிலையின் அடிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு, இலகு எழுமாற்று மாதிரியின் ஊடாக 10 சதவீதத்தின் அடிப்படையில் 132 மாணவர்கள் இறுதி மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### தரவு சேகரிப்பு முறைகள்

அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டுத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. வினாக்கொத்தானது லைக்கட் (Likert) முறையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. அவ்வினாக்கொத்தில் மூடிய வினாக்கள் வழங்கப்பட்டிருந்தன. பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் நேர்காணல் மேற்கொள்வதற்காக நேர்காணல் படிமம் கட்டமைக்கப்பட்டுத் தரவுகள் திரட்டப்பட்டன.

### தரவுகளின் பகுப்பாய்வு

வினாக்கொத்தினூடாகப் பெறப்பட்ட பண்பு சார்ந்த தரவுகள் SPSS (Version 26) மென்பொருளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, எண் சார்ந்த தரவுகளாக மாற்றப்பட்டு, இடை கணிக்கப்பட்டு லைக்கேற்றின் அளவுத்திட்டத்தின் அடிப்படையில் முடிவுகள் கண்டறியப்பட்டன. இம்முடிவுகள் Microsoft Excel மென்பொருளைப் பயன்படுத்தி அட்டவணையாக்கம், சலாகை, வட்ட வரைபுகள் மூலமாக விளக்கப்பட்டுள்ளன.

## STEAM கல்வித் திட்ட நடைமுறைகள் எவ்வாறு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை இனம்கண்டு கொள்ளல்

### STEAM கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டமைக்கான நோக்கம் அடையப்படுகின்றமை தொடர்பாக அறிதல்

ஆய்வாளரால் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் STEAM கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டமைக்கான நோக்கம் அடையப்படுகின்றமை தொடர்பாக அறிதல் என்பதற்கு, அதிபர்களின் பதிலாக $\bar{X} = 2.83$ காணப்படுவதனால் அதிகமான அதிபர்கள் அதனை நடுநிலைமையாகப் கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி $(2.60 \leq \bar{X} \leq 3.39)$ இற்கு இடைப்பட்ட புள்ளியாகும். ஆசிரியர்களின் பதிலாக $\bar{X} = 3.03$ காணப்படுவதனால் அதிகமான ஆசிரியர்கள் அதனை நடுநிலைமையாகக் கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி $(2.60 \leq \bar{X} \leq 3.39)$ இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.3: STEAM கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டமைக்கான நோக்கம் அடையப்படுகின்றமை தொடர்பான விபரம்

உரு 1.3 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் STEAM கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டமைக்கான நோக்கம் அடையப்படுகின்றமை தொடர்பாக அறிதல் என்ற கூற்றிற்கு எதிர்க்கின்றேன் என 50 சதவீதமான அதிபர்களும் துலங்கலை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகையால், அதிபர்களின் துலங்கல் நடுநிலைமையாக உள்ளது. எதிர்க்கின்றேன் என 70.90 சதவீதமான ஆசிரியர்களும் துலங்கலை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே, STEAM கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டமைக்கான நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை என்ற முடிவிற்கு வர முடிகின்றது.

**STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியாமை தொடர்பாக அறிதல்**

ஆய்வாளனால் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட அதிபர்களிடம் STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியாமை தொடர்பாக அறிதல் என்பதற்கு அதிபர்களின் பதிலாக $\bar{X} = 4.17$ காணப்படுவதனால் அதிகமான அதிபர்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி $(3.40 \leq \bar{X} \leq 4.19)$ இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.4: STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியாமை தொடர்பான விபரம்

உரு 1.4 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியாமை தொடர்பாக அறிதல் என்ற கூற்றிற்கு ஏற்றுக்கொள்கின்றோம் என 83.30 சதவீதமான அதிபர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியவில்லை என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

**STEAM கல்வித் திட்ட நடைமுறை தொடர்பாக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெற்றுள்ள விளக்கத்தினை கண்டறிதல்**

- **பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றமை தொடர்பாக அறிதல்**

ஆய்வாளரால் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களிடம் பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுதல் தொடர்பாக அறிதல் என்பதற்கு மாணவர்களின் பதிலாக $\bar{X} = 2.54$ காணப்படுவதனால் அதிகமான மாணவர்கள் அதனை எதிர்க்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி $(1.80 \leq \bar{X} \leq 2.59)$ இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.5 : பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுதல் தொடர்பான விபரம்

உரு 1.5 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுதல் தொடர்பாக அறிதல் என்ற கூற்றிற்கு எதிர்க்கிறேன் என 48 சதவீதமான மாணவர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஏற்றுக்கொள்கிறேன் என 10.80 சதவீதமான மாணவர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே, பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுதல் என்பது குறைவாகவே உள்ளது என்ற முடிவிற்கே வரப்படுகின்றது.

நேர்காணலின்போது பிரதிக் கல்விப் பணிப்பாளரும் பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுவது குறைவாகவே உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

- **தற்காலத்தில் STEAM கல்வித் திட்டத்தின் அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகளின் அவசியப்பாடு தொடர்பாக அறிதல்.**

ஆய்வாளனால் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிடம் தற்காலத்தில் STEAM கல்வித் திட்டத்தின் அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகளின் அவசியப்பாடு தொடர்பாக அறிதல் என்பதற்கு ஆசிரியர்களின் பதிலாக $\bar{X}$ = 2.23 காணப்படுவதனால் அதிகமான மாணவர்கள் அதனை எதிர்க்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி ($1.80 \leq \bar{X} \leq 2.59$) இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.6 : தற்காலத்தில் STEAM கல்வித் திட்டத்தின் அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகளின் அவசியப்பாடு தொடர்பாக அறிதல்

உரு 1.6 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில், தற்காலத்தில் STEAM கல்வித் திட்டத்தின் அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகள் அவசியம் என்ற கூற்றிற்கு வலுவாக எதிர்க்கின்றேன் என 78 சதவீதமான ஆசிரியர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே, தற்காலத்தில் STEAM கல்வித் திட்டத்தின் அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகளின் அவசியப்பாடு தொடர்பாக ஆசிரியர்கள் அறிந்திருக்கவில்லை என்ற முடிவுக்கே வர முடிகின்றது.

**STEAM கல்வித் திட்டம் வெற்றி பெற நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்தல்**

- **ஒன்றிணைந்த கல்வியின் ஊடாக திறன் மேம்பாடுகளை ஏற்படுத்த காலம் போதாமை தொடர்பாக அறிதல்**

ஆய்வாளரால் ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களிடம் ஒன்றிணைந்த கல்வியின் ஊடாக திறன் மேம்பாடுகளை ஏற்படுத்த காலம் போதாமை தொடர்பாக அறிதல் என்பதற்கு ஆசிரியர்களின் பதிலாக $\bar{X} = 3.85$ காணப்படுவதனால் அதிகமான ஆசிரியர்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி $(3.40 \leq \bar{X} \leq 4.19)$ இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.7 : ஒன்றிணைந்த கல்வியின் ஊடாக திறன் மேம்பாடுகளை ஏற்படுத்த காலம் போதாமை தொடர்பான விபரம்

உரு 1.7 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒன்றிணைந்த கல்வியின் ஊடாக திறன் மேம்பாடுகளை ஏற்படுத்த காலம் போதாமை தொடர்பாக அறிதல் என்ற கூற்றிற்கு ஏற்றுக்கொள்கின்றோம் என 70 சதவீதமான ஆசிரியர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே ஒன்றிணைந்த கல்வியின் ஊடாக திறன் மேம்பாடுகளை ஏற்படுத்த காலம் போதவில்லை என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

- **ஒன்றிணைந்த கல்வி தொடர்பான அச்சிடப்பட்ட ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாமை தொடர்பாக அறிதல்**

ஆய்வாளரால் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட அதிபர்களிடம் ஒன்றிணைந்த கல்வி தொடர்பான அச்சிடப்பட்ட ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாமை தொடர்பாக அறிதல் என்பதற்கு அதிபர்களின் பதிலாக $\bar{X}$ = 4.50 காணப்படுவதனால் அதிகமான அதிபர்கள் அதனை வலுவாக ஏற்றுக்கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி (4.20 ≤ $\bar{X}$ ≤ 5.00) இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.8 : ஒன்றிணைந்த கல்வி தொடர்பான அச்சிடப்பட்ட ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாமை தொடர்பான விபரம்

உரு 1.8 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒன்றிணைந்த கல்வி தொடர்பான அச்சிடப்பட்ட ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாமை என்ற கூற்றிற்கு ஏற்றுக்கொள்கின்றோம் என 100 சதவீதமான அதிபர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே, ஒன்றிணைந்த கல்வி தொடர்பான அச்சிடப்பட்ட ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

**STEAM கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை முன்வைத்தல்.**

- **தனியார் நிறுவனங்கள் மற்றும் நிபுணத்துவ குழுக்களுடன் இணைந்து நவீன கல்வி திட்டங்கள் தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை மேற்கொள்ளல் தொடர்பாக அறிதல்.**

ஆய்வாளரால் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட அதிபர்களிடம் தனியார் நிறுவனங்கள் மற்றும் நிபுணத்துவ குழுக்களுடன் இணைந்து நவீன கல்வி திட்டங்கள் தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை மேற்கொள்ளல் தொடர்பாக அறிதல் என்பதற்கு அதிபர்களின் பதிலாக $\bar{X}$ = 4.50 காணப்படுவதனால் அதிகமான அதிபர்கள் அதனை வலுவாக

ஏற்றுக்கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி ($4.20 \leq \bar{X} \leq 5.00$) இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.9 : தனியார் நிறுவனங்கள் மற்றும் நிபுணத்துவ குழுக்களுடன் இணைந்து நவீன கல்வி திட்டங்கள் தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை மேற்கொள்ளல் தொடர்பான விபரம்

உரு 1.9 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தனியார் நிறுவனங்கள் மற்றும் நிபுணத்துவ குழுக்களுடன் இணைந்து நவீன கல்வி திட்டங்கள் தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை மேற்கொள்ளல் தொடர்பாக அறிதல் என்ற கூற்றிற்கு எதிர்க்கின்றோம் என 100 சதவீதமான அதிபர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே, தனியார் நிறுவனங்கள் மற்றும் நிபுணத்துவக் குழுக்களுடன் இணைந்து நவீன கல்வி திட்டங்கள் தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

- **ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாட ஒருங்கிணைப்பு பயிற்சி பட்டறை முகாம்களை ஒழுங்கமைத்து கொடுத்தல் தொடர்பாக அறிதல்.**

ஆய்வாளரால் ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாட ஒருங்கிணைப்பு பயிற்சி பட்டறை முகாம்களை ஒழுங்கமைத்து கொடுத்தல் தொடர்பாக அறிதல் என்பதற்கு ஆசிரியர்களின் பதிலாக $\bar{X} = 4.24$ காணப்படுவதனால் அதிகமான ஆசிரியர்கள் அதனை வலுவாக ஏற்றுக் கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி ($4.20 \leq \bar{X} \leq 5.00$) இற்கு இடைப்பட்ட புள்ளியாகும். மாணவர்களின் பதிலாக $\bar{X} = 3.92$ காணப்படுவதனால் அதிகமான மாணவர்கள் அதனை ஏற்றுக் கொள்கின்றனர். இது லைக்கேற்றின் அளவீட்டின்படி ($3.40 \leq \bar{X} \leq 4.19$) இற்கு இடைப்பட்ட புள்ளியாகும்.




உரு 1.10 : ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பாட ஒருங்கிணைப்புப் பயிற்சிப் பட்டறை முகாம்களை ஒழுங்கமைத்துக் கொடுத்தல் தொடர்பான விபரம்

உரு 1.10 இல் காட்சிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாட ஒருங்கிணைப்பு பயிற்சி பட்டறை முகாம்களை ஒழுங்கமைத்து கொடுத்தல் தொடர்பாக அறிதல் என்ற கூற்றிற்கு ஏற்றுக்கொள்கின்றோம் என 67.50 சதவீதமான ஆசிரியர்களும், 83.80 சதவீதமான மாணவர்களும் துலங்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆகவே ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாட ஒருங்கிணைப்பு பயிற்சிப்பட்டறை முகாம்களை ஒழுங்கமைத்து கொடுத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

## முடிவுகளும் விதப்புரைகளும்

### முடிவுகள்

- STEAM கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டமைக்கான நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை என்பதனை மூன்று அதிபர்களும், 70.90 சதவீதமான ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியவில்லை என்பதனை 83.30 சதவீதமான அதிபர்கள் ஏற்றுக் கொண்டதனடிப்படையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- பாடசாலைகளில் STEAM கல்வித்திட்டம் தொடர்பான ஆலோசனைகள் போதியளவு வழங்கப்படவில்லை என்பதனை 71.60 சதவீதமான மாணவர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளரும் குறிப்பிட்டுள்ள கருத்துக்களின்படி கண்டறியப்பட்டுள்ளது.
- தற்காலத்தில் STEAM கல்வித் திட்டத்தின் அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகளின் அவசியம் தொடர்பாக அறிந்திருக்கவில்லை என்பதனை 78 சதவீதமான ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதன் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- 21 ஆம் நூற்றாண்டுக்கான திறன்களை முழுமையாக ஆசிரியர்கள் அறிந்திருக்கவில்லை என்றும் அவற்றை மாணவர்களிடத்தில் வளர்த்தெடுப்பதும் சிரமமாக உள்ளது என்பதனை 72.10 சதவீதமான ஆசிரியர்களும், திறன் மேம்பாடுகளை ஏற்படுத்த காலம்

போதாது உள்ளது என்பதனை 70 சதவீதமான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டதனடிப்படையில் அறிந்துகொள்ள முடிகின்றது.

- STEAM கல்வித் திட்டத்தில் குறித்த சில பாடங்களுக்கு பாடசாலையில் ஆசிரியர்கள் காணப்படவில்லை என்பதனை மூன்று அதிபர்கள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களின்படி அறியப்பட்டுள்ளது.
- ஒன்றிணைந்த கல்வி தொடர்பான அச்சிடப்பட்ட ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்பதனை 100 சதவீதமான அதிபர்களால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- தனியார் நிறுவனங்கள் மற்றும் நிபுணத்துவ குழுக்களுடன் இணைந்து நவீன கல்வித் திட்டங்கள் தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென 100 சதவீதமான அதிபர்களும் ஏற்றுக் கொண்டுள்ளடுள்ளனர்.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாட ஒருங்கிணைப்பு பயிற்சி பட்டறை முகாம்களை ஒழுங்கமைத்து கொடுத்தல் வேண்டும் என்பதனை 67.50 சதவீதமான ஆசிரியர்களும், 83.80 சதவீதமான மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளதன்படி அறியமுடிகின்றது.

**விதப்புரைகள்**

- STEAM கல்வித் திட்டத்தின் நோக்கம் அடையப்படும் வகையில் குறைந்த செலவினத்தில் சில மாதிரி பாடசாலைகளில் (Pilot Schools) STEAM கல்வித் திட்டங்களை செயல்படுத்தி அதன் வெற்றிகளை மதிப்பீடு செய்தல்.
- வலயக் கல்வி அலுவலகத்தில் கல்வித் திட்டமிடல் பிரிவு பிரதி கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களை கொண்டு அதிபர்கள் பாடசாலைகளில் STEAM கல்வி திட்டம் தொடர்பான கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- STEAM கல்வித் திட்டத்தின் அவசியத்தினை ஏனைய நாடுகளின் கல்வி முறைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.
- UNESCO, UNICEF போன்ற சர்வதேச அமைப்புகளுடன் STEAM திட்டங்களை ஒன்றிணைத்து நடைமுறை தகவல் பரிமாற்றம் செய்தல்.
- ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் STEAM பற்றிய அடிப்படை கருத்துகளை வழங்க குறுகிய கால பயிற்சி திட்டங்களை ஏற்பாடு செய்யதல் வேண்டும்.
- STEAM கல்வியில் Silo, Embedded மற்றும் Integration உட்பட மூன்று அணுகுமுறைகள் பயன்படுத்தப்படலாம். இதனூடாக STEAM ஒருங்கிணைந்த கல்வியை வழங்குகின்றது எனக் கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி STEAM கல்வித்திட்டத்தில் உள்ள பாடத்துறைகளை ஒன்றிணைத்து கற்பிக்க வேண்டும்.
- STEAM கல்வித்திட்டம் தொடர்பான பாடப்புத்தகங்கள் மற்றும் மொடியூள்களை தயாரித்து ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும்.

- ஆசிரியர்களை தேசிய சர்வதேச ரீதியில் இடம் பெறும் செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளில் நேரடியாகவோ அல்லது நிகழ்நிலை மூலமாகவோ பங்கேற்கச் செய்தல் வேண்டும்.
- கல்வி அமைச்சின் கீழ் STEAM பயிற்சிகளை அரசுத் திட்டங்களாக இணைத்தல். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையங்களை (Science and Innovation Hubs) உருவாக்குதல். மாணவர்களுக்கு Mini Projects அல்லது Workshops வழங்கி STEAM தொடர்பான நேரடி அனுபவங்களை உருவாக்குதல். உள்ளூர் தொழில்முனைவோருடன் இணைந்து பயிற்சி முகாம்கள் நடத்துதல் வேண்டும்.
- தொழில்நுட்ப மற்றும் அறிவியல் ஆய்வு மையங்களை அனைத்து மாவட்டங்களிலும் அமைக்க வேண்டும். செயல்முறை மையங்களுக்கு (Hands-on Learning Centers) ஆசிரியர்களை அனுப்புதல்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


An, S. (2020). The impact of STEAM integration on preservice teachers' disposition and knowledge. *Journal of Research in Innovative Teaching & Learning*, *13*(1), 27–42. https://doi.org/10.1108/jrit-01-2020-0005

*Annual School Census of Sri Lanka Prepared by Statistics Branch of Ministry of Education of Sri Lanka*. (n.d.). https://moe.gov.lk/wp-content/uploads/2023/02/School_Census-2021_Summary-Tables-Final-Report1.pdf.

Azizah, W. A., Sarwi, S., & Ellianawati, E. (2020). Implementation of Project -Based Learning Model (PjBL) Using STREAM-Based Approach in Elementary Schools. *Journal of Primary Education*, *9*(3), 238–247. https://doi.org/10.15294/jpe.v9i3.39950

Esty Setyo Utaminingsih, Ellianawati Ellianawati, Sri Sumartiningsih, & Maria Ayu Puspita. (2023). STEAM Education. *Jurnal Ilmiah Profesi Pendidikan*, *8*(3), 1605–1612. https://doi.org/10.29303/jipp.v8i3.1566

*Home*. (2024, May 3). National Science Foundation Sri Lanka. https://www.nsf.gov.lk

*Index of /notice/2024/Education/*. (2024). Np.gov.lk. https://np.gov.lk/notice/2024/Education/

Rasika Karunarathne, Dr Nirosha Piyadarshani, Prof Sakunthala Yatigammana, & Prof Prasad Sethunga. (2022, December 6). *STEM / STEAM Education in Sri Lankan General Education System: Current status and way forward*. https://www.researchgate.net/publication/379340217

Riley, S. (2025, June 12). *What is STEAM Education?* The Institute for Arts Integration and STEAM. https://artsintegration.com/what-is-steam-education-in-k-12-schools

*STEAM Education | Largest STEAM Network in Sri Lanka*. (2024). Steam.lk. https://steam.lk/

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் வகிபங்கு

K. Shayanthini [1], R.Thakshaayini [2]
Department of Education and Childcare [1, 2],
Faculty of Arts and Culture [1, 2],
Eastern University, Sri Lanka [1, 2].
shayanthinik15@gmail.com [1]
thakshaayinir@esn.ac.lk [2]

**ஆய்வுச் சுருக்கம்**

சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலானது தனியாளின் வெற்றிகரமான கற்றலுக்கு உதவுகின்றது. கல்வி பெறுவதில் பாடசாலையும் ஆசிரியர்களும் எந்தளவில் முக்கியமோ அதுபோல மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலும் முக்கியமானதாகும். எனவே, க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தில் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்துதல் அவசியமானதாகும். இருப்பினும், கல்முனை கல்வி வலயத்தில் உள்ள கல்முனை தமிழ்க் கல்விக் கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாட சித்தியின்மை அதிகரித்துச் செல்கின்றது. இதில் தாக்கம் செலுத்தும் பல்வேறு காரணங்களுள் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் குறைவாக இருப்பதும் ஒன்றாகும். இதனால் க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைமையினைக் கண்டறிந்து அதில் ஆசியர்களின் வகிபாகத்தினை அறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக கல்முனை தமிழ்க் கல்விக் கோட்டத்தில் உள்ள க.பொ.த. சாதாரண தரத்தைக் கொண்ட 1AB பாடசாலைகள் இரண்டும் 1C பாடசாலைகள் ஐந்தும் என மொத்தமாக ஏழு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டன. மாதிரிகளாக ஏழு அதிபர்களும் 25 ஆங்கிலப் பாட ஆசிரியர்களும், ஆங்கிலப் பாட ஆசிரிய ஆலோசகரும் க.பொ.த. சாதாரண தர வகுப்பிலுள்ள 560 மாணவர்கள் ஆண் - பெண் எனப் படையாக்கம் செய்து Slovin (Margin of error 0.09) மாதிரித் தெரிவின் அடிப்படையில் 102 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். தரவு சேகரித்தல் கருவிகளான வினாக்கொத்து, நேர்காணல் மூலமாக மாதிரியாக தெரிவு செய்யப்பட்டவர்களிடமிருந்த அளவு மற்றும் பண்பு ரீதியாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. அளவு ரீதியான பகுப்பாய்வில் தரவுகள் SPSS (Version 23) மென்பொருள் மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தி இடை கணிக்கப்பட்டு Microsoft Excel மூலம் அட்டவணைகள், சலாகை வரைபுகள் உருவாக்கப்பட்டு தரவுகள் வியாக்கியானம் செய்யப்பட்டு பல்வேறு முடிவுகளும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் ஆசிரியர்கள் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிகள் மற்றும் வகுப்புக்களை நடத்துவது குறைவு, கற்பித்தலில் நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களுக்குக் குறைவு, மாணவர்களின் பயிற்சிகளை முடிக்க, சந்தேகங்களைப் கேட்கப் போதிய நேரம் ஒதுக்காமை போன்ற முடிவுகளும் வலயக்கல்வி அலுவலகத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலுத்திகள் தொடர்பாக ஆசிரியர்களுக்குப் பயிற்சியினை வழங்குதல், ஆங்கிலப் பாடத்தில்

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், பாடசாலை நூலகத்தில் ஆங்கிலப் பாடப் பயிற்சிப் புத்தகங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *: சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல், க.பொ.த. சாதாரண தரம், ஆங்கிலப் பாடம், மாணவர்கள், ஆசிரியர்களின் வகிபங்கு.*

**அறிமுகம்**

1992ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையானது கல்வியின் பிராதான இலக்கு அறிவு, திறன், மனப்பாங்குகள், சமூக, ஆளுமைப் பண்புகள் யாவற்றிலும் தேர்ச்சியடைந்த சமநிலை ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்குவதேயாகும் என்று குறிப்பிடுகிறது. இன்று கல்வித்துறையானது மிகப் பரந்த துறையாகப் பரிணமித்துள்ளது. ஒருவரது முழுவாழ்க்கைக் காலத்துக்குள்ளும் ஒரு தனிப்பட்ட பரப்பையோ தேர்ச்சியையோ முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாதவாறு வியாபித்துள்ளது. அது மற்றவர்களால் வழங்க முடியாது. அதனைச் சுயமாகத் தேடிப் பெற்றுக்கொள்ளும்போதுதான் கல்வியின் இலக்கை அடைந்துகொள்ள முடியும் எனக் குறிப்பிடுகின்றது.

சர்வதேச கல்விப் புலத்தில் அண்மைக் காலமாக கல்வியில் மாணவர்கள் சாதனைகள் படைக்கப் பல்வேறு ஆய்வுகள் வெளிவந்த வண்ணமுள்ளன. அந்தவகையில், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் இன்று பிரசித்தி பெற்றுள்ளது. மாணவர்களுடைய பொதுப் பரீட்சைகள் உட்பட அடைவுமட்ட வெற்றிகளைத் தீர்மானிப்பதில் இச்சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் தீர்க்கமானம் ஒரு காரணியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களிடம் ஏற்படுத்தப்படும் கற்றல் தொடர்பான சிந்தனைகள் ஊக்கம் மனவெழுச்சிகள் கற்றலுக்கான உத்திகளைத் தெரிவுசெய்து நீடித்திருத்தல், சுய வினைத்திறன் என்பவற்றை உள்ளடக்கிய சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மேம்படுத்தவதன் ஊடாக அவர்களின் கல்வி அடைவினை வெகுவாக மேம்படுத்த முடியும் (சிபானி, 2019).

சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை ஆதரிக்கும் மற்றும் தேவைப்படும் கற்றல் சூழல்கள் மற்றும் பணிகளை வளர்ப்பதில், ஆசிரியர்கள் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் பற்றிய தங்கள் அறிவை ஒருங்கிணைக்கிறார்கள். சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் ஊக்கமளிக்கும் (INSPIRE) ஆசிரியர்கள் பயனுள்ள உத்திகளைப் பற்றிய ஆழமான புரிதலைக் கொண்டுள்ளனர், மேலும், இந்த உத்திகளின் திறமையான பயனர்களாக மாற மாணவர்களுக்கு வழிகாட்ட முடியும். ஆசிரியர்கள் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலைத் திறம்பட மேம்படுத்துவதற்கு, அவர்களுக்கு தேவையான அறிவு, நம்பிக்கைகள் மற்றும் உந்துதல் ஆகியவை தேவைப்படுகின்றன (Hertel, & Karlen, 2021). எனவே, க. பொ. த. சாதாரண தரத்தில் கற்கின்ற மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்துதல் அவசியமானதாகும். அந்த விதத்தில் ஆசிரியர்கள் பல்வேறு வகிபங்கினை ஏற்கக் கூடியவர்களாகக் காணப்படுகின்றார்கள். சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் தொடர்பாக நோக்கும் போது, ஆசிரியர்கள் எவ்வாறு மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை விருத்திசெய்ய முடியும் என நோக்குவது முக்கியமானதாகும்.

ஆசிரியர்கள் ஆங்கிலப் பாடத்தினைக் கற்பிக்கும்போது, எவ்வாறான வழ வகைகளின் ஊடாக சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மாணவர்களிடத்தில் விருத்திசெய்ய முடியும். அதற்காக எத்தகைய வகிபங்கினை ஆசிரியர்கள் ஆற்ற வேண்டும் என்பன பற்றி கல்முனை கல்வி வலயத்தில் உள்ள கல்முனை தமிழ்க் கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பின்னணி**

கற்பவர்கள் தமது எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் செயல்களை முறைப்படுத்தி அவர்களது கற்றல் இலக்குகளை அடைதலே சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இதில், மாணவர்கள் தமது எண்ணங்கள், நடத்தைகள் மற்றும் உணர்வுகளை முகாமை செய்து வெற்றிகரமாக தமது கற்றல் அனுபவங்களை ஒழுங்குபடுத்துகின்றனர் எனக் கூறுகின்றனர் (Chika, 2015). Yves Karlen மற்றும் பலர் (2023) இல் மேற்கொண்ட ஆய்வு, சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியர்களின் அறிதல் திறன்கள் குறித்து சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் பற்றிய ஆசிரியர்களின் உள்ளடக்க அறிவு, மதிப்பீட்டு நடவடிக்கைகள் மற்றும் மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மதிப்பிடுவதில் உள்ள துல்லியம் ஆகியவற்றை ஆராய்கிறது.

இதன்படி ஆய்வுப் பிரதேசத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலானது சிறந்த முறையில் காணப்பட்டிருந்தால், அங்கு ஆங்கிலப் பாட சித்தி வீதமானது சிறப்பானதாக அமையப்பெற்றிருக்கும். இங்கு ஆங்கிலப் பாட ஆசிரியர்கள் மாணவர்களுடைய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் தூண்டும் விதத்தில் தங்களுடைய கற்பித்தல் உத்திகளைச் சரியான விதத்தில் பயன்படுத்தாமையும், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் பற்றிய தெளிவு இல்லாமையும் சிற்ந்த சித்தி வீதமின்மைக்குக் காரணங்களாக அமைந்தன. எனவே, சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் இங்கு இல்லாத காரணத்தினாலேயே ஆங்கில பாடச் சித்தியின்மை குறைவாக காணப்படுகின்றது எனலாம். இதற்கான ஆதாரமாக கடந்த ஐந்து வருடங்களில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியின்மை அதிகரித்துச் சென்றுள்ளது. அதன்படி 2018ஆம் ஆண்டு 45.2% ஆன மாணவர்களும், 2019 ஆம் ஆண்டு 35.6% ஆன மாணவர்களும் 2020 ஆம் ஆண்டு 31.7% ஆன மாணவர்களும் 2021 ஆம் ஆண்டு 35.4% ஆன மாணவர்களும் 2022 ஆம் ஆண்டு 36.2% ஆன மாணவர்களும் ஆங்கிலப் பாடத்தில் சித்திபெறவில்லை.




உரு 1: கல்முனை தமிழ் கல்விக் கோட்டத்தின் க.பொ.த. (சா/தர) மாணவர்களின் கடந்த 5 வருட ஆங்கிலப் பாட சித்தி சதவீதம்

இதன்படி மாணவர்களின் சித்தியின்மை அதிகரித்துச் சென்றமைக்குக் காரணமாக அமைவது மாணவர்கள் மத்தியில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் குறைவாகக் காணப்படுவதேயாகும். இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டு ஆங்கிலத்தை மிகவும் விரும்பும் பாடமாக மாற்றி அமைக்கும் வகையில், மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்தும் விதத்தில் ஆசிரியர்கள் தங்களுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வித் துறையில் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துகொண்டே வருகின்றன. இப்பிரதேசத்தில் ஆய்வாளரால் பல்வேறு பிரச்சினைகள் இனங்காணப்பட்ட போதிலும், இப்பிரதேச பாடசாலைகளில் ஆங்கிலப் பாட சித்தியின்மை குறைவாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க பிரச்சினையாக விளங்குகிறது. மாணவர்களுக்குச் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை ஆசிரியர்கள் சிறந்த முறையில் வழங்காமை, சில ஆசிரியர்கள் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மேற்கொள்ளாதவர்களாக உள்ளமை, புதிய விடயங்களைக் கற்றறிந்து கொள்ளாமை, எவ்வாறு மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் எனும் உத்திகளைச் சரியான விதத்தில் கையாளாமை முதலானவை இதற்கான காரணங்களாக அமைகின்றன.

கற்றல், கற்றல் செயல்முறையின் அனைத்து வடிவங்களிலும் மாணவர்களைச் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ள வழிவகுக்கும் மற்றும் கல்வி, தனிப்பட்ட இலக்குகளை அடைய ஆசிரியர்கள் வழங்கும் ஊக்குவிப்புகளின் ஊடாக கற்றலில் மாணவர் செயல்திறனை மேம்படுத்த முடியும் (கருணாநிதி, 2013). ஆய்வு பிரதேசத்தில் போதிய அளவு சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் மாணவர்கள் மத்தியில் மேற்கொள்வதற்கான செயல்பாட்டினை ஆசிரியர்கள் மேற்கொள்ளாமையினால் மாணவர்களின் ஆங்கிலப் பாடச் சித்தியின்மை அதிகரித்துக் காணப்படுகின்றது. சிறந்த கற்றல் கற்பித்தலை முன்னெடுக்கும்போதே மாணவர்களிடமிருந்து சிறந்த நடத்தை மாற்றத்தினை எதிர்பார்க்க முடியும். க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தை விருப்பத்துக்குரிய பாடமாகவும் அவர்கள் விரும்பிக் கற்கும் பாடமாகவும் மாற்றும் விதத்தில் சிறந்த கற்பித்தல் முறையை ஆசிரியர்கள் கையாள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இப்பிரதேசத்தில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எவ்வாறான விதத்தில் கற்றல் கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும் என்பது தொடர்பான போதியளவு அறிவினைப் பெறாதவர்களாக காணப்படுகின்றனர். இதனாலேயே இப்பிரதேசத்தில் ஆங்கிலப் பாடச் சித்தியின்மை அதிகமாக காணப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் ஆசிரியர்கள் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினைச் சிறந்த முறையில் கையாண்டு சிறப்பான மாணவர் சமுதாயத்தினை உருவாக்குவதற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் விதமானது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இதனாலேயே இப்பிரதேசத்தில் ஆங்கிலப் பாடச் சித்தியின்மை அதிகரித்துச் செல்கின்றது. இது பெரும்பாலான மாணவர்களின் ஆளுமையை விருத்திசெய்வதில் தடையாக அமைகின்றது.

**ஆய்வு பிரச்சினை கூற்று**

கல்முனை தமிழ் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களிடத்தே சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைமைகளை விருத்தியடையச் செய்து, ஆங்கிலப் பாடத்தின் சித்தியின்மையினைக் குறைப்பதில் ஆசிரியர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**ஆய்வின் நோக்கம்**

**பொது நோக்கம்**

க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலின் நிலையினைக் கண்டறிந்து, அதில் ஆசிரியர்களின் வகிபாகங்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்மொழிதல் இந்த ஆய்வின் பொது நோக்கமாகும்.

**சிறப்பு நோக்கங்கள்**

இவ் ஆய்வின் சிறப்பு நோக்கங்களாகப் பின்வருவன விளங்குகின்றன:

1. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல்நிலைகளைக் கண்டறிதல்.
2. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை அறிதல்.
3. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் விருத்தியில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்.
4. சுய ஒழுங்குப்படுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியரின் வகிபாகத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

இவ் ஆய்வு பின்வரும் வினாக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது :

1. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாட சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைகள் யாவை?
2. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கு எத்தகையது?
3. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் விருத்தியில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?
4. சுய ஒழுங்குப்படுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியரின் வகிபாகத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் யாவை?

**இலக்கிய மீளாய்வு**

**சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல்**

ஒருவரது கற்றலில், சுய விளைதிறன், விருப்புடனான செயலாற்றுகை, அறிகைசார் உத்திகள் போன்ற பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தக் கூடியனவாக காணப்படும். இவற்றை முழுமையாக உள்ளடக்கிய ஓர் எண்ணக்கருவாக சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஏனெனில், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலானது, ஒருவரின் அறிகை, நடத்தை சார்ந்த, ஊக்கல்சார், மனவெழுச்சி சார்ந்த கற்றல் அம்சங்களை ஒருங்கே கொண்டிருப்பதால் ஆகும். இந்த வகையில், அண்மைக் காலங்களில் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலானது ஆய்வுகளில் பிரதான கருப்பொருளாக மாறி வருவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Mottalvo and Torres, 2008).

கற்பவர்கள் தமது எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் செயல்களை முறைப்படுத்தி அவர்களது கற்றல் இலக்குகளை அடைதலே சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இதில், மாணவர்கள் தமது எண்ணங்கள், நடத்தைகள் மற்றும் உணர்வுகளை முகாமை செய்து வெற்றிகரமாக தமது கற்றல் அனுபவங்களை ஒழுங்குபடுத்துகின்றனர் (Chika, 2015).

**சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஈடுபடுவோரின் இயல்புகள்**

சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் (SRL) ஒரு முக்கிய "எதிர்கால கல்வியறிவு" ஆக மாறியுள்ளது, இது கற்பவர்கள் மிகவும் ஆக்கப்பூர்வமாகவும் புதுமையாகவும் இருக்கவும், புதிய செயலுக்கான விருப்பங்களை ஆராயவும், தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களுக்கு மாற்றியமைக்கவும் உதவுகிறது (ஐக்கிய நாடுகள், 2018).

**சுய ஒழுங்கப்படுத்தப்பட்ட கற்றலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

Raggl (2015) என்பவர் மேற்கொண்ட Teaching and Learning Small Rural Primary School in Austria and Switzerland என்ற ஆய்வின் முடிவில், சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் குடும்பச் சூழல் உளவியல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்கிறார். சமூக உறுப்பினர்களின் அனுபவம், ஆசியர்கள், சகபாடிகள் மற்றும் தனியாள் வேறுபாடுகள் என்பனவும் செல்வாக்குச் செலுத்துவதாகக் கூறியுள்ளனர்.

**ஆங்கிலப் பாடம்**

2004 இல் கலைத்திட்டச் சீராக்கத்தில் தரம் 1, 2 க்கு ABOE (Activity Based Oral English) உம், தரம் 3 - 5 வரை Let|s Learn English உம், தரம் 6 -11 வரை புதிய பாடத்திட்டத்திற்கென வடிவமைக்கப்பட்ட நூல்களுடன் தேர்ச்சி மைய ஆங்கிலமும், உயர் தரத்தில் உயர் தகைமையை விருத்திசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட நூல்களுடன் ஆங்கிலம் என ஆங்கிலப் பாடமும் கட்டாயப் பாடமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆங்கிலப் பாட சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலின் சவால்கள்**

ஆசிரியருக்கும் மாணவர்க்கும் இடையிலான தொடர்பு ஆரோக்கியமாக இல்லாமல் கற்றல் முழுவதும் பெயரளவில் மட்டுமே சார்ந்து இருப்பது என்பது மாணவர்களின் தரப்பில் இருந்து சலிப்பை ஏற்படுத்தும். பெற்றோர்களும் பெரும்பாலும் ஆசிரியரின் பாத்திரமாக இருக்க வேண்டும். அதிக மன அழுத்தம் மற்றும் குடும்பச் சூழல் மாணவர்களில் பதற்றத்தை உருவாக்கலாம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உளவியல் சமூகத் தேவைகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் (Raggl, 2015).

ஓர் ஆசிரியர் தனது பாட அறிவில் நிபுணத்துவம் உள்ளவராதல், தமது பாடத்துறை சம்மந்தமாக மாணவர்களால் எழுப்பப்படும் வினா சந்தேகங்களுக்கு மாணவன் நிறைவு காணத்தக்க பதிலளிக்கக்கூடியவராதல், தனது பாடத்துடன் தொடர்புடைய வேறு பாடங்கள் ஒழுக்கங்களில் அறிவுடையவராக இருத்தல், தனது மாணவர்களுக்கு அறிவு ரீதியாக கற்றல் தேவையான விடத்து உதவிகளையும் வழிகாட்டுதல்களையும் பாட ரீதியாக வழங்குதல், ஆசிரியர் விஞ்ஞான ரீதியாக ஆய்ந்தறி ரீதியாக சிந்தித்தலும் கற்பித்தலும், அத்தகைய செயற்பாட்டினை மாணவர்களிடத்தில் உட்படுத்துதல், அறிவினை இன்றைய நிலைமைகளுக்கு ஏற்ப புதுப்பித்து கொண்டிருக்கும் கற்பித்தல் நுட்பங்களில் பரிச்சயமுடையவராக இருத்தல் என்பன அவசியமாகின்றன (See et al, 2022).

**ஆய்வு முறையியல்**

**ஆய்வு வடிவம்**

கல்வியுடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆய்வுசெய்வதற்காக ஆய்வு இலக்கியங்களில் அளவை நிலை ஆய்வு பயன்படுத்தப்படுவதனால் அவ்வகை ஆய்வு வடிவமே இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பண்புசார் தரவுகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதனால் கலப்பு அணுகுமுறை மூலம் ஆய்வு நோக்கம் முழுமையாக நிறைவு செய்யப்படக்கூடிய விதத்தில் ஆய்வு முறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையில் ஒன்பது மாகாணங்களில் 25 மாவட்டங்களும், நூறு கல்வி வலயங்களும் காணப்படுகின்றன. இதில் கிழக்கு மாகாணத்தில் 17 கல்வி வலயங்களை உள்ளடக்கி அமைந்துள்ள மூன்று மாவட்டங்களில் ஒரு மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கல்முனைக் கல்வி வலயம் ஐந்து கோட்டங்களைக் கொண்டது. கல்முனைக் கோட்டம், கல்முனை தமிழ் கோட்டம், சாய்ந்தமருது கோட்டம், காரைதீவுக் கோட்டம், நிந்தவூர்க் கோட்டம் என்பனவாகும். இவற்றில் கல்முனை தமிழ் கல்விக் கோட்டம் இவ்வாய்வுக்குரிய பிரதேசமாகும்.

**குடித்தொகையும் ஆய்வு மாதிரியும்**

இவ் ஆய்வு அம்பாறை மாவட்டத்தில் கல்முனை தமிழ் கல்விக் கோட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்முனை தமிழ் கல்விக் கோட்டத்தில் 14 பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தைக் கொண்ட 1AB பாடசாலை இரண்டும், 1C பாடசாலை ஐந்தும் என மொத்தமாக ஏழு பாடசாலைகள்

காணப்படுகின்றன. ஏழு பாடசாலைகளும் ஆய்வுக்காக மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தர மாணவர்களில் 560 மாணவர்களை ஆண் பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, Slovin மாதிரியில் 9% error அடிப்படையில் 102 மாணவர்கள் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேலும், ஏழு பாடசாலைகளின் ஏழு அதிபர்களும் தேர்வு செய்யப்பட்ட ஏழு பாடசாலைகளில் காணப்பட்ட 25 ஆங்கிலப் பாட ஆசிரியர்களும் ஆங்கிலப் பாட ஆசிரிய ஆலோசகர்களும் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அட்டவணை 1: இறுதி மாதிரியெடுத்தல் பருமன்

| குடித்தொகை | எண்ணிக்கை | மாதிரி முறை | மாதிரி |
|---|---|---|---|
| அதிபர்கள் | 7 | | 7 |
| ஆசிரியர்கள் | 25 | | 25 |
| மாணவர்கள் | 560 | Slovin மாதிரி<br>மொத்தக் குடித்தொகை = 560<br>$n = N / 1+Ne^2$<br>$=560 /1+560 (0.009)^2 =560/1+560 \times 0.0081 = 560/5.536 = 101.5 =102$ | 102 |
| ஆங்கிலப் பாட ஆசிரிய ஆலோசகர் | 01 | | 01 |
| மொத்தம் | 135 | | |

(மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது)

**தரவு சேகரிப்புக் கருவிகளும் தரவுப் பகுப்பாய்வு முறையும்**

ஆய்வுப் பிரதேசத்தில் மாதிரிகளாத் தெரிவுசெய்யப்பட்டவர்களிடமிருந்து தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் விசேட குறிக்கோளுக்கு அமைவாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. லைக்கேற் அளவுத்திட்ட வினாக்கொத்தின் மூலம் மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் பெறப்பட்ட தகவல்கள் எண்சார் தரவுகளாக மாற்றப்பட்டுள்ளதுடன் SPSS (Version 22) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு இடை கணிக்கப்பட்டு, Microsoft Office Excel மூலம் அட்டவணையாக்கம், சலாகை வரைபுகள் போன்றன வகை குறித்துக் காட்டப்பட்டு புள்ளிவிபர அடிப்படையில் அளவு ரீதியாகவும் அதிபர்களிடமும் ஆசிரிய ஆலோசகரிடமும் பெறப்பட்ட தகவல்கள் ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு பண்பு ரீதியாகவும் விளக்கப்பட்டுள்ளது.

**தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

கல்முனை தமிழ் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களிடத்தே சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைமைகளை விருத்தியடையச் செய்து

ஆங்கிலப் பாடத்தின் சித்தியின்மையினைக் குறைப்பதில் ஆசிரியர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது ஆய்வுப் பிரச்சினையாக கண்டறியப்பட்டு, அதற்கேற்ப பல சிறப்பு நோக்கங்களின் அனடிப்படையில் ஆய்வு மாதிரிகளிடமிருந்து ஆய்வுக் கருவிகளின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. குறித்த தரவுகளின் பகுப்பாய்வுகளின் முடிவுகள் பின்வருமாறு அமைகின்றன.

**க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைகளைக் கண்டறிதல்**




உரு 2: க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைகள்

க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைமைகளைக் கண்டறிதல் எனும் சிறப்பு நோக்கத்தின்படி ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொண்ட நேர்காணல், வினாக்கொத்தின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட தகவல்களின்படி க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் ஆங்கிலப் பாடம் தொடர்பான சந்தேகங்களைக் கேட்டறிவதற்கான வாய்ப்புக் குறைவாகக் காணப்படுவதோடு, ஆங்கிலப் பாடம் தொடர்பான ஒப்படைகள் ஆக்கச் செயற்பாடுகள் மற்றும் ஆங்கிலத் தினப் போட்டிகளில் ஈடுபடுவதில் மாணவர்கள் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர். மேலும், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தைக் கற்பதற்காக நூலகத்தில் வேண்டிய புத்தகங்கள் குறைவாக உள்ளன. ஆகவே, க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைகள் குறைவாகக் காணப்படுகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை அறிதல்**




உரு 3: க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கு

க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை அறிதல் எனும் சிறப்பு நோக்கத்தின்படி ஆய்வுப் பிரதேசத்தில் வழங்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் பெறப்பட்ட நேர்காணலின் அடிப்படையில் நோக்கும்போது, மாணவர்கள் கற்ற விடயங்களை வகுப்பறையில் பிரயோகித்தல் குறைவாக காணப்படுகிறது. அத்தோடு, மாணவர்களின் சந்தேகங்களைக் கேட்பதற்கு ஆசிரியர்கள் நேரம் ஒதுக்குதல் குறைவாக காணப்படுகின்றது என்பதும் கண்டறியப்பட்டது. மாணவர்களின் பலங்களையும் பலவீனங்களையும் அறிந்து அவர்களுக்கான வழிகாட்டல்களை மேற்கொண்டு கற்பித்தல் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆங்கிலப் பாடத்தில் நவீன கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துதல் குறைவாக காணப்படுகின்றது. ஆகவே, இதனடிப்படையில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கு குறைவாக காணப்படுகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**க. பொ. த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் விருத்தியில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்**




உரு 4: க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் விருத்தியில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் விருத்தியில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல் எனும் சிறப்பு நோக்கத்தின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் வழங்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் நேர்காணலின்படி ஆங்கிலப் பாட ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதோடு பாடசாலை நூலகங்களில் புத்தகங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் காணப்படுவது குறைவாக உள்ளது. மேலும், ஆங்கிலப் பாடத்தைக் கற்பதற்கு மாணவர்களின் வீட்டுச் சூழல் சிறப்பாகக் காணப்படாத நிலை உள்ளது. பெற்றோர்களுடைய ஒத்துழைப்பும் குறைவாக காணப்படுகிறது. ஆசிரியர்களுக்குச் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்பித்தல் தொடர்பாக வலய மற்றும் பாடசாலை மட்டங்களிலிருந்து போதிய வாண்மைத்துவப் பயிற்சிகள் இடம்பெறுவது குறைவாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் விருத்தியில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் காணப்படுகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியரின் வகிபாகத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்**

அட்டவணை 2: சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியரின் வகிபாகத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான ஆலோசனைகள்

| ஆலோசனைகள் | ஆசிரியர்களது துலங்கல்கள் | மாணவர்களது துலங்கல்கள் |
|---|---|---|
| ஆங்கிலப் பாடச் சித்தியை உயர்த்துவதற்கு ஆங்கிலப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். | 100% | 100% |
| ஆங்கிலப் பாடத்தின் முக்கியத்துவத்தை க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு உணர்த்திக் கற்பிக்க வேண்டும். | 100% | 100% |
| ஆங்கிலப் பாடச் சித்தியை உயர்த்துவதற்கு க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் பாடசாலையில் மட்டுமின்றி, வீட்டிலும் ஆங்கிலப் பாடம் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். | 100% | 100% |
| ஆங்கிலப் பாடச் சித்தியை உயர்த்துவதற்குப் பாடசாலையில் நவீன கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும். | 100% | 100% |
| ஆங்கிலப் பாடக் கற்பித்தல் தொடர்பாக வலயக் கல்விப் பணிமனையால் மேற்பார்வை மற்றும் வாண்மை விருத்திச் செயற்பாடுகள் இடம்பெறுதல் வேண்டும். | 100% | 100% |

சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆங்கிலப் பாட ஆசிரியர்களின் வகிபாகத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் எனும் சிறப்பு நோக்கத்தின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் ஆங்கிலப் பாட ஆசிரியப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்தல் வேண்டும் மற்றும் பாடசாலை நூலகத்தில் ஆங்கிலப் பாடத்திற்கான பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்படுதல் வேண்டும். மேலும், பாடசாலை மற்றும் வலய மட்டங்களில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் உத்திகள் தொடர்பாக ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும் என்பன ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட பரிந்துரைகள் ஆகும். இவற்றை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களிடையே சுய ஒங்குபடுத்தப்பட்ட கற்றலிலினை மேம்படுத்தலாம்.

**முடிவுகளும் விதப்புரைகளும்**

க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலின் நிலையினைக் கண்டறிந்து அதில் ஆசிரியர்களின் வகிபாகங்களை

மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்மொழியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

ஆங்கிலப் பாடம் தொடர்பான ஒப்படைகள், ஆக்கச் செயற்பாடுகள் மற்றும் ஆங்கில தினப் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றுவது குறைவாக உள்ளது. அத்தோடு க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் ஆங்கிலப் பாடம் தொடர்பான சந்தேகங்களைக் கேட்டறிவதற்கான வாய்ப்பும், மாணவர்களுக்கு டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் இடம்பெறுவதும் குறைவாக உள்ளது. ஆசிரியர்கள் ஆங்கிலப் பாடம் தொடர்பான செயல்நிலை ஆய்வுகளில் ஈடுபடுவது குறைவாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மற்றும் ஆசிரியர்கள் க.பொ.த. சாதாரண தர மாணவர்களைக் குழுவாக இணைந்து செயல்பட வைத்தல், விவாதங்களை நடத்துதல், கட்டுரை வரைதல், வகுப்பறையில் உரையாடல்களை நடத்துதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வது குறைவாகக் காணப்படுகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்லாது, ஆங்கிலப் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகிறது. பாடசாலை நூலகத்தில் ஆங்கிலப் புத்தகங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் குறைவாக உள்ளன. க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு ஆங்கிலப் பாட வீட்டுப் பயிற்சிகளைச் செய்வதில் ஆர்வம் குறைவாகக் காணப்படுகிறது. க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தைக் கற்பதற்கான சிறந்த வீட்டுச் சூழல் குறைவாகக் காணப்படுகின்றது எனவும் கண்டறியப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் உத்திகள் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் வாண்மை விருத்திச் செயற்பாடுகள் இடம்பெறுவதும் குறைவாக காணப்படுகின்றது.

மாணவர்களிடையே ஆங்கிலப் பாடச் சித்தியை உயர்த்துவதற்கு ஆங்கிலப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், ஆசிரியர்கள் ஆங்கிலப் பாடத்தின் முக்கியத்துவத்தை மாணவருக்கு உணர்த்திக் கற்பித்தல், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் பாடசாலையில் மட்டுமின்றி வீட்டிலும் ஆங்கிலப் பாடம் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ள வழிவகுத்தல், க.பொ.த. சாதாரண தர மாணவர்களது பெற்றோர்களும் மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், பாடசாலையில் நவீன கற்பித்தல் முறைகளை பயன்படுத்தி கற்பித்தல், ஆங்கிலப் பாடம் தொடர்பாக முகாமைத்துவக் குழு, வலயக் கல்விப் பணிமனை மேற்பார்வை செய்தல், வாண்மை விருத்திச் செயற்பாடுகளை நடாத்துதல் போன்றவற்றினை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் சிறந்த அடைவு மட்டத்தினைப் பெற முடியும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

கருணாநிதி, மா. (2013). கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.

நவாஸ்தீன் ராசீப் சிபானி. (2019). மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல், ஜீவநதி கலை அகம், அல்வாய்.

Chika, (2015). EFFECT OF SELF REGULATED LEARNING APPROACH ON JUNIOR SECONDARY SCHOOL STUDENTS' ACHIEVEMENT IN BASIC SCIENCE. https://www.researchgate.net/publication/37168201.

Hertel, S. & Karlen, Y. (2021). Implicit theories of self-regulated learning: Interplay with students' achievement goals, learning strategies, and metacognition. British Journal of Educational Psychol- ogy,91(3), 972–996. https://doi.org/10.1111/bjep.12402.

Mottalvo and Torres, (2008).Role of Teachers in Developing Self Regulated Learning among School Students- A Review of Literature. https://www.researchgate.net/publication.

Raggl, A. (2015). "Teaching and Learning Small Rural Primary School in Austria and Switzerland", Opportunities and Challenges From Teachers and students Perspctives, International Journal Of Educational Research 74.127-135. https://doi.org/10.1016/jijer.2015.09.07.

See, B.H., Munthe, E., Ross, S.A., Hitt, L. and El Soufi, N. (2022). Who becomes a teacher and why? Review of Education, 10(3). doi: https://doi.org/10.1002/rev3.3377.
United Nations, (2018). Transforming the Future. Anticipation in the 21st Century. UNESCO, Routledge. Veenman, M. V. J., Hout-Wolters, B. H. A.M., & Afflerbach, P. (2006). Metacognition and learning: con- ceptual and methodological considerations. Metacognition and Learning, 1(1), 3–14. https://doi.org/10.1007/s11409-006-6893-0.

Yves Karlen et al, (2023) Teachers as learners and agents of self-regulated learning: The importance of different teachers competence aspects for promotin metacognition. https://www.sciencedirect.com.

# சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்களின் தாக்கம் - விமர்சனக் கோட்பாட்டு மெய்யியல் நோக்கு

**Parameswaran Kunalini**

Department of Philosophy and Value Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

kunalini330@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கிரேக்க காலம் தொடக்கம் சமகாலம் வரை கல்வி தொடர்பான பல்வேறு கருத்துக்களை மெய்யியல் ரீதியாக மெய்யியல் சிந்தனையாளர்கள் கூறியுள்ளனர். பிளேட்டோ, ரூசோ, கார்ள்றோஜர்ஸ், ரெயிலர், புறூனர், ஸ்கின்னர், ஜீன் பியாஜே, சிக்மன் பிறைட் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கார்ள்மாக்ஸ் குறிப்பிடும் முதலாளித்துவ சமூகத்தில் எவ்வாறு பொருட்களும் சேவைகளும் வசதிபடைத்தவர்களுக்குரிய உடமையாக அனைத்தும் மாறுமோ அவ்வாறான ஒரு போக்கினைச் சமூகத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. இத்தகைய சூழலில் ஏழைகளின் கல்வியின் நிலையானது கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பின்நவீனத்துவ கால சிந்தனையாளரான அடோர்னோவின் தற்போதுள்ள முதலாளித்துவ சமூகமானது பரிமாற்ற சமூகமாகும் எனக் கூறுகின்றார். மார்க்ஸின் காலத்தில் இருந்ததைவிட இங்கு அதிக சுரண்டல் தன்மை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனை ஒத்த வகையிலேயே சமகாலத்தில் மாணவர்களின் கல்வியானது பணத்திற்காகவே பயன்படுத்தப்படும் வியாபாரமாகவே மாறிவிட்டது. அவ்வாறான ஒரு நிலைக்குச் சான்றாக தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைக்குச் சமமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வானது சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்கள் எத்தகைய தாக்கத்தினைக் கொண்டுள்ளன என்பதனை மெய்யியலாளர்களின் கல்வி தொடர்பான கருத்துக்களின் அடிப்படையிலும் அக்கருத்துக்களைச் சமகால நடைமுறையில் ஒப்பிட்டும் விமர்சன ரீதியில் ஆராய்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. தனியார் வகுப்புக்களினால் ஏற்படும் சமூக, கலாசார, உளவியல், ஒழுக்கவியல், பொருளாதார ரீதியான பிரச்சினைகளை அடையாளங்காணல் மற்றும் தனியார் வகுப்புக்களின் தாக்கமானது மெய்யியலாளர்களின் கல்விக் கொள்கைகளுடன் எத்தகைய தொடர்புகளைக் கொண்டுள்ளது என்பதனை விமர்சன ரீதியில் கண்டறிவதனையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நோக்க மாதிரி, வசதி மாதிரி, மையக்குழுமுறை போன்ற ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாகக் காணப்படுவதனால் வினாக்கொத்து, விடய ஆய்வு, நேர்காணல் போன்றன முதலாம் நிலைத்தரவு மூலங்களாகவும், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றன இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாகவும் பயன்படுத்தப்பட்டுத் தரவுகள் பெறப்பட்டன. மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளின் பின்னணியினைக் கொண்டு, அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டுகொள்ளவதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் இவ் ஆய்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *தனியார் கல்வி நிறுவனங்கள், கல்விக் கொள்கைகள், விமர்சன ஆய்வு, மெய்யியலாளர்களின் சிந்தனைகள், தீர்வுகள்.*

**அறிமுகம்**

C.W.W. கன்னங்கரா அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி முறைமையானது காலனித்துவ ஆட்சியின் இறுதிப் பகுதியிலும் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலும் மிகச் சிறந்ததாக காணப்பட்டது. அதுமட்டுமன்றி, கல்வி என்பது செல்வந்தர்களின் சலுகை என்ற எண்ணத்தினை அகற்றும் நோக்குடனும் செயற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். ஆனால், இன்றைய காலத்தில் கல்வி பணத்திற்காக விற்கப்படுகின்ற பண்டமாகவே மாறியுள்ளது (துஷானி கலுகலகெதர, 2020). மெய்யியல் ரீதியாக கிரேக்க காலம் தொடக்கம் சமகாலம் வரை கல்வி தொடர்பான பல்வேறு கருத்துக்களை மெய்யியல் சிந்தனையாளர்கள் கூறியுள்ளனர். அவர்களுள் பிளேட்டோ, ரூசோ, கார்ள்றோஜர்ஸ், ரெயிலர், புறூனர், ஸ்கின்னர், ஜீன் பியாஜே, சிக்மன் பிறைட் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். முதலாளித்துவ சமூகத்தில் எவ்வாறு பொருட்களும் சேவைகளும் ஒரு சிலரின் கைகளில் காணப்படும் அல்லது வசதிபடைத்தவர்களுக்குரிய உடமையாக அனைத்தும் மாறும் என்று கார்ள்மாக்ஸ் குறிப்பிடுவது போன்ற ஒரு போக்கினையே தனியார் கல்வி நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. இத்தகைய சூழலில் ஏழைகளின் கல்வியின் நிலையானது கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பின்நவீனத்துவ கால சிந்தனையாளர் அடோர்னோ, தற்போதுள்ள முதலாளித்துவ சமூகமானது பரிமாற்ற சமூகமாகும் எனக் கூறுகின்றார். மார்க்ஸின் காலத்தில் இருந்ததைவிட இங்கு அதிக சுரண்டல் தன்மை காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இதனை ஒத்த வகையிலேயே சமகாலத்தில் மாணவர்களின் கல்வியானது பணத்திற்காகவே பயன்படுத்தப்படும் வியாபாரமாகவே மாறிவிட்டது. அவ்வாறான ஒரு நிலைக்குச் சான்றாக தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைக்குச் சமமாக இயங்கி வருவகின்றமை விளங்குகிறது.

இலங்கையில் மூன்று வகையான தனியார் வகுப்புக்கள் காணப்படுகின்றன. ஒன்று, தனித்துவமான தனியார் வகுப்பு (Individual tuition class). இவ்வகையானது ஒன்று அல்லது மூன்றுக்குக் குறைந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறை. இரண்டாவது குழு தனியார் வகுப்பு (Group tuition class). இம்முறையானது 5 – 50 வரையிலான மாணவர்களைக் கொண்டு கற்பிக்கும் முறையாகும். மூன்றாவது, பொதுவான அல்லது மண்டபத் தனியார் வகுப்பு (Common or Hall tuition class). இம்மூன்றாவது முறையில் சுமார் 50 – 1000 வரையிலான மாணவர்களை பெரிய அறை ஒன்றில் உள்ளடக்கிப் பாடங்களைப் பொதுவாகக் கற்பிக்கும் முறையாகும். இலங்கையில் பெரும்பான்மையான தனியார் வகுப்புக்கள் இம்மூன்றாவது முறையிலேயே இடம்பெறுகின்றன.

இலங்கையில் அரச பாடசாலைகளைச் சேர்ந்த கனிஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் பாடசாலைக் கல்வியினைப் பொருட்படுத்தாது, தனியார் வகுப்புக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற நிலைமை காணப்படுகின்றது. அத்தோடு, வருமானத்தில் நாற்பத்தைந்து வீதத்தைத் தனியார் வகுப்புக்களுக்குச் செலவுசெய்கின்றனர் ( Institute of policy Studies, 2017). இந்தவகையில், 75 வீதமான அரச பாடசாலை மாணவர்கள் இலங்கையில் தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர் என்பதனை ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

இந்த ஆய்விற்காகச் சில நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மீளாய்வு செய்யப்பட்டன. அவை வருமாறு :

1. ப.சந்திரசேகரம் என்பவரால் எழுதப்பட்ட **"கல்வித் தத்துவம்"** (1975) என்ற நூலில் கல்வியின் வரையறைகள், கல்வி தொடர்பாக பிளேட்டோ, ரூசோ, கார்ள்மாக்ஸ், ஜோன் டுயீ, ஆகிய சிந்தனையாளர்கள் கூறிய கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கார்ள்மாக்ஸின் கருத்துப்படி மனிதனில் உட்கிடையாகப் புதைந்து கிடக்கும் முழுமையினை விருத்திசெய்வதே கல்வியாகும். மார்க்ஸ்சைப் பொறுத்தவரை கல்வி என்பது விழுமியங்களை உள்ளடக்கியதாக உள்ளது. மார்க்ஸைப் பொறுத்தவரை கல்வியின் நோக்கம் உண்மையை அறிவது மட்டுமல்ல, உலகை மாற்றுவதும் ஆகும். "முதலாளித்துவ சமுதாயத்தில் அரசியல் முறையானது அக்காலத்தில் நிலவும் சமுதாயக் கல்வி சமயச் சிந்தனைகளாலும் பொருளாதார அமைப்பின் இயக்கத்தாலுமே வரையறை செய்யப்படுகின்றது" என்ற மாக்ஸின் கருத்து இலங்கைக் கல்வி முறைமையில் தனியார் கல்வியின் செயற்பாட்டினைப் பிரதிபலிப்பதாக உள்ளது.
2. வ.ஆறுமுகம் என்பவர் எழுதிய **"கல்விப் பாரம்பரியங்கள்"** (2000) எனும் நூலில், கல்வி அன்றும் இன்றும் என்ற கட்டுரையில் குடும்பச் சூழல் பிள்ளையின் கல்வியில் தாக்கம் செலுத்துவதற்கான காரணங்களும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று, ஆரம்ப காலக் கல்வியின் நிலை, தற்கால நவீன கல்வியின் நிலை என்பன குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய காலத்தில் இலவசமாக வழங்கப்பட்ட கல்வி இன்று பணத்திற்காக விற்கப்படும் பண்டமாக மாறியுள்ள நிலையும் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
3. மா.செல்வராஜா என்பரால் எழுதப்பட்ட **"கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்"** (2005) என்ற நூலில், கல்வியின் வரைவிலக்கணம், கல்வியின் நோக்கம், ரூசோவின் கல்வித் தத்துவம் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது, ஆரம்ப காலத்தில் கல்வியின் நோக்கம் எண், எழுத்து, வாசிப்பு என்ற அளவிலேயே காணப்பட்டது. அத்துடன் அரச குலத்தவரும் செல்வந்தருமே கல்வியினைப் பெற்றுக்கொண்டனர். பெரும்பாலான பொது மக்கள் கல்வியறிவற்றவர்களாகவே காணப்பட்டனர். இலவசக் கல்வி அனைவருக்கும் சமமாக கல்வி வழங்கப்பட வேண்டும், கல்வி அனைவரதும் உரிமை என்ற நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது. தற்காலத்தில் அந்த நிலை மாறி கல்வியானது பணத்திற்கு வழங்கப்படுமளவிற்கு சமூகமானது மாறியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.
4. சபா. ஜெயராசா **"கற்றல் இடர்பாடுகளும் தீர்வுகளும்"** (2012) என்ற நூலில், ஒடுக்கப்பட்டோரும் கல்வியும் என்கின்ற தலைப்பினூடாக சமூகத்தில் கல்வியின் நிலை தொடர்பாகவும் கல்வியில் ஏற்படும் சமத்துவமின்மை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அதாவது, முதலாளித்துவ சுரண்டற் கட்டமைப்புடன் இணைந்த கல்விமுறைமை வறிய மாணவர்களைத் தொடர்ந்தும் வறுமையில் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றது. வறிய பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் தொடர்ந்து அக்கறையற்றிருக்கும் நிலையானது பொருளாதார இடர்களினால் தொடர்ந்தும் நீடித்துக்கொண்டிருக்கின்றது. இலவசக் கல்வியானது

நடைமுறையில் செயலிழக்கத் தொடங்கியுள்ளது. சட்டபூர்வமான முறையில் கட்டணங்கள் அறவிடப்படுவதற்குரிய சிந்தனைகள் வாய்ப்பு மிக்கோரிடம் தலைதூக்கி வருகின்றன. வாய்ப்பு மிக்கோரே கல்விக்குரிய தீர்மானங்களை உருவாக்குவோராகவும் செயற்படுத்துவோராகவும் இருப்பதனால், கல்விச் செயன்முறையானது சமூகச் சமமின்மையை மீள் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

5. மா.கருணாநிதி என்பவரது "**கற்றல் - கற்பித்தல் : மேம்பாட்டுக்கான வழிமுறைகள்**" (2008) என்ற நூலில் உள்ள கல்விச் செயற்பாடுகளில் அதிகரித்து வரும் பெற்றோரின் வகிபங்கு என்ற கட்டுரை பாடசாலைக் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றம், கல்வியில் பெற்றோரின் வகிபங்கு, மாணவர்களின் பெறுபேறுகள், வினையாற்றல்களை அளவிடுவதற்கான பல்வேறு முறைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. க.சின்னத்தம்பி, கல்விச் சேவை பொன் விழா மலரில் எழுதிய "**பாடசாலைகளின் தோல்வியும் கல்வியின் வீழ்ச்சியும்**" (2010) என்கின்ற கட்டுரையில், வறிய சிறுவர்களது கல்வி இன்று பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. வறிய பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்துவது குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் உயர் அந்தஸ்தும் செல்வச் செழிப்புமுள்ள பிள்ளைகள் பெறும் கல்வி வாய்ப்புக்கள் வறிய பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. இதனால் வறிய பிள்ளைகளின் கல்வித் தர வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகக் காணப்படுகின்றது எனக் கூறியுள்ளார்.

7. திருநாவுக்கரசு கமலநாதன் என்பவர் "**கல்வியியற் பதிவுகளும் பண்புசார் விருத்தியும்**" (2009) என்ற நூலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அடையாளங் காணப்படும் அண்மைக் காலக் கல்விப் பிரச்சினைகள் சில எனும் தலைப்பில் தற்கால சமூகத்தில் மாணவர்கள் கல்வியில் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மேலும், மன அழுத்தத்துடன் அதிக மாணவர்கள் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பல தீய பழக்கங்கள், பெரியோரை மதியாமை, தான்தோன்றித்தனமான செயற்பாடுகள், பாடசாலையில் கற்பிக்கப்படும் ஆசிரியர்களில் பற்றின்மை போன்ற செயற்பாடுகள் மாணவ சமூகத்தைத் தழுவிக் கொண்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

8. ஹசினி லேக்கம்வசம் (2021) என்பவர் "**இலங்கையில் கொவிட் ஆளுகையின் பிரதிபலிப்புக்கள்**" என்கின்ற நூலில் இலவசமில்லாத கல்வி என்கின்ற தலைப்பில் இன்றைய காலகட்டத்தில் சிறப்பான வாழ்க்கை என்பதை அடைந்துகொள்வதற்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகப் பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்கின்ற நிலையானது சாதாரணமாக்கப்பட்டுள்ளது என்ற கருத்தை முன்வைத்துள்ளார். இது பணத்தை ஒரு தொழிற்பாட்டிற்கான மூலமாகக் கொள்ளும் விரிவாக்கப்பட்ட தனியார் மயப்படுத்தலுக்குள்ளாகும் கல்விப் பரப்புடன் இணைந்ததாக காணப்படுகின்றது எனவும் இலங்கையில் கல்வி நடவடிக்கையில் தனியார் வகுப்புக்களின் தாக்கமானது அதிகரித்து காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

9. சோ. சந்திரசேகரன் என்பவர் "**சமகாலக் கல்வி முறைகளின் சில பரிணாமங்கள்**" (2008) என்ற நூலில் வீழ்ச்சியடைந்து வரும் அரசாங்கப் பாடசாலைகளின் தொகை மற்றும் தனியார் உயர்கல்வி, சில சர்வதேச போக்குகள் என்கின்ற தலைப்பினூடாக தனியார் கல்வி நிறுவனங்களின் தாக்கம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளார்.

**ஆய்வுக் கட்டுரைகள்**

1. Asankha, (2011) என்பவர் எழுதிய **"Demand for private tuition classes under the free education policy. Evidence based on Sri Lanka"** என்கின்ற ஆய்வுக் கட்டுரையில் தனியார் கல்வி வகுப்புக்கள் சமூக ஏற்றத் தாழ்வுகளை அதிகரித்து இலவசக் கல்விக் கொள்கையின் நோக்கத்தை சேதப்படுத்துகின்றது எனவும் இலங்கையில் இலவசக் கல்வியின் நோக்கம் ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் வருமான மட்டத்தைப் பொருட்படுத்தாமல் சமவாய்ப்பு வழங்குவதாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தனியார் வகுப்புக் கல்வியானது இந்த நோக்கத்திற்குத் தீங்கு விளைவிக்கும் செயற்பாடாகும். மேலும், இந்த தனியார் வகுப்புக்கள் சமூகத்தில் இன ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2. Asanka (2012) எழுதிய **"Demand for Private tutoring in a free education country: The case of Sri Lanka"** என்ற ஆய்வுக் கட்டுரையில் இலங்கையில் இலவசக் கல்விக் கொள்கையின் கீழ் தனியார் கல்வி வகுப்புக்கள் ஒரு முக்கிய கல்வி பிரச்சினையாக காணப்படுகின்றது என்கின்ற விடயத்தினை மையமாக கொண்டு பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது, இலங்கையில் தேசிய பாடசாலைகளுக்கான தகுதித் தேர்வுகள் போட்டித் தன்மை வாய்ந்தனவாக காணப்படுகின்றமையானது இலங்கையில் தனியார் கல்வி வகுப்புக்களின் தோற்றத்தினை உருவாக்கியுள்ளது எனவும் பல பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை இத்தகைய தனியார் கல்வி வகுப்புக்களுக்குக் கல்வி கட்டணம் செலுத்தி அனுப்புகின்றார்கள் போன்ற பல முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. அஸ்றஜ் அஹமட். ஏ.ஆர் (2022) என்பவரால் எழுதப்பட்ட **"இலங்கையில் தனியார் வகுப்புக்களும் அதன் தாக்கங்களும்"** என்கின்ற ஆய்வுக் கட்டுரையில் தனியார் வகுப்புக்களின் நிலை தொடர்பாக குறிப்பிடப்படுள்ளது. அதாவது, பெரும்பான்மையான பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பணம் செலுத்தியே தனியார் வகுப்புக் கல்வியினை பெற்றுக்கொடுக்கின்றனர். இதனால் இலங்கையில் தனியார் வகுப்புக் கல்வி இலவசக் கல்வியைப் பாரிய சாவாலுக்குட்படுத்துகின்றது எனவும் 1995 – 1996 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் தனியார் கல்வி என்பது கல்வியில் ஆடம்பரமான ஒரு செயன்முறையாக காணப்பட்டது எனவும் பின்னர் 2006 – 2007 ஆம் ஆண்டுகளில் கல்வித் தேவையாக மாற்றப்பட்டது. இதனால் வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் தனியார் வகுப்புக் கல்வி சுமையாக மாறியுள்ளது எனவும் பல கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. Shandru Mariyadas எழுதிய **"Impacts of Advance Level Formal Education System by The Domination of Private Tuition class"** என்ற ஆய்வுக் கட்டுரையில் மாணவர்களின் கல்வியில் தனியார் கல்வியின் தாக்கம் பற்றிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது, கல்வி இலவசமாக்கப்பட்டமையால் இன்று அநேக மாணவர்களுக்கு அது அலட்சியமாக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெற்றோர்களின்

கௌரவம், பிரத்தியேக வகுப்புக்களின் வண்ணமயமான விளம்பரங்களும் கவர்ச்சிகளும், பல்கலைக்கழக அனுமதியில் போட்டி நிலவுகின்ற சூழலில் பிரத்தியேக போதனைகளை மாணவர் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக வந்துவிட்டமை, திறமை அடிப்படையில் வேலை வாய்ப்புக்கள், மாணவர்களின் நவநாகரிகப் போக்கு, எதிர்பாற் கவர்ச்சிகள் போன்றவை பின்னணிகளாகவிருந்து பிரத்தியேக வகுப்புக்களுக்கு ஊக்கிகளாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. Hapurachchi.H.D.S.R, (2020) என்பவரால் எழுதப்பட்ட **"The Impact of Private Tuition to the Economy of the Households in Sri Lanka"** என்ற ஆய்வுக் கட்டுரையில், இலங்கையில் குறிப்பாக தேசிய பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கும், பிரபல பாடசாலைகளில் சேர்ந்துகொள்வதற்குமான போட்டி காணப்படுவதனால் இலங்கையில் அண்மைக் காலமாக கல்விச் செலவீனங்கள் அதிகரித்து வருகின்றன. அதிலும் குறிப்பாக, தனியார் கல்வி வகுப்புக்களுக்கான செலவு அதிகமாகும். இது மிகப் பெரிய விகிதத்தை எடுத்துக்கொள்கின்றது. இலங்கை அரசாங்கம் கல்வித்துறைக்குப் பல வழிகளில் ஆதரவளித்த போதிலும், இலங்கையில் குடும்பங்கள் கல்விக்காக அதிக தொகையினைத் தொடர்ந்து செலவழித்து வருகின்றன. குறைந்த வருமானங்களைகட கொண்ட குடும்பங்கள்கூட கல்விக்காகக் கணிசமான தொகையைச் செலவுசெய்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (Hapurachchi, 2020 ).

குழந்தைகளின் கல்விக்காகப் பெற்றோர்கள் அதிகளவு நேரத்தைத் தியாகம் செய்கின்றனர். கல்விக்காகப் பெற்றோர்கள் பகுதி நேர வேலைகளைக்கூடச் செய்கின்ற நிலமை உருவாகியுள்ளது. இதனால் பெற்றோர்கள், பிள்ளைகள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இது ஒரு பாரிய பிரச்சினையாகும். அவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைக்காததால் தங்கள் கல்வி நடவடிக்கைகளால் முழு மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். இது அவர்களின் மூளைக்கும் ஆரோக்கியத்திற்கும் நல்லதல்ல. தனியார் கல்விக்காக அதிக செலவு செய்வதால் பெற்றோர்கள் தங்கள் எதிர்காலத்திற்காகப் பணத்தைச் சேமிக்க வாய்ப்பில்லை. இது ஒரு பாரிய பிரச்சினையைக் குடும்பத்தில் உருவாக்குகின்றது. தனியார் கல்விக்கான குடும்பச் செலவானது இலங்கையில் அதிகரித்துள்ளமை பாரிய பிரச்சினையாக உள்ளது (Hapurachchi, 2020 ).

அதிக வருமானம் உள்ளவர்கள் (மாதாந்த வருமானம் சுமார் 50000 – 75000) தனியார் வகுப்புச் செலவாக 27.5 வீதமும், குறைந்த வருமானம் உள்ள குடும்பங்கள் (மாதாந்த வருமானம் 20000) தனியார் வகுப்புச் செலவாக 13.5 வீதமும் செலவிடுகின்றனர். பணக்காரக் குடும்பங்கள் தமது பிள்ளையின் கல்விக்காக அதிக பணத்தை செலவிடுகின்றனர் (Hapurachchi., 2020 ).

மீளாய்வு செய்யப்பட்ட இலக்கியங்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் யாவற்றிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் பிள்ளையின் கல்வி விருத்திக்கு எவ்வாறு பங்களிக்கின்றது என்பது தொடர்பாகவும் சமகாலத்தில் கல்வியின் நிலை, மாணவர்களின் தேவை, குடும்ப சூழலின் பங்களிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது அடிப்படையில் பண்பு சார்ந்த ஆய்வாகக் காணப்படுகின்றது. அவ்வகையில், இந்தத் தலைப்புடன் தொடர்புபட்ட வகையில் வெளிவந்திருக்கின்ற ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், மாநாட்டு ஆய்வுகள் போன்ற இலக்கிய மூலங்களையும் வினாக்கொத்து, நேர்காணல், மையக்குழுக் கலந்துரையாடல், அவதானம் போன்ற கள ஆய்வு மூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், இவ்வாய்வானது பண்பு ரீதியானதாகவும் பண்பாட்டுக் கற்கை நெறி சார்ந்ததாகவும் இருப்பதன் காரணமாக வினாக்கொத்து முறை, நேர்காணல் முறை, அவதான முறை, மையக்குழுக் கலந்துரையாடல் முறை என்பன வரையறுக்கப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கான நேர்காணலுக்காகவும் வினாக்கொத்துக்காகவும் நோக்க மாதிரி, வசதி மாதிரி மற்றும் மையக்குழு முறை போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை மட்டுமன்றி இணையத்தள மூலங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

சேகரிக்கப்பட்ட தரவுகளை நிரற்படுத்திப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் அவை முக்கியமான தகவல்களாக மாற்றமடையும். எனவே, பகுப்பாய்வானது நேர்த்தியாகவும் தெளிவாகவும் இடம்பெற வேண்டியது அவசியமாகும். வினாக்கொத்தில் உள்ள வினாக்களுக்கான தரவுகள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், இவ் ஆய்வின் பகுப்பாய்வு முறையானது முன்னும் பின்னுமாக பல செயற்பாடுகளைக் கொண்டமைந்துள்ளது. தரவு வடிவங்களைத் தெரிவுசெய்து தரவுகளைச் சேகரித்ததன் பின்னர் அத்தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு குறித்துக் காட்டப்பட்டுள்ளன. வினாக்கொத்து ஊடாக மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் தகவலாக மாற்றப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணை ஆக்கம், முப்பரிமாண வரிப்படம், சலாகை வரைபுகள் போன்றவற்றின் வாயிலாக விளக்கப்படுகின்றது. பகுப்பாய்விற்காக Microsoft Excel முறை பயன்படுத்தப்படுகின்றது. நேர்காணல் மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் எண் ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விளக்கப்படுகின்றன.

தரவு சேகரிப்பின் மூலம் பெறப்பட்ட தரவுகளினை முன்வைத்தல் மற்றும் அதனைப் பகுப்பாய்வு செய்வதனைக் குறிக்கின்றது. இங்கு மாணவர்களிடம் இருந்து வினாக்கொத்தினூடாகப் பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தரவு முன்வைப்பு மற்றும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு தனியார் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியும் அதனால் மாணவர்களின் கல்வியில் ஏற்படுகின்ற தாக்கங்களும் அவற்றின்மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியும் அளவிடப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் ஆய்வுத் தகவல்கள் என இருவகைப்பட்ட தகவல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அதிகமான மாணவர்கள் தனியார் வகுப்புக் கல்வியை விரும்புபவர்களாகவும், அதேபோன்று பெற்றோர்களின் வற்புறுத்தலின்படி செல்பவர்களாகவும், பாடசாலைக் கல்வி முறையில் முழுமையான திருப்தி

இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர். தமது கல்வி முன்னேற்றத்திற்குப் பாடசாலைக் கல்வியினைவிட தாம் தனியார் கல்வி நிறுவனத்திலேயே அதிக விடயங்களைக் கற்றுக்கொள்வதாகவும் கூறினர். அதேசமயம் தனியார் கல்வி நிறுவங்களிற்குச் செல்வதனால் தமக்கான ஓய்வு நேரங்கள் கிடைப்பதில்லை எனவும், ஒரு விதமான கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் தெரிவித்தனர்.

பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின்படி தனியார் கல்வி நிலையங்களில் தமது பிள்ளைகள் கல்வி கற்றால்தான் சமூகத்தில் தமக்கு மதிப்பு என்கின்ற நிலை காணப்படுவதாகவும், தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக பரீட்சைகள், மாதிரி வினாக்கள், வழங்கப்படுவதனால் தமது பிள்ளைகள் இலகுவாகப் பரீட்சைகளை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டிருந்தனர். இவர்களின் மனநிலையும் சமூக மட்டத்தில் தனியார் கல்வியினை ஆதிரிப்பதாகவே காணப்படுகின்றது.

பாடசாலை ஆசிரியர்கள், கல்வியாளர்கள், அதிபர்கள் போன்றவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்கள் தனியார் கல்வியானது தற்கால சமூகத்தில் மறுக்கப்பட முடியாத ஒன்றாக உருமாறியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. மேலும், பாடசாலைகளில் தமக்குப் போதியளவு வசதி வாய்ப்புக்கள் இல்லை எனவும், நேரம் போதாது எனவும் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியில் ஈடுபாடு இல்லாமல் காணப்படுகின்றனர் என்வும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டினர்.

பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் மெய்யியல் ரீதியாக விமர்சன கோட்டிபாட்டு நோக்கில் குறிப்பிட்டால், சமகாலத்தில் பாடசாலைக் கல்வியினைவிட தனியார் கல்வியில் 80 வீதமான மாணவர்களின் தேடல் காணப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அதுமட்டுமன்றி, தனியார் கல்வி நிறுவனங்கள் அதிகளவு பணத்தினை வசூலித்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் எவ்வழியிலும் பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்கின்ற மனநிலையில் காணப்படுகின்றனர். பாடசாலையில் வசதிகள் குறைவாக காணப்படுகின்றது என்றால், தனியார் வகுப்புக்களில் அதனைவிட வசதிகள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. ஆகவே, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், தனியார் வகுப்புக் கல்வியினால் ஒரு புறம் மாணவர்கள் கல்வியில் முன்னேறினாலும் அதே சமயம் மாணவர்களின் நடத்தைகள் சீரழிந்து செல்வதும் உடல், உள ரீதியாக மாணவர்கள் பாதிக்கப்படுவதனையும் நாம் மெய்யியல் சான்றாக குறிப்பிடலாம்.

மெய்யியல் ரீதியாக குறிப்பிட்டால் கார்ள் மாக்ஸினது முதலாளித்துவ கொள்கைக்கு ஒப்பானதாகவே இன்றைய சூழலில் தனியார் கல்வியின் நிலை காணப்படுகின்றது. ஏனெனில், முதலாளித்துவ சமூகத்தில் பணத்திற்காக விற்கப்படுகின்ற பண்டங்களாக மனிதர்கள் பயன்படுத்தப்பட்டனர். அதேபோன்று சமகாலத்தில் கல்வியானது வியாபாரப் பண்டமாக காணப்படுகின்றது. பாடசாலையோடு ஒப்பிடுகையில் சமூகத்தில் தனியார் கல்வியே முதன்மையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றமையால் பாடசாலையில் முழுமையாக அல்லது கவயீனமாக கற்பிக்கும் கற்பித்தல் முறைகள் அதிகளவில் காணப்படுகின்றமையை நாம் இங்கு அவதானிக்கக் கூடியதாக காணப்படுகின்றது. இதனால் தனியார் வகுப்புக்களில் கட்டணம் செலுத்திக் கல்வி கற்க முடியாத மாணவர்களின் கல்வி கேள்விக் குறியாக்கப்படுகின்றமை

குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலையானது எதிர்காலத்தில் கல்விசார் கொள்கைகளிலும் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுகின்றது.

**முடிவுரை**

அதிக மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்குச் சென்று கல்வியினைக் கற்பதற்கு ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்ற போதிலும், அவர்களின் குடும்ப சூழலானது பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்டுக் காணப்படுவதனால் அவர்களால் பாடசாலைக் கல்வியினை மாத்திரமே முழுமையாக நம்பியிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி, பாடசாலையில் அவர்களுக்கான கல்வி ஒழுங்குமுறையில் வழங்கப்படுவதில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வாழுகின்ற மக்களில் அதிகமானோர் நடுத்தரக் குடும்பத்தினராகவே காணப்படுகின்றனர். இந்நிலையில், தனியார் வகுப்புக்களுக்குச் செல்லுகின்ற மாணவர்களில் பலர் தனியார் வகுப்புக்கான பணத்தினைச் செலுத்துவதில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, இக்குடும்பங்களில் காணப்படுகின்ற பிள்ளைகள் தனியார் வகுப்புக் கற்றலினால் உளவியல் ரீதியான பல தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது. குறிப்பாக அதிக கவலை, அச்சம், தாழ்வு மனப்பான்மை, எல்லோருடனும் சகஜமாகப் பழக முடியாமை, விரக்தி, இலகுவில் கண்ணீர் விடுதல் போன்ற உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேசமயம் தனியார் வகுப்புக்கள் நீண்ட நேரங்கள் நடாத்தப்படுவதனாலும், சில வேளைகளில் விடுமுறை வழங்கப்படாததாலும் மாணவர்களுக்கு ஆலயங்களுக்குச் செல்லவோ திருவிழாக்களில் கலந்துகொள்ளவோ சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இதனால் மாணவர்களாகிய இளம் சமுதாயத்தினருக்கு பாரம்பரிய கலாசார விடயங்கள் கடத்தப்படுவது தடைப்படுகின்றது. அத்துடன் மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதாக பெற்றோர்கள் எண்ணியிருக்க, தமது நண்பர்களுடன் சேர்ந்து தீங்கான விடயங்களைப் பழகிக்கொண்டும் தொலைபேசி போன்ற இணையத்தளப் பாவனைகளின் அதிகரித்த பாவனையினால் அவர்களின் வாழ்க்கையினைச் சீர்குலைத்துக் கொண்டும் காணப்படுகின்றனர். இவை கலாசாரா ரீதியாக ஏற்பட்டுள்ள தாக்கங்களைச் சுட்டிக்காட்டுவனாக விளங்குகின்றன. தனியார் வகுப்புக்களுக்குச் செல்கின்ற மாணவர்கள் சிலவேளை பாடசாலைக்கு வந்தாலும், அங்கு ஆசிரியர் கற்பிக்கின்ற பாடங்களை அவதானிப்பதில் அக்கறை செலுத்தாமல் ஏனைய மாணவர்களின் கல்விக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதைக் காணமுடிகின்றது. குறிப்பாக, வசதியற்ற மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைகின்றது. எந்தவித வசதிகளுமற்ற, பாடசாலையை மட்டுமே நம்பிக் கல்வி கற்கின்ற மாணவர்களுக்குச் சரியான முறையில் கல்வி வழங்கப்படாமல் இருப்பதனால் அவர்களின் கல்வி வீழ்ச்சியடைகின்றது.

அதேபோன்று ஆசிரியர்கள் சிலர் தனியார் கல்வி நிறுவனங்களின் ஊடாக பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். இதனால் ஒரே ஆசிரியர் இரண்டு இடங்களில் இரண்டு முறையாகக் கற்பிக்கின்ற நிலைமை தோன்றியுள்ளது. அதாவது, ஆசிரியர்கள் பாடசாலைகளில் மேலோட்டமாகக் கற்பித்துவிட்டுத் தனியார் வகுப்புக்களில்

மாணவர்களைக் கவர்வதற்காக முழுமையாகவும் ஆழமாகவும் கற்பிக்கின்றனர். மேலும், பாடசாலையில் ஒழுக்க வீழ்ச்சி ஏற்படுகின்றது. இவ்வாறாக, இப்பிரதேசத்தில் வாழுகின்ற மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களினால் குறிப்பாக, பொருளாதார ரீதியாகவே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

**நூல்கள்**


அனஸ்.எம்.எஸ்.எம்., (2006), மெய்யியல்: கிரேக்கம் முதல் தற்காலம் வரை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

அலிஷார்,எம்.ஏ.எல். யூ. அல்ஹாஜ். (1995), கல்வியியல் நோக்கு.

அனந்தராஜ்,ந., (2005), தேசியத்தை நோக்கிய கல்வி, நந்தி பதிப்பகம்.

அருள்மொழி. செ., (2008), கல்வி ஆய்வு முறைகள், எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.

ஆறுமுகம்.வ., (2006), கல்விப் பாரம்பரியங்கள், உயர் கல்விச் சேவைப் பதிப்பகம்.

இராஜேஸ்வரன்.ப., (2003), கல்வியியலாளன், கல்வியியில் வெளியீட்டு நிலையம் யாழ்ப்பாணம்.

ஜெயராசா,சபா. (2006), கல்வியில் புதிய சீர்திருத்தங்கள், அகவிழி வெளியீடு, கொழும்பு.

ஜெயராசா. சபா., (2008), இலங்கையின் கல்வி வரலாறு, சேமமடு பதிப்பகம், கொழும்பு.

ஜெயராசா, சபா. (2008), கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

ஜெயராசா.சபா., (2011), கல்வியில் எழுவினாக்கள், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

ஜெயராசா.சபா., (2012), கற்றல் இடர்பாடுகளும் தீர்வுகளும், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.

ஜெயராசா. சபா., (2006), சமகாலக் கல்வி வளர்ச்சி, அகவிழி 3, கொழும்பு.

ஜெரே ப்ரோ.ஃ.பி. (2007), கற்பித்தல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

ஜெமீல், எம்.எச்.எஸ். (1990), கல்விச் சிந்தனைகள், தமிழ் மன்றம்.

கணேசராசா.க., (2020), மெய்யியல் பிரச்சினைகள், வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம். இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கமலநாதன்.தி., (2009), கல்வியியற் பதிவுகளும் பண்புசார் விருத்தியும், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

கருணாநிதி.மா., (2008), கற்றல் கற்பித்தல்: மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.

கினிகே,எல். ஐ. (2008), புதியகலைத் திட்ட நோக்கமும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும்.

கோணேஸ்வரன்.சி., சமூகவியல் சிந்தனைகள், குமரன் பதிப்பகம், கொழும்பு.

சண்முகநாதன்.கு., (2015), கல்வி மெய்யியல், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம் யாழ்ப்பாணம்.

**ஆய்வுக் கட்டுரைகள்**

அஸ்றஜ் அஹமட். ஏ.ஆர்., (2022). இலங்கையில் தனியார் வகுப்புக்களும் அதன் தாக்கங்களும்: ஓர் சமூகவியல் விமர்சன ஆய்வு. KALAM International Research Journal. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம். Retrieved from http://www.researchgate.net/publication/.

அலிஷானா. (2010). 2004-2009 வரை கல்முனை மாநகரப் பிரதேசத்தில் இடைநிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வி அபிவிருத்திக்கான தனியார் கல்வி நிறுவனத்தின் பங்கு பற்றிய ஆய்வு. வெளியிடப்படாத ஆய்வறிக்கை (B.A), துறை - சமூக அறிவியல். இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்).

அசங்கா, பி. (2012). ஒரு இலவச கல்வி நாட்டில் தனியார் டேட்டரிங் தேவை: இலங்கையின் வழக்கு. https://www.researchgate.net/publication/258521104.

Asanka, P. (2012). Demand for private tutoring in a free education country: the case of Sri Lanka. Retrieved from http://www.researchgate.net/publication/.

Asankha, (2011)., Demand for private tuition classes under the free education policy. Evidence based on Sri Lanka. National Graduate Institute for policy Studies. Retrieved from http://mpra.ub.uni-muenchen.de/31969/.

Bra, M & Kwok, P. (2003). Demand for private supplementary tutoring: Conceptual considerations, and socioeconomic patterns in Hong Kong. Economic Education Review. Retrieved from http://www.sciencedirect.com/science/article/abs/pii/.

Chopra, M., (2009) Private tution classes and Schools Education Perspective, Guru Gobind Singh Indrap rastha http://www.legalserviceindia.com University. Delhi. Available from: http://www.care.org/.

Damayanthi, B.W.R. (2017). Economics of private tutoring in SriLanka: A Phenomenologyical study. Journal of Education and Practice. Retrieved from http://www.iiste.org/.

De Silva, W.A. (1994) Extra – school Tutoring in the Asian Context with Special Reference to SriLanka, Department Research, National Intitute of Education, Maharagama, SriLanka.

Giray, B& Aysit, T. (2014). Does Private tutoring increase students academic performance form Turkey. Discussion paper series.SDD.

Hapurachchi.H.D.S.R., (2020), The Impact of Private Tuition to the Economy of the Households in Sri Lanka. Social Science & Humanities, Aquinas College of Higher Studies, SriLanka. Retrieved from http://www.researchgate.net/publication/.

Khim Raj Subedi. (2018), Shadow Education:A Role of Private Turoring in Learning. International Journal of Humanities and social sciences.

Shandru,M. (2016). Impacts of Advance Level Formal Education System by The Domination of Private Tuition class. 6th Internaional Symposium 2016. South Eastern University of Sri Lanka. Retrieved form http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/.

Nayakkara, G.L.S., and Ranaweera, M. (1994) Impact of private Tuition and the Educational Challenges of the 21st Century, Economic Review .

# ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்வதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் பங்களிப்பு

**T. Puviraj [1], R. Thakshaayini [2]**

Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka [1,2].

*puvipuvi288@gmail.com* [1]

*thakshaayinir@esn.ac.lk* [2]

**ஆய்வுச் சுருக்கம்**

ஆசிரியர்களிடையே வாண்மைத்துவத் தேவையானது காலத்துக்குக் காலம் மாறிவருகின்ற நிலையில், ஆசிரியர்களிடம் வாண்மைத்துவத்தை அதிகரிக்கும் நோக்குடன் கல்வி அமைச்சினால் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் 2001ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டன. குறித்த நிலையங்களின் பிரதான நோக்கங்களில் ஒன்றான ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்தல் எனும் நோக்கம் முழுமையாக அடையப்படாமை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இந்நிலையில், ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்வதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் எவ்வாறான பங்களிப்பினை வழங்குகின்றன என்பதைக் கண்டறியும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மூன்று ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான மாதிரிகளாக ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் முகாமையாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், 445 ஆசிரியர்களில் இருந்து நியமப்படுத்தப்பட்ட Slovin மாதிரித் தெரிவின் 8% Error Tolerance (level) அடிப்படையில் 116 ஆசிரியர்கள் மற்றும் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள 227 பாடசாலை அதிபர்களில் இருந்து 10% ஒதுக்கீட்டு மாதிரி அடிப்படையில் 23 அதிபர்களுடன் மொத்தமாக 145 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இம்மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் ஆவணங்களினூடாக அளவுரீதியாகவும் பண்புரீதியாகவும் தரவுகள் பெறப்பட்டன. அவை SPSS மூலம் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு பரம்பலின் சதவீதம், கூட்டலிடை என்பன கணிக்கப்பட்டதுடன், Microsoft Excel மூலம் அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக்காட்டப்பட்டுக் கலந்துரையாடலும் செய்யப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கேற்ற செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படுவது குறைவு ( $\bar{X}$ = 2.32), வாண்மைத்துவ விருத்திக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் விளைதிறன் குறைவு ( $\bar{X}$ = 2.18) போன்ற முடிவுகள் கிடைக்கப்பெற்றன. இதற்குப் பிரதானமான காரணங்களாக திறன் விருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்குச் சரியான முக்கியத்துவம் வழங்கப்படாமை, வளப்பற்றாக்குறை, பயிற்றப்பட்ட வளவாளர்கள் இன்மை ( $\bar{X}$ = 4.16) போன்றவை கண்டறியப்பட்டன. அத்துடன் ஆசிரியர் வாண்மைத்துவத்தை விருத்தி செய்வதன் அவசியத்தை ஆசிரியர்களுக்கு எடுத்துக்கூறல், குறித்த நிலையங்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்தல், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளைச் செயன்முறைப்

பயிற்சியினூடாக வழங்குதல், பயிற்றப்பட்ட வளவாளர்களைப் பயன்படுத்தல் முதலிய விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *- ஆசிரியர், வாண்மைத்துவம், விருத்தி, ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையம்.*

**அறிமுகம்**

"ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் பங்களிப்பு" எனும் தலைப்பில் அமைந்திருக்கும் இந்த ஆய்வானது ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் குறிக்கோள்களையும் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இன்றைய நவீன சூழலில் இலங்கையிலும் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் மாணவர்களிடம் பல்வேறுபட்ட திறன்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தம்முடைய வாண்மைத்துவத்தை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஆசிரியர்கள் தம்முடைய வாண்மைத்துவத்தை மேம்படுத்துவதனூடாக கல்வியினுடைய பண்புத்தரத்தை மேம்படுத்த முடியும். இதனால் இலங்கையில் ஆசிரியர் வாண்மைத்துவத்தை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒரு செயற்பாடாக இலங்கையில் ஒரு கல்வி வலயத்துக்கு ஒரு நிலையம் என்ற அடிப்படையில் நாடு பூராகவும் 2001ஆம் ஆண்டில் 84 ஆசிரியர் நிலையங்கள் உருவாக்கப்பட்டு, ஆசிரியர்களின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது 2019 ஆம் ஆண்டில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இன்று நாடுபூராகவும் 112 மத்திய நிலையங்கள் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளையின் கீழ் இயங்கி வருகின்றன.

ஆசிரியர் தமது வாண்மைத் தொழில் அபிவிருத்திக்காக அளிக்கப்படும் ஆசிரியர் கல்வியின் தரத்திலேயே ஆசிரியர் பண்பு பெரிதும் தங்கியுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டே கல்வியின் பண்புத்தரமும் அதிகரிக்கின்றது. எனவே, சேவைக்கு முந்திய அடிப்படை ஆசிரியர் கல்வி மற்றும் தொடர் ஆசிரியர் கல்வி போன்ற விடயங்களில் அண்மையில் எடுத்துரைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் முக்கியமாக வகுப்பறையில் மிகவும் திறமையாகச் செயலாற்றுவதற்கு வேண்டிய தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்வதில் அவருக்கு உதவுவது தொடருறு ஆசிரியர் கல்வியின் நோக்கமாகும். பாடசாலைத் தொகுதியில் ஆசிரியர்களுக்காக தேசிய கல்வி அதிகார சபையினதும், கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி பிரிவினதும், தேசிய கல்வி நிறுவனங்களின் வழிகாட்டுதலின் கீழ் தொடருறு ஆசிரியர் கல்வியைத் திட்டமிடுவதில் முக்கிய பங்களிப்பைச் செய்வதற்கு நிறுவப்பட்ட ஒருவகை நிறுவனங்களே இந்த ஆசிரியர் நிலையங்களாகும் (ஆசிரியர் நிலையங்களுக்கான கைநூல், 2001).

ஆசிரியர் வாண்மைத்துவச் செயல்பாடுகள் பின்வரும் இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன:

- ஆசிரியர்களின் தொடக்கநிலை வாண்மைத்துவக் கல்வி: இது ஆசிரிய நியமனம் கிடைத்தவுடன் முதன் முதலில் பெற்றுக்கொள்கின்ற கல்வியாகும். வகுப்பறைக்குச் செல்வதற்கு முன்பாக கற்பித்தல் அனுபவம் எதுவுமின்றி, இக்கல்வியை ஆசிரியர் பெற்றுக்கொள்வதாகும். ஆரம்ப காலத்தில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியருக்கான முன்சேவைப் பயிற்சி இதற்குச் சிறந்த உதாரணமாகும்.
- ஆசிரியர்களின் தொடருறு வாண்மைத்துவக் கல்வி: ஆசிரியர்களின் சேவைக்காலத்தில் கிரமமாக வழங்கப்படுகின்ற வாண்மைத்துவக் கல்வியை இது குறிக்கின்றது. தற்போது ஆசிரிய வாண்மைத்துவ நிலையங்களில் நடைபெறும் தடைதாண்டல் வகுப்புக்கள் இதனுள் அடங்கும். இதனூடாக மீளக்கற்றல், புதியன புகுதல், இற்றைப்படுத்தல் என்பன நடைபெறுகின்றன. மாற்றமுறுகின்ற சீர்திருத்தங்கள், தகவல் தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி முடிவுகள் என்பனவற்றை இவற்றினூடாக ஆசிரியர் அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது (ஞானரத்தினம், 2024).

இதன் அடிப்படையில் ஆசிரியர்களை வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்குத் தயார்படுத்துதல், பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆலோசனை வழங்குதல், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் செயன்முறையினை முன்னெடுத்தல், பாடசாலையுடனான சமூக உறவைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஆசிரியர் பயிற்சித் தேவையினைப் பூர்த்திசெய்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்ற ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களினால் அடைய எதிர்பார்க்கும் நோக்கங்களில் முதன்மையானதாகக் காணப்படும் ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்தி செய்வதை வெற்றிகரமாக அடையச்செய்வதில் எவ்வாறான பங்களிப்பினை வழங்குகின்றன என்பதை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வித்துறையில் ஆசிரியர் பயிற்சித் தேவைகள் முறையாகப் பூர்த்திசெய்யப்படுவது குறைவாகவே காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் பின்வரும் விடயங்களை ஆய்வுப் பிரதேசத்தில் ஆய்வாளனால் அடையாளம் காணப்பட்ட ஆய்வுப் பிரச்சினையாக முன்வைக்கலாம். பின்வரும் ஆய்வுமுடிவுகள் இதனை தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

ஆசிரியர்களின் சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்குபற்றுவோரைக் கவராமையாலும், உட்கட்டமைப்பினதும் இயற்பொருள் வளங்களதும் போதாமையாலும், விரிவுரைகள் தேவைகளை நிறைவுசெய்யத் தவறுகின்றன. விரிவுரைகள் பொருத்தமற்றுள்ளமை மற்றும் பிழைப்பூதியமும் பயணக்கொடுப்பனவும் பிற சலுகைகளும் பங்கேற்போரை ஊக்குவிக்கப் போதியளவில் இல்லாமை ஆசிரியர் வாண்மைத்துவ விருத்திக்குத் தடையாக உள்ளன (இலங்கையில் தேசிய பொதுக் கல்விக் கொள்கைக்கான முன்மொழிவுகள், 2016).

ஆசிரியர்கள் தமது தொழில் முன்னேற்றத்தைத் தமது கற்றலில் சேர்ப்பதில் எதிர்மறையான பார்வையைக் கொண்டுள்ளனர் மற்றும் அவர்கள் அங்கு இருக்கக்கூடாது என்று

நம்புகிறார்கள் அல்லது அவர்கள் வேறொருவரின் பொறுப்பு என்றும் மாறாக, அதிகமாக தமது திறனை வெளிப்படுத்தும் ஆசிரியர்கள் நேர்மறையான அணுகுமுறைகளின் ஊடாக அவர்களின் கற்பித்தல் அணுகுமுறைகளை மாற்றியமைக்க அதிக வாய்ப்புள்ளது. அத்துடன் ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவம் தொடர்பில் எவ்விதமான கரிசனையும் காட்டுவதில்லை என்பது பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது (Luke and Grosche, 2018).

ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்திக்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், குறித்த நிலையங்கள் உருவாக்கப்பட்ட நோக்கங்களில் ஒன்றான ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்தி செய்தலானது அடையப்படுவதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுகின்றன. பிரதானமான ஐந்து குறிக்கோள்களை அடையும் நோக்கில் இந்த நிலையங்களின் செயற்பாடுகள் திட்டமிடப்படுகின்ற போதிலும், அவற்றில் ஒரு சில நோக்கங்களைத் தவிர ஏனைய நோக்கங்கள் முழுமையாக அடையப்படுவதில்லை என்பது இங்கு பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

அத்துடன் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் பெரும்பாலும், வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளை மட்டும் மையமாகக் கொண்டு காணப்படுகின்றமை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவத் திறன்களை வெறுமனே வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளில் தோற்றி அவற்றில் சித்தி அடைவதன் மூலமாக மட்டும் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் உருவாக்கப்பட்ட நோக்கங்களில் ஒன்றான வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்தி செய்கின்றமை முழுமையாக அடையப்படாமை என்பன இங்கு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. மேற்குறித்த பிரச்சினையை மையமாகக் கொண்டதாக ஆய்வு காணப்படுகின்றது.

### ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் அவை உருவாக்கப்பட்ட நோக்கங்களில் ஒன்றான ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்தல் என்பதை அடைந்துகொள்வதற்காகப் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்கின்றபோதிலும், அந்த நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை.

### ஆய்வு நோக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்தல் எனும் நோக்கினை அடைந்துகொள்வதில் எதிர்கொள்கின்ற சவால்களை இனங்கண்டு, அவற்றை வெற்றிகரமாக அடைந்துகொள்வதற்குப் பொருத்தமான ஆலோசனைகளை முன்வைப்பது ஆய்வின் நோக்கமாகும்.

### சிறப்பு நோக்கங்கள்

1. ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கத்தின் முக்கியத்துவத்தை அறிதல்.

2. ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் குறித்த நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்கின்ற செயற்பாடுகளை இனங்காணல்.
3. ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் செயற்பாடுகளின் ஊடாக ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கம் அடையப்படுவதில் உள்ள சவால்களைக் கண்டறிதல்.
4. ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கம் அடையப்படுவதில் உள்ள சவால்களை இழிவளவாக்கி, அதனை வெற்றிகரமாக அடைந்துகொள்வதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

**இலக்கிய மீளாய்வு**

**ஆசிரியர் கல்வி**

Alexandron and Swaffield ஆகியோரால் 2014 ஆம் ஆண்டில் ஆசிரியர் தலைமைத்துவம் மற்றும் தொழில்முறை மேம்பாடு எனும் தலைப்பில் 476 ஆசிரியர்களை மாதிரியாகக் தெரிவுசெய்து அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் கல்வி என்பது ஆசிரியர்களின் தொழில்முறை வளர்ச்சிக்குப் பங்களிக்கும் ஒரு இடைநிலை வாழ்நாள் கற்றல் செயல்முறையாக கருதப்படலாம் எனக் குறிப்பிடுகின்றார்.

Joanne Hill மற்றும் பலர் 2024 ஆம் ஆண்டு இங்கிலாந்தை மையமாகக் கொண்டு மேற்கொண்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களிடையே தனிப்பட்ட அபிவிருத்தி மற்றும் ஆசிரியர் கல்வி அனுபவங்களின் மதிப்பு எனும் ஆய்வானது உயர் கல்வி ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் விளையாட்டு கல்வி ஆசிரியர்கள் கற்பித்தல் பற்றிய தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டனர். அவர்களின் அறிவு எங்கிருந்து வந்தது. அவர்கள் கல்வி கற்பிக்கும் முறை எதை அடிப்படையாகக் கொண்டது முதலியனவற்றை ஆராய்கின்றது. இதன் முடிவாக ஆசிரியர் கல்வியில் வெறுமனே தொழில் மேம்பாடு மட்டும் போதாது, மாறாக சமூக நீதியை நோக்கிய கூட்டுத் தொழில்முறை மேம்பாடு சார்ந்த ஆசிரியர் கல்வி அவசியம் என்பது பரிந்துரைக்கப்பட்டது. இதனை முறையாக மேம்படுத்தக்கூடிய ஆசிரியர் கல்வி அவசியமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆசிரியர் வாண்மைத்துவம்**

ஓர் ஆசிரியர் தனது தொடர்ச்சியான கற்றலின் ஊடாக தனது கற்பித்தலிலும் தனது ஏனைய செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக புதுமைகளை ஏற்படுத்த முடியும். ஆக்கபூர்வத் தன்மையை வெளிப்படுத்த முடியும். ஒருவரது புதுமை ஆக்கபூர்வத் தன்மை என்பதை மற்றவரால் விரும்பப்படும்போது, அதனை வெளிப்படுத்திய ஆசிரியரின் தலைமைத்துவம் ஏனையோரால் பின்பற்றப்படுகின்றது (சுவர்ணராஜா, 2013).

தியாகராஜா (2005) என்பவர் ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிப்பதில் வாண்மைத்துவ உள்ளீடுகளின் பங்களிப்பு எனும் தலைப்பில் இலங்கையில் மேற்கொண்ட தமது

ஆய்வில், வினைத்திறன் மிக்க ஆசிரியரினால் விளைதிறன் உள்ள கற்பித்தலை மேற்கொள்வதற்குத் தர உள்ளீட்டுப் பயன்பாடு முக்கியமானதாகும். இவ் உபகரணப் பயன்பாட்டின் மூலம் விளக்கமான கற்றல் நிகழும் என்றும், இதனால் மாணவர்களின் அவதானிக்கும் திறன் அதிகரிக்கப்படுவதுடன் கற்றல் இலகுவாகவும் மகிழ்ச்சியாகவும் நடைபெறுவதுடன் மாணவர்களிடம் சரியான எண்ணக்கருவினை உருவாக்கிவிட முடியுமெனக் குறிப்பிடுகின்றார்.

வாண்மை விருத்தி என்னும் பதமானது ஒருவர் தனது வாண்மைத்துவ வகிபங்கினை விருத்திசெய்தலைக் குறிக்கும். ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணியின் ஒழுக்க விழுமிய நோக்கங்களின் அடிப்படையில் மாற்றத்தின் முகவர் என்ற வகையில் தமது பொறுப்புக்கள், கடமைகளை மீள சிந்தனை செய்யவும் புதுப்பிக்கவும் நிறைவேற்றவும் உதவும் செயன்முறை எனவும், தமது அறிவு, திறன்களைப் பெற்றுக்கொள்ளவும் விளைகின்றனர். ஆசிரியர் வாண்மைவிருத்தியில் கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சியளித்தல், அறிவுரைகள், பண்புத்தர வட்டங்கள், செயல்வழி ஆய்வு, சகபாடிகள் மதிப்பீடு, ஏனைய உள்ளூர்ப் பாடசாலைகளுடனான இணைப்பு போன்றவை ஊடாக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செய்யப்பட முடியும் (தனராஜ், 2013).

**ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகள்**

ஆசிரியர் வாண்மைத் தேர்ச்சி எனப்படுவது காலங்காலமாகத் தாமாகவே பெற்றுக்கொண்ட அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளின் ஓட்டுமொத்த கூட்டமாக வெளிப்படுத்தப்படும் நடத்தைப் பாங்குகளாகும். அவற்றில் ஆசிரியரது நடத்தைக்குப் பொருத்தமான சமூகமயமாக்கல் உருவாகின்றது. அதனால் வாண்மைத்துவ ஆசிரியரது உன்னத நிலை வெளிப்படுகின்றது (பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்திக் கையேடு, 2019).

ஞானரெத்தினம் என்பவர் 2024 ஆம் ஆண்டு வெளியிட்ட ஆசிரியர் வாண்மைத்துவம் எனும் நூலில் ஆசிரியர் தொழில் வாண்மை தொடர்பாக ஐந்து தேர்ச்சிகள் முக்கியமானவை எனக் குறிப்பிடுகின்றார் :

1. தம் பணியில் விசேடத்துவம்
2. தம் பொறுப்பான பணிக்குப் பொருத்தமான நுட்ப முறைகளையும் தொழில்நுட்பத்தையும் அறிந்திருத்தல்
3. ஒழுக்கக் கோவைக்கான ஒரு நடத்தைசார் அமைப்புக் காணப்படல்
4. சேவையைப் பெறுவோரின் நம்பிக்கை சிதையாதவாறு செயற்படல்
5. தொழில்சார் குழுக்களின் ஒத்துழைப்புடன் செயற்படல்

**ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள்**

Liang, Juliana, Mendoza, Lim ஆகியோரால் 2023ஆம் ஆண்டு இந்தோனேசியாவை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தொழில்முறை கற்றல் சமூகங்களால் செயல்படுத்தப்படும் அளவில் ஆசிரியர் தொழில்முறை மேம்பாட்டை உள்ளூர்மயமாக்குதல்:

இந்தோனேசியாவில் உள்ள ஆசிரியர் கற்றல் மையங்கள் பற்றிய ஆய்வு எனும் ஆய்வில் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மாணவர்களின் கற்றல் ஈடுபாடு மற்றும் கற்றல் விளைவுகளுக்கான கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளை வடிவமைத்துச் செயல்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆசிரியர்கள் அத்தகைய பங்கை ஏற்றுக்கொள்வதற்கு, அவர்களின் கற்பித்தல் மற்றும் கற்றல் திறன் அவர்களின் வாழ்க்கை முழுவதும் கட்டமைக்கப்பட்டு ஆதரிக்கப்பட வேண்டும். முன் சேவையில் இருந்து தொழில்முறை மேம்பாடு வரை வாண்மைவிருத்தி நிலையங்களின் தேவை இருப்பினும், சில ஆசிரியர்களுக்குப் புவியியல் இருப்பிடங்கள் (தொலைதூர மற்றும் கிராமப்புறப் பகுதிகள்), பாலினம், சிறப்புத் தேவைகள் மற்றும் சமூக அரசியல் பிரச்சினைகள் (இடம்பெயர்ந்த சமூகங்கள், சிறுபான்மை இனத்தவர்) போன்ற விடயங்கள் காரணமாக வளர்ந்துவரும் மற்றும் வளரும் ஆசிய நாடுகளில் தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகள் இல்லை. அதே சமயம், ஆசியர்களை ஈடுபடுத்தும் மற்றும் தேவையான திறன்களுடன் அவர்களை மேம்படுத்தும் தரமான தொழில்முறை மேம்பாட்டு முன்முயற்சிகளின் பற்றாக்குறை உள்ளது. இதனால் ஆசிரியர் தமது கற்றல் திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்ற ஒரு கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களே இந்த ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் என குறித்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆசிரியர் வாண்மைத்துவம்சார் பிரச்சினைகள்**

Anderson and Boyle ஆகியோரால் 2019ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, அவுஸ்திரேலியாவில் 25 ஆண்டுகால உள்ளடக்கக் கல்வி பற்றிய பார்வையும் சிந்தனையும் எனும் ஆய்வில் தற்போதைய நடைமுறைக் கல்வி இலக்குகளை ஆசிரியர் நிலையங்கள் பூர்த்திசெய்யவில்லை குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்த நிலையங்களின் தோல்வியை வெளிப்படுத்துகின்றது. இதற்காகப் பல்வேறு காரணங்களையும் இந்த ஆய்வு முன்வைத்துள்ளது. முறையான ஆசிரியர் கல்வித் திட்டம் தயாரிக்கப்படாமை, அவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான போதியளவு நிதி ஒதுக்கப்படாமை, நிலையங்களில் பயிற்சி பெறுவதற்கும் கற்றுக்கொள்வதற்கும் ஆசிரியர்கள் விருப்பம் காட்டுவதில்லை மற்றும் ஆசிரியர் கல்வியில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆசிரியர் கல்வியில் காணப்படுகின்ற அதிக கால நீட்சி ஆசிரியர்களிடம் குறித்த நிலையங்கள் தொடர்பாக வெறுப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. அத்துடன் அரசினுடைய ஆதரவும் நிதி ஒத்துழைப்பும் குறைவாகக் காணப்படுகின்றன போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**ஆசிரியர் வாண்மைத்துவம்சார் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்**

Boyle and Sharma ஆகியோர் 2015ஆம் ஆண்டு இங்கிலாந்தில் மேற்கொண்ட பிரித்தானிய இதழ்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளடக்கக் கல்வி தொடர்பான உலகக் கண்ணோட்டங்கள் எனும் ஆய்வில் ஆசிரியர் வாண்மைத்துவ சவால்களுக்குத் தீர்வுகளாக அனைத்து கட்டங்களிலும் ஆசிரியர் கல்வியின் தரத்தை உறுதிப்படுத்துவதுடன் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நுணுக்கங்களைப் பற்றி விவாதிப்பதைவிட, வேலை செய்யுங்கள் பழைய நடைமுறைகளை நீக்குவதைக் கருத்தில்கொள்ள வேண்டும். இவ்வாறான

உத்திகளைப் பயன்படுத்துவதன் ஊடாக வகுப்பறையில் அனைத்து மாணவர்களுக்கும் ஒருங்கிணைத்த கல்வியை ஆசிரியர்கள் வழங்க முடியும். மேலும், ஆசிரியர் வாண்மைத்துவம்சார் பயிற்சிகள் வாண்மை விருத்திச் செயற்திட்டங்கள் என்பவற்றை மேற்கொள்வதன் ஊடாக சிறந்த கற்றலை மாணவர்களுக்கு வழங்க முடியும் என இந்த ஆய்வு குறிப்பிடுகின்றது.

21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர்களைத் தயார்படுத்துவதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பாக மேற்குறித்த பல்வேறு விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள போதிலும், ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் இன்றைய நவீன உலகில் ஆசிரியர்களை மேம்படுத்த எவ்வளவு முக்கியம் என்பது முறையாக ஆய்வுக்குட்படுத்தப்படாமை ஆய்வு இடைவெளியைத் தோற்றுவித்துள்ளது. இதனால் இவ் ஆய்வு தனித்துவமானதாகவும் முக்கியமானதாகவும் காணப்படுகின்றது.

**கோட்பாட்டுக் கட்டமைப்பு**

இணைப்பு வாதம் டிஜிட்டல் யுகத்தில் கற்றல் குறித்த மதிப்புமிக்க கண்ணோட்டத்தை வழங்குகிறது. கற்றல் செயல்பாட்டில் சமூக வலைப்பின்னல்கள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. கனெக்டிவிசத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், கற்பவர்கள் திறன்களையும் அறிவையும் பெறலாம். வேகமாக மாறிவரும் உலகிற்கு ஏற்ப வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்றுக்கொள்ள இணைப்புவாதம் உதவுகின்றது.

அந்த அடிப்படையில் டிஜிட்டல் யுகத்தின் கற்றலானது இணைப்பு வாதத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இதே அடிப்படையில் குறித்த ஆய்வுக்கும் இணைப்பு வாதத்திற்கும் இடையிலான தொடர்பினை எடுத்து நோக்குகின்றபோது, 21 ஆம் நூற்றாண்டுக்கான கற்றலானது நவீன தொழில்நுட்ப சாதனங்களை அடிப்படையாகக் கொண்ட டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படுவதனால், அதற்கு ஏற்ப ஆசிரியர் திறன்களும் வளர்ச்சியடைய வேண்டும். டிஜிட்டல் சாதனங்கள் மாணவர்களுக்கு வழங்குகின்ற கல்வி அறிவுக்கு இணையாக ஆசிரியர்களும் கற்பிக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு ஆசிரியர்களைத் தயார்படுத்தும் உயரிய பொறுப்பினை ஆற்ற வேண்டிய கடமை ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களுக்கு இருப்பதனால், அதனைச் சரியாக நிறைவேற்றுவதன் அவசியத்தை வெளிப்படுத்தும் வகையில் குறித்த ஆய்வில் இணைப்பு வாதம் (connectivism) சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வு வடிவம்**

கல்வியுடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக ஆய்விலக்கியங்களில் அளவை நிலை ஆய்வு பயன்படுத்தப்படுவதனால் அவ்வகை ஆய்வு வடிவமே இங்கும் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், பண்புசார் தரவுகளும் பகுப்பாய்வுக்கு

உட்படுத்தப்படுவதனால் கலப்பு அணுகுமுறை மூலம் ஆய்வு நோக்கம் முழுமையாக நிறைவு செய்யப்படக்கூடிய விதத்தில் ஆய்வு முறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களில் கல்குடா, மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி ஆகிய கல்வி வலயங்களில் காணப்படுகின்ற மூன்று ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டன. அதிக ஆசிரியர் தொகையைக் கொண்டிருத்தல், ஒப்பிட்டுரீதியில் அதிக வினைதிறன் கொண்டிருத்தல், பன்முகத்தன்மை கொண்டிருத்தல், புவியியல்சார் நிலத்தொடர்பு காணப்படுதல் போன்ற காரணங்களால் இந்த மூன்று நிலையங்களும் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டன.

**குடித்தொகையும் ஆய்வு மாதிரியும்**

ஆய்வு மாதிரிகளாக வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் மூன்று முகாமையாளர்களும், இந்த மூன்று ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களும் அமைந்துள்ள கல்வி வலயத்தினுடைய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூன்று பேரும் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டனர். குறித்த நிலையங்களில் இறுதியாக பயிற்சி பெற்ற 3-I, 2-II , 2-I ஆகிய தரங்களைச் சேர்ந்த 445 ஆசிரியர்கள் நியமப்படுத்தப்பட்ட Slovin மாதிரித் தெரிவின் அடிப்படையில் 8% Error Tolerance (level) அடிப்படையில் 116 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள 227 பாடசாலை அதிபர்களில் இருந்து ஒதுக்கீட்டு மாதிரி அடிப்படையில் 10% அதிபர்கள் 23 பேர் ஆய்வு மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அட்டவணை 1: மாதிரிகளின் பருமன் தொடர்பான விபரம்

| **இல** | **ஆசிரியர் நிலையத்தின் பெயர்** | **தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள்** | | | | | | **மொத்த மாதிரிகளின் பருமன்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **முகாமையாளர்** | **வலயக்கல்விப் பணிப்பாளர்கள்** | **3-I ஆசிரியர்கள்** | **2-II ஆசிரியர்கள்** | **2-I ஆசிரியர்கள்** | **அதிபர்கள்** | |
| 01 | மட்டக்களப்பு | 01 | 01 | 10 | 11 | 12 | 06 | **41** |
| 02 | காத்தான்குடி | 01 | 01 | 11 | 14 | 16 | 08 | **51** |
| 03 | வாழைச்சேனை | 01 | 01 | 10 | 14 | 18 | 09 | **53** |
| **மொத்தம்** | | **03** | **03** | **31** | **39** | **46** | **23** | **145** |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது

**தரவு சேகரிப்புக் கருவிகளும் தரவுப் பகுப்பாய்வு முறையும்**

ஆசிரியர்கள், அதிபர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் மூலமாகவும், எனைய மாதிரிகளிடமிருந்து நேர்காணல் மூலமாகவும், ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி

நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்கள் மூலமாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இங்கு தரவு முக்கோணப்படுத்தலானது சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. வினாக்கொத்துக்கள் லைக்கேர்ட் அளவீட்டு முறைக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் SPSS மென்பொருளைப் பயன்படுத்தி பகுப்பாய்வுக்குட்படுத்தி கூட்டலிடை, இடையம், நியம விலகல் என்பன கணிக்கப்பட்டதுடன், அட்டவணையாக்கம், சலாகை வரைபுகளை உருவாக்குவதற்கு Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. விபரணப் பகுப்பாய்வு அனைத்தும் லைக்கேர்ட் அளவீட்டுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் முகாமையாளர்கள் மற்றும் அதிபர்களிடம் நேர்காணல் மூலமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்புசார் தரவுகள் அனைத்தும் விபரண முறையில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு ஆய்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் ஆசிரியர்களிடத்தில் வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்வதில் இடர்படுகின்றன என்பது ஆய்வுப் பிரச்சினையாக கண்டறியப்பட்டது. அதற்கேற்ப பல சிறப்பு நோக்கங்களாக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஆய்வு மாதிரிகளிடமிருந்து ஆய்வுக் கருவிகளின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. குறித்த தரவுகளின் பகுப்பாய்வு முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

### ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கத்தின் முக்கியத்துவத்தை அறிதல்

குறித்த சிறப்பு நோக்கத்துக்கமைவாக ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கத்தின் முக்கியத்துவங்கள் சில அடையாளப்படுத்தப்பட்டு, அவை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்துக்களின் மூலம் லைகேர்ட் முறையிலமைந்த வினாக்களாக வினவப்பட்டன. இதற்கான அவர்களுடைய பதில்கள் பின்வருமாறு அமைந்தன.




உரு 1: ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கத்தின் முக்கியத்துவங்கள்

இதற்கமைவாக மேற்குறித்த விடயங்கள் அனைத்தும் ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கத்தின் முக்கியத்துவங்களாகும். குறித்த நோக்கங்களை 82.8 சதவீதமான ஆசிரியர்களும், 84.3 சதவீதமான அதிபர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் துலங்கலுக்கான பொதுவான கூட்டலிடை 4.18 ஆகும். இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி ($3.40 \leq \bar{X} \leq 4.19$) எனும் வீச்சினுள் காணப்படுவதால் சராசரியாக ஏற்றுக்கொள்கின்றனர். அந்த அடிப்படையில், ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் உருவாக்கப்பட்ட குறிக்கோள்களாக பின்வருவன கண்டறியப்பட்டுள்ளன:

1. கற்றல் கற்பித்தல் செயன்முறையின் பண்புத்தரத்தை மேம்படுத்த முடியும்.
2. நவீன திறன்களுடன் இணைந்த கற்பித்தலை வழங்க முடியும்.
3. ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்கள் மேம்படும்.
4. ஆசிரியர்களின் தரம் மேம்பட உதவியாக இருக்கும்.
5. மாணவர்களின் பெறுபேறுகளை மேம்படுத்த முடியும்.

குறித்த முக்கியத்துவங்கள் அனைத்தும் 2023ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களுக்கான கையேடிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் குறித்த நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்கின்ற செயற்பாடுகளை இனங்காணல்**

குறித்த இரண்டாவது சிறப்பு நோக்கத்துக்கமைவாக ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் குறித்த நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்கின்ற செயற்பாடுகள் சில இனங்காணப்பட்டு, அவை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்துக்களின் மூலம் லைக்கேர்ட் முறையிலமைந்த வினாக்களாக வினவப்பட்டன. இதற்கு அவர்களுடைய துலங்கல்கள் பின்வருமாறு அமைந்தன.




உரு 2: ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை ஏற்றுக்கொள்வோர் தொடர்பான விபரம்

குறித்த செயற்பாடுகளில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன என்ற கூற்றுக்கு மாத்திரமே தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளில் 82.4 சதவீதமான அதிபர்களும், 79.3 சதவீதமான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏனைய அனைத்துச் செயற்பாடுகளையும் மிகக் குறைந்தளவிலான மாதிரிகளே மேற்கொள்ளப்படுகின்றதாக ஏற்றுக்கொண்டுள்ளன. இதற்கமைவாக குறித்த செயற்பாடுகள் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன என 27.37 சதவீதமான ஆசிரியர்களும், 25.85 சதவீதமான அதிபர்களும் மாத்திரமே ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் துலங்கலுக்கான பொதுவான கூட்டலிடை 2.18 ஆகும். இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி ($1.80 \leq \bar{X} \leq 2.59$) எனும் வீச்சினுள் காணப்படுவதால் குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கூற்றை மாதிரிகள் எதிர்க்கின்றனர். எனவே, நோக்கத்தை அடைந்துகொள்வதற்குப் பொருத்தமான பின்வரும் செயற்பாடுகள் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களால் மேற்கொள்ளப்படுவது குறைவு என்ற முடிவுக்கு வரலாம்:

1. ஆசிரியர்களது கல்வி ஆராய்ச்சிகளுக்கான வழிகாட்டல்களை வழங்குகின்றன.
2. 21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர் திறன்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன.
3. ஆசிரியர்களுக்குரிய உளவியல் மற்றும் வழிகாட்டல் ஆலோசனை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.
4. நவீன கற்பித்தல் சாதனங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

எனவே, ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் ஆசிரியர்களது வாண்மைத்துவத் திறன்களை மேம்படுத்தல் எனும் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும், அவை முறையாக மேற்கொள்ளப்படுவதில்லையென ஆய்வினூடாக இனங்காணப்பட்டுள்ளது.

**ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் செயற்பாடுகளின் ஊடாக ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கம் அடையப்படுவதில் உள்ள சவால்களைக் கண்டறிதல்**

ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் குறித்த இலக்கினை அடைந்துகொள்ளும் வகையில் கடந்த 24 வருடங்களுக்கு மேலாக பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகின்ற போதிலும், குறித்த செயற்பாடுகளின் வெற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் குறித்த நிலையங்கள் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றபோது பல்வேறு இடர்பாடுகளையும் சவால்களையும் எதிர்கொள்கின்றன. அவ்வாறான சவால்கள் குறித்த ஆய்வினூடாக அடையாளப்படுத்தப்பட்டு ஆய்வு மாதிரிகளின் பதில்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டன.




உரு 3 : ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் எதிரகொள்கின்ற சவால்கள்

இதன் அடிப்படையில் 61.71 சதவீதமான ஆசிரியர்களும், 81.44 சதவீதமான அதிபர்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சவால்கள் காணப்படுவதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, குறித்த சவால்களை ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் எதிர்கொள்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைவாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் துலங்கலுக்கான பொதுவான கூட்டலிடை 4.16 ஆகும். இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி ($3.40 \leq \bar{X} \leq 4.19$) எனும் வீச்சினுள் காணப்படுவதால், குறித்த சவால்கள் காணப்படுகின்றன என்ற கூற்றைத் தெரிவுசெய்யப்பட்ட ஆய்வு மாதிரிகள் ஏற்றுக்கொள்கின்றன. எனவே, ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களால் ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேவைகளை விருத்திசெய்யும் நோக்கத்தை அடைந்துகொள்வதில் பின்வரும் சவால்களை எதிர்கொள்கின்றமை ஆய்வினூடாகக் கண்டறியப்பட்டுள்ளது:

1. பங்குபற்றுவதில் ஆசிரியர் ஆர்வம் குறைவாகக் காணப்படுதல்.
2. உயர் அதிகாரிகள் ஆசிரியர்களுக்குரிய ஆலோசனைகளையும் ஊக்கப்படுத்தலையும் ஒத்துழைப்பையும் வழங்குவது குறைவு.
3. ஆசிரியர்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்துகொள்வதற்குப் போதியளவு நேரம் ஒதுக்க முடியாத நிலை காணப்படுதல்.
4. பௌதீக வளம், மனித வளம், நிதி வளம் என்பவற்றில் பற்றாக்குறை காணப்படுதல்.
5. நவீன திறன்களுக்கு முக்கியத்துவமளித்து, அதற்கேற்ற வெற்றிகரமான செயற்பாடுகளை மேற்கொள்வது குறைவு.
6. ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக பூரணமான தெளிவின்மை காணப்படுதல்.
7. ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் வினைதிறன் தடைதாண்டல் பரீட்சை வேலைத்திட்டங்களுக்கு மட்டும் கூடுதல் முக்கியத்துவம் வழங்குதல்.

8. காலமாற்றத்திற்கேற்ப நோக்கங்கள், செயற்பாடுகள் என்பன மாற்றியமைக்கப்படாமல் பழைய விடயங்கள் இன்றுவரை பின்பற்றப்படுதல்.

9. பயிற்றப்பட்ட தகுதிவாய்ந்த விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காணப்படுதல்.

இவ்வாறாக, ஆய்வினுடைய மூன்றாவது சிறப்பு நோக்கத்தை அடைந்துகொள்ளும் வகையில் ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களினுடைய முகாமையாளர்கள் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் நேர்காணல் மற்றும் வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதில் உள்ள சவால்களைக் கண்டறிந்து கொள்ள முடிகின்றது.

**ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்யும் நோக்கம் அடையப்படுவதில் உள்ள சவால்களை இழிவளவாக்கி, அதனை வெற்றிகரமாக அடைந்துகொள்வதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.**

ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் குறித்த நோக்கத்தினை வெற்றிகரமாக அடைந்துகொள்வதற்கான வழிமுறைகளை முன்மொழியும் நோக்கில் ஆய்வு மாதிரிகளிடமிருந்து தரவுகள் பெறப்பட்டன. அந்தவகையில், மூன்றாவது சிறப்பு நோக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சவால்களை வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கான வழிமுறைகள் சில அடையாளப்படுத்தப்பட்டன. அவை தொடர்பில் அதிபர்கள் மற்றும் அசிரியர்களின் பதில்கள் பினவருமாறு அமைந்துள்ளன.




உரு 4 : ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் எதிரகொள்கின்ற சவால்களுக்கான தீர்வுகள்

இங்கு சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 84.06 சதவீதமான ஆசிரியர்களும், 85.44 சதவீதமான அதிபர்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்வதற்கான வழிமுறைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, குறித்த சவால்களை ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் எதிர்கொள்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைவாக

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் துலங்கலுக்கான பொதுவான கூட்டலிடை 4.52 ஆகும். இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி ($4.20 \leq \bar{X} \leq 5.00$) எனும் வீச்சினுள் காணப்படுவதால், குறித்த ஆலோசனைகளைத் தெரிவுசெய்யப்பட்ட ஆய்வு மாதிரிகள் வலுவாக ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆசிரியர்களிடம் வாண்மைத்துவத் திறன்களை அதிகரிக்கும் நோக்கம் அடையப்படுவதில் உள்ள சவால்களை இழிவளவாக்கி நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளை முன்மொழியும் நோக்கில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களினுடைய முகாமையாளர்களிடமும் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டபோது பின்வருமாறு பதில்களை வழங்கினர்.

கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு வினைத்திறனான வகையில் திட்டமிடலை மேற்கொண்டு செயற்பட வேண்டும். ஒரே மாகாணத்தில் இயங்கும் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் தமக்குள் உள்ள தொடர்பாடலை நேர்நிலையாக வலுப்படுத்துவதன் மூலம் வளப்பகிர்வினை மேற்கொண்டு சிறப்பாக இயங்க முடியும். ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களானது தேசிய கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை, வலயக் கல்வி அலுவலகம் ஆகிவற்றுடன் முறையான தொடர்புகளைப் பேணுதல், குறித்த நிலையங்களுடைய முகாமையாளர்களாகத் தகுதி வாய்ந்தவர்களை நியமிப்பதுடன் ஆளணிப் பிரச்சினை முறையாகத் தீர்க்கப்பட வேண்டும். பௌதீக வளங்களில் கற்றல் வளங்கள் முறையாக பெற்றுக்கொடுக்கப்படுவதுடன், நிலையங்களினுடைய கட்டட வசதி மேம்படுத்தப்பட வேண்டும். நிதிக் கையாளுகை சீரமைக்கப்படுவதுடன் உடனடியாக நிதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும். நோக்கங்கள் இன்றைய தேவையைக் கருத்தில்கொண்டு உடனுக்குடன் மாற்றியமைக்கப்பட வேண்டும். குறித்த நிலையங்களால் நிதியீட்டக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல் கட்டாயமாக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களை நேர்காணலின்போது குறிப்பிட்டனர். இவ்வாறாக ஆய்வினுடைய நான்காவது சிறப்பு நோக்கத்தை அடைந்துகொள்ளும் வகையில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் குறித்த நோக்கம் அடையப்படுவதில் உள்ள சவால்களை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகள் ஆய்வின்போது வெளிப்பட்டுள்ளன.

## முடிவுகளும் விதப்புரைகளும்

ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களினூடாக ஆசிரியர்களிடம் வாண்மைத்துவத் திறன்களை அதிகரிக்கும் நோக்கத்தை வெற்றிகரமாக அடைந்துகொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் பண்புத்தரத்தை அதிகரிப்பதற்காக இவ் ஆய்வினூடாக பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

வாண்மைத்துவத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கேற்ற செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படுவது குறைவு ($\bar{X} = 2.32$) எனவும், வாண்மைத்துவ விருத்திக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் விளைதிறன் குறைவு ($\bar{X} = 2.18$) போன்ற முடிவுகளும் கிடைக்கப்பெற்றன. இதற்குப் பிரதானமான காரணங்களாக திறன் விருத்தி சார்ந்த

செயற்பாடுகளுக்குச் சரியான முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை, வளப்பற்றாக்குறை, பயிற்றப்பட்ட வளவாளர்கள் இன்மை ( $\bar{X} = 4.16$) போன்றவை கண்டறியப்பட்டன.

இந்த முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் விதப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆசிரியர்களின் கல்வியின் ஊடாக அவர்களின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களை மேற்பார்வை செய்வதில் காணப்படுகின்ற பிரச்சினைகளை முறையாகத் தீர்ப்பதன் மூலம் கற்பித்தல் செயன்முறையின் பண்புத்தரத்தை மேம்படுத்த முடியும். ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் வெறுமனே தனி நிறுவனமாகச் செயற்படாமல் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை ஒன்றிணைத்து அவர்களை மேம்படுத்துவதற்கான வள நிலையமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். நவீன திறன்களை கொண்ட ஆசிரியர்கள் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வெறுமனே பதவி உயர்வுக்கு மட்டும் உதவும் வகையில் இல்லாமல் ஆசிரியர் வாண்மைத்துவம் சார்ந்த விடயங்களை மேம்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். பல்வேறு துறை சார்ந்த நபர்களுக்குத் தேவையான கல்விசார் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களுக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளைக் குறைந்த கட்டணத்தில் தரமானதாக வழங்க வேண்டும்.

மேலும், வளம் சார்ந்த பிரச்சினைகள் முறையாக முகாமை செய்யப்படுவதுடன், இருக்கின்ற குறைந்தபட்ச வளங்களைக் கொண்டு உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வினைத்திறனான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். முறையாகப் பயிற்சி பெற்ற வளவாளர்களைக் கொண்டு ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் வெறுமனே பயிற்சி நிலையங்களாக மட்டுமின்றி, ஆய்வுகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களாகவும் செயற்பட வேண்டும். குறித்த பிரதேசத்தில் உள்ள கல்வியியல் கல்லூரிகளுடன் இணைந்து செயற்படுவது கட்டாயமாக்கப்பட வேண்டும். வாண்மைத்துவ நிலையங்கள் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆசிரியர் கலைத்திட்டத்தில் தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் போன்ற விதப்புரைகள் குறித்த நிலையங்களின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்தும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

ஆசிரிய நிலையங்களுக்கான கைநூல், (2001), ஆசிரியர் கல்விப் பிரிவு, கல்வி அமைச்சு.

ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களுக்கான கையேடு, (2023), ஆசிரியர் கல்விப் பிரிவு, கல்வி அமைச்சு.

இலங்கையின் தேசிய பொதுக் கல்விக் கொள்கைக்கான முன்மொழிவுகள், (2016), கல்வி அமைச்சு.

ஞானரெத்தினம், க., (2024), ஆசிரியர் வாண்மைத்துவம், வணசிங்கா பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு.

தனராஜ், தை., (2013), ஆசிரியர் முகாமையும் அபிவிருத்தியும், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

தியாகராஜா, ஜெ., (2005), ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிப்பதில் வாண்மைத்துவ உள்ளீடுகளின் பங்களிப்பு, முதுமாணிக்கற்கை, வவுனியா வளாகம்.

சுவர்ணராஜா, க., (2016), பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மைவிருத்திச் செயற்பாடு, ஆசிரியம், கொழும்பு.

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டக் கையேடு, (2019), கல்வி அமைச்சு.

Alexandron, A. and Swaffield, S. (2014). Teacher leadership and professional development. Abingdon: Routledge. Volume 5. https://doi.org.10.29318/ijpe15114314

Anderson, J. and Boyle, C. (2019). Looking in the mirror: Reflecting on 25 years of Inclusive Education in Australia. The International Journal of Inclusive Education. 23(7-8). Volume 13. 796-810. Doi: https://doi.org/10.1080/ijpe13603116

Boyle, C. & Sharma, U. (2015). Inclusive Education – Worldly Views? British Journal of Support for Learning. 30(1). 2-3. Doi: http://doi.org/10.1111/1467-9604.12077

Gonzalez-Perez, L.I. & Ramirez-Montoya, M.S. (2022). Components of Education 4.0 in 21st Century Skills Frameworks: Systematic Review. Sustainability 2022. Vol – 14. 1493. Doi: https://doi.org/10.3390/su14031493

Gyurova, V., Zeleeva, V. (2017). 21st Century teachers Knowledge and skills. Future Academy. Vol. 34 http://dx.doi.org/10.15405/epsbs

Kayange, J. J. & Msiska, M. (2016). Teacher education in China: Training teachers for the 21st century. The Online Journal of New Horizons in Education. 6(4). 204-210.

Liang, M., Juliana, Mendoza, N.B., Lim, C.P. (2023). Localizing Teacher Professional Development at Scale Enabled by Professional Learning Communities: A Study of Teacher Learning Centers in Indonesia. International Handbook on Education Development in the Asia-Pacific. Springer. Singapore. https://doi.org/10.1007/978-981-19-6887-7_136

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு

**Thujenthan Kalaiksa**

Department of Education and Child Care, Faulty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

***kalaiksask@gmail.com***

**ஆய்வுச் சுருக்கம்**

மாணவர்கள் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு உயர்ந்த அடைவைப் பெற, சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் காணப்பட வேண்டும். ஆனால், கோறளைப்பற்று வடக்குப் பிரதேசத்தில் மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் முழுமையான பங்களிப்பு இல்லாமையால் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் கற்றல் நிலை பாதிப்படைகிறது. இந்நிலையில், "ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு" எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது கோறளைப்பற்று வடக்கு கல்விக் கோட்டத்திலுள்ள 19 பாடசாலைகளில் இருந்து 50% அடிப்படையில் 10 பாடசாலைகளும், அதிலுள்ள 10 அதிபர்கள், 61 ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களும், Slovin மாதிரித் தெரிவினூடாக ஆண், பெண் என ஒவ்வொரு தரத்திலுள்ள மாணவர்களில் 114 ஆரம்பப் பிரிவு மாணவர்களும், மாணவர்களின் மாதிரித் தெரிவிலிருந்து 59 பெற்றோர்களும், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் ஆறு பேரும், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப் பிரதிநிதி ஒவ்வொருவரையும் தெரிவுசெய்து நேர்காணல், அவதானம் மற்றும் குவியக்குழுக் கலந்துரையாடல்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான உணவு வழங்கும் முறை மற்றும் போசாக்கு மட்டங்களினைக் கண்டறிதல், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பை இனங்காணல், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல், பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இழிவளவாக்கி ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல் ஆகிய சிறப்பு நோக்கங்களுக்கமைவாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு நோக்கங்களை அடையும்பொருட்டுப் பெறப்பட்ட அளவு மற்றும் பண்பு ரீதியான தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுத்தப்பட்டன. SPSS மென்பொருளினூடாக வினாக்கொத்து மூலமாகப் பெற்ற தரவுகளின் இடை, நியமவிலகல் கணிக்கப்பட்டு MS Excel மென்பொருளைப் பயன்படுத்தி அட்டவணையாக்கம், சலாகை வரைபுகள் செய்யப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வு முடிவுகளின்படி, மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரின் பங்களிப்பும் அதிபர்களின் மேற்பார்வையும் போதியளவாக இன்மையும் சவால்களாக அமைவது

கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை இழிவளவாக்க மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவுகளை வழங்க வேண்டும். பெற்றோர், ஆசிரியர்களுக்கு ஆரோக்கிய விழிப்புணர்வுக் கல்வியினை அதிபர்கள் ஏற்படுத்தி மேற்பார்வை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல் வேண்டும் முதலான பல்வேறு விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *ஆரம்பப்பிரிவு மாணவர்கள், ஆரோக்கியம், உணவு, பாடசாலை அதிபர்கள்.*

**அறிமுகம்**

இயந்திரமயமாகியுள்ள இந்த உலகில் பணம் உழைப்பதையே வாழ்க்கையாக நினைத்து பணத்தின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் மனிதன் தனது ஆரோக்கியத்தைக் கவனத்தில் கொள்வதில்லை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும். பணத்தை உழைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், ஆரோக்கியம் என்பது விலைமதிப்பிட முடியாத செல்வமாகும். அதன் அடிப்படையில் ஆரோக்கியம் சாதகமற்றதாகச் செல்வதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று மனிதனின் உணவு பழக்கவழக்கமாகும். ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கத்தினை ஆரம்ப காலத்தில் இருந்தே கடைப்பிடிக்கும்போது, ஆரோக்கியமான ஒரு மனிதனைப் பெற்றுக்கொள்ளலாம். அந்தவகையில், சிறந்த போசாக்கு ஒருவரிடத்தில் காணப்படுமாயின் அவர் ஆரோக்கியமானவராகத் திகழ்வார். இது ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு அவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. காரணம், ஒருவரின் வாழ்க்கையில் ஆரம்ப காலம் சிறப்பானதாக அமையும்போதே, அதனோடு இணைந்த ஏனைய பருவங்களும் சிறப்பானதாக மாற்றமடையும்.

பாடசாலை அதிபர்கள் ஆரம்பப் பிரிவு மாணவர்களினுடைய போசணை மட்டம் தொடர்பில் முழுமையாக கவனம் செலுத்தாமையினால், மாணவர்களினுடைய ஆரோக்கியம் மற்றும் அதனோடு இணைந்த கல்வியானது பாதிப்படைகின்றது. ஆகவே, இவற்றினை நீக்கும் முகமாக தற்போது பாடசாலைகளில் உணவுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், கோறளைப்பற்று வடக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து ஆரம்பப் பாடசாலைகளிலும் உணவுத் திட்டங்களானது வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், அங்கு காணப்படும் அதிபர்கள் அத்திட்டத்திற்கு வழங்கும் பங்களிப்பானது குறைவானதாகவே காணப்படுகின்றது. அதனடிப்படையில் ''ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு'' எனும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வை மேற்கொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு வலயமான கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கோறளைப் பற்று வடக்கு கோட்டம் ஆய்வுப் பிரதேசமாக தெரிவுசெய்யப்பட்டு ஆய்வாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தவகையில், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவினைப் பெற்றுக் கொடுப்பதில் மிக முக்கிய கவனத்தை ஏனையோரைவிட, பாடசாலையில் காணப்படும் பாடசாலை அதிபர்கள் செலுத்த வேண்டும். அனைத்து மாணவர்களும் சிறுவயதினர் என்கின்ற காரணத்தினால் ஆரோக்கியமான உணவு தொடர்பான போதியளவு அறிவு அதிகம் மாணவர்களிடத்தில் காணப்படமாட்டாது. அதுமட்டுமல்லாது, அதிபர்களே பாடசாலையின் தலைமையாக உள்ளதால் அனைத்துப் பாடசாலை உறுப்பினர்களையும் கண்காணிக்கும் பொறுப்பு உள்ளவராகத் திகழ்கிறார். ஆகவே, மாணவர்களின் அனைத்துச் செயற்பாடுகளிலும்,

பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். அதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் முழுப் பங்களிப்பினை வழங்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு பங்களிப்புச் செலுத்தாமையினால், ஆய்வாளனால் தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்களின் கற்றல் மற்றும் ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை உரு 1.1 மற்றும் உரு 1.2 இல் காணக்கூடியதாக உள்ளது.

அதன் அடிப்படையில், ஆய்வுக்குத் தெரிவுசெய்த கோறளைப்பற்று வடக்கு கல்விக் கோட்டத்தில் பாடசாலை அதிபர்களின் முழுமையான பங்களிப்பு இன்மையினால், ஆய்வுப் பிரதேசத்தில் இவ் ஆய்வின் அவசியம் முக்கியமாகும். அந்தவகையில், மாணவர்களினுடைய ஆரோக்கியமான உணவுப் பயன்பாடு, மாணவர்களுக்கு எந்தளவு அவசியம், ஆரோக்கியமான உணவு வழங்குவதினால் எவ்வாறான அனுகூலங்கள் கிடைக்கப்பெறுகின்றன, ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அனைத்து விடயங்களுக்கும் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பானது எந்தளவில் காணப்படுகின்றது என்பதனை ஆய்வு செய்வதாக இது அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஆரம்பப் பிரிவுப் பருவமே மாணவர்களின் உடல் வளர்ச்சியின் முக்கிய காலமாக காணப்படுகின்றது. கட்டிளமைப் பருவத்தின் நிலையை எளிதாக்குவதற்கு உதவியாக அமைகின்றது. அந்தவகையில், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவினை வழங்கி, போசணை மட்டத்தை அதிகரிப்பது அவசியம் ஆகும். ஆனால், ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட கோறளைப்பற்று வடக்கு கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் மாணவர்களின் போசணை மட்டம் தொடர்பாக பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு முழுமையாக இன்மையால், பிரதேச மாணவர்களின் ஆரோக்கியம் குறைவடைந்து கல்விநிலை குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி நிலையில் காணப்படுகின்றது. அதற்கான ஆதாரத்தினை உரு 1.1, 1.2, 1.3 மற்றும் 1.4 இல் காணலாம்.

உரு 1.1: முன்னோடி ஆய்வின் (Pilot Study) மூலம் கோறளைப்பற்று வடக்குக் கோட்டத்தில் உள்ள 10 பாடசாலை அதிபர்களின் முடிவுகளுக்கான சதவீதம்




மூலம்: ஆய்வாளரால், பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னோடி ஆய்வில் பெறப்பட்டது

கோறளைப்பற்று வடக்குக் கோட்டத்தில் 20 பாடசாலைகள் காணப்படுகின்றன. அப்பாடசாலைகளில் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளை விடுத்து, ஏனைய பாடசாலைகளான 10 பாடசாலைகளில் காணப்படுகின்ற அதிபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முன்னோடி ஆய்வின் (Pilot Study) மூலம் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் அதிபர்களின் பங்களிப்பானது முழுமையாக காணப்படவில்லை என்று 80 சதவீதமான முடிவுகள் பெறப்பட்டமையை உரு 1.1 இல் காணலாம். அத்தோடு, ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு முழுமையாக அவசியம் என்பதைப் பல்வேறு ஆய்வுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

(Kwatubana. S. Nhlapo. V.A. and Moteetee. N. (2022) . The role of principals in school health promotion in South Africa: a qualitative study.)

(Jayawardana, L., Herath, R. P., Silva, K. D. R. R., & Worsley, A.* (2017). Barriers to healthy dietary choice amongst students in Sri Lanka as perceived by school principals and staff.)

(Malwenna, L. I., Gunarathna, N. K. C., Malwenna, H. N., Kannangara, K. B., Jayawardana, C. K. B., Gamini, N. B., & Priyanganie, B. A. (2022). Practice of school canteen policy in schools in the district of Rathnapura, Sri Lanka.)

உரு 1.2: கோறளைப்பற்று வடக்கு கல்விக் கோட்டத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் புள்ளிகளுக்கான சதவீதம்




மூலம்: கல்குடா வலயக் கல்வி அலுவலகம், 2024

உரு 1.3: ஆய்விற்குத் தெரிவுசெய்த பாடசாலை மாணவர்களின் 2023 ஆம் ஆண்டிற்கான உடல் திணிவுச் சுட்டி




மூலம்: வாகரை சுகாதார வைத்திய நிலையம், 2024

உரு 1.4: ஆய்விற்குத் தெரிவுசெய்த பாடசாலை மாணவர்களின் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் 2019 - 2023 வரையான ஆண்டுகளுக்கான புலமைப் பரிசில் புள்ளிகள்




மூலம்: கல்குடா வலயக் கல்வி அலுவலகம், 2024

அதாவது கல்குடா கல்வி வலயத்தின் கோறளைப் பற்று வடக்குக் கல்விக் கோட்டத்தில் அமைந்து காணப்படுகின்ற பாடசாலைகள் மிகவும் வருமானம் குறைந்த அரசாங்க தொழிலினை குறைவாகக் கொண்டுள்ள, கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற, குறைவான கல்வி அறிவினைக் கொண்ட, பாடசாலைக் கல்வியினை முழுமையாகப் பெற்றுக்கொள்ளாத சமூகத்தைக் கொண்டு காணப்படுகின்றன. அந்தவகையில், கோறளைப்பற்று வடக்கு கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பிரதேச மக்களின் தொழில்நிலைகள் உரு 1.4 இல் காட்டப்பட்டுள்ளது.

உரு 1.4: கோறளைப் பற்று வடக்குப் பிரதேசத்தில் காணப்படும் சனத்தொகையின் தொழில்நிலை விபரம் - 2023

மூலம்: கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகம், 2024




அந்தவகையில், கல்குடா கல்வி வலயத்தில் உள்ள கோறளைப்பற்று வடக்குக் கோட்டத்தில் ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் நிரந்தர தொழிலினைக் கொண்டிராத பெற்றோர்களின் பிள்ளைகளாவர். இதனால் இவர்கள் ஆரோக்கியமான உணவினைப் பெறாமல் பாடசாலைக்கு வருகை தருகின்றனர். மேலும், இம்மாணவர்களே போசாக்குக் குறைபாடு, சோம்பல் தன்மை, சுகாதார நோய்கள், BMI குறைபாடு, கற்றலில் ஆர்வம் இன்மை, தொடர் வரவின்மை, நேரத்திற்கு பாடசாலைக்கு வராமை, ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டு வேலைகளில் கவனம் செலுத்தாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

பெற்றோர்கள் வருமானம் குறைந்தவர்களாகவும் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களாகவும் இருப்பதனாலும் பிள்ளைகளின் முறையான உணவு தொடர்பாக வீடுகளில் அக்கறை கொள்வதில் குறைபாடுகள் காணப்படுகின்றன. போசாக்கான உணவுகளை வீடுகளில் உண்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு, உணவுகள் உரிய நேரத்தில் உண்ணுவதில் இடர்பாடு, தொடர்ச்சியாக மூன்று வேளைகள் உணவு கிடைக்காமை போன்ற பல்வேறு காரணங்களினால் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் போசாக்கில் நிலவும் திருப்தியற்ற நிலை மூலமாக அடிக்கடி நோய்வாய்ப்படல், மயக்கமுறும் நிலை, கற்றலில் உற்சாகம் இழந்து காணப்படல், அடிக்கடி வரவின்மை, தொடர்ச்சியான வரவின்மை போன்ற நிலமைகள் காணப்படுகின்றன.

அதனடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள சமூகம் தங்களது பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்குப் பொருத்தமான போசாக்குணவு வழங்குவது தொடர்பான கல்வியறிவு அற்றவர்களாக உள்ளனர். அதாவது, பிள்ளைகள் அவர்களது வயதுக்கேற்ப பெறவேண்டிய போசாக்குணவு தொடர்பான விழிப்புணர்வு இன்மை, போசாக்கின்மையால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பூரணமற்ற அறிவைக் கொண்டவர்களாக கானப்படுகின்றனர். இதனால் மாணவர்களினுடைய போசணை மட்டம் குறைவடைந்து மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் கல்விநிலை பாதிப்படைகிறது.

அதன் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் பிரதேசத்தில் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்புச் சிறப்பானதாக காணப்படுகின்றதா, இதன் மூலமாக ஏற்படுத்தப்படும் விளைவுகள், அவ்வாறு உருவாக்கப்படும் விளைவுகள் ஒவ்வொரு மாணவருடைய ஆரோக்கியத்திலும் கல்வி நிலையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றதா, சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றனவா என்ற பல்வேறு வினாக்களுக்கு விடை காண்பதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**ஆய்வு பிரச்சினைக் கூற்று**

பாடசாலை அதிபர்கள் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் போசணை மட்டம் தொடர்பில் முழுமையாகக் கவனம் செலுத்தாமையினால் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் கல்விநிலை பாதிப்படைகிறது.

**ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்**

கல்குடா கல்வி வலய, கோறளைப் பற்று வடக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பைக் கண்டறிதல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான உணவு வழங்கும் முறை மற்றும் மாணவர்களின் போசாக்கு மட்டங்களினைக் கண்டறிதல்.
2. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பை இனங்காணல்.

3. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்.

4. பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இழிவளவாக்கி, ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

**இலக்கிய மீளாய்வு**

Day மற்றும் பலரால் (2019) "ஆரம்பப் பாடசாலை அடிப்படையிலான ஆரோக்கியமான வாழ்க்கை முறைத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துதல்: பாடசாலை ஊழியர்களின் பார்வைகளின் தரமான ஆய்வு" என்ற ஆய்வில் பிரித்தானியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 பாடசாலைகளில், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், கேட்டரிங் மேலாளர்கள், நியமிக்கப்பட்ட பாடசாலை அடிப்படையிலான திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நிரல் விநியோகத்துடன்கூடிய பாடசாலைகளை ஆதரிக்கும் திட்டப் பணியாளர்களுடன் 65 பேர் மாதிரியாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பாடசாலை அடிப்படையிலான ஆரோக்கியமான வாழ்க்கை முறைத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவது, நெகிழ்வான மற்றும் மாற்றியமைக்கக்கூடிய திட்டங்கள், நல்ல சூழ்நிலைப் பொருத்தம், நல்ல வளம் கொண்ட திட்டங்கள் மற்றும் பல நிலைகளில் பயனுள்ள தலைமைத்துவம், மாணவர் (மாணவர்கள் பிரசவத்திற்கு ஆதரவு) மற்றும் பெற்றோரின் ஈடுபாடு ஆகியவற்றால் உதவுவதாக கருதப்படுகிறது. பாடத்திட்டங்கள் மற்றும் பாடசாலை கொள்கைகளுக்குள் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று உணர்ந்து, தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் நிலையான ஆதரவு அவசியம் ஆகும்.

Luesse மற்றும் பலரால் (2018) "ஆரோக்கியமான உணவுச் சூழலை ஊக்குவித்தல் மற்றும் பாடசாலைக் குழந்தைகளின் உணவு நடத்தைகளை மேம்படுத்த பெற்றோர்களுடன் திறம்பட தொடர்புகொள்வதற்கான சவால்கள் மற்றும் வசதியாளர்கள்" என்ற தலைப்பின் ஊடாக அமெரிக்காவில் உள்ள 16 குறைந்த வருமானம் கொண்ட நகர்ப்புறப் பெற்றோர்கள் (94% பெண் - 88% ஹிஸ்பானிக்/ லத்தீன், 12% ஆபிரிக்க அமெரிக்கர்) தொடக்கப் பாடசாலைக் குழந்தைகளை உள்ளடக்கிய நான்கு குழுக்களுடன் நடத்தப்பட்டன. அந்தவகையில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவுகளை வழங்குவதில் மிகவும் பொதுவான தடைகளை எதிர்கொள்ளுகின்றனர். அதாவது, குழந்தை விருப்பங்கள் மற்றும் குடும்ப வருமானத் தடை போன்றனவாகும். பெற்றோர்கள் ஆரோக்கியமான நடத்தைகளில் ஈடுபடுவதற்கான நோக்கத்தைக் காட்டுகின்றனர், அந்தவகையில், சுகாதார இலக்குகளை அடைவதற்கான நடைமுறை அறிவைப் பெற்றோர்களைப் பெறச் செய்து, மாணவர்களினுடைய ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு அவசியமானதாக உள்ளதை ஆய்வு வெளிப்படுத்துகிறது.

Dudley மற்றும் பலரால் (2015) "ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு ஆரோக்கிய உணவைக் கற்பித்தல்: சான்றுகளின் ஆய்வு மற்றும் சிறந்த நடைமுறை" என்ற தலைப்பில்

ஆஸ்திரேலியாவின் சிட்னி பகுதியில் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆரோக்கியமான உணவு தொடர்பாக 2004 தொடக்கம் 2014 வரையாக வெளியிடப்பட்ட ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு தொடர்பான கற்பித்தலை வழங்குவது பயனுள்ளதாக அமைவதோடு, அனுபவக் கற்றலில் ஈடுபடவும் இது உதவுகின்றது. மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் பாடசாலையில் காணப்படுகின்ற ஆசிரியர்களுக்கும் அது தொடர்பான கல்வியினை வழங்குவது சிறந்ததாகக் காணப்படுகின்றது. இந்நடவடிக்கைகளை தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வானது அளவு ரீதியான முறையையும், பண்பு ரீதியான முறையையும் கொண்டு கலப்பு முறை ஆய்வாக காணப்படுகின்றது. மேலும், இங்கு எண் சார்ந்த முறையியல்களாக எண்கள், புள்ளிவிபரங்கள், அட்டவணைகள், வரைபுகள், மாணவர் தொகை, விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆய்வாளரால் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பாடசாலையில் உணவு வழங்கலுக்குப் பொறுப்பான வலயக் கல்விப் பிரதிநிதி மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்பவர்களிடம் இருந்து பெறப்பட்ட அகவய ரீதியான தரவுகள் பண்பு சார்ந்த தரவுகளாகவும் வலயக் கல்வி அலுவலகம், பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகள் அளவைசார் தரவுகளாகவும் இவற்றில் இருந்து பெறப்பட்ட எண்கள், புள்ளிகள், வரைபுகள், அட்டவணைகள் என்பன இங்கு பயன்படுத்தப்பட்டு கலப்பு முறை ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆய்வாளர் பெற்றுக்கொண்ட தரவுகளை முறையாக பகுப்பாய்விற்கு உட்படுத்தி புள்ளிவிபர முறைகளைப் பயன்படுத்தி அட்டவணைகள், சலாகை வரைபுகள் மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தவகையில், கோறளைப் பற்று வடக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என அறியும் பொருட்டு பாடசாலைகள் ஒதுக்கீட்டு மாதிரியின் ஊடாகவும், ஆசிரியர்கள், அதிபர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், பொது சுகாதார மருத்துவ மாதுக்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலையில் உணவு வழங்கலுக்குப் பொறுப்பான வலயக் கல்விப் பிரதிநிதி என்ற அனைவரும் தெரிவுசெய்யப்பட்டு, பெற்றோர்கள் இலகு எழுமாற்று அடிப்படையிலும், மாணவர்கள் Slovin மாதிரி அடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டு, ஆய்வின் நோக்கத்திற்கு அமைய தகவல்கள், தரவுகள் திரட்டப்பட்டு, பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு முறையியல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மாதிரித் தெரிவு**

ஆய்வுப் பிரதேசமான கோறளைப் பற்று வடக்கு கல்விக் கோட்டத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகளை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றமையினால் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களை உள்ளடங்கிய பாடசாலைகள் மொத்தமாக 19 பாடசாலைகள் காணப்படுகின்றன. இதில் 1C பாடசாலைகள் 2 உம், வகை II பாடசாலைகள் 4 உம், வகை III பாடசாலைகள் 4 உம் என ஆய்வாளரால் 50 சதவீதத்தின் அடிப்படையில் 10 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்வதால் பாடசாலையில் மாணவர்களின் கற்றலில் பெரும் பங்காற்றுபவர்கள் ஆசிரியர்கள். மேலும், ஆசிரியர்கள் இல்லாமல் முறையான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறாது. அதுபோல் உணவு விடயங்களில் ஆசிரியர் கவனம் செலுத்தி மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்குக் காரணமாக அமைகின்றனர். அதுபோல் அதிபர்களின் பங்களிப்பு தொடர்பாக அறிந்துகொள்வதற்கு ஆசிரியர்கள் அவசியம். அந்தவகையில், ஆசிரியர்கள் மாதிரித் தெரிவிற்குள் உட்படுத்துவது அவசியமானதாக காணப்படுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் காணப்படுகின்ற தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் 61 பேர் காணப்படுவதால் அனைத்து ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அதிபர்களின் பங்களிப்பினை அவதானிக்க உள்ளதனால், ஆய்வுக்குத் தெரிவுசெய்த 10 பாடசாலை அதிபர்கள் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்தோடு, பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களின் ஆரோக்கியம் மற்றும் கற்றல் கற்பித்தல் தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் என்ற வகையில் கோறளைப் பற்றுக் கல்விக் கோட்டத்தில் காணப்படுகின்ற சுகாதார வைத்திய அதிகாரி (MOH) ஒருவரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (PHI) ஒருவரும், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் (PHM) 06 பேரும், அத்தோடு கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பிரதிநிதி போன்றோரும் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஆரோக்கியமான உணவினை உட்கொள்வதன் மூலம் மாணவர்களிடம் காணப்படுகின்ற முன்னேற்றங்களை அறிந்துகொள்வதற்காக, மாணவர்களின் மாதிரித் தெரிவானது ஆய்வுக்குத் தெரிவுசெய்த பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் 5 இல் கற்கும் மாணவர்கள் 1541 மாணவர்கள் ஆண், பெண் எனப் படையாக்கப்பட்டு, ஒவ்வொரு வகுப்புக்கும் உரியதாக Slovin மாதிரித் தெரிவின் அடிப்படையில் 9% Error Tolerance (level) அடிப்படையில் 114 மாணவர்களையும், ஒவ்வொரு பாடசாலைக்கும் உரிய மாணவர்களின் மாதிரித் தெரிவில் இருந்து 50% இலகு எழுமாற்று தெரிவின் மூலம் 59 பெற்றோர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர். அதாவது. மாணவர்களின் முழு வளர்ச்சியினை அருகிலிருந்து கவனிப்பவர்கள் பெற்றோர்கள் என்பதனால் ஆய்விற்குப் பெற்றோர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## தரவுப் பகுப்பாய்வு

**ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான உணவு வழங்கும் முறை மற்றும் மாணவர்களின் போசாக்கு மட்டம்.**

**உணவு வழங்கும் முறை**

**வினாக்கொத்தின் துலங்கல்**




உரு 4.1: ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு உணவு வழங்கும் முறை தொடர்பான விபரம்

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவில் எதிர்பார்த்த போசாக்கின் அளவு அடங்கியுள்ள மட்டம் சிறப்பானதாக காணப்படுகின்றதா என்ற கூற்று ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது, 73.8 சதவீதமானோர் நடுநிலை என்று விடையளித்துள்ளனர். இதனை உரு 4.1 இல் காணலாம். அந்தவகையில், மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் ஆசிரியர்களின் 73.8 சதவீதமான பதில்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும், ஆசிரியர்கள் கூறிய பதில்களின்படி $\overline{X}$ = 3.07 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (2.60 - 4.19) இடைப்பட்டதாக உள்ளதால் நடுநிலை என்ற துலங்கல் வெளிப்படுகின்றது. அத்துடன், நியம விலகலானது 0.512 ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவில் எதிர்பார்த்த போசாக்கின் அளவு அடங்கியுள்ள மட்டமானது போதுமான அளவு இல்லை என்பதனை முடிவாக கொள்ள முடியும்.

பொருத்தமான நேரத்திற்கு உணவு வழங்கப்படுகின்ற நிலையை அறிந்துகொள்ள ஆசிரியர்களிடம் வினவப்பட்டது. அதற்கு நடுநிலை என்ற பதிலினை 75.4 சதவீதமான ஆசிரியர்கள் பதிலாகக் கூறியுள்ளனர். அதனைப் பின்வரும் உரு 4.1 இல் நோக்க முடியும்.

**நேர்காணலின் துலங்கல்**

பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்காக அமைக்கப்பட்ட படிவத்தில் பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற உணவு பொருத்தமான நேரத்தில் வழங்கப்படுகின்ற தன்மை எவ்வாறு காணப்படுகிறது என வினவியபோது, அதற்குப் பதில் அளித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சில பாடசாலைகளில் நேரத்துக்கு உணவு வழங்கப்படுவதாகவும் ஒரு சில பாடசாலைகளில் தாமதமாக உணவு வழங்கப்படுவதாகவும் அவர் துலங்கலை வெளிப்படுத்தினார்.

### குவியக் குழுக் கலந்துரையாடலின் துலங்கல்

பாடசாலைகளில் வழங்கப்படும் உணவு எவ்வாறான நேரங்களில் வழங்கப்படுகின்றது என்று கலந்துரையாடலின்போது பெற்றோர்களிடம் வினாவப்பட்டது. இதற்குப் பெற்றோர்கள் பாடசாலையில் சில நேரங்களில் உணவு உரிய நேரத்தில் வழங்கப்படுகின்றது என்றும் சில நேரங்களில் உணவானது நேரம் பிந்தி வழங்கப்படுவதாகவும் கலந்துரையாடலின்போது துலங்கலை வெளிப்படுத்தினர்.

மைக்கேல் மார்பி (2014) என்பவரால் ''காலை உணவு மற்றும் கற்றல்'' என்ற தலைப்பின் ஊடாக அமெரிக்காவின் பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமாக 1990 களின் பிற்பகுதியில் வெளியிடப்பட்ட இலக்கிய விமர்சனங்கள், வழக்கமான காலை உணவு உட்கொள்ளல், தவிர்த்தல் மற்றும் மாணவர் விளைவுகளுக்கு இடையே உள்ள தொடர்பைக் காட்டுவதன் மூலம் இந்தப் புதிய ஆதாரத்தைப் புரிந்துகொள்வதற்கான களத்தை அமைத்தன. குறிப்பாக, உலகளாவிய இலவச பாடசாலை காலை உணவுத் திட்டங்கள் ஒட்டுமொத்த காலை உணவு உண்ணும் விகிதத்தை அதிகரிக்கின்றன. ஆகவே, பாடசாலை மாணவர்களுக்குக் காலை உணவு என்பது அவசியமானதாகக் காணப்படுகின்றது.

ஆகவே, பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்குகின்ற உணவு காலை 7.30 - 8.30 வரையான நேரத்தில் வழங்கப்பட வேண்டும். ஆனால், ஆசிரியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பெற்றோர் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் போன்றோர்களின் கருத்துக்கள் மற்றும் அவதானித்தலின்போது கிடைக்கப்பெற்ற கருத்துக்கள் மூலமாக அனைத்துப் பாடசாலைகளிலும் குறித்த நேரத்தினுள் வழங்கப்படுவதில்லை என்று தரவுப் பகுப்பாய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது மாணவர்களின் அன்றாட நடவடிக்கைகளை பாதிப்படையச் செய்யும் என்ற முன்னைய ஆய்வுகளுடன் இது தொடர்புபடுவதாக அமைகின்றது.

### போசாக்கு மட்டம்

### வினாக்கொத்தின் துலங்கல்




உரு 4.2: ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு உணவு வழங்குவதில் சமூகங்களின் பங்களிப்பு தொடர்பான விபரம்

வகுப்பறைகளில் உள்ள மாணவர்களின் உடல் திணிவுச் சுட்டியின் அளவு சிறப்பானதாக உள்ளது தொடர்பாக அறிந்துகொள்ள ஆசிரியர்களிடம் வினவப்பட்டது. அதற்கு ஆசிரியர்களின் பதில்களில் நடுநிலை என்ற பதிலை 63.9 சதவீதமானோர் அளித்திருந்தனர். அதனைப் பின்வரும் உரு 4.2 இல் அவதானிக்க முடியும். மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வின்படி வகுப்பறைகளில் உள்ள மாணவர்களின் உடல் திணிவுச் சுட்டியின் அளவு போதுமான அளவு இல்லை என்பதனை 63.9 சதவீதமான ஆசிரியர்கள் கூறிய பதில்களின் அடிப்படையில் முடிவாகக் கொள்ள முடிகின்றது. ஆசிரியர்களின் பதில்களின்படி $\overline{X}$ = 3.39 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (2.60 - 4.19) இடைப்பட்டதாக உள்ளதால் நடுநிலை என்ற துலங்கலை வெளிப்படுத்துகிறது. அத்துடன், நியம விலகலானது 0.714 ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்புக் குறைவாக காணப்படுகின்றமையால், மாணவர்களின் உடல் திணிவுச் சுட்டி தளம்பல் நிலையில் உள்ளமையை முடிவாகக் கொள்ளலாம்.

வகுப்பறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டு நடவடிக்கைகளில் மாணவர்களின் அடைவு அதிகரித்துள்ளது என்ற வினா தொடர்பாக அறிந்துகொள்ள வினவப்பட்டிருந்தது. அந்த வகையில், வினாவிற்குப் பின்வருமாறு ஆசிரியர்களின் பதில்கள் அமைந்திருந்தனர். அதாவது, 61 சதவீதமான ஆசிரியர்கள் நடுநிலை என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது உரு 4.2 இல் காட்டப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்டுள்ள வரைபடத்திற்கு அமைவாக வகுப்பறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டு நடவடிக்கைகளில் மாணவர்களின் அடைவின் தன்மை என்ற வினாவிற்கு 61 சதவீதமான ஆசிரியர்கள் நடுநிலை என்ற பதிலை அதிகமாக வழங்கி உள்ளனர். மேலும், ஆசிரியர்களின் பதில்களின்படி $\overline{X}$ = 3.31 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (2.60 - 4.19) இடைப்பட்டதாக உள்ளதால் நடுநிலை என்பதை வெளிப்படுத்துகிறது. அத்துடன் நியம விலகலானது 0.743 ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு**




உரு 4.3: ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்தில் பாடசாலை மாணவர்களுக்காக உணவு தயாரிப்பவர்களின் நாளாந்த செயற்பாட்டை அதிபர் மேற்பார்வை செய்யும் தன்மையை அறிந்து கொள்வதற்கு ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது அவர்களின் பதில் பின்வருமாறு அமைந்திருந்தது. வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று 10 ஆசிரியர்களும், ஏற்றுக்கொள்ளவில்லை என்று 42 ஆசிரியர்களும், நடுநிலை என்று 9 ஆசிரியர்களும் விடை அளித்திருந்தனர். அதன் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற பதிலை 69 சதவீதமானோர் தேர்வுசெய்திருந்தனர். அதனை உரு 4.3 இல் காணலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் மாணவர்களுக்கு உணவு தயாரிப்பவர்களின் நாளாந்த செயற்பாட்டை அதிபர் மேற்பார்வை செய்கின்ற விதத்தை நோக்கும் பொழுது, 69 சதவீதமான ஆசிரியர்களின் பதில்கள் காணப்படுகின்றது. குறித்த கூற்றிற்கான பதில்களின்படி $\overline{X}$ = 1.98 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (1.80 - 2.59) இடைப்பட்டதாக உள்ளதால் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற துலங்கலை வெளிப்படுத்துகிறது. அத்துடன், நியம விலகலாக 0.562 ஆக காணப்படுகின்றது. ஆகவே, பாடசாலை மாணவர்களுக்காக உணவு தயாரிப்பவர்களின் நாளாந்த செயல்பாட்டை அதிபர் மேற்பார்வை செய்யும் தன்மையானது குறைவாக காணப்படுகின்றது என்ற முடிவுக்கு வரலாம். அடிப்படையில் மேற்பார்வை சிறப்பாக இடம்பெறுவதில்லை என்பதை முடிவாக கொள்ள முடிகின்றது.

## குவியக் குழு கலந்துரையாடலின் துலங்கல்

வினா இலக்கம் 2.1 பாடசாலை மாணவர்களுக்கு உணவு தயார்படுத்துபவர்களின் நாளாந்த செயற்பாட்டை அதிபர் மேற்பார்வை செய்யும் தன்மையைக் கண்டறிதல் என்ற கலந்துரையாடலின்போது பெற்றோர்களிடம் வினவப்பட்டது. இதற்குப் பதிலளித்த பெற்றோர்கள் உணவு தயார்படுத்துவது பாடசாலைகளில் இல்லை. அது உணவு தயார்செய்யும் பெற்றோர்களின் வீடுகளில் என்பதனால் அதனை அதிபர் ஒவ்வொரு நாளும் சென்று அவதானிப்பது என்பது குறைவு என்றும் ஒரு சில நேரங்களில் மாத்திரம் செல்வதாகவும் பெற்றோர்கள் கலந்துரையாடலின் போது துலங்கலை வெளிப்படுத்தினர்.

Murimi மற்றும் பலரால் (2016) "மாணவர்களின் உணவுத் தெரிவுகளைப் பாதிக்கும் காரணிகள் பற்றிய தரமான ஆய்வு" எனும் தலைப்பில் ஆபிரிக்காவில் 12 இலக்குக் குழுக்களைச் சேர்ந்த 80 ஆரம்பப் பிரிவு மாணவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பாடசாலைகளில் ஆரோக்கியமான உணவுத் தெரிவுகளை மாணவர்களுக்கு ஊக்குவிக்கப் பல்வேறு காரணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவை சாதகமான தாக்கங்கள் மற்றும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அதனை நிவர்த்தி செய்வதற்கு உணவு சேவை ஊழியர்கள் மற்றும் அதிபர்கள் புதிய உணவுகளுக்கான சுவை விடயங்களைக் கவனத்தில் கொண்டு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, மாணவர்கள் ஆரோக்கியமற்ற உணவுகளைத் தேர்ந்தெடுக்காமல் ஆரோக்கியமான உணவுகளை நுகர்வதற்கு பாடசாலைச் சமூகங்களின் பங்களிப்பு அவசியமானதாகக் காணப்படுகின்றது என்று மேற்காட்டப்பட்ட பகுப்பாய்வை வலியுறுத்துவதாக உள்ளது.

**ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள்** எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்




உரு 4.4: ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான விபரம்

வினாக்கொத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட வினாவில், பெற்றோர்களுக்குப் போசாக்கு தொடர்பான தெளிவு தொடர்பாக கண்டறிவதற்காக ஆசிரியர்களிடம் வினவிய போது, ஆசிரியர்கள் பின்வருமாறு பதில்களை வழங்கி இருந்தனர். அது தொடர்பான வரைபடம் உரு 4.4 காட்டப்பட்டுள்ளது.

வரைபடத்தின்படி ஆசிரியர்களில் ஏற்றுக்கொள்கின்றேன் என்ற பதிலை 62.3 சதவீதமானவர்கள் விடையளித்திருந்தனர். அந்தவகையில், மேலே ஆசிரியர்களின் ஏற்றுக் கொள்கின்றேன் என்ற பதில் 62.3 சதவீதமாக காணப்படுகிறது. குறித்த கூற்றுக்கு மாதிரியாக தேர்வுசெய்யப்பட்ட ஆசிரியர்களின் பதில்களின்படி $\bar{X}$ = 4.28 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (4.20 - 5.00) இடைப்பட்டதாக உள்ளதால் வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்ற துலங்கலை வெளிப்படுத்துகின்றது. அத்துடன், நியம விலகலானது 0.552 ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதனை மையமாகக் கொண்டு பாடசாலை அதிபர்கள், ஆரோக்கியமான உணவு வழங்குவதில் எதிர்கொள்ளும் சவால்களில் பெற்றோர்களுக்குப் போசாக்கு தொடர்பான தெளிவின்மை காணப்படுகின்றது என்பதை முடிவாகக் கொள்ளலாம்.

Chakrabarty and Ghosh (2020) என்பவர்களால் “(6 – 11) வயது குழந்தைகளிடையே ஊட்டச்சத்து நிலையை பாதிக்கும் காரணிகள்: இந்திய மெகாசிட்டியில் இருந்து ஒரு வழக்கு ஆய்வு” எனும் தலைப்பின் ஊடாக இந்தியாவின் நகர்ப்புற பெருநகரமான கல்கத்தாவில் 6 தொடக்கம் 11 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளில் 251 சேரி மற்றும் சேரி அல்லாத பிள்ளைகளை மாதிரியாக கொண்டு மேற்கொண்ட ஆய்வில் சொந்த உடன்பிறப்புகளின்

எண்ணிக்கை அதிகரிப்பு, தாயின் குறைந்த கல்விநிலை, முறையற்ற உணவு உட்கொள்ளல் போன்றவற்றால் ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படும் அபாயம் கணிசமாக அதிகரிக்கிறது. குழந்தைகளிடையே உணவுப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கு விரிவான ஊட்டச்சத்து - கல்வி திட்டத்தை செயல்படுத்த பல முனை உத்திகள் தேவை. ஆகவே, மாணவர்களிடத்தில் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே, மேற்படி பகுப்பாய்வுடன் இது தொடர்புபடுவதாக காணப்படுகின்றது.

பாடசாலையினால் வழங்கப்படும் உணவில் மாணவர்களின் விருப்பநிலை தொடர்பாக ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது, ஆசிரியர்கள் பின்வருமாறு பதில்கள் அளித்திருந்தனர். அதனைப் உரு 4.4 இல் அவதானிக்கலாம். அதன்படி நடுநிலை என்ற பதிலை 61 சதவீதமான ஆசிரியர்கள் விடையளித்திருந்தனர். அந்தவகையில், மேற்குறிப்பிடப்பட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் 61 சதவீதமான ஆசிரியர்களின் பதில்களின் அடிப்படையிலும் குறித்த கூற்றுக்கு மாதிரியாகத் தேர்வுசெய்யப்பட்ட ஆசிரியர்களின் பதில்களின்படி $\overline{X}$ = 3.03 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (2.60 - 3.39) இடைப்பட்டதாக உள்ளதால் நடுநிலை என்ற துலங்கலை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் நியம விலகலானது 0.774 ஆக காணப்படுகின்ற தன்மையும் மாணவர்களில் உணவினை விரும்பி உண்ணும் நிலை நடுநிலையாகக் காணப்படுகின்றது என்று குறிப்பிட்டதனை மையமாகக் கொண்டு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் இதுவும் ஒன்றாக காணப்படுகின்றது என்பதனை முடிவாகக் கொள்ளலாம்.

**பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இழிவளவாக்கி ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்**

**அதிபர்கள் பெற்றோர்களுடன் போசாக்கு தொடர்பாக கலந்துரையாடுதல்.**

**வினாக்கொத்தின் துலங்கல்**

அதிபர்கள் பெற்றோர்களுடன் போசாக்குத் தொடர்பாக கலந்துரையாடுதல் வேண்டும் என்பதை அறிந்துகொள்வதற்காக ஆசிரியர்களிடம் வினவப்பட்டது. அதற்கு ஆசிரியர்களில் 48 பேர் வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்றும் 13 பேர் ஏற்றுக்கொள்கின்றேன் என்றும் கூறியுள்ளனர். இவற்றுள் நடுநிலை, ஏற்றுக்கொள்ளவில்லை மற்றும் வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பவற்றை ஆசிரியர்கள் தெரிவுசெய்யவில்லை. அதாவது, 78.7 சதவீதமான ஆசிரியர்கள் வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்று விடை அளித்துள்ளனர். அது தொடர்பான தகவல் கீழ் உள்ள அட்டவணை 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 4.1: அதிபர்கள் பெற்றோர்களுடன் போசாக்கு தொடர்பாக கலந்துரையாடுதல்.

| விருப்பத் தெரிவுகள் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் | 48 | 78.7% |
| ஏற்றுக்கொள்கின்றேன் | 13 | 21.3% |
| நடுநிலை | 0 | 0% |
| ஏற்றுக்கொள்ளவில்லை | 0 | 0% |
| வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை | 0 | 0% |
| **மொத்தம்** | **61** | **100%** |

மூலம் : வினாக்கொத்தின் தரவுகளில் இருந்து தயாரிக்கப்பட்டது.

மேலும், ஆசிரியர்களின் பதில்களின்படி $\overline{X}$ = 4.79 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (4.20 - 5.00) இடைப்பட்டதாக உள்ளதால் வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்ற துலங்கலை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் நியம விலகலானது 0.413 ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி பகுப்பாய்வின் அடிப்படையில் ஆசிரியர்கள் கூறிய பதில்களின் அடிப்படையில் அதிபர்கள் பெற்றோர்களுடன் போசாக்கு தொடர்பாக கலந்துரையாடல் வேண்டும் என்று முடிவாகக் துலங்கலை வெளிப்படுத்தினர்.

## ஆரோக்கியமான உணவிற்கும் கற்றல் அடைவு மட்டத்திற்குமான தொடர்பினைச் சமூகத்திற்குத் தெளிவுபடுத்தல்

### வினாக்கொத்தின் துலங்கல்

அட்டவணை 4.2: ஆரோக்கியமான உணவிற்கும் கற்றல் அடைவு மட்டத்திற்குமான தொடர்பினைச் சமூகத்திற்குத் தெளிவுபடுத்தல்

| விருப்பத் தெரிவுகள் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் | 57 | 82.0% |
| ஏற்றுக்கொள்கின்றேன் | 04 | 18.0% |
| நடுநிலை | 0 | 0% |
| ஏற்றுக்கொள்ளவில்லை | 0 | 0% |
| வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை | 0 | 0% |
| **மொத்தம்** | **61** | **100%** |

மூலம் : வினாக்கொத்தின் தரவுகளில் இருந்து தயாரிக்கப்பட்டது.

வினா இலக்கம் 4.6 ஆரோக்கியமான உணவிற்கும் கற்றல் அடைவு மட்டத்திற்குமான தொடர்பினைச் சமூகத்திற்குத் தெளிவுபடுத்துதல் என்னும் கருத்தை அறிந்துகொள்ள ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது அவர்களின் பதில்கள் பின்வருமாறு அமைந்திருந்தது. அதாவது, வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்று 57 ஆசிரியர்களும் ஏற்றுக்கொள்கின்றேன் என்று 4 ஆசிரியர்களும் விடையளித்திருந்தனர். இவற்றுள் நடுநிலை, ஏற்றுக்கொள்ளவில்லை

மற்றும் வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பவற்றை ஆசிரியர்கள் தெரிவுசெய்யவில்லை. அதன் அடிப்படையில் ஆசிரியர்களில் 82 சதவீதமானவர்கள் வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்றும், 18 சதவீதமான ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்கின்றேன் என்றும் விடையளித்திருந்தனர். இத்தத் தகவல்கள் அடங்கிய அட்டவணை 4.2 இல் காட்டப்பட்டுள்ளது.

மேலும், ஆசிரியர்களின் பதில்களின்படி $\overline{X}$ = 4.82 ஆக காணப்படுகின்றது. இது லைக்கேர்ட் அளவீட்டு முறையின்படி (4.20 - 5.00) இடைப்பட்டதாக உள்ளதால் வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்ற துலங்கலை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் நியம விலகலானது 0.388 ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி பகுப்பாய்வின் மூலம் அனைத்து ஆசிரியர்களின் கருத்துக்களின் அடிப்படையில் அதிபர்கள், ஆரோக்கியமான உணவிற்கும் கற்றல் அடைவு மட்டத்திற்குமான தொடர்பினை சமூகத்திற்குத் தெளிவுபடுத்தல் வேண்டும் என்பது மிக முக்கியமான வழிமுறைகளில் ஒன்றாக வலியுறுத்தப்படுகின்றதை அவதானிக்கலாம்.

## முடிவுகளும் விதப்புரைகளும்

### ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான உணவு வழங்கும் முறை மற்றும் மாணவர்களின் போசாக்கு மட்டம்

#### முடிவுகள்

- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற போசாக்குணவு 2023 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் (சுற்றறிக்கை இலக்கம் :- 24/2023) பரிந்துரைக்கப்பட்ட உள்ளடக்கத்திற்கு ஏற்ப காணப்படுவது போதுமான அளவு இல்லை என்று முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இது ஆசிரியர்களின் பதில்களின்படி பெறப்பட்ட இடையின் மூலம் ($\overline{X}$ = 3.07) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- வகுப்பறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் அடைவானது திருப்தியற்ற நிலையில் காணப்படுவதாக முடிவுகள் காணப்படுகின்றது. இது ஆசிரியர்களின் பதில்களின்படி பெறப்பட்ட இடையின் மூலம் ($\overline{X}$ = 3.31) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

#### விதப்புரைகள்

- அதிபர்கள், பரிந்துரைக்கப்பட்ட உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் போன்றோர்களுடன் கலந்துரையாடலினை மேற்கொண்டு உதவியினைப் பெற்றுக்கொள்ளல்.
- மாணவர்களுக்கு வழங்குகின்ற உணவில் அதிகமாக இலிபிட்டுகள் மற்றும் தாதுக்கள் அடங்கிய உணவு வகைகளை இணைத்துக்கொள்ளுதல். இது தொடர்பாக Iqbal மற்றும் பலரால் (2024) "உணவு உட்கொள்ளல், உடல் ஆரோக்கியம் மற்றும் முன்-முதன்மை நிலை மாணவர்களின் கல்வி சாதனைகளுக்கு இடையேயான தொடர்பு" என்ற தலைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு**

**முடிவுகள்**

- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு உணவு தயாரிப்பவர்களின் நாளாந்த செயற்பாட்டை அதிபர் மேற்பார்வை செய்தல் போதுமானதாக இல்லை என்று முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இது ஆசிரியர்களின் பதில்களின்படி பெறப்பட்ட இடையின் மூலம் ($\overline{X}$ = 1.98) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு பெற்றோரும் மாணவர்களின் உணவு உள்ளடக்கம் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபருடன் கலந்துரையாடுவது குறைவாகக் காணப்படுகின்றது என்று முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இது ஆசிரியர்களின் பதில்களின்படி பெறப்பட்ட இடையின் மூலம் ($\overline{X}$ = 3.31) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

- மாணவர்களுக்காக உணவு தயாரிக்கும் செயற்பாடுகளை, பாடசாலை வளாகத்திலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அதிபர் மேற்கொள்ளுதல்.

- பெற்றோர்களுக்கு ஆரோக்கியமான உணவு உள்ளடக்கம் தொடர்பான விழிப்புணர்வை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஏற்படுத்துதல் வேண்டும். மேலும், சமூகத்தின் ஈடுபாட்டை அதிகரிக்க பாடசாலையில் நிகழ்ச்சித்திட்டங்களை அதிபர் நடைமுறைப்படுத்தல். இது தொடர்பாக Kehm மற்றும் பலரால் (2015) “பாடசாலை ஊட்டச்சத்து மற்றும் உடல் செயல்பாடு கொள்கையின் வளர்ச்சி மற்றும் செயல்படுத்தலில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பங்கு” என்ற தலைப்பின் ஊடாக மேற்கொண்ட ஆய்வில் உறுதிப்படுத்தியுள்ளனர்.

**ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்**

**முடிவுகள்**

- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் பெற்றோர்களுக்கு போசாக்குத் தொடர்பான தெளிவின்மை காரணமாக அமைகின்றது. இது ஆசிரியர்களின் பதில்களின்படி பெறப்பட்ட இடையின் மூலம் ($\overline{X}$ = 4.28) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் பாடசாலையினால் வழங்கப்படும் உணவில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் விருப்பம் இல்லாத நிலையும் ஒன்றாக காணப்படுகின்றது என்று முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இது ஆசிரியர்களின் பதில்களின்படி பெறப்பட்ட இடையின் மூலம் ($\overline{X}$ = 3.31) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

- ஒவ்வொரு உணவிலும் எவ்வாறான போசாக்குகள் காணப்படுகின்றன எனப் பெற்றோர்கள் அனைவருக்கும் சுகாதார வைத்திய நிலையத்தினால் விழிப்புணர்வு வழங்குதல். இது தொடர்பாக Charlton மற்றும் பலரால் (2021) ''வெற்றிகரமான ஆரம்ப பாடசாலை அடிப்படையிலான அனுபவ ஊட்டச்சத்து திட்டங்களின் சிறப்பியல்புகள்: ஒரு முறையான இலக்கிய ஆய்வு'' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிட்டுள்ளனர்.

- ஒவ்வொரு நாளும் பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்குகின்ற உணவினை கவர்ச்சித்தன்மையாகவும், ஆரோக்கியமாகவும், சோறும் பருப்புக் கறியும் தினமும் வழங்காமல் வெவ்வேறு வகையாக உணவுகளை வழங்குதல். அதாவது, தாழித்த கடலை, தாழித்த பயறு, மரக்கறி கலந்த மஞ்சள் சோறு, பாற்சோறு, பிரைட் ரைஸ், தோசை, இடியப்பம் போன்ற உணவுகளை வழங்குதல்.

**பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இழிவளவாக்கி ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்**

**ஆலோசனைகள்**

- ஆரோக்கியமான உணவிற்கும் கற்றல் அடைவு மட்டத்திற்குமான தொடர்பினை அதிபர்கள், சமூகத்திற்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று நேர்காணல் மற்றும் குவியக்குழுக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட ஆலோசனைகள் உறுதிப்படுத்தியுள்ளது.

- உணவு வழங்குவதில் வகுப்பாசிரியர்களை தவிர, ஏனைய ஆசிரியர்களும் பங்குகொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை ஆசிரியர்களிடத்தில் அதிபர்கள், கொண்டு சேர்க்க வேண்டும் என்று நேர்காணல் மற்றும் குவியக்குழுக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட ஆலோசனைகள் உறுதிப்படுத்தியுள்ளது.

**விதப்புரைகள்**

- சுகாதார வைத்திய நிலையமும் பாடசாலையும் இணைந்து மக்களுக்கு, மாணவர்களின் ஆரோக்கியம் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல். இது தொடர்பாக Torres and Simovska, (2017) போன்றவர்களினால் ''கிராமப்புற ஈக்வடாரின் பாடசாலை உணவுத் திட்டத்தில் சமூகப் பங்கேற்பு: ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பாடசாலை முன்னோக்கு'' என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஆரோக்கியமான உணவு தொடர்பாக ஆசிரியர்களுக்கு கல்வி மற்றும் அனுபவக் கற்றலில் ஈடுபடச்செய்வதற்கு அதிபர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். இது தொடர்பாக Dudley மற்றும்

பலரால் (2015) “ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு ஆரோக்கிய உணவைக் கற்பித்தல் மற்றும் சிறந்த நடைமுறை: சான்றுகளின் ஆய்வு” என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

அருள்மொழி.செ. (2017). கற்பித்தலுக்கான உளவியல். துர்கா அச்சகம். மட்டக்களப்பு.

கல்வியமைச்சு. (2023). சுற்றறிக்கை இலக்கம் 24.‍.2023. பாடசாலை பிள்ளைகள் தொடர்பாக உணவு வழங்கும் அரச போசாக்கு வேலைத்திட்டம். 5 th May 2023 Colombo.

சந்திரசேகரன். சோ. (2004). கல்வி ஒரு பன்முக நோக்கு. உமா பதிப்பகம். கொழும்பு.

Chakraborty. M. And Ghosh. S. (2020). Factors Influencing the Nutritional Status Among Children of 6–11 Years of Age: A Case Study from an Indian Megacity. Journal of Health Management. 22(1). pp. 78–95. https://doi.org/10.1177/0972063420908394. Access from: 2024.08.26, 03.05 pm

Charlton. K. (2021). Characteristics of successful primary school-based experiential nutrition programmes: a systematic literature review. Public Health Nutrition. 2021;24(14):4642-4662. doi:10.1017/S1368980020004024. Access from: 2024.09.01, 7.55 pm

Dudley. D et al. (2015). Teaching health eating to primary school students: A review of evidence and waste practice. NSW department of education and communities. https://www.research.net/publication/278020469. Access from: 2024.09.16, 07.30 am

Iqbal. F et al. (2024). Association Between Dietary Intake Physical Health And Academic Achievements Of Pre-Primary Level Students. Volume: 21. No: 58 (2024). pp. 693-702. Access from: 2024.08.31, 4.56 pm

Jayawardana, L., Herath, R. P., Silva, K. D. R. R., & Worsley, A. (2017). Barriers to healthy dietary choice amongst students in Sri Lanka as perceived by school principals and staff. Public Health Nutrition, 20*(12), 1238–1245. https://doi.org/10.1017/S1368980017000821 [8]. Access from: 2024.09.06, 08. 25 am

Kehm. R. et al. (2015). The role of family and community involvement in the development and implementation of school nutrition and physical activity policy. Journal of School Health. 85(2). pp. 90–99. https://doi.org/10.1111/josh.12231. Access from: 2024.08.28, 04.30 pm

Kwatubana. S. Nhlapo. V.A. and Moteetee. N. (2022) “The role of principals in school health promotion in South Africa: a qualitative study”. Health Education.Vol. 122 No. 3. pp. 304-317. https://doi.org/10.1108/HE-08-2020-0078. Access from: 2024.08.28, 06. 25 pm

Luesse. H.B. et al. (2018). Challenges and Facilitators to Promoting a Healthy Food Environment and Communicating Effectively with Parents to Improve Food Behaviours of School Children. Matern Child Health. J 22. 958–967 (201). https://doi.org/10.1007/s10995-018-2472-7. Access from: 2024.08.26, 08.30 am

Malwenna, L. I., Gunarathna, N. K. C., Malwenna, H. N., Kannangara, K. B., Jayawardana, C. K. B., Gamini, N. B., & Priyanganie, B. A. (2022). Practice of school canteen policy in schools in the district of Rathnapura, Sri Lanka. Sri Lanka Journal of Medicine, 29(1). [5]. Access from: 2024.09.06, 07.45 am

Michael Murphy. (2014). “Breakfast and learning. current nutrition and food science; _Breakfast_and_Learning_An_Updated_Review.https://www.researchgate.net/publication/228638584. Access from: 2024.08.29, 05.30 pm

Torres. I. and Simovska. V. (2017). Community participation in rural Ecuador’s school feeding programme'. Health Education. 117(2). pp. 176–192. https://doi.org/10.1108/he-02-2016-0009. Access from: 2024.09.06, 4. 54 am

# விசேட தேவையுடைய மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

(கல்குடா கல்வி வலயத்தின் கோறளைப்பற்றுக் கோட்டத்திற்குட்பட்ட கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**Abilash.K[1], Arulmoly.S[2]**

[1]*BT/KK/Akkuranai Bharathy Vidyalayam*

*abiabilash716@gmail.com*

[2]*Retired Professor in Education, Eastern University, Srilanka*

*chelliah.arulmoly@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்**

உள்ளடங்கற் கல்வி (IE) என்பது உலகலாவிய ரீதியில் அனைவரும் அடையப் பாடுபட வேண்டிய ஓர் உயர்ந்த இலக்காகும். 1994க்குப் பின்னரான கல்விக் கொள்கைகளுக்கு இணங்க, IE மற்றும் அதனுடன் தொடர்புடைய அணுகுமுறைகளைச் செயற்படுத்துவது வளர்ந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் பெரிய சவாலாக உள்ளது. கற்றலில் விசேட தேவையுடையவர்களை (SNE) உள்வாங்கி, தொழிநுட்ப ரீதியாக புதுமையான கொள்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களின் கற்பித்தலானது மிகவும் முக்கியமானது. இந்த ஆய்வானது குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் கல்குடா வலயத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் சாதாரண மாணவர்களைப் போலவே விசேட தேவையுடைய மாணவர்களது இடர்பாடுகளை அகற்றி வகுப்பறைச் செயற்பாட்டிற்குள் உள்வாங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வியில் நிலைபேறான புதிய தொழிநுட்பத்தையும் கற்பித்தலையும் வெற்றிகரமாக செயற்படுத்துவது அவசியமாகும். ஆகையால், ஆசிரியர்கள் குடும்பம், பாடசாலை, சமூகம் எனத் தொடர்ந்தாலும் வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்களால் வகுப்பறை நுட்பங்கள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனங்கள், கணிப்பீடு, மதிப்பீடு சார்ந்து பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. SNE மாணவர்களது தேவைகளைப் புரிந்துகொள்ளல், கற்பித்தல் சூழலில் ஆசிரியர்கள் அனுபவிக்கும் சவால்களைக் கண்டறிதல், அனைவருக்கும் கல்வி என்ற சிந்தனையை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் என்பன இவ்வாய்வில் முக்கியமானதாகும். இது ஆசிரியர்களின் சவால்களை ஆராய்ந்து வகுப்பறைக் கற்பித்தலுக்கு முன்னுரிமை அளிக்கும் ஓர் அளவைநிலை ஆய்வாகும். கல்குடா வலயத்தில் 05 பாடசாலைகள் நோக்க மாதிரி அடிப்படையிலும், எழுமாற்று மாதிரி அடிப்படையில் விசேடதேவை சிறப்புக் கல்விக்கான ஆலோசகர்கள் (ISA) 02 பேரும், 05 அதிபர்களும், 90 ஆசிரியர்களும், 120 மாணவர்களும், 30 பெற்றோர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து தகவல்களைப் பெறும் வகையில் தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, குழுக் கலந்துரையாடல், நேர்காணல், ஆவணங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள்

பொருத்தமான SPSS மென்பொருள் முறைகளினூடாக வகைப்படுத்தல், வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்பட்டன. இருப்பினும், IE நடைமுறைகளை எளிதாக்கும் வகையில் பாடசாலை துணைக் குழுக்கள் உருவாக்கம், வளப்பற்றாக்குறை, பெற்றோரின் ஒத்துழைப்பு, வாண்மைத்துவ விருத்தி, கற்பித்தலுக்கான நேரம், மாணவர் வரவு, விசேட பயிற்சித் திட்டங்கள் தொடர்பான விதப்புரைகளும் இடம்பெறுவதோடு, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கான ஆலோசனைகளும் ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *: விசேட கல்வித் தேவைகள், கனிஷ்ட இடைநிலை, அடைவுமட்டம், சவால்கள்.*

**அறிமுகம்**

ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானது. ஆகையால, உலகிலுள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் பிள்ளைகள் கற்பதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கற்பதற்கான உரிமை உள்ளதால் கல்வியானது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது (Abbas, 2020). கற்றலை வளர்க்க நினைத்தால் மாத்திரமே ஓர் ஆசிரியர், தனது கற்பித்தல் திறமையால் ஒரு முழுமையான வகுப்பறையை உருவாக்க முடியும் (சலோமி, 2018). 13 வருட உத்தரவாத கல்வித் திட்டத்திற்குள் விசேட கல்வி, விசேட தேவைகள்சார் கல்வி, உள்ளடங்கற் கல்வி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. காலமாற்றத்திற்கேற்ப வேறுபாடுடைய பிள்ளைகளின் வெற்றிகரமான கற்பித்தலுக்குப் பொருத்தமான அணுகுமுறைகளை உள்வாங்க வேண்டும். அந்தவகையில், ஒவ்வொரு ஆசிரியரும் பாடத்திட்டம், கற்பித்தல் முறை, கற்பித்தல் நுட்பம், தொழில் வாண்மைத்துவ மேம்பாடு, ஒத்துழைப்பு, கலைத்திட்ட மாற்றம் தொடர்பில் எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் மாணவர்களின் பாடப் பெறுபேறுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் சார்ந்து மாணவர்களின் அடைவுமட்டத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளது.

**ஆய்வின் பின்னணி**

கடந்த மூன்று தசாப்தங்களாக விசேட கல்விப் புலத்தில் பலவாறான அமைப்புக்கள் உருவாகி உலகளாவிய கல்வியின் போக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது (Hettiarachchi & Das, 2014). இருப்பினும், வளர்முக நாடுகள் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு நீண்ட காலம் பயணிக்க வேண்டும். இலங்கையில் 2012-2016 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின்படி வளர்ச்சியுற்ற விசேட கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சீராக கல்விப் பாதையானது நகர்ந்துள்ளதால் மாணவர்களுக்குப் பொருத்தமான சூழ்நிலைகள், கல்விக்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலமே இக்கல்வி பாடசாலைகளில் சாத்தியமாகிறது (தேசிய கல்வி நிறுவகம், 1991). மேலும், நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் கல்வியை முன்னெடுக்கும் ஆசிரியர்கள் கற்றல் மற்றும் கற்பித்தற் செயற்பாடுகளில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். அந்தவகையில், வகுப்பறைக் கற்பித்தல் என்பது இலகுவான பணியல்ல. எனினும், மாணவர்களை வளர்த்தெடுக்கும்

மாபெரும் பணி ஒவ்வொரு ஆசிரியருக்கும் உண்டு. கற்பித்தல் என்பது ஒரு சிறந்த கலை என்ற வகையில் ஒவ்வொரு மாணவன்மீதும் அதிக பொறுப்பும் கவனமும் கொண்டு கற்பித்து வருகின்றனர்.

**ஆய்வுப் பிரச்சினை**

கற்றல் என்னும் தொழிற்பாடு வேண்டும் என்பதே யாவரினதும் எதிர்பார்ப்பு ஆகும். அதற்கமைய, வகுப்பறைச் சூழலில் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்கள் கல்விப்புலத்தில் உள்வாங்கப்படுவதால் வகுப்பறையில் கற்பித்தலை மேற்கொள்வது சவாலாக உள்ளது. வகுப்பறையில் பொதுவான கற்பித்தல் முறையைப் பயன்படுத்த முடிவதில்லை. மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வமின்மை, பெற்றோர்களது விழிப்புணர்வின்மை, மாணவர்களது எழுத, வாசிக்க முடியாத தன்மை காரணமாக உரிய காலத்தில் உரிய தரத்துக்குரிய தேர்ச்சிகளை ஆசிரியரால் வெளிப்படுத்த முடியாத நிலையில் மாணவர்களது பெறுபேறுகளும் குறைவாக காணப்படுகின்றன. மாணவர்களது இடைவிலகல், தொடர்ச்சியான வரவின்மை, பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலைக் கல்வியைத் தொடராமை எனக் குடும்பம், பாடசாலை, சமூகம் சார்ந்துள்ள காரணிகளின் சவால்களுக்கு மத்தியில் மாணவர்களை உள்வாங்கிக் கற்பிக்க வேண்டிய மாபெரும் வகிபங்கினைக் கொண்டுள்ளனர்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

அபேவிக்ரம, மற்றும் அல் (2014) என்போர் இடர்படும் மாணவர்களுக்கான தற்போதைய நாட்டு நடைமுறைகள் உலகளாவிய பரிந்துரைகளைப் பூர்த்திசெய்யாததால் பொருத்தமான கற்பித்தல் அணுகுமுறைகளை வடிவமைத்தல் முக்கியமானது என்கின்றனர். அனைவருக்கும் கல்வி என்ற எண்ணக்கரு உலகம் பூராகவும் பிரபல்யமானதால் விசேட தேவைகள்சார் கல்வி (SNE) என்பது ஒரு தத்துவமாக மாறியுள்ளது (சிவகுமார், 2007). அனைவருக்கும் கல்வி என்ற நிலையில் ஆசிரியர்களுக்கான இற்றைப்படுத்தல் நுட்பங்கள், மாணவர்களது குடும்பப் பின்னணி, கற்பித்தல் அணுகுமுறைகளை அறியலாம். எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள், திட்டங்கள், கல்வியில் சமூக விருத்தி, வேலையுலகு, சமூக வாழ்க்கை முதலானவற்றிற்குத் தயார்படுத்தும் வகையில் மாணவர்களுக்கான கற்பித்தல் உபாயங்களை இங்கு உள்வாங்க வேண்டியுள்ளது (இலங்கை திறந்த பல்கலைக்கழகம், 2010). பாடசாலை மட்டத்தில் SNE அணுகுமுறைகள் பரவலாக்கப்படுவது மட்டுமின்றி, வகுப்பறைகள் பலதரப்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ளதால் ஒவ்வொரு மாணவனையும் தனித்துவமாக ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை ஒவ்வொரு ஆசிரியரும் உணர முடியும்.

**இலக்கிய மீளாய்வு**

கற்றலில் இடர்படும் ஒவ்வொரு பிள்ளையும் வாழ்வில் வெற்றியடைவதற்கான வாய்ப்பை அனுமதிக்கும் வகையில் கற்பவரின் அனைத்துத் தேவைகளும் நிவர்த்தி செய்தால் மாத்திரமே தரமான கல்வியை அடைய முடியும் (Pinnock H. & Lewis I., 2008). வகுப்பறையின் இயங்குநிலையைத் தீர்மானிக்கும் ஆசிரியர்கள் வகுப்பறையின் வினைத்திறனான

செயற்பாடுகளுக்குப் பாடத்திட்டம், கற்பித்தல் முறை, கற்பித்தல் வளங்களில் மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் வெவ்வேறு மாணவர்களின் கற்றல் தேவைகளை ஆசிரியர்கள் பூர்த்திசெய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது (Forlin, 2014). மாணவர்களது கல்வித் தரத்தைச் சிறப்பாக மேம்படுத்த கற்பித்தலுக்கான உபகரணங்களும் வளங்களும் நேரமும் காணப்படுவதில்லை (சின்னத்தம்பி, 2004). பெற்றோர் தம் பிள்ளைகளின் தொடர்ச்சியான கற்றலில் அதிக அக்கறையின்றி இருப்பதால் வகுப்பறைகளில் பொருத்தமான கற்பித்தல் நுட்பங்களுடன் ஆசிரியர்களால் சிறப்பான முறையில் கற்பிக்க முடியவில்லை (Abbas, 2020). SNE என்பது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமை; சலுகை அல்ல. அண்மைக் காலங்களில் இம்மாணவர்கள்மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது (Mag, Sinfield & Burns, 2017).

**ஆய்வின் பொது நோக்கம்**

வகுப்பறைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணியை அறிந்து, விசேட தேவையுடைய மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் ஆராய்ந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா வலயத்தில் கோறளைப்பற்றுக் கோட்ட கனிஷ்ட இடைநிலைப் பிரிவு வகுப்புக்களுக்கான விசேட தேவைகள் சார்ந்த செயற்பாடுகளை எதிர்காலத்தில் சிறப்புற மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழிவகைகளையும் முன்வைப்பது இவ் ஆய்வின் பொது நோக்கமாகும்.

**ஆய்வின் சிறப்பு நோக்கங்கள்**

வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணியைக் கண்டறிதல், வகுப்பறைகளில் சாதாரண மாணவர்களுக்கு மத்தியில் விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்களின் நிலைப்பாடுகளை அறிதல், வகுப்பறைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களது சவால்களை ஆராய்தல், வகுப்பறைக் கற்பித்தலை எதிர்காலத்தில் சிறப்புற மேம்படுத்துவதற்கான வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல் ஆகியன இவ்வாய்வின் சிறப்பு நோக்கங்களாக உள்ளன. இது ஒரு கலப்பு ஆராய்ச்சி அணுகுமுறையுடன் கூடிய அளவைநிலை ஆய்வாகும்.

**ஆய்வு வினாக்கள்**

இந்த ஆய்வானது பின்வரும் வினாக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது :

1. வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணி யாது?
2. வகுப்பறைகளில் சாதாரண மாணவர்களுக்கு மத்தியில் விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்களின் நிலைப்பாடுகள் எவை?
3. வகுப்பறைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களது சவால்கள் எவை?
4. வகுப்பறைக் கற்பித்தலை எதிர்காலத்தில் சிறப்புற மேம்படுத்துவதற்கான வழிமுறைகளும் ஆலோசனைகளும் எவை?

| கல்குடா வலய மட்ட விபரம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | | பாடசாலை வகை | | | | | மொத்தம் | ஆளணியினர் | | |
| | | தேசிய பாடசாலை | 1AB | IC | வகைII | வகைII | | மாணவர்கள் | ஆசிரியர்கள் | அதிபர்கள் |
| 1 | ஏறாவூர்பற்று 2 | - | 03 | 01 | 04 | 15 | 23 | 9466 | 350 | 18 |
| 2 | கோறளைப்பற்று | 01 | 02 | 06 | 17 | 17 | 41 | 11771 | 564 | 26 |
| 3 | கோறளைப்பற்று வடக்கு | - | 01 | 03 | 09 | 07 | 20 | 4695 | 270 | 13 |
| **மொத்தம்** | | 01 | 06 | 09 | 30 | 39 | **85** | **25932** | **1184** | **57** |
| | | **85** | | | | | | | | |

*அட்டவணை 1: வலய மட்ட அடிப்படையிலான குடித்தொகைப்பரம்பல் - மட்டக்களப்பு*

*(மூலம்: வலயக் கல்வி அலுவலகம், திட்டமிடல் பிரிவு)*

இதன்படி அதிகளவிலான பாடசாலைகளையும் மாணவர்களையும் அதிபர்களையும் கொண்ட கோட்டமாக கோறளைப் பற்றும், குறைவான தொகையினரைக் கொண்டதாக கோறளைப் பற்று வடக்கும் காணப்படுகின்றன. அதிகமான ஆசிரியர்கள் கோறளைப்ப ற்றுக் கோட்டத்திலும், குறைவான ஆசிரியர்கள் கோறளைப் பற்று வடக்கு வலயத்திலும் காணப்படுகின்றனர்.

*அட்டவணை-2: மாதிரிக் குடித்தொகை விபரம்*

| பாடசாலைகள் | பாடசாலை வகை | மொத்த ஆசிரியர்கள் | மொத்த மாணவர்கள் | கனிஷ்ட (6-9) இடைநிலை மாணவர்கள் | துலங்கியோர் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆசிரியர்கள் | மாணவர்கள் | அதிபரகள் |
| A | தேசிய பாடசாலை | 68 | 1046 | 420 | 34 | 21 | 1 |
| B | 1C | 34 | 700 | 310 | 18 | 15 | 1 |
| C | 1AB | 56 | 1100 | 510 | 28 | 26 | 1 |
| D | 1AB | 42 | 850 | 350 | 22 | 18 | 1 |
| E | 1C | 37 | 570 | 210 | 18 | 10 | 1 |
| மொத்தம் | | 237 | 2071 | 1861 | 120 | 90 | 05 |

*(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2025)*

அட்டவணை 2இன்படி ஆய்விற்கான தரவுகளைப் பெறுவதற்கான நோக்க மாதிரி அடிப்படையில் மட்டக்களப்பு கல்குடா வலயத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 5 பாடசாலைகளில் இருந்தும் 5 அதிபர்களும், படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியில் 120 கனிஷ்ட இடைநிலை (தரம் 6-9) ஆசிரியர்களும், படிமுறை எழுமாற்று மாதிரியில் 90 மாணவர்களும், 30 பெற்றோர்களும் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

**தரவுப் பகுப்பாய்வு**

ஆய்வு வினாக்களை அடியொற்றி வினாக்கொத்து, நேர்காணல், ஆவணங்கள் ஊடாக பெறப்பட்ட தரவுகள் அளவுசார், பண்புசார் முறையில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு SPSS மென்பொருள் முறையினைப் பயன்படுத்தி சலாகை வரைபுகள், வட்டவரைபுகள், முப்பரிமாண வரைபடம் மூலமாக முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு வியாக்கியானமும் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டன.




*உரு 1: வகுப்பறைச் சவால்கள் தொடர்பில் ஆசிரியர்களினது துலங்கல்*

இதன்படி மொத்த ஆசிரியர்களுள் அதிக துலங்கலைப் பாடசாலை A ஆசிரியர்களும், குறைவான துலங்கலை B பாடசாலை ஆசிரியர்களும் வெளிப்படுத்தினர்.




*உரு 2: பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணி*

இவ்வுருவின்படி மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்படும் ஆசிரியர்களில் அதிகமானவர்கள் (29.20%) பட்டதாரிகளாவர். 3.25% ஆசிரியர்கள் முதுநிலைப் பட்டங்களையும் பெற்றுள்ளனர். எனினும், SNE மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான விசேட பயிற்சிநெறியை 25% ஆசிரியர்களே பெற்றுள்ளனர்.

**பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**




*உரு 3: பாடசாலைகளில் கற்பிப்பதற்கான பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்*

இவ்வுருவின்படி பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் 35% இனர் விசேட தேவை கல்வியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக காணப்பட்டனர். அவர்களால் SNE அணுகுமுறைகள் வகுப்பறையில் பயன்படுத்தப்படுத்தப்பட்டன. எனினும், ஏனைய பயிற்றப்படாத ஆசிரியர்களால் வகுப்பறைகளில் அத்தகைய அணுகுமுறைகள் பயன்படுத்தப்படவில்லை என்பதை அறிய முடிந்தது.

*அட்டவணை-3: IE & SNE தொடர்பாக பாடசாலையில் நடைமுறையிலுள்ள திட்டங்களை வகுப்பறைகளில் பிரயோகிப்பது தொடர்பாக ஆசிரியர்களது திருத்தமான துலங்கல்*

| | வலுவாக ஏற்றுக்கொள்கிறே | ஏற்றுக்கொள்கிறே | கூறமுடியாதுள்ளது | ஏற்றுக்கொள்ளவில்லை | வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 5 | 4 | 3 | 2 | 1 |
| துலங்கல்கள் | 25 | 55 | 20 | 15 | 5 |
| | 125 | 220 | 60 | 30 | 5 |

மொத்தம்: *440* பெறுபேறு: *440/125* = ***3.52***

| | |
|---|---|
| **1.00 – 1.8** | *வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை* |
| **1.81 – 2.6** | *ஏற்றுக்கொள்ளவில்லை* |
| **2.61 – 3.4** | *கூறமுடியாதுள்ளது* |
| **3.41 – 4.2** | *ஏற்றுக்கொள்கிறேன்* |
| **4.21 – 5.0** | *வலுவாக ஏற்றுக்கொள்கிறேன்* |

இலைக்கேற்றின் பிரமாண வகை அளவுத்திட்டத்தின்படி இணைபுக் குணகம் (3.52) ‘ஏற்றுக்கொள்கிறேன்’ என்பதைச் சுட்டுகிறது. ஆகவே, ஆசிரியர்கள் வகுப்பறை நடைமுறைத் திட்டங்களில் உடன்பாடு கொண்டுள்ளனர்.

*அட்டவணை 4: SNE அணுகுமுறைகளுடனான வகுப்பறைச் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியரது வகிபங்கு (சராசரி மதிப்பீடு)*

| SNE அணுகுமுறைகளுடனான வகுப்பறைச் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியரது வகிப (துலங்கல்) | இணைபுக் குணகம் |
|---|---|
| *பாடசாலையில் வகுப்பறைச் சூழல், கற்பித்தல் பற்றி நீங்கள் எப்படி உணருகிறீர்கள்?* | 3.51 |
| *பாடசாலையின் இலக்கு மற்றும் SNE நடைமுறைகளுக்கும் இடையே உள்ள உறவு* | 3.47 |
| *வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு ஏனைய ஆசிரியர்கள், அதிபர்களின் ஒத்துழைப கிடைக்கின்றதா?* | 3.49 |
| *பாடசாலையில் கற்பிக்கும் உங்களால் சிறப்பு வகுப்பறை நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன* | 3.51 |
| *பாடசாலையில் தொழில் வாண்மைத்துவ மேம்பாட்டுத் திட்டங்கள் பின்பற்றப்படுகின்றனவா?* | 3.47 |
| *SNE வகுப்பறைக் கற்பித்தலில் கலைத்திட்ட மறுசீரமைப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றனவா?* | 3.21 |
| *மாணவர் இடைவிலகலைத் தாண்டி பாடசாலை வராத மாணவர்கள் சூழ இனங்காணப்பட்டனரா?* | 3.91 |
| *பாடசாலையில் ISA/AD இன் IE & SNE கல்விக்கான செயற்பாடு, கண்காணிப்பு, மதிப்பீடு* | 3.42 |
| *SNE மாணவர்களது கற்பித்தல் மதிப்பீட்டில் விழிப்புணர்வு, வலுவூட்டல் நிகழ்வுகள் உள்ளனவா* | 3.43 |
| *நடைமுறையில் மாணவர்களது கற்றலுக்கான பெற்றோரது ஒத்துழைப்பின் அளவு* | 3.34 |
| *பாடசாலைச் செயற்பாடுகளுக்கு அமைப்பு, நிறுவனம், பங்குதாரர்களின் உதவியின் அளவு* | 3.14 |
| *இம்மாணவர்களுக்கு இணை (Co- Teaching), பரிகார (Remedial), செயற்பாடு (Acti சிகிச்சைமுறை (Diagnostic) சார்ந்த கற்பித்தல் முறைகளை வகுப்பறைகளில் பயன்படுத்துகிறீர்களா?* | 3.46 |
| *பாடசாலைக்கு மாணவர்களை மீளழைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதா?* | 3.51 |
| *SNE வகுப்பறைச் செயற்பாடுகளில் 5S அணுகுமுறைகள், 3H உள்ளடங்கற் பயிற்சிகள் இடம்பெறுகின்ற* | 3.19 |
| *மாணவர்களது பரீட்சைப் பெறுபேற்று அடைவுமட்டம், இணைப்பாட விதானச் செயற்பாடுகள அளவு* | 3.29 |

SNE வகுப்பறைக் கற்பித்தலில் கலைத்திட்ட மறுசீரமைப்புச் செயற்பாடுகள், பெற்றோரது ஒத்துழைப்பு, பங்குதாரர்களின் உதவி (அமைப்பு, நிறுவனம்), 5S அணுகுமுறைகள், 3H உள்ளடங்கற் பயிற்சிகள், மாணவர்களது பரீட்சைப் பெறுபேற்று அடைவு மட்டம், இணைப்பாட விதானச் செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் ஆதரவும் உதவியும் பின்னூட்டமும் குறைவு என்று சுட்டிக்காட்டப்பட்டது.




*உரு 4: வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்களது சவால்கள்*

இதன்படி கற்பித்தலில் ஆசிரியர்களுக்கான சவால்களாக மாணவர்களது குறைவான வரவு, இடைவிலகல் (45%), கற்பித்தலுக்கான நேர அவகாசம் (41%), பெற்றோரின் ஈடுபாடின்மை (40%), போதிய அனுபவமின்மை (30%), கற்றல் உபகரணப் பயன்பாடு (25%), பொருத்தமான கற்பித்தல் முறை (20%) ஆகியன அதிகமானோரால் சுட்டிக்காட்டப்பட்டன.




*உரு 5: SNE அணுகுமுறைகளை வகுப்பறைகளில் பயன்படுத்துவதற்கான நுட்பங்கள்*




*உரு 6: SNE மாணவர்களுக்கான கற்பித்தல் தொடர்பாக ஆசிரியரது துலங்கல்*

ஒட்டுமொத்தமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் வலய வாரியாக மாறுபாடுகள் இருப்பினும், கல்குடா வலயத்தில் "பாடசாலை இலக்கு", "அதிபர்களின் ஆதரவு" பற்றிய

குறிகாட்டியில் நேர்நிலையான கருத்தைக் கொண்டிருந்தனர். பாடசாலை A, ஏனைய பாடசாலைகளைவிடச் சிறப்பான துலங்கலையும், பாடசாலை E மிகக் குறைவான துலங்கலையும் வெளிப்படுத்தின. SNE மாணவர்களுக்கான வகுப்பறைக் கற்பித்தல் அணுகுமுறையுடனான நடைமுறைச் செயற்பாடுகளில் வகுப்பறைக் கற்பித்தலுக்கான சூழல், ஒத்துழைப்பு, தொடர்பாடல், கண்காணிப்பு என்பன பாடசாலைகளில் காணப்படுகின்றன. பரிகார, இணை, சிகிச்சை முதலான கற்பித்தலானது செயற்பாட்டு வகுப்பறை அணுகுமுறைகளில் பயன்படுத்தப்படுகிறன.

தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு, சிறந்த வகுப்பறை நுட்பங்கள், ஆய்ந்தறி மதிப்பீடு மற்றும் கணிப்பீடு, வெளியிலுள்ள பிள்ளைகளைப் பாடசாலைகளில் உட்புகுத்துவதற்கான நிறுவனங்கள், அமைப்புக்கள் காணப்படுகின்றன. எனினும், பெற்றோரின் ஆதரவு, பங்குதாரர்களின் அனுசரணை பற்றி எதிர்மறையான கருத்தைக் கொண்டிருந்தனர். பொதுவாக SNE நடைமுறைகளில் ISA/AD களின் ஆதரவு, வலுவூட்டல், IEP என்பன நடைமுறையில் போதுமானதாகவில்லை. வகுப்பறைக் கற்பித்தல் மட்டுமின்றி, இணைப்பாட விதானச் செயற்பாடுகள், பரீட்சைப் பெறுபேறு, மாணவர்களது அடைவ மட்டம், இடைவிலகல் குறைப்பு, பாடசாலைக்கான உள்ளீர்ப்பு தொடர்பில் பல சவால்களை ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர்.

**முடிவுகளும் விதந்தரைப்புக்களும்**

**முடிவுகள்**

- மட்டக்களப்பு கல்குடா வலயத்தில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பிரதான சவால்களாக மாணவர்களது குறைவான வரவு, இடைவிலகல் (45%), போதிய பயிற்சியின்மை (48%), நேர அவகாசமின்மை (41%), பெற்றோரின் ஈடுபாடின்மை (40%), போதிய அனுபவமின்மை (30%), நேர்த்தியற்ற மாணவர் வரவு, இடைவிலகல் அதிகரிப்பு (15%) என்பன காணப்படுகின்றன (ஆசிரியர்கள் 65%, அதிபர்கள் 75%, ADS/ISA 65%).
- IE & SNE பயிற்சிக்கான அணுகுமுறைகளான பாடத்திட்டம், வகுப்பறையில் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்கள், மதிப்பீடு மற்றும் கணிப்பீடு, வகுப்பறைச் சூழல், தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவை கல்குடா வலயத்தில் ஓரளவு சிறப்பாகவுள்ளது (ஆசிரியர்கள் 65%, மாணவர்கள் 55%, அதிபர்கள் 70% ADS/ISA 100%).
- SNE மற்றும் IE நடைமுறைகளுக்குப் பெரும்பாலான அதிபர்கள் அதிக ஆதரவளிக்கின்றனர். எனினும், மட்டக்களப்புப் பாடசாலைகளில் இவற்றைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப் போதிய ஆதரவு, நிதி நடைமுறைகள், வளங்கள் போதுமானதாக இல்லை (ஆசிரியர்கள் 65%, மாணவர்கள் 15%, அதிபர்கள் 60%, ADS/ISA 100%).
- மட்டக்களப்பு கல்குடா பிரதேசத்தில் காணப்படும் ஆசிரியர்களில் அதிகமானவர்கள் (29.20%) பட்டதாரிகளாவர். 3.25% ஆசிரியர்கள் முதுநிலைப் பட்டங்களைப் பெற்றுள்ளனர். எனினும்,

மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான விசேட பயிற்சிநெறியை 25% ஆசிரியர்களே பெற்றுள்ளனர்.

- SNE அணுகுமுறைகளுடனான வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஆசிரியரின் வகிபங்கு உயர்வானது (அதிபர்கள் 60%, ADS/ISA 100%, ஆசிரியர்கள் 70%).
- வகுப்பறைக் கற்பித்தலில் கலைத்திட்ட மறுசீரமைப்புச் செயற்பாடுகள், பெற்றோரது ஒத்துழைப்பு, பங்குதாரர்களின் உதவி, 5S அணுகுமுறைகள், 3H உள்ளடங்கற் பயிற்சிகள், மாணவர்களது பரீட்சைப் பெறுபேற்று அடைவ மட்டம், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் ஆதரவும் பின்னூட்டமும் குறைவாகும் (ஆசிரியர்கள் 65%, அதிபர்கள் 80%, ADS/ISA 100%).
- மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏனைய வலயங்களைவிட, கல்குடா வலயத்தில் இடைவிலகும் மாணவர்களின் தொகை அதிகமாகும் (ஆசிரியர்கள் 80%, மாணவர்கள் 75%, அதிபர்கள் 100%, ADS/ISA 100%).
- மாணவர்களின் கற்பித்தலை மிகவும் சிறப்புற நடத்துவதற்கான பங்குதாரர் உதவி, நிறுவனங்களின் அனுசரணை, தொழில்நுட்ப உபகரணப் பயன்பாடு என்பன குறைவாகக் காணப்படுகின்றன (ஆசிரியர்கள் 80%, அதிபர்கள் 80%, ADS/ISA 100%).
- பாடசாலைகளில் பரிகாரக் கற்பித்தல், செயற்பாட்டுக் கற்பித்தல், சிகிச்சைமுறைக் கற்பித்தல், நடைமுறைச் செயற்திட்டங்கள் என்பன வகுப்பறை அணுகுமுறைகளில் ஓரளவு பின்பற்றப்பட்டு வருகின்றன (ஆசிரியர்கள் 80%, மாணவர்கள் 75%, அதிபர்கள் 80%, ADS/ISA 100%).
- வகுப்பறை அணுகுமுறைகளில் தொழிநுட்பக் கருவிகளின் பயன்பாடு, சிறந்த வகுப்பறை நுட்பங்கள், ஆய்ந்தறி மதிப்பீடு மற்றும் கணிப்பீடு, பாடசாலைக்கு வெளியிலுள்ள பிள்ளைகளைப் பாடசாலைகளில் உட்புகுத்துவதற்கான நிறுவனங்கள், அமைப்புக்கள் இவ்வலயத்தில் காணப்படுகின்றன (ஆசிரியர்கள் 80%, அதிபர்கள் 80%, ADS/ISA 100%).
- பாடசாலைகளில் SNE தொடர்பான நடைமுறைகளில் ISA/AD களின் ஆதரவும், வலுவூட்டலும் IEP இன் நடைமுறையில் ஓரளவு சிறப்பாகவுள்ளன (ஆசிரியர்கள் 70%, அதிபர்கள் 80%).

**விதந்துரைப்புக்கள்**

- வகுப்பறைக் கற்பித்தற் செயற்பாட்டை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்களுக்குச் சிறந்த நண்பராக இருப்பதுடன், மாணவர்களுடைய விருப்புநிலை, குடும்பப் பின்னணி, கற்பதற்கான ஆயத்தம் என்பவற்றைப் புரிந்துகொண்ட பின்னரே தன்னம்பிக்கையான செயற்பாடுகளுடன் கற்பிப்பது சிறந்தது.
- சக மாணவர்களைப் போல் ஒவ்வொருவரும் தடையின்றி சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் கற்கும் நிலைமையைத் துரிதப்படுத்த வேண்டும். காலமாற்றத்திற்கேற்ப ஒவ்வொரு ஆசிரியரும் தொழில்வாண்மை மீளாய்வு செய்து 21ஆம் நூற்றாண்டுக்கான தேர்ச்சிகளை அடையும் வகையில் கடத்தல், பரிமாற்றல், நிலைமாற்றல் வகிபாகங்களைத் தொடர்ந்து அவர்களை இற்றைப்படுத்தல் அவசியமானது.

- பாடசாலை மட்டத்தில் SNE வகுப்பறைச் செயற்பாடுகளைப் பரவலாக்கும் வகையில் துணைக்குழுக்கள் உருவாக்குவது சிறந்தது. ஏனெனில், குறித்த நேரத்திற்குள் குறித்த ஆசிரியரால் பூரணமாகக் கற்பிக்க முடிவதில்லை. ஆசிரியர்களைத் தொடர்ச்சியாக வலுவூட்டும் வகையில் குறுகிய, நீண்ட கால பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வது நன்று.
- IE மற்றும் SNE அணுகுமுறைகளுடனான வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஆசிரியரின் ஒட்டுமொத்த வகிபங்கு மகத்தானது. வழிகாட்டுபவர், நெறியாளர், பயிற்சியாளர், முகாமையாளர், தலைவர், ஊக்குவிப்பவர், துணைசெய்பவர், கொள்கையாளர் எனப் பல வகிபாகங்களில் அவர்களது பணி மகத்தானது.
- SNE வகுப்பறைக் கற்பித்தலில் கலைத்திட்ட மறுசீரமைப்புச் செயற்பாட்டுக்கான முயற்சிகளையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். கல்வியலாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் 21ஆம் நூற்றாண்டுக்கான மாற்றங்களை உள்வாங்கும் வகையில் உலகக் கல்வியின் செயலொழுங்கிற்கமைய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.
- சர்வதேச கல்விக்கு அமைய உலக நாடுகளிலுள்ள பாடசாலைகளில் பயன்படுத்தும் முறைகளை நமது நாட்டுப் பாடசாலைக் கல்வியில் பயன்படுத்தும் வகையில் 5S அணுகுமுறைகள், 3H உள்ளடங்கற் பயிற்சிகள் ஆகியவற்றை வகுப்பறைக் கற்பித்தலில், பாடசாலை அலுவலக முறைகளில் பயன்படுத்த முடியும். சாதக, பாதகங்களுக்கு அப்பால் தரமான கல்வியில் தரமான மாற்றங்களை வினைத்திறனான செற்பாடுகளின் மூலமாக ஏற்படுத்த முடியும்.
- இடைவிலகும் மாணவர்களின் தொகையைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, UNICEF, UNESCO, Save the children, Courts ஆகியவற்றின் உதவிகளைப் பெறலாம்.
- பாடசாலையில் ஒழுங்கீனத்தை நீக்கும் வகையில் IDEA (Individuals with Disabilities Education Act) உடன் இணைந்த செயற்பாடுகள் பற்றி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் முதலானோருக்கு தெளிவுபடுத்துவது அவசியமானது.
- மாணவர்களின் கற்பித்தலை மிகவும் சிறப்புற நடத்துவதற்கான பங்குதாரர் உதவி, நிறுவனங்களின் தொடர்பினை வலுப்படுத்த வேண்டும். பரிகாரக் கற்பித்தல், செயற்பாட்டுக் கற்பித்தல், சிகிச்சைமுறைக் கற்பித்தல், இணைக் கற்பித்தல் (Co-Teaching), Pull - out instruction என்பனவற்றை வகுப்பறை நடைமுறைச் செயற்திட்டங்களில் பயன்படுத்துவது மிகவும் சிறப்பானது.
- மாணவர்களுக்குப் பிரத்தியேகமாகக் கற்பிக்கும் முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் (Compensatory teaching, Remidial Teaching). மேலும், சிறப்புக் கல்விப் பயிற்சியாளர், சிறப்புப் பாடத்திட்டம், சிறப்புக் கற்பித்தல் முறை, சிறப்புக் கற்பித்தல் கருவிகள் பயன்படுத்துவதை துரிதப்படுத்துவது மட்டுமின்றி, மாணவர்களுக்கான வகுப்பறைச் செயற்பாடுகளாக சிந்தித்தல் - ஜோடி பங்கீடு, குழு விவாதம், குழு வேலை, சுய மதிப்பீடு, சக மாணவர் மதிப்பீடு, புஸ்ஸ் அமர்வு என்பனவும் பரவலாக்கப்பட வேண்டும்.

- மட்டக்களப்பு மாவட்டத்தில் IE மற்றும் SNE நடைமுறைகள் தொடர்பாக அறிவும் திறனும் தேவைப்படும் ஆசிரியர்களுக்கான விசேட நிகழ்ச்சிச் செயற்திட்டங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்த வேண்டும். மாகாண, வலய ரீதியாக இடம்பெறும் செயற்திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டும். உதாரணமாக, பெற்றோர் விழிப்புணர்வு, களச்சுற்றுலா, தெரு நாடகம், JEP, ESDP ( Education Sector Development Project), STEM, SBPTD, EPSI, GEMP, Promoting Inclusive Teacher Education (PITE), IDEA என்பனவற்றைக் குறிப்பிடலாம்.
- ஆசிரியர் தொழில் என்பது பணி என்பதைத் தாண்டி, 'உன்னதமான சேவை' என்ற சிந்தனை ஒவ்வொரு ஆசிரியர் மத்தியிலும் வேரூன்ற வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இவற்றின் மேம்பாட்டிற்குப் போதுமான மனித, பௌதீக வளங்களை நெறிப்படுத்தி, ஆசிரிய துணைக்குழுக்கள், கல்விக் கழகங்களை உருவாக்கிச் செயற்படுத்தலாம். ஒவ்வொரு பெற்றோரும் கல்விச் செயற்பாட்டில் தங்களைப் பங்காளிகளாகப் பார்க்க ஊக்குவிக்கப்பட வேண்டும். ஏனெனில் ஆசிரியர்களும், பெற்றோரும் பாடசாலையில் மதிப்புமிக்க வளங்களாக அமைகின்றனர்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2007). *விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம்.* நுகேகொட: கல்விப் பீடம், இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித் துறை பட்டமேற்கல்வி நிகழ்ச்சித்திட்டம்.

சின்னத்தம்பி, மா.(2004). *ஆசிரியர்களின் வகிபங்கும் அந்தஸ்தும்,* அகவிழி (01). கொழும்பு: அகவிழி வெளியீடு.

சிவகுமார், த. (2007). *விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்.* திருநெல்வேலி: குரு பிறிண்டர்ஸ்.

தேசிய கல்வி நிறுவகம், (1991). *மெல்லக்கற்கும் மாணவர்கள்*, பாகம் -1. மகரகம: பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

Abeywickrama, S. P., Jayasinghe, I. K. & Sumanasena, S. P. (2013). Excluded in inclusive schools: Experiences of children with disabilities, their families and teachers in Sri Lanka**.** *Journal of Disability, CBR & Inclusive Development,* 24(1)

Abbas, K. D. A. (2021). *Factors influencing students reading comprehension difficulties amidst the use of modular distance learning approach in Mindanao State University Sulu* - Senior High School. Open Access Indonesia Journal of Social Sciences, 4(6), 447.

Forlin, C.(2004). Promoting inclusivity in Western Australian school, *International Journal of Inclusive Education*, 8,183-200

*LIST OF ABBREVIATION: ISA-In -Service Advisors, IEP-Individualized Educational Project, IE-Inclusive Education, SNE-Special Needs Education.*

Ministry of social welfare.(2003). *National policy on disability for Srilanka*; Sethsiripaya Battaramulla SriLanka. Retrieved from: http://www.unicef.org/srilanka/disablitypolicy(1).pdf

Salomi,D.(2018) Inclusive-causes, problems & solutions, *International journal of management technology and engineering*, 8(2249-7455).

UNICEF.(2013). Examples of inclusive education of SriLanka. Retrieved from: http://www.unicef.org/rosa/inclusiveSlk.pdf

# Religion & Social Harmony

# நல்லூர் கந்தசுவாமி கோயில் மரபுகளும் மாற்றங்களும்

**Thevaraja Tharsin**

Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

tharsin999@gmail.com

**K. Mathiseelan**

Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

mathiseelank@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் சரித்திரப் புகழ் வாய்ந்த இந்துக்கோயில்களுள் ஒன்றாக நல்லூர் கந்தசுவாமி கோயில் விளங்குகின்றது. இவ்வாலயத்தின் மரபுகளையும் அம்மரபுகளில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆய்வுசெய்வதோடு மாற்றங்களுக்கான காரணங்களையும் கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. ஆய்வுக்கு அளவுசார் தரவுகளும் பண்புசார் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கான இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பனவற்றில் இருந்து பெறப்பட்டுள்ளன. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மரபுசார் விடயங்களில் பாரம்பரியமான நடைமுறைகள் இன்றும் பின்பற்றப்படுகின்ற போதிலும், நவீன நாகரிகத்தின் வளர்ச்சியின் காரணமாகவும் பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி வளர்ச்சி முதலியன ஏற்பட்டதன் விளைவாகவும் புதுமைகள் புகுத்தப்பட்டன. இதன் காரணமாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பாரம்பரிய வழிபாட்டு மரபுகள், தற்கால நவீன நாகரிகத்தின் வளர்ச்சியால் பாரிய மாற்றங்களையும் நன்மைகளையும் உள்வாங்கியுள்ளது. எனவே, இவற்றைக் கண்டறிவதன் மூலம் தற்கால சந்ததியினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் சரியான வழிபாட்டு முறைகளைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். அத்தோடு தற்காலத்தில் மாற்றங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்களையும் கண்டறிய முடியும். இவை எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் வலுப்படுத்த உதவும்.

***திறவுச் சொற்கள்:*** *நல்லூர் கந்தசுவாமி கோயில், மரபு, மாற்றம், பாரம்பரியம்.*

**அறிமுகம்**

நம் இலங்கைத் திருநாடு ஆலயங்கள் நிறைந்த அழகுமிளிர் நாடு. திருமூலரினால் 'சிவபூமி' எனப் போற்றப்பட்ட புண்ணிய தேசம். சிவனும் முருகனும் ஒருவரே, வேறல்லர் என்கிறது கந்தபுராணம். செந்தமிழ்த் தெய்வம், கலியுகவரதன், கண்கண்ட தெய்வம் எனப்

போற்றப்படுகின்ற முருகப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கின்ற திருத்தலங்கள் இலங்கையில் ஆங்காங்கு ஊர்கள் தோறும் காணப்படுகின்றன. கதிர்காமம், நல்லூர் முருகன் ஆலயங்கள்மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், இவ்வாய்விற்குரிய களமாக அமையப்பெறுவது நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகும். நல்லூர் முருகன் ஆலயம் இலங்கையில் சரித்திரப் புகழ் மிக்கதாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலம் தொடக்கம் நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், அவற்றுடன் அமையப்பெற்ற பண்பாடுகள், விழுமியங்கள், மரபுகள், பாரம்பரியங்கள் முதலியவை பின்பற்றப்பட்டுக் கொண்டு வருகின்ற போதிலும், தற்காலத்தில் அவை மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கின்றன என்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே, இவ்வாய்வானது அத்தகைய வழிபாட்டு மரபுகளையும் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆய்வுசெய்வதாய் அமையப்பெற்றுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற இந்துக் கோயில்களுள் முக்கியமானது. பல்வேறுபட்ட வழிபாட்டுப் பாரம்பரியத்தினையும் மரபுகளையும் வழக்காறுகளையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது. இத்தகைய மரபானது பழைய கால வழிபாட்டு மரபிலிருந்து மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கின்றனவா என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாகும். நல்லூர் கந்தசுவாமி கோயிலானது, பல்வேறுபட்ட அம்சங்களில் முக்கியத்துவம் பெறுவதோடு அதனுடைய ஆரம்ப கால மரபுகளுக்கும் தற்கால மரபுகளுக்கும் இடையே எத்தகைய மாற்றம் நிகழ்ந்துள்ளன என்பதனை ஒப்பீட்டாய்வதே இதன் நோக்கமாகும்.

முருக வழிபாடானது பல நீண்ட கால வரலாற்றினைக் கொண்டது. இவ்வழிபாடு பல இடங்களில் தனித்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இத்தகைய வழிபாடானது பல்வேறுபட்ட வகையில் செல்வாக்குப் பெற்றுள்ளது. பண்டைய காலத்திலிருந்து தற்காலம் வரை பல்வேறுபட்ட வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள் போன்றன செல்வாக்குப் பெற்று மக்கள் மனதில் இடம்பிடித்துக் கொண்டுள்ளது. இத்தகைய நல்லூர் கந்தசுவாமி கோயிலின் ஆரம்ப கால மரபினையும் தற்கால மரபினையும் ஒப்பிட்டு ஆய்வு செய்கையில் அம்மரபுகளில் மாற்றங்களே அதிகமாக நிகழ்ந்துள்ளன என்பதே இவ்வாய்வின் கருதுகோளாக அமைகிறது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வுக்குப் பொருத்தமுள்ளதாக ஆய்வு முறையியல் அமைய வேண்டும். ஆய்வு முறையியல் என்பது ஒட்டுமொத்த ஆய்வு உள்ளடக்கத்தையும் கொண்டதாகும். இதில் ஆய்வு வடிவமைப்பு, தரவு பயன்படுத்தும் தரவுகளின் வகைகள், ஆய்வுக்காகத் தரவு சேகரிக்கும் முறைகள், பகுப்பாய்வு முறைகள், பகுப்பாய்வு முறையின் பொருத்தப்பாடு என்பன உள்ளடங்கும். ஆய்வின் உறுதித் தன்மையைப் பேணும் வகையில் தரவு சேகரித்தல் அமைய வேண்டும். இந்த ஆய்வானது பல்வேறு விவரண ரீதியில் ஆய்வு செய்யப்படுகின்றது.

இந்த ஆய்விற்காக கள ஆய்வு முறையியல், வரலாற்று முறையியல், விபரண ஆய்வு முறையியல் மற்றும் பண்பு ரீதியான ஆய்வு முறையியல் என்பன இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில் வழிபாட்டின் தொன்மையினைக் கண்டறிய வரலாற்று ஆய்வு முறையியலும் நல்லூர் கந்சுவாமி கோயிலின் பாரம்பரிய வழிபாட்டு

முறைகளையும் தற்கால வழிபாட்டு முறைகளையும் கண்டறிவதற்குக் கள ஆய்வு முறையியலும், முருகனுடைய வழிபாட்டு மரபில் ஏற்பட்ட மாற்றத்தினைக் கண்டறிய பண்பு ரீதியான ஆய்வு முறையியலும், ஒப்பிட்டுப் பகுப்பாய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

சோமசேகரன், வை. என்பவரால் (2015) இல் எழுதப்பட்ட ''ஈழத்து ஆலயங்கள்'' எனும் நூலில் இலங்கையின் முருகன் ஆலயங்கள் பற்றிய விடயங்கள், நல்லூர் கந்தசுவாமி கோயில் பற்றிய வரலாற்றுப் பதிவுகள், அக்கோயிலினுடைய அமைப்பு, அங்கு நடைபெறும் திருவிழாக்கள், பூஜைகள் பற்றிய தகவல்கள், நல்லூரோடு இணைந்ததாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பற்றிய விடயங்கள் போன்றவற்றினைக் காணலாம். இணுவையூர் கலாபூஷணம் சிவலிங்கம், மூ. என்பவரால் (2017) ஆம் ஆண்டு எழுதப்பட்ட ''நல்லூர் கந்தசுவாமி கோயிலின் தோற்றமும் வரலாறும்'' எனும் நூல், முருகனின் தோற்றம் பற்றியும் சிறப்புக்கள் பற்றியும் கூறுவதோடு நல்லூர் கந்தசுவாமி கோயில் வரலாற்றுச் சிறப்புக்கள், அதன் தற்போதயை நிலை போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகிறது.

கந்தையா குணராசா (1987) என்பவரால் எழுதப்பட்ட ''நல்லை நகர் நூல்'' எனும் நூலில் நல்லூர் பிரதேசத்தினுடைய ஆரம்ப கால வரலாறுகளும் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் தோற்றம் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் காணப்படுகின்றன. உமாச்சந்திரா பிரகாஷ் என்பவரால் (2016) எழுதப்பட்ட ''நல்லூர் கந்தசுவாமி பெருங்கோயில்'' எனும் நூலில் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் ஆதி வரலாறு மற்றும் நாற்றிசைக் கோயில்கள் பற்றிய விடயங்களும் அக்கோயிலின் இன்றைய உருவாக்கமும் அதன் பிரமாண்ட வளர்ச்சி பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. குல. சபாநாதன் என்பவரால் (1971) இல் எழுதப்பட்ட ''நல்லூர் கந்தசுவாமி'' எனும் நூலில் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் தோற்றுவாய் பற்றிய விடயங்களும் கால ஓட்டத்திற்கேற்றவாறு ஆலயம் மாற்றமடையும் போக்கு, ஆலயத்தினைச் சூழவுள்ள மடங்கள் பற்றிய விடயங்களும் காணப்படுகின்றன.

குணராசா, க. என்பவரால் (2005) இல் எழுதப்பட்ட ''நல்லூர் கந்தசுவாமி கோயில்'' எனும் நூலில் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றிற்கும் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வரலாற்றுக்குமுள்ள பிணைப்பு முதலிய விடயங்கள் காணப்படுகின்றன. சுப்பிரமணியம், ந. (1974) இல் எழுதிய ''நல்லூர்க் கந்தன்'' எனும் நூலில் நல்லூர் கந்தசுவாமி கோயில் மற்றும் முருகனுடைய சிறப்புக்கள் பற்றிய பாடல்கள் அடங்கிய தொகுப்புக் காணப்படுகிறது. குல. சபாநாதன் என்பவரால் (2007) இல் எழுதப்பட்ட ''நல்லூர்க் கந்தசுவாமி'' எனும் நூலில் நல்லூர் கந்தசுவாமி கோயில் வரலாறு, நல்லூர் முருகன் புகழ் மாலை, திருக்கோயில் புகைப்படங்கள் போன்ற விடயங்கள் காணப்படுகின்றன.

பத்மநாதன், சி. (2017) இல் எழுதிய ''நல்லூர் கந்தசுவாமி கோயில்'' எனும் நூலில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சிறப்புக்கள், ஆரம்பத்தில் கட்டப்பட்ட கோயில் வரலாறு, யாழ்ப்பாண அரசர்களின் காலத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் பெயரால் வெளியிடப்பட்ட நாணயங்கள் பற்றிய குறிப்புக்கள், கோயிலின் புனர்நிர்மாணம், நல்லூர் கந்தசுவாமி கோயில்

உற்சவங்கள் பற்றிய விபரங்கள், ஆறு காலப்பூஜை நேரங்கள், திருவிழாக்கள் மற்றும் நாள் வழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

**நல்லூர் கந்தசுவாமி கோயில்**

ஈழநாட்டின் வரலாற்றுப் புகழ்மிக்க முருக வழிபாட்டுத் தலங்களுள் நல்லூர்க் கந்தவாமி ஆலயமும் ஒன்றாகும். நல்லூர்க் கந்தனை அலங்காரக் கந்தன் என்று சிறப்பாகக் கூறுவர். இவ்வாயலத்தில் முருகனைத் தேரடிச் சித்தர், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமி முதலியோர் வழிபட்டு வீதிகளில் உலாவி வந்திருப்பது இங்கு உள்ள மக்களுக்குப் பெருமை சேர்க்கின்றது. இத்தகைய சித்தர்கள் வழிபட்ட ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டு முறையினைச் சற்று நோக்கும்பொழுது, நித்திய நைமித்திய கிரியைகள் காலம் தவறாது நடைபெறுகின்றன. இங்கு ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. மகோற்சவ காலங்களில் தங்க ரதம், கயிலாய வாகனம், வேல் விமானம், மஞ்சம், சந்தான கோபாலர் உற்சவம், கஜவல்லி, மகாவல்லி உற்சவம், பழனியாண்டவர் உற்சவம், கார்த்திகைத் திருவிழா என்பன ஏனைய ஆலயங்களைவிட இங்கு சிறப்பாக நடைபெறுவதைக் காணலாம். மேலும், கந்தசஷ்டி விரதம் சிறப்பாக இவ்வாயலத்தில் அனுட்டிப்பதைக் காணலாம். இக்காலத்தில் கந்தபுராண படலம் நடைபெறுவதையும் கந்தசஷ்டிக் கவசம் பாடப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனாலேயே யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் எனப் பெயர் பெற்றது (கணேசநாதன். ஞா., 2007, ப - 351).

**நல்லூரக் கந்தசுவாமி கோயில் மரபுகளும் மாற்றங்களும்**

**திருக்கோயில் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்**

திருக்கோயில் கருவறையில் வேல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மகா மண்டபத்தில் ஆறுமுக சுவாமி கோயில் தெற்கு நோக்கிய வாயிலுடன் அமைக்கப்பட்டுள்ளது. மகாவல்லி, கஜவல்லி சமேதராய் காட்சியளிக்கிறார். அடுத்த மண்டபத்தில், தெற்கு நோக்கியபடி முத்துகுமாரசுவாமி கோயில் அமைந்துள்ளது. பிரதான கோயில் கிழக்கு வாயிலைக் கொண்டது. பிரதான நுழைவாயிலில் ஐந்து தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் திராவிடச் சிற்பக் கலை அமைப்பில் உள்ளது. அதன் இரு மருங்கிலும் ஆலய மணிக்கூட்டுக் கோபுரங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

திருக்கோயிலின் உள்வீதியில் தென்மேற்கில் விநாயகர் கோயில், அதனை அடுத்து மேற்கே கஜவல்லி, மகாவல்லி தேவிமார் கோயில், மற்றும் சந்தான கோபாலர் கோயில், கிழக்கே வைரவர் கோயில் மற்றும் சூரியனார் கோயில் முதலிய சுற்றுக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் மூலவர் வேல் பெருமான். மூலஸ்தானத்தின் மேலே விமானம் அமைக்கப்படவில்லை.

மூலஸ்தானம், அர்த்த மண்டபம், நீராவி மண்டபம், ஆறுமுகசுவாமி கோயில் மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், முத்துக்குமார சுவாமி மண்டபம், ஸ்தம்ப மண்டபம், மடப்பள்ளி, களஞ்சியம், தெற்கு, மேற்கு வடக்கு வீதி மண்டபங்கள், வசந்த மண்டபம்,

வாகனசாலை, தெற்கே சண்முக தீர்த்தக்கேணி, அதனைச் சுற்றியுள்ள மண்டபங்கள், தெண்டாயுதபாணி கோயில் எனப் பல அங்கங்களைக் கொண்டு நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்குகின்றது.

கோயிலின் வடக்குப் புறத்தில் பூந்தோட்டம் அமைந்துள்ளது. ஆறுமுக சுவாமி வாயிலில் இராஜகோபுரம் ஒன்று உள்ளது. தீர்த்தக்கேணிக்கு அப்பால் தெற்கு வாயிலில் பிரம்மாண்டமான ஒன்பது தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டுப்பட்டுள்ளது. கோயிலின் உட்புறச் சுவர்களில் தீட்டப் பெற்றுள்ள வர்ண ஓவியங்களில் நடராஜப் பெருமான் திருவுருவம் மற்றும் ஆடல் வல்லானின் நூற்றெட்டுத் தாண்டவங்களைச் சித்திரிக்கும் ஓவியங்கள், ஆறுபடை வீடுகளும், ஆறுமுகனின் அருட்செயல்கள் என்பனவும் அடங்குகின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஆதிமூலம், ஈசானத்து வைரவர் சந்நிதி, தேரடி என்னும் மூன்றும் தனித்துவமான அருள் திற விசேடத்துவம் வாய்ந்தவை. கந்தனின் ஆலயமணி ஓசை, கந்தனின் கருணை அலைகளை உலகெங்கணும் பரப்புகிறது.

**திருவிழாக்களில் காணப்படும் மரபுகள்**

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் மகோற்சவ காலத்தில் நடைபெறும் திருவிழாக்கள் ஆரம்ப காலத்திலிருந்து படிப்படியாக மெருகூட்டப்பட்டு வர்ணமயமாக்கப்பட்டன. அதாவது, ஆரம்ப காலத்தில் அமைதியான முறையில் கொண்டாடப்பட்ட மகோற்சவ திருவிழாக்கள் கந்தையா மாப்பாண முதலியார் காலத்தில் இந்திய கலாசாரத்தை நோக்கி நகர்த்திச் செல்லப்பட்டது. குறிப்பாக கொடியேற்றம், தேர்த் திருவிழா என்பவற்றுடன் இசை நிகழ்சிகள், கேளிக்கைகள், வாண வேடிக்கைகள், கொண்டாட்டங்களும் தேவராடியார் நடனங்களும் மகோற்சவ காலத்தில் இடம்பெற்றதாக அறிய முடிகின்றது. அக்காலத்தில் இந்தியக் கலாசாரப் பின்னணியை யாழ்ப்பாண ஆலயங்கள் பின்பற்றின. அதற்கு நல்லூரும் விதிவிலக்கல்ல. காலப்போக்கில் இவை இல்லாமல் செய்யப்பட்டதோடு பக்தியை மட்டும் அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறை பின்பற்றப்படத் தொடங்கியது.

**நிறங்கள்**

முருகனை நிறங்களுடன் தொடர்புபடுத்தும் வழக்கமும் நல்லூரில் உண்டு. அதாவது, கொடியேற்றம் சிகப்பு நிறத்துடனும், கொடியிறக்கம் வெள்ளை நிறத்துடனும், கார்த்திகை தினம் மஞ்சள் நிறத்துடனும், தேர்த்திருவிழா நிறைவு பச்சை நிறத்துடனும் (திருச்செந்தூர் மரபு), கந்தசஷ்டி ஆறு நாட்களும் ஆறு நிறங்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கும். இச்செயன்முறை இன்றும் மாறாத ஓர் அம்சமாகக் காணப்படுகின்றது (பத்மநாதன், சி., 2017, ப.8).

**தேர்த் திருவிழா**

இருபத்துநான்காம் திருவிழா தினத்தன்று ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வெள்ளிச் சிங்காசனத்தில் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் கொடுப்பார். இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். தேர்த் திருவிழாவிற்கு 10 15 நாட்களுக்கு முன்னர் பக்தர்களும் பணியாளர்களுமாகச் சேர்ந்து அழகுச் சிற்பமான தேரை மினுக்கும் பணியில் ஈடுபட்டு, தேரைத் தயார்ப்படுத்துவார்கள். காணக்கிடைக்காத அரிய

அழகுத் தேரில் எழுந்தருளும் அழகன் முருகனைப் பக்தியுடன் வணங்கும் பக்தர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வண்ணம், கொடியேற்றிய சிவாச்சாரியாரும் அவருக்கு உதவியாக கோயில் நித்திய பூசைகளை நடத்தும் சிவாச்சாரியாரும் மாத்திரமே தேரில் இருப்பார்கள். அவர்கள் இருவரைத் தவிர தேரில் எவரையும் பார்க்க முடியாது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே, முருகன் மாத்திரம் முக்கியத்துவப்படுத்தப்படும் மரபு தேர்த் திருவிழாவன்றும் மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அதுமாத்திரமல்லாது, தேர்த்திருவிழாவின்போது தேர் இருப்பிடத்திற்கு வந்தவுடன் பெண்களால் ஆரத்தி எடுத்து ஆலாத்தும் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வானது ஆரம்ப காலத்தில் காணப்பட்டதாகவும் பின்னாலில் இடைப்பட்ட காலத்தில் இல்லாமல் போய் மீண்டும் தற்காலத்தில் நடைபெறுகின்றதென அறியமுடிகிறது. அத்தோடு, ஆரம்ப காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த நேரங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக தேர்த்திருவிழாவின்போது காலை 7 மணிக்கு ஆறுமுக சுவாமி வெளியில் வருவது நடைமுறைப்படுத்தப்பட்டதோடு தேரில் வைத்து அர்ச்சனை செய்யும் முறை இல்லாமல் செய்யப்பட்டது.

### தீர்த்தத் திருவிழா

இருபத்தைந்தாம் திருவிழா தினத்தன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும். விநாயகர் வெள்ளி எலி வாகனத்திலும், வள்ளி அம்மன் வெள்ளி அன்ன வாகனத்திலும், தெய்வயானை அம்மன் வெள்ளி மயில் வாகனத்திலும், வேற்பெருமான் தங்க மயில் வாகனத்திலும், சண்டேஸ்வர் வெள்ளி ரிஷப வாகனத்திலும் தீர்த்த மண்டபத்திற்கு எழுந்தருளுவர். அஸ்திர தேவரும் கோயில் அதிகாரியான அறங்காவலரும் தீர்த்தம் ஆடும் மரபு காணப்படுகிறது. மாலை கொடியிறக்கம் வெள்ளை நிறத்துடன் அமைதியுடனும் பக்தியுடனும் பரிபூரணமாகவும் தூய்மையாகவும் இடம்பெறும்.

அன்றைய தினம் சுவாமி வெளிவீதி வலம் வரும்போது வேத பாராயணம், திருத்தாண்டகம், சங்கொலி, நந்திமத்தளம், நாதஸ்வரம், சல்லாரி, சங்கநாதம் முதலியன இடம்பெறும். அத்துடன் பக்தர்களின் ஆசி வேண்டி மௌன அஞ்சலியும் நடைபெற்று, சுவாமி ஈசான மூலை வரும்போது அனைத்து வாத்தியங்களும் இசைக்கப்பட்டு, மகோற்சவம் நிறைவுபெறும். இவ்வாறான கலை மரபுகள் தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றமையைக் குறிப்பிடலாம்.

### திருக்கல்யாண உற்சவம்

இருபத்தாறாம் திருவிழா தினத்தன்று பள்ளியறை எழுந்தருளும் வள்ளிகாந்தர், விநாயகருடன் எழுந்தருளுவார். வள்ளி அம்மன் தினைப்புனங் காங்கும் பொருட்டுப் பூங்காவனத் திருவிழா இடம்பெறும். தொடர்ந்து வள்ளியுடன் வள்ளிகாந்தர் எழுந்தருளும். தெய்வயானை அம்மன் கதவை மூடும் போது, எட்டுக்குடி ஏசல் பாடப்பட்டு, மூவரும் உள் எழுந்தருளுவர். நிறைவாக முத்துக்குமார சுவாமிக்குத் திருக்கல்யாணம் நடைபெறும்.

## வைரவர் சாந்தி

பூங்காவனத் திருவிழாவிற்கு அடுத்த நாள் காலை வைரவர் சாந்திக் கிரியைகளும், வருடாந்த மகோற்சவத்தின் நிறைவாக மாலை வைரவர் திருவிழாவும் இடம்பெறும். வைரவர் பெருமான் வெளிவீதி வலம் வரும்போது, முதல்நாள் ஏற்றப்பட்ட சேவற்கொடிகள் அனைத்தும் கழற்றப்பட்டு, ஊர் மீண்டும் வழமைக்குத் திரும்புவதாக ஐதீகம் உண்டு. அதற்கு அடுத்த நாள் வாகன பூசையும் இடம்பெறும்.

## வழிபாட்டு மரபு

இரகுநாத மாப்பாண முதலியார் இன்றுள்ள நல்லூர்க் கோயிலைக் கட்டினார் என்பதை இன்றும் கோவில் திருவிழாக் காலங்களில் வழக்கில் உள்ள கோவில் கட்டியம் மூலம் தெரிந்து கொள்ளலாம். இரகுநாத மாப்பாண முதலியாரின் சந்ததிக்கு நிர்வாக உரிமை கொண்ட கோயிலாகவே இது கருதப்படுவதுடன், தனிப்பட்ட நிர்வாகத்திற்கு மாத்திரம் உரித்துடையது. இரகுநாத மாப்பாண முதலியாரினதும் அவரது மனைவியின் பிரதிமைகளும் கோவில் மகா மண்டபத்திற்குக் கிழக்குப் பக்கமாக உள்ள சுவரில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மேலும், வருடந்தோறும் தைப்பூச முதல் நாளாம் புதிர்பூச தினத்தில் பிரசாதத்தைக் கோயில் தெய்வங்களுக்குப் படைத்த பின்னர், அவர்களுக்குப் படைத்து வழிபடும் வழக்காறு இன்றும் காணப்படுகிறது.

அத்தோடு, தேர்த்திருவிழாவின்போது ஆடு பலியிட்டு தேர் இழுக்கப்படும் முறை மற்றும் சாயங்காலப் பூசைக்கும் இரண்டாங் காலப் பூசைக்கும் இடையே வசந்த மண்டபத்தின் எதிரே பொதுப் பெண்களின் நடன சங்கீத நிகழ்ச்சிகள் என்பன கந்தையா மாப்பாண முதலியார் காலத்தில் நீக்கப்பட்டதோடு ஆடு பலியிடுவதற்குப் பதிலாக நீத்துப்பூசனிக்காய் வெட்டும் வழக்கமாக மாற்றியமைக்கப்பட்டன. அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்துக் கோயில்களில் நடைமுறையில் இருந்த கேளிக்கைகளில் இருந்து நல்லூர் மெல்ல மெல்ல விடுபட்டு பக்தியை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தது. ஆகவே, அதுவரை காலமும் இந்திய கோயில்களைப் பின்பற்றிய யாழ்ப்பாணத்துக் கோயில்கள் மெல்ல மெல்ல நல்லூரைப் பின்பற்ற ஆரம்பித்தன.

## வேல் வழிபாட்டு மரபு

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மூலஸ்தானத்தில் வேலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. 1734ஆம் ஆண்டில் ஒல்லாந்த நிர்வாகத்தினரிடம் பிராத்தனை மண்டபம் அமைப்பதற்கே அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். இதனால் திருவுருவம் வைக்கப்படாமல் வேல் சின்னமே வைக்கப்பட்டு வழிபடப்பட்டது. இதே காரணமாகவே கோயிலுக்கு ஸ்தூபியும் அமைக்கப்படாது மடாலயமாகவே விளங்கி வந்தது. மேலும், கந்தபுராணம் படிக்கும் மடமாகவே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்த இம்மடாலயத்தில் உயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்படின் ஒல்லாந்த அதிகாரிகள் கோயிலுக்கு எதிராகச் செயற்படுவர் எனக் கோயில் அதிகாரிகள் பயந்திருந்தனர். பிரித்தானியரின் ஆட்சியில் மதச் சுதந்திரம் ஓரளவு ஏற்பட்டபோதும் வேல் வழிபாடு மாறவில்லை.

நல்லூரில் மிக நீண்ட காலமாக வேல் முக்கியத்துவம் பெற்றிருந்தது எனவும், அவ்வேல் தேரில் எழுந்தளும் மரபு தொடர்பாகவும், ஏனைய வழிபாட்டுத் தெய்வங்கள் கோயில் வழிபாட்டு மரபுடன் சிறிது சிறிதாகவே இணைந்தமை தொடர்பாகவும் அறிய முடிகிறது. இங்கு 1734ஆம் ஆண்டு தொடக்கம் மூலஸ்தானத்தில் வேல் இருந்தமையை கோயில் நிர்வாகத்தினர் உறுதிப்படுத்துகின்றனர். பண்டைய காலங்களில் நல்லூரில் மரபில் இருந்த வேல் வழிபாடு தொடர்பாக யாழ்ப்பாணத்தில் சில கருத்து வேறுபாடுகள் இருந்துள்ளமையை நாம் அறிகிறோம். நல்லூரில் வேல் வழிபாடு ஆரம்பமான காலம் தொடர்பான எழுத்து மூலமான ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால், ஆரம்ப காலங்களில் தேரில் வேல்முருகனே வீற்றிருந்ததாக அறியப்படுகிறது. ஆனால், 18 ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலப்பகுதியிலேயே ஆறுமுக சுவாமி தேரில் எழுந்தருளி வரலானார்.

**அர்ச்சனைச் சீட்டு வழங்கும் முறை**

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரை மாறாத ஒரு விடயமாக ஆலய அர்ச்சனைச் சீட்டு காணப்படுகின்றது. அதாவது, மிக நீண்ட காலமாகவே அர்ச்சனைக்கான சீட்டின் பெறுமதி ஒரு ரூபாவாகவே காணப்படுகின்றது. இன்றைய காலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் அர்ச்சனைச் சீட்டு ஒரு ரூபாவாகவே காணப்படுகின்றமை சிறப்பிற்குரிய அம்சமாகும். அத்தோடு, கொடுக்கப்படுகின்ற பணத்திற்கு மாத்திரம் அர்ச்சனைச் சீட்டு வழங்கப்படுகின்றது. அதாவது, மிகுதி பணம் கொடுப்பது என்பது இங்கு காணப்படவில்லை. ஏனென்றால், ஆலயத்தில் வணிக செயற்பாடு போல இடம்பெறக் கூடாது என்பதற்காக கொடுக்கின்ற பணத்திற்கு ஏற்ப அர்ச்சனைச் சீட்டு வழங்கப்படுகின்றது. இது இவ் ஆலயத்தின் மாறாத ஒரு விடயமாக இன்றும் நடைமுறையில் உள்ளது.

**ஆலயப் பணியாளர்களும் உடைகளில் ஏற்பட்ட மாற்றமும்**

ஆலயத்தில் வழிபடுவோரின் கூடுதலான எண்ணிக்கைகளுக்கேற்ப பூசைகள், அர்ச்சனை மற்றும் முக்கிய பணிகளை ஆற்றக் கூடுதலான அந்தணர் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். பெருவிழாக் காலத்தில் வசந்த மண்டபத்திலிருந்து சுவாமியை வாகனங்களிற் சேர்ப்பதற்கென திடகாத்திரமான பல அந்தண இளைஞர்கள் இணைக்கப்படுவர். ஆலயப் பணிபுரிவோர், காரியாலயப் பொது ஊழியர். சாதாரண நாட்களில் பத்துக்கும் மேற்பட்ட அந்தணர்கள், பூவேலைக்காரர். ஓதுவார். மங்கல இசை வாசிப்போர், சங்கு ஊதுவோர், ஆலய பராமரிக்கும் ஊழியர், பகல் இரவு ஆலயக் காவல்புரிவோர், நாளாந்தம் ஆலயப்பணி கட்டுமானம், பழுதுபார்த்தல், மைபூசுதல் எனப் பல்வேறு வகையினரும் அடங்கலாக நாற்பது பேர் பணியாற்றுவர். இவர்களின் பல நன்மை கருதி வாரா வாரம் சம்பளம் வழங்கப்படும். தொடக்க காலத்தில் ஆலயத்தில் தொண்டர்களாகப் பணிபுரிபவர்கள் சாதாரணமாக பொதுவான வேட்டி அணிந்து ஆலயத் தொண்டுகளில் ஈடுபட்டனர். பின்னாலில் இது மாற்றமடைந்து தொண்டர்கள் அனைவரும் சிவப்பு வர்ண வேட்டி அணிய வேண்டுமென நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்தோடு கையில் சிவப்புப் பட்டி கட்டியபடி ஆலய சேவை செய்கின்றனர். அத்தோடு, ஆண்கள் மேலோடையுடன் ஆலயத்தின் உள்ளே செல்ல முடியாது எனவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பெருவிழாக் காலத்தில் மேலதிக ஊழியர்கள் (பாதுகாப்பு) தீவட்டி பிடித்தல், வாகனங்கள் ஆலயச் சுத்தஞ் செய்வோர் எனப் பல்வேறு பணியாட்களாக மேலும் 35 பேர் சேர பெருவிழாக் காலத்தில் 75 பேர் முதல் 150 பேர் வரை பணியாற்றுகின்றனர் (உமாச்சந்திரா பிரகாஷ்., 2016, பக். 35 – 49).

**மாற்றங்களுக்கான காரணங்கள்**

மனித சமூகத்தில் மாற்றம் எனும் ஒன்று தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. மனித வாழ்வில் பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கம் போன்ற கலாசாரத்தின் அனைத்துக் கூறுகளிலும் கலாசாரத்தின் சுழற்சிக்கேற்ப மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. இந்த மாற்றங்களுக்கு நவீனமயமாக்கம், மனிதனுடைய பௌதீக மற்றும் உளவியல் ரீதியான அம்சங்கள் ஆகியன காரணங்களாக அமைகின்றன. மனித கலாசாரத்தில் சமயமும் வழிபாட்டு முறையும் மிக முக்கிய பரப்புக்களாகும். அந்தவகையில், இந்து சமயத்தினைப் பின்பற்றும் சமூகத்திலும் மாற்றம் நிகழ்தல் இயல்பான ஒன்றாகிவிட்டது.

**அறங்காவலர்களின் முன்னேற்றகரமான செயற்பாடுகள்**

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தினைக் காலத்திற்குக் காலம் பரம்பரை பரம்பரையாக நிர்வகித்து வரும் அறங்காவலர்களான மாப்பாண முதலியார்களின் அளப்பரிய சேவைகள் பல்வேறுபட்ட வகையில் மாற்றத்திற்குக் காரணமாக விளங்கின எனலாம். குறிப்பாக, இவர்களுடைய இறுக்கமான கட்டுப்பாடுகளும் நெறிமுறைகளும் தீர்மானங்களும் வழிமுறைகளும் மிக முக்கியமான காரணிகளாக செல்வாக்குச் செலுத்துகின்றன. மேலும், ஒவ்வொருவரும் தங்கள் காலத்தில் ஆலயத்தினைப் பல்வேறு வழிவகைகளில் வளர்ச்சிப் பாதையில் கொண்டு வந்துள்ளமையைக் காண முடிகிறது. இதன் அடிப்படையில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இலங்கையின் புகழ்பெற்ற இந்துக் கோயில்களுள் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

**பொருளாதார வளர்ச்சி**

நல்லூர்க் கந்தவாமி ஆலய வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டமைக்குப் பொருளாதார வளர்ச்சியும் ஒரு காரணமாகும். அதாவது, ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரைக்கும் ஆலய கட்டுமான வளர்ச்சியை நோக்கும்போது, தொடர்ந்து வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றுள்ளமையைக் காண முடிகிறது. குறிப்பாக கோபுரங்கள், மண்டபங்கள், திருக்குளம், வாகனங்கள், பரிபாலகர் சந்நிதிகள் என அனைத்தும் வளர்ச்சியடைந்து சென்றுள்ளமையைக் காணலாம். இவ் அம்சங்கள் சமூகத்தில் ஏற்பட்ட படிப்படியான பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகின்றன.

**கல்வி வளர்ச்சி**

யாழ்ப்பாண மக்கள் சமுதாயத்தில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி காரணமாக நல்லூர்க் கந்தவாமி ஆலய வழிபாட்டம்சங்களில் காணப்பட்ட சடங்கு முறைகளில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. ஆரம்ப காலத்தில் கல்வி வளம் குன்றிய பாமர மக்கள் மத்தியில் மூடநம்பிக்கைகளும் அதனோடிணைந்த பழக்கவழக்கங்களும் அதிகமாகக் காணப்பட்டன. ஆலயங்களில் உயிர்களைப் பலிகொடுப்பதால் தமது உயிருக்கு நேரும் ஆபத்துக்களைத்

தவிர்க்கலாம் எனும் மூடநம்பிக்கை ஆரம்பத்தில் மக்களிடம் காணப்பட்டது. காலப்போக்கில் படித்த மத்தியதர வர்க்கத்தின் தோற்றம் இந்த மூடநம்பிக்கைகளைக் களைய முற்பட்டதன் விளைவாக ஆலயங்களில் பலியிடுதல் போன்ற சடங்குகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைவடைந்து செல்கின்றது.

**வெளிநாட்டு இடப்பெயர்வுகள்**

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பூர்வீக இடமாகக் கொண்ட இந்து சமுதாய மக்கள் தனிநபர்களாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் மற்றும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக வெளிநாடுகளை நோக்கி இடப்பெயர்வுகளைக் காலத்திற்கு காலம் மேற்கொண்டனர். இதனால் அவர்கள் வெளிநாடுகளிலிருந்து உழைத்துப் பெருமளவிலான நிதித்தொகையை ஆலயங்களுக்குச் செலுத்தி அவற்றை விரிபுபடுத்தும் நோக்குடனும், ஆன்மீக ரீதியாக முருகனுடைய அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனும் பல்வேறு நேர்த்திக்கடன்களைச் செய்கின்றார்கள். இதனால் கோயில் புனரமைப்பு, கட்டுமானப் பணிகள் மற்றும் கோயிலுக்குத் தேவையான பொருட்களான ஆலவட்டம், குடை, மணி, குத்துவிளக்கு, தீபங்கள், நகைகள் முதலான பல பொருட்களை வழங்குகிறார்கள். இதனால் ஆலயத்தின் வளர்ச்சியில் மேம்பாடடைந்தமையைக் காணமுடிகிறது.

**சமூகமயமாக்கம்**

இலங்கையின் புகழ்பெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றான நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மரபுகளில் மாற்றங்கள் ஏற்பட சமூக காரணங்கள் என்று நோக்கும்பொழுது சமூகமயமாக்கம் மிக முக்கியமான காணியாகும். சமூகப் பிராணியான மனிதனது வாழ்க்கைப் பல்பரிமாணங் கொண்டது. தனது விருப்பத்திற்கேற்ப தான் வாழும் சூழலை மாற்றி அமைத்துக்கொள்ளும் திறன் மனிதனிடம் காணப்படுகின்றது. இத்தகைய ஒவ்வொரு தனி மனிதனின் தொகுப்பே சமூகம் ஆகும். ஒரு சமூகம் புத்தெழுச்சி அடைவதற்குப் பண்பாட்டு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்கின்றது. உதாரணமாக, ஆரம்ப காலங்களில் ஆலயத்தில் பணிபுரியும் தொண்டர்கள் பொதுவாக வெள்ளை வேட்டியுடன் பணிகளில் ஈடுபட்டனர். ஆனால், காலப்போக்கில் அவை மாற்றம் பெற்றது. அதாவது, தொண்டர்கள் அனைவரும் சிவப்பு வர்ணச் சால்வை அணிய வேண்டும் எனவும் ஆலயத்தில் சம்பளம் பெறும் பணியாளர்கள் கையில் சிவப்பு வர்ணப் பட்டி அணிந்திருப்பதனையும் நடைமுறை மாற்றமாகக் கூறமுடியும்.

**நவீனத்துவம் புகுத்தப்பட்டமை**

இன்றைய காலத்தில் நவீனத்துவத்தின் வருகை காரணமாகப் பல்வேறுபட்ட புதுமைகள் சமூகத்தில் புகுத்தப்பட்டு காணப்படுகின்றன. குறிப்பாக உணவுப் பழக்கவழக்கங்கள், ஆடை, அணிகலன்கள் போன்றவற்றில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையை அவதானிக்கலாம். அந்தவகையில், ஆலயத் தொண்டர்களின் ஆடைகளிலும், மகோற்சவ காலத்தில் திருவுருவங்கள் பவனி வரும்போது அவற்றின் உடைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையைக் காணலாம். அதுமாத்திரமல்லாது, ஒவ்வொரு திருவிழாவுக்குமென ஒவ்வொரு நிறத்தில் அலங்கரிக்கப்படுவதால் அதனைப் பின்பற்றிக் கோயிலில் பணியாற்றும் அந்தணர்களும் மக்களும் ஆலயத்திற்கு வருகை தரும்போது அவர்களும் அதே நிறத்தினைப் பின்பற்றுவது வழமையான செயலாக மாறியது எனலாம்.

**நிறைவுரை**

இந்து சமயத்தின் ஒரு பிரிவாகிய முருக வழிபாடும் (கௌமாரம்) பழைய நூல்களிற் கூறப்பட்டுள்ளது. பரிபாடலிலும் கலித்தொகையிலும் முருகன் சிவகுமாரன் என்று குறிக்கப்பட்டுள்ளான். ‘‘அவன் கார்த்திகைப் பெண்கள் அறுவருக்கும் பிறந்தவன்’’ என்று பரிபாடல் கூறுகிறது. அவன் சிவகுமாரன், கொற்றவை மகன், உமையின்மகன், கார்த்திகைப் பெண்கள் அறுவர்க்கும் பிறந்தவன் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. அந்தவகையில், இலங்கையில் புகழ் பூத்த முருகன் ஆலயங்களுள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முக்கியத்துவம் பெறுகின்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலானது மிக நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்டது. யாழ்ப்பாண அரசின் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி மையமாக நல்லூர் விளங்கியது. அக்காலத்தில் புவனேகபாகு எனும் அமைச்சரினால் முருகப் பெருமானுக்கு ஓர் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டு, காலப்போக்கில் அரசியல் மாற்றங்களால் பல்வேறுபட்ட அழிபாடுகளைச் சந்தித்து. கி.பி.1734 இல் மாப்பாணர் பரம்பரையினரால் நிர்மாணிக்கப்பட்டு, இன்றைய எழுச்சிநிலையை அடைந்துள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி, உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் வழிபடப்பட்டு வருகின்ற ஆலயமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்குகிறது. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலானது தனக்கே உரியதான தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளதனை அவதானிக்கலாம். உதாரணமாக, காலநேரந் தவறாத பூசைமுறைகள், அர்ச்சனைச் சீட்டு ஒரு ரூபாவாகவே இன்றைய காலகட்டத்திலும் காணப்படுகின்றமையைக் குறிப்பிடலாம். இவையனைத்திற்கும் அடிப்படையாக கோயிலில் நிர்வாகத்தில் காலத்திற்குக் காலம் பொறுப்பேற்கும் அறங்காவலர்களின் இறுக்கமான நடைமுறை, ஆளுமை, வழிநடத்தும் முறை, நெறிமுறைகள், தீர்மானங்கள் என்பன முக்கிய இடம்பெறுகின்றன. இதன் காரணமாக இலங்கையின் புகழ் பெற்ற முருகன் ஆலயமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் காணப்படுகின்றது.

தொடக்க காலம் முதல் இன்று வரை பல கோடி மக்கள் நல்லூர் முருகனைத் தரிசித்து முருகனின் அருட்கடாட்சத்தைப் பெற்றுவருகின்றார்கள். மேலும், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலானது பல்வேறு வகையான பாரம்பரிய மரபுகளைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. குறிப்பாக, பல்வேறு வகையான நேர்த்திக்கடன்களைச் செய்தும் விரத அனுட்டானங்களை மேற்கொண்டும் வழிபாடியியற்றி வருகிறார்கள். அத்தோடு, நல்லூர் முருகன் அலங்காரக் கந்தன், அபிஷேகக் கந்தன் எனவும் அழைத்து வழிபடப்படுகின்றான். அண்மைக்காலமாக, ‘‘அலங்காரா! நல்லூரா! எனும் கோசதுடன் மகோற்சவ காலத்தில் வழிபடப்படுகின்றமை சிறப்பிற்குரிய அம்சமாகும். சமுதாயத்திற்கு அவசியமான ஆன்மிக வளர்ச்சி, கலை வளர்ச்சி, பாரம்பரிய வழக்காறுகள், வழிபாட்டு மரபுகள், பண்பாடுகள் போன்றவற்றினை வெளிப்படுத்தி நிற்பதில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முக்கிய இடம்பெறுகிறது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

இராசநாயகம். செ., (2003), யாழ்ப்பாணச் சரித்திரம், ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், சென்னை.

இராசமாணிக்கனார். மா., (1958), சைவ சமய வளர்ச்சி, ஔவை நூலகம்.

இராகவன். எம். டி., (2022), இலங்கையில் தமிழ்ப் பண்பாடு பொது அறிமுகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

இராசையா ஸ்ரீதரன், (2003), சைவ சமய தரிசனம், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

இரகுநாதன். ம., (1918), யாழ்ப்பாண வைபவ கௌமுதி, தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஏகநாயகிவல்லி சிவராசசிங்கம், (2003), ஈழ வரலாற்றுப் பதிவுகள், அரோவ்வர் வெளியீட்டகம், கனடா.

உமாச்சந்திரா பிரகாஷ், (2016), நல்லூர் கந்தசுவாமி பெருங்கோயில், கொழும்பு.

கந்தையா குணராசா, (1987), நல்லை நகர் நூல், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.

கணேஷ். சி., (2008), இந்து நாகரிகம் ஈழத்து இந்து மத வரலாறு, கற்பகம் கலைக்கூடம், குப்பிளான்.

கணேசலிங்கம். ப., (2017), கி.பி. 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் இந்து சமயம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கணபதிப்பிள்ளை. க., (2008), இலங்கை வாழ் தமிழர் வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழுப்பு – சென்னை.

கிரிதரன், வ. ந., (1996), நல்லூர் ராஜதானி நகர அமைப்பு, ஸ்நேகா/மங்கை பதிப்பகம்.

குல. சபாநாதன்., (1971), இலங்கையின் புராதன சைவாலயங்கள் நல்லூர் கந்தசுவாமி, நல்லூர் தேவஸ்தான வெளியீடு.

குணராசா. க., (2005), நல்லூர் கந்தசுவாமி ஆலயம் (வரலாறு), யாழ்ப்பாணம்.

குல. சபாநாதன்., (2007), இலங்கையின் புராதன சைவாலயங்கள் நல்லூர் கந்தசுவாமி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

குணராசா. க., (1996), ஈழத்தவர் வரலாறு, பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.

குமாரசாமி சோமசுந்தரம், (2000), மனித மேம்பாட்டுச் சிந்தனைகள், ரஜி வெளியீடு, இலங்கை.

குணராசா. க., (2015), யாழ்ப்பாணம் பாரீர், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

குணராசா. க., (2001), மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

குணராசா. க., (2000), யாழ்ப்பாண அரச பரம்பரை, யாழ்ப்பாண அரச பரம்பரை வரலாற்றுக் கழகம், கொழும்பு.

சத்தியசீலன். ச., (2008), இலங்கைத் தமிழர் வரலாற்றின் சில பக்கங்கள், சேமமடு பதிப்பகம்.

சங்கரப்பிள்ளை. பொ., (2001), நாம் தமிழர், கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு.

சிவலிங்கம். மூ., (2017), நல்லூர் கந்தசுவாமி கோயில் தோற்றமும் வரலாறும், யுனி ஆர்ட்ஸ் பதிப்பகம், கொழுப்பு.

சிவலிங்கராஜா. எஸ்., (2014), யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

சிவப்பிரகாசம். பொ., (2013), தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.

சிற்றம்பலம். சி. க., (1992), யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

சுப்பிரமணியம், ந., (1974), நல்லூர்க் கந்தன், சாயி ராம் வெளியீடு.

சுத்தானந்த பாரதியார், (1994), தமிழ் வழிபாடு, முல்லை நிலையம்.

சுப்புரெட்டியார். ந., (1985), ஆன்மிகமும் அறிவியலும், பாரி நிலையம், சென்னை.

சுவாமி ஞானப்பிரகாசர், (2003), யாழ்ப்பாண வைபவ விமர்சனம், ஆசிய கல்வியியல் சேவை.

செல்லப்பா நவரத்தினம், (2007), முருக வணக்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.

செல்லையா கிருஷ்ணராசா., (1998), தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சோமசேகரன். வை., (2015), ஈழத்து ஆலயங்கள் - பாகம் ஒன்று, அகில இலங்கை இந்து மாமன்றம்.

தவபாலன். கா., (2016), இலங்கை வாழ் தமிழ் மக்களின் வரலாறும் வாழ்வியலும், ஜீவநதி, கலையகம், அல்வாய்.

நீலவண்ணன், (1995), களம் பல கண்ட யாழ். கோட்டை (யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு), கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

பத்மநாதன். சி., (2017), நல்லூர் கந்தசுவாமி கோயில், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

பத்மநாதன். சி., (2017), இலங்கைத் தமிழர் தேசவளமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

பாஸ்கரதாஸ். ஆ., (1984), இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள், இந்து சமயத் திணைக்களம்.

புஷ்பரட்ணம். ப., (2017), இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு, தமிழ்க் கல்விச் சேவை சுவிற்சர்லாந்து.

# இந்துமதம் வலியுறுத்தும் குடும்பக் கட்டமைப்பு: மகாபாரதத்தை மையப்படுத்திய ஆய்வு

**P.Thaarani**

Temporary Assistant Lecturer, Hindu Civilization, Department of Language, South Eastern University of SriLanka.

thaaranipancha@gmail.com

**N.Kunasivarupan**

kunasivarupankunasivarupan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனித சமூகத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பமேயாகும். இது எல்லாச் சமூகங்களிலும் எல்லாக் காலங்களிலும் நிலவி வருகிறது. இந்து மதமானது அன்பின் வழியாக சமூக வாழ்க்கையின் அனைத்து விழுமியங்களையும் உலக மக்களுக்குப் போதித்துக் கொண்டே இருக்கின்றது. இந்து மதமானது அன்பு, அறம், அரசியல், வாழ்க்கை நெறிமுறைகள், தத்துவ சிந்தனைகள் போன்ற பல விடயங்களை எடுத்துரைப்பதோடு குடும்பம் பற்றியும் எடுத்துரைத்து அதனை வாழ்வியல் ஊடாக வாழ்ந்து காட்டவும் தவறவில்லை. தனிச்சிறப்புப் பெற்ற இந்துசமய நூல்கள் ஒவ்வொன்றும் இல்லற வாழ்வில் குடும்பக் கட்டமைப்புப் பற்றி எடுத்துரைக்கின்றன. அவ்வகையில், இந்து சமய இதிகாச நூலான மகாபாரதம் குடும்பக் கட்டமைப்பிற்கு முன்னுதாரணமாகத் திகழும் சான்றுகளில் முக்கியமானதாகும். மகாபாரதம் மூலம் ஆண் - பெண் திருமணம் முடித்து இல்லற வாழ்வில் இணையும்போது ஓர் அலகாக குடும்பம் தோற்றம் பெறுகின்றமையையும் குடும்பமாக வாழ்பவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதனையும் இந்து சமயமானது போதிக்கிறது. வீரபுருசர்களின் வரலாற்றைக் கூறும் வீர காவியமான மகாபாரதத்தில் குடும்பக் கட்டமைப்பு பற்றிய சிந்தனைகளின் வகிபங்கு எத்தகையது என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. இவ்வாய்வானது மகாபாரதத்தில் கூறப்படுகின்ற குடும்பக் கட்டமைப்பினைத் தெளிவுபடுத்துவதனை முதன்மை நோக்கமாகவும் மகாபாரதம் வாயிலாக குடும்பத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ள சம உரிமையினைத் தெளிவுபடுத்தல், மகாபாரத்தின் சிறப்பினை அடையாளம் காணுதல் போன்றவற்றைத் துணை நோக்கங்களாகவும் கொண்டுள்ளது. முதல்நிலைத்தரவுகளாக மகாபாரத இதிகாசமும் இரண்டாம் நிலைத்தரவுகளாக மகாபாரதத்துடன் தொடர்புடைய கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைக் குறிப்புக்கள் என்பனவும் பயன்படுத்தப்படவுள்ளன. வீர காவியமான மகாபாரத்தில் இல்லறத்தின் அலகு, கட்டமைப்பான குடும்பம் பற்றிய விடயங்கள் மிகுந்து காணப்பட்டுள்ளமை இவ் ஆய்வின் முடிவாகக் கருதப்படுகிறது.

***திறவுச் சொற்கள்:*** *குடும்பம், மகாபாரதம், இல்லறம், இந்துமதம்.*

## அறிமுகம்

மானிட வாழ்வின் தொடக்கத்திலிருந்தே குடும்பம் நிலவி வருகிறது. இன்று நூற்றுக்கணக்கான சமூகங்கள் காலங்காலமாகப் பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் அமைப்பாலும் செயலாலும் வேறுபடுகின்றன. ஆனால் அனைத்திலும் குடும்பம் என்னும் நிறுவனமே மிகவும் இன்றியமையாத அடிப்படை அலகாகச் செயல்படுகின்றது. குடும்பத்தில்தான் ஒவ்வொருவரின் வாழ்க்கையின் பெரும்பகுதி அமைகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை குடும்பத்தோடுதான் அவர்கள் தொடர்ச்சியாகத் தொடர்புகொள்கின்றனர். ஏனெனில், குடும்பமானது மக்களின் உயிரியல், உளவியல், வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிறது. அதனாலேயே குடும்பம் என்னும் அமைப்பானது காலம் அனைத்தையும் கடந்து எல்லாப் பண்பாடுகளுக்கும் பொதுவான ஓர் உலகளாவிய நிறுவனமாகத் திகழ்கிறது. இத்தகைய குடும்பக் கட்டமைப்பானது மகாபாரத்தில் எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றி நோக்குவோம்.

தொன்மையான வரலாற்றைக் கொண்ட இந்து மதத்தின் மூல நூல்களான வேதம், ஆகமம், பிராமணம், ஆரணியம் மற்றும் உபநிடதம் ஆகியவற்றைச் சரிவர உணர்த்துவதற்காக தோற்றம் பெற்றவை இதிகாசங்கள் ஆகும். இதிகாசம் எனப்படுவது கடவுள், அவதாரம் அல்லது பெரும் வீரர்கள் நிகழ்த்திய அரும்பெரும் வீரச் செயல்களையும் நீதி நெறிகளையும் விவரிக்கும் புராண வரலாறாகும். இந்து சமய இலக்கியங்களில் இதிகாசம் என்னும் வகைப்பாட்டில் மூன்று முக்கிய இலக்கியங்கள் உள்ளடங்குகின்றன. அவை சிவரகசியம், இராமாயணம், மகாபாரதம் என்பனவாகும்.

பாரதத்தின் இரு பெரும் இதிகாசங்களுள் மகாபாரதமும் ஒன்றாகும். மகாபாரதம் வியாச முனிவர் கூற விநாயகப் பெருமானால் எழுதப்பட்டது. சமஸ்கிருத மொழியில் அமைந்த இவ்விலக்கியமானது பாரத தேசத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் எடுத்துரைக்கின்றது. இந்து சமயத்தின் முக்கிய நூல்களில் ஒன்றாக அமையும் மகாபாரதம் அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நால்வகை நோக்கங்களையும் சமூகத்துடனும் உலகத்துடனும் தனிப்பட்ட மனிதனுக்கு இருக்க வேண்டிய உறவுகளையும் மற்றும் கன்மவினைப் பலன்களையும் விளக்கி நிற்கின்றது. மகாபாரதத்தின் ஆரம்பம் வேதகாலத்தின் இறுதிப் பகுதியை (கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு) சேர்ந்ததாக கருதப்படுகின்றது. அதன் பிற்பாடு கி.பி. நான்காம் நூற்றாண்டில் குப்தர் காலத்தில் மகாபாரதம் நிறைவு வடிவம் பெற்றதாக கூறப்படுகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

வீரபுருசர்களின் வரலாற்றைக் கூறும் வீர காவியமான மகாபாரதத்தில் குடும்பக் கட்டமைப்பு பற்றிய சிந்தனைகளின் வகிபங்கு எத்தகையது என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாகக் கருதப்படுகிறது.

## ஆய்வு நோக்கங்கள்

இவ்வாய்வானது மகாபாரதத்தில் கூறப்படுகின்ற குடும்பக் கட்டமைப்பினைத் தெளிவுபடுத்துவதனை முதன்மை நோக்கமாகவும் மகாபாரதம் வாயிலாக குடும்பத்தில்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ள சம உரிமையினைத் தெளிவுபடுத்தல், மகாபாரத்தின் சிறப்பினை அடையாளங்காணுதல் போன்றவற்றைத் துணை நோக்கங்களாகவும் கொண்டுள்ளது.

**தரவுசேகரிப்பு முறை**

முதல் நிலைத் தரவுகளாக மகாபாரத இதிகாசமும் இரண்டாம் நிலைத் தரவுகளாக மகாபாரதத்துடன் தொடர்புடைய கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைக் குறிப்புக்கள் ஆகியனவும் பயன்படுத்தப்படவுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

1) பக்தவக்சல பாரதி எழுதிய பண்பாட்டு மானிடவியல் எனும் நூலில் குடும்பத்தின் தோற்றம் பற்றிய தரவுகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.
2) சண்முகலிங்கன் என்பவர் 2008 ஆம் ஆண்டு எழுதிய சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள் என்ற நூலில் குடும்பம் என்றால் என்ன, குடும்ப வகைகள், குடும்பத்தின் இன்றைய நிலைப்பாடு போன்ற பலவிதமான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.
3) சோ எழுதிய மகாபாரதம் பேசுகிறது எனும் நூலில் பாண்டு திருமணம், பாண்டவர் வனவாசம், கர்ணன் அங்கதேசத்துக்கு அரசனானமை போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன.
4) ராஜாஜி என்பவர் வியாசர் விருந்து எனும் தலைப்பில் எழுதிய நூல் மூலமாக மகாபாரத கதாபாத்திரங்களின் குடும்ப வகைகள் பற்றிய தகவல்களை பெற முடிந்தது.
5) ந.சுப்புரெட்டியார் 1982ஆம் ஆண்டு எழுதிய பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு எனும் ஆய்வின் மூலம் மகாபாரதத்தில் குடும்பநிலை பற்றிய தகவல்களை அறிய முடிந்தது.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

குடும்பமானது அன்பு செலுத்துமிடமாகவும் பொருளாதாரப் பணியிடமாகவும் பொழுதுபோக்கிடமாகவும் பாதுகாப்பிடமாகவும் சமயச் செயல்கள் செய்யுமிடமாகவும் கல்வியளிக்குமிடமாகவும் பணியாற்றுகிறது. குடும்ப அமைப்புப் பற்றி நோக்குமிடத்து, குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாகவும் இருக்கலாம், பலர் அடங்கிய ஒரு பெருங்குழுவாகவும் இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் பெண்ணும் கணவன் - மனைவியாக இடம்பெற வேண்டும். இவ்விருவரும் அவர்களுடைய சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள திருமண முறைப்படி மணம் செய்துகொண்டவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு ஓர் ஆணும் பெண்ணும் காலத்தின் கட்டாயத்தால் தனித்தனியாக உண்டு வாழ்ந்தாலும் கணவன் - மனைவி என்ற உறவை ஏற்படுத்திக்கொள்ளும்போதுதான் அவர்கள் ஒரு குடும்பாக அமைகிறார்கள். அவர்கள் ஒரே கூரையின் கீழ் உண்டு வாழ்ந்தாலும் காலத்தின் கட்டாயத்தால் தனித்தனியாக உண்டு வாழ்ந்தாலும் கணவன் - மனைவி என்னும் பிணைப்பைக் கொண்டுள்ளவரை அவர்கள் குடும்பம் என்னும் அமைப்பைக் கொண்டவர்களாகவே காணப்படுவார்கள்.

குடும்பம் என்னும் அமைப்பானது ஓர் ஆணும் பெண்ணும் அவர்களுடைய சமூக மரபுப்படி மணவாழ்வில் ஈடுபடும் நிலையால் மட்டுமே தோன்றமுடியும். அவ்வாறு இணைந்தால்தான் அந்தச்

சமூகத்தில் அவர்கள் ஒரு குடும்பமாக ஏற்றுக்கொள்ளப்படுவர். அவ்வாறன்றி, ஒரே வீட்டில் ஓர் ஆணும் பெண்ணும் காதலர்களாகவோ வேறு வகையிலோ உறவுகொண்டு மகிழ்ந்து வாழ்ந்தாலும் அவர்களிடையே சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணவன் - மனைவி உறவு அமையாதவரை அவர்கள் குடும்பம் என்னும் அமைப்பை ஏற்படுத்தவியலாது. இங்குக் குடும்பம் என்னும் அங்கீகாரம் அந்தந்தச் சமூகத்தின் அகவயக் கருத்தாக்கத்தின் மூலமே அளிக்கப்படும்.

குடும்பம் தனி மனிதருக்காகவும் சமூகத்திற்காகவும் பெரும் பங்காற்றுகிறது. இது பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கிறது. இத்தகைய குடும்பப் பணிகள் மகாபாரதத்தில் பரவலாக பரவிக் காணப்படுகிறன.

தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என குடும்பம் இரு வகைப்படும். தனிக்குடும்பத்தில் பெற்றோர்களும் அவர்களின் மக்களும் மட்டும் வாழ்வர். இவ்வகைக் குடும்பமுறையே உலகம் முழுவதும் பரவிக் காணப்படும் முறையாக உள்ளது. தனிக்குடும்பமானது தந்தை, தாய், மகன், மகள் எனும் படிமுறையில் காணப்படும். ஒருவர் பிறந்து வளர்ந்து திருமணமாகும்வரை அவருடைய பெற்றோருடன் வாழ்கிறார். திருமணமான பிறகு தம் மனைவியுடன் தனிக்குடும்பம் தொடங்குகிறார். அந்தநிலையில், திருமணமாவற்கு முன் அவர் வாழ்ந்த குடும்பம் பிறந்த குடும்பம் ஆகும். பின்னர் அவர் ஏற்படுத்தும் குடும்பம் மணக் குடும்பம் என்றும் கூறப்படும். இவற்றை முறையே பிறந்தகம் (காந்தாரி திருமணத்திற்கு முன் காந்தார தேசத்தில் தந்தை சுபலன் மற்றும் தமையன் சகுனியுடன் வாழ்ந்த நிலை) என்றும் மணந்தகம் (திருமணமான பின்பு காந்தாரி அஸ்தினாபுரத்தில் வாழ்ந்த வாழ்வு) என்றும் கூறலாம். மகாபாரத்தில் தனிக்குடும்பத்தினை நோக்குமிடத்து, மகாபாரத காலகட்டத்தில் அக்காலச் சூழ்நிலையில் நாட்டு மன்னர் குடும்பங்களிலும் நாட்டு பிரஜைகளிடமும் தனிக்குடும்பம் செல்வாக்கு பெற்றுக் காணப்பட்டுள்ளமையைக் காணலாம். இக்குடும்பநிலைக்கு எடுத்துக்காட்டாக,

அதிரதன் - ராதா குடும்பம்

கர்ணன் - விசாலி குடும்பம்

துஸ்யந்தன் - சகுந்தலை குடும்பம்

நளன் - தமயந்தி குடும்பம்

போன்ற குடும்பங்களைக் கூறலாம். குடும்பம், திருமணம் ஆகிய நிறுவனங்களில் ஒத்த தன்மை ஏற்படாமல் பல வகைகள் தோன்றி வளர்ந்தாலும், அவற்றுள் ஒரு பொதுப்படையான பிணைப்புக் காணப்படுகிறது. அது பின்வரும் நான்கு நிலைகளில் அமைகிறது:

1. கணவன் - மனைவி பிணைப்பு
2. பெற்றோர் - மக்கள் பிணைப்பு
3. ஒரே பெற்றோருக்குப் பிறந்த மக்களிடையே பிணைப்பு
4. ஒரே குடும்பத்தாருக்கும் மற்றவர்களுக்கும் இடையே நிலவும் பிணைப்பு

குடும்ப அமைப்பின் இறுதிநிலை 'முதிர்ச்சி நிலை' எனப்படும். மணக்குடும்பத்தை அமைத்த பெற்றோர்களின் வாழ்வு முற்றுப் பெறும்போது இந்நிலை ஏற்படும். இயல்பான ஒரு குடும்பத்தின் அமைப்பில் இந்நான்கு நிலைகளும் நிகழ்வதாக இருக்கும். சில குடும்பங்களில் இவ்வகை நிலைகள் நிகழாமலும் போகலாம். அதற்கு மணமுறிவு, குழந்தைப் பேறின்மை, மண மக்களுள் ஒருவர் இறந்துவிடுதல் போன்ற பல நிகழ்வுகள் காரணங்களாக அமைகின்றன. மகாபாரத்தில் இந்நான்கு நிலைகளுக்கும் எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- கணவன் - மனைவி பிணைப்பு : பாண்டு – குந்தி
- பெற்றோர் - மக்கள் பிணைப்பு : பாண்டு, குந்தி – தருமன், பீமன் அர்ச்சுனன், சகாதேவன், நகுலன்
- ஒரே பெற்றோருக்குப் பிறந்த மக்களிடையே பிணைப்பு : பாண்டு, குந்தி – தருமன், பீமன் அர்ச்சுனன்
- ஒரே குடும்பத்தாருக்கும் மற்றவர்களுக்கும் இடையே நிலவும் பிணைப்பு : பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் உள்ள பிணைப்பு

இந்தியக் குடும்ப முறைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்த பாலின் கோலண்டா, பின்வரும் பதினொரு வகையான குடும்பங்களைக் குறிப்பிடுகிறார் :

1. தனிக் குடும்பம் : திருமணமான தம்பதியினரும் அவர்களின் மணமாகாத மக்களும் இந்தக் குடும்பத்தின் உறுப்பினர்களாவர்.
2. இணைப்புவழித் தனிக்குடும்பம் : தனிக்குடும்பத்தின் உறுப்பினர்களுடன் நெருங்கிய உறவுள்ள மணமாகாதவர்கள் அல்லது விதவை(கள்) சேர்ந்து வாழுதல்.
3. உள்தனிக் குடும்பம் : தனிக்குடும்பத்தில் ஏதோ ஓர் உறுப்பினர் குறைந்திருத்தல் (விதவையும் மணமாகா மக்களும் வாழுதல் அல்லது உடன்பிறந்த திருமணமாகாதவர், மணவிலக்குச் செய்தவர், விதவை இவர்களில் யாராவது ஒருவர் சேர்ந்து வாழுதல்).
4. இணைப்புவழி உள் தனிக்குடும்பம் : உள் தனிக் குடும்ப உறுப்பினர்களுடன் விதவையோ, மணமாகா நெருங்கிய உறவினர்களோ சேர்ந்து வாழுதல்.
5. நேர்வழிக் கூட்டுக் குடும்பம் : பெற்றோர், மணமாகாத மக்கள் இவர்களுடன் மணமான ஒரு பிள்ளையும் அவரது மனைவியும் ஒரு குடும்பமாகச் சேர்ந்து வாழுதல்.
6. இணைப்புவழி - நேர்வழிக் கூட்டுக் குடும்பம் : நேர்வழிக் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுடன் விதவை அல்லது மண விலக்குச் செய்த ஆண் சேர்ந்து வாழுதல் (இவர்கள் பெரும்பாலும் இரத்த உறவுள்ள உடன்பிறந்தவர்களாக இருப்பார்கள் அல்லது மிக நெருங்கிய உறவுள்ளவர்களாக இருப்பார்கள்).
7. கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : மணமான பல சகோதரர்கள் ஒரே கூரையின் கீழ் வாழுதல். இவ்வகைக் குடும்பத்தில் கொள்ளுப்பாட்டன், பாட்டன், பெற்றோர், பிள்ளைகள், பேரன்கள், கொள்ளுப் பேரன்கள் என்ற நேர்வரிசையில் குடும்ப உறுப்பினர்கள் அமையாமல், பக்கவாட்டில் இணைந்து நிற்கும் நிலையில் ஒரு தலைமுறையைச் சேர்ந்த மணமான பல சகோதரர்கள் ஒரு கூரையின் கீழ் வாழுதல் இம்முறையில் அடங்கும்.

8. இணைப்புவழி வந்த கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : கிளைவழிக் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுடன் உடன் பிறந்த சகோதரி விதவையான பின்னர் சகோதரர்கள் வீட்டிற்கு வந்துவிடுதல் அல்லது மனைவியை இழந்த சகோதரன் கூட்டுக் குடும்பத்திலேயே மற்ற சகோதரர்களுடன் சேர்ந்து வாழுதல் அல்லது மணத்துணையை இழந்த மிக நெருங்கிய உறவினர்கள் கூட்டுக் குடும்பத்தாருடன் சேர்ந்து வாழுதல் இம்முறையில் சேரும்.
9. நேர்வழி - கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : முன்னர் கூறியவாறு கொள்ளுப் பாட்டன் முதல் கொள்ளுப் பேரன்வரை நேர்வரிசையில் பல தலைமுறைகளைச் சேர்ந்தவர்களும், பல சகோதரர்கள் திருமணமாகி பக்கவாட்டில் கிளைத்து நிற்கும் வகையில் கிளைவழி விரிவாக்கமும் இணைந்த பெரிய கூட்டுக் குடும்பமுறை.
10. இணைப்புவழி வந்த நேர்வழி - கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : கூட்டுக் குடும்பத்தாருடன் மணவிலக்கான ஆண் அல்லது விதவையான சகோதரி அல்லது இவர்களுக்குப் பிறந்த மக்கள் யாராகிலும் சேர்ந்து வாழும் முறை.
11. தனி ஆள் குடும்பம் : மணமாகாமலே ஒருவர் தனியாக வாழ முற்படுவதும், திருமணமாகி குழந்தை எதுவும் பெறாமலேயே மணத்துணையை இழந்து தனி மனிதராக வாழ்வதும் இந்த வகையான குடும்ப முறையில் அடங்கும்.

பாலின் கோலண்டா பதினொரு வகையான குடும்பங்களை மேற்கண்டவாறு குறிப்பிடுகிறார். அக்குடும்பங்கள் மகாபாரதத்தில் எவ்வாறு காணப்பட்டுள்ளன என்பது பற்றி நோக்குவோம்.

1. தனிக் குடும்பம் : மகாபாரத காலகட்டத்தில் நாட்டில் சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பம் செல்வாக்குப் பெற்ற அமைப்பாகக் காணப்பட்டுள்ளது. குறிப்பாக, அனைத்துப் பிரஜைகளிடமும் தனிக் குடும்பம் அடிப்படையான சமூக அமைப்பாகக் காணப்படுள்ளது. எடுத்துக்காட்டாக, விராடன் (கணவன்), சுதோஸ்னை (மனைவி), உத்தரன் மற்றும் உத்தரை (பிள்ளைகள்)
2. இணைப்புவழித் தனிக் குடும்பம் : இவ்வகைக் குடும்ப வகையையும் மகாபாரத்தில் காணக்கூடியதாகவுள்ளது. அஸ்தினாபுர அரண்மனையில் திருதராட்டரர் காந்தாரி அவர்களின் பிள்ளைகளுடன் மணமாகாத பீஸ்மர் மற்றும் விதவைகளான சத்தியவதி, அம்பினா, அம்பாலிகாக இணைந்து வாழ்ந்தமையைக் காணலாம்.
3. உள் தனிக் குடும்பம் : இவ்வகைக் குடும்பநிலையைப் பாண்டு இறந்த பின்னர் குந்தியும் பஞ்சபாண்டவர்களும் (திருமணம் முடிப்பதற்கு முன்) இணைந்து வாழ்ந்த குடும்ப வாழ்வின் ஊடாக அறியலாம்.
4. இணைப்புவழி உள் தனிக் குடும்பம் : சாந்தனுவின் இறப்பின் பின் சத்தியவதி தன் இரு மகன்களான சித்திராங்கதன் மற்றும் விசித்திரவீரியன் மணமாகாத பீஸ்மர் (சாந்தனுவின் மூத்த மகன்) போன்றவர்கள் வாழ்ந்த குடும்பநிலையை இவ்வகைக் குடும்பத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.
5. நேர்வழிக் கூட்டுக் குடும்பம் : பெற்றோர் (விராடன், சுதோஸ்னை) மணமாகாத மக்கள் (உத்தரன்) இவர்களுடன் மணமான ஒரு பிள்ளையும் அவரது கணவன் அல்லது மனைவியும் (அபிமன்யு, உத்தரை) ஒரு குடும்பமாகச் சேர்ந்து வாழுதல்.

6. இணைப்புவழி - நேர்வழிக் கூட்டுக் குடும்பம் : விராடனின் குடும்பத்தினோடு கீச்சகன் வாழ்ந்தமை. இவர்கள் பெரும்பாலும் இரத்த உறவுள்ள உடன்பிறந்தவர்களாக இருப்பார்கள் அல்லது மிக நெருங்கிய உறவுள்ளவர்களாக இருப்பார்கள் (சுதோஸ்னையின் உடன் பிறந்த தம்பியான கீச்சகன் மனைவியைப் பிரிந்து இவர்களுடன் வாழ்ந்தமை).
7. கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : இவ்வகைக் குடும்பத்திற்கு எடுத்துக்காட்டாக கௌரவர்களினதும் பாண்டவர்களினதும் குடும்ப அமைப்பு முறையினைக் கூறலாம். கொள்ளுப் பாட்டன், பாட்டன், பெற்றோர், பிள்ளைகள், பேரன்கள், கொள்ளுப் பேரன்கள்.
8. இணைப்புவழி வந்த கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : கௌரவர்களுடன் அவர்களின் தங்கையான துச்சலை தன் கணவன் இறந்த பின்னர் தன் அண்ணன்மாரின் குடும்பத்தினருடன் இணைந்து வாழ்ந்தமை.
9. நேர்வழி - கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : சாந்தனு மகாராஜா தொடக்கம் அபிமன்யு வரையிலான ஐந்து தலைமுறையினைக் கொண்ட குடும்ப அமைப்பு இதற்கு எடுத்துக்காட்டாக அமையும்.
10. இணைப்புவழி வந்த நேர்வழி - கிளைவழிக் கூட்டுக் குடும்பம் : பாண்டுவை இழந்த பின்னர் குந்தி தன் பிள்ளைகளுடன் அஸ்தினாபுர அரண்மனையில் திருதராட்டிரர் காந்தாரி, கௌரவர், பீஸ்மர், விதுரர், அம்பாலிகா மற்றும் அம்பிகா போன்றவர்களுடன் வாழ்ந்த நிலையைக் கூறலாம்.
11. தனி ஆள் குடும்பம் : பீஸ்மர் வாழ்ந்த வாழ்வு இவ்வகை குடும்பநிலைக்குச் சான்றாக அமைகிறது.

மேற்குறிப்பிட்ட வகைகளின்றி மேலும் பல வகைகளிலும் குடும்பங்கள் அமைகின்றன. குறிப்பாக, குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு எவரிடம் உள்ளது என்பதைப் பொறுத்தும் இவ்வேறுபாடுகள் ஏற்படும். பெரும்பான்மைச் சமூகங்களில் தந்தையே குடும்பத்தை ஆளும் தகுதியைப் பெற்றுள்ளார். இவ்வகையில் அமையும் குடும்பம் 'தந்தைத் தலைமைக் குடும்பம்' எனப்படும். சில சமூகங்களில் பெண்களே குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். இவ்வாறான நிலையில் அமையும் குடும்பம் 'தாய்த் தலைமைக் குடும்பம்' எனப்படும். இன்னும் சில சமூகங்களில் தாய்மாமன் குடும்பப் பொறுப்புகளைக் கவனிக்கும் முறை உள்ளது. மகாபாரத்தில் இவ்வகைக் குடும்ப வகைகளுக்கான எடுத்துக்காட்டுக்களை நோக்குவோம்.

- தந்தை தலைமைக் குடும்பம் : துரோணர் குடும்பம், துருபதன் குடும்பம், வசுதேவர் குடும்பம், தர்மர் குடும்பம்.
- தாய் தலைமைக் குடும்பம் : குந்தி குடும்பம், சத்தியவதி குடும்பம்.

மகாபாரதத்தில் தனிக் குடும்பம், கூட்டுக் குடும்பம் ஆகிய இருவகையான குடும்பங்களைக் காணமுடிகிறது. இவ்விரு குடும்பமுறைகளை மகாபாரத கதாபாத்திரங்களின் ஊடாக எம்மால் இனங்காணலாம். தனிக் குடும்பம் என்பதினை நோக்குமிடத்து, அக்குடும்பத்தில் கணவன் -மனைவியிடையே அன்பு, ஒற்றுமை மற்றும் பெற்றோர் பிள்ளைகளிடையே அன்பு, ஒற்றுமை, நெருக்கம் அதிகளவில் காணப்படும். ஆனால், கூட்டுக்குடும்பத்தினை நோக்கும்போது,

தனிக் குடும்பத்திலும் பார்க்க பரந்துபட்ட பல்வேறுவகையான நன்மைகளை அக்குடும்பமானது வழங்குகின்றது.

குறிப்பாக, மூன்று தலைமுறைகளான உறவுகள் (தாத்தா, அப்பா, மகன்) ஒரு குடும்பமாக சேர்ந்து வாழும்போது, அக்குடும்ப வாழ்க்கையில் வாழ்வின் அனுபவம், அன்பு, அரவணைப்பு, உறுதுணையாக இருத்தல், பாதுகாப்பு போன்ற பல வகையான நன்மைகள் அக்கூட்டுக் குடும்பத்தில் இருப்பவர்களை வந்தடைகின்றன. இதனை மகாபாரதத்தின் ஊடாக நோக்குமிடத்து, மகாபாரதத்தின் கதையோட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் (பாண்டுவின் இறப்பின் பின்) அஸ்தினாபுரத்து அரண்மனையில் சத்தியவதி (முதலாம் தலைமுறை), பீஸ்மர் (இரண்டாம் தலைமுறை), திருதராட்டிரர் (மூன்றாம் தலைமுறை), காந்தாரி, குந்தி, சகுனி, விதுரர், பாண்டவர் மற்றும் கௌரவர் (நான்காம் தலைமுறை) போன்றவர்கள் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தமையைக் காணலாம்.

பாண்டுவின் இறப்பின் பின் வனத்தில் வாழ்ந்த பஞ்சபாண்டவர்கள் அஸ்தினாபுரத்துக்கு வருகை தந்தபோது கௌரவர்கள் அவர்களை ஏற்க மறுக்கின்றனர். அவ்வேளை பீஸ்மர் அவர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் இரவு உணவுவேளையின்போது, கைகள் மடியாமல் யார் உணவு உண்கின்றனரோ அவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் எனக் கூறினார். அப்போது சிறுவர்கள் ஒருவருக்கொருவர் உணவினைப் மாறி மாறி ஊட்டிக்கொண்டனர். இதன் மூலம் அவர்களிடையே ஒற்றுமையையும் அன்பையும் மதிநுட்பத்தினையும் பீஸ்மர் வெளிக்காட்டச் செய்துள்ளார். இச்செயற்பாடு கூட்டுக் குடும்பத்தின் நன்மையினை எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இரு குடும்பங்கள் இணைவது திருமணமாகும். அவ்விரு குடும்பங்களும் கூட்டுக் குடும்பமாக இணைந்து வாழ்ந்தால் அது பலவிதமான நன்மைகளை அள்ளி வழங்கும். இதனை விராட மன்னன் தன் மகளை அர்ச்சுனன் மகன் அபிமன்யுக்கு மணம் முடித்ததன் ஊடாக நாம் காணலாம். விராட மன்னன் அஞ்ஞாதவாசத்தின்போது பாண்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தமை, பாண்டவர்கள் தம் நாட்டினை பெறுவற்கு உதவி புரிந்தமை, பாதுகாப்பாகத் தன் நாட்டில் விராடன் அவர்களைப் பேணிக் காத்தமை போன்ற விடயங்களின் ஊடாக கூட்டுக் குடும்பப் பயனை நாம் காணலாம். இவ்வாறு திருமணம் மூலம் இணைந்த இரு குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக இணைந்து வாழ்ந்ததன் பயனாக யுத்தத்தில் படைபலம், வெற்றி என்பனவற்றைப் பெற முடிந்ததோடு அரியாசனத்துக்கான வாரிசையும் பெற முடிந்தது.

**முடிவுரை**

இந்தியாவின் பண்டைய இதிகாசமான மகாபாரதம் இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் காணப்படுகின்ற அனைத்து விடயங்களையும் கதாபாத்திரங்கள் வாயிலாக எமக்குத் தெளிவூட்டுவதினைக் காணலாம். குறிப்பாக, சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பம் பற்றிய கருத்துக்களைத் தன்னுள் தாங்கி நிற்பதினையும் எம்மால் இனங்காண முடிகிறது. திருமணம் மூலம் இணையும் ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து குடும்பம் எனும் அமைப்பினை உருவாக்குகின்றார்கள். அவர்கள் உருவாக்கிய அக்குடும்பக் கட்டமைப்பானது பல வகைகளில் விரிவடைந்து பவ்வேறு வகையான குடும்ப அமைப்புக்களை உருவாக்கி இருக்கின்றன. இத்தகைய குடும்ப அமைப்புக்களை மகாபாரத காதாபாத்திரங்களின் ஊடாகவும் அவர்கள் வாழ்ந்த குடும்ப வாழ்வின் ஊடாகவும் இனங்காண முடிகிறது. குறிப்பாக, தனிக்குடும்பத்தினைக்

காட்டிலும் மகாபாரத காலகட்டத்தில் கூட்டுக் குடும்பமே அதிகளவில் செல்வாக்குப் பெற்ற குடும்ப அமைப்பாகக் காணப்பட்டுள்ளது. கூட்டுக் குடும்பமாக இணைந்து வாழ்ந்ததன் ஊடாக பலவிதமான பயன்களையும் ஒற்றுமையையும் மக்கள் பெற்றுக்கொண்டமையால் கூட்டுக் குடும்ப வாழ்வினை அவர்கள் பெரிதும் பின்பற்றியுள்ளமையைக் காணலாம்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


சண்முகலிங்கன், என்., (2008), சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள், நாகலிங்கம் நூலாலயம், யாழ்ப்பாணம்.

சுப்புரெட்டியார், ந., (1982), பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

சோ., (1998), மகாபாரதம் பேசுகிறது, அல்லயன்ஸ், சென்னை.

நவதர்ஷினி, க., (2013), அபிக்ஞான சாகுந்தலம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

றமீஸ், ஏ., (2016), சமூகவியல் மற்றும் சமூக மானிடவியல் அடிப்படை எண்ணக்கருக்கள், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

முரளிதரன், இ.சு., (2008), நள தமயந்தி, மேதிகா வெளியீடு, சென்னை.

ராஜாஜி., (1956), வியாசர் விருந்து, பாரதி பதிப்பகம், சென்னை.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், (2022), மஹாபாரதம், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை.

ஜெகந்நாதாசார்யர், சி.(ப.ஆ.), (1984), சபா பருவம், சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.

https://tamizharulagam,in/ta/maha637580753007543214/

https://www.vinavu.com/2020/01/30/women-in-the-tamil-mahabharatas/

https://aranejournal.com/artical/5984

https://ta.m.wikipedia.org

https://www.dinamani,com.junction/ettaam-swarangal/2018/jun/14

# இலாவாணை குமாரர் கோயிலின் வழிபாட்டு மரபுகள் - ஓர் ஆய்வு

**T. Shathursana**

Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
*shathusanapvt@gmail.com*

**V.Gunapalasingam**

Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
*gunapalasingamv@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்**

இந்து வழிபாட்டு மரபுகளிலேயே ஆகமம் சார்ந்த வழிபாடு, ஆகமம் சாராத வழிபாடு ஆகிய இரு வழிபாட்டு மரபுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதனடிப்படையில் ஆகமம் சாராத வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்ற ஆண் தெய்வங்களில் ஒருவராக குமாரர் விளங்குகிறார். வனத்திற்குக் காவல் தெய்வமான குமாரர் சாதியை அடிப்படையாகக் கொண்டு பழங்குடியின மக்களினால் காட்டுத் தெய்வமாகவும், வேட்டைத் தெய்வமாகவும், தலைத் தெய்வமாகவும் வர்ணிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்லாமல் பழங்குடியல்லாத சமூக மக்கள் மத்தியிலும் வழிபடப்பட்டு வருகின்றதோடு, தொழில் விருத்தியை நோக்கமாகக் கொண்டும் மக்கள் மத்தியில் இத்தெய்வம் முதன்மை பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது. கிழக்கு மாகாணத்தில் பழமைமிக்க ஆலயமாகத் திகழும் இலாவாணை குமாரர் ஆலயத்தின் தனித்துவமிக்க வரலாற்றுச் சிறப்பினையும் அதன் சடங்கு முறைகளையும் பழங்குடி மக்களது வழிபாட்டில் குமார தெய்வம் பெறுகின்ற இடத்தினையும் வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. ஒவ்வொரு தெய்வத்துக்குமான வழிபாட்டு மரபுகள் வெவ்வேறாகக் காணப்படுவது போன்று குமாரருக்குரிய வழிபாட்டு மரபுகளும் ஏனைய தெய்வ வழிபாட்டு மரபுகளிலிருந்து மேன்மையும் தனிச்சிறப்பும் கொண்டதாக அமைந்துள்ளது. இலாவாணையில் குமார தெய்வ வழிபாடு சிறப்புப் பெறுவதற்குக் காவியப் பாடல்களும் அடிப்படையாக அமைந்துள்ளன. இக்காவியப் பாடல்கள் கோயில் வரலாறு, தெய்வத்தின் வரலாறு, தெய்வத்தின் சிறப்பு, தெய்வத்திற்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பு போன்றவற்றை உள்ளடங்கியதாக உள்ளன. இந்த ஆய்வானது விவரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, கள ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்குரிய தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை உள்ளடக்கியதாக உள்ளன. நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல், நேர்காணல் என்பனவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் முதலாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூல்கள், சாசனங்கள், கட்டுரைகள் என்பனவற்றின் தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குமாரர் என்பவர் யார் என்பதை வெளிக்கொணர்தல், குமாரர் பற்றிய ஐதிகக் கதைகள், குமாரர் வழிபாட்டு முறைகள், வழிபாட்டின் தனித்துவம் என்பவற்றை வெளிக்கொணர்தல், அவ்வழிபாட்டுச் சடங்கு வாயிலாக மக்களிடையே நிலவும் நம்பிக்கைகளை வெளிப்படுத்தல் என்பனவற்றை இவ்வாய்வு மேற்கொண்டுள்ளது. இதுவரையில் இவ்வாலயம் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படாமல் இருப்பது இவ்வாய்வின் பிரச்சினையாக உள்ளது.

***திறவுச் சொற்கள் :*** *இலாவாணை, குமார தெய்வம், நாட்டார் வழிபாடு, மரபுகள்.*

**அறிமுகம்**

இந்துக்களிடையே ஆரம்ப காலத்தில் இயற்கை முறைகளைத் தழுவிய புராதன வழிபாட்டு முறைகளும், அதனைத் தொடர்ந்து வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றைப் பின்பற்றி பிற வழிபாட்டு முறைகளும் செல்வாக்குப் பெற்றன. வழிபாட்டினைப் பொதுவாக பெருந் தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு எனப் பாகுபடுத்தலாம். இவ்வாறாக அமையப்பெற்ற வழிபாட்டில், குறிப்பாக கிழக்கிலங்கைச் சமுதாயத்தில் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளே மிகவும் பிரசித்திப் பெற்று விளங்குவதோடு, இத்தகைய வழிபாடுகள் சாதி, தொழில், பிரதேசம் என்றவாறு வரையறைக்கு உட்பட்டதாகும் (மகேஸ்வரலிங்கம்,க., 2008:45). சிறு தெய்வங்களாகக் கணிக்கப்படும் தெய்வங்களில் குமாரரும் குறிப்பிடத்தக்கவராவார். வேடர் வழிபாட்டிற்குரிய தெய்வங்களுள் முதன்மைத் தெய்வமாக குமாரர் விளங்குவதோடு, அவர் ஏனைய தெய்வங்களைப் போலத் தனக்கெனத் தனித்துவமான உருவ வழிபாட்டைக் கொண்டிருப்பதில்லை. வழிபாட்டு முறைகள் ஆயுதங்களாகிய வில், அம்பு, கோடாரி போன்றனவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், ஜெயந்திபுரம் கோயிலில் காணப்படும் குமாரர் தெய்வம் கற்சிலையாக அமைந்திருக்கின்றது.

மட்டக்களப்பினைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் குமாரர் தெய்வத்திற்குரிய வழிபாடுகள் காணப்படுகின்றபோதிலும், இலாவாணை குமாரர் வழிபாடு தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இலாவாணை ஈரளக்குளம் கிராமத்தில் தனித்துவமான அடையாளங்களில் ஒன்றாக வழிபாட்டுச் சடங்குகள் காணப்படுகின்றன. இத்தகைய சடங்குகள் வெப்பு, இரத்தச்சோகை, காய்ச்சல் முதலிய நோய்கள் இடம்பெறாமல் இருப்பதற்காகவும், வயல் செழிப்பாக விளைவதற்காகவும், குடும்பங்களில் நிம்மதி இருப்பதற்காகவும், விவசாயிகள், மாடுகள், வனத்தில் வாழும் மானிடர்களைப் பாதுகாப்பதற்காகவும் செய்யப்படுகின்றன. ஆரம்ப காலத்தைப் பொறுத்தவரையில் குமாரர் தெய்வத்திற்குரிய வழிபாடு முன்னோர்களினால் கொத்துப்பந்தலில் இடம்பெற்றது. இவ்வாறு கொத்துப் பந்தலாக இருந்த குமாரர் வழிபாடுகள் காலஓட்டத்திற்கு ஏற்றவகையில் ஆலயமாக உருவாக்கப்பட்டு, அதன்வழியே வழிபாட்டுச் சடங்குகள் இடம்பெறுகின்றன (நேர்காணல்:ச.ஆறுமுகம்).

சடங்குகள் தெய்வங்களை மன்றாடுகின்ற முறையில் நடாத்தப்படுகின்றன. இவ்வழிபாட்டின் மூலம் சமய சடங்காசாரங்களைப் பேணிப்பாதுகாத்து வருவதோடு, இச்சடங்கானது தொன்மைசார் வரலாற்று அம்சங்களைக் கொண்டவகையில் இன்றளவும் அதன் தொன்மையானது அழியாமல் காணப்படுகின்றது. குமாரர் வழிபாட்டு அம்சங்களும் அதன் வெளிப்பாடுகளும் பார்ப்போரை மட்டுமல்லாது, அதில் பங்கு கொள்வோரையும் பரவசம் கொள்ளச் செய்கின்றது. இன்றைய நவீன காலகட்டத்தில் சிறு தெய்வ வழிபாடுகளும், அதன் தொன்மைகளும் மக்கள் மத்தியில் அருகிச்செல்கின்றன. இந்நிலையில், குமாரர் வழிபாட்டினை அதன் பாரம்பரியம் சிதையவிடாமல் கைக்கொள்வது காலத்தின் தேவையாகவுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

குமார தெய்வ வழிபாடு தொடர்பாகத் தனியான நூல்கள் குறைவாகவே எழுந்துள்ளன. சில நூல்களிலும் கட்டுரைகளிலும் குமாரர் சடங்குகள் தொடர்பான விடயங்கள் இடம்பெற்றிருப்பினும், அவை இலாவாணையில் நடைபெறும் சடங்கு முறையிலிருந்து சில விடயங்கள் பொருந்தும் வண்ணமும், சில விடயங்கள் வேறுபட்ட வண்ணமும் அமைந்துள்ளன. இருப்பினும், பின்வரும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்தும் பகுத்தும் வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

- இன்பமோகன்,வ., கிழக்கிலங்கைச் சடங்குகள் எனும் நூலில் கிழக்கிலங்கையில் நிகழ்த்தப்படுகின்ற சடங்கு வழிபாடு தொடர்பான விடயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளதுடன் குமாரர் சடங்கு பற்றிய விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- குணபாலசிங்கம்,வ., இலங்கையில் முருக வழிபாடு – கிழக்கிலங்கையில் முருக வழிபாட்டு முறைமைகள் பற்றிய சிறப்பாய்வு எனும் ஆய்வில் கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள புராதன குலக்குழு வழிபாட்டில் பிரசித்தமான குமார தெய்வ வழிபாடு பற்றியும், அத்தோடு கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள குமார தெய்வ வழிபாடு முருக தெய்வ வழிபாடுதான் என்ற விடயமும் எடுத்தாராயப்பட்டுள்ளது.
- சுகந்தி சுப்ரமணியத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும் எனும் நூலில் குமாரர் தொடர்பான அறிமுக விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- மகேஸ்வரலிங்கம்,க., மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் என்ற கட்டுரையில் குமார தெய்வம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, வேடர் வழிபாட்டு முறைகள் மூலமாக குமாரர் எடுத்தாளப்படுகின்றார். அத்தோடு, இக்குமாரருக்குரிய கலைகள், சடங்குகள், சடங்கினை நிகழ்த்துவோர் போன்ற விடயங்கள் இக்கட்டுரை வாயிலாக எடுத்தாராயப்பட்டுள்ளது.
- மௌனகுரு,சி., மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு எனும் நூலில், குமார தெய்வம் தொடர்பான அறிமுகம், இத்தெய்வத்தோடு விளங்கும் ஏனைய பரிபாலன தெய்வங்கள், மட்டக்களப்பில் குமாரர் வழிபாடு இடம்பெறும் ஊர்கள், சடங்குகள் போன்ற விடயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.
- மௌனகுரு,சி., குமார தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது விவரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, கள ஆய்வு என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேரடியாக களத்திற்குச் சென்று தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆய்வாக இது விளங்குகின்றது. இவ்வாய்விற்குரிய முதல் நிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல், நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலைத்

தரவுகள் குமாரர் வழிபாடு தொடர்பான நூல்கள், கட்டுரைகள், சாசனங்கள் மூலமும் பெறப்பட்டன.

### குமாரர் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

### குமாரர் பிறந்த வரலாறு

ஒரு நாள் எரிமாமுனி ஆதி சிவனிடம் தான் தொட்டவை எல்லாமெரிய வேண்டுமெனக் கேட்டபோது, அதற்குச் சிவனும் சம்மதித்து எரிமாமுனிக்கு அவ்வரத்தைக் கொடுக்கிறார். இவ்வாறாக வரத்தைக் கொடுத்த பின் தன்னைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென மாமுனி சிவனிடம் குறிப்பிட ஒன்றும் செய்துகொள்ள முடியாத சிவன், தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென ஓடினார். ஓடுவதைப் பார்த்திருந்த மகாவிஷ்ணு எரிமாமுனியை எரிப்பதற்காகப் பெண் வடிவம் (மோகினி) எடுத்தார். இவ்வாறு பெண்ணுருவமாக மாறிய விஷ்ணுவினுடைய பெயரே அந்தங்குமாரி ஆகும். அந்தங்குமாரியும் சிவனும் கணவன் மனைவியாகக் கலந்தபோது, பிறந்த ஆண் குழந்தையே குமாரர். இப்படி உருவாக்கப்பட்ட குமார தெய்வத்தை இருவரும் சேர்ந்து வனத்திற்குக் காவல் தெய்வமாக விடுவதற்கு முடிவெடுத்தனர். இதனால் குமார தெய்வம் அன்று தொடக்கம் வனத்திற்கு ராஜாவாகவும் காளைகளைக் கட்டிக்காப்பாற்றும் தெய்வமாகவும் மக்களால் வணங்கப்பட்டு வருகின்றார்.

### குமாரர் வழிபாட்டின் தோற்றம்

குமார தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தைத் தென்னிந்திய வரலாற்றுக் காலப்பகுதியாகிய சங்ககாலத்தில் குறிஞ்சி நில மக்களால் மேற்கொள்ளப்படும் வேலன் வெறியாடல் இடம்பெறும் சில வழிபாட்டுக்கூறுகள் ஊடாக அறியமுடிகின்றது. அதாவது, தெய்வமேறப் பெற்றாடுதல், மடை வைத்தல், கூவி அழைத்தல் போன்ற வழிபாட்டுப் பகுதிகள் மூலமாக அவதானிக்க முடிகின்றது (குணபாலசிங்கம்,வ., 2024:127-128). ஈழத்தில் குமார வழிபாட்டின் தோற்றமானது வாய்மொழிக் கதையின் ஊடாக எடுத்தாளப்பட்டுள்ளது. குமார தெய்வம் இலங்கையில் உள்ள பல பாகங்களிலும் வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. இதனை, "….ஈரேழு பலவயம் பதிதனிலிறங்கி இன்பமுடனே அவர்கள் வந்தங்கிருந்து காலியுடன் மாத்தறை கொழும்பு மாகாணம்…" (நேர்காணல்:ச.பாலசுப்பிரமணியம்) என்ற காவியப் பாடல் மூலம் அறியலாம். அப்போது அத்தெய்வத்தை யாருமே கண்டுகொள்ளாமல் இருந்ததால், ஈழத்து வாசிகளுக்குக் காய்ச்சல், வாந்தி, கண்நோய், வயிற்றோட்டம், வயிறு எரிப்பு போன்ற தீராத நோய்கள் ஏற்படத் தொடங்கின. இறுதியில் குமார தெய்வத்தின் வருகையை உணர்ந்த மக்கள் அவரை மன்றாடி வழிபட்டதால் வையகத்தில் இந்த நோய்கள் பனிபோலோடியது. அன்று தொடக்கம் அம்மக்கள் குமார தெய்வத்திற்கு இழைகட்டி, தோரணப்பந்தல் அமைத்து, மலர்தூவி வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளி, கிரான், சித்தாண்டி, பாலாமடு, தளவாய், ஜெயந்திபுரம், பேரில்லாவெளி, தடானை போன்ற பலவிடங்களில் குமார தெய்வத்திற்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டு இன்றுவரை வழிபாடுகள் சிறப்பிடம் பெற்று வருகின்றன (குணபாலசிங்கம்,வ., 2024:208).

**இலாவாணை குமாரர் கோயில்**

**ஆலய அமைப்பு**

ஆதி காலத்தில் இலாவாணைக் கிராமத்தில் குமார தெய்வத்திற்கு மரங்களை அடிப்படையாகக் கொண்டு அதில் கொத்துப்பந்தல்கள் அமைக்கும் முறைகளே காணப்பட்டன. அதனைத் தொடர்ந்து நாகரிக வளர்ச்சி காரணமாக பந்தலமைப்பு முறைகள் பீடங்களாக மாற்றப்பட்டு, பின்பு மூலஸ்தானம், மண்டபம், மடைப்பள்ளி போன்ற அமைப்பு முறைகளாக தற்காலத்தில் மாற்றம் பெற்றன. இவ்வாலயத்தின் அடித்தளமானது சதுர வடிவிலான அமைப்பைக் கொண்டதாக விளங்குவதோடு, அமைப்பு முறையில் மூலமூர்த்தியாக குமார தெய்வம் அமைந்து காணப்பட, அவ்தெய்வத்தினை முன்னோக்கிய வகையில் கூடாரமைப்பு முறைகள் காணப்படுகின்றன. அத்தோடு, குமாரர் தெய்வத்திற்குரிய ஆயுதங்களாகிய வில்லு, அம்பு முறைகளும் இவ்வாலயத்தின் மேற்சுவரில் வைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. வில் ஏழு அடி உயரமானதாகவும், அம்பு நான்கு அடி உயரமுள்ளதாகவும் அமைந்துள்ளது (நேர்காணல்: சு.இளையதம்பி). அத்துடன் கருவறையைச் சுற்றிக் குமாரரின் வாகனமான புலியின் சிற்பம் அமைந்து விளங்குகிறது.

இங்கு பரிபாலன மூர்த்திகளாக, பிள்ளையார் (தென்கிழக்குப் பக்கமாக சிலை வடிவில்), வைரவர் (கிழக்குப் பக்கமாக கருங்காலிப் பொல்லு, கம்பு, சூலம், கண்ட கோடரி போன்ற ஆயுத வடிவிலும்), ஐயனார் (வடமேற்குப் பக்கமாக, கறுப்பு நிறச் சிலை வடிவில்), மாப்பாணர் (தென் மேற்குப் பக்கமாக), நாகதம்பிரான் (தென்கிழக்குப் பக்கமாக வீர மரத்தின் கீழ்), உத்தியாக்கள் (வட கிழக்குப் பக்கமாக) அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆலய உற்பத்தி (வரலாறு)**

மரபுவழிக் கதை: 1

இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன் தற்போது இலாவாணை என்றழைக்கப்படும் விளாவாணை திருப்பதியை நோக்கி மானிட வடிவில் குமாரர் கொழும்பிலிருந்து வந்து பூசாரியிடம் தர்க்கம் புரிந்து இங்கு வைத்திருக்கும் பந்தல் எதற்கு, இந்தப் பந்தலில் இருக்கும் மடை, பொங்கல் யாருக்காக வைத்திருக்கிறாய் என்று அதட்டிக் கேட்டது மட்டுமல்லாது, எனக்குப் பசிக்கின்றது, பந்தலில் இட்ட வாழைக்கனி மடையை எடுத்து வாருங்கள் என்று கோபத்துடன் கேட்டார். அப்போது பூசாரி தெய்வத்திற்குப் பூசை முடியாமல் மடையைத் தரமுடியாது என்று சொல்லி மறுத்துவிட்டார். அதற்கு அவர் யாரும் ஒன்றும் பேசக்கூடாது. இந்த இடத்தில் இருக்கும் தெய்வமென்ன செய்கிறது என்று பார்க்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பந்தலை நோக்கிச் சென்று மடையிலுள்ள வாழைக்கனியில் மூன்று கனிகளை எடுத்துச் சாப்பிட்டார். அவர் சாப்பிட்டதைப் பார்த்து நின்ற பூசாரி, உதவியாளர்கள் அனைவரும் ஆவிபோய் மண்ணில் விழுந்தனர். பின்பு வீழ்ந்த துயர் கண்ட குமாரர் அன்புடன் எழுப்பி எனது உதவி என்றும் கிடைக்கும் என்று சொல்லித் திருவருள் புரிந்து மறைந்தார். இத்திருவருள்

கிடைத்த நன்நாள் வைகாசிப் பூரணை நாளாகும். குமாரக் கடவுள் கொழும்பிலிருந்து வந்து பூசகருடன் தர்க்கம் புரிந்தமையைப் பின்வரும் காவியப் பாடல் மூலம் அறியலாம்:

“குலதெய்வம் எண்டுனது வேள்வி பலதும் செய்து
குலபு பல பற்பதியில் உருகுதலை செய்து
பலபல விதம் செய்து பந்தல் தணிலே
ஒரு பழுத்தவாழைக்குலைப் பகுந்து
நிரைவைக்க சலுகையுடனே வளர் கொழும்பு….”

(நேர்காணல்: ச.ஆறுமுகம்)

மரபுவழிக் கதை: 2

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு குமார தெய்வத்திற்குப் பந்தலமைத்து அப்பந்தல்களைப் பூக்களால் (தாமரைப்பூ, வேப்பிலை போன்றவற்றால்) அலங்கரித்து, மடை வைத்து வழிபாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் இலாவாணைக்கு வந்திருந்த பறங்கியர் ஒருவர் இச்சடங்கு முறைகளைக் கேலி செய்து இதுவென்ன சாமி, இதுவென்ன வழிபாடு என்று அங்கிருந்த பூசகர், பக்த அடியார்களுடன் வாக்குவாதம் செய்து இறுதியில் அப்பந்தல்களைப் பிய்த்தெறியச் சென்றபோது, இவருடைய உடலும் இறுகப்பெற்று, தொண்டையும் அடைக்கப்பட்டு, அவருடைய தலையையும் குமார தெய்வம் திரிகியெறிந்ததாக வரலாறு கூறுகின்றது (நேர்காணல்: கு.சண்முகம்). பின்னர் இவ்வாறு தலை திரிகி இறந்து கிடந்த பறங்கியரைக் கருணைப்பார்வை கொண்டு குமார தெய்வம் அவரை அன்போடு எழுப்பி வழியனுப்பி வைத்ததாகக் கூறப்படுகின்றது. இதனை,

“மலர்குவித்தே வாழை கனிநிறைந்தே பந்தல்

வடிவினுற்றே வாசம் நிரைகள் சோடிக்க

அலமிகுந்தே உலாந்தேசி மன்னன்…..”

(நேர்காணல்: ச.பாலசுப்பிரமணியம்)

என்ற காவியப் பாடலின் மூலம் அறியலாம். பல வளங்களையும் கொண்டு தன்னகத்தே தன்னிகரில்லா இறையருள் வழங்கும் ஸ்ரீ குமாரர் பெருமானின் ஆலய வரலாற்றினை அறியமுடிகின்றது.

**ஆலயத்தின் சிறப்புகள்**

இலாவாணை குமாரர் ஆலயமானது பழமையான மரபுகளைப் பின்பற்றுவதாகக் காணப்படுவதோடு, பல்வேறுபட்ட சிறப்புக்களைத் தன்னத்தே கொண்டுள்ளது. அதாவது, மண்ணில் புதைந்திருந்த மரவண்டிலானது குமாரரின் அனுக்கிரகத்தால் மேலே வந்தது.

இவ்வாலயத்தில் கிணறு அமைப்பதற்கான பணிகள் நடந்த வேளையில், அவ்விடத்தில் கிணறு கட்டவேண்டாம் என்று பணிவிடை கிடைத்ததும் கட்ட எத்தனித்தபோது கிணற்று மடு இடிந்து மூடிவிட்டது. இங்கு கிணறு அமைந்து காணப்படுகின்ற போதிலும் அதில் நீர் ஊறுவதில்லை. இவ்வாலயத்தின் அண்மையில் இயற்கையாகவே ஆறும் குளமும் இணைந்து காணப்படுவது மற்றொரு சிறப்பாகும்.

## வழிபாட்டு மரபுகள்

புராதன குலக்குழு மத்தியில் நிலவிய குமார தெய்வத்திற்குரிய வழிபாடுகள் இன்றும் சமூக வழக்கில் செல்வாக்குப் பெற்று வருகின்றன. இவ்வாறே இலாவாணைக் கிராமத்திலும் குமார தெய்வத்திற்கு இடம்பெறும் வழிபாடானது சடங்கு முறைகளுள் உள்ளடங்கப்படுகின்றன. சடங்கு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆலய நிருவாகத்தினால் அமாவாசை தினத்தன்று கூட்டம் கூட்டப்படும். இக்கூட்டத்தில் சடங்குகள் எப்பொழுது ஆரம்பிப்பது, அதன் ஒழுங்குகள், தேவைப்படும் பொருட்கள் போன்றவை கலந்துரையாடப்படும். சடங்கு ஆரம்பமாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே ஆலயத்தைச் சுத்தம் செய்து சடங்கிற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவர் (நேர்காணல்: செ.சிவானந்தம்). ஆரம்ப காலத்தில் சடங்குப் பொருட்கள் காவென்பதிலிருந்தும், அதனைத் தொடர்ந்து வண்டிலிலும், தற்காலத்தில் இயந்திரங்களிருந்தும் கொண்டு வரப்படுகின்றது. இங்கு சடங்குகள் வைகாசி பூரணை தினத்தன்று ஆரம்பமாகி மூன்று நாட்கள் இடம்பெறும்.

## தீர்த்தமெடுக்கும் நிகழ்வு

இலாவாணை கோயிலில் சடங்கின் முதல் நிகழ்வாக காலை 6.00 மணி தொடக்கம் 6.30 மணி வரையில் தீர்த்தமெடுத்து வரும் நிகழ்விடம்பெறும். தேவாதி, தலைக்கட்டாடி, உதவிப்பூசகர் போன்ற ஒன்பது பேர் கிழக்குப் பக்கமாக இருக்கும் இலாவாணை ஆற்றுக்குச் சென்றதும் முதலில் மூன்று மடைகள் வைப்பர். பின்னர் அவ்விடத்தில் பூவல் தோண்டி அதிலிருந்து வரும் நீரினை இறைத்துச் சுத்தமாகவெடுக்கப்பட்ட நீரினைக் குடத்தில் எடுத்து கொள்வர். பின்னர் அதனை வெள்ளைத்துணியால் மூடி தேவாதி அதனைச் சுமந்து முதலாவதாக ஆடிவருவார். முட்டியில் உள்ள நீர் எச்சம் படாமல் இருப்பதற்காகவே வெள்ளைத்துணியால் மூடிகொண்டு வரப்படுகின்றது. எடுத்துவரப்பட்ட நீரினைக் கோயிலினைச் சுற்றி வளைத்து முதலாவது முட்டியை பிள்ளையாருக்கும், அடுத்ததாக பெரியதுறைக்கும் வைத்து, சுற்றி வந்ததும் பின்னர் கப்புகனார் தெய்வத்திடம் எல்லாம் சரியா என்று கேட்பார். அதற்குத் தேவாதியும் சரி என்று கூற, அதன் பின்னர் தெய்வத்தை நிறுத்துவர் (நேர்காணல்: ச.ஆறுமுகம்). இலாவாணை குமாரர் ஆலயத்தில் மடைப்பெட்டி எடுத்துவரும் நிகழ்விற்குப் பதிலாகவே தீர்த்தமெடுக்கும் நிகழ்வு நடைபெறும். ஆனால், தளவாய், தடானை, சித்தாண்டி, கிரான் போன்ற குமாரர் ஆலயச் சடங்குகளில் மடைப்பெட்டி எடுத்து வரும் நிகழ்வே முக்கியமானதாக விளங்குகிறது.

**பந்தலிடற் சடங்கு**

அடுத்த நிகழ்வாக, பந்தலமைக்கும் சடங்கு இடம்பெறும். இலாவாணை குமாரர் கோயிலில் ஆரம்ப காலத்தில் சடங்குகள் நடைபெறும்போது, முதலில் குறிப்பிட்டதோர் இடத்தினைத் தெய்வம் சடங்கிற்காக அடையாளப்படுத்திக் காட்டும். பின்னர் குறித்த இடத்திற்கேற்ப பந்தலமைக்கப்படும். இப்பந்தலானது நான்கு கால் அமைப்பு முறைகளைக் கொண்டதாகக் காணப்படுவதோடு, அப்பந்தலின் மேற்பகுதி சதுர வடிவமைப்பினைக் கொண்டதாக கூடார முறையினை ஒத்தவகையில் காணப்படுவதை அறியமுடிகின்றது. இப்பந்தல் முறையானது வைரக்கால் பந்தல் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. ஆத்தி, விண்ணாங்கு போன்ற கொத்துகள் இப்பந்தல் முறைகளை அமைப்பதற்காகப் பயன்படும். ஆனால், தற்காலத்தில் கல்லால் கட்டப்பட்ட கூடார அமைப்பு முறைகளாக குமார தெய்வமும், ஏனைய பரிபாலன தெய்வங்களும் விளங்குவதால் இடம் தெரிவுசெய்யப்படாமல் அந்தக் கூடார முறைகளுடன் சேர்ந்த வகையில் பந்தல்கள் அமைக்கப்படுகின்றன. இந்தமைப்பு முறையே ஏனைய குமாரர் ஆலயங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**வாடை அரைக்கும் நிகழ்வு**

தீர்த்தமெடுத்து வரும் நிகழ்வு முடிவடைந்ததும் வாடையரைக்கும் நிகழ்வு ஆரம்பமாகும். வாடை என்பது நறுமணங்களுடன் கூடிய வாசனைத் திரவியங்களான, செண்டு, பன்னீர், கடுக்காய், தாழம்பூ, ஏலக்காய், அபிசேகக்கூடு, இலாமிச்ச வேர், பஞ்சர திரவியம் போன்ற பொருட்களை அரைத்துப் பெறப்படுவதாகும். இவ்வாறு அரைத்தெடுக்கப்பட்ட வாடையினை, அபிஷேக நீரில் கலப்பார்கள் (நேர்காணல்: சி.விமேசுரன்).

**அபிஷேக நிகழ்வு**

இவ்வாறாக கலக்கப்பட்ட நீரினைக் கொண்டு குமாரருக்குரிய ஆயுதங்கள் அபிஷேகம் செய்யப்படும். அதாவது, கத்தி, அம்பு, வில்லு, கோடாரி, ஈட்டி போன்றவற்றுக்கு அபிஷேகம் இடம்பெறும். அத்தோடு ஏனைய துணைத் தெய்வங்களாகிய மாப்பாணர், விநாயகர், வைரவர், ஐயப்பன் போன்ற பந்தல்களுக்கும் அபிஷேகம் இடம்பெறும்.

**பூமடை வைத்தல்**

அபிஷேக நிகழ்வுகள் நிறைவடைந்ததும் தெய்வத்திற்குப் பூமடை வைக்கப்படும். பூமடையென்பது பூக்கள் கொண்டு குமார தெய்வத்திற்கு வைக்கப்படும் மடையாகும். மடையில் குமாரருக்கு வெற்றிலை, பாக்கு, பழம் போன்றவற்றோடு தாமரைப்பூ, வேப்பம் பத்திரம் போன்றவை வைக்கப்பட்டிருக்கும் (நேர்காணல்: சு.இளையதம்பி).

**நோர்ப்புச் சடங்கிற்குரிய நிகழ்வுகள்**

தெய்வத்திடம் உத்தரவு பெற்ற பின்னரே நோர்ப்புச் சடங்கிற்குரிய நிகழ்வுகள் ஆரம்பமாகும். நோர்ப்புச் சடங்கு இரண்டு நாட்கள் நடைபெறும்.

**நோர்ப்பு நெல் நேர்த்தல்**

நோர்ப்பு நெல் நேர்த்தல் என்பது நெல் காய வைக்கும் சடங்காகும். நோர்ப்புச் சடங்கு செய்வதற்கு முன்பு காலையில் பனையோலைப் பாய்களை விரித்து அதில் நெல்லினைக் கொட்டிக் காயவைப்பர். இவ்வாறு காலையில் காயவைக்கப்பட்ட நெல்லானது பிற்பகல் வேளையில் நன்றாகக் காய்ந்ததும் எடுக்கப்படும் (நேர்காணல்: பி.செல்லத்துரை).

**நெல் குற்றும் சடங்கு**

நெல் குற்றும் சடங்கு பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெறும். காயவைக்கப்பட்ட நெல் தேவாதியினால் கொண்டுவரப்படும். பின்னர் நெல்லினைக் குற்றுவதற்குரிய இடத்திற்குச் சென்று, உரலில் நெல்லினைப் போட்டு, அதற்கு மடை வைத்துத் தீபம் காட்டி, உரல் மற்றும் உலக்கைக்குப் பூசை செய்து, மொக்காடு போட்டு தேவாதி, பூசாரி ஆகியோர் ஒன்றாகச் சேர்ந்து உலக்கை பிடித்து நெல்லை மூன்று தடவை குத்துவர். அதனைத் தொடர்ந்து பெண்கள் நெல்லினைக் குற்றி அரிசாக மாற்றிக்கொள்வர் (நேர்காணல்: ச.ஆறுமுகம்).

**நோர்ப்பு சமைத்தல்**

நெல்லினைக் குற்றி அரிசாக மாற்றிய பின்னர், நோர்ப்புச் செய்தல் சடங்கு இடம்பெறும். நோர்ப்புச் செய்தல் சடங்கு அறுபது வயதிற்கு மேற்பட்ட பெண்களால் மேற்கொள்ளப்படும். இச்சடங்கில் அமுதுப் பானை முதலாவதாக செய்யப்படும். பின்னர் ஏழு இலைகளைக் கொண்டு நோர்ப்புச் செய்யப்படும். அரிசியைக் கழுவும் நீரைக்கொண்டே நோர்ப்புச் செய்யப்படும். அதாவது, முல்லை, கானாந்தி, முஸ்தை, காரை, கீரை, பயிற்றை போன்றவற்றைக் கொண்டு ஆணம் சமைக்கப்படும், சுரக்காய், வாழைக்காய் போன்றவற்றால் குழம்பு மற்றும் பொரியலும் செய்யப்படும். பிற்பகல் ஆரம்பிக்கப்பட்ட நோர்ப்பு சமைக்கும் நிகழ்வு சரியாக இரவு வேளையிலே நிறைவடையும்.

**பலகாரம் வடித்தல்**

இங்கு பலகாரம் வடித்தல் நிகழ்வானது தெய்வத்தினால் இடம்பெறும். பலகாரம் செய்வதற்குரிய மாவினைப் பதப்படுத்தி வைக்க, தெய்வம் மாவை எடுத்துக் கொதிக்கும் எண்ணெய்யில் விடும். பலகாரம் பதமான நிலையை அடைந்ததும் தெய்வம் ஒவ்வொன்றாகக் கையை விட்டு மூன்று தடவையெடுக்கும். தெய்வம் பலகாரத்தை வடித்த பின்னர் வயது முதிர்ந்த பெண்களால் தொடர்ந்து பலகாரம் சுட்டெடுக்கப்படும். இங்கு பெண்கள் பலகாரம் செய்யும்போது, வாயில் வெள்ளைத்துணியைக் கட்டிக்கொண்டு மௌனமாக இருந்து பலகாரம் வடித்தல் வேண்டும் (நேர்காணல்: பி.செல்லத்துரை). ஏனைய குமாரர் ஆலயங்களிலும் பலகாரம் வடித்தல் முறையானது இந்த நடைமுறையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

**தேனெடுத்தல்**

தேனெடுத்தல் என்பது வேடுவ குல மக்களின் தொழிலாக விளங்குகிறது. இத்தொழில் முறையே சடங்காக குமாரர் ஆலயங்களில் நிலவிவருவதை அறியமுடிகின்றது. இங்கு தேனெடுத்தலானது, தளவாய் குமாரர் ஆலயத்தில் இடம்பெறும் தேனெடுத்தல் முறையிலிருந்து வேறுபடுவதோடு, மாறாத் தெய்வமும் இச்சடங்கில் இடம்பெறுவதில்லை. சடங்கிற்குத் தேவையான தேனானது, இலாவாணையைச் சூழவுள்ள காட்டுப்பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகின்றது. தேனெடுக்கும் இடத்தினைத் தெய்வம் அடையாளப்படுத்திக் காட்ட பின்னர் அத்தேனினைக் கொண்டு வந்து குமாரர் சடங்கு முறைகளில் பயன்படுத்துவர் (நேர்காணல்: செ.சிவானந்தம்).

தளவாயில், மாறாத் தெய்வம் பக்தர்களில் ஒருவரிடத்தே தேன் பூச்சி இருக்கிறதா என வினாவும். அதற்கு அவர் இல்லை என்று பதிலளித்தால் தெய்வம் கோடரி மற்றும் பெட்டியைக் கொடுத்துத் தேனெடுக்க அனுப்பும். இச்சடங்கு நாடகப் பாங்கு முறையில் இடம்பெறும் (மௌனகுரு,சி., 1998:115-116).

**நோர்ப்பு வைக்கும் சடங்கு**

இச்சடங்கு இரவு வேளைகளில் இடம்பெறும். மடைக்கும் கோயிலுக்கும் நடுவே பாயினைப் போட்டு அதன் மேல் வெள்ளைத்துணியையும் விரித்து அத்துணியில் நோர்ப்பிற்காகச் செய்யப்பட்ட பொருட்கள் வைக்கப்படும். நோர்ப்பிற்காக வைக்கப்படும் பொருட்கள் ஒழுங்கு முறையிலே வைக்கப்படும். அதாவது, முதலில் சோற்றுப்பானை, மரக்கறிகள் போட்டு செய்யப்பட்ட குழம்பு, ஏழு வகையான இலைகளைக் கொண்டு செய்யப்பட்ட ஆணம், பொரியல் வகைகள் (வாழைக்காய், கிழங்கு), தயிர், பலகாரம், வாழைப்பழம் போன்றவையாகும். நோர்ப்பு வைக்கப்படும் பொருட்களில் தயிர் கட்டாயமானதாக காணப்படும் (நேர்காணல்: ச.ஆறுமுகம்).

**தெய்வமாடி கட்டுச்சொல்லுதல் சடங்கு**

தெய்வமாடுதல் என்பது சாதாரணமாக இருக்கும் ஒருவரை அசாதாரண நிலைக்கு இட்டுச்செல்லுகின்ற நிலையாகும். இங்கு பூசகர் சாதாரண நிலையிலுள்ள ஒருவருக்கு காவியப் பாடல்கள் மூலம் உருவேற்றி ஆடவைப்பதாகும். கிழக்கிலங்கையில் பெரும்பாலான குமாரர் கோயில்களில் பூசகர் தானாகவே உருவேறப்பெற்று ஆடும் முறையே வழக்கிலுள்ளது. இலாவாணைக் குமார தெய்வம் மேலே குறிப்பிட்ட நோர்ப்புக்காக வைக்கப்பட்ட பொருட்களைத் தனது ஆயுதமான ஈட்டியால் குத்தி அதில் எந்தக் குறைகளும் இல்லாவிட்டால், அதனை ஒப்பெடுக்கும் (ஆய்வாளர் அவதானம், 2024.05.24). மாறாக, வைக்கப்பட்டுள்ள நோர்ப்புச் சடங்கில் ஏதாவது அசடுகள், தலைமுடிகள் போன்றவை இருந்தால் அவ்வுணவுகளை ஒப்பெடுக்காமல் மலையேறிவிடும். இந்த நிகழ்வு இரவில் இரண்டு மணியளவிலே இடம்பெறும். இந்த உணவு வகைகளைத் தெய்வம் பார்த்து ஈட்டியால் குத்துவதற்கு நெய் விளக்கே வைக்கப்பட்டிருக்கும். இங்கு விளக்கிற்கு நல்லெண்ணெய் ஊற்றப்படாது. உணவுகளைத்

தெய்வம் ஒப்பேற்றிய பின்னர் திரும்பவும் தெய்வத்தினையாட்டி கட்டுச்சொல்லுதல் நிகழ்வு இடம்பெறும். இலாவாணையில் ஏழு குமார கலைவடிவங்களுக்குத் தெய்வமாடப்படுகின்றது.

**பெரியதுறை** : இவ்வாலயத்தில் பெரியதுறையென அழைக்கப்படும் தெய்வம் குமார தெய்வமாகும். அத்துடன் பெரியதுறையை 'ராஜகுமாரன்' என்ற பெயராலும் அழைப்பர். வனத்திற்கு ராஜாவாக, வனங்களைக் கட்டிக்காப்பவராக விளங்குவதால் இப்பெயர் அமையப்பெற்றது. பெரியதுறைக்குத் தெய்வமாடி வரும்போது, அவருக்குரிய ஆயுதங்களுடனே தெய்வமாடப்படும். தேவாதி உடையணிந்து குமாரருக்குரிய ஊன்றுகோல், பெரிய ஈட்டி போன்ற ஆயுதங்களைக் கையில் வைத்து ஆடி வருவார். தெய்வமாடும்போது பெரியதுறைக்கு, "சீராரும் ஆராய்ச்சி அனுமணிப் பண்டார தெய்வமே காவியம் …" (நேர்காணல்: ச.ஆறுமுகம்) என்ற பாடல் இடம்பெறுகின்றது.

**கொழும்புக் குமாரர்** : இத்தெய்வத்திற்குத் தெய்வமாடும்போது கோட்டு அணிந்து, தலையில் தொப்பி போட்டு, கையில் ஆயுதமாக வெங்கல வாள் கொண்டாடப்படும்.

**புள்ளிக்குமாரர்** : இக்குமாரருக்குத் தேவாதி தெய்வமாடும்போது, புள்ளிச்சட்டையணிந்து காணப்படுவர். அதாவது, கறுப்புத்துணியில் வெள்ளைப்புள்ளி கொண்டவாறு உடையணிந்து காணப்படுவார். புள்ளிக்குமாரரே பட்டிக்குக் காவல் தெய்வமாக விளங்குகிறார். இக்குமாரர் கண்டன் கோடாரி, தாக்கத்தி போன்றவற்றைக் கையிலணிந்து ஆடுவார்.

**சட்டைக்காரன்** : குத்து ஈட்டியைக் ஆயுதமாகக் கொண்டு தெய்வமாட்டுவிக்கப்படும். இத்தெய்வத்தை ஆட்டுவிக்கும்போது, "…..வெட்டுமாறன்களை கஞ்சா அவின்னெல்ல வெறிகொண்ட கள்ளர்க்கு …." (நேர்காணல்: ச.ஆறுமுகம்) என்ற காவியப் பாடல் பாடப்படுகிறது.

**கழுக்குமாரன்** : இக்குமாரர் கையில் ஆயுமாக வாளும் கோடாரியும் கொண்டு ஆடும்.

**வேட்டைக்காரன்** : வேட்டைக்கு அதிபதியாக விளங்குபவரே வேட்டைக்காரன் என்னும் குமார தெய்வமாகும். இக்குமாரனை 'வில்லுக்குமாரர்' எனவும் அழைப்பர். இதில் வேட்டைக்காரனுக்கு வில்லு, அம்பு ஆயுதமாக காணப்படும். இவ்வாறான ஆயுதங்களைக் கையிலேந்தி தேவாதி ஆடுவார். "வில்லம்பு சல்லயம் நல்லகை அம்பினொடு…." (நேர்காணல்: ச.ஆறுமுகம்) என்ற காவியப் பாடலின் மூலம் வேட்டைக்குச் செல்லும் வேட்டைக்காரனாகிய வில்லுக்குமாரரின் சிறப்புகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

அந்தங்குமாரி : இத்தெய்வத்திற்குத் தேவாதி தெய்வமாடும் போதே பெட்டியெடுத்து வருவார். ஆனால், இங்குள்ள ஏனைய தெய்வங்களுக்கு இவ்வாறு பெட்டியெடுத்து வரும் நிகழ்விடம்பெறாது. அந்தங்குமாரிக்கு எடுத்து வரப்படும் பெட்டியில் அம்மானைக்காய், சிலம்பு, வேப்பிலை, வாழைப்பழம் போன்றவை காணப்படும். அத்துடன் இத்தெய்வத்திற்குச் சட்டையணிந்து மொக்காடு இடப்படும். அந்தங்குமாரி பெண் வடிவம் என்பதாலே இவ்வாறு உடை

அணிவிக்கப்படுகின்றது. இதனை, "…அம்மையென வந்த அமராவதியும் நீயே அழகான செல்வி நீ அமிர்த குணமாதே…." (நேர்காணல்: ச.ஆறுமுகம்) என்பதன் மூலம் அறியலாம்.

இவ்வாறு ஏழு குமாரருக்கும் தெய்வமாடப்படுகின்ற போதிலும், மூன்று தடவை மட்டுமே வாக்குச்சொல்லுதல் இடம்பெறும். கட்டுச்சொல்லுதல் என்பது நம்பிக்கைச் செயற்பாட்டுடன் தொடர்புறுகின்றது. இச்சடங்கு காலத்தில் கூடியிருக்கும் பக்தர் கூட்டங்களிலிருந்து வறுமை, பிணி, பிள்ளைப்பேறின்மை போன்றவற்றால் பீடிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களைக் குமார தெய்வம் தண்ணீர் தெளித்து அழைக்கும். அழைக்கும் நபருக்குரிய குறைகள் இன்ன காரணத்தினால்தான் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு, அதற்குரிய நிவர்த்தி முறைகளையும் குறிப்பிடும். குமார வழிபாட்டில் இடம்பெறும் கட்டுச்சொல்லுதல் நிகழ்வானது வேலன் வெறியாடலில் உள்ளடங்கப்படும் வேலன் குறி சொல்லும் நிகழ்வுடன் தொடர்புடையதாக விளங்குகிறது (குணபாலசிங்கம்.வ., 2024:125-126). மேலும், இறுதி நாளிலும் ஒரு மணியளவிலே தெய்வமாடுதல் நிகழ்விடம்பெறும். அப்போது தெய்வம் சந்தோசத்தில் பல பக்த அடியார்களுக்குக் கட்டுச்சொல்லும். இவ்வாறு கட்டுச்சொல்லி முடிந்ததும் தெய்வம் விபூதி போன்றவற்றைப் பக்த அடியார்களுக்குக் கொடுத்து முடித்ததும் தெய்வம் பாளையால் தனக்குத் தானே மாப்பாணர் பந்தலில் மூன்று சாட்டை அடிக்கும். அதன் பின்னர் வைரவர் பந்தலிருந்து கழுமரத்தில் மூன்று பொல்லடி அடித்ததும், இறுதியாக தெய்வம் மலையேறும். தெய்வமாடி முடிந்ததும் இறுதியாக தெய்வம் சாய்வது கழுமரத்திலாகும். இங்குள்ள கழுமரமானது ஐந்தடி உயரம் கொண்டதாகும் (நேர்காணல்: செ.சிவானந்தம்).

**பள்ளயப்பூசை**

பள்ளயப்பூசை என்பது நேர்த்திக்கடனாகச் செய்யப்படும் பொங்கல், தயிர், பலகாரம், வாழைப்பழம் போன்றவற்றை வாழையிலையில் குமார தெய்வத்திற்குப் படைக்கும் பூசையாகும். இப்பூசையானது, இறுதி நாள் மட்டுமே இடம்பெறுவதோடு, விசேடமான பூசையாகக் கொள்ளப்படுகின்றது. இந்தப் பூசையின்போது கிடைக்கின்ற பால், தயிர், தேன் முழுதையும் சேர்த்துக் குமாரருக்கு அபிசேகம் செய்து, அந்த அபிசேகத்தினை வரும் பக்தர்களுக்குக் கொடுப்பர் (ஆய்வாளர் அவதானம், 2024.05.25). கிரான் குமாரர் ஆலயத்தில், பள்ளயப்பூசையின் போது பொங்கலுக்குப் பதிலாக தாமரையிலையில் நோர்ப்புச் சோறு படைக்கப்படுகின்றது.

**தீர்த்தம் விசிறல் மற்றும் வாழி பாடுதல்**

குமார தெய்வ வழிபாட்டின் இறுதி நிகழ்வாக தீர்த்தம் தெளித்தல் மற்றும் வாழி பாடுதல் இடம்பெறும். குமார தெய்வமானது ஒர சட்டியில் தண்ணீரை எடுத்து, அந்த நீரினைக் கோயிலில் சடங்கில் கலந்து கொண்ட பக்த அடியார்கள் அனைவருக்கும் வேப்பங்குழையால் விசிறும். அதனைத் தொடர்ந்து வாழி பாடுதல் நிகழ்வு பூசகர்களால் நிகழ்த்தப்படும். அனைத்துத் தெய்வங்களையும் உள்ளடக்கி அவர்களைப் போற்றிப் பாடுவதாகவே வாழி பாடல் அமைந்துள்ளது. வழிபாட்டு முறைகள் நிறைவடைந்ததும் வருகை தந்த பக்த அடியார்களுக்குப் பூக்கொடுத்து, வாழ்த்தி வரவேற்று அனுப்பி வைப்பர்.

**இசைக்கருவிகள்**

குமார தெய்வ வழிபாட்டில் கொட்டு, குழல் போன்ற இசைக்கருவிகள் சடங்கின்போது பயன்படுத்தப்படுகின்றன. கொட்டு சுமார் மூன்றடி நீளம் உடையது. இதனை இசைப்பவர்கள் குறித்த ஓரிடத்திலிருந்தே இசைப்பர். குழல் யானைக்கொம்பால் செய்யப்பட்டதாகக் காணப்படுகின்றது.

**முடிவுரை**

இலாவாணை குமாரர் கோயிலின் வழிபாட்டு மரபுகள் தொடர்பான இவ் ஆய்வு அவ்வாலயம் அமைந்துள்ள பிரதேசத்தில் வாழுகின்ற மக்களையும் மையப்படுத்தியதாக அமைந்தது. மக்களின்றி இறைவனில்லை என்ற கோட்பாட்டுக்கமைய மனிதனே தனக்கு அப்பாற்பட்ட சக்தியொன்று தன்னை இயக்குவதாகப் பூரணமாக நம்புகின்றான். தனது இன்ப துன்பங்களும், மகிழ்ச்சி, வறுமை, வேதனை யாவும் இறைவன்பாற்பட்டது என்பதை உணர்கின்றான். ஆகவே, அந்த இறை சக்தியைப் பல்வேறு சடங்கு சம்பிரதாயம், வழிபாடு என்பவற்றினூடாக அடைவதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றான். தன்னுடைய அன்றாட செயற்பாடுகளைக் கொண்டே இறைவனும் தன்னை ஆட்டிப்படைக்கிறான் என நம்பும் இம்மக்கள், அந்த இறைவனைப் பல்வேறு அடையாளங்கள், குறியீடுகள், மந்திரங்கள் என்பனவற்றைப் பிரதிஷ்டை செய்து வந்தனம் செய்வதனை வழிபாடு என்று சொல்லலாம்.

இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் குமார தெய்வம் தொடர்பான பக்தி உணர்வானது மிக உன்னதமான நிலையில் இருப்பதைக் காணமுடிகின்றது. தமது சேனைப்பயிர்ச் செய்கையின்போது, பயிருக்கு நோய் வராமலும் காட்டு விலங்குகளினால் அழிவுக்குட்படாமலும் குமார கடவுளே பாதுகாத்துத் தருவதாக மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர். அதற்கு நன்றி செலுத்தும் முகமாகத் தமது பயிர்ச்செய்கையின் முதல் விளைவை குமாரருக்கு நிவேதித்த பின்பே தாம் உண்பர். பட்டிமாடு வைத்திருப்பவர்களும் தலைக்கன்றுயீன்று முதல் கறக்கும் பாலைக் கொண்டு குமாரருக்குப் பொங்கிப்படைத்த பின்பே தமது தேவைக்குப் பயன்படுத்துவர். இப்படிப்பட்ட நடைமுறைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, மனிதப் புலன்களுக்குத் தெரியாத அந்த இறைசக்திக்கும் அப்பிரதேச மக்களுக்கும் இடையிலான தொடர்பு மிக இறுக்கமாகவே உள்ளது. பல்வேறு படிமுறை ரீதியாக வளர்ச்சி கண்டுள்ள இலாவாணை குமாரர் ஆலயமும், அதன் வழிபாட்டு மரபுகள் தொடர்பாகவும் இதுவரையில் விரிவானதும் பூரணமானதுமான ஆய்வுகள் வெளிப்படுத்தப்படாத நிலையில், அக்குறையை இவ் ஆய்வு நிவர்த்திக்கிறது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

இன்பமோகன்,வ., 2012, கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கந்தையா,வீ.சீ., 1964, மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு மன்றம், யாழ்ப்பாணம்.

குணபாலசிங்கம்,வ., 2024, கிழக்கிலங்கையில் முருக வழிபாடு : வரலாறும் வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சண்முகம்,கு., 2019, களுவன்கேணி வேடுவ பரம்பரையினரின் வழக்காறுகள், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், திருகோணமலை.

சுகந்தி சுப்ரமணியம், 2006, மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், இலண்டன் தமிழ் இந்து மாமன்றம்.

செல்வராசகோபால்,க.தா, 2005, மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள், கந்தபாணம் என்ரபிறைசஸ், கனடா.

தங்கேஸ்வரி, க., 2007, கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

மகேஸ்வரலிங்கம்,க., 2008, மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

மௌனகுரு,சி., 1998, மட்டக்களப்பு மரபுவழி நாடகம், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

மௌனகுரு,சி., 2003, மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப் பண்பாடு, 2ஆம் உலக இந்து மாநாடு, மட்டக்களப்பு.

வெல்லவூர்க்கோபால், 2003, தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

வெல்லவூர்க்கோபால், 2005, மட்டக்களப்பு வரலாறு அறிமுகம், மனுவேதா வெளியீடு, மட்டக்களப்பு.

# மட்டக்களப்புத் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமும் அதன் தனித்துவமான வழிபாட்டு முறைகளும்

**Jayavani Krishnamoorthy**

Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
kirushnamoorthyjayavani@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்து சமயத்தில் சடங்குகள் காத்திரமான பங்கு வகிக்கின்றன. உள்ளூர்ச் சமூகங்களின் கடவுள் நம்பிக்கைகளுடன் தொடர்புபடும் இத்தகைய சடங்குகள் இன்றைய காலத்தில் பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் பெற்றவையாக விளங்குகின்றன. அந்தவகையில், மட்டக்களப்புத் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமும் அதன் தனித்துவமான வழிபாட்டு முறைகளும் எனும் இவ்வாய்வானது, ஏனைய அம்மன் ஆலய சடங்குகளில் இருந்து மாறுபட்ட வழிபாட்டு முறைகளை கொண்ட திராய்மடு ஸ்ரீ வீரபத்தினியம்மன் ஆலயத்தை மையப்படுத்தியதாக அமைகின்றது. திராய்மடு பிரதேச மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பத்தினி அம்மன் வழிபாட்டு முறையானது அச்சமூகத்திற்கும் ஆலயத்திற்கும் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டு காணப்படுகிறது. இவ்வாலயத்தின் வழிபாடு பற்றிய முழுமையான விடயங்களை அறிந்துகொள்ள முடியாமை இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு வரலாற்று ஆய்வு, விபரண ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமானது ஏனைய ஆலயங்களில் இருந்து வழிபாட்டு முறை, தெய்வமாடும் முறைகள், சடங்குகளில் இடம்பெறும் நிகழ்வுகள் என்பனவற்றில் தனித்துவத்தைக் கொண்டு விளங்குகிறது.

***திறவுச் சொற்கள்*** *- மட்டக்களப்பு, திராய்மடு, பத்தினி, வழிபாடு, வேடுவர்கள்.*

**அறிமுகம்**

தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களைப் பூர்வீக வரலாற்றின் ஊடாகவே அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறான பண்பாட்டு வரலாற்றினை இன்றுவரை மரபுரீதியான சடங்குகள் மூலம் அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில், சடங்கு என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும். சடங்குகள் பல்வேறு விதத்தில் காணப்படுகின்றன. அவை வாழ்வியல் சடங்கு, வழிபாட்டுச் சடங்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. வழிபாட்டுச் சடங்கு என்பது வரலாற்று ரீதியாகப் பல்வேறு விடயங்களைக் கொண்டுள்ளது. இச்சடங்குகள் அதிகளவு கிராமப்புறங்களிலேயே காணப்படுகின்றன. அதிலும் பூர்வீக மக்கள் அதிகளவு வாழ்கின்ற கிராமங்களில் நவீனம் அதிகம் ஊடுறாத வண்ணம் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில், கிழக்கிலங்கை மக்களின் சமய வாழ்வில் சடங்குகள் மிகுந்த முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றன. சடங்குகளே இவர்களின் பாரம்பரிய சமய வழிபாட்டின் எச்சங்களாகத் தொடர்கின்றன. வாழ்வியல் தேவைகளை, குறிப்பாக பொருளாதாரத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு இயற்கையில் தங்கிவாழும் கிழக்கிலங்கை மக்கள், தங்களின்

தேவைகள் பலவற்றையும் பூர்த்திசெய்த தெய்வங்களுக்கு ஆண்டுக்கொரு தடவை சடங்கு செய்தல், கிழக்கிலங்கையில் இன்றுவரை தொடர்கிறது. கிழக்கிலங்கை மக்களால் நிகழ்த்தப்படும் சடங்குகளானவை, இயற்கையைக் கௌரவித்தல், இயற்கைக்கு நன்றி செலுத்துதல், தேவைகளைப் பூர்த்திசெய்து தருமாறு இயற்கையிடம் வேண்டுதல் செய்தல் என்னும் பல நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றது (இன்பமோகன், வ., 2012:64).

பாரம்பரிய பண்பாட்டு மரபுகளும் சுவடுகளும் காணப்படும் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. பல்வேறு பூர்வீக தடயங்கள், சோழ சாம்ராச்சியத்தின் எச்சங்கள், பௌத்தப் பண்பாடுகள் இணைந்து தனக்கெனத் தனித்துவமான சமயப் பண்பாட்டினைப் பேணி வருகிறது. மட்டக்களப்பு மக்களின் வழிபாட்டு நெறியினை இருவகையாகப் பிரித்து நோக்கலாம். அவை ஆகம நெறிக்கமைந்த வழிபாட்டுமுறை, பொதுமக்கள் நெறிக்கமைந்த வழிபாட்டு முறை என்பனவாகும். ஆகம நெறிக்கமைந்த வழிபாட்டு முறை என்பது, ஆகம, சிற்ப சாத்திர விதிமுறைகளுக்கு அமைந்து கட்டப்பெற்ற ஆலயங்களில் கிரியைகளை நடத்தி வழிபாடு செய்தலாகும். பொதுமக்கள் வழிபாட்டு முறை என்பது ஆகம, சிற்ப சாத்திர விதிமுறைகளுக்கு அமையாது, பொதுமக்கள் தம் விருப்பத்தின் பேரில் ஆலயங்களைக் கட்டி பூசாரி, கட்டாடி முதலான குருமார்களைக் கொண்டு வழிபாடு செய்யும் நெறியாகும். முன்னைய வழிபாட்டு முறையில் விதிகள், கட்டுப்பாடுகள், ஒழுங்கு, ஆதிக்கம் முதலான தன்மைகள் உண்டு. இவ் ஆகமமுறை சாரா வழிபாட்டு நெறியில் பக்தனுக்கும் பூசாரிக்கும் கோயிலுக்கும் உள்ள உறவு மிக நெருக்கமானது.

ஆகமம் சாரா வழிபாட்டு முறையினை நோக்கும்போது, இவ்வழிபாட்டு முறையானது நாட்டார் தெய்வ வழிபாட்டு முறையாகக் கொள்ளப்படுகிறது. இவை குல தெய்வம், சிறு தெய்வம், ஊர்த் தெய்வம், காவல் தெய்வம், கிராமியத் தெய்வம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் நம்பிக்கை, பயம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்படுகின்றன. இச்சடங்கைப் பூசாரிமார், கட்டாடிமார், கப்புகனார் போன்றோர் மேற்கொள்வார்கள். இவ்வாறு கூறப்படுகின்ற இரு வழிபாட்டு முறைகளிலும் ஆகமம் சாரா வழிபாட்டு முறையிலான சடங்குகள் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பிரசித்தமான முறையிலும், உணர்வுபூர்வமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சடங்குகள் ஐதீகங்கள், நம்பிக்கைகள் என்பவற்றால் கட்டியெழுப்பப்பட்டவையாக காணப்படுகின்றன. இச்சடங்குகள் இடம்பெறும் காலம், நோக்கம் போன்ற காரணிகளின் அடிப்படையில் அவற்றின் தன்மையில் வேறுபாட்டைக் காட்டுகின்றன.

மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலில் பின்னிப்பிணைந்த வழிபாட்டு அம்சமாக சடங்குகள் காணப்படுகின்றன. அந்தவகையில், கண்ணகியம்மன், திரௌபதையம்மன், மாரியம்மன், காளியம்மன், பேச்சியம்மன், கடல்நாச்சி அம்மன், பத்திரகாளி முதலான பெண் தெய்வங்களையும் வீரபத்திரர், வைரவர், நாகதம்பிரான், பெரியசுவாமி, வதனமார். நீலசோதயன், பெரியதம்பிரான், அனுமன், குமார தெய்வம் போன்ற ஆண் தெய்வங்களையும் போற்றி வழிபட்டு வருகின்றனர். தாம் வாழும் சமூகத்தில் மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப வழிபாட்டு முறைகள் மாறுபட்டுப் பின்பற்றப்பட்டு வருகின்றது. அவ்வாறே திராய்மடு கிராமத்தில் வாழ்ந்த வேடுவ மக்களின் நம்பிக்கையில் உருவானதே திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமாகும்.

வழிபாட்டு மரபில் பிரதேசத்திற்குப் பிரதேசம் தனித்துவமான கலாசார அடையாளம் உண்டு. அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்குப் பிரதேசத்தின் தனித்துவமான அடையாளங்களில் ஒன்றாக வழிபாட்டுச் சடங்குகள் காணப்படுகின்றன. மட்டக்களப்புப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட ஒரு பகுதியான திராய்மடு கிராமத்தின் பகுதியில் வீரபத்தினி அம்மன் சடங்கு மிகவும் சிறப்பான அம்சங்களோடு தனித்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. திராய்மடு பிரதேசமானது வரலாற்றுப் பழமைமிக்கதும் மரபு சார்ந்ததுமான கிராமமாகக் காணப்படுகின்றது. இக்கிராமத்தில் வீரபத்தினி அம்மன் வழிபாடானது பரம்பரை பரம்பரையாக நீண்ட காலமாக மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்கும் திராய்மடு பிரதேச மக்கள் தங்களுக்கென தனித்துவமான வழிபாட்டு முறைகளைக் கொண்டு விளங்குகின்றனர். இவ்வாறு சிறப்புப்பெற்றுக் காணப்படும் பிரதேசத்திலேயே திராய்மடு வீரபத்தினி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தின் வழிபாட்டு முறைகள் எவ்வாறு அச்சமூகத்தின் மத்தியில் காணப்படுகிறது என்பதை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

**பிரதான நோக்கம்**

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயத்தின் தனித்துவமான வழிபாட்டு முறைகளை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

**துணை நோக்கம்**

கிராமிய தெய்வ வழிபாட்டு மரபில் பத்தினி அம்மன் வழிபாடு என்பது தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. அந்தவகையில் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலய வழிபாட்டின் தோற்றம் பற்றிய ஐதீகங்கள், ஆலயத்தின் வளர்ச்சி வழிபாட்டு முறை போன்றவற்றை வெளிப்படுத்துதலும் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் வழிபாட்டு முறைகளுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்பு எவ்வாறானது என்பதை வெளிக்கொண்டு வருவதும் இவ்வாய்வின் துணைநோக்கங்களாக அமைந்துள்ளன.

**ஆய்வு பிரச்சினை**

மட்டக்களப்புத் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் கோயில் வழிபாடு பற்றிய முழுமையான விடயங்களை அறிந்துகொள்ள முடியாமை ஆய்வின் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வுத் தரவுகள்**

**முதலாம் நிலை தரவுகள்**

இவ்வாய்விற்கு முதல் நிலைத் தரவுகளாக கள ஆய்வு, பங்குபற்றுதல், அவதானம் மற்றும் நேர்காணல் என்பன அமைகின்றன.

**இரண்டாம் நிலைத் தரவுகள்**

இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆகமம் சாரா வழிபாடு பற்றிக் கூறுகின்ற நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் புகைப்படங்கள், காணொளிகள், இணையத்தளங்கள் என்பன அமைகின்றன.

**இலக்கிய மீளாய்வு**

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலய வழிபாட்டு முறைகளை வெளிப்படுத்தும் தனித்துவமான ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனினும், மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு தொடர்பாகவும் கண்ணகி அம்மன் கோயில்கள் தொடர்பான ஆரம்பநிலை ஆய்வுகளும் இடம்பெற்றுள்ளன. அவ்வகையில் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

சாந்தி கேசவன் என்பவரால் எழுதப்பட்ட (2024) ''மட்டக்களப்பு தமிழகத்தில் கண்ணகி அம்மன் வழிபாடு - பல்பரிணாம நோக்கு'' எனும் நூல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகிறது. இந்நூலில் இலங்கையில் கண்ணகி வழிபாட்டின் வருகை, பரவலாக்கம், மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டுப் பரவலாக்கம், தத்துவ நோக்கில் கண்ணகி இலக்கியங்கள், கண்ணகி அம்மன் வழிபாடு கூறும் தத்துவக் கூறுகள், கலை, அழகியல் கூறுகள் என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மௌனகுரு. சி, (1998) எழுதிய ''மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்'' எனும் நூலானது மட்டக்களப்பு மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை, மட்டக்களப்பு வரலாறு என்பவற்றினைச் சிறப்பித்க் கூறுவதுடன், மட்டக்களப்பு மக்களின் பாரம்பரிய கலைகள் மற்றும் பாரம்பரிய சடங்கு வழிபாடு தொடர்பாக சிறப்பாக கூறுவதுடன் மட்டக்களப்பு மக்களின் பண்பாடு, கலாசாரத்தினையும் சிறப்பித்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

இன்பமோகன்.வ, (2021) எழுதிய ''கிழக்கிலங்கை சடங்குகள்'' என்னும் நூலானது பொதுவாக கிழக்கிலங்கையில் காணப்படும் சடங்குகளைக் கூறுகிறது. அவற்றில் காணப்படும் கலை, அழகியல் அம்சத்தினையும் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தும் நூலாகவும், கிராமிய வழிபாட்டில் ஒவ்வொரு நிகழ்விலும் கலை அம்சங்கள் காணப்படுகின்றது என்பதனையும் பொதுவாக மாரியம்மன் சடங்கு. காளியம்மன் சடங்கு, நரசிங்க வைரவர் சடங்கு, கண்ணகி அம்மன் சடங்கு என அவை முக்கியமாக கிழக்கிலங்கையில் நிகழ்த்தப்படும் இடங்களையும் ஆதாரப்படுத்துவதாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கை வழிபாடு, கிழக்கிலங்கைச் சடங்கு, சடங்கில் பயன்படுத்தப்படும் பொருட்களினதும் வழிபாட்டினதும் அழகியல் கலை கூறுகள், சடங்கு நிகழ்த்துகைக் கலைகள் எனப் பல்வேறு ஆதாரபூர்வமான வரலாற்றினை உள்ளடக்கிய நூலாக அமைந்துள்ளது.

தங்கேஸ்வரி, (2008) எழுதிய ''கிழக்கிலங்கை வழிபாட்டு பாரம்பரியம்'' எனும் நூலில் ஈழத்தில் பத்தினி வழிபாட்டுப் பாரம்பரியம் என்னும் தலைப்பின் ஊடாக பத்தினி வழிபாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் ஈழத்தில் பத்தினி அம்மன் வழிபாடு, பத்தினி அம்மன் கோவில்களில் இடம்பெறும் சடங்குகள், அவற்றின் படிமுறைகளை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது. மேலும், சிறப்புக்களையும் எடுத்துரைக்கும் நூலாகவும் அமைந்துள்ளது. இந்நூலில் குறிப்பிடப்படும் பத்தினித் தெய்வ வழிபாடானது ஒரு பொதுவான வழிபாடாகவும் வரலாற்ச் செய்தியினைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

வெல்லவூர்க்கோபால், (2018) எழுதிய ''கண்ணகி வழிபாடு: பார்வையும் பதிவும்'' எனும் நூலானது கண்ணகி அம்மன் வரலாற்றினையும் அவ்வழிபாடு காணப்படும் இடங்களையும் சிறப்பித்து அடையாளப்படுத்துவதாக அமைகிறது. அந்தவகையில், கண்ணகி வழிபாடு,

சேரநாட்டில் (கேரளம்) கண்ணகி வழிபாடு, தமிழகத்தில் கண்ணகி வழிபாடு, பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் பத்தினி வழிபாடு, வடபிரதேசத்தில் கண்ணகி வழிபாடு, மட்டக்களப்புப் பிரதேச கண்ணகி வழிபாடு, திருகோணமலைப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு, கொம்புமுறி விளையாட்டு, மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு மேலோங்க காரணம், கண்ணகிக்கு மீண்டும் புகழ் சேர்க்கும் புகார் நகர் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

தில்லைநாதன் சாமித்தம்பி, (2015) எழுதிய ‘‘மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்’’ எனும் நூலில் வேடுவர்களின் வழிபாட்டு முறை பற்றிய விடயங்கள் கூறப்பட்டுள்ளது.

வடிவேல் இன்பமோகன் எழுதிய (2020) ‘‘இலங்கையில் வேடர் வாழ்வியலும் மாற்றங்களும்’’ எனும் நூலிலே வேடுவர்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் கூறப்பட்டுள்ளன.

தங்கேஸ்வரி எழுதிய ‘‘கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு’’ என்ற நூலில் ஆய்வுடன் தொடர்புடைய ஆலயங்கள் தொடர்பாகவும், வேடர் சமூகம் தொடர்பாகவும் தகவலைக் கூறினாலும் அவை மிகச் சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூலில் கூறப்பட்டுள்ளவற்றை அடிப்படையாக எடுத்துக்கொண்டு ஆய்வுக்குத் தேவையான ஏனைய தகவல்களை தேடவேண்டி உள்ளது.

வெல்லவூர்கோபால் எழுதிய ‘‘மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம்’’ எனும் நூலில் வேடுவர்கள் என்றால் யார் என்ற அறிமுகம் மாத்திரம் சுருக்கமாக கூறப்பட்டுள்ளவற்றுடன் வேடர்களின் சமயம், கோயில்களுடன் கொண்டுள்ள தொடர்பு எவையும் கூறப்படவில்லை. இந்நூலை ஆதாரமாகக் கொண்டு வேடுவர்கள் பற்றியும் வேடுவர்களுடன் தொடர்பான சமயம், கோயில்களைப் பற்றியும் தகவல்களை ஆராய வேண்டி உள்ளது.

சிவலிங்கம். கா. எழுதிய (2009) ‘‘சடையப்பா சுவாமிகளும் திராய்மடு திருத்தலமும்’’ எனும் நூலில் திராய்மடு பிரதேசம் பற்றிய அறிமுகம் கூறப்பட்டுள்ளது.

**திராய்மடு வீரபத்தினி அம்மன் ஆலயம் : தோற்றமும் வளர்ச்சியும்**

திராய்மடு என்னும் இப்பிரதேசம் மட்டக்களப்பு முகத்துவாரத்திலிருந்து வடக்குப் பக்கமாக கிட்டத்தட்ட இரண்டு மைல் தொலைவில் முல்லையும் (காடும் காடுசார்ந்த இடமும்) நெய்தலும் (கடலும் கடல் சார்ந்த இடமும்) ஒன்றை ஒன்று சங்கமிக்கின்ற ஓர் இடமாகும். அதன் கிழக்குப் பகுதி செழித்து அடர்ந்து வளர்ந்த பிரப்பங்கொடிகளால் சூழப்பட்டிருந்தது. அதன் மேற்குப் பக்கமாக ‘திராய்’ என்னும் ஒருவகை உணவுப் பூண்டு செழிந்து வளர்ந்து பரந்து காணப்பட்டது. அதன் காரணமாகவே இப்பிரதேசம் ‘திராய்மடு’ என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

**மரபுவழிக் கதைகள்**

இவ்வாலயம் தொடர்பான மரபுவழிக் கதையை நோக்குமிடத்து, இப்பிரதேசத்தில் வாழ்ந்த பழங்குடி மக்கள் வழியில் வந்த மூன்று பரம்பரையினர் காணப்பட்டனர். இவர்கள் தங்களின் வேட்டையாடுதல் தொழிலினை விட்டுவிட்டு மீன்பிடித் தொழிலினை மேற்கொண்டனர்.

வேட்டையாடச் சென்றபோதுதான் இவ்விடத்தில் ஓர் ஆலயத்தினை அமைத்தனர். வேட்டையாடச் செல்பவர்கள் காடுகளில் உள்ள மிருகங்களினால் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பற்காக ஒவ்வொரு தெய்வத்தினை வைத்து வழிபட்டு வந்தனர். இவர்கள் தங்களுடைய வேட்டையாடுதல் தொழிலினைக் கைவிட்ட பின்னர் இவ்வழிபாட்டு முறையினையும் கைவிட்டனர். பின்னர் இவ்வாலயத்திற்கு எவரும் சென்று வழிபடாமையினால் இவ்விடம் காடாகக் காணப்பட்டது.

பின்னர் இவர்கள் மீன்பிடித்தொழிலினை மேற்கொண்டனர். அவர்கள் பிரம்பு வெட்டச் செல்லும்போது, வீரமரத்தின் கீழ் ஒரு சிறிய கன்னிப்பெண் இருந்ததாள். அவ்விடத்தில் இருந்து மணி ஓசையும் சிலம்போசையும் கேட்டன. அவ்வோசைகள் அவர்களுக்குத் தோத்திரமாகக் கேட்டன. அடுத்தநாள் காலையில் ஊர் மக்கள் அனைவருடனும் சென்று அங்கு பார்த்தபோது, அவ்விடத்தில் யாரும் இருக்கவில்லை. அவ்வேளையிலேயே அவ்விடத்தில் கன்னிப்பெண்களுக்கு ஓர் ஆலயத்தினை அமைத்து வழிபாடு செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

அடுத்த நாள் அதிகாலைப் பொழுதினில் ஒரு யானை வந்து வீரமரத்தின் ஒரு கொப்பினை (கம்பு) முறித்து அவ்விடத்தில் அக்கொப்பினை ஊன்றி அதன் அருகில் தனது காலால் மிதித்து நீர் எடுத்து விட்டுச் சென்றதாகவும் மறுநாள் சென்று மக்கள் பார்த்தபோது, வீரமரக் கொப்பும் ஊன்றி நீரும் காணப்பட்டதாகவும் கூறுகின்றனர். பின் அவ்விடத்திலேயே பந்தல் ஒன்றினை அமைத்து வழிபாட்டினை மேற்கொண்டனர். எத்தெய்வத்திற்கு வழிபாடினை மேற்கொள்ள வேண்டும் என்று இருந்தபோது கன்னிமாருக்கு வழிபாடு செய்தனர். இவ்வாலயம் 'கன்னிமார் ஆலயம்' என்ற பெயருடனும் அழைக்கப்பட்டது (நேர்காணல்: து. ரஜனிக்காந்த்).

பெரிய பத்தினியார் மற்றும் நாகமுத்தர் ஆகியவர்களே ஆரம்பத்தில் ஆலயத்தினை அமைத்து வழிபாட்டினை மேற்கொண்டார்கள். பின்னர் இவர்களினால் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படாமல் போக, சின்னவர் என்பவரினாலேயே பின்னர் இவ்வாலயம் கண்டுபிடிக்கப்பட்டு, வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்தது. வீரபத்தினி என்பதில் வீரவள் என்பர் கன்னித் தெய்வம் ஆகும். கன்னித் தெய்வ ஆலயம் என்றே அவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது. யானைப் பந்தல் அமைப்பதற்குத் தடி நட்ட இடத்தில் ஸ்ரீ வீரபத்தினி அம்மனின் ஆலயமும் அமைக்கப்பட்டுத் தற்காலம் வரையும் எவ்வித மந்திரங்களோ அல்லது உச்சாடனங்களோ அற்ற முறையில் இடம்பெறும் ஓர் வழிபாடாகக் காணப்படுகிறது.

**ஆலய அமைப்பும் சடங்கு வழிபாடும்**

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமானது ஆரம்ப காலத்தில் இலை, குழைகளாலான பந்தலாகவே அமைக்கப்பட்டது. பின்னர் துணிகள் (புடவை) கொண்டு கட்டப்பட்டது. மூன்றாவது கட்டத்தில் ஓலைகளால் வேயப்பட்ட பந்தலாக வளர்ச்சியடைந்தது. பின்னர் மரப்பலகைகளால் செய்யப்பட்ட பந்தல்களில் அம்மன் வைத்து வழிபடப்பட்டனர். இதனை அடிப்படையாகக் கொண்டு தகரங்களினால் பந்தல் அமைக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு காலப் பகுதியில் செங்கலினால் ஆலயத்தின் ஒரு பகுதியான கருவறை கட்டப்பட்டது. 2021ஆம் ஆண்டு ஆகமமுறை சார்ந்து ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆகமமுறை சார்ந்த அமைப்பாக கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற அமைப்பில் ஆலயம் தற்போது காணப்படுகிறது. திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன்

ஆலயமானது கிழக்குத் திசை நோக்கி அமையப்பெற்றுள்ளது. சூரியன் உதயமாகும்போது, சூரியனின் கதிர்வீச்சு ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பட்டுத்தெறிப்பது இவ்வாலயத்தின் சிறப்பம்சம் ஆகும் (நேர்காணல்: செல்வராசா வடிவேல்).

**சடங்கு இடம்பெறும் காலம்**

சடங்கு இடம்பெறும் காலமானது ஒவ்வொரு தெய்வத்திற்கும் வேறு வேறானது. அந்தவகையில், வைகாசி மாதம் கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்படும் சடங்கு உற்சவங்கள் புரட்டாதி மாதம் திரௌபதி அம்மன் சடங்குடன் முடிவடைகிறது. அந்தவகையில், தமிழ் மாதத்தின்படி "ஆனி மாதம் வளர்பிறை மூன்றாம் நாள்" அம்மாளின் திருக்கதவு திறக்கப்படும் (நேர்காணல்: து. ரஜனிக்காந்த்). திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலய சடங்கு முறையானது கிழக்கிழங்கையில் கண்ணகி அம்மன் கோயில் சடங்குகளில் பத்தாசி முறைகளில் நடாத்தப்படுகின்றது. இவ்வாலய சடங்கு முறையானது தலைமுறை தலைமுறையாக அவர்களின் பரம்பரை முன்னோர்கள் குறிப்பிட்ட முறைப்படியே நிகழ்த்தப்படுகிறது. இவர்களின் வழிபாட்டு முறையாக 'மன்றாட்டு முறையில்' சடங்கு நிகழ்த்தப்படுகிறது (நேர்காணல்: து. ரஜனிக்காந்த்).

இங்கு பூசை செய்பவர்கள் மூன்று தலைமுறையில் சன்னதம் ஆடபவர்களாகவே காணப்படுவார். முதல் தலைமுறையில் சன்னதம் ஆடுபவர் 'முதலாம் தலைமைப் பூசாரி ஆவார்'. இரண்டாம் தலைமுறையில் சன்னதம் ஆடுபவர் 'இரண்டாம் தலைமைப் பூசாரி ஆவார்'. மூன்றாம் தலைமுறையில் சன்னதம் ஆடுபவர் 'மூன்றாம் தலைமைப் பூசாரி' ஆகவும் காணப்படுவார். முதலாம் தலைமைப் பூசகர் இல்லாத பட்சத்தில் இரண்டாம் தலைமை முறையில் உள்ள சன்னதக்காரர் தலைமை பூசாரியாக வருவார் (நேர்காணல்: து. ரஜனிக்காந்த்).

இங்கு முக்கியமாக மந்திரம் பயன்படுத்தப்படுவதில்லை. அனைத்து சன்னதக்கார்களுக்கும் உருவேற்றும்போது, கொட்டு மேளம் இசைக்கப்படும். அனைத்துத் தெய்வங்களுக்குமான உருவேற்றலும் மன்றாட்டு முறையிலேயே நிகழ்த்தப்படும். இக்கோயில் சடங்குமுறையில் கன்னித் தெய்வமான பத்தினி அம்மன் பிரதான தெய்வமாகவும், கன்னிமார் தெய்வம், குமார தெய்வம், உத்தியாக்கள், பத்தின் அம்மன், நாககன்னி, கன்னிமார், புள்ளிக்காரர், மாநீலி அம்மன் (கடல் தெய்வம்), செம்பகநாச்சி, ஆலாத்திகன்னி, அடுக்குக் கன்னி, தெய்வநாச்சி, தெகுத்தன், தெல்கிடி, கரடி தெய்வம், மாறா தெய்வம் போன்ற தெய்வங்களுக்கு மடை, கும்பங்கள் வைத்தும் வழிபடப்படுகிறது (நேர்காணல்: து. ரஜனிக்காந்த்). எனவே, இவ்வாலயத்தில் ஏனைய ஆலயங்களில் பயன்படுத்தும் பத்தாசி முறைகளிலேயோ அல்லது மந்திரங்களைப் பயன்படுத்தியோ சடங்குகள் இடம்பெறுவதில்லை. மன்றாட்டு முறைகளிலேயே சடங்குகள் இடம்பெறுவது இவ்வாலயத்தின் தனித்துவத் தன்மையாகும். அதுமட்டுமின்றி, ஏனைய ஆலயங்களில் தலைமைப் பூசாரி தலை சன்னதக்காரராக (தலை தெய்வம்) இருப்பதில்லை. ஆனால், இவ்வாலயத்தில் தலைமைப் பூசகரே தலைத் தெய்வமாகக் காணப்படுகின்றார். இதிலும் ஏனைய ஆலயங்களில் இருந்து திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் வழிபாட்டு முறை வேறுபட்டு இருப்பதைக் காணலாம்.

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலய சடங்கு வழிபாடு ஆண்டுதோறும் இடம்பெறுகிறது. ஒரு வருடம் சடங்கு நிகழ்வுகளைப் பூர்த்திசெய்து கோயில் சூழலிலிருந்து சென்றால், அடுத்த வருடச் சடங்கிற்காகவே ஊர் மக்கள் கோயில் சூழலில் இணைவார்கள். இதனால், சடங்கின் தொடக்க நிகழ்வு முக்கியத்துவமுடையதாக அமைகிறது.

**முதலாம் நாள் சடங்கு**

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயத்தின் சடங்கானது திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது. முதல் நாள் சடங்கில் மடைப்பெட்டி எடுக்கப்பட்டுத் திருக்கதவு திறக்கப்படும். திருக்கதவு திறக்க முன்னர் கதிர்காமத் தீர்த்தத்தையும் அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் தீர்த்தத்தையும் எடுத்து வந்து ஆலயத்தினைச் சுற்றித் தெளித்து ஆலயத்தினைச் சுத்தம் செய்த பின்னர் ஆலயத் திருக்கதவு சூரியன் அஸ்தமாகிய பின்னர் மாலை 6.00 மணிக்கு ஆலயத்தின் தலைத் தெய்வமான குமார தெய்வத்தின் மூலம் திருக்கதவு திறக்கப்படும். குமாரர் தெய்வத்தினைத் தலைமை பூசாரியின் உடலில் வரவழைத்து, குமார தெய்வம் தீர்த்தம் தெளித்துக் கதவு திறப்பதற்குரிய பரிகாரங்களைச் செய்து, திருக்கதவு திறந்து எச்சம் தாங்கி எனப்படுகின்ற வெள்ளை கட்டுதல் நிகழ்வினையும் குமார தெய்வமே மேற்கொள்வார் (நேர்காணல்: கந்தையா மனோகரன்).

இதன் பின்னர் ‘ஆலாத்தி’ என்கின்ற கன்னித் தெய்வம் திருவிளக்கு ஏற்றிவைக்கும். ஏனைய ஆலயங்களில் இடம்பெறுவதைப் போன்று பூசாரிகள் மற்றும் தெய்வங்கள் ஆடுபவர்களால் இவ்வாலயத்தில் திருக்கதவு திறக்கப்படுவதில்லை. மாறாக, திருக்கதவு திறக்கும்போது, குமார தெய்வம் மடை பரவி, வெற்றிலை சுற்றி எறிந்து ஆலயத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் சரியானதா, பிழையானதா என அவதானித்த பின்னர் குமார தெய்வமே திருக்கதவினைத் தேங்காய் உடைத்து, தீர்த்தம் தெளித்து திறக்கும். திருக்கதவு திறக்கும்வரை ஆலயம் முழுவதும் இருளில் சூழ்ந்து காணப்படும். திருக்கதவு திறந்த பின்னர் ஆலாத்தி என்கின்ற கன்னித் தெய்வம் ஆடும். இக்கன்னித் தெய்வமே ஆலயத்தின் மூலஸ்தானத்தில் திருவிளக்கு ஏற்றிவைக்கும். தொடர்ந்து ஆலயத்தினைச் சுற்றியுள்ள ஏனைய பரிவாரத் தெய்வங்களின் விளக்குகள் ஏற்றப்பட்டு, ஆலயத்தின் மின்குமிழ்களும் போடப்பட்டு, ஆலயச் சூழல் பிரகாசமடையும். தொடர்ந்து அபிஷேகங்கள், பூசை ஆராதனைகள் என்பன இடம்பெறும். சடங்கு நாட்களில் தினமும் மூன்று வேளையும் சன்னதமாடி (தெய்வமாடுதல்) பூசைகள் நடைபெறும். ஏனைய அம்மன் ஆலயங்களில் திருக்கதவு திறக்கும் சடங்கைப் பூசாரியே மேற்கொள்வார். ஆனால், திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயத் திருக்கதவு திறக்கும் சடங்கைத் தெய்வமே ஆரம்பித்து வைக்கின்றது. அத்துடன் வெள்ளை கட்டுதல் நிகழ்வினையும் தெய்வாதிகளே மேற்கொள்கின்றன. இவ்வகையில், இவ்வாலயமானது ஏனைய ஆலயங்களிலிருந்து வேறுபட்ட தனித்துவமான வழிபாட்டம்சங்களைக் கொண்டுள்ளது.

**இரண்டாம் நாள் சடங்கு மற்றும் மூன்று நாள் சடங்கு**

இரண்டாம் நாள் சடங்கானது சாதாரண சடங்காகவே காணப்படும். அதாவது, தெய்வங்களாடி அங்குள்ள அடியார்களுக்கு வாக்குக் கொடுக்கும் நிகழ்வுகள் இடம்பெறும். மூன்று நாள் சடங்கானது கன்னிமார் பிள்ளைகளைத் தெரிவுசெய்யும் சடங்கு ஆகும். அத்தினத்திலே கன்னிமார்களுக்கு உரிய பூசைகள் மிக விமர்சையாக இடம்பெறும். அன்றைய

தினம் கன்னாமார் தெரிவுசெய்தல் மற்றும் அம்மன் வீதி ஊர்வலம் என்பன இடம்பெறும். அம்மன் ஊர்வலத்தின்போது, வீதிகள் 200க்கும் மேற்பட்ட திருக்கும்பங்களால் வீதிகள் அலங்கரிக்கப்படும். மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகிய அம்மன் ஊர்வலமானது இரவு 12.00 மணிக்கு ஆலயத்தினை வந்தடையும்.

**நான்காம் நாள் சடங்கு**

நான்காம் நாள் சடங்கு கும்பச் சடங்கு ஆகும். அன்றைய தினத்திலே அம்மனுக்கு 'அம்மன் வாடை' என்ற மூலிகை அரைக்கும் சடங்கு இடம்பெறும். இந்த அம்மன் வாடை என்பது அறுபத்துமூன்று மூலிகைகனைப் பயன்படுத்தி அரைக்கப்படுகின்றது. கல்வியில் சிறந்து விளங்குவதற்கும், வீடுகளில் செல்வம் பெருகுவதற்கும், அம்மனின் திருவருளைப் பெறவும் இச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. அதுமட்டுமின்றி, நமது உடலில் காணப்படும் கெட்ட எண்ணங்கள் மற்றும் சிந்தனைகள் அகன்றுவிடவும் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் ஆலயத்திற்கு வருகை தரும் அனைவருக்கும் அம்மன் வாடை திலகம் அவர்களின் நெற்றியில் இடப்படும். நான்காம் நாள் சடங்கில் கும்பச் சடங்கு மற்றும் அம்மன் வாடை ஆகிய இரு சடங்குகளும் மிகச் சிறப்பாக நடைபெறும் (நேர்காணல்: சாமித்தம்பி சந்திரதாஸ்).

**ஐந்தாம் நாள் சடங்கு**

ஐந்தாம் நாள் சடங்கானது பொதுமக்களுக்காக மேற்கொள்ளப்படும் பொதுச் சடங்காகக் காணப்படுகிறது. முக்கியமாக, பலகாரம் பொறிக்கும் தெய்வமான 'தெல்கிடி' தெய்வத்தின் சடங்காகக் காணப்படும். குணப்படுத்த முடியாத நோய்களை (கை, கால் நடக்க முடியாதவர்களை) குணப்படுத்தும் தெய்வமாக தெல்கிடி தெய்வம் வழிபடப்படுகிறார். அன்றைய தினம் ஆலயத்தில் தெல்கிடி தெய்வம் அடுப்பு மூட்டி, எண்ணெய் பாத்திரம் வைத்து, பலகாரம் செய்வதற்கான பாகுகளை தன் கைகளால் காய்ச்சி, கொதிக்கும் எண்ணெய்யினுள் தன் கைகளைப் பயன்படுத்தி (அகப்பை, கரண்டிகள் பயன்படுத்தாது தன்கைகள் கொண்டு) பொரித்து எடுக்கும்.

அதுமட்டுமின்றி, அன்றைய தினம் இறந்த ஆன்மாக்களுக்கான ஆவுதிகள் வழங்கும் நோர்ப்புச் சடங்கும் இடம்பெறும். அன்றைய தினம் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் நடைபெறும். ஆலயத்தில் தீர்த்தம் எடுப்பதற்கு என ஐந்து பெண்கள் தெரிவுசெய்யப்படுவர். இந்த ஐந்து பெண்களும் தீட்டு ஏற்படாத வயோதிப பெண்களாக காணப்படுவர். இவர்கள் பழங்குடி மரபில் பரம்பரையாக வந்தவர்களாகவே காணப்படுவர். ஐந்து பெண்களும் ஆலயத்தின் திருக்கதவு திறக்கும் நாள் ஆலயத்துக்கு வருகை தந்து திருக்கதவு மூட்டப்பட்ட பின்னரே ஆலயத்தினை விட்டுச் செல்ல வேண்டும். இவ்வைந்து பெண்களுக்குமே மூன்றாம் நாள் சடங்கில் கன்னிமார்களாக தெரிவுசெய்யப்படும் கன்னிக் குழந்தைகளைப் பார்க்கும் பொறுப்பும் உரியதாகக் காணப்படும். அத்துடன் ஆலயத்தினைச் சுத்தம் செய்தல் போன்றவற்றையும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வைந்து பெண்களுமே ஆலயத்தில் தீர்த்தம் எடுக்கும் சடங்கினை மேற்கொள்வார்கள். ஆலயத்தின் தீர்த்தக் கிணற்றில் எவரும் தீர்த்தம் அள்ளுவது

தடைசெய்யப்பட்டுள்ளது. வெள்ளி மற்றும் பௌர்ணமி தினப் பூசைகளில் தீட்சை பெற்றவர்களால் மட்டும் தீர்த்தம் அள்ளப்படும். உற்சவ காலங்களில் ஐந்து பெண்களினால் தீர்த்தம் அள்ளிக் கொடுக்கப்படும். ஐந்தாம் நாள் சடங்கின் இரவு வேளையில் தீ மிதிப்பதற்கான தீ மூட்டும் நிகழ்வு இரவு 7.00 மணிக்கு நடைபெறும். இவ்வாலயத்தில் தீ மூட்டும் நிகழ்வினைத் தெய்வாதிகளே மேற்கொள்வார்கள். பிரதான தெய்வமான வீரவள், குமார தெய்வம், நாக கன்னி, பத்தினி அம்மன் ஆகியோரே தீ மூட்டுவார்கள். வேறு எவரும் தீ மூட்டும் இடத்திற்குச் செல்ல முடியாது. இத்தீ மூட்டும் நிகழ்வினை யாரும் பார்க்க முடியாத வண்ணம் தீக்குழியினைச் சுற்றி மறைத்து விடுவார்கள். எவ்வாறு தீ மூட்டுகின்றார்கள் என்பதது தலைமைப் பூசாரி மற்றும் தெய்வாதிகளுக்கு மாத்திரமே தெரியும். தீ மூட்டிய அடுத்த நாள் காலை தீ மிதிப்பு நிகழும் (நேர்காணல்: செவ்வராசா வடிவேல்).

ஐந்தாம் நாள் சடங்கில் தெல்குடி தெய்வத்தினால் பலகாரம் பொரிக்கும் சடங்கு இடம்பெறல், தீமூட்டல் சடங்குகளை தெய்வாதிகளே மேற்கொள்ளல், கன்னிமார் பிள்ளைகளைப் பார்ப்பதற்காகவும் ஆலயத்தில் சடங்கு நாட்களில் தீர்த்தச் சடங்குகளை மேற்கொள்ளவும் ஐந்து பெண்களைத் தெரிவு செய்தல் என்பன இவ்வாலயத்தின் தனித்துவமான அம்சங்களாக விளங்குகின்றன.

தீமிதிப்புக்கு அடுத்த நாள் காலை கன்னிமார்களுக்கு விசேடமாக பூசைகள் நடைபெறும். அதில் கன்னிமார்களுக்குத் தேவையான அனைத்தும் குறையில்லாது (அனைத்துக் கன்னிகளுக்கும் ஒரே போன்று) படைக்கப்படும். பின்னர் குமாரர் தெய்வத்தினை வரவழைத்து கன்னிமார்களுக்கு வழங்கப்பட்டவை சரியானதா எனப் பார்வையிட்ட பிற்பாடு, நூல் கட்டப்பட்டு ஆலயத்தின் பிரதான வாயிலில் கொண்டு விடுவார். ஏனைய கோயில்களில் பூசாரிகளே கன்னிமார்களை ஆலய வாயிலில் கொண்டு சென்று விடுவார்கள். ஆனால், இவ்வாலயத்தில் குமார தெய்வமே இதனைச் செய்வார். காவல் செய்வதற்கான அடையாளங்கள் வழங்கப்படுவதுடன் பள்ளையச் சடங்கும் செய்யப்படும்.

அன்றைய தினம் கடல் தொழிலுக்குரிய தெய்வத்தினால் மீன் எய்ந்து விளையாடும் விளையாட்டு, மாறா தெய்வத்தின் தேன் பூச்சியினைத் தலையில் கொட்டி விளையாடும் விளையாட்டு என்பன நிகழும். திருக்கதவினைப் பூட்டுவதற்காக குமார தெய்வத்தினை வரவழைத்து சடங்கில் ஏதேனும் குறைகள் உள்ளதா எனக் கேட்டு, குறைகள் ஏதும் இருப்பின் அதனை நிவர்த்தி செய்த பின் குமார தெய்வத்தினை அனுப்பிவைப்பர். பின்னர் ‘அந்தகுமாரி’ தெய்வம் எனும் தெய்வத்தினை வரவழைப்பர். அத்தெய்வம் ‘பூப்பெட்டி’ கொண்டு வரும். அப்பூவினைக் கோயிலில் உள்ள அனைவருக்கும் கொடுக்கும். பூ வாங்கும் அனைவரும் பணம் செலுத்தியே பூவினைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்பூவினை அனைவரும் அம்மனுக்குப் போட்ட பின்னர், இறுதியாக அந்தகுமாரி தெய்வம் பூப்போடும். இத்தெய்வம் பூப்போட்ட பின்னர் எவரும் பூப்போட முடியாது. இரவு 8.00 மணியளவில் ஆலயத் திருக்கதவு மூட்டப்பட்டு, ஆலயத் திறப்பு பொருளாளரிடம் வழங்கப்படும். திருக்கதவு பூட்டப்பட்ட பின் ஆலயத்தில் காணப்படும் அனைத்து மின்குமிழ்களும் அணைக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு எவரும் ஆலயத்திற்குள் உட்செல்லத் தடை விதிக்கப்படும் (நேர்காணல்: து.ரஜனிகாந்த்).

ஏனைய ஆலயங்களில் திருக்கதவு மூடும்போது குளுர்த்தி அல்லது வாழி பாடுதல், கும்பம் சொரிதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறும். ஆனால், இவ்வாலயத்தில் அந்தகுமாரி தெய்வம் பூ வழங்கி அதனை அடியவர்களும் அந்தகுமாரி தெய்வமும் போட்ட பின்னர் மூடப்படுகிறது. இது இவ்வாலயத்தின் தனித்துவமான சிறப்பாகக் காணப்படுகின்றது. ஆலய திருக்கதவு பூட்டியதிலிருந்து மூன்றாம் நாள் பூச்சடங்கு செய்யப்படும். அன்றைய தினம் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்தினைச் சுத்தப்படுத்தி, மாலை சூரியன் அஸ்தமனமான பின் தீக்குழிக்குப் பாலூற்றப்படும். அன்றைய தினம் அம்மனுக்கு மஞ்சளால் அபிஷேகம் செய்து, நைவேத்தியம் படைத்து, பூசைகள் சிறப்பாக நடைபெறும் (து.மாணிக்கராசா).

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயத்தில் பரம்பரை வழியில் வந்தவர்களே தெய்வம் ஆடுவார்கள். இங்கு பிரதான தெய்வமாக குமாரர் தெய்வமும் பத்தினி தெய்வமும் விளங்குகின்றன. ஏனைய தெய்வங்கள் இத்தெய்வங்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுவார்கள். தெய்வமாடுபவர்கள் ‘சன்னதக்காரர்’ என்று அழைக்கப்படுவார்கள். சன்னதம் வரும்போது கொட்டு மேளம் இசைக்கப்படும். மேளம் இசைப்பவரை ‘கொட்டுக்காரர்’ என்று அழைப்பார்கள். சன்னதம் ஆடுபவர்களுக்கு மிக முக்கியமானவர்களாக மேளம் கொட்டுபவரும் தெய்வத்திற்கு உரிய பாடல் பாடுபவருமே விளங்குவர். இவ்விருவருமே தெய்வத்தினை வரவேற்பார்கள். இதில் ஒருவர் இல்லை எனினும் தெய்வம் வரமாட்டாது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு மேள கொட்டு முறையும் பாடல்களும் காணப்படுகிறது. இப்பாடல்கள் தமிழ், சிங்களம் மற்றும் வேடுவ மொழிகளிலேயே காணப்படுகின்றன. சன்னதக்காரர் தெய்வம் ஆடும்போது, காலில் சலங்கை கட்டப்பட்டு, கையில் சிலம்பும் அணிவிக்கப்படும். சன்னதம் ஆடுபவர் வயதில் மூத்தோரை (அந்த பரம்பரையில் வந்தவர்கள், கோயிலில் சன்னதம் ஆடுபவர்கள், மேளம் கொட்டுபவர்கள், பாட்டுப் படிப்பவர்கள் போன்றோரை) வணங்கி, அவர்களின் ஆசி பெற்ற பின்னரே சன்னதமாடத் தொடங்குவார் (நேர்காணல்: சாமித்தம்பி சந்திரதாஸ்).

இவ்வாலயத்தில் கொட்டு மேளம் அடிப்பதன் மூலமே சன்னதம் ஆடுபவர்களுக்குத் தெய்வம் உடலில் உருவாகும். ஏனைய ஆலயங்களில் மந்திரங்கள் கூறியே தெய்வாதிகளை வரவழைப்பார்கள். இவ்வாலயத்தில் கொட்டு மேளத்தினைப் பயன்படுத்துகின்றமை ஆலயத்தின் தனித்துவமான சிறப்பினைக் காட்டுகின்றது. இவ்வாலயத்தில் தெய்வங்களுக்குரிய பாடல்கள் தமிழ், சிங்களம் மற்றும் வேடுவ மொழிகளில் அமைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயத்தில் பயன்படுத்தும் ஆயுதங்களாக சாட்டை, வாள், ஏழு நிறமுள்ள பூ அல்லது புள்ளியுள்ள துணி, சட்டம் எனும் பனங்குருதோலையால் செய்யப்பட்ட ஆயுதம், தென்னை ஓலையால் செய்யப்பட்ட சட்டை, வேப்பம் பத்திரம், பூப்பெட்டி, வில் அம்பு, கருங்காலிப் பொல், சிலம்பு, அம்மானைக்காய், சலங்கை என்பன பயன்படுத்தப்படுகின்றன. இசைக்கருவியாக கொட்டு மேளமும் பயன்படுகிறது (நேர்காணல்: முத்துலிங்கம் பாபு).

திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயத்தில் மக்கள் முன்வைக்கும் வேண்டுதல்கள் நிறைவேறினால், அவர்கள் ஆடு, மாடு, கோழி, வில், அம்பு, வாள், சாட்டை என்பனவற்றை நேர்த்திக்கடனாகக் கொடுப்பார்கள். அதே போன்று தங்களுக்கு ஏற்படும் நோய்கள் குணமடைய வேண்டும் என்பதற்காக இங்கு அதிகளவான பக்தர்கள் தீ மிதித்தல், அங்கப்பிரதட்சணம்

செய்தல், தீச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், மடிப்பிச்சை எடுத்தல் போன்றவற்றைச் செய்கின்றனர். குழந்தை இல்லாதவர்கள் குழந்தை வரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலயத்திற்குத் தங்கத்தினால் தொட்டில் மற்றும் பிள்ளைகள் செய்து கொடுப்பார்கள். பிள்ளை கிடைத்ததும் ஆலயத்தில் பிள்ளை விற்றல் வாங்கலினையும் செய்து தங்கள் நேர்த்திக்கடனை முடிப்பார்கள். அடையாளம் கொடுக்கும் வழக்கமும் உண்டு (கண்களில் பிரச்சினை உள்ளோர், கால் நடக்க முடியாதவர்கள், தங்கத்திலான கண்மடல், தங்கத்திலான பாதம் என்பவற்றினைக் கொடுப்பர்). வாய் பேச முடியாதவர்கள் வாய் பேசினால் அல்லுக் காணிக்கை எனும் பண மழையினை சொறிவார்கள்.

**நிறைவுரை**

மட்டக்களப்பிலேயே திராய்மடு பிரதேசமானது இயற்கை எழில் கொஞ்சும் அழகிய பிரதேசமாக காணப்படுகிறது. இவ் இயற்கை அழகு நிறைந்துள்ள திராய்மடு பிரதேசத்தில் ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயம் காணப்படுகின்றது. பழங்கால மக்களின் தெய்வ வழிபாட்டு முறையானது இயற்கை அம்சங்களை வழிபடுவதில் இருந்தே ஆரம்பமாகியது. அதன்வழி வேடுவர் வழிபாடாகவும், கிராமிய தெய்வ வழிபாடாகவும், ஆகமமுறை சாராத வழிபாடாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. என்றாலும், இதன் அடிப்படை இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த வேடுவர்களாளேயே தோற்றுவிக்கப்பட்டது.

‘‘ஆனி மாதம் வளர்பிறை மூன்றாம் நாள்’’ அம்மாளின் திருக்கதவு திறக்கப்படுதலுடன் சடங்கு ஆரம்பிக்கப்பட்டு, தீமிதிப்புச் சடங்குடன் நிறைவடைகின்றது. சடங்குகள் மன்றாட்டு முறையில் நிகழ்த்தப்படுகின்றன. இங்கு முக்கியமாக மந்திரம் பயன்படுத்தப்படுவதில்லை. சன்னதக்கார்களுக்கு உருவேற்றும்போது கொட்டு மேளம் இசைக்கப்படும். அனைத்துத் தெய்வங்களுக்குமான உருவேற்றலும் மன்றாட்டு முறையிலேயே நிகழ்த்தப்படும். இங்கு பூசை செய்பவர்கள் மூன்று தலைமுறையில் சன்னதம் ஆடுபவர்களாகவே காணப்படுவார். இக்கோயில் சடங்கு முறையில் கன்னித் தெய்வமான பத்தினி அம்மனும் குமாரர் தெய்வமும் பிரதான தெய்வமாகவும் ஏனைய தெய்வங்கள் துணைத் தெய்வங்களாகவும் காணப்படுகின்றன. இத்தெய்வங்கள் மடை, கும்பங்கள் வைத்து வழிபடப்படுகின்றன.

இவ்வாலயத்திலேயே இடம்பெறும் வழிபாடுகளில் ஆலயத் திருக்கதவு திறத்தல், அம்மன்வாடை என்ற மூலிகை அரைக்கும் சடங்கு, தெல்கிடி தெய்வத்தின் சடங்கு, தீர்த்தம் எடுப்பதற்காகத் தெரிவுசெய்யப்படும் பெண்கள், தீமிதிப்புக்குத் தீக்குழி மூட்டுதல், கடல் தொழிலுக்குரிய தெய்வத்தினால் மீன் எய்ந்து விளையாடும் வியையாட்டு, மாறா தெய்வத்தின் தேன் பூச்சியினைத் தலையில் கொட்டி விளையாடும் விளையாட்டு, திருக்கதவினை மூடுவதற்கு வரவழைக்கப்படும் அந்தக்குமாரி தெய்வ வழிபாடு என்பன இவ்வாலயத்தை ஏனைய ஆலய வழிபாட்டு முறைகளிலிருந்து வேறுபடுத்துகின்றன.

**உசாத்துணை நூல்கள்**

இன்பமோகன், வ. (2012), கிழக்கிழங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சிவலிங்கம், கா. (2009), சடையப்பா சுவாமிகளும் திராய்மடு திருத்தலமும், திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயம் பரிபாலன சபை, துர்க்கா அச்சகம், மட்டக்களப்பு.

தில்லைநாதன் சாமித்தம்பி (2015), மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

**நேர்காணலின்போது தகவல் வழங்கியோர் விபரம்**

உதயகுமார் சுவேந்திரன், 37, ஆலய செயளாலர், 2024.11.08

துரைராசா ரஜனிக்காந்தன், 43, தலைமைப் பூசாரி மற்றும் சன்னதக்காரர், 2024.11.22

செல்வராசா வடிவேல், 50, சன்னதக்காரர், 2024.11.23

குமாரசாமி துரைராசா, 68, சன்னதக்காரர், 2024.11.23

கந்தையா மனோகரதாஸ், 47, சன்னதக்காரர், 2024.11.25

சாமித்தம்பி சந்திரதாஸ், 36, சன்னதக்காரர், 2024.11.29

துரைராசா மணிராஜா, 41, பொருளாளர், 2024.11.30

முத்துலிங்கம் பாபு, 52, சன்னதக்காரர், 2024.11.31

# ஒழுக்கக் கோட்பாடு - இந்து, பௌத்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

**Selvarasa Vijitha**

Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

vijithasvp@gmail.com

**R. Sahayaseelan**

Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

sahayaseelanr@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

ஒழுக்கம் என்னும் எண்ணக்கரு தற்கால உலகில் மிகப் பரந்த அளவில் அநேகர் மத்தியிலும் பேசுபொருளாகத் திகழ்கின்றது. மனித வாழ்விலும் நடைமுறை வாழ்க்கையிலும் ஒழுக்கத்தின் இன்றியமையாமையைக் காண முடிகின்றது. ஒழுக்கம் உடையவரே சமூகத்தாலும் பிறராலும் மதிக்கப்படுபவராக உள்ளார். இவ்வாறாக காணப்படும் ஒழுக்கங்களை மனிதன் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவானாக இருந்தால் சமூகம் மேன்மையடையும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்கள் பற்றியும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படுகின்ற நன்மைகள் பற்றியும் அனைத்துச் சமயங்களும் தமது கருத்துக்களைக் கூறி நிற்பதனைக் காணலாம். இதே போல் ஒழுக்கத்தை மீறுபவர்கள் அனுபவிக்கின்ற இன்னல்களையும் அதனால் ஏற்படக்கூடிய பாதகங்களையும் அவர்களுக்குச் சமூகத்தில் கொடுக்கப்படுகின்ற நிலைகள் பற்றியும் அதனால் அவர்கள் அடையப் போகும் வாழ்வியல் மாற்றங்கள் பற்றியும் சமயங்கள் பல்வேறு எடுத்துக்காட்டுகளின் வாயிலாக விளக்கிக் கூறுவதனைக் காணலாம். இந்து, பௌத்த சமயங்கள் தத்தம் சமய ஒழுக்கங்கள் ஊடாக எத்தகைய ஒற்றுமைப் பாங்கினைக் கொண்டுள்ளன என்பதனைக் கண்டுகொள்வதே இந்த ஆய்வினுடைய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக பண்புசார் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பண்புசார் ஆராய்ச்சியானது விபரண ஆய்வாக இருப்பதனால் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவே உள்ளன. நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் முதலியன ஆய்விற்குரிய தரவு சேகரிப்பு முறைகளாக உள்ளன. மூன்றாம் நிலைத் தரவுகளாக இணையவழித் தரவுத் திரட்டல் முறையின் மூலமும் கிடைக்கப்பெற்ற தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது ஒப்பீட்டு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஒழுக்கக் கோட்பாடு, ஒழுக்கம்சார் எண்ணக் கருத்துக்கள், இந்து மற்றும் பௌத்த சமயங்களில் காணப்படுகின்ற ஒழுக்கம் சார்ந்த விடயங்கள் என்பன மனிதனது வாழ்வில் மிக உன்னதமான ஒன்றாகத் திகழ்கின்றமை இந்த ஆய்விலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள் :*** *இந்து சமயம், பௌத்த சமயம், ஒழுக்கம், உபநிடதம், பகவத்கீதை, தம்மபதம்.*

**ஆய்வு அறிமுகம்**

ஒழுக்கக் கோட்பாடு பற்றிய கருத்துக்கள் சமயங்களில் முக்கிய இடம்பெறுவதனைக் காணலாம். கடவுள், இறைவழிபாடு, வழிபாட்டுத்தலம், கிரியைகள், ஆன்மா, உலகு போன்றன சமயங்களில் முக்கியத்துவம் பெறுவதைப் போன்று ஒழுக்கக் கருத்துக்களும் முதன்மை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு மதத்தவரும் ஒழுக்கமுடையவர்களாகவும் ஒழுக்கக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும் வாழ வேண்டியது அவசியமான ஒன்றாக விளங்குகின்றது. அவ்வகையிலே, ஒழுக்கக் கோட்பாடுகள் பற்றி இந்து, பௌத்த தத்துவங்கள் மிகச் சிறந்த முறையில் தமது கருத்துக்களைக் கூறிச் செல்வதனைக் காணலாம். மனிதனானவன் தனது வாழ்க்கையில் குழந்தைப் பருவம் முதல் முக்திநிலை அடையும்வரை தனது வளர்ச்சிக் கட்டப் படிநிலைகள் ஒவ்வொன்றிலும் ஒழுக்கங்களை முறைப்படி கைக்கொள்பவனாக இருக்க வேண்டும் என்பது அவனுக்கு விதிக்கப்பட்ட விதியாகும். மனித சமூதாயமானது ஒழுக்கமுடையவர்களையும் ஒழுக்கத்தைப் பேணுபவர்களையும் விரும்புகின்றமையைக் காணலாம்.

ஒழுக்கம் எனும் பதமானது ஆங்கிலத்தில் 'Ethics' என அழைக்கப்படுகின்றது. இது கிரேக்க மொழியின் 'Ethos' எனும் அடிச்சொல்லிலிருந்து எழுந்ததாகும். இச்சொல் வழக்கம் அல்லது சம்பிரதாயம் எனும் பொருளைச் சுட்டிநிற்கிறது. ஆங்கிலத்தில் 'Moral Pholosophy' என்னும் பதமும் ஒழுக்கத்தைச் சுட்டிநிற்கும். 'Moral' எனும் இவ் ஆங்கிலப் பதமானது 'Mores' எனும் இலத்தின் சொல் அடியிலிருந்து எழுந்ததாகும். இப்பதங்களும் முன்பு குறிப்பிட்டதைப் போலவே வழக்கம் அல்லது சம்பிரதாயம் எனும் பொருள்களைக் குறித்து நிற்கின்றன. ஆகவே, நாம் பொதுவாக ஒழுக்கம் எனக் குறிப்பிட்டு நிற்பது இனத்துக்கு இனம் வேறுபட்டதாகவோ அல்லது நாட்டுக்கு நாடு வேறுபட்டதாகவோ அதேபோல் மதத்திற்கு மதம் வேறுபட்டதாகவோ அமையத்தக்கது என்பது தெளிவாகின்றது.

ஒழுக்கம் என்று எடுத்துக் கொள்ளப்படுகின்ற விடயங்கள் ஒவ்வொருத்தருக்கும் அவர்களது செயல்களுக்கு ஏற்றாற்போல் மாற்றம் அடைவதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. திறமையும் அறிவும் இருந்தால் ஒருவனால் சிகரத்தைத் தொட முடியும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால், ஒழுக்கமில்லை என்றால் ஒருவன் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் அங்கிருந்து வழுக்கி விழுவதைத் தடுக்க முடியாது. எனவே, அறிவைவிட ஒழுக்கமே முன்னேற்றத்துக்கு மூலதனமாக அமைகிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

**ஆய்வுப் பிரச்சினை**

இந்து, பௌத்த தத்துவங்கள் கோட்பாட்டு ரீதியாக வைதிகம், அவைதிகம் என்ற அடிப்படை வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றபோதிலும், இவ்விரு தத்துவங்களும் இந்திய உபகண்டத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த தத்துவங்கள் என்ற ரீதியில் இவை இரண்டும் குறிப்பிடுகின்ற ஒழுக்கக் கருத்துக்களுக்கிடையில் ஒற்றுமைத் தன்மை இருக்கின்றதா என்பதுவே இவ் ஆய்வின் பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

இந்திய உபகண்டத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்த தத்துவங்களாகக் கருதப்படுகின்ற இந்து, பௌத்த தத்துவங்களுக்கு இடையில் ஆத்மவாதம், அனாத்மவாதம் பற்றிய வேறுபாடுகள் இருப்பினும், இவ்விரு தத்துவங்களும் வெளிப்படுத்துகின்ற ஒழுக்கக் கோட்பாட்டில் ஒற்றுமைகள் காணப்படுகின்றனவா, வேற்றுமைகள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

இந்திய உபகண்டத்தில் தோற்றம் பெற்ற இந்து தத்துவமும் பௌத்த தத்துவமும் வெளிப்படுத்துகின்ற ஒழுக்கக் கோட்பாட்டில் வேறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும், ஒன்றுபட்ட பண்புகளும் நிறைவாகவே உள்ளன என்பதுவே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**இலக்கிய மீளாய்வு**

இலக்கிய மீளாய்வானது ஓர் ஆய்வின் முக்கியமான படிநிலையாகக் கொள்ளப்படுகின்றது. ஆய்வினைச் சிறப்பான முறையில் கொண்டு செல்வதற்கும் எண்ணக்கருவாக்கச் சட்டகமொன்றை உருவாக்கிக்கொள்வதற்கும் இலக்கிய மீளாய்வு இன்றியமையாத ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. மேலும், இலக்கிய மீளாய்வின் ஊடாக ஆய்விற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. ஆய்வாளருக்கு ஆய்வுப் பிரச்சினையைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும் ஆய்வுக்குப் பொருத்தமான நுட்பமுறைகளைப் பின்பற்றவும் ஆய்வின் இடைவெளியை உறுதிப்படுத்தவும் இது உதவியாக அமைகின்றது.

ஜமாஹிர்,எம்., (2012) என்பவரால் எழுதப்பட்ட 'ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்' எனும் நூலிலே கூறப்படுகின்ற ஒழுக்கவியல் சொல் விளக்கம், ஒழுக்கவியலின் முக்கியத்துவம் மற்றும் இந்து, பௌத்த சமயங்கள் குறிப்பிடும் ஒழுக்கக் கருத்துக்கள் என்பன இவ்வாய்விற்காக உதவுகின்றன.

மனோகரன்,த,, (2007) என்பவரால் எழுதப்பட்ட 'இந்து நாகரிகம்' எனும் நூலில் புண்ணியமூர்த்தி என்பவரால் வெளியிடப்பட்ட இந்துக் கோட்பாடுகளில் ஒழுக்கவியல் சிந்தனைகள் என்கின்ற கட்டுரைத் தொகுப்பில் உபநிடதம், பகவத்கீதை போன்றவற்றில் காணப்படும் இந்து சமய ஒழுக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

இராஜகோபாலாச்சாரி,ச., (1996) என்பவரால் எழுதப்பட்ட உபநிஷதப் பலகணி என்கின்ற நூலில் குருகுலத்தில் வேதம் ஓதுவித்து முடிந்ததும் சீடனுக்கு குரு சமய ஒழுக்கத்தைப் போதித்துள்ளார். அதாவது, உண்மை பேசு, தாய், தந்தை, குரு, விருந்தினரைத் தெய்வமாகப் போற்று எனப் போதித்துள்ளார். இதனைத் தைத்திரிய உபநிடதம் சான்று பகர்கின்றது.

Tachiban,S., (1926) என்பவரால் எழுதப்பட்ட Ethics of Buddhism எனும் நூலிலே பௌத்த சமய சுய கட்டுப்பாடு, மனநிறைவு, பொறுமை, பணிவு, தூய்மை, நன்றியுணர்வு,

சகிப்புத்தன்மை, வாய்மை போன்றனவும் பஞ்ச சீலங்கள், தச சீலங்கள் போன்ற ஒழுக்க விழுமியங்களும் மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

Tiwari,k.n., (1983) என்பவரால் எழுதப்பட்ட Comparative Religion எனும் நூலிலே பௌத்த சமயமானது சடங்குகளைச் செய்வதைவிட ஒழுக்கத்தைப் பின்பற்றுவதனை நோக்காகக் கொண்டமைந்துள்ளது. கொல்லாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, திருடாமை, பொய்யாமை போன்ற பஞ்சமா பாதங்களைத் தவிர்த்து, பஞ்சசீலங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனைப் பௌத்தம் போதிக்கின்றது.

சாங்கிகிருத்யாயன்,ரா., (1985) என்பவரால் எழுதப்பட்ட பௌத்த தத்துவ இயல் எனும் நூலில் புத்தபெருமான் வாழ்க்கையில் அனைத்தையும் துறந்து மனிதர்களுக்குத் தத்துவக் கருத்துக்களைப் போதித்துள்ளார். அவ்வகையில், துக்கம், துக்ககாரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய நான்கு உயரிய உண்மைகள், அட்டாங்க மார்க்கங்கள் ஊடாக மக்களுக்குக் கொல்லாமை, திருடாமை, பொய் பேசாமை, பகைமை கொள்ளாமை போன்ற ஒழுக்கங்களைப் போதித்துள்ளார்.

சகாயசீலன்,இ., (2016) என்பவரால் எழுதப்பட்ட பௌத்தமும் நிர்வாணமும் என்கின்ற நூலில், அட்டாங்க மார்க்கமானது ஒழுக்க வாழ்க்கையாகக் காணப்படுகின்றதுடன், சீலம் என்பது ஒழுக்கநெறிகள், நற்குணங்கள், அறச்செயல்கள் போன்றனவாகும். பஞ்சசீலங்களான கொல்லாமை, களவாமை, பிறர்மனை விரும்பாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இராகுலர்,ஸ்ரீ., (1989) என்பவரால் எழுதப்பட்ட புத்த பகவான் எழுதிய போதனை என்கின்ற நூலில், மனிதகுலத்துக்குத் தேவையான ஒழுக்கநெறிகள் போன்ற பௌத்த சமய ஒழுக்கக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

ஜெகநாதன்,சோ., என்பவரால் எழுதப்பட்ட பௌத்தம் ஒரு மெய்யியல் பார்வை என்ற நூலில் கூறப்பட்டுள்ள பௌத்த தத்துவம் குறிப்பிடும் ஒழுக்கக் கோட்பாடு பற்றிய விடயங்கள் இவ்வாய்விற்கு உதவுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வினைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு ஆய்வு முறையியல் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. ஓர் ஆய்வாளன் ஆய்வின்போது, அறிவியல் சார்ந்த முறைகளைக் கையாள வேண்டும் என்பது ஆய்வாளரின் பொதுவான கருத்தாகும். அதற்கமைய இனங்காணப்பட்ட பிரச்சினைகளை ஆராய்வதற்குத் தேவையான தகவல்களையும் தரவுகளையும் திரட்டுதல், அவற்றைப் பகுப்பாய்வு செய்தல், அதனூடாகப் பெற்ற விளக்கங்களையும் முடிவுகளையும் ஏனையோருக்கு விளங்கக்கூடிய வகையில் தெரிவித்தல் என்பன ஆய்வில் முக்கியம் பெறுகின்றன. அந்தவகையில், இவ்வாய்வானது ஒப்பீட்டுப் பகுப்பாய்வு, உள்ளடக்கப் பகுப்பாய்வு மற்றும் வரலாற்றுப் பகுப்பாய்வு போன்ற முறைகளைப் பின்பற்றியிருக்கின்றது.

**இந்து, பௌத்த தத்துவங்கள் குறிப்பிடும் ஒழுக்கக் கருத்துக்கள் பற்றிய ஒப்பீடு**

சமயம் என்பது புராதன காலத்திலிருந்து மிக முக்கியமான ஒன்றாகவே கருதப்பட்டு வருகின்றது. சமயம் என்ற சொல் விரிந்த பொருளுடையதாகக் காணப்படுவதோடு பெருந்தொகையான அம்சங்கள் இதனோடு தொடர்புபட்டுள்ளன. சமயங்கள் குறிப்பிடுகின்ற ஒழுக்கக் கருத்துக்களானவை மனிதனை மனிதனாக இவ்வையகத்தில் வாழவைப்பதற்கான நெறிமுறைகளை வகுத்துக் கொடுப்பதாக அமைந்துள்ளன. அதன்படி மனிதனானவன் எவ்வாறான ஒழுக்கங்களைக் கடைபிடித்து ஒழுக வேண்டும் என்பது பற்றியும் அதனால் பெறப்படுகின்ற விளைவுகள் பற்றியும் சமயங்கள் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கின்றன. அதற்கமைவாக சமயமும் ஒழுக்கமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாகக் காணப்படுகின்றன.

இந்து மற்றும் பௌத்த சமயங்கள் கூறும் ஒழுக்கக் கருத்துக்கள் பெரும்பாலும் ஒத்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இவ்விரு சமயங்களின் ஊடாக வலியுறுத்தப்படும் ஒழுக்கக் கருத்துக்கள் மனிதர்கள் தம் வாழ்வை அர்த்தமுள்ளதாகவும் செம்மையானதாகவும் வாழ்வதற்கு மிகவும் முக்கியமானவையாக உள்ளன. இந்து, பௌத்த சமய ஒழுக்கக் கருத்துக்களை எடுத்துக்காட்டி அவற்றின் ஒருமைப்பாட்டைப் பற்றியே ஒப்பீடு செய்யப்படுகின்றது.

மனிதன் சமுதாயத்தில் நாளாந்தம் கடைப்பிடிக்க வேண்டிய பல ஒழுக்க நியம விதிகளையும் நடைமுறைகளையும் விளக்கிக் கூறி, அவற்றை மனிதர்கள் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் சமயங்கள் எடுத்துரைக்கின்றன. இந்து சமயமானது பஞ்சமா பாதகங்களான கொலை, களவு, பொய், மது, காமம் எனும் இவற்றைத் தவிர்க்க வேண்டும் எனக் கூறுகின்றது. இதே கருத்தைத்தான் பௌத்த சமயமும் கொலை, களவு, கள்ளாமை, புலானுண்ணாமை, பிறர்மனை நயவாமை போன்றவற்றை தவிர்த்து பஞ்ச சீலங்களை மேற்கொள்ள வேண்டுமெனப் போதிக்கின்றது. இவற்றை ஒழுக்க நெறிகளாகவும் இவ்விரு சமயங்களும் கொள்கின்றன.

இந்து சமயம் அனைத்திற்கும் அடிப்படையான அறவியல் பற்றிக் குறிப்பிடுகின்ற நூல்களில் ஒன்றாக விளங்குவது உபநிடதம். உபநிடதங்களில் பிரமம், ஆன்மா, உலகு, கன்ம மறுபிறப்பு, முக்தி, இறைவனுக்கும் ஆன்மாவுக்குமான தொடர்பு என்பனவற்றோடு ஒழுக்கம் என்பதும் முக்கிய உபதேசமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. உபநிடதங்கள் உலகியல் வாழ்க்கையை மறுப்பதாக இருந்தாலும், அது தர்மத்திற்கு மாறானதாகவோ, ஒழுக்கத்திற்கு எதிரானதாகவோ இருக்கவில்லை. "தீய ஒழுக்கத்தைக் கைவிடாதவன் ஒரு போதும் பிரமத்தை அடையமாட்டான்" என உபநிடதங்கள் வலியுறுத்துகின்றன.

மக்களின் நோக்கம் தம் வாழ்வில் மெய்ப்பொருளாகிய இறைவனை அடைவதாகும். அதற்கு அவன் தன் வாழ்விலே கடைப்பிடிக்கின்ற ஒழுக்க நெறிமுறைகளே வழி செய்கின்றன. இவ் ஒழுக்க நெறிமுறைகள் பற்றி உபநிடதங்கள் சிறப்பாகக் கூறுகின்றன. இங்கு ஒழுக்கம் என்பது வாழும் முறை அல்லது வாழ்க்கை நெறி எனப்படுகின்றது. இவ்வாறு தனியே இறைவனை மட்டும் கூறாது மனிதனில் செல்வாக்குச் செலுத்தும் ஒழுக்கம் போன்ற தத்துவக்

கருத்துக்களைப் பற்றிக் கூறுவதனால், இவற்றை மெய்யியல் ரீதியாக ஆராய முற்படுவது குறிப்பிடத்தக்கது. எனவே உபநிடதங்களில் உள்ள ஒழுக்கக் கருத்துக்கள் ஒருவனின் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுபவையாக உள்ளன எனலாம். இவ்வாறாக உபநிடதங்கள் சமயம்சார் கருத்துக்களாக இருந்தாலும், அவற்றில் ஒழுக்கக் கருத்துக்களே நிரம்பிக் காணப்படுகின்றன. இந்த நிலை மக்களைச் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக வாழ வைக்க உதவும் எனலாம். இதனால் மக்கள் நெறி தவறாது, குற்றங்களையும் புரியாது, எந்தச் செயல் அவர்களை இறைவனிடம் கொண்டு சேர்க்குமோ அச்செயலில் ஈடுபட்டுத் தமது வாழ்வின் நோக்கமான மோட்சத்தையும் அடைந்து கொள்வர்.

இதைப் போலவே பகவத்கீதையிலும் (Bhagavad Gita) ஒழுக்கம் முக்கியமான இடம் வகிக்கிறது. ஏனெனில், இது நற்பண்புகள், தர்மம், வாழ்க்கை நெறிகளை விளக்குகின்றது. கீதையின் முக்கியப் பயனாக ஆன்மிக அறமும் நல்லொழுக்கமும் விளக்கப்படுகின்றன. குறிப்பாக செயல்கள், எண்ணங்கள் மற்றும் வாழ்க்கைமுறை ஆகியவற்றில் ஒழுக்கம் மிக முக்கியம் என்பதைக் கீதை பல பாடங்களில் குறிப்பிடுகிறது. பகவத்கீதையில் கூறப்படும் ஒழுக்கத்தின் முக்கிய அம்சங்களாக ஸ்வதர்மம் (தன் கடமை), அஹிம்சா (அழிவில்லாத தன்மை), சத்தியம் (உண்மையுணர்வு), விவேகம் (மெய்யுணர்வு), தர்மம் (நீதியுள்ள செயல்கள்), பொறுமை, மற்றவர்களைப் பொறுத்துக்கொள்வது, தவறுகளுக்கு மன்னிப்பது போன்ற நற்பண்புகள் வலியுறுத்தப்படுகின்றன. தன்னலம் இல்லாமல் பொறுமையுடன் செயல்படுதல் ஒழுக்கத்தின் அடிப்படையான அம்சமாகக் கருதப்படுகிறது. அதேபோல் விரக்தி (பற்றின்மை), உலக விடயங்களில் பற்றின்மையை வளர்த்தல், அவற்றால் மனதைப் பாதிக்கவிடாமல் செய்தல் என்பன ஒழுக்கத்தில் முக்கியமானவையாகப் பார்க்கப்படுகின்றன.

பௌத்த சமயத்திலே ஒழுக்க நடைமுறைகள் என்கின்றபோது, பெரும்பாலும் அவை கௌதம புத்தரால் அருளப்பட்டவையாகக் காணப்படுகின்றன. புத்தர் வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து அதனை எடுத்துக்காட்டியதுடன், பௌத்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களையும் அவை சார்ந்த அம்சங்களையும் போதித்துள்ளார். அவ்வாறு கூறப்பட்டுள்ள ஒழுக்கம்சார் விடயங்களைப் பௌத்தர்களது புனித நூலாகக் கொள்ளப்படும் திரிபிடகத்தினை மையமாக வைத்து இங்கு அறிய முடியும்.

பௌத்த அறம் பேரளவில் தனியாள்களுக்கே பொருத்தமுள்ளதென அறியப்படுகிறது. சமூக மதிப்பீடுகளை வளர்க்கப் போதுமான உந்துதல்கள் தரப்படவில்லை. பிராமணிய சமூக பிரிவுநிலையால் ஏற்பட்ட சாதியைப் புத்தர் கடிந்தார். ஆனால், அது பௌத்தத்தில் முற்றிலும் ஒழிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. விலங்கினங்களைக் கொன்று வேள்வி நடத்தியதைப் புத்தர் எதிர்த்தார். ஆனால், வேறு பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட வேள்விகளுக்கும் வாழ்க்கைச் சடங்குகளுக்கும் எந்த எதிர்ப்பையும் தெரிவித்த குறிப்புகள் பௌத்த நூல்களில் இல்லை. உயரிய அற ஒழுக்கத்தை உடையவனே பிராமணன் என்று புத்தர் விளக்கினார்.

பௌத்தர்களது புனித நூலாகக் கொள்ளப்படும் திரிபிடகத்தின் ஒரு பகுதியான விநயபிடகம் ஒழுக்க நெறிமுறைகளை வகுத்துக் கூறுகின்ற ஒரு நூலாகக் காணப்படுகின்றது.

பௌத்தம் குறிப்பிடும் ஒழுக்கங்களாக அன்பு, வாய்மை, நட்பு, தருமம், அகிம்சை, தானம் வழங்குதல், சகிப்புத்தன்மை, பொறுமை, தயாள சிந்தனை போன்றவையும் பஞ்சசீலங்களும் பௌத்த ஒழுக்க விழுமியங்களாக கொள்ளப்படுகின்றன. பஞ்சமா பாதகச் செயல்களைச் செய்யாமல் பஞ்சசீலங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறினார். இங்கு கூறப்படும் ஒழுக்கக் கருத்துக்கள் மனிதனது வாழ்க்கையைப் பெறுமதிமிக்கதோர் வாழ்வாக மாற்றியமைக்கின்ற ஓர் ஊடகமாகக் காணப்படுகின்றது.

‘சீலம்’ என்பது ஒழுக்கநெறிகள், நற்குணங்கள், அறச்செயல்கள் போன்றனவாகும். இவை முறையே இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் உரியவை எனப் பகுக்கப்பட்டுள்ளன. அவை ‘பஞ்ச சீலா’ என்ற ஐந்து நல்ல நடத்தைகளும் ‘தச சீலா’ என்ற பத்து நல்ல குணங்களும் ஆகும். புத்தர் இல்வாழ்வானுக்கும் துறவிக்கும் வகுத்த ஒழுக்கங்களாக இவை உள்ளன. இப்பஞ்ச சீலக் கொள்கை பற்றித் தம்மபதம், ‘‘உலகத்திலே உயிரைக் கொல்லுகிறவரும் பொய் பேசுகிறவரும் திருடுகிறவரும் பிறர் மனைவியை விரும்புகிறவரும் மயக்கம் உண்டாக்குகிற குடிவகைகளைக் குடிக்கிறவரும் இவ்வுலகத்திலேயே தமது வேரைத் தாமே அகழ்ந்து எடுப்பவர் ஆவர்’’ எனக் கூறுகின்றது.

**உண்மை**

தைத்திரிய உபநிடதம் ‘‘சத்தியம் வத - உண்மையைப் பேசு’’ எனும் மகாவாக்கியத்தை கொண்டுள்ளது. சாந்தோக்கிய உபநிடதம் உண்மைக்கு உயிர் உண்டு, சக்தி உண்டு என்பதை அழகாக எடுத்துக்காட்டுகிறது. சத்யகாமன் தன் கோத்திரம் தெரியாது என்று உண்மையைச் சொன்னதால் அவனை ஏற்றுக்கொண்டு உபநயனம் செய்வித்தார் குரு. அவனைச் சீடனாகவும் ஏற்றுக்கொண்டார். அதே போன்று, ஐதரேய உபநிடதமும் இந்த வாழ்க்கைக் கடலைக் கடப்பதற்கு ஒரு தோணி உள்ளது எனக் கூறி உண்மை, நேர்மை, தானம், கருணை, அஹிம்சை, புலனடக்கம், சுயகட்டுப்பாடு, பொறுமை ஆகியவை அதன் துடுப்புகளாக உள்ளன என்று கூறி ஒழுக்கத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றது.

கீதையின் 16ஆம் அத்தியாயம் தெய்வீக குணம் கொண்டவர்களின் புனித நற்பண்புகளை விவரிப்பதன் மூலம் தொடங்குகிறது. பின்னர் அது அசுர குணங்களை விவரிக்கிறது. ஏனெனில், அவை ஆன்மாவை மீண்டும் அறியாமை மற்றும் ‘ஸம்ஸாரம்’ (வாழ்க்கை மற்றும் இறப்பு சுழற்சியை) நோக்கி இழுத்துச் செல்கின்றன. சரி மற்றும் தவறான நடத்தையைத் தீர்மானிப்பதில் வேதங்கள் நமது அதிகாரமாக இருக்க வேண்டும் என்று கூறி, ஸ்ரீகிருஷ்ணர் அத்தியாயத்தை முடிக்கிறார். இந்த வேத கட்டளைகளை நாம் புரிந்துகொண்டு அவற்றைப் பின்பற்றி இவ்வுலகில் நடந்து கொள்ள வேண்டும்.

**கொல்லாமை**

கட உபநிடதத்தில் உயிர்க்கொலை தவிர்ப்பது பற்றி அறியலாம். வாஜசிரவாப் என்பவர் ஒரு யாகம் செய்தார். தன்னிடமுள்ள பொருட்களைத் தானம் செய்வதாக அவர் சங்கல்பம் செய்திருந்தார். அவர் கறவையற்ற கிழப்பசுக்களைத் தானம் செய்தபோது, அதைக் கவனித்த

அவரது மகன் நசிகேதன். என் தந்தை என்னையுமல்லவா தானம் செய்யவேண்டும் என்று நினைத்தான். அவன் தந்தையிடம், ‘‘அப்பா என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்’’ என்று வினாவைக் கேட்டு உயிர்க்கொலையைத் தடுக்கின்றான்.

‘‘சகல உயிர்களிடத்தும் விரோதமோ குரோதமோ கொள்ளாமல் நட்பும் கருணையும் கொண்டு, மமகார அகங்காரங்களற்றுத் துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகப் பாவித்து, பொறுமை பூண்டு, எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பவனும் யோகியும் தன்னடக்கமுடையவனும் சித்தமுடையவனும் மனத்தையும் புத்தியையும் என்னிடமே அர்ப்பணித்தவனாய் எவன் என் பக்தனாக இருக்கிறானோ அவன் எனக்குப் பிரியமானவன்’’ என்று கீதையின் 12ஆம் அத்தியாயமான பக்தி யோகத்தில் கூறப்பட்டுள்ளது.

தம்ம பதத்தின் தண்டவர்க்கம் (தண்டனை இயல்) உயிர்க்கொலை தவிர்த்தல் பற்றி அழகாக எடுத்துரைக்கின்றது. மற்ற உயிர்களையும் உன் உயிரோடு ஒப்பிட்டு நோக்கி ஒன்றையும் கொல்லாதே. கொல்விக்கவும் உடன்படாதே. இன்பமாக வாழ விரும்புகிற உயிர்களை ஒருவர் தன் சுகத்தை மட்டும் விரும்பித் தண்டித்துத் துன்புறுத்தினால், அப்படிப்பட்டவர் இறந்த பிறகு சுகம்பெற மாட்டார். சுகமாயிருக்க விரும்புகிற ஏனைய உயிர்களை ஒருவர் தம்முடைய சொந்த சுகத்தின் பொருட்டுத் தண்டித்துத் துன்புறுத்தாது இருப்பாரானால், அவர் இறந்த பிறகும் சந்தோஷத்தை அடைகிறார்.

**பெரியோரை மதித்தல்**

தைத்திரிய உபநிடதத்தில் ஒரு மனிதன் தன் வாழ்விலே யார் யாரை வணங்க வேண்டும் என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடவுளை மட்டுமன்றி, தாய், தந்தை, குரு போன்றோரை வணங்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. இதனை, ‘‘மாத்ரு தேவோ பவ - தாயைத் தெய்வமாகப் போற்று, பித்ரு தேவோ பவ - தந்தையைத் தெய்வமாகப் போற்று, ஆச்சார்ய தேவோ பவ - குருவைத் தெய்வமாகப் போற்று’’ என்ற வாக்கியங்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

தம்மபதத்தில் ஒருவர் காட்டுக்குச் சென்று நூற்றாண்டுகளாக எக்கியத் தீயை வளர்த்து வந்தாலும், அவர் தன்னைத் தானே வென்று அடக்கிய பெரியார் ஒருவரை ஒரு நிமிடம் வணங்குவாரானால், அதன் பலன் நூற்றாண்டு செய்த எக்கிய பலனைவிட மேலானது எனக் கூறப்பட்டுள்ளது.

**தர்மம்**

கீதையின் 4ஆம் அத்தியாயமான ஞானகர்ம சந்நியாச யோகத்தில் ‘‘தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும்போது நான் தோன்றுவேன். அதர்மச் சக்திகளை அழிக்கவும் தர்மத்தைப் பாதுகாக்கவும் அது மறுபடியும் நிலைக்கவும் நான் பிறந்துகொண்டேயிருப்பேன்’’ என்று பகவான் தெரிவிக்கிறார். இவ் அத்தியாயத்தின் 8ஆவது சுலோகத்தில் ‘தர்மம்’ என்னும் சொல் மறு உலக வாழ்க்கை சம்மந்தப்பட்ட வேத தர்மத்தை குறிக்கவில்லை. நான்கு

வருணத்தார்க்குரிய கடமைகள், நீதி, நியாயம், அறநெறி போன்றவற்றையே இச்சொல் இங்கு அர்த்தப்படுத்துகிறது.

தம்மபதத்தில் வருகின்ற ஆயிரவியல் பகுதியில் ஒழுக்கம் பற்றி குறிப்பிடுகையில், தர்மம் என்னும் உயரிய விழுமியம் மூலமாகக் கூறப்பட்டுள்ளது. ஒழுக்கங்களுடன் தியானத்தைச் செய்கின்ற ஒருவருடைய ஒரு நாள் வாழ்க்கையானது ஒழுக்கங் கெட்ட மனத்தையடக்காத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையைவிட மேலானது என்று ஒழுக்கத்தினது உயர்வினைக் கூறியுள்ளமையினை ஆயிரவர்க்கப் பகுதியில் 110ஆவது பாடலின் ஊடாக அறியலாம். உத்தம தர்மத்தை அறிந்த ஒருவருடைய ஒரு நாளைய வாழ்க்கையானது அவ்வுத்தம தர்மத்தைக் காணாத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையைவிட மேலானது என்று தர்மம் பற்றிக் கூறியுள்ளதை ஆயிரவர்க்கம் பகுதியில் 115 ஆவது பாடல் ஊடாக அறியலாம்.

தம்மபதத்தில் லோகவர்க்கம் (உலகவியல்) பகுதியில் 168ஆம் பாடலில் தர்மம் பற்றிய விழுமியம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அசட்டையாயில்லாமல் விழிப்பாக இரு. தர்மத்தை முழுவதும் கைக்கொண்டு ஒழுகு. தர்மப்படி நடக்கிறவர்கள் அவ்வுலகத்திலும் இவ்வுலகத்திலும் சுகம் அடைகிறார்கள். தர்மத்தை நல்வழியில் செலுத்தி நட. தீய வழியில் செலுத்தி நடக்காதே. தர்ம வழியில் ஒழுகுபவர் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் சுகம் அடைகிறார்கள் என 169ஆம் பாடலடி விளக்குகின்றது. ஒப்பற்ற தர்மத்தை இகழ்ந்து ஒதுக்கிவிட்டு பொய்யையே பேசிக்கொண்டு பரலோகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்கிற பாவத்தைப் போன்று வேறு பாவச் செயல் கிடையாது. இதனை 176ஆம் பாடல் ஊடாக அறிந்துகொள்ள முடியும்.

**பிற ஒழுக்கக் கருத்துக்கள்**

கீதையின் 13 ஆவது அத்தியாயத்தில் வாழ்க்கைக்கான நன்னெறிகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இங்கு பகவான் இருபது நன்னெறிகளையும் மனோபாவங்களையும் கூறுகிறார். இவற்றில் ஒவ்வொன்றும் மனதைத் தூய்மையாக்கவும் பக்குவப்படுத்தவும் உதவுகின்றது. இதனால் நம்முடன் நாமே அமைதியாக திருப்தியாக இருப்பது சாத்தியமாகிறது. அடக்கம், பெருமை கொள்ளாமை, அஹிம்சை, பொறுமை, நேர்மை, சத்குருவை ஏற்றல், தூய்மை, நிலைபிறழாமை, புலனடக்கம், புலனுகர்வில் துறவு, பொய், அகங்காரமின்மை, தீமைகளைக் கவனித்தல் (பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி போன்றவை), மனைவி, மைந்தர், இல்லம் மற்றும் பிறரிடம் பற்றின்மை, இன்ப, துன்பங்களில் நடுநிலை, என்னிடம் மாறாத தூய பக்தி, தனியிடத்தை நாடுதல், கூட்டத்திலிருந்து விலகியிருத்தல், ஆன்மிக விஞ்ஞானத்திற்கு முக்கியத்துவம் தருதல், பூரண உண்மைக்காக ஆன்ம விசாரணைகள் செய்தல் இவைகளே ஞானம் எனப்படும். இவைகளுக்கு எதிரானவை அஞ்ஞானமாகும்.

இதைத் தொடர்ந்து தம்மபதத்தின் மல வர்க்கம் (குற்றவியல்) கூறும் ஒழுக்கக் கருத்துக்களைப் பார்க்கையில், குற்றங்கள் துடைக்கப்பட்டவர்கள் உயர்ந்தோர் உலகை அடைகின்றனர். அவர்களுக்குப் பிறப்பு இல்லை. தவறான நடத்தை பெண்ணிற்குக் கேடு. கஞ்சத்தனம் செல்வர்களுக்குக் கேடு. இத்தகைய குற்றங்கள் மறுவுலகிலும் துன்பம் பயப்பன. இவை அனைத்திலும் மோசமான குற்றம் அறியாமை. புறங்கூறுவோர்., பொய்யுரைப்போர்,

திருடுவோர், பிறன்மனை நயப்போர், மது அருந்துவோர் ஆகிய இவர்கள் இந்த உலகில் தங்கள் வேரைத் தாங்களே துணித்துக்கொள்கின்றனர் எனக் கூறுகின்றது.

கீதையின் 17ஆவது அத்தியாயம் மூலமாகப் பகவான் மூவகைத் தத்துவத்தைக் சொல்லுகிறார். சுத்தமாயிருத்தலும் நேர்மை, அஹிம்சை, பிரம்மச்சரியங் காத்தல் இவைகளும் யாக்கையினால் செய்யுந் தவமாகும். இனியதும் நலந்தருவதும் பிறரைப் புண்படுத்திச் சொல்லம்பை வீசாமையும் சத்தியம் பேசுதலும் வேதம் ஓதுதலும் வாக்கினாலாற்றும் தவமாகும். அமைதியுள்ள மனம், அன்பு, தன்னடக்கம், மௌனம், நல்ல நோக்கம் ஆகியவை மானஸ தபசு (மனதாலியற்றுந் தவம்) ஆகும். தங்கள் யோகத்திலே உறுதியாக நின்று எந்தப் பயனையும் எதிர்பாராமல் நிரம்ப முயற்சி செய்து மானிடர்கள் ஆற்றும் இந்த மூவகைத் தவமும் சாத்விகமென்று சொல்லப்படுகிறது. இப்படிப் பகவான் உபதேசித்துள்ளதை நமது அன்றாட கடமைகளுடன் அனுசரித்து வந்தாலே போதும். அவர்களுக்கு இது பிரியமானது. இதைவிட உயர்ந்தது வேறில்லை.

தம்மபதத்தினுடைய தம்மட்ட வர்க்கம் (சான்றோர் இயல்) ஒழுக்கம் பற்றிக் கூறும்போது, அதிகமாகப் பேசுவதாலேயே ஒருவர் அறிஞர் ஆகிவிடமாட்டார். குறைந்தளவு கற்றிருப்பினும், அதை உணர்ந்து கற்று அதன்படி நிற்பவரே உண்மையில் கற்றவராகிறார். பொறாமையும் வஞ்சகமும் தன்னலமும் உள்ளவர்கள் இனிய பேச்சும் அழகிய தோற்றமும் கொண்டிருப்பதால் நல்லியல்பினர் ஆகார். இத்தகைய குணங்களை வேரோடு களைந்தவரே முதியவர் ஆவர். ஒழுக்கமின்றியும் பொய் பேசியும் திரிபவர் தன் தலையை மழித்துக் கொள்வதனாலே துறவியாகார். வேட்கையை நீத்து அனைத்துத் தீமைகளையும் களைந்தவரே துறவியாவார். அறநெறியிலிருந்து வழுவியாரும் மடமையும் அறியாமையும் கொண்டவர்களும் பிச்சையெடுப்பதாலும் மௌனமாக இருப்பதாலும் பிக்குகளாகவோ முனிவர்களாகவோ ஆகார். நன்மை தீமை இரண்டையும் கடந்து பிரம்மச்சரிய நிலையில் நின்றவரும் பாவங்களை நீத்தவருமே பிக்கு என்றும் முனிவர் என்றும் கருதப்படுவர்.

தம்மபதத்தின் லோக வர்க்கம் (உலகவியல்) அசட்டையாயில்லாமல் விழிப்பாக இரு. தர்மத்தை முழுவதும் கைக்கொண்டு ஒழுகு. தர்மப்படி நடக்கிறவர்கள் அவ்வுலகத்திலும் இவ்வுலகத்திலும் சுகம் அடைகிறார்கள். தர்மத்தை நல்வழியில் செலுத்தி நட. தீய வழியில் செலுத்தி நடக்காதே. தர்ம வழியில் ஒழுகுபவர் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் சுகம் அடைகிறார்கள் என்கின்றது.

உபநிடதங்கள் முக்திக்குரிய வழியாக ஒழுக்கத்தையே காட்டுகின்றன. நிலையானவை மற்றும் நிலையற்றவற்றைப் பிரித்துணர்தல், சுயநலம் விடுத்தல், தன்னம்பிக்கை, மன அமைதி, தன்னடக்கம், துறவு, பொறுமை போன்ற விடயங்களைத் தன்னகத்தே வளர்ப்பதன் மூலம் முத்தியைப் பெற்று இறைவனை அடைய முடியும். எனவே, இதன் மூலமாக உபநிடதங்களில் ஒழுக்கக் கருத்துக்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றமை அறியத்தக்கது.

அத்தோடு, நற்செயலின் பயனைச் சுவர்க்கத்தில் அனுபவித்துவிட்டு இவ்வுலகில் பிறக்கின்றனர் என்று முண்டக உபநிடதம் கூறுகின்றது. இவ்வாறு கூறப்படுவதன் மூலம் மக்கள் தம் இறப்புக்குப் பின்னரான நிலையை எண்ணி, அதன் மீதுள்ள பயம் காரணமாக மக்கள்

ஒழுக்கசீலர்களாக வாழ முற்படுவர். ஓதுவது ஒழியேல், அறம் செய், எந்த செயல் குற்றமற்றவையோ அவற்றை மட்டுமே செய்ய வேண்டும் போன்ற கருத்துக்கள் மனிதனை அறவானாக்குகின்றன.

**முடிவுரை**

மனிதனை ஒழுக்கமுடையவனாக உருவாக்குவதில் சமயங்கள் பெரும்பாலான பங்களிப்பினைச் செய்கின்றன. அவ்வகையில், உலகில் காணப்படுகின்ற ஒவ்வொரு சமயமும் ஏதோ ஒரு வகையில் மனிதனை நல்வழிப்படுத்துவனவாகவும் அவனை நல்ல பாதையில் அழைத்துச் செல்வனவாகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், இந்து, பௌத்த சமயங்களை எடுத்துக்கொண்டோமானால், இவ்விரு சமயங்களும் மனிதர்களை ஒழுக்க சீலர்களாக உருவாக்குவதில் அளப்பரிய பங்களிப்பினை ஆற்றுகின்றன. சமய நூல்களின் வாயிலாக பல்வகையான ஒழுக்கக் கருத்துக்களையும் ஒழுக்கக் கோட்பாடுகளையும் எடுத்துக் கூறி, அவற்றை மனித வாழ்வில் நடைமுறைப்படுத்தும் அம்சங்களையும் விளக்கி, அதன் வழி அனைவரையும் ஒழுக்கமுடையவர்களாக மாற்றுவதற்கு இவ்விரு சமயங்களும் பல கருத்துக்களைக் கூறி நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

மனிதனது நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள், நடைமுறைகள் போன்றவற்றின் அடிப்படையில் ஒழுக்கங்களை வகுத்துக் கூறி, அவற்றைத் தம் வாழ்வில் சாத்தியப்படுத்தும் பலதரப்பட்ட விடயங்களையும் இவ்விரு சமயங்களும் போதிப்பதனைக் காணலாம். அவ்வகையில், தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம் என்ற அடிப்படையில் மனித சமுதாயத்திற்கு வேண்டிய ஒழுக்கக் கருத்துக்களுக்குச் சமயங்கள் முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக உள்ளது.

இந்து சமயமானது மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை அவன் தன் வாழ்வில் ஒழுக்கத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறுகின்றது. ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவம் புனித நூல்களின் வாயிலாக வலியுறுத்தப்படுகின்றது. அதன்படி ஒழுக்கக் கருத்துக்கள் மனிதனைச் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்வனவாக அமைந்துள்ளன. உண்மை, நேர்மை, தர்மம், அஹிம்சை, பிறர் நலம் பேணுதல் என இன்னும் பல முக்கிய ஒழுக்கக் கருத்துக்களை எடுத்துரைப்பதைக் காணலாம். இத்தகைய பல ஒழுக்கக் கருத்துக்களைத் தனிமனிதன் மாத்திரம் அன்றி, ஒட்டுமொத்த முழுச் சமுதாயமும் பின்பற்றுகின்ற போது, அச்சமூகத்தில் ஒழுக்கமானது மேலோங்கிக் காணப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சமூகத்திலும் நாட்டிலும் வாழுகின்ற மக்கள் தமக்கிடையே நேர்மையாகவும் பிறர் நலம் பேணியும் வாழ வேண்டியது அவசியமான ஒன்றாகும். தனக்கும் பிறருக்கும் எந்த வித தீங்கும் இழைக்காமல் தன்னைப் போன்று பிற உயிர்களையும் நேசித்து, அதன் மூலமாக மகிழ்வாகவும் இன்பமான வாழ்வினையும் வாழ்வதற்குரிய பல்வேறு ஒழுக்க முறைகளையும் ஒழுக்கக் கோட்பாட்டு விளக்கங்களையும் தருவதோடு பஞ்சமா பாதகங்கள் எனக் குறிப்பிடப்படுகின்ற

செயல்களையும் தவிர்க்க வேண்டியது அவசியமானதென்றும் இந்து சமயம் நமக்கு எடுத்துரைத்துள்ளது.

பௌத்த சமயமானது மனிதனது வாழ்வு நிலையில்லாதது என்று குறிப்பிட்டிருக்கின்ற போதிலும், அவன் வாழுகின்ற வாழ்க்கையானது ஒழுக்க வாழ்க்கையாகவே அமைய வேண்டும் என்று போதிக்கின்றது. அந்தவகையில், ஒழுக்கத்தினை மையமாகக் கொண்டே பௌத்த சமயம் அமைந்துள்ளது. பஞ்சசீலங்களினை மனிதன் மேற்கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றது. பௌத்த சமயம் பஞ்சசீலங்கள் என்று கூறுகின்றபோது, சீலம் என்பது ஒழுக்கம் எனத் தெளிவுபடுத்துகின்றது. இவ்வகை ஐந்து ஒழுக்கங்களையும் முதன்மையான அறமாக மேற்கொள்ள வேண்டும் என்று புத்தர் போதித்துள்ளார். அவ்வகையில், கொல்லாமை, திருடாமை, பொய்யாமை, கல்லாமை, பிறர்மனை நயவாமை ஆகிய ஐந்துமே பஞ்ச சீலங்கள் ஆகும். எந்தவொரு உயிரையும் துன்புறுத்தவோ, கொலை செய்யவோ கூடாது. அவ்வரிமை எமக்கு இல்லை எனப் பௌத்தம் கூறுகின்றது. அது மட்டுமன்றி, உமக்குச் சொந்தம் இல்லாத பொருட்களை நீ எடுத்துக்கொள்ளக் கூடாது. எதையும் திருடாமலும் எவற்றிலும் ஆசை கொள்ளாமலும் மது அருந்தாமலும் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் எனப் பஞ்சசீலங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவ்வாறான கருத்துக்கள் மூலமாக பௌத்த சமய ஒழுக்கக் கருத்துக்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

இந்து, பௌத்த சமயங்கள் வெவ்வேறு சமயக் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், இவ்விரு சமயங்களிடையே காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள் பெரும்பாலும் ஒற்றுமைப் பாங்கைக் கொண்டுள்ளன. அந்தவகையில், இப்படிக் கூறப்பட்டிருக்கும் ஒழுக்கக் கருத்துக்கள் மனிதர்களிடையே பல நல்ல விளைவுகளை உண்டாக்குகின்றன. இந்து சமயத்தில் இருந்த மூடநம்பிக்கைகளை எதிர்த்து, தகர்த்து எறிந்து, பௌத்த சமயம் தோற்றம் பெற்றிருந்தாலும், இந்து சமயத்தில் விஸ்ணுவின் அவதாரமாகவே புத்தர் கொள்ளப்படுகின்றார். பௌத்த சமயத்தில் இந்து சமயத்திற்கு எதிரான வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்ற போதிலும், சில கருத்துக்கள் இந்து சமயத்துடன் ஒற்றுமைப் பாங்கைக் கொண்டுள்ளமையை அறிய முடிகின்றது.

**பரிந்துரை**

இவ்வாய்வானது இந்து, பௌத்த சமயங்களில் காணப்படுகின்ற ஒழுக்கக் கருத்துக்களை ஆய்வு செய்கின்றது. அந்தவகையில், இந்து, பௌத்த சமயங்களில் ஒழுக்கக் கருத்துக்கள் பரந்தளவில் காணப்படுவதனால், ஆய்விற்குத் தேவையான தகவல்களைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டது. ஒழுக்கம் பற்றிக் கூறுகின்ற சமய நூல்கள் பல காணப்படுகின்ற போதிலும் ஆய்வின் வரையறை கருதி, இந்து சமயத்தில் உபநிடதம், பகவத்கீதை ஆகிய நூல்களும் பௌத்த சமயத்தில் தம்மபதமும் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய நூல்களின் மூல நூல்கள் வேறு மொழியில் இருப்பினும், அம்மொழி அறிவு இன்மையினால் தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களையே இவ்வாய்வு அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

ஒழுக்கக் கருத்துக்களை மனிதர்கள் மத்தியில் உட்செலுத்த வேண்டுமாக இருந்தால், அதற்கான ஏற்பாடுகள் சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டும். இளமையிலேயே மாணவர்களுக்கான ஒழுக்கக் கருத்துக்களும் ஒழுக்க கோட்பாடுகளும் விளக்கப்படுகின்ற சமயத்தில் அத்திபாரமானது உறுதியாக இருக்கும். இதைத் தொடர்ந்து பாடசாலைகளில் ஒழுக்கக் கோட்பாடுகளின் முக்கியத்துவமும் அது தொடர்பிலான மேன்மையான தகவல்களும் உள்ளடக்கிய வகையில் கல்வியை போதிப்பதன் மூலமாகவும் மாணவர்கள் ஒழுக்கமுடையவர்களாக வாழ வழி ஏற்படும்.

சமயங்களின் ஊடாக ஒழுக்கக் கல்வி போதிக்கப்படுகின்றபோது, ஒழுக்கத்தின் தேவை நன்கு உணரப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக இந்து சமயத்திலே பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வருகின்ற அறநெறி வகுப்புக்கள் மாணவர்களுக்கு உரிய முறையில் அறத்தைப் போதிப்பனவாக உள்ளன. அதேபோல் பௌத்த சமயத்திலும் பிரிவெனாக் கல்வி இடம்பெறுகின்றது. இத்தகைய கல்வி முறைகளில் ஒழுக்கம் என்கின்ற கருத்தமைவானது முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். அதாவது, ஒரு மாணவனுக்குத் தன் வாழ்க்கையில் அனுபவக் கல்வி என்பது எந்த அளவிற்கு அவசியமான ஒன்றாக இருக்கின்றதோ அதே அளவிற்கு ஒழுக்கக் கல்வியும் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


அண்ணா, 2000, தைத்திரிய உபநிடதம், ஸ்ரீ ராமகிருஸ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

அண்ணா, ஸ்ரீமத் பகவத்கீதை, ஸ்ரீ ராமகிருஸ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

ஆசுதோசனந்தர, சு., ஐதரேய உபநிடதம், ஸ்ரீ ராமகிருஸ்ண மடம், சென்னை.

ஆச்சார்யா, பி.எஸ்., 2001, கௌதம புத்தர் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை.

இரகுபரன், க., (ப.ஆ.) 2010, அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

இராமலிங்கம், அ., 2003, ஒழுக்கம், பாரதி புத்தகாலயம், சென்னை.

இராசபாண்டியன், மு., 2013, அறநூல்கள், கோவன் பதிப்பகம், சென்னை.

இன்பநாதன், இ., செல்வநாயகம், 1994, இந்திய மெய்யியல் ஓர் அறிமுகம், தமிழ்நாடு இறையியல் கல்லாரி, மதுரை.

இராமதாஸ், டி.எஸ்.ஆர்., 1981, இந்தியப் பண்பாடு, தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை.

இரத்தினசிங்கம், சி.வ., 2008, உலகச் சமயங்கள் 40 ஐப் பற்றிய அரிய தகவல்கள், மணிமேகலை பிரசுரம், சென்னை.

கிஷாந்தினி, தி., 2019, இந்துக்களின் வாழ்வியலில் அறம், யாழ்ப்பாணம்.

கிருஸ்ணராஜா, சோ., 2000, 20ஆம் நூற்றாண்டின் ஒழுக்கவியல் கொள்கைகள் பண்பாடு, இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இலங்கை.

சகாயசீலன், இ., 2016, பௌத்தமும் நிர்வாணமும், குமரன புத்தக இல்லம், கொழும்பு.

சண்முகநாதன், கு., 2015, கல்வி மெய்யியல் ஓர் அறிமுகம், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம், யாழ்ப்பாணம்.

சாங்கிருத்யாயன், ரா., 2003, பௌத்தத் தத்துவ இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

சிவானந்தமூர்த்தி, க,. 2012, ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும், லங்கா புத்தகசாலை, கொழும்பு.

சிவாச்சாரியார், கு., உபநிடதங்களின் ஸாரம், நர்மதா பதிப்பகம், சென்னை.

சிவலிங்கம், சு., 2017, பகவத்கீதை காவியம், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்.

செயப்பிரகாசு, நா., 2002, தம்மபதம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தயாளன், ஸ்ரீ., 1987, இந்து கலாசாரம், இலங்கையின் இந்து சமய திங்கள் வெளியீடு.

திருச்சிற்றம்பலம், சிவ., 2004, சைவ சமயக் கலைக்களஞ்சியம், திருவரசு புத்தக நிலையம், சென்னை.

பத்மநாதன், சி., 1992, இந்துக் கலைக் களஞ்சியம் (உ - ஔ), இந்து சமய காரசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

பிரம்மசாரியார், கு., உபநிசதங்களின் சாரம், நர்மதா பதிப்பகம், சென்னை.

பூலோகநாதன், பொ., 2014, நவீன மெய்யியல் - ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், சென்னை.

றஹீம், 1962, ஒழுக்கம் பேணுவீர், யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை.

ரத்தினசபாபதி,பி., 2012, அமைதி நோக்கில் அரிய நெறிகள், செல்வமணி வெளியீடுகள், விழுப்புரம்.

ரங்கசாமி,ரா., 2001, கீதை ஆய்வுரை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

ராஜாஜி, 1996, உபநிஷதப் பலகணி, வானதி பதிப்பகம், சென்னை.

ராமஸ்வாமி,ரா., 1956, பௌத்த தருமம், ஹிலால் பதிப்பகம், சென்னை.

ராமஸ்வாமி,ப., 1991, புத்தர் போதனைகள், முல்லை நிலையம், சென்னை.

ராதாகிருஸ்ணன்,ச., 1970, கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

வில்லியம் வில்லி, 1994, அறவியல் - ஓர் அறிமுகம், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

வேங்கடசாமி,சீனி, 2007, பௌத்தமும் தமிழும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

ஞானகுமாரன், நா., 2012, மெய்யியல், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

நேசன்,பு. , 2018, இந்திய மெய்யியல் - ஓர் அறிமுகம், ஈஸ்வரன் புத்தகாலயம், கண்டி.

மகாலிங்கம்,சி.வ., இந்து நாகரிகம்: தரிசனங்களும் வாழ்வியலும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

மதுரானந்தர்,சு., 2000, இந்து சமயம் வளர்நிலை, வானவில் அச்சகம், சென்னை.

மதுரானந்தர்,சு., 2003, இந்து சமயம் முதுநிலை, ஹிந்துதர்ம வித்யா பீடம், கன்னியாகுமரி.

# இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்துசமய இலக்கியப் பங்களிப்புகள்

**Thenila Jegatheeswaran**

Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

*thenilaj@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் இந்து சமயம் நிலைபெற்றுள்ள பிரதேசங்களில் யாழ்ப்பாணம் தனக்கெனத் தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டமைந்ததாக விளங்குகிறது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள், பண்பாட்டு முறைகள் போன்றன ஒன்றோடொன்று தொடர்புபட்டு அம்மக்களின் வாழ்வியலோடு இணைந்ததாகக் காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்து சமய இலக்கியப் பங்களிப்புகள் எனும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது இருபதாம் நூற்றாண்டில் இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த யாழ்ப்பாணப் பெண்களையும் அவர்கள் தமது பங்களிப்பினை எவ்வகையில் நல்கினர் என்பதனையும் வெளிக்கொணர்தனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த யாழ்ப்பாணப் பெண்கள் பலர் காணப்பட்டாலும் அவர்களது பணிகள், சேவைகள் பற்றிய பதிவுகள் ஆவணங்கள் என்பன மிகவும் அரிதாகவே உள்ளமை இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையாகும். இவ்வாய்வானது விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, பகுப்பாய்வு முறையியல்களினூடாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் யாழ்ப்பாணத்தில் நிலவிய இந்துப் பண்பாடனது கந்தபுராண கலாசாரமாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்து சமய இலக்கியப் பணிகளாக இந்து சமய இலக்கியங்களைப் பதிப்பித்தல், கட்டுரைகள் எழுதுதல் என்பன வெளிக்கொணரப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டு இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, மேலைநாடுகளிலும் இடம்பெற்றுள்ளமையினையும் இவ்வாய்வு வெளிக்கொணர்கிறது.

***திறவுச் சொற்கள்:*** *இந்து சமயம், கட்டுரைகள், சைவ இலக்கியங்கள், யாழ்ப்பாணம், பெண்கள்.*

**அறிமுகம்**

இலங்கையின் வடமாகாணத்தில் வரலாற்றையும் பண்பாட்டையும் தனித்துவமாக பேணிப்பாதுகாக்கும் பிரதேசமாக யாழ்ப்பாணப் பிரதேசம் காணப்படுகிறது. மிக நீண்ட கால இந்து சமயம்சார் தனித்துவங்கள் இங்கு பேணிப்பாதுகாக்கப்பட்டு வருவதுடன், மொழி, மதம், சடங்கு, சம்பிரதாயங்கள், இந்து சமயம்சார் விழாக்கள், வரலாற்றுப் பாரம்பரியமிக்க ஆலயங்கள் போன்றன முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். இந்து சமயத்தினை வளம் பெறச் செய்வதற்கும் இந்து மக்களைக் காலத்திற்குக் காலம் வழிப்படுத்தி நெறிப்படுத்தவும் ஆறுமுக நாவலர் போன்ற இந்து சமயப் பெரியார்கள் பலர் தோன்றிய பெருமையும் இப்பிரதேசத்திற்கு உண்டு.

இந்து சமயம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்குச் சிந்துவெளிப் பிரதேசத்திலே அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் சான்று பகிருவதாக ஆய்வாளர்கள் பலரும் கூறியுள்ளனர். இந்து சமயம் ஆரிய, திராவிட பண்பாட்டின் சங்கமிப்பென ஆய்வாளரிடையே கருத்து நிலவக் காணலாம். இந்து சமயம் பிற சமயங்களை உள்வாங்கி வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்புடையது. அந்த வகையில், இந்து மதம் உலகில் வழங்கும் மதங்களில் முக்கியமானது. இன்று உலக மக்களில் பெருமளவானோர் கடைப்பிடிக்கும் மதமாக மட்டுமில்லாமல் உலகெங்கிலும் பரந்து வாழும் பேரறிஞர்களின் சிந்தனையைக் கவரவல்ல உயரிய அம்சங்கள் வாய்ந்தவையாகவும் விளங்குகின்றது எனக் குறிப்பிடலாம்.

இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகள் இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்து வந்த போதிலும், அவர்களது பணிகள் சேவைகள் பற்றிய பதிவுகள், ஆவணங்கள் என்பன மிகவும் அரிதாகவே உள்ளன. இத்தகையதொரு பின்னணியில் குறிப்பிடத்தக்க இந்துப் பெண்களின் ஆன்மிக அறிவுத்துறை சார்ந்த பணிகள் பற்றி இங்கு சிந்திப்பது பொருத்தமாகும். அவர்களுள் ரத்னா நவரத்தினம், பத்மாசனி, தங்கம்மா அப்பாக்குட்டி, பொன் பாக்கியம், தம்பு வேதநாயகி, மனோன்மணி சண்முகதாஸ், கலைவாணி இராமநாதன், மகேஸ்வரி வேலாயுதம், பத்மா சோமகாந்தன், மேரு புத்திரி, வைகுந்தம் கணேசபிள்ளை போன்றவர்கள் சமய இலக்கிய ஆன்மிகப் பாரம்பரியத்தில் சிறந்து விளங்கிய பெண் ஆளுமைகளாக குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் வரலாற்று ஆய்வு, விபரண ஆய்வு, பகுப்பாய்வு என்பவற்றுடன் கள ஆய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் பெண் ஆளுமைகள் இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் சமயப் பணி பற்றி அறிந்து வெளிப்படுத்துவதற்கு விபரண ஆய்வு முறை பயன்படுத்தப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்து சமய இலக்கியப் பங்களிப்பு பற்றி அறிவதற்கு, 19ஆம் நூற்றாண்டின் சமூக படிமுறை வளர்ச்சியை விளங்கிக் கொள்ள வரலாற்று ஆய்வு முறை பயன்படுத்தப்படுகிறது.

கள ஆய்வும் இவ்வாய்வின் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. 20ஆம் நூற்றாண்டில் இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பங்கு கொண்டு தற்காலத்தில் வாழ்ந்து வரும் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் நேர்காணல்கள், 20ஆம் நூற்றாண்டில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த பெண் ஆளுமைகள் வாழ்ந்த சமூகத்தில் வாழ்ந்தவர்களிடம் நேர்காணல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. அதன் பின் பெற்ற தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வுக்குக் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் பிரச்சினை**

வெளிவருகின்ற ஆய்வுகளில் சிறந்த ஆய்வாளராக, சமய ஞானியராக, சமயப் பிரசங்கராக, சொற்பொழிவாளராக, ஆன்மிக சிந்தனையாளராகப் பெரும்பாலும் ஆண்களே பேசப்பட்டுள்ளனர். 19ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கையில் மெதுமெதுவாக ஏற்பட்ட சமூக கலாசார மாற்றங்கள் இந்துப் பெண்கள் நிலையிலும் ஒரு முற்போக்கான மாற்றத்தை ஏற்படுத்தின. இவ்மாற்றமானது 20ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்து இந்துப் பண்பாட்டு வளர்ச்சியிலும் இன்றியமையாததாக காணப்படுகிறது. அந்தவகையில், இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்து சமய இலக்கியப் பங்களிப்புகள் செய்த பெண்கள் பலர் காணப்பட்டாலும், அவர்களது பணிகள், சேவைகள் பற்றிய பதிவுகள் ஆவணங்கள் என்பன மிகவும் அரிதாகவே உள்ளமை இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையாக அமைகிறது.

**ஆய்வின் கருதுகோள்**

20ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்து இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெண்களால் மேற்கொள்ளப்பட்ட இலக்கியப் பணிகள் பெரும் பங்களிப்பினை வழங்கி உள்ளன என்பது இவ்வாய்வின் கருதுகோளாக அமைகிறது.

**ஆளுமைகளின் இலக்கியப் பங்களிப்பு**

இந்துப் பண்பாட்டை வளர்ப்பதிலும் பரப்புரை செய்வதிலும் இந்து இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்துப் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான இலக்கியங்களை இன்றும் மக்கள் பின்தொடர்கின்றனர். அந்தவகையில், இந்து இலக்கியங்களைப் படைப்பதிலும் மொழிபெயர்ப்பதிலும் பதிப்பிப்பதிலும் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பார்வதியம்மையாருடைய உயர்ந்த கற்பித்தலினாலேயே மதுரைத் தமிழ்ப் பண்டிதர்களாகிய இரு பெண்களுள் ஒருவரே திருமதி. பத்மாசனி அம்மாள் ஆவார். இவரே மரபு வழிப்புலமை வாய்ந்த முதற் பெண் புலவர் ஆவார். பார்வதியம்மையார் கல்விப்புலமை வாய்ந்தவராக இருந்தார். அவருடைய எழுத்துக்கள் எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், பத்மாசனி அம்மாளோ மரபு வழிப் புலமை வாய்ந்தவர் என்பதற்கு அவர் பாடிய ‘புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி’ சான்றாகவுள்ளது (கலைவாணி,இ., 2010:156).

வடமராட்சியைச் சேர்ந்த பத்மாசனி அம்மாளுடைய புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி 1925இல் முதன்முறையாக அச்சிடப்பட்டு வெளிவந்தது. இவ்வந்தாதி நூலிலே நூலாசிரியர் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புக்களையும், பசுபதீஸ்வரர் கோயிலின் வரலாற்றுச் செய்திகளையும், தகவல்களையும் ஓரளவு கண்டுகொள்ளலாம். இறைவனின் அருட் சிறப்புக்களைப் பாடும்போது அன்னாரது நூலறிவு பாடல்களில் நன்கு வெளிப்படுகின்றது. நாயன்மார் வரலாறுகளும் புராணக்கதைகளும் ஆங்காங்கு பிரதிபலிக்கும்போது, ஆசிரியர் இவற்றிலே நன்கு பயிற்சியுடையவர் எனத் தெரிகின்றது.

முதலைக் குறுமிடர் தீர்த்த....(82)

கூற்றுதைத்து மார்க்கண்டர்க்கு அருளும்... (48)
உடையாய் புலித்தோல் உடை யானே...(10)
ஒரு தனியன்பன் செருப்பினால் உதைக்க...(61)

என வரும் அடிகள் இறைவழிபாட்டினால் துயரம் தீர்த்துக்கொண்ட அடியவர்களை நினைவூட்டுவதோடு, பக்தியினால் நலம் பெறுதல் என்ற பண்பினையும் விளக்குவதாக அமைந்துள்ளன (மனோன்மனி,ச., 2000:10-88).

இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1977இல் வெளிவந்தது. இதன்கண் நூறு பாடல்களிற் பசுபதீஸ்வரப் பெருமானின் புகழ் போற்றப்படுகின்றது. இந்நூற் சிறப்பினை நவநீதகிருஷ்ண பாரதியார், ம.க.வே.மகாலிங்கசிவம் என்போரும் சிறப்பித்துள்ளனர். இவ்வந்தாதி நூலின் இரண்டாம் பதிப்புக்குக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் 2000ஆம் ஆண்டில் ஓர் உரைவிளக்கம் எழுதி வெளியிட்டுள்ளார். அவ்வுரையிலே வரும் உரையாளர் கருத்துரை என்ற பகுதியில் உரையாசிரியர் இந்நூலின் தவச்சிறப்புப் பற்றியும் கனதி பற்றியும் சுட்டிக் காட்டியுள்ளார் (சோமசுந்தரம் பிள்ளை,அ., 2000:6). ''இறைவனின் தன்மைகளையும் வழிபாட்டின் பெறுபேறுகளையும் பதிக அமைப்பிலே முதலிற் பாடிய காரைக்கால் அம்மையார் வழிச்சென்று உலகத்தார் பயன்பெறத் தானும் தொண்டாற்ற எண்ணியுள்ளார்'' (மேலது:6) என்ற வரிகளை கண்ணுற்ற போது யாழ்ப்பாணத்திலும் புலவர் பண்டிதர் வரிசையில், பெண்களும் புலமையாளர்களாக வாழ்ந்து வந்ததுடன் ஏனைய சைவப் பெண்களுக்கு வழிகாட்டிச் செல்லும் பெரும்பணியினையும் மேற்கொண்டிருந்தமை புலனாகின்றது (மேலது:6).

மலையகத்திலே மீனாட்சியம்மாளின் புதுமைமிக்க தமிழ்க் கவிதை ஓங்கி ஒலிக்கும் வேளையிலே, யாழ்ப்பாணம் வடமராட்சியிலே பத்மாசனி அம்மாளுடைய மரபுவழிக் கவிதை நூல் தோற்றம்பெறுகின்றது. சிறந்த பெண் தமிழறிஞரிடம் தமிழ் கற்று மதுரைத் தமிழ்ப் பண்டிதையாகிய பத்மாசனி அம்மாள் ஈழத்தின் மரபுவழி வந்த முதல் தமிழ்ப் புலவராகத் திகழ்கின்றார் (சண்முகதாஸ்,அ., 2010:124). பத்மாசனி அம்பாள் பாடிய பதிற்றுப்பத்து அந்தாதியை காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியுடன் ஒப்புநோக்கி நூலாசிரியாரின் வடமொழி, தமிழ்மொழி புலமையினைத் தனது உரை விளக்கத்தில் விளக்கிய கலாநிதி மனோன்மணி அவர்கள், அம்மையாரை ஒரு பெண்பாற் புலவராகவே மதிப்பீடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

''மரபுவழிக் கல்வியில் புலமை பெற்ற பெண் பரம்பரையையும் முதன் முறையாக வடமராட்சிப் பகுதியில் காணமுடிகின்றது. பாரம்பரியக் கல்விவழி வந்து முதன்முறையாக மதுரை தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையில் இரு பெண்கள் சித்தியடையக் காரணமான பார்வதி அம்மையார்...'' (கலைவாணி,இ.,2010:157). இக் குறிப்பில் பேராசிரியர் குறிப்பிடும் இரு பண்டிதர்களும் பத்மாசனியும் பாலாம்பிகையும் ஆவார்கள்.

செந்தமிழ் இதழிலும் சிவத்தொண்டன் நிலையத்தினரின் வெளியீடுகளிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ''என்னைக் கணமும் பிரியா இறைவன்'' என்னும் கட்டுரை

சிவத்தொண்டன் இதழில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது (உதயமலர்,மோ., 2016:478). இவ்வாறாக, அம்மையாரின் பக்திநெறி மேம்பாடு, வழிபாட்டு மரபிற் சைவ வாழ்வியலை ஒழுங்குபடுத்தி, இளைய தலைமுறையினர் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த பெண்களில் பத்மாசனி இராஜேந்திரம் அவர்களின் பணி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இரத்தினா நவரத்தினம் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அமைந்திருந்த சிவதொண்டன் நிலையத்தின் கௌரவ செயலாளராகப் பொறுப்பேற்றதோடு, 'சிவதொண்டன்' என்ற சஞ்சிகையின் கௌரவ ஆசிரியப் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டு சைவ கலாசாரம், பண்பாடு, சைவசித்தாந்தத் தத்துவங்கள் என்பனவற்றின் வளர்ச்சியிலும் கணவன், மனைவி இருவரும் இணைந்தே பணியாற்றினர். இவ்வகையில் இத்தம்பதியினருடைய வாழ்வு முழுவதும் சமய கலாசார மேம்பாட்டிற்காக உழைப்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது (பத்மா சோமகாந்தன்., 2012:63).

1972இல் அம்மையாரால் எழுதப்பட்ட Saint Yogar Suwamy and The Testament Truth என்ற நூல் அமெரிக்க ஹவாய் மாநிலத்திலுள்ள வெயிலுவா தியானப் பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணிப் பட்டப் படிப்புக்குரிய நூலாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஹவாய் சைவ சித்தாந்த ஆதின குரு சுப்பிரமணிய சுவாமிகள் இந்நூலைப் பெரிதும் பாராட்டியுள்ளார். Siddhanta Saivaism in Essence and Manifestation (1979) எனும் நூலும் சிவயோகாமிர்தம் எனும் நூலும் மேற்குலக மக்களுக்குச் சைவசித்தாந்தச் சிறப்பினை எடுத்துரைக்கும் வெற்றி வாய்ந்தவை.

'சிவயோகாமிர்தம்' என்ற நூலின் பதிப்புரையில், "ஆறுதல், நிம்மதி மற்றும் தன்னை அறிந்தோரால் மட்டுமே கற்பிக்கக்கூடிய அறிவுச் செல்வத்தை மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட இந்த உலகிற்குப் பொழுதைப் பாராது சுயநலம் இல்லாது இந்த ஞானப்பரிசை இரத்தினம்மா நவரத்தினம் வழங்கியிருக்கிறார்கள். அவருக்கு உலகம் நன்றி கூறுகிறது" எனக் குருதேவர் சுப்பிரமணிய சுவாமிகள் விதந்து எழுதியிருப்பது ஈழத்தின் இந்துப் பண்பாட்டில் பங்களிப்பு நல்கிய பெண் ஆளுமைகள் அனைவரையும் பெருமிதம் கொள்ளச்செய்வதாகும் (விக்னேஸ்வரி, ப., 2010:34).

அம்மையார் அவர்களின் Kartikeya- the Divine child, The Testament of Wisdom, Aum Ganesha-the peace of God, The Call of Maha sakthi-Matha Devine,The Vision of Siva in Periyapuranam 1987 ஆகிய நூல்கள் இந்திய அறிஞராலும் புகழ்ந்து பேசப்பட்டவையாகும். இவை பற்றித் திருக்குறள் அறிஞர் பி.நடராஜன் குறிப்பிடுகையில், "திருமதி இரத்தினா நவரத்தினம் அவர்களின் ஆன்மீக விருத்தியானதொரு ஆன்மா, அவரது பேனாமுனையில் இருந்து வரும் எதுவும் விடாமுயற்சி மிக்க வித்துவத்துடன் கூடிய பக்தியும் தியானத்திலும், ஆழ்ந்த தெய்வ பக்தியிலும் தோய்ந்துள்ளது. அவரது நடை எளிமையானது. விளக்கம் மிகமேன்மை

தருவது. ஆன்மாவை, மனதை, நகர்த்துகின்றது'' என்றார். இக்கருத்தைவிட அம்மையாரின் ஆன்மிகப்பணி, தொண்டுநலம் பற்றி நாம் அதிகம் கூறிவிட முடியாது.

அவரது நூல்களில் நான்கு நூல்கள் பாரதீய வித்தியாபவன் - பம்பாய் எனும் நிறுவனத்தால் பிரசுரிக்கப்படும் சிறப்பு வாய்ந்தவையாகவும் விளங்கின. கல்வி கலாசார அமைப்புக்களில் ஊக்கமுடன் பங்குபற்றிக் கொழும்பு சைவமங்கையர் கழகத்தின் தலைவராகவும் பணியாற்றினார் (கலைவாணி,இ., 2010:154). அம்மையாரால் வழங்கப்பட்ட சைவசித்தாந்தம் தொடர்பான அறக் கொடைகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் நூலாக வெளியிடப்பட்டமை அவரது இந்துநாகரிகப் புலமைத்துவத்தை மதிப்பீடு செய்ய உதவுவனவாகும்.

1984ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரதிதாசன் பல்கலைக்கழகம் அம்மையார் சைவம், சித்தாந்தம், தமிழ், இந்து கலாசாரம் ஆகிய துறைகளுக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்புக் காரணமாக கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1999ஆம் ஆண்டில் வெள்ளிவிழாப் பட்டமளிப்பு வைபவத்திலும் அம்மையாரின் இலக்கிய கலாநிதி (D.Litt.) எனும் பட்டத்தை தேகாந்த நிலையிலும் வழங்கிக் கௌரவித்தது (பத்மா,சோ., 2012:62).

1968ஆம் ஆண்டு அம்மையார் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். தாம் கற்றவற்றை எதிர்காலத் தலைமுறையும் படித்துப் பயன் பெறவேண்டும் என்ற பெருநோக்குடன் எழுத்துத் துறையிலும் ஆற்றல் மிக்கவராக விளங்கி பதினான்கு நூல்களை ஆங்கிலத்திலுமாக மொத்தம் பதினெட்டு நூல்களை வெளியிட்டுள்ள பெருமைக்குரியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக்கத்தின் விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், முன்னாள் பதில் துணைவேந்தருமாகிய பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள் இரத்தினா அம்மையாரைப் பற்றிய கட்டுரையில் அவரது நூல்கள் பற்றித் தரும் குறிப்பு இங்கு சுட்டிக்காட்டப்படுவது அவசியமானது. கல்வித் துறையில் அம்மையார் எழுதிய ஒரு சில நூல்கள் தவிர்ந்த ஏனைய ஆக்கங்களின் கருப்பொருட்களை மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கிக் கூறியுள்ளார்.

1. சிவயோகசுவாமிகளின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சைவசித்தாந்தம்.
2. தனித்தெய்வங்கள் பற்றிய ஆன்மீக நோக்கு.
3. பெரியபுராணம், திருவாசகம் போன்ற இந்து இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் நுண்ணிய சித்தாந்தக்கருத்துக்கள் என்பனவாகும்.

யாழ்ப்பாணத்திலே சைவத் தமிழ்ப் பெண்மணிகள் எவருமே வகித்திராத மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்து, ஞாலம் போற்றும் வகையில் தமது பணிகளைத் திறம்பட ஆற்றியவர் (விக்னேஸ்வரி, ப., 2010:36). இவரது கணவர் 1992இல் இயற்கை எய்தியதன்பின் அவரது விருப்பப்படி "Thecall of Mahasakthi Mother Divine'' (தெய்வீக அன்னை) என்ற நூலை அம்மையார் எழுதி முடித்தார். அதனைப் பிரசுரிப்பதற்காக பாரதீய வித்தியாபவன் அனுப்பி வைத்தார். இவ்வாறு அன்னாரின் கல்வித் தகைமை, சமயப்பணி, ஆன்மிகப்பணி மற்றும் இந்து

நாகரிகத்தின் பல்துறை சார்ந்த பணிகள் பற்றி எம் போன்றவர்களால் எழுத்தில் வரைவது என்பது மிகமிக அரிதான விடயமாகும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் இந்துப் பண்பாட்டுப் பேணலுக்கான பங்களிப்புக்களின் வரிசையில் இத்திமரத்தாள், ஆற்றங்கரையான், புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி உரை, காலந்தந்த கைவிளக்கு, வழிபாட்டுக் கோலங்கள். ஆறுமுகநாவலர், பக்தியின்மொழி தமிழ், தமிழர் பண்பாட்டில் மார்கழி ஒரு மரபுத் திங்கள். பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் (கருத்தரங்கு கட்டுரைத் தொகுப்பு), நாவலரின் தொலை நோக்கு (கருத்தரங்கு கட்டுரைத் தொகுப்பு), தழிழர் திருமண வழக்கு ஆகிய ஆய்வு நூல்களையும் பதினைந்திற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி இந்துப் பண்பாட்டைப்ட பேணியுள்ளார் (நேர்காணல்: மனோன்மணி,ச.,).

யாழ்ப்பாண மக்களின் சமய, சமூகப் பண்பாட்டியல் வழக்குகள் பற்றிய ஆய்வுத் துறைகளிலும் யப்பானிய கக்சுயின் பல்கலைக்கழகப் பேராசிரியர், டோக்கியோ பல்கலைக்கழகப் பேராசிரியர் யசுமாசா சேர்கின் (Yasummasa sekine) என்பவர்களுடனும் இணைந்து யப்பானிய ஈழத் தமிழர் சமய வாழ்வியல் பற்றி கலாநிதி மனோன்மணி அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் தமிழ் சைவ உலகத்திற்குப் பெரிதும் பயன்தரக் கூடியவையாகும். கலாநிதி மனோன்மணி அவர்களது பல நூல்கள் யப்பானிய பல்கலைக்கழகத்தினாலும், கொழும்பு இந்து கலாசாரத் திணைக்களத்தினதும் பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளமை "புலமை எனில் அதனை வெளிநாட்டவரும் அறியச்செய்வோம்" என்ற பாரதியாரின் வாசகங்களை நினைவூட்டுவது போல அமைந்துள்ளது.

தமிழ் சைவப்பெண்களின் பெண்ணியம் பற்றிய கோட்பாடுகளில் கலாநிதி மனோன்மணி அவர்களின் ஆய்வுகள் தமிழ்ப் பெண்களிடையே ஓர் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. "தமிழ்ப் பெண்கள் கண்ணோட்டத்தில் பெண்ணியம்" எனும் அவரது தொகுப்பு நூல் இதற்கு நல்லதொரு சான்றாகும். மேலைத்தேய பெண்ணியம் பற்றிய கோட்பாடுகளில் இருந்து தமிழ் சைவப்பெண்கள் விடுபடவேண்டும் எனவும் பண்பாடு. கல்வி, அறிவியல், பொருளாதாரத் துறைகளில் கலாநிதி அவர்கள் அறிவுநிலை நின்றும், மரபுநிலை நின்றும் பார்க்கின்ற புதிய பார்வையாளராக ஆய்வு நோக்குள்ளவர்களாகவும் தம்மை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் மிகவும் கருத்தோடு சேவையாற்றுபவர்.

அடுத்து வேலணையூர் பண்டிதை தம்பு வேதநாயகி அம்மையார் சமயம் என்பது சமைத்தல் எனப் பொருள் கொண்டு பக்குவப்படாத ஆன்மாக்களைப் பக்குவப்படுத்துவதுதான் சமயம் எனவும் கருத்துக்கூறும் அம்மையார் அவர்கள் ஆன்மா, இறைவன், மலங்கள் பற்றிய தத்துவத் கருத்துக்களை விளக்கும் வகையில் கட்டுரைகளை எழுதியுள்ளார். 'லக்ஸ்சிய கலாநிதி', 'உள்ளத்தில் ஒளிர்கின்ற ஒளி' போன்ற கட்டுரைகளில் தெளிவாக விளக்கியுள்ளார்.

மேலும், ‘சைவம் பிரகாசிக்க’ என்ற கட்டுரையில் “ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் பொருளை அறிந்து சிவபெருமான் ஆண்டவன், தான் அடிமை எனும் முறையை மனத்தகத்தே வழுவாமல் இருத்தி அதனை விதிப்படி மெய்யன்போடு செபித்துக் கொண்டுவரின் விறகினிடத்தே சிவபெருமான் பிரகாசித்து மும்மலங்களும் நீங்கும்படி ஞானானந்தத்தைப் பிரகாசிக்கத் தருவார்” போன்ற பல கருத்துக்களைக் கூறியுள்ளார். இத்தகைய கருத்து “இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்” என்ற நாவலரின் கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கதாகும் (கந்தவேல்,ச.,2012:11). கடவுள், புண்ணியமும் பாவமும், சுவர்க்கமும் நரகமும், மறுபிறப்பும் முத்தியும் போன்றன உண்டென்னும் உண்மையை ஒருபோதும் மறக்கலாகாது எனக் கூறும் அம்மையாரின் தத்துவப் பணிகளை நாமும் மறக்கலாகாது (உதயமலர்,மோ., 2016:478).

இவர் சைவ சமயம் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதற்காகக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றின் ஊடாக மக்கள் சமுதாயத்திற்குப் பல நற்கருத்துக்களை எடுத்துச் சென்றார். அவற்றுள் சில வருமாறு. மருள் நீக்கும் மருத்துவம், பயனிலை, மாங்கல்யம், கந்தபுராணம் காக்கும் கலாசாரம், பிரார்த்தனை உரை, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேர்த்திருப்பணி மலர், நயினை திருவிரட்டை மணிமாலை, வேலணையில் சைவம் வளர்ந்த வரலாறு, உலக இந்துமத மாநாடு போன்ற இந்து மதம் சார்ந்த கட்டுரைகளை எழுதினார் (கந்தவேல்,ச., 2012:12). உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும் நிலவு மெய்ந்நெறி சிவநெறி என வாழ்ந்த செல்வி வேதநாயகி அவர்கள் இந்து மதத்திற்கு ஆற்றிய பங்களிப்பு அளவிடற்கரியது.

பண்டிதை திருமதி பொன் பாக்கியம் சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட நாவலர், பெருமானின் வரலாற்றுப் பணிகளையும், தொடர்ந்து பண்டிதமணி ஐயாவின் ஆசியுடன் நூலாகவும் வெளியிட்டமை அம்மையாரின் சைவத்தமிழ்ப் பற்றினை வெளிப்படுத்துவதாக அமைந்தது. பண்டிதமணி ஐயாவிடம் கற்றுத்தேர்ந்தவராதலால் அவருடைய கருத்துக்களில் ஆழ்ந்து உள்ளத்தையும் உணர்வையும் நன்கறிந்து பண்டிதரின் உத்தம மாணவர்களில் தலை சிறந்தவர் என்ற உயர்வையும் பெற்றார். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பலகாலம் பணியாற்றினார். அவரது ‘நாவலர் சரித்திர ஆராய்ச்சி’ என்ற நூலினை வட்டுக்கோட்டை தமிழ்ச்சங்கம் வெளியிட்டு வைத்து அம்மையாரையும் கௌரவப்படுத்தியது (கலைவாணி,இ., 2010:168).

அம்மையாரின் இன்னோர் குறிப்பிடத்தக்க அன்புக்குரிய ஆசிரியர் அ.ஆறுமுகம் என அவர்கள் பக்தியுடன் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் அ.ஆறுமுகம் அவர்கள் பண்டிதை அம்மாவின் நூலுக்கு வழங்கிய சாற்றுகவியிலே “நாவலர்தம் வழிவந்த ஞானமமைந்த இவரினாலே மேவும்புகழ் பண்டிதமணியும், மிளிர்கள் பக்கத்தின் நிழலில் தேவவல்லிக் கொழுந்தாகிச் சீரார் பெண்மைநலம் விளங்கும் பாவை பொன் பாக்கியமெனும் பண்புமிகு பண்டிதையே” (கலைவாணி,இ.,2010:168) என்ற வரிகளில் அம்மையாரின் சீடத்துவம் - பண்பு நலம் - சைவ

வாழ்வு என்பனபற்றித் தெளிவுபடுத்தியுள்ளமை சிறப்பான சான்றாகும். ‘‘நாவலர்மீது அடியேன் கொண்ட ஆராமையினால் எழுந்த இக்கருவை நமது குருவின் பூரண உதவியைப் பெற்று முற்றுவிக்கத் தோன்றாத் துணையாய் நின்ற திருவருளைத் துதிக்கின்றேன்’’ என விதந்து போற்றும் திறன் ஆசிரிய மாணவ நல்லுறவு, நன்றியுணர்வு என்பவற்றின் பெருமிதமாக அமைந்த தெனலாம் (உதயமலர்,மோ.,2016:481).

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கற்றவர்க்கும் சாதாரண மக்களுக்கும் இலகுவில் விளங்கும்படியான சைவசமயக் கருத்துகளைச் சிவத்தமிழ்ச் செல்வி நூல்கள் வாயிலாக வெளியிட்டிருக்கிறார். கோயிற் கிரியைகளும் நோன்பும், நவராத்திரி, கந்தபுராணச் சொற்பொழிவு, மலேசியா சிங்கப்பூர்ச் சொற்பொழிவு, பத்துச் சொற்பொழிவு, ஈழத்துப் பிரபந்தங்கள் ஆராய்ச்சி கட்டுரை முதலான நூல்களைச் சைவப் பெருமக்கள் கற்றுணரும்படியாக வெளியிட்டிருக்கிறார். ‘‘இவரது சொற்பொழிவுகள் சுருக்கமும் நயமும் வாய்ந்தவை’’ இச்சொற்பாழிவுகள் அவ்வப்போது ஒலிப்பதிவு செய்யப்பட்டன. பின்னர் இவை, ‘மலேசியா சிங்கப்பூர் சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகள்’ என்ற பெயரில் நூல் வடிவாக்கப்பட்டு வெளிவந்து பல அறிஞர்களின் பாராட்டுகளைப் பெற்றன. இப்பாராட்டுகளில் ஒரு சிலவற்றை இங்கு நோக்குதல் மிகப் பொருத்தமாயிருக்கும் (நேர்காணல்: திருமுருகன்,ஆறு.).

‘‘சொற்பொழிவுகள் திரட்டாகிய இந்நூலைச் சைவ உலகிற்குச் சிவஞான தானமாக வழங்கியவர் சைவத் திருவாளர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.’’ இவ்வாறு பாராட்டுரை வழங்கியவர் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன மெய்கண்டதேவர் சந்தான ஞானபீடத்துக் குருமகா சந்நிதானம் சிவசிறீ ஞானப்பிரகாச தேசிய பரமாசார்ய சுவாமிகள் அவர்கள். மலேசியாவில் இவ்வம்மையார் பேசிய ‘கணபதி கடாட்சம்’ தொடங்கி ‘வாக்கிற்கு அருணகிரி’ வரையுள்ள 27 பேச்சுகளும் இன்று நூல் வடிவில் வரவிருப்பது மகிழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமில்லை. சமய உண்மைகளை அறிய விரும்புவோருக்கு இந்நூல் ஒரு கையேடுபோல உதவும். இவ்வாறு பாராட்டுரை வழங்கியவர் மலேசியாச் சர்வகலாசாலைப் பேராசிரியர், கலாநிதி, புலவர் ப. அருணாசலம். இவரின் சொற்பொழிவுகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, பின் நூல் வடிவில் ‘பத்துச் சொற்பொழிவுகள்’ என்ற பெயரில் அச்சாகி வெளிவந்துள்ளன. இந்நூலைப்பற்றி அறிஞர்கள் தந்த கட்டுரைகள் பலவற்றில் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

அவரது இரண்டாவது தொகுப்பில் பத்துக் கட்டுரைகளே இடம்பெற்றுள்ளன. பத்தும் பக்தி மணம் கமழும் அரிய சம்பத்து. இத்தகைய விலைமதிக்க முடியாத முத்துகள் போன்ற பத்துக் கட்டுரைகள் தாங்கிவரும் இவ்வரிய நூல் ‘‘சைவப் பெருமக்கள் இல்லத்தில் மாத்திரமன்றி உள்ளத்திலும் வைத்துப் போற்றக்கூடிய நூலாகத் திகழ்கிறது.’’ இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் தமது ஆசியுரையில் பாராட்டியிருக்கிறார்கள் (திருமுருகன், ஆறு., 2009:334).

வரம்பு கடவா மனத்தெழும் தெய்வீக அடிப்படையிலிருந்து மெழுகுபோல் உருகி வெளிவரும் சொற்றொடர்கள் சுவை பொருந்தியன. இவரின் குறுஞ் சுவடிகள் தமிழறிந்தோர் ஒவ்வொருவரின் கைகளிலும் மிளிர வேண்டும். தமிழைப் பிழையின்றி எழுத விரும்புவோர் இவற்றைப் பயன்படுத்தலாம். இவ்வண்ணம் பாராட்டுபவர் கிள்ளான்-மலேசியா அன்பர் ஏ. ஆறுமுகனார்.

மேலும், அருள் ஒளி என்ற பெயரில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எழுதிய ‘சைவ சமயமே உலகின் மேன்மை பெற்றது’ என்ற கட்டுரையில், சைவம் என்பது எமது மனத்திலும் வாழ்விலும் உயர்நிலையைக் காட்டவேண்டுமானால் அனைவருக்கும் தொண்டு மனப்பான்மை அமைய வேண்டும். தொண்டு என்பது தன்னையும் வாழ்வித்து மற்றவர்களையும் வாழ்விக்கும் ஒரு தூயநெறியாகும். தொண்டு செய்வோர் மனத்தில் தூய்மையும் அமைதியும் இடம்பெறவேண்டும். உண்மை, பொறுமை, நேர்மை, தெய்வ நம்பிக்கை என்பனவற்றை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்று எழுதியதற்கு இணங்க, பல தொண்டுகள் செய்து பெண்குலத்திற்கே பெருமை தேடித்தந்த தெய்வமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் (நேர்காணல் : திருமுருகன்,ஆறு).

அன்பு நெறி மலர்-11 இதழ் 10இல் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எழுதிய ‘என்கடன் பணி செய்து கிடப்பதே’ என்ற கட்டுரையில், “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம். மனிதனுக்கு எத்தனையோ கடமைகள் உண்டு. அவற்றில் பிறருக்குத் தொண்டு செய்யும் கடமைதான் தெய்வநிலைக்கு உயர்த்த வல்லது” என்றார் (சுவர்ணா,ந.,2011:132).

1978இல் இவரின் ‘கந்தபுராணச் சொற்பொழிவு’ நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. பல சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார். இது பல்கலைக்கழக மாணவர்கள், சைவ சமய ஆராய்ச்சி வல்லுநர்கள், திருக்கோயில்களை நெறிப்படுத்துபவர்கள் படித்துப் பயன் அடையக்கூடிய நூலாகும். அன்னை அவர்களின் முயற்சியால் அரும் பெரும் நூல்கள் பல அவரது மணிவிழா மலராகவும், பவளவிழா மலராகவும், அமுதவிழா மலராகவும் அறக்கொடை விழா நினைவாகவும் வெளிவந்தன. இதில் சிவத்தமிழ் இன்பம், சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், இலண்டனில் ஏழுவாரம், வாழும் வழி, நளவெண்பா மீள்பதிப்பு, சைவசமயக் கிரியைகள் எனப் பட்டியல் நீண்டு செல்லும் (சுவர்ணா,ந.,2011:137).

1989ஆம் ஆண்டு முரசொழி வார இதழில் தொடர் கட்டுரைகளாக இவர் எழுதிய 12 ஆன்மிகம் சார்ந்த ஒழுக்கவியல் உரைகள் நூல் உருவாக்கப்பட்டு ‘வாழும் வழி’ என்ற தலைப்பில் சென்னை மணிமேகலைப் பிரசுரமாக 2002இல் வெளியிடப்பட்டது. இதில் 2004இல் மணிமேகலை பிரசுரமாக வந்த அன்னை எழுதிய ‘பெண்மைக்கு இணையுண்டோ’ என்பது மிகச்சிறந்த நூல். இத்தொகுப்பில் சங்க இலக்கியங்கள் தொடக்கம் பாரதி பாடல்கள், பிற்கால பெண்கள் பற்றிய வரலாறுகள் காலப்பகுதியிலே தமிழ் இலக்கியங்கள் சித்தரித்துக் காட்டும் மாட்சிமை மிக்க பெண்களைச் சிவத்தமிழ்ச் செல்வி கூர்ந்து நோக்கியிருந்தார்.

இந்நூலின் ஒன்பது இயல்களிலும் சங்ககாலப் பெண்மை, வள்ளுவர் காட்டிய பெண்மை, இளங்கோ காட்டிய பெண்மை, சேக்கிழார் காட்டிய பெண்மை, கச்சியப்பர் காட்டிய பெண்மை, கம்பர் காட்டிய பெண்மை, பரஞ்சோதி காட்டிய பெண்மை, பாரதி காட்டிய பெண்மை, பிற்காலப் பெண்மை என்ற ஒழுங்கில் இலக்கிய நயம் மிக்கவும் அறவியல் சார்ந்ததுமான பார்வையில் பெண்மையின் பெருமை பற்றிப் பேசியிருந்தார் (செல்வமனோகரன். தி., 2015:49). "இவரது சொற்பொழிவுகள் சுருக்கமும் நயமும் வாய்ந்தவை." இச் சொற்பொழிவுகள் அவ்வப்போது ஒலிப்பதிவு செய்யப்பட்டன. பின்னர் இவை, 'மலேசியா சிங்கப்பூர் சுற்றுப்பிரயாணச் சொற்பொழிவுகள்' என்ற பெயரில் நூல்வடிவாக்கப்பட்டு வெளிவந்து பல அறிஞர்களின் பாராட்டுகளைப் பெற்றன. இப்பாராட்டுகளில் ஒரு சிலவற்றை இங்கு நோக்குதல் மிகப் பொருத்தமாயிருக்கும். (நேர்காணல்:திருமுருகன்,ஆறு.).

'தீந்தமிழ் இன்பம்' என்ற தலைப்பில் ஒரு நூல் கனடாவில் மே 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இவ்வாறாக இவரது நூல்கள் அனைத்தும் இந்துப் பண்பாட்டு சிந்தனைகள் பறை சாற்றுகின்றன. அடுத்து பத்மா சோமகாந்தன் அம்மையார் இந்து சமூகத்திற்கும் தமிழ் உலகிற்கும் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவை. இவ்வகையில், ஈழத்து மாண்புறு மகளிர், ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள், நெஞ்சுக்கு நிம்மதி, பக்த அனுமன் கதை, புதிய வாய்ப்புகள், கடவுளின் பூக்கள், வேள்வி மலர்கள், இற்றைத் திங்கள், பாராமுகங்கள் சில பார்வைகள் எனும் நூல்களை எழுதியவர். இவரது சேவையினைப் பாராட்டும் நோக்கில் இலக்கிய கலாநிதி, இலக்கியக் கலாவித்தகி, செஞ்சொற்செல்வி எனும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கலாநிதி கலைவாணி இராமநாதன் அம்மையார் அவர்கள் ஈழத்தில் சைவசித்தாந்தத்தை வளர்ப்பதிலும், பயிற்றுவிப்பதிலும் மிகச்சிறந்த ஆளுமை படைத்தவர். இவர் ஏழு ஆய்வு நூல்களை எழுதி இலங்கை வாழ் இந்துக்களுக்கு முன்னோடியாக விளங்கியவர். இவர் எழுதிய இலக்கியங்களில் வேத பாரம்பரியமும் சைவ சித்தாந்தமும், இந்து தர்மமும் வர்ண தர்மமும், சைவ சித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள், அஸ்டுப் பிரகடன நூல்களில் சைவசித்தாந்த கோட்பாடும் அறவியல் சிந்தனைகளும், இந்துத் தத்துவத்தில் கடவுள் கொள்கை, சைவசித்தாந்தம் மெய்ப்பொருளியல், இந்து சமுதாய செல்நெறியில்…? இந்து அறவியல் போன்றனவும் அடங்கும். இவர் இலங்கை, இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் பல சமர்ப்பித்து இந்து சமயத்தை உலகறியச் செய்தவர் (நேர்காணல்:கலைவாணி இராமநாதன்).

மேரு புத்திரி அம்மையார் அவர்கள் அருளிச் செய்த நூல்கள் பல ஆகும். அதில் திருஆலவாய்ப் பதிகங்களில் மொத்தம் 26 பதிகங்கள் அமைந்துள்ளன. இவற்றுல் 13 பதிகங்களுக்குத் தலைப்பிட்டுப் பாடல் அருளப்பட்டுள்ளதைப் காணலாம். வட ஆலவாயும், தென் ஆலவாயும், பாதாதி கேசம், ஆலவாயும் கேவலத்துறையும், ஆலவாய், தேசிக விருத்தம் மதுரை மீனாட்சி, மதுரை மங்களாசனம், மெய்கண்ட மதுரவிலாசம், சிக்கிய விருத்தம், சிந்தை விருத்தம்,

சிவானுபவம், பிட்டுக்கு மண் சுமந்தார் ஆவணி மூலம், ஆலவாய் அந்தாதி, மதுரை ஆகிய தலைப்புக்களே இவை ஆகும். மேலும், இவர் சைவ சித்தாந்த சிந்தனைகளை வெளிப்படுத்தும் வகையில் உரைநடையாகவும் பாடல்களாகவும் எழுதிய இருபது நூல்களை 09.02.2017 அன்று தைப்பூச நன்னாளில் சிதம்பரம் பொன்னம்பலத்தில் நடராஜ திருவடியில் வைத்து வெளியிட்டார்.

அவை திருவிழாக்களும் சத்திநிபாதமும், ஞானபானுவாம் ஞானாசிரியர், காரை தீபம் தந்த ஞானதீபம், குருவருளும் சிவஞானமும், சிவானுபவம், சைவ சமயச் சிறப்பு, பதி ஞானமும் கைலாய யாத்திரையும், சிவபூமியாம் இலங்கை, பொய்கெட்டு மெய்யானார், மேன்மைகொள் சைவநீதி, மதுரவிலாசம், ஆலவாய்க் கண்ணி, சோமசுந்தர ஆலாசியம், திருஆலவாயிரட்டை மணிமாலையும் பதிகங்களும், வியன் தில்லைச் சிதம்பரம், தில்லைச் சிதம்பர விலாஸம், கோயில் ஒருபா ஒருப∴தும் பதிகங்களும், திருவருட் குறள், கொடிக்கவி, பூரணக்கண்ணி போன்றனவாகும். மேருபுத்திரியின் சைவசித்தாந்த சிந்தனைகளைக் கொண்டு விளங்கும் இந்த நூல்கள் சைவசமயத்துக்கு அவர் தந்துள்ள கொடையாகும்.

பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவரது பணியில் இந்துப் பண்பாட்டை வளர்ப்பதை முக்கியமான ஒன்றாகக் காணலாம். சரவணை தெங்கங்குளம் நாச்சியார் கோவிலுக்கு மீனாட்சி அம்மன் திருவூஞ்சல் பாடியுள்ளார். வேலணை மேற்கு பெரிய புலம் மஹா கணபதிப் பிள்ளையாருக்கு பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இராமநாதன் கல்லூரியில் அமர்ந்து அருள்புரியும் இராமநாதேஸ்வரருக்கு திருவூஞ்சல் பாடியுள்ளார். தெல்லிப்பளை காசிப்பிள்ளையாருக்கு திருவூஞ்சல் பாடியுள்ளார். கட்டுடை கெலன் காமம் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு திருவூஞ்சலும் கனடா வோசிங்டன் முருகன், விநாயகர் ஆலயத்துக்குத் திருவூஞ்சலும் பாடியுள்ளார்.

ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில் முத்துக்குமார சுவாமி ஊஞ்சல், இணுவில் கௌரிஅம்மன் திருவூஞ்சல், இணுவில் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஊஞ்சல், நியூஜோர்க் சித்திவிநாயகர் ஊஞ்சல், தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஊஞ்சல், சாந்தியடியானே சரணம் பக்திப் பாடல், தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் பள்ளி எழுச்சி, இணுவில் கௌரி அம்மன் பள்ளி எழுச்சி, ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் குடமுழுக்குப் பாமாலை, கோண்டாவில் மகா கணபதிப் பிள்ளையார் குடமுழுக்குப் பாமாலை, இணுவில் திருப்பதி வெங்கடேஸ்வரர் குடமுழுக்குப் பாமாலை, இணுவில் கௌரிஅம்மன் பிள்ளைத்தமிழ், ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ், விநாயகர் கீர்த்தனைகள், கீர்த்தனைகளும் பதங்களும், பக்திப்பாமாலை தொகுப்பு, இராமநாதன் சமாதி ஆலய வரலாறு போன்றவற்றையும் எழுதியுள்ளார் (நேர்காணல்: வைகுந்தம் கணேசபிள்ளை). இவ்வாறாக இந்துப் பண்பாட்டை வளர்க்கும் இந்நூல்கள் அனைத்தும் சைவப் பெருமக்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டியவையாகும்.

**முடிவுரை**

யாழ்ப்பாணத்து இந்துப் பண்பாட்டு வளர்ச்சியானது மிக நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டதாகும். இதுவரை வெளிவந்த ஆய்வுகள், கட்டுரைகள், கருத்தாக்கங்கள்,

கவிதைகள் எனப் பல ஆவணங்களிலும் கல்வி, கேள்வி, புலமையில் சிறந்த ஆய்வாளர்களாக, சமய ஞானியராக, சமய பிரசங்கராக, சொற்பொழிவாளராக, ஆன்மிக சிந்தனையாளராக ஆண்மக்களே பெரும்பாலும் சமய இலக்கிய வரலாற்று நூல்களிற் பேசப்பட்டுள்ளனர். இத்தகைய வரலாற்று ஆவணப்பதிவுகளில் ஈழத்து சைவ கலாசார ஆன்மீக அறிவுத்துறை வளர்ச்சியில் நாட்டம்கொண்ட பல்வேறு நிலையிலும் பெண்மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

இவ் ஆய்வு நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றனவற்றின் மூலம் இந்து மதத்தை வளர்ச்சி பெற செய்த யாழ்ப்பாணப் பெண்களின் ஆளுமைகளைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. இந்துநாகரிகம் சார்ந்த இவர்களது பணிகளால் முழு நாடும் நலமடைந்ததுடன் மேற்குலக நாடுகளிலும் மற்றும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் அவர்களது பெயர்கள் நன்கு நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை நூற்பட்டியல்**


ஆறுமுகநாவலர்., 1872, யாழ்ப்பாணச் சமயநிலை, சைவவித்தியா விருத்திச் சங்கம் வெளியீடு, கொழும்பு.

கணபதிப்பிள்ளை, சி., 1978, யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம், தலைக்குடுமி புத்தகசாலை, கன்னாகம்.

சம்பந்தன், ஐ.தி., 2011, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்வியற் பணிகள், சைவ முன்னேற்றச் சங்கம், லண்டன்.

செல்வமனோகரன், தி., 2015, இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - ஓர் ஆய்வு, அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா வெளியீடு, கொழும்பு.

தங்கம்மா, அ., 1975, கந்தபுராணச் சொற்பொழிவுகள், திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

தங்கம்மா, அ., 1985, வேதாந்தம் தெளிவாம் சைவசித்தாந்தம், மணிவிழாக் குழு, தெல்லிப்பழை.

திருமுருகன், ஆறு., 2011, சைவ சமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு, செஞ்சொற் செல்வம், பொன்விழா சிறப்புமலர், அகில இலங்கை இந்து மாமன்றம்.

பத்மா, சோ., 2012, மாண்புறு மகளிர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

மகாலிங்கசிவம், ம.பா., 2011, ஈழத்தின் முதற்பெண் கவிஞரும் முதற்பெண் மொழிபெயர்ப்பாளருமான பண்டிதை பத்மாசனி அம்பாள், சர்வதேச எழுத்தாளர் மாநாடு.

மனோன்மணி, ச., 2000, புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்து அந்தாதி, ஸ்ரீமதி பத்மாசனி அம்பாள், உரை விளக்கம், பருத்தித்துறை.

மேருபுத்திரி., 2017, காரைதீபம் தந்த ஞானதீபம், மருத்துவர் மயூரநாதன், லண்டன்.

விக்னேஸ்வரி, ப., 2010, இலங்கையின் சமய சமூக வளர்ச்சியில் முன்னோடிகளான சில பெண்கள், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.

# மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடும் மாதா வழிபாடும் : வந்தாறுமூலை கண்ணகி அம்மன் ஆலயத்தையும் தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

**Anthonystaniskilas Amaliny**

Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

anthonyamalini@gmail.com

**R. Sahayaseelan**

Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

sahayaseelanr@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

தாய்த் தெய்வ வழிபாட்டு மரபில், இந்து சமயத்தில் கண்ணகி வழிபாடும் கிறிஸ்தவ சமயத்தில் மாதா வழிபாடும் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்றன. அந்தவகையில், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்ணகி அம்மன் வழிபாட்டுத் தலங்களில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயமும் மாதா வழிபாட்டில் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயமும் காணப்படுகின்றன. இவ்விரு தாய்த் தெய்வ வழிபாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமைப் போக்கைக் கண்டறிவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அளவு மற்றும் பண்பு ரீதியிலான தகவல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், மற்றும் இணையத்தளத் தரவுகள் என்பன இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது விபரண அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்** : வழிபாடு, தாய்த் தெய்வம், சமயம், ஒற்றுமை, பெண்.*

## அறிமுகம்

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வியல் செயற்பாட்டிலும் 'சமயம்' என்பது முக்கியமான ஒரு சக்தியாக விளங்குகின்றது. இத்தகைய சமயங்களின் ஓர் அங்கமாக 'வழிபாடு' சிறப்பிடம் பெறுகின்றது. ஏனெனில், சமயங்களின் தோற்றம் முதல் இன்றுவரை அவை நிலைத்திருப்பதற்கு வழிபாடுகளே பிரதான பங்கினை வகிக்கின்றன. அந்தவகையில், கிறிஸ்தவ சமயத்திலும் சரி, இந்து சமயத்திலும் சரி வழிபாடு என்பது பிரதான இடத்தினையே வகிக்கின்றது. ஏனெனில், இவை எந்தவொரு மதத்திற்கும் விதிவிலக்கானவை அல்ல.

இத்தகைய வழிபாட்டு முறைகளுள் பெண் தெய்வ வழிபாடான, தாய்த்தெய்வ வழிபாடானது பிரதான இடத்தினை வகிக்கின்றது. இத்தகைய தாய்த்தெய்வ வழிபாட்டில், இந்துசமயத்தில் ‘கண்ணகி அம்மன்’ வழிபாடும், கிறிஸ்தவ சமயத்தில் ‘மாதா’ வழிபாடும் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய தாய்த்தெய்வ வழிபாடுகளின் பரம்பலின்போது, அவை இலங்கையிலும் தமிழ் மக்களிடையே பரவி, இன்றுவரையிலுமாக சிறப்பிடத்தினைப் பெறுகின்றன. அதிலும் குறிப்பாக, இலங்கைத் திருநாட்டின் கிழக்குக் கரையோரத்தின் மையமாகத் திகழும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இவற்றின் பரவல் தமிழ் மக்களிடையே தனித்துவமான போக்கினையே கொண்டுள்ளன.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் சக்தி வழிபாடுதான் இங்கு பெரிதும் கால்கொண்டு வளர்ந்து வருவதுள்ளது. பத்திரகாளி, மாரியம்மன், பேச்சியம்மன், கண்ணகியம்மன், திரௌபதியம்மன், கடலாட்சியம்மன் என்றவாறாக மட்டக்களப்பில் காணப்படும் அம்மன் பெயர்கள் யாவும் உமையம்மனின் வெவ்வாறான தோற்றமும் அம்சமுமான ஒரே தெய்வப் பெயர்கள் ஆகும். அத்தோடு, இப்பெயர்களால் குறிப்பிடப்படும் கோவில்கள் யாவும் அன்னை பராசக்தியாகிய ஒரே அம்பிகையின் திருக்கோவில்களே என்றும் மட்டக்களப்பு மக்கள் கருதுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு அம்மன் காவியங்கள், சிந்து, குளுர்த்தி முதலான பாடல்கள் பலவற்றிலும் நிறைந்த ஆதாரங்கள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மக்களின் பண்பாட்டு வாழ்க்கை முறையிலும் சமயம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அந்தவகையில், இந்து மதத்தைப் பொறுத்தவரையில் காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்த இந்து மக்களது வழிபாட்டு முறைகளையும், ஆதிகாலம் முதல் இங்கு வாழ்ந்து வருகின்ற இலங்கைத் தமிழ் மக்களதும் வழிபாட்டு முறைகளையும் கொண்டு இங்கு நிலைபெற்றுக் காணப்படுகின்றது. இங்கு இந்துக்கள் எவ்வித வேறுபாடுமின்றி, எல்லா இந்துத் தெய்வங்களையும் வழிபாடு செய்கின்ற ஒரு போக்கினைக் காணக்கூடியதாகவுள்ளது. அத்தோடு, பொதுவாக இப்பிரதேசத்தில் ஒவ்வொரு சாதியினருக்குமென, ஒவ்வொரு சிறப்பான குலதெய்வ வழிபாட்டு முறைமையும் காணப்படுகிறது. இக்குலதெய்வ வழிபாட்டு முறைகளில் இங்கு தாய்த்தெய்வ வழிபாடே முதன்மைப்படுத்தப்பட்டு நிற்கின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் தாய்வழிக் குடியுரிமையும் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தாய்வழிக் குடியுரிமையினைக் கொண்ட மட்டக்களப்பில், இந்து மக்களின் தாய்த்தெய்வ வழிபாட்டு முறைகளுள் கண்ணகி வழிபாடே சிறப்பிடம் பெறுவதாக உள்ளது. இதற்குக் காரணம் இங்குள்ள மக்கள் கண்ணகியைத் தாயாகவும் பத்தினியாகவும் கருதி வழிபடுவதாகும்.

தமிழிலே போற்றப்படும் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் தலைவியே கண்ணகி ஆவாள். சோழ நாட்டிலே பிறந்த கண்ணகி பாண்டிய நாட்டில் வீர கற்பரசியாகி, சேர நாட்டில் பத்தினித் தெய்வம் எனப் போற்றப்பட்டாள். இந்தியாவில் கண்ணகி, சேரன் செங்குட்டுவன் காலத்தில் சேர சோழ பாண்டிய நாடுகளில் கோயில்கள் எழுப்பப்பட்டு வழிபாட்டுக்குரிய தெய்வமாக விளங்குகின்றாள். இலங்கையில் காணப்படும் பெண் தெய்வ

வழிபாடுகளில் கண்ணகி வழிபாடு பிரசித்தமானதாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கஜபாகு என்ற சிங்கள மன்னனால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட கண்ணகி வழிபாடானது, இலங்கையில் இந்து மற்றும் பௌத்த சமயங்களில் பொது வழிபாட்டு மரபாக விளங்குகின்றது. கண்ணகி வழிபாடு இரு சமயங்களுக்கிடையேயும் சடங்கு முறைகளினால் வேறுபட்டு இருப்பினும், பெரிதும் போற்றப்படும் வழிபாட்டு முறையாகும். இவ்வாறே இலங்கை முழுவதும் கண்ணகி வழிபாடு செல்வாக்குப பெற்றுக் காணப்படுகிறது.

இந்துக்களின் சமய வழிபாட்டு முறைகளைப் போன்றே இங்கு வாழும் இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த சமய வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன. கிறிஸ்தவ சமயத்தைப் பொறுத்தவரையில், அது மேற்கத்தேயத்தில் தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளது. இருந்தபோதிலும், அது கீழைத்தேய நாடுகளில் அம்மக்களின் பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்து, அவர்களது வழிபாட்டு முறைகளை உள்வாங்கி வளர்ச்சி அடைந்து வந்துள்ளதனை காண்கின்றோம். அந்தவகையில், இலங்கையிலும் குறிப்பாக மட்டக்களப்பிலும் இத்தகைய போக்குத் தென்படுகின்றது. இத்தகைய கிறிஸ்தவ மத வழிபாட்டிலும் கிறிஸ்தவர்கள் அன்னை மரியைத் தாயாகவே கருதி வழிபடுகின்றனர். இங்கு அன்னையிடம் முன்வைக்கும் விண்ணப்பங்கள் அவளின் ஊடாக இறைமைந்தனிடம் சென்று நிறைவேற்றப்படும் எனும் நம்பிக்கையின் அடிப்படையில் மாதா வழிபாடு இடம்பெறுகின்றது.

கண்ணகி வழிபாடு மற்றும் மாதா வழிபாடு பற்றிய ஆய்வுகளும், இவை இரண்டிற்கும் இடையிலான ஒப்பீட்டு ரீதியான ஆய்வுகளும்இடம்பெற்ற போதிலும், வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும் தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயத்திற்கும் இடையிலான ஒப்பீட்டு ரீதியான ஆய்வானது இதுவரை இடம்பெறவில்லை. எனவேதான், வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயத்தையும் தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயத்தையும் ஆய்வுப் பிரதேசங்களாகக் கொண்டு, இவ்விரு ஆலயங்களிலும் இடம்பெறும் வழிபாடுகளினை ஒப்பீடு செய்வதாக இவ்வாய்வு காணப்படுகிறது.

வந்தாறுமூலை கண்ணகி அம்மன் ஆலய வழிபாட்டிற்கும், தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலய வழிபாட்டிற்கும் இடையே ஒற்றுமைப் போக்குக் காணப்படுகின்றனவா என்பதே இவ்வாய்வுப் பிரச்சினையாகும். இவ்வாறிருக்கையில் இவ்விரு ஆலய வழிபாட்டு முறைகளுக்கும் இடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து, வேற்றுமைகள் காணப்பட்டாலும்கூட, மிகக் கூடுதலான அளவில் ஒத்த போக்குடைய தன்மைகளே காணப்படுகின்றன என்பதை முன்வைப்பதே இவ் ஆய்விற்குரிய கருதுகோளாக அமைகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

சுகுமார், பால., என்பவரால் (2009) இல் எழுதப்பட்ட **“ஈழத்தில் கண்ணகி கலாசாரம்”** எனும் நூலானது, கண்ணகியின் ஆரம்ப கால வரலாறு, கண்ணகி ஆலயத்தின் தோற்றம், வளர்ச்சி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதனைக் காணலாம்.

கமலநாதன்,செ., (2007), **“இந்துப் பண்பாட்டு வரலாறு”** எனும் நூலில் சிந்துவெளி நாகரிக காலத்தில் காணப்பட்ட தாய்த்தெய்வ வழிபாடு பற்றியும், அதாவது மனிதன்

தொடக்கத்தில் தரையைப் பெண்ணாக வழிபட்டான் என்றும், அவ்வழிபாடே தாய்த்தெய்வ வழிபாடு என்றும் இத்தாய்த்தெய்வ வழிபாடே பிற்காலத்தில் சக்தி வழிபாடாக வளர்ச்சியடைந்து என்றும் வேதகாலத்தில் காணப்பட்ட பெண் தெய்வங்கள் பற்றியும் கூறியுள்ளார்.

வானவாமலை,நா., (1992)., **"தமிழர் வரலாறும் பண்பாடும்"** எனும் நூலில் பெண்தெய்வ வழிபாடு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆரம்ப காலத்தில் இயற்கை அம்சங்கள் அனைத்தையும் அக்கால மனிதன் பெண்ணாகவே நோக்கினான் என்பது பற்றியும், தாய்த்தெய்வ வழிபாடு முதன்மை பெற்றிருந்தமை பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெங்கடசாமி நாட்டார்,ந.மு., (1942), **"சிலப்பதிகாரம்"** எனும் நூலில் கண்ணகியின் இல்லற வாழ்வு, பிரிவு, கோவலன் மாதவியுடன் சேருதல், மீண்டும் கண்ணகியுடன் சேருதல், கொலை செய்யப்படுதல், கண்ணகி தெய்வமாக்கப்படுதல் போன்ற விடயங்களைக் கூறியுள்ளார்.

பத்மநாதன்,சி., (1994), **"இலங்கையின் இந்து கோயில்கள்"** எனும் நூலில் கண்ணகி அம்மன் ஆலயப் பரவலாக்கம் தொடர்பான தகவல்களைக் கூறியுள்ளார்.

ஈசன்,எஸ்., என்பவரால் எழுதப்பட்ட **"இந்து ஒளி"** எனும் சஞ்சிகை, ஈழத்தில் கண்ணகி அம்மன் வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றைக் கொண்டமைந்து காணப்படுகின்றது. அதாவது, கண்ணகி திருமணம், மதுரையினை எரித்த வரலாறு, இலங்கைக்கு வந்தமை தொடர்பான வரலாற்றினைக் கொண்டதாக காணப்படுகிறது.

நடராசா,எவ்.எக்ஸ்.சி., (1998), **"மட்டக்களப்பு மான்மியம்"** எனும் நூலில் மட்டக்களப்பின் சரித்திரத்தைக் கூறுகின்றார். இதில் மட்டக்களப்பு வாழ் மக்களின் பண்பாட்டு முறைகளும், வழிபாட்டு முறைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மேலும், மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு பற்றியும் விளக்கியுள்ளதனைக் காணலாம்.

வெல்லவூர்க்கோபால், (2018), **"கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு - சிறப்புப் பார்வை"** எனும் நூல், வருடந்தோறும் வைகாசித் திங்களில் 60க்கும் மேற்பட்ட கிராமங்களில் கண்ணகித் தெய்வத்திற்கு ஒருசேர விழா (சடங்கு) எடுத்துக் கொண்டாடப்படுவதை தெளிவுபடுத்துகின்றது.

கந்தையா, வி.சீ. (2002). **"மட்டக்களப்புத் தமிழகம்"** எனும் நூலில், கண்ணகி வழிபாடு எனும் கட்டுரையில் மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டு வரலாறு பற்றியும். மட்டக்களப்புப் பகுதியிலே அம்மன் கோயில்களிலே நடைபெறும் பூசையினைச் 'சடங்கு' என்று கூறுதல் வழக்கம், அதனால் கண்ணகி விழாவும் மட்டக்களப்புத் தமிழில் "கண்ணகையம்மன் சடங்கு" என்றே அழைக்கப்பெறும் எனக் கண்ணகி அம்மன் சடங்கு பற்றிக் கூறியுள்ளார்.

அருட்தந்தை ஜோன் டபிள்யூ. லான்கே, **"Palm Fringed Coast"** எனும் நூல், போர்த்துக்கல் நாட்டிலிருந்து கிறிஸ்தவப் பாதிரிமார் மட்டக்களப்பிற்கு

வந்தபோது இருந்த இப்பிரதேச நிலைமைகள், தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட பணிகள், இங்கு அமைக்கப்பட்ட கத்தோலிக்க ஆலயங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் காலி மேற்றிராசனத்திற்கும் மட்டக்களப்புத் திருச்சபைக்கும் இருந்த தொடர்புகள், கிழக்கிலங்கைக்கெனத் தனியாகப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட திருமலை மட்டக்களப்பு மறைமாவட்டம் தொடர்பான தகவல்கள் எனக் கிழக்கில் கத்தோலிக்க மத வரலாற்றினை விளக்கி நிற்கிறது.

"எழுவான்", (2012), **'மட்டக்களப்பு புதிய மறைமாவட்ட நினைவு மலர்'** எனும் சஞ்சிகையில், மட்டக்களப்பு மண்ணிலே கத்தோலிக்கத் திருமறையின் ஆரம்பம் பற்றியும், அதாவது போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கானது மட்டக்களப்பில் நிலவியிருந்தமையையும், பின்னர் ஒல்லாந்தர் ஆட்சியின்போது ஓரளவு வளர்ச்சி குன்றிய நிலையிலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது பெருவளர்ச்சியடைந்த மதமாக உருவாக்கம் பெற்றமையையும் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். மேலும், மட்டக்களப்பிலுள்ள ஆலயங்களின் வரலாறு, வழிபாடு என்பன பற்றியும் இந்நூல் விளக்குகிறது. இத்துடன் மட்டக்களப்பிலுள்ள மாதா ஆலயங்களில் ஒன்றான தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலய வரலாறு மற்றும் வழிபாடு பற்றியும் இவ்வாலயத்தின் சிறப்புப் பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது.

இரத்தினராஜா,ஜே.எச்., (2018), **"தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலயம் - நூற்றாண்டு நினைவு மலர்"** எனும் நூலானது, கிழக்கு மண்ணில் கத்தோலிக்கத் திருச்சபை பரவிய விதம் குறித்தும், தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலயத்தின் வரலாறு மற்றும் அங்கு இடம்பெறும் அனைத்து விதமான செயற்பாடுகள் குறித்தும் விளக்கி நிற்கின்றது.

மகேஸ்வரன்,பி., (2003), **"மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு"** எனும் நூலில், "மட்டக்களப்பின் கண்ணகி அம்மன் வழிபாட்டு முறைகள்" எனும் கட்டுரையில், கண்ணகி வழிபாடு மட்டக்களப்பின் பிரதான தெய்வ வழிபாடாகவும், ஒரு புராதன வழிபாடாகவும் உள்ளதெனக் கூறப்பட்டுள்ளது.

சுகந்தி,சு., (2006), **"மட்டக்களப்பு மாவட்டக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும்"** எனும் நூலில், மட்டக்களப்பில் சமயநிலை பற்றியும், பெண்தெய்வ வழிபாடு பற்றியும் குறிப்பிட்டு, அதில் கண்ணகி வழிபாடு பற்றியும் அவற்றின் சடங்குகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.

தங்கேஸ்வரி, (2008), **"கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்"** எனும் நூலில் ஈழத்தில் பத்தினி வழிபாட்டுப் பாரம்பரியங்கள் பற்றியும், பத்தினி வழிபாடு என்பது கண்ணகி வழிபாட்டினையே குறிக்கும் எனவும், பத்தினி வழிபாடு தொடர்பான சடங்குகளையும், பாரம்பரியங்களையும் பற்றி விபரித்துள்ளார்.

சிவசுப்பிரமணியம்,வ., (2007), **"இந்து ஒளி அகில இலங்கை இந்துமாமன்றம் பொன்விழாச் சிறப்பு மலர்"** என்னும் சஞ்சிகையில் **"மட்டக்களப்புத் தமிழகத்தில் கண்ணகி**

**வழிபாட்டு மரபுகள்''** என்னும் கட்டுரையில், மட்டக்களப்பு மக்களிடையே வழங்கும் சைவம் பழைய மரபைச் சார்ந்தது எனவும் இவர்கள் கடைப்பிடிக்கும் சடங்கு முறையான வணக்கமும் மிகப்பழையது எனவும் ஆலயங்கள் தோன்றுமுன்னரே சடங்கு முறையான வழிபாடு தமிழரிடையே தோன்றிவிட்டது எனவும் மட்டக்களப்பு இந்து கலாசார வரலாற்றில் கண்ணகி வணக்கம் முக்கிய இடம் வகிக்கிறது எனவும் கூறுகின்றார்.

**தாய்த்தெய்வ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்**

ஆரம்ப கால மனிதன் இயற்கையின் சீற்றங்களுக்கு அஞ்சி, அதனை எதிர்த்து எதுவும் செய்ய இயலாது என எண்ணியபோது, 'வழிபாடு' என்ற ஒன்றைத் தோற்றுவித்தான். மேலும், ஒரு பெண், மனித உயிரைத் தன் கருவிலே சுமந்து உலகிற்கு வழங்கும் ஆற்றலைக் கண்ட புராதன கால மக்கள் வியந்து, நம்பிக்கை கொண்டதன் அடிப்படையில் பெண்ணின் தாய்மை என்பது வழிபாட்டிற்குரியதாக மாறி, தாய்த்தெய்வ வழிபாடு தோற்றம் பெற்றுப் பரவத் தொடங்கியது (கஜலட்சுமி,மு., 2022).

இத்தாய்த்தெய்வ வழிபாட்டில், இந்துசமயத்தில் 'கண்ணகி அம்மன்' வழிபாடும், கிறிஸ்தவ சமயத்தில் 'மாதா' வழிபாடும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவர்கள் தெய்வமாக்கப்பட்டதற்கான முக்கிய காரணம் அவர்களிடம் காணப்பட்ட தூய கற்பே ஆகும். இலங்கைக்குக் கண்ணகி வழிபாட்டை இலங்கை அரசனான கயவாகுவும், மாதா வழிபாட்டைப் போர்த்துக்கேயப் படையினருமே கொண்டு வந்தனர். மேலும், மட்டக்களப்பில் தாய்த்தெய்வ வழிபாடு மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. காரணம், இங்குள்ள மக்கள் தாய்வழிக்குடிக் குடியுரிமையைப் பேணி வருவதனால் ஆகும். அத்தோடு, கண்ணகி வழிபாட்டைச் சிறப்பாக மேற்கொள்ளும் தேசம் என்ற பெருமையைப் பெறும் மட்டக்களப்பில், மேற்கத்தேயரின் வருகையுடன் கொண்டுவரப்பட்ட மாதா வழிபாடும் சிறப்பிடம் பெறுகின்றது. இதனடிப்படையில் தோற்றம் பெற்றவைதான் வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயமும், தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயமும் இவற்றின் வழிபாட்டு முறைகளும் (தங்கேஸ்வரி,க., 2007, ப.108).

**வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயமும் வழிபாட்டு முறைகளும்**

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 17 Km தூரத்தில் உள்ள வந்தாறுமூலைக் கிராமத்தின் அம்பலத்தடி சந்தியில் வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. கண்ணகி கோபத்துடன் மதுரையை எரித்துவிட்டு, முதன் முதலில் வந்து ஆறிய இடம் என்பதனால், இவ்விடத்தில் மக்கள் கண்ணகி அம்மனுக்குக் கோயில் கட்டி வழிபாடுகளை ஆற்றி வந்துள்ளனர். ஆலய வழிபாட்டு முறைகள் முற்றுமுழுதாக ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளாகும். இங்குள்ள 8 வகையான குடியினரும் இணைந்தே, இங்கு இடம்பெறும் வழிபாடுகளினை நடாத்தி வருகின்றனர் (பத்மநாதன்,சு., 2020).

இவ்வாலயத்தில் வருடம் ஒரு தடவையே அம்பாளின் மூலஸ்தானக் கதவு திறந்து, பூசை நடைபெறும். இதனையே "வருசம் ஒரு பூசையும் வௌவால் உறைந்த கோவிலும்" என்று குறிப்பிடுவர். அதனைத் தவிர இங்கு தைப்பூசம், கொம்புமுறி விளையாட்டு

போன்றனவும் இடம்பெறும் (நேர்காணல் - பூபதியம்மா, 2024). அந்தவகையில், இங்கு இடம்பெறும் வழிபாடுகளாவன :

வைகாசித் திங்கள்

1. கதவு திறத்தல் சடங்கு
2. வெளிப்பந்தல் நாட்டல் சடங்கு
3. மடைப்பெட்டி கொண்டு வருதல் சடங்கு
4. நெல்லுக் குற்றுதல் சடங்கு
5. அம்பாள் அபிஷேகம்
6. கல்யாணக்கால் சடங்கு
7. மடை பரவுதலும் கும்பம் வைத்தலும்
8. உடுக்குச்சிந்து பாடுதல்
9. பாணக்கமும் நோற்புச் சோறும் வழங்கல்
10. மடை பிரித்தல்
11. கல்யாணப் படிப்பு
12. சாடிப்பானை எடுத்தல்
13. திருக்குளிர்த்தி பாடுதல் சடங்கு
14. நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல்
    - கற்பூரச்சட்டி எடுத்தல்
    - அங்கப்பிரதட்சணம் செய்தல்
    - மடிப்பிச்சை எடுத்தல்
    - பொங்கல் வைத்தல்
    - அடையாளம் கொடுத்தல்
    - பிள்ளைவிற்று வாங்குதல்
15. கதவு மூடுதல்

பொதுவான சடங்குகள்

1. கொம்புமுறிப்புச் சடங்கு
2. தைப்பூசம்

**தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலய வழிபாட்டு முறைகள்**

மட்டக்களப்பில் போர்த்துக்கேயரின் வருகையோடு 1624இல் கட்டப்பட்ட முதலாவது ஆலயம் இதுவாகும். மட்டக்களப்பு நகரின் நடுவே அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டையிலிருந்து வடக்கே 1Km தூரத்தில், திருமலை வீதியில் வடக்கெல்லை வீதியும், தெற்கெல்லை வீதியும் இணைகின்ற சந்தியில் அமைந்துள்ளது. இங்கு வருடம் முழுவதும் வழிபாடுகள் இடம்பெற்ற வண்ணமே காணப்படும் (இரத்தினராஜா,ஜே.எச்., 2018, பக். 19 – 23).

இங்குள்ள 8 வட்டாரத்தைச் சேர்ந்த மக்களும், பங்குக் குருவானவருடன் இணைந்தே அனைத்து வழிபாடுகளையும் நடாத்துகின்றனர். அன்னைக்கென வருடத்திற்கு ஒருமுறை ஆலயத் திருவிழா இடம்பெற்றாலும், திருச்சபையின் திருவிவிலிய நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் கொண்ட திருவிழாக்களும் இடம்பெறுகின்றன. கிறிஸ்தவத் தேவாலயங்களில் இடம்பெறும் பொதுவான வழிபாடுகள் அனைத்தும் இங்கும் இடம்பெறுகின்றன (நேர்காணல், ஜீலியன் பிரான்சிஸ், 2023). அந்தவகையில், இங்கு இடம்பெறும் வழிபாடுகளாவன:

வருடாந்த ஆலயத் திருவிழா

1. கொடியேற்றம்
2. திருவிவிலியப் பவனி
3. தொடக்கச் சடங்குகள்
4. இறைவார்த்தை வழிபாடு
5. நற்கருணை வழிபாடு
6. நன்றி வழிபாடு
7. திருச்சொரூப ஆராதனை
8. திருச்சொரூபப் பவனி
9. நற்கருணை ஆராதனையும் திருப்புகழ்மாலையும்
10. அன்னையின் ஆசீர்வாதம்
11. கொடியிறக்கம்
12. நேர்த்திக்கடன் நிறைவேற்றல்
    - பிள்ளைவிற்று வாங்குதல்
    - அடையாளம் கொடுத்தல்
    - அங்கப்பிரதட்சணம்
    - அன்னதானம் வழங்குதல்
    - மொழுகுவர்த்தி ஏற்றுதல்
    - மடிப்பிச்சை எடுத்தல்
13. அன்னையின் கீதம் பாடல்

மக்கள் மத்தியில் இருந்து வரும் பக்தி

- வணக்கமாதப் பக்தி
- செபமாலை மாதப் பக்தி
- மூவேளைச் செபம்
- சனிக்கிழமைப் பக்தி
- செபமாலை அணிதல்

திருச்சபை குறிப்பிடும் மாதா பக்தி

- கோட்பாட்டு ரீதியாக விழாக்கள்
- நம்பிக்கை அடிப்படையிலான விழாக்கள்

பொது வழிபாடுகள்

- புதுவருடப் பண்டிகை
- பாஸ்காப் பண்டிகை
- கிறிஸ்து பிறப்புப் பண்டிகை
- ஞாயிறு திருப்பலி
- நாளாந்த திருப்பலிகள்

**மாதா வழிபாடு, கண்ணகி வழிபாடு - ஒப்பீடு**

இலங்கையில் கண்ணகி வழிபாடு கயபாகு மன்னன் காலத்தில், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலும், மாதா வழிபாடு போர்த்துக்கேயரின் வருகையுடன் 16ஆம் நூற்றாண்டிலும் ஆரம்பமானது. இரண்டும் வெவ்வேறு காலத்தில் தோற்றம் பெற்றுப் பரவல் அடைந்தவையாகவே காணப்பட்டாலும், இரு மதங்களிலும் ஒரே அளவான முக்கியத்துவமே பெறுகின்றன. மாதா வழிபாடானது மேற்கத்தேய வழிபாட்டு முறையினையும், கண்ணகி வழிபாடு கீழைத்தேய வழிபாட்டு முறையினையும் கொண்டுள்ளது. இவ்விரு வழிபாடுகளும் தோன்றிய காலம், இடம், நேரம், கலாசாரம், பண்பாடு, சூழல், சமூக அமைப்புப் போன்றன வேறுபட்டதாகக் காணப்படுகின்ற போதிலும், அவை பரவிய இடம் என்பது ஒன்றாகக் காணப்படுவதனால் ஒப்பிடுதல் என்பது சாதகமான போக்கினைக் கொண்டுள்ளது.

**வருடாந்த திருவிழா**

கண்ணகி அம்மன் ஆலயத்தில் ‘வைகாசித் திங்கள்’ என்ற பெயரில் வைகாசி மாதம் பிறந்தவுடன் திருவிழா இடம்பெறுகின்றது. காணிக்கைமாதா ஆலயத்தில் வருடம்தோறும் மாசி, இரண்டாம் திகதி ஆலயத் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

**குடிமுறையும் வட்டார முறையும்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில் காவேரி கண்ட குடி, அத்திய குடி, புதூர்குடி, கவுத்தன் குடி, செட்டியார் குடி, களுமத்தன்பணிக் குடி, மஞ்சள் பரமக்குட்டி குடி, பரமகுட்டி குடி எனக் காணப்படும் 8 வகையான குடியினரும் இணைந்தே வழிபாடுகளினை நடாத்தி வருகின்றனர். அவ்வாறே, காணிக்கைமாதா ஆலயத்திலுள்ள 8 வட்டாரத்தைச் சேர்ந்த மக்களும் இணைந்தே வழிபாடுகளை நடாத்துகின்றனர்.

**அம்பாள் அபிசேகமும் திருச்சொரூப ஆராதனையும்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில், ஒவ்வொரு நாளும் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்களைப் பயன்படுத்தி, அம்பாளுக்குச் சீலை கட்டி, பூசாரியாரால் அம்பாள் அபிஷேகப் பூசை இடம்பெறும். இவ்வாறே, காணிக்கைமாதா ஆலயத்தில் திருப்பலியின் இறுதியில் குருவானவர் அன்னையின் திருச்சொரூபத்திற்கு முன்சென்று தூப ஆராதனை செலுத்துவார்.

**மடை பரவுதலும் கும்பம் வைத்தலும்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில், ஒவ்வொரு வழிபாட்டின் தொடக்கத்திலும் மடை பரவிக் கும்பம் வைத்தல் வழமையாகும். மொத்தமாக 8 கும்பம் வைக்கப்படும். அவற்றுள் அம்பாளுக்கு 4 கும்பமும், கல்யாணக் காலுக்கு 4 கும்பமும் வைப்பர். அவ்வாறே, காணிக்கைமாதா ஆலயத்திலும் திருப்பலியின் ஆரம்பத்தில், ஆலய முன்றலில் மடை பரவிக் கும்பம் வைத்திருப்பர். அவ்விடத்தில் வைத்துத்தான் குருவானவருக்கு மாலை அணிவித்து, பலிபீடம் நோக்கிப் பவனியாக அழைத்து வருவர்.

**மந்திரம் ஓதுதலும் செபம் சொல்லுதலும்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில் பூசாரியார் பூசை செய்யும் போது, 'மந்திரம்' எனும் பெயரில் தனது பிரார்த்தனைகளைச் சொல்லியவாறு பூசை செய்வார். அவ்வாறே, மக்களும் இரு கரம் குவித்தும் பிராத்தனை செய்வர். இவ்வாறே, காணிக்கைமாதா ஆலயத்திலும் குருவானவர் பூசை வழிபாடுகளின்போது அன்னையை நோக்கிப் பிரார்த்தனைகள் சொல்லுவார். இறை மக்களும் அன்னையை நோக்கி வேண்டுதல் செய்வர். இதனைச் 'செபம் சொல்லுதல்' என அழைப்பர்.

**நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல்**

- கற்பூரச்சட்டியும் மெழுகுவர்த்தி ஏற்றுதலும்
- அங்கப்பிரதட்சணம் செய்தல்
- அடையாளம் கொடுத்தல்
- பிள்ளைவிற்று வாங்குதல்
- மடிப்பிச்சை எடுத்தல்

**சமூக நல்லுறவு காணப்படல்**

கண்ணகி அம்மன் ஆலயத்திற்தின் சடங்குக் காலங்களின்போது, இந்துக்களைத் தவிர கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களின் வருகையானது இடம்பெறுவதனைக் காணலாம். அவ்வாறே காணிக்கைமாதா ஆலயத்திற்கும் கிறிஸ்தவர்கள், இந்துக்கள், பௌத்தர்கள் போன்றோரின் வருகையானது இடம்பெறுகின்றது.

**வெளி அடையாளங்கள்**

கண்ணகி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் மக்கள் விபூதி பூசி, சந்தனம் குங்குமம் வைத்துச் செல்வர். ஆண்கள் அனைவரும் மேலாடை இன்றி வேட்டியோடும், பெண்கள் அனைவரும் கலாசார ஆடை அணிந்தும் செல்வர். காணிக்கைமாதா ஆலயத்திற்குச் செல்லும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் திருவிவிலியத்தைக் கையில் தாங்கி, திருச்செபமாலை கழுத்தில் அணிந்து செல்வர்.

**ஆலய மணி ஒலித்தல்**

இவ்விரு ஆலய வழிபாடுகளிலும் வழிபாடுகளின்போது, ஆலயமணி ஒலிக்கப்படுதல் வழமையான செயற்பாடுகளில் ஒன்றாகவே காணப்படுகின்றது.

**ஆலயத்தைச் சுற்றி வலம்வருதல்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில் வைகாசித் திங்களின் இறுதி நாள் வழிபாட்டின்போது, கண்ணகி அம்மனை அவருக்கென அமைக்கப்பட்ட பல்லக்கில் ஏற்றி, தோளில் சுமந்து பவனியாக வருவர். காணிக்கைமாதா ஆலயத்தில் வணக்க மாதத்தின் இறுதி நாளிலும், காணிக்கை மாதத்தின் இறுதிநாளிலும், திருப்பலியின் முடிவில் அன்னையின் திச்செரூபப் பவனி ஆலயத்தினைச் சுற்றி இடம்பெறும்.

**அன்னதானம் வழங்குதல்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் பூசையின் முடிவில் அன்னதானம் வழங்குவர். காணிக்கைமாதா ஆலயத்திலும், திருவிழா நாட்களில் அன்னையின் ஆசீர்வாதம் முடிந்த பின்னர் அன்னதானம் வழங்குவர்.

**தீர்த்தம் தெளித்தல்**

திருக்குளிர்த்திச் சடங்கின் முடிவில், ஆலயத்தின் முன்றலில் வைத்து, அம்மனைக் குளிப்பாட்டி அபிஷேகம் செய்த தீர்த்தத்தினை, வேப்பங்குழையினைப் பயன்படுத்தி மக்கள்மீது தெளிப்பர். காணிக்கைமாதா ஆலயத்தில் திருப்பலி முடிவில், குருவானவர் ஆசீர்வதிக்கப்பட்ட தண்ணீரினை மக்கள் மீது தெளிப்பார்.

**பொது வழிபாடுகள்**

இவ்விரு ஆலயங்களும் தமக்கெனத் தனித்துவமான வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தாலும், தமது மதம் சார்ந்த பொதுவான வழிபாட்டு முறைகளையும் கொண்டுள்ளன. கண்ணகி அம்மன் ஆலயத்தில் 'தைப்பூசம்', 'கொம்புமுறிப்புச் சடங்கு' போன்றன இடம்பெறுகின்றன. காணிக்கைமாதா ஆலயத்தில் புதுவருடத் திருப்பலி, பாஸ்காத் திருப்பலி, கிறிஸ்து பிறப்பு வழிபாடு, ஞாயிறு திருப்பலிகள், நாளாந்த திருப்பலிகள் போன்றன இடம்பெறுகின்றன.

**பூமாலை அணிவித்தல்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில் அம்மனுக்கு வழிபாடுகளின்போது, பூமாலை அணிவிப்பர். காணிக்கைமாதா ஆலயத்திலும் இடம்பெறும் அனைத்து வழிபாடுகளின்போதும் காணிக்கைமாதாவின் திருச்சொரூபத்திற்கு மாலை அணிவிப்பர்.

**ஊர்வலம்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில், தேவையான அனைத்துப் பொருட்களையும் இரு பெட்டிகளினை எடுத்து, அவற்றைப் பிள்ளையார் கோவிலுக்குக் கொண்டு சென்று, ஒரு பெட்டியில் உள்ளவற்றைப் பயன்படுத்தி பூசை செய்து, பின்னர் மற்றைய ஓலைப் பெட்டியினை ஊர்வலமாகக் கொண்டு சென்று கண்ணகி அம்மன் ஆலயத்தை அடைவர். காணிக்கைமாதா ஆலயத்திலும், 9ஆவது நவநாளில், மாதாவின் திருச்சொரூப ஊர்வலம் இடம்பெறும்.

**வருடாந்த திருவிழாவின் ஆரம்பமும் முடிவும்**

திருவிழாவின் ஆரம்பமும் முடிவும் வேறுபட்டிருந்தாலும், ஒத்த போக்குடைய தன்மையினைக் கொண்டிருக்கின்றன. கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த சடங்கானது, கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, கதவு மூடுதலுடன் முடிவடையும். காணிக்கைமாதா ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கொடியிறக்கத்துடன் முடிவடையும்.

**துதிப்பாடல்களைப் பாடுதல்**

கண்ணகி அம்மன் ஆலயத்தில் உடுக்குச் சிந்து, திருக்குளிர்த்தி போன்ற துதிப்பாடல்களைப் பாடுவர். மாதா ஆலயத்தில் வருகைப் பாடல், மன்னிப்புப் பாடல், காணிக்கைப் பாடல், நற்கருணைப் பாடல், நன்றிப் பாடல், மரியன்னையின் பாடல் போன்றவற்றைப் பாடுவர். இங்கு சிறப்பு யாதெனில், மாதாவிற்கும் அம்மனுக்கும் பாடப்படும் பாடல்கள் யாவும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களால் உணர்வுபூர்வமாக எழுதப்பட்டுப் பாடப்படுபவையாக காணப்படுகின்றன.

**பிற தெய்வ வழிபாடு**

வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஆதிவைரவர், விறுமவைரவர் போன்ற சிறு கூடாரத் தெய்வங்களுக்கு வழிபாடுகள் இடம்பெறுகின்றன. காணிக்கைமாதா ஆலயத்தில் நற்கருணை வழிபாடு, புனிதர்களின் வழிபாடு போன்றன இடம்பெறுகின்றன.

**மக்களின் நம்பிக்கை**

கண்ணகி அம்மனையும் காணிக்கை மாதாவினையும் இவ்விரு மக்கள் கூட்டத்தினரும் தாயாகப் பார்க்கின்ற போக்கினை வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையில், இவ்விரு ஆலய மக்களும் ‘அம்மா’, ‘தாய்’, ‘அன்னை’, ‘பாதுகாவலி’ போன்ற நாமங்கள் கூறியே அழைக்கின்றனர்.

**தைப்பொங்கல்**

இவ்விரு ஆலயங்களிலும் தைப்பொங்கல் பண்டிகையானது வருடாவருடம் கொண்டாடப்படுவதனை நோக்க முடிகின்றது.

**ஒப்பீட்டின் இறையியல் அடிப்படை**

இவ்விரு ஆலயங்களினதும் இறைதன்மையின் அடிப்படையினை நோக்குவோமானால், இங்கு மனிதப் பெண்மையே தெய்வமாக்கப்பட்டுள்ளது. அதாவது, இரண்டு தெய்வங்களும் சாதாரண மனிதர்களாகப் பிறந்து பின்னர் தெய்வீக நிலையினைப் பெற்றதாக நம்பப்படும் பெண்கள்.

**முடிவுரை**

சமயங்களின் தோற்றம் முதல் இன்றுவரை அவை நிலைத்திருப்பதற்கு வழிபாடுகளே பிரதான பங்கினை வகிக்கின்றன. இத்தகைய வழிபாட்டு முறைகளுள் தாய்த்தெய்வ வழிபாடானது பிரதான இடத்தினை வகிக்கின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில், உள்ள மக்கள் தாய்வழி உரிமையைப் பேணி வருவதனால்தான் இங்கு தாய்த்தெய்வ வழிபாடானது இன்றுவரை சிறப்பிடம் பெற்றுள்ளது. இங்கு இந்து சமயத்தில், கண்ணகி வழிபாடு வேறெங்கும் இல்லாத அளவிற்கு இங்கு வேரூன்றி உள்ளதோடு, கிறிஸ்தவ சமயத்தில் மாதா வழிபாடும் சிறப்பிடம் பெற்றுள்ளது.

இவ்விரு வழிபாடுகளும் தோன்றிய சமயம், பரவிய விதம், காலம், நேரம், அமைவிடம், அமைப்புமுறை, கலாசாரம், பண்பாடு என்பன வேறுபடுவதனால், இவற்றினை ஒப்பீடு செய்தல் கடினமாகும். இருப்பினும், இவை பரவிய இடமானது, ஒரே கலாசாரத்தையும் பண்பாட்டையும் அடிப்படையில் ஒன்றாகக் கொண்ட தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் என்பதனால், மக்கள் தம்முடைய பண்பாடுகளுக்கு ஏற்ப இவ்வழிபாட்டு முறைகளை மாற்றி அமைத்துள்ளனர்.

அத்தோடு கிறிஸ்தவ மதமாற்றத்தின்போது இந்து மக்களே இங்கு பெருமளவில் மத மாற்றத்திற்கு உட்பட்டதனால், மதம்மாறிய பாமரக் கத்தோலிக்க மக்கள் அன்னை மரியாளை கண்ணகியைப் போல தெய்வ நிலைப்படுத்தி வழிபட்டு வந்துள்ளனர். எனவே, இவ்விரு வழிபாடுகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றபோதிலும், ஒத்த போக்கினையும் அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

**பரிந்துரைகள்**

இவ்விரு வழிபாட்டு முறைகளும் வேறுபட்ட சமயத்தையும் கலாசாரத்தையும் பண்பாட்டையும் தோற்றத்தையும் இடத்தையும் கொண்டு காணப்படுவதனால் இவற்றை ஒப்பீடு செய்தல் என்பது சற்றுச் சிரமமான பணியாகவே காணப்பட்டது. இவ்வழிபாட்டுடன் ஒத்த போக்குடையதான பல ஆலயங்கள் இருப்பதனை இவ் ஆய்வின் ஊடாகக் கண்டறிய முடிந்தது. இது தொடர்பாக சில ஆய்வுகள் இடம்பெற்றிருந்தாலும்கூட, எதிர்காலத்தில் ஆய்வாளர்களும், இது தொடர்பாகப் பயில்கின்ற மாணவர்களும் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் குறித்துக் கருத்தில் எடுக்க வேண்டுமென்பது இவ்வாய்வின் பரிந்துரைகளில் ஒன்றாக முன்வைக்கப்படுகின்றது.

இந்துக்கள், கண்ணகி அம்மனைத் தெய்வமாக்கி வணங்குகின்றனர். கிறிஸ்தவர்கள், மாதாவைப் புனித நிலைக்கு உயர்த்தி, மேலான வணக்கம் செலுத்துகின்றனர். இத்தகைய வணக்க முறைகளுக்கு இடையே சிறிய மயக்கம் காணப்படுவதனால், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இவற்றைத் தெளிவுறுத்தல் அவசியமாகின்றது. எதிர்வரும் காலங்களில் இது தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடும் ஆய்வாளர்கள் வேறுபட்ட பிரதேசங்களையும் கலாசாரங்களையும் அடிப்படையாகக் கொண்ட மக்கள் மத்தியில் ஆய்வினை மேற்கொள்வதன் மூலம், சில வேளைகளில் வழிபாட்டு முறைகளுள் ஒற்றுமையினைவிட அதிகளவில் வேற்றுமைகள் காணப்படுவதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். எனவே, எதிர்கால ஆய்வாளர்கள் வேறுபட்ட பிரதேசங்களை மையப்படுத்தியதாக தமது ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


அகஸ்டீன்,ஜே., (2014), திரு வழிபாடும் மரியன்னை பக்தியும், ஆரோக்கிய நிகேடன், தமிழ்நாடு.

இரத்தினராஜா,ஜே.எச்., (2006), தாண்டவன்வெளி திருச்சபை வரலாற்றில் தூய காணிக்கை அன்னை, காணிக்கைமாதா ஆலயம், தாண்டவன் வெளி.

இராமசுப்பிரமணியன்,இ.பீ.ஐ., (2018), சிறு தெய்வங்களோடு வந்த பெருந்தெய்வங்கள் (பகுதி – 1), https://shribalasubiksha.blogspot.com, (Date :- 2024.11.22, Time :- 09.39am).

கந்தையா,வி.சீ., (1964), மட்டக்களப்புத் தழிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம்.

கணபதிப்பிள்ளை,சி., (1978), பத்தினி வழிபாடு, விபுலானந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

கவிதா,ஆ., (2013), நம் தாய் அன்னை மரியா, ஜெயமாலினி பதிப்பகம், தமிழ்நாடு.

கனகவள்ளி,ச., (2023), தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள், கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், அரசு மகளீர் கல்லூரி, இராமநாதபுரம்.

கஸ்தூரி,அரா., (2022), தமிழர் வழிபாட்டில் ஆண், பெண் தெய்வங்கள், பிரணவ் தமிழிதல் ஆய்விதல், மருதர் கேசரி ஜெயின் மகளீர் கல்லூரி, வாணியம்பாடி.

சுகுமார்,பா., (2009), ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தங்கேஸ்வரி,க., (2007), மட்டக்களப்புக் கலை வளம், மணிமேகலைப் பிரசுரம், மட்டக்களப்பு.

தங்கம்மா அப்பாகுட்டி, (1982), தாய்மையே இறைவனின் முதல் வடிவம், உலக இந்து மாநாட்டு மலர்,

பத்மநாதன்,சு., 2020, வந்தாறுமூலையில் குறுநில அரசுகளின் தோற்றம், https://battinews.com , (Date :- 2024.11.22, Time :- 05.07am).

பூலோகநாதன்,பொ., (2015), கிழக்கிழங்கையில் கண்ணகி வழிபாடும் அது சார்ந்த சடங்கு முறைகளும், மெய்யியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ரகுராம்,சி., (2009), ஈழத்தில் கண்ணகி வழிபாடு, கிழக்குப் பல்கலைக்கழகம், திருகோணமலை வளாகம், இலங்கை.

ராஜ், 2013, கிழக்கின் திருப்பதி வந்தாறுமூலை மகா விஸ்ணு ஆலய வருடாந்த உற்சவம், https://maddunews.com , (Date :- 2024.11.22, Time :- 05.18am).

Pruthi,R.K., (2004), Indus Civilization, Discovery Publishing House, New Delhi.

**நேர்காணல் விபரம்**

குழந்தைவேல் குணரத்தினம், வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயப் பூசாரி, வந்தாறுமூலை, வயது – 64, காலம் – 2024.11.25.

பூபதியம்மா, வந்தாறுமூலை, வயது – 87, காலம் – 2024.11.25.

கதிர்காமம் சுதந்திரன், வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயப் பக்கப் பூசாரி, வந்தாறுமூலை, வயது – 77, காலம் – 2024.12.05.

சுதந்திரன் சரஸ்வதி, வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயப் பக்கப் பூசாரியாரின் துணைவியார், வந்தாறுமூலை, வயது – 65, காலம் – 2024.12.05.

ஜீலியன் பிரான்சிஸ், பங்குத்தந்தை, தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயம், வயது – 57, காலம் – 2024.12.08.

# தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் - ஒரு வரலாற்று நோக்கு

**Thanista Sathyendra**

Tutor mentor, CODL, University of Jaffna

anantharasaathanista@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழர் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர் என்பதனையும் தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றிருந்தனர் என்பதனையும் இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது பண்பாடு. பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் பண்பாடு உண்டு. நமது பண்பாட்டின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்துகொள்ளப் பண்பாட்டுப் பாரம்பரிய நடவடிக்கைகள் அவசியமாகின்றன. பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மரபின் வேர்களைத் தேடும் முகமாகப் பின்னோக்கிப் பயணப்படுதல் என்பது இன்றைய காலத்துக்குத் தேவையான ஒன்றாக அமைகின்றது. நாம் அவ்வாறு பயணப்பட்டால் மட்டுமே நம் பழைய மரபின் தொடர்ச்சியையும் நீட்சியையும் அறிந்துகொள்ள முடியும். அதன் அடிப்படையில் காலத்தின் தேவை கருதித் தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் எனும் தலைப்பில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. தமிழர் பண்பாட்டம்சங்களில் விருந்தோம்பல் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை இலக்கியங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதனை எடுத்துக்காட்டுவதனையும் இன்றைய சமூகத்தின் விருந்தோம்பல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதனையும் நோக்கங்களாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டிலே முதன்மையான மரபாகும். சமூகமாக வாழும் மக்களினுடைய வாழ்க்கை முறையிலே இத்தகைய மரபுகள் அன்றைய காலத்தில் அவசியமானதாக இருந்தன. ஆனால், இன்றைய காலத்தில் விருந்தோம்பல் மரபு சிறப்புப் பெறுகின்றதா எனக் கேட்டால் மௌனமே பதிலாக அமையும். இவ்வாறான வினாக்களுக்கு விளக்கம் பெறுவதற்கான களமாக அமையும் இவ்வாய்வானது விபரண ஆய்வு முறையையும் ஒப்பீட்டு ஆய்வு முறையையும் பகுப்பாய்வு முறையையும் பயன்படுத்தி மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. விருந்தோம்பலின் முக்கியத்துவத்தினை இன்றைய தலைமுறையினருக்கு வெளிப்படுத்துதல் மற்றும் விருந்தோம்பல் மரபினைத் தொடர்ந்தும் பேணுவதற்கான தேவையினை எடுத்துக்காட்டுதல் என்பன இவ்வாய்வின் பெறுபேறுகளாக அமைகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *சமூகம், வாழ்க்கைமுறை, பண்பாடு, இலக்கியங்கள், விருந்தோம்பல்.*

**அறிமுகம்**

தமிழ்ச் சமூகம் ஒரு பாரம்பரியத்தில் வளர்ந்த நாகரிக சமூகம். தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்று ''விருந்தோம்பல்''. இது தமிழர்களின் வாழ்வியலிலும், சமுதாய கட்டமைப்புகளிலும், இலக்கியவழிச் சிந்தனைகளிலும் நன்கு ஊடாடியுள்ளது. விருந்தோம்பல் என்பது வெறும் ஒரு சமூகக் கடமையாக அல்லாமல், ஓர் ஆன்மிகப் பண்பாடாகவும் வளர்ந்திருக்கிறது. விருந்தினரை அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு உண்டி உணவளித்து, மரியாதையுடன் வழியனுப்புவதே தமிழர் மனப்பான்மையின் பிரதிபலிப்பாகும். விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டு மரபில் மிகவும் முக்கியமான பண்பாடாகக் கருதப்படுகிறது. அது சமுதாய ஒற்றுமை, அன்பு, மரியாதை மற்றும் மனிதநேயத்தைப் பிரதிபலிக்கும் ஒரு தத்துவமாகக் பார்க்கப்படுகிறது. தமிழர்களின் வரலாற்றில், இலக்கியத்தில் மற்றும் மத கலாசாரங்களில் இந்த விருந்தோம்பலின் முக்கியத்துவம் நீண்ட காலமாகப் பிரதிபலிக்கின்றது. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் பற்றிய பார்வை, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் விழாவிலும் மற்றும் சமுதாயத்தின் ஒவ்வொரு பருவத்திலும் மிகுந்த கவனத்துடன் நிறைவேற்றப்படுகிறது. இது மனித உறவுகளின் உறுதியான அடித்தளமாகவும் விளங்குகிறது. வாழும் பண்பாட்டையே பிரதிபலிக்கும் மொழியும் மரபும் கலைகளும் ஒரு சமூகத்தின் அடையாளங்களாகின்றன. அதில் முக்கியத்துவம் வாய்ந்தது விருந்தோம்பல்.

தமிழர் வாழ்க்கைமுறையில் ''விருந்தோம்பல்'' என்பது பழமைவாய்ந்த, மனநிறைவு தரும் குணமாக இருக்கிறது. இது ஒழுக்கச் சூத்திரம் மட்டுமல்ல. ஒரு நாகரிகத்தின் ஒளிரும் உருவமாகவும் காணப்படுகிறது. இந்த ஆய்வுக் கட்டுரையில், தமிழர் பண்பாட்டுச் சூழலில் விருந்தோம்பலின் முக்கியத்துவம், இலக்கியத்தில் அது பெற்ற இடம், சமூகத்தில் அது வகிக்கும் பங்கு மற்றும் இன்றைய காலத்தில் அதன் நிலை ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்கிறோம்.

விருந்தோம்பல் என்பது தமிழர் சமூகத்தில் இன்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஒழுக்கநெறியாகக் காணப்படுகிறது. ''விருந்தோம்பல் தமிழர் வாழ்வியல் சாராம்சம்'' என்று கூறுவதில் மிகுந்த உண்மை அடங்கியுள்ளது. ''அந்நியர் எனினும் அடியொற்றி அமர்வதே விருந்தோம்பலின் ஆன்மா'' எனக் கருதும் இந்தப் பண்பாடு, தமிழனின் வாழ்வியலின் கலாசார அடையாளமாகும். திருக்குறள், பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி உள்ளிட்ட சங்க இலக்கியங்களும் தேவாரம், திருவாசகம் போன்ற சமய உரைகளும் விருந்தோம்பலின் அருமையை எடுத்துரைக்கின்றன. விருந்தினரைச் சமமாக மதித்து உண்ணவும் உறங்கவும் ஏற்பாடு செய்து, அதனைப் புண்ணியமாகக் கருதும் இந்தப் பண்பாடு, தமிழர் நாகரிகத்தை வெளிப்படுத்தும் பிரதான கூறாகும். இக்கட்டுரை, இப்பண்பாட்டின் வரலாற்றுத் தொடக்கம் முதல், அதன் இலக்கியப் பிரதிபலிப்பு, சமயங்கள் காட்டும் பார்வை, சமூக மாறுபாடுகள், நவீன சமூகத்தில் அதன் நிலை ஆகியவற்றை ஆய்வுசெய்கிறது.

**ஆய்வு நோக்கம்**

தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் என்ற நெறியைப் புரிந்துகொள்வது, விருந்தோம்பல் எவ்வாறு தமிழரின் சமூகவியல் மற்றும் பண்பாட்டு வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கின்றது என்பதை ஆராய்வது, தொன்மையான தமிழ் இலக்கியங்களில் விருந்தோம்பல் பற்றிய ஆளுமை வெளிப்பாடுகளை ஆராய்வது, விருந்தோம்பல் மரபு இன்றைய தமிழர் வாழ்க்கையில் எவ்வாறு நிலைத்திருக்கின்றது என்பதைச் சமூகவியல் கோணத்தில் மதிப்பீடு செய்வது மற்றும் விருந்தோம்பலின் வழியாக தமிழர்கள் வெளிப்படுத்தும் மதிப்பு முறை சமூக உறவுகள் மற்றும் மனிதநேய உணர்வுகள் போன்றவற்றை வெளிப்படுத்துவதாகும். தமிழர் பண்பாட்டம்சங்களில் விருந்தோம்பல் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை இலக்கியங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதனை எடுத்துக்காட்டல் மற்றும் இன்றைய சமூகத்தின் விருந்தோம்பல் சிந்தனைகளை வெளிப்படுத்தல் என்பவற்றை நோக்கங்களாகக் கொண்டு மேற்க்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வினாக்கள்**

விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டிலே முதன்மையான மரபாகும். சமூகமாக வாழும் மக்களினுடைய வாழ்க்கை முறையிலே சமூகத்துடன் சமூகம் இணைவதற்கு இத்தகைய மரபுகள் அன்றைய காலத்தில் அவசியமானதாக இருந்ததா? இன்றைய காலத்தில் விருந்தோம்பல் மரபு சிறப்புப் பெறுகின்றதா? விருந்தோம்பல் என்னும் மரபு தமிழர் பண்பாட்டில் எவ்வாறு தோன்றி வளரந்தது? தமிழ் இலக்கியங்கள் விருந்தோம்பலை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன? விருந்தோம்பலின் வழியாக தமிழர் சமூகத்தில் எத்தகைய சமூகவியல் அறநெறி மற்றும் மத சிந்தனைகள் நிலைத்திருக்கின்றன? விருந்தோம்பல் மரபு இன்றைய சமகாலத்தில் எவ்வாறு பரிணாமமடைந்து வருகிறது? மற்றும் விருந்தோம்பல் மரபு தமிழருடைய அடையாளத்தைக் கட்டமைப்பதில் என்ன வகிபாகம் வகிக்கின்றது? இவ்வாறான வினாக்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

இன்றைய வேகமான வாழ்க்கை முறையில் விருந்தோம்பல் எனும் தமிழர் மரபு குறைந்து வருகிறது. இதன் அடிப்படை பண்பாட்டு சமூகவியல் மத மரபியல் முக்கியத்துவங்கள் புரியாமல் போகின்றன. இந்தப் பின்னணியில் தொன்மமான தமிழ் இலக்கியங்களின் வழியாக விருந்தோம்பலின் ஆழ்ந்த பண்பாட்டுக் கருத்துக்களை மீளாய்வு செய்து இம்மரபின் சமகால அர்த்தங்களை நிருபிப்பதே இந்த ஆய்வின் முக்கிய பிரச்சினையாகும்.

**இலக்கிய மீளாய்வு**

1. தமிழர் பண்பாடு, மு வரதராசன், சென்னை, நந்தனப் பதிப்பகம், 1999.

   தமிழருடைய பண்பாட்டம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தமிழர் பண்பாட்டு விழுமியங்களின் வகைப்பாடுகள் தமிழ்ச் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் தொடர்பிலான கருத்துப் பெறப்பட்டது.

2 தமிழர் வாழ்க்கை மரபுகள், இராசகோபாலன், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2011.

   தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளின் பாரம்பரியங்களையும் அடையாளங்களையும் வெளிப்படுத்துகின்றது தொடர்பிலான கருத்துப் பெறப்பட்டது.

3 தமிழ்ச் சாகித்ய வரலாறு, இ. சின்னசாமி, சென்னை கிழக்கு பதிப்பகம், 1993.

   இலக்கியங்கள் ரீதியிலான வரலாற்றுப் பின்புலம் தொடர்பான கருத்துக்கள் பெறப்பட்டன.

4 விருந்தோம்பலின் பண்பாட்டியல் பார்வை, ஆய்விதழ் பல்கலைக்கழகக் கலாசார ஆய்விதழ், இதழ் 23, 2022.

   வாழ்வியல் ரீதியிலான சமூகத்தின் பண்பாடுகள், வாழ்வியல் முறைகளின் மூலமான வாழ்க்கையின் செயற்பாடுகளினை வெளிப்படுத்துகின்ற மரபுகள் தொடர்பிலான கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

5 தமிழ்ச் சமூகமும் பண்பாடும், ரா.நவநீதம், 1990.

   விருந்தோம்பல் என்பது உயரிய தர்மம் என்பதையும், தரமான மனித நடத்தையைக் கொண்டது என்பதையும், மக்களின் வாழ்க்கையில் விருந்தோம்பல் நிலைகள் எவ்வாறு பரிணமித்திருந்தது, மக்களின் வாழ்க்கை மரபுகளை எவ்வாறு விருந்தோம்பி மேற்க்கொண்டிருந்தார்கள், விருந்தோம்பலை சிறப்பாக பேணியிருந்த பின்னணி போன்றவற்றையும் பற்றிய கருத்துக்கள் பெறப்பட்டிருந்தன.

6 திருக்குறளின் பண்பாட்டு நோக்கு, ப.சுப்பிரமணியம், 1974.

   திருக்குறளில் விருந்தோம்பலுக்கு ஒரு தனி அதிகாரமே காணப்படுகின்றது எனவும் விருந்தோம்பல் என்பது மதம், கலை, பண்பாடு, மொழி, சமூகம் அனைத்தையும் தொடும் தன்மை வாய்ந்தது எனவும் கருத்துப் பெறப்பட்டது.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வுக் கட்டுரை பண்பாட்டு, இலக்கிய, சமய மற்றும் சமூகவியல் அணுகுமுறைகளைச் சார்ந்ததாகும். இதற்காகப் பின்வரும் ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலக்கிய ஆய்வு: திருக்குறள், சங்க இலக்கியங்கள், பெரியபுராணம் போன்ற நூல்களில் விருந்தோம்பல் பற்றிய மேற்கோள்கள் சேகரிக்கப்பட்டன. வரலாற்று ஆய்வு: பழங்கால தமிழர் வாழ்வியல் வரலாற்று அடையாளங்கள், நாகரிக பரிமாணங்கள் பற்றிய

ஆதாரங்கள் ஆராயப்பட்டன. பண்பாட்டியல் பார்வை: தமிழர் கலாசாரத்தில் விருந்தோம்பலின் வெளிப்பாடுகள், திருமணங்கள், இராம நிகழ்வுகள் கோயில் விழாக்கள் ஆகியவற்றின் வழியாக இந்தப் பண்பாடு எப்படித் தொடர்கிறது என்பது கண்காணிக்கப்பட்டு பகுப்பாய்வு முறை மூலமும் காலச்சுவடு ஆய்வு சமகாலத்தில் விருந்தோம்பலின் நிலை என்ன என்பதை தெரிந்துகொள்ள நவீன சமூகத்தில் நிகழும் மாற்றங்கள், பொருளாதார தாக்கங்கள் போன்றவையும் கண்காணிக்கப்பட்டன. இவை வரலாற்றியல் அணுகு முறை மூலமும் விபரண ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**விருந்தோம்பலின் வரலாற்றுப் பின்னணி**

''விருந்தோம்பல் என்பது விருந்தினரை ஆதரிக்கக் கூடிய பண்பு" எனும் பொருளை உடையது. விருந்தினர் வருகையை ஓர் ஆவலோடும் மரியாதையோடும் ஏற்கும் பண்பாடாக இது தமிழர்களிடையே நிலவி வருகிறது. விருந்தோம்பல் அன்பு, சீர்மை ஆகியன தமிழரின் பண்பாட்டு மூலாதாரங்களாக அமைகின்றது. இது தமிழர்களின் தன்மானம், தர்மம், உறவுக் கோட்பாடு, சமூக ஒற்றுமை எனும் அம்சங்களைப் பிரதிபலிக்கிறது. பண்டைக் காலத்தில் தமிழர்கள் "விருந்தோம்பல் தமிழர்தம் பெரும் மரபு'' என்று பெருமை பேசும் அளவுக்கு விருந்தினரைக் கடவுள் எனக் கருதி வழிபட்டுள்ளனர். சங்க இலக்கியங்களில், குறிப்பாக புறநானூறு, அகநானூறு, திருக்குறள் போன்ற நூல்களில் விருந்தோம்பல் பற்றிய பல கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. தமிழர்களின் வரலாற்றில் விருந்தோம்பல் என்பது மிகவும் பழமையான ஒரு மரபாக இருப்பது குறிப்பிடத்தக்கது. பண்டைய தமிழர் விருந்தினர்களை மஹா அதிபதி அல்லது பகவான் போன்றவர் என்று கருதினர். இந்தப் பாரம்பரியம் சங்க இலக்கியங்களில் தெளிவாக வெளிப்படுகிறது. தமிழர்களின் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் என்பது ஒரு கடமையாகக் கருதப்பட்டிருந்தது.

**விருந்தோம்பலின் வரலாற்றுப் பார்வை**

தமிழர் சமூகம் வேத காலங்களையெல்லாம் முந்திய நாகரிக மரபுகளுடன் கூடியதாக இருந்தது. சங்க காலத்துச் சமூகக் கட்டமைப்பில், ''விருந்தோம்பல்" என்பது ஒரு குடும்பத்தின் மதிப்பீட்டு அளவாகவே பார்க்கப்பட்டது. விருந்தினரை வரவேற்காதவனை ''கள்ளன்'' எனக் குறிப்பிட்டுள்ளன சில இலக்கியங்கள். முன்பிற் பரம்பரை மரபு - குறிஞ்சி, முல்லை, மருதம் போன்ற நிலப்பரப்புகளின் அடிப்படையில் வாழ்ந்த மக்கள் சமூக ஒற்றுமையுடன் இருந்தனர். எளிய வாழ்க்கை முறை மற்றும் சமுதாய அடிப்படை ஆதரவாக, விருந்தினர்களுக்காக வீட்டில் தனிப் பகுதி (விருந்துமாடம் அல்லது படுக்கையிடம்) ஒதுக்கப்பட்டிருக்கும். பழைய தலைமுறைகளில் ஊரில் ஒருவருக்குத் திரட்டும் விருந்தோம்பல் நிகழ்வுகள் ஒரு பெருமைக்குரிய நிகழ்வாகக் கருதப்பட்டது. இதில் வெறும் உணவளிப்பு மட்டும் அல்லாமல், சமூக பங்குகளும் கலாசார பரிமாற்றங்களும் இடம்பெற்றன.

விருந்தோம்பல் என்பது சமுதாய ஒற்றுமையைக் கட்டமைக்கும் ஒரு கலாசாரக் கருவி. இது மூன்று முக்கிய அம்சங்களைச் சொல்கிறது. உணவின் பகிர்வு என்பது சொந்த வாழ்க்கைத் தரத்தை மற்றவரோடு இணைத்துக்கொள்வதைக் குறிக்கிறது. மனநிலை மற்றும் பொது நன்மை விருந்தோம்பல் செய்பவர் இரக்கமிக்கவர். மாறாக இரப்பவருக்கும் மானம் கொடுக்கப்படும். அமையோசை (Reciprocity) விருந்தோம்பல் சமூகத்தில் ஒரு பரஸ்பரமான ஒப்பந்தம் போன்று அமையும். ‘‘நான் இப்போது உனக்கு விருந்தளிக்கிறேன், நாளை நீ எனக்காக இதையே செய்’’ என்பது இல்லாமல், பாரம்பரிய பணி போலச் செய்தல். தமிழர் பண்பாட்டின் அடிப்படை அம்சங்களில் ஒன்று விருந்தோம்பல் ஆகும். இது ‘‘விருந்தினரை உளமார்ந்து ஏற்கும்’’ பண்பாக மட்டும் இல்லாமல், சமூக ஒற்றுமையின் நிலையான சின்னமாகவும் அறக்கோட்பாடாகவும் திகழ்கிறது. ‘‘அறம் செய விரும்பு’’ என்பதே தமிழர் வாழ்வின் புவன நெறி. மரபின் வழி வாழும் தமிழர், விருந்தோம்பலை ஒரு தர்ம கடமையாகக் கொண்டிருந்தனர் (சா.பாக்கியராஜ், தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், 2012).

‘‘விருந்தோம்பல்’’ என்பது, ஒருவரது இல்லத்திற்கு வந்த விருந்தினரைக் கவனித்து, தேவைகளைப் பூர்த்தி செய்வது. தமிழர் பழமொழிகளில் இது வலியுறுத்தப்படுகிறது:

‘‘விருந்தினரை மதிக்காதவனுக்கு வீடு வீழும்” -பழமொழி

‘‘விருந்தினரே இறைவன் வடிவம்” - நாடார் நெஞ்சச் சொல்லெழுத்து

தமிழர் பண்பாட்டின் அடிப்படை அம்சங்களில் ஒன்று விருந்தோம்பல். இது ‘‘விருந்தினரை உளமார்ந்து ஏற்கும் பண்பாக மட்டும் இல்லாமல், சமூக ஒற்றுமையின் நிலையான சின்னமாகவும் அறக்கோட்பாடாகவும் திகழ்கிறது. ‘‘அறம் செய விரும்பு’’ என்பதே தமிழர் வாழ்வின் நெறி.

**இலக்கியங்களில் விருந்தோம்பல்**

தமிழின் சங்க இலக்கியங்கள், குறிப்பாக புறநானூறு, அகநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றில் விருந்தோம்பலின் முக்கியத்துவம் சிறப்பாக உரைக்கப்பட்டிருக்கின்றது. சங்ககாலப் புலவர்கள் சொல்லும் விருந்தோம்பல் சங்க இலக்கியங்களில் குறிப்பாக புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு போன்ற நூல்களில் விருந்தோம்பலின் ஆழமான மதிப்பு காணப்படுகிறது.

‘‘விருந்தொலி நிறைந்த வீடு வீழ்வது இல்லை’’ என்ற நற்சொற்கள் விருந்தோம்பலைக் கருதும் வீடுகளில் எதிர்மறை நிகழ்வுகள் இல்லை என்பதை உணர்த்துகின்றன. புறநானூறு என்பது சங்க கால இலக்கியம் ஆகும். இதில் பல தலைவர்கள் மற்றும் கலைஞர்கள் விருந்தினர்களைப் பெருமையுடன் வரவேற்றனர். இதில் குறிப்பாக புறநானூறு 191ஆம் பாடலில், ஒரு தலைவன் தனது வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு உணவளித்து. வாழ்த்துக்களை வழங்குகிறான். இந்த வகையான கதை பண்டைய தமிழர்களின் மண் வளர்ச்சியில்,

விருந்தோம்பல் என்ற பண்பாட்டின் முக்கியத்துவத்தை உறுதிசெய்கிறது. ‘‘அவையோம்பி விருந்தோம்பி வாழ்வாரே அரசர்’’ விருந்தினரை மறுத்தல் அறமன்று - (புறநானூறு).

**புறநானூறு - குறிஞ்சிப் பாடல் - 182**

‘‘விருந்தொக்க வாழ்தல் சிறந்தன்று
மறந்தக்கால் மாந்தர்’’

இங்கு விருந்தினரை உணவோடு வரவேற்கும் பழக்கமின்றி வாழ்வது சிறந்ததல்ல எனக் கூறப்படுகிறது.

அகநானூறு -பாடல் 8, ‘‘பசியற்றார் பேணும் துறைவனும்…’’ விருந்தினரைப் பசி கேட்கச் செய்வது என்பது ஒரு தலைவன் மதிக்கத்தக்க பண்பாகக் கூறப்படுகிறது. பெருஞ்சித்திரனார், ஆவூர் மூலங்கிழார் போன்ற புலவர்கள் தம் பாடல்களில் விருந்தினரை எப்படி அழைத்து வரவேற்கிறார்கள் என்பதை அருவமுறையாகப் பதிவுசெய்துள்ளனர்.

**திருக்குறள்**

தமிழ்ப் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது ஒரு அறமாகவும் ஒழுக்கமாகவும் வாழ்க்கை நெறியாகவும் இருந்தது. இந்நிலையை நெறிப்படுத்தி உலகுக்கு எடுத்து கூறியவர் திருவள்ளுவர். அவரது திருக்குறளில் விருந்தோம்பலுக்கே தனி அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தமிழ் அறக்கட்டடத்தின் புனித தூணாகும். “விருந்தோம்பல் அறத்துப்பாலின் அழகிய முதன்மைக் குரல்” - பேராசிரியர் மு.வரதராசன்.

திருவள்ளுவர் தனது திருக்குறள் என்னும் நூலில், விருந்தோம்பலைப் பெருமையாகக் கூறினார். அவர் அதிகாரம் 9- விருந்தோம்பல் என்ற தலைப்பில் 10 குறள்களில் உணர்வு பெருக்கி விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டும் என்று விளக்குகிறார். உதாரணமாக

இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று” (குறள்:100)

இதன் பொருள், விருந்தினருடன் பேசும்போது சிநேகமாகவும் அவர்களை விரக்தி அடையச் செய்யும் வார்த்தைகள் இல்லாமல், அன்புடன் நடத்த வேண்டும். இவ்வாறு விருந்தினரை அன்பு மற்றும் மரியாதை மறுக்காமல் பெற்றுக்கொள்வது, தமிழர் பண்பாட்டின் முக்கிய அம்சமாகும். திருவள்ளுவர், அவரது திருக்குறளில் விருந்தோம்பலை அறத்துப்பால் பகுதியில் மிக உயர்ந்த இடத்தில் வகுத்துள்ளார். இங்கு விருந்தோம்பலின் நேர்மையும் மொழியியல் இனிமையும் குறித்து அவர் எடுத்துரைக்கிறார். அத்துடன், “விருந்தொற்கைப் போழ்தொக்கும் பண்பின் தலைமையாம்” என விருந்தினரை அன்போடு நடத்தும் பண்பையே முதன்மைப் பண்பாகக் காட்டுகிறது (குறள் : 83).

‘‘இலனென்றும் இல்வீழ்சி யாகூன்றல் கண்டார்க்கு

அளனென்று வையாத தில்''

விருந்தினரை வீட்டில் எதுவும் இல்லை எனச் சொல்லுவதே பெரும் இழிவாகக் கருதப்படுகிறது.

''முயல்வார் முயல்வார் எளியர் விருந்தொம்பல்
உய்வாரில் உய்ந்தது ஒருவன்''

விருந்தோம்பல் செய்பவர் உண்மையான உயர்ந்தவர் எனக் கூறுகிறார்.

திருவள்ளுவர். அறத்துப்பாலில் விருந்தோம்பலுக்கு எட்டுக் குறள்கள் ஒதுக்கியுள்ளார். குறள் 81-88 விருந்தோம்பல் அதிகாரம்.

*''இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று''* (திருக்குறள்: 100)
''விருந்தோம்பி வையகம் கைதாகக் காணப்படும்'' (திருக்குறள்: 87)

விருந்தோம்பலை வையக நடத்தை என்றே வள்ளுவர் வர்ணிக்கிறார்.

**சிலப்பதிகாரம், மணிமேகலை**

சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை போன்ற நூல்களில்கூட விருந்தோம்பல் முக்கியமான இடம் வகிக்கின்றது. அங்கே விருந்தினர்களை மிகச் சிறப்பாக வரவேற்று அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அளிப்பது என்று சொல்லப்படுகிறது. சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய தமிழின் இரு மகத்தான காவியங்களும் விருந்தோம்பலுக்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றன.

**சிலப்பதிகாரம்**

- கோவலனும் கண்ணகியும் மதுரைக்குள் வருகையின்போது விருந்தோம்பலுக்கான மரபுகள் விரிவாக வருணிக்கப்படுகின்றன.
- ஒரு வணிகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும் அவர்கள் அனுபவித்த விருந்தோம்பல், மதுரை அரச குழுவின் வரவேற்பு எல்லாம் விருந்தினரை மதிக்கும் தமிழ் மரபை வெளிப்படுத்துகின்றன.
- கோவலனுக்கும் கண்ணகிக்கும் கடைக்கடை வீடுகளில் வழங்கப்படும் பசும்பால், பழம், பானங்கள் என விருந்தோம்பல் விதிகளைச் சுட்டுகிறது.
- ''பால் சோறு தரும் பாவை'' எனும் வரிகள் அதனை வெளிப்படுத்துகின்றன. (சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்)

**மணிமேகலை**

- முனிவர்களிடம் பிச்சை எடுக்கும் செயல்களில்கூட, உணவு பகிர்வு, விருந்தோம்பல் என்ற பண்பாட்டுச் சாயல்கள் காணப்படுகின்றன.

தமிழ்ச் சமூகத்தில் திருவிழாக்கள், திருமணங்கள், பிறவியிழவு போன்ற நிகழ்வுகளில் விருந்தோம்பல் ஒரு சமூகக் கடமையாகக் கொள்ளப்பட்டது. விருந்தினர்களை நல்லபடியான உணவுடன் ஒப்பரிய முறையில் வரவேற்பது பொதுவான நடைமுறையாக இருந்தது. விருந்தோம்பலில் காணப்படும் மனநிலை என்பது உதவிகரமான, இரக்கமுள்ள, அன்பு செலுத்தும் பண்புகளை ஊக்குவிக்கும். இது மனித உறவுகளை வலுப்படுத்தும் சமூக உறவுக் கூட்டமைப்பாக விளங்குகிறது. விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டின் அடையாளமே எனலாம். இது தமது வாழ்வியல் பண்புகளை மட்டும் அல்ல, தமிழரின் மனிதநேயத்தை, பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை, நாகரிக சமூகவாழ்வின் உயர்வை எடுத்துச் சொல்கிறது. இன்று பரிமாறிய நவீன வாழ்க்கையிலும், இந்த மரபைப் பின்பற்றுவது ஒழுக்க நெறியையும் சமூக ஒற்றுமையையும் வலுப்படுத்தும். தமிழர் கலாசாரத்தில் பல்வேறு விழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளில் விருந்தோம்பல் ஒரு முக்கியமான பாரம்பரியமாக உள்ளது. திருவிழாக்கள், திருமணங்கள், பிறவியிழவு போன்ற சமூக நிகழ்வுகளில், விருந்தினர்களைப் போற்றுவதற்கான பல நெறிமுறைகள் உள்ளன.

- திருவிழாக்கள்: திருவிழாக்களில் தெய்வம் அல்லது இறை சக்தி பெருமையைப் பகிர்ந்து கொள்வது, விருந்தினருக்கு ஒரு உயர்ந்த மதிப்பையும் அளிக்கும்.
- திருமண விழாக்கள்: தமிழர்களின் திருமண நிகழ்வுகளிலும் விருந்தோம்பல் பாரம்பரியமாக நடைபெறுகின்றது. இதில், விருந்தினர்களுக்குச் சிறந்த உணவுகள் மற்றும் சாந்தி வழங்குவதற்கான பாரம்பரியங்கள் உள்ளன.
- பிறவியிழவு: பிறவியிழவில், புதிய வாழ்வு தொடங்கும்போது, விருந்தோம்பல் ஒரு சமூக கடமையாகப் பார்க்கப்படுகிறது.

**மதச் சிந்தனைகளில் விருந்தோம்பல்**

விருந்தோம்பல், ஒவ்வொரு மதத்தின் உள்ளார்ந்த கருத்துக்களிலும் தழைத்திருக்கிறது. சைவர்களிலும் வைணவர்களிலும் விருந்தோம்பல் ‘அன்னதானம்’ எனப்படும். அன்னம் (அதாவது உணவு) ஈடுபடுதல் என்பது புண்ணியச் செயலாக கருதப்படுகிறது. பௌத்தம் மற்றும் ஜைன சிந்தனைகளில் விருந்தோம்பல் இரக்கத்தின் செயலாக அறியப்படுகின்றது. இஸ்லாம் விருந்தினரை ‘மஹேமான்’ (அல்லாஹ்வின் அதிதி) எனக் கருதி அவர்களுக்கு நல்காப்பு அளிக்கக் கூறுகின்றது. கிறிஸ்துவம் புதிய ஏற்பாட்டில் விருந்தோம்பலுக்குப் பெரும் முக்கியத்துவம் உள்ளது. “அன்புடன் பகிர்வது கடவுளை நேசிப்பதற்கான வழி” எனக் கூறப்பட்டுள்ளது. பாவை நோன்பு வழிபாடுகள், அம்மன் திருவிழா, அடியெடுத்த ஊர்வலம் இவைகளில் உணவளிப்பு, விருந்தோம்பல் அடங்கியிருக்கும். “பசித்தவனுக்குச் சோறு வைப்பது பாவமில்லை” எனும் பழமொழியும் இதை உறுதிப்படுத்துகிறது. சுந்தரர் மற்றும் சம்பந்தர் ஆகிய நாயன்மார்கள் தேவார நூல்களில் புனித உணர்வுகளுடன் பக்தி சார்ந்த விருந்தோம்பலைப் பிரதிபலிக்கின்றனர். சுந்தரர் தமது பாடல்களில் பின்வருவதைக் கூறுகிறார்:

அன்னம் தந்தார்க்கு நன்றி கூறி
கொஞ்சம் கொடுத்தாரே காண்மூ

இங்கு பகவானின் உணவுகளைப் பகிர்வதற்கான பழக்கம் ஒன்றாக இருந்தது. இதன் மூலம் அந்தக் காலத்தில் விருந்தோம்பல் மட்டுமன்றி, பக்தி முறைகள் மற்றும் பாரம்பரிய உணவுப் பரிமாற்றங்களும் வேறுபட்ட முறையில் பகிர்ந்துகொள்ளப்பட்டன. திருவாசகத்தில் உணவளிப்பு என்பது அன்பும் பக்தியும் கலந்த செயல். அது ஏழைகள், பிச்சைக்காரர்கள் எனக் கூறப்படுவதில்லை. அவர்கள் இறைவனாகவே எண்ணப்படுகின்றனர்.

"பசி தீர்த்த பத்தர் தம் அடிகள் பேணி,
திசை தேடியே பரவி...."
(திருவாசகம், பத்தரின் பெருமை)

விருந்தோம்பல் என்பது சமூகத்தின் அனைவரையும் ஒரே மாதிரியில் இணைக்கும் செயல். தமிழ்ச் சமுதாயங்களில் விருந்தோம்பல் என்பது அறம் மற்றும் ஈகை எனப் பொருள்படும். ஒற்றுமை மற்றும் இணக்கம். விருந்தோம்பல் என்பது அனைத்துப் பிறப்புகளையும் பரிசுத்தி செய்து வரும் வழி. இது சமூகங்களில் பிரிவுகளை நீக்கி, அனைவரையும் ஒன்றிணைக்கும் கடமை. விருந்தோம்பல் என்பது சமுதாயத்தின் அங்கீகாரம் பெறும் செயலாக, ஒருவர் பகுத்தறிவை உணர்ந்து, அதை மற்றவர்களிடமும் பகிர்ந்து கொண்டு சேர்க்கின்றது. "அறம் செய்து அழிவாயா" (திருவாசகம்) இந்த வரியில் விருந்தோம்பல் அறத்தின் முதல் பங்காக இருக்கும் என்பதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். இதை நாம் ஒரு சமுதாய பணியாக உணர்ந்து செய்யவேண்டும்.

**இந்து மதம்** : இந்து மதத்தில், விருந்தோம்பல் என்பது இறைவன் சேவை மற்றும் பக்தி பரிமாற்றமாக மாறுகிறது. அதிதி தேவோ பவ என்பது உண்மையில் இந்து மதத்தின் அடிப்படைச் சிந்தனையாகவே இருக்கின்றது. இந்திய மதங்களில், விருந்தோம்பல் என்பது தனிப்பட்ட நலனுக்காக மட்டுமல்ல. அது ஆன்மீக முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கின்றது.

**இஸ்லாம் மதம்** : இஸ்லாம் மதத்தில் விருந்தோம்பல் என்பது பாரம்பரியத் தரமாக உள்ளது. இஸ்லாமிய சமுதாயங்களில் விருந்தினரை பெரிய மரியாதையுடன் வரவேற்றல் ஒரு முக்கிய கடமையாகக் கருதப்படுகிறது. "அஹ்லுல் - இரா∴பா" என்ற கருத்து, மன்னிப்பு மற்றும் அன்புப் பரிமாற்றத்தை வைக்கும் கருத்தாக இஸ்லாத்தில் உள்ளது.

**கிறிஸ்தவ மதம்** : கிறிஸ்தவ சமுதாயங்களில், விருந்தோம்பல் அன்பு மற்றும் மரியாதையைக் குறிக்கின்றது. கிறிஸ்தவர்களின் சமயத்தில், இந்த "அன்பின் வேதம்" என்பது விருந்தோம்பலை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இது சமுதாய உறவை வலுப்படுத்தும் வழியாக இருக்கின்றது.

**பௌத்தம்** : பௌத்த மதத்தில், விருந்தோம்பல் என்பது அனுதாபம் மற்றும் சமாதானம் பரிமாற்றமாக உள்ளது. பௌத்தர்கள் அதிகமாக சமயங்கள், விலாசங்கள் மற்றும்

பரிவாரங்களில் விருந்தோம்பல் செய்து, சமுதாய உறவை நிலைநாட்டுவது என்பது ஒரு ஆழமான கடமையாக உள்ளது.

**தமிழர் நாட்டுப்புற வாழ்வியல் மற்றும் விருந்தோம்பல்**

நாட்டுப்புறங்களில் விருந்தோம்பல் என்பது இன்றுவரை பசுமைச்சாய்வுடன் நிலவும் ஒரு மரபாக இருக்கிறது. தோட்டத்துக்கு வருபவர்களுக்குக் கஞ்சி, காய்கறிகள், பசும்பால் வழங்கும் பழக்கம், திருவிழாக்களில் பொதுமக்களுக்கு உணவளிப்பு, மண விழாக்களில் விருந்தினர்களுக்கான முக்கியத்துவம் என அனைத்தும் விருந்தோம்பல் ஒரு ஒழுக்கமட்டுமல்ல, மகிழ்ச்சி தரும் நிகழ்வு என்பதையும் காட்டுகின்றன. விருந்தோம்பல் என்பது இனக்கலந்த வாழ்வு, மதபேதமற்ற அணுகுமுறை, உள்ளடக்கிய நெருக்கம் ஆகியவற்றை உருவாக்கும் ஒரு சமூக ஒத்துழைப்புக் கருவியாக இருந்தது. இது மணவிழாக்களில் வேந்தரும் வேட்டனும் ஒரே இடத்தில் அமர்கிறார்கள். கிராம சபைகளில்சமத்துவ உணவு வழங்கல் ஏற்படுகிறது. இத்தகைய நிகழ்வுகள் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தின. தமிழர் வீட்டிற்கு வந்தவனே தெய்வம் (ம. இராசமாணிக்க நாயக்கர், தமிழர் வாழ்வியல், 1942). விழாக்களில் விருந்தினர் வருகைக்காக தனி உணவுப்பானை வைத்தல், ‘‘சோறு வழங்கும் கை வலிமை’’ என்பது ஒரு அழகு, நாட்டு மரபு கூறும் ‘‘மணவிழா என்றால் உண்ணும் விழா” (உவமைக் களஞ்சியம்).

**இன்றைய சூழலில் விருந்தோம்பல்**

நவீன வாழ்க்கை முறைகள், நகரமயமாதல் மற்றும் தனிமையின் அதிகரிப்பு ஆகியவையால் பாரம்பரிய விருந்தோம்பல் சில வேளைகளில் குறைந்து வருகிறது. நவீன மாற்றங்கள் உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் வழியே விருந்தோம்பல் ‘சேவை’ ஆக மாறியுள்ளது. குடும்பத்தின் பிணைப்புக் குறைவாக, விருந்தோம்பல் ஒரு கடமையாக மட்டுமே பார்க்கப்படுகிறது. ஆனாலும், முக்கிய விழாக்கள், திருமணங்கள், மற்றும் பிறவியிழவுகளில் பாரம்பரியமிக்க விருந்தோம்பல் தொடர்கிறது. எதிர்கால பரிணாமங்கள் கற்றல் வழியாக விருந்தோம்பல் வளர்த்தல் பள்ளிகளில் சமூகக் கல்வி, தமிழ் இலக்கியம் போன்ற பாடங்களில் விருந்தோம்பல் பற்றிய விழிப்புணர்வு கொண்டு வர வேண்டும். சமூக ஊடகங்கள் வழியே YouTube, Instagram போன்றவை வழியாக பாரம்பரிய உணவுகள், விருந்தோம்பல் நிகழ்வுகள் பற்றிப் பகிர்வதன் மூலம் புதுமை சேர்க்கலாம். குழந்தைகள் மற்றும் இளைஞர்களை ஈடுபடுத்தி விருந்தோம்பலை செயல் வழியாக கற்றுக்கொடுக்கலாம்.

வாழும் பண்பாட்டையே பிரதிபலிக்கும் மொழியும், மரபும், கலைகளும் ஒரு சமூகத்தின் அடையாளமாகின்றன. அதில் முக்கியத்துவம் வாய்ந்தது விருந்தோம்பல். தமிழர் வாழ்க்கைமுறையில் விருந்தோம்பல் என்பது ஒரு பழமை வாய்ந்த மனநிறைவு தரும் குணமாக இருக்கிறது. இது ஒரு ஒழுக்கச் சூத்திரம் மட்டுமல்ல. ஒரு நாகரிகத்தின் ஒளிரும் உருவமாகவும் காணப்படுகிறது. இந்த ஆய்வுக் கட்டுரையில், தமிழர் பண்பாட்டுச் சூழலில் விருந்தோம்பலின் முக்கியத்துவம், இலக்கியத்தில் அது பெற்ற இடம், சமூகத்தில் அது வகிக்கும் பங்கு மற்றும்

இன்றைய காலத்தில் அதன் நிலை ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்கிறோம். மாறிவரும் வாழ்க்கைச் சூழலில் ஊர் மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்ததால், நேரடி விருந்தோம்பல் குறைந்துள்ளது. ஆனால், டிஜிட்டல் ஊடகங்கள் வாயிலாக நிகழ்வுகள் நேரலை, உணவுப் பகிர்வு செயலிகள், Zomato, Swiggy மூலம் விருந்தோம்பல் தொடர்கிறது.

**சமகாலத் தமிழ்ச் சமூகத்தில் விருந்தோம்பலின் நிலை**

இன்றைய நகரமயமாக்கப்பட்ட சமூகங்களில் விருந்தோம்பல் குறைந்துவிட்டதா அல்லது புதிய வடிவங்களில் தொடருகிறதா என்பதையே ஆய்வு செய்ய வேண்டும். உண்மையாகவே, தற்போது வாட்ஸ்அப் அழைப்புகள், டிஜிட்டல் அன்பளிப்புகள், உணவுப் பொட்டலங்கள் அனுப்புதல் என்னும் தொடர்பு வாயிலாக புதியதொரு மாற்றம் நிகழ்கிறது. சவால்கள் மற்றும் சாத்தியங்கள், தனிமைப்படும் வாழ்க்கைமுறை, பொருளாதாரக் கட்டுப்பாடுகள், சாத்தியங்கள் சமூக ஊடகங்கள் மூலம் தூர விருந்தோம்பல் உணவக கலாசாரம் கலை விழாக்களில் கலந்துரையாடல் மற்றும் உணவுப் பகிர்வு நாம் எதிர்காலத்தில் காணப் போகும் விருந்தோம்பல் என்பது, முன்பு பரிசுத்தமாக இருந்த பக்தி மற்றும் சமுதாய வலைப்பின்னலுடன் இணைந்து, சமூகத்தின் அறம் மற்றும் சமரசம் ஆகியவற்றை நிறைவேற்றும் செயலாக மாறும்.

- கலாசார பாரம்பரியத்துடன் சமூக மாற்றங்கள் மற்றும் பொதுவான உறவுகள் தொடர்ந்தும் வளர்ந்துவிட்டாலும், விருந்தோம்பல் என்பது தனித்துவத்தை உருவாக்கும் வழியாக இருக்கும்.
- மனிதப்பாங்கும் உணவின் செயல்பாடும் மேலும் ஒருங்கிணைந்து, பகிர்வின் சக்தி கொண்டு சமூகத்தில் நிறைந்துள்ளதை வாழ்த்துகிறது.

**கலந்தாராய்வுகளும் முடிவுகளும்**

விருந்தோம்பலில் காணப்படும் மனநிலை என்பது உதவிகரமான, இரக்கமுள்ள, அன்பு செலுத்தும் பண்புகளை ஊக்குவிக்கும். இது மனித உறவுகளை வலுப்படுத்தும் சமூக உறவுக் கூட்டமைப்பாக விளங்குகிறது. விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டின் அடையாளமே எனலாம். இது தமது வாழ்வியல் பண்புகளை மட்டும் அல்ல, தமிழரின் மனிதநேயத்தை, பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை, நாகரிக சமூக வாழ்வின் உயர்வை எடுத்துச் சொல்கிறது. இன்று பரிமாறிய நவீன வாழ்க்கையிலும் இந்த மரபைப் பின்பற்றுவது ஒழுக்க நெறியையும், சமூக ஒற்றுமையையும் வலுப்படுத்தும். தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் என்பது வெறும் சமூகச் சூழலில் நிகழும் ஒரு கலாசாரப் பண்பாக இல்லாமல், ஆழமான ஆன்மீக அறவியல் இலக்கியம் மற்றும் தத்துவ அடித்தளங்களை கொண்ட ஒரு வாழ்க்கை நெறியாக விளங்குகிறது. ‘விருந்தோம்பல்’ என்றால் உணவளித்தல் என்ற மரபுவழிப் பொருள் மட்டுமல்ல, அதன்மூலம் வெளிப்படும் மனிதநேயமும், சமத்துவமும், பக்தியும், இறையுணர்வும் குறிப்பிடத்தக்கவை.

தமிழரின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்று விருந்தோம்பலாகும். இது சங்ககாலத்திலிருந்தே தெளிவாகக் கூறப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து சைவ, வைணவ,

சமண, புத்த இலக்கியங்களிலும், குறிப்பாக திருவாசகம் மற்றும் தேவாரம் போன்ற பக்தியுலக இலக்கியங்களில் விருந்தோம்பல் ஒரு ஆன்மீகக் கருவியாக, இறைவனையே நோக்கிய தர்மவழியாக மாற்றப்பட்டுள்ளதைக் காணலாம். விருந்தோம்பல் தமிழ்ச் சமூகத்தின் உயர்ந்த கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றது. இது மாற்றுப் பார்வைகளை சமரசத்தில் களமிடுமாறு உருவாக்குகிறது. சமுதாய வாழ்க்கையில் இணக்கம் விருந்தோம்பல் என்பது பொதுவான அருளைப் பகிர்ந்து, ஒற்றுமையை உருவாக்கும் ஒரு மிக முக்கிய வழியாகக் கருதப்படுகிறது. விருந்தோம்பல் என்பது உணவின் வழியாக பக்தியின் கருவியாக மாறுகிறது. இது எல்லா சமூகங்களுக்கும் ஒரே மாதிரியில் அணுகப்பட வேண்டும்.

**சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல்**

புறநானூறு, அகநானூறு, பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்கள் விருந்தோம்பலை அரசியல் ஒழுக்கமென்றும், சமூக ஒற்றுமையின் அடிப்படை என்றும் எடுத்துரைக்கின்றன. ‘‘விருந்தினர் வந்தால் விழா’’ எனக் கூறும் நிலையில், அந்நாளில் விருந்தினர் வருகை கோயில் திருவிழா போலக் கொண்டாடப்பட்டது.

**திருக்குறளில் விருந்தோம்பல்**

திருவள்ளுவர் விருந்தோம்பலை ஓர் உயர்ந்த கடமையாகக் கூறுகிறார்.

‘‘இருந்தோம்பி இல்வாழ்வான் என்பான் மறைத்தோம்பி
இவ்வுலகத்து இன்பம் உயிர்க்கு” (திருக்குறள் : 86)

இக்குறளில், விருந்தினரை மதிக்கும் செயல் தன்னை மறந்த தொண்டாகவே பார்க்கப்படுகிறது. இது, விருந்தோம்பல் என்பது தமிழருக்குச் சுயநலமற்ற ஆன்மநெறி என்பதைக் காட்டுகிறது.

**சமய இலக்கியங்களில் விருந்தோம்பல்**

தேவாரம், திருவாசகம், நாலடியார் போன்ற சமய இலக்கியங்கள், விருந்தோம்பலை பாவளையோடு புனிதச் செயலாக எடுத்துரைக்கின்றன. சைவ சித்தாந்தம் விருந்தோம்பலை பக்தியின் ஒரு வழியாக கருதுகிறது. திருமந்திரம் என்பதிலும் விருந்தோம்பலின் ஆன்மீக மேன்மை காணப்படுகிறது.

**பெரியபுராணமும் விருந்தோம்பலும்**

பெரியபுராணம் போன்ற நூல்களில், நாயன்மார்கள் விருந்தினர்களுக்காக தங்கள் உடைகளை விற்று உணவு கொடுப்பதையும், தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்யத் தயங்காமை போன்ற செயல்களை செய்ததையும் காணலாம். இது விருந்தோம்பலின் உன்னத நிலையைக் காட்டுகிறது.

**நாட்டுப்புற வாழ்க்கையில் விருந்தோம்பல்**

பண்டைய கிராம வாழ்க்கையில், விருந்தினர் வருகை என்பது ஒரு சமூக நிகழ்வாகவே இருந்தது. ''விருந்தினர் வந்தாலே கிணறு குழியில் தண்ணீர் ஓடும்'' என்பது ஒரு பழமொழி. வீட்டில் உணவில்லாவிட்டாலும், விருந்தினருக்காக ஒதுக்கி வைத்த சமையலே அந்த வீட்டுப் பெருமை எனக் கருதப்பட்டது.

**நவீன காலத்தில் விருந்தோம்பலின் மாற்றங்கள்.**

நவீன வாழ்க்கை முறைகள், தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கை, நகரமயமாக்கல், வேலையினால் ஏற்படும் நேரக் குறைபாடு போன்றவைகள் விருந்தோம்பலின் மரபைப் பாதித்துள்ளன. உணவக கலாசாரம், வெளி வாழ்க்கை, சமூக வலைத்தளங்களின் போக்கு, விருந்தினர் வழக்கங்கள் குறைவடைந்துள்ளன. எனினும், கோயில் திருவிழாக்கள், திருமணச் சடங்குகள் போன்ற நிகழ்வுகளில் விருந்தோம்பல் இன்னும் தொடர்கிறது.

**முடிவுரை**

விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டு மரபில் ஒரு நிலையான ஆன்மீக சமூக உறவுக் கடமையாகவே உள்ளது. இதன் மூலம் தமிழர்கள் காட்டும் அன்பும் இரக்கமும் மரியாதையும் ஒருங்கிணைந்த வாழ்வியல் உணர்வும் வெளிப்படுகின்றன. விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டு மரபில் ஒரு நிலையான ஆன்மீக-சமூக உறவுக் கடமையாகவே உள்ளது. இதன் மூலம் தமிழர்கள் காட்டும் அன்பும் இரக்கமும் மரியாதையும் ஒருங்கிணைந்த வாழ்வியல் உணர்வும் வெளிப்படுகின்றன. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது கடந்த காலங்களிலிருந்தும் இன்றைய காலத்திலும் முக்கியத்துவமிக்க அம்சமாக உள்ளது. இது மனித உறவுகளின் அடிப்படை மற்றும் சமூக நெறிமுறைகளின் மூலதனம் ஆகும். தமிழர்களின் பண்பாட்டின் அழகான பிரதிபலிப்பாக இந்த மரபு, நவீன உலகில் மீண்டும் பல்வேறு இடங்களில் பரவுகிறது

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது மரபு மட்டும் அல்ல. மனநலமும் உறவுநலமும் சமூக நலனும் கூறும் ஒரு உயரிய இலக்கணமாகும். நம்முடைய முன்னோர்கள் விதைத்த இப்பண்பு, இன்று மாறுபட்ட வடிவங்களில் வெளிப்படுவது உண்மைதான். இருப்பினும், அதன் மூலநோக்கம் அன்பு, பரிவு, பகிர்வு என்றும் நிலைத்தே இருக்கும். விருந்தோம்பல் என்பது தமிழர் வாழ்க்கையின் மரபு, அறம், அழகு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு. இன்றும் இது வேறுபட்ட வடிவங்களில் வாழ்கிறது. இதில் புதிய வழிகள் தோன்றினாலும், அதன் மூல அர்த்தம் மாறவில்லை. ''அறஞ்செய விரும்பும் தமிழரது சிந்தனையின் நெடுங்கொடி தான் விருந்தோம்பல்'' (இரா.செந்தில்குமார், 2023, தமிழ்ச் சமூகவியல் ஆய்வு இதழ்).

விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டு மரபின் தலைசிறந்த கூறாகும். இது வழிபாடு மட்டுமல்ல் வாழ்வியலும் ஆகும். தமிழன் ''விருந்தோம்பல்'' என்பது கடமை எனக் கருதுவதை இலக்கியமும் சமயமும் வலியுறுத்துகின்றன. நவீன கால மாற்றங்கள் இந்தப் பண்பாட்டைப் பலவீனப்படுத்தினாலும், மக்கள் மனங்களில் அது இன்னும் நிலைத்து உள்ளது. இப்பண்பாட்டை

மீண்டும் வலுப்படுத்த, கல்வி, கலாசார விழிப்புணர்வுகள், சமூக நிகழ்வுகள் வழியாக விருந்தோம்பல் சிந்தனையை ஊக்குவிக்க வேண்டும். இது மனிதநேயத்தைப் பரப்பும் வழியாக விளங்கும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


திருக்குறள், மு.வரதராசன் உரை, சென்னை, சாகித்திய அகாதமி, 2002.

புறநானூறு, தமிழ்ச் சங்கப் பதிப்பகம், 1936. உ வே. சாமிநாதையர், சென்னை.

அகநானூறு, தொபா மின்சிவந்தம், சென்னை, தமிழ் பல்கலைக்கழக வெளியீடு, 1987.

பட்டினப்பாலை, பாக்கியலட்சுமி பதிப்பகம், 1995 சா க. நவநீதக் கிருணன், மதுரை.

தேவாரம் சம்பந்தர், அப்பர், சுந்தரர், உரை ம. ப. சிவஞானம், சென்னை தேவார நூற்பணிக்கழகம், 2001.

திருவாசகம் பதிப்பகம், 2005 மணிக்கவாசகர், உரை: சுந்தரராமன், சென்னை: பாரதி

பெரியபுராணம் சேக்கிழார், உரை சா க. இராமச்சந்திரன், சென்னை பழநி பதிப்பகம், 2008.

திருமந்திரம் திருமூலர், உரை: வ. சாமிநாத சர்மா, சென்னை: வள்ளலார் நூற்பணிக்கழகம், 2010.

தமிழர் பண்பாடு, மு வரதராசன், சென்னை நந்தனப் பதிப்பகம், 1999.

தமிழர் வாழ்க்கை மரபுகள் டாக்டர், இராசகோபாலன், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2011.

தமிழ்ச் சாகித்ய வரலாறு இ சின்னசாமி, சென்னை கிழக்கு பதிப்பகம், 1993

விருந்தோம்பலின் பண்பாட்டியல் பார்வை, ஆய்விதழ் பல்கலைக்கழகக் கலாசார ஆய்விதழ், இதழ் 23, 2022.

The Cultural Heritage of the Tamils - K. K. Pillay, Madras: International Institute of Tamil Studies, 1975.

Tamil Civilization: Cultural History of the Tamils - Kamil Zvelebil, Leiden: E.J. Brill, 1973.
3. Religious Traditions of South India - Fred Clothey, Oxford University Press, 2006.

Hospitality in Indian Culture - A. K. Sinha, Delhi: Heritage Publishers, 1988.

The Tamil Temple: A Historical and Theological Perspective - David Shulman, New Delhi: South Asia Books, 2004.

Tamil Folk Traditions and Hospitality - Journal of South Indian Studies, Volume 18, 2018.

Sacred Hospitality in Tamil Bhakti Literature - Indian Institute of Advanced Study Proceedings, Shimla, 2019

# பகிடிவதையும் பாலியல் வன்முறையும் : கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

**k.sivavgneshwaralingam chettiyar**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
vigneshvaranvignesh615@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பகிடிவதை என்ற அபாயகரமான, அங்கீகரிக்க முடியாத செயற்பாட்டினால் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகங்களில் நடைபெற்று வரும் அங்கீகரிக்க முடியாத பல கொடூரமான பகிடிவதைச் சம்பவங்கள் பெறுமதியான பல உயிர்களைக் குடித்துள்ளன. பகிடிவதை எனும் பெயரில் நடைபெறும் பாலியல் துஸ்பிரயோகத்தினால் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த வருடத்தில் மாத்திரம் (2022ஆம் ஆண்டு) பகிடிவதை காரணமாக சுமார் 2000 மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டுள்ளார்கள் என்று தரவுகள் குறிப்பிடுகின்றன. இலங்கையில் பகிடிவதைக்கு எதிராகப் பல சட்டங்கள் அமுலில் உள்ள நிலையிலும் பகிடிவதையைக் குறைக்க முடியாத நிலையை அவதானிக்க முடிகிறது. இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் பாலியல் வன்முறையினைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளை இனங்காண்பது இவ் ஆய்வின் நோக்கமாகும். ஆய்வின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக நோக்க மாதிரி ஆய்வுக்கான மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் இலங்கையில் பகிடிவதை தொடர்பாக வெளியிடப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது பண்புசார் ஆய்வாக அமைந்துள்ளது. அதனடிப்படையில் விடய ஆய்வு, நேர்காணல் போன்றன முதலாம்நிலைத் தரவுகளாகவும், சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளத் தரவுகள் போன்றன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இத்தரவுகளின் பகுப்பாய்வுகளின் மூலம் இலங்கையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் பாலியல் துஸ்பிரயோகங்களின் தாக்கங்களின் பின்னணி, மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றினை ஆய்வானது கண்டறிந்துள்ளது. பல்கலைக்கழக வரலாற்றில் ஆண் (70வீதம்) மற்றும் பெண் மாணவர்கள் (40வீதம்) கொடூரமான பகிடிவதை மற்றும் பாலியல் அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்டதனால் இது சமூகப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இதனை ஒழிக்க வேண்டிய தேவையும் அவசியமாகிறது.

***திறவுச் சொற்கள்:*** *பாலியல் துஸ்பிரயோகம், வன்முறை, பல்கலைக்கழக மாணவர்கள், தீர்வுகள்.*

**அறிமுகம்**

கிழக்கிலங்கையில் முதன்மையான பல்கலைக்கழகமாக விளங்கும் கிழக்குப் பல்கலைக்கழகமானது கலை கலாசார பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், தொழில்நுட்ப பீடம் முதலான பல பீடங்களைக் கொண்டு பல்துறைசார் மாணவர்களை உருவாக்கி வருகிறது. இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களைப் போன்று பகிடிவதையையும் அதனோடு இணைந்த பாலியல் வன்முறையையும் முழுமையாகக் குறைக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

புதுமுக மாணவர்களிடையே நட்பை அதிகரித்து உறவை வலுப்படுத்துதல், அவர்களிடையே காணப்படும் வேறுபாட்டைக் களைதல் என்ற போர்வையில் இடம்பெறும் பகிடிவதையும் பாலியல் வன்முறையும் மாணவர்கள் மத்தியில் விரும்பத்தகாத சூழலை ஏற்படுத்தி விடுகின்றது. இவ்வாறான பகிடிவதைசார் செயற்பாடுகள் மாணவர்கள் மத்தியில் பயம், கற்றலில் விரும்பமின்மை, இடைவிலகல், மன அழுத்தம், விரக்தி முதலான சிக்கல்களை ஏற்படுத்தி விடுவதால் முரண்பாட்டுநிலையை தோற்றுவித்துத் சமூக ஒழுங்கிற்கும் அச்சுறுத்தலாகி விடுகிறது.

இலங்கையில் பகிடிவதை உள்ளிட்ட வன்முறைகளுக்கு 1998ஆம் ஆண்டு பகிடிவதைக்கு எதிரான சட்டம், 1995ஆம் ஆண்டின் சாட்சியங்கள் சட்டம், அடிப்படை மனித உரிமை மீறல் சட்டம் என்பன வலுவுள்ள நிலையில் உள்ளதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் காலத்திற்குக் காலம் பகிடிவதைக்கு எதிராகப் பல சுற்று நிருபங்களை அமுல்படுத்தி வருகின்றது. இதைவிட ஆய்வுப் பிரதேசமான கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பகிடிவதையைக் கையாளுவதற்கான பொறிமுறை நடைமுறையில் உள்ளது. இவ்வாறான நிலைமைகளிலும் பகிடிவதையை முழுமையாக குறைக்க முடியாத நிலைமை காணப்படுவதால் புதுமுக மாணவர்கள் உடல், உள, பாலியல்சார் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

புதுமுக மாணவர்கள்மீதான பகிடிவதை மற்றும் பாலியல் வன்முறை குறித்து வெளியாகியுள்ள பல்வேறு தகவல்கள் பல்கலைக்கழகக் கல்வி வட்டாரங்களில் மட்டுமல்லாமல், பொது மக்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், அந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அத்துடன் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதியும் நிவாரணமும் கிடைக்கவும் இனிமேல் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ள பகிடிவதைகளைத் தடுக்கவும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவில்லை (kirushnamogaraj , 2013).

இதனால் பல்கலைக்கழகத்திற்குள் புகும் மாணவர்கள் மத்தியில் பகிடிவதை குறித்த அச்சம் நீக்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு மாணவர்கள் மத்தியில் இயல்பாக இருக்க வேண்டிய நம்பிக்கையையும் ஆர்வத்தையும் இந்த நிலைமை மோசமாகப் பாதித்துள்ளதாகவே பெற்றோர்கள் பலரும் கூறுகின்றனர்.

**இலக்கிய மீளாய்வு**

இந்த ஆய்வானது பகிடிவதை தொடர்பிலான பரவல் தன்மை, போக்கு தொடர்பான இலக்கிய மீளாய்விற்கான ஓர் பார்வையினை வழங்குகின்றது. குறிப்பாக பகிடிவதையின் வரைவிலக்கணம், வரலாறு, இலங்கைச் சூழலில் பகிடிவதையின் பல்வேறு வடிவங்கள், பல்கலைக்கழகத்தின் உப கலாசாரமான பகிடிவதையின் நிலைமை, பகிடிவதையின் பரவலுக்கான காரணங்கள், இளங்கலைமாணிப் பட்டதாரிகளுக்குத் தனிப்பட்ட வாழ்விலும் கற்றல் சூழலிலும் பகிடிவதையினுடைய தாக்கம், பகிடிவதையினால் ஏற்படக்கூடிய பாலியல் ரீதியிலான வன்முறைகள் போன்றன பல்கலைக்கழகத்தில் எவ்வாறான வடிவங்களினைப் பெற்றுள்ளன என்பதனையும் இவ் இலக்கிய மீளாய்வு எடுத்துக்கூறுகின்றது.

அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பாலியல் ரீதியான தன்மையின் முக்கியத்துவம், பல்கலைக்கழகத்தில் வன்முறை மற்றும் பால்நிலையுடன் தொடர்புடைய சட்ட ரீதியான கொள்கை ரீதியான பிரச்சினைகள் தொடர்பிலும் இவ் இலக்கிய மீளாய்வானது ஆராய்கின்றது.

நூல்கள்

1. கருணாநிதி.மா (2005) என்பவரது **"கற்றல் கற்பித்தல் : மேம்பாட்டுக்கான வழிமுறைகள்"** என்ற நூலில், பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளில் அதிகரித்து வரும் பகிடிவதைகள் எனும் தலைப்பில் பல்கலைக்கழகக் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றம், கல்வியில் பல்கலைக்கழக நிர்வாகம் கொண்டுள்ள வகிபங்கு, மாணவர்களின் வினையாற்றல்களை அளவிடுவதற்கான பல்வேறு முறைகள் என்பன பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
2. சின்னத்தம்பி.க (2007) என்பவரது கல்விச் சேவைப் பொன்விழா மலரில் உள்ள **"பல்கலைக்கழகப் பகிடிவதையும் மாணவர்களின் இடைவிலகலும்"** என்கின்ற கட்டுரையில், பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களினால் கனிஸ்ட மாணவர்கள் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உட்பட்டிருக்கின்றனர். இதன் காரணத்தினால் வருடம் நூற்றுக்கு மேற்பட்ட புதுமுக மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியினை விட்டு இடைவிலகுகின்ற நிலைப்பாடும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
3. திருநாவுக்கரசு கமலநாதன் (2012) என்பவரது கல்வியியற் பதிவுகளும் பண்புசார் விருத்தியும் என்ற நூலில், **"தமிழர் பல்கலைக்கழகங்களில் அடையாளங்காணப்படும் அண்மைக்கால பகிடிவதைசார் பிரச்சினையும் பாலியல் வன்முறைகளும்"** எனும் தலைப்பில் தமிழர் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் எதிர் கொள்ளுகின்ற பகிடிவதைசார் பிரச்சினைகள் பற்றி விதந்துரைக்கப்பட்டுள்ளது.
4. சந்திரசேகரன். சோ (2011) என்பவரது சமகால கல்வி முறைகளின் சில பரிணாமங்கள் என்ற நூலில் **"வீழ்ச்சியடைந்துவரும் பல்கலைக்கழக புதுமுக மாணவர்களின் வருகை"** என்ற தலைப்பினூடாக பல்கலைக்கழகக் கல்வி முறையில் புதுமுக மாணவர்கள் எதிர்கொள்ளும் உடலியல், உள, நடத்தைசார்ந்த பிரச்சினைகள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது.

5. சபா. ஜெயராசா (2014) என்பவரின் கற்றல் இடர்பாடுகளும் தீர்வுகளும் என்ற நூலில் **"பாலியல் துஸ்பிரயோகங்களினால் ஒடுக்கப்பட்ட முதலாம் வருட மாணவர்களின் கல்வி"** என்கின்ற தலைப்பினூடாக பல்கலைக்கழக மாணவர்களின் கல்விநிலை தொடர்பாகவும் பல்கலைக்கழக நிர்வாகங்களின் சமத்துவமின்மை பற்றியும் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.
6. தனந்தகுமார், ம, (2006) **"கனவு வாழ்க்கையில் பல்கலைக்கழகம் செய்யும் கோலம்"** எனும் நூலில் சிரேஸ்ட மாணவர்களினால் கனிஸ்ட மாணவர்களுக்கு அசௌகரியத்தினை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் பகிடிவதையானது ஒவ்வொரு கல்வி ஆண்டின் தொடக்கத்திலும் கடுமையான பகிடிவதையினை வடிவமைக்கும் தன்மை காணப்படுகின்றது. குறிப்பாக 1960, 1970 ஆகிய ஆரம்பத்திலும் இது ஓர் தொடர்ச்சியான நிகழ்வாகவே இருந்து வருகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.
7. பாஸ்கரன்,எம், **"பகிடிவதையும் பல்கலைக்கழக பகட்டுக்களும்"** எனும் நூலில் அண்மைக் காலத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நாகரிகமற்ற, பாலியல் தொடர்பான, வேதனை மிகுந்த செயல்களானது பல மட்டங்களிலும் சமூக, மனோவியல் ரீதியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. இவற்றுக்கான காரணங்கள் பற்றியும் அவற்றுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனைகள் குறித்தும் பல்வேறு கருத்துக்களும் ஆதங்கங்களும் சமுதாயத்தின் வெவ்வேறு மட்டங்களிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டன. வடக்கு, கிழக்கு எனப் பிராந்திய ரீதியாகவோ அல்லது இலங்கை முழுவதுமான பண்பாட்டுரீதியாகவோ இன்றி, முதலில் தமிழ்த் தேசிய நோக்கிலிருந்து எமது கல்விப்பரப்பிற்கான ஜனநாயக அடிப்படையில் எமது கல்விப்புலத்தைப் பார்ப்பது இங்கு இன்றியமையாததாகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.
8. கும்பராணன், எஸ், **"கற்றல் செயன்முறையில் பிளவும் பல்கலைக்கழக துணைக் கலாசாரமும்"** எனும் நூலில் குறிப்பிடுவதானது, சட்டத்தால் மட்டும் பகிடிவதையைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதற்கு, இது ஒரு உப பண்பாடாய் வளர்த்தெடுக்கப்பட்டதே காரணம். எமது கல்விப்பரப்பில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே ஜனநாயகம் பேணப்படுக்கின்றதா? அதிகாரக்கட்டமைப்புள்ள எந்தவொரு துறையிலும் உயர் அதிகாரிகளுக்கும் கடைநிலை ஊழியர்களுக்குமிடையே ஜனநாயகம் பேணப்படுகிறதா? ஒரு குடும்ப அமைப்பில், ஆண் - பெண் உறவுகளில் ஜனநாயகம் பேணப்படுகிறதா? எனும் சிந்தனைகள் அனைவர் மத்தியிலும் ஊடுருவுகின்றன.
9. Gamage என்பவர் **"பல்கலையும் பகிடிவதை எனும் வதையும்"** எனும் நூலில் இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் ஆரம்பத்தில் (Early period of university History) கடுமையான பகிடிவதையோ அல்லது சிரமம், தொல்லைப்படுத்தும் செயற்பாடுகளோ இல்லாததனால் ஆரம்ப கட்டங்களில் இப்பகிடிவதையானது சமூகமயமாக்கல் நோக்கங்களுக்கான (Soualizing Purposes) பாதிப்பினையே கொண்டிருந்தது என்கின்றார் (Mild Version).
10. தீபன்ராஜ்,வி, **"பகிடிவதை எனும் இருள்"** எனும் நூலில் பல்கலைக்கழகங்களில் சில அரசியல் சக்திகள் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக்கொள்வதற்காகப் பகிடிவதையை

ஒரு போர்வையாக வைத்துக்கொண்டு, புதிய மாணவர்களைத் தங்கள் பக்கம் ஆளணி சேர்க்கும் பணியைப் பகிடிவதையின் மூலம் நிறைவேற்றிக்கொள்கிறார்கள். இந்த அரசியல் குழுவுக்கும் அதனை எதிர்க்கும் இன்னுமொரு மாணவர் குழுவுக்கும் இடையில் அடிக்கடி பல்கலைக்கழகங்களில் மோதல்கள் ஏற்பட்டு, இரு தரப்பிலும் பலர் நாளாந்தம் காயமடைதல் போன்ற நிகழ்வுகள் எந்நேரத்திலும் நடந்துகொண்டிருக்கின்றன எனும் விடயத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

11. M. Gamage **“பல்கலைக்கழக வாழ்வும் பகிடிவதையின் மோகமும்”** எனும் நூலின் ஊடாக சமீபத்தில் ருஹுணு பல்கலைக்கழகத்தில் பகிடிவதையின் போர்வையின்கீழ் ஒரு அப்பாவி மாணவி படிகட்டிலிருந்து பலவந்தமாக தள்ளிவிடப்பட்டதனால் அந்த மாணவி இன்று எழ முடியாமல் படுத்த படுக்கையில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அந்த மாணவி உயிர் தப்பினாலும் நிரந்தரமாக சக்கர நாற்காலியிலேயே தனது வாழ்க்கையை தொடர வேண்டியிருக்கும் எனக் குறிப்பிடுகின்றார்.
12. அவிஸ்க, அ, **“பண்பாட்டின் சிதைவுகளுக்குப் பல்கலைக்கழகப் பகிடிவதை காரணமா?** எனும் நூலில் பகிடிவதை தொடர்பான முன்வைக்கும் கருத்துக்கள் மூலமாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைசார் செயற்பாடுகளுடன் பல்கலைக்கழக மாணவ அரசியலும் தொடர்புற்றுக் காணப்படுகின்றமை புலனாகின்றது. குறிப்பாக, பல்கலைக்கழகத்தில் சர்வதேச அரசியல் கட்சிகளின் கிளைகள் முறைப்படியாக கட்டமைக்கப்பட்டுள்ளமையும் இவர் சுட்டிக்காட்டுகின்றார்.
13. Premadasa, Wanigasooriya, **“பகிடிவதையும் மாணவர் பண்பாடும்”** எனும் நூலில் வலியுறுத்தப்படுவது, அனைத்துப் பல்கலைக்கழகங்களும் அரசாங்க நிறுவனமாகவே கருதப்படுகின்றது. அத்துடன் வருங்கால மாணவர்களுக்காகக் கிடைக்கும் இருக்கைகளின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டதாகும். குறிப்பாக, 2017இல் 253,330 மாணவர்கள் A/L பரீட்சைக்குத் தோற்றியதுடன் அதில் 163,104 (63%) மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிவாய்ந்தவர்களாவர். ஆனாலும், 24000 (14%) மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகக் கல்விக்கான அணுகலை மேற்கொண்டிருந்தனர் எனும் கருத்தினை 2017 இல் மேற்கொள்ளப்பட்டிருந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் கூறுகின்றது.

**ஆய்வுக் கட்டுரைகள்**

1. Arvind. V., (2017). “Ragging in educational institutes”: a human rights perspective. என்ற ஆய்வுக் கட்டுரையில் அண்மைய வருடங்களில் இப்பகிடிவதையும் பாலியல் ரீதியான வன்முறைகளும் சாதாரண மனித முறைகளிலிருந்து மனிதாபிமானமற்ற முறையிலான, கொடூரமான அளவில் நிகழ்ந்து வருகின்றன. அதற்குரிய காரணம், பல்கலைக்கழகத்தில் இவற்றிற்கான கண்காணிப்புக்கள் மிகவும் குறைந்துள்ளதோடு சுதந்திரத் தன்மையின் நாட்டமும் காணப்படுவது எனும் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.
2. Eastern university, Sri Lanka. (2018). Student charter, Vantharumoolai: Author

3. Mohan, R., & Sobana, S. (2015). Psychosocial study of ragging in selected educational institutions in india, New Delhi, India: Jawaharlal Nehru University. எனும் ஆய்வுக் கட்டுரையில் சிரேஷ்ட மாணவர்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளின் பெறுபேறாக உடலியல் ரீதியாகவும் மனதளவிலும் மாணவர்கள் நோய்வாய்ப்படுவதுடன், உளவியல்சார் தீங்குகளையும் எதிர்கொள்கின்றனர். அத்துடன் இவ்வாறு மாணவர்களின் நடத்துகையானது உடலியல் காயங்களினை ஏற்படுத்தும் அதேவேளை தற்கொலை போன்ற திடீர் முடிவுகளைச் சம்பவிக்கும் நிகழ்விற்கும் காரணமாகின்றது.
4. Shindle, V.G. (2017). The meanace of ragging in educational institues ; a human rights perspective. International journal of advanced research and Development – Volume 2 ; Issue 6 ; November 2017, Derived from www.advancedjournal.com
5. University grand commission. (2012). University student charter. Sri Lanka: Author
6. University grand commission.(2010.01.15). commission circular number 919, Colombo: Author
7. University grand commission. (2014). University student charter. Sri Lanka: Author.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வு பண்புசார் ஆய்வு முறைகளைப் பிரயோகித்து மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்து, ஏற்கனவே ஆவணப்படுத்தப்பட்ட புள்ளிவிபர அறிக்கைகள் போன்ற அளவுசார் முறைகளையும், விடய ஆய்வு, நேர்காணல், அவதானம் முதலான பண்புசார் முறைகளையும் ஒன்றிணைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வாளர் ஆய்வை நகர்த்திச் செல்வதற்குத் தரவு சேகரிப்பு முறையானது உதவுகிறது. அந்தவகையில், ஆய்விற்கு முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**முதனிலைத் தரவுகள்**

விடய ஆய்வு, நேர்காணல் மற்றும் அவதானம் என்பவற்றைக் கொண்டு பெறப்பட்ட முதனிலைத் தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வினாக்கொத்து** : ஆய்வுக்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கியதாக வினாக்கொத்து தயாரிக்கப்பட்டதுடன் திறந்த வினாக்கள், மூடிய வினாக்கள், பல்தேர்வு வினாக்கள் என்பவற்றை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டது. வினாக்கள் ஒவ்வொன்றாக வாசித்துக்காட்டப்பட்டு ஆய்வாளராலே நிரப்பப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன.

**விடய ஆய்வு** : ஆய்வுக் களத்திற்கு நேரடியாகச் சென்று பகிடிவதைக்குள்ளான மாணவ, மாணவிகள் பகிடிவதை மூலம் எவ்வகையான பாதிப்புக்களை அனுபவித்தனர், இதனூடாக அவர்களுக்கு ஏற்பட்ட விளைவுகள் என்ற அடிப்படையில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுடனான கலந்துரையாடல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

**நேர்காணல் :** ஆய்வு ஒழுங்கமைப்பில் முதலாம் வருட விடுதியின் காப்பாளர், முதலாம் வருட புதுமுக மாணவர்கள், மாணவ ஆலோசகர் (student councellor), விரிவுரையாளர்கள், மாணவ ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருடன் ஆய்வு விடயம் தொடர்பில் நேர்காணல் மூலம் தகவல்கள் பெறப்பட்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆய்விலே இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பின்வருவன பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது :

1. காண்பியல் தரவுகள்
2. ஆய்வேடுகள்
3. சஞ்சிகைகள்

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

சில நேரங்களில் மாணவர்களுக்குப் பகிடிவதை மற்றும் பாலியல் வன்முறை இடம்பெறுகின்றன என உடனடித் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டாலும், அதற்கேற்றவாறான நடவடிக்கைகளை எடுப்பது கடினமாகவே உள்ளது. குறிப்பாக நள்ளிரவு நேரங்களில் ஒவ்வொரு அறையிலுமுள்ள (விடுதி அறை) மாணவர்களினையும் அழைத்தால் மாணவர்களின் உறக்கத்திற்கு இடையூறு ஏற்படக் கூடும் என்பதால் விடுதிக் காப்பாளர் இச்செயற்பாடுகளை முற்றுமுழுதாக மேற்கொள்வதில்லை. இத்தகைய கருத்துக்களின் மூலம் பகிடிவதையின் இயல்புத் தன்மை எடுத்துக்காட்டப்படுகின்றது.

மேலும், சில வகையான பகிடிவதைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது தெளிவாகின்றது. குறிப்பாக வாய்மொழி அடிப்படையிலான கொடுமைப்படுத்தும் செயற்பாடுகள் (Verbal Ragging) கையாளப்படுகின்றன. அதாவது, ஆய்வுப் பெறுபேறுகளின்படி முதலாம் வருட மாணவர்கள் வாய் வார்த்தை ரீதியான பகிடிவதைக்கு உள்ளாகின்றமை ஆதாரபூர்வமாக காட்டப்படுகின்றது. 2019 – 2022 வரையான காலப்பகுதிகளில் இவ்வகையான பகிடிவதைத் தாக்கங்கள் அதிகம் கட்டவிழ்த்து விடப்பட்டுகின்றன.. குறிப்பாக, அவதூறான வார்த்தைப் பிரயோகங்களினைப் பயன்படுத்தல், போதைப்பொருளைப் பயன்படுத்த வற்புறுத்தல், விரும்பிய பாடலுக்கு நடனமாட உத்தரவிடல் போன்ற வழிகளின் ஊடாக வற்புறுத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

வாய்மொழி ரீதியான பகிடிவதையினைத் தொடர்ந்து, உடல் ரீதியான பகிடிவதையும் பாலியல்சார் துஸ்பிரயோகங்களும் இடம்பெறுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, வீட்டிலிருந்து அல்லது வெளியில் இருந்து வருகின்ற மாணவர்களைக் காட்டிலும் விடுதி மாணவர்களே அதிகளவிலான உடலியல்சார் சங்கடங்களுக்கு உள்ளாகின்றனர். மாணவ நலக் கிளையினுடைய (Welfare branch) கருத்திற்கமைய உடலியலை அடிப்படையாகக் கொண்டு உந்தப்படுகின்ற பகிடிவதைச் செயன்முறைகள் அரிதாகக் காணப்படினும், சிற்றூண்டிச்சாலை,

தாழ்வாரங்கள், குறுக்கு வீதிகள், பூங்காக்கள், விரிவுரைக்குச் செல்லும் பாதை போன்ற இடங்களில் இவ்வகையான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

இதன் காரணத்தினால் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றுத் தங்கள் கற்றல் நடவடிக்கைகளினை முன்னெடுக்கும் காலப்பகுதிகளில் மாணவர்களின் அக்கறை சார்ந்து சிரேஷ்ட மாணவர்களிடமிருந்து அவர்களினைப் பாதுகாக்கும் நோக்கில் பாதுகாவலர் (Security Guard), மாணவ ஆலோசகர் (Students Counsellor) போன்றோர்களினால் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

**முடிவுரை**

பகிடிவதைக் கலாசாரம் பல்கலைக்கழகச் சமூகத்துள் நன்கு வேரூன்றியிருப்பதோடு, இங்கு கல்வியாளர்கள், மாணவர்கள், நிர்வாகம், பொதுமக்கள் என அனைவரும் இதற்குப் பொறுப்பு கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். எமது பலவீனங்களை ஏற்றுக்கொள்வதுடன், பகிடிவதையை எதிர்ப்பதற்கு மிதமிஞ்சிய வலிமையும் மனத்திடமும் அர்ப்பணிப்பும், ஒற்றுமையும் தேவை என்பதையும் உணர வேண்டும்.

பகிடிவதைச் செயற்பாடுகள் அனைத்தும் ஒரே மாதிரியானவையோ சமனானவையோ அல்ல என்பதையும் கருத்திற்கொள்ளுதல் அவசியம். முக்கியமாக, இவ்வாறான கொள்கைகளும் சட்டங்களும் மாணவச் செயற்பாடுகள், கல்விச் சுதந்திரம், ஜனநாயகம் போன்றவற்றைப் பாதிக்காத வகையில், கலந்துரையாடல்கள், தர்க்கங்கள், வாதங்கள் போன்ற ஜனநாயகத்திற்கு ஏற்புடைய வழிகள் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


Ahmed, S. (2018). “Complaint as feminist pedagogy. Annual Review of Critical Psychology”. p15, 16-49.

Aliyu, A. A., Bello, M. U., Kasim, R., & Martin, D. (2014). “Positive and Non-Positive Paradigm in Social Science Reseach”: Conflicting paradigme or Perfect Partners? Journal of Management and sustainability, 4(3).

Allen, E. & Madden, M. (2012). “The nature and extent of college student hazing”. International Journal of Adolescent Medicine and Health, 12(1) 83-90.

Alshenqeeti, H., (2014) “Interviewing as a Data Collection Method”: A Critical Review, English Linguistics Research, 3(1): 39-45

Axemo, P., Wijewardena, K., Fonseka, R., Cooray, S., & Darj, E. (2018). “Training University teachers and student in Sri Lanka on Gender Based Violence”: testing of a participatory training program.

Bacchi, C. (1999). “Changing the harassment agenda”. In Moira Gates and Alison Mackinnon (eds.), Gender and institutions: Welfare, work and citizenship, Cambridge: Cambridge

Baxter, P., & Jack, S. (2008). “Qualitative Case Study Methodology: Study Design and Implementation for Novice Researchers”. The Qualitative Report, 13(4), 544-559. https://doi.org/10.46743/2160-3715/2008.1573

Bertsch, A., & pham, L. (2012). “AGuide to Multivariate Analysis in Cross Cultural Research”. Journal of International Doctoral Research, 01(01)

Bluhm, D.J., Harman, W., Lee, T.W and Mitchell, T.R (2010) “Qualitative Research in Management”: A Decade of Progress, Journal of Management Studies: (1-26)

Bourdieu & Wacquant (1992). “An Invitation to reflexive sociology”. Cambridge: Polity.

Bryman, A. (2016). “Social Research Methods”. Oxford University Press.

Campo, S., Poulo., G., & Sipple, J. W. (2005). “Prevalence and profiling: Hazing among college students and points of intervention”. American Journal of Health Behavior, (137-143)

Chitkara University Himachal Pradesh, (2009), Anti Ragging Policy. Available from:http://chitkarauniversity.in/dnn/Admissions/AntiRagging/tabid/94/Default.aspx

Commission, U.G.C (2009, June). https://www.chitkarauniversity.edu.in/anti-ragging-policy/. Retrieved from https://www.chitkara.edu.in/.

Connell RW, (1987), Gender and Power, Stanford University Press, Stanford. Cited: University Grants Commission, Federation of University Teachers' Associations, CARE International Sri Lanka, 2015, Preventing Sexual and Gender- based Violence. Available from: http://www.care.org/

Chopra, M., (2009) “Ragging in Educational Institutes: A Human Rights Perspective”, Guru Gobind Singh Indrap rastha http://www.legalserviceindia.com University. Delhi. Available from:

Creswell, J. W. (2009). Research Design: Qualitative, Quantitative, and Mixed Method Approaches, sage publication.

Dahl, E.; Niedbala, E. M., Hohman, Z. P. (2019) Loving the Group That Denies You First: “Social Identity Effects of Ostracism Before Inclusion”. Personality and Social Psychology Bulletin, 45(2), 284-299. DOI: 10.1177/0146167218784901.

"Department of Census and statistics of Sri Lanka", (2017). Sri Lanka [online] available from: http://statistic.gov.lk/poverty/monthly/index.htm

Dominguez, S., & Menjivar, C. (2014). "Beyond individual and visible acts of violence": A framework to examine the lives of women in low-income neighborhoods. Women's Studies International Forum, 44(1), 184-195.

Eeuwijk, P. V., & Angehrn, Z. (n.d.). How to conduct a focus group discussion. 2017. Retrieved from Https://www.researchgate.net/publication/324075132

Fernando AD, Karunasekera W., (2011), "Review of Research Evidence on Gender Based Violence" (GBV) in Sri Lanka, Sri Lanka Medical Association, Colombo

Fortier, S. P. (2018). "Comprehensive Overview of the Problem of Violence Against Athletes in Sport". Journal of Sport & Social Issues, 227-245.

García-Moreno, C., Jansen, H. A. F. M., Ellsberg, M., Heise, L., & Watts, C. (2005), "WHO Multi-country study on Women's Health and Domestic Violence against Women Initial results on prevalence" health outcomes and women's responses, Geneva: WHO.

Garg, Rajesh. (2009) Ragging: A public health problem in India. Indian Journal of Medical Sciences, 63(26), 263-271. DOI: 10.4103/0019-5359.53401.

Gamage, S. (2017). "Psychological, sociological, and political dimensions of ragging in Sri Lankan universities". Social Affairs. 1(7), 13-21.

Gunawardena, C. (2010/2011). "Translating education policy into action in Sri Lanka". Sri Lanka Journal of Social Sciences, 33/34 (1 & 2), 15-24.

Gunawardena, N., Weerasinghe, M., Rajapaksa, L., Weerasekera. P. and Chathurangana, P. W

# உளவளத்துணைச் செயற்பாடுகளும் ஒழுக்கப் பிரயோகங்களும் - ஓர் ஆய்வு

**T.Nimesha**

Department of Philosophy and Value Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

nimeshathiyagaraja1@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தற்கால உலகில் மனிதன் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் உளப்பிரச்சினைகள் முக்கியமானவை. இதற்கான ஒரு பிரதான தீர்வாக உளவளத்துணை பிரயோகிக்கப்படுகின்றது. இது மருத்துவமனைகள், நீதிமன்றங்கள், குழந்தை பராமரிப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவன அமைப்புகள் முதலியவற்றால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் முக்கியத்துவம் காரணமாக இது தவறாகப் பயன்படுத்தப்படுவதும் உண்டு. தகுந்த பயிற்சியின்மை, இதன் முக்கிய அம்சங்களை உணராமை முதலியன இதற்குக் காரணங்களாக அமைகின்றன. ஆற்றுப்படுத்துதல், ஆலோசனை வழிகாட்டல் முதலிய பதங்களாலும் குழப்பகரமாக இது பயன்படுத்தப்படுகின்றது. இச்செயற்பாட்டின்போது ஒழுக்க ரீதியான அம்சங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். இந்நிலையில், அது எவ்வாறு இடம்பெறுகின்றது, ஒழுக்க நியமங்கள் மீறப்படுகின்றனவா என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதே இவ்வாய்வாகும். இவ்வாய்வு உளவளத்துணையின் தற்காலப் போக்கை விளக்குதல், உளவளத்துணைச் செயற்பாட்டில் ஒழுக்க விடயங்களின் நிலையை ஆராய்தல், பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைத்தல் ஆகிய ஆய்வு நோக்கங்களைக் கொண்டுள்ளது. தகவலறிந்த ஒப்புதல், இரகசியத்தன்மை, கலாசார திறன், சேவைநாடியின் சுயமதிப்பு, தொழில்முறை எல்லைகள், நெறிமுறை முடிவெடுத்தல் மற்றும் மேற்பார்வை, பொறுப்புக்கூறல் முதலிய முக்கிய நெறிமுறை பரிசீலனைகளை இது ஆராய்கிறது. மனித மனங்களின் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதால் பண்புசார் ஆய்வு முறை பயன்படுத்தப்படுகின்றது. ஆழ்நிலை நேர்காணல் (In-depth interview) முதலாம்நிலைத் தரவு மூலமாகவும் நூல்கள் மற்றும் ஆய்விதழ் கட்டுரைகள் என்பன இரண்டாம்நிலைத் தரவு மூலங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. இந்தக் காரணிகளை ஆராய்வதன் மூலம், ஆராய்ச்சி நெறிமுறை நடைமுறைகளின் தற்போதைய நிலை பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. அத்தோடு முன்னேற்றத்திற்கான உத்திகளை முன்மொழிகிறது. பல்வேறு துறைகளில் ஆலோசனை நடவடிக்கைகள் நெறிமுறை, பயனுள்ள மற்றும் சேவைநாடிகளின் உரிமைகளை மதிக்கும் வகையில் நடத்தப்படுவதை உறுதி செய்வதே இறுதி இலக்காகும். இச்சேவை சமூகங்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் நம்பிக்கைக்குப் பங்களிக்கிறது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள், ஆலோசனைத் தொழிலுக்குள் நெறிமுறைச் சிறப்பின் கலாசாரத்தை வளர்ப்பதில் பயிற்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழிகாட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *உளவளத்துணை, ஒழுக்கப் பிரயோகம், சேவைநாடி, உளவளத்துணையாளர்.*

**அறிமுகம்**

இன்றைய உலகில் உளவளத்துணையின் தேவையானது மிக அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. மனிதன் அன்றாடம் ஏதோ ஒரு பிரச்சினையைச் சந்திக்கக்கூடிய ஒருவனாகக் காணப்படுகின்றான். பிரச்சினையிலிருந்து வெளியேறி மனநிறைவுடன் வாழ்வதற்கு ஆற்றுப்படுத்தல் இன்றியமையாத ஒன்றாக அமையப்பெற்றுள்ளது. அந்தவகையில், உளவளத் துணைக்கென்று ஓர் ஒழுக்கக் கொள்கை காணப்படுகிறது. அதனைப் பற்றிய விவரிப்பாகவும் அதனை மேம்படுத்துவதாகவும் இவ்வாய்வானது அமையப்பெற்றுள்ளது.

உளவளத்துணையில் ஒழுக்கம் எனும் செயற்பாடு அறம் சார்ந்து மிக முக்கியமானதாகும். உளவளத்துணையாளருக்கும் சேவைநாடிக்கும் இடையே உளவளத்துணைச் செயற்பாடு நிகழும்போது சேவைநாடி தன் ‘‘சுயத்தை இழத்தல்’’ நிலை ஏற்படுகிறது. இதன்போது தனிப்பட்ட விடயப் பிரச்சினை, வாழ்க்கைமுறை, வெளியில் சொல்ல முடியாத இரகசியம் என்பவற்றை எல்லாம் துணைநாடி உளவளத்துணையாளருடன் பகிர்ந்து கொள்கின்றார். இதனால் துணைநாடி தொடர்பான விடயங்களையும் உளவளத்துணையாளர் அறிந்துகொள்வதனால் உளவளத்துணையில் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற உளவியற் சங்கங்கள் உளவளத்துணை ஒழுக்கங்கள் தொடர்பான பல நியமங்களைத் தந்துள்ளது.

உளவளத்துணைச் செயற்பாடானது பல நிறுவனங்களில் இடம்பெற்று வருகின்றது. அதில் குறிப்பாக வைத்தியசாலை, நீதிமன்றம், சிறுவர் பராமரிப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பிரிவு, அரசு சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றில் உளவளத்துணைச் செயற்பாடானது பரந்தளவில் முன்னெடுக்கப்படுகிறது. நிறுவனங்களில் உளவளத்துணை நடவடிக்கைகளில் ஒழுக்கக் கொள்கைகளின் பயன்பாட்டை ஆராய்ந்து மேம்படுத்துவதையே இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒழுக்கக் கொள்கை முறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் சேவைநாடிக்கு வழங்கப்படும் சேவையை மேம்படுத்த முடியும்.

ஒழுக்க நடைமுறைகள் பயனுள்ள மற்றும் மரியாதைக்குரிய உளவளத்துணையின் மூலக்கல்லாகும். சேவைநாடிக்கும் உளவளத்துணையாளர்களுக்கும் இடையிலான நம்பிக்கையை உருவாக்கும் அடித்தளத்தை அவை கொண்டுள்ளன. வைத்தியசாலை, நீதிமன்றம், சிறுவர் பராமரிப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பிரிவு, அரசு சார்பற்ற நிறுவனங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளில் உளவளத்துணை நடவடிக்கைகளில் ஒழுக்க ஒருமைப்பாட்டை உறுதிசெய்வது முக்கியமானது. இந்த அமைப்புகள் தனித்துவமான ஒழுக்க சவால்களை முன்வைக்கின்றன. அவை மிக உயர்ந்த தரமான கவனிப்பை வழங்குவதற்கும் தொழில்முறை தரநிலைகளை நிலைநிறுத்துவதற்கும் கவனிக்கப்பட வேண்டும்.

சேவைநாடியின் இரகசியத்தைப் பாதுகாத்தல் கட்டாயமானது. அனைத்துச் சேவைநாடியின் தகவல்களையும் பாதுகாப்பது மற்றும் அமர்வில் பகிரப்பட்டவை தனிப்பட்டதாக இருப்பதை உறுதிசெய்வது ஆகியவை இதில் அடங்கும். இரகசியத்தன்மை மீறல்கள் நம்பிக்கையை இழந்து, சேவைநாடிக்குத் தீங்கு விளைவிக்கும். இதே போன்று தகவலறிந்த ஒப்புதல் சேவைநாடிகள் செயல்முறையின் தன்மையை முழுமையாகப் புரிந்துகொள்வதை

உறுதிசெய்கிறது, இதில் சாத்தியமான அபாயங்கள், நன்மைகள் மற்றும் மாற்றுகள் அடங்கும். இது சேவைநாடிகளுக்கு உளவளத்துணையில் அவர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாடு பற்றிய தகவலறிந்த முடிவுகளை எடுக்க அதிகாரம் அளிக்கிறது.

தொழில்முறை சார்ந்த எல்லைகள் பற்றிய விடயம் அடுத்து கவனிப்புக்குரியதாகும். தெளிவான தொழில்முறை எல்லைகளை நிறுவுவது இரட்டை உறவுகள் மற்றும் மோதல்களைத் தடுக்க உதவுகிறது. சிகிச்சை உறவின் தொழில்முறை மற்றும் ஒருமைப்பாட்டைப் பராமரிக்க உளவளத்துணையாளர்கள் இந்த எல்லைகளைக் கவனமாக வழிநடத்த வேண்டும். இதே போன்று திறன் மற்றும் தொடர்ச்சியான கற்றல், தொடர்ச்சியான கல்வி மற்றும் தொழில்முறை வளர்ச்சி மூலம் தங்கள் திறனைப் பராமரிப்பது உளவளத்துணையாளர்களின் பொறுப்பாகும். துறையில் சமீபத்திய ஆராய்ச்சி, நுட்பங்கள் மற்றும் ஒழுக்கக் கொள்கை தரநிலைகள் குறித்துப் புதுப்பித்த நிலையில் இருப்பது இதில் அடங்கும்.

தனித்துவமான ஒழுக்க நியமங்களுள் கலாசார உணர்திறன் முக்கியமானதாகும். உளவளத்துணையாளர் கலாசார ரீதியாக திறமையானவர்களாக இருக்க வேண்டும், தங்கள் சேவைநாடிகளின் மாறுபட்ட பின்னணிகள் மற்றும் முன்னோக்குகளைப் புரிந்துகொண்டு மதிக்க வேண்டும். கலாசார வேறுபாடுகளைப் பற்றி அறிந்திருப்பதும், உள்ளடக்கிய மற்றும் பயனுள்ள கவனிப்பை வழங்குவதற்காக இந்த விழிப்புணர்வை அவர்களின் நடைமுறைகளில் ஒருங்கிணைப்பதும் இதில் அடங்கும். பாதிக்கப்படக்கூடிய மக்களுடன் பணிபுரிதல், குழந்தைகள், முதியவர்கள் அல்லது அதிர்ச்சியை அனுபவித்த தனிநபர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு வழங்குவதற்குச் சிறப்பு ஒழுக்க கொள்கை பரிசீலனைகள் தேவையாகும். இந்தச் சேவைநாடிகள் பொருத்தமான ஆதரவையும் பாதுகாப்பையும் பெறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த உளவளத்துணையாளர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வொழுக்க சவால்களை முறையாக எதிர்கொள்வதன் மூலமும், ஒழுக்க நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலமும், உளவளத்துணையாளர் மிக உயர்ந்த தரமான கவனிப்பை வழங்குவதை உறுதிசெய்ய முடியும். இது சேவைநாடிகளுக்குப் பயனளிப்பது மட்டுமல்லாமல், உளவளத்துணைத் தொழிலை வலுப்படுத்துகிறது. ஒருமைப்பாடு மற்றும் சிறப்பான கலாசாரத்தை வளர்க்கிறது. இதையொட்டி, இந்த அணுகுமுறை சேவைநாடிகள் தங்கள் உளவளத்துணையாளர்கள் மற்றும் செயல்முறைமீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் பராமரிக்க உதவுகிறது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது கோட்பாடு மற்றும் நடைமுறை என்ற இரு விடயங்களையும் இணைத்துச் செல்கின்றது. ஒழுக்கக் கோட்பாடு, உளவளத்துணைக் கோட்பாடு மற்றும் இவை இரண்டின் பிரயோகம் என்பனவே இதன் மைய விடயங்கள் ஆகும். இதனால் முதலாம் தர மூலங்கள், இரண்டாம் தர மூலங்கள் எனும் இரண்டும் பயன்படுத்தப்படுகின்றன. பனிப்பந்து மாதிரி முறையைப் பயன்படுத்தி முக்கிய நபர்களை அறிந்து, அவர்களுடன் ஆழ்நிலைப் பேட்டி மூலம் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. நூல்கள், ஆய்வு கட்டுரைகளில் இருந்து இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வு மனித நடத்தையுடன் சம்பந்தப்பட்டதால் பண்புசார்

ஆய்வு முறையே பயன்படுத்தப்பட்டது. பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பண்புசார் ரீதியாக ஆராயப்பட்டு முடிவு பெறப்பட்டது.

**இலக்கிய மீளாய்வு**

உளவளத்துணைச் செயற்பாட்டில் ஒழுக்க நியமங்களின் பிரயோகம் பற்றிப் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் கார்மல் ப்ரோக்டர் என்பவரால் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உளவியல் சிகிச்சையில் நல்லொழுக்க நெறிமுறைகள் என்ற ஆய்வு குறிப்பிடத்தக்கது. அவ் ஆய்வில் கோட்பாட்டு உளவியலாளர்கள் மற்றும் தத்துவவாதிகள் மனோதத்துவ நடைமுறையில் நல்லொழுக்க நெறிமுறைகளைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ளத் தொடங்கியுள்ளனர் என்பது விளக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் உளவியல் சிகிச்சை நடைமுறையில் நல்லொழுக்க நெறிமுறைகள் பற்றிய விவாதத்துடன் பணி முடிவடைகிறது என்பது குறிப்பிடப்படுகின்றது. அரிஸ்டோட்டலின் நல்லொழுக்க நெறிமுறைகள் உளவியல் சிகிச்சையில் ஆய்வு மற்றும் ஆய்வுக்காக வழங்கப்பட்டது என இவ் ஆய்வு பரிந்துரை செய்கிறது.

இதே போன்று **அப்துல் மு.ஃபித் என்பவரால் 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட, ஆலோசனையில் தார்மீக மற்றும் ஆன்மீக அம்சங்கள் என்ற ஆய்வில்** ஆலோசனையின் தார்மீக மற்றும் ஆன்மீக பரிமாணங்களை முன்வைக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையில் ஆன்மிகம் என்பது தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு மையமானது என்பதைப் புதிய அணுகுமுறை காட்டுகிறது. ஆன்மிகத்திற்கும் பொது உளவியல் ஆரோக்கியத்திற்கும் உள்ள தொடர்பைச் சிகிச்சையாளர்கள் ஆராய்கின்றனர். உளவியல் சிகிச்சை ஒரு அறநெறி நிறுவனமாக அதன் பயிற்சித் திட்டத்தில் மாற்றம் தேவைப்படுகிறது என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது.

கிர்ஸ்டன் போஸ்லன்ஸ், டெர்ரி லின் கால் என்பவர்களால் 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுய-கவனிப்பு என்ற ஆய்வில் மன அழுத்தம், சோர்வு மற்றும் தொழில்முறைக் குறைபாடு ஆகியவை மனநல நிபுணர்களிடையே பரவலாக உள்ளது. அவை அவர்களின் மருத்துவ வேலைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதே நேரத்தில் சுய-கவனிப்பில் ஈடுபடுவது சிகிச்சையாளர் நல்வாழ்வை மேம்படுத்த உதவும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வு மனநலப் பயிற்சியாளர்களிடையே நல்வாழ்வை மேம்படுத்துவதில் சுய-கவனிப்பின் பங்கை ஆராய்கிறது. குறிப்பாக, விழிப்புணர்வு, சமநிலை, நெகிழ்வுத்தன்மை, உடல் ஆரோக்கியம், சமூக ஆதரவு மற்றும் ஆன்மீகம் உள்ளிட்ட சுய-கவனிப்பு நடைமுறையின் குறிப்பிட்ட களங்கள் தொடர்பாக அனுபவ ஆராய்ச்சி போன்றவற்றை இந்த ஆய்வு பரிந்துரை செய்கின்றது.

லாரன்ஸ் கோல்பெர்க், ரிச்சர்ட் ஹெர்ஷ் ஆகியோரால் 1977 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தார்மீக வளர்ச்சி என்ற ஆய்வு கற்பித்தல் நடைமுறையில் தார்மீக வளர்ச்சிக் கோட்பாட்டின் பயன்பாட்டை விரிவுபடுத்துகிறது. பின்வரும் கட்டுரைகள் ஒவ்வொன்றும் அறிவு மற்றும் ஆராய்ச்சியின் அடிப்படையில் தங்கியிருக்கின்றன. அவை விரிவாக மதிப்பாய்வு செய்யப்பட்டால், புத்தக நீள சிகிச்சை தேவைப்படும். இந்த இதழில் உள்ள நூல் விவரங்கள், அறிவாற்றல் தார்மீக வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் ஆராய்ச்சியில் ஒரு நியாயமான அடித்தளத்திற்கான

போதுமான பின்னணியை வாசகருக்கு வழங்கும். இக்கட்டுரையின் நோக்கம் அறநெறி வளர்ச்சி இலக்கியத்தில் பொதிந்துள்ள முக்கிய கருத்துகளை மதிப்பாய்வு செய்வதாகும் என இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகிறது.

இதே போன்று, தோமஸ் டி பார்சன்ஸ் என்பவரால் 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மனநோயியல் கோளாறுகளின் மதிப்பீடு மற்றும் சிகிச்சையில் மெய்நிகர் சூழல்களைப் பயன்படுத்துவதற்கான நெறிமுறைச் சவால்கள் என்ற ஆய்வில் ஆராய்ச்சி மற்றும் நடைமுறைகளுக்கான மெய்நிகர் சூழல்களின் சாத்தியக்கூறுகளில் மருத்துவர்கள் அதிகளவில் ஆர்வம் காட்டுகின்றனர். மதிப்பீடு மற்றும் சிகிச்சைக்கான இந்தப் புதுமையான தொழில்நுட்பங்கள் குறித்து அதிக அளவில் கலந்தாலோசிக்கப்பட்டாலும், இந்த தொழிநுட்பங்கள் மருத்துவ ரீதியாகப் பயன்படுத்தப்படும்போது ஏற்படக்கூடிய நெறிமுறைச் சவால்களைச் சுற்றிக் குறைவான சொற்பொழிவுகள் நடந்துள்ளன என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஆலோசனை தொடர்பான பிரச்சினைகள் சார்பாகவும் சில ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் லன் பி ரஸ்ட் என்பவரால் 1995 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆலோசனைக்கான சர்வதேச ஆலோசகர் வலையமைப்பின் பயன்பாடுகள் என்ற ஆய்வில் கடந்த 3 ஆண்டுகளில், கவுன்சிலிங் தொடர்பான யோசனைகள் மற்றும் கருத்துக்கள் மின்னல் வேகத்தில் நாடு முழுவதும், உலகம் முழுவதும்கூட முன்னும் பின்னுமாக பரந்து வருகின்றன. பல ஆலோசகர்கள் சர்ச்சைக்குரிய விடயங்களில் கடுமையான விவாதங்களில் பங்கேற்றுள்ளனர் அல்லது கேட்டுள்ளனர். இன்னும் பலர் தகவல் அல்லது ஆதாரங்களுக்கான கோரிக்கைகளுக்கு விரைவாக பதிலளித்துள்ளனர். இணையத்தில் இயங்கும் மின்னஞ்சல் கலந்துரையாடல் குழுவான International Counselor Network (ICN) இந்த வாய்ப்புகளை வழங்கியது என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**டிஜிஸ்ட் வுஹிப் சேகா** என்பவரால் 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட **பள்ளி ஆலோசனையின் நெறிமுறை முடிவெடுக்கும் அணுகுமுறைச் செயல்களை மேற்கொள்வதற்கான ஒரு கூட்டு முறைகள் எனும் ஆய்வின்** முக்கிய நோக்கம் பள்ளி ஆலோசனையில் நெறிமுறை முடிவெடுக்கும் அணுகுமுறைகளைக் கண்டறிவதாகும். எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவில் உள்ள மேல்நிலைப் பள்ளி ஆலோசகர்களின் அனுபவங்களில் இந்த ஆய்வு கவனம் செலுத்தியது. இவ்வாய்வில் கருப்பொருள் பகுப்பாய்வு நுட்பத்தை பயன்படுத்தி தரமான தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**நிக்கோல் கா.்.ப்மேன் என்பவரால் 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கைதிகளின் ஒருங்கிணைப்பு எனும் ஆய்வு** அரசு சாரா நிறுவனங்களால் முன்னாள் கைதிகளை வரவேற்பது பற்றிய பகுப்பாய்வில் குடியுரிமை பற்றிய ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு என்ற கருத்தைக் கொண்டுவருகிறது. சிகிச்சை மற்றும் வேலை சார்ந்த பொருளாதார ஒருங்கிணைப்பை வலியுறுத்தும் பரந்த ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்தும் தன்னார்வ நிறுவனங்களை இங்கு வேறுபடுத்தப்படுகிறது என இவ்வாய்வானது பரிந்துரை செய்கின்றது.

**தரவுகளின் பகுப்பாய்வு**

மனநலப் பட்டறைகள் நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் உட்பட நீதிமன்ற ஊழியர்கள் பெரும்பாலும் அவர்களின் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடிய மன அழுத்த சூழ்நிலைகளைக் கையாள்கிறார்கள். மன அழுத்த மேலாண்மை, நினைவாற்றல் மற்றும் பின்னடைவு குறித்த பட்டறைகளை வழங்குவது அவர்களின் பாத்திரங்களின் கோரிக்கைகளைச் சமாளிக்க உதவும். சக ஆதரவுத் திட்டங்கள் நீதிமன்ற அமைப்பிற்குள் சக ஆதரவுத் திட்டங்களை நிறுவுவது ஊழியர்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் அனுமதிக்கிறது. இத்திட்டங்கள் தனிமை உணர்வுகளைக் குறைக்கலாம் மற்றும் அவர்களின் வேலையின் தனித்துவமான சவால்களைப் புரிந்துகொள்ளும் சக ஊழியர்களின் வலையமைப்பை வழங்கலாம். பணியாளர் உதவித் திட்டங்கள் (EAP) இரகசிய ஆலோசனை, நெருக்கடி, தலையீடு மற்றும் மனநல வளங்களை உள்ளடக்கிய EAP சேவைகளை வழங்குவது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை அழுத்தங்களை நிர்வகிப்பதில் நீதிமன்ற ஊழியர்களை ஆதரிக்கும். ஆரோக்கியமான மற்றும் உற்பத்தி செய்யும் பணிச்சூழலைப் பராமரிக்க இத்திட்டங்கள் இன்றியமையாதவை.

இரட்டை வேடங்கள் மற்றும் ஆர்வ முரண்பாடுகள் மட்டக்களப்பு போன்ற சிறிய சமூகங்களில், ஆலோசகர்கள் சேவைநாடிகளுடன் பல உறவுகளைக் கொண்ட சூழ்நிலைகளை எதிர்கொள்ளலாம். அதாவது, தொழில்முறை அமைப்பிற்கு வெளியே அவர்களைத் தனிப்பட்ட முறையில் அறிந்திருப்பது ஆகும். இவ்விரட்டைப் பாத்திரங்களை நெறிமுறை ரீதியாக நிர்வகிப்பது தொழில்முறை எல்லைகளையும் நம்பிக்கையையும் பராமரிக்க முக்கியமானது. சிக்கலான சந்தர்ப்பங்களில் தகவலறிந்த ஒப்புதல் சிறுவர்கள் அல்லது அறிவாற்றல் குறைபாடுகள் உள்ள தனிநபர்கள் சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களில், தகவலறிந்த ஒப்புதலைப் பெறுவது சவாலானது. ஒப்புதல் செயல்முறை முழுமையாக இருப்பதையும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் பாதுகாவலர்கள் சிகிச்சையின் இயல்பு மற்றும் தாக்கங்களை முழுமையாகப் புரிந்துகொள்வதையும் ஆலோசகர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

சட்ட அறிக்கையிடல் தேவைகள், குழந்தை துஷ்பிரயோகம் அல்லது தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தல்கள் போன்ற சில தகவல்களைக் கட்டாயமாகப் புகாரளிப்பதற்கான தேவைகளை ஆலோசகர்கள் வழிநடத்த வேண்டும். இந்தச் சட்டபூர்வக் கடமைகளைச் சேவைநாடியின் இரகசியத்தன்மையைப் பராமரிக்கும் தேவையுடன் சமநிலைப்படுத்துவதற்குக் கவனமாக பரிசீலிக்கப்படுவதும் அறநெறி வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதும் தேவைப்படுகின்றன.

நீதிமன்றங்களின் சூழலில் இரகசியத்தன்மையைப் பேணுவது மிக முக்கியமானது. ஆனால், அது தனித்துவமான சவால்களுடன் வருகிறது. ஆலோசகர்கள் சேவைநாடிகளுக்கு இரகசியத்தன்மையின் வரம்புகளைத் தெளிவாக விளக்க வேண்டும். நீதிமன்றக் கட்டளை அமைப்புகளில், உதாரணமாக, தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தல்கள் அல்லது தற்போதைய துஸ்பிரயோகத்திற்கான சான்றுகள் போன்ற சில தகவல்களை வெளியிட சட்டபூர்வ கடமைகள் இருக்கலாம். சேவைநாடிகள் இந்த எல்லைகளைப் புரிந்துகொள்வதையும் நீதிமன்றங்களுடன்

என்ன தகவல்கள் பகிரப்படலாம் என்பது குறித்த தகவலறிந்த ஒப்புதலை வழங்குவதையும் ஆலோசகர்கள் உறுதிசெய்கிறார்கள்.

தகவலறிந்த ஒப்புதலை உறுதிசெய்வது என்பது சேவைநாடிகளுக்கு ஆலோசனைச் செயல்முறை பற்றிய விரிவான தகவல்களை வழங்குவதை உள்ளடக்குகிறது. இதில் நோக்கங்கள், நடைமுறைகள், அபாயங்கள் மற்றும் சாத்தியமான நன்மைகள் ஆகியவை அடங்கும். நீதிமன்றத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட ஆலோசனையில் இது மிகவும் முக்கியமானது. அங்கு சேவைநாடிகள் பங்கேற்கக் கட்டாயப்படுத்தப்படலாம். மட்டக்களப்பில் ஆலோசகர்கள் பெரும்பாலும் பல்வேறு கலாசாரப் பின்னணியிலிருந்து சேவைநாடிகளைச் சந்திக்கிறார்கள். அதாவது, தெளிவு மற்றும் புரிதலை உறுதிப்படுத்த அவர்கள் தங்கள் தகவல்தொடர்பு முறைகளை மாற்றியமைக்க வேண்டும். ஆலோசனைச் செயல்முறையை விளக்குவதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் அல்லது கலாசார ரீதியாக பொருத்தமான ஒப்புமைகளைப் பயன்படுத்துவது இதில் அடங்கும்.

சிறிய சமூகங்களில் மக்கள் தொகையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட தன்மை காரணமாக இரட்டை உறவுகள் அதிகமாக உள்ளன. ஆலோசகர்கள் இரட்டை உறவுகளை அடையாளம்கண்டு நிர்வகிப்பதில் விழிப்புடன் இருக்க வேண்டும். இதனால் நலன் முரண்பாடுகளைத் தவிர்க்க முடியும். உதாரணமாக, ஒரு ஆலோசகர் ஒரு வாடிக்கையாளரை சமூக வட்டங்கள் அல்லது சமூக நிகழ்வுகள் மூலம் அறிந்திருக்கலாம். தனிப்பட்ட உறவுகள் சிகிச்சை செயல்முறையைப் பாதிக்காது என்பதை உறுதிப்படுத்தத் தொழில்முறை எல்லைகளைப் பராமரிப்பது அவசியம்.

நீதிமன்ற ஆலோசகர்கள் தடயவியல் ஆலோசனையில் சிறப்பு பயிற்சிப் பெற்றிருக்க வேண்டும். உள்ளூர் சட்ட முறைமை பற்றிய புரிதல் இருக்க வேண்டும். இந்தத் திறனில் சமீபத்திய உளவியல் ஆராய்ச்சி, சட்டத் தரநிலைகள் மற்றும் கலாசார திறன்களுடன் புதுப்பித்த நிலையில் இருப்பது அடங்கும். தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு மற்றும் அனுபவம் வாய்ந்த தடயவியல் உளவியலாளர்களின் மேற்பார்வையைப் பெறுவது ஆலோசகர்கள் மிக உயர்ந்த தரமான கவனிப்பை வழங்குகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த உதவுகிறது.

மாறுபட்ட கலாசார நிலப்பரப்பைக் கருத்திற்கொண்டு, ஆலோசகர்கள் கலாசார ரீதியாகத் திறமையானவர்கள் மற்றும் வெவ்வேறு பின்னணியிலிருந்து வரும் சேவைநாடிகளின் தனித்துவமான தேவைகளுக்கு உணர்திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும். சட்ட அமைப்பு மற்றும் மன ஆரோக்கியத்தின் சேவைநாடியின் அனுபவத்தைப் பாதிக்கக்கூடிய கலாசார விதிமுறைகள், மதிப்புகள் மற்றும் நடைமுறைகளைப் புரிந்துகொள்வது இதில் அடங்கும். ஆலோசகர்கள் கலாசார உணர்திறன் பயிற்சியில் கலந்துகொள்ளலாம். உள்ளூர் கலாசாரத் தலைவர்களுடன் ஒத்துழைத்து அவர்களின் புரிதலை மேம்படுத்தலாம் மற்றும் சேவை வழங்கலாம் போன்றவை காணப்படுகின்றன.

நீதிமன்றங்களில் உள்ள ஆலோசகர்கள் தங்கள் சேவைநாடிகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வுக்காக வாதிடுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தங்கள் சேவைநாடிகளின்

மனநலத் தேவைகள் சட்ட நடவடிக்கைகளில் கருத்திற்கொள்ளப்படுவதையும், சேவைநாடிகள் நியாயமான சிகிச்சையைப் பெறுவதையும் அவர்கள் உறுதிசெய்கிறார்கள். வழக்கறிஞர்கள் பெரும்பாலும் தண்டனை, மறுவாழ்வு மற்றும் ஆதரவு சேவைகளுக்கான பரிந்துரைகளை வழங்கச் சட்ட நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நீட்டிக்கப்படுகிறது.

நீதிமன்றங்கள், தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மனநல நிபுணர்களுக்கு இடையிலான ஒத்துழைப்புகளை ஆவணப்படுத்துவது பல ஒழுங்குமுறை அணுகுமுறையின் நன்மைகளைக் காட்டுகிறது. உதாரணமாக, சூரியா மகளிர் மேம்பாட்டு மையம் போன்ற உள்ளூர் நிறுவனங்களுடனான கூட்டாண்மை சேவைநாடிகளுக்குக் கிடைக்கும் சேவைகளின் வரம்பை மேம்படுத்த முடியும் (சட்டப் பிரதிநிதித்துவம் முதல் உளவியல் - சமூக ஆதரவு வரையாகும்).

நீதிமன்றங்களில் உள்ள உளவளத்துணை நிறுவனங்கள் இரகசியத் தன்மை, தகவலறிந்த சம்மதம், இரட்டை உறவுகள் மற்றும் பிற நெறிமுறைச் சிக்கல்களுக்கான நடைமுறைகளை எடுத்துக்காட்டும் தெளிவான நெறிமுறைக் கொள்கைகளை உருவாக்க முடியும். இந்தக் கொள்கைகள் ஆலோசகர்களுக்கான குறிப்பை வழங்குகின்றது. நெறிமுறை நடைமுறையில் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த உதவுகின்றது. நீதிமன்ற ஆலோசனையில் நெறிமுறைப் பிரச்சினைகள் குறித்த வழக்கமான பயிற்சி அமர்வுகள் மற்றும் பட்டறைகள் ஆலோசகர்களின் புரிதல் மற்றும் நெறிமுறைக் கொள்கைகளின் பயன்பாட்டை மேம்படுத்தும். தலைப்புகளில் கலாசார திறன், அதிர்ச்சி, தகவலறிந்த பராமரிப்பு மற்றும் நீதிமன்ற அமைப்புகளில் ஆலோசனையின் சட்ட அம்சங்கள் ஆகியவை அடங்கும்.

விவாகரத்து மற்றும் காவலில் உள்ள வழக்குகளில் ஆலோசனையை அணுகுவதற்குச் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் சிறந்த நலன்களை உறுதிப்படுத்த ஒரு சீரான மற்றும் உணர்திறன் அணுகுமுறை தேவைப்படுகிறது. பெற்றோர் மற்றும் குழந்தைகள் இருவரின் தேவைகள் மற்றும் முன்னோக்குகள் உட்பட குடும்பத்தின் இயக்கவியல் பற்றிய முழுமையான மதிப்பீடுகளை நடத்துவதன் மூலம் அதனைத் தொடங்குகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, குழந்தையின் நல்வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, கட்சிகளிடையே திறந்த தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை எளிதாக்குவதே எனது குறிக்கோளாகும். பெற்றோர்கள் இணக்கமான ஒப்பந்தங்களை அடையவும், பயனுள்ள பெற்றோருக்குரிய உத்திகள் குறித்த வழிகாட்டுதலை வழங்கவும் நான் மத்தியஸ்தர நுட்பங்களைப் பயன்படுத்துகிறேன். ஆதரவான சூழலை உருவாக்குவதன் மூலம் மோதலைக் குறைப்பதையும் ஆக்கபூர்வமான உரையாடலை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளேன். இறுதி முடிவுகள் சம்பந்தப்பட்ட குழந்தைகளின் சிறந்த நலன்களுக்குச் சேவை செய்வதை உறுதிசெய்கிறேன்.

நீதிமன்ற ஆலோசனை நடவடிக்கைகளில் சிறப்புச் சிகிச்சை அணுகுமுறைகள் மற்றும் விரிவான வழக்கு மேலாண்மையை செயல்படுத்துவது ஒரு விரிவான மற்றும் தனிப்பட்ட செயல்முறையை உள்ளடக்கியது. உளவியல் மதிப்பீடுகள், மருத்துவ வரலாறுகள் மற்றும் தொடர்புடைய சமூக காரணிகள் உட்பட இந்த வழக்கு குறித்த விரிவான பின்னணித் தகவல்களைச் சேகரிப்பதன் மூலம் நான் பெற்றுக் கொண்டேன். இந்தத் தகவலின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட நபர்களின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் சூழ்நிலைகளை நிவர்த்திசெய்யும் ஒரு வடிவமைக்கப்பட்ட சிகிச்சைத் திட்டத்தை நான் உருவாக்குகிறேன்.

விரிவான வழக்கு மேலாண்மை வழக்கின் அனைத்து அம்சங்களும் கண்காணிக்கப்பட்டு திறம்பட ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்கிறது. வழக்கில் ஒரு முழுமையான அணுகுமுறையை உறுதிசெய்வதற்காக வழக்கறிஞர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் போன்ற பிற நிபுணர்களுடன் நான் வழக்கமான தொடர்பைப் பேணுகிறேன். இந்த ஒருங்கிணைந்த முறை சட்ட செயல்முறை முழுவதும் வாடிக்கையாளர்களுக்கு நிலையான மற்றும் முழுமையான ஆதரவை வழங்க உதவுகிறது.

“எனது நீதிமன்ற ஆலோசகர் பாத்திரத்தில் இரகசியத் தன்மை மற்றும் இரட்டை உறவுகள் போன்ற நெறிமுறை பரிசீலனைகளை நிவர்த்திசெய்வது மிக முக்கியமானது. அனைத்துச் சேவைநாடிகளின் தனியுரிமை மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நன்னெறி வழிகாட்டுதல்களையும் சட்டத் தேவைகளையும் நான் கண்டிப்பாகப் பின்பற்றுகிறேன். அனைத்து முக்கியமான தகவல்களும் பாதுகாப்பாக சேமிக்கப்படுவதையும், தெரிந்துகொள்ள வேண்டிய தேவையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட நபர்களுடன் மட்டுமே பகிரப்படுவதையும் உறுதி செய்வதன் மூலம் இரகசியத்தன்மை பராமரிக்கப்படுகிறது. இரட்டை உறவுகளைக் கையாளும்போது, சாத்தியமான நலன் சார்ந்த முரண்பாடுகளை அடையாளங்கண்டு நிர்வகிக்க நான் செயலூக்கமான நடவடிக்கைகளை எடுக்கிறேன். தெளிவான தொழில்முறை எல்லைகளைப் பராமரித்தல் மற்றும் தேவைப்படும்போது மேற்பார்வை அல்லது ஆலோசனையைப் பெறுவது இதில் அடங்கும். இந்த நெறிமுறை பரிசீலனைகள் குறித்து விழிப்புடன் இருப்பதன் மூலம், எனது ஆலோசகர் பங்கு பாரபட்சமற்றதாகவும், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நியாயமான ஆதரவை வழங்குவதில் கவனம் செலுத்துவதையும் உறுதிசெய்கிறேன்.”

இந்த விடயங்கள் நெறிமுறை நடைமுறை, விரிவான பராமரிப்பு மற்றும் நீதிமன்றம் தொடர்பான அமைப்புகளில் சேவைநாடிகளின் சிறந்த நலன்களுக்கான உறுதிப்பாட்டை நிரூபிக்கின்றன.

**விளக்கம்**

விவாகரத்து மற்றும் காவல் வழக்குகளில் ஆலோசனைக்கு ஒரு சீரான அணுகுமுறையை இவ்விடயம் நிரூபிக்கிறது. குடும்ப இயக்கவியல் பற்றிய முழுமையான மதிப்பீடுகளை நடத்துவதன் மூலமும், குழந்தையின் நல்வாழ்வை வலியுறுத்துவதன் மூலமும், ஆலோசகர் அனைத்துத் தரப்பினரின் தேவைகளும் முன்னோக்குகளும் கருத்திற்கொள்ளப்படுவதை உறுதி செய்கிறார். தகவல் தொடர்புகளை எளிதாக்குவதற்கும் மோதலைக் குறைப்பதற்கும் மத்தியஸ்த நுட்பங்களைப் பயன்படுத்துவது ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் இணக்கமான ஒப்பந்தங்களை ஊக்குவிப்பதில் ஆலோசகரின் திறன்களை எடுத்துக்காட்டுகிறது. இந்த அணுகுமுறை சம்பந்தப்பட்ட குழந்தைகளின் சிறந்த நலன்களுக்காக முடிவுகளை எடுக்கும் ஆதரவான சூழலை வளர்ப்பதற்கான உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது, அவர்களின் பாதுகாப்பு மற்றும் உணர்ச்சி ஸ்திரத்தன்மையை உறுதிசெய்கிறது.

நீதிமன்ற ஆலோசனைப் பாத்திரங்களில் நெறிமுறை பரிசீலனைகளானவை நீதிமன்ற ஆலோசனைப் பாத்திரங்களில் இரகசியத்தன்மை மற்றும் இரட்டை உறவுகள் போன்ற நெறிமுறை பரிசீலனைகளுக்கு வலுவான அர்ப்பணிப்பை வலியுறுத்துகின்றன. சேவைநாடியின்

தனியுரிமையைப் பாதுகாப்பதற்கான நெறிமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டத் தேவைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பது, நம்பிக்கையையும் ஒருமைப்பாட்டையும் பராமரிப்பதற்கான ஆலோசகரின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. சாத்தியமான நலன் முரண்பாடுகளைக் கண்டறிந்து நிர்வகிப்பதன் மூலமும், தேவைப்படும்போது மேற்பார்வையை நாடுவதன் மூலமும், ஆலோசகர் அவர்களின் ஆலோசனைப் பங்கு பாரபட்சமற்றதாகவும், நியாயமான ஆதரவை வழங்குவதில் கவனம் செலுத்துவதாகவும் இருப்பதை உறுதிசெய்கிறார். இந்த அணுகுமுறை நன்னெறி தரநிலைகளை நிலைநிறுத்துவதில் விழிப்புணர்வு மற்றும் செயலூக்கமான நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பக்கச்சார்பற்ற மற்றும் நெறிமுறை ரீதியாக சிறந்த வழிகாட்டுதலைப் பெறுவதை உறுதிசெய்கிறது. இந்த விடயங்கள் ஆலோசகரின் உத்திகள் மற்றும் நீதிமன்றம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் நெறிமுறைப் பயன்பாடுகளின் முக்கிய அம்சங்களை நிவர்த்தி செய்வதில் அவற்றின் செயல்திறன் பற்றிய ஆழமான புரிதலை வழங்குகின்றன.

**முடிவுரை**

வைத்தியசாலை, நீதிமன்றம், சிறுவர் பராமரிப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (NGO) முதலிய நிறுவனங்களில் கடைப்பிடிக்கின்ற ஒழுக்கத்தினைக் கண்டறிவதில் காணப்படும் சிக்கல்களை இவ் ஆய்வு ஆராய்கிறது. சேவைநாடியின் நலன்களை மேம்படுத்துவதையும் வலுவான நெறிமுறை தரநிலைகளை நிறுவுவதையும் ஒழுக்க நடைமுறைகளை மேம்படுத்தக்கூடிய பகுதிகளை அடையாளம் காண்பதையும் இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நிறுவனங்களின் ஆய்வானது பயனுள்ள மற்றும் மரியாதைக்குரிய சேவை வழங்குதலை உறுதிசெய்வதில் ஒழுக்க கோட்பாடுகளின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது. மருத்துவமனைகளில், நோயாளியின் நம்பிக்கையைப் பேணுவதற்கும் உயர்தர பராமரிப்பை உறுதிசெய்வதற்கும் ஆலோசனையில் ஒழுக்க நடைமுறைகள் அவசியமாகும். தகவலறிந்த ஒப்புதல், இரகசியத் தன்மை, கலாசார திறன், சேவைநாடி சுயமதிப்பு, தொழில்முறை எல்லைகள், ஒழுக்க ரீதியாக முடிவெடுத்தல் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றிற்கான அர்ப்பணிப்பானது நோயாளி பராமரிப்பின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒழுக்கத்தை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

சிறுவர் பராமரிப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புத் துறைகளுக்குப் பாதிக்கப்படக்கூடிய மக்களின் தனித்துவமான தேவைகளுக்கு உயர்ந்த உணர்திறன் தேவைப்படுகிறது. இந்தப் பகுதிகளில் ஒழுக்க நடைமுறைகள் பாதுகாப்பான சூழல்களை உருவாக்குதல், தனிநபர்களின் உரிமைகள் மற்றும் சுயமதிப்பு மற்றும் முழுமையான ஆதரவை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. குடும்ப இயக்கவியல் ஒருங்கிணைப்பு, அதிர்ச்சி, தகவலறிந்த பராமரிப்பு மற்றும் பல்துறை ஒத்துழைப்பு ஆகியவை பயனுள்ள தலையீடு மற்றும் ஆதரவுக்கு முக்கியமானவை.

சமூகப் பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதிலும், மனித உரிமைகளுக்காக வாதிடுவதிலும் அரசு சாரா நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தகவலறிந்த ஒப்புதலைப் பெறுதல், இரகசியத் தன்மையைப் பராமரித்தல், சிக்கலான சூழ்நிலைகளில் நெறிமுறை முடிவுகளை

எடுத்தல் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு ஆதரவளித்தல் ஆகியவை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள நெறிமுறை நடைமுறைகளில் அடங்கும். நம்பிக்கையைப் பேணுவதற்கும் பயனுள்ள சேவைகளை வழங்குவதற்கும் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் நெறிமுறை வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது அவசியமாகும்.

ஒட்டுமொத்தமாக, உளவளத்துணைச் சேவையானது ஒருமைப்பாடு, மரியாதை மற்றும் தனிநபர்களின் நல்வாழ்வுக்கான அர்ப்பணிப்புடன் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்காகப் பல்வேறு துறைகளில் ஒழுக்க நடைமுறைகளின் முக்கியத்துவத்தை இவ் ஆய்வு எடுத்துக்காட்டுகிறது. இடைவெளிகள் மற்றும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பதன் மூலம் இந்த நிறுவனங்களில் அறநெறியின் பயன்பாட்டை மேம்படுத்துவதை இவ் ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது, இறுதியில் ஒரு நியாயமான மற்றும் சமத்துவமான சமூகத்திற்குப் பங்களிக்கிறது. தொடர்ச்சியான கல்வி, வலுவான நெறிமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் கூட்டு அணுகுமுறைகள் இந்த இலக்குகளை அடைவதற்கும் நெறிமுறை நடைமுறையின் மிக உயர்ந்த தரங்கள் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கும் அவசியமாகும்.

**பரிந்துரைகள்**

நீதிக்கான அணுகலை மேம்படுத்துதல், அனைத்துத் தனிநபர்களுக்கும், அவர்களின் சமூக பொருளாதார நிலை, இனம், பாலினம் அல்லது பின்னணி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், சட்டப் பிரதிநிதித்துவம் மற்றும் வளங்களுக்கான சமமான அணுகலை உறுதிசெய்வதற்கான கொள்கைகளைச் செயல்படுத்தல் ஆகியவற்றில் இந்த ஆய்வு கவனம்கொண்டுள்ளது. நீதிபதிகள், சட்ட வல்லுநர்கள் மற்றும் சுகாதார வழங்குநர்களுக்கு மறைமுக சார்புகளை அங்கீகரித்தல் மற்றும் தணித்தல் குறித்துத் தொடர்ந்து பயிற்சி அளித்தல் அவசியாகும்.

நன்னெறி நடைமுறைகளில் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தப் பல்வேறு துறைகளில் தரப்படுத்தப்பட்ட நெறிமுறை வழிகாட்டுதல்களை உருவாக்கிச் செயல்படுத்துதல் அவசியம். பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கவும் முறைமை அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. சேவைநாடி தகவல்களின் இரகசியத் தன்மையைப் பராமரிக்கக் கடுமையான நெறிமுறைகள் இருப்பதை உறுதிசெய்து, இந்தக் கொள்கைகள் குறித்து ஆலோசகர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும். பல்துறை ஒத்துழைப்பை ஊக்குவித்தல், வாடிக்கையாளர்களுக்கு விரிவான ஆதரவை வழங்க, சட்ட, மருத்துவ, சமூகப் பணி மற்றும் ஆலோசனை வல்லுநர்கள் உள்ளிட்ட பல்துறை குழுக்களிடையே ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சியை உறுதிசெய்யவும் சமீபத்திய நெறிமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பற்றி ஊழியர்களுக்குத் தெரியப்படுத்தவும் தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும். சமூக ஈடுபாட்டை வளர்த்தல, உள்ளீடுகளைச் சேகரிக்க சமூக நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் ஈடுபடல் மற்றும் நெறிமுறை நடைமுறைகளின் பொருத்தத்தையும் செயல்திறனையும் மேம்படுத்துதல் வேண்டும்.

மேம்பாட்டுக்கான பகுதிகளை அடையாளம்காணவும் தரநிலைகளுக்கு இணங்கி நடப்பதை உறுதிசெய்யவும் நன்னெறி நடைமுறைகளின் அமுலாக்கத்தைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பிடவும் வேண்டும். வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல், நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்காக நிறுவனங்களுக்குள் முடிவெடுக்கும் செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல் வேண்டும்.

குடும்ப ஈடுபாட்டை ஆதரித்தலானது முழுமையான ஆதரவை வழங்க, ஆலோசனை மற்றும் சிகிச்சை செயல்முறைகளில், குறிப்பாக குழந்தைப் பராமரிப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புத் துறைகளில் குடும்பங்களை ஈடுபடுத்துதல் வேண்டும். நெருக்கடித் தலையீடு, நெறிமுறைகளை உருவாக்குதல் அவசியமாகும். அவசர சூழ்நிலைகளில் சேவைநாடிகளுக்கு உடனடி மற்றும் பயனுள்ள ஆதரவை உறுதிசெய்வதற்காக நெருக்கடித் தலையீட்டிற்கான தெளிவான நெறிமுறைகளை நிறுவுதல் வேண்டும்.

இப்பரிந்துரைகள் பல்வேறு நிறுவனங்களில் அறநெறியின் பயன்பாட்டை மேம்படுத்துதல், நெறிமுறை தரநிலைகள், விரிவான ஆதரவு மற்றும் இவ்வமைப்புகளால் சேவை செய்யப்படும் தனிநபர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**உசாத்துணை நூற்பட்டியல்**


இராமலிங்கம்.அ., (2003), ஒழுக்கம், மோனாரிக் கிராபிக்ஸ், சென்னை.

சிவானந்தமூர்த்தி. க., (1998), ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும், லங்கா புத்தகசாலை, கொழும்பு.

புறோட்.சி.பு., (1968), ஐவகை ஒழுக்கவியல் கொள்கைகள், கல்வி வெளியீட்டு திணைக்களம், இலங்கை.

ஜமாஹிர்.பீ.எம்., (2012), ஒழுக்கவியல் ஓர் அறிமுகம், எம்.ஜே.எம் அச்சகம், மாவனல்ல.

Abdul Mufid A. (2020). Moral and spiritual aspects in counseling: Recent development in the West. “Journal of Advanced Guidance and Counseling, (1), 1-22. https://doi.org/10.21580/jagc.2020.1.1.5696.

Gribov, A. (2018). The impact of ethical behavior on counseling outcomes. “Journal of Counseling Research, 10”(1), 67-78.

Brown, N. (2017). Moral decision-making in therapy, “Counseling Today, 29 (3), 45-50.

Green, P. (2020). Integrating ethics into counseling practice. “Journal of Moral Psychology, 40”(2), 78-89. https://doi.org/10.5678/jmorpsych

Wilczenski, M. L., & Cook, R. D. (2005). Ethical decision-making in counseling: A practical guide. “Journal of Counseling Practice, 7”(2), 89-102.

Miranti, J. (1992). Ethical and spiritual values in counseling. “Journal of Counseling Psychology, 39”(4), 456-467.

Abdul Rahman, A. (2011). Ethical standards in counseling: A comprehensive guide. “Journal of Professional Counseling, 5”(3), 234-245.

# பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம் : கிழக்குப் பல்கலைக்கழக பெண்கள் விடுதிகளினை அடிப்படையாக் கொண்ட ஆய்வு

**Pranaha Thineswaran**

Lecturer, CASED & Former Assistant Lecturer, Department of Philosophy,University of Jaffna.

npranaha@gmail.com

**Kanthasami Kajavinthan**

Senior Lecturer, Department of Philosophy, University of Jaffna.

Kajavinthan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பல்கலைக்கழகமானது தொழில் வாழ்க்கையை வெளியில் கொண்டு செல்வதற்கான அடிப்படைகளை வழங்குகின்ற இடமாகும். பொதுவாக பல்கலைக்கழகங்களில் விடுதிகளில் தங்கி இருந்து கல்வி கற்கும் வெளிமாவட்ட மாணவர்கள் உளப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். இவ் உளப்பிரச்சினைகளில் ஒன்றான மன அழுத்தத்தினால் முதலாம் வருடத்தில் புதிதாக நுழையும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இம்மன அழுத்தத்திற்கு உள சமூக மற்றும் பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனை ஆய்வுப் பிரச்சனையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், விடுதிகளில் தங்கியிருக்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தத்தினை இனங்காண்பதனையும் மன அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதனை முகாமைத்துவம் செய்து உள ஆலோசனைகளை வழங்குவதனை நோக்கமாக கொண்டும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது பல்கலைக்கழகத்தில் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவிகள் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் இம்மன அழுத்தத்திற்கு உள சமூக பொருளாதார காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன எனும் இரு கருதுகோள்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுப் பிரதேசமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்திற்கு உட்பட்ட பெண்கள் விடுதிகள் தெரிவுசெய்யப்பட்டன. அத்தோடு, கலைப்பீட முதலாம் வருடத்தைச் சேர்ந்த 100 மாணவிகளை மாதிரியாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு பண்பியல் சார்ந்த விபரண ஆய்வாகவும் அமைகின்றது. மேலும், ஆய்வுக்கருவியாக மனதால் உணரப்பட்ட மன அழுத்த அளவுகோல் (Percived stress scale) இங்கு பயன்படுத்தப்பட்டதுடன் நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களும் துணைக்கருவிகளாக அமைந்தன. ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 66% ஆனோர் குறைவான மன அழுத்தத்துடனும் 24% ஆனோர் மிதமான மன அழுத்தத்துடனும் 10% ஆனோர் அதிகமான மன அழுத்தத்துடனும் இருப்பது இனங்காணப்பட்டது. மேலும், ஆய்விற்கு உட்பட்டவர்களில் 53% ஆனோர் உளக் காரணிகளினாலும் 19% ஆனோர் சமூகக் காரணிகளினாலும் 28% ஆனோர் பொருளாதாரக்

காரணிகளினாலும் பாதிக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டது. எனவே, ஆய்வின் கருதுகோளிற்கு அமைவாக முதலாம் வருட மாணவிகள் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் இம்மன அழுத்தங்களுக்கு உள சமூக பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன எனவும் நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் இனங்காண முடிந்தது. மேலும், பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தரவுகள் அனைத்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டு கருதுகோள்கள் நிரூபிக்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளதுடன் மன அழுத்தத்திற்கு உட்பட்ட மாணவிகளுக்கு உள ஆற்றுப்படுத்தல்கள் மற்றும் உள ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் தீவிர மன அழுத்தத்திற்கு உட்பட்டவர்கள் உள ஆற்றுப்படுத்துனரின் மேற்பார்வைக்குக் கொண்டு சேர்க்கப்பட்டார்கள். மேலும், விடுதிசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பெற்றோருக்கும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன. மன அழுத்தத்திற்கு உட்பட்ட மாணவிகளிடம் இருந்து முன்னேற்றகரமான மாற்றங்களை இனங்கண்டு இவ் ஆய்வு முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

***திறவுச் சொற்கள்*** *: உள ஆலோசனைகள், உளப்பிரச்சினைகள், உளக்காரணிகள், பொருளாதாரக் காரணிகள், மாணவிகள்.*

**அறிமுகம்**

இலங்கையில் 17 அரச பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. இப்பல்கலைக்கழகங்களில் பல்வேறு இன, மதப் பிரிவு மாணவர்களும் கல்வி கற்று வருகின்றார்கள். இப்பல்கலைக்கழகத்திற்கு நுழையும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதேவேளை, அவ்வாய்ப்பைப் பெற்றவர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்துவதுமில்லை. இந்நிலையில், இப்பல்கலைக்கழகங்களில் வெளிமாவட்டத்தினைச் சேர்ந்த பிள்ளைகள் விடுதி வசதியினைப் பெற்றுத் தங்கியிருந்து தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இவ்விடுதி அனுபவமானது எல்லோருக்கும் பொருந்திப்போவதாக அமைவதில்லை. குறிப்பாக, முதலாம் வருடத்தினுள் நுழையும் மாணவர்கள் பதற்றத்துடனும் அழுகையுடனும் பெற்றோரை விட்டுப் பிரிய மனமில்லாமல் விடுதிக்குள் நுழைகின்றார்கள். தொடர்ந்து தனிமை மற்றும் பல்கலைக்கழக பகிடிவதைகள் பற்றிய அச்சங்கள், பொருளாதார பிரச்சினைகள், உணவு ஒவ்வாமை, தேவையான அடிப்படை வசதிகளைக்கூடப் பூர்த்திசெய்வதற்கான போதிய பணமில்லை எனப் பொருளாதார நெருக்கடிகளையும் அதிகம் எதிர்கொள்கின்றார்கள். இவ்வாறான பல உள, சமூக, பொருளாதார காரணிகளால் இம்மாணவிகள் பதற்றம், மன அழுத்தம், மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள் எனப் பல உளப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றார்கள். இவ் உளப் பிரச்சினைகளுள் ஒன்றான மன அழுத்தத்தினால் அநேக மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ் ஆய்வு இரண்டு கருதுகோள்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டது.

ஒரு பிரச்சினைக்கோ அல்லது இக்கட்டான சூழ்நிலைக்கோ முகங்கொடுக்க முடியாத உள இயக்க எழுச்சிநிலை மன அழுத்தம் எனப்படும். மன அழுத்தமானது எதிர்மறையான மனவெழுச்சி அனுபவங்களால் நடத்தையில் உடல்சார்ந்த இரசாயன இயக்கங்களில் நிகழும்

மாற்றமாகும். மேலும், மனஅழுத்தத்தினை இனங்காணும் உடலியல்சார் அறிகுறிகளாக இரத்த ஓட்டம் அதிகரித்தல், கண்களில் பார்வை குறைவடைதல், கேட்டல் திறன் குறைவடைதல், வியர்வை அதிகரித்தல், சுவாச வீதம் அதிகரித்தல், ஜீரணமாகும் தன்மை குறைதல், பதற்றம், தலைவலி, இதயம் வேகமாகத் துடித்தல், உளவியல்சார் அறிகுறிகளாக மெதுவான உள இயக்கம், குழப்பமான மனநிலை, எதிர்மறை மனப்பான்மை அல்லது எண்ணங்கள், நிலையான கவலை, கவனம் செலுத்துவதில் சிரமம், மறதி, பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத தன்மை என்பனவும் நடத்தைசார் அறிகுறிகளாகத் தனிமை, அதிகமாக அல்லது குறைவாக உண்ணுதல், அதிகமான அல்லது குறைவான தூக்கம், மற்றவர்களைத் தவிர்த்துக்கொள்ளும் நிலை என்பவற்றைக் குறிப்பிடலாம். இம் மன அழுத்தம் அதிகரிக்கும்போது, தற்கொலை எண்ணங்கள் ஏற்படுகின்றன. எனவே, இம்மாணவிகளின் மன அழுத்தமானது இனங்காணப்பட்டு இவர்களுக்கு உளரீதியான தீர்வுகள் பெற்றுக்கொடுக்க வேண்டிய நோக்கத்துடன் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வானது கிழக்குப் பல்கலைக்கழக பெண்கள் விடுதியினை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு கலைப்பீடத்தினைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழத்தின் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் 100 முதலாம் வருட வெளி மாவட்ட மாணவிகள் எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களின் மன அழுத்தம் இனங்காணப்பட்டு, மன அழுத்தத்திற்கு உட்பட்டவர்களிற்கான உள ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும், இவ் ஆய்வானது விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகள் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் இம்மன அழுத்தத்திற்கு உள, சமூக, பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன எனும் இரு கருதுகோள்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டதுடன், நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களுடன் மனதால் உணரப்பட்ட மன அழுத்த அளவுகோலானது ஆய்வுக் கருவியாகக் கொண்டு பண்புசார் விபரண ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுப் பிரச்சினை**

இன்று அநேக பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக வெளி மாவட்டங்களிலிருந்து விடுதிகளிற்குச் செல்லும் பிள்ளைகள் கற்கைநெறியைப் பூர்த்திசெய்யாமல் இடைநடுவே விட்டுச்செல்கின்றார்கள். அதிலும் முதலாம் வருட மாணவர்கள் பல்கலைக்கழக சூழலிற்கு இசைவாக்கம் அடைய முடியாமலும் விடுதி வாழ்க்கையில் ஒத்துப்போக முடியாமலும் பல்வேறு உளப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். மேலும், முதலாம் வருட மாணவர்களைப் பொறுத்தவரையில் விடுதி வாழ்க்கை என்பது முழுமையாக மகிழ்ச்சியுடைய ஒன்றாக எல்லோருக்கும் அமைவதில்லை. அநேக பல்கலைக்கழகங்களில் இன்று பகிடிவதை என்பது மிகவும் பாரியதொரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. இதனால் அநேக மாணவர்கள் தற்கொலை செய்தும் உள்ளார்கள். அதுமட்டுமன்றி, இம்மாணவர்கள் புதுமுக மாணவராக நுழையும்போது, ஏற்படுகின்ற பயம், பதற்றம், பகிடிவதை பற்றிய அச்சம், அடிப்படைத் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியாமை, குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ்ந்த அனுபவம் இல்லாமை, அறைத்தோழர்களுடன் ஒத்துப்போக முடியாமை, தனிமை, முரண்பாடுகள் எனப் பல்வேறு உள மற்றும் சமூக பொருளாதார காரணிகளின் விளைவால் மன அழுத்தத்திற்கு

உட்பட்டு வருகின்றார்கள். இம்மன அழுத்தத்தின் விளைவாக மனச்சோர்வு, பதற்றம், ஆளுமை சாந்த பிரச்சினைகளும் ஏற்படுகின்றது. எனவே, பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பாக விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் பெண் மாணவிகள் அதிகம் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

- முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தத்தினை இனங்காணல்.
- இம்மன அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
- இம்மன அழுத்தத்தினை முகாமைத்துவம் செய்வதற்கான உள ஆலோசனைகளை வழங்கல்.

**ஆய்வின் கருதுகோள்கள்**

- பல்கலைக்கழக பெண்கள் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு மன அழுத்தம் ஏற்படுகின்றது.
- இம்மன அழுத்தம் ஏற்படுவதற்குப் பல்வேறு உளக் காரணிகள், சமூகக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**ஆய்வின் பயன்பாடுகள்**

- பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தத்தினை இனங்காண முடியும்.
- இம்மன அழுத்தம் ஏற்படுவதற்கான பல்வேறு காரணிகளைக் கண்டறிய முடியும்.
- இம்மன அழுத்தத்தினைக் கையாள்வதற்கான உள ஆலோசனைகளைப் பெற்றுகொள்ளலாம்.
- எதிர்கால ஆய்வுகளுக்கு உதவ முடியும்.

**இலக்கிய மீளாய்வு**

டெல்லியில் தேர்ந்தெடுக்கப்பட்ட விடுதிகளில் வசிக்கும் மாணவர்களிடையே ஏற்படுகின்ற மன அழுத்தம், 2023

றிகானா ரம்ஸான் மற்றும் ஜாமியா என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வில் வீட்டை விட்டு விலகி இருப்பது என்பது மகிழ்ச்சி, மன அழுத்தம் அல்லது இரண்டின் கலவையாகக்கூட இருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளதுடன், விடுதியில் தங்கியிருப்பவர்களின் மன அழுத்தத்தினை அளவிடுவதற்கு மனதால் உணரப்பட்ட மன அழுத்த அளவுகோல் பயன்படுத்தப்பட்டது. இங்கு குறுக்குவெட்டு ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் ஆய்வில் 2.5% ஆனவர்கள் குறைவான மன அழுத்தத்துடனும் பெரும்பாலானவர்கள் மிதமான மன அழுத்தத்துடனும் இருப்பதனை இனங்கண்டார்கள்.

பல்கலைக்கழக இளங்கலை மாணவர்களிடையே மன அழுத்தம், 2020

எம்.டி.எம்.மகீஸ் என்பவரால் கொழும்புப் பல்கலைக்கழகத்தினை அடிப்படையாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது பொருளாதாரக் காரணிகள் மன அழுத்தத்தினை அதிகரிக்கும் எனும் கருதுகோளினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. 20 மாணவர்களின் நேர்காணல்கள் இங்கு கட்டமைக்கப்பட்டது. பொருளாதாரக் காரணிகள், பகிடிவதைகள், விடுதி வாழ்க்கை, மாணவர்களின் நடத்தைகள் என்பன மன அழுத்தத்திற்குக் காரணங்களாக இனங்காணப்பட்டன.

கல்லூரிகளில் புதிதாகச் சேரும் மாணவர்களிடையே ஏற்படுகின்ற மன அழுத்தம் குறித்த நீண்ட பகுப்பாய்வு, 2015

ரேனி காரெட் மற்றும் சாம்லியு என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது 197 புதுமுக மாணவர்களைக் கொண்டு ஆய்வுசெய்யப்பட்டதுடன், பகுப்பாய்வுகளை மேற்கொள்ள ஒரு நேரியல் கலப்பு மாதிரி பயன்படுத்தப்பட்டது. இவ் ஆய்வின் முடிவாக ஆண்களைவிட, பெண்கள் அதிகம் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் பரீட்சைக் காலங்களிலேயே அதிகம் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் இனங்காணப்பட்டது.

தனியார் விடுதிகளில் வசிக்கும் மாணவர்களின் மன அழுத்தமும் சமாளிக்கும் திறனும், 2013

ராஜீவ் ஸ்ரேதா என்பவரால் இவ் ஆய்வானது நேபாளத்தில் தனியார் விடுதிகளில் தங்கிக் கல்வி கற்கும் மாணவர்களை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. மேலும், எட்டு விடுதிகளில் இருந்து மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறுக்குவெட்டு ஆய்வு வடிவமைப்பு இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டதுடன் 209 மாணவர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டது. ஆய்வில் 51.67% ஆனவர்கள் உணரப்பட்ட மன அழுத்தத்தினை அனுபவித்தார்கள். இவ் ஆய்வின் முடிவாக விடுதிகளில் வசிக்கும் மாணவர்கள் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் குடும்பத்தினரின் தொடர்பு நண்பர்களுடன் விடுதிச் சூழலை ஏற்படுத்தல் என்பன மன அழுத்தத்தை குறைக்கும் எனவும் கூறப்பட்டது.

பதின்ம வயதினரின் கவலை மற்றும் மன அழுத்தத்தின் அறிகுறிகள் இலங்கையை அடிப்படையாக கொண்டது, 2010

சதுரக ரொட்ரிகா ஸெயந்த குருசிங்க மற்றும் பலரால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது 14 – 18 வயதிற்கு உட்பட்ட மாணவர்களின் மன அழுத்தத்தின் அறிகுறிகளை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்விற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து இரண்டு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டது. 445 மாணவர்கள் மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு மதிப்பிடப்பட்டார்கள். இவர்களில் 36 சதவீதமானவர்கள் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தார்கள். இவர்களில் இலேசான மன அழுத்தத்துடன் 17 சதவீதத்தினரும் தீவிர மன அழுத்தத்துடன் 9 சதவீதத்தினரும் உட்பட்டிருந்ததுடன் ஆண்களைவிட, பெண்களே அதிகம் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. அதேநேரம் பரீட்சைகளை எதிர்கொள்ளும் காலப்பகுதியில் அதிக நேர்மறை விகிதங்களைக் கொண்டிருந்தார்கள்.

**ஆய்வு முறையியல்**

ஆய்விற்கு உட்படுவோர் : கிழக்குப் பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட கலைப்பீட மாணவிகள்.

ஆய்வுப் பிரதேசம் : கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை பெண்கள் விடுதி.

ஆய்வு மாதிரி : கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்திற்கு உட்பட்ட பெண்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் கலைப்பீடத்தினைச் சேர்ந்த 100 மாணவிகள் எழுமாற்றுத் தெரிவு மூலம் இவ் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இவ் ஆய்வானது தரவுகள், பண்புகள் அம்சங்களை ஆராய்வதால் பண்புசார் விபரண ஆய்வு பின்பற்றப்படுகின்றது. மேலும், பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel 2013 மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வுக் கருவி : நேர்காணல்கள், கலந்துரையாடல்கள், வினாக்கொத்து என்பன முதலாம் நிலைத் தரவுகளாகவும் நூல்கள், சஞ்சிகைகள், முன்னைய ஆய்வுக் கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டன. மேலும், மனதால் உணரப்பட்ட மன அழுத்த அளவுகோல் (Percived stress scale) இங்கு மன அழுத்தத்தினை இனங்காண்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. மேலும், விடுதிசார் உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் நேரடி மற்றும் நேரில் முறைகள் மூலம் நேர்காணல்களுக்கு உட்படுத்தப்பட்டு, இவர்களின் தரவுகளும் ஆய்விற்குத் துணைக்கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

0 - 13 குறைவான மன அழுத்தம்

14 - 26 மிதமான மன அழுத்தம்

27 - 40 தீவிர மன அழுத்தம்

ஆய்வின் மட்டுப்பாடுகள் : ஆய்விற்காக மாதிரி சிறிய அளவில் பெறப்பட்டது. ஏனெனில், இவ் ஆய்வில் துல்லியமான முடிவுகளைப் பெறும் பொருட்டு மாதிரி சிறியளவில் பெறப்பட்டது. ஆய்விற்கான மாதிரிகள் கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்திற்கு உட்பட்ட கலைப்பீடத்தினைச் சேர்ந்த முதலாம் வருட மாணவிகள் தங்கியிருக்கும் பெண்கள் விடுதிகளில் இருந்தே தெரிவுசெய்யப்பட்டன. மேலும், 100 மாதிரிகள் மட்டுமே எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் விசேட தேவையுடைய மாணவர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. மேலும், பெண் பிள்ளைகள் மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தரவுப் பகுப்பாய்வு : பெறப்படும் தரவுகள் Excel 2013 மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வானது தரவுகள், பண்புகள் அம்சங்களை ஆராய்வதால் பண்புசார் விபரண ஆய்வு பின்பற்றப்படுகின்றது. மேலும், மாணவிகளின் மன அழுத்தத்திற்கான காரணிகள் நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மூலம் பெறப்பட்டன. இது துணையான கருவியாகக்

கொள்ளப்பட்டது. ஆய்வின் நோக்கம், ஆய்வுக் குடித்தொகை, ஆய்வு வளங்கள் என்பவற்றிற்கு அமைய ஆய்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

கருதுகோள் : 1

- பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு மன அழுத்தம் ஏற்படுகின்றது.

ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் மன அழுத்த மட்டங்கள்




ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 66% மாணவர்கள் குறைவான மன அழுத்தத்துடனும் 24% மிதமான மன அழுத்தத்துடனும் 10% அதிகமான மன அழுத்தத்துடனும் இருந்தமை ஆய்வின் மூலம் இனங்காணப்பட்டது. இம்முடிவானது இவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்து மூலம் பெறப்பட்டதுடன் ஆய்வின் முதலாவது கருதுகோளுக்கு அமைவாக இவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையிலும் விடுதியில் தங்கியிருக்கும் புதுமுக மாணவிகள் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் என்பதனை நிருபிக்க முடிந்தது.

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவிகளிடம் அதிகமாக இனங்காணப்பட்ட மன அழுத்த அறிகுறிகள் வருமாறு:

- தன்னம்பிக்கையற்ற உரையாடல்
- மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை
- தனிமையை உணருதல்
- அறைத்தோழர்களுடன் அடிக்கடி முரண்படுதல்
- அதிக கோபம்
- முடிவெடுக்கச் சிரமப்படுதல்
- கவலை தோய்ந்த முகம்
- விரிவுரைகளிற்குச் செல்ல விருப்பமற்ற தன்மை
- விரக்தியான மனநிலை

- கற்றலில் பின்னடைவுகள்
- பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்குத் தயக்கம் (அநேக நேரம் விடுதியிலே இருக்க விரும்புதல்)

கருதுகோள் : 2

இம்மன அழுத்தம் ஏற்படுவதற்குப் பல்வேறு உளக் காரணிகள், சமூகக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. நேர்காணல்களின்போது இவர்களின் மன அழுத்தத்திற்கான உள, சமூக, பொருளாதாரக் காரணிகள் இனங்காணப்பட்டன. ஆய்விற்கு உட்பட்டவர்களில் 53% மாணவிகள் உளக் காரணிகளினால் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கின்றார்கள். சமூகக் காரணி 19% ஆனவர்களின் மன அழுத்தத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. 28% மாணவிகளின் மன அழுத்தத்தில் பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே, ஆய்வின் கருதுகோளுக்கு அமைவாக, முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தங்களுக்கு உள, சமூக, பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் இனங்காண முடிந்தது.




நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களின்போது ஆய்விற்கு உட்பட்ட மாணவிகளிற்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தத்திற்கு காரணங்களாக இனங்காணப்பட்ட காரணிகள்

**உளக் காரணிகள்**

- ✓ குடும்ப உறவுகளை விட்டுத் தனித்து இருப்பதனால் ஏற்படுகின்ற கவலை
- ✓ தனிமையை உணருதல்
- ✓ மனதில் உள்ள விடயங்களைப் பகிர்ந்துகொள்ள நல்ல நண்பர் இல்லாமையினால் விரக்தியடைதல்
- ✓ அறைத்தோழர்களுடன் ஒத்துப்போக முடியாமையினால் தனிமையை விரும்புதல்.
- ✓ விரும்பாத விடயங்களையும் ஏனைய அறையில் இருக்கும் மாணவிகளிற்காக சகித்து இருக்க வேண்டிய சூழ்நிலையினால் வீட்டுச் சூழலை நினைத்து வருந்துதல்
- ✓ நினைத்த நேரம் மின்விளக்கை அணைத்து நித்திரை செய்யமுடியாமையினால் சோர்வான மனநிலை, நித்திரைக் குழப்பம் ஏற்படல்

- ✓ அறையில் இருக்கும் சக மாணவர்களுடன் ஏற்படுகின்ற முரண்பாடுகளால் எதிலும் கவனம் செலுத்த முடியாமை
- ✓ விடுதியில் இருக்கும் ஏனைய மாணவர்களுடன் தன்னை ஒப்பிட்டு, அவர்கள் பயன்படுத்தும் பொருட்களை தன்னால் வாங்கிப் பயன்படுத்த முடியவில்லையே என்ற ஏக்கம்
- ✓ ஏனைய விடுதித் தோழிகள் அதிக பணத்தினைச் செலவிடும்போது, தன்னால் அவ்வாறு செய்யமுடியவில்லையே என்ற கவலை
- ✓ மாணவிகள் சுற்றுலா செல்லும்போது, நிகழ்வுகளிற்குச் செல்லும்போது தன்னால் செல்ல முடியவில்லை என்ற ஏக்கம்
- ✓ விடுமுறையின்றி தொடர்ச்சியாக விடுதியிலே தங்கியிருக்க வேண்டிய நிலை (இதனால் வீட்டிற்குச் செல்ல முடியாமையால் ஏற்படும் வீட்டுக் கவலை)
- ✓ ஒரே அறையில் நான்கு ஐந்து உறுப்பினர்கள் இருக்கும்போது நெருக்கமான மன உணர்வு (சுதந்திரத் தன்மையை இழந்த உணர்வு ஏற்படுதல்)
- ✓ முதலாம் வருடத்திற்கு நுழைந்ததும் வரும் காதல் (இதனால் ஏற்படுகின்ற தோல்விகளை ஏற்க முடியாமை, இதனால் தற்கொலைக்கு முயற்சி செய்தல்)
- ✓ எதிர்பாராத உயிர் இழப்புகளைச் சந்தித்தல்
- ✓ பகிடிவதை பற்றிய அச்சம்
- ✓ பெற்றோரை இழந்த பிள்ளைகளிற்கு ஏனைய மாணவர்களைப் போன்று தொலைபேசியில் தமது விடுதி வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ள முடியாமை
- ✓ நாங்கள் படிக்கும போது ஏனைய அறைத் தோழிகள் தொலைபேசிமூலம் உரையாடி தொந்தரவு செய்யும்போது, கற்றலில் கவனம் செலுத்த முடியாமல் கற்றல்சார் மன அழுத்தம் ஏற்படல்

**பொருளாதாரக் காரணிகள்**

- ✓ விரும்பிய உணவு, விரும்பிய ஆடை என விரும்பிய பொருட்களை வாங்குவதற்குப் பணமின்மை.
- ✓ அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குரிய பணமின்மை, வீட்டில் இருந்து அனுப்பும் பணம் போதாமல் இருத்தல், உதவித்தொகையை எதிர்பார்த்துக் காத்திருந்தும் உரிய நேரத்திற்குக் கிடைக்காமை.
- ✓ கற்கை நெறிக்கு அவசரமாகத் தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்கு உடனடியாக பணத்தினைப் பெறமுடியாத நிலை.
- ✓ வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளிற்குப் பல்கலைக்கழக பட்டத்தைப் பூர்த்திசெய்யும் வரை தேவைப்படும் பணத்தினை அக்குடும்பத்தால் வழங்க முடியாத நிலை.
- ✓ உரிய காலத்தில் உதவிப்பணம் கிடைக்காமை.

**சமூகக் காரணிகள்**

- ✓ அநேக மாணவர்களுடன் இருக்கும் அறையில் சத்தமாகப் படிக்க முடியாமை.

- ✓ அறைத்தோழர்களுடன் பொருந்தாத சூழ்நிலைகள் ஏற்பட்டு முரண்பாடுகள் தோன்றுதல்.
- ✓ முதலாம் வருடத்தில் சிரேஸ்ட மாணவர்களுடன் ஏற்படுகின்ற காதல் மற்றும் காதல் தோல்விகள், ஏமாற்றப்படுதல்.
- ✓ வீட்டில் இருந்த ஆடம்பர வாழ்க்கை, தனி அறை என விடுதியில் இருக்க முடியாத நிலை.

மேலும், இம்மாணவர்களிற்கு ஏற்படுகின்ற மன அழுத்தங்களிற்கு உள, சமூக, பொருளாதார, குடும்பக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது, பெற்றோர்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள், பெற்றோர் பிரிந்திருத்தல், தனித்துப் பிள்ளைகள் வளர்தல் போன்றனவும் பொருளாதாரச் சிக்கல்கள், சக மாணவர்களுடன் ஏற்படுகின்ற போட்டித் தன்மைகள் இவர்களிற்கு மன அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான ஒரு வீட்டுச் சூழலில் இருந்து பிள்ளைகள் பல்கலைக்கழகம் வரும்போது மன அழுத்த நிலையிலேயே இருக்கிறார்கள். இதுபற்றிய சிந்தனைகள் இவர்களால் பல்கலைக்கழக வாழ்க்கையை அனுபவிக்க முடியாத நிலையினை ஏற்படுத்துகின்றது. மேலும், பல விடயங்கள் இம்மாணவர்களுடன் நேர்காணல் மற்றும் அவதானம் மூலம் பெறமுடிந்தது. இந்நேர்காணல்கள் மூலமே இம்மன அழுத்தத்திற்கான காரணிகள் இனங்காணப்பட்டன. அந்தவகையில், உள, சமூக, பொருளாதாரக் காரணிகள் இம்மாணவிகளின் மன அழுத்தத்தில் தாக்கம் செலுத்துகின்றன. மேலும், உளப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களே அதிகம் இருந்தார்கள். இவ் ஆய்வின் இறுதியில் மிதமான, குறைவான மன அழுத்தத்திற்கு உட்பட்ட மாணவிகளிற்கு உள ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- தியானம் என்பது மனதைத் தளரச்செய்வதாகும். சுமார் 15 நிமிடங்கள் கண்ணை மூடி எதையும் சிந்திக்காமல் அமைதியாக சாய்ந்து அமர்ந்து தியானம் செய்வதன் மூலம் மூளைச்செல்களில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். ஆழமாய் சுவாசிப்பதன் மூலம் மன அழுத்தத்தை இல்லாமல் செய்ய முடியும் எனப் பல்வேறு நாடுகளில் நிருபிக்கப்பட்டுள்ளது. ஆழ்ந்த சுவாசத்தின் மூலம் இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு அதிகரிக்கிறது. இதனால் தசைகள் தளர்வு நிலையை அடைகிறது. மனமும் இயல்பு நிலையை அடைகிறது.
- குடும்ப ஆலோசனை வழங்கப்பட்டது: உள அழுத்தத்தைக் குறைப்பதற்குப் பெற்றோர்களின் அன்பும் வழிகாட்டல்களும் அவசியமானது. எனவே, பெற்றோர்களிற்கான சந்திப்பு முதலாம் வருட அறிமுக நிகழ்வுகளில் இடம்பெற்றது.
- ஆன்மிகத்துடன் ஒன்றிக்கச் செய்தல்: மாணவிகளிடம் பிடித்தமான தெய்வத்திடம் மனக்கவலைகளைக் கூறும்படி கூறப்பட்டது. மனம் விட்டு எதையும் சொல்லும்போது, மனதிற்குச் சாந்தி ஏற்படுகிறது. அந்தவகையில், கடவுள் நம்பிக்கை சிறந்த மருந்தாக அமைகிறது. கடவுளில் ஒன்றித்து இருக்கும்போது மனம் இலேசாகிறது. எனவே, மனம் கவலையை உணருகின்றபோது கோயிலிற்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும்படியும் சற்று நேரம் கோயிலில் இருந்து தியானிக்கும்படியும் கூறப்பட்டது.
- ஆக்கநிலைக் கற்பனை: மனதைச் சாந்தப்படுத்தும் விடயங்களைக் கற்பனையாக நினைத்தலே இம்முறையாகும். பொதுவாக நீர்வீழ்ச்சி என்றால் எல்லோருக்கும் மிகவும்

பிடிக்கும் எனக் கூறினார்கள். எனவே, மனதிற்கு நெருக்கீடு ஏற்படும் சந்தர்ப்பங்களில் இதனைக் கற்பனையாக நினைக்கும்படி ஆலோசனை வழங்கப்பட்டது. குறிப்பாக, மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும் விடயங்களை அதிகம் நினைக்கும்படி கூறினேன்.

- அக உரையாடலில் ஈடுபடுதல்: எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. இவ் உலகில் நான்தான் மிகுந்த சந்தோசமாக இருக்கிறேன். என்னால் இவ் உலகை ஜெயிக்க முடியும் என மனதுக்குள் அடிக்கடி கூறும்படி ஆலோசனை வழங்கப்பட்டது. இவ்வாறு கூறுவது உடலையும் மனதையும் ஒய்வுநிலைக்குக் கொண்டு செல்லும் உக்தியாகும்.
- போதியளவு ஓய்வு எடுத்தல்: நாளாந்த வாழ்வில் ஓய்வு எடுத்த பின் முயற்சி செய்யும்போது புத்துணர்வு ஏற்படும். இத்தகைய செயற்பாட்டின் மூலம் மனம் சாந்தியடையும். மனதிற்கு ஆர்ப்பாட்ட நிலை ஏற்படும்போது மூச்சை மிகவும் மெதுவாக சுவாசித்து, உள்வாங்கி வெளிவிட வேண்டும். இதனால் அமைதி ஏற்படும். இவ்வாறான ஆலோசனைகள் மாணவர்களிற்கு வழங்கப்பட்டது.
- மனதிற்குப் பிடித்த இசையைக் கேட்டல்: மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இசைக்கு உண்டு. மெல்லிய இசைகளைக் கேட்பதன் மூலம் மனதில் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்கலாம். நன்றாகப் பாடக்கூடியவர்களிற்கு மேலதிக ஊக்கம் வழங்கப்பட்டது.
- நேரத்தைத் திட்டமிட்டுச் செயற்படுதல்: அன்றாட கருமங்களிற்கான நேரத்தைத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். ஒவ்வொரு செயற்பாட்டையும் திட்டமிட்டுச் செயற்படும்போது, கவலையைத் தரக்கூடிய நினைவுகளைச் சிந்திப்பதற்கான நேரம் கிடைப்பதில்லை. பிடித்த பாடங்களைப் படித்தல், ஆடைகளைத் துவைத்தல், நண்பர்களின் அறைகளிற்குச் செல்லுதல், நண்பர்களுடன் விளையாடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும்போது சிந்தனை மாற்றம் ஏற்படும். இதனால் நெருக்கீட்டைக் கட்டுப்படுத்த முடியும் என ஆலோசனை வழங்கப்பட்டது.
- உள நெருக்கீட்டைச் சவாலாக மாற்றுதல்: எந்தவொரு பிரச்சினையையும் என்னால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை முதலில் வளர்த்துக்கொள்ள வேண்டும். எந்த ஒரு விடயத்தையும் மனதில் போட்டு குழம்பிக்கொள்ளாமல் இவர் பேசுவது எனக்கு இல்லை என நினைத்துவிட்டுச் சவாலாக நினைத்துச் செயற்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.
- பொருத்தமான சூழலை உருவாக்குதல் : மனித நடத்தையை நிர்ணயிப்பதில் சூழல் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தவகையில், மனதிற்கு இரம்மியமான இயற்கைச் சூழலை அமைக்க வேண்டும். அந்தவகையில், பூங்கன்றுகள், இயற்கைக் காட்சி நிறைந்த படங்கள் என்பவற்றைத் தொங்கவிடுதல், போதிய வெளிச்சம், காற்றோட்டம், சுத்தமான சூழல் என்பவற்றை அமைத்துக்கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

பல்கலைக்கழகத்தில் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளின் மன அழுத்தத்தினை இனங்கண்டு, அவற்றிற்கான காரணிகளைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது கிழக்குப் பல்கலைக்கழகத்தினை ஆய்வின் எல்லையாகக் கொண்டு கலைப்பீடத்தினைச் சேர்ந்த பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் தங்கியிருக்கும் முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் 100 மாதிரிகள் எழுமாற்றாகத்

தெரிவுசெய்யப்பட்டு, அவர்களிற்கு மனதால் உணரப்பட்ட மன அழுத்த அளவுகோல் (Percived stress scale) வழங்கப்பட்டு, அவர்களின் மன அழுத்தம் இனங்காணப்பட்டது. மேலும், இவ் ஆய்வானது முன்வைக்கப்பட்ட கருதுகோளிற்கு அமைவாக தகுந்த ஆதாரங்களுடன் நிருபிக்க முடிந்தது. மேலும், வினாக்கொத்து மற்றும் நேர்காணல் ஆகிய முறைகளை பயன்படுத்தி மன அழுத்தத்திற்கான காரணிகள் இனங்காணப்பட்டு, மன அழுத்தத்திற்கு உட்பட்ட மாணவிகளிற்கு உள ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel 2013 மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, கருதுகோள் பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. அத்துடன் மாணவிகளிற்கு மன அழுத்தத்தினை முகாமை செய்யும் நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் இதனைத் தொடர்ந்து இவர்களில் முன்னேற்றகரமான மாற்றங்களை இனங்காண முடிந்ததுடன் தீவிரநிலையில் இருந்த மாணவர்கள் உளவளத்துணையாளரின் மேற்பார்வைக்குச் சிபாரிசு செய்யப்பட்டார்கள்.

**பரிந்துரைகள்**

01. பல்கலைக்கழக விடுதிசார் உத்தியோகத்தர்களுக்கான பரிந்துரைகள் :முதலாம் வருட மாணவர்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

- அவர்களிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை விடுதிகளில் அல்லது பல்கலைக்கழக ஏற்பாட்டில் மேற்கொள்ள வேண்டும்.
- அடிக்கடி ஒன்று கூடல்களை நடார்த்தி அவர்களின் பிரச்சினைகளை இனங்காண வேண்டும்.
- மாணவர்களிற்கு ஏற்படுகின்ற பகிடிவதை தொடர்பாக கவனத்தைச் செலுத்துவதுடன் முறைப்பாடு செய்வதற்கான வழிகளை வழங்க வேண்டும்.
- தனிப்பட்ட மாணவர் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்திருக்க வேண்டும்
- ஆற்றுப்படுத்தல் தேவைப்படும் மாணவர்களை இனங்கண்டு உடனடியாக அவர்களிற்கான தீர்வுகளை வழங்க வேண்டும்.
- மாணவர்களின் நடத்தைகளில் ஏதேனும் மாற்றங்கள் தென்பட்டால், பெற்றோரை அணுகி இவர்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.
- உளம்சார் பிரச்சினைகளுடன் இருக்கும் மாணவர்களிற்கு அவர்கள் அப்பிரச்சினைகளில் இருந்து மீண்டுவருவதற்கான சரியான வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.
- பருவ வயதுப் பிரச்சினைகள் பற்றிய விளக்கங்களையும் அப்பருவத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது, அவ்வாறான சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகளிற்கு யாரை நாடே வண்டும் என்ற விடயங்கள் பற்றிய விழிப்புணர்வினையும் வழங்க வேண்டும்.
- சில மாணவர்கள் பொருளாதார நெருக்கடிகளை முகங்கொடுப்பார்கள். இந்நிலையில், இவர்களின் குடும்ப சூழ்நிலைகளை அறிந்து, இவர்களின் கற்றல் பாதிக்காத வகையில் இவர்களிற்கு சிறந்த வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

- ஒவ்வொரு மாணவரையும் இனங்கண்டு, அவர்களின் உளப் பிரச்சினைகளை இனங்கண்டு, மன அழுத்தம், மனச்சோர்வு, பதற்றம்சார் பிரசிசனைகளுடன் இருக்கும் மாணவர்களிற்குச் சிறந்த ஆற்றுப்படுத்தல்களை வழங்க வேண்டும்.

02. பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கான பரிந்துரைகள்

பரீட்சைத் தோல்விகளை எதிர்கொள்வது தொடர்பாகவும் பரீட்சைத் தோல்வியின் பின்பு எவ்வாறு எம்மை வழிப்படுத்துவது போன்ற விடயங்கள் பற்றியும் மாணவர்களிற்கு விழிப்புணர்வு நாடகங்கள் வழியாகவும் சில கலந்துரையாடல்கள் மூலமாகவும் பயிற்சிச் செயலமர்வுகள் மூலமாகவும் போதிய அறிவினை வழங்க வேண்டும். விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவர்கள் விடுதிகளில் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

03. பெற்றோருக்கான பரிந்துரைகள்

- பெற்றோர் இப்பருவத்தினரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுடன் அவர்களுடன் சிறந்த உறவுநிலைகளைப் பேணுவதற்கு முயற்சிக்க வேண்டும்.
- வீட்டில் பெற்றோரிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகள் பிள்ளைகளைப் பாதிக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.
- இவர்களிற்குப் பெற்றோரின் அன்பு, அரவணைப்பு கிடைக்காத சந்தர்பத்திலும் இவர்கள் வழிதவறிச் செல்வதுண்டு. பெற்றோர் தங்களின் பிள்ளைகளின் வயதிற்கு ஏற்ற வகையில் தம்மை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.
- முடிவெடுத்துச் செயல்படுத்தும் சுதந்திரத்தை அவர்களிற்கு வழங்கும் அதேவேளை, அதன் சாதக பாதகங்களை அவர்களிற்கு விளக்க வேண்டும். பருவமடைந்த பெண் பிள்ளைகளிற்குப் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் தொடுகை பற்றிய விழிப்புணர்வுகளை வழங்க வேண்டியது அவசியமாகும்.
- இப்பருவ பெண் பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையின் காரணமாக பாடசாலையில் இருந்து இடைவிலகுகிறார்கள். இந்நிலை மாற வேண்டும். பெற்றோர் பிள்ளைகளிற்கான அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டும்.

04. எதிர்கால ஆய்வாளர்களிற்கான சிபாரிசுகள்

- எதிர்காலத்தில் இவ் ஆய்வினை மேற்கொள்கின்றபோது, ஆய்வாளர்கள் ஆய்வுப் பிரதேசத்தைப் பரந்தளவாக்கவும்.
- மேலும், தனித்து மாணவிகளை மட்டும் கருத்தில்கொள்ளாது ஆண்பிள்ளைகளையும் ஆய்விற்கு உட்படுத்தவும்.
- முதலாம் வருட மாணவர்களுடன் ஏனைய வருட மாணவர்கள் எதிர்நோக்கும் விடுதிசார் உளப் பிரச்சினைகளையும் இனங்காண வேண்டும்.
- சகோதார மொழி பேசும் மாணவர்களையும் ஏனைய பீட மாணவர்களையும் ஆய்விற்கு உட்படுத்தவும்.

- மாதிரி எண்ணிக்கையை அதிகரிப்பது சிறந்தது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

சிவதாஸ், எஸ். 2009. மகிழ்வுடன், பூபாலசிங்கம் புத்தகசாலை.

தனபாலன், பா. கணேசநாதன், ஞா. 2012. பாடசாலையில் ஆலோசனை வழங்கல், லங்கா பதிப்பகம்.

தயா சோமசுந்தரம். 1993. மனவடு : நெருக்கீட்டின் உள விளைவுகளும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

தயா சோமசுந்தரம், சிவயோகன், 2010. தமிழ்ச் சமுதாயத்தில் உளநலம், சாந்திகம்.

நடராஜன், எஸ். (அக்ரோபர், 2005). கல்வியில் ஆராய்ச்சி, சாந்தா பப்ளிஷர்ஸ்.

முன்பள்ளி கல்விக்கான டிப்ளோமா. (2010 – 2011). கற்கை அலகுக் கையேடுகள், ஆறுதல் நிறுவனம்.

https://www.researchgate.net/publication/368067540_Gender_Differences_in_Stress_and_Coping_in_First-Year_College_Studentscstpay;: rhujh gjpg;gfk;

https://files.eric.ed.gov/fulltext/EJ1080498.pdf

https://www.upressonline.com/2021/09/female-students-report-higher-stress-levels-than-males-research-study-says/

https://www.nyu.edu/about/news-publications/news/2015/august/nyu-study-examines-top-high-school-students-stress-and-coping-mechanisms.html

Http://www.unicef.org/adolesence /index 66834.html Adolescence, Tata Mc Graw Hill Education Private limited New Delhi.

https://www.researchgate.net/publication/370956588_Stress_and_Coping_Mechanism_among_Students_Residing_in_Private_School_Hostels

https://www.researchgate.net/publication/375404791_Stress_among_Students_Living_in_a_Selected_Hostel_of_Delhi

https://www.researchgate.net/publication/346554424_Stress_Among_Undergraduates_A_case_study_of_University_of_Colombo_Sri_Lanka

https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC6122850/

John W . SANTROCK. (1998) Theories of Adolesent Development, Adolesent, Mc Graw-Hill.

# ஜைனம் கூறும் இல்லறம்சார் ஒழுக்கச் சிந்தனைகள் - ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு

**S. Aneja**

Mphil Scholar, Department of Philosophy, Faculty of Arts & Culture, South Eastern University, Sri Lanka.

anejaariyarethnam@mail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த ஆய்வானது, ஜைனத்தில் இல்லற வாழ்க்கை மற்றும் ஒழுக்கநெறி மரபுகளுக்கு இடையேயான நெருங்கிய தொடர்பைத் தத்துவ அடிப்படையில் ஆய்வு செய்வதாக அமைகிறது. இந்தியாவின் பழமையான தத்துவ மரபுகளில் ஒன்றான ஜைனம், துறவிகளுக்கும் இல்லறவாசிகளுக்கும் ஆன்மிக விடுதலையை நோக்கிய பயணத்தில் வழிகாட்டும் சிறந்த ஒழுக்கநெறிக் கட்டமைப்பை வழங்குகிறது. அதில் துறவறத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டாலும், இந்த ஆய்வு உலகியலாக ரீதியாக சாதாரண வாழ்க்கை நடத்தும் இல்லறவாசிகள் (ஷராவகர்கள்) பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கப் பொறுப்புகளை வலியுறுத்துகிறது. இவர்கள் அகிம்சா (வன்முறை இன்மை), சத்ய (உண்மை பேசல்), மற்றும் அபரிக்ரஹா (சொத்து குவிப்பு மறுப்பு) போன்ற ஜைனக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றனர். மகாவீரர் (24வது தீர்த்தங்கரர்) மற்றும் ஜீனர்கள் (ஆன்மிக வெற்றியாளர்கள்) வழங்கிய போதனைகள், இல்லறவாசிகளின் நெறி உணர்வை வடிவமைக்க முக்கிய பங்காற்றுகின்றன. நவீன சமூகச் சூழ்நிலைகள்சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில், ஜைன நெறியின் தத்துவம் இல்லறப் பொறுப்புகள் மற்றும் ஆன்மிக இலக்குகளை எவ்வாறு சமநிலைப்படுத்துகிறது என்பதை இந்த ஆய்வு விமர்சனப் பார்வையில் ஆராய்கிறது. நூல்கள், கட்டுரைகள் மற்றும் நடைமுறை விளக்கங்கள் மூலம் இந்த ஆய்வு, ஜைன நெறி மரபுகள் எவ்வாறு தனிப்பட்ட ஒழுக்கம், சமூக ஒற்றுமை மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றன என்பதை வலியுறுத்துகிறது.

***திறவுச் சொற்கள் :*** *ஜைன சமயம், இல்லற வாழ்க்கை, ஒழுக்க மரபு, ஜீனர்கள்.*

**அறிமுகம்**

இந்த ஆய்வானது ஜைன சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களையும், நெறி ஒழுக்கங்களையும், ஆன்மிக இலட்சியங்களையும் தத்துவவியல் நோக்கில் ஆய்வு செய்கிறது. தொன்மைக் காலத்தில் தோன்றிய நாஸ்திக மதங்களில் ஒன்றாக ஜைன சமயம் விளங்குகிறது. இது அஹிம்சை (யாருக்கும் சேதம் செய்யாமை), சத்தியம் (உண்மை), அச்சர்யம் (அடக்கமான ஒழுக்கம்), அப்பிரகிரஹம் (சொத்துப் பிணைவைத் தவிர்த்தல்) போன்ற நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆன்மா விடுதலை (மோட்சம்) அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜைன தத்துவம் என்பது உயிர்களின் சுதந்திரம், கர்ம நியமம் மற்றும் அஹிம்சை ஆகிய அடிப்படையில் ஆன்மீக வளர்ச்சியையும், சுய ஒழுக்கத்தையும் வலியுறுத்தும் தத்துவம்சார் முறை. இது உலகம், உயிர்கள் மற்றும் அவர்களின் தொடர்புகளைப் பல்வேறுபட்ட

கோணங்களிலும் ஆராய்ந்து சரியான பாதையில் செயற்படுதலை வழிகாட்டுகிறது. இது அனைத்தையும் நன்மை நோக்கத்தில் ஒழுங்குபடுத்தும் ஒழுக்க நெறிகளை வலியுறுத்துகின்றது. இவ் ஆய்வானது, 'இல்லற ஒழுக்கங்கள்' என்ற முக்கியமான சிந்தனையை மையமாகக் கொண்டு, ஜைன சமயத்தின் உள் அமைப்பு, விதிகள் மற்றும் சமூகத்துடன் உள்ள உறவை அலசுகிறது. இவ்வாய்வின் மூலம் சமகாலப் பிரச்சினைகளிலிருந்து ஒரு தனிமனிதன் விடுதலை பெற ஜைன சமயத்திலுள்ள ஒழுக்க நெறிகள் எவ்வாறு வழிகாட்டுகின்றன என்பது தத்துவார்த்த ரீதியாக வெளிக்கொணரப்படுகிறது.

ஜைன சமயம் குறித்த பல்வேறு பண்பாட்டு, ஆன்மிக மற்றும் தத்துவ ரீதியான ஆய்வுகள் இந்திய தத்துவ இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. பலரும் அகிம்சை நெறியை ஜைன சமயத்தின் பிரதான அடையாளமாகக் காண்கிறார்கள். ஆனால், ஜைன மதத்தின் விரிவான அறவழி நெறிகள், துறவியியல் மற்றும் மெய்யுணர்வுக் கோட்பாடுகள் தொடர்பான ஆய்வுகள் குறைவாக உள்ளன. இந்த ஆய்வு இவையெல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, ஒரு புதிய பார்வையுடன் சமீபத்திய சமூகப் பிரச்சனைகள்மீது இதன் தாக்கத்தை ஆராய்கிறது.

ஜைன சமயத்தின் ஐந்து மஹா விரதங்கள் (கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, விரதம், பற்றின்மை) துறவியர்களுக்கான மிகக் கடுமையான ஒழுக்கநெறிகளாகக் கருதப்படுகின்றன. அதே சமயம், இல்லற ஜைனர்களுக்கும் பத்து சிறிய ஒழுக்கங்கள் மூலம் தங்களை ஒழுங்குபடுத்த வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்த நெறிகள் எவ்வாறு சமூக ஒழுங்குக்கும், மாறும் கலாசார சூழலுக்கும் ஏற்றவாறு தனித்துவம் கொண்டவை என்பது இவ்வாய்வில் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. இக்கட்டுரை ஜைன மதத்தின் இல்லற வழிமுறைகள் பற்றிய ஆழ்ந்த பார்வையை வழங்குவதோடு, அதனைத் தத்துவார்த்த ரீதியாக அணுகி ஆராய்வதற்கும் அடிப்படையாக அமைகின்றது.

**ஆய்வு முறையியல்**

இது ஒரு கருத்தியல் மற்றும் இலக்கிய ஆய்வுக் கட்டுரை ஆகும். ஆதாரமாக ஜைனம்சார் நூல்களும், சமகாலத்தில் ஜைனம்சார்ந்து கூறப்பட்ட ஆய்வுகளும் பயன்படுத்தப்படுகின்றன. தரவுகள் இரண்டாம் நிலை இலக்கிய ஆதாரங்களாகிய புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையவழி கல்விக் குறிப்புகளில் இருந்து சேகரிக்கப்பட்டன. இவை பகுப்பாய்வு செய்யப்பட்டு, தற்போதைய சமூகப் பிரச்சனைகளில் ஜைன இல்லற ஒழுக்கத் தத்துவங்களின் பொருந்துதலை விவரிப்பது இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக காணப்படுகின்றது. ஜைன சமயத்தில் இடம்பெற்றுள்ள இல்லற ஒழுக்கக் கருத்துக்கள் சமகால சமூக சூழல் மற்றும் குடும்ப முறைகளில் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்களால் உண்டாகும் சவால்களை எவ்வாறு சீரமைத்துக்கொள்வது என்பது தொடர்பாகத் தெளிவாக கூறப்படாமையானது, இங்குள்ள பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அத்துடன், இத்தகைய பாரம்பரிய ஒழுக்கங்கள் இன்று சமூகத்தில் எவ்வளவு பொருந்தக்கூடியவை என்றும், அவற்றின் நடைமுறைப் பயன்கள் மற்றும் சிக்கல்களும் ஆராயப்பட வேண்டும் என்பதனால் இவ் ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்திய அவைதிக சமய தத்துவங்களுள் ஜைனமும் ஒன்றாகும். ஜைனத்திற்குச் சமணம், ஆறுகதம் என்கின்ற வேறு பெயர்களும் உண்டு. நீண்டதோர் கால ஓட்டத்தில் 23 மெய்க்காட்சியாளர்களால், சீர் செய்யப்பட்டு, கி.மு. 8ஆம் நூற்றாண்டளவில் பார்ஸ்வநாதரால் சிறந்ததோர் அமைப்புருவைப் பெற்று மேலும் இறுதிநிலையில் மகாவீரரால் பூரணப்படுத்தப்பட்ட தத்துவ அமைப்பாக ஜைனம் விளங்குகின்றது. இது பௌத்த மதத்தின் தோற்றத்திற்கு முற்பட்ட தத்துவமாக விளங்குகின்றது. அதேவேளை, இந்தியாவில் தோற்றம்பெற்ற நாஸ்தீக தத்துவங்களில் இன்றுவரை நீடித்து நிலைத்திருக்கும் ஓர் தத்துவ சிந்தனையாகவும் காணப்படுகின்றது.

ஜைனம் என்கின்ற சொல் 'ஜீன்' என்கின்ற வேர்ச் சொல்லில் இருந்து பெறப்பட்டது. 'ஜீன்' என்பது 'வெற்றியடை' என்கின்ற பொருளைக் கொண்டது. ஜைனன் என்றால் 'வென்றவன்' என்றவாறாகக் கருதப்படும். அதாவது 'வல்லுணர்ச்சிகளை வெற்றிகரமாக அடக்கித் தன்னை வென்றவன்' ஆவான் (https://www.tamilvu.org/rkzk, சமணம் ஓர் அறிமுகம்).

ஜைன மதத்தில் திகம்பரர், சுவேதாம்பரர் என்று இருவகை உண்டு. ஜைன மதத் துறவிகள் 'யதி' என்ற பெயரில் அழைக்கபடுகிறார்கள். துறவிகள் அல்லாத சாதாரண ஜைனர்களை 'சிராவகர்' என்று அழைக்கிறார்கள். ஜைன மதம் ஆத்மா, மோட்சம் ஆகிய இரண்டின் பேரிலும் நம்பிக்கையுடைய மதம் என்பதனால் மோட்ச நெறியைப் பற்றி மிக விரிவாகப் பேசுகிறது. ஒருவன் தனது வாழ்வின் இறுதி இலட்சியமான மோட்சத்தை அடைய வேண்டுமானால் நல்ல பார்வை, நல்ல ஞானம், நல்ல ஒழுக்கம் எனும் மூன்று இரத்தினங்களை மேற்கொள்ளுதல் வேண்டுமென்று வலியுறுத்துகிறது. இந்த மூன்றில் ஒன்று குறைந்தாலும் வாழ்ந்து பயனில்லை என்றும் எச்சரிக்கை செய்கிறது. அதேவேளை, மேற்குறிப்பிட்ட மூன்று தர்மங்களைக் கடைபிடிக்காமல் பக்தி மார்க்கமோ, ஞான மார்க்கமோ, கர்ம மார்க்கமோ தனியாக மோட்சம் பெறத் துணை வராது என்றும் ஜைன மதம் வலுவாகவே பேசுகிறது.

இந்து மதத்திலும் சரி, பௌத்த மதத்திலும் சரி, துறவு வாழ்கை என்பது ஒரு தனிப் பாதையாகவே இருந்து வருகிறது. ஆனால், ஜைன மதத்தில் துறவறம் என்பது இல்லறத்தில் இருந்து வெகு தூரத்தில் இல்லாமல் மிக அருகிலேயே இருக்கிறது. ஜைன தர்மத்தைப் பின்பற்றுகின்ற ஒவ்வொரு இல்லறவாசியும் தனது நெறிப்பட்ட வாழ்க்கையை மிகக் கண்டிப்பாகக் கடைபிடிக்கும்போது, துறவற தர்மத்திற்குள் இயல்பாகவே நுழைந்துவிடுகிறான். அதாவது, துறவிகள் மட்டுமே மோட்ச வீட்டுக்குள் நுழைய முடியும் என்றில்லாமல் தர்மத்தைக் கடைபிடிக்கும் ஒவ்வொரு இல்லறவாசியும் தன்நிலையிலிருந்து மோட்சம் பெறுவான் என்பதே ஜைனத்தின் பிரதான கோட்பாடாகும்.

நல்லொழுக்கம் என்னும் அறவாழ்வுக்குச் ஜைனம் மிக முக்கிய இடத்தைக் கொடுக்கிறது. விடுதலையடையும் வழிகளான நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் எனும் மும்மணிகளில் முடிவானதாக வருவது அறவாழ்வாகும். அகிம்சை, உண்மை பேசுதல், திருடாமை, மணம் புரியாக் கற்பு, செல்வப் பற்றின்மை எனும் ஐம்பெரும் விதிகள் பொதுவான ஜைன அறங்களாகவுள்ளன. இவை முறையே கொல்லாமை (Ahimsa), வாய்மை (Satyn),

கள்ளாமை (Astheya), கற்புடைமை (Bramacharya), உடமை நீக்கம் (Aparigrahn) எனவும் வழங்கப்படுகிறது.

சமணர் வாழ்க்கையானது இல்லறம், துறவறம் என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டினையும் முறையே 'சாவக (சிராவக) தர்மம்', 'யதிதர்மம்' என்றும் கூறுவர். ''மனைவி, மக்கள், சுற்றத்தாருடன் இருந்து ஒழுகும் ஒழுக்கம் இல்லறம் எனப்படும் சாவக தர்மமாகும். உலகத்தைத் துறந்து வீடுபேற்றினைக் கருதித் தவஞ்செய்யும் முனிவரது ஒழுக்கம் துறவறமாகிய யதி தர்மமாகும்.

சமணத்தில் கூறப்படும் ஐந்து வகை அடிப்படையான சமயக் கட்டுப்பாடுகளும், துறவு வாழ்க்கையில் மிகவும் கடுமையாகவும், ஆணித்தரமாகவும், சீர்திருத்தப் பண்புடனும் கைக்கொள்ளப்படுகிறது. ஆனால், இல்றை வாழ்க்கையில் சில மாற்றங்கள் அனுமதிக்கப்படுகிறது. துறவிகளுக்கான பெரிய சத்தியம் 'மண விரட்ட' எனவும், இல்லறத்தவருக்கான சிறிய சத்தியம் 'அனு விரட்ட' எனவும் இங்கு வழங்கப்படுகிறது.

சாதாரண இல்லத்தவருக்கு முதல் மூன்று விதிகளான அகிம்சை, உண்மை பேசுதல், திருடாமை என்பன கடமையாக்கப்பட்டு கடைசி இரண்டும் தளர்த்தப்பட்டுள்ளது. ஜைனத்தின்படி அறவிதிகள் எண்ணிக்கையில் அடங்கா. பொதுவாக நல்லவை என்று நாம் சொல்லக்கூடியவை அனைத்தும் இவற்றுள் அடங்கும். இவ்விதம் சாவகர் (சிராவகர்) எனப்படும் இல்லறத்தார் ஒழுகவேண்டிய ஒழுக்கங்களைப் பற்றி நோக்குவோமாயின், இல்லறத்தில் ஒழுகும் சமணர் ஒவ்வொருவரும் கீழ்க்காணும் பத்து ஒழுக்கங்களைக் (விரதங்களைக்) கடைப்பிடித்துத் தவறாது ஒழுக வேண்டுமென்று சமண நூல்களில் கூறப்படுவதைக் காணலாம். அத்தகைய ஒழுக்கங்களாவன கொல்லாமை (அகிம்சை), பொய்யாமை (பொய் பேசாதிருத்தல்), கள்ளாமை (களவு செய்யாதிருத்தல்), பிறன் மனை விரும்பாமை, பொருள் வரைதல் ஆகிய அணுவிரதமெனப்படும் ஐவகை ஒழுக்கங்களும், கள் உண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை, இரவு உண்ணாமை, ஆசாரியர் முதலிய பெரியோரை வணங்குதல் போன்ற விரத ஒழுக்கங்களும் இல்லற வாழ்வில் ஈடுபடுவோரால் கடைப்பிடிக்க வேண்டியவையாய் உள்ளன. இந்தப் பத்து ஒழுக்கங்களும் இல்லறத்தாருக்கு இன்றியமையாதன. கீழ்க்காணும் செய்யுள் இப்பத்து ஒழுக்கங்களையும் கூறுவதைக் காணலாம் :

''கொல்லாமை பொய்யாமை கள்ளாமை காமத்தை
ஒல்லாமை, ஒண்பொருளை வரைதலோடியை பிறவும்
பொல்லாத புலைக தேன்கள் இருளுண்ணா நிலைமையொடு
நல்லாரைப் பணிவதும் நாமுறையே பயனுரைப்பாம்''

எனத் திருக்கலம்பகம் என்னும் சமண சமய நூலில் சாவக நோன்பிகளின் இப்பத்து ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன (சமணமும் தமிழும், 43). மேலும், இந்தப் பத்து ஒழுக்கங்களோடு திசை விரதம், அனர்த்த தண்ட விரதம், போகோப போகப் பரிமாண விரதம் என்னும் மூன்று விரதங்களையும் தேசாவதாரிகம், ஸாமாயிகம், புரொஷ நோபவாசம், அதிதிஸம்விபாகம் போன்ற நான்கு சிக்கை எனும் சிட்சா (சிஷா) விரதங்களையும் சேர்த்து மேற்கூறியவற்றோடு இல்லறத்தாரின் ஒழுக்கமாகக் கூறப்படுவதையும் காணலாம். இதனை,

“பெரிய கொலை பொய்களவு பிறர் மனையி பொருவல்
பொருள் வரைதல் மத்தம்மது புலைசுணலின் நீக்கல்
பெரிய திசை தண்டமிரு போகம் வரைந்தாடல்
மரீ இயசிக்கை நாள்குமிவை மனையறத்தார் சீலம்”

என மேருமந்தர புராணச் செய்யுள் (பத்திர மித்திரன் அறங்கேள்விக் சருக்கம் 133), மேலே குறிப்பிட்ட இல்லறத்தவரின் ஒழுக்கங்களைக் காட்டி நிற்கின்றது (சமணமும் தமிழும், 43). இனி, இல்லறத்தார் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக நோக்குவது குறிப்பிடத்தக்கது.

## 1. கொல்லாமை

சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஐந்து விதமான நன்நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கூறும் ஜைன மதமானது, அகிம்சைக்குப் பெரும் அழுத்தம் தருகிறது. இவ் ஐவகை நோம்புகளிலும் முதலாவதும் முக்கியமானதாகவும் அகிம்சை (கொல்லாமை) இடம்பெறுகிறது. கொல்லாமை எனும் சொல் “எந்த உயிர்களையும் கொல்லாத தன்மை” என்று எதிர்மறையாகப் பொருள்பட்டாலும், உண்மையில் இதுவொரு நேர்முகப் பண்பேயாகும். கருணையும் காதலும் இல்லாதவர்களிடம் கொல்லாமை அமையாது எனவும், கொல்லாமையை மன, மொழி, மெய்களால் கடைப்பிடிக்க வேண்டுமெனவும், உண்மையில் கொலை புரிதல் எவ்வளவு தீங்கானதோ அதேபோன்று கொலை புரிய வேண்டும் என்று நினைப்பதும் தீங்கானதாகும் எனக் கூறப்படுகிறது. எல்லா உயிர்களிலும் ஆன்மா உண்டென்ற கொள்கையே இவ்வழுத்தத்தை ஜைனத்தில் இன்னும் வலுவடையச் செய்தது. விலங்கினங்களைக் கொல்லாமல் அவைகள் அடையும் துன்பங்கண்டு பரிவுகொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது. பூச்சு புழுக்களைக் கொன்றுவிடும் வாய்ப்புகளைத் தவிர்ப்பதற்காக, நடந்து செல்லும் பாதைகளைச் சுத்தம் செய்தல், தண்ணீரை வடிகட்டிக் குடித்தல் போன்ற கடுமையான பழக்கங்கள் இல்லறத்தவரிடையே புகுத்தப்பட்டன. எனவே, கொல்லாமை என்கின்ற நோம்பை ஒரு மனிதன் தூய மனத்துடனும், தூய மொழிகளாலும், தூய செயல்கள் புரிந்தும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும், அனைத்து உயிர்க் காதலும், அனைத்து உயிர்க் கருணையும் ஒருவனுடைய ஒவ்வொரு செயலிலும் பரிணமிக்க வேண்டுமெனவும் ஜைனத்தில் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

மேலும், ஒரு மனிதன் இருந்தால் மட்டும் ஏனைய பிறவிகளுக்குத் தான் இன்னல் புரியாமல் பிறன் ஒருவனைக் கொண்டு இன்னல் புரிவதும் தவறேயெனவும், பிறன் புரிந்த தீயசெயலுக்கு அதனைத் தூண்டியவனும் காரணமாவான் எனவும் ஜைனம் கூறுவதைக் காணலாம். “நான் யாருக்குந் துன்பம் இழைக்கவில்லை. பிறனைக் கொண்டு இழைக்கச் செய்யவும் இல்லை. வேறொருவன் இழைத்ததை நான் மறைமுகமாக ஆதரித்தேன்” என ஒருவன் கூறினால் அதுவும் குற்றமாகும் என்கிறது ஜைனம்.

இதன் காரணமாகவே ஒருவன் இன்னொருவனைக் கொல்லக்கூடாதெனவும், கொல்லத் தூண்டக்கூடாதெனவும், கொலைச் செயலை ஆதரிக்கவுங் கூடாதெனவும் ஜைன மதத்தில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், கொல்லாமையை நினைவு, சொல், செயல்

ஆகிய மூன்று வகையாலும் கடைப்பிடிக்க வேண்டுமெனப்படுகிறது. இம்சை என்னும் அலக்கண்ணை எல்லா வகையிலும் தவிர்க்க வேண்டுமென்பது ஜைன மதத்தின் கொள்கையாகும். சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு இல்லறத்தானையும் கொல்லாமை என்னும் நோன்பு சார்ந்து காணப்படுமெனவும், இல்லறத்தான் இதனை வரம்புக்குட்பட்டுக் கடைப்பிடித்தால் போதுமெனவும் கூறப்படுகிறது. ஏனெனில், இல்லறத்தாருக்குத் துறவியைவிட உலகக் கடமைகள் அதிகம் எனலாம். உலகக் கடமைகளை ஆற்றும்போது இல்லறத்தான் பல சந்தர்ப்பங்களில் வழுவ நேரிடும் என்கிறது.

எடுத்துக்காட்டு : கொல்லாமைச் சட்டப்படி தாவர பிரிவைக் கொல்லுவதும் பாவமாகும் என்கிறது ஜைன தத்துவம். ஏனெனில், தாவரம் ஒன்றைப் புலன் உயிர் வகையைச் சேர்ந்ததென்றும், இதனை வற்புறுத்தினால் இல்லறத்தான் வேளாண்மையே (Agriculture) செய்ய முடியாது. வேளாண்மையில் அறுவடை முக்கியமானதாதலால் அது ஒற்றைப் புலன் உயிர்களைச் சிதைப்பதில் முடிகிறது எனக் கூறப்படுகிறது. ஆனால், வேளாண்மை செய்யாவிட்டால் சமுதாயத்திற்கு உணவு கிடைக்காது போய்விடும். உணவில்லாமல் உலகத்தில் உயிர் வாழ்வது மிகவும் கடினமான காரியம், எனவேதான், இல்லறத்தானைப் பொறுத்தவரையில் ஒற்றைப் புலன் உயிர்களைத் தவிர்த்து, மற்றைய உயிர்களைக் கொல்லக் கூடாதென்று விதித்திருக்கின்றது ஜைன தத்துவம். இத்தகைய ஒழுக்க விதிக்கு இளநோன்பு (Anuvrata or Minor vow) என்ற பெயர் வழங்கப்படுகிறது.

ஜைன மதத்தினர் கூறும் கொல்லாமை நோன்பும், ஏனைய சமயத்தவர் கூறும் கொல்லாமை ஒழுக்கமும் ஒரு தன்மையானவையல்ல. பௌத்தர்கள் தாம் நேரே கொலை புரியாவிட்டாலும்கூட இன்னொருவனால் கொலைசெய்யப்பட்ட விலங்கின் இறைச்சியைப் புசிக்கின்றார்கள். எனவே, அக்கொலைக்குத் தாம் காரணம் அல்ல என்றும், இறைச்சிக் கடைக்காரனே அதற்குக் காரணம் என்றும் சொல்லித் தப்பிக்கப் பார்க்கின்றனர். ஆனால், இதை ஜைனர்கள் ஒரு போதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இறைச்சிக் கடைக்காரன் ஊன் புசிப்பவர்களுக்காகவே விலங்குகளைக் கொன்று அவற்றை அவர்களுக்கு விற்கிறான். எனவே, அவன் ஊன் புசிப்போரின் கருவியாளன் ஆவான் எனவும், கருவியாளன் மூலம் ஒரு விலங்கைக் கொல்லுதலும், அக்கொலையை அதரித்துக் கொலைப் பொருளை உண்ணுதலும் ஒரே வகையான குற்றங்களாகும். இச்செயலை ஜைனம் எப்பொழுதும் ஏற்காது.

இதே போன்று வேதமானது சமய ஒழுக்கமாகக் கூறுகின்ற விலங்குக் கொலையையும் ஜைன மதம் ஏற்கவில்லை. ஏனெனில், கொல்லுதலென்பது எதன் பெயரில் செய்யப்பட்டாலும் அது குற்றமேயாகுமென ஜைனதில் கூறப்படுகிறது. சமயத்தின் பெயரால் செய்யப்படுவதனால் அக்கொலைக்குப் புனிதம் உண்டாகிவிடாது என்கிறது ஜைன தத்துவம். எனவே, ஜைன கோட்பாட்டின்படி வேதமுறைக் கொலையும் ஒரு தீயொழுக்கமேயாகும் என்பதில் ஜைன மதத்தினர் சிறிதும் தயங்குவதில்லை எனலாம்.

### 2. வாய்மை

அடுத்து, ஜைன மதம் கூறும் இல்லறத்தானுக்குரிய ஒழுக்கங்களில் வாய்மை குறிப்பிடத்தக்கது. வாய்மை என்கிற ஒழுக்கமானது இல்லறத்தானுக்கு ஓரளவு பொருந்தக்கூடிய

வகையில் ஜைனர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜைன சமயத்தின் முழு ஒழுக்கவிதித் தொகுதியும் (Moral Code) அலக்கண் மறுப்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அதன் சார்பு விதிகளும் மையக்கொள்கையைத் தழுவியதாகவே இருக்க முடியும். இது உண்மை (வாய்மை) பேசுவதற்கும் ஒத்ததாகும். ஒருவன் வாய்மையைப் பேசுவதால் இன்னொருவனுக்குத் துன்பம் நேரக்கூடாதென்பதையும் கவனத்தில் எடுத்துக்காட்டுகிறது.

எடுத்துக்காட்டு : ஒரு மனிதன் தன் எதிரியிடம் இருந்து தப்பித்து வந்து ஓர் இடத்தில் ஒளிந்துகொள்கிறான் என்றால் அவ் எதிரி தன் பகைவன் எங்கு உள்ளான் என்று கேட்கும்போது, நாம் வாய்மையை அதாவது உண்மையைச் சொல்லிவிடக் கூடாது. இங்கே வாய்மையைச் சொல்லிவிட்டால் தப்பியவன் கொல்லப்பட்டுவிடுவான். இது போன்ற சந்தர்ப்பங்களில் நாம் வாய்மை பேசிப் பயனில்லை எனவும், ஒரு வேடன் ஒரு விலங்கைத் தேடி வரும்போது, அவ்விலங்கின் இருப்பிடத்தை அவனுக்குக் கூறிவிடுவதும் அறமாகிவிடாது. எனவே, இந்தச் சமயங்களில் பொய் உரைப்பதில் தவறில்லை என்பதுடன், வாய்மையாலும் பிற உயிர்களுக்குத் துன்பம் நேர்ந்துவிடக்கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டு ஜைன மதமானது இல்லறத்தவர் இதனைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமெனக் கூறுவதை அறிய முடிகிறது.

### 3. கள்ளாமை

ஜைன தத்தவம் இல்லறத்தானுக்குக் கூறும் மூன்றாவது ஒழுக்கநெறி கள்ளாமை ஆகும். ஒருவன் தனக்குச் சொந்தமல்லாததும், அதன் சொந்தக்காரனால் விரும்பிக் கொடுக்கப்படாததுமான ஒரு பொருளினைத் தன்வசப்படுத்திக் கொள்ளுதல் ஜைனத்தில் களவெனக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு பிறர் பொருட்களைக் கவர்வதை இல்லறத்தவன் (மனிதன்) தவிர்க்க வேண்டுமென்கிறது ஜைன தத்துவம். ஆனால், இவ்வாறு கூறியதுடன் மட்டும் களவு நின்றுவிடவில்லை. வாணிபத் துறையிலும் களவு உண்டெனவும் ஜைனம் கூறுவதைக் காணலம். தவறான எடைக் கற்களைப் பயன்படுத்துவதும், ஒழுங்கற்ற அளவைகளைப் பயன்படுத்துவதும் களவைச் சார்ந்ததே எனவும், கறுப்புச் சந்தை (Black - Market) நடத்துவதும் களவேயெனவும், சமுதாயத்திலுள்ள உரிமைகள், சலுகைகள் போன்றவற்றைப் பறிக்கும் செய்கைகள் யாவும் களவேயென கூறப்படுவதோடு இவற்றை இல்லாத்தவர் தவிர்க்க வேண்டுமெனவும் கூறப்படுதை எம்மால் காணமுடிகிறது.

### 4. கற்புடைமை

ஜைன தத்துவம் கூறும் இல்லறத்தவருக்குரிய ஒழுக்கங்களில் நான்காவதாக உள்ள ஒழுக்கம் கற்புடைமை ஆகும். பால் விவகாரத்தில் (Sex matter) மனிதனுக்கு இருக்க வேண்டிய தன்னொழுக்கமே கற்புடைமை எனக் கூறப்படுகிறது. இல்லறத்தானைப் பொறுத்தமட்டில் இத்தகைய கடின ஒழுக்கத்தினைப் பின்பற்ற முடியாதாகையால், இல்லறத்தான் உலகத்தில் வாழ்ந்து மனையக இன்பங்களை நுகரவேண்டியவன் என்பதனால், இல்லறத்தான் தன் மனம் போனபடி இன்பம் நுகரலாம் என்பது பொருளன்று. இந்த வகையில், அவன் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளும் காணப்படுகின்றன. முதலில் இல்லறத்தவன் ஒரே மனைவியை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டுமெனவும், ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்வதும் இன்னொருவன் மனைவியோடு கள்ள நட்புக் கொண்டு ஒழுகுவதும், மனைவி

இருக்கும்போது மற்றொருத்தியோடு தொடர்புகொள்வதும் கற்புடைமைக்கு மாறான செயல்களெனக் கூறி, இல்லறத்தான் இவ்விதி முறைகளை நினைவு, சொல், செயல் இம்மூன்றின் மூலமும் பின்பற்ற வேண்டுமெனப்படுகிறது. பிற மங்கையை மனத்தால் விழைவதும் கற்பு நெறியிலிருந்து வழுவியதாகுமென கூறுவதோடு, இவ்வொழுக்க நெறியை இல்லறத்தான் சரியாக ஆற்றினால்தான் அவனுக்கும் சமுதாயத்துக்கும் அமைதி உண்டாகுமென ஜைன தத்துவம் வற்புறுத்திக் கூறுவதைக் காண முடிகிறது.

**5. உடமை நீக்கம்**

அடுத்து ஜைன மதத்தவர்களால் இல்லறந்தானுக்கேன வற்புறுத்திக் கூறப்படும் ஒழுக்கநெறி உடமை நீக்கம் என்பதாகும். ஒரு மனிதன் தான் பெற்றிருக்கும் சொத்தையும் செல்வத்தையும் சார்ந்தது இவ் உடமை நீக்கமாகும். இல்லறத்தானைப் பொறுத்தமட்டில் முழு உடமை நீக்கமென்பது பொருளற்ற விதிமுறையெனவும், சமுதாய - பொருளாதார நிலைப்பாட்டிற்குள்ளும், சமூகக் கட்டுக்கோப்புக்குள்ளும், தனது வாழ்க்கையைச் சார்ந்திருக்கும் இல்லறத்தான், தனது கடமையை மறந்தால் சமுதாயமே சரிந்துவிடுமெனவும் ஜைனம் கூறுவதைக் காணமுடிகின்றது. இல்லறத்தான் நிலத்தைத் திருத்திப் போதுமான உணவை விளைவித்துத் தான் ஒரு வாணிபனாய் இருந்து தன்னையும், மற்றவர்களையும் காப்பாற்ற வேண்டிய முழு மனத்தோடும் வாணிபத்தில் ஈடுபட வேண்டும் என்கிறது. எவ்வாறிருப்பினும், நேர்மையான முறையில் பொருளீட்டுதல் முக்கியமெனவும், இல்லறத்தான் சரியான முறையில் தொழில் புரியாவிட்டால் அவன் தன் குடும்பத்திற்கு வறுமையைத் தேடுவதோடு சமுதாயம் முழுமைக்கும் வறுமையை விளைவிக்கிறான் எனலாம். இதன் காரணமாய் துறவியைப் போன்று இல்லறத்தான் உடமை நீக்கத்தைக் கைக்கொள்ள முடியாதென்ற நிலையேற்படுவதனால், இல்லறத்தானின் வாழ்க்கையின் நோக்கமும் உண்மையான தர்மத்தை அடைவதேயாதலால் அவனும் கூடியவரையில் புறப்பற்றுக்களை விட்டு நீங்கியிருக்க வேண்டுமெனவும், உலகப் பொருள்களிடையேயும், சுற்றம் கேள்விகளிடையேயும் வாழ்ந்தாலும் அவனது மனம் மட்டும் பாசங்களில் அதிக பிடிப்பில்லாமல் விலகி நிற்க வேண்டுமெனவும் கூறப்படுகின்றது.

இங்ஙனம் உடம்பினால் உலகத்தில் வாழ்ந்தாலும் மனத்தால் துறவு பூண்டு வாழ்பவர்கள் கானகத்தில் துறவு பூண்டு தவத்தில் ஆழ்ந்தும், மனத்தால் உலகப் பற்றுக்களை விடாமல் அல்லற்படுபவர்களைக் காட்டிலும் மேலானவர்களாவர். எனினும், இவ்வுலகிலே வாழ்ந்து கொண்டு இவ்வுலகத்தின் பற்றுக்களைத் துறந்து வசிப்பதென்பது மிகக் கடினமான காரியம். ஆகையால், இல்லறத்தான் முழு உடமை நீக்கத்தைக் கைக்கொள்ள முடியாமற் போனாலும்கூட, அவன் கைவசமிருக்கும் உடமைக்கு வரம்பு விதித்துள்ளதைக் காணக் கூடியதாயுள்ளது. அதாவது, இல்லறத்தான் தன் வாழ்க்கைக்கும் கடமைகளுக்கும் தேவையான அளவிற்கு மட்டும் சம்பாதித்துப் பொருள் சேர்க்க வேண்டுமெனவும் அளவுக்கு மீறி அவன் தனது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவோ உடமையை மிகுதிப்படுத்திக் கொள்ளவோ கூடாதென்பதற்காக உடமை நீக்கம் என்பதனைவிட வரம்பிற்குட்பட்ட உடமை பெற்றிருத்தல் (Parimitha parigraha) வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. இவ்வாறு வரம்பிற்கு உட்பட்ட உடமை ஈட்டும்போதும், தனது தொழிலில் தீவிரத்தோடும் கிளர்ச்சியுடனும் ஈடுபடும்போதும் அவன் தான் விதித்துக்கொள்ளும் வரம்பிற்கு மேல் சேரும் பணத்தைச் சமுதாயத்தின் பொதுநலனுக்காக ஒதுக்கிவைக்க

வேண்டுமெனவும் இவ்விதம் தன் அதிகப்படி வருமானத்தைச் சமுதாயத்தின் பொதுப்பொருளாக கருதும்போது, தன் இளமைக் காலம் முதலே பொருளிடம் உள்ள பிணைப்புக் குறைந்து வந்தால் பின்பு எல்லாவற்றினிடமும் அவன் கொள்ள வேண்டிய மனத்துறவுக்கு அந்நிலை துணையாய் இருக்கும் எனவும் ஜைன தத்துவத்தில் கூறப்படுகிறது.

இந்நெறிமுறையானது சமுதாயத்தின் உயிரியல் வளர்ச்சிக்கு மட்டுமல்லாது, உலகியல் வளர்ச்சிக்கும் உதவிகரமாக இருக்கிறதெனக் கூறுவதோடு, தற்காலத்திற்கும் இது மிகவும் தேவையானதொன்றாகவுள்ளதெனயும் கூறமுடியும். சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு இருத்தலாகாது என்ற கருத்தினை மனதிற்கொண்டே ஜைன சிந்தனையாளர்கள் பல ஆயிரம் வருடத்திற்கு முன்பே சொத்து வருவாய்க் கட்டுப்பாடு எனும் இத்தத்துவத்தை இல்லறத்தானுக்கு விதித்தனர். இவ் உடமை நீக்கத் தத்துவத்தின் மூலம் சமுதாயத்தில் ஒரு கூட்டத்தாரிடமும் அதிக பொருள் சென்று குவிவதையும், மற்றய மக்களிடம் வறுமையும், துயரமும், இழிதகமையும் சென்று சேர்வதையும் தடுக்கும் முகமாகவும் செல்வம், சுகாதாரம், செழிப்பு ஆகிய விடயங்களில் எழும் சச்சரவுகளைச் சொத்து வருவாய் கட்டுப்பாட்டுத் தத்துவத்தால் தீக்கலாமெனவும், இத்தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் சமூகம் ஒரு பொதுநலச் சமுதாயமாக விளங்குமெனவும் எதிர்பார்த்து இக்கொள்கையை ஜைன தத்துவத்தினர் வற்புறுத்தினர் எனலாம். இன்றைய உலகில் நிலவியவரும் முதலாளித்துவம், பொதுவுடமை எனும் முரண்பட்ட இரண்டு அமைப்புகளும் சமணர்கள் கூறுகின்ற சொத்து கட்டுப்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றினால் தன்நலமற்ற அமைப்புகளின் போட்டியினைத் தவிர்க்கலாமென்பது பலரதும் கருத்தாகும்.

இத்தகைய இல்லறத்தானுக்குரிய ஐந்து விரதங்களும் அணுவிரதம் எனக் கூறப்படும். இவ்வைந்தில் முதல் நான்கும் வெளிப்படையாக விளக்குகின்றன. இறுதியாய் உள்ள பொருள் வரைதல் என்பது பொருளை இவ்வளவுதான் ஈட்ட வேண்டும் என்று வரையறுத்துக் கொண்டு அவ்வரையறைப்படி பொருளை ஈட்டுவதாகுமெனவும், நிலபுலம், வீடு வாசல், பணம் காசு, பொன் பொருள், தானிய தவசம், ஆடு மாடு போன்ற பொருள்களை இவ்வளவுதான் ஈட்டுவேன், இதற்கு மேல் ஈட்ட மாட்டேன் என்று ஒரு வரையறை செய்து கொண்டு அந்த அளவாகப் பொருளைச் சேர்த்தல் வேண்டுமெனவும் இத்தகைய இல்லறத்தானுக்குரிய பொருள் வரைதல் பற்றிக் கூறுகிறது ஜைனம்.

இத்தகைய அணுவிரதங்களோடு, கள்ளுண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை எனும் விரதங்களையும் இல்லறம் மேற்கொள்பவன் கடைப்பிடிக்க வேண்டுமெனப்படுகிறது.

**6. கள் உண்ணாமை**

கள் என்பது ஒருவகை போதை தரும் பான வகையாகும். அத்தகைய போதையிலிருந்து விடுபட்ட வாழ்வினையே ஜைன இல்லறத்தார் பேணவேண்டும் என ஜைனத் தத்துவம் கூறுகின்றது. கள் குடிப்பது அறியாமையின் வெளிப்பாடாகும் என்றும் அது மனிதனைப் பண்பாட்டு உயர்நிலையிலிருந்து கீழே தள்ளிவிடும் தன்மை வாய்ந்தது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் ஜைனர்கள் இத்தீய பழக்கங்களைத் தம் வாழ்விலிருந்து தவிர்த்தொழிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

**7. தேன் உண்ணாமை**

இத்தத்துவத்தினர் தேன் உண்பது 'பாவம்' என்று ஏன் கொண்டார்கள் எனில், தேன் அடையிலிருந்து தேனை எடுக்கும்போது, தீயிட்டுக் கொளுத்தித் தேனீக்களைக் கொன்றும், தேன் அடையிலுள்ள தேன்புழுக்களைக் கொன்றும் உயிர்க் கொலைகளைச் செய்கிறர்கள். ஆகவே, கொல்லா விரதத்தை முதல் விரதமாகக் கொண்ட சமணர் தேன் உண்பது பாவம் என்று விலக்கி வைத்தார்கள். மருந்தைத் தேனுடன் கலந்து உண்ண வேண்டியிருந்ததால் தேனை விலக்கிச் சக்கரைப் பாகுடன் கலந்து கொடுப்பது சமண மருத்துவரின் மரபாகும். எனவே, தேன் உண்பதும் இல்லறத்தார்க்குத் தவிர்க்கப்பட்டுள்ளது.

**8. இரவு உண்ணாமை**

அடுத்து சமண இல்லறத்தான் முக்கியமாகக் கொள்ள வேண்டிய மற்றொரு (விரதம்) ஒழுக்கம், இரவு உண்ணாமை என்பதாகும். சூரியன் மறைந்த பிறகு உணவு கொள்ளக்கூடாது என்பது சமணரின் இல்லறத்தில் முக்கிய கொள்கையாகும். ஆகையால், இரவு வருவதற்கு முன்பே இல்லறந்தவர் உணவு கொள்ள வேண்டும் என இரவு உண்ணாமை எனும் கொள்கையாகிய ஒழுக்கம் கூறப்படுகிறது.

**9. பெரியோரை வணங்குதல்**

மேலும், ஆசாரியார் முதலிய பெரியோரை வணங்குதலும் சமண இல்லறத்தவரின் ஓர் ஒழுக்கக் கொள்கையாகும். இவற்றை ஓர் இல்லாளன் தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென கூறப்படுகிறது.

**10. விரதங்கள் நோற்றல்**

சமண சமயத்தில் இல்லறத்தவருக்கான விரதங்கள் மிக முக்கியமானவை. இவை குணவிரதங்கள் (திசை விரதம், அனர்த்த தண்ட விரதம், போகோப போகப் பரிமாண விரதம்) மற்றும் சிட்சா விரதங்கள் (தேசாவதாசிகம், ஸாமாயிகம், புரோஷதோபவாசம், அதிதி ஸம்விபாகம்) என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்விரதங்கள் திசை வரையறை, பிறருக்குத் தீமை செய்யாமை, வாழ்க்கையில் சுய கட்டுப்பாடு மற்றும் போகங்களில் கட்டுப்பாடு கொண்டிருத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. சிட்சா விரதங்கள் தியானம், உண்ணா நோன்பு, துறவிகளை மரியாதையுடன் போற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியது. இவ்வொழுக்கங்கள் இல்லறத்தவரை அறவழியில் நிலைத்திருக்க ஊக்கப்படுத்தி, துறவறத்தவரை மதிக்கவும், சமண சமயத்தின் ஒழுக்கத் தூய்மையைப் பேணவும் வழிவகுக்கின்றன.

**ஜைன மதமும் ஏனைய இந்திய தத்துவங்களும்**

ஜைன மதம் இந்து மத வேதங்களில் உள்ள அஹிம்சா தர்மத்தை எடுத்துத் தனதாக்கிக் கொண்டு வளர்ந்தது என்றாலும், அது இந்து மத வேதங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, தனக்கென்று தனியாக சில வேதங்களை உருவாக்கிக் கொண்டது. ஒரு ஜைனன் தனது

வாழ்நாளில் எந்த ஒரு நிமிடமும் உயிர்கொலை என்பதை செய்யக்கூடாது என்பதே இதன் பிரதான போதனையாகும்.

வாழ்வின் கட்டுகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் நிரந்தரமான விடுதலையடையும் நோக்கைக் கொண்டிருப்பதில் ஜைனம் ஏனைய இந்திய மெய்யியல்களை ஒத்திருக்கிறது. ஜீவ - அஜீவப் பிரிப்பில் ஜைனம் சாங்கியத்தை ஒத்திருக்கிறது. அடிப்படை மூலக்கூறுகளாக அணுக்களை ஏற்பதில் வைசேடிகத்திற்கு ஒத்திருக்கிறது. தொடக்கமற்ற நிலையில் உயிர் சடப்பொருளுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறது என்ற சுருத்தில் சைவ சித்தாந்தத்திற்கு நெருங்கி வருகிறது. ஆயினும், பயன்படுத்தப்படும் சொற்கள், விவரிக்கப்படும் தன்மைகள், இயக்கங்கள் ஆகியவற்றில் இவைகளிடையே வேறுபாடுகள் உண்டு எனலாம்.

மேலும், ஆன்மாவுக்கும் அறிவுக்குமுள்ள தொடர்பு, உயிருக்கும் சடப்பொருளுக்குமிடையேயுள்ள வேறுபாடு, சடப்பொருளின் உட்கூறுகள், கருமத்தின் தன்மை, துறவியின் சிறப்பு, அறவாழ்வின் மாட்சி, விடுதலை நிலை ஆகியவற்றை வரையறுப்பதில் ஜைனம் தன்னிகரற்ற இடத்தைப் பெற்றிருந்தாலும், அகிம்சை, உயிர்கள் மேல் பரிவு ஆகியவற்றைப்பற்றி ஜைனம் தந்துள்ள அழுத்தம் இந்தியச் சமய மரபில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இவர்கள் கூறும் சிந்தனைகள் ஏனைய சிந்தனைகளிலிருந்து வித்தியாசமானது. உலகாயுதர் இவ்வுலகை மெய்யெனக் கொண்டு உலக வாழ்க்கையை முதன்மைப்படுத்தினர். சங்கரர் உலகத்தைத் திரிபுக் காட்சிஎன விளக்கினார். பௌத்தர் கணபங்கவாதத்தை முன் மொழிந்தனர். ஆனால், ஜைனர்களோ அருக நெறியினைப் பின்பற்றி நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்றும் மும்மணிகளின்படி ஒழுகுதலினாலே இம்மையில் போகத்தையும், மறுமையில் முடிவிலா பேரின்பமெனும் நிலையினை அடைந்து மோட்ச இன்பம் பெறலாமென்பதை முடிவாகக் கொண்டனர்.

புலன் கடந்த பொருளியல் சிந்தனைகளை விளக்கும் ஜைன தத்துவமானது கடவுள் பற்றிய எண்ணக்கருவை ஏற்பதில்லை. ஏனெனில், நாம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற காட்சி, அனுமானம் என்ற இரு அறிவின் வாயில்களை மட்டுமே ஏற்பவை. இவர்கள் இதற்கு மாறான சித்தாந்திகள் ஏற்கும் ஆப்தவாக்கியத்தை ஏற்பதில்லை. எல்லாம் வல்ல, என்றுமே வாழும் இறைவனை ஏற்கா நிலையில் ஜைனம் கூறும் வாழ்வும் விடுதலையும் பொருளற்று விளங்குகின்றன. இத்தகு குறிப்புகள் ஒரு வித மதிப்பீட்டால் ஏற்படுபவை. விடுதலை நிலையில் ஆன்மாவுக்கு ஏற்படும் பண்புகள் மறைமுகமாக கடவுளின் தேவையை வலியுறுத்துகின்றன என்றும், அறிவையும் சிந்தனையினையும் மையக்கோளாகக் கொண்டுள்ள ஜைனத்தின் போக்கு தொடரும் நிலையில் அது ஒருமைக் கொள்கைக்கு வழி நடத்துகிறது. இந்த வகையில் ஜைன மெய்யியல் முழு வளர்ச்சியடையாத ஒருபாதி வழி அமைப்பு என்றும் விமர்சிக்கப்படுகின்றது.

கடுந்துறவு, ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றிற்குத் தொடக்கத்தில் ஜைனம் விதித்த விதிகள் காலப் போக்கில் பல்வேறு விதங்களில் தளர்த்தப்பட்டது. இது தவிர்க்க இயலாத ஒன்றும்கூட. ஆதலால், பிற்காலத்தில் ஆலயம், வழிபாடு, சிலைச்சடங்குகள் போன்றவற்றை ஏற்றுக்கொண்டது. இந்துச் சூழலில் ஜைன சமயத்தின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள

இம்மாற்றங்கள் அவசியமாகின. இவற்றால் ஜைன மதத்தின் அடிப்படை எண்ணங்கள் மாறவில்லை என்று விளக்கமளிப்போரும் உண்டு. ஆயினும், காலப்போக்கில் அடைந்த மாற்றங்கள் அடிப்படை மெய்யியலுக்கு எவ்வாறு பொருத்தப்படுகின்றன என்பது பற்றிய தெளிவினை இவ் ஆய்வின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்திய தத்துவத்தை அவதானிக்கும்போது ஒரு பிரிவினர் தனித்து பௌதீக உலகை மாத்திரம் ஆய்வு செய்வதையே நோக்கமாகக் கொண்டவர்களாக உள்ளனர். மறுபிரிவினர் தனித்து பௌதீக அதீத உலகை மாத்திரம் ஆய்வு செய்வதையே நோக்கமாகக் கொண்டவர்களாக உள்ளனர். எனவே, ஜைன தத்துவ வாதிகள் தனக்கு முன்னே தோன்றிய தத்துவவியலாளர்களது சிந்தனைகளை ஆராய்ந்து அவர்கள் விட்ட குறைகளையெல்லாம் அறிந்து கொண்டு அவற்றிலிருந்து விலகி தங்கள் கருத்துக்களை தெரிவிக்க முயற்சித்திருக்கின்றனர் என்பதனை இதன் மூலம் எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

## தொகுப்புரை

நவீன உலகில் வீட்டின், குடும்பத்தின் மற்றும் சமூகத்தின் கடமைகளுடன் ஆன்மிக முன்னேற்றத்தை எவ்வாறு சமரசம் செய்யலாம் என்பதைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது. அஹிம்சா என்பது ஜைன அறநெறியின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். இது மனிதர்களுக்கும் அனைத்து உயிர்களுக்கும் பிரியமான அக்கறை காட்டுவதற்கான அடிப்படையான கோட்பாடு. இது வேலை, குடும்ப மற்றும் சமூகப் பொறுப்புகளைச் சமாளிக்கும்போது, மனிதன் தனது செயல்களில் தவறாமல், பிறர்மீது இழிவை செய்யாமல் இருக்க வேண்டும் என்று வழிகாட்டுகிறது. நவீன உலகில், ஆன்மிக வளர்ச்சியையும் நற்காரியங்களைச் செய்யும் தன்மையையும் ஊக்குவிக்கின்றது. மேலும், அனேகாந்தவாதம் என்பது குடும்ப உறுப்பினர்களின், வேலை மற்றும் சமூகச் செயல்கள் எனப் பல்வேறு நிலைகளில் உள்ள மக்களுக்கிடையே நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர புரிதலை ஏற்படுத்துகிறது.

அபரிகிரஹ என்பது ஒருவர் மிகுந்த பொருளாதார விருப்பங்களை வேண்டாமெனக் கூறுகிறது. இது குடும்ப வாழ்க்கையில் குறைவான பொருள் மற்றும் எளிமையான வாழ்க்கை முறையை ஆதரிக்கின்றது. இன்று, நவீன உலகில் பொருளாதார அதிகரிப்பு, வாழ்க்கையின் அழுத்தங்கள், மற்றும் சமுதாயத்தின் விருப்பங்கள், மக்கள் மனதை ஏற்றுக்கொள்வதற்குப் பல தடைகளை உருவாக்குகின்றன. ஆனால், அபரிகிரஹ இந்தப் பொருள் சார்ந்த விருப்பங்களையும், உலகியலான முறைகளையும் நிராகரிக்க உதவுகிறது. இதன் மூலம் மன அழுத்தத்தைக் குறைத்து ஆன்மிகத்தில் முன்னேற்றத்தை அடைய முடியும்.

இந்த மூன்று அறநெறிகளும் ஜைன மதத்தின் தத்துவங்களைத் தனது வாழ்க்கைத் துறைகளில் கொண்டு வந்தால், எவ்வளவு முழுமையான அமைதி மற்றும் ஆன்மிக முன்னேற்றத்தை அடைய முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. இன்று பல நாடுகளிலும், குறிப்பாக இந்தியாவில், ஆன்மிக வளர்ச்சி மற்றும் சமூக நலம் என்பவற்றின் இடையே சமநிலை நிலைபேறுகளுக்காக இந்த பன்முக அணுகுமுறை ஒரு வழிகாட்டுதலாக மாறியுள்ளது.

இருப்பினும், ஜைன அறநெறிகள், நவீன உலகில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றன. இன்றைய உலகில் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருள்களின் பெரும்பான்மை மற்றும் துரிதமான வளர்ச்சி அதிகரித்துள்ளன. மக்கள் அதிகம் பணம் சம்பாதிப்பதற்கும், மிகுந்த பொருள் மற்றும் செல்வாக்கை உருவாக்குவதற்கும் உறுதியாக முயற்சிக்கின்றனர். இது ஜைன அறநெறிகளின் அபரிகிரஹ கொள்கைக்கு எதிராக உள்ளது. ஜைன மதம் மிகுந்த பொருளாதார விருப்பங்களைக் குறைத்துப் பார்க்கும் வகையில் வாழவேண்டும் என்று அறிவுறுத்துகிறது. இது, ஒவ்வொரு மனிதனும் அதிகமான பொருள்களைத் தாண்டி, எளிய வாழ்க்கையை நோக்கிச் செல்ல வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால், இன்றைய வாழ்க்கை மற்றும் பொருளாதாரச் சவால்கள், மக்கள் இந்தக் கொள்கையைப் பின்பற்றுவதில் தடை ஏற்படுத்துகின்றன. எளிமையான வாழ்க்கையைத் தவிர்த்து, அதிகமான பொருளாதார நோக்கங்களை அடையவும் செலவிடவும் பலர் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்றைய உலகில் தொழில்நுட்பம், குறிப்பாக இணைய மற்றும் மின்னணு ஊடகங்கள், சமூகத்தின் ஒழுக்கத்தைப் பெரும்பாலும் பாதிக்கின்றன. டிஜிட்டல் உலகின் விரைவான பரிமாற்றங்கள் மற்றும் இணையத்தில் நிகழும் பிழைகள், அஹிம்சா கொள்கைக்கு எதிராக இருக்கின்றன. சமூக ஊடகங்களில் தவறான தகவல்கள், அவதூறாக பரவுதல், அசௌகரியமான கருத்துக்கள் மற்றும் கடுமையான விமர்சனங்கள் அதிகரித்துள்ளன. இது அஹிம்சா கொள்கைக்கு எதிரானது. இதனால்தான், தனிப்பட்ட புற நோக்குகளில் ஜைன அறநெறிகளை நடைமுறைப்படுத்துவதில் பெரிய சவால்கள் உள்ளன.

இன்றைய வேலையையும் குடும்பத்தையும் சமாளிப்பதில் பலர் நிறைவில்லாமல் முயற்சிக்கின்றனர். இது அந்தந்த மக்களின் மன அழுத்தம் மற்றும் உடல் குறைபாட்டை உருவாக்குகின்றது. ஜைன அறநெறிகளின் ஆழமான கோட்பாடுகளைச் செயல்படுத்துவது. மிகுந்த சமய உழைப்பையும் ஆன்மிக முன்னேற்றத்தையும் இன்றைய உலகில் மிகவும் சிரமமாக்கியுள்ளது. ஏனென்றால், எல்லா நேரத்திலும் பணியில் ஈடுபட்டு வாழக்கூடிய சூழல், ஜைன அறநெறிகளுக்கு இடம் வழங்குவது என்பது ஒரு பெரும் சவாலாகும்.

ஜைனம் கூறும் ஐம்பெரும் ஒழுக்க விதிகள் இல்லறவாசிகளுக்கு நடைமுறையாகவும், தத்துவ ரீதியாகவும் வழிகாட்டியாக விளங்குகின்றன. இந்த ஒழுக்க விதிகள் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் மகாவீரரால் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதனைகளாக இருந்தாலும், இன்றைய 21ஆம் நூற்றாண்டிலும் அதன் நடைமுறைப் பங்களிப்பு குறையவில்லை என்பதே முக்கியமான உண்மை.

தற்கால சூழ்நிலைகளில் சுற்றுச்சூழல் அழிவுகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், ஊழல், சமூக அநீதிகள், தனிமனித நலவாதம் மற்றும் பொருளாசை ஆகியவை பெருகிவரும்போது, ஜைன ஒழுக்க விதிகள் எதிர்கால சமூகக் கட்டமைப்புக்கு அவசியமான நெறிமுறையாக அமையக்கூடியவை. அகிம்சை கொள்கையானது தற்காலத்தில் காலநிலை மாற்றம் மற்றும் வன்முறை எதிர்ப்பு இயக்கங்களில் மையக் கொள்கையாக வலுவடைந்துள்ளமையை காண முடிகின்றது. வாய்மை மற்றும் கள்ளாமை ஒழுக்கங்கள் நல்லாட்சிக்கான அடிப்படைகளாக கருதப்படுகின்றன. உடமை நீக்கம் என்னும் கொள்கை, இன்று ‘சமூகப் பொறுப்பு’ மற்றும் ‘தனிநபர் பொருளாதாரச் செறிவு’ போன்ற விவாதங்களில் பேரளவில் பொருந்தக்கூடியதாக

உள்ளது. இந்நிலையில், ஜைன ஒழுக்க விதிகள் எவ்வாறு தற்கால சமுதாயத்தின் ஏற்றத்துக்கேற்ப மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பது இக்கட்டுரையின் மைய நோக்கமாகும். ஜைன அறநெறிகள் வழியாக, ஒரு சமூகமும் தனிமனிதனும் எவ்வாறு நிலையான மற்றும் நீதிமிக்க வாழ்வை நோக்கிப் பயணிக்கலாம் என்பதற்கான தத்துவ அடிப்படையானது உருவாகும். குறிப்பாக, பெண்கள்மீதான வன்முறை, சிறுவர் பாதுகாப்பு, சமூக சீரழிவுகள் போன்றவை இன்றைய உலகில் மீண்டும் மீண்டும் உரையாடப்படும் முக்கிய பிரச்சினைகள். இவை அனைத்துக்கும் ஜைன மதத்தால் ஏற்கனவே முன்மாதிரியாக வகுக்கப்பட்ட ஒழுக்கவிதிகள் தீர்வு காணும் ஒரு கண்ணோட்டத்தை வழங்குகின்றன.

**முடிவுரை**

இன்றைய உலகில் ஜைன அறநெறிகள் முக்கியமான வழிகாட்டுதலாக இருந்து, ஆன்மிக முன்னேற்றத்தையும் சமுதாய அமைதியையும் ஆதரிக்கின்றன. இதை நடைமுறைக்கு கொண்டு வருவதில் சவால்களும் உள்ளன. ஆனால், இவை மனிதர்களைப் பரிசுத்தமான மற்றும் சிந்தனையுடன் வாழ வைக்கும் திறன் கொண்டவை. அவற்றின் அடிப்படைகளான அஹிம்சா, அபரிகிரஹ மற்றும் அனேகாந்தவாதம், சவால்களைச் சமாளிக்கும் புதிய வழிகளைக் காட்டுகிறது.

இதன் மூலம், ஜைன அறநெறிகளை நவீன உலகில் செயல்படுத்துவதற்குப் புதிதாக ஒரு பொருளாதார மற்றும் சமூக ஒழுக்கம் மீறா சூழலை உருவாக்குவது முக்கியமாகும். பொதுவாக, பொறுப்புகளுடன் கூடிய சமூகத்தில் இவற்றை உரிய முறையில் வாழும் வகையில் சமரசம் செய்ய வேண்டும். இது, தன்னம்பிக்கை, உணர்வு மற்றும் ஆன்மிக வளர்ச்சியை முன்னேற்றுவதற்கான ஒரு வழியாக மாறும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

ஞானகுமாரன், நா., (2012), மெய்யியல். சேமமடு புத்தகசாலை, கொழும்பு.

ராதாகிருஸ்னன், எஸ்., (1979), கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு தொகுதி -ii, சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

லக்ஸ்மணன், கி., (1997), இந்திய தத்துவஞானம், சென்னை, பழனியப்பா பிரதர்ஸ்.

மயிலை சீனி வேங்கடசாமி, (1959), சமணமும் தமிழும், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

ஜமாஹீர், பீ.எம்., (2010), மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும், நதா வெளியீடு, கண்டி.

Chatterjee, S. and Datta, D.M. (1950), An Introduction to Indian Philosophy, Calcatta, Calcutta University Press.

Dasgupta, Surendranath (1922), A History of Indian Philosophy, volume- i. Cambridge, Cambridge University Press.

Rajeshwari, M. & Amirthavalli, A. “A Study on Jainism History, Philosophy and Traditions in Tamilnadu.” Shanlax International Journal of Arts, Science and Humanities, E-ISSN: 2582-0397, Volume – 8, Issue 4 – 01 April 2021.

Taliaferro, C., Draper.P., & Quinn, P.L. (2010), A Companion to Philosophy of Religion (2nd Edi.). England, Wiley-Blackwell Publications.

Wikipedia, Jainam. http://medbox.iiab.me/kiwix/wikipedia_ta_all_maxi_2019- accsessed on 15.03.2025.

Brainkart Tamil, Jainism. https://www.brainkart.in/article/Jainism_33554/ , accsessed on 07.04.2023.

## PANEL OF REVIEWERS

| | |
|---|---|
| Prof. V. Gunaretnam | Eastern University, Sri Lanka. |
| Prof. V. Inpamohan | Eastern University, Sri Lanka |
| Prof. S.Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| Prof. T. Krishnamohan | Eastern University, Sri Lanka |
| Prof. Suresh Kanesh | Eastern University, Sri Lanka |
| Prof. (Mrs.) Jeyapraba Suresh | Eastern University, Sri Lanka |
| Prof. S.Muhunthan | University of Jaffna, Sri Lanka |
| Prof. P.M. Hamthoon | Eastern University, Sri Lanka. |
| Professor S. Jeganathan | Eastern University, Sri Lanka |
| Prof. MAM. Rameez | South Eastern University of Sri Lanka |
| Prof. (Mrs.) Vigneswary Pavanesan | University of Jaffna |
| Prof. K.T.Ganeshalingam | University of Jaffna |
| Prof. T.Mukunthan | The Open University of Sri Lanka |
| Prof. F.M. Nawastheen | The Open University of Sri Lanka |
| Dr. C.Arulmoly (Retired Professor) | Eastern University, Sri Lanka |
| Dr. (Mrs.) S. Kesavan (Retired Professor) | Eastern University, Sri Lanka |
| Dr.M.Nadira | Eastern University, Sri Lanka |
| Dr. R. Premkumar | Eastern University, Sri Lanka |
| Dr N. Pushparajah | Eastern University, Sri Lanka |
| Dr. M. B. Fowzul | Eastern University, Sri Lanka |
| Dr. Shandru Mariyadas | Eastern University, Sri Lanka |
| Dr. V. Pathmanandakumar | Eastern University, Sri Lanka |
| Dr. T. Vivanantharasa | Eastern University, Sri Lanka |
| Dr. T.Megarajah | Eastern University, Sri Lanka |
| Dr. AM. Razeek | South Eastern University of Sri Lanka |
| Dr. S. Anuzsiya | South Eastern University of Sri Lanka |
| Dr. K. Gnanaretnam | The Open University of Sri Lanka |
| Dr. T.Selvamanoharan | University of Jaffna |
| Dr. (Mrs.) S. Uthayarasa | University of Jaffna |
| Dr. A.Nithlavarnan | University of Jaffna |
| Dr. N. Piratheeparajah | University of Jaffna |
| Dr. Arularasi Balakrishnan | University of Peradeniya |

| | |
|---|---|
| Dr. S. Baskaran | University of Peradeniya |
| Dr. Ramasamy Ramesh | University of Peradeniya |
| Dr. M.M.Jayaseelan | University of Peradeniya |
| Dr.P. Sarawanakumar | University of Peradeniya |
| Mrs. Ruby Valentina Francis (Retired) | Eastern University, Sri Lanka |
| Mr. M.Ravi | Eastern University, Sri Lanka. |
| Mr. C. Sivanayagam | Eastern University, Sri Lanka |
| Mr. R. Kiruparajah | Eastern University, Sri Lanka |
| Mrs. T Sachithanantham | Eastern University, Sri Lanka |
| Mr.G.Vigneswaran | Eastern University, Sri Lanka |
| Mrs. A. Jeyapratheepa | Eastern University, Sri Lanka |
| Mr. P. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| Mrs.T.Sathiyajith | Eastern University, Sri Lanka |
| Mr. K. Sathiyasekar | Eastern University, Sri Lanka |
| Mrs.P.Moses | Eastern University, Sri Lanka. |
| Mr K.Ravichandran | Eastern University, Sri Lanka |
| Mr. K. Mathiseelan | Eastern University, Sri Lanka |
| Mr. S. Chandrakumar | Eastern University, Sri Lanka |
| Mr A. Yogarajah | Eastern University, Sri Lanka |
| Mrs.T.Rajandran | Eastern University, Sri Lanka |
| Mr. S.K.Shivahaneshan | Eastern University, Sri Lanka |
| Mrs.N.Chenthurran | Eastern University, Sri Lanka |
| Mrs.Mekala Sivakumaran | Eastern University, Sri Lanka |
| Mrs. Anne Yalini Satheeswaran | University of Peradeniya |
| Ms. S.Chithra | University of Peradeniya |
| Mr. G. Jeyatheeswaran | University of Peradeniya |
| Mr.R.Sharwesvara | University of Jaffna |
| Mrs. P. Vipulan | University of Jaffna |
| Mr.T.Thileepan | University of Jaffna |
| Mr. S.Ramanarajah | University of Jaffna |
| Mr.S.Sivakanthan | University of Jaffna |
| Mr. K. Nijamir | South Eastern University of Sri Lanka |
| Mr. N. Subaraj | South Eastern University of Sri Lanka |
| Mr. K. Ketheeswaran | The Open University of Sri Lanka |